மகாபாரதச் சுருக்கம்

ஆதிபருவம்

த.பி
3060

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம்,
பெசன்ட் நகர், சென்னை-90

மகாபாரதச் சுருக்கம்

ஆதிபருவம்

(பதவுரை, விசேடவுரை முதலியவற்றுடன் கூடியது)

MAHABHARATHA CHURUKKAM

ADHI PARUVAM

உரையாசிரியர் - பதிப்பாசிரியர்

பேராசிரியர் **C.** ஜெகந்நாதாசார்யர்

M.A. (Hist.), M.A. (Tamil), L.T., P.O.L., Dipl. Geog., Vidvan

முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்

விவேகானந்தர் கல்லூரி, மயிலை, சென்னை-4

(U. G. C. பேராசிரியர்)

மகாமகோபாத்தியாய

டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்

பெசன்ட்நகர், சென்னை – 600 090

1984

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலைய வெளியீடு எண்—86.

முதற்பதிப்பு 1984—1000 பிரதிகள்

© மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட்நகர், சென்னை-600 090.

விலை ரூ. 40.

Published with the Financial Assistance of the Government of India
Dept. of Edn. and Culture, New Delhi.

Printed at Rajan & Co. Printers, 1, Goomes Street, Madras-1.

உள்ளடக்கம்

பதிப்பாளர் குறிப்பு	v
Introduction	xi
முகவுரை	xix
ஓராய்வு	xxix
நூல்	1—617
பாயிரம்	1—14
நாட்டுச் சருக்கம்	15—24
நகரச் சருக்கம்	25—34
உதங்கச் சருக்கம்	35—78
சர்ப்ப யாகச் சருக்கம்	79—92
சிறப்புப் பாயிரம்	93—110
வியாதர் உற்பவச் சருக்கம்	111—122
பிரபஞ்ச முற்பவச் சருக்கம்	123—139
பாரத வீரர் உற்பவச் சருக்கம்	140—154
சந்திரவங்கிசம் யயாதிச் சருக்கம்	155—191
துட்டியந்தச் சருக்கம்	192—230
சந்தனுச் சருக்கம்	231—273
சம்பவச் சருக்கம்	274—325
வாரணவதச் சருக்கம்	326—392
வேத்திரகீயச் சருக்கம்	393—428
சித்திர ரதச் சருக்கம்	429—460
திரௌபதி மாலையிட்ட சருக்கம்	461—520
தருமபுத்திரர் பட்டாபிஷேகச் சருக்கம்	521—538
அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம்	539—586
காண்டவதகனச் சருக்கம்	587—617
அரும்பத அகராதி முதலியன	618—655
அபிதான சூசிகை அகராதி	656—675
செய்யுள் முதற்குறிப்பகராதி	676—694
சில அருந்தொடர்கள்	695—696

பதிப்பாளர் குறிப்பு

பாரத தேசத்திலுள்ள வித்துவான்கள் மகாபாரதம் 'ஜயம்' என்ற பெயரிலும், பின்பு பாரதம் என்ற பெயரிலும் வழங்கப் பட்டுப் பின்பு மகாபாரதம் என்று வழங்கலாயிற்று என்று கூறுகின்றார்கள்.

"நாராயணம் நமஸ்க்ருத்ய நரஞ்சைவ நரோத்தமம்
தேவீம் சரஸ்வதிம்சைவ ததோ ஜய முதீரயேத்"

என்ற சுலோகத்தின் மூலமாக மகாபாரதம் ஜயம் என்ற பெயரால் வழங்கப்பட்டது என்று அறியலாம்.

ஜயம் என்ற பெயருடைய நூலை வியாசர் தம்முடைய சிஷ்ய ரான வைசம்பாயனருக்கு உபதேசித்தார். இது முதல் நிலை.

வைசம்பாயனர் சர்ப்பயாக சமயத்தில் ஜனமேஜயருக்குச் சொன்னார். அந்தநிலையில் இருபத்து நான்காயிரம் சுலோகத்தைக் கொண்டு பாரதம் என்று வழங்கலாயிற்று. இது இரண்டாவது நிலை.

பின்பு இருபத்துநான்காயிரம் சுலோகங்களையுடைய பாரதம் சிரவண சமயத்தில் விஞ்விடைகளால் வளர்ச்சியடைந்து லட்சம் சுலோகங்களையுடையதாய் மகாபாரதம் என்ற பெயரைப் பெற்றது. இதுவே மூன்றுவதான பரிபூர்ணமான நிலை.

மகாபாரதம் இதிகாசம், புராணம், ஆக்கியாநம் என்றவகையில் இதிகாசத்தைச்சார்ந்தது. தற்காலப்புலவர்கள் மகாபாரதம் ஆசாரசாத்திரம், நீதிசாத்திரம் என்றும், தர்ம, அர்த்த, காம, மோட்சங்களைக் கூறுகின்றதாக நினைக்கின்றார்கள். பாரதம் ஐந்தாவது வேதம் என்று எல்லோராலும் கூறப்படுகின்றது. இந்நூல் வைணவசித்தாந்தங்களைப்பற்றி விரிவாகக் கூறுகின்ற தால் வைணவஸ்ம்ருதி என்றும் சொல்லப்படுகிறது.

மகாபாரதத்தில் எண்பது சதவிகிதம் உபதேசமயமான விஷயங்களும், இருபது சதவிகிதம் இதிகாசமயமான விஷயங் களும் இருப்பதால் இந்நூல் நீதிசாத்திரவரிசையில் சேர்த்துக் கூறப்படுகின்றது என்று சில புலவர்கள் நினைக்கின்றார்கள்.

மகாபாரதம், இம்மை, மறுமை, வீடுபேறடைந்த பரதன் என்னும் அரசன் வமிசத்தில் பிறந்த அரசர்களுடைய சரித்திரத்தைக்கூறும் நூல். ஆரும்வேற்றுமைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகையாய் இந்நூலுக்குக் காரணக்குறியாயிற்று. பரதவமிசத்தாரது சரித்திரத்தைக் கூறும் நூல் என விரியும்.

மகாபாரதத்தின் காலம்

11ஆம் நூற்றாண்டில் தோன்றிய க்ஷேமேந்திரர் என்ற புலவரால் இயற்றப்பட்ட "பாரதமஞ்சரி" என்ற நூலின் கதைப் போக்கு நடைமுறையிலுள்ள மகாபாரதக்கதையை அநுசரித்து எழுதப்பட்டது என்று தெரிகிறது.

எட்டாவது நூற்றாண்டில் தோன்றிய குமாரிலபட்டர் பாரதத்தினுடைய பல பருவங்களைப்பற்றிய விஷயங்களைக் கூறியுள்ளார்.

ஏழாம் நூற்றாண்டில் இருந்த பாணன், சுபந்து என்ற புலவர்கள் மகாபாரதப் பருவங்களையும் ஹரிவம்சத்தையும்பற்றி விவரித்துள்ளார்கள்.

கம்போடியாவில் காணப்பட்ட கல்வெட்டிலிருந்து ஆரும் நூற்றாண்டிற்கு முன்பே பாரதம் என்ற நூல் இருந்திருப்பதாகத் தெரிகிறது.

பாலித்தீவில் ஆரும் நூற்றாண்டில் பாரதம் என்ற நூல் வழங்கப்பட்டுப் பிறகு திபேத்தியர் மொழியில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

நான்கு ஐந்தாம் நூற்றாண்டுகளில் மகாபாரதம் ஸ்மிருதி ரூபமாக மகாபாரத வசனங்கள் இருந்தன என்று புலவர்கள் எண்ணுகின்றார்கள்.

Dion Chrysoston என்ற வரலாற்று ஆசிரியர் கி.மு. 50 ஆண்டுகளுக்கு முன்பே மகாபாரதம் இலட்சம் சுலோகத்துடன் தெற்கில் பிரசாரத்தில் இருந்தது என்று கூறுகின்றார்.

பாணினி என்ற இலக்கண நூலாசிரியர் மகாபாரதத்தை நன்கு அறிந்திருந்தார் என்று டல்ஹமைன் என்பவர் சான்றுடன் விளக்கியுள்ளார்.

கி.மு. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு தோன்றிய ஆசுவலாயன கிருஹ்ய சூத்திரத்தில் மகாபாரத விஷயங்கள் விவரித்துக் கூறப் பட்டுள்ளன.

போதாயன கிருஹ்ய சூத்திரத்தில் மகாபாரதத்திலுள்ள விஷ்ணு சகஸ்ரநாமம் விவரிக்கப்பட்டுள்ளது.

மகாபாரதம் சாந்திபருவத்தில் விஷ்ணுவின் தசாவதாரத் தைப்பற்றிக் கூறுமிடத்துப் புத்தாவதாரத்தைப்பற்றிக் கூற வில்லை.

மெகஸ்தனீஸ் என்ற வரலாற்று ஆசிரியர் தம்முடைய பாரத வருணனையில் எந்தக் கதைகளைக் கூறியுள்ளாரோ அந்தக்கதைகள் மகாபாரதத்திலிருந்து எடுக்கப்பட்டவை என்று தெரிகிறது.

சோதிட சாத்திரப்புலவர்கள் தற்சமயம் இந்தியாவில் வழங்கி வருகின்ற மகாபாரதம் கி.மு. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது என்று கூறுகின்றார்கள். ஆகவே மகாபாரதம் என்ற நூல் B.C. ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியது என்று அறுதியிட்டுக் கூறலாம்.

மகாபாரதம் ஆதிபருவம், சபாபருவம், ஆரணியபருவம், விராடபருவம், உத்தியோகபருவம், பீஷ்மபருவம், துரோணபரு வம், கர்ணபருவம், சல்யபருவம், சவுத்திகபருவம், ஸ்திரீபருவம், சாந்திபருவம், அநுசாஸனிகபருவம், அசுவமேதபருவம், ஆசிர வாசிகபருவம், மௌசலபருவம், மகாப்பிரத்தானிகபருவம், சொர்க்காரோகணபருவம் என்ற பதினெட்டுப்பருவங்களைக் கொண்டது. இந்தப் பதினெட்டுப்பருவங்களையும் ஒருவன் கற்றால் சிறந்த புலவனாக விளங்குவான்.

கடைச்சங்கத்திலிருந்து தமிழாராய்ந்த பெருந்தேவனார் என் னும் புலவர் வடமொழியிலிருந்த வியாசபாரதத்தைத் தமிழில் இயற்றினார். பின்பு வில்லிபுத்தூரார் பத்துப்பருவம்வரை பாடி னார். நல்லாப்பிள்ளை என்னும் புலவர்பெருமான் வில்லிபுத் தூரரின் செய்யுட்களை மனத்துட்கொண்டு அவர் சுருக்கிக்கூறிய கதைகளை விரித்தும், அவரால் விடப்பட்ட கதாபாகங்களைச் சேர்த்தும் வியாசபாரதத்தை அநுசரித்தும் பதினெட்டுப்பருவங் களையும் இயற்றியுள்ளார். சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அரங்கநாத கவிராயர் என்பவர் விருத்தப்பாக்களில் பாடி யுள்ளார்.

மகாபாரதச் சுருக்கம் என்னும் இந்நூலின் ஆசிரியரைப் பற்றித் தெளிவாக அறிவதற்குத்தக்க ஆதாரம் கிடைக்கவில்லை. நல்லாப்பிள்ளை பாடிய பாரதம் 15300 செய்யுட்களைக்கொண்டது. இந்நூலில் வில்லிபாடிய பாடல்களையும் சேர்த்துக்கொண்டுள்ளார். நல்லாப்பிள்ளையின் காலத்தில் இருந்த இந்நூலாசிரியர் வியாசபாரதக்கதையைத் தழுவியும் நல்லாப்பிள்ளை பாரதத்தைத் தழுவியும் சுருக்கமாக 2822 செய்யுட்களில் பாரதத்தைத் தெள்ளிய தமிழில் யாத்துள்ளார். இந்நூலின் செய்யுட்கள் பெரும்பாலும் கதலீபாகவகையைச் சார்ந்தன என்று கூறலாம்.

வத்ஸராசன் என்பவர் பாரதம் என்னும் நூல் ஒன்று எழுதியுள்ளதாகத் தெரிகிறது. ஆனால் அந்நூல் கிடைக்கவில்லை.

டாக்டர் ஐயரவர்கள் சேகரித்துவைத்துள்ள நூல்களுள் இந்நூலும் ஒன்று. அவருடைய பொற்காலத்தில் வெளிவர வேண்டிய இந்நூல் அவர்கள் பெயரால் பெசன்ட் நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் நூல்நிலையம் வெளியிட்டுக்கொண்டிருக்கிறது.

நூல்நிலையத்தை நன்கு பரிபாலித்துவரும் திருமதி ருக்மிணி தேவி அவர்களின் ஊக்கத்தினாலும் ஆக்கத்தினாலும் ஆதிபருவம் என்னும் இந்நூல் வெளிவருகின்றது.

"மகாபாரதச் சுருக்கம்" என்னும் இந்நூலைப் பதிப்பிக்க 19 என்ற எண்ணுள்ள சுவடி ஒன்று உள்ளது. சுவடியிலிருந்து பிரதிசெய்தவர் திருவெண்ணெய்நல்லூர்த் தமிழ்ப்புலவர் திரு. வடிவேல் முதலியார் என்பவர்.

சுவடிகளின் விளக்கம் முதற்பாகம் 385ஆம் பக்கத்தில் சுவடியைப்பற்றிய குறிப்பு கீழ்க்கண்டவாறு உள்ளது.

Size $15\frac{1}{2}'' \times 1\frac{1}{2}''$ pages 584. Lines 9 on a page. condition good. Appearance old.

Incomplete.

Note: This is a recent but original work written as summary of Mahabharatham The Mss is incomplete.

குறிப்பு : இது மகாபாரதத்தைச் சுருக்கமாகத் தமிழில் செய்யுள்வடிவமாகப் பாடப்பெற்றுள்ளது. இது நல்லாப்பிள்ளை

மகாபாரதத்திற்குப் பிறகு எழுந்த நூலாக இந்நூல் அமையடக் கத்தால் புலனுகும். இப்பிரதியில் நூல் தொடக்கம்முதல் 15வது ஆசிரமவாசபருவம். புத்திரசோகந்தீர்த்தச் சருக்கம் 17ம் பாடல் கள் வரை உள்ளது. செய்யுட்கள் செம்பாகமாயுள்ளன. ஆசிரியர் இன்னரெனத் தெரியவில்லே. இதுவரை அச்சாகாததாகத் தோன்றுகின்றது. 2931 பாடல்கள் உள்ளன. இடையில் 14வது பருவத்தல் 6 ஓலேகள் இல்லே. நூல் அபூர்த்தி".

இந்நூலினேப் பதவுரை, விசேடவுரையுடன் வெளியிட எண்ணி, திரு. C. ஜெகந்நாதாசார்யர் அவர்களேக் கேட்டபொழுது அவர் பரமமகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு பாடல்களேச் சீர் பிரித்துப் பதவுரை விசேடவுரை முதலியவற்றை எழுதிக்கொடுத் தார்கள்.

திரு. C. ஜெகந்நாதாசார்யர் அவர்கள் சிறந்த தமிழ்ப்புலவர். சொல்லாற்றலுடைய வரலாற்று ஆசிரியர். மேலும் அவர் சுவாமி வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யர் அவர்களுடைய தலேமாணுக்கர். விவேகானந்தர் கல்லூரித் தமிழ் விரிவுரை யாளராகப் பல்லாண்டு பணியாற்றி ஓய்வுபெற்றும் தமிழ்த் தொண்டினே இடைவிடாது செய்துகொண்டுவருகின்ருர். அன்னு ருக்கு நூல்நிலேயத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

இந்நூல் நன்கு வெளிவர ஊக்கம் அளித்த நிர்வாகக்கமிட்டி யினருக்கும், அதன் தலேவர் திரு. குகன் அவர்களுக்கும் நன்றி.

மத்திய அரசு இந்தப் பதிப்பு வெளிவருவதற்கு ஓரளவு மானியம் அளித்தமைக்கு நன்றி.

வித்துவான் சு. பாலசாரநாதன்
ஆராய்ச்சித்துறைப்பிரிவு
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலேயம்.

சென்னை 90
27—10—1984

INTRODUCTION

Man is considered to be paragon of animals. He is undoubtedly the apex of creation. In apprehension he is like a god. But all these things will carry no weight unless he realises the goal of life. That goal of life can be determined only if he has recourse to " Shastras " or codes of law. These codes are to be found in the Vedas, Smrithies, Itihasas and Puranas. But to go through all these texts in a life-time is a herculean task and hence if one takes into his head to go through the Itihasas alone it is tantamount to have gone through all the scriptural texts mentioned above. These Itihasas are two in number, the Ramayana and the Mahabharata.

Our Bharat is the Punya Bhoomi which produced these two monumental works. The Ramayana is by Valmiki and the Mahabharata by Vyasa. Both are sages of a high order. Of the two, Vyasa is considered to be Vishnu incarnate: C. F. "Vyasaya Vishnu rupaya Vyasa rupaya Vishnave". His work the Mahabharata consists of nearly a lakh of slokas, divided into eighteen 'Parvas'. The amanuensis for this colossal work is none other than Vinayaka, the Lord of 'the Ganas'. This work includes the Bhagavat Gita in Bhishma Parva and the Vishnu Sahasranama Stotra in the Anusasanika Parva. Hence the sanctity of the work is emphasised in more ways than one. Though, apparently, the work seems to deal with the history and lives of the Kings of the Kuru dynasty who carried an internecine war resulting practically in total annihilation, yet it contains the panacea for all the evils in this world, guiding us at the same time in the right path to face the problems of life which may arise in diverse situations.

The works on Mahabharata in Tamil

Mahabharata was rendered into Tamil from Sanskrit dating from the Sangam Age, (i.e.) 1800 years ago (1st Century A.D.)

(1) The first available information is the name of a poet of the Sangam Age, by name Bharatham-Padiya-Perundevanar. This clearly shows that there was a Bharatham sung by Perundevanar : this book is not available except a few stray stanzas culled from the ancient commentaries.

(2) There is a book called *Bharata Venba* by Perundevanar of a later date, portions of which are available ranging only from Udyoga Parva to Drona Parva and that too incomplete stopping with the death of Abhimanyu. No doubt, The Bhishma Parva is in-between. This book is in *Campu* style i.e. poetry interspersed with prose passages here and there. This is specially used for 'pravachana' or expounding on the topics by the author who lived in the 9th Century A. D. during the reign of the Pallava King Nandivarman III, famous as Tellarru Nandi, the Victor in the Battle of Tellar.

(3) The Tiruvalangadu Plates refer to one Arulnilai Visakan of Arumbakkam of the 13th Century as having rendered into Tamil the Bharatham. This is not available.

(4) The famous Bharatham by Villiputturar of the 14th Century A.D. He has sung only the first ten parvas out of the total of eighteen. This is in Viruttam metre and consists of nearly 4400 stanzas. This book is very popular in Tamil Nadu.

(5) Next to Villiputturar's Bharatham ranks the Bharatham sung by Nallapillai of Mudalambedu in the Chingleput District. This is popularly known as "Nallapillai Bharatham". It consists nearly of 15000 stanzas covering all the eighteen parvas.

(6) There is a Bharatham by Ashtavadhanam Aranganatha Kavirayar of the early 19th Century but it mainly deals about the later portion of the Mahabharata story. This consists nearly of 2500 stanzas.

(7) It is said that there was a book on Bharatham known as "Mavindam" and it is not extant now. Instead there is one "Mahavindam" published by the Tanjore Saraswati Mahal Library and it mainly deals about the closing events, culminating in the Pandavas reaching heaven. (Svargarohanam).

This is of campu style and consists of about 339 Venbas; the editors of this book opine that this is the work of the same Perundevanar of Bhartha Venba fame. But in my humble opinion,

this author bearing the name of Perundevanar is quite a different person from the poet of the 9th Century of Bharatha Venba fame.

(8) Then we are having our own present *"Mahabharatha Curukkam"*, whose authorship still remains to be determined. But the work belongs to the later 19th Century. I have tried to identify this author with one Kacchalaiyar, the author of "Kanchiyam puranam" [otherwise known as Ekambar-puranam or simply Kambar puranam.], seeking shelter under a stanza in its cirappuppayiram. No doubl, I have substantiated my statement with cogent reasons. Anyhow it requires confirmation from other sources.

(9) Lastly there is a book written in Prose style (Urainadai) called "Mahabharatha Curukkam" by Doraiswami Mooppanar of Kapistalam and he lived till the beginning of this century.

Now, I shall briefly give the substance of Adi Parva.

Adi Parva

This is the first of the Eighteen Parvas (Sections) of the Mahabharatha. This consists of nineteen sargas or Carukkams (subsections) starting from Nattuc-carukkam and ending with Kandavadahanac-Carukkam. The important events topical dealt with in each sarga can be briefly analysed with hints as follows :

(1) *Nattuc-Carukkam :* This deals about the fertility and prosperity of Kuru Nadu, the region ruled by the kings of the Lunar dynasty, who traced their descent from the Moon. The river Ganga drains the entire area—agricultural operations are carried on by the inhabitants-Life of the people portrayed—in short, the land is one flowing with milk and honey.

(2) *Nagarac Carukkam :* – This deals about Hastinapura the capital city of the Kings of Bharat—The Pandavas and the Kauravas, the heroes of the epic-description and eminence of the inhabitants both male and female—the rule of Janamejaya, the son of Parikshit—the curse that befell Janamejaya and redemption for it.

(3) *Udangar Carukkam*:—This deals about the sage Udangar, who was responsible for goading Janamejaya to do Sarpa-yaga or Snake-sacrifice.—Sage Paidar asks his disciple Udangar for guru—dakshina. Udangar goes to Padala—The wager in the conflict between Virnathai and Kathru—Garuda bringing the ambrosia from Indraloka—relieved Vinathai from servility—the Sarat-Karu episode-the curse that befell Parikshit-the death of Parikshit due to the snake-bite of Takshaka-hence the Sarpa-yaga by Janamejaya, the son of Parikshit (as goaded by Udangar).

(4) *Sarpa-Yagac-Carukkam*:—This deals about the Sarpa-Chatra-yagam-the terrible plight of the serpents and snake Astika's part in stopping the sacrifice.

(5) *Cirappup-payirac-Carukkam:*—This deals about the attributes necessary for a Prologue regarding this Epic poem-Sage Vyasa with his disciples visited Janamejaya-He enjoined on his disciple Vaisampayana the narration of the history of the Mahabharata war to Janamejaya-Vaisampayana at first narrates briefly the story beginning with the birth of Vyasa.

(6) *Vyasar (Viyadhar) urbhavac-Carukkam:*—This deals about the birth of Sage Vyasa, the progenitor of the Kuru race.

(7) *Prapancham-urbhavac-Carukkam:*—This deals about the emergence of this prapanjam or this Universe with its component of Five Elements-about the evolution of the homo-sapiens, Devas, Nagas, Yakshas, Rishis, celestial damsels, plants and animal Kingdoms-in short, the carācaras (the movable and the immovable).

(8) *Bharata-Veerar-urbhavac-Carukkam:*—This deals about the birth of the Epic heroes who figure in this Itihasa-e.g. the Yadava heroes (Balarama and Krishna), the Pandavas and the Kauravas with their gurus, advisers, courtiers, army-commanders and the women who took a prominent role like Kunti, Mattiri, Ghandhari, and Draupadi,

(9) *Chandira-Vangisam-Yayadhic-Carukkam*:—This deals about the lunar dynasty of Kings (i.e.) the Kings dating their origin from the Moon, especially about Yayadhi, the foremost monarch mainly responsibla for the prolific progeny (vamsa-virutthi) of the Kuru race.

(10) *Duttiantac-Carukkam:*—This deals about King Dushyanta of Sakuntalam fame-He is the father of King Bharata, (born to Sakuntala) who gave the name Bharatha-varsha to this country-the lunar dynasty ends with Asvamedhadattan-[Thus six Vamsas (six lineages) in toto of Bharat Kings ruled over this land].

Note:—The main story of Mahabharata may be said to begin and proceed unimpeded with Santanuc-Carukkam, which forms the next Carukkam.

(11) *Santanuc-Carukkam:*—This deals about Santanu (the father of Bhishma) and his marriage with Gangadevi. Birth of Ashta-vasus in her bosom and their fate-the last of the 'vasus' is Bhishma brought up by his father Santanu-Santanu's subsequent marriage with Yojana-gandhi, the daughter of the Parathava (fishermen) chieftain.

[*Note*:—This Yojana-gandhi was originally named Macchagandhi and through her Saga Parasara became the father of Vyasa. By his yogic powers, Parasara was able to make Macchagandhi regain her virginity and now in her virginhood she was married to Santanu. Thus Vyasa becomes (in the nature of) an elder brother to Bhishma],

Bhishma's Vow—Yojanagandhi through Santanu gave birth to two sons, Chitrangathan and Vichitraveeriyan—Both died early without any issue—Thus a break in the dynastic line happened. later Vyasa (the son of Yojanagandhi otherwise known as Macchagandhi) resuscitated the Kuru race and made it to continue without a break thereafter.

(12) *Sambavac-Carukkam* :—This deals about the birth of the brothers-Dhridharashtra, the blind-king, Pandu, the white-skinned, and Vidura, the low-born.—Then the birth of the

Kauravas, hundred in number, born of Ghandhari, the wife of Dhridharashtra and the Pandavas. five in number, the first three born of Kunti, the first wife of Pandu and the last two born of Mattiri, the second wife of Pandu.

[*Note :*—Karna was born of Kunti when she was a virgin through Surya's grace.] After the demise of Pandu, the Pandavas were under the fostering care of Dhridharashtra.

(13) *Varanavatac-Carukkam:*—This deals about the incidents that happened at Varanavatam (This has been identified as Kasi by some scholars)—The exploits of the Kauravas and the Pandava princes in their youth to test their skill in archery-the Ekalavya episode-installation of Dharmaputra, as the Yuvaraja and sending him to Varanavatam city to live with his brothers separately.—The wax-mansion set on fire by Bhima and escape of the Pandavas with their mother Kunti.

(14) *Vethrakiyac-Carukkam*—This deals about the incidents that happened before their entry into Vethrakiyam and after—Before their entry into the city, Bhima had to fight with Idimban, the demon-subsequently he had to marry Idimbi., the sister of Idimban, the demon slained by him - She gave birth to Gatothkacha through Bhima-At Vethrakiyam the Pandavas with their mother Kunti stayed in a Brahmin's house in the disguise of Brahmins.

(15) *Chittirarathac-Carukkam:*—This deals about a Gandharva named Chitraratha who first quarrelled with Arjuna but later became his friend and guide. He tells Arjuna about Vasishta's greatness and advises the Pandavas to have a Purohit always as their guide, philosopher and friend. As per his advice, the Pandavas sought the help of Sage Dhaumya as their guide.

(16) *Draupadi-malaiyitta-Carukkam:*—This deals about the marriage of Draupadi, the daughter of the Panchala King Drupada with the five Pandava princes, one after another. She was won in a Target-shooting contest by Arjuna diguised as a Brahmin. As per their mother's words which to them are words of the scripture, the five Pandavas married her. This is ordained by divine dispen-

sation as Draupadi was Nalayani in her previous birth. Vyasa convinced Drupada and then, on an auspicious hour, he gave her in marriage to Dharmaputra and his brothers, in order.

(17) *Dharmaputtirar-Pattabishekac-Carukkam:*—This deals about the coronation of Dharmaputra by Dhridharashtra.—The formation of Indraprasta, the Capital city of Dharmaputra's Kingdom-Sage Narada's advice to the Pandavas regarding their conjugal relationship with Draupadi-this resulted in an agreement among the brothers.

(18) *Arjunan-teerthayattiraic-Carukkam:*—This deals about Arjuna's pilgrimage to the holywaters. During this pilgrimage he marries three damsels:—1. The Naga damsel Ulupi and begot Iravan. 2. The Pandyan princess Chitrangatha and begot Babruvahana. 3. The Yadava damsel Subadra, the sister of Balarama and Krishna at Dwaraka and begot Abhimanyu through her, after his return to Indraprasta. Draupadi gave birth to the Upa-pandavas one to each of the five. But Abhimanyu towered over the rest conspicuously by his strength and beauty.

(19) *Gandava-dahanac-Carukkam:*—This deals about the Gandava forest consumed by Agni, the fire-god. In this act of consuming the forest, which belonged to Indra, Agni was helped by both Krishna and Arjuna. Thus Agni was able to quench his appetite in spite of Indra's directing the clouds to pour down heavily on the fire. Only six beings escaped from the all-consuming fire and they are-Mayan, the Asura sculptor, Asvasena, the son of snake Dakshaka, and the four young sparrows born of Sage Mandapala. Agni appeased of his hunger blessed Krishna and Arjuna for their help. He gave Arjuna, the bow Kandipam, a chariot drawn by four white horses and a flag with a monkey emblem on it. (Later Hanuman occupied this place) Both Krishna and Arjuna returned to Indraprasta and were welcomed by the people with great jubilation.

Thus ends the Adi Parva.

The work of writing a commentary on all the Parvas of the "Mahabharatha Curukkam" was enjoined on me by the authorities of Dr. U. Ve. Swaminatha Iyer Library and I am grateful to them for this honour conferred on me. By the grace of the Mahamahopadyaya Dakshinadhya Kalanidhi Dr. Iyer and by the benign benediction of my esteemed Guru Sri U. Ve. V. M. Gopalakrishnamachariar, the modern Patanjali, I ventured to write this explanatory commentary. I have given the meaning for words, their explanation, allusions, the grammatical peculiarities, the kind of prosody used in the course of the composition, and the rhetoric set like gems now and then.

My thanks are due to Sri K. Subramania Iyer, Honorary Curator of Dr. U. Ve. S. Iyer Library and to his associate Sri S. Balasaranathan for the encouragement they have given me. In fine, I express my gratitude to Rajan & Co.. Printers, Madras, to Sri V. T. Rajan, and his illustrious sons T. V. Ramani and T. Chandramouli for their excellent cooperation.

Triplicane,
Madras-5.
24-10-84.

C. JAGANNATHACHARIAR,
Commentator & Editor.

முகவுரை

அருந்தமிழன்பர்காள் !

"அரிதரிது மானிடராதலரிது" என்றனள் தமிழ் மூதாட்டி. பெறுதற்கரிய மானிடப்பிறவி யெடுத்ததற்குப் பயன் இம்மையில் கற்கவேண்டிய நூல்களைக் கசடறக்கற்று நல்லறிவு பெற்றுச் சான்றோர் சென்ற நெறியை மேற்கொண்டு அவ்வாயிலாக மறுமையில் நற்கதிபெறுதலேயாகும். அதற்காகவே நூல்களிற்றலை சிறந்த வேதம் இறைவனால் வெளியிடப்பட்டது என்பது சித்தாந்தம். "வேதம் நிறைந்ததிந்த நாடு" "பன்னரும் உபநிடத நூலெங்கள் நூலே, பார்மீசை யேதொரு நூலிது போலே" என்று மார்பு தட்டினர் பாரதியார்.

ஆனால், அந்த வேத உபநிடதங்களின் பொருளையுள்ளவாறு அறிவதென்பது கருவியின்றி இயலாத செயல். மற்றும், அஃது எல்லார்க்கும் இயைவதுமன்று. ஆகவே, பண்டைக்காலத்துச் சான்றோர் அவ்வேதங்களின் பொருளையறிவதற்கு ஸ்மிருதி இதிஹாச புராணங்களாகிய நூல்களையியற்றினர். அவற்றுள்ளும் ஸ்மிருதி வேதத்தைப்போலவேயிருப்பது, இதிஹாச புராணங்களே யாவரும் ஓதியும் கேட்டும் அறிதற்கு ஏற்றனவாம். இவை வேதத்தின் பொருளை வளர்ப்பன. எனவே, உபப்ருஹ்மணங்கள் எனப்படும். உபப்ருஹ்மணம் என்ற சொல்—வளர்ப்பது என்ற பொருளுடையது. "வேதார்த்தம் அறுதியிடுவது ஸ்மிருதி யிதிஹாஸ புராணங்களாலே" என்றார் பரமகாருணிகரான உலகாரியரும். இதிஹாச புராணங்களுள் இதிஹாசங்களே சிறந்தனவாதலால், 'இதிஹாஸ புராணங்கள்' என்று புராணங்களுக்கு முன் இதிஹாசம்வைத்து வழங்கப்படுவதாயிற்று.

இதிஹாசமென்பது உபதேச பரம்பரையில் வந்த பழைய சரித்திரமொன்றைப் பிரதானமாக எடுத்துப் பல கிளைக் கதைகளோடு புணர்த்து விரித்துக்கூறும் நூலாகும். அங்ஙன முள்ளவை இராமாயணமும் பாரதமுமே என்பது அனைவர்க்கும் உடன்பாடாகும்.

பாரதத்தைத் தமிழ்செய்தோர் :

கடைச்சங்கப் புலவர்களுள் ஒருவராகிய **பெருந்தேவனார்** என்பவர் பாரதம் பாடியுள்ளார். அந்நூலுள் பழைய உரைகளிற் கிடைக்கின்ற சில பாடல்களன்றி, மற்றையவை காணப்படவில்லை. பிறகு ஒன்பதாம் நூற்றாண்டில் மூன்றாம் நந்திவர்மன்

காலத்திருந்தவராய்ப் பெருந்தேவனரென்று பெயர் வழங்கப் பெற்ற ஒருவர் மகாபாரதத்தைத் தமிழில் வசனமும் பாடலுமாக விரவிவருகிற "சம்பு" என்கிற நடையிலே பாடியிருக்கின்றனர்; பெரும்பாலும் வெண்பாக்களால் அமைந்ததுபற்றி, அந்நூலுக்குப் பாரதவெண்பாவென்று பெயர். அதிற்சில பகுதிகளே இப்போது கிடைக்கின்றன. [உத்தியோகபர்வம், (483 வெண்பாக்கள்) பீஷ்மபர்வம், துரோணபர்வத்தில் அபிமன்யுவின் வீழ்ச்சிவரையில். பிரவசன நடையில் அமைந்த நூலிதுவாதலின் "யாது நிகழ்ந்ததோவெனில்" என்று கூறி, அடுத்த செய்யுள் "சென்" என்று சொல் பூர்த்தியில்லாது நிற்கின்றதைக் காணலாம். பாரதவெண்பாவின் இந்தச் செய்யுளின் முழு வடிவமும் ஏனைய செய்யுட்பகுதிகளும் இன்றும் கிடைத்திலது. இஃது ஓர் பேரிழப்பேயாகும்.]

இனி, 13-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அரும்பாக்கத்து அருணகிரிவிசாகன் பாரதத்தை இனிய செந்தமிழ்ப் படுத்தினன் என்று திருவாலங்காட்டுச் சாசனம் கூறும். இந்நூல் வழக்கில் காணப்படவில்லை.

ஆகவே, பாரதம் நம் தமிழ்மொழியில் வழங்குவதே நம் நாட்டாரால் போற்றுதற்குரியதாதலின், நடுநாடு என்று சொல்லப்படுகின்ற திருமுனைப்பாடி நாட்டிலே வக்கபாகையென்னும் தலைநகரில் விற்றிருந்து செங்கோல்செலுத்திய கொங்கர்குலத்துத் தோன்றிய வரபதியாட்கொண்டான் என்ற அரசன், வில்லிபுத்தூராழ்வாரது கல்விகேள்வி திறமைகளைக் கேள்வியுற்று அவரை வரவழைத்து அநேக சன்மானங்கள் செய்து தனது ஆஸ்தான பண்டிதராக ஆக்கி, ஒருநாள் அவரை நோக்கி "வடமொழியில் ஸ்ரீ வேதவியாச மகாமுனிவரால் விரித்துரைக்கப்பட்ட மகாபாரத சரித்திரத்தைச் செந்தமிழில் விருத்தப்பாடல்களினூற் சுருக்கமுற ஒரு பெருங்காப்பியமாகப்பாடித் தந்தருளல்வேண்டும்" என்று பிரார்த்திக்க, "மன்னு மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும், என்னும் ஆசையால்" அவ்வேண்டுகோளுக்கிசைந்து சொற்சுவை பொருட்சுவைகள் மிக்கு விளங்கும்படி இவ்வில்லிபுத்தூரார் நாலாயிரத்து முந்நூற்றுச்சொச்சம் பாடல்களாற் பாடினர். இந்நூல் எளியநடைவாய்ந்ததாய், அதே சமயத்தில் மிடுக்குள்ளதாய், உள்ளும் புறம்பும் பொலிந்திலங்குஞ் சுவையுடையதாய் அனைவராலும் போற்றப்படுவதாய், கௌடநெறியில் அமைந்துள்ளது. ஆனால் அவர் பாடியவை பத்துப்பருவங்களே,

முதனூலாகிய வியாசபாரதமோ பதினெட்டுப் பருவங்களைக் கொண்டது. இந்த வில்லிபுத்தூரார் காலம் பதினொன்காம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும்.

இனி, பாலபாரதம் என்று வடமொழியில் அகஸ்திய கவியினால் பாடப்பட்ட நூலொன்றுண்டு. அது, பாண்டவ சரித்திரத்தைத் தொகுத்துக்கூறும் பத்தியகாவியமாகும். அது—இருபது சருக்கங்களைக்கொண்டது. அவற்றுள் முதல் ஆறு சருக்கங்கள் ஆதிபருவத்துச் சரிதையைக் கூறுவதாகும். இச் சரிதை சுருங்கக்கூறப்பட்டிருத்தலின், வில்லிபுத்தூரர் தமது ஆதிபருவத்திற்கு இதனையே பெரும்பாலும் தழுவியெழுதியுள்ளாரென்பது தெரியவருகின்றது.

இனி, அந்த வில்லிபாரதத்தைத் தமக்கு வழிகாட்டியாகக் கொண்டு 'அவர் வழிபற்றிக் கூறுகின்றேன்' என்று இந்த "மகாபாரதச் சுருக்கம்" நூலாசிரியர் பிரதிக்ஞை செய்துள்ளார். அவர் :—

"அகத்தியர்க்குநேர் வில்லிபுத்தூரனல்லியன்
தொகுத்த வைந்தாஞ்சுருதியைத் தொண்டனேன் சுருக்கல்
மகத்து வம்பெறு மேருவை வலித்துத்தன் வளையுள்
புகுத்து வேனெவ முயன்றசிற் றெறும்பினைப் போலும்"

என்று கூறியுள்ளார். எனினும் அச் சுருக்க நூலாசிரியர் வில்லியாருக்குப் பிற்பட்டவராகிய நல்லாப்பிள்ளையவர்கள் பாடிய பாரதத்தையே பெரும்பாலும் தழுவித் தமது நூற்சருக்கங்களுக்குத் தலைப்புப்பெயரிடுதல் முதற்கொண்டு தாம் பின்பற்றிச் சென்றுள்ளாராதலின், இவர் அப் பிள்ளையவர்களின் பாரதத்தையும் தமக்கு வழிகாட்டியாகக்கொண்டுள்ளாரென்பது வெளிப்படையாகின்றது.

*இந்த நல்லாப்பிள்ளையென்பவர் தொண்டைமண்டலத்து முதலம்பேடு என்னுஞ் சிற்றூரிலே கருணீகர் குலத்திலே பிறந்

---

* இந்தச் சிற்றூரைத் தரிசிக்கும்பேறு போந்தவாக்கம் ஆசிரியர் T. M. இராகவன் என்பவர் உதவியினால் பெற்றேன். இந்த ஊர் தற்போது மேல்முதலம்பேடு, கீழ்முதலம்பேடு என இரண்டு சிற்றூர்களாக வழங்கப்படுகிறது. விசாரித்ததில், இங்கும் இதனைச்சுற்றியுள்ள அருவித்துறை முதலானவிடங்களிலும் தமிழறிஞர்கள் புலமையெய்தியிருந்தனரென்பது தெரியவந்தது.

தார்: சரசுவதி உபாசகர்: இலக்கியவிலக்கணங்களில் வல்லுநர். இவர் இப்பாரதத்தைச் செங்காடு என்னும் கிராமத்தில் சுமார் நூற்றெழுபது ஆண்டுகளுக்குமுன் செல்வத்திலும் தெய்வபக்தியிலும் சிறந்த பண்டகுல—வீரராகவரெட்டியார் என்பவர் விருப்பத்தின்படி இயற்றினர். ரெட்டியாரவர்கள் தமிழில் பாரதம் முற்றும் [பதினெட்டுப்பருவங்களும்] இன்மையால் பிள்ளையவர்களை இயற்றும்படி வேண்டிக்கொண்டார். அவர் வேண்டுகோளுக்கிசைந்த பிள்ளையவர்கள் வில்லிபுத்தூரார் பாடிய பாரதத்திலே சுருக்கமாகக் கதையைத் தொகுத்துக்கூறும் முந்நூறு நானூறு பாடல்கள் தவிர மற்றை நாலாயிரஞ் செய்யுட்களையெடுத்துக் கொண்டு, புதிதாகத் தாம் சுமார் பதிஞ்ராயிரம் பாடல் பாடி இடையிடையிற் கோத்தும், இறுதியிற் சேர்த்தும் பாரதம் பதினெட்டுப்பருவங்களையும் பூர்த்திசெய்தார். அது நல்லாப்பிள்ளை பாரதம் என வழங்கும். (நல்லாப்பிள்ளைபாரதம் மொத்தம் 14728 செய்யுட்களைக்கொண்டது எனக் கணக்கிடுப.)

இந்த நூலைப் பிள்ளையவர்கள் இயற்றும்போது அவரோடு சகபாடியாயிருந்த முருகப்பவுபாத்தியாயர் சௌபதிக பருவம் முதல் ஆநுசாஸநிக பருவம்வரையில் உள்ள நான்கு பருவங்களில் பிள்ளையவர்களோடு சேர்ந்து தாமும் சிற்சில வடமொழிச் சுலோகங்களை மொழிபெயர்த்துத்தர, பிள்ளையவர்கள் அச்செய்யுட்களையும் தழுவிக்கொண்டு எஞ்சிய பருவங்களையும் மொழிபெயர்த்து நூலை முற்றுவித்தார். பின்னர் பணவுதவி செய்த ரெட்டியாரவர்களோடும் முருகப்பவுபாத்தியாயரோடும் காஞ்சிபுரத்தில் வரதராஜப்பெருமாள் ஸந்நிதியில் தமது மகாபாரத நூலை உலகோபகாரமாகத் தந்து அரங்கேற்றினர்.

இந்த இடத்திலோர் ஆராய்ச்சி:

இனி, இன்றியமையாததோர் ஆய்வு இந்த மகாபாரதச் சுருக்க நூலாசிரியரைப்பற்றியதாகும். அஃது பின்வருமாறு:—

இந்த 'மகாபாரதச் சுருக்க நூலாசிரியர் யாராயிருக்கலாம்' என்று அடியேனுக்கு ஒரெண்ணம் ஓடியது. இதன் ஆசிரியர் காஞ்சிபுரத்துப் பிள்ளைபாளையத்திலுள்ள ஆளவந்தார் ஆதீனத்துச் சந்தானத்தில் வந்த கச்சாலையராயிருக்கலாம் என்று தோன்றிற்று. இந்தக் கச்சாலையர் 'காஞ்சியம் புராணம்' என்று தமது

கணபதிகாப்புச் செய்யுளில் பெயரிட்டுப் பழைய காஞ்சிப் புராணம் பாடியவராவர். இந்தப் புராணத்தைப்பற்றி வழங்கியுள்ள சிறப்புப்பாயிரச் செய்யுட்களில் ஒன்று மிகவும் கைகொடுத்து உதவிற்று. அந்தச் செய்யுளின் தொடக்கவடி

"பாரத மும்கச்சிக் கோவையும் பாடப் பரிந்துதித்தாய்!..... ...
பூரண லட்சணக் கச்சாலி யென்னுந் போதத்தனே"

என்பது. அடியேனது ஞானசிரியராகிய ஸ்ரீ. உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்ய ஸ்வாமியவர்கள் தமது வில்லிபாரத ஆதிபருவத்து முகவுரையில் "பழையகாஞ்சிப் புராண ஆசிரியர் ஒரு பாரதத்தை இயற்றியுள்ளாரென்று அப்புராணச் சிறப்புப் பாயிரம் தெரிவிக்கின்றதென்றும் அந்நூல் இப்போது கிடைக்க வில்லையென்றும் கூறுப" என்று குறிப்புக் காட்டியுள்ளார். அக் குறிப்பினைக்கொண்டு எனது ஆய்வின்படி இந்தப் பழைய காஞ்சிப்புராண ஆசிரியரென்றது — "காஞ்சியம் புராணம்" பாடிய இந்தக் கச்சாலியரைத்தான் என்பது தேறியது. என்னையெனில், அவரது நூற் சிறப்புப்பாயிரத்தில்தான் இந்தக் குறிப்புக் காணப்படுகிறது. மேலும் ஒரு சிறந்த நுணுக்கம் அடியேனது எண்ணத்திற்கு அரண்செய்வதாயுள்ளது. அஃது என்னையெனில்:—

இந்த "மகாபாரதச் சுருக்கம்" பெரும்பாலும் தன்னுடைய சுருக்கங்களின் பெயரமைப்படைவில் நல்லாப்பிள்ளைப் பாரதத்தைப் பெரிதும் தழுவியே சென்றுள்ளது என்று முன்னரே வரைந்துள்ளேன். அஃது குறிக்கொள்ளத்தக்கது. ஏனென்னில்—

நல்லாப்பிள்ளையவர்கள் தமது பாரதத்தைக் காஞ்சியில் வரதராஜப்பெருமாள் ஸந்நிதியில் அரங்கேற்றியது விசதம். இந்த அரங்கேற்றத்தின்போது கச்சிப் பிள்ளை பாலைய ஆதீனத்துக் கச்சாலியர் விஜயஞ் செய்திருக்கலாம்: அல்லது அந்த அரங்கேற்றத்தை விஜயஞ் செய்த சிலர் இவரை நோக்கி "நல்லாப்பிள்ளை பாரதம் பரக்கப் பதினெந்தாயிரஞ் செய்யுட்கள் கொண்டிருப்பதால் அதனைச் சுருக்கி யெழுதச் சொல்லப் பிரார்த்தித்திருக்கலாம்: அவரும் அன்னர் பிரார்த்தனைக்குச் செவிசாய்த்திருக்கலாம். அவர் அப்போது பாரதத்தைச் சுருக்கமாகப் பாடியருளியதைத்தான் நாம் இந்தச் சிறப்புப்

பாயிரச் செய்யுள் குறிப்பதாகக் கொள்ளலாம். பொருத்தம் என்னையெனில் இதே சிறப்புப் பாயிரத்தில் இந்தச் செய்யுளுக்கு அடுத்தசெய்யுளில்''.—

"யாவரும் மிக்கதென் றேதும்தென் கச்சிக்கச்சாலே யென்னும் பாவலன் கம்பர் புராணத்தை யோதிய பண்பினனே" என்று வருகிறது. (கம்பர் புராணம்=ஏகம்பர் புராணம் எனவும் வழங் கப்பட்ட காஞ்சியம் புராணம்). ஆக, காஞ்சிப் புராணத்தைப் பாடியதற்கு முன்பே இந்த "மகாபாரதச் சுருக்கத்தை" எழுதி யிருக்க வேண்டுமென்று தெரிகிறது.

இந்தக் கருத்திற்கு உடன்படுவோமாயின் இந்த நூலாசிரியர் காலத்தை ஒருவாறு நிர்ணயிக்கலாம். நல்லாப்பிள்ளை பாரதத் துக்குச் சிறப்புப்பாயிரம் தொழுவூர் வேலாயுத முதலியார் அவர் கள் ஆசிரியப் பாவால் இயற்றியுள்ளார். [இக்குறிப்பு-1888-இல் பதிப்பிக்கப்பட்ட நல்லாப்பிள்ளை பாரதத்தால் தெரிய வருகிறது] இந்தத் தொழுவூர் வேலாயுத முதலியார் வள்ளலாருடைய மாணக்கர் எனப்படுவர். வள்ளலார் காலம் 1823—1874 என்பர். ஆதலின், நல்லாப்பிள்ளை காலமும் அதுவேயாகலாம். கச்சாலை யரும் அவரோடு சமகாலத்தவரா யிருக்கலாமாதலின், இற்றைக் குச் சுமார் நூற்றறுபது ஆண்டுகட்கு முன்னிலிருந்திருக்கிறார் என்று தேறியது.

இந்தக் கச்சாலையர் சிவஞானமும் சிவானுபூதியும் பெற்றவ ரென்பதில் ஐயமில்லை. இந்த மகாபாரதச் சுருக்க நூலிலும் சிவபிரானைப் பற்றிக் குறிக்கும் இடந்தோறும் இந்தச் சிவபக்தி புலனாகிறது: உதாரணமாகச் சில காட்டுவல் :—

(i) கிற்றிள மதியம் மருவு செஞ்சடிலத் தெம்பெருமான் வாழ் வாரணவதநகர் புகுந்தான். (ஆதி. வாரணவதச் சருக்கம், செ: 57.)

(ii) வியனகரடைந்து எம்பரன் 'பதம் பணிந்து (ஆதி: வாரண: சருக்: செ: 58).

(iii) "எந்தை வரையில் இமவரையில்" (சபா: இராயசூய செ: 29).

(iv) "என்னையாளுடைய கந்தன் வந்தவதரித்து (ஆரணிய: மார்க்கண்டேயர்: செ: 95).

இனி, பல இடங்களில் வில்லிபுத்தூரரைப்பின் பற்றியுள்ளார் என்பது விசதமாகின்றது. அவர் பாடிய பாடல்களின் கருத்துக் களையும் சொற்களையும் சொற்றொடர்களையும் கூட அப்படியே கொண்டு தாம் பாடல்கள் அமைத்துள்ளார் எனலாம். எடுத்துக் காட்டாக ஒன்று கூறுவல் :—அருச்சுனன் தவங்கிலச் சருக்கத்தைக் கூறலாம். அந்தச் சருக்கத்துள் வருகின்ற அருச்சுனன் தவச்சிறப் பைக் கூறும்போதும், அருச்சுனனுக்கும் சிவபிரானுக்கும் இடையே சம்வாதம் நடக்கும்போதும், பிரதியட்சமாகிய சிவ பிரானை அருச்சுனன் தோத்திரஞ் செய்யும்போதும் இந்தப் பண் பினைத் தெற்றெனக் காணலாகும்.

இது நிற்க; வில்லியார் பாடாது விடுத்த சருக்கங்களை இச் சுருக்க நூலாசிரியர் பாடும்போது அவற்றின் தலைப்புப் பெயர்கள் முதற்கொண்டு நல்லாப்பிள்ளை பாரதத்தைத்தழுவி அங்ஙனமே மேற்கொண்டதோடு, சொற்றொடர்களையும் பல கருத்துக்களையும் அப்படியே பொன்னேபோல் போற்றியுள்ளாரென்பதையும் காணலாகும். [குறிப்பு இதனை 'ஒராய்வு' என்று தனித்தலைப் பிட்டுப் பின்னர்க் காட்டியுள்ளேன்]

இதுகாறுங் கூறியவாற்றுன் அடியேன் பெறவைப்பதென் னென்னில்—ஒருகால் நல்லாப்பிள்ளையவர்களியற்றி அரங்கேற்றிய பாரதத்தைச் சுருக்கிச் சிலர் பாடச்சொல்ல, அதனுல் கச்சாலையர் இந்த மகாபாரதச்சுருக்க நூலைப் பாடியிருப்பரோ என்பது, அவர் பாடியருளிய காஞ்சியம்புராண விருத்தப்பாக்களுக்கும் இந்த மகாபாரதச்சுருக்க நூலிற்பயிலும் விருத்தப்பாக்களுக்கும் நடைப்போக்கிலும் சொல்லொழுக்கிலும் வேறுபாடுகள் காணப் பட்டாலும் அவை பாட எடுத்துக்கொண்ட விஷயங்களைப் பொறுத்து அமைக்கப்படுதலின் இழுக்கொன்றுமில்லை. மற்றும் இச் சுருக்க நூலாசிரியர் தமது செய்யுட்களின் யாப்பமைதியில் கதைப்போக்கின் சந்தர்ப்பத்தையொட்டி அப்படியே வில்லிபுத் தூரரின் யாப்பமைதியையும் சந்தங்களையும், சந்தப்போலிகளை யும், சந்தக்குழிப்புகளையும் மேற்கொண்டுள்ளார் என்பது தெளி வாகின்றது, இது நிற்க:

இனி, இற்றைக்கு இருநூற்றுப்பத்து ஆண்டுகளுக்குமுன் இருந்த அஷ்டாவதானம் அரங்கநாத கவிராயர் பாடிய பாரதத் தின் பிற்பகுதியும் ஒன்று உளது; அது ஏறக்குறைய 2500

செய்யுட்களையுடையது. தவிர, மாவிந்தம் என்ற பெயரால் தமிழில் பாரதக்கதையைச் சொல்லும் ஒரு நூலுண்டு என்றுங் கூறுப. தஞ்சை சரசுவதிமஹால் நூல்நிலையம் "மஹாவிந்தம்" என்று ஒரு நூலை 1950-இல் வெளியிட்டுள்ளது. அது 339 வெண்பாக்களைக்கொண்டது. மகாபாரதத்தில் இறுதிப் பருவங்களின் செய்திகளை இது குறிப்பது. இதனைப் பதிப்பித்தோர் இது பாரதவெண்பா பாடிய பெருந்தேவனாரே பாடியதாகும் என முடிவுகட்டியுள்ளனர். ஆனால், அடியேன் ஆய்ந்ததில் அக்கருத்து வலியுடைத்தாகத் தோன்றவில்லை. ஏனெனில், பிரவசனஞ்செய்வதுபோல் சம்புநடையில் அமைந்துள்ள பெருந்தேவனார் பாரதவெண்பா நூலின் உத்தியோகபருவ முதலிய பருவங்களின் செய்யுட்களின் (வெண்பாக்களின்) சொற்போக்கும், நடைச்செலவும், கற்பனைவளமும், மெய்ப்பாட்டுணர்ச்சிகளும் முற்றிலும் இந்த மஹாவிந்த வெண்பாக்களில் காண்டலரிதாயுள்ளது. அந்தப் பாரதவெண்பாவில் வெளியாகும் பெருந்தேவனாரின் கிருஷ்ணபக்தி இந்த மஹாவிந்த வெண்பாக்களிற் சோர்வுபட்டுத் தேய்ந்திறுகிறது. உண்மையிலே, பாரதவெண்பா பாடிய பெருந்தேவனாரே இந்த மஹாவிந்தத்தையும் பாடியிருப்பாராயின், அவருக்குப்பின் வந்து அவர்கருத்துக்களைப் பெரிதும் தழுவித் தமது நூலியாத்த வில்லியார் சரதம் தாமும் பத்துப் பருவங்களோடு நிறுத்தாமல் அவரைப் பின்பற்றி மகாவிந்தம் (ஸ்வர்க்காரோஹணபர்வம்) பாடியிருப்பார். ஆக, மகாவிந்தம் என்ற நூலைப்பாடியவர் பாரத வெண்பாபாடிய பெருந்தேவனாரல்லர், வேறொருவர் என்பது தெளிவு.

இனி, 'மகாபாரதச் சுருக்கம்' என்றொரு வசனநூல் கவித்தலம் துரைசாமி மூப்பனார் அவர்களால் இயற்றப்பட்ட தொன்றுண்டு. அது, தமிழ் வில்லி பாரதத்தையும் வடமொழி வியாச பாரதத்தையும் பெரும்பாலும் தழுவியெழுதப்பட்டுள்ளது.

பாரதச் சுருக்கம்—பதிப்பும் உரையாக்கமும்.

இந்தப் பாரதச் சுருக்க நூல்முழுவதனையும்-பதினெட்டுப் பருவங்களையும்—செவ்வனே பதிப்பித்து அவற்றுக்கு உரை யெழுதும் பணியை மஹாவித்வான் ப்ரம்மஸ்ரீ மகாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி திராவிட வித்யாபூஷணம் ஸ்ரீ உ. வே. சாமிநாதையரவர்கள் நூல்நிலையத்தார் அடியேனுக்கு இட்டனர். அந்நூலுள் முதலதாகிய ஆதிபருவம் பத்தொன்பது சருக்கங்களைக்

கொண்டது. பாயிரம் நீங்கலாக நாடுச் சருக்கம் தொடங்கிக் காண்டவ தகனச் சருக்கம் இறுதியாகவுள்ள பகுதியாகும். மொத்தம் 571 செய்யுட்களையுடையது.

பாரதத்திற்கு உரையெழுதத் துணிதல் சாகசமேயாயினும், ஐயரவர்களின் ஆசியின் பலம் கைகொடுக்கும் என்று தைரியங் கொண்டு இந்த உரையாக்கத்தில் இறங்கினேன். மற்றும், அடியேனுக்கு ஞானசிரியரான உரையாசிரியச் சக்கரவர்த்தி ஸ்ரீ உ. வே. வை. மு. கோபாலகிருஷ்ணமாசார்யர் ஸ்வாமி அருளாசியின் பலமும் துணைபுரிய இவ்வுரை யெழுதச் சமைந்தேன். ஸ்வாமியவர்கள் கம்பராமாயணம் முழுமைக்கும் விழுமிய உரை கண்ட மகான். அவர் திருவடிவாரத்தில் பயின்றவனுதலின், அவர் அடிச்சுவட்டினைப் பின்பற்றி உரையெழுதத் துணிந்தேன். உரையெழுதுங்கால் மஹாமஹோபாத்யாய ஸ்ரீ உ. வே. ம. வீ. இராமானுஜாசார்யரவர்களின் ஸ்ரீமஹாபாரத தமிழ் மொழி பெயர்ப்புநூல் பேருதவி செய்தது.

இந்த ஆதிபருவவுரையில் பல அரிய விடயங்கள், இலக்கண நுணுக்கங்கள், உரைவிசேடங்கள், கதைக் குறிப்புக்கள், சந்திரன் தொடங்கி அசுவமேததத்தன் ஈறுக ஆண்ட ஆறுவமிச மன்னர்களின் அட்டவணை முதலியன காட்டியுள்ளேன், மற்றும், பயில்வோர்க்குப் பெரிதும் பயன்படும்படி இப்பதிப்பில் அபிதான சூசிசையகராதி, அரும்பதவகராதி முதலியன, அருந்தொடர்கள், செய்யுண் முதற்குறிப்பகராதி என்பனவும் இறுதியிற் சேர்க்கப் பட்டுள்ளன.

இப்பதிப்பினைச் செம்மையுற அச்சிட்டுதவிய ராஜன் அண்டு கம்பெனி பிரிண்டர்ஸ் அச்சகத்தார்க்குத் தலையல்லால் கைம் மாறிலேன். அச்சிடும்போது கண்ணுங்கருத்துமாய்க் கண் காணித்து வந்த சிரஞ்சீவி T. V. ரமணிக்கும் சிரஞ்சீவி T. சந்திர மௌளிக்கும் என் ஆசிர்வாதங்கள். அடியனை, இந்நற்பணியிற் கூவியேவல் கொள்ளும்படி செய்த நூல்நிலைய நிர்வாகக் கமிட்டியினருக்கு என்றும் நன்றியறிதலுடையேன்.

திருமகள் கொழுநனை திருமால் தனது சரிதையாகிய இப் பாரதத்தில் அடியேனுக்கு மனம் பதியுமாறு செய்து இந்நூலின் ஆதிபருவத்திற்கு நல்லுரை வெளியிடுதலாகிய இந்த நற்பணிக் குத்தோன்றுத்துணையாய் நின்று உதவிய கருணைத்திறத்தி லீடு பட்டு அனவரதமும் அப்பரமனை வழுத்துகின்றேன்.

"என்னெஞ்சத் துள்ளிருந்திங் கிருந்தமிழ்நூ லிவைமொழிந்து
வன்னெஞ்சத் திரணியனை மார்விடந்த வாட்டாற்றான்
மன்னஞ்சப் பாரதத்துப் பாண்டவர்க்காப் படைதொட்டான்
நன்னெஞ்சே நம்பெருமான் நமக்கருள்தான் செய்வானே".

இங்ஙனம்

ரக்தாக்ஷி ஹ}
புரட்டாசி மீ}

சி. ஜெகந்நாதாசார்யர்
உரையாசிரியர்—பதிப்பாசிரியர்.

ஓராய்வு

நல்லாப்பிள்ளை பாரதத்தைத்தான் இக் கச்சாலையர் சுருக்கி யிருத்தல் வேண்டுமென்பதற்குத் தக்க சில சான்றுகள் காட்டு கின்றேன் :

(i) ஆரணிய பருவம்: இராமாயண கதை யுரைத்த சருக்கத்து, "பிரகத்தனைச் செற்றான் வீடணன்', என்று கூறியிருப்பது நல்லாப் பிள்ளையின் கூற்றைத் தழுவியே யெனலாம். நல்லாப்பிள்ளையோ வியாசரைப் பின்பற்றியுள்ளார். பிள்ளையவர்கள் இந்தவிடத்து, "முரணில் வீடணனேடேற்றான் முதிர்சினப் பிரகத்தனென் போன்'' (இராவண: சங்காரச் சருக் : 23) என்றும், "செருவலிப் பிரகத்தனென்போன் சினஞ்செறிந்தேமகூடப், பெருவரையனைய தண்டமொன்றினைப் பெட்பினுய்த்தான், மருவுவீடணனேர் கையிற் பற்றினனமரர் வாழ்த்த'' (செ : 26) என்றும், "அஞ்சன மேனியண்ணலடி நினைந்ததனைமீள, நஞ்சினுங்கொடியான்மீது வீசலும் நைந்து சென்னி துஞ்சினனசுரர் கோமான்'' (செ : 27) என்றும் பாடல் அமைத்துள்ளமை காண்க. [குறிப்பு:—பிரகத் தனைக் கொன்றவன் நீலன் என்ற வானரசேனைத்தலைவன் என்று வான்மீகியும் கம்பரும் கூறியிருக்கின்றனர். அரக்கச் சேனைத் தலைவனைக் குரக்குச்சேனைத் தலைவன் கொன்றான் என்பதுதான் பொருந்துவது. வியாசபகவான் விகற்பம் வேண்டற்பாற்றன்று].

(ii) விராடபருவம் :—(a) அக்கியாதவாசச் சருக்கம் :—'அக்கி யாதம்' என்ற இந்தச் சொல்லை 'அஜ்ஞாதம்' என்றவிடத்து உபயோகித்திருப்பது நல்லாப்பிள்ளையின் கூற்றைத் தழுவியே யெனலாம். தமது பாரதத்துச் சிறப்புப்பாயிரச் சருக்கத்து "ஓதுமொரு வருடமக்கியாதமெனவும்'' என்று அமைத்துள்ளார். (செ : 35)

(b) நல்லாப்பிள்ளை நாடுகரந்துறை சருக்கம் என்று மகுட மிட்டு இந்த அக்கியாத வாசத்தைப்பற்றிக் கூறிய பல செய்யுட் களின் கருத்தை இந்த மகாபாரதச் சுருக்க ஆசிரியர் பின்பற்றி யுள்ளார் என்பது தேற்றம். சில எடுத்துக்காட்டுகள் போதும்:

1. தவுமியமுனிவன் தருமனுக்கும் தம்பியர்க்கும் மன்னரைச் சேர்ந்தொழுகும் முறைமை (அரசியல்நீதி) கூறுமிடத்துக் காண் போம். இங்குச் சுருக்க நூலாசிரியர் நான்கு கவிகளிற் பெற வைத்துள்ளார் (அக்கியாத : செ : 16-19). இவற்றிலுள்ள கருத்துக்கள் நல்லாப்பிள்ளையின் கூற்றுக்களைத் தழுவியன வேயாகும். எங்ஙனென்னில்—

" விலகிலா வலியரென்னினும் பெருமை
விட்டனு சூயைத னகட்டின்
உலகெலா மளந்தோ னிருந்தபோ லடங்கி"—

என்ற உவமையிடத்து, (அக்கி : செ : 16).—

"ஒப்பிலா வலியுடை யொருவனுயினும்
தப்பிலா தாண்டகை தனக் கடங்கலே
செப்பிலா ரணநெறி தொழிலிற் சேர்ந்தாள்
வெப்பிலீர் பெருமித மறத்தல் வேண்டுமே" (நல் : நாடு : 75)

"முத்தல மளந்தருள் மூலகாரணன்
வித்தக நெறியனு சூயை வேட்கையால்
புத்திர னுகிய போத கட்டினில்
எத்தக வடங்கின னிருக்கு நாளெலாம்" (நல் : நாடு : 76)

என்ற நல்லப்பிள்ளையின் வாக்குச் சாயலைக் காணலாம். மற்றும்,

"உரைக்கரும் பிதாக்களைக் ததனில், அலகிலா புகழ்சேர்
அரசனு மொருவனும் என வணங்கினின்று" என்றவிடத்து

(அக்கி : செ : 16)

"ஈன்றவன் ஆசான் விஞ்சை யீந்தவன் கடவுள் மற்றும்
தோன்றலோ டைவரென்று காண்குவர் தூய மாந்தர்"

(நல். நாடு : 95)

மேலும் இச்சாயல் வலியுறுகிறது.

2, "குரிசில்முன் னவைபுக் கிருந்தவன் முன்பின்
குறுகிடா தருகிறன் றொழிலின்
வரிசையின் முயன்று தும்பல்கொட் டாவி
மடிபுறத் தொழித்துரை கருமந்
துரிசற முடிகா றுண்டியுந் துயிலுந்
துறந்தவன் குறிப்பறிந் தந்த
பரிசினின் றிருள்கான் மழைவெயி லினும்போய்
பணிக்குமப் பணிசெய வேண்டும். (அக்கி : செ : 17)

என்ற இச்செய்யுளின் மூலம் கூறிய கருத்துக்கள் பின்வரும் நல்லாப்பிள்ளை பாரதச் செய்யுட்களைத் தழுவியனவே : அவை வருமாறு :

"புரவலனவையிலுற்ற போதவனெதிரில் வைகார்
வெரிநுறப் பின்னர் வைகார் வேந்திருபுறத்தும் வைகி"

(நல் : நாடு : செ : 86)

"தும்முதல் விக்கல் நெட்டை சோம்பு கொட்டாவி போக்கல்
செம்மல் பேரவையிற் செய்யார் எய்துமேல் தீர்ந்தாண்டோர் சார்
வெம்மையி னகற்றிமீள மேவுவர்" (நாடு : செ : 93)

'வருபெருமிருளிற் பெய்யுமாரியில் வெயிலிலேவிற்
கருமமே கருதலன்றிப் பிறிதொன்றுங் கருதாணதே"
(நாடு : செ : 90)

"மன்னுடைக் கருமமுற்று மளவையின் வருத்தமுண்டி
உன்னரு முறக்கந்தண்ணீர் மாந்துதல் முதலாவுள்ள
பன்னரு மியற்கைநெஞ்சிற் பொருளென மதியார்" (செ : 91)

மற்றும்,

3. "மன்னரிற் சிறந்த மனிதமக் காகா
மணிகலன் அணிதுகி லாகா
மின்னிய தவிசே றூர்தியு மாகா
விளம்புசொற் கெதிர்ந்தசொல் லாகா" (அக்கி: செ: 18)

என்றவிடத்து--

"அண்ணல்வாழ் கோயிற்கொப்பா வதிகமா வழகுகாட்டும்
விண்ணுயரகமும் அந்தவேந்தனிற் சிறப்புவிஞ்சு
நண்ணருநாகரீக வேடமும் அவன் செங்கோலுக்
கெண்ணுறு மொழியுமார்க்கும் இடுக்கணே புரிவதம்மா"
(நல் : நாடு : செ. 81)

"ஊர்தியாசன மிரண்டுமுகந்தரசுதவானென்னில்
பார்தொழு தகையரேனும் மேற்கொளார்"
(நல் : நாடு : செ : 89)

என்பவற்றின் சாயலினையும்,

"அன்னவன் மனநல் லார்கண்ணண் பாகா" (அக்கி : செ ; 18)

என்றவிடத்து—

"ஐம்புலன் வெறுத்த தூயோர்க் காயினும் அரசரில்லின்
வம்பணி முலையார் நண்பு மாசினையுதவும்" (நல்:நாடு:செ:88)

என்றதன் சாயலினையும்,

"அகநடைப் புறஞ்சொல லாகா" (அக்கி : செ : 18)

என்றவிடத்து—

"அரசுடைக் கோயில் தன்னுளடுத்துள நன்மைதீமை
யுரைசெயத் தகுவதன்றால்" (நல் : நாடு : செ : 87)

என்றதன் சாயலினையும்,

"ஒன்னலர் தூதர் தீயர்நண் பாகா" (அக்கி : செ : 18)

என்றவிடத்து—

"பகைஞர் தீயோர், அம்மைதீர் தூதர்ஈனர்
நண்புறில் அணுகும் துன்பம்" (நல் : நாடு : செ : 93)

என்பதன் சாயலினையும்,

"உவன்பொருள் கவருதலாகா" (அக்கி : செ : 18)

என்றவிட த்து—

"கொற்றவன்றனது நண்புகுறைவறவெய்திற் றேனும்
மற்றவன் பொருளேவெஃகார் வலிதினில் அவனே யீந்தால்
பெற்றிட லன்றியொன்றும் பெறுவது விடம்போ லென்றே
கற்றவ ருயர்ந்தோர்" (நல் : நாடு : செ. 92)

என்றதன் சாயலினையும்,

"அவனிபன் பணியில் பிழைநோக்கி அவமதிக்கினும்
கவலையெய்தாது ஒழுகுதல் இயல்பு" (அக்கி. செ : 19)

என்றவிடத்து,

"உடலம்பொங்கி யவமான மடைந்தபோதின்
நேர்தரு சிந்தைவாடா திருந்தவரெல்லாம் வல்லோர்"
(நல் : நாடு : செ: 89)

என்ற சாயலினையும்,

"அவனிபன் பணியில் நலம்நோக்கிப் புகழ்ந்திடினும்
இன்பு எய்தாது ஒழுகுதல் இயல்பு" (அக்கி : செ : 19)

என்றவிடத்து—

"ஆன்றபேரறி வின்மிக்கோர் ஆண்டகை வியந்தபோது
சான்றவர் வியக்குமாறுத் தமதுளத் தகந்தையெய்தார்"
(நல் : நாடு : செ : 95)

என்றதன் சாயலினையும்,

"காவலனுழி புகுந்து ஏவல், தவறணுகாமல் அகந்தை
விட்டின்சொற்றழைத்திட வொழுகிடின்" (அக்கி. செ : 19)

என்றவிடத்து—

"இறைவனையெய்தி நாளுந் தீதறவேண்டுமுத்திச்
சிந்தையி லகந்தையின்றி மேதகுமின் சொலோடும்
விளம்பு மோராண்டு நீக்கின்" (நல் : நாடு : செ : 96)

என்றதன் சாயலினையும் காண்கின்றோம்.

இறுதியாக, ஒன்று கூறி நிறுவுவேன் :

இந்த அக்கியாத வாசச் சருக்கத்து எட்டாம் செய்யுளில்--

"அறுசுவையடிசில் அமைப்பன் சூத்திரன் யான்" என்று வீமன் தன்னை விராட மன்னன் முன்னிலையில் சூத்திரன் என்று கூறிக்கொள்ளப் போவதாகப் பாரதச் சுருக்க நூலாசிரியர் அமைத்துள்ளார்.

இதற்குத் தக்க ஆதாரம் நல்லாப்பிள்ளை பாரதமே.

அங்கு அவர் :—

"கொடுமையும் வஞ்சமுமிலாத கோமகன்
படிமிசை நின்குலம் பகரென் றோதுமேல்
மடமையினறப் பெருங்கடவுண் மைந்தனுக்
கடியனென் சூத்திரனு வனென்பனே" (நாடு : 29)

என்று அமைத்துள்ளார்.

இங்ஙன் பலவுள : ஆதலின், நல்லாப்பிள்ளையின் பாரதத்தைச் சுருக்கி இந்த மகாபாரதச் சுருக்க நூல் எழுதப்பட்டுள்ளது என்பது நிறுவப்பட்டது.



டாக்டர் ஐயரவர்கள்

மகாபாரதச் சுருக்கம்

மூலமும்-உரையும்

பாயிரம்.

பாயிரம்–முகவுரை, நூன்முகம், புறவுரை எனவும் படும். இவை ஒரு பொருட்சொற்கள். இந்தப் பாயிரம் பொதுப் பாயிரம், சிறப்புப் பாயிரம் என்று இருவகைப்படும். தன்னு லுரைக்கப்படும் ஒரு நூலுக்கு மாத்திரமே உரியதன்றிப் பல நூல்களுக்கும் பொதுப்பட உரைக்கப்படுவது பொதுப்பாயிரம். அங்ஙனமன்றித் தன்னுலுரைக்கப்படும் ஒரு நூலுக்கே உரிய தாகும்படி உரைக்கப்படுவது சிறப்புப் பாயிரம். இந்நூலில் முதல் நான்கு சருக்கங்கள் உபோற்காதமாக [பாயிரமாக]க் கொள்ளப்பட்டுள்ளன. ஐந்தாஞ் சருக்கம் சிறப்புப் பாயிரமாக வைக்கப்பட்டுள்ளது. அதன் காரணம் ஆங்குக் கூறுப.

"எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்க" என்பது இலக்கணம். ஏனெனில், "ஆயிர முகத்தான் அகன்றதாயினும், பாயிரமில்லது பனுவலின்றே" என்ரு ராதலின்.

காப்பு – கணபதி துதி.

இருக்கு நான்கோடைந் தாயிசை பாரதச்
சுருக்க முற்றத் துணைசெயு மேருவிற்
செருக்கி னேடுமந் நூலிமுன் நீட்டுமூ
வுருக்கொ ளியானை யுபயபொற் பாதமே.

(இதன் பொருள்) : இருக்கு நான்கோடு–நான்கு வேதங்க ளோடு [ஒருசேர வைத்து], ஐந்தாய் இசை–ஐந்தாவது வேத மாகச் சொல்லப்படுகின்ற, பாரதம்-மகாபாரத இதிகாசத்தின், சுருக்கம்-சுருக்கமாக எழுதப்பட்ட இந்நூல், முற்ற-(செவ்வன்) முடிவுறும்படி,—

மேருவில்-மேருமலை முழுவதிலும் (அதனை எழுதும் ஏடாகக் கொண்டு), செருக்கினேடும்-பெருமிதத்தினேடும், அந்நூலை-அந்த மகாபாரத இதிகாசத்தை, முன்-முன் துவாபரயுகத்தில், நீட்டும்-

(தம் கோட்டிலைக் கூரிய எழுத்தாணியாகக் கொண்டு) எழுதின, மூ உரு கொள் யானை-(தியானிப்பதற்கு ஏற்ற) மூன்று தோற்ற நிலைகளைக் கொண்டுள்ள யானைமுகக் கடவுளின், உபய-இரண்டாக வுள்ள, பொற்பாதமே-அழகிய திருவடிகளே, துணை செய்யும்-(காப் பாக நின்று) துணைபுரியும் என்றவாறு.— இது—கலிவிருத்தம்.

"பாரத : பஞ்சமோவேத : " என்பது பெருவழக்கு, இருக்கு என்பது ஈண்டு ரிக், யஜுஸ், சாமம். அதர்வணம் என்ற நான்கு வேதங்களுக்கு ஆகிவந்தது, உபலட்சணம். பிரமன் தோன்றி "மகாபாரதத்தை எழுதுமாறு கணபதியை நினைப்பாய்" என்ன, வியாசமுனிவன் அங்ஙனமே கணபதியைத் தியானித்துப் பாரதத்தை எழுதுமாறு வேண்டிக்கொள்ள, அவ்வேண்டு கோளுக்கு இணங்கிக் கணபதிக் கடவுள் எழுதினரென அறிய வேண்டுவது. கணபதி-சிவகணங்களுக்குத் தலைவன்: ஆகவே விநாயகன் எனவும்படுவர். விக்நங்களை (இடையூறுகளை)ப் போக்குபவராதலின், விக்நேசுவரர் எனப்படுவர். மகாபாரதத்தை யெழுதின கடவுளாதல் பற்றி ஏற்புடைக் கடவுள் வணக்கமாக இந்தக் காப்புச் செய்யுளில் கணபதியைக் கவி வணங்குகின்றார். "உபயபொற்பாதமே துணை செயும்" என்றமையால், கவி தாம் தொடங்கிய இந்தப் பாரதச் சுருக்க நூல் இடையூறின்றி இனிது முடியும் பொருட்டுக் கணபதியின் திருவடிகளைச் சரணமாகப் பற்றுகிறார் என்பது பெறப்பட்டது. மேருமலையை ஏடாகக் கொண்டு தன் கோடு எழுத்தாணியாகக் கொண்டு கணபதியாகிய விநாயகர் வியாசர் சொல்லிவரப் பாரதத்தை எழுதினரென்பதனை "முனிராசன் மாபாரதஞ் சொன்ன நாள், ஏடாக வடமேருவெற் பாக அங்கூரெழுத்தாணி தன், கோடாக எழுதும் பிரான்" என்ற வில்லிபுத்தூரர் வாக்கினாலும் தெளியலாம். மேலும், இந்நூல கத்து வியாசரைப்பற்றிய துதிச்செய்யுளிலும் (7) இக்கருத்து மீண்டும் கூறப்பட்டிருத்தலைக் காணலாம்.

இனி, மேலை அவையடக்கச் செய்யுளில் "வில்லிபுத்தூரன் நல்லியன் தொகுத்த ஐந்தாஞ் சுருதியைத் தொண்டனேன் சுருக்கல்" என்று பிரதிஜ்ஞை பண்ணியிருத்தலைக்கொண்டு ஈண்டு "மூவுருக் கொள் யானை" என்பதற்கு (1) முருகார்மலர்த் தாம முடியோனாகிய தோற்றநிலையும், (2) அடியார் முயற்சித்திறம் திருகாமல் விளைவிக்கும் மதயானை வதனச் செழுங் குன்றாகிய தோற்ற நிலையும், (3) இந்திரனுள்ளிட்ட முப்பத்து மூன்றுகோடி தேவர்களும் ஒருகோடி பூதேவர்களும் கைதொழுங்கோவாகிய தோற்றநிலையும் பேசப்பட்டன எனக்கொள்ளல் நேரிது.

இனி, நூலைச் செருக்கிலேடு நீட்டியது என்னென்னில்,-கைப் பிடித்தெழுதிவந்த எழுத்தாணி உருண்டு மேருமலையுச்சியினின்று கீழே விழுந்திடவும் அதனைக் கணிசியாது தன் வாயில் மூளைத் துள்ள தந்தங்களிரண்டினில் ஒன்றையொடித்து அதனையே எழுத்தாணியாகக் கொண்டு எழுதிய பெருமிதம் நோக்கி என்க : இதனால் கணபதிக்கு "ஒற்றைக்கொம்பன்" என்ற திருநாமமும் ஏற்பட்டது. உபயம்-இரண்டு: வடசொல். "பொற்பாதம்-உவமைத் தொகை, பண்புத் தொகையெனினுமாம். கொள் + யானை = கொளியானை: "தன்னெழிமெய்ம் முன் யகரம் வரின் இகரம் தன்னும்" என்றது விதி (நன்னூல்-மெய்யிற்று: 3).

திரிமூர்த்திகளின் வாழ்த்து

1. பூவு மாழியும் பூதர மும்பயின்
றேவு ரும லுலக முயிர்த்தொகை
யாவு மாக்கி யளித்தழித் தின்பொடு
மேவு மூவர்தம் மெய்ப்பதம் போற்றுவாம்.

(இ-ள்). பூவும்-தாமரைப்பூவிலும், ஆழியும்-பாற்கடலிலும், பூதரமும்-(கைலை) மலையிலும், பயின்று-இடைவிடாமல் தங்கி வாசஸ்தலமாகக் கொண்டு, ஓவுறுமல்-ஓழிவின்றி (இடையீடுபடாமல்), உலகம்-பல அண்டங்களையும், உயிர்த்தொகை-எண்பத்து நான்கு கோடி சீவராசிகளையும், யாவும்-இன்னோரன்ன பிறயாவற்றையும், ஆக்கி-படைத்து, அளித்து-பாதுகாத்து, அழித்து-வீயச்செய்து, இன்பொடு மேவும்-(தத்தம் தொழில் புரிதலில்) களிப்பொடு பொருந்தியிருக்கும், மூவர்தம்-பிரமன் விஷ்ணு உருத்திரன் என்கிற மும்மூர்த்திகளுடைய, மெய்ப்பதம்-(என்றும் நழுவவிடாதிருத்தலில்) உறுதியான திருவடிகளை, போற்றுவாம்-துதிப்போம்; (எ-று).

எல்லா நூல்களும்-மங்கல மொழி முதல் வகுத்துக்கூற வேண்டுதலால் "பூ" என்று தொடங்கப்பட்டது. திரிமூர்த்திகள்-பிரமன் விஷ்ணு உருத்திரன் எனப்படுவர். இவர்கள் முறையே அயன், அரி, அரன் எனவும்படுவர். இவர்கள் ஆற்றுஞ்செயல்கள் முறையே உலகங்களையும் உயிர்த்தொகைகளையும் பிற யாவற்றையும் ஆக்கல், அளித்தல், அழித்தல் என்பன,

இச்செய்யுள் வில்லிபாரதத்தின் செய்யுளைத் தழுவிய தென்பதை யுணர்க. அந்தப் பாரதத்தின் செய்யுள் மும்மூர்த்தி

களாகித் தொழில் புரியும் ஏகமூர்த்தியாகிய முதற்கடவுளின் வாழ்த்தாக அமைந்துள்ளது. அஃது பின்வருமாறு:—

ஆக்கு மாறய னுமுத லாக்கிய வுலகம்
காக்கு மாறுசெங் கண்ணிறை கருணையங் கடலாம்
வீக்கு மாறர னுமவை வீந்தநாண் மீளப்
பூக்கு மாமுத லெவனவன் பொன்னடி போற்றி—

என்பது.

பிரமன் விஷ்ணுவின் உந்தியிற் பூத்த கமலத்தில் தோன்றிய வன். எனவே, பூவில் பயில்பவனுயினன். விஷ்ணு திருப்பாற் கடலில் ஆதிசேடன் மீது பள்ளிகொண்டு யோகநித்திரை கொள்பவன்; எனவே, ஆழியில் பயில்பவனுயினன்; உருத்திர னுகிய சிவன் கயிலாயபதியாகுபவன்; எனவே, மலையிலே பயில்பவனுயினன். பூதரம்-மலை: பூமியால் தரிக்கப்படுவது எனக் காரணக்குறி.

இது முதல் ஐந்து கவிகள்-அடிதோறும் முதற்சீர் மாச்சீராக வந்த கலிவிருத்தமாகும். (1)

திரிசத்திகளின் வாழ்த்து

2. சங்கு வண்ணமுஞ் சாமள வண்ணமுங்
துங்க நற்றுகிர் வண்ணமுந் தோற்றுமெய்
மங்கை மார்கள் வனச மலர்ப்பதம்
அங்கை கூப்பி யனுதின மேத்துவாம்.

(இ-ள்). சங்கு வண்ணமும்-சங்கு போன்ற வெண்மை நிறமும், சாமள வண்ணமும்-கருமை நிறமும், துங்க-பரிசுத்தமான, நல் துகிர் வண்ணமும்-நல்ல பவளம் போன்ற செம்மை நிறமும், தோற்றும்-கொண்டிலங்கும், மெய்-மேனிகளையுடைய, மங்கை மார்கள்-(திரிசத்திகளாகிய) பெண்டிரின், வனச மலர்ப்பதம்-தாமரைப் பூப்போன்ற பாதங்களை, அங்கை கூப்பி-அழகிய கைகளைக் கூப்பி, அனுதினம்-நாடோறும், ஏத்துவாம்-துதிப் போம்; (எ-று).

வெண்மை நிற மங்கையாகிய சரசுவதி தேவியையும், கருமை நிற மங்கையாகிய பார்வதியையும், செம்மை நிற மங்கையாகிய இலக்குமியையும் கைகூப்பி அவர்களது மலர்ப்பாதங்களைத் துதிப் போம் என்றபடி. திரிசத்திகள் என்றது-மேற்குறித்த மூவரையும்.

'சத்தி' என்ற சொல் பெண்பாலாருக்காகி வரும். சாமளை என்று பார்வதியையும், செய்யாள் என்று இலக்குமியையும், வெள்ளை நிறத்தாள் என்று சரசுவதியையும் குறித்தலும் நோக்குக. திரிமூர்த்திகளின் வாழ்த்துக்கேற்பத் திரிசத்திகளின் வாழ்த்து வைத்தபடி. அம்+கை=அங்கை; பண்புத் தொகை. [உள்ளங்கை என்ற பொருளில் அகம்+கை=அங்கை என வரும். "கூப்பி" என வருதலால் இப்பொருள் சிறப்பின்று; கரங்கூப்பி என்பது பெருவழக்கு]. (2)

விநாயகக் கடவுள்—வணக்கம்.

3. புத்தி முத்திப் பொருந்தவு மாயையாங்
குத்தி ரத்திற் கழலவுங் கூர்விழி
சித்தி புத்திக ணப்பண் சிறந்தொளிர்
அத்தி வத்திரத் தானை வணங்குவாம்.

(இ-ள்). புத்தி-ஞானமானது (நல்லறிவு), முத்தி-இணைந்து, பொருந்தவும்-, மாயையாம்-மாயையாகிய (அவிச்சையாகிய), குத்திரத்தின்-வஞ்சகத்தினின்று, கழலவும்-நீங்கவும்—,

கூர்விழி நாப்பண்-கூர்மையான பார்வைகளினிடையே, சித்தி புத்திகள்-மோட்சம் அனுபோகங்கள் (அளிக்கும் பான்மைகள்) சிறந்து ஒளிர்-சீர்பெற்று விளங்குகின்ற, அத்தி வத்திரத்தானை-யானை முகத்தவனை, வணங்குவாம்-(நாம்) பணிவோம்; (எ.று).

முத்துதல்-சேர்தல்; இணைதல். குத்திரம்-வஞ்சகம், இழிவு. இன்-ஐந்தனுருபு நீக்கப்பொருளில் வந்தது. விநாயகர் அருட் பார்வையால் சித்தி புத்திகள் விளையும். சித்தி-மோட்சம். இதனை சித்திவிநாயகன் என்ற வழக்காலும் அறியலாம். புத்தி-அனுபோகம் ((Enjoyment)). இதனை வல்லபை விநாயகன் என்பதால் அறியலாம்.

அத்தி-யானை: வத்திரம்-முகம். யானை முகத்தவனை வணங்கவே ஞானம் தலைப்பட்டு மாயை கழலும் என்றபடி. (3)

முருகக் கடவுள்—வணக்கம்.

4. செம்பஞ் சார்தரு சீறடி வேடுவர்
கொம்பஞ் சாயற் குகந்த குகன்பத
நம்பஞ் சாய்நெஞ்ச மேயென்று நன்மல
ரம்பஞ் சாலெடு மந்தக னுக்குமே.

(இ-ள்) செம்பஞ்சு ஆர்தரு-செம்பஞ்சுக் குழம்பு பொருந்திய, சிறடி-சிறிய பாகங்களையுடைய, வேடுவர் கொம்பு-வேடர் மகளாகிய வள்ளியின், அம் சாயற்கு உகந்த-அழகிய (மேனியின்) சமுதாய சோபைக்கு மகிழ்ந்து மணம்புரிந்த, குகன்-முருகக் கடவுளின், பதம்-உபய பாதங்களை, நெஞ்சமே-மனமே! (நீ), என்றும்-எக்காலத்தும், நம்பு-விரும்புவாயாக. (அங்ஙன் விரும்பு வாயாயின்), நல் மலர் அம்பு அஞ்சாஞெடும்-கெடாத ஐந்து புஷ்ப பாணங்களையுடைய மன்மதனேடும், அந்தகனுக்கும்-யமனுக்கும், அஞ்சாய்-நீ பயப்படாதிருப்பாய்; (எ.று).

செம்பஞ்சாற் செய்யப்பட்டு மகளிர் காலிற் பூசியணியப்படுவது செம்பஞ்சுக் குழம்பு. சிறுமை + அடி = சிறடி. பண்புத் தொகை. "மூவழிச்சிறுகி" என்றதற்கேற்ப (கலித்: செ: 108. அடி 3) மகளிர்க்கு அடி சிறுத்திருத்தல் உத்தம லட்சணம். வேடுவர்-வேடர் (குறவர்) தலைவனுகிய நம்பிராஜனைக் குறிக்கும் எனலாம். கொம்பு-கொம்பு போன்று ஒல்கியொசியுந் தன்மையுள்ள வள்ளியம்மைக்கு உவமவாகுபெயர். வள்ளி நம்பிராஜனுல் வளர்க்கப் பட்ட பெண். சாயல்-மொத்த அழகு: சமுதாய சோபை. சாயற்கு-நான்கனுருபு, பொருட்டுப்பொருளது. நம்பு-விரும்பு: "நம்பும் மேவும் நசையாகும்மே" (தொல்: உரியியல்-33) மன்மதன்-காமத்தை விளைவிக்குங் கடவுள். அவனுக்கு அம்பு-ஐந்து மலர்களாகும்; அவை-தாமரை, அசோகு, மா, முல்லை, கருங்குவளை என்பன. நன்மலரம்பு-மலரம்புக்கு நன்மையாவது, பயன் விளைத்தலில் தவறுமை. அம்பு அஞ்சாஞெடும்-அஞ்சு அம்பாஞெடும் என மாற்றிப் பொருள்கொள்க. அஞ்சு-ஐந்து: முற்றுப் போலி. முருகன்பதம் நம்பினுல் காமப்பேயின் பயமில்லை, அதனேடு மரண பயமுமில்லை, அந்தகன்-அந்தத்தில் (முடிவில்) வருபவன், யமன். அஞ்சாய்-எதிர்மறை வியங்கோள் வினை முற்று. (4)

திருமால்–வணக்கம்.

5. ஆக்க வாரண ஞயுல காங்கவை
காக்க நாரண ஞய்க்கைக் கபாலியாய்ப்
போக்க மீட்டும் புதுமலர்ப் போகிலிற்
பூக்க வல்லவன் பொன்னடி யுன்னுவாம்.

(இ-ள்) உலகு அவை-பலவுலகங்களையும், ஆக்க-படைத்தற்கு, ஆரணனுய்–பிரமனுய், காக்க-(அவ்வுலகங்களைக்) காத்தற்கு, நாரணனுய்-விஷ்ணுவாய், போக்க-(அவைகளை) நீக்குதற்கு, கை

கபாலியாய்-கையிலேந்திய கபாலத்தையுடைய உருத்திரனுய், தொழில்புரிந்து), மீட்டும்-மறுபடியும் [அவ்வுலகங்களை] புது மலர் போகிலில்-புதிய கமல மலராகிய கொப்பூழில், பூக்க-உண் டாகும்படி செய்ய, வல்லவன்-ஆற்றலுடையவனுகிய திருமாலின், பொன்னடி-அழகிய திருப்பாதங்களை, உன்னுவாம்-தியானிப் போம்; (எ-று).

ஆரணன்-பிரமன். ஆரணம்-வேதம்: அவைகளை எப்போதும் ஓதுபவன் பிரமன். இவர் படைத்தற்கடவுள். நாரணன்-நாரா யணன், விஷ்ணு, திருமால். இவை பரியாயப் பெயர்கள். இவர் காத்தற் கடவுள். கபாலி-சிவபிரான், உருத்திரன். இவர் கையிற் பிரம கபாலமேந்திப் பிச்சையெடுத்தனர். இவர் அழித்தற் கடவுள். இம்மூவர் செயல்களும் ஒருங்கே மீண்டும் மீண்டும் நிகழும்படி உலகங்களைத் தன் நாபி கமலத்தினிடையே பூக்கும்படி செய்ய வல்லவன் திருமாலேயாவான் என்பது குறிக்கப்பட்டது. இதனுல் திருமாலின் பரத்துவம் பெறவைத்தபடி. போகில்-கொப்பூழ் (Navel). திருமாலின் உந்திக் கமலத்திடைத்தோன்றிய பிரமன் மீண்டும் உலகங்களைப் படைக்கின்றன் என்பது மரபு. ஆங்கு-அசை. இனி, ஆங்கு-அக்காலத்து எனப் பொருள் கொண்டு, யுக முடிவில் எனினுமாம்.

கபாலியென்றவிடத்து அறியவேண்டிய கதை:—

ஒருகால் பரமசிவன் பிரமனது சிரசைக் கொய்துவிட, அக் கபாலம் அப்படியே அவன் கையில் ஒட்டிக்கொண்டது. பின்னர் சிவபிரான் பலகாலம் பல தலங்களிலுஞ் சென்று பிச்சையேற்றுத் திரிந்து, ஒரு நாள் ஸ்ரீ மகாவிஷ்ணுவையடைந்து ஏற்றபோது, அவர் அக்ஷயமென்று பிச்சையிட, உடனே அது நிறைந்து கையை விட்டு அகன்றது என்பது. (5)

கலிமகள் துதி

வேறு

6. பொதியமதி லுதித்தாளைப் பொங்கழலிற் குளித்தாளைப்
புகழ்ந்தோர்க் கென்றும்
வதியமதிக் களியாளை வைகைதனி லெதிர்ந்தாளை
மாசொன் றில்லாப்
புதியமதி நிறத்தாளைப் புண்டரிகம் பயின்றாளைப்
புலவோர் நெஞ்சிற்
பதியமதி யுடையாளைப் பைந்தமிழா யுறுவாளைப்
பணிதல் செய்வாம்.

(இ-ள்) பொதியம் அதில் உதித்தாளை-(அகத்தியர் வாழிட மாகிய) பொதியமலையிடத்துத்தோன்றியவளும், பொங்கு அழலில் குளித்தாளை-(திருஞானசம்பந்தர் சமணருடன் நிகழ்த்திய கனல் வாதத்தில்) கிளர்ந்தெழுந்த நெருப்பில் மூழ்கியவளும், வைகை தனில் எதிர்ந்தாளை-(அங்ஙனமே நிகழ்த்திய புனல் வாதத்தில்) வைகையாற்றின் கரையெதிரேறியவளும்,-புகழ்ந்தோர்க்கு-தன் னைப் போற்றுபவர்க்கு, என்றும்-எக்காலத்தும், வதிய-(அவர் களது) நாவினிடத்துத் தங்க, (அதனால்) மதிக்கு அளியாளை-(அவர்களது) அறிவுவிகாசத்திற்குக் கருணை செய்பவளும், மாசு ஒன்று இல்லா-களங்கமொன்றும் இல்லாத, புதிய மதி நிறத்தாளை-புதிதாக முளைத்த சந்திரன்போன்ற வெண்மை நிறமுடையவளும், புண்டரிகம்-வெண்டாமரைப் பூவில், பயின்றாளை-இடைவிடாது வசிப்பவளும், புலவோர் நெஞ்சில் பதிய-கற்றறிந்த ஞானிகளின் மனத்திலே நிலைத்து நிற்கும், மதி உடையாளை-கருத்துக்கொண்ட வளும் (ஆகி), பைந்தமிழாய் உறுவாளை-இனிய தமிழ்க் கன்னி யாய்ப் பொருந்தியவளான கலைமகளை, பணிதல் செய்வாம்-அடி பணிந்து வணங்குவோம்; (எ-று).

இச்செய்யுளில் கலைமகளைப் "பைந்தமிழாய் உறுவாளை" என்று முடிவில் கூறியிருத்தலால் தமிழ் மொழியைப் பற்றிய அணங்கினைத் துதித்தவாறுமாம்.

தமிழணங்கினைப்பற்றி வில்லிபுத்தூரார் மகனார் வரந்தருவார் பாடியுள்ள "பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே கிடந்து" என்று தொடங்கும் சிறப்புப் பாயிரச் செய்யுளிற் பயிலும் தொடர்களின் கருத்துச் சாயல்களை இச்செய்யுளின் தொடர்களி லும் காணலாம். உதாரணமாக:—

"பொருப்பிலே பிறந்து" என்பதைப் "பொதியமதிலுதித் தாளை" என்றும்,

"பொங்கழலிற் குளித்தாளை" என்பதை "நெருப்பிலே நின்று" என்றும்,

"புகழ்ந்தோர்க்கென்றும் வதிய" என்பதை "புகழிலே கிடந்து" என்றும்,

"வைகையேட்டிலே தவழ்ந்த" என்பதை "வைகைதனி லெதிர்ந்தாளை" என்றும்,

"கற்றோர் நினைவிலே நடந்து" என்பதைப் "புலவோர் நெஞ்சிற் பதிய" என்றும் கருத்தொருமிக்கக் கூறியிருத்தலைக் காண்கின்றோம்,

இங்ஙனம் கலிமகள் துதியிலேயே தமிழணங்கின் துதியினையும் அபேதமாகப் பெறப்படும்படி யாத்துள்ள ஆசிரியர் திறம் பாராட்டத்தக்கது.

பொதியம்–பொதியமலை; அகத்தியர்க்குரியது. ''அகத்தியன் பயந்த செஞ்சொலாரணங்கு'' தமிழாகும். திருஞானசம்பந்தர் சமணருடன் வாது நிகழ்த்திக் கனல் வாதத்தில் அச்சமணரை வெல்லுமாறு நள்ளாற்றுப் பதிகம் எழுதிய ஏட்டை நெருப்பிலேயிட, அப்பதிகம் வேவாது கிடந்ததென்ற வரலாறு பற்றி ''பொங்கழலிற் குளித்தாளே'' என்றது. அங்ஙனமே புனல் வாதத்தில் ''வாழ்க வந்தணர்'' என்ற பாசுரத்தை ஓலையிலெழுதி வைகை நட்டாற்றில் விட்டபோது அவ்வேடு கரையெதிரேறி வந்தது என்ற வரலாறு பற்றி ''வைகைதனில் எதிர்ந்தாளே'' என்றது. கலிமகள்–வெள்ளை நிறத்தவள், வெண்டாமரையிற் பயில்பவள், புலவோர் நெஞ்சில் குடியிருப்பவள், பைந்தமிழாய்ப் பரிணமித்தவள் என்று அவள் பான்மை காட்டியபடி.

அளி-கருணை, அளியாள்-கருணை செய்பவள். மாசொன்றில்லா மதி-இல்பொருளுவமை. பைந்தமிழ்-பசுமை+தமிழ்: பண்புத் தொகை. பசுமை-ஈண்டு இளமை மேலது. எஞ்ஞான்றும் சிதையாமை குறிப்பது. கன்னித்தமிழ் என்பதும் காண்க.

இச்செய்யுள்–அறுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தம். (6)

வியாசர் துதி
வேறு

7. தராதலம் மிகும்பொறை தணப்பச் செய்தமால்
பராவுறு மாடலாம் பாரதத்தினை
கராசல முகன்வரைந் திடக்க ரைந்தருள்
பராசரன் புதல்வனைப் பணிகு வாமரோ.

(இ-ள்.) தராதலம்-பூமியிடத்து, மிகும்-மிகுதியாகவுண்டாகிய, பொறை-பாரத்தை, தணப்ப-நீங்கும்படி, செய்த-, மால்-திருமாலாகிய கண்ணபிரானைப்பற்றி, பராவுறும்-தோத்தரிக்கின்ற, ஆடலாம்–திருவிளையாடலாய் அமைந்த, பாரதத்தினை-மகாபாரத இதிகாசத்தை, கராசல முகன்-யானை முகத்தவனாகிய விநாயகன், வரைந்திட-எழுதி வரும்படி, கரைந்து அருள-மனமுருகிச் சொல்லி வந்த, பராசரன் புதல்வனை-பராசர முனிவனின் மகனாகிய வியாச பகவானை, பணிகுவாம்-வணங்குவோம்; (எ-று). அரோ-ஈற்றசை.

பூபாரம் தீர்க்கப் பிறந்தவன் ஸ்ரீகிருஷ்ணபகவானுகிய கண்ணபிரான். அவன் திருமாலின் திருவவதாரம். அவன் செய்த லீலைகள் பலவற்றுள் மகாபாரதமும் ஒன்றுய் அடங்குதலின் "ஆடலாம் பாரதத்தினே" என்றது. "மன்னு மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும்" என்றார் வில்லியும். கராசலம்-யானை, கர+அசலம். தீர்க்கசந்தி பெற்ற வடசொற்றொடர். [கரம்-கை, அசலம்-மலை: எனவே, கைம்மலை, அதாவது யானை]. பராசர முனிவனுக்கு யோசனகந்தியெனும் கன்னியிடத்துத் தோன்றிய வன் வியாசன். இந்த வியாசன் மகாபாரதத்தைச் சொல்லிவந்த போது மனங்கரைந்துருகியது என்னேயெனில், அவரே கூறியிருப்பதுபோல "நாராயண கதாமிமாம்" என்பது பற்றி.

இச்செய்யுள்,-மூன்றுஞ்சிரொன்று மாச்சிரும், மற்றையவை விளச்சீர்களுமாகி வந்த கலிவிருத்தம். (7)

இது முதல் இரண்டு கவிகள்—அவையடக்கம்.

அவையடக்கமாவது-அவையோர்க்குத்தான் அடங்கியிருக்கை (அவை-சபை). அவையத்தார்க்கு மனவெறுப்பு முதலியன தோன்றுதபடி அன்னரை அடங்குமாறு செய்தலெனினுமாம்; அங்ஙன் அவையடக்கத்தைத் தெரிவிக்கும் பாடல், அவையடக்கம் எனப்படும்.

வேறு

8. அகத்தி யர்க்குநேர் வில்லிபுத் தூரனல் லியன்
தொகுத்த வைந்தாஞ் சுருதியைத் தொண்டனேன்
சுருக்கல்
மகத்து வம்பெறு மேருவை வலித்துத்தன் வலியுள்
புகுத்து வேனென முயன்றசிற் றெறும்பினைப்
போலும்.

(இ-ள்.) அகத்தியர்க்கு நேர்-அகத்திய முனிவர்க்கு நிகராக வைத்துப் பேசலாம்படியுள்ள, நல் ஐயன் வில்லிபுத்தூரன்-நல்ல அந்தணனுகிய வில்லிபுத்தூராழ்வார், தொகுத்த-(வியாசர் சொன்ன வடமொழிப் பாரதத்தைத் தழுவித் தமிழில்) சுருக்கமாகத் தொகுத்தருளிச் செய்த, ஐந்தாம் சுருதியை-ஐந்தாவது வேதமாகக் கருதப்படுகின்ற அப் பாரதத்தை, தொண்டனேன்-அன்னர்க்கு அடியேனுகிய தானத்திலிருக்கின்ற கைங்கரியபரன், சுருக்கல்-சுருக்கிப்பாடுதல் (எனக்கொண்டு முன்வந்திருத்தல்)—

மகத்துவம்பெறு மேருவை-மிக்க பெருமை பொருந்திய மகாமேரு மலையை, வலித்து-இழுத்து, தன் வலியுள்–தன் புற்றுக்குள், புகுத்துவேன் என-கொண்டுசென்று அடைப்பே னென்று, முயன்ற-(தனது வலிமை, ஆற்றல் சிந்தியாது) முயற்சி செய்த, சிறு எறும்பினைப்போலும்-எளிய சிற்றெறும்பின் செய்கை யினை யொக்கும்; (எ–று).

"முயன்ற சிற்றெறும்பினைப்போலும்" எனவே இகழ்ச்சிக் குரியது என்றபடி: எனினும், என் செயல் பொறுத்து அருள் புரிவர் அவைப் புலவோர் என்பது கருத்து. அகத்திய முனிவன்-தமிழ்த்தலைவன்: "தமிழ்ப்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தவன்"; 'என்றுமுள தென்றமிழ் இயம்பியிசை கொண்டவன்'. தொண்டனேன்-தன்மையொருமைப் பெயர். இஃது வைணவர் களிடை பயிலுஞ்சொல்: "தொண்டனேன் மதுசூதனனே" என்றுர் நம்மாழ்வாரும், (திருவாய்: 7-1-3) மேலும், அப்பதிகத் தின் முடிவில் தம்மைத் "தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்" (7-1-11) என்று சொல்லிக்கொள்கிறார். இதனால், இந்த நூலின் ஆசிரியரும் வைணவராவர்; வில்லிபுத்தூ ராழ்வார்க்குத் தொண்டனேன் என்பதால், அந்த வில்லியாரின் பாரதம் இவர்க்கு முதனூலாயிற்று. வில்லி பாரதமோ வியாச பாரதத்தைத் தழுவியதாதலின் அம்முதனூலை நோக்க அஃது வழி நூலாகும்: "மண்ணிலாரண நிகரென வியாதனுர் வகுத்த, எண்ணிலா நெடுங்காதையை யானறிந்தியம்பல்" என்று வில்லியாரே அவையடக்கங்கூறிக்கொள்ளுதல் காணலாம், (தற்சிறப்பு:6).

சுருக்கல்-தொழிற்பெயர். இஃது சிற்றெறும்பின் முயற்சி யினைப் போலும் என்று "முயற்சி" என்ற தொழிற்பெயரோடு உவமை பொருந்துவதாகும். வில்லிபுத்தூரன் என்ற பெயர்-வில்லிபுத்தூர் விஷ்ணுசித்தன் என்ற பெரியாழ்வாரிடத்துக் கொண்ட ஈடுபாட்டினால் வந்த பெயர். இவரது ஊர்-நடுநாடாகிய திருமுனைப்பாடி நாட்டுச் சனியூர் ஆகும். (8)

9. கருத்தி னன்பரைக் காத்திடக் கருணைசெய் திருமாற்
சரித்தி ரம்பயில் தன்மையாற் றமிழ்மிக வல்லோர்
அருத்தி யோடன நீர்பிரித் தமுதுணுஞ் செயல்போற்
றிருத்தி யோடுகொள் வாரெனச் செப்பினன்
றெரிந்தே.

(இ-ள்.) கருத்தின்-சிரத்தையோடு, அன்பரை-தனது பக்தர் களை, காத்திட-(அவர்களது துன்பம் போக்கிக்) காத்திடுமாறு,

கருணைசெய்-அருள்செய்கின்ற, திருமால்-மகா விஷ்ணுவாகிய கண்ணபிரானின், சரித்திரம்-காதை, பயில் தன்மையால்-(அடியேன் செய்யும் இந்தப் பாரதச் சுருக்க நூலில்) பயில்கின்ற நற்பண்பினால், தமிழ்மிக வல்லோர்-தமிழ்ப் புலமைமிக்க அறிஞர்கள், அருத்தியோடு-ஆர்வத்துடன், அனம்-அன்னப்பறவையானது, நீர் பிரித்து அமுது உணும் செயல்போல்-(பாலும் நீருங் கலந்து வைத்தால்) நீரைப் பிரித்தெடுத்துவிட்டுச் சாரமாகிய பாலை மட்டும் அருந்துஞ் செய்கையைப் போல, திருத்தியோடு-மன நிறைவோடு. கொள்வார் என-ஏற்றுக்கொள்வார்களென்று, தெரிந்தே-(அப்புலவர்களின் பெருந்தகைமை) அறிந்தே, செப்பினன்-(அடியனேன்) சொன்னேன்; (எ-று).

—இரு செய்யுட்களும் கலித்துறை;

"மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும்" என்னுந் தன்மையால் தமிழ்ப் புலவர் பெருமக்கள் என் நூலின் சாரத்தை மட்டும் கிரஹிப்பர் என அவையடக்கம் குறித்தபடி. நாலடியாரும் அன்னப் பறவையை "நீரொழியப் பாலுண்குருகின் தெரிந்து" என்றது. (9)

இக்கதை வினவினோர் புகன்றோர்.

கேட்போர் புகன்றோர் பயன் முதலாய பொருள்கள், வாய்ப்பக் காட்டல் பாயிரத்தியல்பாதலின், இப்பாரதக்கதையின் தோற்றத்தைப் பற்றி வினவினோர் யாவர், புகன்றோர் யாவர் என்பது காட்டப்படுகிறது.

10. சித வார்பொழில் நைமிச வனத்துழி சேர்ந்த
சூத மாமுனி வணைப்பணிந் தாங்குறைத் துறவோர்
போத னேர்பவ! புராணமீ ரொன்பதும் புகன்றாய்
ஓது பாரதம் உரைத்திலை யுணர்த்தென வுரைப்பான்.

(இ-ள்.) சிதம்-குளிர்ச்சி பொருந்திய, வார்-நீண்ட, பொழில்-சோலைகள் சூழ்ந்த, நைமிசவனத்து உழி-நைமிசாரண்யத்திடத்து, சேர்ந்த-வந்து அடைந்த, சூதமாமுனிவனை, பணிந்து-(எழுந்து) வணங்கி, ஆங்கு உறை துறவோர்-அவ்வனத்திடத்து வசிக்கின்ற சௌனகர் முதலிய பிரம்ம ரிஷிகள், போதன்நேர்பவ-பிரமதேவரை யொத்த பேரறிவு படைத்தவரே!, புராணம் ஈர் ஒன்பதும்-பதினெண் புராணங்களையும், புகன்றாய்-(எங்களுக்கு) விளங்கச்சொல்லியருளினாய்; ஓதும்-(ஆனால்) ஐந்தாம் வேதமாகச்

சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, பாரதம் உரைத்திலே-மகாபாரதக் கதையினை (எங்கட்குச்) சொன்னயில்லே; (ஆகவே) உணர்த்து என-தெளிவுறச் சொல்லுவீராக என்று பிரார்த்திக்க, உரைப்பான்-(சூதமாமுனிவன்) உரைப்பதானான்; (எ-று).

நைமிச வனம்-நைமிசாரணியம்: முனிவர்கள் தாம் தவம் புரிவதற்குரிய இடம் வேண்ட, அதன் பொருட்டுப் பிரம தேவர் தமது திருப்பையாற் செய்யப்பட்ட சக்கரத்தை யுருட்டிச் செலுத்த அது போய் நின்ற இடம் நைமிசாரணியம் ஆயிற்று. நேமி-சக்கரம்: இங்குத் திருப்பையாற் செய்யப்பட்ட சக்கரம். அதன் சம்பந்த முடையதாதலின், நைமிசம் எனப் பெயர் பெற்றது. இதனைச் "சதுமறைக் கிழவன், நேமியுய்த்தலால் நைமிசமென நில நிகழ்த்தும் நாமமுற்ற நல்வனம்" என்றது பாகவதம். (மாயவன் அம்சாவதாரம் உரைத்த அத்தியாயம்-1). சூதன்-சூத குலத்தில் பிறந்தவர். "பிராம்மண ஸ்திரீக்கும் க்ஷத்திரிய னுக்கும் பிறந்தவன் சூதன்" என்று யாஜ்ஞவல்கிய ஸ்மிருதி கூறும். சூதபுராணிக ரென்று பிரசித்தி பெற்ற சூதருக்குப் புத்திரராகத் தோன்றியமையால், இவர் ஸௌதியென்றும், சூதபுத்திரரென்றும் வழங்கப் பெறுவர். சௌனகாதி முனிவர்களுக்குப் பாரதத்தைச்சொன்னவர் இவரே. துறவோர்-இருடிகள். இவர்களுக்குள் முக்கியமானவர் சௌனகர்: இவர் பதினாயிரம் இருடிகளை அன்னம் நீர் ஈந்து காப்பாற்றுகிறவர். போதன்-பிரமன். (போதம்-அறிவு). புராணங்கள் பதினெட்டாவன:—சிவபிரானைப் பற்றிக் கூறும்-மச்ச, கூர்ம, வராக, வாமன, சிவமகா, இலிங்க, பவிடிய, காந்த, மார்க்கண்டேய, பிரமாண்ட புராணம் என்ற பத்தும்; திருமாலைப் பற்றிக் கூறும்—விஷ்ணு, பாகவத, கருட., நாரதீயபுராணம் என்ற நான்கும்; பிரமனைப் பற்றிக் கூறும்—பிரம, பதும புராணம் என்ற இரண்டும்; அக்கினியைப் பற்றிக் கூறும் ஆக்கினேய புராணம் ஒன்றும், சூரியனைப்பற்றிக் கூறும் பிரமவைவர்த்தபுராணம் ஒன்றும் ஆகிய பதினெட்டுத் தலைமைப் புராணங்கள். (10)

11. ஓதும் இக்கதை முற்சென மேசெய னுணர்ந்தே
வாத ராயணன் சீடனுல் வல்வினை தொலைத்தான்
ஆத லாலிஃ தன்புடன் கேட்டிடின் நீவிர்
பாத கந்தவிர்ந் தெய்துவீர் கதியெனப் பகர்வான்.

(இ-ள்.) ஓதும்-சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, இக்கதை-இந்தப் பாரதக் கதையை, முன்-முற்காலத்து, சென மேசெயன்-ஜனமேஜயர், உணர்ந்தே-கேட்டறிந்தே, வாதராயணன்-வியாச பகவானது, சீடனுல்-சிஷ்யராகிய வைசம்பாயனரால், வல்வினை-

(கொடிய) வலிய தீவினைகள், தொலைத்தான்-நீங்கப்பெற்றான்; ஆதலால்-, நீவிர்-நீங்களும், இஃது-இக்கதையினை, அன்புடன்-சிரத்தையுடன், கேட்டிடின்-(காதுகொடுத்துக்) கேட்பீராயின், பாதகம் தவிர்ந்து-தீவினைகள் நீங்கப்பெற்று, கதி-நற்கதியாகிய மோட்சத்தை, எய்துவீர்-சென்றடைவீர். என-என்று, பகர்-வான்-(மகாபாரதக் கதையினைச்) சொல்லத் தொடங்கினான்; (எ-று.) இரு செய்யுட்களும் கலித்துறை.

சனமேசெயன்-ஜனமேஜயன்: பரீக்ஷித்தின் மூத்த புத்திரன்: அபிமன்யுவின் பேரன்; அருச்சுனனுக்குக் கொள்ளுப்பேரன். சர்ப்பயாகஞ் செய்தவன். வாதராயணன்-வியாசபகவான்: வேதங்களை வகுத்தவர்-மகாபாரதம், பிரமசூத்திரம், பாகவதம் இயற்றியவர். சிடன்-வைசம்பாயனன். இச்செய்யுள்-பயன் கூறியபடி. (11)

பாயிரம் முற்றிற்று.

———

முதலாவது

நாட்டுச் சருக்கம்

குருநாட்டின் வளப்பத்தைக் கூறுஞ் சருக்கமென்க. நாடு-நாட்டு வளப்பத்துக்கு ஆகுபெயர். அடுத்து வரும் நகரச்சருக்க மென்பதற்கும் இவ்வாறே. சருக்கம்-ஸர்க்கம். இவ் வடசொல்-முடிவு அல்லது படைப்பு என்று பொருள்படும்: அது-சங்கேதத் தால், ஒரு பெரிய வகுப்பினுட்பட்ட சிறிய பாகத்தைக் குறிக்கும்.

மேகம் மழை பொழிதல்.

12. அலத்தி னேனுரு வெனமுகி லலைகட லெய்தி
சலத்தை யுண்டரி யுருவெனச் சார்ந்துவிண் பரத
குலத்தி னேரசி முரசருட் கொடையென மின்னி
ஒலித்து நற்பனி யோங்கன்மீ துறைசொரிந் தனவே.

(இ-ள்.) முகில்-மேகமானது, அலத்தினேன் உரு என-கலப் பையை ஏந்திய பலராமனுடைய மேனி யுருவம் என்று சொல்லும் படி வெண்ணிறத்தோடு, அலைகடல் எய்தி-அலை வீசுகின்ற சமுத் திரத்தையடைந்து, சலத்தை உண்டு-அதன் நீரினைப் பருகி, அரி உரு என விண் சார்ந்து-விஷ்ணுவின் மேனியுருவம் என்று சொல்லும்படி ஆகாயத்தினிடத்தைச் சேர்ந்து,- பரத குலத்தி னேர்-பரத வமிசத்து மன்னர்களின், அசி-வாள்வலியும், முரசு-வெற்றி முரசின் வலியும், அருள்-வழங்குகின்ற, கொடை என-வள்ளற்றன்மை யொளிர்வதென்னும்படி, மின்னி-மின்னொளி விட்டு, ஒலித்து-இடியொலி செய்து, நல் பனி ஓங்கல் மீது-நல்ல உயர்ந்த பனிமலையாகிய இமயமலையின்மேல், உறை-மழையை, சொரிந்தன-பெய்தன; (எ று).

கடலினீரைப் பருகச் செல்லும் வெண்ணிறமஞ்சு பலராமன் மேனி நிறத்தை யொத்திருந்தது; பலராமன் வெண்ணிறத்தவன்; வால்வலீ மேனியோன் எனப்படுபவன். இவன் கிருஷ்ணனுக்கு முன் பிறந்தவன். நீருண்ட மேகம் காளமேகமாகி வானத்தில் படர்வது கருமை நிறம் பொருந்திய அரியை (விஷ்ணுவை) யொத் திருக்கும். அரி-ஹரி; கண்ணன், கிருஷ்ணன் என்ற அவனது மற்றைய பெயர்களும் கருநிறம் பற்றி வந்தனவே. பரத குலத்தி னேர்-பரத வமிசத்துத் தோன்றினவர்; இவர்கள் பாரதர் எனப் படுவர். (அவராவார்-பாண்டவரும், துரியோதனாதியரும் உள்ளிட்

டவர்)-இங்குக் குறித்த பரதன் என்பவன் சந்திர வமிசத்தில் துஷ்யந்த மகாராசனுக்குச் சகுந்தலையினிடத்துத் தோன்றிப் பிரசித்திபெற்ற ஓரரசன். பாரத மன்னர்கள் தங்கள் வாள்வலியாலும் வெற்றி முரசொலியாலும் பெற்ற செல்வத்தைக் கொடையாக வழங்கிப் பெரும்புகழ் பெற்று யாவரும் வாய்விட்டுப் போற்றுமாறு திகழ்ந்தனர் என்ற கருத்தினை வைத்துத் திறம்படக் கூறப்பட்டுள்ள நயம் காண்க. மின்னலுக்குப் புகழ் ஒளிர்வும், இடியொலிக்குப் புகழுரையும் அமையுமாறு வாளொளியையும் முரசதிர்வையும் குறிப்பிற் காட்டிய சுவை ரசிக்கத்தக்கது. "அசியருள் கொடையென மின்னி" எனவும், "முரசு அருள் கொடையென ஒலித்து" எனவும் முறையே இயையும். ஓங்கல்-மலை. பனிமலை-இமயமலை. நூல் பாரதமாதலின், அதற்கேற்பப் பலராமன், அரி (கிருஷ்ணன்), பரத குலத்தினோர் (பாரதர்) கூறப்பட்டனர். (1)

மழை பெய்ததனல் அருவி பெருகுதல்.

13. அவிர்ம ணிக்கொழித் திமயநின் றிழியும்வெள் ளருவி
புவிம டந்தைதன் னிடத்துதித் திடுமுயிர்ப் பொருட்டாற்
குவித னத்தமு திழிவன வாரமக் கொங்கை
தவழ்வ னவதின் மௌவல்தார் தரித்தன போலும்.

(இ-ள்.) அவிர்-விளங்குகின்ற, மணி கொழித்து-இரத்தினங்களைத் தெள்ளியெடுத்து, இமயம் நின்று-இமய மலையிலிருந்து, இழியும்-கீழிறங்குகின்ற, வெள் அருவி-வெண்மை நிறம் பொருந்திய நீர் அருவியானது,—புவி மடந்தை-பூமி தேவியானவள், தன்னிடத்து உதித்திடும்-தன்னிடத்துத் தோன்றுகின்ற, உயிர்-(பல்வகை) உயிர்த் தொகைகளின், பொருட்டால்-, குவி தனத்து-(தனது) குவிந்து திரண்டு பருத்த முலைகளினிடத்தினின்று, அமுது-(வெண்மையான) பாலை, இழிவன போலும்-கீழிறக்கிப் பெருக்குவன போலும்: வாரம்-(அந்த அருவியின்) நீர்க் கரைகள், தவழ்வன-இருபாலும் நெகிழ்ந்து காட்டுவனவாந் தோற்றம், அக் கொங்கை அதின்-அந்த முலைகளின் மேல் (இருபாலும்), மௌவல் தார்-முல்லை மலர் மாலை, தரித்தன-தாங்கி நெகிழ்வன, போலும்-: (எ-று). —இரு செய்யுட்களும் கலித்துறை.

இமயநின்றிழியும் அருவியெனவே கங்கை நதியாயிற்று. இமயம் குவிதனத்துக்கும், அதனினின்றிழியும் வெள்ளருவி-தனத்தினின்றிழியும் அமுதுக்கும், வாரம் (அந்த அருவியின் நீர்க்கரை

வரம்புகள்)-மௌவல்தாருக்கும் உவமை. எனவே, இச் செய்யுளில் உவமையணி காண்க. "போலும்" என்றது பொருட் பொருத்தமுற முன்னரும் கூட்டப்பட்டது. பூமிதேவி தன்னிடத்துத் தோன்றிய உயிரினங்களைப் புரப்பது போலே இந்தக் கங்கையாற்றினருவிப் பெருக்கும் குருநாட்டுப் பல்வகை உயிரினங்களையும் புரப்பது எனக் குறிப்பிற்பெறவைத்தார். வாரம்-வரம்பு, நீர்க்கரை. மௌவல்-மல்லி; இதனைக் கூறியது கற்பிற் சிறந்தது குருநாடு எனப் பெறவைத்தற்கு. (2)

வேறு

3-5. கங்காநதி வெள்ளம் நான்கு நிலத்திலும் செல்லுதலின் வருணனை, இதுமுதல் மூன்று கவிகளாற் கூறப்படும்.

சுனைத்தா மரையோ டுற்பலமும்
துறைத்தா னியா கியவிருக்கம்
அனைத்தும் வேரோ டரித்துருட்டி
ஆங்கண் விலங்கின் குழாந்துரத்தி

இனத்தோ டெயினர் வாழ்குறிஞ்சி
யாவும் அலைத்தங் கிணரேந்தி
வனத்தார் மாயன் மருகனடி
வணங்கிப் பாலை யழித்தனவால்.

(இ-ள்). சுனை-சுனையிற் பூத்துள்ள, தாமரையோடு-தாமரைப் பூவோடு, உற்பலமும்-செங்குவளைப்பூவும், துறைத்து-நீர்த்துறைகளிலே வளர்ந்துள்ள, ஆசினியாகிய விருக்கம் அனைத்தும்-ஆசினிப்பலா முதலாகிய விருட்சங்கள் (மரங்கள்) எல்லாவற்றையும், வேரோடு-, அரித்து-பறியச்செய்து, உருட்டி-உருளக் கொண்டு போவதோடு, ஆங்கண்-அவ்விடத்திருந்த, விலங்கின் குழாம்-மிருகக் கூட்டங்களை, துரத்தி-(வெருண்டு) ஓடச்செய்து, இனத்தோடு-கூட்டத்தோடு, எயினர்-வேடர்கள், வாழ்-வாழ்கின்ற, குறிஞ்சியாவும்-சிறிய ஊர்கள் யாவற்றையும், அலைத்து-நிலை கெடச்செய்து, (மற்றும்) அங்கு-அந்தக் குறிஞ்சி நிலத்திருந்த, இணர்-பூக்களின் கொத்துக்களை, ஏந்தி-(நீரலைகளாகிற கைகளால்) ஏந்திக்கொண்டு, வனத்தார்-வனமாலையாகிய திருத்துழாய் மாலையைத் தரித்துள்ள, மாயன்-விஷ்ணுவினது, மருகன்-மருமானாகிய முருகப் பெருமானது, அடி-திருப்பாதங்களில் சமர்ப்பித்து,

வணங்கி-வழிபட்டு, (பிறகு குறிஞ்சி நிலம் நீத்து) பாலை-பாலை யாம் நிலத்தை, அழித்தன-[அக் கங்கையாற்றின் வெள்ளம்] அழியச் செய்தன; (எ-று).

கங்கை நதி வெள்ளம் தாவர சங்கமம் என்னும் தன்மைய யாவற்றையும் அலைத்துக்கொண்டு வந்து, குறிஞ்சி நிலக் கடவு ளாகிய சேயோனை (முருகனை) மலரிட்டு வழிபட்டமை கூறப்பட் டது. குறிஞ்சிக்கேற்ப இணர் என்றது அந்நிலத்துப் பூங்கொத் துக்களை: அவை காந்தள், கடம்பு வெட்சி போன்றவை. முருகன் உகந்தவை, "வாழ்குறிஞ்சி" என்றதால் சிற்றூர்களைக்காட்டிற்று; "தேன் நிறைந்த செந்தினையிடிதரும் மலைச் சீறூர்" என்றூர் சேக் கிழாரும். (திருக்குறிப்புத்தொண்டர் புராணம்: செ: 9). மாயன்-மாயோன்: விஷ்ணு. இவன் முல்லை நிலத்துக்குத் தெய்வ மாவன். எனினும், வனத்தார் என்பது முல்லையைக்காட்டாது பிரசித்தி பெற்ற வனமாலையைக் காட்டும். வனமாலை-திருத் துழாய் மாலை: விஷ்ணுவின் அடையாளமாலை. "வாட்டமில் வனமாலை மார்வனை" (திவ்ய: பெருமாள் திருமொழி 2, 1.) "வனமாலி கதீ சார்ங்கீ சங்கீ சக்ரீ ச நந்தகி ஸ்ரீமாந் நாராயணோ விஷ்ணுர் வாஸுதேவோ (அ) பிரக்ஷது (108) என்றது ஸஹஸ்ர நாமமும். முருகன் மால் மருகனுவன். 'பாலையழித்தன' என்ற தால்-வெம்மை நீக்கி வளப்படுத்தியமை பெறப்படும். விருக்கம்-மரம். ஆசினி-ஈரப்பலா.

இது முதல் ஏழு கவிகள்—ஒன்று இரண்டு நான்கு ஐந்தாஞ் சீர்கள் மாச்சீர்களும், மூன்று ஆறுஞ்சீர்கள் காய்ச்சீர்களுமாகிய அறுசீராசிரிய விருத்தங்கள். (3)

4. பாலைக் கிழத்தி யடிபணிந்து
படுத்தி முல்லைப் பாலரகப்
பாலைக் கவர்ந்து பாரளந்தான்
பதத்திற் பூசித் தார்த்துபல

காலிற் றவழ்ந்து வயன்மருதங்
கலந்தங் கரம்பைக் கழைமஞ்சள்
சாலிக் குலமும் அழித்தேரி
தடங்கண் மடுக்க ணிரப்பியதே.

(இ-ள்) (பாலையை அழித்தபின்), பாலைக்கிழத்தி-அந்தப் பாலை நிலத்திற்குரிய தெய்வமாகிய நீலியின், அடி பணிந்து-,

படுத்தி-(உருட்டி அடித்துக்கொணர்ந்த பூக்களையும் பூங்கொத்துக்களையும்) இட்டு வழிபாடியற்றி, முல்லைப்பாலர்-முல்லை நிலத்துக் கோபாலரது, அகம்-மனையிடத்துள்ள, பாலைக்கவர்ந்து-, பார் அளந்தான் பதத்தில் பூசித்து-உலக முற்றும் திரிவிக்கிரமனுய் அளந்த மகாவிஷ்ணுவினது திருவடிகளில் அபிஷேகஞ் செய்து வழிபட்டு, ஆர்த்து-ஆரவாரஞ் செய்து கொண்டே, பல காவின் தவழ்ந்து-பல வாய்க்கால்களாகப் பிரிந்து மெல்லச் சென்று. வயல் மருதம் கலந்து-கழனிகள் சூழ்ந்த மருத நிலத்தினைச் சேர்ந்து, அங்கு-அவ்விடத்திருந்த, அரம்பை-வாழையையும், கழை-கரும்பையும், மஞ்சள்-மஞ்சளினையும், சாலிக்குலமும்-செந்நெற் பயிர்களின் கூட்டத்தினையும், அழித்து-கேடுறச் செய்து, (பின்னர்) ஏரி-ஏரிகளையும், தடங்கள்-தடாகங்களையும், மடுக்கள்-மடுக்களையும், நிரப்பியதே-நீர் நிரம்பச் செய்தன; (எ-று).

பாலைக்குத் தெய்வம்-நீலி: இவள் காளி, துர்க்கை, கொற்றவை எனவும் படுவள். "கோலமுல்லையும் குறிஞ்சியுமடுத்த சில்லிடங்கள் நீலவாட்படை நீலி கோட்டங்களும் நிரந்து" என்றூர் சேக்கிழாரும். ("பாலைக்குத் தெய்வம்-சூரியனுமாவன்") பாலர்-கோபாலர்; பசுக்களைப் புரப்பவர் என ஆயரைக் காட்டி வந்தது. "ஆய்ப்பாடியில் மனைகளிலுள்ள பாலைக் கவர்ந்து" எனவே முல்லை நிலத் தெய்வமாகிய கண்ணபிரானின் (மாயோன்) திருட்டுச் செயல்களையும் சூசிப்பித்தவாறு. அந்தக் கண்ணபிரானே முன்னர்த் திரிவிக்கிரமனுய்ப் பாரளந்தவனுதலின் அவன் பாதத்திற் பூசித்தது. அரம்பைக் கழை மஞ்சள்சாலி-உம்மைத்தொகை. அஃதே போல் ஏரி தடங்கள் மடுக்கள்-உம்மைத் தொகை. (4)

5. செந்தா மரைகொண் டிந்திரற்குச்
செய்பூ சனைசெய் தூழிசிந்து
வந்தா லெனவந் திடுநீத்தம்
வந்து படிந்தா ரிடரகற்று

மந்தா கினியோ டடைந்தாழி
வயினுற் றிடுதல் துணையோடு
முந்தா தரத்தி னன்பனுழை
யுறுமில் லவனு யொத்தனவால்.

(இ-ள்) செந்தாமரை கொண்டு-சிவந்த தாமரைப்பூக்களைக் கொண்டு, இந்திரற்கு-(மருதநிலத் தெய்வமாகிய) இந்திரனுக்கு,

செய்-செய்யவேண்டிய, பூசனை செய்து-வழிபாடுகளை இயற்றி,-ஊழி சிந்து வந்தால் என-பிரளய காலத்துக் கடல் கிளர்ந் தெழுந்து வந்தாற்போல, வந்திடு-பெருக்கெடுத்து வருகின்ற, நீத்தம்-வெள்ளம்,—

வந்து-தேவலோகத்திலிருந்து கீழிறங்கி வந்து, படிந்து-பூலோகத்திற்படிந்து பாய்ந்து, ஆர் இடர் அகற்றும்-(உலகத்து) உயிர்களின் துன்பத்தைப் போக்குகின்ற, மந்தாகினியோடு-தேவ லோக கங்கையோடு, அடைந்து-கூடவே சேர்ந்து, ஆழி வயின் உற்றிடுதல்-சமுத்திரத்தினிடத்துக் கலந்திருத்தல்,-(எங்ஙனுள்ள தென்னில்) துணையோடு-பாங்கியோடு, முந்து-முற்பட்டு எழு கின்ற, ஆதரத்தின்-அன்பினின் விதுப்போடு, அன்பன் உழை-வரைந்துகொண்ட தலைவனுகிய கணவனிடத்து, உறும்-சென்று சேர்கின்ற, இல்லவளை-மனைக்குரியாளாகிய தலைவியை, ஒத்தன-ஒத்திருந்தன; (எ-று) ஆல்-அசை.

தேவலோகத்துக் கங்கையோடுகூடி இப்பூலோகத்துக் கங்கை யின் வெள்ளம் விரைந்து சமுத்திரத்திடத்துப் புகுதல்-தன்னை யொத்த உயிர்ப் பாங்கியோடு கூடவரச் சென்று, வரைந்து கொண்ட தலைவியானவள் மனைக்குரியளாகி விரைந்து தன் கணவ னிடத்துப் புகுதலை யொக்கும் என உவம விரிவு செய்துகொள்க. ஈண்டு, தேவலோகத்திலுள்ள கங்கைக்கு மந்தாகினி யென்றும், பூலோகத்தில் வந்ததற்குக் கங்கை யென்றும், கீழுலகத்திற் பாய்வதற்குப் போகவதி யென்றும் பெயரென அறிக.

''வேந்தன் மேயதீம்புனலுலகம் (தொல்.) என்பதற்கேற்ப இந்திரன் மருதநிலத் தெய்வமாவன்; (வேந்தன்-இந்திரன்) எனவே,அந்நிலத்தில் ஓடிய நீத்தம் அந்நிலத்துக் கருப்பொருளாகிய செந்தாமரைப் பூக்களையிட்டுப் பூசனை செய்தது. சிந்து-சமுத் திரம், பிரளய காலமுடிவில் சமுத்திரம் பொங்கிக் கிளர்ந்தெழும் என்பர். ஆதரம்-அன்பு: காதல்: இங்கு அதனாலாகிய விதுப்பினைக் குறிக்க வந்தது. வள்ளுவனும் ''அவர்வயின் விதும்பல்'' என்று அதிகாரம் அமைத்துள்ளமை நினைக. ''இல்லவளை''க் குறித்திருத்த லால், குருநாட்டில் இல்லறம் செவ்வன் மக்களிடத்து நிறை பெற்று வருகிறது என்று குறிப்பினுணர்த்தியபடி. ''ஆழிவயிற்றி னுற்றிடுதல்'' என்றதால் நெய்தல் நிலமும் கூறி, நான்கு நிலமும் கங்கையாறு சென்றது என்றார். (5)

6-8; மூன்று கவிகள்–குருநாட்டுறு மள்ளரின் வேளாண்மைச் சிறப்பும் வாழ்க்கைத் திறமும் கூறும்.

6. பொன்னேர் பூட்டி நெல்முளை வித்திடுதல்.

பைந்தேன் வீழ்மா மலர்ச்சோலைப்
பணைசூழ் குருநாட் டுறுமள்ளர்
மந்தா கினியாற் றற்றபனை
மறித்து வரம்பு புதுக்கிமணைச்

செந்தா மரைநீ லோற்பலமுஞ்
சிதையச் சுவண வேர்பிணைத்து
வந்தே யுழுது பரம்பூர்ந்து
வான்மா முளைநெல் வித்தினரால்.

(இ-ள்) பைந்தேன்-பசியதேனை, வீழ்-பெருக்குகின்ற, மாமலர்-சிறந்த மலர்களைக் கொண்ட, சோலை-பொழில்களோடு, பணை-வயல்கள், சூழ்-சூழ்ந்துள்ள, குருநாட்டு உறு மள்ளர்-குருநாட்டிலுள்ள உழவர்கள், மந்தாகினியாற்று-கங்காநதியாற்றினிடத்து, அற்ற-(அதன் நீர் மோதலால்) வேர்பறிந்து வீழ்ந்த, பனை-பனை மரத்தால், மறித்து-(அந்நீரைத்) தடுத்துத் திருப்பிப் பாயச் செய்து, வரம்பு புதுக்கி-வயல்களின் எல்லைகளைப் புதிதாக வரையறுத்து, (பின்னர் அந்த வயல் எல்லைகளில் பூத்துள்ள) மணம்-வாசனை வீசுகின்ற, செந்தாமரை-செந்தாமரைப் பூவும், நீலோற்பலமும்-குவளை மலரும், சிதைய,சிதைந்து அழியும்படி, சுவணம் ஏர் பிணைத்து-பொன்னேர் பூட்டி, உவந்தே-மனமகிழ்வோடு, உழுது-உழுதலைச் செய்து, பரம்பு ஊர்ந்து-பரம்படித்துச் சமமாக்கி, (அவ்விடங்களிலெல்லாம்) வான் மா முளைநெல்-மிகச் சிறந்த செந்நெல் வித்துக்களை, வித்தினர்-விதைத்தனர்; (எ-று). ஆல்-அசை.

பனை-மனைமரம்; பனந்துண்டுகளைக் கொண்டு வெள்ள நீரினை மறித்துத் திருப்புவர் மள்ளர் என்க: பனை யென்பதன் பின் மூன்றனுருபு தொக்கது. இச் செய்யுளில் வந்துள்ள "மந்தாகினி" என்ற சொல் பூவுலகத்துக் கங்கையைக் காட்டி வந்தது.

சுவணம்-சுவர்ணம்: பொன். சுவண ஏர்-பொன்னேர். பொன்னேர் பூட்டுதல்-பருவ காலத்தில் நல்ல நாளிற் செய்யும் முதலுழவு: பொன்னேர்க்கட்டு என்றும் வழங்குவர். "பிணைத்து உவந்தே" எனப் பிரிக்க, பரம்பு ஊர்தல்-பரம்படித்தல். உழுத பின் விதைப்பதற்காகப் பரம்புப் பலகையால் நிலத்தைச் சமன் செய்தல். வான் மா-ஒருபொருட் பன்மொழி. (6)

7. அறுத்த நெல்லரிச் சுமைகளைக் களத்திலுய்த்துப் போர் வேய்தல்.

சிறுத்த செந்நென் முருந்தரும்பிச்
செழித்துப் பைங்கூ ழாகவுடன்
செறித்து மூளைத்த களைகளைந்தார்
தீஞ்சொல் எழில்சேர் உழத்தியர்கள்

கறுத்துப் பயிர்பொன் னுருக்கதிரைக்
காட்டித் தலையை வளைக்கவதைக்
குறைத்தவ் வரியின் சுமைகளத்திற்
கொடுபோய்க் குவட்டிற் போர்வேய்ந்தார்.

(இ-ள்.) சிறுத்த செந்நெல்-சிறியதாகிய செந்நென்முளைகள், முருந்து அரும்பி-அடிக் குருத்துவிட்டு, செழித்து-நன்கு வளர்ந்து, பைங் கூழாக-பசிய நிறமுள்ள பயிர்களாக உயர்ந்திருப்ப, உடன் செறித்து முளைத்த-அந்தப் பயிர்களோடு ஒருசேர நெருங்கி வளர்ந்திருந்த, களை-புல்பூண்டு போன்ற களைகளை, தீஞ்சொல்-இனிய பேச்சினையும், எழில்சேர்-பேரழகினையும் கொண்ட, உழத்தியர்கள்-உழவர் பெண்டிர்கள், களைந்தார்-பிடுங்கியெறிந் தார்கள்;

பயிர்கறுத்து-பயிர் (கருக்கொண்டதற்கு அடையாளமாகக்) கருநிறங்காட்டி, பொன் உரு கதிரை காட்டி-(பின்னர் முதிர்ந்த தற்கு அடையாளமாகப்) பொன் போன்ற நெற்கதிர்களைக்காட்டி, தலையை வளைக்க-(அக்கதிர்களின் பாரத்தினால்) தலை சாய்ந்து காட்ட, அதை குறைத்து-(வளைந்த) அந்நெற்பயிர்களை அரிவாளால் அறுத்து, அ அரியின் சுமை-(அங்ஙனம் அறுத்த) அந்த நெற்களின் அரிகளைச் சுமையாகக் கட்டி, களத்தில் கொடு போய்-நெற்போர்க் களத்திற்குக் கொண்டுபோய், குவட்டின்-மலையுச்சியைப்போல் தோன்ற, போர் வேய்ந்தார்-நெற்கதிர்போர் போட்டார்கள்; (எ-று.)

பைங்கூழ்-இளைய பயிர்; பசுமை இளமை குறிப்பது. கதிர்ப் பாரத்தால் பயிர் தலை வளைதலைக் "கற்ற மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே" என நயம்பட வுரைத்த சிந்தாமணியாலும் அறிய லாம். களம்-ஏர்க்களம். போர்-நெற்போர். கொடு-கொண்டு என்பதன் தொகுத்தல். (7)

8. தொகுத்த நென்மணிகளை இல்லிற்கொடுபோய்
அவற்றுன் இல்லறப்பயன் நுகர்தல்.

பகட்டான் மிதிப்பித் தகற்றிவைங்நெற்
பசும்பொற் குவைபோல் தூற்றிதொகுத்
திகல்வே லிறையி னிறையீந்தே
யிருந்த வைம்பா றயனகத்தின்

சகடாற் கொடுபோய்த் தென்புலத்தார்
தமக்குந் தெய்வம் விருந்தொக்கற்
ககலா வனபோட் டினிதூட்டி
யருந்தித் தாமும் வாழ்ந்திடுவார்.

(இ-ள்.) பகட்டால்-எருமைக் கடாக்களைக் கொண்டு, மிதிப்பித்து-(களத்திற் கதிர்களை) உழக்கச் செய்து, வை-வைக்கோலை, அகற்றி-தனியே பிரியச் செய்து, நெல்-நெல்மணிகளை, பசும் பொன் குவை போல் தூற்றி-பசிய பொற்குவியல்களாகும்படி (பதர் போக்கித்) தூற்றி, (பின்னர்) தொகுத்து-கும்பலாகக் குவித்து, இகல் வேல் இறையின்-பகைமேற் செல்லவல்ல வேலேந்திய அரசர்க்கு (இறுக்கவேண்டிய), இறை ஈந்தே-(ஆறிலொரு பங்காகிய [1/6]) வரியைக் களத்திலேயே வழங்கி, (பின்னர்) இருந்த-மிச்சமாகவிருந்த, ஐம்பால்தனை-ஐந்து பங்காகிய தானியக் குவியல்களை, சகடால்-பண்டி மூலம், அகத்தில் கொடுபோய்-மனையகத்துக் கொண்டுபோய், [ஒவ்வொரு பங்கினையும்] தென்புலத்தார்-பிதிரர், தெய்வம்-தேவர், விருந்து-விருந்தினர், ஒக்கல்-சுற்றத்தார், தமக்கு உம்-தான் என்னும் ஐந்திடத்தும் பங்கீடு செய்து, அகல்-[சுருங்காதபடி] பெருக்கமாகவே, ஆவன போட்டு-(தம்மால் ஒல்லும் வகையான்) ஆவன பொருள்கள் அனைத்தும் இட்டு, இனிது ஊட்டி-இன்முகங்காட்டி உண்பித்து, அருந்தி-(கூடவிருந்து) புசித்து, தாமும்—, வாழ்ந்திடுவார்-(இல்லறத்தை நல்லறமாகச் செய்து) வாழ்ந்து வந்தார்கள்;(எ-று).

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றுங், கைப்புலத்தாறோம்பல்" தகையாய அறமாதலின், "பழியஞ்சிப் பாத்து ஊண்கொண்டு" குருநாட்டு மள்ளர் இல்வாழ்க்கை நடாத்தினர். அரசற்கு இறைப்பொருள் ஆறில் ஒன்றுகலின் "இறையின் இறையீந்தே" என்றார். அரசர்க்குக் கடனிறுத்தல் முதலதாதலின், நெற்களத்திலேயே செலுத்தப்பட்டதென அறிய வேண்டுவது. ஏனைய நென்மணிகளின் தொகுதி மனைக்குப்

பண்டியில் உய்த்தனர். "வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தார்" என்பதனை வலியுறுத்த "வாழ்ந்திடுவார்" என முடித்தார். (8)

9. குருநாடென்றற்குப் பெயர்க்காரணம்.

வனப்பால் வாழ்வாற் கலைத்தேர்வான்
மாண்பான் மன்னு மறநெறியார்
நினைப்பாற் பிறவா லெங்நாடும்
நேரா நிலையால் வணங்கிடவும்

தனைப்போல் தானுய் மற்றவைக்குந்
தானுங் குருவாங் காரணத்தால்
அனப்பா லுறுஞ்செய் குருநாடென்
றறைந்தார் நகரத் தணியறைவாம்.

(இ-ள்.) வனப்பால்-அழகினால், வாழ்வால்-(மக்கள்) நல் வாழ்க்கை வாழ்வதால், கலை தேர்வால்-எல்லாக் கலைகளிலும் வல்லமை பெற ஆராய்தலால், மாண்பால்-நற்குண நற்செய்கை களினால், மன்னும் அறநெறி ஆர் நினைப்பால்-நிலைபெற்ற தரும மார்க்கத்திலேயே பொருந்தியுள்ள மன நினைவினால், பிறவால்-(இன்னும் உள்ள) பிற மேன்மைகளால், எந்நாடும்-எந்தப் பிற நாடும், நேரா-(இந்த நாட்டுக்கு) ஒப்புச் சொல்ல முடியாத. நிலையால்-தன்மையினால், வணங்கிடவும்-(இதனிடத்து மண்டி யிட்டு) தலை வணக்கிடவும், தனைப்போல் தானுய்-தனக்குத்தானே ஒப்பாகி, மற்றவைக்கும்-பிற நாடுகளுக்கும், தான் குருவாம் கார ணத்தால்-தான் ஞானசிரியனைப்போல் தலைமைத்தானம் வகிக்குங் காரணத்தால்,- அனம் பால் உறும் செய் குருநாடு என்று-சோறும் (கூழும்) பாலும் மிகுதியாகப் பெருக்கும் கழனிகளையும் பாற்பண்ணைகளையும் கொண்ட குருநாடு என்று, அறைந்தார்-(புல வர் பெருமக்கள்) போற்றிப் புகழ்ந்தனர், (இனி) நகரத்து-(அத் தகைய குருநாட்டின்) தலைநகரமாகிய அத்தினபுரத்து, அணி-அழகு சிறப்பினை, அறைவாம்-கூறத் தொடங்குவேன். (எ-று.)

குருநாட்டுக்கு நிகர் குருநாடே என்றபடி. ஏனைய நாடுகளுக் கெல்லாம் தருபீடத்தில் அமர்ந்திருக்கும் பீடுடைமை பெற்றிருத் தலின் குருநாடு எனக் காரணப்பெயர் வழங்கியது. "நகரத் தணி யறைவாம்" என அடுத்த சருக்கத்திற்குத் தோற்றுவாய் செய்த படி. இங்ஙனம் தொடர்புபடக் கூறுதல் கவிசமயம். அனப்பால்-உம்மைத் தொகை. (land flowing with milk and honey என்பர் ஆங்கிலத்தில்). உறு-மிகுதிப் பொருள் குறிக்கும் உரிச்சொல். செய்-கழனி, பண்ணை. (9)

நாட்டுச் சருக்கம் முற்றிற்று.

இரண்டாவது

நகரச் சருக்கம்

நகரத்தினது சிறப்புக்களைச் சொல்லும் பாகமென்க. இதனால், காப்பியத் தலைவர்களாகிய பாரத மன்னர்களது திருவவதாரத்திற்கிடமான அத்தினபுர நகரத்தைக் கவி வருணிக்கின்றனர்.

வேறு

1. நகரத்தின் மதில் அகழிச் சிறப்பு.

பொன்னினுற் காந்தி மணியினுற் படைத்த
பொருளினுற் புரந்தரன் சேடன்
மன்னிடு தனத னகர்தமை யிழித்து
வதிந்திடும் அத்தின புரமாம்

அன்னதோர் நகரைச் சூழ்ந்துமந் தரத்தை
யளவிய அரணங்க ளதைச்சூழ்
மின்னுமீன் கமடங் கராமரை யாம்பல்
விளங்கவாழ்ந் தகன்றபே ரகழி.

(இ-ள்.) பொன்னினுல்-பொன்படைத்த சிறப்பினுல், புரந்தரன்-இந்திரனுடைய, நகர்தமை-(பொன்னகராகிய) அமராவதியை, இழித்து-கீழ்ப்படுத்தி,—

காந்திமணியினுல்-மாணிக்கங்களின் ஒளியினுல், சேடன்-ஆதிசேடனது, [நகர்தமை-(நகராகிய) போகவதியை, இழித்து-கீழ்ப்படுத்தி,—],

படைத்த பொருளினுல்-தான் விளைவிக்கின்ற பொருள்களின் பெருக்கத்தால், மன்னிடு-நிலைபெற்ற, தனதன்-குபேரனது, [நகர்தமை-(நகராகிய) அளகாபுரியை, இழித்து-கீழ்ப்படுத்தி,—] — வதிந்திடும்-நிலையுற்றுத் தங்கிநிற்பதாம், அத்தினபுரமாம்-அத்தினபுரி என்னும் நகரமாம்;

அன்னதோர் நகரைச் சூழ்ந்து-அப்படிப்பட்ட சிறப்பை யுடைய நகரத்தைச் சூழ்ந்து, மந்தரத்தை-மந்தர மலையை, அள வில-உயரத்தால் அளந்தபடியோங்கியிருந்த, அரணங்கள்-மதில் கள் [இருந்தன]: அதைச்சூழ்-அந்தமதில்களைச் சுற்றியிருந்த, பேர் அகழி-பெரிய அகழியானது, மின்னு மீன்-துள்ளுதலால் மின்னு கின்ற மீன்களும், கமடம்-ஆமைகளும், கரா-முதலைகளும் (ஆகிய விலங்குகளைக்கொண்டு), மரை-தாமரை, ஆம்பல்-குமுதம் (ஆகிய மலர்களையும் கொண்டு) விளங்க-விளங்கும்படி, ஆழ்ந்து அகன்ற-ஆழமாக அகன்று பரந்து கிடந்தது; (எ-று.);

முதலிரண்டடிகளில் முறைநிரனிறைப் பொருள்கோள் வைக் கப்பட்டுள்ளது. அரணங்களதை-பன்மை யொருமை மயக்கம். அகழி அகன்ற-அகழி அகன்றது என்றபடி. மீன் கமடம் கராமரை யாம்பல்-உம்மைத்தொகை, மரை-தாமரை: முதற்குறை, பொன்-மங்கலத்தொடக்கம்.

இது முதல், நான்கு கவிகள் விளச்சிர்களும் மாச்சிர்களும் பயின்றுவந்த எழுசீராசிரியவிருத்தங்கள். (1)

2. அளவில பிற சிறப்புக்கள்கூறும்.

அந்தர மளக்கு மந்திரம் இலக்கில்
அணிகொடி மறுகுகள் இலக்கில்
சிந்துயர் சிலம்பா ரணியநற் பொருளுஞ்
செறிந்தவா வணங்களும் இலக்கில்

தந்தவெம் பரிமாச் சாலியோ டோம
சாலியும் அரங்குகள் இலக்கில்
வந்தவர்க் கமுத சாலியு மடமு
மதியறி சிகரிகள் இலக்கில்.

(இ-ள்) அந்தரம்-ஆகாயத்தை, அளக்கும்-அளாவியுள்ள, மந் திரம்-மாளிகைகள், இலக்கு இல்-கணக்கில்லாதவை (அளவு படாதவை); அணிகொடி மறுகுகள்-அழகிய கொடிகள் கட்டிப் பறக்கும தெருக்கள், இலக்கு இல்—; சிந்து உயர் சிலம்பு-கடல் வீசுவிக்கும் முத்துக்களால் சிறந்த சிலம்பணிகளும், ஆர்-நிறைந்த, அணிய நற்பொருளும்-அணிவகைகளிற்சேர்ந்த பிற நல்ல பொருள்களும், செறிந்த-நெருங்கி யடர்ந்துள்ள, ஆவணங் களும்-கைக்கடை வீதிகளும், இலக்கு இல்—;

தந்தமாச் சாலையோடு-தந்தங்களையுடைய யானைக்கூடங் களோடு, வெம் பரிமாச்சாலையோடு-மிக விரைந்த செலவினை யுடைய குதிரைகளின் பந்திகளோடு, ஓமசாலையும்-ஹோமம் வளர்த்து வான் வழக்கங்காணும் யாகசாலைகளும், அரங்குகள்-நடன சாலைகளும், இலக்கு இல்—; (மற்றும்) வந்தவர்க்கு - (பசி யால்) நெருங்கிய அனைவர்க்கும், அமுதசாலையும்-விருந்திட்டுச் சோறளிக்கும் அறச்சாலைகளும், மடமும்-பல மதச்சார்பான மடங் களும், மதி அறி சிகரிகள்-சந்திரமண்டலம் மட்டும் ஓங்கியுள்ள கோபுரங்களும், இலக்கு இல்—; (எ-று.)

அந்த அத்தினபுரத்தில், மாடமாளிகைகள், கொடியணி நெடுந்தெருக்கள், ஆபரணங்கள் செறிந்த கடைவீதிகள், யானைக் கூடங்கள், குதிரைப்பந்திகள், வேள்விச்சாலைகள், நடன நாடக அரங்குகள், சோறு அளிக்கும் அறச்சாலைகள், மதபிரசாரத்திற் கான மடங்கள், மதிதவழும் கோபுரங்கள் இவை அளவுபடாதன வாய்க் கணக்கிறந்து காணப்பட்டன. இரண்டாவது அடியில் செல்வச் சிறப்புக்கூறப்பட்டிருத்தல் வீறுகோளணியின் பாற்படும். யானை குதிரைச்சாலைகள் பிற ஆயுதசாலைகளுக்கும் உபலட்சணம். ஓமசாலை கூறியது-வேதவேதியர் அளவு படாமை பெறவைப் பதற்கு. பிராமணர் இல்லாத நகர் சிறவாது என்பதைப் ''புடை யார் கமலத்து அயன்போல்பவர் வாழ்பா திரிப்புலியூர்'' என்றும், ''மொய்த்த கதிர்மதிபோல்வாரவர் வாழ்பா திரிப்புலியூர்'' என்றும் அருளியுள்ள அப்பர் சுவாமிகளின் வாக்காலும் தெளியலாம். மடம் கூறியது-பலமதங்களிலும் தேர்ச்சிபெற்ற கலைவல்லார் பல ருளர் எனக் குறித்தற்கு. மதியறிசிகரிகள்-தொடர்புயர்வுவிற்சி யணிபடக்கூறியது. இல்-இல என்பதன் ஈறு தொகுத்தல். ''இலக்கில்'' என்ற ஒரேசொல் ஒரேபொருளில் பலதரம் வருவது-சொற்பொருட்பின்வருநிலையணி, (2)

3. அத்தினபுரத்து ஆடவர் சிறப்புக்கூறும்.

பொருளினிற் பொருளுக் கதிபனை; யடக்கும்
பொறையினிற் பூமகள் தன்னை;
தெருளினிற் புதனைத்; திறலினில் வலியைத்;
தேசினிற் பேசுமங் கசனை;

அருளினிற் றருவை; நிகரெனி லவ்வூர்
ஆடவர் தம்மைமே ருவினை
உருளினிற் சிறந்த கடுகினுக் கிணையென்
றுவமைசொற் றிடுதல்போன் றிடுமால்.

(இ-ள்) அவ்வூர் ஆடவர்-அந்த அத்தினபுரத்து ஆண் மக்கள்,—

பொருளினில்-செல்வச் சிறப்பில், பொருளுக்கு அதிபனீ-குபேரனே, நிகர் எனில்-ஒப்பவர் என்றால், அடக்கும் பொறை யினில்- [மனவடக்கம், மெய்யடக்கம் நாவடக்கம் என்னும் மூன்றி டத்தும்] அடக்கவேண்டிய பொறுமைக்குணத்தில், பூமகள் தன்னை-பூமிதேவியை, [நிகர் எனில்—,],

தெருளினில்-தெளிந்த அறிவுச்சிறப்பில், புதனை-[கிரஹங்களி லொன்றாகிய] புதனை, நிகர் எனில்—,,

திறலினில் - வலிமையில், வளியை - வாயுதேவனை, [நிகர் எனில்—,],

தேசினில்-(உடல்) தேஜஸ்ஸினால் (ஒளியினால்), பேசும் - [யாவராலும் சிறப்பித்துப்] புகழப்படுகின்ற, அங்கசனை-மன்மதனை, [நிகர் எனில்—,],

அருளினில்-[வேண்டினவர்க்கு வேண்டுவதை மாறாது] அரு ளோடு கொடுப்பதில், தருவை-கற்பக விருட்சத்தை, நிகர் எனில்-ஒப்பவர் என்றால், [அத்தகைய உவமை எங்ஙனமுள தென்னில்] தம்மை-அந்த நகர ஆடவரை,-மேருவினை உருளினில் சிறந்த கடுகினுக்கு இனை என்று-மகா மேருமலையை உருண்டையான பொருள்களிற் சிறுமையிற் சிறந்த கடுகினுக்கு ஒப்பு என்று, உவமை சொற்றிடுதல் போன்றிடும்-ஒப்புமை கூறுதலையொக்கும்; (எ-று).

மேருவுக்கும் கடுகுக்கும் ஒப்புமை கூறுதல்போலாகும் என்ற தால் உவமைப் பொருத்தமின்மை காட்டி, அங்நகர ஆடவரின் மேன்மையின் மிக உச்சநிலை தெரிவித்தபடி. அன்னர் குபேரனைப் போன்ற செல்வச்சிறப்பும், பூமிதேவிபோன்ற பொறையும், புதனைப்போன்ற அறிவுச் சிறப்பும், வாயுதேவனைப்போன்ற வலி மையும், உடலொளியினால் மன்மதனைப்போன்ற பேரழகும், கருணையால் வழங்குதலில் கற்பகத் தருவையும் ஒத்திடுவர் என்று ஒருவாறு உவமை கூறி அமையலாம் என்று பார்த்தாலோ அவ் வுவமையும் சிறவாதுபோய் உருவிற்பெருத்த மகாமேருவுக்கு உரு விற் சிறுத்த கடுகை உவமை காட்டுவதாகி நலிந்துபோகும் என்றபடி. "எவ்வழி ஆடவர் நல்லவர், அவ்வழி நல்லை வாழிய

நிலனே'' என்றுள் ஔவையும் (புறம் 187). ''அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல'' என்றுர் வள்ளுவனுரும். ''வளிமிகில் வலியும் இல்லை'' என்றது புறம் (51). அங்கசன்-மன்மதன்: மனத்தில் உதிப்பவன் என்பது பதப்பொருள். தரு-கற்பகத்தரு: (தேவலோகத்துள்ளதோர் மரம்). புதன்–Mercury என்ற கிரஹமும், பல கலைகளையும் முற்றவுணர்ந்த புலவனுக்கு இது உவமை கூறப்படும். (3)

4. அத்தினபுரத்து மகளிர்சிறப்புக் கூறும்.

பொற்பினிற் கமலப் பூமகள் தன்னைப்;
பொருந்துசெல் வத்தினிற் சசியைக்;
கற்பினில் வசிட்டன் மனைவியை; யின்பக்
கலவியி லனங்கனில் லவளை;

அற்பினில் அறஞ்செய் அம்பிகை தன்னை;
யடுக்குமென் றியம்பில்அந் நகரின்
வெற்பிள முலையார் தங்களை யமுதை
விடநிக ரெனவுரைத் தொக்கும்.

(இ-ள்) அ நகரின் வெற்பு இள முலையார் தங்களை-அந்த அத்தினபுரியின் குன்றுபோல் திரண்டு பருத்த இளமைத் தன்மை பொருந்திய நகிலினையுடைய பெண்டிரை,—

பொற்பினில்-அழகினில், கமலம் பூ மகள் தன்னை-செந்தாமரைப் பூவில் எழுந்தருளியிருக்கும் திருமகளை, அடுக்கும் என்று-ஒத்திருப்பவர் என்று, இயம்பில்-கூறப்புகுவோமானால்;

பொருந்து-தாம் கொண்டுள்ள, செல்வத்தினில்-பணச் சிறப்பினால், சசியை-இந்திராணியை, [அடுக்கும் என்று இயம்பில்—];

கற்பினில்-கற்பின் சிறப்பினால், வசிட்டன் மனைவியை-வசிட்ட முனிவனின் மனைவியாகிய அருந்ததியை, [அடுக்கும் என்று இயம்பில்—];

இன்பக் கலவியில்-சிற்றின்பக் கேளிக்கைகளில், அனங்கன் இல்லவளை-மன்மதனின் மனைவியாகிய ரதியை, [அடுக்கும் என்று இயம்பில்—];

அற்பினில்-அன்பு செய்தலில், அறம் செய் அம்பிகை தன்னை (ஒருநாழி நெல்லில் முப்பத்திரண்டு வகை) தருமங்களைச் செய்து காட்டிய காமாட்சியம்மையை, [அடுக்கும் என்று இயம்பில்—ஒத்திருப்பவர் என்று கூறப்புகுவோமானால்]—

(அந்த ஒப்புமை எங்ஙனமுள்ளதென்னில்)—

அமுதை-தேவாமிருதத்தை, விடம் நிகர் என-ஆலகால விஷம் ஒக்கும் என்று, உரைத்து ஒக்கும்-சொல்வதனோடு ஒப்பாகும்; (எ-று.)

பேரழகினில் பூமகளையும், செல்வச் சிறப்பினில் இந்திராணியையும், கற்பின் சிறப்பினில் அருந்ததியையும், இன்பமநுபவிப்பதின் சிறப்பினில் இரதியையும், அன்புடன் அறஞ்செய்வதில் பார்வதியையும் அங்கர மகளிர் ஒப்பர் என்று ஒருவாறு கூறப்புகுந்தாலும், அவ்வொப்புமை நேராகாது வற்றும். தேவாமிருதத்துக்கு ஆலகால விடத்தை நிகர் எனக் கூறுவதனோடு ஒக்கும். எனவே, அங்கர மகளிர் சிறப்பு மேலோங்கி மேற்குறித்த அனைவர் சிறப்பினையும் விஞ்சியது என்றபடி. நட்சத்திர நிலையிலும் கணவனை விட்டுப் பிரியாது எஞ்ஞான்றும் கூடவே யிருத்தலால், அருந்ததி கற்பினுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாவாள். [இப்போதும் "அருந்ததி காட்டல்" என்ற விவாகச் சடங்கு நிகழ்கின்றது]. கச்சிப்பதியில் அம்பிகை ஈசனைப் பூசித்து வழிபட்டு, அவரிடம் இருநாழி நெல்லுப் பெற்று அதனால் முப்பத்திரண்டு தருமங்களையும் செய்துகாட்டினள் என்பது பிரசித்தம். அதனால் காமாட்சியம்பிகைக்கு "அறப்பெருஞ்செல்வி" என்றபெயருண்மை சேக்கிழார் வாக்குக் கொண்டும் தெளியலாம். "அலகில் நீள்தவத்தறப் பெருஞ்செல்வி.....மலர்பெருந் திருக்காமக் கோட்டத்து வைத்த நல்லறம் மன்னவே மன்னும்" (பெரிய புராணம்—திருக்குறிப்பு : செ: 72). உரைத்தொக்கும்-உரைத்தது +ஒக்கும் என்பதன் தொகுத்தல். (4)

வேறு

5 - 9. சரமை சாபமும் ஜனமேஜயன் துக்கமும்.

5 – 6:—ஜனமேஜயன் அரசுபுரிதல்.

(இரண்டு கவிகள்-குளகம்; ஆதலின் பொருள் ஒருங்கேகூறப்படும்)

5. அனைய வத்தின புரியினின் றரசுசெய் திடுவான்
கனைபொ லன்கழற் றுளிஞன் கற்பகக் கரத்தான்
புனைய லங்கலம் புயத்தினன் பொற்பில்வே ளனையான்
நினையு மாமதி மரபினன் நிணங்கமழ் வேலான்.

6. வந்து மன்னவர் திறையிட மண்ணெலாம் புரப்பான்
பந்தெ னுந்தன வபுட்டைபேர் பாவையை மணந்தான்
இந்தி ரன்மகன் மகன்மகன் பரிச்சித்தென் றிசைப்பான்
தந்தி டுஞ்சென மேசெய னெனும்பெயர்த் தலைவன்.

5. (இ-ள்) அனைய-அத்தகைய சிறப்புக்களைக் கொண்ட, அத்தினபுரியினின்று-அத்தினபுரியைத் தலைநகராகக் கொண்டு, கனை பொலன் கழல் தாளினன்-ஒலிக்கின்ற பொன்னாலாகிய வீரக் கழலையணிந்த பாதங்களை யுடையவனும், கற்பகக் கரத்தான்-கற்பகத்தருப் போன்று மாரூது வழங்கும் கையையுடையவனும், புனை அலங்கல் அம் புயத்தினன்-தரித்த மாலையையணிந்த அழகிய தோள்களையுடையவனும், பொற்பில்-அழகினில், வேள் அனையான்-மன்மதனையொப்பவனும், நினையும் மாமதி மரபினன்-(எல்லோராலும்) தியானிக்கப்படுகின்ற சிறந்த சந்திரனின் வமிசத்தைச் சேர்ந்தவனும், நிணம் கமழ் வேலான்-மாமிச நாற்றம் வீசும் வேலையுடையவனும்,—(மேலும்)

6. (இ-ள்.) மன்னவர் வந்து திறையிட-பிறநாட்டு மன்னர்கள் தன் அரண்மனையிடத்து வந்து கப்பங்களையளந்து கொடுப்ப, மண்ணெலாம்-இப்பூவுலக முழுவதையும், புரப்பான்-காப்பாற்றுபவனும், பந்து எனும் தனம்-பந்தைப்போல் திரண்டுருண்டு பருத்த முலைகளையுடைய, வபுட்டை பேர் பாவையை-வபுஷ்டமை யென்ற பெயரைக்கொண்ட பெண்ணை மணந்தான்-திருமணஞ்செய்துகொண்டவனும்,- இந்திரன் மகன்-இந்திரன் பிள்ளையாகிய அருச்சுனனின், மகன்-பிள்ளையாகிய அபிமன்யுவின், மகன்-பிள்ளையாகிய, பரிச்சித்து என்று இசைப்பான்-பரீட்சித்து என்னும் பெயருடையவன், தந்திடும்-பெற்றெடுத்த, சனமேசெயன் எனும் பெயர்-ஜனமேஜயன் என்னும் பெயரைத் தரித்தவனும் ஆகிய, தலைவன்-(யாவர்க்கும்) தலைவனானவன்,—(5) அரசு செய்திடுவான்-அரசுபுரிந்துவந்தான். (எ-று)

இது முதல் ஐந்து கவிகள் கலித்துறை.

குருகுல மன்னர் அனைவரும் சந்திரவமிசத்தவராதலின், ஜனமேஜயனும் அவ்வமிசத்தவனவன். நிணங்கமழ் வேலான் என்றது அவனது வீரம் தெரித்தற்கு. வபுட்டை-வபுஷ்டமை: இவள் காசி தேசத்து ராஜாவாகிய ஸ்வர்ணவர்மா என்பவனின் மகள். அந்த ராஜா குருகுல வீரனாகிய ஜனமேஜயனைத் தர்மத்தில் பரீட்சை செய்து, பின் இவளைக் கன்னிகா தானமாகக் கொடுத்தான்.

இந்திரன் மகன்-அருச்சுனன்; இவனை இந்திரன் குந்திதேவியிடம் பெற்றான். அருச்சுனனின் மகன் அபிமன்யு; இவனை அருச்சுனன் சுபத்திரையை மணந்து அவளிடம் பெற்றான். அபிமன்யுவின் மகன்-பரீட்சித்து; இவனை அபிமன்யு விராட ராசன் மகள் உத்தரையை மணந்து அவளிடம் பெற்றான். கௌரவர்கள் அனைவரும் 'பரிக்ஷயம்' என்னப்பட்ட நாசத்தை யடைந்தபிறகு, உத்தரையினிடத்தில் பிறந்ததனால் ''பரிக்ஷித்து'' என்ற பெயரையுடையவனானான். இந்தப் பெயர் சுபத்திரை வைத்தாள். பரிக்ஷித்து பத்திரவதியென்பவளை மணந்தான்: அவளிடம் தோன்றியவன் தான் ஜனமேஜயன். (5, 6)

7. ஜனமேஜயன் யாகசாலையில் சாரமேயன் புகுதல் கூறும்.

இத்த கைப்புக ழெய்திடும் ஏந்தலங் கொருநாள்
சத்தி ரப்பெயர் மகஞ்செய்வான் சாலைவந்
துறும்போது
உத்த மப்பெயர் சரமையென் பவள்வயிற் றுதித்த
வத்தி ரர்க்குளோர் புத்திர னவ்வுழி புகுந்தான்.

(இ-ள்). இத்தகை புகழ் எய்திடும் ஏந்தல்-இப்படிப்பட்ட மிக்க சிறப்பையடைந்திருந்த ஆண்களிற் சிறந்தவனாகிய ஜனமேஜயன், அங்கு-குருக்ஷேத்திரத்தில், ஒருநாள்-ஒருதினம், சத்திரம் பெயர் மகம் செய்வான்-சத்திரயாகம் செய்வதன் பொருட்டு, சாலை வந்து-யாகசாலைக்கு வந்து, உறும்போது-பொருந்திய சமயத்தில்,-உத்தமப் பெயர் சரமை என்பவள் வயிற்று உதித்த-சரமையென்ற உத்தமமான பெயரைக்கொண்ட தேவலோகத்து நாயின் வயிற்றினிற் பிறந்த, வத்திரர்க்குள்-(நாய்) முகத்தோடு கூடிய பிள்ளைகளுள், ஓர் புத்திரன்-ஒரு பிள்ளையாகிய சாரமேயன் என்பவன், அ உழி-அந்த யாகசாலைக்குள், புகுந்தான்-: (எ-று).

ஏந்தல்-ஆண்பாற் சிறப்புப் பெயர். சத்திரமென்னும் யாகம் நீண்ட காலஞ் செய்யத்தக்கதொன்று. பன்னிரண்டு வருஷங்கள் செய்யத்தக்கது என்பர்: அநேகருக்குத் தானஞ் செய்ய வேண்டும்; அநேகம் பிராணிகளைத் திருப்தி பண்ண வேண்டும்; மேலும் இந்த யாகம் அநேக கர்த்தாக்களினாற் செய்யப்படுவது: யஜமானர்களே ரித்விக்குக்களாக இருக்கப் பெறுவது. சரமை என்பது தேவலோகத்து நாயின் பெயர். புத்திரனென்றது-சரமையின் பிள்ளை சாரமேயனை. வத்திரம்-முகம்; இங்கே நாய் முகம். உழி-ஏழாம்வேற்றுமை இடப்பொருள் காட்டுவது. (7)

8. சரமை சாபமிடல் கூறும்.

மன்ன னுக்கிளை யோரடித் தோட்டலு மறமோடு
அன்னைக் கோதலு மவளடைந் தரசனை யென்சேய்க்
கின்னல் செய்தனை யேழையேற் கிலைகொலோ சுற்றம்
என்ன சொற்றழு துருமறைந் தேகினள் என்றே.

(இ-ள்). மன்னனுக்கு இளையோர்-ஜனமேஜய அரசனுக்குத் தம்பியராகிய மூவரும் (சேர்ந்து), அடித்து ஓட்டலும்-அந்தச் சாரமேயனென்ற நாயை அடித்துத் துரத்தலும், மறமோடு-கோபத்தோடு (குரைத்துக்கொண்டு ஓடி), அன்னைக்கு ஓதலும்-தன் தாயிடம் சென்று முறையிடவும், அவள் அரசனை அடைந்து-அத் தாயாகிய சரமை ஜனமேஜயனை யண்டி, (அவனை நோக்கி) 'என் சேய்க்கு-என் பிள்ளைக்கு, இன்னல் செய்தனை-துன்பம் இழைத்தாய்; ஏழையேற்கு-எளியராகிய எங்களுக்கு, சுற்றம் இலைகொல்-(உனக்குத் தம்பியர் இருப்பது போல) உறவினர் இல்லையோ?, என்ன சொற்று-என்னச் சொல்லி முறையிட்டு, அழுது-கண்ணீர் சொரிந்து, உரும் அறைந்து-இடி போன்ற சாபத்தைச் சொல்லி, ஏகினள்- (அந்த யாகசாலையை விட்டு) அகன்றாள்; (எ-று).

ஜனமேஜயனுக்குத் தம்பியர் மூவராவர். அவர்களுக்கு முறையே சுருதசேனன், உக்கிரசேனன், பீமசேனன் என்று பெயர். சத்திரயாகத்தைச் செய்து கொண்டிருக்கையில் சாரமேயன் என்ற நாய் புகவே அதனை அடித்தார்கள். அது தாயிடம் சென்று "நான் சிறிதும் பிழை செய்யவில்லை; ஓமத் திரவியங்களைப் பார்க்கவும் இல்லை; நாவினால் தீண்டவுமில்லை" என்று சொல்லவே, சரமை யாகசாலையடைந்து இடிபோல் சாபமிட்டாள். அந்தச் சாபமாவது—"இந்த என் பிள்ளை பிழை செய்யாமலிருக்கையில், அதை அடித்ததனால் உங்களுக்குத் தெரியாமலே ஓர் ஆபத்து வரப்போகிறது" என்பது. உரும்-இடி: இடிபோன்ற சாபத்துக்காகி வந்தது. உரும்-இடி என்ற பொருளில் வருவதை "உருமுற்றபாம்பின்" என்ற சீவகசிந்தாமணியாலும் அறியலாம் (செ: 27) 'இலைகொலோ சுற்றம்' என்றதால், சுற்றம் எங்களுக்கும் உண்டு: ஆனால், அவர்களைக் கொணர்ந்து உங்களுக்கு இன்னல் விளைவிக்க யான் விரும்பவில்லை என்பது உட்கோள். ஆகவே, இதற்கு முன் செய்யுளில் "உத்தமப் பெயர் சரமை" என்பது

பொருந்துவது காண்க. முதலடியில் "அறமோடு" என்றும் பிரிக்கலாம். (8)

9. ஜனமேஜயன் செய்த பாபம் அகலச் சாந்தி செய்தல் கூறும்.

அன்ன சொற்குள மழன்றர சற்புதத் தவனுய்
பன்னு மம்மக முற்றிதன் பதிபுகுந் தொருநாள்
மன்னு சீர்கொள்சோ மாசிர வசுவினுற் சாந்தி
என்னும் வேள்விசெய் தகற்றியச் சரமைசொ
லிருந்தான்,

(இ-ள்) அன்ன சொற்கு-அப்படிப்பட்ட சாபத்திற்கு, உளம் அழன்று-மனம் வாடியெரிந்து, அரசு-ஜனமேஜயன், அற்புதத் தவனுய்-(நாய் இட்ட சாபத்திற்கு) அதிசயித்தவனுய், பன்னும்-சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, அ மகம் முற்றி-அந்தச் சத்திர யாகத்தைச் செய்து முடித்து, தன் பதி புகுந்து-தன் தலைநகராகிய அத்தினபுரியில் (குருக்ஷேத்திரத்தைவிட்டு வந்து) புகுந்து,-ஒரு நாள்-, மன்னு-நிலைபெற்ற, சீர்கொள்-சிறப்பைக் கொண்டு திகழ்ந்த, சோமசிரவசுவினுல்-சோமாசிரவசு என்னும் தபஸ் வியினுல், சாந்தி என்னும் வேள்வி செய்து—, அகற்றி-ஏற்பட்ட பாபத்தைப் போக்கி, அ சரமை சொல்-அந்தச் சரமை சொன்ன சாபச்சொல் பலிக்கும் சமயத்தை, இருந்தான்-எதிர்நோக்கி யிருந்தான்; (எ-று.)

சோமாசிரவசு என்பவரைப் புரோஹிதராகக் கொண்டு சாந்தி வேள்வியியற்றிப் பாபம் நீங்கினன் ஜனமேஜயன். இந்தச் சோமாசிரவசு என்பவர் சிருதசிரவசு என்னும் இருடியின் குமாரன்; பெண் நாகத்தினிடம் பிறந்தவன்; சிறந்த தபஸுள்ளவன்; வேதாத்தியயனம் பூர்ணமாகச் செய்தவன்; சிவபிரானுல் ஏவப்பட்ட பூதங்களைத் தவிர மற்றைய பாபப் பேய்கள் எல்லாவற்றையும் துரத்தியோட்டுவதற்குச் சக்தி யுள்ளவன். ஆனுல், இவனிடம் ரகசியமான ஒரு விரதம் உண்டு; அதாவது எந்தப் பிராமணனுவது ஒரு பிரயோஜனத்தை விரும்புவானுனுல் அவனுக்கு இவன் அதைக் கொடுத்துவிடுவன். சரமைசொல் எதிர்நோக்கியிருந்தான் என்றது—"உங்களுக்குத் தெரியாமலே ஓர் ஆபத்து வரப்போகிறது" என்று சொன்னது. (9)

நகரச்சருக்கம் முற்றிற்று.

மூன்றாவது

உதங்கச் சருக்கம்

உதங்க முனிவரைப் பற்றிக் கூறும் சருக்கம் என விரியும். உதங்கர் என்பவர்தான் ஜனமேஜயனைச் சர்ப்பயாகஞ் செய்யத் தூண்டியவர். இவ்வரலாறு கூறப்படும்.

வேறு

1. ஆசான் மனைவி உதங்கரைக் குருதக்ஷிணை கேட்டது.

மறைமுதற் கலைக ளெல்லாம் மாமுனி பயில வன்பாற்
குறைவிலோர்ந் துதங்க னென்பான் கொடுக்கும்தெக் கிணையா தென்ன
முறையுண ராசான் பன்னி மொழிவதை யளித்தி யென்ன
அறைவணம் பணிந்து கேட்ப அவள்தன யனுக்கீ தோதும்.

(இ-ள்.) மறைமுதல் கலைகள் எல்லாம்-வேதம் முதலாய கலைகளனைத்தையும், மாமுனி-பைதர் என்னும் இருடி, பயில-பயிற்றுவிக்க, அவன்பால்-அப் பைதமுனிவரிடத்து, குறைவு இல்-யாதொரு குறைவுமில்லாதபடி ஐயந்திரிபற, ஓர்ந்து-சகலத்தையும் கற்று ஆராய்ந்து, உதங்கன் என்பான்-உதங்கன் என்னும் சிடன், கொடுக்கும்-(யான் குருகுலவாசம் முடிந்தபின் நியாயப்படி) கொடுக்கவேண்டிய, தெக்கிணை-குருதக்ஷிணை, யாது என்ன-எது என்று நியமிக்க வேண்ட, [அதனைக் கேட்ட] முறை-உதங்கனுடைய சீரிய நெறிமையை, உணர்-(தமது ஞானத்திறல்) அறிந்து, ஆசான்-ஆசிரியராகிய பைதர், பன்னீ-(தமது) பத்தினியாகிய மனைவியார், மொழிவதை-சொல்வதை, அளித்தி-கொடுப்பாயாக, என்ன-என்று (சீடனுக்குச்) சொல்ல, [அவ் வுதங்கனும்] அறைவணம்-ஆசான் கூறிய அவ்வண்ணமே (பத்தினியிடம் சென்று) பணிந்து-அவளை வணங்கி, கேட்ப-(குருதக்ஷிணை யாது கொடுப்பது என்று) கேட்க, அவள்-அக்குருவின் பத்தினி, தனயனுக்கு-சீடனாகிய பிள்ளைக்கு, ஈது-இதனை, ஓதும்-சொல்லுவாள். (எ-று.)—அவள் சொல்லியதை மேலிலக்கவியிற் காண்க.

பைதர் என்ற முனிவர் ஆசானுகிப் பயிற்றுவிக்க உதங்கர் சகல வேதங்களையும், வேதாங்கங்களையும் கற்றுத் தேர்ந்தார் என்பது கூறப்பட்டது. குருகுலவாசம் முடிந்தபின் குருவுக்குத் தக்ஷிணை கொடுப்பது சிடனுக்குக் கடமை. அதன்படி உதங்கர் கேட்ப, பைத முனிவர் தமது பத்தினி கேட்பதைக் கொடு என்ருர். இஃது இங்கு அறிய வேண்டிய விவரம்.

பயில-பயிற்றுவிக்க, செய்வினை செயப்பாட்டு வினைப் பொருளில் வந்து. பயில + அவன்பால் = பயிலவன்பால்; நிலை மொழியிற்று அகரம் தொகுத்தல் தெக்கிணை - தக்ஷிணை; குருவுக்குச் செலுத்தும் காணிக்கை. இது மிகவும் முக்கியமானது. ''குருவின் காணிக்கையைக் கொடுக்க மறந்தேனே'' என்ருன் திருவாரூர் மனுச்சோழன். பன்னி-பத்தினி; பத்னீ என்னும் வட சொற்சிதைவு. அவள் ஓதும்-செய்யுமென்முற்று பெண்பாலுக்கு வந்தது. தனயன்-பிள்ளை: ஆசானுக்குச் சிடன் பிள்ளைபோல் பயில்பவனுதலின், அவர் மனைவிக்குந் தனயன் ஆவன் என்பது விழுமிய கருத்து.

இதுமுதல் ஐந்து கவிகள்-விளச்சிர் மாச்சிர்கள் பயிலவந்த அறுசீராசிரிய விருத்தம். (1)

2. உதங்கர் பௌஷ்யராஜன் மனைவியின் காதணிகளைப் பெற்றமை கூறும்.

திருபவு டியவேந் தில்லாட் செவிகுழை கொணர்ந்தீ
யென்ன
வருமறை யுதங்கள் ஈவான் வதிசொற் றவன்பாற்
போந்து
வருமுறை யுரைப்ப வேந்தென் வாய்மைசொற்
றிடிலென் பாரி
தருமென அவட்கண் டோதத் தான்மகிழ்ந் தன்பிற்
சொல்வாள்.

(இ-ள்). திரு-சிறந்த, பவுடியவேந்து-பௌஷ்யராஜனுடைய, இல்லாள்-மனைவியின், செவி-காதிலணிந்துள்ள, குழை-குண்டலங்களை, கொணர்ந்து-வாங்கிக்கொண்டு வந்து, ஈ என்ன-எனக்குக் [குரு தக்ஷிணையாகக்] கொடு என்று [பைதரின் மனைவி சொல்ல], (அதன்படியே) மறை வரு உதங்கன்-வேதங்களையோதுதலில் வல்ல உதங்கன், ஈவான்-குண்டலங்களைக் கொணர்ந்து கொடுக்கும், வதி-வழியினை, சொற்று-நினைந்து,

அவன்பால்-அப் பவுடிய வேந்தனிடம், போந்து-கிட்டி, வரும் முறை-தான் முறைப்படி (வந்த) காரியத்தை, உரைப்ப-சொல்ல, வேந்து-அந்தப் பவுடிய மன்னன், என் வாய்மை சொற்றிடில்-என்னுடைய வார்த்தைகளை (நீர்) சென்று சொல்வீராஞல், என் பாரி-என் பார்யை (மனைவி), தரும் என-அவளது குண்டலங்களை ஈவாள் என்று சொல்ல, [அதன்படியே உதங்கன் அம் மன்னனின் மனைவியைக் கிட்டி], அவள் கண்டு-அவனை நேரிற் பார்த்து, ஓத-(தான் வந்த காரியத்தைச்) சொல்ல, தான் மகிழ்ந்து-அந்த அரசி களிப்புக் கொண்டு, அன்பின் சொல்வாள்-கருணையோடு சொல்லினாள்; (எ-று.) அவள் கூறியதை மேலிற் கவியிற்காண்க.

பைதரின் மனைவி பவுடிய ராஜாவின் மனைவியின் குண்டலங்களைக் கேட்டதற்கு ஒரு காரணமுண்டு. அஃது என்னையெனில்-அன்றையிலிருந்து நான்காவது நாள் வரப்போகும் விரதத்தில் அந்தக் குண்டலங்களைத் தன் காதில் அணிந்துகொண்டு அழகாகப் பிராம்மணர்களுக்கு விருந்து பரிமாற விரும்பினாள். ஆகவே, அந்த நான்காவது நாளுக்குள் அக்குண்டலங்களைச் சம்பாதித்துக் கொண்டுவர வேண்டும் என்றும், அப்படிச் செய்தால்தான் அவன் கற்ற வித்தை பயன்படும் என்றும், இல்லாவிட்டால் நன்மையடைய முடியாதுஎன்றும் உதங்கரிடம் கூறி எச்சரித்தாள்-என்பது முதலடியினால் அறியவேண்டிய விவரம். வதி-வழி: "தனிவதியியக்கர் காட்ட" (வில்லிபாரதம்: ஆரணிய: அருச். தவநிலை: 27). சொற்று-நினைந்து: புலன் மாறி வந்த வழக்கு: "செவிகைப்ப" என்பது போல. (2)

3. பவுடியன் மனைவி குண்டலங்களைக் கழற்றிக் கொடுத்து ஜாக்கிரதையுடன் கொண்டுபோகச் சொல்லுதல் கூறும்.

தெக்ககன் கவர்வான் எண்ணித் திரிகின்றான் கைசோ
ராமல்
இக்குழை பதன மாய்க்கொண் டேகென வளிப்ப
வாங்கி
மிக்கவேந் தகத்துண் டக்கோன் விடைகொடு
செலும்போ தந்தி
புக்கலும் கடன்செய் வானேர் புடைகுழை வைத்த
காலை.

(இ-ள்). [பவுடிய மன்னன் மனைவி உதங்கரை நோக்கி], "தெக்ககன்-தக்ஷகன் என்னும் நாகராஜன், கவர்வான்-இக்குண்ட

லங்களை அபகரிக்க வேண்டுமென்று, எண்ணி-(சமயத்தைப்) பார்த்துக்கொண்டே திரிகின்றுள்-(யாண்டும்) சஞ்சரித்துக் கொண்டேயிருக்கின்றுன்: [ஆகவே], இக்குழை-இந்தக் குண்டலங்களை, கை சோராமல்-கை நழுவவிடாமல், பதனமாய்க்கொண்டு-[கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு] மிகவும் சாக்கிரதையாக, ஏகு-போவாய்", என-என்று எச்சரித்து, அளிப்ப—(உதங்கர் கையிற்) கொடுப்ப, வாங்கி-பெற்று, (பின்) மிக்க வேந்து அகத்து உண்டு-சிறந்த அந்த பவுடிய மன்னனின் அரண்மனையில் சிராத்த போஜனஞ் செய்து, அக் கோன்-அந்த மன்னன், விடை கொடு—விடை கொடுப்பக் கொண்டு, செலும்போது-போகும்போது, அந்தி-சாயுங்காலம், புக்கலும்-நெருங்கியவுடன், கடன் செய்வான்-அந்திக் கடன்களைச் செய்யும் பொருட்டு, ஓர் புடை-ஒரு பக்கத்தில், குழை-அக் குண்டலங்களை, வைத்த காலை-வைத்த போதில்: (எ-று).

வேந்தகத்து உண்டது ஏன் என்னில்-பவுடிய மன்னன் உதங்கரைப் பார்த்து "மஹானே! யோக்கியர்கள் கிடைப்பது அரிது. நீங்கள் சிறந்த அதிதியாதலால் சிராத்தஞ் செய்ய விரும்பு கிறேன்: அவகாசம் உண்டாக்கித்தர வேண்டும்" என்று பிரார்த் தித்தான் ஆதலின்: சிறந்த அதிதி கிடைப்பார்களாயின் அன்று சிராத்தஞ் செய்யலாம் என்ற சாஸ்த்ர நியதி காட்டப்பட்டது. பதனம்-பத்திரம், பாதுகாப்பு. தெக்ககன்-தக்ஷகன். இவன் நாகராஜனவன். (3)

4. உதங்கர் குண்டலமிழந்து நாகலோகம் புகுந்து நாகர்களைத் துதித்தமை கூறும்.

ஓதுதெக் ககன்வந் தந்த வொண்குழை வௌவிச் செல்லும்
பாதலத் துடன்சென் றுங்குப் பணிகளைத் துதித்து மந்தச்
சோதிகுண் டலம்வந் தெய்தா துயரினு லிறப்பான் நின்ற
போதொரு பரிமே லாங்கோர் புருடன்வந் தெதிரில் நின்றுன்.

(இ-ள்). ஓது-(பவுடியன் மனைவி) சொன்ன அந்த, தெக்ககன்-தக்ஷகன், வந்து-(வஸ்திரமில்லாத ஒரு சன்யாசி போல)

வந்து, ஒண் குழை-ஒளிபொருந்திய குண்டலங்களை, வௌவி செல்லும்-கவர்ந்து ஓடும், பாதலத்து-பாதாளத்து, உடன் சென்று-தானும் கூடவே தொடர்ந்து போய், ஆங்கு-அப்பாதலத்திலுள்ள. பணிகளை-நாகர்களை, துதித்தும்-தோத்திரஞ் செய்தும், அந்த சோதி குண்டலம்-அந்த ஒளி வீசும் குண்டலங்கள், வந்து எய்தா துயரினல்-கைக்கு வந்து கிட்டாது போன வருத்தத்தால், இறப்பான் நின்றபோது-உயிர் விடுதற்குச் சித்தமாயிருந்த சமயத்தில், ஒரு பரிமேல்-ஒரு குதிரையின்மேலே, ஆங்கு-அப்போது அவ்விடத்து, ஓர் புருடன் வந்து-ஓர் ஆண் மகன் ஏறி வந்து, எதிரில் நின்றான்—; (எ-று).

தக்ஷகன் உதங்கர் போகும் வழியில் வஸ்திரமில்லாத ஒரு சந்யாசி அடிக்கடி காணப்படுவதும் மறைவதுமாகத் தொடர்ந்து வந்து, உதங்கர் பூமியில்வைத்த குண்டலங்களை வௌவி ஓடினன்; உதங்கர் கிட்டே வந்து பிடித்தவுடன் சந்யாசி ரூபம் விடுத்துத் தக்ஷக ரூபத்தோடு வளைக்குள் புகுந்து பாதலம் சேர்ந்தான் என்பது ஈண்டு முதலடியில் அறிய வேண்டிய கதை. எய்தா–ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். இறப்பான்-பானீற்று வினையெச்சம். (4)

5, தக்ஷகன் குண்டலங்களை உதங்கரிடம் கொடுத்தமை கூறும்.

விழைவுடன் உதங்கன் ருழ்ந்தவ் விண்ணவற் கிவைக
ளெல்லாம்
கழறலும் அவன்றன் வாசி காதினூ தெனவூ தெல்லை
எழுமொலிக் கஞ்சி நாக ரியாதிதென் றுணர்ந்து சீறிக்
குழையளித் திடுதி யென்னக் கொடுத்துதெக் ககனுந்
தாழ்ந்தான்.

(இ–ள்). உதங்கன்-, விழைவுடன்-விருப்பத்தோடு, தாழ்ந்து-பதம் பணிந்து, அ விண்ணவற்கு-அந்தத் தேவ புருடனுக்கு, இவைகள் எல்லாம்-நடந்த இந்த விவரங்களை யெல்லாம், கழறலும்-சொன்னவுடனே, அவன்-அந்தத் தேவன், தன் வாசி காதின் ஊது என-(தான் ஏறி வந்த) குதிரையின் காதில் வாயினல் ஊதச் சொல்ல, (அதன்படியே உதங்கன்), ஊது எல்லை-ஊதியபோது, எழும்-தோன்றிய, ஒலிக்கு-பேரிடி போன்ற

ஓசைக்கு, அஞ்சி-பயந்து, நாகர்–நாகர்கள், இது-இந்தப் பேரொலி, யாது என்று-எக்காரணத்தால் உண்டாயது என்பதை, உணர்ந்து-அறிந்து, சிறி-தக்ஷகன் மேற் கோபித்து, (அவனை நோக்கி) குழை அளித்திடுதி என்ன-குண்டலங்களைக் கொடுத்து விடு என்று கூற, தெக்ககனும்-அந்தத் தக்ஷகனும், கொடுத்து-[உதங்கனிடம் அவற்றைக்] கொடுத்து, தாழ்ந்தான்-வணங்கினன்: (எ-று).

முதனூலின்படி நோக்கின், உதங்கர் குதிரையின் அபானத்தில் ஊதியபோது, அதன் எல்லா மயிர்க்கால்களினின்றும் புகையுடன் அக்னிஜ்வாலைகள் வெளிப்பட்டு நாகலோகமுற்றும் வெப்பமடையச் செய்தன என அறிகிறோம். ஆகவே, இங்குப் பின்னேன் வேண்டும் விகற்பங் கூறியபடி. நாகர்+யாது=நாகரியாது: "தன்னெழி மெய்ம்முன் யகரம்வரின் இகரம் துன்னும்" என்பது நன்னூல், (மெய்யீறு: 3). (5)

வேறு

6. உதங்கன் ஆசான் மனைவியிடம் குண்டலங்களை யளித்தமை கூறும்.

பெற்றிடு குழையோ டுதங்கனம் புவிக்குப் பெயர்நெறி
யுணர்வுறு திடுக்கண்
உற்றுவா னவன்றன் பரிதர மேற்கொண் டொருகணத்
தவண்புகுந் தன்னை
சிற்றடி பணிந்தக் குழையளித் தேகித் தேசிகன்
அடிதொழ அவனும்
நற்றவர்க் கேனு முயர்ந்துளாய் இற்றை நாள்வரா
தியாதென நவில்வான்.

(இ-ள்). உதங்கன்-, பெற்றிடு குழையோடு-கைவரப்பெற்ற குண்டலங்களோடு, அம் புவிக்குப் பெயர் நெறி உணர்வுறு-அழகிய பூவுலகத்து வந்து சேரும் வழியை அறியாது, இடுக்கண் உற்று-(திகைப்பினால்) வருத்தமடைந்து, (பின்னர்) வானவன்-அந்தத் தேவபுருடன், தன்-தனது, பரிதர-குதிரையைக்கொடுக்க, மேற்கொண்டு-அதன் மேலேறிக்கொண்டு, ஒருகணத்து-விரைவிலேயே, அவண் புகுந்து-ஆசான்மனை புகுந்து, அன்னை சிற்றடி பணிந்து-[ஆசானின் மனைவியாகி] தனக்குத் தாய்போன்றவளின்

சிறிய பாதங்களை வணங்கி, அ குழை அளித்து-அக்குண்டலங்களை அவளிடம் கொடுத்து, (பின்) ஏகி-போய், தேசிகன்-தன் ஆசாரியனாகிய பைதரின், அடி தொழ-திருவடிகளை வணங்க, அவனும்-அப் பைதரும், நல் தவர்க்கேனும் உயர்ந்துளாய்-நல்ல தவச்சிரேட்டர்களினும் மேன்மை பெற்றுள்ளாய்! (நீ) இற்றை நாள் வராது யாது என-இன்று வரையில் திரும்பி வராமல் தாமதித்ததற்குக் காரணம் யாது என்று வினவ, நவில்வான்-(உதங்கன்) கூறத் தொடங்கினன்; (எ-று). அவன் கூறியதை மேலிற் கவியிற் காண்க.

சிற்றடி-'மூவழிச் சிறுகி' என்றபடி, அடி சிறுத்திருத்தல் மகளிர்க்கு உத்தம விலக்கணம். இற்றை-'இன்று' என்ற மென்றொடர்க்குற்றுகரம் வன்றொடராகி ஐகாரச்சாரியை பெற்று வந்தது. வராது+யாது=வராதியாது—குற்றியலிகரம்.

இது முதல் பத்துக் கவிகள்—ஈரசைச் சீர்கள் பயில வந்த எழுசீராசிரிய விருத்தம். (6)

7. உதங்கன் தான் தாமதித்து வந்தமைக்குக் காரணம் சொற்றல்.

குண்டையூர்ந் தொருவன் நெறியிவந் துண்பான்
கோமயம் புகலதுய்த் துவந்தேன்
திண்டிற லரசில் லவள்தருங் குழையைத்
தெக்ககன் கவர்ந்துபா தலத்திற்

கொண்டுபோ மளவி லுடன்புகுந் தாங்கோர்
குரகதத் தெதிர்வரு தேவற்
கண்டடி பணிந்தங் கவனரு ளதனாற்
கவர்குழை பெற்றனன் மீட்டும்.

(இ-ள்.) ஒருவன்-ஒரு புருஷன், குண்டை ஊர்ந்து-ஒரு விருஷபத்தை யேறிச் செலுத்திக்கொண்டு, நெறியில் வந்து-யான் வரும் வழியில் வந்து, கோமயம்-அந்த விருஷபத்தின் கோமயத்தை, உண்பான்-யான் உண்ணும்பொருட்டு, புகல-சொல்ல, துய்த்து-(அவன் சொன்னபடியே) உண்டு, வந்தேன்-இங்கு வந்து சேர்ந்தேன்; [மற்றும் வழியிடையில்], திண் திறல்

அரசு-மிக்க வலிமையுடைய மன்னராகிய பவுடியனின், இல்லவள்-மனைவி, தரும்-கொடுத்த, குழையை-குண்டலங்களை, தெக்ககன்-தக்ஷகன் என்ற நாகராஜன், கவர்ந்து-அபகரித்துக்கொண்டு, பாதலத்தில் கொண்டுபோம் அளவில்-பாதாளத்திற் புகுந்தபோது, உடன் புகுந்து-கூடவே யானும் தொடர்ந்து புகுந்து, ஆங்கு-அப்போது, ஓர் குரகதத்து-ஒரு குதிரையின் மேலேறி, எதிர்வரு-என் எதிரிலே வந்த, தேவன் கண்டு-ஒரு தேவபுருடனைப்பார்த்து, அடி பணிந்து-அவன் பாதங்களில் வணங்கி, அங்கு-அப்போது, அவன் அருள் அதனால்-அவன் கருணைசெய்ய அவ்வுதவியினால், கவர்குழை-தக்ஷகன் அபகரித்துச் சென்ற குண்டலங்களை, மீட்டும்-மறுபடியும், பெற்றனன்-யான் பெற்று வந்தனன்; (எ-று.) என்று உதங்கன் காரணம் விவரித்தான்.

குண்டை-விருஷபம்; எருது. உண்பான்-பானீற்று வினையெச்சம்; கோமயம்-சாணம். தேவற்கண்டு-இரண்டாம் வேற்றுமைத் தொகை. கவர்குழை-வினைத்தொகை: பெயரெச்சம் இறந்தகாலம் கரந்தது. இனி, நெறியில் வந்தோன் புகன்றது என்னையெனில்-"உதங்கா! இந்த விருஷபத்தின் கோமயத்தை யுண்பாய்; உன் ஆசானும் இதையுண்டிருக்கிறார்" என்றது. எனவே, "துய்த்து" என்றது. துய்த்தல்-அநுபவித்துப் பிரீதியோடு உண்ணுதல். (7)

8-9. உதங்கன் பாதலத்தில் தான்கண்ட காட்சிகளையும் வழியிடையில் தான் கண்டவற்றையும் பற்றி ஆசானை வினவியறிந்து தவஞ்செயக் கானகம் மீளல்.

[இரு கவிகள் — ஒரு தொடர்.]

8. சாற்றுமத் தலத்தின் மடந்தையர் இருவோர் தவளமை நிறத்திழை விரலின்
மாற்றினர் இதழ்பன் னிரண்டுள வட்டம் மைந்தர்மூ விருவர்பற் றினர்யான்

தேற்றமுற் றிடுமா றுரையென வாசான் செப்புமிந் திரனெறி யுறுவோன்
ஏற்றவ னிபங்கோ மயமமு தாமவ் வேழையர் தாதைவி தாதை.

(இ-ள்.) சாற்றும் அத் தலத்தில்-மேலே சொன்ன அந்தப் பாதலத்தில், மடந்தையர் இருவோர்-இரண்டு பெண்கள், தவளம்

மை நிறத்து இழை-வெளுப்பும் கறுப்பும் நிறமாகக்கொண்ட நூலிழைகளை, விரலின் மாற்றினர்-தமது விரல்களிற்சுற்றி மாற்றி மாற்றி வஸ்திரம் நெய்துகொண்டிருந்தனர்; பன்னிரண்டு இதழ் உள வட்டம்-பன்னிரண்டு ஆரக்கால்களையுடைய சக்கரத்தை, மூவிருவர் மைந்தர்-ஆறு குமாரர்கள், பற்றினர்-சுற்றிக்கொண்டிருந்தார்கள்; (இக்காட்சிகளைப் பற்றி) யான்–, தேற்றிடுமாறு-தெளிவடையும்படி, உரை என-கூறுவீராக என்று (உதங்கன்) பிரார்த்திக்க, ஆசான்-ஆசிரியராகிய பைதர், செப்பும்-(பின் வருமாறு) கூறி விளக்கினர்; நெறி உறுவோன்-வழியிடையில் வந்தவன், இந்திரன்-தேவேந்திரனுவான்; ஏறு-(அவன் ஏறிவந்த) விருஷபம், அவன் இபம்-அவனது யானையாகிய ஐராவதம்; கோமயம்-விருஷபத்தின் கோமயம், அமுதாம்-தேவாமிர்தமாகும்; அ ஏழையர்-(நெய்துகொண்டிருந்த) அந்த இரு பெண்களும், தாதை விதாதை-தாதாவும் விதாதாவும் ஆகிய இரண்டு தேவதைகள்; (எ-று.) தாதா-உண்டாக்குவது, விதாதா-பல மாறுதல்களைக் கொடுப்பது என்பது பதப்பொருள். (8)

9. இழையிரண் டிரவும் பகலுமாம் ஈரா
றிதழ்மதி குமரர்ஆ றிருதுஆங்
குழைவர வருள்வோன் வருணன்அப் பரியுங்
கொழுந்தழற் பிரான்குரு கருமம்

விழைவுடன் பிடித்த பண்பினற் றேவர்
மேவிகாத் தனர்இருள் பயில்கான்
நுழைதவம் பயில்கென் றருள்செய மகிழ்வுற்
றுதங்கனும் விடைகொடு மீண்டான்.

(இ-ள்). இரண்டு இழை–கறுப்பும் வெளுப்புமாகிய நூல்கள், இரவும் பகலுமாகும்—; இதழ்-ஆரக்கால்கள், ஈர் ஆறு-பன்னிரண்டும், மதி-மாதங்கள்; ஆறு குமரர்-ஆறு குமாரர்களும், இருது-ஆறு ருதுக்கள், ஆங்கு-அவ்விடத்து, உழைவர-சக்கரம் (வருஷம்) சுற்றி வரும்படி, அருள்வோன்-செய்பவன், வருணன்-பர்ஜன்யன் என்று சொல்லப்பட்ட மேகதேவதை; அ பரியும்-அந்தக் குதிரையும், கொழுந்து அழல் பிரான்–கொழுந்துவிட்டெரிகின்ற அக்னி; (நீ) குரு கருமம் விழைவுடன் பிடித்த பண்பினால்–ஆசானுகிய எனது ஆணையை விருப்புடன் செய்து முடித்த திறனால், தேவர்-(எனக்குச் சிநேகிதராகிய) இந்திரன் முதலிய

தேவர்கள், மேவி-விரும்பி, காத்தனர்-உனக்கு யாதொரு தீங்கும் நேராதவாறு காத்தனர்: (இனி நீ) இருள் பயில் கான் நுழை தவம்-(மரங்களால்) இருள் சூழ்ந்த ஆரணியத்தில் நுழைந்து தவத்தை, பயில்க என்று-மேற்கொண்டு செய்வாயாக என்று, அருள்செய-சொல்ல, உதங்கனும்-, மகிழ்வுற்று-மகிழ்ந்து, விடை, கொடு-(பைதராகிய ஆசானிடம்) விடை பெற்றுக்கொண்டு) மீண்டான்-[கானகத்திற்குச் செல்லத்] திரும்பினன்; (எ-று).

'தேவர் மேவிக் காத்தனர்' என்றவிடத்து அறியவேண்டியது-உதங்கன் சாப்பிட்ட விருஷபத்தின் கோமயம் அமிர்தமாதலின், அவன் அந்தப் பாதாள லர்ப்ப லோகத்தில் அழியாமலிருந்தான் என்பது. "வேண்டிய வேண்டியாங் கெய்தலாமாதலின்" தவம் பயில்க என்று அருளினர். (9)

10. உதங்கன் ஜெனமேஜயனிடம் சர்ப்பயாகஞ் செய்யச் சொல்லல்.

நெடிதுநாள் தவஞ்செய் திருந்துதெக் ககன்செய்
நிந்தையைச் சிந்தைகொண் டுதங்கன்
அடுபடை சனமே செயனவை புகுந்தாங்
கவன்றெழு வாசிசொற் றிருந்தக்

கொடியவன் புரிந்த கொடுமைசொற் றன்னேன்
குலத்தொடு மடியவோர் மகஞ்செய்
திடுகென அரசன் ஒருவன்செய் பிழைக்கா
இருங்குல மொருங்கட லறனே.

(இ-ள்.) உதங்கன்-, நெடிது நாள் தவம் செய்திருந்து-நீண்ட காலம் தவஞ்செய்து, (பின்பு) தெக்ககன் செய் நிந்தையை-தக்ஷகன் செய்த பழிக்கத்தக்க செயலை, சிந்தைகொண்டு-சிந்தித்து, அடுபடை சனமேசெயன் அவை புகுந்து-கொல்லும் படைகளையுடைய ஜனமேஜயராசனுடைய சபையுட் புகுந்து, ஆங்கு-அச்சபையினிடத்து, அவன்-அந்த ஜனமேஜயமன்னன், தொழ-உதங்கரை வணங்க, ஆசிசொற்று (அவர்) ஆசிர்வாத மொழிகளைச் சொல்லி, இருந்து-(இருக்கையில்) அமர்ந்து, அ கொடியவன்-அந்தத் தக்ஷகன், புரிந்த-செய்த, கொடுமை-கொடிய தீங்குகளை, சொற்று-சொல்லி, அன்னேன்-அப்படிப்பட்ட தீயோன், குலத் தொடு மடிய-தன் நாககுலத்தோடு இறந்தொழியும்படி, ஓர் மகம்-

ஒரு சர்ப்பயாகம், செய்திடுக என-செய்வாயாக என்று கூற, அரசன்-ஜனமேஜயன்,-(உதங்கரை நோக்கி) ஒருவன் செய் பிழைக்கா-ஒருத்தன் செய்த தவற்றுக்காக, இரும் குலம்-அவனது பெரிய குலத்தையே, ஒருங்கு அடல்-ஒருசேரத் தொலைத்திடுதல், அறனே?—தருமமாகுமோ; (ஆகாதே). (எ-று). ''பேசுதி'' என மேலைக்கவியோடு குளகம்.

தக்ஷகன் புரிந்த கொடுமை சொற்றல்:—(1) ஜனமேஜய னுடைய பிதாவாகிய பரீட்சித்தைக் கடித்துக் கொன்றது. (2) பிதாவைக் காப்பாற்றச் சென்ற காசியபரையும் தடுத்தது (3) குருதக்ஷிணைக்காகக் கொணர்ந்த குண்டலங்களை உதங்கரிட மிருந்து கவர்ந்து ஓடியது. (10)

11—15 : ஜனமேஜயன் வினவின வினாவிற்கு உதங்கர் விடையளித்தமை கூறும்.

(ஐந்து கவிகள்—ஒரு தொடர்)

11. உருரு இறந்த மனைவியை எழுப்புதல்.

பேசுதி யெனமா தவனிதை யுரைப்பான்
பிருகுமா முனிக்குலத் துதித்தோன்
தேசுறும் உருரு மனைவியை யரவங்
தீண்டலும் இறந்தனள் அவனும்

பாசமார் இன்னற் கடற்படிந் தயரும்
பான்மைகண் டசரீரி நின்றன்
ஏசிலா வியிலிங் கருத்தமீந் தான்மா
தெழுமென வீந்தன னெழுந்தாள்.

(இ-ள்). பேசுதி என-தருமமாகுமா? சொல் என்று ஜனமே ஜயன் கேட்ப, மா தவன்-சிறந்த தவச்சிரேட்டனாகிய உதங்கன், இதை-கீழ்வரும் விருத்தாந்தத்தை, உரைப்பான்-(விடையாகச்) சொல்லத் தொடங்கினன்;

பிருகு மா முனி குலத்து உதித்தோன்-சிறந்த முனிவராகிய பிருகுவின் வமிசத்தில் தோன்றியவனும், தேசு உறும்-மிக்க தேஜஸ்ஸை யுடையவனுமாகிய, உருரு-உருரு என்பவரின், மனைவியை-மனைவியாகிய பிரமத்வரை என்பவளை, அரவம் தீண்ட

லும்-பாம்பொன்று கடித்தவுடன், இறந்தனள்-(அவள்) மாண்டு போனள்; அவனும்-அந்த உருருவும், பாசம் ஆர் இன்னல் கடல் படிந்து-அன்பாகிய பிணைப்பினால் ஏற்பட்ட துக்க சாகரத்தில் மூழ்கி, அயரும்-வருந்தும், பான்மை கண்டு - தன்மையைப் பார்த்து, அசரீரி-தேவ தூதனாக வந்த அசரீரியொன்று, [அந்த உருருவை நோக்கி] ''நின்தன்-உன்னுடைய, ஏசு இல்-பழிப்பில் லாத, ஆவியில்-ஆயுளில், இங்கு-இப்போது, அருத்தம் ஈந்தால்-ஒரு பாதியைக் கொடுத்தால், மாது எழும்-உமது மனைவி உயிர் பெற்றெழுவாள்'' என-என்று சொல்ல, ஈந்தனன்-(அந்த உருரு அங்ஙனமே பாதி ஆயுளைக்) கொடுத்தான்; எழுந்தாள்-[அவன் மனைவியும் தூங்கினவள் எழுவதுபோல்] எழுந்தாள்; (எ-று).

பிருகு முனிவரின் புத்திரர் ச்யவனர்; அவர் புத்திரர் பிரமதி; அவர் புத்திரர் உருரு. உருருவின் மனைவியின் பெயர்-பிரமத்வரை: அதாவது, பெண்களிற் சிறந்தவள் என்றபடி: [பிரமதா-பெண்கள்; வரா-சிறந்தவள்.] (11)

12. உருரு பாம்புகளை யடித்துக்கொல்வதாக நியமங்கொள்ளல்.

தேவியுய்ந் தெழமா தவன்மகிழ்ந் தபாயஞ்
செய்தபாம் பினங்கள்செற் றிடுவான்
தாவியோர் தண்டிற் றடியுநாள் புற்றின்
றலையெழு மோரர வினைக்கண்

டாவிசெற் றிடுவான் முயன்றபோ தப்பாம்
பரிகரி யெனலுமே துரைத்தாய்
நீவிளம் பெனச்செற் றிடப்பிழை யென்பால்
நிகழ்த்தென நிகழ்ந்தவை யுரைத்தான்.

(இ-ள்). தேவி உய்ந்து எழ-மனைவியாகிய பிரமத்வரை உயிர் பெற்றெழவே, மா தவன் மகிழ்ந்து-சிறந்த உருரு முனிவர் களிப் புக்கொண்டு, [அன்று முதற்கொண்டு] அபாயம் செய்த பாம்பு இனங்கள்-தீங்கு செய்கின்ற பாம்புக் கூட்டங்களையெல்லாம், செற்றிடுவான்-அடித்து அழித்திடும்படி நியமம் மேற்கொண்டு, [ஒருநாள்], தாவி-பாய்ந்து, ஓர்-ஒரு, தண்டின்-தடியினால், தடியும் நாள்-(ஒரு பாம்பை) அடிக்கப் போகும்போது,-(ஆங்கு) புற்றின் தலை எழு ஓர் அரவினை கண்டு-புற்றினிடத்தினின்று எழுந்து வந்த ஒரு பாம்பினைப் பார்த்து, ஆவி செற்றிடுவான்-அதன் உயிரைப்

போக்கும் நிமித்தம், முயன்றபோ தது-முயற்சி செய்தபோ தது, அ பாம்பு-அந்தப் பாம்பானது, பரிகரி-(என்னை) ஓம்புவாய், எனலும்-என்று சொன்னவுடனே, [அதனை நோக்கி உருரு] ஏது உரைத்தாய்-என்ன சொல்லினாய்; நீ விளம்பு-நீ காரணம் சொல், என-என்று கேட்க, (அப்பாம்பு) செற்றிட-என்னை அடித்துக் கொல்ல, என்பால்-என்னிடத்து, பிழை நிகழ்த்து-(யான் செய் துள்ள) பிழையைத் தெரிவிப்பாய், என-என்று வினவ, (உருரு முனிவன்) நிகழ்ந்தவை-நடந்த நிகழ்ச்சிகளை, உரைத்தான்-விவரித் துக் கூறினான்; (எ-று).

புற்றரவு எனப்பட்டது இங்கு: ஆனால் முதனூலின்படி வயது சென்ற ஒரு "டுண்டுபம்" (விஷமற்ற ஒருவகைப் பாம்பு) கூறப்பட்டுள்ளது. தண்ணீர்ப்பாம்பு போன்றவை விஷமற்றவை. பாம்பு+பரிகரி=என்றவிடத்து நிலைமொழியீற்று உயிர்மெய் யெழுத்து முற்றும் கெட்டு, பாம்பரிகரி என வந்தது. பரிகரி-பாதுகாப்பாய்: முன்னிலைவியங்கோள்வினைமுற்று. (12)

13–14 : புற்றரவு தன் வரலாறு கூறுதல்.

இரண்டு கவிகள்—குளகம்.

13. கேட்டுபாம் பொருவர் பிழைகொடு குலத்தைக்
கெடுத்திட வடுக்குமோ வென்ன
ஈட்டிடு நன்மை துன்மையங் கவன்றன்
இருங்குலத் தினர்க்குறு மதனால்

வீட்டுவ லெனத்தண் டோச்சலும் புயங்கம்
வேதிய னுகவீ தேது
நீட்டெனச் சகத்ர பாதனென் போன்யான்
நேயத்தா லொருமுனி வரன்மேல்.

(இ-ள்). கேட்டு-(உருரு முனிவன் கூறியவற்றைக்) கேட்டு, பாம்பு-அந்தப் பாம்பானது, ஒருவர் பிழைகொடு-ஒருவர் செய்த தவற்றைக் கொண்டு, குலத்தை கெடுத்திட-அவரது குலம் முழு வதையும் அழித்திடலென்பது, அடுக்குமோ-தகுவதோ, என்ன-என்று வினவ, (அதற்கு உருரு) அங்கு-அந்தத் தவறு செய்த விடத்து, ஈட்டிடும்-திரளுகின்ற, நன்மை துன்மை-நன்மைகளும் தீமைகளும், அவன்தன்-அத் தவறு செய்தவனின், இரும் குலத்

தினர்க்கு-பெரிய குலத்தவர்க்கும், உறும்-சேர்ந்து பலன் வினை விக்கும்; அதனால்-, வீட்டுவல்-உன்னை (த்தடியால் அடித்து)க் கொல்லப் போகிறேன், என-என்று சொல்லி, தண்டு ஓச்சலும்-தடியைத் தூக்கி வீசவும், புயங்கம்-அப்பாம்பு, வேதியன் ஆக-ஒரு பிராம்மணனாகவே, ஈது ஏது-இது என்ன விந்தை! நீட்டு-விவரிப்பாய், என-என்று (உருரு) கேட்க, யான்-(பாம்பாயிருக்கிற) நான், சகத்ரபாதன் என்போன்-ஸகஸ்ரபாத் என்னும் பெயருள்ள ரிஷியாக இருந்தேன்: நேயத்தால்-சிநேகிதப் பான்மையினால், ஒரு முனிவரன்மேல்-ஒரு முனிச்சிரேட்டர்மேல்; (எ-று). "துரும் பினை அரவென்றேச்சினன்" என மேலிற் கவியோடு குளகமாய்த் தொடரும்.

துன்மை-தீமை. நீட்டு-முன்னிலையேவல் வினைமுற்று. (13)

14. துரும்பினை யரவென் றேச்சினன் சீறிச்
சுமந்திடிவ் வுருவெனச் சபித்தான்
வரும்பெருஞ் சாபந் தொலையுநா ளிரந்தேன்
மற்றவன் உருருவென் பவனைக்

கிடுங்கால் தொலையு மென்றனன் நின்னால்
இன்றகன் றனனினங் கேண்மோ
பெரும்புவி யரசர்க் கலான்மறை யோர்க்குப்
பெருங்கொலை யறங்கொலோ விடுத்தீ.

(இ-ள்). (யான்) துரும்பினை-ஒரு துரும்பினையெடுத்து, அரவு என்று-பாம்பென்று அச்சுறுத்திச் சொல்லி, ஓச்சினன்-(அந்த முனிவரன்மேல்) வீசினேன்;(அவர்) இ உரு சுமந்திடு என-இந்தப் பாம்புருவத்தைச் சுமந்து திரிவாய் என்று, சபித்தான்-சாபமிட்டார்; (அது கேட்டு நான் அஞ்சி), வரும் பெரும் சாபம் தொலையும் நாள்-வரவிருக்கும் பெருத்த சாபத்திற்கு விமோசனம் ஏற்படும் நாளை, இரந்தேன்–பிரார்த்தித்துக் கொண்டேன்; மற்று அவன்-அப்போது அவர், -உருரு என்பவன் நோக்கிடுங்கால்-உருரு என்னும் முனிவர் உன்னைக் கடாக்ஷிக்கும்போது, தொலையும்-நீங்கும், என்றனன்-என்று [விமோசனம்] சொன்னார்; [அதன் படியே] நின்னால்-உம்மால், இன்று-இன்றைத்தினம், அகன் றனன்-பாம்புருவம் நீங்கப் பெற்றேன்; இனம்-இன்னமும், கேண்மோ-(யான் சொல்வதைக்) கேட்பீராக: பெருங் கொலை-

பெருத்த அளவிற் கொலை செய்தலென்பது, பெரும் புவியரசர்க்கு அலால்-பெரிய இப் பூமியையாளுகின்ற அரசர்களுக்கேயன்றி, மறையோர்க்கு-வேதமோதும் முனிவர் பிராம்மணர்களுக்கு, அறம் கொல்ஓ-தருமமாகுமோ? (ஆகாது), [எனவே] விடுத்தீ-(நீர் மேற்கொண்ட நியமத்தை) விட்டு விடுவீராக; (எ-று). "என்ன லும்" என மேலிற்கவியோடு குளகம்.

தண்டிப்பதும், கடுமையாயிருப்பதும், மக்களைக் காப்பதும் ஆகிய இவையெல்லாம் அரசர்க்குரிய (க்ஷத்திரிய) தருமம்; கொல்லாமை, பொய்யாமை, பொறுமை, வேதங்களை மறவாமை இவையெல்லாம் மறையோர்க்குரிய (பிராம்மண) தருமம் என வரையறுத்துள்ளனர். விடுத்தீ-முன்னிலைவியங்கோள்: ஈறு நீண்டது. (14)

16. உதங்கர் அளித்த விடையின் முடிவு.

தனையரைச் சனமே செயன்மகத் திறப்பான்
தாய்சபித் தனள்முனம் பழிநீ
புனைவதிங் கேதுக் கென்னலுஞ் சினமும்
பூண்டிடு விரதமும் போக்கி

மனைவிபால் உருரு புகுந்துவாழ்ந் திருந்தான்
மண்ணிடை யொருவன்செய் தீமை
அனையவன் குலத்தி லுதித்தவர்க் கெல்லாம்
அணங்குசெய் திடும்வடி வேலோய்!

(இ-ள்). [மேலும்] தாய்-சர்ப்பங்களுக்கெல்லாம் தாயாகிய கத்ரு என்பவள், தனையரை-தன் புதல்வர்களாகிய சர்ப்பங்களை, சனமேசெயன் மகத்து-ஜனமேஜய மகாராஜன் செய்யப் போகும் யாகத்தில், இறப்பான்-(அக்னியால் தகிக்கப்பட்டு) இறக்கும்படி, முனம்-முன்னமேயே, சபித்தனள்-சாபமிட்டுள் ளாள்; [ஆதலின்] நீ பழிபுனைவது இங்கு ஏதுக்கு-நீர் [சர்ப்பங் களைக் கொல்லும்] பழியைச் சூட்டிக் கொள்வது இப்போது எதற்காக? (வேண்டுவதின்று), என்னலும்-என்று (சகத்ரபாதன்) சொன்னவுடனே, உருரு-, சினமும்-கோபத்தையும், பூண்டிடு விரதமும்-(சர்ப்பங்களைக் கொல்வதாகப்) பூண்டிருந்த நியமத்தை யும், போக்கி-விடுத்து, மனைவிபால்-மனைவியாகிய பிரமத்வரை யிடத்து, புகுந்து-சென்று சேர்ந்து, வாழ்ந்திருந்தான்-; [ஆகவே]

வடி வேலோய்-கூராக்கப்பட்ட வேலாயுதத்தையேந்திய ஜனமே ஜயனே! [தெரிந்துகொள்வாய்]; ஒருவன்—, மண்ணிடை செய் தீமை-பூமியில் செய்த பாபங்கள், அனையவன்-அவனுடைய, குலத்தில் உதித்தவர்க்கு எல்லாம்-குலத்தில் தோன்றிய அனைவர்க்கும், அணங்கு செய்திடும்-துன்பத்தை விளைவிக்கும்; (எ-று).—என்று கூறி முடித்தார் உதங்கர்.

ஸர்ப்பங்களின் தாயாராகிய கத்ரு ஸர்ப்பங்களைப் பார்த்து, "ஜனமேஜயருடைய யக்ஞத்தில் உங்களை அக்னி தஹிக்கப் போகிறான்" என்று சபித்திருந்தாள். அந்தக் குறிப்பு முதலடியில் காட்டப்பட்டுள்ளது. ஈற்றடிகளில், **வேற்றுப்பொருள்வைப்பணி** காண்க. (15)

வேறு

16-20. சர்ப்பங்களின் தாய் சபித்த வரலாறு உதங்கர் ஜனமேஜயனுக்குக் கூறுதல்.

(ஐந்து கவிகள்-ஒரு தொடர்)

16. காசிபன் மனைவியர் கர்ப்பந் தரித்து அண்டம் பரித்தல்.

என்றலும் மன்னன் அவனைச் சபித்தலே தெனவு தங்கன்
பன்னுவன் காசி பன்றன் பாரியி லிருவ ராளேர்
மன்னுநற் றவஞ்செய் தன்பன் வரத்தினுல் வினதை ரெண்டும்
பின்னவ ளொருநூற் றைந்தும் பெற்றண்டம் பரிக்கு நாளில்.

(இ-ள்.) [ஒருவன் செய்த தீமை அவன் குலத்துதித்தோரைச் சார்ந்து அணங்கு செய்திடும்,] என்றலும்-என்று [உதங்கன்] கூறி முடித்தவுடனே, மன்னன் - ஜனமேஜயன், அவனை - (அந்த) உதங்கனை நோக்கி, சபித்தல் ஏது என-சர்ப்பங்களின் தாய் சபித்தற்குக் காரணம் என்ன என்று கேட்க, உதங்கன்—, பன்னுவன்-கூறத்தொடங்கினன்; காசிபன்தன்-காசிப முனிவனுடைய, பாரியில்-மனைவியரில், இருவர் ஆளேர்—[வினதை, கத்ருரு என்னும்] இருவர், மன்னு - நிலைபெற்ற, நல் தவம் செய்து-நல்ல தவத்தைச் செய்து, அன்பன் - கணவனாகிய காசியபரின், வரத்தினுல்-, வினதை-[முதல் மனைவியாகிய]

வினதையென்பாள், ரெண்டும்-இரண்டும், பின்னவள்-அவளுக்குப் பின் மனைவியாகி வாய்த்த கத்துரு என்பாள், ஒரு நூற்று ஐந்தும்–நூற்றைந்தும், அண்டம் பெற்று-கருப்ப முட்டையாகத் தரித்து, பரிக்கும் நாளில்-(ஜாக்கிரதையாகத்) தாங்கிவரும் காலத்தில்; (எ–று.)

முதனூலின்படி, கத்துரு ஒரு ரூபமான ஆயிரம் நாகர்கள் புத்திரர்களாக வேண்டும் என வரம் கேட்டாள்: வினதை, வலிமையில் கத்ருவின் புத்திரர்களுக்கு மேற்பட்ட இரண்டு புத்திரர்களை வரங்கேட்டாள். இருவரும் தக்ஷப்பிரஜாபதியின் சிறந்த பெண்கள்.

இது முதல் ஐந்து கவிகள்-அறுசீராசிரிய விருத்தம். (16)

17. கருப்பம் வெளிப்படல்.

விளம்புகத் துருவை யண்டம் விண்டாதி சேட னுதி
வளம்பெறு புதல்வர் நூற்று நால்வரோ டொருத்தி வந்தாள்
உளம்பொரூள் வினதை யண்ட முடைப்பவொன்
றருணன் தோன்றி
இளம்பரு வத்து டைத்தீங் கெனைமுடஞ் செய்தாய் என்றே.

(இ-ள்.) விளம்பு-சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, கத்துரு-கத்துரு என்ற இளையவள், வை–தரித்த, அண்டம் விண்டு-முட்டையுடைந்து, ஆதிசேடன் ஆதி–ஆதிசேடன் முதலாகிய, வளம் பெறு புதல்வர்-நன்மை பொருந்திய புத்திரர்கள், நூற்று நால்வரோடு-நூற்று நான்கு பேருடன், ஒருத்தி-ஒருத்தி மட்டும் (தங்கையாக), வந்தாள்-வந்து பிறந்தாள்: (இதனைக்கண்டு) வினதை-, உளம் பொரூள்-மனம் சகியாதவளாய், அண்டம் உடைப்ப-தன் கருப்ப முட்டையைச் சிதைப்ப, அருணன் ஒன்று தோன்றி–(இருவரில்) ஒருவன் மட்டும் அருணன் என்பவன் தோன்றி, இளம் பருவத்து உடைத்து-[சரீரம் பூரணமாவதற்கு முன்னேயே] இளமையா யிருக்கும்போதே சிதைத்து, ஈங்கு-இவ்விடத்து, எனை-என்னை, முடம் செய்தாய்-முடமாக்கினாய், என்றே-என்று (அன்னையை நோக்கிச்) சொல்லி; (எ-று.) மேலிற் கவியில் "சபித்து" என்பதோடு தொடரும்.

அருணன் கால்முடம் பட்டுப்போனான்; இவன் பின்னர் சூரியனுடைய ரதத்தைச் செலுத்தும் சாரதியாயினான். ஒருத்தி

என்றது-நாக கன்னிகையாகிய ஜரத்காருவை : இது பின்னர்ப் பெறப்படும். (17)

18. அருணன் தாயைச் சபித்தல்.

அன்னையை யிகையாட் கேவல் ஆற்றுவான் சபித்தங்கன்னன்
இன்னலுற் றிடல்கண் டேவ லினிபெறும் புதல்வன்
தீர்ப்பான்
என்னசொற் றினன்றே சூர்வா னேகினன் வினதை யண்டந்
தன்னைக்காத் திருந்தங் கோர்நாள் தங்கையோ டளக்கர்
பாற்போய்.

(இ-ள்.) அன்னையை-தாயாகிய வினதையை, இகையாட்கு-இகையவளாகிய கத்துருவுக்கு, ஏவல்-பணிவிடைகள், ஆற்றுவான்-செய்யும்படி, சபித்து-, அங்கு-அப்போது, இன்னல் உற்றிடல் கண்டு-(தாய்) வருத்தமடைவதைக் கண்டு, அன்னன்-அந்த அருணன், இனி பெறும் புதல்வன்-இனி நீ பெறப்போகும் புத்திரன், ஏவல்-உன்னை அடிமைப் பணிவிடைகள் செய்வதினின்று, தீர்ப்பான்-விடுவிப்பான், என்ன சொற்று-என்று சாபவிடை சொல்லி, இனன்-சூரியனுடைய, தேர்-இரதத்தை, ஊர்வான்-ஏறிச் செலுத்தும் சாரதியாக, ஏகினன்-போனன்; வினதை-, அண்டம் தன்னை காத்திருந்து-முட்டையைத் தரித்து (ஜாக்கிரதையாகப்) பாதுகாத்திருந்து, அங்கு-அவ்விடத்தினின்று, தங்கையோடு-இகையாளாகிய கத்துருவுடன், ஓர் நாள்-, அளக்கர் பால் போய்-கடலிடத்துச் சென்று; (எ-று).—"அமரர்கோன் பரியை நோக்கி" என மேலிற்கவியோடு தொடரும்.

இனி பெறும் புதல்வன் என்றது-உவணனை; அதாவது கருடனை: அஃது மேலே கூறப்படும். இனன்–சூரியன். அவன் சாரதியாதலால் அருணன் தேவதையாயினன். (18)

19. வினதையும் கத்துருவும் பந்தயம் வைத்துச் சூள் சொற்றல்.

அக்கடல் மருங்கி னுற்ற அமரர்கோன் பரியை நோக்கி
மிக்கவெண் பரியீ தென்ன விளம்பல்கேட் டிகையாள்
வால்பாற்
றொக்கது கறுப்பென் றோத தோற்றவள் வென்றூட்கேவல்
அக்கணஞ் செய்வான் சூள்சொற் றகம்புக்கார் பின்னுள்
காண்பான்.

(இ-ள்). அ கடல் மருங்கின் உற்ற-அந்தக் கடலின் கரையோ

ரத்தில் இருந்த, அமரர்கோன் பரியை நோக்கி-தேவேந்திர னுடைய குதிரையாகிய உச்சைச்சிரவத்தைப் பார்த்து, ஈது-இந்தக் குதிரை, மிக்க வெண்பரி-மிகுதியான வெண்மை நிற முடைய குதிரையாகும், என்ன-என்று வினதை சொல்ல, விளம்பல் கேட்டு-அந்த மூத்தவள் சொன்னதைக் கேட்டு, இகூயாள்-இகூயவளாகிய கத்துரு, வால்பால்-அந்தக் குதிரையின் வாலினிடத்து மட்டும், கறுப்பு தொக்கது-கறுப்பு நிறம் காணப்படுகிறது, என்று ஓத-என்று சொல்ல, [இருவர்க்குள் பந்தயம் ஏற்பட்டு], தோற்றவள்-இந்த நிறப் போட்டியில் தோற்றுப் போனவள், வென்றூட்கு-வெற்றியடைந்தவளுக்கு, ஏவல் செய்வான் சூள் சொற்று-அடிமையேவல்கள் செய்வதாகச் சபதஞ் சொல்லி, அக்கணம்-அந்தக் கணமே, பின்நாள் காண்பான்-மறுநாள் பார்த்துக் கொள்வோம் என்று சொல்லி, அகம் புக்கார்-தத்தம் இருப்பிடத்தைச் சேர்ந்தனர்; (எ-று).

உச்சைச்சிரவம் என்பது அசுவராஜா: சிறந்த ஒளியுள்ளதும் மிகுந்த சக்தியுள்ளதும் ஆகிய பரி. திருப்பாற்கடலில் கடைந்த காலத்து அதனினின்று தோன்றியது: வெள்ளை நிறமுடையது. தேவேந்திரனிடம் சேர்ந்தது. (19)

20. கத்துரு தன் புத்திரர்களைச் சபித்தமை.

எடுத்தன முடிப்பாள் மைந்தர்க் கிவைசொல்லிப்
பரியின் வான்மை
படுத்துமென் றுரைப்ப அன்னோர் பழியென மறுப்பச்
சீறி
வடுத்தவிர் வாட்டை கேள்வன் மகத்திறந் திடுவான்
சாபங்
கொடுத்தனள் ஒருவ னஞ்சிக் குதிரைவால் கருமை
செய்தான்.

(இ-ள்). (மறுநாள்) எடுத்தன-தான் எடுத்துக்கொண்ட சூளுரையை, முடிப்பாள்-வெற்றியுறச் செய்து முடிக்க வெண்ணிய கத்துரு, மைந்தர்க்கு-தன் புத்திரர்களாகிய நாகர்களுக்கு, இவை சொல்லி-நடந்த பந்தய விவரங்களைச் சொல்லி, பரியின் வான்மை-உச்சைச்சிரவசின் வாலின் வெண்மை நிறத்தை, படுத்தும்-மாற்றிக் (கறுப்பு நிறமாகக்) காட்டுவீர், என்று உரைப்ப-என்று

சொல்ல, அன்னோர்-அப்புத்திரர்கள், பழி என மறுப்ப-இஃது பழிப்பான செயல் ஆகவே செய்ய மாட்டோம் என மறுத்துப் பேச, சீறி-தாயாகிய கத்துரு கோபித்து, வடு தவிர்-குற்றம் நீங்கிய, வாட்டை கேள்வன்-வபுஷ்டமையின் கணவனுகிய ஜனமேஜயன் செய்யப்போகும், மகத்து-யாகத்தில் (அக்னியால் தகிக்கப்பட்டு) இறந்திடுவான்-மரித்துப் போகும்படி, சாபம் கொடுத்தனள்—; ஒருவன்-ஒரு புத்திரன் மட்டும், அஞ்சி-பயந்து, குதிரை வால்-அந்த உச்சைச்சிரவசின் வெள்ளிய வாலை, கருமை செய்தான்-[அதனிடத்து மை நிறமான வால்மயிராகிக்] கறுப்பாகச் செய்தான்; (எ-று).

அஞ்சிய ஒருவன்-கார்க்கோடகன் என்பவன், வான்மை-வெண்மை, வாலின் தன்மை. (20)

21. உவணன் தோன்றித் தாயை ஆட்பட்டிருக்குந் திறம் வினவல்.

தங்கைபின் ஞட்போய் வென்றனள் வினதை
தாழ்ந்தவட் கேவல்செய் திருந்தாள்
அங்கவட் பயந்த வண்டமைஞ் ஞாருண்
டகன்றபின் னுவணன்வந் துதித்தான்

ஙங்கைகண் டிடர்தீர்ந்த் தவரொடும் பணிசெய்
ஞான்றிலங் கொருதின முவணன்
பங்கமுற் றூட்பட் டிடுந்திறம் வினவப்
பயந்தவள் நிகழ்வெலாம் பணித்தாள்.

(இ-ள்). பின்னுள்-மற்றை நாள், தங்கை-கத்துரு, வென்றனள்—; வினதை-, அவட்கு தாழ்ந்து-அவளுக்கு அடிமையாகி, ஏவல் செய்து-பணிவிடைகளைச் செய்து, இருந்தாள்-; அங்கு-அப்படியிருக்குங்கால், அவள் பயந்த அண்டம்-அவள் தரித்திருந்த முட்டை, ஐந்நூறு ஆண்டு அகன்றபின்-ஐந்நூறு வருடங்கள் சென்றபின், (பரிபூர்ணமாகி) உவணன்-கருடன், வந்து-அம் முட்டையினின்று வெளிப்பட்டு, உதித்தான்-பிறந்தான்; ஙங்கை கண்டு-வினதை (புத்திரனைப்) பார்த்து, இடர் தீர்ந்து-துன்பம்

நீங்கி, அவரொடும்-அப்புத்திரனுடனும்கூட, பணி செய் ஞான்றில்-ஏவல் செய்து வரும் நாளில், அங்கு-அப்போது, ஒரு தினம்-ஒரு நாள், உவணன்-கருடன், பங்கம் உற்று-வெட்கமடைந்து, ஆட்பட்டிடும் திறம் வினவ-அடிமைப்பட்டிருக்குங் காரணம் கேட்ப, பயந்தவள்-பெற்றெடுத்த வினதை, நிகழ்வு எலாம்-நடந்த விருத்தாந்தங்களையெல்லாம், பணித்தாள்-(அவனிடம்) கூறினாள்; (எ-று).

இது முதல் பன்னிரண்டு கவிகள்-எழுசீராசிரிய விருத்தம்.

பங்கம்-அவமானம், வெட்கம்: ஒருநாள் வினதை கத்ருவையும் கருடன் சர்ப்பங்களையும் சுமந்து ரமணீயகத் தீவை யடைந்ததும், அந்தக் கருடனைப் பார்த்து நாகங்கள் "இதைவிட அழகாயும் தெளிந்த ஜலமுள்ளதாயுமிருக்கிற மற்றொரு தீவுக்குக் கொண்டு போ" என்று ஏவியதால் ஆகியது. நிகழ்வு-மாற்றாளாகிய கத்ரு தன் பிள்ளைகளைக் கொண்டு கெட்ட உபாயத்தினால் மோசஞ் செய்து பந்தயத்தைப் பொய்யாகவென்று தன்னையடிமைப் படுத்தியமை. (21)

22. கருடன் நாகங்களை நோக்கி அடிமையினின்று விமோசனம் கேட்டல்.

கேட்டடல் உவணன் சிற்றனைச் சுதரைக்
கேட்டிடும் பொருள்களியா தெனினும்
ஈட்டிவந் தளிப்பல் ஏவல்செய் என்தாய்
இடர்தவிர்த் திடுமென விண்ணோர்

நாட்டமு தளித்திடில் அகற்றுதும் என்ன
நன்றிசைந் தனைக்கிவை புகன்று
வாட்டுமென் பசிக்கே துண்டியென் றந்தை
வதிவதெங் கெனவவள் வகுப்பாள்.

(இ-ள்). கேட்டு-தாய் [வினதை] சொன்னதைக் கேட்டு, அடல்-வலிமையையுடைய, உவணன்-கருடன், சிற்றனை சுதரை-சிறிய தாயாகிய கத்துருவின் புத்திரர்களாகிய நாகர்களை நோக்கி, "கேட்டிடும்-நீங்கள் விரும்பிக் கேட்கின்ற, பொருள்கள் யாது எனினும்-

பொருள்கள் எதுவாயிருந்தாலும், ஈட்டி வந்து அளிப்பல்-திரட்டிக்கொணர்ந்து கொடுப்பேன்: ஏவல் செய்-கட்டளையிடுங்கள்; என் தாய் இடர் தவிர்த்திடும்-என் தாயின் அடிமைத் துன்பத்தை நீக்கி விடும்", என-என்று பிரார்த்திக்க, [அந்நாகர்கள்] "விண்ணோர் நாட்டு-தேவலோகத்திலுள்ள, அமுது அளித்திடில்-தேவாமிர்தத்தைக் கொணர்ந்து கொடுப்பாயாயின், அகற்றுதும்-உங்கள் அடிமையைப் போக்கிடுவோம்", என்ன-என்று சொல்ல, நன்று இசைந்து-[கருடன் அதற்கு]மிகவும் உடன்பட்டு, அனைக்கு இவை புகன்று-தாய்க்கு இதனைக் கூறி, [அவளை நோக்கி] "வாட்டும் என் பசிக்கு-வருத்துகின்ற எனது பெரும்பசிக்கு, உண்டி ஏது-எது உணவு? (மேலும்) என் தந்தை-என் தகப்பனர், வதிவது-வசிப்பது, எங்கு-எவ்விடத்து", என-என்று வினவ, அவள் வகுப்பாள்-வினதை கூறுபவளானாள்; (எ-று).

அனை-அன்னை; தொகுத்தல். (22)

23. வினவிய மைந்தனுக்கு வினதை கூறுதல்.

மைந்தகேள் கந்த மாதன விலங்கல்
வயின்றவ முந்தைசெய் குவனின்
தொந்திவெம் பசிக்கார் கலிமருங் கெயினர்
துன்னினர் அவரைமாந் திடையில்

அந்தண ருளரேல் அழலுநெஞ் சஃதோர்ந்
தகற்றிமற் றவரையுண் டமுதந்
தந்தருள் எனக்கேட் டுவணனுங் கணுகிச்
சவரர்தங் குழுவெலா முண்டான்.

(இ-ள்). மைந்த-பிள்ளையே! கேள்-கேட்பாயாக: உந்தை-உன் தந்தையாகிய காசிப முனிவன், கந்தமாதன விலங்கல் வயின்-கந்தமாதன பர்வதத்தினிடத்து, தவம் செய்குவன்-தவஞ் செய்து கொண்டிருப்பர்; நின்-உனது, தொந்தி வெம்பசிக்கு-வயிற்றுக் கொடியபசிக்கு (உணவாக), ஆர்கலிமருங்கு-சமுத்திரத்தினிடத்து, எயினர்-[வேடர் சேரியில்] வேடர்கள், துன்னினர்-கூடியுள்ளனர்; அவரை மாந்தி-அவர்களையுட் கொண்டு, இடையில்-(அவர்கள்) நடுவிலே, அந்தணர் உளரேல்-பிராமணர்கள் அகப்பட்டுக்கொள்வாரானால், (அவர்களை உட்கொள்ளாதிருத்தற்கு முற்குறியாக)

நெஞ்சு அழலும்-உன் நெஞ்சில் எரிகின்ற தணல் போற்சுடும்: அ:.து ஓர்ந்து அகற்றி-அந்த அறிகுறியால் அறிந்து (அந்தணரை உட்கொள்வதை) விடுத்து, மற்றவரை உண்டு-ஏனையோரைப் பட்சித்து, "அமுதம் தந்தருள்"—எனக்கு (அடிமை நீங்க)த் தேவாமிருதம் கொண்டுவா" எனக் கேட்டு—, உவணன்-கருடன், ஆங்கு-அப்படியே, அணுகி-வேடர் சேரியைக் கிட்டி, சவரர்தம் குழு எலாம் உண்டான்-வேடர் கூட்டங்களனைவரையும் உண்டிட்டான்; (எ-று).

ஈங்கு அறியவேண்டிய விவரம்:—வினதை கருடனை நோக்கி "எந்தக் காரியத்திற்காகவும் நீ பிராமணனை மட்டும் கொல்ல நினையாதே: அவன் அக்னிக்கொப்பானவன்: எந்தப் பிராணிகளும் அவனை வதஞ்செய்தல் தகாது; நீ அவனை அறிந்துகொள்வதற்கு ஒரு அடையாளம் கூறுகிறேன்; எவனை நீ விழுங்கும்போது தொண்டையில் தூண்டில் முள் போவது போலிருக்குமோ, தணலைப்போற் சுடுமோ அவனை உயர்ந்தவனை பிராமணனென்று அறி; கோபம் வந்தபோதிலும் எக்காலத்திலும் நீ பிராமணனைக் கொல்லாதே" என்று புத்திமதி கூறி விடுத்தாள் என்பது. சவரர்-சபரர்: வேடர். (23)

24. கருடன் கந்தமாதனம் சேறல்.

நெஞ்சிடைப் புழுக்கங் காட்டவந் தணனை
நீவெளிப் படுகென அவனோர்
வஞ்சியோ டுவந்து மீண்டனன் கலுழன்
மற்றவர் குலமுழு துண்டும்

விஞ்சிய பசிதீர்ந் திலனெழுந் துயர்ந்தோன்
மேவுறுங் கந்தமா தனஞ்சென்
றஞ்சலித் துரைத்தான் நிகழ்வெலா முனிகேட்
டழுதுகொண் டடைவர மளித்தான்.

(இ-ள்). [வாயைப் பெரிதாகத் திறந்து கொண்டு வேடர் குழுவெலாம் உண்டபோது இடையிலே ஓர் அந்தணன் அகப்பட்டுக்கொள்ளவே] (கருடனது) நெஞ்சிடை புழுக்கம் காட்ட-நெஞ்சிலே தழல்போல் எரிச்சல் எடுக்கவே, [அந்தக் கருடன்], அந்தணனை-[வாயிடை அகப்பட்டுக்கொண்டிருந்த] பிராமணனை,

நீ வெளிப்படுக என-நீ வெளியிலே வந்திடுவாயாக என்று சொல்ல, அவன்-அந்தப் பிராமணன், ஓர் வஞ்சியோடு-[தான் பாரியையாகக் கொண்டிருந்த] ஒரு வேடச்சியோடு, வந்து-[வாயினின்று] வெளிவந்து, மீண்டனன்-திரும்பிப்போயினன்; கலுழன்-(பின்பு) கருடன், மற்றவர்-ஏனையோருடைய, குலம் முழுதும் உண்டும்-குலம் முழுவதையும் உண்ட பின்னரும், விஞ்சிய-மேன்மேல் அதிகரித்த, பசி தீர்ந்திலன்-பசி நீரப்பெறாதவனாய், எழுந்து-ஆகாயத்திற் பறந்தெழுந்து, உயர்ந்தோன்-உயரப் போகுபவனாய், மேவுறும்-பொருந்தியுள்ள, கந்தமாதனம் சென்று-கந்தமாதன பர்வதத்தைச் சென்று அடைந்து, அஞ்சலித்து-(தனது தாதையாகிய காசியபரைக்) கைகூப்பி வணங்கி, உரைத்தான்-எல்லா விவரங்களையும் சொன்னான்; நிகழ்வு எலாம் முனி கேட்டு-அவன் கூறிய நிகழ்ச்சிகளனைத்தையும் காசியப முனிவர் கேட்டு, அமுது கொண்டு அடை வரம்-தேவாமிருதம் கொண்டு திரும்பி வந்து தாயையடையும் வரத்தை, அளித்தான்-கொடுத்தான்; (எ-று).

வஞ்சி-உவமவாகுபெயர். (24)

25-26. இரண்டு கவிகள் ஒரு தொடர்—கருடனுக்குப் பசிக்குணவு இன்னவையெனக் கசியபர் கூறி விடுத்தல்.

25. மீட்டுமச் சிறுவன் பசிக்குண விரப்ப
வேதியன் புகலுமால் புரம்வாழ்
ஈட்டிய நிதியோர் இருவரந் தணரில்
இளவல்முன் னவனைத்தன் பாகங்
கேட்டலு மறுத்துச் சபித்தனன் இபமாய்க்
கிளர்புவி திரிகென வவனும்
காட்டழ றனைப்போற் சிறிமுன் னவனைக்
கச்சப மாகெனச் சபித்தான்.

(இ-ள்.) மீட்டும்-மறுபடியும், அ சிறுவன்-அந்தப் பிள்ளையாகிய கருடன், பசிக்கு உணவு இரப்ப-தன்பசி தணிவதற்கான உணவை வேண்ட, வேதியன்-முனிவராகிய கசியபர், புகலும்-(பின்வருமாறு) கூறுபவரானார்:—புரம் வாழ்-ஒரு நகரத்தில் வாழ்ந்துகொண்டே, ஈட்டிய-திரட்டிச் சேகரித்துவைத்த, நிதியோர்-திரவியங்களையுடையவராகிய, அந்தணர் இருவரில்-இருடிகள் இரண்டுபேரில், இளவல்-தம்பியாகிய சுப்ரதீகன் என்பவன், முன்னவனை-முற்பிறந்த அண்ணனாகிய விபாவசு என்பவனைப் பார்த்து, தன் பாகம் கேட்டலும்-தனக்குச் சொத்திற் சேரவேண்டிய பாகத்தைக் கேட்டவுடன், (அந்த

முன்னவன்) மறுத்து-கொடேன் என மறுத்து, (மேலும்) இளர் புவி-பரந்த பூமியில், இபமாய்-யானையாய், திரிக என-திரிவாயாக என்று, சபித்தனன்-சாபங்கொடுத்தான்: அவனும்-தம்பியாகிய சுப்ரதீகனும், காடு அழல் தனப்போல்-காட்டுத் தீயைப்போலே கனன்று, முன்னவனை-தமையனுகிய விபாவசுவை, சிறி-கோபித்து, கச்சபம் ஆகு என-ஆமை யாவாயாக என, சபித்தான்-சாப மிட்டான்; (எ-று.)

முன்னவன் மறுத்ததற்குக் காரணம்-சகோதரர்கள் பிரித்துக் கொள்வதை யோக்கியர்கள் போற்றுவதில்லை என்பது பற்றி. எனினும் இருவரும் திரவியத்தைப்பற்றிப் புத்தி மயங்கி ஒருவரை யொருவர் சபித்துக்கொண்டு முறையே யானையும் ஆமையும் ஆனார்கள். (25)

26. கருடன் பசிதணிந்து அமிர்தங்கொணர மேற்சேறல்.

எடுத்தமா றுருவ மிகல்விடா தாழி
யிடையமர் புரியுமங் கவரை
உடுத்தநின் பசிக்குண் டிடுகென அவனும்
அத்தனுத் தரப்படி யருந்தித்

திடத்துடன் அமிர்தங் கொணர்ந்திடு வான்மேற்
சேறலுந் துன்னிமித் தங்கள்
கொடுத்தலால் மகவான் யாதிதென் றுசான்
கூறிடக் கலுழன்மாண் புணர்ந்தான்.

(இ-ள்.) எடுத்த மாறு உருவம்-சாபத்தால் மேற்கொண்ட மாற்றுருவத்தோடு யானையும் ஆமையுமாய், ஆழியிடை-சமுத்திரத்தினிடையில், இகல் விடாது-பகைமையை விட்டிடாமல், அமர் புரியும்-போர் செய்யும், அங்கு அவரை-அவ்விடத்து அவ்விருவரையும், உடுத்த நின் பசிக்கு-ஏற்பட்டுள்ள உனது பெரும்பசிக்கு, உண்டிடுக என-உணவாகச் சாப்பிடுவாயாக என்று கசியபர் கூற, அவனும்-அக்கருடனும், அத்தன் உத்தரப் படி-தந்தையாகிய அவரின் மறுமொழிப்படியே, அருந்தி-இருவரையும் சாப்பிட்டு(ப் பசிதணிந்து),— திடத்துடன்-பெற்ற வலிமையுடன், அமிர்தம் கொணர்ந்திடுவான்-அமிருதத்தைக் கொண்டுவரும்பொருட்டு, மேற்சேறலும்-மேலே [தேவலோகத்தை நோக்கி] விரைதலும், மகவான்-[தேவலோகத்து அதிபனுகிய] இந்திரன், துர் நிமித்தங்கள்-அபசகுனங்கள், கொடுத்தலால்-

ஏற்பட்டமையால், இது யாது என்று-இஃது எக்காரணம் பற்றி என்று கேட்க, ஆசான்-தேவகுருவாகிய பிருஹஸ்பதியானவர், கூறிட-கருடன் அமிருதங்கொண்டுபோக வந்திருப்பதையறிந்து சொல்ல, (அந்த இந்திரன்) கலுழன்-கருடனின், மாண்பு-பெருமை களையும் பராக்கிரமங்களையும், உணர்ந்தான்-தெரிந்துகொண் டான்; (எ-று.)

மூதனூலின்படி, ஏரியிடை அமர்புரிந்தனர் என்பது பெறப் படும். ஏற்பட்ட துன்னிமித்தங்களிற் சில:—இந்திரனுடைய வச்சிராயுதம் பயத்தினால் நடுங்குதல், தேவகணத்தாரின் ஆயுதங் கள் ஒன்றையொன்று மீடித்தல், மேகமில்லாமலே ஆகாயத்தில் பெருமுழக்கமுண்டாதல், எரிகொள்ளிகள் ஆயிரக்கணக்காக விழுதல், இரத்தமழை பொழிதல் போல்வன. மகவான்-ஆயிரம் யாகங்களைச் செய்தவன் என்ற காரணம் பற்றி இந்திரனுக்கு வழங்கும்; மகம்-யாகம். ஆசான்-பிருஹஸ்பதி, அவர் கூறியவை:— "பஷ்ராஜ்ன் பலவான்களுக்கெல்லாம் சிறந்தவன்: அமிர்தத் தைக் கொண்டுபோவதற்குச் சமர்த்தன்; அவன் சாதிக்கக் கூடாதது எதுவுமில்லை" என்பன. கருடனின் மாண்பு உணர்ந்தது —தேவவீரர்களை அமுத கலசத்தைப் பத்திரமாகக் காப்பதற்காக ஆணையிடுதற்கு. (26)

27. இந்திரன் போர்புரியவும் கலுழன் தடுத்தல்.

காவல்செய் தமுதைக் கடவுள ருடன்விண்
காவல னமர்குறித் திருந்தான்
தூவியின் வளியாற் றுகள்பட வரைகள்
சுவறிடக் கடல்புவி யணிய

மேவிய வுவணன் றன்மிசை மகவான்
விண்ணவ ரியக்கரோ டளவில்
தாவுறும் படைக ளேவிபோர் புரிந்தான்
தன்சிறை யாலவன் தடுத்தான்.

(இ-ள்.) அமுதை-தேவாமிருத கலசத்தை, காவல் செய்து-மிகவும் பத்திரப்படுத்தி, விண்காவலன்-தேவேந்திரன், கடவுள ருடன்-தேவவீரர்களுடன், அமர்குறித்து-போரை எதிர்பார்த்து, இருந்தான்-, (அப்போது) தூவியின் வளியால்-தனது சிறகு களினின்றெழுந்த காற்றினால், வரைகள் துகள்பட-மலைகள் புழுதி யாக, கடல் சுவறிட புவி அணிய-சமுத்திரம் நீர்வற்றிப்போய்ப்

பூமியைப்போல் தரையாக, மேவிய-விரைந்துவந்த, உவணன் தன் மிசை-கருடனின்மேல் எதிர்த்து, மகவான்-இந்திரன், விண்ணவர் இயக்கரோடு-தேவர்கள் யக்ஷர்களோடு கூடி, அளவு இல்-கணக் கில்லாத, தா உறும்-தாவிப்பாயும், படைகள் ஏவி-ஆயுதங்களைச் செலுத்தி, போர்புரிந்தான்-சண்டையிட்டான் : (ஆனால் அவை யனைத்தையும்) அவன்-அந்தக் கருடன், தன் சிறையால்-தன் வலிய சிறகுகளால், தடுத்தான்-(தன்னை யூறுபடுத்தாதபடி) தடுத்துப் பயனிலவாக்கினன்; (எ-று.)

புவி அணிய-பூமிபோல் தோற்ற என்றபடி: எனவே தரை யாகும்படி என்க. (27)

28. கருடன் பல இடையூறுகளையும் வென்று அமுத கலசம் எடுத்தல்.

செலுத்துமப் படைகள் துகள்பட விண்ணோர்
சிறைவளிக் குடைந்தனர் அமுதின்
தலத்தடைந் துடுத்த தழலினை நதிநீர்
தன்னையுண் டுமிழ்ந்தவித் தப்பால்

நிலைத்திடா துழலுஞ் சக்கரங் கடந்து
நீளரா விரண்டையுங் கிழித்துப்
பலித்திட வமுதின் கலசங்கொ டெழுந்தான்
பார்த்ததைப் பொறுதுள மகவான்.

(இ-ள்.) செலுத்தும் அ படைகள்-இந்திரனுள்ளிட்ட தேவ வீரர்கள் விடுத்த அப்படைக்கலங்கள் யாவும், துகள்பட-தூளாகிப் பொடிபட, விண்ணோர்-தேவர்கள், சிறை வளிக்கு-அதன் சிறகுகளினால் எழுப்பப்பட்ட காற்றினுக்கு ஆற்றாது, உடைந்தனர்-ஓடியிரிந்தனர்; [பின்னர்க் கருடன்] அமுதின் தலத்து அடைந்து-அமுத கலசம் வைத்திருந்த இடத்தை நெருங்கி, உடுத்த-அதனை நாற்புறமும் சுற்றியிருந்த, தழலினை-அக்னியை, நதிநீர் தன்னை உண்டு-[எண்ணாயிரத்து நூறு வாய்களை யெடுத்துக்கொண்டு அந்த வாய்களினால்] நதிகளின் நீரினைக் குடித்துவந்து, உமிழ்ந்து-அவற்றை அந்த அக்கினிமேல் உமிழ்ந்து, அவித்து-அதனை அவியச்செய்து, அப்பால்-அதற்கும் மேலேபோய், நிலைத்திடாது உழலும்-ஒரு நிலையில் நில்லாமல் (வேகமாகச்) சுற்றிக்கொண்டேயிருக்கின்ற, சக்கரம் கடந்து-யந்திரமாகிய இருப்புச் சக்கரத்தை [அதன் ஆரக்கால்களின் சந்தினில் உடலைக்

குறுக்கிக்கொண்டு ஒரு கொடியினில்] நுழைந்து தாண்டி, [பின்] நீள் அரா இரண்டையும் கிழித்து-(இமை கொட்டாமல் காத்திருந்த) நீண்ட இரண்டு மஹா ஸர்ப்பங்களையும் துணித்துக் கிழிபடச் செய்து, (கடைசியில்) பலித்திட-[எடுத்துக்கொண்ட முயற்சி] பலனுறும்படி நிறைவேற, அமுதின் கலசம் கொடு-அமுத கலசத்தோடு, எழுந்தான்-உயர எழுந்தான்; அதை பார்த்து-அந்தச் செயலைக் கண்டு, மகவான்-இந்திரன், உளம் பொறுது-மனம் பொறுமல்; (எ-று.) ''வச்சிரந்தனை யுய்த்தனன்'' என மேலிற் கவியோடு தொடரும். (28)

29. இந்திரன் அஞ்சி விஷ்ணுவை நினைத்தல்: அவர் கருடனுக்கு ஈந்த வரங்கள்.

வச்சிரந் தனையுய்த் தனனஃ துவணன்
மயிரிலொன் றுகுத்திட அவனும்
மெச்சிய முனிவ னென்பென வுகுத்தேன்
விடுபடைக் குகுத்தில னெனக்கேட்

டச்சமுற் றரியை அமரர்கோன் நினைந்தான்
அவனடைந் துவணனைப் புகழா
நச்சிய வரந்தந் துர்தியும் கொடியும்
நமக்குநீ யாகென விசைத்தான்.

(இ-ள்.) (இந்திரன்) வச்சிரம் தனை உய்த்தனன்-தனது வலிய வச்சிராயுதத்தை (க்கருடன் மேற்) செலுத்தினன்; அஃது-அந்த வச்சிரப்படை, உவணன் மயிரில் ஒன்று உகுத்திட-கருடனுடைய உடம்பிலுள்ள ஒரு உரோமத்தை வீழச்செய்ய, அவனும்-அந்தக் கருடனும், மெச்சி-பாராட்டி, அ முனிவன் என்பு என-அந்தத் ததீசிமுனிவரின் முதுகெலும்பாதலின் (அதற்கு மரியாதை செலுத்த வேண்டும்) என்று, உகுத்தேன்-(ஒருமயிரினைக்) கீழ் வீழச்செய்தேன்: விடு படைக்கு-நீ விட்ட படைக்குத் தோற்று, உகுத்திலன்- (அந்த ஒரு மயிரினை) வீழச்செய்தவனில்லை, என கேட்டு-என்று (கருடன்) சொல்லக்கேட்டு, அமரர்கோன்-தேவேந்திரன், அச்சம் உற்று-பயந்து, அரியை-மகாவிஷ்ணுவை, நினைந்தான்-தியானித்தான்; அவன்-அந்த மகாவிஷ்ணு, அடைந்து-வந்து சேர்ந்து, உவணனை-கருடனை, புகழா-புகழ்ந்து, நச்சிய-அவன் விரும்பிய, வரம் தந்து-வரங்களைக்கொடுத்து, நமக்கு-, நீ-,

ஊர்தியும் கொடியும்-வாகனமும் கொடியும் ஆக, ஆகு என-ஆவாய் என, இசைத்தான்-சொல்லி அப்பெருமைகளை யீந்தான்; (எ-று).

கருடன் நச்சிய வரங்கள் இரண்டு:- "உமக்கு மேலே நான் இருக்க வேண்டும்" என்பது ஒன்று. [எனவே, கொடியாகக் கொண்டது] "நான் அமிர்தம் உண்ணுமலே ஜரையும் மரணமும் இல்லாமல் இருக்கவேண்டும்" என்பது மற்றொன்று. முனிவன் என்பு என்றவிடத்து அறியவேண்டுவது-இந்திரன் விருத்திராசுரனைக் கொல்வதற்காகத் ததீசிமுனிவரின் முதுகெலும்பை யாசிக்க அவர் இந்திரனுக்கு வச்சிராயுதத்துக்காக அதனைக்கொடுத்தார் என்பது. புகழா-உடன்பாட்டு வினையெச்சம். ஆகு-[இங்கே] ஏவல் வினைமுற்று. (29)

30. இந்திரன் கருடனுக்குச் சிநேகிதனாகி வரம் ஈதல்.

கருடனுக் கிமையோர் காவலன் புகல்வான்
காசிபன் குமராயா மதனுல்
இருவருந் துணைவ ராகுநின் வாய்மை
யிழிவுரு தன்னையை மீட்பாய்

உரகருக் கமுதிந் திடாதொரு வயினிட்
டொப்புத்தந் திடுகயான் கவர்வல்
விரசிதே யெனவவ் வணமிசைந் தரவை
விழுங்கவாங் கவன்வரம் பெற்றுன்.

(இ-ள்.) கருடனுக்கு-, இமையோர் காவலன்-தேவேந்திரன், புகல்வான் - கூறத்தொடங்கினன்; காசிபன் குமரா - காசியப முனிவன் குமரன் நீ; அதனுல்-, யாம் இருவரும்-நாம் இரண்டு பேரும், துணைவராகும்-(இனிமுதல்) சிநேகிதராவோம்; நின் வாய்மை இழிவுரு-நீ சொன்ன சொல் தவருதபடி, அன்னையை-தாயாகிய வினதையை, மீட்பாய்-அடிமையினின்று விடுவிப்பாய்; (அதே சமயத்தில்) உரகருக்கு-நாகர்களுக்கு, அமுது ஈந்திடாது-தேவாமிருதத்தைக் கொடுக்காதபடி, ஒரு வயின் இட்டு-ஓரிடத்தில் வைத்திட்டு, ஒப்பு தந்திடுக-"நான் வைத்தபின் நீர் அமிருதத்தை எடுத்துக்கொள்ளும்" என்று எனக்கு எடுத்துக்கொள்ளும் விஷயத்தில் உடன்பாடு கொடுத்திடுக: யான் கவர்வல்விரசிதே-யான் எடுத்துப்போதல் நிர்ணயிக்கப்பட்டதே, என-என்று இந்திரன் சொல்ல, அ வணம் இசைந்து-(கருடனும்) அவ்வண்ணமே ஒப்புத்

தந்து, (பின் அவ்விந்திரனிடம்) அரவை விழுங்க-நாகங்களைப் புசிக்க, ஆங்கு-அப்போது, அவன்-அக்கருடன். வரம் பெற்றான்—: (எ-று).

கருடன் இந்திரனைக் கேட்டவரம்:-"மிகுந்த வலிமையுள்ள ஸர்ப்பங்கள் எனக்கு ஆகாரமாகக் கடவன" என்பது. அவனும் அப்படியே வரம் ஈந்தான். 'உரகருக்கு அமுது ஈந்திடாது ஒப்புத் தந்திடுக' என்று இந்திரன் கேட்டதற்குக் காரணம் என்னை யெனில்—இந்த அமிருதத்தை யாருக்குக்கொடுப்பாரோ அவர்கள் தேவர்களாகிய தங்களைப் பிடிப்பார்கள்"என்ற பீதி பற்றி இவை, ஈங்கு அறிய வேண்டிய விவரங்கள். விரசிதம் - முன்னரே முடிவானதே என்றபடி. (30)

31. கருடன் தாயின் அடிமை நீக்கலும் நாகர் நாக்குக்கள் இருபிளவாயினமையும் கூறல்.

மேகவண் ணனுந்தன் தாலமுற வயினன்
விடபறந் தொல்லைவந் தமுதை
நாகரைச் சுசியா யருந்தவான் குசையின்
நாப்பண்வைத் தாயைமீட் டகன்றான்

போகிவந் தமுதைக் கவர்ந்துவான் புகுந்தான்
புனற்படிந் தெய்திகாண் கிலராய்
ஆகுலத் துடன்மா சுணர்குசை நீவி
யன்றுநா விரண்டுபெற் றனரே.

(இ-ள்.) மேகவண்ணனும்-மகாவிஷ்ணுவும், தன் தாலம் உற-தன் உலகம் புக, வயினன்-கருடன், விட-(இந்திரன், விஷ்ணு இவர்கள்) விடைகொடுப்ப, பறந்து-, ஒல்லைவந்து-விரைவிலே வந்து,—நாகரை-சர்ப்பங்களை, சுசியாய் அருந்த-பரிசுத்தமாய் உட்கொள்ளும்படி, அமுதை-அமுத கலசத்தை, குசையின் நாப்பண் வைத்து-தருப்பைகளின் மத்தியில் வைத்து, ஆயை மீட்டு-தன் தாயை அடிமையினின்று மீட்டு, அகன்றான்-போயினன்; (அவன் போன சமயம்பார்த்து), போகி வந்து-இந்திரன் வந்து, அமுதைக் கவர்ந்து-அமுத கலசத்தை எடுத்துக் கொண்டு, வான் புகுந்தான்-தேவலோகம் போய்ச்சேர்ந்தான்; மாசுணர்-நாகர்கள், புனல்படிந்து-ஸ்நானம் செய்துவிட்டு, எய்தி-[அமுதகலசமிருந்த இடத்தை] அடைந்து, காண்கிலராய்-கலசத்தைக் காணப்பெறாதவராய், ஆகுலத்துடன்-மிக்க வருத்தத்துடன்,

குசை நீவி-(அமிருதம் இருந்த இடம் என்று) தருப்பங்களை நக்கித் தடவி, அன்று-அப்போதிருந்து, நா-தமது நாக்குக்கள், இரண்டு பெற்றனர்-இரண்டாகப் பிளக்கப்பட்டனர்; (எ-று.)

பாம்புகள் இரட்டை நாவுள்ளவைகளாக இருப்பதற்கு ஏது கூறப்பட்டது என்க. தாலம்-உலகம்: 'தாலம் பதினைலும்' (அரிச். பு. நாட், 9) ஒல்லை-விரைவு குறிக்கும் இடைச்சொல். சுசி-சுத்தம். தருப்பை பவித்திரம் செய்வது கண்கூடு; [பவித்திரம்-பரிசுத்தம்]: ஆய்-தாய். போகி-இந்திரன். குசை-தருப்பை. (31)

32. ஆதிசேடன் பூமி தாங்குதலும் வாசுகி முதலோர் அயர்வுறுதலும் கூறும்.

தருப்பையும் புனித மாய்தவ வமுதங்
தாங்கலால் வயினன்மா தவற்கு
விருப்புடன் கொடியு மூர்தியு மாகி
மேவின னிளைஞர்தங் கொடுமை

சரிப்படா தாதி சேடன்மே ருவின்பாற்
றவம்புரிந் தயனருள் வரத்தால்
தரைப்பொறை சுமந்தான் வாசுகி முதலோர்
தாய்சபித் தலுக்கய ருறுநாள்.

(இ-ள்). தவ அமுதம் தாங்கலால்-சிரேட்டமான தேவாமிர்த கலசத்தைத் தாங்கியிருந்தமையால், தருப்பையும் - (அக்கலசம் வைக்கப்பட்ட) தருப்பைப் புற்களும், புனிதமாய்-பரிசுத்தமாகும் படி செய்து, வயினன்-கருடன், மாதவற்கு-மகாவிஷ்ணுவுக்கு, விருப்புடன்-மகிழ்ச்சியுடன், கொடியும்-, ஊர்தியும்-வாகனமும், ஆகி-, மேவினன்-தன் இருப்பிடம் சேர்ந்தான்: ஆதிசேடன்-(சர்ப்பங்களுக்குள் முதலில் பிறந்த) ஆதிசேஷன், இளைஞர்தம் கொடுமை சரிப்படாது-தனது தம்பியராகிய ஏனைய நாகர்களின் உபத்திரவம் சகிக்க முடியாமல், மேருவின்பால்-மேருமலையிடத்துச் சென்று, தவம் புரிந்து-கடுந்தவம் மேற்கொண்டு, (பின்) அயன் அருள்வரத்தால்-(அவன்முன் தோன்றிய) பிரமதேவன் கிருபையோடு கொடுத்த வரத்தினால், தரை பொறை சுமந்தான்-பூமியைக் (கீழிருந்து) அசையாமல் பாரம் தாங்கும்படி சுமக்கலானான்: வாசுகி முதலோர்-(ஆதிசேடனுக்குப் பின் பிறந்த) வாசுகி முதலிட்ட நாகர்கள், தாய் சபித்தலுக்கு-தாயாகிய கத்துரு இட்ட சாபத்துக்கு (அஞ்சி), அயர்வு உறுநாள்-சோர்ந்து கிடக்கும் நாளில்; (எ-று).

முதலடியில்-அமிர்தம் பட்டதினால் அந்தத் தர்ப்பங்கள் பரிசுத்தமாயினஎன்பது கூறப்பட்டது. இப்போதும் தருப்பைகள் பரிசுத்தங் குறிப்பன உணர்க. இளைஞர் செய்த கொடுமையாவது-தமது புத்திக் குறைவினால் ஒருவரையொருவர் விரோதியாக நினைத்து எப்போதும் பொருமைப்படுதல்; பெரிய தாயாகிய வினதையிடத்தும் அவள் பிள்ளையாகிய கருடனிடத்தும் எப்போதும் துவேஷம் கொண்டிருத்தல் போல்வன. சரிப்படாது என்பதால் பெறவைப்பது-ஆதிசேடன் "நான் தவஞ்செய்து மற்றொரு ஜன்மத்திலும் எனக்கு அவர்களுடன் சம்பந்தம் இல்லாமலிருக்கும்படி இந்தத்தேகத்தை விட்டுவிடப்போகிறேன்", என்ற நிலைக்கு வந்தமை. வாசுகியை எடுத்துக் கூறியதற்குக் காரணம்-நாகங்கள் அவனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்து அரசு ஆக்கினமையால் என்க. தாய் சாபம்-ஜனமேஜயன் செய்யும் யாகத்தில் அக்னியால் தகிக்கப்படுதல். (32)

33-36—சரத்காரு விருத்தாந்தமும் ஆஸ்திகன் பிறப்பும் கூறுதல்.

நான்கு கவிகள்—ஒரு தொடர்.

33. ஜரத்காரு முனிவன் உரகரைச் சார்தலும், அயன் தேவர்களுக்குக் கூறினமையும்.

முக்கணனை யனையசரத் காரு வென்னும்
முனிபிதுர்க் கள்அளறொரீஇ முத்தி சேர்வான்
தக்கமணம் புரிதரத்தன் பேர்கொள் தோகை
தனைநேடி யுரகர்வயின் சார்ந்தான் மற்றோர்

புக்குமுனிச் செயல்வினவி தம்மி லாயும்
போதொருவன் அறையுமயன் புடைபுக் கும்பர்
இக்குமொழி சாபத்தா லுரகர் யாரும்
இறவாமல் வரங்கேட்ப இறைவன் சொல்வான்.

(இ-ள்). முக்கணனை அனைய-சிவபிரானையொத்த, சரத்காரு என்னும் முனி-ஜரத்காருவென்னும் மஹரிஷி, பிதுர்க்கள்-தமது பிதுர்க்களாகிய மூதாதையர், அளறு-நரகத்தில் வீழாது, ஓரீஇ-அகன்ன விட்டு நீங்கி, முத்தி-மோட்சத்தை, சேர்வான்-(அவர்கள்) அடையும்பொருட்டு, (தான்) தக்க மணம் புரிதர-தகுந்த விவாஹத்தைச் செய்து கொண்டு சந்ததியை உண்டுபண்ண எண்ணி, தன் பேர் கொள் தோகை தனை நேடி-தன் பேராகிய ஜரத்காரு

என்ற பேரையே கொண்ட பெண்ணைத் தேடிக்கொண்டு, உரகர் வயின்-நாகர்களிடத்து, சார்ந்தான்-வந்து சேர்ந்தான்; மற்றோர்-அந்த நாகர்கள், புக்கு முனி செயல் வினவி-தம்மிடைப் புகுந்த ஜரத்காரு முனிவனின் காரியத்தைப் பற்றி வினவி, தம்மில் ஆயும் போது–தமக்குள்ளேயே ஆராயும்போது, ஒருவன்-அந்த நாகர் களில் ஒருவனுகிய ஏலாபத்ரன் என்பவன், அறையும்–[பின் வருமாறு] கூறலானுன்; உம்பர்-தேவர்கள், அயன்புடை புக்கு-பிரமதேவரிடம் நெருங்கி, இக்குமொழி-கரும்பு போல் பேசும் கத்துருவின், சாபத்தால்-, உரகர் யாரும்-நாகபுத்திரர்கள் யாரும், இறவாமல்-சாகாமல் இருக்கும்படி, வரம் கேட்ப-வரத்தைக் கேட்ப, இறைவன்-பிரமதேவன், சொல்வான்-(அத்தேவர்களை நோக்கிச்) சொன்னுன்; (எ-று). அயன் கூறியதை மேலிற்கவியிற் காண்க.—இது முதல் ஐந்து கவிகள்—எண்சீராசிரிய விருத்தம்.

ஜரத் காரு:—ஜரத்–கெடுவது, காரு-துன்பத்தைச் செய்வது, எனவே, சரீரமாயிற்று. வைராக்கியத்தினுலே உக்கிரமான தவத்தை மேற்கொண்டு தமது சரீரத்தைக்குறைத்தவராகவினுலே இந்த முனிவர்க்கு ஜரத்காரு எனப் பெயராயிற்று. [வாசுகி என்னும் நாகராஜாவின் சகோதரிக்கும் இதே பெயர்தான்: அவளும் கடுந் தவத்தினுலேயே ஜரத்காரு என்று பெயர் பெற்ருள்; இவளுத்தான் அந்த முனிவன் மணம்புரிந்து கொள்கிருன்].

வஞ்யிலிருந்த எலியினுல் வேர் அரிக்கப்பட்டுப் பலமில்லாமற் போன விலாமிச்சம் வைக்கோலைப் பிடித்துத் தலைகீழாகத் தொங் கிக்கொண்டிருந்த தன் பித்ருக்களைக் கண்டு அவர்கள் சொற் படியே தன் பெயருள்ள நாககன்னிகையை மணந்து கொண்டான் என்பது ஈண்டு அறிய வேண்டிய விவரம். இவருடைய மணம் குறித்து ஆயும்போது வாசுகி என்னும் நாகராஜனை நோக்கி "உன் சகோதரியை இவருக்குக் கொடுக்கலாம்" என்று கூறினவன் ஏலாபத்ரன் என்னும் நாகனுவன்: அவன் தாயார் சாபங் கொடுத்தவுடனே பயத்தினுல் அவள் மடியிலேயுட்கார்ந்து கொண்டான். அங்கிருந்தே அவன் தேவர்களுக்கு அயன் சொன்ன வரத்தைக் கேட்டுக்கொண்டிருந்தவன். அயன் சொன்னதாவது:- "அந்த ஜரத்காரு என்னும் முனிச்சிரேட்டர் தம் பெயருள்ள ஜரத்காருவென்ற அந்த நாககன்னிகையினிடத்தில் ஒரு புத்திரனை யுண்டாக்கப் போகிருர்; அவன் வேதங்களிலும் வேதாங்கங் களிலும் கரைகண்டவனுகி நாகர்களின் பயத்தை நிவிர்த்தி செய்யப்போகிருன்" என்பது.

ஒருவன்-ஏலாபத்ரன். அறையும்-செய்யுமென் முற்று ஆண் பாலுக்கு வந்தது. மொழி-மொழியினையுடையாளுக்கு ஆகுபெயர்; இக்கு மொழி-அடையடுத்த ஆகுபெயர். (33)

34. ஜரத்காரு முனிவர்க்கு ஜரத்காரு கன்னிகையை மணம் புரிவித்தல் கூறும்.

அன்னவரோ டுதித்தவளே அவள்பேர் தூயோர்க்
களிக்கிலொரு மகன்றோன்றி யவர்தஞ் சாபந்
தன்னையகற் றிடும்போமென் றுரைத்த தாயோர்
தனிமொழிகேட் டனள்கனவிற் கரியா யின்று

மன்னுபெய ரொன்றுய ததனு லீதல்
வழக்கெனமா முனிக்குரகர் மணஞ்செய் தீந்தார்
பின்னுதகச் சரத்காரு தன்னை யன்னோன்
பேதையொடும் விபினம்போய்ப் பேச லுற்றான்.

(இ-ள்) அன்னவரோடு உதித்தவளே-அந்த நாகர்களோடு தங்கையாக உதித்த ஜரத்காருவை, அவள் பேர் தூயோர்க்கு அளிக்கில்-அவளது பெயரையே கொண்டுள்ள சிரேட்டர்க்கு மணஞ் செய்து கொடுக்கில், ஒரு மகன் தோன்றி-அவளிடத்து ஒரு பிள்ளையுதித்து, அவர்தம் சாபம் தன்னை அகற்றிடும்-அந்த நாகபுத்திரர்களுக்குத் தாயினுல் கொடுக்கப்பட்ட சாபத்தைப் போக்கிவிடுவன்: போம்-[அப்போது அந்தச்சாபம் போகும்] தேவர்கள் ஆகிய நீங்களும் போங்கள், என்று உரைத்த-என்று (அயனுல்) சொல்லப்பட்டதாகிய, ஓர் தனி மொழி-ஒரு ஒப்பற்ற சாபவிமோசன வார்த்தையை, தாய்-நமது தாகிய கத்துரு, கனவில் கரியாய்-தனது கனவுக்குச் சான்றாக, கேட்டனள்-, (என்று ஏலாபத்ரன் கூறியதோடு), [மேலும்) இன்று-இப்போது, மன்னு-பொருந்திய, பெயர்-பெயரும், ஒன்றுயது-ஜரத்காரு என்று ஒன்றாகவேயுள்ளது; அதனுல்—, மாமுனிக்கு-சிறந்த இந்த ஜரத்காரு முனிவருக்கு, ஈதல் வழக்கு என-(ஜரத்காரு கன்னிகையை) மணஞ்செய்து கொடுத்தல் முறைமையே என்று சொல்ல, (அந்த ஏலாபத்ரன் சொற்படியே வாசுகியின் சகோதரியாகிய) சரத்காருதன்னை-அந்த ஜரத்காருவை, உரகர்-நாகர்கள், பின்-பின்னர், உதகம்-தாரைவார்த்து, மணம் செய்து-கன்னிகாதானஞ்செய்து விவாஹம் நடத்தி, ஈந்தார்-

கொடுத்தார்கள். அன்னேன்-[பாணிக்கிரகணம் செய்துகொண்ட] அந்த ஜரத்காரு முனிவரும், பேதையொடும்-தன் மனைவியோடும், விபினம்போய்-காட்டினையடைந்து, பேசல் உற்றான்-[அவளை நோக்கிச்] சொல்லத் தொடங்கினன்; (எ-று). அவர் சொன்னதை மேலிற்கவியிற் காண்க.

முதன்முதலிலே பிக்ஷையைப் போலே வாசுகி ஜரத்காருவை முனிவர்க்கு அளிப்பதாக நினைத்திருந்ததுபோக, இப்போது சாஸ்திரோக்தமாக மந்திரத்துடன் அந்தக் கன்னிகையை அந்த முனிவர் பாணிக்கிரகணம் செய்துகொண்டமை கூறப்பட்டது. உதகம்-நீர்: தாரைவார்த்தலைக் குறிப்பது. முதனூலின்படி, அழகியதும் தம் மனத்துக்கு இனியதும் தமக்காக அமைக்கப் பட்டதுமான கிருகத்துக்கு மனைவியோடு புகுந்ததாகக் காண் கிறோம். பின்னர் மனம் வேறுபட்டு விபினஞ் சேர்ந்தமை பெறப்படும். கத்துரு தான் கண்ட கனவின் சான்றாகக் கேட்ட செய்தி-புத்திரர்கள் அனைவரும் யாகத்தில் மாயும்போது தனது பெண்ணாகிய ஜரத்காருவை நீக்கி என்பது. இது அடுத்த சருக்கத்து நான்காம் பாடலால் பெறப்படும். (34)

35. ஜரத்காரு முனிவர் மனம் வேறுபட்டு மனைவியை நீத்தல்.

என்க்குமுனி வுறப்புரிநாள் நின்னை நீங்கி
யேகுவலென் றொருமொழிசாற் றிசைந்த வாழ்நாட்
கனங்குழலாள் துயில்புரியு முனியை யந்திக்
கடன்புரிவா னெழுப்பவவன் கனன்றிங் கென்னை

நினக்கெழுப்பக் கருமம்யா தெனலுஞ் சந்தி
நீபுரிக வெனக்கதிரோ னேர்மு ழுதி
தனக்குறுமோ அறிவழிந்தாய் முன்சொல் வண்ணந்
தணந்திடுவ லெனவெழலுந் தையல் சொல்வாள்.

(இ-ள்). [ஜரத்காரு முனிவர் தன் மனைவியை நோக்கி] எனக்கு —, முனிவு உற புரி நாள்–கோபம் வரும்படி [நீ] செய்கின்ற நாளில், நின்னை நீங்கி-உன்னை விடுத்து, ஏகுவன்-நான் தனியே போய்விடுவேன், என்று —, ஒருமொழி சொற்று-ஒரு வார்த்தை சொல்லி, இசைந்து-அதற்கு உடன்பட்டே, வாழ்நாள்-வாழ்ந்து வந்த நாட்களில் (ஒரு நாள்) கனங்குழலாள்-அடர்ந்த கூந்தலை யுடைய ஜரத்காரு, துயில்புரியும் முனியை-(தனது மடியில் தலை

வைத்துக்கொண்டு) நீத்திரை செய்யும் முனிவரை, அந்திக் கடன் புரிவான் எழுப்ப-சந்தியாவந்தனம் போன்ற கடமைகளைச் செய்ய வேண்டி யெழுப்ப, அவன்-அந்த முனிவர், கனன்று-மிகவும் கோபித்து, 'இங்கு-இப்போது, என்னை-(கணவனுகிய) என்னை, நினக்கு எழுப்ப-நீ எழுப்பும்படி நேர்ந்த, கருமம் யாது-காரியம் என்னை', எனலும்-என்று வினவலும், (அவள்) நீ-நீர், சந்தி புரிக எனஅந்திக் கடன்களை ஆற்றுவீராக என்று சொல்ல, (அம் முனிவன்) நேர் முன்-நான் (இயல்பாக எழுந்து) அந்திக் கடன்களை ஆற்றுதற்கு முன்னே, கதிரோன்-அந்தச் சூரியன், ஆழிதனக்கு-அத்தமனமாவதற்கு மேலைக்கடலில், உறுமோ-போய்ச்சேருவனே? (சேரமாட்டான்: அதாவது, நான் தூங்கும்போது காலந் தவறுமல் சூரியன் அஸ்தமனமாவது முடியாதது என்பது எனக்குத் தெரியும்): அறிவு அழிந்தாய்-உண்மையறிவு (நீ) நீங்கினாய்: முன் சொல் வண்ணம்-முன்னர் நான் கூறியுள்ளபடியே, (இப்போது) தணந்திடுவல்-உன்னை விட்டு நீங்கிடுவேன், என-என்றுசொல்லி, எழலும்-எழுந்தவுடனே, தையல்-அந்தப் பெண் ணாகிய ஜரத்காரு, சொல்வாள்—; (எ.று.) அவள் சொல்லியதை மேற்கவியிற் காண்க.

கணவனுக்குத் தர்மலோபம் வரக்கூடாது என்ற பெரு நோக்கோடு ஜரத்காரு எழுப்பினள் என அறியவேண்டுவது. (35)

36. ஜரத்காரு ஆஸ்திகரைப் பெற்றெடுத்தல்.

சென்றிடினீ யடியேனிங் குய்யு மாறு
செப்புகென நினதகட்டிற் சிவனேர் மைந்தன்
துன்னுகின்றான் அவனளிப்பன் அதுகாறு அன்னை
சூழல்புகுந் திருத்தியெனச் சொற்றுப் போனான்

அன்றவடன் துணைவர்வயின் அடைந்தீ தெல்லாம்
அறைந்துறுகாட் கருமுதிர்வுற் றவள்பா னுகர்
தன்றுயரந் தீர்ப்பானைத் திகப்பேர் மைந்தன்
தானுதித்தான் மாதுலர்கள் தருக்கி லாழ்ந்தார்.

(இ-ள்). நீ-நீர், சென்றிடில்-என்னை நீத்துப் போய்விடுவீ ராஞல், அடியேன்-நான், உய்யும் ஆறு-பிழைக்கின்ற வழி, செப்புக என-சொல்லி யருள்வீராக என்று கேட்ப. (அந்த ஜரத்காரு முனிவன்) நினது அகட்டில்-உனது வயிற்றினில், சிவன் நேர் மைந்தன்-பரமசிவனுக்கு ஒப்பானவோர் பிள்ளை, துன்னு

கின்றுன்-வளர்ந்து வருகின்றுன்; அவன்—, அளிப்பன்-உங்களனை வரையும் காப்பாற்றுவான்: அதுகாறும்-அவன் பிறக்கும் வரை, அன்னை சூழல் புகுந்து-தாயாகிய கத்துருவின் இருப்பிடம்சென்று, இருத்தி-இருப்பாயாக, என சொற்று-என்று சொல்லி, போனன்-போயினன்: அன்று-அன்றைத்தினத்திலிருந்து, அவள்-அந்த ஜரத்காரு, தன் துணைவர் வயின் அடைந்து-தன் சகோதரர் களாகிய வாசுகி முதலியோரைக் கிட்டிச்சேர்ந்து, ஈது எல்லாம் அறைந்து-[தன் கணவர் கூறி விடுத்துச் சென்ற] அனைத்து விருத் தாந்தங்களையும் சொல்லி, உறுநாள்-வாழ்ந்திருந்த நாளில், கரு முதிர்வுற்று-கருப்பம் முதிர்ந்து, அவள் பால்-அவளிடத்து, நாகர் தம் துயரம் தீர்ப்பான்-நாகர்களுடைய துன்பத்தைப் போக்குவதற்காக, ஆத்திகப்பேர் மைந்தன்-ஆஸ்திகன் என்ற பேரையுடைய நாகபுத்திரன், தான் உதித்தான்-பிறந்தான்; மாதுலர்கள்-அவனது மாமன்மார்களாகிய வாசுகி முதலிய நாகர்கள், தருக்கில் ஆழ்ந்தார்-பெருங்களிப்பில் மூழ்கினர்கள்; (எ-று).

தம் தாயிட்ட சாபத்தினின்று காப்பாற்ற மைந்தன் தோன்றி யுள்ளான் என்ற பெருங்களிப்பில் ஆழ்ந்தார்கள் வாசுகி முதலிய நாகர்கள் என்றபடி. (36)

37. உதங்கர் ஜனமேஜயனைச் சர்ப்பயாகம் செய்ய ஏவுதல்.

சீதமதி மரபுதித்த செம்மல்நீ அத்
தீயவர்மாய்ந் திடவேள்வி செய்தி யென்ன
மாதவதீங் கென்வயின்செய் தவர்க டம்மை
மடித்திடயான் அடுத்திடுமோ வகுத்தி யென்ன

தீதகலும் நினதுபிதா வுயிர்மூன் கொண்ட
செயன்மறந்திங் கிஃதுரைத்தாய் செப்பக்
கேண்மோ
பாதகரைச் செகுத்தந்தப் பழிநீ கோடல்
பண்பாமென் றுதங்கமுனி பகர்வ தானன்.

(இ-ள்). [உதங்க முனிவர் ஜனமேஜயனை நோக்கி] சீதம் மதி மரபு உதித்த-குளிர்ச்சி பொருந்திய சந்திரனின் வமிசத்திற் பிறந்த, செம்மல் நீ—சிறந்தவனுவாய் நீ: அ தீயவர் மாய்ந்திட-அந்தத் தக்ஷகன் முதலிய கொடிய நாகர்கள் அழிந்திடுமாறு, வேள்வி செய்தி என்ன-சர்ப்பசத்ரம் என்னும் யாகத்தைச் செய்திடுவாய் என்று சொல்ல, மா தவ!-சிறந்த தவச்சிரேட்ட

ராகிய உதங்கரே! நீங்கு என் வயின் செய்தவர்கள் தம்மை-(ராஜாவாகிய) என்னிடத்துத் தீமை செய்தவர்களை, மடித்திட-அழித்திட, யான்-நான், அடுத்திடுமோ-செய்வது தகுமோ?, வகுத்தி-தெளிவுபடச் சொல்வீராக, என்ன-என்று வினவ, நீது அகலும்-(முதன் முதலாகத்) தீமைகள் உம்மை விட்டு நீங்கும்: (ஏனெனில்) நினது பிதா உயிர் முன் கொண்ட-உனது தந்தை யாகிய பரீட்சித்து மஹாராஜாவின் உயிரைக் கவர்ந்த (தக்ஷ கனின்), செயல் மறந்து-கொடிய செய்கையை மறந்து, இங்கு-இப்போது, இஃது உரைத்தாய்-இப்படிப் பேசினீர்: செப்ப கேண்மோ-(நான் இப்போது) சொல்லப் போவதைக் கேளும்: 'பாதகரைச் செகுத்து-தக்ஷகன் போன்ற நாக பாபிஷ்டர்களைக் கொன்று, அந்தப் பழி-அதனாலேற்படுகின்ற பழிப்பை, நீ கோடல்-நீர் மேற்கொள்ளல், பண்பாம்-(புகழத்தக்க) தக்க செயலேயாகும்', என்று-என்று கூறி, உதங்கமுனி—, பகர்வது ஆனன்-மேலும் கூறலாயினன்; (எ-று.)—அவர் கூறியவற்றை மேலிக் கவிகளிற் காணலாம்.

நீதகலும் நினது பிதா எனக்கொண்டு-தீமைகளில்லாத உன்னுடைய தந்தை என்று பொருள் கூறினுமாம்: பரீட்சித்து தன்னுடைய முப்பாட்டனாராகிய (பிரபிதாமஹராகிய) பாண்டு மகாராஜாவைப் போலவே தன்னுடைய பிரஜைகளை விசேஷமாக ரட்சித்து வந்தார்: எனவே "நீதகலும்" என்றது அவர்க்குப் பொருந்தும். ஒரு ராஜா வேதாத்தியயனஞ் செய்த பிராமணர்கள் பத்துப் பேர்களுக்குச் சமானமென்று மனு கூறியுள்ளார் என்பது நினைக. "பண்பு எனப்படுவது பாடறிந் தொழுகல்" ஆகலின், பழியாகாது, நேரிய செயலேயாகும் என்றபடி. மற்றும் "கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ், களைகட்டதனொடு நேர்" என்றது குறள் நெறியும். (37)

வேறு

38—45. எட்டுக் கவிகள்—ஒரு தொடர்: உதங்கர் பரீட்சித்து மாண்ட வகை கூறி, ஜனமேஜயனைச் சர்ப்பசத்ரயாகம் செய்யத் தூண்டுதல்.

38. பரீட்சித்து சமீகராச்சிரமம் சேர்தல்.

கொற்றவ நினது தந்தை குறுகிகான் விலங்க னேகஞ்
செற்றெரு வேங்கை நாடிச் சென்றதஃ தொளிப்பக் காணன்
நற்றவச் சமிகன் சூழல் நண்ணியிங் குழுவை தானென்
றுற்றிடி லுரைத்தி யென்ன வுரைத்திடா விரதம் பூண்டோன்.

(இ-ள்.) கொற்றவ-அரசனே! நினது தந்தை-உனது தந்தை

யாகிய பரீட்சித்து, கான்குறுகி–காட்டிற்கு வேட்டையாடச் சென்று, அநேகம் விலங்கு செற்று-அநேக மிருகங்களைக் கொன்று, ஒரு வேங்கை நாடி சென்றது அஃது ஒளிப்ப-ஒரு வேங்கைப் புலியைத் தேடிச் செல்ல அது மறைந்து கொள்ள, காணுன்-(அதனைத் தேடியும்) காணுதவனுய், நல் தவம் சமிகன் சூழல் நண்ணி-நல்ல தவத்தைச் செய்து வந்த சமீகர் என்னும் முனிவரின் இருப்பிடத்தைக் கிட்டி, இங்கு-இப்போது இவ்விடத்து, உழுவைதான் ஒன்று உற்றிடில்-ஒரு வேங்கைப்புலி வந்து போயிற்றே, உரைத்தி-கூறுவீராக, என்ன-என்று வினவ, [அம்முனிவர்] உரைத்திடா விரதம் பூண்டோன்-மௌன விரதம் மேற்கொண்டிருந்தான்; (ஆதலின் மறுமாற்றம் கூறவில்லை எனமேல் இயையும்); (எ-று).

சென்றது-அது, பகுதிப்பொருள் விகுதி. பாணத்தால்அடித்த மானைப் பின்தொடர்ந்தான் என்றது முதனூல்.

இது முதல்எட்டுக் கவிகள்—அறுசீராசிரியவிருத்தம். (38)

39. பரீட்சித்து இறந்துபோன சர்ப்பத்தை இருடியின் கழுத்தில் மாட்டியமை.

ஆதலான் முனிவன் ஒன்றும் அறைந்திலன் அண்ணல் சீறி
ஏதமில் இருடி கண்டத் திறந்ததோர் அரவைச் சூட்டி
ஓதுதன் னகரி சார்ந்தான் ஒருமுனி தவத்தோன் மைந்தன்
மாதவச் சிருங்கிக் கீது வகுத்தலும் வெகுண்டு சொல்வான்.

(இ-ள்). ஆதலால்-மௌன விரதம் பூண்டிருத்தலால், முனிவன்-அந்தச் சமீகர், ஒன்றும் அறைந்திலன்-ஒரு பதிலும் சொல்லவில்லை; (இதனைக் கண்ட) அண்ணல்-அரசனுகிய பரீட்சித்து, சீறி-கோபித்து, ஏதம் இல் இருடி கண்டத்து-குற்றமற்ற அந்த ரிஷியின் கழுத்தில், இறந்தது ஓர் அரவை சூட்டி-செத்துக் கிடந்த ஒரு பாம்பைச் சுற்றி விட்டு, ஓதுதன் நகரி சார்ந்தான்-சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற தனது நகராகிய அத்தினபுரத்தைச் சேர்ந்தான்; (அதன் பின்னர்) ஒரு முனி தவத்தோன் மைந்தன்-ஒரு ரிஷிபுத்திரன் கிருசன் என்பவன், மா தவம் சிருங்கிக்கு-சிறந்த தவங்களைச் செய்துள்ள சிருங்கியென்ற [அந்தச் சமீக முனிவரின்] புத்திரனுக்கு, ஈது வகுத்தலும்-அவன் தந்தைக்குச் செய்த தகாத காரியத்தைச் சொல்லுதலும், [அந்தச்

சிருங்கி] வெகுண்டு-மிகவும் கோபித்து, சொல்வான்-(சாபச் சொல்) சொல்பவனுனுன்; (எ-று)—அதனை மேலிற்கவியிற் காண்க.

அண்ணல்-ஆண்பாற் சிறப்புப் பெயர்; இங்கு, இகழ்ச்சி பற்றியதெனலாம். கிருசன் சிருங்கிக்குச் சிநேகிதன்; அவன் சிரித்துக் கொண்டே விவரம் கூறிச் சிருங்கிக்குக் கேட்டவுடனே கோபமுண்டாகும்படி பரபரப்புடன் சொன்னுன் என விவரம் அறிக. வில்லின் முனையினுல் எடுத்து மாட்டினுன் மன்னன். (39)

40. சிருங்கி சாபமிட, அதனைப் பரீட்சித்துக்குச் சமீகர் தெரியப்படுத்துதல்.

தெக்கக னுல்வேந் தேழாந் தினம்படச் சபித்தங் கத்தன்
பக்கமுற் றரவை நீக்கிப் பணித்தலுஞ் சபித்தற் கேளா
தக்கவ னரசை மைந்தன் சபித்தலுக் கயர்வுற் றியார்க்கும்
மிக்கவ னென்றோர் சீடன் விளம்பவேந் தனுக்கீ துய்த்தான்.

(இ-ள்). [கோபித்த சிருங்கி] தெக்கக னுல்-தக்ஷகன் என்ற நாகராஜனுல், வேந்து-பரீட்சித்து மன்னனை, ஏழாம் தினம் பட சபித்து-அன்றிலிருந்து ஏழாம் நாளன்று இறந்து போகும்படி சபித்து, அங்கு-அதன் பின்னர், அத்தன்-தந்தையின், பக்கம் உற்று-பக்கஞ் சார்ந்து, அரவை நீக்கி-(அவர் கழுத்திலிருந்த) பாம்பை எடுத்துப்போகட்டு, பணித்தலும்-தானிட்ட சாபத்தைப் பற்றிக் கூறுதலும், (தந்தையாகிய சமீகர்), சபித்தல் கேளா-(மைந்தனிட்ட) சாபத்தைக் கேட்டு, தக்கவன் அரசை-நல்ல தகுதிகளையுடையவனுகிய மன்னனை, மைந்தன் சபித்தலுக்கு-தமது பிள்ளை சாபமிட்டதற்கு, அயர்வுற்று மனஞ்சோர்ந்து, "யார்க்கும் மிக்கவன்-இந்தப் பரீட்சித்து மன்னவன் அனைவர்க்கும் மேலானவன்" என்று-என்று நினைத்து, (அவன் தன்னைத் தற்காப்புச் செய்துகொள்ள முன்னெச்சரிக்கையாக), வேந்தனுக்கு ஈது விளம்ப-அம்மன்னனுக்கு(த் தன் மைந்தனிட்ட) சாபத்தைப் பற்றிச் சொல்லிவர, ஓர் சீடன்-கௌரமுகர் என்ற தன் சீடனை, உய்த்தான்-(அவனிடம்) அனுப்பினர்; (எ-று.)

கௌரமுகர் என்ற சிஷ்யர் நல்லொழுக்கமுள்ளவரும் பொறுமையுள்ளவரும் ஆவர். கேளா-செய்யா என் னு ம் வாய்பாட்டு உடன்பாட்டெச்சம். உற்றியார்க்கும்-குற்றிய விகரம். (40)

41. பரீட்சித்து தன்னைக் காவல் செய்துகொள்ளவும், தக்ஷகன் வருதல்.

அவனடைந் துரைப்ப வேந்தா ஞாமென வெண்ணி யந்தத்
தவமுனி யுரைத்த வண்ணஞ் சலதிபாற் றறிமேன் மாட
நவமுற வியற்றி யாறு நாளதி லிருப்ப ஏழாந்
திவசம தடைய வேந்தைத் தெக்ககன் கறிப்பச் சென்றான்.

(இ-ள்.) அவன்-அந்தக் கௌரமுகர், அடைந்து-பரீட்சித்தைச் சேர்ந்து, உரைப்ப-(அவனுக்கு நேரவிருக்கும் மரணத்தைக் குறித்துச்) சொல்ல, வேந்து-அந்தப் பரீட்சித்து மன்னன், ஊழாம் என எண்ணி-(இஃது) விதியின் பயன் என நினைந்து, (தன்னைக் காத்துக்கொள்ளும் வண்ணம்) அந்த தவமுனி உரைத்த வண்ணம்-அந்தச் சமீகர் உரைத்த செய்தியைப்பற்றி (மந்திரிகளுடன்) ஆலோசித்து, சலதிபால்-கடலினிடையில், தறிமேல் மாடம்-ஒற்றைத் தூணோடு கூடிய மேல் மாளிகையை, நவம் உற இயற்றி-[மிகவும் பத்திரமுள்ளதாகப்] புதுமுறையில் கட்டுவித்து, ஆறு நாள் அதில் இருப்ப-ஆறு நாட்கள் அதனுள் பத்திரமாகக் காவலோடு இருக்க, ஏழாம் திவசமது அடைய-(குறித்த) ஏழாவது நாள் வர, வேந்தை-அந்த மன்னனை, தெக்ககன்-தக்ஷகன், கறிப்ப-கடித்துக்கொல்ல, சென்றான்-போயினன்; (எ-று.)

தறி-தூண்: நவமுற இயற்றியமை என்றது— காவலோடு வைத்தியர்களையும், ஔஷதங்களையும், மந்திர வித்தியுள்ள பிராமணர்களையும் எங்கும் நியமித்தமை. (41)

42. தக்ஷகன் காசியபரைச் சந்தித்துச் சொல்லுதல்.

சென்னெறி தனிலோ ராற்பாற் சேர்ந்துகா சிபப்பேர்
வேதன்
மன்னனை யரவந் தீண்டின் மந்திரத் தெழுப்பச் சேறற்
றன்னைகேட் டரவ மியானித் தருவினைத் தீண்டின் நீரும்
அன்னதை முன்போற் செய்யி லரசைமீட் டிடுவை
யென்றான்.

(இ-ள்.) செல்நெறிதனில்-போகும் மார்க்கத்தில், ஓர் ஆல் பால் சேர்ந்து-ஒரு ஆல மரத்தினைச் சார்ந்து,—"காசிபப்பேர் வேதன்-காசியபரென்னும் பிராமணச்சிரேட்டர், மன்னனை-

பரீட்சித்தை, அரவம் தீண்டிள்-பாம்பு கடிக்குமாயின், மந்திரத்து-மந்திர சக்தியினல், எழுப்ப-உயிர் பிழைப்பிக்க, சேறல் தன்னை கேட்டு-அவனிடம் போகின்ற செய்தி கேட்டு, (தக்ஷகன் அந்தக் காசியபரையணுகி], யான் அரவம்-நான்தான் அந்தத் தக்ஷகன்: இத் தருவினை தீண்டின்-இந்த ஆல மரத்தை நான் கடித்தேனுயின், நீரும்-இது சாம்பராகும்: அன்னதை-அந்த ஆலமரத்தை, முன் போல் செய்யில்-முன்னிருந்தது போலவே செழித்திருப்பச் செய்யின், (நீர்) அரசை-மன்னனுகிய பரீட்சித்தை, மீட்டிடுவை-உயிர் பிழைக்கச் செய்திடுவாய் என்பது நிச்சயம், என்றுன்-என்று தக்ஷகன் அறைகூவல் விடுத்தான்; (எ-று) (42)

43. ஆலமரத்தைக் காசியபர் பிழைப்பிக்க, தக்ஷகன் பொருள் கொடுப்பப் பெற்றுப் போதல்.

அவ்வுரைக் கிசைந்தவ் வேதன் அரவுதீண் டாலே முன்போற்
செவ்வையின் ஆக்கி மீள்வான் தெக்ககன் அளித்த செம்பொன்
வவ்விதன் னிருக்கை சார்ந்தான் மறையவ ருருவந் தாங்கி
வெவ்விட நாகர் கோமான் வேந்துழி யடைந்தான் மன்னே.

(இ-ள்.) அவ் வேதன்–அந்தக் காசியபர், அவ்வுரைக்கு இசைந்து-(அந்தத் தக்ஷகனது) அறைகூவலேயேற்று உடன்பட்டு, அரவு தீண்டு ஆலே-பாம்பினுலே கடியுண்டு நீருகிய அந்த ஆல மரத்தை, முன்போல் செவ்வையின் ஆக்கி–முன்னிருந்தது போலவே செழிப்புடையதாகச் செய்து, தெக்ககன் அளித்த செம்பொன் வவ்வி-தக்ஷகன் கொடுத்த பெருந் தனத்தைப் பெற்றுக்கொண்டு, மீள்வான்-(மேற்செல்லாது) திரும்பி, தன் இருக்கை சார்ந்தான்-தன் இருப்பிடம் வந்து சேர்ந்தான்; (பின்னர்) வெம்விட நாகர் கோமான்-கொடிய விஷத்தையுடைய நாகர்களுக்கு எல்லாம் ராஜாவாகிய தக்ஷகன், மறையவர் உருவம் தாங்கி-பிராமணராகிய இருடி வேடந் தரித்து, வேந்துழி அடைந்தான்-பரீட்சித்து மன்னரிடம் வந்து சேர்ந்தான்; (எ-று). மன், ஓ-ஈற்றசை. (43)

44. தக்ஷகன் தீண்டப் பரீட்சித்து இறத்தல்.

சம்பிரக் கனியொன் றேந்தித் தராபதிக் களிப்ப அக்கோன்
நம்பியங் கதனை வாங்கி நாசியின் மோந்த காலை
தம்பெரு முருவங் கொண்டு தக்ககன் தீண்டி மீண்டான்
உம்பருக் கமுதந் தந்தோ னுயர்பத மண்ணல் சேர்ந்தான்.

(இ-ள்.) சம்பிரக் கனியொன்று ஏந்தி-எலுமிச்சை பழமொன்று கொண்டு (உட்புக்கு), தராபதிக்கு அளிப்ப-பரீட்சித்து மன்னனுக்குக் கொடுப்ப, அ கோன்-அந்த மன்னவன், அதனை-அந்த எலுமிச்சையை, நம்பி-பழமென நம்பி, அங்கு-அப்போது அவ்விடத்து, வாங்கி-(அந்த மறையவனிடத்திலிருந்து) வாங்கிப் பெற்று, நாசியின் மோந்த காலை-மூக்கினுல் மோந்து பார்த்த போது, தம் பெரும் உருவம் கொண்டு-தனது பெரிய சர்ப்ப உருவத்தைக் கொண்டு, தக்ககன்-அந்தத் தக்ஷகன், தீண்டி-கடித்து, மீண்டான்-திரும்பி நாகலோகஞ் சேர்ந்தான்; அண்ணல்-பரீட்சித்து மன்னன், உம்பருக்கு அமுதம் தந்தோன்-தேவர்களுக்கு அமுதம் கொடுத்தவனுகிய விஷ்ணுவினுடைய, உயர் பதம்-உயர்ந்த வைகுண்டத்தை, சேர்ந்தான்-அடைந்தான்; (எ-று).

சம்பிரம்-சம்பிரம்: எலுமிச்சை. உயர்பதம்-பரமபதம்; வைகுண்டம். (44)

45. உதங்கர் சொற்படி ஜனமேஜயன் சர்ப்பயாகம் செய்யத் தொடங்குதல் கூறும்.

வேந்தனுக் கமைச்சர் மாழ்கி விதிமுறை கடன்க ளாற்றி
ஏந்தலாய்! உனைக்கொண் டுற்றூர் இதுநிகழ்ந் தமைநீ நாகர்
மாய்ந்திட வேள்வி செய்வான் மனங்கொளென் றுதங்கன் கூறச்
சேந்துகண் ணரசர் கோமான் செயமகந் தொடங்கி னனல்.

(இ-ள்.) வேந்தனுக்கு-மன்னன் இறந்தமைக்கு, அமைச்சர்-மந்திரிமார்கள், மாழ்கி-மனம் வருந்தி, விதிமுறை-அரச விதி முறைப்படியே, கடன்கள்-செய்யவேண்டிய ஈமக்கிரியை முதலாய

சடங்குகளை, ஆற்றி-சரிவரச் செய்து, (பின்) ஏந்தலாய்!-ஆண்மகனிற் சிறந்த ஜனமேஜயனே!, உனை கொண்டு உற்றூர்-உன்னை மன்னனாக ஏற்றுப் பட்டாபிஷேகஞ் செய்து பொருந்தினார்கள்; இது நிகழ்ந்தமை-இது நடந்த வரலாறு: (ஆகவே இனி) நீ–பரீட்சித்தின் மகனாகிய) நீர், நாகர் மாய்ந்திட-நாகர்கள் இறந்து ஒழிய, வேள்வி செய்வான்-சர்ப்பயாகஞ் செய்யும் பொருட்டு, மனம் கொள்-மனந் துணிவாய், என்று-, உதங்கன்–, கூற–சொல்ல, அரசர் கோமான்-ஜனமேஜயன், கண் சேந்து-கண்கள் சிவப்பக் கோபங் கொண்டு, மகம் செய தொடங்கினன்-அந்த யாகத்தைச் செய்யத் தொடங்கினன்; (எ–று). ஆல்–ஈற்றசை.

ஏந்தல்-ஆண்பாற் சிறப்புப் பெயர்: விளிபெற்று வந்தது. (45)

உதங்கச் சருக்கம் முற்றிற்று.

———

நான்காவது

சர்ப்ப யாகச் சருக்கம்

ஜனமேஜய மகாராஜன் உதங்க முனிவர் சொற்படி சர்ப்ப சத்ரயாகம் என்ற வேள்வியைச் செய்வதைக் கூறும் சருக்கம் என விரியும்.

வேறு

1. ஜனமேஜயன் சர்ப்பயாகம் தொடங்குதல்.

சுருதிக் கிழவர் தமைவினவி சொற்ற படிமா மகச்சாலை
புரிவித் தில்லாள் வபுட்டையுடன் பூண்டு சனமே செயன் தீக்கை
அரிய வேத வியாதன்முதல் அநேக முனிவர் விதியினெடுத்
துரைசெய் தவண்நெய் யொடுஞ்சமிதை யுகுத்தா ரழலை வளர்த்தனனால்.

(இ-ள்.) சனமேசெயன்-ஜனமேஜயன், சுருதி கிழவர் தமை வினவி-வேதத்தில் உரிமையுடைய பிராமணச் சிரேட்டர்களைக் கேட்டு, சொற்றபடி-அவர்கள் சொன்னபடியே, மா மகம் சாலை புரிவித்து-சிறந்த பெரிய யாகசாலையை நிர்மாணித்து, தீக்கை-(பின்பு) யாகத்தில் தீட்சையை, இல்லாள் வபுட்டையுடன்-பத்தினியாகிய வபுஷ்டமையுடன், பூண்டு-மேற்கொண்டு, அரிய-கிடைத்தற்கரிய, வேத வியாதன் முதல்-வேத வியாச முனிவர் முதலாய, அநேக முனிவர்-பல முனிவர்கள், விதியின் எடுத்து-மறையோதும் விதியின்படி உரக்கக் குரலையெழுப்பி, உரை செய்து-மந்திரங்களையோதி, அவண்-அந்த யாக குண்டத்து, நெய்யொடும் சமிதை உகுத்து-நெய்யோடு தோய்த்த சமித்துகளையும் மிகுதியாகச் சொரிந்து, ஆர் அழலை வளர்த்தனன்-ஜ்வலிக்கின்ற அக்னியை மூண்டெழச் செய்தனன்; (எ-று).

சுருதிக்கிழவர்-அந்தணர்: இவர்கள் ஓதல், ஓதுவித்தல் இரண்டிற்கும் உரியவர். மகச்சாலை புரிவித்தல்-தக்க இடத்தைத் தேர்ந்தெடுத்து சாஸ்திரப் பிரகாரம் அளக்கச் செய்தல்; அநேகர் பிராமணர் குழுமியிருக்கும்படியாகவும், தனங்களும் தானியங்

களும் நிறைந்திருக்கும்படியாகவும், ரித்விக்குகள் சுகமாக இருக்கத்தக்கபடியாகவும் அழகாகக் கட்டுவித்தல். தீட்சை பெறுதல்-யாகம் தொடங்கப் பத்தினியுடன் விரதம் மேற்கொள் ளல். விதியின் எடுத்து உரை செய்தலாவது-வேத மந்திரங்களை உச்ச ஸ்வரத்தில் மிடறு விம்ம ஓதுதல்: (சிலவிடங்களில் மெது வாகக் கூறவேண்டும்). நெய், சமிதை-ஆகுதிப் பொருள்கள்.

இது முதல் பத்துக் கவிகள் – ஒன்று, இரண்டு, நான்கு, ஐந்தாஞ் சீர்கள் மாச்சீர்களாகவும், மூன்று, ஆறுஞ்சீர்கள் காய்ச் சீர்களாகவும் வந்த அறுசீராசிரிய விருத்தம். (1)

2. யாகாக்னியில் சர்ப்பங்கள் வீழ்ந்து மடிதல்.

ஆதி வருணர் மொழிமறையால் அனந்தன் சேடன்
வாசுகியோ
டேத மிகுதெக் ககன்முதலாம் இருநான் குரக மன்றிபுவி
மீதி னுலவும் அரவெல்லாம் வேள்வித் தழல் வீழ்ந்
திறந்ததற்பின்
ஓது மறைசென் றெண்மரையும் ஒழியா தழைத்தீர்த்
திடுமமையம்.

(இ-ள்). ஆதி வருணர்-(நால்வகை வருணங்களில்) முதலில் நிற்கும் பிராமணர்கள், மொழி மறையால்-ஓதிய வேத மந்திரங் களால், அனந்தன்-, சேடன்-ஆதிசேடன், வாசுகியோடு–வாசுகி என்னும் மூவரோடு, ஏதம் மிகு தெக்ககன்-குற்றஞ் செறிந்த தக்ஷகன், முதலாம்-முதலாகிய, இரு நான்கு உரகம்-எட்டு நாகங் களேயன்றி, புவி மீதின் உலவும்–பூமியின்மேல் சஞ்சரித்துக் கொண்டிருந்த, அரவு எல்லாம்-நாகங்களனைத்தும், வேள்வித் தழல் வீழ்ந்து-யாகாக்னியில் விழுந்து, இறந்ததற்பின்-தகிக்கப் பட்டு இறந்த பின்னர், ஓதும்-சிறப்பித்துச்சொல்லப்பட்ட, மறை சென்று-மந்திரங்கள் போய், எண்மரையும்-(உயிர் தப்பியிருந்த) எட்டு நாகங்களையும், ஒழியாது-ஒன்றும் தப்பியோடாமல், அழைத்து-கூவி, ஈர்த்திடும்–இழுத்துக்கொண்டு வரும், அமையம்-சமயத்தில்; (எ-று).

அனந்தன் வேறு ஆதிசேடன் வேறுகக் கூறப்பட்டுள்ளது இருவரும் கத்துருவின் புத்திரர்களாதலின். வாசுகி-நாகராஜன்:

பட்டாபிஷேகஞ் செய்யப்பட்டவன். இவர்களை 'ஒடு' கொடுத்துப் பிரித்தமை இவர்கள் சிறப்புநோக்கி. தெக்ககன் மிக்க குற்றவாளியாதலின் தனியே எடுத்துச் சொல்லப்பட்டான். எண்மர் நாகம்–மேற்குறித்த நால்வர் தவிர, பயந்து தாய்மடியிலேறிய ஏலாபத்ரன், உச்சைச் சிரவசின் வாலில் கருமைக்காகப் பொருந்திய கார்க்கோடகன், வாசுகிக்கு அடுத்தபடியாயுள்ள ஐராவதம் தனஞ்சயன் போன்றவர்களைக் கொள்ளலாம். [இனி, கூர்மன், குலிகன் என்று சிறந்த வேறு நாகங்களையும் கொள்ளலாம்.] மந்திரத்தின் வலிமை யுணரத்தக்கது இங்கு. "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த, மறை மொழிதானே மந்திரமென்ப" (தொல்: செய்: 179); "நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து, மறைமொழி காட்டிவிடும்" (திருக்குறள் அதி: 3, 8) முதலியன நோக்குக. (2)

3. தக்ஷகன் இந்திரனைச் சரணடைய, வாசுகி அன்னையை அடைதல்.

சிந்தை கலங்கித் தெக்ககன்போய்த் தேவர்க் கரசின் சரணடையா
வந்த துயர்சொற் றளித்தியென மகவா னிரங்கி வருந்தலுயிர்
தந்து புரப்பல் இருத்தியெனத் தற்காத் திருந்தான்: வாசுகியை
யுந்து மறைசென் றீர்ப்பவவ னுள்ளொந் திதைபுக் கனைக்
குரைத்தான்.

(இ-ள்.) தெக்ககன்-தக்ஷகன், சிந்தை கலங்கி போய்-மனக் குழப்பமடைந்து, தேவர்க்கரசின் சரண்-தேவேந்திரனின் பாதங்களை, அடையா-(சரணுகப்) புகுந்து, வந்த துயர் சொற்று-(தனக்கு) ஏற்பட்ட துன்பத்தைச் சொல்லி, அளித்தி என-பாதுகாப்பாயாக எனவேண்ட, மகவான்–தேவேந்திரன், இரங்கி-மனமிரங்கி, "வருந்தல்-வருந்தாதே: உயிர்தந்து-உனக்கு உயிரைத் தந்து, புரப்பல்-உன்னைப் பாதுகாப்பேன்: இருத்தி-(நீ இங்கேயே) சுகமாக இரு" என-என்று அபயமளித்து, தன்-அந்தத் தக்ஷகனை, காத்திருந்தான்—; (ஆனல்) உந்து மறை சென்று-ஓதியுந்தப்பட்ட வேத மந்திரமானது போய், வாசுகியை-நாகராஜனுகிய வாசுகியை, ஈர்ப்ப-இழுக்கவே, அவன்—, உள்ளொந்து-மனம் வருந்தி, இதை-இந்த இடையூற்றைப்பற்றி, புக்கு-(தன் அன்னையாகிய கத்துருவினிடம்) புகுந்து, அனைக்கு-அந்தத் தாய்க்கு, உரைத்

தான்-சொல்லினன்; (எ-று). அவன் சொல்லி மேற்கொண்ட செயலே மேலைக் கவியிற்காண்க.

அனை-அன்னை: தொகுத்தல். அளித்தி-முன்னிலை வியங்கோள். வருந்தல்-'அல் ஈற்று எதிர்மறை வினைமுற்று. புரப்பல்-அல் ஈற்று உடன்பாட்டு வினைமுற்று. இருத்தி-முன்னிலை யேவல். (3)

4. வாசுகி தன் சகோதரியைப் பார்த்துச் சொன்னது.

அன்னை தமக்கா யரத்தணங்கை யகற்றி யனுசன் முனங்
கனவின்
பன்னு மொழியை நினைந்துடனுற் பவித்த பினைபார்த்
துனதுசுதன்
மன்ன னுஞற்று மகத்தெல்லை வருந்த வடிசென்
றிடினங்காய்!
இன்ன லகல்வ மெனவவள்போந் தின்ற வினைக்கொண்
டில்லடைந்தாள்.

(இ-ள்.) அன்னை-தாயாகிய கத்துரு, தமக்காய்-புத்திரர் களாகிய தங்களது நன்மைக்காக, அரத்து அணங்கை-நாக கன்னிகையாகிய ஜரத்காருவை, அகற்றி-(சாபத்தினின்று) நீக்கி, அனுசன் முனம்-தன் தம்பியாகிய ஏலாபத்ரன் முன்னிலையில், கனவின் பன்னு மொழியை-கனவிடத்து[ச் சான்றாக]ச் சொன்ன வார்த்தைகளை, நினைந்து-(வாசுகி) நினைத்துப் பார்த்து, உடன் உற்பவித்த-தன்னுடன் பிறந்த, பினை-பின் பிறந்தவளாகிய ஜரத்காருவைப் பார்த்து, உனது சுதன்-உனது [வயிற்றிற் பிறந்த] பிள்ளையாகிய ஆஸ்திகன், மன்னன்-ஜனமேஜயராஜன், உஞற்றும்-ஆற்றுகின்ற, மகத்து-யாகத்திடத்து, எல்லை-நாளை, அடிவருந்த சென்றிடின்-கால்நோவப் போய்வருவானுயின், நங்காய்-நாக கன்னிகைகளிற் சிறந்த ஜரத்காருவே! (நாங்கள்) இன்னல் அகல்வம்-துன்பம் நீங்குவோம்: (இன்பமடைவோம்), என-என்று சொல்ல, அவள் போந்து-அந்த ஜரத்காரு வினையடைந்து, ஈன்றவனைக் கொண்டு-பிள்ளையாகிய ஆஸ்திகனைக் கூட அழைத்துக்கொண்டு, இல் அடைந்தாள்-(சகோதரனுகிய வாசுகியின்) மனையைப் போய்ச் சேர்ந்தாள்; (எ-று).

அரத்து அணங்கு-அரவத்து அணங்கு; அம்-சாரியை கெட்டு வந்தது. பெண்ணுதலின், அவளை நீக்கிப் புத்திரர்களுக்கு மட்டும்

கத்துரு சாபமீந்தாள் என அறியவேண்டுவது. அனுசன்-தம்பி: இங்கே ஏலாபத்ரன்: அவன் தாய்மடியிலேறியிருந்து விவரங்களைக் கேட்டவன். கனவின் பன்னு மொழி-இதனை முன் சருக்கத்து 34-ஆம் செய்யுளின் விசேடவுரையிற் காண்க பினை-பின்னை: பின் பிறந்தாளுக்குக் காலவாகுபெயர். எல்லை-சூரியன்: பகல்: எனவே, நாளை என்றது. 'உனதுசுதன் அடிவருந்தச் சென்றிடின்' என்றது-தாய்ப்பாசம் தெரித்தற்கு. நங்கை - பெண்பாற் சிறப்புப் பெயர். அகல்வம்–உளப்பாட்டுத் தன்மைப் பன்மை வினைமுற்று. சன்றவன்-ஆஸ்திகன். இவன் ஜரத்காரு முனிவர்க்குப் பிறந்தவனுதலின் பிராமணனையினன்: ஆகவே, வாசுகியின் கிருஹத்திலேயே வளர்ந்து பிருகுபுத்திரராகிய ச்யவனருடைய புத்திரரிடத்திலிருந்து வேதங்களையும் வேதாங்கங்களையும் அத்தியயனம் செய்தார். சிறுபிராயத்திலேயே புத்தியும் சாந்தியும் குணங்களும் உடையவராகப் பிரமசரிய விரதத்தை மேற்கொண்டிருந்தார். அவர் தாயின் கருப்பத்திலிருக்கும்போதே அவருடைய பிதாவாகிய ரிஷி "அஸ்தி" (இருக்கிறான்) என்று சொல்லிவிட்டு வனம் போனதனால் அவருக்கு ஆஸ்திகரென்னும் இந்தப் பெயர் உண்டாயிற்று. (4)

5. ஆஸ்திகன் ஜனமேஜயனிடம் வருதல்.

இல்ல மடைந்த மருகனைப்பார்த் தெய்து மிடுக்கண்
வாசுகிசொற்
றெல்லை யெமைக்கா வெனவவனும் உன்னே டிருப்போர்க்
குயிர்வேள்வி
எல்லை யணுகி யிறைவனிடத் திரந்து தருவ லஞ்சலெனச்
சொல்லிப் பலமா தவிருபாற் சூழ வரசன்
மாட்டடைந்தான்.

(இ-ள்.) இல்லம் அடைந்த-தனது மனைக்கு வந்து சேர்ந்த, மருகனைப் பார்த்து-சகோதரி புத்திரனாகிய ஆஸ்திகனைப் பார்த்து, வாசுகி—. எய்தும் இடுக்கண் சொற்று-தமக்கு நேரவிருக்கும் துன்பத்தைப் பற்றிச் சொல்லி, ''ஒல்லை-சீக்கிரமாக, எமை-எங்களை, கா-காக்கக் கடவீர்'', என-என்று கூற, அவனும்–அந்த ஆஸ்திகனும், உன்னோடு இருப்போர்க்கு-உன்னுடன் இருக்கும் நாகர்களுக்கும் (சேர்ந்து), எல்லை-நாளைத்தினம், வேள்வி அணுகி-

யாகசாலையை அடைந்து, இறைவனிடத்து-மன்னனாகிய ஜனமேஜயனிடத்து, உயிர் இரந்து-உயிர்ப்பிச்சை கேட்டு, தருவல்-(உங்கள் உயிரைப் பாதுகாத்துத்) தருவேன்: அஞ்சல்-பயப்படாதேயுங்கள், என-என்று, சொல்லி-, பல மாதவர்-பல சிறந்த தவசிகள், இருபால் சூழ-தனது இரு பக்கங்களிலும் சூழ்ந்துவர, அரசன் மாட்டு-மன்னனிடம், அடைந்தான்-வந்து சேர்ந்தான்; (எ-று.)

ஒல்லை-விரைவு குறிக்கும் இடைச்சொல்: "கா"—முன்னிலை வியங்கோள் வினைமுற்று. தருவல்-அல்லீற்று உடன்பாட்டு வியங்கோள். அஞ்சல்-அல்லீற்று எதிர்மறை வியங்கோள். மாடு-ஏழனுருபு. (5)

6—9: நான்கு கவிகள் ஒரு தொடர்: ஆஸ்திகர் யாகத்தை நிறுத்த வரங்கேட்டு அங்ஙனமே நிறுத்தியமை.

6. மன்னனையடுத்து முகமன் கூறுதல்.

அரசன் இறைஞ்சிக் கடனியற்ற ஆசி புகன்றத் திகனுரைப்
பான்
விரைசெய் தாமப் புயத்தோய்! உன் மேன்மை யெடுத்துப்
புகலமலர்ப்
பிரமற் களவோ தெக்கன்நின் பிதாவுக் கியற்றும்
பிழைக்கவன்றன்
மரபி னுதித்த வரவெல்லா மடிய மகஞ்செய் திகல்
தணித்தாய்.

(இ-ள்.) அரசன்-ஜனமேஜயன், (ஆஸ்திகன் வரவு கண்டு) இறைஞ்சி-[எதிர்கொண்டு] வணங்கி, கடன் இயற்ற-செய்ய வேண்டிய கடன்களைச் செய்து முடிக்க, அத்திகன்-ஆஸ்திகரிஷி, ஆசி புகன்று-ஆசீர்வாத மொழிகள் சொல்லி, உரைப்பான்-(மேலும்) சொல்லலாயினன்:— விரைசெய் தாமம் புயத்தோய்!—வாசனை வீசுகின்ற மாலையை யணிந்த தோள்களையுடையவனே! உன் மேன்மை எடுத்து புகல-உனது பெருமைகளை வர்ணைப் படுத்திப் பேசுதற்கு, மலர் பிரமற்கு அளவோ?-தாமரை மலரில் எழுந்தருளியிருக்கின்ற பிரமதேவற்கும் அளவு படுமோ? (படாது): [அப்படிப்பட்ட நீர் இப்போது] தெக்கன்-தக்ஷகன் என்ற ஒரு நாகன், நின் பிதாவுக்கு இயற்றும் பிழைக்கு-உனது தந்தையாகிய பரீட்சித்துக்குச் செய்த குற்றத்

திற்காக, அவன் தன் மரபின் உதித்த அரவு எல்லாம்-அவன் குலத்திற் பிறந்த நாகங்களெல்லாம், மடிய-இறந்தொழியும்படி, மகம் செய்து-யாகம் செய்து, இகல் தணித்தாய்-பகைமையைத் தணித்துக்கொண்டாய்; (எ–று).

இகல்-மாறுபாடு: பகைமை. கடன் இயற்றல்-திருவடி விளக்குதல், ஆசமனத்திற்கு நீர் அளித்தல் போல்வன. இவற்றை அர்க்கியபாத்திய ஆசமனீயங்கள் கொடுத்து உபசரித்தல் என்பர். (6)

7. மன்னனே ஆஸ்திகன் கொண்டாடுதல்.

முன்னர் விசயன் சயிந்தவனே மொழியும் படியன் றேர்
விரகாற்
சென்னி துணித்தான் அவனிலுநீ சீர்த்தி யுடையோன்
அருந்தவத்தோர்
உன்னும் படிநின் மருங்கினிசைந் துஞற் றில்வேள்
வியெக்கருமஞ்
சின்ன முறும்வே லரசேநீ செய்த தவமே தவமாலோ.

(இ-ள்). முன்னர்-முன் நிகழ்ந்த பாரதப் போரில், (பதின் மூன்றும் நாட்போரில்), விசயன்-அருச்சுனன், சயிந்தவனே-சிந்து தேசத்து அதிபனை சயத்திரதனை, மொழியும்படி-தான் கூறிய சபத வார்த்தையின்படி, அன்று-(குறித்த) அன்றைத்தினத்தில், ஓர் விரகால்-ஒரு சூழ்ச்சியினலே, சென்னி-அவன் தலையை, துணித்தான்-(தன் வில்லால்) அறுத்தான்: அவனிலும்-அந்த விசயனைக் காட்டிலும், நீ-, சீர்த்தி-மிக்க புகழை, உடையோன்-உடையவனாக விளங்குகின்றாய்; அருந்தவத்தோர்-அரிய தவத்தைச் செய்தவர்கள், உன்னும்படி - போற்றும்படி, நின் மருங்கின் இசைந்து-உன்னுடைய பக்கலிலே அண்டி ஒருப்பட்டு, வேள்வி உஞற்றில்-யாகஞ் செய்வார்களாயின், எ கருமம் சின்னமுறும்–எந்தக் கருமம் சிதைவுறும்?-(எதுவும் சிதைவுறுதுநிறைவேறும்): வேல் அரசே!-வேலாயுதத்தை யேந்தியுள்ள மன்னனே! நீ செய்த தவமே-நீ செய்துள்ள தவமே, தவம்-உண்மையாகக் கொண்டாடத்தக்க தவமாகும்: ஆலோ-வியப்பிடைச்சொல்: ஈற்றில் வந்தது

சயிந்தவன்-சயத்திரதன்: இவன் துரியோதனனின் சகோதரி கண்வன்: அபிமன்யுவைத் தலைதுணித்தவன். ஆதலின், அபிமன்யுவின் தந்தையாகிய விசயன் வஞ்சினம் கூறி இவனையொழித்தான். அவன் கூறிய வஞ்சினமொழி-"தன்றிரு மைந்தனை மெளலி துணித்த சயத்திரதன்றனை வாள், வென்றிகொள் காவலர் காவன் மிகுப்பினும் வெயிலவன் வீழ்வதன்முன், கொன்றிடுவேன்; அது தப்பின் அருங்கனலூடு குதித்திடுவேன்" என்றது. ஓர் விரகால் கொன்றது என்றது-அத்தமனமாகும்வரை சயத்திரதனைத் தலை கீர்ட்டாதவாறு துரியோதனன் படையினர் காத்து நிற்பவே: அருச்சுனன் கண்ணபிரானைக்கொண்டு அவனது திகிரிப்படையால் சூரியனை மறைக்கச்செய்து, அத்தமனமாகியதுபோலச் செய்யவே, சயத்திரதன் நம்பித் தலையை வெளிக்காட்டிவர, திடீரென்று கண்ணபிரான் சக்கரப்படையை நீக்கவே, வெயிலவன் பிரகாசிக்க, அருச்சுனன் அந்தச்சயத்திரதன் தலையைத் துணித்தான்.

அத்தகைய சூழ்ச்சியொன்று மில்லாமலேயே இருந்தவிடத்திலிருந்து கொண்டே பகைமையைத் தணித்துக்கொண்டமையால் "அவனிலும் இவன் சீர்த்தியுடையவனையினன்". "சீர்த்திமிகு புகழ்" (தொல்: உரியியல்: சூ: 16) தவஞ் செய்தலால் வேண்டிய வேண்டியாங்கு எய்தலாம். (7)

8. ஆஸ்திகன் வரம் வேண்டுதல்.

குரைசெய் கடற்பார் கலிகடிந்தோர் குடைக்கீழ் புரந்தோன் தவத்துதித்த
வீரைசெய் தாமப் புயத்தோய்! யான் வேண்டும் வரமொன் றளித்தியென
உரைசெய் வேத முனியேயென் னுயிரே யெனினுந் தருவலென
எரிசெய் மகத்தி லிறந்தனரன் றிருப்போர்க் குயிர்தந் திடல் வாமே.

(இ-ள்.) குரைசெய் கடல்-ஒலிக்கின்ற கடலினைச் சூழப்பட்ட, பார்-பூமியில், கலி கடிந்து-கலியினால் ஏற்படும் தீமைகளையெல்லாம் போக்கி, ஓர் குடைக்கீழ்-ஒப்பற்ற ஒரு வெண்கொற்றக் குடையின் கீழே அரசாட்சி செய்து, புரந்தோன்-பாதுகாத்தவ

ஞகிய தருமபுத்திர மகாராஜரின், தவத்து உதித்த-தவப் பயனால் அவதரித்த, விரை செய்-வாசனை வீசுகின்ற, தாமம்-மாலையை யுடைய, புயத்தோய்-தோள்களையுடையவனே! யான்-, வேண்டும்-விரும்புகின்ற, வரம் ஒன்று-ஒரு வரத்தை, அளித்தி-கொடுப்பா யாக, என-என்று வேண்ட, (ஜனமேஜயன் உடனே) வேத முனியே-வேதங்களில் வல்ல முனிவரே! உரைசெய்-கேளும்: என் உயிரே எனினும்-[நீர் கேட்பது] எனது உயிரேயானாலும், தருவல்-கொடுத்திடுவேன், என-என்று சொல்ல, (ஆஸ்திகன் அவனை நோக்கி) எரிசெய் மகத்தில்-அக்னி கொண்டு செய்யும் இந்தச் சர்ப்பயாகத்தில், இறந்தனர் அன்றி-மாய்ந்து போனவர் தவிர, இருப்போர்க்கு-இன்னும் உயிரோடிருக்கும் நாகர்களுக்கு, உயிர் தந்திடல் ஆமே-உயிரை ஈதல் தகுதியாகுமே! (எ-று.)

மகாபாரதப் போர் முடிந்து, தருமர் பட்டாபிஷேகஞ் செய்து கொண்டு கலிகடிந்து அறநெறியே கருதி வாழ்ந்து வந்தனர் ஆதலின், 'புரந்தோன்' என்றது அவரைக் குறித்தது. அளித்தி-முன்னிலை வியங்கோள். ஆஸ்திகன்-பிராமணனுதலின், "வேத முனியே" என விளித்தான். தருவல்-தன்மை யொருமை வினை முற்று. அன்றி + இருப்போர் = அன்றிருப்போர்: நிலைமொழி யீற்று உயிர் உடம்படுமெய்யொடும் கெட்டு வந்தது. தந்திடல் ஆமே-"வ்" எழுத்துப் பேறு, "செல்வுழி" என்றவிடத்துப்போல, இனி "தந்திடலாமே" எனவும் பாடமிருக்கலாம். (8)

9. ஜனமேஜயன் யாகம் நிறுத்துதல்.

எனமா தவன்கை யேற்றலினும் இருக்கோர் தருகென்
றிசைத்தலினும்
முனமே தெனினும் அளிப்பலென மொழித லினுமா
முடிவேந்தன்
மனமா ரரவோ டொழித்தனமிம் மகமென் றலுமத்
திகன்மகிழ்ந்தான்
முனமா ரழல்நெய் யுகுத்துயர்வோர் மொழிமந் திரம்போய்
முடுக்குதலால்.

(இ ள்). என-என்று சொல்லி, மா தவன் கை ஏற்றலினும்-ஆத்திகன் கைநீட்டி வரமேற்றலுக்கும், இருக்கோர் தருக என்று இசைத்தலினும்-ரித்விக்குகள் (அவர் கேட்டபடியே) 'கொடு'

என்று சொல்லுதலுக்கும், ஏது எனினும் அளிப்பல் என மொழிதலினும்-எது வேண்டுமானாலும் கொடுப்பேன் என்று சொல்லுதலுக்கும், முனம்-முன்னமேயே, மா முடி வேந்தன்-ஜனமேஜய மகராஜன், "மனம் ஆர் இ மகம்-மனப்பூர்வமாகச் செய்து வருகின்ற இந்தச் சர்ப்ப யாகத்தை, அரவோடு ஒழித்தனம்-[இதுவரையில் இறந்துபோன பாம்புகளோடு] நிறுத்தினேன்;" என்றலும்-என்று உறுதிமொழி கூறியவுடன், அத்திகன் மகிழ்ந்தான்-ஆஸ்திகன் சந்தோஷமடைந்தான்; (எனினும்), உயர்வோர்-உயர்ந்த ரித்விக்குகள், முனம்-முன்னமேயே, ஆர் அழல்-கொழுந்துவிட்டெரிகின்ற யாகாக்னியில், நெய் உகுத்து-நெய்யை அவிசாகச் சொரிந்து, மொழி மந்திரம் போய்-உச்சரித்த மந்திர மொழிகள் போய், மூடுக்குதலால்-[ஏனைய நாகங்களையும்] இழுத்துவருதலால்; (எ-று.)—"தெக்ககன் தவிசைச்சூழ்" என மேலிற்கவியில் இயையும்.

"ஏற்றலினும், இசைத்தலினும், மொழிதலினும் முனம்" என்றது மன்னன் வரமீந்ததன் விரைவு குறிக்க வந்தது: காரணத்தின் முன்னம் காரியம் நிகழ்ந்தபடி: இஃதோர் வகை உபசார வழக்கு. இனி "மனம் ஆர் அரவு" என்றது தக்ஷகனைக் குறிப்பதாகவும் கொள்ளலாம்: ஏனெனில் இந்த யாகம் செய்தலுக்கு மூலகாரணமே அவனுதலின். மகம் நிறுத்தப்பட்டாலும் மந்திர சக்தி தக்ஷகனை இழுத்து வரலாயிற்று என்பதுணர்க. (9)

10. தக்ஷகன் இடர்தீர யாகம் முற்றுதல்.

தரியா தயர்ந்து தெக்ககன்விண் தலைவன் தவிசைச்
சூழமறை
அரியா சனத்தோ டுபையரையும் அவணீர்த் திடவந்
தும்பர்சுழன்
றெரியா கத்தை யொழிப்பவவ ரிடர்தீர்ந் தனையோ ரிடம்
புகுந்தார்
பொரியா திகள்பெய் தம்மகத்தைப் புவிமன் னவன்முற்
றினனம்மா.

(இ-ள்.) [மந்திரம்போய் முடுக்குதலால்] தெக்ககன்-தக்ஷகன், தரியாது-நிலைநிற்கமுடியாமல், அயர்ந்து-சோர்ந்து, விண் தலைவன்-தேவேந்திரனின், தவிசை-ஆசனத்தை, சூழ-[கெட்டியாகக் கட்டிக்

கொண்டு] சுற்றியிருப்ப,— மறை-ஓதிய மந்திர சக்தியானது, அரியாசனத்தோடு-இந்திர சிம்மாசனத்தோடு, உபையரையும்-இருவரையும் (தக்ஷகனையும் அவனுக்குத் தஞ்சமளித்த இந்திரனையும்), அவண்-அவ் யாகத்திடத்து, ஈர்த்திட-இழுத்துவர, வந்து-இருவரும் வந்து, உம்பர் சுழன்று-மேலிடத்தில் சுழன்றுகொண்டிருந்து, (பின்னர்) எரி யாகத்தை ஒழிப்ப-அக்னிகொண்டு செய்த யாகத்தை நிறுத்தவே, அவர்-அவ்விருவரும், இடர்தீர்ந்து-துன்பம் நீங்கி, அனையோர் இடம் புகுந்தார்-தத்தமது இருப்பிடத்தை அடைந்தார்கள்; (பின்னர்) புவி மன்னவன்-ஜனமேஜயராஜன், அ மகத்தை-அந்தச் சர்ப்ப சத்திரயாகத்தை, பொரி ஆதிகள் பெய்து-நெற்பொரி, சமித்து, நெய் முதலியவற்றை ஆகுதிகளாகச் சொரிந்து, முற்றினன்-முடிவுறச் செய்தான்; (எ-று.) அம்மா-வியப்பிடைச்சொல்.

உபையர்-உபயர்: இருவர்: வடசொல். (10)

வேறு

11–12. இரண்டு கவிகள்-ஒரு தொடர்: யாகம் முற்றிய வேந்தைப் பாராட்டி ஆஸ்திகர் தம் இருக்கை சார்தல்.

11. ஆஸ்திகர் மன்னனைப் புகழ்தல்.

முற்றிமக மிரசிதம்பொன் முதலாந் தான
முறைமறையோர்க் களித்தவர்கண் மொழிய வாசி
பொற்றவிசி னுறுவேந்தை முனிவன் நோக்கிப்
புகலுமரன் புரிநூன்மாற் சயனம் போதன்

வெற்றிசுரர் அமுதளிக்குந் தாம்பு வேள்வி
வேந்துயிர்மண் ணவர்தமக்கா தரமும் வேந்தே!
பெற்றனரியான் பெற்றவர மொன்றெற் கீதீ
பெற்றபுக முலகிலியார் பெற்ரு ரம்மா.

(இ-ள்.) மகம் முற்றி-யாகத்தை முற்றுவித்து (அவபிருத ஸ்நானம் செய்து), இரசிதம் பொன் முதலாம் தானம்-வெள்ளி பொன் முதலாய பலவகைத் தானங்களையும், முறை-வகையறிந்து

முறையாக, மறையோர்க்கு அளித்து-பிராமணர்களுக்குக் கொடுத்து, அவர்கள் ஆசி மொழிய-அந்தச் சிரேட்டர்கள் ஆசீர்வாதங்கள் சொல்ல, பொன் தவசின் உறு வேந்தை-பொன்னுலாகிய ஆசனத்தில் எழுந்தருளியிருந்த ஜனமேஜய மன்னனை, முனிவன் நோக்கி-ஆஸ்திகரிஷி பார்த்து, புகலும்-(பின்வருமாறு) சொல்லலானர்:—"அரன்-சிவபிரான், புரிநூல் மால்-பூணூலைத் தரித்துள்ள திருமால், சயனம்-(அவரது) படுக்கையாகிய ஆதிசேடன், போதன்-பிரமன், வெற்றிசுரர்-வெற்றி பொருந்திய தேவர்களுக்கு, அமுது அளிக்கும் தாம்பு-தேவாமிருதத்தைக் கடைந்து கொள்ளும்படி கடைகயிறுகவிருந்து உதவிபுரிந்த வாசுகி, வேள்வி வேந்து-மகவானுகிய இந்திரன், [இவர்கள் அனைவரும்], வேந்தே-மன்னவரே! உயிர்பெற்றனர்-தத்தம் உயிர்நிலைக்கப்பெற்றனர்; (மற்றும்) வேந்தே!—, மன்னவர்-இப் பூவுலகிலுள்ளோர், தமக்கு-தங்களுக்கு, ஆதாரமும் பெற்றனர்-(உன் அரசாட்சியாகிய) ஆதாரத்தையும் பெற்றுள்ளனர்; [இவை யொருபுறம் இருப்ப], யான் பெற்ற வரம் ஒன்று-யான் கேட்ட வரம் ஒன்றை, எற்கு-எனக்கு, ஈ-ஈந்து, நீ-நீர், பெற்ற புகழ்-அடைந்த பெரும்புகழினை, உலகில் - இந்த உலகத்தில் (உம்மைத்தவிர), யார் பெற்றூர்-யாவர் பெற்றுளர்? (ஒரு வருமிலர்); (எ-று.) அம்மா-வியப்பிடைச் சொல்; ஈற்றசையுமாம்.

இரசிதம் - வெள்ளி. முறைப்படியளித்தலாவது - ஹோதா, உத்காதா, பிரம்மா, அத்வர்யு, வேதவியாசர் போன்ற இருடிகள், விருத்தரும் ஜபமும் வேதாத்தியயனமும் நல்லொழுக்கமுமுடைய பிராமணர்கள், லோஹிதாக்ஷர் என்னும் சூதர், தொடக்கத்திலேயே ஒரு பிராமணன் காரணமாக (ஆஸ்திகர்) அந்தச் சர்ப்பயாகம் நின்றுபோம் என்று சொன்ன ஸ்தபதி என்று இன்னோரன்ன வரிசையினர் என்க. புகலும்-செய்யுமென்முற்று ஆண்பாலுக்கு வந்தது. திருப்பாற்கடலைக் கடையும்போது வாசுகி தாம்பாயிருந்தனனதலின் அவனை "அமுதளிக்கும் தாம்பு" என்றது. "வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கி" என்றூர் இளங்கோவடிகளும் தமது சிலப்பதிகாரத்து (ஆய்ச்சியர் குரவை). வேள்வி வேந்து-இந்திரன்; நூறு யாகம் செய்து அப்பதவி பெற்றனன் ஆதலின் இங்ஙன் குறித்தது. ஆஸ்திகனுக்கு ஈந்த வரம்-"யாகம் நிறுத்தக் கேட்டவரம்". உலகில்+

யார்=உலகிலியார்— "தன்னெழிமெய்ம்முன் ய கரம் வரின் இகரந்துன்னும்" என்றது நன்னூல் (மெய்யீறு : 3)

இது முதல் இரண்டு கவிகள்—எண்சீராசிரிய விருத்தம். (11)

12. **ஆஸ்திகன் நாகர்கள்பால் வரம்பெற்றுத் தன்னிருக்கை சார்தல்: நாகர்கள் சுகமாக வாழ்தல்.**

என்றுபுகழ்ந் தத்திகன்மா துலர்கள் பாற்போந்
திடரகற்றி யொருவரம்பெற் றிருக்கை சார்ந்தான்
அன்றுமுதல் அவன்பெயர்சொற் றவரை நாகம்
அண்டாதன் றண்டிடினும் அப்பேர் செப்பிற்

றுன்றுவிட மேறுமல் மீண்டு போம்வா
சுகிமுதலோ ருயிர்பெற்றே சுகத்தின் வாழ்ந்தார்
வென்றியுட னவர்கண்மர போங்குற் றியார்க்கும்
வேண்டுபொரு ளுதவியிறை விடுத்தான் மன்னே.

(இ-ள்). என்று புகழ்ந்து-என்று ஜனமேஜயனைப் புகழ்ந்து பாராட்டியபின், அத்திகன்-ஆஸ்திக முனிவர், மாதுலர்கள்பால் போந்து-மாமன்மார் முறையினர்களாகிய நாகர்களிடம் வந்து, இடர் அகற்றி-அவர்களுக்கு ஏற்படவிருந்த துன்பத்தினைப் போக்கி, ஒரு வரம் பெற்று-அவர்கள்பால் தாம் ஒரு வரத்தைப் பெற்று, இருக்கை சார்ந்தான்-தன் இருப்பிடத்தை அடைந்தார்; அன்றுமுதல்-அன்றையதினம் முதற்கொண்டு, அவன் பெயர் சொற்றவரை-அந்த ஆஸ்திகர் பேரைச் சொன்னவரை, நாகம்-பாம்பு, அண்டாது-(தீண்டக்) கிட்டே வராது; அன்று-அப்படியின்றி ஒருகால், அண்டிடினும்-கிட்டித் தீண்டினாலும், அப்பேர் செப்பின்-அந்த ஆஸ்திகர் பேரைச் சொல்லுவோமாயின், துன்றுவிடம் ஏறுமல் மீண்டுபோம்-நெருங்கி விஷம் உடம்பில் ஏறுமலேயே இறங்கித் திரும்பிப் போய்விடும். (இது இங்ஙனுக): —வாசுகி முதலோர்-வாசுகியாகிய நாகராஜன் தொடக்கமான அனைத்து நாகர்களும், உயிர்பெற்றே-[சாபவிமோசனம் நீங்க] உயிர்பெற்று, சுகத்தின் வாழ்ந்தார்-சுகமாக [யாதொரு இடையூறுமின்றி] வாழ்ந்துவந்தார்கள்: அவர்கள் மரபு-அந்த நாகர்களின் வமிசம், வென்றியுடன் ஓங்குற்று-(யாதொரு பயமுமின்றி) வெற்றி

யுடன் ஒங்கிவிளங்க, இறை-அந்த நாகர்களுக்கு மன்னனுகிய வாசுகி, யார்க்கும்-அனைவர்க்கும், வேண்டுபொருள் உதவி-அவரவர் கள் விரும்பின பொருள்களைக் கொடுத்து, விடுத்தான்-அவரவர் இருப்பிடங்களுக்குச் செல்ல விடை கொடுத்தனுப்பினன்: (எ-று.) மன், ஓ-ஈற்றசைகள்.

ஆஸ்திகன் மாதுலர்கள்பால் பெற்றவரம்:—"இந்த உலகத்தில் பிராமணர்களாகட்டும், மற்ற மனிதர்களாகட்டும், தெளிந்த சிறந்த மனத்தோடு இந்த என் தர்ம கதையைக் காலையும் மாலையும் படிப்பாராயின், அவர்களுக்கு நாகர்களாகிய உங்களிட மிருந்து ஒரு பயமும் இல்லாமலிருக்கக்கடவ'து" என்பது. ஒங்குற்றியார்க்கும்-குற்றியலிகரம். (12)

சர்ப்பயாகச் சருக்கம் முற்றிற்று.

———

ஐந்தாவது

சிறப்புப் பாயிரம்

இந்த ஐந்தாஞ் சருக்கம் சிறப்புப்பாயிரமாக அமைக்கப் பட்டுள்ளது. இஃது பதினைந்து செய்யுட்களைக் கொண்டுள்ளது. இவற்றுள், சிறப்புப்பாயிரத் திலக்கணத்திற்கேற்ப விஷயங்கள் கூறப்பட்டுள்ளன காணலாம். I ஆக்கியோன் பெயர்—வியாசன். (செ : 3) II வழி—ஐந்தாம் மறையாயிருத்தற்கு; (செ : 5, 7) III எல்லை—பாரத தேசம் (5), IV நூற்பெயர்—பாரதக் கதை (5) V யாப்பு – 18 பர்வங்கள்; கதையனந்தம்; 18 அக்குரோணிசேனைகளின் வகுப்பு: 18 நாட்கள் போர் (செ : 7); VI நுதலிய பொருள்—பாரதக் கதை நிகழ்ச்சிகளின் சுருக்கக் குறிப்புகள் (செ : 8 முதல் 15 வரை); VII கேட்போர்—வைசம்பாயனர் சொற்றபடி ஜனமேஜயன் உள்ளிட்டோர் சபையினர் (6); VIII பயன்—துன்பம் அகலல் (7), IX காலம்—துவாபரயுகம் (14); [வியாசபகவான் மூன்றுவருட காலம் எப்போதும் தூங்காமல் பரிசுத்தராயிருந்து கொண்டு மகாபாரதத்தை ஆதிமுதல் சொன்னார்: விநாயகர் எழுதினார்] X களம்—ஜனமேஜயன் சபை (செ : 5, 15) XI காரணம்—'' நீடாழியுலகத்து மறைநாலொடைந்தென்று நிலைநிற்றற்காக'' (செ: 5, 7) இந்த மேற்குறித்த பதினெரு விஷயங்களைப் பற்றிக் கூறுவதாய் இப்பாரத நூலுக்கேற்பச் சிறப்பாக அமைக்கப்பட்ட முன்னுரையாக இருத்தலால் இந்தச் சருக்கம் சிறப்புப் பாயிரம் ஆயிற்று.

வேறு

1. வியாச முனிவர் தம் சீடரோடு ஜனமேஜயனிடம் வருதல்.

வந்தவ ரகன்றபினர் மாமுனிவர் தேவர்
நிந்தையறு தென்புலவர் நேர்கட னிரப்பி
புந்திமகிழ் வோடரசன் வாழ்பொழுதி னேர்நாள்
வந்தனைசெய் சீடரொடு வந்தனன்வி யாதன்.

(இ-ள்) வந்தவர் அகன்ற பினர்-(சர்ப்பயாகத்திற்கு) வந்திருந்தவர்கள் போய பின்னர், அரசன்-ஜனமேஜயராஜன், மாமுனிவர் தேவர் நிந்தையறு தென்புலவர்-சிறந்த அதிதிகளாகிய முனிவர்கள், தேவதைகள், பழிப்புக் கிடமில்லாத பிதிருக்கள்

(இவர்களுக்கு), நேர் கடன் நிரப்பி-செய்யவேண்டிய கடமைகளை ஒழுங்குபெறச் செய்து, புந்தி மகிழ்வோடு-மனக்களிப்புடன், வாழ் பொழுதின்-வாழ்ந்துவரும் நாளில், ஓர்நாள்-ஒருதினம், வியாதன்-வியாசபகவான், வந்தனைசெய் சீடரொடு-வழிபாடு செய்யும் சிஷ்யர்களுடன், வந்தனன்-(ஜனமேஜயன் சபைக்கு) வந்தனன்; (எ-று.)

"தென்புலத்தார் தெய்வம் விருந்து" என்றபடி கடன் நேர்ந்தமை கூறப்பட்டது. வியாதன்-வியாசன்: இடைப்போலி: வேதங்களை வகுத்தவனும், பிரம்மசூத்திரம், பாரதம், பதினெண் புராணம் முதலியன இயற்றியவனுமான முனிவன். வேதத்தையும் பிராமணர்களையும் அனுக்கிரகிக்கக் கருதி, வேதங்களை வகுத்ததனால், அவருக்கு 'வியாசர்' என்று பெயர் வந்தது. வியாசருடைய முக்கிய சீடர்கள்:—ஸுமந்து, ஜைமினி, பைலர், தம்புத்திரராகிய சுகர், வைசம்பாயனர்; இவர்களுக்கு நான்கு வேதங்களையும் ஐந்தாவது வேதமாகிய மஹாபாரதத்தையும் ஓதுவித்தார்.

இது முதல் நான்கு கவிகள்—சந்தக்கலிவிருத்தம். (1)

2. வியாசரை நோக்கி மன்னன் வினவல்.

மன்னனெதிர் கொண்டடி வணங்கிகட னூற்றி
மின்னுமணி பீடமிசை மேவிட விருத்தி
தன்னணையின் மீதவர்கள் சாற்றிட விருந்தே
உன்னரிய வியாதமுனி யோடிவை யுரைக்கும்.

(இ-ள்.) மன்னன்-ஜனமேஜயராஜன், எதிர்கொண்டு-எதிர் சென்று அழைத்து வந்து, அடி வணங்கி-திருவடிகளிற் பணிந்து, கடன் ஆற்றி-(சாத்திரப் பிரகாரம்) அர்க்கிய பாத்தியாசமனீயங்களைக் கொடுத்து உபசரித்து, (பின்னர்) மின்னு-விளங்குகின்ற, மணி பீடம் மிசை மேவிட-மாணிக்கங்களாலாகிய ஆசனத்தின்மீது பொருந்தியிருக்குமாறு, இருத்தி-எழுந்தருளப் பண்ணி, அவர்கள் சாற்றிட-அவர்கள் பணித்தபடியே, தன் அணையின்மீது-தனது அரசுக் கட்டிலின்மீது, இருந்தே-உட்கார்ந்து, உன்னரிய-நினைத்தற்கும் முடியாத (அளவுபடாத) மேன்மையையுடைய, வியாதமுனியோடு-வியாச முனிவனோடு,

இவை உரைக்கும்–இவ்வார்த்தைகளைக் கூறுபவனுனன்; (எ-று.) அவன் கூறியவற்றை மேலிற்கவியிற் காண்க.

உரைக்கும்-செய்யுமென் முற்று ஆண்பாலுக்கு வந்தது. (2)

3. பாரத யுத்தம் நிகழ்ந்தது ஏன் ? நுமக்கு விருப்பமோ ? என வியாசரை மன்னன் வினவல்.

பஞ்சவர்கள் நூற்றுவர்கள் பற்பலரு மாள
வெஞ்சம ரியற்றிட விரும்பீனை விக்கிற்
றுஞ்சுவர்கொல் அக்கொடுமை சூழுநினை யென்றே
தஞ்சமொ டுரைப்பமுனி சாற்றிடும் நகைத்தே.

(இ-ள்.) "(மாமுனியே!) விக்கில்-உமது ஒரு விக்கலில், துஞ்சுவர்-அத்தனைபேரும் மாள்வர்: (ஆதலின்) நினை அக் கொடுமை சூழும்-உம்மை அந்தப் பாதகக் கொடுமை சூழ்ந்து கொள்ளும்',, என்றே-என்று எண்ணியே,—" பஞ்சவர்கள் நூற்றுவர்கள் பற்பலரும் மாள-பாண்டவர்கள் ஐவர் கௌரவர் கள் நூறு பேர் இன்னும் பற்பல வீரர்கள் இவர்களனைவரும் (ஒருவரும் மிச்சமில்லாதபடி) இறந்தொழிய, வெம் சமர் இயற்றிட-கொடிய பாரதப் போரைச் செய்திட, விரும்பீனைகொல்-நீர் விரும்பி சங்கற்பித்தீர் போலும்; (நீர் தடுத்திருக்கலாமே என்பது குறிப்பு) [என்று], தஞ்சமொடு-தாழ்வோடு (மிக்க பணிவோடு) உரைப்ப-சொல்ல, முனி-வியாச முனிவன், நகைத்தே-சிரித்துக்கொண்டே, சாற்றிடும்-கூறுவானுயினன்; (எ–று.) அவன் கூறியதை மேலிற் கவியிற்காண்க.

உமது ஒரு மூச்சுக் காற்றில் அல்லது உமது ஒரு விக்கலெடுத் தலில் இத்தனை பேரும் ஒழிவரென்பது அம்முனிவனது தபோ பலம் பற்றி, உண்மையிலேயே, ஸத்யவதி சொற்படி திருதராஷ்டிரன், பாண்டு, விதுரர் என்ற மூன்று புத்திரர்களை யுண்டுபண்ணினவர் வியாசரே என்பது நினைக. முனிவன் நகைத்தது-தனக்குக் கொடுமை சூழும் என்று மன்னவன் நினைத்தது பற்றி: இஃது எள்ளல் பற்றியது, தஞ்சம்-தாழ்வு, எளிமை, பணிவு, இவை தோற்றும்படி உரைத்தான். சாற்றிடும்-செய்யுமென்முற்று. 'இயற்றிட விரும்பீனை' என்றவிடத்து, வியாசர் மகாபாரதம் செய்தமையும் அடங்கும். (3)

4 பாரதப்போர் நிகழ்ந்தது ஊழ்வினைபற்றியெனல்.

தாழ்வுறு தினத்தொருவர் சாற்றுநெறி கொண்டே
வாழ்பவரும் இன்றுபுவி மன்னவர்க ளேறே!
ஊழ்வினைக ளீதென வுணர்ந்திடுதி யென்ன
கேழ்முடிய னக்கதை கிளத்திடுதி யென்றான்.

(உ-ள்) (வியாச முனிவன்) ஏறே!–மன்னர்களுட் சிங்கம் போற் சிறந்தவனே! ஒருவர் தாழ்வு உறு தினத்து-ஒருவர்க்குத் தாழ்ச்சி [அவமானம்] ஏற்பட்ட காலத்து, (அவர்) சாற்று நெறி கொண்டே-சொன்ன மார்க்கத்தைக் கடைப்பிடித்தே, வாழ் பவரும்-வாழ்ந்து வருபவர்களும், இன்று-இப்போது, புவி மன்னவர்கள்-உலகையாளும் அரசர்களாக இருக்கிறார்கள்: [ஆகையால்] ஈது-பாரதப்போர் போனற இந்த நிகழ்ச்சிகளெல் லாம், ஊழ்வினைகள்-முன்னை செய்த விதியின் பயன்கள், என- என்று, உணர்ந்திடுதி-தெரிந்துகொள்வாய்: என்ன-என்று சொல்ல, (அது கேட்டு) கேழ்முடியன்–விளங்குகின்ற கிரீடத்தைத் தரித்த ஜனமேஜயன், அக் கதை-அந்தப் பாரதப் போர்க் கதையை, கிளத்திடுதி-சொல்லுவீராக (நான் கேட்க விரும்பு கிறேன்), என்றான்–என்று பிரார்த்தித்தான்: (எ-று.)

முதலிரண்டடிகளால் வியாசபகவான் ஜனமேஜயனுக்குக் குத்திக்காட்டியபடி. எப்படியெனில்–உதங்க முனிவர்க்குத் தக்ஷகனால் ஏற்பட்ட அவமானத்திற்காக அம் முனிவர் சொன்ன படியே அந்தத் தக்ஷகனை யொழிக்கமுற்பட்டு அவன் குலமுற்றும் நாசமடையும்படி சர்ப்பயாகத்தில் ஜனமேஜயன் தீக்கைகொண்டு இறங்கினனல்லவா! அந்தச் சர்ப்ப சத்திர யாகத்தில் அநேகம் நாகங்கள் தங்கள் வம்சங்களோடு அழிந்துபோயினவே: அந்தக் கொடுமை மன்னவனைச் சூழாதோ? அப்படிப்பட்டவன் இன்று புவி மன்னர்களுக்குள் ஏறுக விளங்குகின்றான்—என்று அவனே நாணும்படி பதிலிறுத்தவாறு குறிப்பிற் பெறவைத்தபடி, ஆகவே, இவை ஊழ்வினைகளின் பயன் என விதியின் வலிமை நிறுத்தியபடி. "ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினுந் தான் முந்துறும்" என்றது குறள். "நீர்வழிப்படுஉம் புணைபோல் ஆருயிர் முறைவழிப்படுஉம் என்பது திறம்படு காட்சியிற் றெளிந்தனம்" என்றது புறம். பரீட்சித்து கடலிடைக் காவலிட்டும் ஊழின்படி ஏழாம் நாள் மாய்ந்தானே! "விரிநிற

நாகம் விடருளதேனும், உருமின் கடுஞ்சினம் சேணின்றும் உட்கும், அருமையுடைய அரண்சேர்ந்தும் உய்யார், பெருமை யுடையார் செறின்'' என்றது நாலடியார். ஆக, ''ஊழ்வினைகள் இவ்வினைவுகளுக்கெல்லாம் காரணம்'' என உணர்த்தினர் வியாசர். ''கடுங் கருமத் தொடர் அந்தோ! யாங்குறினும் விடாது'' என்றது காஞ்சிப் புராணம். ''எனைப்பகையுற்றாரும் உய்வர் வினைப்பகை, வீயாது பின்சென் றடும்'' என்றார் திருவள்ளுவரும். கேழ்-ஒளி, வினைகள் ஈது-ஒருமைப் பன்மை மயக்கம். உணர்ந்திடுதி-முன்னிலையேவல்; கிளத்திடுதி-முன்னிலை வியங்கோள். (4)

வேறு

5. வைசம்பாயனன் பாரதக் கதையை ஜனமேஜயனுக்குச் சொல்லத் தொடங்குதல்.

அன்பொடு மன்னன் வினவலும் வியாத னரசுக்குத்
தன்பெரு சீடன் வைசம் பாயனைச் சாற்றிடுகென்
றின்புட னேதி யிருக்கை புகுந்தான் இறைக்கன்னேன்
நன்மறை யைந்தாம் பாரதக் காதை நவில்வா னால்.

(இ-ள்.) அன்போடு-விருப்பத்துடன், மன்னன்-ஜனமேஜயன் வினவலும்-கேட்டவுடன், வியாதன்-வியாசமுனிவன், தன் பெரு சீடன் வைசம்பாயனை-தனது சீடர்களுட் பெருமைமிக்க வைசம்பாயனனை, அரசுக்கு-மன்னனுக்கு, சாற்றிடுக-(பாரதக் கதையை முற்றும்) சொல்லிடுக, என்று—, இன்புடன் ஓதி-இனிமையாகச் சொல்லிக் கட்டளையிட்டு, இருக்கை புகுந்தான்-தமது ஆச்சிரமத்தை யடைந்தார்; அன்னேன்-அந்த வைசம்பாயனர், இறைக்கு-அரசனுக்கு, நன் மறை ஐந்தாம் பாரதக் கதை-நல்ல ஐந்தாம் வேதம் என்று போற்றப்படும் சிறப்பு வாய்ந்த மகா பாரதக் கதையினை, நவில்வான்-சொல்லத் தொடங்கினன்; (எ-று.)—'பாரதக்காதை' என்றதால், நூற்பெயரும், எல்லையும் சொன்னபடி.

ஐந்தாம் வேதமாகக் கருதப்படும் மஹா பாரதத்திற்கு மூலங்களாயுள்ள வேதங்கள்—ருக்- யஜுர், சாம, அதர்வணம் என்பன. வில்லிபுத்தூரரும் ''நீடாழியுலகத்து மறைநாலோடைந் தென்று நிலைநிற்கவே, வாடாத தவவாய்மை முனிராசன் மாபாரதஞ் சொன்னன்'' என்றார்:

சாற்றிடுகென்று-வியங்கோளின் அகரவீறு தொகுத்தல்.

இது முதல் இரண்டு கவிகள்-கலித்துறை. (5)

6. வைசம்பாயனர் கூறிய வழியைப் பின்பற்றியே சூதமுனிவர் நைமிசாரணிய ரிஷிகளுக்குப் பாரதக் கதையைச் சொல்லுதல் கூறும்.

அவ்வண நுமக்கிங் கறைகுது மென்றே யருட்சூதன்
செவ்விய முனிவர்க் கிசைப்ப வெடுத்தான் தேவியொடும்
வெவ்வழல் வேலான் சுசியி னிறைஞ்சி வினவிடலும்
ஒவ்வறு முனியா சிரியருள் கொண்டே யுரைசெய்வான்.

(இ-ள்,) வெவ் அழல் வேலான்-நெருப்புப்போல் ஜ்வலிக் கின்ற வேலாயுதத்தையுடைய ஜனமேஜயன், தேவியொடும்-தன் மனைவியான வபுஷ்டமையுடன், சுசியின் இறைஞ்சி-பரிசுத்தமாக வந்து வணங்கி, வினவிடலும்-(கதையைக் கேட்பதற்குத் தாம் சித்தமாயிருப்பதாகவும் அவர் பாங்கினையறிய) வேண்டுதலும்,— ஒவ்வறு முனி-ஒப்பற்ற அந்த வைசம்பாயனர், ஆசிரி அருள் கொண்டே-(தமது) குருவாகிய வியாசபகவானின் கிருபையை முன்னிட்டுக் கொண்டே, உரை செய்வான்-(மகாபாரதக் கதை யைச்) சொல்லத் தொடங்கினர்; அவ்வணம்-அந்தப் பிரகாரமே, அருட் சூதன்-கருணை நிறைந்த சூதமுனிவர், "நுமக்கு-உங்களுக்கு, இங்கு-இப்போது, அறைகுதும் என்றே-(மகாபாரதக் கதையைச்) சொல்லப்போகிறேன்" என்றே, செவ்விய முனிவர்க்கு-தகுதி படைத்த நைமிசாரணிய வாசிகளான ரிஷிகளுக்கு, இசைப்ப-(விரிவாகச்) சொல்ல, எடுத்தான்-தொடங்கினர்; (எ-று.)

சூதமுனிவர்-இவர் ரோமஹர்ஷணர் என்பவருடைய புத்திரர்; சூத குலத்தவர்: உக்கிரச்ரவஸ் என்னும் பெயருடையவர்: சிறந்த பௌராணிகர்: நைமிசாரண்யத்தில் சௌனகாதி முனிவர்களுக்குப் பாரதத்தைச் சொன்னவர் இவரே. சுசி-பவித்திரம், பரிசுத்தம். ஆசிரி-ஆசிரியர் என்பதில் 'அர்' விகுதி கெட்டது. இச் செய்யுளால் வினவினவர் கேட்டோர் தெரிவிக்கப் பட்டது. (6)

வேறு

7. நூல் வந்தவழி, பயன், யாப்பு இவைகள் கூறும்.

எக்கலியி னேருமி.ந் தெமதுகலி
யெனவயங்கு மெழுதி னேர்கள்
மிக்கபடித் தவர்செய்தோர் வினவினர்துன்
பகற்றுமைந் தாம் வேத மாகும்
தக்கபரு வங்களுமூ வாறுகுங்
கதையனந்தஞ் சாருந் தானை
அக்குரோணித் தொகைகளுமூ வாறும்போர்
திவசமுமூ வாறு மன்னே.

(இ-ள்.) எக்கலியினேரும்-எந்தச் சாத்திரத்தில் வல்லுநரும், இஃது-இந்தப் பாரதநூல், எமதுகலி-எங்களது சாத்திரஞ் சாற்றுவதாகும், என-என்று போற்றும்படி, வயங்கும்-விளங்குகின்ற, ஐந்தாம் வேதமாகும்—; (இதனை) எழுதினேர்கள்-படியெடுத்து எழுதினவர்கள், மிக்கபடித்தவர்-மூற்றும் நன்கு (விடாது) படித்தவர்கள், வினவினர்-கேட்டவர்கள், செய்தோர்-(அவர்கள் கேட்கும்படி) பிரவசனஞ் செய்தவர்கள், (இவர்களுடைய) துன்பு அகற்றும்-துன்பங்களைப் போக்கும்; [இதன் உள்ளடக்க யாப்பு] தக்க பருவங்களும் மூ ஆறு ஆகும்-பதினெட்டுத் தகுதியான பருவங்களைக் கொண்டதாகும்; கதை அனந்தம்-சொல்லப்பட்டுள்ள உபகதைகளோ அநேகமாகும்; சாரும் தானை-பாரதப் போருக்குச் சேர்ந்த சேனைகளின், அக்குரோணித் தொகைகளும்-அக்ஷௌஹிணித் தொகுப்பு எண்ணிக்கைகளும், மூ ஆறும்-பதினெட்டாகும்; போர் திவசமும்-போரிட்ட நாட்களும், மூ ஆறும்-பதினெட்டாம்; (எ-று.) மன், ஓ-ஈற்றசை.

பாரதத்தில் இல்லாதது எதுவும் இல்லை என்பது வழக்கு. ஐந்தாம் வேதமாதலின், துன்பத்தை அகற்றும் சிறப்புடைத்து. பாரதம் என்ற பெயரின் காரணத்தை யறிகிறவனை எல்லாப் பாபங்களும் விட்டுவிடுகின்றன. இப்போதும் மழைவேண்டி விராடபருவம் வாசித்துப் பிரவசனம் செய்வது கண்கூடு. பாரதம் என்ற இந்நூல் அந்தந்தப் பாகத்தின் விஷயத்தைக் குறிக்கும் சொற்களால்—18 பருவங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது: அவை—ஆதி பருவம், சபா பருவம், ஆரணிய பருவம், விராட பருவம், உத்தியோக பருவம், பீஷ்ம பருவம், துரோண பருவம், கர்ண பருவம், சல்லிய பருவம், ஸௌப்திக பருவம், ஸ்திரீ பருவம், சாந்தி பருவம், ஆநுசாஸநிக பருவம், அசுவமேத பருவம்,

ஆசிரமவாஸிக பருவம், மௌசல பருவம், மகாபிரஸ்தாந பருவம், ஸ்வர்க்காரோஹண பருவம் என்பன. பாரதம் இரண்டாயிரம் அத்தியாயங்களும் நூறு பருவங்களும் நூறாயிரம் ஸ்லோகங்களும் உள்ளனவாய் இருந்தன. அந்த நூறு பருவங்களையும் மஹரிஷி வியாசர் பதினெட்டுப் பருவங்களாக வகுத்தனர். குருக்ஷேத்திரப் போர்க்களத்தில் போரிட வந்த பாண்டவ கௌரவச் சேனைகளின் தொகை மொத்தம்—பதினெட்டு அக்குரோணிகளாம். [அவற்றுள் பதினொரு அக்குரோணிகள் துரியோதனனைச் சார்ந்த கௌரவர் படைத்தொகுதி; மீதி ஏழும் தருமனைச் சார்ந்த பாண்டவர் படைத் தொகுதி; இது மேலைக்கவியால் விசதம்]. ஒரு அக்குரோணி யென்பது—21870 தேர்கள், 21870 யானைகள், 65610 குதிரைகள், 109350 காலாட்கள் கொண்ட படைத்தொகுதி யாகும். பாரதப்போர் பதினெட்டு நாள் நிகழ்ந்ததென்பது பிரசித்தம். செய்தோர் வினவினர்-வினவினர் செய்தோர் என மாற்றிப் பொருள்கொள்க.

இதுமுதல் சருக்க முடியுமளவும் உள்ள ஒன்பது கவிகளும்-முதல் நான்குசீர்கள் காய்ச்சீர்களும் ஏனைய இரண்டுசீர்கள் மாச்சீர்களுமாகி வந்த அறுசீராசிரிய விருத்தம், (7)

8-15: எட்டுக்கவிகள்–ஒரு தொடர்: நூல்நுதலும் பொருள்களின் சுருக்கம் கூறும்.

8. நூல்நுதலும் பொருட் சுருக்கத்துள் பிரவேசம் கூறும்.

சொற்றதினத் தக்குரோணி பன்னென்று
மேழுமிகல் தொடங்கி மாள
நற்றருமன் முதலானோர் ஞாலம்பெற்
றரசளித்தார் நவில்ப ராசன்
பெற்றமுனி யிடைவிலக்கிற் பிசகிடுமோ
விதிச்செயல்கள் பிறங்கும் வேலோய்!
மற்றமுனி யுற்பவமும் வானவரோ
டரக்கருமண் வந்த வாறும்.

(இ-ள்.) சொற்ற தினத்து-குறித்த நாளன்று, அக்குரோணி பன்னென்றும்-[கௌரவர் படையைச் சேர்ந்த] பதினொரு அக்குரோணி சேனையும், ஏழும்-[பாண்டவர் படையைச் சேர்ந்த] ஏழு அக்குரோணி சேனையும், இகல் தொடங்கி-மாறுபட்டுப் போர் தொடங்கி, மாள-அழிந்துபோக, [இறுதியில்] நல் தருமன் முதலானோர்-நல்ல தருமபுத்திரன் முதலாய பாண்டவர்கள், ஞாலம் பெற்று-(தமக்குரித்தான) பூமியைப் பெற்று, அரசு

அளித்தார்-அரசாட்சிபுரிந்து வந்தார். பிறங்கு வேலோய்!-விளங்குகின்ற வேலாயுதத்தை யேந்தியுள்ள மன்னன் ஜனமே ஜயனே! [ஒருகால்] ஈவில் பராசன் பெற்ற முனி-சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற பராசர முனிவன் பெற்ற வியாச முனிவன், இடை விலக்கில்-[கதை சொல்லிவரும்போது] இடையில் புகுந்து விலக்கினால், விதிச் செயல்கள்-முறைப்படி நடந்த பாரத நிகழ்ச்சிகள், பிசகிடுமோ-முன் பின்னாக மாறிப் போகுமோ ? (அப்போது பார்த்துக்கொள்ளலாம்:) [இனி], மற்று அ முனி உற்பவமும்-அந்த வியாச முனிவனின் தோற்றமும், வானவரோடு அரக்கரும்-தேவர்களோடு அரக்கர்களும், மண் வந்த ஆறும்-பூமியில் தோன்றிய வகையினையும்; (எ-று)—கவனிப்பு:—இந்தச் செய்யுளினிற்றிலுள்ள 'ஆறும்' என்ற சொல் மேல் 9, 10, 11, 12, 13, 14, 15 ஆம் கவிகளில் வந்துள்ள "ஆறும்" என்ற சொல்லோடு தொடர்ந்து வந்து, இறுதியில் "யான் சொற்றிடுவல்" (செ: 15) என்ற முற்றோடு முடியும்.

முதலிரண்டடிகளில், போர் முடிந்து தருமராஜாவின் பட்டாபிஷேகம் சுருக்கமாகக் குறிக்கப்பட்டது. "வியாசன் இடைவிலக்கில்" என்றது அவர்க்குத்தான் பாரத வரலாறு முற்றும் தெரிந்தவராதலின். ஒருவர் கதை சொல்லிவரும்போது, மற்றொருவர் அந்தக் கதையினை நன்கு அறிந்தவராயிருப்பின், இடையில் மறித்து "அங்ஙனன்று, இப்படி நடந்தது" என்பது சகஜம். அப்போது கதையில் இடையிடு ஏற்படவே நிகழ்ச்சிகள் சற்று முன்னும் பின்னுமாகத் தடுமாறிப்போகப் பிரமேயம் உண்டு என்பது காட்டப்பட்டது. இது, வைசம்பாயனர் கதை கூறும் முனம் தம்மைத் தற்காப்புச் செய்துகொண்டது என்க. (8)

9. சந்திரவமிச தோற்றம் முதல் பாண்டு வனமெய்தும் வரை நிகழ்ச்சிகளின் சுருக்கம் கூறும்.

சீதமதி மரபுளிரு மரபியலும்
சந்தனுவின் செயலும் வியாதன்
சேதமுறு மரபோங்கச் செழுந்தருமச்
சந்தானஞ் செய்யா மூவர்
மேதினியி லுதித்ததுவும் வேந்தெழில்காந்
தாரிதனை வேட்டு நூறும்
ஏதமிகு புத்திரரை யீன்றதுவும்
பாண்டுவனத் தெய்து மாறும்.

(இ-ள்.) சீதம் மதி மரபுள்-குளிர்ந்த சந்திர வமிசத்தின்,

இரு மரபியலும்-இரண்டு கிளை வமிசங்களையும்; சந்தனுவின் செயலும்-சந்தனு மகாராஜனின் செயலையும்; வியாதன்-வியாச முனிவன், சேதம் உறு மரபு ஒங்க-அழிவுற்றுப் போகும்படியிருந்த வமிசத்தினை மீண்டும் ஒங்கி வளரும்படி, செழும் தருமச் சந்தானம் செய்யா-செழித்த புத்திரசந்ததியை யுண்டாகச் செய்து, [அதன் மூலம்] மூவர் மேதினியில் உதித்ததுவும்-மூன்று பேர்களைப் பூமியில் பிறக்கச் செய்ததையும்; [அவர்களுள் ஒருவனுகிய] வேந்து-அரசன் திருதராஷ்டிரன், எழில் காந்தாரிதனை-அழகு நிரம்பிய காந்தாரி யென்பவளை, வேட்டு-திருமணஞ் செய்து கொண்டு, ஏதம் மிகு-குற்றம் மிகுந்த [துஷ்டர்களாகிய] நூறும் புத்திரரை-நூறு பிள்ளைகளை, ஈன்றதுவும்-பெற்றதையும்; பாண்டு-(மற்றொருவனுகிய) பாண்டு என்னும் மன்னன், வனத்து எய்தும் ஆறும்-காட்டையடைந்த வகையையும்; (ஆகிய இவைகளைப் பற்றி); (எ-று.)—மேல் "யான் சொற்றிடுவல்" (செ : 15) என இயையும்.

சந்திரவமிசம் இரண்டு கிளையினது என்றது-(1) சந்திரனுக்குப் புதல்வனுகப் பிறந்த புதன் தொடங்கிவருவது. (2) சந்திர வமிசத்து யயாதி மன்னவனுக்குப் புதல்வனுகப் பிறந்து அவனுல் "பனிமதிமரபிற்கு அடியும் நீ இனி" எனப் போற்றப்பட்ட பூரு தொடங்கிவருவது. வியாழன் என்னும் தேவகுருவின் மனைவியான தாரையைச் சந்திரன் கண்டு காதல்கொண்டு அன்னளோடு கூடிப் புதன் என்ற புதல்வனைப் பெற்றுன் என்பது ஈண்டு அறியவேண்டுவது. பூரு என்பவன்—யயாதிக்குச் சன்மிட்டையிடம் தோன்றியவன். சந்தனுவின் செயல்—கங்கையாளை மணந்து வீடுமனைப் பெற்று, அவனுல் வலிஞர் தலைவன் பெண்ணுக வளர்க்கப்பெற்ற காளியை மணந்தமை. வியாதன் சந்தானம் செய்தமை—அன்னை காளி சொற்படி வியாசன் திருதராஷ்டிரன், பாண்டு, விதுரன் என்ற மூவரையும் சந்ததி விருத்திக்காக உண்டாக்குதல். காந்தாரி திருதராட்டிரனிடம் ஈன்றது—துரியோதனுதியராகிய நூறு பிள்ளைகளை: இவளுக்கு நூறு மகவான கருவினுக்கு வரமளித்தவன் வியாசன். பாண்டு வனத்தெய்தியது—கிந்தமன் என்ற முனிவன் கொடுத்த சாபம் பற்றி. (இவற்றின் விவரம் மேலே கூறப்படும்). (9)

10. பாண்டவர் வாரணவதம் புகுந்ததுமுதல் வீமன் இடும்பியிடம் கடோற்கசனைப் பெற்றவரை நிகழ்ச்சிகளின் சுருக்கம் கூறும்.

பஞ்சவரூர் புகுந்ததுவும் பயந்தசுத
ருடனவரைப் பரித்து தாதை
செஞ்சிலேயா சிரியன்பாற் றெரித்ததுவும்
அரக்ககத்திற் சேர்த்து மாறும்
வஞ்சனையோர்ந் தனிலன்மகன் மடுத்தெரிதாய்
துணைவ ருடன் வனத்திற் போயங்
கஞ்சில்பொரு மிடும்பனிகுத் தவனிளையாள்
தழீஇயொரு சேய் அளித்த வாறும்.

(இ–ள்.) பஞ்சவர்-பாண்டவர் ஐவரும், ஊர் புகுந்ததுவும்–வாரணவதம் என்ற ஊருள் (அத்தினபுரியை விட்டுப்) புகுந்ததையும்; பயந்த சுதருடன்-பெற்றெடுத்த நூறு பிள்ளைகளுடன், அவரை-அந்தப் பஞ்சபாண்டவரையும், பரித்து-தாங்கி (வளர்த்து வந்த), தாதை-தந்தையாகிய திருதராட்டிரன், செம் சிலை ஆசிரியன் பால்-சிறந்த வில்லாசிரியனுகிய துரோணாசாரியனிடத்தில், தெரித்ததுவும்–(வில்வித்தை முதலானவை கற்றுக்கொள்ளும்படி) அனுப்பியமையும்; அரக்கு அகத்தில் சேர்த்தும் ஆறும்-(வாரணவதத்தில் கட்டின) அரக்கு மாளிகையில் தங்கச் செய்த விதத்தையும்; அனிலன் மகன்-வாயுபுத்திரனை வீமன், வஞ்சனை ஓர்ந்து-[அரக்கு மாளிகையில் தங்கச்செய்த] வஞ்சகத்தை ஆராய்ந்து தெரிந்துகொண்டு, எரிமடுத்து-தானே நெருப்பை வைத்துவிட்டு, தாய் துணைவருடன்-தாயாகிய குந்திதேவி, சகோதரர்களாகிய தருமன் முதலியோருடன், வனத்தில் போய்-இடிம்பவனம் என்ற வனத்தில் சென்று, அங்கு-அந்த வனத்தில், அஞ்சு-அச்சம் என்பது, இல்-இல்லாது, பொரும்-சண்டையிட்ட, இடும்பன்-இடும்பன் என்னும் அரக்கனை, இகுத்து-கொன்று, அவன்-அவ் இடும்பனது, இளையாள்-தங்கையாகிய இடும்பி என்ற அரக்கியை, தழீஇ-[வீமன்] சேர்ந்து கலந்து, ஒருசேய்-ஒப்பற்ற பிள்ளையாகிய கடோற்கசனை, அளித்த ஆறும்-பெற்ற வகையினையும்; (ஆகிய இவைகளைப் பற்றி); (எ-று).—மேல் ''யான் சொற்றிடுவல்'' (செ : 15) என இயையும்.

பஞ்சவர் ஊர் புகுந்தது-துரியோதனன் பாண்டவர்மேல் பொறுமையினால் கொடும்பகைமை பாராட்டவே, திருதராட்டிரன்

தனியே வாரணவதநகர் அமைத்து அதனில் புகச்செய்தமை: வாரணவதம் காசியென்ப. துரோணனை வில்லாசிரியராக நியமித்தமை வீடுமனுகிய பாட்டன் எனினும், திருதராட்டிரன் செயலாக இங்குக் கூறப்பட்டுள்ளது. அரக்ககம்-அரக்குமாளிகை: இதனை வாரணவதத்தில் கட்டியபோதே அதன் அமைப்பை நுட்பமாக ஊகித்து உணர்ந்து பாண்டவர்கள் அதனைக்கட்டுதற்குக் காரணமாயிருந்த புரோசனனைச்சங்கித்து அவன் வஞ்சனையை யறிந்தனர். அனிலம்-காற்று:வாயு. வீமசேனன் காற்றின் மகன். மந்திரத்தால் வாயுதேவனைக் குந்தி வரவழைத்துக் கூட, அவளிடம் உதித்தவன் வீமன். வனம்-இடிம்பவனம். இடிம்பன் என்னும் இராக்கதன் வசிக்கும் வனம்: அவனது தங்கை இடும்பி என்னும் அரக்கி. அஞ்சு+இல்+பொரும்=அஞ்சில் பொரும்: 'அஞ்சு' என்பது-அஞ்சுதல் என்ற தொழிற்பெயர் விகுதி கெட்டு நின்றது; எனவே, முதனிலை தொழிற்பெயர். இல்-இல்லாது. சேய்-கடோற்கசன். [கடம்-குடம்: உத்கசம்-மயிரில்லாதது: இவனுடைய குடம்போன்ற தலை மயிரின்றியிருந்ததனால் கடோத்கசன் என்று இவனுக்குப் பெயரிடப்பட்டதென்று வடநூல் கூறும்]. (10)

11. **வேத்திரகீய நகரம் சேர்ந்துவைகியது முதல் பாண்டவர் வனவாசம் செய்தவரை நிகழ்ச்சிகளின் சுருக்கம் கூறும்.**

அந்தணர்ஊர் வைகியதும் அரும்பகனை
யட்டதுவும் அணிபாஞ் சாலன்
பைந்தொடியை மணந்ததுவும் பயந்தவன்மீட்
டரசருத்தம் படைப்ப ஐவர்
இந்திப்பி ரத்தமதி லிருந்தியற்றும்
பான்மைகளும் இதற்குள் ளாற்ரு
துந்தகிகே தழைத்துவலி னுரிமைகொள
விழந்தெரிகா னுறையு மாறும்.

(இ-ள்.) அந்தணர் ஊர் வைகியதும்-வேத்திரகீயம் என்னும் ஊரினைச் சேர்ந்து அங்கு (ப் பிராமண வேடங்கொண்டு) தங்கியதையும்; அடும் பகனை அட்டதுவும்-(எல்லாரையும்) கொன்று தின்றுவந்த பகாசுரனைக் கொன்றதையும்; அணி பாஞ்சாலன் பைந்தொடியை ஐவர் மணந்ததுவும்-அழகு பொருந்திய பாஞ்சால தேசத்து மன்னனுகிய துருபதனின் மகளாகிய திரௌபதியைப் பாண்டவர் ஐவர் திருமணஞ்செய்துகொண்டதையும்; பயந்தவன்

மீட்டு-பெற்ற தகப்பனுகிய துருபதராஜன்மேல், அரசர் உத்தம படைப்ப-(துரியோதனன் தூண்டுதலால்) அரசர்கள் போர் தொடுத்ததையும்; ஐவர்-பஞ்ச பாண்டவர்கள், இந்திப்பிரத்தம தில் இருந்து இயற்றும் பான்மைகளும்-இந்திரப்பிரஸ்த நகரி லிருந்து கொண்டு அரசாட்சி புரிந்துவந்த வகைகளையும்; இதற்கு-அவர்கள் அரசுபுரிந்து அடைந்த மேன்மைகளுக்கு, உள் ஆற்ருது-மனம் பொருமல் (கொதித்து), உந்து அகி கேது-மார்பினல் ஊர்ந்துசெல்லும் பாம்பினைக் கொடியாகவுடைய துரியோதனன், அழைத்து-(சூதாட்டத்திற்கு) அழைத்து, வலின்-பலாத்காரமாக, உரிமை கொள-அப்பாண்டவர்களின் உரிமைகளனைத்தையும் கவர்ந்துகொள்ள, இழந்து-அவற்றைத்தவற விட்டு, எரி கான் உறையும் ஆறும்-அழலுகின்ற காட்டிலே (பன்னிரண்டு வருடங்கள்) வசிக்கும் வகையினையும்; (ஆகிய இவைகளைப் பற்றி); (எ-று.) மேல் "யான் சொற்றிடுவல்" (செ : 15) என இயையும்.

அந்தணர் ஊர்-வேத்திரகீயம் என்பது. இனி, பாண்டவர் சேர்ந்த நகரம் ஏகசக்கரபுரம் என்பதும், அங்கு இவர்கள் அந்தணர் உருக்கொண்டு உறைந்த இடம் வேத்திரகீயம் எனப் படும் என்பதும் வியாச பாரதத்தால் பெறப்படும். பைந்தொடி-பண்புத்தொகையன்மொழி. உத்தம்-யுத்தம்: முதற்போலி: இனி உயுத்தம் என்பது உத்தம் எனக் குறைந்தது எனவுமாம். "படைப்ப" என்றதால் துரியோதனன் தூண்டினன் என்பது பெறப்பட்டது. இந்திப்பிரத்தம்-இந்திரப்பிரத்தம் என்பதன் சிதைவு. இந்த்ரப்ரஸ்தம் என்ற வடமொழி, தமிழில் இந்திரப் பிரத்தமென விகாரப்பட்டது. இந்திரன் விசுவகர்மனைக்கொண்டு இந்நகரம் அமைத்தான். ஆகவே, இந்திரன் ஏவுதற்கருத்தா வாயினுதலால், அவன் பெயரால் இதற்கு இந்திரப்பிரத்தம் எனப் பெயரிட்டான் கண்ணபிரான் என்க. அங்கிருந்து இயற்றும் பான்மைகள்-திக்குவிசயம் செய்தமை, இராசசூய யாகம் செய்தமை போல்வன. அகி-பாம்பு: கேது-கொடி: கொடி யுடையானுக்கு இலக்கணை. துரியோதனன் நாகக்கொடி யுடையவன். வலின்-பாச்சிகை கொண்டு எனினுமாம். (11)

12. ஒருவருட அஜ்ஞாதவாசம் செய்தது முதல் கண்ணன் தூதுபோயும் பயனுரு துரியோதனன் போருக்கு இசைந்த வரை நிகழ்ச்சிகளின் சுருக்கம் கூறும்.

மச்சபுரத் தொருவருட மிருந்தியற்றும்
வண்மைகளும் மன்னர் மன்னன்
அச்சமற நிரைகொள்ள ஐவரதை
மீட்டதுவும் அபிமற் கண்ணல்
நச்சுறழ்கண் ணுத்தரையை நல்கியதும்
சுயோதனன்பால் நடந்து மாயோன்
இச்சையிற்சந் திசைத்ததுவும் ஈயேன்மண்
ணெனவமருக் கிசையு மாறும்.

(இ-ள்) மச்சபுரத்து-மத்ஸ்ய தேசத்துத் தலைநகராகிய விராட நகரத்தில், ஒரு வருடம் இருந்து இயற்றும் வண்மைகளும்-ஒரு வருட காலம் மறைந்திருந்து (அஜ்ஞாதவாசஞ்செய்து) பாண்டவர்கள் செய்த நற்செயல்களையும்; மன்னர் மன்னன்-ராஜாதிராஜனை துரியோதனன், அச்சம் அற-பயமின்றி, நிரை கொள்ள-(விராட மன்னனின்) பசுக் கூட்டங்களைக் கவர்ந்து கொள்ள, அதை-அப் பசுக்கூட்டங்களை, ஐவர் மீட்டதுவும்-பஞ்ச பாண்டவர்கள் திரும்பக் கைக்கொண்டு விராடமன்னனுக்கு ஈந்த வகையினையும்; அபிமற்கு-அபிமன்யுவுக்கு, அண்ணல்-அந்த விராட மன்னன், நச்சு உறழ் கண் உத்தரையை-பாம்பின் விடம் போலக் கண்டாரைத் தன் அழகாலே வருத்தும் கண்களைப்படைத்த உத்தரை என்னும் தன் புத்திரியை, நல்கியதும்-திருமணஞ் செய்துகொடுத்ததையும்; மாயோன்-கண்ணபிரான், சுயோதனன்பால் நடந்து-துரியோதனனிடத்துக்குத் தூது சென்று, இச்சையில்-தன் விருப்பப்படியே, சந்து இசைத்ததுவும்-சமாதானஞ்செய்துகொள்ள வற்புறுத்தியதையும்; (அதற்கு மாறுகத் துரியோதனன்) மண் ஈயேன் என-நாடு கொடுக்கமாட்டேன் என்று சொல்லி, அமருக்கு-(குருக்ஷேத்திரத்தில் நடக்கப்போகும்) போருக்கு, இசையும் ஆறும்-சம்மதம் தெரிவித்த வகையையும்; (ஆகிய இவைகளைப் பற்றி); (எ-று.)—மேல் "யான் சொற்றிடுவல்" (செ : 15) என இயையும்.

பாண்டவர்கள் மறைந்திருந்த ஒருவருடகாலம் விராடராஜ்யம் மிகவும் செழிப்பாக வளமுற்றிருந்தது. துரியோதனன் நிரை கொண்டது அந்தப் பாண்டவரை வெளிப்படுத்துதற்காக, அருச்சுனன் மகன் அபிமன்யுவுக்குத் தன் மகள் உத்தரையை

விராட மன்னன் மணஞ்செய்து கொடுத்தமைக்கு ஒரு காரணம்—கவர்ந்த ஆநிரையைப் பேடியாகவிருந்த அருச்சுனன் மீட்டுக் கொடுத்தமை: மற்றும் இதனைச் சிறப்பாக எடுத்துக்கூறியது—பரீட்சித்தின் தோற்றத்திற்கு உத்தரை தாயாய்க் காரண மாவதும், அந்தப் பரீட்சித்தின் பிள்ளை கதை கேட்கும் ஜனமே ஜயன் ஆவதும் என்க. சுயோதனன்-துரியோதனனைக் காட்டும். இந்த வடசொல்—நன்கு [வெற்றியுண்டாகப்] பொருபவன் என்று பொருள்படும். மண் ஈயேன் என்றவிடத்து—"ஈயிருக்கும் இட மெனினும் இப்புவியில் யான் அவர்க்கு அரசு இனிக்கொடேன்" என்றது நினைக: (வில்லி: கிருட்டினன் தூது:114). ஐவர்-தொகைக் குறிப்பு. நிரைமீட்டது-அருச்சுனன் செயலாயினும் ஒற்றுமை நயம்பற்றிக் கூறப்பட்டதென்க. (12)

13. பாரதப்போர் ஆற்றியது முதல் திருதராட்டிரன் தேவியுடள் மோக்ஷம் சேர்ந்தவரை நிகழ்ச்சிகளின் சுருக்கம் கூறும்.

அவ்வுரைவந் தரிபுகல ஐவர்வெகுண்
டனிகமுடன் அரும்போ ராற்றித்
தெவ்வரைவென் றரசியற்றுஞ் சீர்மையெலாம்
வீடுமனுற் றெளிந்து மேலும்
ஓவ்வவளித் தயமேத முயற்றியதும்
அரிதுவரைக் குறப்பின் றூயும்
செவ்விழியி லானுமவன் தேவியுங்கான்
பயின்றுகதி சேரு மாறும்.

(இ-ள்.) அ உரை-[நாடுகொடாது போர் புரிவேன் என்று துரியோதனன் சொன்ன] அந்த வார்த்தைகளை, அரி வந்து புகல-விஷ்ணுவாகிய கண்ணபிரான் வந்து சொல்லவும், ஐவர் வெகுண்டு-பாண்டவரைவரும் கோபித்து, அனிகமுடன்-தமது சேனைகளோடு சென்று அவர்கள் சேனைகளோடு, அரும்போர்-ஆற்றி-செயற்கரிய போரினை [ப் பதினெட்டு நாட்கள்] செய்து, தெவ்வரை வென்று-பகையரசர்களை யெல்லாம் ஒடுக்கி வெற்றி கொண்டு, அரசு இயற்றும் சீர்மை எலாம்-அரசாட்சி செய்யும் சீரிய முறைமைகளையெல்லாம், வீடுமனுல் தெளிந்து-(பாட்டனு ராகிய) பீஷ்மரால் தெளிய அறிந்து,—மேலும்-மற்றும், ஒவ்வ-பொருந்தும்படி, அளித்து-[அவரவர் தகுதிக்கேற்பக்] கொடுத்து, அயமேதம்-அசுவமேத யாகம், முயற்றியதும்-செய்ததையும்; அரி-விஷ்ணுவாகிய கண்ணபிரான், துவரைக்கு உற-(தனது) துவாரகாபுரிக்குச் செல்ல, பின்-பின்னர், தாயும்-குந்திதேவியும்,

செவ்விழி இலானும்-குருடனாகிய திருதராட்டிரனும், அவன் தேவியும்-அவனது மனைவியாகிய காந்தாரியும், கான் பயின்று-காட்டிற்குச் சென்று, (தவமியற்றிக்) கதி-மோக்ஷத்தை, சேரும் ஆறும்-அடைந்தவகையினையும்; (ஆகிய இவைகளைப்பற்றி); (எ-று.)—மேல் "யான் சொற்றிடுவல்" (செ : 15) என இயையும்.

அம்புப்படுக்கையில் படுத்துக்கொண்டே பாட்டனாராகிய பீஷ்மர் தருமர் முதலியோர்க்கு அரசியல் தருமநெறிகள் உபதேசித்தமை பிரசித்தம். அசுவமேதம் முயற்றியது-க்ஷத்திரியர்க்குரிய தருமம் பற்றி. துவரை-துவாரகை என்பதன் மரூஉ. (13)

14. யாதவகுலம் அழிந்தமைமுதல் கலிவந்து தோன்றியது வரை நிகழ்ச்சிகளின் சுருக்கம் கூறும்.

முற்றியம ரியாதவர்கள் முடிந்தவுரை
கேட்டுநரன் மொழிது வாரைக்
குற்றுமட வார்தமைக்கொண் டூர்சேர்ப்பான்
வருநெறியி லுருத்த வேடர்
சுற்றியதும் வில்வளையாச் சோர்ந்தவன்போந்
திவைமுழுதுந் துணைவர் கேட்பச்
சொற்றதுவும் மற்றதுவும் தோமுறுவெங்
கலிவந்து தோன்று மாறும்.

(இ-ள்.) அமர் முற்றி-[ஒருவரோடொருவர் கோரைப்புல்லால் அடித்துக்கொண்டு] போரைத் தமக்குள் முடிவுறச்செய்து, யாதவர்கள்-யதுகுலத்தவர்கள், முடிந்த உரை கேட்டு-எல்லோரும் அழிவுற்ற செய்தி கேள்விப்பட்டு, நரன்-அருச்சுனன், மொழி-சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற [யாதவரின் தலைநகராகிய], துவாரைக்கு உற்று-துவாரகாபுரியினையடைந்து, மடவார் தமைக் கொண்டு-அங்கிருந்த யாதவஸ்திரீகளைக் காக்கவேண்டி அவர்களை யழைத்துக்கொண்டு, ஊர்சேர்ப்பான்-அத்தினபுரிக்குக் கொணர்ந்து சேர்க்க வருபவன், வருநெறியில்-தான் வந்துகொண்டிருந்த வழியிடையில், உருத்த வேடர்-சினங்கொண்டு [தன்மேல்] வந்த வேடர்கள், சுற்றியதும்-தன்னை வளைத்துக்கொண்டதையும்; வில்வளையா-காண்டீபம் என்னும் தன் [ஒப்பற்ற] வில்லை வளைத்துப்போரிட்டும் [அவ்வேடர்களை வளைக்கமுடியாமல்], சோர்ந்து-

கூறப்படைந்து, அவன்-அந்த அருச்சுனன், போந்து-அத்தினபுரம் சார்ந்து, இவை முழுதும்-நடந்த இந்த விருத்தாந்தங்கள் முழுவதையும், துணைவர் கேட்ப-சகோதரர்களாகிய தருமன் வீமன் நகுலன் சகாதேவன் முதலியோர் கேட்கும்படி, சொற்றதுவும்-(அவர்கட்குச்) சொல்லியதையும்; மற்றதுவும்-மற்று கிருஷ்ணன் தன்னடிச்சோதிக்கு எழுந்தருளியமையையும்: தோம் உறு வெங் கலி-தோஷம் நிறைந்த கொடிய கலிபுருடன், வந்து-தலைகாட்டி, தோன்றும் ஆறும்-நெருங்கும் விதத்தையும்; (ஆகிய இவைகளைப் பற்றி; (எ-று.)—மேல் "யான் சொற்றிடுவல்" (செ : 15) என இயையும்.

யாதவ குலத்தினர் தங்களுக்குள்ளேயே ஒருவர்க்கொருவர் மாறுபட்டு ஒழிந்துபோவர் என்பது சாபம். நாராயணனாகிய கிருஷ்ணன் மறைந்த பின்னர் சூரனாகிய அருச்சுனன் வலியிழந்து அவன் காண்டீபமும் வலியற்றுப்போயிற்று. இதனால் தெய்வ பலத்தின் வீறு தோன்றவைத்தபடி. "மற்றது" என்றது—கிருஷ்ணன் மறைவை வாய்விட்டுச் சொல்லவும் இயலாது சோகம் மிக, வெறுமனே "அது" எனச் சுட்டியொழிந்தார். துவாபரயுகம் முடிந்து கலி தலைகாட்டத் தொடங்கியதும் தருமர் முதலோர் ஸ்வர்க்கம் புகுந்தனர் என்பது அறியவேண்டுவது. (14)

15. பாண்டவர் வைகுந்தம் அடைந்தமை கூறி நிகழ்ச்சிகளின் சுருக்கத்தை முடித்தல் கூறும். மற்றும், ஜனமேஜயன் கேட்ப வைசம்பாயனர் வியாசரின் தோற்றம் சாற்றத் தொடங்குதல்.

பாண்டவர்க ளினியிருக்கிற் பழிப்பெனமா
துடன்றுறந்து பரீச்சித் தென்பான்
ஆண்டிடுவான் புவிமௌலி யணிந்திருத்தி
வைகுந்த மடையு மாறும்
தூண்டுபரித் தேரோய்! யான் சொற்றிடுவல்
எனவியாதன் தோற்றஞ் சாற்ற
வேண்டுமுன ரென்றிறைஞ்சும் வேந்தனுக்கீ
தாய்ந்தவனும் விளம்ப லானன்.

(இ-ள்). பாண்டவர்கள்- (தருமநெறியே கருதி வாழ்ந்த) பாண்டவர்கள் ஐவரும், இனி இருக்கில் பழிப்பு என-இனி, கலிதலை

காட்டியபின் இப்பூவுலகத்திருத்தல் தமக்குத்தகாது பழிப்புக் கிடனுகும் என்று, மாதுடன்-திரௌபதியோடு, துறந்து-அரசாட்சியைத்துறந்து (காடுசெல்லு முன்னர்)—பரீச்சித்து என் பான்-தமது வமிசத்துத் தோன்றிய அபிமன்யுவின் மகனுகிய பரீட்சித்து என்பவனே, புவி ஆண்டிடுவான்-பூமியை ஆளும் பொருட்டு, மௌலி அணிந்து-பட்டாபிஷேகஞ்செய்து முடிசூட்டி, இருத்தி–அரியாசனத்தில் அமர்த்தி, (பின் தாம்) வைகுந்தம் அடையும் ஆறும்-வைகுந்தஞ் சேர்ந்த வகையும்;-தூண்டு பரித் தேரோய் !—விரைந்து செலுத்தும் குதிரைகள் பூட்டிய தேரை யுடைய ஜனமேஜயனே ! (உமக்கு) யான்—, சொற்றிடுவல்-விரி வாகச் சொல்லப்போகிறேன், என-என்று, வைசம்பாயனர் சொல்லி முடிக்க,— [அதனைக்கேட்ட மன்னன் ஜனமேஜயன்] முனர்-(அதற்கு) முன்னதாக, (எனக்கு), வியாதன் தோற்றம் சாற்றவேண்டும் என்று-வியாசபகவானுடைய பிறப்பு முதலான வரலாற்றைப்பற்றிச் சொல்லவேண்டும் என்று பிரார்த்தித்து வணங்க, இறைஞ்சும்- (அங்ஙனம்) வணங்கும், வேந்தனுக்கு-மன்னனுக்கு, ஈது-இதனை, ஆய்ந்து-நன்கு ஆலோசித்து, விளம்பல் ஆனன்-சொல்லத்தொடங்கினன்; (எ–று).

கலிகாலம் வந்து விட்டதைச் சில நிகழ்ச்சிகளாலே அறிந்த தருமபுத்திரர் தமது சகோதரரோடும் திரௌபதியோடும் சுவர்க் காரோஹணத்திற்கு(வைகுந்தம் ஏறிச்செல்வதற்கு)த் திட்ட மிட்டுப் பரீட்சித்தை மன்னனுக முடிசூட்டினர். அணிந்து-அணி வித்து என்க. சொற்றிடுவல்-தன்மை யொருமை விகுதிமுற்று. முனர்-முன்னர்: தொகுத்தல், ஆய்ந்து விளம்பலுக்குக் காரணம்-தனது குருவாகிய மஹான் ஆதல் பற்றி. தூண்டு பரித்தேரோய் ! என்ற விளி–யானும் பாரதக் கதையை விரைவாகச் செலுத்தப் போகிறேன் என்ற உட்கருத்தினது: எனவே, அந்த விளி-கருத் துடையடைமொழி. ஈற்றடி-அடுத்த சருக்கத்துக்குத் தோற்று வாய் செய்தபடி- (15)

சிறப்புப் பாயிரம் முற்றிற்று.

———

ஆருவது

வியாதர் உற்பவச் சருக்கம்

வியாச முனிவருடைய பிறப்பைப் பற்றிக் கூறும் சருக்கம் என்று பொருள்படும். உற்பவம்-பிறப்பு.

1. சேதிநாட்டரசன் உபரிசரவசு வேட்டைக்குச் செல்லல்.

மாதருறுப் பினைக்காட்டும் வாவியுமஞ்
சாயலெனி வாக்குங் காட்டும்
சீதமலர்ப் பொழிலுநடைத் திறங்காட்டுந்
தண்பணையுந் திகழ்ந்து தோன்றுஞ்
சேதிவள நாடளிக்குந் திறல்வசுமன்
னவன்கருக்கொ டேவிக் கூட்ட
மேதைகவர்ந் திடக்கான்போய் வேட்டஞ்செய்
திரவொருசார் மேவுங் காவல்.

(இ-ள்). சேதி வள நாடு-சேதியென்கிற பெயர் பூண்ட வளப்பம் பொருந்திய நாட்டில், மாதர் உறுப்பினைக் காட்டும் வாவியும்-பெண்டிருடைய பலவகை உறுப்புக்களையும் (தமது பூக்களாலும் இலைகளாலும் தண்டுகளாலும்) ஒப்புச்சொல்லிக் காட்டும் தடாகங்களும்; அம் சாயல் தொனி வாக்கும் காட்டும் சீதம் மலர்ப்பொழிலும்-அழகிய-சாயலினையும், குரலினையும், வாக்கினையும் (தம்மிடத்துப் பயிலும் மயில், குயில், கிளியிவைகளால்) ஒப்புச்சொல்லிக்காட்டும் குளிர்ச்சிபொருந்திய பூஞ் சோலைகளும்; நடைத்திறம் காட்டும் தண்பணையும்-மென்மையான நடையின் அழகினை(த் தம்மிடத்துப் பயிலும் அன்னம், சூல் கொண்ட வலம்புரி இவைகளால்) ஒப்புச் சொல்லிக் காட்டும் குளிர்ந்த வயல்களும், திகழ்ந்து தோன்றும்-விளங்கியிருப்பனவாம்: (அத்தகைய நாட்டினை) அளிக்கும்-அரசாட்சிசெய்து பாதுகாக்கின்ற, திறல் வசு மன்னவன்-வலிமைபடைத்த உபரிசரவசு என்னும் அரசனது, கரு-கருப்பத்தை, கொள்-கொள்வதற்குச் சித்தமாயிருந்த, தேவி-தேவியாகிய கிரிகையோடு, கூட்டம்- [நேரவிருந்த] கலவியை, மேதை-(அவனது) புத்தியானது, கவர்ந்திட-வேறுவழியில் திருப்பிச் செலுத்திட, (அவன் காமம் விடுத்து), கான் போய்-காட்டிற்குப் போய், வேட்டம் செய்து-விலங்குகளை

வேட்டையாடிக் கொன்று, இரவு-அன்றைய இரவினைக்கழிக்க, ஒருசார்-ஒரு பக்கத்தில், காவல் மேவும்-பாதுகாப்பான இடத்தைப் பொருந்தினன்; (எ-று). 'காவில்' எனவும் பாடம், கொள்ளலாம்.

தடாகங்களில் பூத்துள்ள செந்தாமரை மலர், குவளை, ஆம்பல், செவ்வல்லி இவைகள் முறையே மாதர்களின் முகம், கண், வாய், அதரம் இவற்றைக் காட்டுவன, ஆங்குப் பரவியுள்ள தாமரை யிலை, தண்டு, பொகுட்டு இவை முறையே மாதர்களின் வயிறு, இடை, முலை இவற்றைக் காட்டுவன. அதனுள் துள்ளிப்பிறழும் வாளை கயல்மீன் இவைகள்-மாதர்களின் கண்கள் பிறழ்ச்சியைக் காட்டுவன. அரவு-அல்குல் காட்டும்: வரால்-கணைக்கால் காட்டும்: கெண்டை-விழிகாட்டும். தாமரையில் பள்ளிகொள்ளும் சக்கரவாளங்கள் மாதர்களின் கொங்கையைக் காட்டும். இங்ஙனமே விரித்துக்கொள்க. சாயலுக்கு-மயில்: ''மயில் மயில் குளிக்குஞ்சாயல்'' என்றது சிறுபாணாற்றுப்படை. (வரி: 16) தொனிக்கு-குயில்: ''பஞ்சமத்தில் கூவும்''. வாக்குக்கு-கிளி: ''பா கொக்குஞ்சொல் பைங்கிளியோடும் பலபேசி'' என்றார் கம்பரும்: நடைக்கு-அன்னம்: ''அஞ்சல்மடவனமேl உந்தன் அணிநடையும், வஞ்சியனையார் அணிநடையும்-விஞ்சியது, காணப்பிடித்தது காண் என்றான் களிவண்டு, மாணப் பிடித்த தார்மன்'' என்ற நளவெண்பா நினைக. மற்றும் ''தோகைக் கொம்பின் அன்னவர்க் கன்னம் நடை தோற்றுப், போகக்கண்டு வண்டினம் ஆர்க்கும் பொழில் கண்டார்'' என்றான் கவிச்சக்கரவர்த்தியும். சூல் கொண்ட சங்குப் பூச்சிகளும்—ஒல்லிதாய் பக்க அசைவுகளைக் கொண்டு மெல்ல நடக்கும் மாதர்களுக்கு நடையில் ஒப்பாவன. இங்ஙனமே கண்டுகொள்க. வசு-உபரிசரவசு: மேலே சஞ்சரிப் பவன் என்பது பதப்பொருள்: இந்திரன் கொடுத்த ஆகாய விமானத்தில் ஏறிச் சஞ்சரிக்கும் மனிதன் இவன் ஒருத்தனே. இவனது தேவி—கிரிகை யென்னும் பெண்: இவள் ருதுகாலத் துக்குப் பின் ஸ்நானஞ்செய்து பரிசுத்தையாக இருந்துகொண்டு சந்ததிக்காகத் தன் விருப்பத்தைத் தெரிவிக்கும் அதே தினத்தில் பிதிர்க்கள் அன்புடன் அந்த உபரிசரவசுவைப் பார்த்து ''வேட்டையின்மேற் சென்று மிருகங்களைக் கொல்லவேண்டும்'' என்று சொல்ல, புத்திமான்களிற் சிறந்தவனுதலின் அந்த அரசன் தன் புத்திவன்மையால், அப்போது பிதிர்க்களின் கட்டளையை மேற்கொண்டு அந்தக்கிரிகையை விட்டுவிட்டு, ஆனல் அவள்மேல் கொண்ட காமவினைவினனுய் மட்டும் வேட்டைக்குச் சென்றான் என்ற விவரம் இங்கே அறிய வேண்டுவது. மேதை (புத்திமான்) ஆதலின், காமத்தையடக்கினன். இவன் எப்போதும் வேட்டை

யாடிக்கொண்டே யிருப்பானுதலின், பிதிர்க்கள் அவனை வேட்டத்தின் மேல் ஏவினர். அவனும் தென்புலத்தார்கடன் தலைசிறந்த தாய் முதலதாதலின் அதனை நிறைவேற்றச் சென்றான். (1)

இது முதல் ஆறு கவிகள்—முதல் நான்கு சீர்கள் காய்ச்சீர்களும், இறுதியிரண்டுசீர்கள் மாச்சீர்களும் ஆகிவந்த **அறுசீராசிரிய விருத்தம்**

2. **வசுமன்னன் தன் வீரியம் வீணுகாதவாறு மனைவியிடம் உய்த்தது.**

தினமொன்று யினும்பிரிவிற் றிறந்திண்மை
யிற்கிரிகை தேடும் என்னு
மனதினினைந் தயருமிடை மற்றவடன்
வனமுலைதார் மார்பிற் றோயக்
கனவினனைந் தவனுகிக் கலிதவிர்ந்து
வைத்துகவின் கடிதி னேற்றே
தனதிடைவாழ் வல்லூ று தனைவிளித்தீந்
தில்லவட்குத் தருமா றுய்த்தான்.

(இ-ள்.) தினம் ஒன்றுயினும்-ஒரு தினமேயானாலும், பிரிவில்-(யான்) பிரிவேனுயின், அதனையும் தாங்கும்) திறம் திண்மை இல்-வகையும் வலிமையும் இல்லாது, கிரிகை-(என் மனைவி) கிரிகையானவள், தேடும்-(என்னைத்) தேடுவாள், என்னு-என்று, மனதின் நினைந்து-மனத்தால் நினைந்து, அயரும் இடை-சோர்வுறும் சமயத்து, கனவின்-தான்கண்ட கனவிடத்தே, அவள் தன் வன முலை மார்பில் தோய-அவளுடைய அழகுபொருந்திய கொங்கைகள் மார்பிலே தழுவிப்பொருந்த, அணைந்தவனுகி-அவளைக் கட்டித் தழுவினனுகி, (அந்நினைப்பினுல் வீரியம் வெளிப்பட அதனை) கலி தவிர்ந்து வைத்து-தழுவிப்போகாதவாறு பத்திரப்படுத்தி, கவின்-அழகுற, கடிதின்-விரைவாக, ஏற்றை-அசோக இலையில் ஏந்தியே, (பின்) தனது இடைவாழ் வல்லூறு தனை விளித்து-தன் அருகே வசிக்கின்ற பருந்தொன்றை யழைத்து, ஈந்து-அதனிடம் கொடுத்து, இல்லவட்கு-தன் மனைவியாகிய கிரிகையினிடம், தருமாறு-கொடுத்துவரும்படி, உய்த்தான்-அதனைப் போகவிடுத்தான்; (எ-று.)

வெளிப்பட்ட வீரியம் வீணுக்கக்கூடாது என்று வசு மன்னன் நிச்சயித்து, அதனை இலையில் ஏந்தி, அதனில் தன் மோதிரத்தினால் முத்திரை வைத்துச் சிவந்த அசோக மலர்களாலும் தளிர்களாலும் மூடிக்கட்டி, அதைத் தன் மனைவியிடம் அனுப்புவதற்கு "இதுவே தக்ககாலம்" என்று நினைத்து, அதற்குக் கர்ப்பாதான மந்திரத்தை ஜபித்து, அருகே நின்ற விரைந்து செல்லக்கூடிய பருந்தொன்றை விளித்துத் தன் வீரியத்தைத் தன் கிருஹத்திற்குக் கொண்டுபோய்க் கிரிகையிடம் கொடுக்கும்படி பணித்தான் என்பது அறிய வேண்டிய முழுவிவரம். முதலடியில் "செல்லாமையுண்டேல் எனக்குரைமற்றுரின், வல்வரவு வாழ்வார்க் குரை" என்ற குறள் நினைக, கலித்தல்-நழுவுதல்: "சுக்கிலங் கலித்தலாற் பெருந்தவ வலிகுன்றும்" (வைராக்: சத: 43). (2)

3. வீரியம் யமுனை நதியில் விழுந்தமை கூறும்.

கௌவியல கேகுழியோர் கங்கமெதிர்ந்
துணவிதெனக் கருதி வெம்போர்
சுவ்வுகொடு பொருமிடைவிந் துவைத்தவற
விடுத்திதைப் போய்ச்சொற்ற தண்ணல்
இவ்வுரைகேட் டயர்ந்தருக்க னணுகுமுனர்
படையுடனூ ரடைந்தான் இப்பால்
வெவ்விகங்கம் வாய்தவற விடுத்திடுவீ
ரியம்யமுனை விழுந்த தன்றே.

(இ-ள்.) அலகு கௌவி ஏகு உழி-(அந்தப் பருந்து) தனது மூக்கினால் இறுகப் பிடித்துக்கொண்டு போகும்போது, ஓர் கங்கம் எதிர்த்து-மற்றொரு பருந்து எதிரே வந்து மறித்து, இது உணவு எனக் கருதி-இது மாமிசவுணவாகும் என எண்ணி, வெம்போர்-கொடிய சண்டையை, சுவ்வுகொடு-"சுவ், சுவ்', என்ற ஒலியைச் சிறகுகளால் எழுப்பி, பொரும் இடை-போரிடும்போது, விந்துவை தவற விடுத்து-வீரியத்தைத் தவறிக் கீழே விழும்படி நழுவவிட்டு, இதைப்போய்-இந்தச் செய்தியைப் பறந்து சென்று, சொற்றது-வசுவுக்குச் சொல்லிற்று; அண்ணல்-அந்த வசுமன்னன், இ உரை கேட்டு-இந்தத் துயரச் செய்தியைக் கேட்டு, அயர்ந்து-மதி சோர்ந்து, அருக்கன் அணுகும் முனர்-சூரியன் உதிப்பதற்கு முன்னே, படையுடன் ஊர் அடைந்தான்-தன் சேனையோடு சேதிநாட்டுத் தலைநகரையடைந்தான்: இப்பால்-இவ்விடத்து, வெவ் விகங்கம்-வலிய பருந்து, வாய் தவற விடுத்திடு வீரியம்-

வாயினின்று தவறவிட்ட வீரியம், யமுனை-யமுனை நதியிலே விழுந்தது—; (எ-று).—அன்றே-ஈற்றசை.

விகங்கம்=விஹங்கம்: வானத்திற்செல்வதெனப் பறவைக்குக் காரணக்குறி. (கழுகு, பருந்து போன்றவைக்கு வரும்). (3)

4-5. இருகவிகள் ஒருதொடர்:—பிரம சாபத்தால் மீனுகப் பிறந்தவள் வயிற்றில் இருவர் பிறத்தல்.

4. மீன் வயிற்றில் மகன் பிறந்தமை.

உந்தியுதித் தவன்சாபத் தோரியக்கி
மீனமதாய் உழல்வாள் விந்து
சிந்தவிரண் டாயருந்திச் சினைவாய்ந்தீன்
றிடுநாளிற் றிமில ரம்மீன்
வந்துபிடித் தீர்ந்தகட்டின் மகன்பேணக்
கண்டதைத்தா தமன்னற் கோதித்
தந்தனரங் கவன்வளர்த்தான் சாபமொழிந்
தியக்கிபதி சார்ந்தாண் மன்னே

(இ-ள்). உந்தி உதித்தவன் சாபத்து-(விஷ்ணுவின்) நாபி கமலத்துத் தோன்றிய பிரமனின் சாபத்தினுல், ஓர் இயக்கி-[அத்திரிகை என்று பெயர்பெற்ற] ஒரு அப்ஸரஸ், மீனமதாய் உழல்வாள்-(யமுனை நதியில்) மீன் ஜன்மமெடுத்துச் சஞ்சரித்திருந்தாள்; (அவள்) விந்து சிந்த-(வசுவின்) வீரியம் கீழேசிந்த, (அதனை) இரண்டாய் அருந்தி-இரண்டு தடவையாகப் பகுத்து உண்டு, சினைவாய்ந்து-(அதன்படியே) கருக்கொண்டு, ஈன்றிடு நாளில்-(கருமுதிர்ந்து) பெற்றிடும் நாளில்,—திமிலர்-செம்படவர், அ மீன்-அந்த மீனை, பிடித்துவந்து-வலையிட்டுப் பிடித்துவந்து, ஈர்ந்து-(கத்தியினுல்) கிழித்துப் பிளக்க, அகட்டின்-அதன் வயிற்றினில், மகன் பேணக்கண்டு-ஆண்பிள்ளை வளர்தல் கண்டு, அதை-அந்த அதிசயத்தை, தாத மன்னற்கு-வலிஞர்களின் தலைவனுகிய வனுக்கு, ஓதி-சொல்லி, அங்கு-அவ்விடத்து, தந்தனர்-அவனிடம் கொடுத்தனர்; அவன்-அந்தத் தாசபூபதியும், வளர்த்தான்-அவனைத் தன்மகன்போல் வளர்த்துவந்தான்; இயக்கி-அந்த [அத்திரிகையென்னும்] அப்ஸரஸ், பதி சார்ந்தாள்-தன் இருப்பிடமாகிய தேவலோகத்தை யடைந்தாள்; (எ-று).—மன், ஓ-ஈற்றசை.

"இரண்டாய் அருந்தி" என்றது-ஒரு ஆணும் ஒரு பெண்ணும் வயிற்றினில் பிறகு வளர்ந்து வந்தமைபற்றி. [ஆண் மகன்-மச்ச

தேசத்துக்கு அதிபதியாகிறான்: பெண்-மச்சகந்தியென்ற பெய ரொடு வளர்ந்து வருகிறாள்: இது மேலிக்கவியிற் கூறப்படும்.] திமில்-படகு: திமிலர்-படகோட்டுபவர்: செம்படவர்: வலைஞர், இவரைத் தாஸர் என்ற வடசொல் குறிக்கும்: அது தாசர் என்று திரிந்தது. தாசர்-தாதர்: போலி.

அத்திரிகை என்ற அழகிய அப்ஸரஸுக்கு முன்னே பிரமன் தோன்றி, "நீ மீன் ஜாதியிற் பிறந்து இரண்டு மனுஷ்யர்களைப் பெற்றுப் பிறகு சாபவிமோசனம் அடைவாய்" என்றான். அதன் படியே அந்த அப்ஸரஸ் இரண்டு குழந்தைகளை (ஓர் ஆண் ஒரு பெண்)ப் பெற்றுச் செம்படவர்களால் வயிறு கிழிக்கப்பட்டு, மீன் வடிவம் நீங்கித் தேவரூபத்தை யடைந்து வானவழியே தேவ லோகம் அடைந்தாள் என விவரம் அறிக. முதனூலின்படி உபரிசரவசு ஆண் குழந்தையை மட்டும் வாங்கிக்கொண்டு அவனுக்கு மத்ஸ்யன் என்னும் பெயர் சூட்டி மச்சதேசத்துக்கு ராஜாவாக்கினான்; கன்னிகையாயிருந்த பெண் மீன் நாற்றம் உள்ளவளாயிருந்ததனால் அவளை உபரிசரவசு "இவள் உனக்குப் பெண்ணாகவிருக்கட்டும்" என்று சொல்லி, ஒரு செம்படவனுக்குக் கொடுத்தான். அந்தச் செம்படவன் பெயர்-உச்சைச்ச்ரவஸ் என்று வியாச பாரதத்தும் பால பாரதத்தும் கூறப்பட்டுள்ளது. இவள் முதலில் மச்சகந்தியாயிருந்து பின் யோசநகந்தியானவள்: இவளைக் காளியென்றும், சத்யவதி என்றும், வாஸவீ என்றும் வழங்குவர். [இவ் விவரங்களை மேலே காணலாம்.] (4)

5. மீன் வயிற்றில் மகள் பிறந்தமையும், அவளைக்கண்டு பராசரன் மயல் பூண்டமையும் கூறும்.

இச்சையுடன் வளர்ந்திடுநாள் எழிற்குமரன்
மச்சநகர்க் கிறைவ னவனன்
மச்சகந்தி யெனும்புதல்வி மணிகொழிக்கும்
யமுனையிடை வங்கந் தூண்டி
அச்சமறப் பயின்றிடுநா ளங்கணுகி
வசிட்டன்சேய் அளித்த மைந்தன்
பொய்ச்சவிடை நோக்கிமயற் பூண்டனைவான்
பேசலுமப் பூவை சொல்வாள்.

(இ-ள்). இச்சையுடன்-விருப்பத்தோடு, வளர்ந்திடும் நாள்-வளர்ந்து வரும் காலத்தில், எழில் குமரன்-அழகுடைய அந்த ஆண் பிள்ளை, மச்சநகர்க்கு இறைவன் ஆனன்-மத்ஸ்ய தேசத் துக்கு ராஜாவாயினான்; மச்சகந்தியெனும் புதல்வி-மச்சகந்தி என்னும் பெயருடைய பெண், மணி கொழிக்கும் யமுனையிடை-

இரத்தினங்களைக் கொழித்துக்கொண்டு வரும் யமுனையாற்றினில், வங்கம் தூண்டி-படகுகளையோட்டி, அச்சம் அற பயின்றிடும் நாள்-பயமின்றிச் செலுத்திவந்த காலத்தில், அங்கு-அவளிடத்து அப்படகினில். வசிட்டன் சேய் அளித்த மைந்தன்-வசிட்ட முனிவன் மகனுகிய சக்தியென்பவன் பெற்ற புதல்வனுகிய பராசர முனிவன், அணுகி-கிட்டி, (அவளது) பொய்ச்ச இடை நோக்கி-நுண்ணிதாய் [உண்டோ இல்லையோ என்னுமாறு] உள்ள இடுப்பினில் ஈடுபட்டு அதனை விரும்பிப் பார்த்து, மயல் பூண்டு-காம மயக்கங் கொண்டு, அணைவான்-தழுவும் பொருட்டு, பேசலும்-[புணர்ச்சி விருப்பந் தோற்றப்] பேசத்தொடங்கவும், [அதுகண்டு] அ பூவை சொல்வாள்-அந்தப் பெண் சொல்லளானுள்; (எ-று). அவள் கூறியதை மேலிற்கவியிற் காண்க.

'அச்சமறப் பயிலுதல்' என்றவிடத்து அவள் ஆயிரம் ஜனங்கள் நிரம்பிய ஓடத்தைச் செவ்வனே நடத்துவாள் என்பது அறிய வேண்டுவது. மேலும் இவள் ஓடத்தை நடத்தும் கைத் தேர்ச்சியைக் கண்டு பாராட்டிப் பராசர முனிவர் இவளது மத்ஸ்ய கந்தத்தை நீக்கி யோசனைகந்தம் தந்தார் என்பதுமுண்டு. வசிட்டன் சேய்-சக்தி என்பவர்; அவர் பிள்ளை பராசரர். [பராசரர் பிள்ளை-வியாசர்; வியாசர் பிள்ளை-சுகர்; அவர்தான் பரீட்சித்துக்குப் பாகவதம் சொன்னவர். வசிட்டரோ பிரம புத்திரர். ஆக, வியாசர் மரபு பிரமனிடம் தொடங்குவது என அறிக.] பொய்ச்ச-பொய்த்த: போலி. இடை பொய்த்தலாவது-இடையின் நுண்மையைக் காட்ட வந்தது. "இல்லையுண்டென்ன நின்ற இடையினுக்கு இடுக்கண் செய்தார்" என்றார் கம்பரும். பூவை-நாகணவாய்ப்புள்; அதுபோன்ற பெண்ணுக்கு உவமவாகு பெயர். (5)

6. பராசரன் அணங்கினைச் சேர்தல்.

கன்னிகையான் புலவுகமழ் காயமுறு
மெற்றெடுவான் கருத னன்றே?
என்னலுமா தவன்மயிலே! இன்றுமுத
லுனதுடலம் இனிய வாச
மன்னவுங்கன் னிகைவிரதம் வழுவுவடையா
மலுமளித்தோம் வரமென் றோதி
அன்னபொழு திமமமைத்தங் கலரிசுடர்
மறைத்தந்த அணங்கைச் சேர்ந்தான்.

(இ-ள்.) (அந்த மச்சகந்தி பராசரனைப் பார்த்து), யான்-, கன்னிகை-மணமாகாத கன்னிப்பெண்; காயம்-எனது உடம்பு, புலவு கமழ் உறும்-புலால் நாற்றம் வீசும்; (ஆகவே) என் தொடு

வான் கருதல் நன்றே-என்னைத் தொட்டுச் சேர்தல் என்று எண்ணுதலும் நன்மையோ? [நீதாகுமே], என்னலும்-என்று சொன்னவுடனே, மாதவன்-சிறந்த முனிவன், மயிலே-மயில் போன்ற சாயலையுடைய பெண்ணே!, இன்று முதல்-இன்றைத் தினத்திலிருந்து, உனது உடலம்-உன்னுடைய உடம்பு, இனிய வாசம் மன்னவும்-இனிய வாசனை பொருந்தி நிலை பெறும்படியும், கன்னிகை விரதம் வழு அடையாமலும்-(என்னைச் சேர்ந்த பின்வரும் உனது) கன்னிப்பெண்ணுக இருக்கும் விரத நிலைமை குற்றம் (மாசு) அடையாமலும் இருக்க, வரம் அளித்தோம்-வரம் கொடுத்தோம், என்று ஓதி-என்று சொல்லி, அன்ன பொழுது-அதே சமயத்தில், இமம் அமைத்து-பனியை யுண்டு பண்ணி, அங்கு-அந்தவிடத்து, அலரி சுடர் மறைத்து-சூரிய வெளிச்சம் இல்லாத படி இருள்மூட மறைத்து, அந்த அணங்கை-அந்த மச்சகந்தியை, சேர்ந்தான்—; (எ-று).

மச்சகந்தி பூர்வஜன்ம ஞாபகம் வர அங்கமெல்லாம் பூரித்தவளாகி, "பகவானே! அக்கரையில் ரிஷிகள் இருப்பதைப் பாரும்: அவர்கள் பார்க்கையில் நாமிருவரும் எவ்வாறு சேரலாம்" என்று கேட்க, பராசரமஹரிஷி பனியையுண்டு பண்ணி, அந்தப் பனியினால் அந்தப் பிரதேசமெல்லாம் இருளடைந்தது போலாகச் செய்தார் என்பது முதனூலால் இங்கு அறிய வைத்த விவரம். மற்றும், கன்னிகாதர்மம் கெட்டுப்போகுமே என்று பயந்த பெண்ணை நோக்கி, "என் விருப்பத்தை நிறைவேற்றியபின் நீ கன்னியாகவே ஆகிவிடுவாய்" என்றும் வரமளித்தார். மச்சகந்தம் போகவே கந்தவதி என்ற பெயரும், ஒருயோசனை தூரத்திலிருந்து அவளுடைய கந்தத்தை மனிதர்கள் மோந்து அறிந்தனராதலின், யோசனகந்தி என்ற பெயரும் நிலவலாயிற்று. ஈண்டு, இயற்கையையே மாற்றியமைக்குந் திறம் தவவலிமைக்குண்டு என்பதைப் பராசர முனிவன் மூலமாகத் தெரிவித்தபடி. "ஒன்னுர்த்தெறலும் உவந்தாரை யாக்கலும், எண்ணிற் றவத்தான் வரும்" என்றது குறள். (6)

7. வியாதமுனிவனின் ஜனனம்.

(அடுத்த கவியோடு—குளகம்)

கருக்கொண் டியோசனை கந்தியங் கின்றிட
விரிக்கு வேதவி யாத னுதித்துதாய்
இருக்க முற்பணிந் தென்னைநீ யுன்னுநாள்
திருக்கி லெய்துவன் வைகெனச் செப்பியே.

(இ-ள்.) யோசனைகந்தி—, கருக்கொண்டு-கருப்பந்தரித்து,

அங்கு-அப்போதே அத் தீவினிடத்தே, ஈன்றிட-ஒரு ஆண்மகவைப் பெற்றிட, வேதம் விரிக்கும் வியாதன் உதித்து-வேதங்களை நான்காக வகுத்துச் செய்த வியாசன் தோன்றி, தாய் இரு கழல் பணிந்து-தாயின் உபய பாதங்களிலும் வணங்கி(த்தொழுது), "நீ-, என்னை-, உன்னும் நாள்-நினைத்த மாத்திரத்தில், திருக்கில்-உன் கண்ணெதிரில், எய்துவன்-என் ரூபத்தோடு வருவேன்; வைகு-இப்போது நீ இங்கேயே சுகமாய் இரு", என செப்பி-என்று சொல்லி-", (எ-று.) "பின் வனம் போய்" என மேலிற் கவியோடு தொடரும்.

"ரிஷிகர்ப்பம் இராத்தங்காது" என்றபடி, யோசனகந்தி கர்ப்பத்தை உடனே பிரசவித்தாள் : மகிமை பொருந்திய அந்தப் பராசர புத்திரர் (வியாசர்) யமுனையின் தீவில் பிறந்தார்: பிறந்த வுடனே அவர் வளர்ந்து அப்போதே ஏழுவருஷத்துக் குமார ரானர்; அதனோடு பிரமசாரியாகவே அவதரித்தார்: "முஞ்சியும் புரிநூலும் கனகச் செஞ்சடையும் கொண்ட தபோதன முனி யாகவே" அவதரித்தனர். தாயாரிடம் பணிந்து விடை பெற்றுக் கொண்டு தவத்திலேயே மனத்தைச் செலுத்தினர். அவர் "உனக் குக் காரியம் ஆகவேண்டியபோது என்னை நீ நினைத்தால், நானே என் ரூபத்தை உனக்குத் காண்பிப்பேன்" என்று தாயாருக்குச் சொல்லிப் போயினர்.

அவர் குழந்தையாயிருக்கும்போது, த்வீபத்தில் விடப்பட்ட தனால் "த்வைபாயனர்" என்று அவருக்குப் பெயர்வந்தது. [த்வீப மாகிற அயனம்-இடம்; அதில் உண்டானதால் "த்வைபாயனர்" எனப்பட்டார்]. இனி, த்வீபத்தில் இருந்ததனால் த்வீபர் என்ற சொல் பராசரரைக் குறிக்கிறது என்றும் அவருடைய புத்திரர் என்பது பற்றி த்வைபாயனர் என்ற பெயர் வந்ததென்றும் கூறுவர். மற்றும், அத்தீவு கருநிற முள்ளது ஆதலால் "கிருஷ்ண த்வீபம்" எனப்பட்ட தென்றும், அந்தத்தீவினில் தோன்றிய தனால் வியாசர் "கிருஷ்ணத்வைபாயனர்" எனப்பட்டாரென்றும் கூறுப.

'வேதவியாதன்'என்று சிறப்பித்தது என்னையெனில்—எல்லாம் அறிந்த த்வைபாயனர் தர்மம் ஒவ்வொரு யுகத்துக்கும் காற்பங்கு விலகிப் போவதையும் மனிதர்களின் ஆயுளும் சக்தியும் யுகங் களுக்குத் தக்கபடி பின்வாங்குவதையும் கண்டு, வேதத்தையும் பிராமணர்களையும் அநுக்ரஹிக்கக்கருதி, வேதங்களை வகுத்த தனால் "வியாசர்" என்று பெயர்பெற்றார்; [வியாசம்-பகுக்கை; வகுத்தல்] பின்னர் வியாசர் ஸுமந்து, ஜைமினி, பைலர், தம்

புத்திரரான சுகர், வைசம்பாயனர் ஆகிய ஐந்து சிஷ்யர்களையும் அழைத்து நியமத்துடன் ரிக், எஜுஸ், ஸாமம், அதர்வணம் என்றும் நான்கு வேதங்களையும் ஐந்தாம் வேதமான மகாபாரதத்தையும் ஓதுவித்தார். அந்தச் சிஷ்யர்களால் வேதஸம்ஹிதைகளும் பாரதஸம்ஹிதையும் தனித்தனியாகச் சொல்லப்பட்டன. இந்த விவரம் முற்றும் அறிய வேண்டுவது இங்கு. திருக்கு—திருஷ்டி: கண். வைகென-வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். இரு+கமல்—''இருகமல்'' என இயல்பாக வரவேண்டியிருப்ப, 'இருக்கமல்' எனக் ககரம் இரட்டித்தது எதுகை நோக்கி. கமல்-திருவடி: தானியாகுபெயர். [குறிப்பு:—சிறப்பாக ஆடவர்க்குச் சொல்லப்படும் கமல் ஈண்டு பெண்பாலுக்குச் சொன்னது வழுவமைதியின் பாற்படும் என்னலாம்].

இது முதல் சருக்கமுடியும் வரையுள்ள மூன்று கவிகளும்—**கவி விருத்தம்.** (7)

8. வேதம் வகுத்த வியாசர் செய்தருளிய நூல்கள்.

பெற்ற மாமுனி பின்வனம் போய்தவ
முற்று நான்மறை யோடு புராணமுஞ்
சொற்ற பின்பமா துன்னிய பாரத
முற்று மைங்கரன் றீட்ட மொழிந்துளான்.

(இ-ள்). பெற்ற-(யோசனகந்தி) பெற்றெடுத்த, மா முனி-சிறந்த வியாச முனிவன், பின்-பின்னர், வனம் போய்-ஆரணியஞ் சென்று, தவம் உற்று-தவத்தை மேற்கொண்டு, நான்மறையோடு-நான்கு வேதங்களை வகுத்தமைத்ததோடு, புராணமும்-பதினெண் புராணங்களையும், சொற்ற பின்பு-சொல்லியியற்றிய பின்னர், அ-அந்த, மா துன்னிய—''மா'' என்ற சிறப்பு அடை நெருங்கிப் பொருந்திய, பாரதம் முற்றும்-பாரத கதை முழுவதையும், ஐங்கரன் தீட்ட-விநாயகக் கடவுள் எழுதும்படி, மொழிந்துளான்-சொல்லியருளினன்; (எ.று).

''அ''-அகரச் சுட்டு பிரசித்தியைக் காட்டும், 'மா' துன்னிய பாரதம்-மாபாரதம்: ''மாபாரதம் சொன்ன நாள்'' என்றூர் வில்லியாரும். இது மகாபாரதம் எனப் பெரிதும் வழங்கப்படும். ''மா'' ''மகா'' என்ற அடைமொழி பெரிதும் கொடுக்கப்பட்டே இந்தப் பாரதம் வழங்கப்படும் என்பது திறம்பட நிறுவப்பட்டது. ஐங்கரன்-விநாயகன்: நான்கு கரங்களோடு தும்பிக்கையும் உடையவன். தீட்டியது-தன் ஒற்றைக் கோட்டினை எழுத்தாணி

யாகக் கொண்டு: "மூனிராசன் மாபாரதம் சொன்னநாள்..... அங்கூரெழுத்தாணி தன் கோடாக எழுதும் பிரான்" என்றூர் வில்லியாரும். வியாசர் சொற்ற பதினெண்புராணங்கள்:– சிவ பெருமானைப் பற்றிக்கூறும் மச்சபுராணம், கூர்மபுராணம், வராக புராணம், வாமனபுராணம், சிவமகாபுராணம், இலிங்கபுராணம், பவிடியபுராணம், காந்தபுராணம், மார்க்கண்டேய புராணம், பிரமாண்ட புராணம் என்ற பத்தும் திருமாலைப்பற்றிக் கூறும் விஷ்ணுபுராணம், பாகவதபுராணம், கருடபுராணம், நாரதீய புராணம் என்ற நான்கும், பிரமனைப்பற்றிக் கூறும் பிரமபுராணம், பதுமபுராணம் என்ற இரண்டும், அக்கினியைப்பற்றிக் கூறும் ஆக்கினேயபுராணம் ஒன்றும், சூரியனைப்பற்றிக் கூறும் பிரமவை வர்த்த புராணம் ஒன்றும் ஆகிய பதினெட்டுத் தலைமைப் புராணங் கள். பாரதம் முற்றும் என்றது-இரண்டாயிரம் அத்தியாயங்களும், பதினெட்டுப் பர்வங்களும், நூறுயிரம் ஸ்லோகங்களும் உள்ள அனைத்தையும் என்றபடி. (8)

9. அடுத்த சருக்கத்துக்குத் தோற்றுவாய்.

பின்னு மால்முதற் பேசிய வானவர்
இந்நி லத்தி லுதித்தன ரென்னலும்
அன்ன பான்மையெற் கோதென் றடிதொழும்
மன்ன னுக்கிதை மாதவ னோதுவான்.

(இ-ள்.) பின்னும்-(வியாசர் தோன்றியதற்கு) மேலும், மால் முதல் பேசிய வானவர்-திருமாலாகிய விஷ்ணு முதலாகப் பேசப் படுகின்ற தேவர்கள், இந்நிலத்தில் உதித்தனர்-இந்த நிலவுலகத் தில் வந்து பிறந்தனர், என்னலும்-என்று (வைசம்பாயனர்) சொன்னவுடன்,– அன்ன பான்மை-அப்படி அவர்கள் பிறத்தற்குக் காரணம் முதலிய தன்மைகளைப்பற்றி, எற்கு-எனக்கு, ஓது-சொல்லுவீராக, என்று–, அடிதொழும்-பாதங்களில் வணங்கின, மன்னனுக்கு-ஜனமேஜயராஜனுக்கு, இதை-இந்தச் சரித் திரத்தை, மாதவன்-சிறந்த தவ முனிவராகிய வைசம்பாயனர், ஓதுவான்-சொல்பவரானார்; (எ-று.)

திருமால் வசுதேவ புத்திரராக ஜனித்தமை தொடங்கி ஏனைய வானவர் யார் யாருடைய அம்சமாகத் தோன்றினர் என்பதையும், பிரபஞ்சத்தில் பறவைகள், விலங்குகள், தாவரங்கள் இவற்றின் உற்பத்தியைப் பற்றியும் கருக்கமாக அடுத்த சருக்கத்திற் கூறப் போவனவற்றுக்குத் தோற்றுவாய் இங்குச் செய்தபடி. இங்ஙனம்

தொடர்ச்சிபடக் கவிபுனைவது புராணத்திற்கும் இதிகாசத்திற்கும் ஏற்கும் கவிமரபு. "மால்" என்று திருமாலை முதன்முதல் எடுத்தது—"நாராயண கதாமிமாம்" என்று வேதவியாசர் கூறியுள்ளபடி என்க. வில்லியாரும் "மன்னும் மாதவன் சரிதமும் இடையிடை வழங்கும், என்னும் ஆசையால் யானும் ஈதியம்புதற் கிசைந்தேன்" என்றதும் நோக்குக. ஸ்ரீ கிருஷ்ணபகவானின் சரித்திரமே பாரதம் என எண்ணுவது, எற்கு-எனக்கு. 'ஓது' என்று கேட்ப 'ஓதுவான்' என்றது-வேதம்போல் பாரதம் போற்றத்தக்கதாதலின். (9)

வியாதர் உற்பவச் சருக்கம் முற்றிற்று.

———

ஏழாவது

பிரபஞ்ச முற்பவச் சருக்கம்

பிரபஞ்சத்தின் தோற்றத்தைப்பற்றிக் கூறும் சருக்கம் என்று பொருள்படும். பிரபஞ்சம்-உலகம்: (பஞ்சம்-ஐந்து: பஞ்ச பூதங்களாலாகியது இவ்வுலகம்: நன்கு சமைக்கப்பட்டதாதலின், "பிர" என்ற உபசர்க்கம் பெற்று வந்தது). உற்பவம்-தோற்றம்.

இந்தச் சருக்கத்தில் பிரமனது மானச புத்திரர்கள், அவரது சரீரத்தினின்று தோன்றினவர்கள் இவர்களது வமிசங்கள் கூறப்படும். எனவே, இதனில் மஹரிஷிகள், துவாதசாதித்தர், தைத்தியர், தானவர் [அசுரர்கள்], கந்தருவர், அப்ஸரஸ்ஸுகள், தவமுனிவர், யக்ஷர்கள், தேவகணங்கள், [இன்னரர், கிம்புருடர்] அஷ்டவசுக்கள், அசுவினி தேவர்கள், தேவகுரு, அசுரகுரு, பரசுராமர்,—ஆகிய இவர்கள் தோன்றிய வகையினையும், மரஞ்செடி கொடி புள் விலங்கு இவைகள் தோன்றிய வகையினை யும் சுருக்கமாகவும் நுண்ணிதாகவும் திறம்பட வைத்திருக்கும் திறம் பெரிதும் பாராட்டத்தக்கது. தாவர சங்கமமே பிரபஞ்ச மாதலின், அவைகளின் உற்பவமும் கூறப்படுகின்றது.

வேறு

1. க்ஷத்திரியர்கள் தருமமும் தீர்க்காயுளும் பொருந்தியிருத்தல்.

தலைமுறை யிருபா னைன்று
தரணிகா வலர்கள் தம்மைக்
குலமொடு மழுவி ராமன்
கோறலால் இராச மாதர்
கலைவல்வே தியர்ச்சேர்ந் தின்றேர்
காத்தலால் அறத்தின் ஞால
மூலகவ ரிறப்பற் றூயு
ளோங்கிவாழ்ந் திடுமந் நாளில்.

(இ-ள்.) மழு இராமன்-மழுப்படை யேந்திய பரசுராமன், தரணி காவலர்கள் தம்மை-பூமியைக் காத்துவந்த க்ஷத்திரியர் களாகிய அரசர்களை, குலமொடு-அவர்களது குலங்களோடு, இருபானைன்று-இருபத்தொரு, தலைமுறை-தலைமுறைச் சந்ததி களோடு, கோறலால்-கொன்று அழித்தலால்,—இராச மாதர்-க்ஷத்திரிய அரசப் பெண்டிர், கலை வல் வேதியர்ச் சேர்ந்து-சகல கலைகளிலும் வல்லமைபடைத்த பிராமணர்களைக் கூடி, ஈன்றேர்-பெற்றெடுத்த ராஜகுமாரர்கள், அறத்தின் காத்தலால்-தருமநெறி

வழுவாது காத்துவந்ததால், ஞாலம்-இந்தப் பூவுலகத்தில், உலகவர்-வாழ்பவர், இறப்பு அற்று-மரணமென்பதின்றி, ஆயுள் ஓங்கி-உயிர்வாழ்நாள் சிறந்து நீண்டு, வாழ்ந்திடும் அந்நாளில்-வாழ்ந்துவந்த அந்தக் காலத்தில்;—(திரேதாயுகத்தில்); (எ-று.)—''ஆழி புனைந்தவள் முறையிட'' என மேலிற்கவியோடு இயையும்.

இங்கு அறியவேண்டிய விவரம்:—பரசுராமன் கார்த்தவீரியார்ச்சுனனைக் கொன்றதும், அவனது குமாரர்கள் பழிக்குப்பழி வாங்க நினைத்து, அந்தப் பரசுராமனில்லாத சமயம்பார்த்துப் பர்ணசாலையினுட் சென்று அவனது தந்தையாகிய ஜமதக்னி முனிவரைத் தலை துணித்துப்போயினர். பின்பு வந்த பரசுராமன் பெருங்கோபங்கொண்டு சென்று அவ்வர்ச்சுன புத்திரர்களையும் உலகத்திலுள்ள செருக்குக்கொண்ட க்ஷத்திரிய அரசர்கள் பலரையும் அழித்தொழித்து அரச வமிசத்திற்கே விநாசகாரணனாயினன். ஜமதக்னியின் தலையைத் துணித்திட்டபோது, அவரது பத்தினியாகிய ரேணுகாதேவி இருபத்தொரு முறை தன் மார்பிலடித்துக்கொண்டு புலம்பினது பற்றி இருபத்தொரு தலைமுறை அரசர்களை யொழித்திட்டான் என்றது பாகவதம். க்ஷத்திரியர்களில்லாமல் போகவே, அவர்களது ஸ்திரீகள் புத்திரர்களை விரும்பி, பிராமணர்களிடம் சேர்ந்து, சிறந்த தவமுள்ள அவர்களிலில் சற்புத்திரர்களைப் பெறவே அவர்களும், பிறந்த புத்திரிகளும் தருமமும் தீர்க்காயுளும் பொருந்தியிருந்தனர். அவரது சந்ததிகளும் தர்மத்தினுடைய நியமங்கள் தவறாமல் பல்லாண்டுகள் ஜீவித்திருந்தனர். மக்கள் பொதுவாக நோயற்றும் துயரமற்றும் இருந்தனர் என்பது.

இது முதல் இச்சருக்கம் முடியுமளவும் உள்ள பன்னிரண்டு கவிகள் ஒன்று; நான்கு-விளை, ஏனைய மாச்சீர்கள் கொண்டு வந்த அறுசீராசிரிய விருத்தம். (1)

2. பூமி பாரமுற அதனைப்போக்கப் பிரபஞ்சத் தோற்றம் செப்பலுறல்.

பொறைமிகுந் தாற்ரு தாழி
புனைந்தவள் மூவர்க் கோதி
முறையிடப் பாரந் தீர்ப்பான்
மூராரிவா சவரோ ரைவர்
அறைகழ லரக்கர் விண்ணோர்
அவனியில் தோற்றும் பான்மை
பிறழ்விலா துலகந் தோன்றும்
பெற்றியோ டிசைப்பன் கேண்மோ.

(இ-ள்.) [மக்கள் ஆயுள் பெருகிப் பல நூறுண்டுகள் இறப்

பின்றி வாழத் தொடங்கவே], ஆழி புனைந்தவள்-கடலை ஆடையாகச் சுற்றிப் புனைந்துள்ள பூமிதேவியானவள், பொறை மிகுந்து-பாரம் அதிகமாகி, ஆற்றாது-தாங்க முடியாமல், மூவர்க்கு ஒதி முறையிட-மும்மூர்த்திகளாகிய (பிரம விஷ்ணு சிவனிடம்) முறையிட்டுக்கொள்ள, முராரி-விஷ்ணு, பாரம் தீர்ப்பான்-பூமி தேவியின் பாரத்தை நீக்கும்பொருட்டு, வாசவர் ஓர் ஐவர்-இந்திரர்கள் ஐந்து பேர், அறைகழல் அரக்கர்-ஒலிக்கின்ற வீரக்கழலை யணிந்த அசுரர்கள், விண்ணோர்-சுரர்கள் (தேவர்கள்), [இவர்களோடு] அவனியில்-இப்பூவுலகத்தில், தோற்றும்-அவதரித்திடுகின்ற, பான்மை-வகையினை, பிறழ்வு இலாது-சிறிதும் மாறுபடாது, உலகம் தோன்றும் பெற்றியோடு-நிலவுலகமாகிய பிரபஞ்சம் தோன்றிய வகையினோடு கூட்டி, இசைப்பன்-சொல்லப்போகின்றேன், கேண்மோ-கேட்பாயாக; (எ-று).—என்று வைசம்பாயனர் பீடிகையிட்டுக்கொண்டு, பிரபஞ்சத் தோற்றத்தை முற்றும் கூறி இச்சருக்கத்தை முடித்து, இதனோடு கூட்டி அடுத்த சருக்கத்தில் முராரி, வாசவரைவர், அசுரர், சுரர் இவர்களின் தோற்றத்தைக் கூறுகின்றார் என அறிய வேண்டுவது. முராரி-முரன் என்ற அசுரனைக்கொன்றதால் விஷ்ணுவுக்கு முராரி என்று பெயர். அவர் வசுதேவன் குமரனைக் கிருஷ்ணவதாரம் செய்தவர். பூபாரம் தீர்க்கப் பிறந்தவர். இந்திரர் ஐவர்களும்-பஞ்சபாண்டவர்களாகத் தோன்றுகின்றனர். சுராசுரர்கள் பல பாரத வீரர்களாகத் தோற்றஞ் செய்கின்றனர்: (உதாரணம்: இடும்பன், பகாசுரன், சராசந்தன், சிசுபாலன், கீசகன்போன்றோர் ஆசுரப் பிறவிகள்; வீடுமன் (அஷ்டவசுக்களில் ஒருவன்), சந்தனு (வருணனையிருந்தவன்), பஞ்சபாண்டவர்கள் [முறையே யமதருமராஜன், வாயு, இந்திரன், அசுவினி தேவர்கள் இவர்கள் அருளால் தோன்றியவர்கள்] இவர்கள் போன்றோர்-சுரராகும் தெய்வப் பிறவிகள்) ஆழி–சுடல்: ஆழ்ந்திருப்பது பற்றிவந்த காரண விடுகுறி. கடலாடை சுற்றியவள்-பூதேவி. மூவர்-தொகைக் குறிப்பு. பாரந்தீர்ப்பான் முராரி தோன்றினன் என்பதைப் "பூபாரம் தீர்க்கப்புரிந்தாய் புயல் வண்ணா!" என்ற சகாதேவன் வாக்காலும் தெளியலாம். (வில்லி: கிருட்: தூது சருக்கம்: செ: 34) வாசவர்-இந்திரர். 'அறைகழல்' என்பதை விண்ணோர்க்கும் சேர்க்கலாம். கேண்மோ-மோ, முன்னிலையசை. (2)

3—4. பிரமனின் மானச புத்திரர்களும் தேக சம்பந்தம் பெற்ற புத்திரர்களும் இன்னரெனக் கூறல்.

[இரண்டு கவிகள்–ஒரு தொடர்.]

3. நனையவிழ் வனசக் கோயில் நான்முகன் சிருட்டி செய்வான்
நினைதலும் அவன்மெய் வந்தார் நிகரிலத் திரிம ரீசி
புனைதவக் கிருதாங் கிரன் புலத்தியன் புலகன் மீட்டும்
வனைகழற் பதத்திற் றக்கன் தரணியந் திருவும் வந்தார்.

(இ–ள்). நனை-மொட்டுக்கள், அவிழ்-விரிகின்ற, வனசம் கோயில்-தாமரையாகிய இருப்பிடத்தைக்கொண்ட, நான்முகன்-பிரமதேவன், சிருட்டி செய்வான் நினைதலும்-[பிரபஞ்சத்தைப்] படைக்க நினைத்தவுடனே, (மானசிகமாகவே), அவன் மெய்-அவனது மனத்திடத்து, நிகர் இல்-ஒப்பு இல்லாத, அத்திரி மரீசி புனைதவக் கிருது ஆங்கிரன் புலத்தியன் புலகன்-அத்திரி, மரீசி, தவத்தில் ஊன்றிய கிருது, அங்கிரஸ், புலஸ்தியர், புலகர் என்ற ஆறு மஹரிஷிகளும், வந்தார்-வந்து பிறந்தனர்; மீட்டும்-மறுபடியும், வனை கழல் பதத்தில்-கழலணிந்த பாதத்தினின்று, தக்கன்-தக்ஷர் என்னும் மஹரிஷியும், அம் திருவும்-அழகிய (அவருடைய பார்யையாகிய) பெண்ணும், தரணி-இந்நிலவுலகத்து, வந்தார்-வந்து பிறந்தார்: (எ-று.)

பிரமன் தன் மனத்தால் நினைத்து உண்டாக்கிய மஹரிஷிகள் ஆறு பேர். அவர்கள் அத்திரி முதல் புலகன் வரை கூறப்பட்டவர். அவன் மெய் வந்தார் என்றவிடத்து "மெய்" என்றது சரீரத்தைக் குறியாது அந்தக்கரணமாகிய மனத்தினைக் குறித்து வந்தது. இதனை "நினைதலும் அவன் மெய்வந்தார்" என்றதால் தெளியலாம். மேலும் இங்ஙன் வருதலைப் 'புலன்மாறி வந்த வழக்கு' என்றும், ஒருவகை இலக்கணை யென்றும் கூறுப. தக்ஷர் என்ற மஹரிஷி பிரம்மாவின் வலக்கைக் கட்டை விரலினின்றும் பிறந்தவர். அவரது இடக்கைக் கட்டை விரலினின்றும் பிறந்தவள் தக்ஷரின் பாரியையான பெண். இங்கே இவர்கள் காலினின்று தோன்றியதாகக் குறிக்கப்பட்டுள்ளது. இவர்கள் ஐம்பது பெண்களைப் பெற்றனர் என்பதும், அவர்களைப் புத்திரிகைகளாகவே வளர்த்தார் என்பதும், அவர்களுள் பத்துப் பெண்களைத் தரும தேவதை ரிஷிக்குத் தேவதாவிவாஹக்கிரமமாகக் கன்னிகாதானஞ் செய்து கொடுத்தார் என்பதும், அங்ஙனமே இருபத்தேழு பெண்களைச் சந்திரனுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுத்தார் என்பதும்,

எஞ்சிய பதின்மூன்று பெண்களையும் கசியபருக்குக் கன்னிகா தானம் செய்து கொடுத்தார் என்பதும் குறிக்கொளல் வேண்டும், இவை மேல்வரும் பாடல்களிலும் குறிக்கப்பட்டிருக்குமாதலின். [மற்றும் ஒரு விடயம்:—இங்குக் கூறிய தருமதேவதை என்பவர் ஒரு ரிஷி; அவரும் தக்ஷரைப் போலப் பிரமபுத்திரரே. அப்படி யிருப்ப ஒரு பிரமபுத்திரர் மற்றொரு பிரமபுத்திரருடைய பெண்களை மணக்கலாமா? எனச் சங்கிக்கலாம். இது தேவதா ஸ்வீகாரக் கிரமம் என்பது கூர்ந்தறிக. மேலும் இந்தத் தக்ஷ ரிஷியைத் தக்ஷப்பிரஜாபதி எனவும் வழங்குவர்.] (3)

4. மேலும் பிரமனிடத்துத் தோன்றியவர்கள் இன்னரெனக் கூறல்.

மனத்தினிற் பிருகுவுங் கையின் மனுவெனுந் தருமன் பாலந்
தனிலுருத் திரரும் வந்தார் சதுமுக னிடத்தி லின்னும்
வனமுலை யிலக்கு மிபை தாமகன் தாதை விதாதை
யெனுமொரு நால்வர் வந்தார் எண்கணன் பயந்தார் தம்மில்.

(இ-ள்). சதுமுகனிடத்தில்-பிரமனிடத்திலிருந்து, மனத் தினில்-மனங்காரணமாகப் பிளந்துகொண்டு, பிருகுவும்-பிருகுமஹ ரிஷியும், கையின்-(அவரது) கையினிடத்தினின்று, மனு எனும் தருமன்-மனுஷ்ய சரீரத்துடன் தோன்றியதால் மனிதன் என்று சொல்வதற்குத்தக்க தருமதேவதை என்ற மஹரிஷியும், பாலம் தனில்-நெற்றியிலிருந்து, உருத்திரரும்-(பதினொருவர் என்று பிரசித்தமாகிய) ருத்திரர்களும், வந்தார்-தோன்றினர்கள்; இன் னும்—, வன முலை இலக்குமி-அழகிய கொங்கைகளையுடைய இலக்குமிதேவி, பைதாமகன்-(காலமாகிய) சக்கரத்திற்குரியவ னாகிய மனு, தாதை-தாதா, விதாதை-விதாதா, எனும் ஒரு நால்வர்-என்ற நான்கு பேரும், வந்தார்-தோன்றினர்கள்; (இங்ஙனம்) எண்கணன்-எட்டுக் கண்களையுடைய பிரமதேவன், பயந்தார் தம்மில்-பெற்றெடுத்து உண்டாக்கியவர்களில்; (எ-று). —"மரீசி ஈன்ற காசிபன் முற்றினன் வதுவை" என மேலைக் கவியோடு தொடரும்.

பிருகுமஹரிஷி பிரம்மாவின் ஹிருதயத்தைப் பிளந்துகொண்டு வெளிப்பட்டார்: இங்கே 'மனத்தினில்' என்றது-ஹிருதயத்தைக் குறிக்கும். தருமன் (தருமதேவதைரிஷி) பிரம்மாவின் வலஸ்தனத் தைப் பிளந்துகொண்டு வெளிப்பட்டார். 'கை' என்றது வல மார்பின் ஸ்தனபாகத்தைக் குறிக்கும். இடக்கரடக்கலாகக் கொள்ளலாம். கையின்-இன், ஐந்தனுருபு, நீக்கப்பொருளது.

பாலம்-நெற்றி: (Forehead). ஏகாதச ருத்திரர் எனப்படும் பதினொரு உருத்திரர்: அவர்களின் பெயர் பின் வருமாறு:—மிருக வியாதர், சர்ப்பர், நிருருதி (பெரிய கீர்த்தியுள்ளவர்), அஜைகபாத், அஹிர்ப்புத்னியர், வீரராகிய பினாகி, தஹனர், ஈச்வரர், கபாலி (பெரிய தேஜஸ் உள்ளவர்), ஸ்தாணு, பகர் ஆகிய இவர்கள். இலக்குமி என்றது-[கடல் கடைந்த காலத்துத் தோன்றிய இலக்குமியை அன்று], இங்கு எல்லாப் பொருள்களின் மனத்தையும் கவரத்தக்க மங்களகரமான சோபையைக் குறித்தது. இவள் தாதா விதாதா என்பவர்களின் சகோதரி; இந்தத் தாதா விதாதா இருவரும் மனுவென்னும் தேவனுடன் இருப்பவர்கள். பைதாசக்கரம்: வண்டிச் சக்கரத்தைப் "பைதா" என்பர். இது உலக வழக்குச்சொல். பைதா மகன்-கால சக்கரத்திற்குரிய மனு. இவன் பர்ஜந்யன் என்று சொல்லப் படுபவனுகலாம். தாதா, விதாதா-தாதை விதாதை என-ஆவீறு ஐ யான வடசொற்கள். (4)

5-9. பிரமனின் மானசிக புத்திரர் அறுவர் வமிசம் கூறுதல்

மரீசி வமிசம்

5. காசிபன் பத்தினி அதிதி துவாதசாதித்தரை யீனுதல்.

கற்றகுண மரீசி யின்ற காசிப னென்னுங் தூயோன்
வெற்றிகொள் தக்க னின்ற மெல்லிய ரைம்பான் தம்மின்
மூற்றினன் வதுவை யோர்பன் மூவரை யவர்க டம்மிற்
சொற்றிடு மதிதி யின்ருள் துவாதசா தித்தர் தம்மை.

(இ-ள்). கற்றகுண மரீசி-பிறர் கற்கவேண்டிய நற்குணங் களையுடைய (மிகுந்த மகிமையுள்ள) மரீசி மஹரிஷி, ஈன்றபெற்ற, காசிபன் என்னும் தூயோன்-கச்யபர் என்னும் புனிதன், வெற்றிகொள் தக்கன் ஈன்ற-எடுத்த காரியங்களில் வெற்றியே யடையும் தக்ஷப்பிரஜாபதி பெற்ற, மெல்லியர் ஐம்பால் தம்மில்-ஐம்பது பெண்களில், ஓர் பன்மூவரை-பதின்மூன்று பேரை, வதுவை முற்றினன்-(தான்) திருமணஞ் செய்துகொண்டான்: அவர்கள் தம்மில்-அந்தப் பதின்மூவருள், சொற்றிடும்-முதலில் வைத்துச் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, அதிதி-அதிதி

என்பவள், துவாதச ஆதித்தர் தம்மை-பன்னிரண்டு சூரியர்களை, ஈன்றாள்-பெற்றெடுத்தாள்; (எ-று).

அதிதி பெற்ற பன்னிரண்டு ஆதித்தர்களின் பெயர்கள் பின் வருமாறு:—தாதா, மித்ரன், அர்யமா, சக்ரன், வருணன், அம்சன், பகன், விவஸ்வான், பூஷா, ஸவிதா, த்வஷ்டா, விஷ்ணு என்பன. இவர்களுள் விஷ்ணு குணங்களிற் சிறந்தவர்: லோகங்களுக்கு ஆதாரமாக இருப்பவர்.

தக்ஷன் பெற்ற ஐம்பது பெண்களில் பதின்மூன்று பேரைக் காசிபரும், இருபத்தேழு பேரைச் சந்திரனும், பத்துப் பேரைத் தருமதேவதை என்னும் ரிஷியும் தேவதா விவாஹக் கிரமப்படி மணந்தனர். காசியபர் மணந்த பதின்மூவர் பெயர்கள் பின் வருமாறு;—அதிதி, திதி, தனு, காலி, தனுயு. ஸிம்ஹிகை, குரோதை, பிராதை, விச்வை, வினதை, கபிலை, முனி, கத்ரு என்பவர். (5)

6-7. காசிபரின் ஏனைய மனைவியர் அசுரர், அரக்கர், கருடர், நாகர், மிருகங்கள், சித்தர், தேவகந்தர்வர்கள், நடனம் ஆடும் அப்ஸரஸுகள், யக்ஷகணப் பசுக்கள் இவர்களை ஈனுதல்.

(இரண்டு கவிகள்—ஒரு தொடர்)

6. காசிபரின் மனைவியரைவர் பெற்றமை கூறும்.

வனமுலை திதியும் பொல்லா மதியிர ணியனைப் பெற்றாள்
தனுவும் தானவர்கள் நாற்பான் தந்தனள் தனுயு நால்வர்
சினவசு ரரைப் பயந்தாள் சிங்கிகை யிராகு தந்தாள்
அனநடை காலி யென்பாள் அரக்கர் ஐம்பதின்ம ரீன்றாள்.

(இ-ள்). வனமுலை திதியும்-அழகிய கொங்கைகளையுடைய திதி என்ற (காசியபரின் மனைவியும்), பொல்லா மதி இரணியனை-கொடிய புத்தியையுடைய ஹிரண்யகசிபுவை, பெற்றாள்-: தனுவும்-தனு என்பவளும், தானவர்கள்-தானவர்கள் எனப்படும் அசுரர்கள், நாற்பான்-நாற்பது பேரை, தந்தனள்-ஈன்றனள்; தனுயு-தனுயு என்பவள், நால்வர் சின அசுரரை பயந்தாள்-கோபிக்கும் தன்மையுள்ள நான்கு அசுரர்களைப் பெற்றாள்; சிங்கிகை-சிம்ஹிகை என்பவள், இராகு தந்தாள்-இராகு (முதலிய ஐவரைப்) பெற்றாள்; அன நடை காலி என்பாள்-அன்னம்

போன்ற நடையழகையுடைய காலி என்ற மனைவி, அரக்கா ஐம்பதின்மர் ஈன்றாள்-(காலகேயர் உள்ளிட்ட) ஐம்பது அரக்கரைப் பெற்றாள்; (எ-று).

ஹிரண்யகசிபு ஒருவன்தான் திதியின் புத்திரன் என்று சொல்லப்பட்டவன். (திதி வம்சத்தவர்–தைத்தியர் எனவும் படுவதுண்டு). தனுவுக்கு நாற்பது புத்திரர்கள்; அவர்கள் எங்கும் பெயர் பெற்றவர்கள். அவர்களுக்குள் முதலவனும் புகழ் பெற்றவனுமாகிய விப்ரசித்தியென்பவன் அரசனாயிருந்தான். தனுவின் புத்திரர்கள் நால்வர்-விக்ஷரன், பலன், வீரன், வ்ருத்ராஸுரன் என்பவர். இவர்கள் அசுரசிரேட்டர்கள். சிம்ஹிகையின் மூத்த பிள்ளை-இராகு. மற்றும் அவளுக்குச் சந்திரார்க்கமர்த்தனன், ஸுசந்திரன், சந்திரஹர்த்தா, சந்திரப்ரமர்த்தனன் என்ற பிள்ளைகளும் உண்டு. காலி என்பவளுக்கு அசுர வீரர்கள் என்று பேர் பெற்ற விநாசனன், குரோதன், குரோதஹந்தா, குரோதசத்ரு என்ற இவர்களும் காலகேயர்கள் என்று பேர்பேற்ற இன்னும் சிலரும் புத்திரர்கள் ஆவர். (6)

7. காசிபரின் ஏனைய மனைவியர் எழுவர் பெற்றமை கூறும்.

உத்தம வினுதை யென்பாள் உவணனே டருணன் றன்னை
கத்துரு அரவம் குரோதை கணனையும் பிராதை யென்பாள்
சித்தரை முனியென் பாள்கந் திருவரைச் சுரபிப் பேராள்
நிர்த்தரம் பயரை யாணை யனகையும் இயக்கர் நேர்ந்தார்.

(இ-ள்). உத்தம வினுதை என்பாள்-உத்தமியான வினுதை என்னும் மனைவி, அருணனோடு-அருணனென்பவனோடு, உவணன் தன்னை-கருடனையும் (ஈன்றாள்); கத்துரு-கத்துரு என்னும் மனைவி, அரவம்-நாகர்களை (ஈன்றாள்); குரோதை-குரோதையென்பவள், கணனையும்-குரோதவசர்கள் என்று பெயருள்ள ஒரு கூட்டத்தையும் (ஈன்றாள்); பிராதை என்பாள்—, சித்தரை-சித்தர்களை (ஈன்றாள்); முனி என்பாள்—, கந்திருவரை-தேவகந்தர்வர்களை (ஈன்றாள்); சுரபி பேராள்-சுரபியென்னும் பெயருடையவள், நிர்த்த அரம்பயரை-நடனத்தில் வல்ல அரம்பையராகிய அப்ஸரஸுக்களை (ஈன்றாள்); அனகையும்-குற்றமற்றவளான விச்வையும், ஆணை-பசுக்கூட்டங்களை, இயக்கர்-யக்ஷரின் கணம் [என்று அறியும்படி], நேர்ந்தார்-உண்டாக்கினாள்; (எ-று).

அருணன் முன்பிறந்தவனுதலின், "ஒடு" பிரித்து அருணனெடு கூட்டப்பட்டது. நிர்த்தம்-நிருத்தம்: நடனம், நாட்டியம். அரம்பயர் = அரம்பையர். ஆன்-பசுக்கள். அரம்பையரை + ஆனை — அரம்பையரையானை-யகரவுடம்படுமெய்பெற்று வந்தது. ஆனை-ஆன் + ஐ = இரண்டாம் வேற்றுமை விரி. அனகை-குற்ற மற்றவள்.

கத்துருவின் புத்திரர்கள்-சேஷன், அநந்தன், வாசுகி, தக்ஷகன், கூர்மன், குலிகன் என்ற இவர்கள்: நாகர்களாவர். குரோதை என்பவள்-குரூரமான ஸ்வபாவமுள்ளவளாதலின், அவளிடம் உதித்த புத்ரர்களும் பௌத்ரர்களும் கொடியவர்க ளாகவே யிருந்தனர். அவர்கள் ஒரு கூட்டமாகவே இருந்தார்க ளாதலின் "கணனையும்" என்றார். கணன்-கூட்டம்; இனம். இந்தக் கூட்டத்தைக் "குரோதவசர்கள்" என்பர். (குரோதம்-கோபம்) இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவை மிருக சாதிகள். (கரடிகள், கவரிமான்கள், குரங்குகள், சிங்கங்கள், புலிகள், யானை கள், போல்வன: மேலே செ: 12-இல் இதன் உரை விவர விளக்கங் கள் காணலாம்.) பிராதையின் புத்திரர்கள் சித்தர் என்பவர்: சித்தன், பூர்ணன், பர்ஹிஸ், பூர்ணயுஸ், பிரமசாரி, ரதிகுணன், ஸுபர்ணன், விசுவாவசு, பானு, ஸுசந்திரன் என்பவர் இவர் களைச் சேர்ந்தவர்: இவர்களும் தேவகந்தர்வர்கள் எனப்படுவர். இனி, முனி என்பவளுக்குப் புத்திரர்களாகச் சொல்லப்பட்ட தேவகந்தர்வர்களின் பெயர்கள் பின்வருமாறு:—பிமசேனன், உக்ரசேனன், ஸுபர்ணன், வருணன், கோபதி, திருதராஷ்டிரன், ஸூர்யவர்ச்சஸ், ஸத்தியவாக்கு, அர்க்கபர்ணன், பிரயுதன், பீமன், பிரஸித்தன், சித்ரரதன், சாலிசிரஸ், பர்ஜன்யன், கலி, நாரதன் என்பவர். சுரபி-கபிலை; கபிலையின் புத்திரர்கள்-அப்ஸரஸ் ஸ்திரீகள். இவர்கள் நடனமாடுதலில் வல்லவர். இவர்கள் தவிர, கபிலையினிடம் அமிர்தமும் பிராமணர்களும் கந்தர்வர்களும் தோன்றினர் என்று பூர்வகல்ப சரித்திரத்தில் கூறப்பட்டுள்ளது என்பர். இயக்கர்-யக்ஷர்: இவர்கள் புலஸ்திய மரபினர் என் பதை மேலை 9-ஆம் செய்யுளால் அறிக. பசுக்களையும் அசுவினி தேவர்களையும் ஓஷதிகளையும் யக்ஷகணத்தில் அடக்குவதுண்டு.

இங்ஙனம் காசியபமுனிவர் தக்ஷபுத்திரிகள் பதின்மூவரை மணந்து அவர்கள் மூலம் பலவகைச் சந்ததிகளையும் உண்டாக்கி னர். இவர்களுக்குப் பராக்கிரமசாலிகளான பிள்ளைகளும், பேரர் களும் எண்ணில்லாதவர்கள் உண்டானார்கள். இப்படிப் பிரபஞ்சம் சிருஷ்டியாயிற்று. [குறிப்பு:—காசிபன் அதிதியிடம் தேவர்களையும் திதியிடம் அரக்கர்களையும் பெற்றார்: இந்த

இரண்டு கணங்களையும் உள்ளிட்ட பண்புகளைக்கொண்டுதான் எல்லாவகைத் தோற்றங்களும்: எனவே பிரகிருதியெல்லாம் ஆசுரம், தைவிகம் இரண்டனுள் அடங்கும். இதனைத்தான் முன்னர் 2-ஆஞ் செய்யுளில் "அறைகழல் அரக்கர் விண்ணோர் அவனியில் தோற்றும்பான்மை" என்று சுட்டிக்காட்டித் தோற்றுவாய் செய்தார்],

இனி, "அருணையென்பாள் சித்தரை மனுவென்பாள் கந்திருவரை" என்று பாடங்காண்கின்றது. அருணை என்பவள் சுபகாதேவிக்கும் தேவரிஷிக்கும் பிறந்த அப்ஸரஸ் ஆகக் கூறப் பட்டுள்ளது. இந்தச் சுபகை பிராதை யென்பவளின் பெண் ணைக் கூறப்படுவள். அதேமாதிரி, மனு என்பவளும் பிராதை யின் பெண்ணைக் கூறப்படுவள். எது எங்ஙனமாயினும், தேவ ஜாதியோ அரக்கஜாதியோ எல்லோரும் காசியபரின் சந்ததியின ராவர் என்பது குறிக்கொளல் வேண்டும். (7)

அத்திரி வமிசம், அங்கிரஸ் வமிசம்

8. தவமுனிவரரையும் தேவகுரு முதலானேரையும் பெறுதல்.

பவமில்கா சிபற்கிம் மாதர்ப் பயந்தருட் புதல்வர் தம்மால்
அவனிகள் விருத்தி யாய தத்திரி யென்போ னெண்ணிற்
றவமுனி வரரைப் பெற்றான் சமக்கிலாங் கீர னீன்ற
உவமையிற் சுதரின் மூத்தோன் உம்பர்க்கா சிரிய னனன்,

(இ-ள்). பவம் இல் காசிபற்கு-பிறவிப் பிணியென்பதில்லாத காசியபருக்கு, இ மாதர்—இந்த [மேற்கூறிய] மனைவியர்கள், பயந்தருள்-பெற்றெடுத்த, புதல்வர் தம்மால்-புத்திரர்களால், அவனிகள்-(பலவகைச்) சந்ததிகள் [அவர்களது புத்திர பௌத் திரர்களால்], விருத்தியாயது-விருத்தியாகிப் பெருகின: [இது நிற்க].—

அத்திரி என்போன்-[பிரமனின் மானசிக புத்திரர்களில் ஒருவ ராகிய] அத்திரி என்ற மஹரிஷி, எண் இல்-கணக்கில்லாத (அநேக), தவ முனிவரரை-தவமுனிச் சிரேட்டர்களை, பெற்றான்-பெற்றெடுத்தான்: சமக்கு இல்-குற்றம் (சிறிதும்) இல்லாத, ஆங்கீரன்-அங்கிரஸ் என்ற மஹரிஷி, ஈன்ற-பெற்ற, உவமை இல்-ஒப்பற்ற, சுதரின்-புத்திரர்களில், மூத்தோன்-முதல்வனாகிய

பிருஹஸ்பதி என்பவன், உம்பர்க்கு-தேவர்களுக்கு, ஆசிரியன் ஆனன்-குரு ஆயினன்; (எ-று).

அத்திரி அனசூயை என்னும் பத்தினி மூலம் பெற்ற புத்திரர்கள் அநேகர்: அவர்களெல்லாரும் வேதவித்துக்களும் தவத்தில் சித்தி பெற்றவர்களும் அடங்கின மனமுள்ளவர்களுமாகிய மஹரிஷிகள். அங்கிரஸின் புத்திரர்கள் மூவர்-பிருஹஸ்பதி, உதத்தியர், ஸம்வர்த்தர் என்போர். இவர்களில் பிருஹஸ்பதி தேவகுரு. [சுக்ரன் அசுரகுரு என்பது நினைக]. அங்கிரஸும் அத்திரியைப் போலப் பிரமனின் மானச புத்திரரே. (8)

புலஸ்தியன் வமிசம், புலகன் வமிசம், கிருது வமிசம்.

9. யக்ஷர்களையும், கிம்புருடர் கின்னரர்களையும், வாலகில்யர் முதலானோரையும் பெறுதல்.

பேசிய புலத்தி யன்விச் சிரவாகுவைப் பெற்றான் மற்றோன்
ஆசறு குபேர னோடும் சுரரெண்ணி லவரைத் தந்தான்
ஏசறு புலகன் றன்கிம் புருடர்கின் னரரை யீன்றான்
மாசறு கிருது யிர்த்தான் மறைவன்மா முனிவர் தம்மை.

(இ-ள்). பேசிய-[பிரமனின் மானசபுத்திரன் என்று] சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, புலத்தியன்-புலஸ்திய மஹரிஷி, விச்சிரவாகுவைப் பெற்றான்—; (அதன்பின்) மற்றோன்-மற்றொரு குமாரனுகிய, ஆசறு-குற்றமற்ற, குபேரனோடும்—, அசுரர் எண்ணிலவரை–கணக்கற்ற யக்ஷர்களை, தந்தான்-பெற்றெடுத்தான்; ஏசு அறு புலகன்-குற்றமற்ற (பழிப்புக்கிடமில்லாத) புலக மஹரிஷி, கிம்புருடர் கின்னரரை-கின்னர கிம்புருடர்கள் (என்ற தேவகணங்களை), ஈன்றான்-பெற்றான்; மாசு அறு-குற்றமற்ற, கிருது-க்ரது என்ற மஹரிஷி, மறை வல் மா முனிவர் தம்மை-வேதங்களில் வல்ல சிறந்த முனிவர்களாகிய வாலகில்யர் என்னும் புத்திரர்களை, உயிர்த்தான்-பெற்றான்; (எ-று),

யக்ஷர்கள் (இயக்கர்கள்) புலஸ்தியர் மரபினர்; அசுரகணத்தவர். இவர்களுட் செல்வத்திற் சிறந்தவன் குபேரனதலின் தனிப்பட ஓதப்பட்டான். இனி, கின்னரரையும் புலஸ்திய மரபினர் எனக் கூறுப. கிம்புருடர்-புலகர் மரபினர். [கின்னரர்-

குதிரை முகமும் மனிதவுடம்பும் உடையவர்கள். கிம்புருடர்-மநுஷ்ய முகமும் குதிரை உடம்பும் உடையவர்கள்] க்ரது புத்திரர்களாகிய வாலகில்யர் என்பவர்கள் சூரியனோடுகூட சஞ்சரிக்கின்றவர்கள்; சத்தியத்தையும் தவத்தையுமே முக்கிய மாகக் கொண்டவர்கள்.

புலகன்தான்-தான், அசை.

[குறிப்பு: இந்தச் செய்யுளோடு பிரமனின் மனத்திலிருந்து பிறந்த புத்திரர்களாகிய ஆறு மகரிஷிகளின் வமிசங்களும் கூறப் பட்டு முடிவுறுகின்றன என்பதைக் குறிக்கொள்க.] (9)

பிரமனின் தேகசம்பந்தம்பெற்ற புத்திரர்கள் இருவர் வமிசம் கூறுதல்-(10-11)

தக்ஷரின் வமிசம்

10. அஷ்டவசுக்களையும் அச்வினீ தேவர்களையும் பெறுதல்.

துங்கபை தாம கன்றன்
சுதன்பிரசா பதியி னோரேழ்
மங்கையர் களைவேட் டன்பின்
வசுக்களெண் மரையு மீன்றான்
பங்கமின் மனுவுந் தக்கன்
பாவையர்க் குயிர்த்த மைந்தர்
தங்களின் முன்னே னுயுள்
வேதியர் தம்மை யீன்றான்.

(இ-ள்). துங்க-பரிசுத்தமாகிய, பைதாமகன்தன்-பிரமதேவனின், சுதன்-மகனுகிய, பிரசாபதியின்-தக்ஷபிரஜாபதியின், ஓர் ஏழ் மங்கையர்களை-ஏழு புத்திரிகளை, அன்பின் வேட்டு-விரும்பி மணஞ்செய்துகொண்டு [தருமதேவதை ரிஷியானவர்], வசுக்கள் எண்மரையும்-அஷ்டவசுக்களையும், ஈன்றான்-பெற்றெடுத்தார்; பங்கம் இல்-குற்றமற்ற, மனுவும்-காசியபரும், [திருமணம் செய்துகொண்டு] தக்கன் பாவையர்க்கு-தக்ஷ புத்திரிகளாகிய பதின்மூன்று பேருக்கும், உயிர்த்த-பெற்றுக்கொடுத்த, மைந்தர் தங்களின்-புத்திரர்களின், முன்னோன்-முற்பட்டு முதல்வனுகிய [அதிதிதேவியின் மகாராகிய துவாதசாதித்தர்களுக்குள் முதல்வனுகிய] தாதா என்பவன், ஆயுள்வேதியர் தம்மை-அசுவினி தேவர்களை, ஈன்றான்-பெற்றான்; (எ-று).

பிரம்மாவின் வலக் கைக் கட்டை விரலினின்றும் தோன்றிய தக்ஷபிரஜாபதியின் புத்திரிகள் ஐம்பது பேர்களுள் பத்துப் பெண்களைத் தக்ஷர் தர்மதேவதை ரிஷிக்கு மணஞ்செய்துகொடுத்தார். அந்தப் பெண்களுள் ஏழுபேர்களுக்குத் தர்மதேவதையிடம் அஷ்டவசுக்கள் தோன்றினர். அந்த ஏழு பெண்களின் பெயர்-தூம்ரை, பிரம்மவித்தி, மனஸ்வினி, சுவாஸை, ரதை, சாண்டிலி, ப்ரபாதை என்பவை. இவர்களுக்கு முறையே தரன், துருவன், ஸோமன், அநலன், அகஸ், அநிலன், ப்ரத்யூஷனும் ப்ரபாஸனும் எனும் இவர்கள் தோன்றினர். இவர்கள் எட்டுபேரும் அஷ்ட வசுக்கள் எனப்படுவர். (குறிப்பு:—ப்ரத்யூஷனும் ப்ரபாஸனும் ப்ரபாதையின் புத்திரர்கள்: இந்த எட்டாமவனுகிய ப்ரபாஸன் தான் பின்னர் வீடுமனுகத் தோன்றப்போகிறான். மனு-காசிபன். முதல் மனவி அதிதிக்குத் துவாதசாதித்தர் தோன்றினர் என்று முன்னரே ஐந்தாஞ் செய்யுளிற் கண்டோம். இங்கே அந்த ஆதித்தியர் பன்னிருவருள் மூத்தவனுய் முன்னுளுகிய தாதா என்ற சூரியன் தேவமருத்துவராகிய அசுவினி தேவர்களை ஈன்றான். [இந்தத் தாதா என்ற சூரியன் விசுவகர்மாவின் பெண்ணை மணந்தான்: அந்தப் பெண் பெண்குதிரை வடிவமெடுத்துக்கொண்டு ஆகாசத்தில் அசுவினி தேவர்கள் இருவரையும் பெற்றாள்.] (10)

பிருகுவின் வம்சம்

11. அசுர குருவாகிய சுக்ரன், சியவனர், ஜமதக்னி, பரசுராமன் இவர்களின் பிறப்பு கூறுதல்.

பிருகென்போன் கவியி னெடுஞ்
சவனனுஞ் சுதனைப் பெற்றான்
வருகவி சுங்கன் றன்னை
வழங்கினன் சவன னென்போன்
தருசம தக்னி யென்பான்
தையல்றே ணுகையை வேட்டுப்
பரசுரா மன்ற னுதி
பாலர்நால் வரைப்ப யந்தான்.

(இ-ள்). பிருகு என்போன்—[பிரம்மாவின் ஹிருதயத்தைப் பிளந்து கொண்டுவந்த] பிருகு மஹரிஷி, கவியினெடும்-சுக்கிரனை

டும், சவனனும் சுதனை-சியவனன் என்னும் மற்றொரு புத்திரனையும், பெற்றான்—; வரு கவி-வந்த அந்தச் சுக்கிரன், சுங்கன் தன்னை வழங்கினன்-சுங்கன் என்பவனைப் பெற்றான்; சவனன் என்போன்-சியவனன் என்றவன், தரு-தன் மரபில் தந்த (தன் பேரனாகிய), சமதக்னி என்பான்-ஜமதக்னி என்ற ரிஷி, தையல் ரேணுகையை-ரேணுகாதேவியை, வேட்டு-திருமணஞ் செய்து கொண்டு, பரசுராமன் தன் ஆதி பாலர் நால்வரை-பரசுராமன் உள்ளிட்ட பிள்ளைகள் ஐவரை, பயந்தான்-பெற்றார்; (எ-று.)

பிருகுவின் புத்திரர் கவி என்கிற சுக்ரர்: இவர் நவக்ரஹங்களில் ஒருவர். இவரைப் பிரம்மா உலகங்கள் சீவிப்பதற்காக மழை, மழையின்மை, பயம், பயமின்மை இவைகளைச் செய்யும் படி ஏற்படுத்தினார்: எனவே உலகத்தைச் சுற்றுகிறார். மற்றும் அசுரர்களுக்குக் குருவாவர்- த்வஷ்டா, அத்ரி, ரௌத்ரன், கர்மி, என்ற நாலு புரோஹிதர்களும், சுக்ராசாரியரின் புதல்வர்கள் எனப் பிரஸித்திபெற்றவர்கள்,

பிருகுவின் மற்றொரு புத்திரர் சியவனர்: இவர் ஜ்வலிக்கின்ற தபஸுள்ளவர்; தரும சிந்தையினர்: இவருடைய பத்னி ஆருஷி யென்ற ரிஷியின் பெண்ணுவள். அவளிடத்தில், தேஜஸ் சக்தி இவைகளில் விஞ்சியிருந்த ஔர்வர் என்பவர் தொடையைப் பிளந்துகொண்டு பிறந்தார். (ஊரு-தொடை) ஔர்வருடைய புத்திரர் ரிசிகர்; ரிசிகர் புத்திரர் ஜமதக்னி-இவர்க்கு ரேணுகையிடம் பரசுராமன் முதலிய ஐந்து புத்திரர்கள் பிறந்தனர். பரசுராமன் தான் கடைசி. ஐந்தாவது பிள்ளையாயினும் குணங்களில் முதன்மையானவராயிருந்தார். பரசுராமன்றன் ஆதிபாலர் நால்வர்-பரசுராமனுக்கும் முன்னராகிய பிள்ளைகள் நால்வர்; எனவே ஐவராயிற்று. [ஏனையோர்-ருமண்வான், ஸுஷேணன், வஸு, விசுவாவஸு என்போர்].

[குறிப்பு: இந்த ஔர்வர் மரபில் ஜமதக்னி முதலான நூறு புத்திரர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு அநேகம் ஆயிரம் புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்கள் பூமியில் பெருகி வாழ்ந்தனர்.] "சவனன் தரு சமதக்னி" என்றவிடத்து, சவனன் மரபு தரு சமதக்னி எனக்கொள்க: சவனன் பேரன் சமதக்னியாதலின்.

பரசுராமன்:—பரசு-கோடாலிப்படை: மழுப்படை யென்பது முண்டு. வில்லியும் கலப்பையையும் ஆயுதமாகவுடைய தசரத

பலராமர்களினும் வேறுபாடு விளங்க "பரசுராமன்" எனப் பெயர்: இவன் சிரஞ்சீவி. இவன் பிராமண குமாரனுயினும் க்ஷத்திரியாசார முடையவனுயினன். கார்த்தவீரியார்ச்சுனனது ஆயிரம் புயங்களையும் துண்டித்தவன். மூவெழுகால் முடிவேந்தர் அனைவரையும் முடிப்பித்து அக்கினிதேவன் களிக்க நரமேதஞ் செய்தவன். [சுக்கிரனையே சுங்கன் என்பதும் உண்டு.] (11)

12. தாவரவர்க்கம், பட்சி மிருக வர்க்கங்கள் மேதினியில் பெருகுதல்.

ஓதிய விவரன் றின்னும் உரைக்கருங்
தொகையி னோர்கள்
பாதபங் கொடியும் புள்ளும்
பலவகை மிருக மீன்ரூர்
மேதினி தானிவ் வாற்றுல்
விருத்தியாய்த் தழைத்த திப்பால்
மாதவன் புவியிற் ரூற்றஞ்
செய்திறன் வகுப்பன் மாதோ.

(இ-ள்). ஓதிய-மேலே கூறப்பட்ட, இவரன்றி-இவர்களேயன்றி, இன்னும்-மேலும், உரைக்க அரும்-(பட்டியலிட்டுக்) கூறுதற்கு அரிய, தொகையினோர்கள்-வமிச உற்பத்திக்குக்காரணமான கூட்டத்தினர்கள், பாதபம்-மரங்களும், கொடியும்-கொடிகளும், புள்ளும்-பறவைகளும், பலவகை மிருகம்-பலவகை விலங்குகளும் (ஆகியவைகளை), ஈன்ரூர்-பெற்றூர்கள்; இவ்வாற்றுல்-இவ்வகையாக, மேதினி விருத்தியாய்த் தழைத்து-பூமி முற்றும் விருத்தியாகிச் செழித்தது: (இது நிற்க); இப்பால்-இனி, மாதவன்-மகாவிஷ்ணு, புவியில் தோற்றம் செய்திறன்-பூவுலகில் அவதரித்த வகையினை, வகுப்பன்-சொல்லப்புகுவேன்; (எ-று.). மாது, ஓ-ஈற்றசை.

உரைக்க அரும் தொகையினோர்கள் என்றவிடத்துக் காண வேண்டிய விவரங்கள் பின் வருமாறு:—தாம்ராதேவியும் அவள் ஈன்ற பெண்கள் ஐவரும். குரோதவசையும் அவள் ஈன்ற பெண்கள் ஒன்பதின்மரும். அவ்வொன்பதின்மருள் ஒருத்தியாகிய சுரபியும் அவள் ஈன்ற பெண்கள் நால்வரும்.

தாம்ராதேவி என்பவள் காகி, சேனி, பாஸி, திருதராஷ்ட்ரி, சுகி என்ற ஐந்து பெண்களைப் பெற்றுள். காகியென்பவள்

கோட்டான்களையும்; சேனி பருந்துகளையும்; பாஸி கள்ளிக் காக்கைகளையும் கழுகுகளையும்; திருதராஷ்ட்ரி ஹம்ஸங்களையும், காரன்னங்களையும் சக்ரவாகங்களையும்; சுகி கிளிகளையும் பெற்றனர்.

அதன்பின் குரோதவசையென்பவள் [இவள் குரோதை (செ: 7) என்ற குரோதவசர்கள் என்ற கூட்டத்தைச் சேர்ந்தவள்] கோபதேவதையின் மூலமாக மிருகி, மிருகமந்தை, பத்ரமனஸ், ஹரி, சார்த்தூலி, மாதங்கி, சுவேதை, சுரபி, சுரசை என்ற ஒன்பது பெண்களைப் பெற்றாள். மிருகியின் சந்ததிகள்-மிருகங்களெல்லாம். மிருகமந்தையின் சந்ததிகள்-கரடிகள், கவரிமான்கள். பத்ரமனஸ் சந்ததி–ஐராவதம் என்னும் தேவலோகத்து யானை. ஹரியின் சந்ததிகள்-பலசாலிகளாகிய குரங்குகள், கருங்குரங்குகள், கோலாங்கூலங்கள் (முசுக்கள்). சார்த்தூலியின் சந்ததிகள்–சிங்கங்கள், புலிகள், வேங்கைகள் போன்றவை. மாதங்கியின் சந்ததி-யானைகள். சுவேதையின் சந்ததி-வேகமாகச் செல்லத்தக்க சுவேதம் என்று பெயருள்ள திக்கஜம். சுரபியின் சந்ததி-அவள் பெற்ற ரோஹிணி, கந்தர்வி, விமலி, அநலி என்கிற பெண்கள் மூலமாக உண்டாயது. ரோஹிணியிடம் பசுக்கள் பிறந்தன; கந்தர்வியிடம் குதிரைகள் பிறந்தன; விமலியிடம் மூன்று கன்னிகைகள் பிறந்தார்கள். அவர்கள் மூவரும் மரம், செடிகொடிவர்க்கங்களுக்கெல்லாம் உரியவர்கள். அம்மூவருள் இரண்டுபேர் பிரசித்தமாகப் பேசப்பட்டவர்கள். ஒருத்தி பேர் லதை—பூவாதே காய்க்கும் மரங்களெல்லாம் இவள் சந்ததிகள். இவற்றைத்தாம் வனஸ்பதிகள் என்கின்றனர்; மற்றொருத்தி பேர் ருஹை—பூக்கள் பூத்துப் பலிக்கின்ற மரங்களெல்லாம் இவள் சந்ததிகள். புதர்களும் மூங்கில் போன்ற புல் ஜாதிகளும் கொடிகளும் கூட இவள் சந்ததிகள். அநலியிடம் பிண்டபலன்களென்று சொல்லப்படும் உருண்டை வடிவான பழங்களைக் கொண்டுள்ள ஏழு மரங்கள் பிறந்தன. சுகி என்ற ஒருத்தியை இந்த அநலியின் பெண் என்பர். இவள் முன்னர்க் கூறிய (கிளிகளைப் பெற்ற) சுகியினும் வேறானவள். இனி, இறுதியாக, சுரசையின் சந்ததி-கங்கன் முதலாயநாகங்கள்.

இவ்வாறு எல்லா முக்கியப் பொருள்களுடைய உற்பத்தியும் இச் சருக்கத்தில் கூறப்பட்டதாதலின், பிரபஞ்சம் உற்பவமாயிற்று.

இங்ஙனம் உற்பவமான பிரபஞ்சம் மேலும் விருத்தியாகித் தழைத்திடவே, பொறை மிகுந்து போக, பூமிதேவி ஆற்றாது முறையிட அவளது பூபாரம் தீர்ப்பான் முராரியாகிய மாதவன் (விஷ்ணு) பூவுலகில் தோற்றஞ் செய்தான் என்று அடுத்த சருக்கத் திற்குத் தோற்றுவாய் செய்தபடி ஈற்றடியிற்காணலாம். (செய்யுள் 2-உம் நோக்குக). (12)

பிரபஞ்சம் உற்பவச் சருக்கம் முற்றிற்று.

———

எட்டாவது

பாரத வீரர் உற்பவச் சருக்கம்

பாரத வீரர்களின் தோற்றத்தைப் பற்றிக் கூறும் சருக்கம் என்று பொருள்படும். பாரத வீரர்களாவார்—ஸ்ரீ மகாபாரத மாகிய இதிகாசரத்தினத்திற் பயில வருகின்ற வீரர்கள். இவர்களின் பிறப்பினைப் பற்றிக் கூறுவது இப்பகுதி.

இந்தச் சருக்கத்தில் கிருஷ்ண பலராமர், நாராயண கோபாலர் முதலாய யாதவர்கள், உருக்குமிணி கோபஸ்திரீகள், பஞ்சபாண்ட வர்கள் துரியோதனாதியராகிய கௌரவர்கள், துருபதேயர், வீடும கிருப விதுர துரோண அசுவத்தாம கர்ண சல்லிய சகுனி முதலானவர்கள், திருதராஷ்டிரன், பாண்டு, காந்தாரி, குந்தி, மாத்திரி, திரௌபதி, திட்டத்துய்மன், கிருதவன்மா, பூரிசிரவசு, தேவாபி, சோமதத்தன், சிகண்டி, சராசந்தன், சிசுபாலன், பகதத்தன் இவர்களுடைய பிறப்பும் ஏனைய சுராசுரர் தரணிமீது தோற்றினவகையும் சுருங்கக் கூறப்படுகின்றது.

வேறு

1. கிருஷ்ணபலராமர், தேவமாதர், முனிவர்—இவர்களின் ஜனனம்.

பூவலயத் தியாதவரிற் புகழ்வசுதே
வன்றவத்தின் புயலின் வண்ணன்
தேவகிபாற் கிருட்டினனுய் உரோகிணிபா
லிராமனுமா செனித்தான் செய்யாள்
ஓவியநே ருருக்குமணி முதலியரெண்
மருமானுர் உம்பர் மாதர்
கோவியரா யினர்கள்சனற் குமாரர்முத
லியமுனிவர் குமர ரானுர்.

(இ-ள்). பூவலயத்து-பூ மண்டலத்தில், யாதவரில்-யாதவ மரபினருள், புகழ்-பெரிதும் புகழ் வாய்ந்த, வசுதேவன்-வசுதேவர் என்பவரின், தவத்தின்–தவங் காரணமாக (அத்தவத்தின் பயன் போல), புயலின் வண்ணன்-மேகவண்ணனுகிய விட்டுணு, தேவகிபால்-தேவகியாரிடத்து. கிருட்டினனுய்-கி ரு ஷ் ண ன்

என்னும் பெயர் தரித்தவனுயும், உரோகிணிபால்-உரோகிணி என்பாளிடத்து, இராமனுமா(ய்)-பலராமன் என்னும் பெயர் தரித்தவனுயும், செனித்தான்-அவதாரஞ் செய்தான்; [அதேசமயத்தில் விட்டுணுவின் பத்தினியாகிய] செய்யாள்-இலக்குமியும், ஓவியம் நேர் உருக்குமணி-சித்திரம் போன்ற பேரழகுபடைத்த ருக்மிணியை—, முதலியர்-முதலவளாகக்கொண்டு, எண்மரும் ஆனர்-எட்டுப்பேராக அவரித்தாள்; உம்பர்மாதர்-தேவ மாதர்கள், கோவியராயினர்கள்-கோப ஸ்திரீகளானர்கள்; சனற்குமாரர் முதலிய முனிவர்-சனற்குமாரர் முதலிய முனிவர்கள், குமரர் ஆனர்-பிரத்யும்நன் முதலாகிய அரச குமாரர்கள் ஆனர்கள்; (எ-று).

வசுதேவன்-யதுகுலத்தில் சூரன் என்பவனது குமாரன்: வசுதேவன் என்ற சொல்-ஐசுவரியங்களால் விளங்குபவன் என்று பொருள்படும். இவனுக்குத் தேவகியினிடத்துத் திருமால் எட்டாவது கருப்பத்திற் கிருஷ்ணனுய் அவதரித்தான். கிருஷ்ணவதாரம் ஒன்பதாவது. இனி, பலராமன்-கிருஷ்ணனுக்குத் தமையன்; திருமாலின் எட்டாம் அவதாரம். வசுதேவன் பத்தினியருள் தேவகியின் கருப்பத்தில் ஆறு மாசமும், உரோகிணியின் கருப்பத்தில் ஆறு மாசமும் இருந்து பிறந்தவன். உருக்குமிணிப் பிராட்டி இலக்குமியின் அவதாரம். பீஷ்மகராஜாவின் வமிசத்தில் ஜனித்தாள். கிருஷ்ணனின் மனைவியர் எண்மருள் முதன்மையானவள். ஏனைய ஏழு பேருங்கூட இலக்குமியினமிச முடையவர்களே, [அஷ்டலக்ஷ்மி என்ற வழக்கும் நோக்குக.] அந்த எழுவர்களின் பெயர்கள் பின்வருமாறு:—இலக்குமணை, சத்தியபாமை, சாம்பவதி, நீளாதேவி, காளிந்தி, மித்திரவிந்தை, பத்திரை என்பன. இந்திரன் கட்டளையால் தேவ மாதர்களாகிய அப்ஸரஸ்களுடைய கூட்டம் பூமியில் பதினருயிரம் கோபஸ்திரீகளாக இருந்தனர். இவர்களைக் கிருஷ்ணன் விவாஹம் செய்து கொண்டான். இவர்களுக்குக் கிருஷ்ணனிடம் பிறந்த குமரர்-நாராயண கோபாலர்கள். முனிவர்களுள் சனற்குமாரர் பிரத்யும்நனுயினர். இந்தப்பிரத்யும்நன் கிருஷ்ணனுக்கு ருக்மிணியிடத்துப் பிறந்த புத்திரனுவன். இவன் மனைவி ரதி,

இதுமுதல் இச்சருக்கம் முடியும் வரையுள்ள எட்டுக் கவிகளும்-முதல் நான்கு சீர்கள் பெரும்பாலும் காய்ச்சீர்களும் மற்றை இரண்டு சீர்கள் மாச்சீர்களும் ஆகி வந்த அறுசீராசிரிய விருத்தம். (1)

2. தேவர்கள், வீடுமன், துரோணன், அசுவத்தாமன், கிருபன்—இவர்களின் ஜனனம்.

மாகருதித் தனர்போச யாதவராய்
வசுக்களிலோர் வசுவே வந்து
சோகமய வீடுமனுய்த் தோற்றினனெண்
சுக்கிரனே துரோண னனன்
மோகமருள் காமமொடு குரோதமுமா
தாமனென முளைத்த தோதும்
ஏகதச வுருத்திரரே யிருஞ்சிலைவல்
கிருபனுமா யெழுந்தார் மன்ன !.

(இ-ள்). மன்ன-ஜனமேஜய மஹாராஜனே!—மாகர்-தேவர்கள், போச யாதவராய் உதித்தனர்-குந்திபோஜன் என்னும் மன்னனுகவும், யாதவகுமரராகவும் ஜனித்தனர் : வசுக்களில்-அஷ்டவசுக்களில். ஓர் வசுவே வந்து-பிரபாசன் என்ற பெயருடைய எட்டாவது வசுவே பூவுலகில் வந்து, சோகமய வீடுமனுய்-ஜீவபரதத்துவங்களின் ஐக்கியத்துவ மயமாகிய (பாவனை காட்டவந்த) பீஷ்மராய், தோற்றினன்-ஜனித்தான்: ஒண் சுக்கிரனே-ஒளிபொருந்திய சுக்ரனே, துரோணன் ஆனன்-துரோணசாரியராகப் பிறந்தான்; மோக மருள் காமமொடு குரோதமும்-காமக்ரோத மோஹ மதங்களோடு கூடிய ஒருபடிவம், மா தாமன் என-அசுவத்தாமன் என்பவனுகப் பெயர்கொண்டு, முளைத்தது-எழுந்தது (தோன்றியது); ஓதும்-சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, ஏகதச உருத்திரரே-ஏகாதசருத்திரரே, இரும் சிலை வல் கிருபனுமாய்-பெரிய வில்லைக்கொண்டு செய்யுந் தொழிலில் வல்ல கிருபாசாரியனுமாய், எழுந்தார்-தோன்றினர்கள்; (எ-று).

மாகர்-தேவர், போசன்-குந்திபோஜன்: யதுகுலத் தோன்றலான சூரன் என்பவன் தன் அத்தை குமாரனை குந்திபோசனுக்கு மகவில்லாக் குறையைப் போக்கத் தன் பெண்ணை பிரதை யென்பவளை வளர்க்குமாறு கொடுத்தான்; அவளே குந்திபோஜனல் வளர்க்கப்பட்டது பற்றிக் குந்தியென்று வழங்கப் படுவாளாயினள். எனவே, குந்தி குந்திபோஜனுடைய ஸ்வீகார புத்திரியாவள். தன் பிதாவின் க்ருஹத்தில் வந்த துர்வாச மஹரிஷிக்குத் திருப்தியுண்டாகும்படி பணிவிடைகள் செய்தமை

யால் அவர் மிக மகிழ்ந்து குந்தியை நோக்கித் "தேவியே! நீ இந்த மந்திரத்தினால் எந்த எந்தத் தேவதையை ஆவாஹனஞ் செய்வாயோ அந்த அந்தத் தேவதையின் அநுக்கிரஹத்தினால் புத்திரர் களைப் பெறுவாய்" என்று ஆசீர்வதித்து, மந்திரமுள்ள கிரியையை முறைப்படி உபதேசித்தார். அந்த மந்திர பலத்தினால்தான் கர்ணன் பாண்டவர்களின் தோற்றம் ஆகலின், எல்லா நிகழ்ச்சிகளுக்கும் தொடக்கத்தவனாகிய குந்திபோசனின் தோற்றம் முதன்முதலாகச் சொல்லப்பட்டது என அறிக.

இவன் தோற்றத்திற்குப் பின், தேவர்கள் யாதவர்களாகத் தோன்றினர் என்பது கூறப்பட்டது. அதாவது அநேக மன்னர்கள் தேவர்களுடைய அம்சங்களாக வசுதேவருடைய வம்சத்தில் யாதவ குமாரராகப் பிறந்து வம்சவிருத்தி செய்தனர்.

அஷ்ட வசுக்களிலே கடைசி வசுவான பிரபாசன் என்பவன் பிரபாதை யென்பவளின் மகன் என முன் சருக்கத்திற் கூறினேம். அந்தப் பிரபாதை தர்மதேவதை ரிஷியின் பார்யை என்பதையும் நினைக. இந்தப் பிரபாசன் தன் மனைவியாகிய யோகஸித்தை என்றவளின் பேச்சைக்கேட்டு வசிட்டமுனிவனின் பசுவாகிய ஓமதேனுவை இரவில் களவாடிக் கவர்ந்துவந்தான். ஆகவே, அவர் இட்ட சாபப்படி மண்ணுலகுக்கு வந்து மானுடனாகித் தெரிவை யின்பம்நீங்கிப் பலநாள் வருந்தும்படியிருந்ததாதலின் "சோகமய வீடுமனாய்த் தோற்றினன்" என்றதென்னலாம். இது சாதாரணமான பொருள். இனி, "பீஷ்மன்" என்ற சொல்-பயங்கரமானவனென்று பொருள்படும்: பயங்கரமான விரதத்தை மேற்கொண்ட மனவலிமை பற்றியது இந்த வீடுமன் என்ற பெயர். இவன் தாயாகிய கங்கையாள் இவனுக்குத் தேவவ்ரதன் என்று பேரிட்டாள். தந்தையாகிய சந்தனு இவனுக்கு "ஸ்வச்சந்த மரணம்"—அதாவது வேண்டும்போது இறத்தல்—என்ற வரத்தையும் கொடுத்துள்ளார். ஆகவே தமது ஜீவனைப் பரமனோடு ஒன்றவைத்து ஒன்றெனப்பாவிக்குந்திறன் இவருக்கு இயலுமாதலால், இவரை "ஜீவபரதத்துவ ஐக்கியத்வ மயமானவர் எனலாம்: இக்கருத்துப்பற்றி "சோகமய வீடுமனாய்த் தோற்றினன்" என்றது. இது சாரமான பொருள். [சோகம்-ஸோஹம் என்ற வடசொல். சோகம்-சோகம்பாவனை: சிவான்மாவும் பரமான்மாவும் ஒன்றெனப்பாவிக்கை; திருமந்திரமும்

''அயிக்கியத்துவமாகிய நெறி சோகமென்போர்க்கு'' (2475) என்றதும் காண்க].

''சுக்கிரனே துரோணனனென்'' என்ற விடத்து அறிய வேண்டியவிவரம்:—அங்கிரஸ் என்ற பிரமமானச புத்திரரின் குலத்தில் தோன்றிய பரத்துவாச மகரிஷியினுடைய புத்திரராதலின் இந்தத் துரோணர் பிருஹஸ்பதி குலத்தினராகிறார்: பிருஹஸ்பதி அங்கிரஸ் ரிஷியின் புத்திரர்களில் முதல்வனுவன். (முன் சருக்கத்துச் செய்யுள் 8 நோக்குக). ஆகவே, தேவ குருவாகிய பிருஹஸ்பதியின் அமிசம் துரோணன் என்று கூறுவதே பொருத்தமுடைத்து. எனினும் இங்கு அசுர குருவாகிய ''சுக்கிரனே'' என்று ஏகாரம்பெய்து கூறியிருத்தலின், நாம் தெளியவேண்டியது இருவரும் குருவாவர் என்கிற ஒற்றுமை நயம்பற்றி என்க. துரோண கும்பத்தில் தோன்றியவராதலின் துரோணர் எனப்பட்டார். (துரோணம்-இரண்டு மரக்கால்).

மா தாமன்-அசுவத்தாமன். மா-அசுவம்: குதிரை. இவன் துரோணன் மகன். துரோணன் மனைவியாகிய கிருபியின் கட்டழகைக் கேட்டும் ஒருகால் கண்டும் அவளிடம் மிகக் காமுற்ற சிவபிரானது அருளால் ஒரு குதிரையினிடமாகத் தோன்றிய ஆண் குழந்தையாவன். சிவன் யமன் இவர்கள் ஒன்றுசேர்ந்து காமத்திலிருந்தும் கோபத்திலிருந்தும் உண்டு பண்ணப்பட்டுச் சூரனுகத் திகழ்ந்தவன். ஆகவே ''மோகம் மருள் காமமொடு குரோதமும் மாதாமனென முனைத்தது'' என்றார். அரிஷட்வர்க்கங்களுள் நான்கு கூறப்பட்டிருப்பினும், ஈனைய இரண்டாகிய லோபம், மாற்சரியம் இரண்டையும் கூட உபலட்சணத்தாற் கொள்க. [லோபமாகிய அற்பத்தன்மையையும், மாற்சரியமாகிய பொறுமையையும் கூட அவனிடத்தில் காண்கிறோம்]. கிருபன்-கோதம முனிவரின் பேரன்; சரத்துவான் என்னும் முனிவனது புத்திரன். இவனைச் சந்தனு மஹாராஜன் கிருபையோடு எடுத்துவந்து வளர்த்ததனால் கிருபன் என்று பேர்பெற்றான். பிறகு ஒரு சமயம் அந்தச் சரத்துவான் என்ற முனிவன் அத்தினபுரத்திற்கு வந்து தன் மகனை கிருபனுக்கு வில்வித்தை முழுவதையும் கற்பித்துக் கொடுத்துச் சென்றுனதால், கிருபன் சிறந்த வில்லாசிரியராய் விளங்கினர். எனவே, ''இருஞ்சிலை வல்'' என்ற அடைமொழி கிருபனுக்குக் கொடுக்கப்பட்டது பொருத்தமே. மன்னு! என்று விளித்தது-வைசம்பாயனர் ஜனமேஜயனை. (2)

3. துட்டசதுஷ்டர், திருதராஷ்டிரன், காந்தாரி, ஏனைய திருதராஷ்டிர புத்திரர்கள்—இவர்களின் ஜனனம்.

சுசிகதிரோன் கன்ணனுமாய் துவாபரமே
சகுனியுமாய்த் தொடுத்த தந்தி
இசைபுரியாழ் கந்திருவர்க் கிறையமிச
னென்பவன்கண் ணிலாத வேந்தாய்
வசுமதியாந் தெய்வதங்காந் தாரியுமாய்
கலியுகமே மன்னர் மன்னுய்
அசுரர்தமில் விச்சிரவா களித்தவரே
யனுசருமா யவனி வந்தார்.

(இ–ள்.) சுசி-மாசிலாத, கதிரோன்-சூரியன், கன்னனுமாய்-கர்ணனுயும், துவாபரமே–துவாபரயுகமே, சகுனியுமாய்-சகுனியாயும், தொடுத்ததந்தி இசை புரி யாழ் கந்திருவாக்கு-தொடுக்கப் பட்ட தந்திக்கம்பிகளால் இசையை எழுப்பி முறுக்கேறியயாழினை வாசிப்பதில் வல்ல கந்தர்வர்களுக்கு, இறை-ராஜனுகிய, அமிசன் என்பவன்-ஹம்ஸன் என்ற பெயரோன், கண் இலாத வேந்தாய்-பிறவிக்குருடனுகிய திருதராஷ்டிரனுயும், வசு–செல்வம் படைத்த, மதியாம் தெய்வதம்-மதி யென்னும் தேவதைதான், காந்தாரியுமாய்-காந்தாரியாயும், கலியுகமே-கலியுகமே, மன்னர் மன்னுய்-ராஜாதிராஜனை துரியோதனனுயும், அசுரர்தமில்–அசுரர்களில், விச்சிரவாகு அளித்தவரே-விச்சிரவாகு பெற்றெடுத்த ராக்ஷஸர்களே, அனுசராய்-துரியோதனன் தம்பியராகிய துச்சாசனன் முதலிய நூற்றுவராகவும், அவனி வந்தார்-பூமியில் பிறந்தனர்; (எ-று).

குந்திதேவி கன்னிகையாய் இருக்கும்போதே சூர்யபகவானை மந்திரத்தை உச்சரித்து அழைத்திட்டாள். பிரகாசத்தை யுண்டு பண்ணும் சூரியன் அப்போது அவளிடத்தில் கர்ப்பாதானஞ் செய்ய, கவச குண்டலங்களையுடையவனுய் அழகுடன் ஒளியினுல் சூரியனுக்கு ஒப்பானவனுமாய் ஒரு தேவபுத்திரன் உதித்தான். அவனுக்குக் கர்ணன் என்று பெயர் உண்டாயிற்று. "ஆதபன் இவனையாரும் கன்னனென்றழைக்க வென்றூன், தாதையும் விசும்பில் சொன்ன நாமமே தக்கதென்றூன்" என வில்லிபாரதத்தில் கூறப்பட்டிருத்தலால், இப்பெயர் சூரியபகவானுல் இடப்பட்டது எனத்தெரிகிறது-இனி, சிலர் இந்திரனுக்குத் தனது கவச குண்ட

லங்களையறுத்து எடுத்துக் கொடுத்ததனால் இப்பெயர்பெற்றான் என்பர். (க்ருண்-சேதிப்பது). அங்க தேசாதிபதியாயினன்; துரியோதனனுக்கு உற்றதுணை; துட்டர் நால்வரில் ஒருவனாக எண்ணப்பட்டான். சகுனி-சுபலன் மகன்; துரியோதனன் மாமன்; துரியோதனனுக்கு உற்றதுணை. சூதாட்டத்தில் எதிரிகளைப் பிடிப்பதில் வல்லவனாகிய அவனைத் துவாபரயுகமே வந்து பிறந்ததாகக் கூறினர். துவாபரயுகத்தில் தருமமாகிய காமதேனு இரண்டுகால் முடம்பட்டு எஞ்சிய இரண்டு காலால் நடமாடுகின்றது என்பர். இதற்குக் காரணம் இந்தச் சகுனி போன்ற வராதலின், அவனையே துவாபரயுகமாக உருவகித்தார். தந்திரம்புகள்- இசை-சப்தசுவரங்கள். ச, ரி, க, ம, ப, த, நி என்பன. தமிழில் இவற்றை முறையே குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பர்: புரி-முறுக்கேறுதல்: இசை நரம்புகள் நன்கு ஒலியெழுப்புதற்கு. கந்தர்வர்க்கு இறை-ஹம்ஸன் என்று பெயருடையவன்; இவன் அரிஷ்டையென் பவளின் புத்திரன்; இவன் தான் வியாச பகவான் அருளால் திருதராஷ்டிரன் என்ற கௌரவ ராஜனைப் பிறந்தவன். நீண்ட கைகளையுடையவன்; சிறந்த பலமுள்ளவன்; அறிவே கண்ணாகயுடையவன். இவனது தாய் ஒரு ரிஷியின் கோபத்திற்குள்ளாகித் தான் செய்த குற்றத்தினால் தனக்குப்பிறந்த இந்தப் பிள்ளையைக் குருடனாகவே ஈன்றெடுத்தாள். முதனூலின்படி, மதியென்னும் தேவதைதான் காந்தாரியாய்ப் பிறந்தாள்; ஆதலின் வசு-என்பது செல்வத்திற்காயிற்று. [எனவே, வசுமதி-பூமிதேவி யென்று பொருளிடுதல் சிறப்பின்று] கலியுகமே துரியோதனனாக உருவெடுத்து வந்தது என்றது என்னையெனில்-வஞ்சகம் செய்தல், துன்பமிழைத்தல், வறுமைபரவி மீடித்தல், கலியுக புருடனாகிய சனியன் பீடித்தலொத்தல் இவையனைத்தும் கலியுகக் கோளாறுகளாகும். இந்தக் கோளாறுகளைத் தன் செயல்களின் மூலம் செய்தவன் துரியோதனன். இவன் நல்லறிவில்லாதவன், கெட்ட எண்ணமுள்ளவன், தன் குலத்திற்கு அபகீர்த்தியை உண்டாக்குகிறவன்.

விச்சிரவாகு என்பவன் புலஸ்திய மகரிஷியின் புத்திரன். இதனை முன் சருக்கத்துச் செய்யுளில் வந்துள்ள "பேசிய புலஸ்தியன் விச்சிரவாகுவைப் பெற்றான்" (செ. 9) என்பதனாலும் தெளியலாம். இவன் புத்திரர்கள் ராக்ஷசர்கள்: இவர்கள்தாம் துரியோ

தனனின் சகோதரர்களாகிய துச்சாசனன் முதலிய நூறு பேர் களாகப் பிறந்தனர். கடைசி தம்பியின் பெயர் சித்ரகன். அநுசர்= அநுஜர்-தம்பியர். துரியோதனனுக்குத் தம்பியர் என்றபடி. துரியோதனன், துச்சாதனன், சகுனி, கர்ணன் இந்நால்வரையும் கொடுமைபற்றித் துஷ்ட சதுஷ்டர் என்பர். "சாலும் வஞ்சச் சகுனியொடெண்ணிய நாலு மைந்தரும் நச்செயிருகவும்" என்றார் வில்லியும் (ஆதி : திரௌபதி : 100) (3)

4. சிசுபாலன், சல்லியன், பகதத்தன், சராசந்தன், கிருதவன்மா—இவர்களின் ஜனனம்.

தனக்கிணையி லிரணியனே சிசுபால
னுய்ப்பிரக லாதன் றானே
நனைக்கண்ணி மத்திரனுய்ப் பாடலனே
பகதத்த நாமத் தோனுய்
வினைக்குரிய விப்பிரசித் தென்பவனே
விறல்கொள்சரா சந்தன் றானுய்
வனைக்கழலச் சுவபதியே கிருதவன்ம
னுயுலகில் வந்தார் மன்னே.

(இ-ள்.) தனக்கு இணையில்-தனக்கு ஒப்பில்லாத, இரணி யனே-ஹிரண்யகசிபுவே, சிசுபாலனுய்-சிசுபாலனும், பிரக லாதன் தானே-பிரகலாதனே, நனை கண்ணி-தேன்பெருகுதலாலே நனைந்த முடிமாலையைத் தரித்த, மத்திரனுய்-மத்திர தேசத்து அதிபனுகிய சல்லியனும், பாடலனே-பாஷ்கலன் என்ற அசுரனே, பகதத்த நாமத்தோனுய்-பகதத்தன் என்ற பெயரை யுடையவனும் (அதாவது பகதத்தனும்), வினைக்கு உரிய-ஆசுர தொழில்களுக்கு உரிய, விப்பிரசித்து என்பவனே-விப்ரசித்தி யென்று பெயர்பெற்ற அசுரச்சிரேட்டனே, விறல்கொள்-வெற்றி யையே கொண்டிருந்த, சராசந்தன் தானுய்-சராசந்தன் என்ற அரசனும், வனை கழல் அச்சுவபதியே-புனைந்த வீரக்கழலி யணிந்த அசுவபதியென்னும் அசுரனே, கிருதவன்மனுய்-கிருத வர்மாவென்னும் அரசனும், உலகில் வந்தார்-இப்பூமியில் ஜனித்தார்கள்; (எ-று.)—மன், ஓ-ஈற்றசை.

ஹிரண்யகசிபு திதியின் புத்திரன். அவன் சேதி தேச மன்ன னுகிய சிசுபாலனுகத் தோன்றினன்; கண்ணனைப் பழித்தலையே தனக்கு வலிமையென நினைப்பவன். பிரகலாதன் சல்லியனுய்ப்

பிறந்தான் என்று இங்குக் கூறியிருத்தற்கு மாறுக அவன் தம்பி யாகிய ஸம்ஹ்லாதன் என்பவன் சல்லியனுகத் தோன்றினன் என்பதும் உண்டு. சாரதியாய்த் தேர்கடவுவதில் வல்லவன். பாரதப் போரில் தருமனுல் கொல்லப்பட்டவன். பாஷ்கலன் என்ற பெயர் பாடலன் எனத்திரிந்தது. இவன் அசுரர்களில் பெயர் பெற்றவன். பதினுயிரம் யானை வலியுடையவன்; இவன் யானையின் பெயர் வெண்ணிறமுடைய சுப்பிரதீபம். இவன் இறுதியில் அருச்சுனனுற் கொல்லப்பட்டான். சராசந்தன்-மகத தேசத்தரசன்: பிருகத்ரதன் மகன். இருபாதியாயிருந்த உடற் கூறுகள் ஜரை என்னும் ராக்ஷஸியால் பொருத்தப்பட்டுப் பிறந்தவன். அந்த ஜராதேவியிட்ட பெயர் இது. வீமனுல் கொல்லப்பட்டான். நரமேதமகமியற்ற எண்ணுயிரம் அவனிப ரைச் சிறையிலிட்டவனுதலாலும், இவன் முன்னர்ச் சமருக் காற்றுது சதகோடிமுடிவேந்தர் உயிர்கொண்டோடி யொளித்தன ராதலாலும் "விறல்கொள்" என்ற அடை கொடுக்கப்பட்டான். மூதனூலின்படி நோக்கின், அசுவபதி என்னும் அசுரன் ஹார்த்திக்யன் என்னும் ராஜாவாக ஜெனித்தான் என்றும், கிருதவன்மா சப்த மருத்துக்களின் பக்ஷத்திலிருந்து ஜனித்தவன் என்றும் தெரியவரும். ஆனுல், இங்கு அச்வபதி யென்பவன் கிருதவன்மனுய்ப் பிறந்தான் என்றது மாறுபட்டது: அச்வபதி யென்பவன் அசுரனுதலின் கிருதவன்மாவுக்குச் சொல்லுதல் பொருத்தமாகாது. ஏனெனில், கிருதவன்மா யதுகுலத்து இருதிகன் மகன்: துரியோதனனுக்குத் துணையாகக் கொடுக்கப் பட்ட யாதவ சேனைக்குத் தலைவனுகக் கண்ணபிரானுல் அனுப்பப் பட்டவன்: மற்றும், பாரதப்போரிறுதியில் வியாசரால் தன் னூர்க்குச் செல்லும்படி விடைகொடுத்து அனுப்பப்பட்டவன். வனிகழல்–வனிக்கழல் என வந்தது எதுகைநயம் பற்றி என்க. (4)

5. பூரிசிரவசு, தேவாதிபன், சோமதத்தன், சிகண்டி, துருபதன், சாத்தகி, விராடன்—இவர்களின் ஜனனம்.

நிகரறுசந் திரவதன னேபூரி
சிரவசுவாய் நிகும்பன் முனே
தகுதிபெறுந் தேவாதி பனுய்ச்சரப
னேசோம தத்த னுய்ப்பெண்
சுகமிழந்த பேடியுமே சிகண்டியுமாய்
மருத்துவரே துருப தேசன்
மிகுபுகழ்கொள் சாத்தகி விராடனெனு
மூவருமாய் விளங்கி னரே.

(இ-ள்.) நிகர் அறு-ஒப்பற்ற, சந்திரவதனனே-சந்திரவதனன்

என்னும் அசுரனே, பூரிசிரவசுவாய்-பூரிசவா என்னும் அதிரத வீரனையும், நிகும்பன்தானே-நிகும்பன் என்னும் அசுரனே, தகுதி பெறும் தேவாதிபனுய்-(தேவர்களுக்கு அதிபன் என்று) சொல்லுதற்கேற்ற தகுதிபெற்ற தேவாதிபன் என்பவனையும், சரபனே-சரபனென்னும் மகாஸுரனே, சோமதத்தனுய்-சோமதத்தன் என்னும் வீரனையும், பெண் சுகமிழந்த பேடியுமே-அம்பையென்ற பெண்ணையிருந்து வீடுமனை மணம்புரியமாட்டாமையால் போக சுகமிழந்து நின்று பின் பேடியாகப் பிறந்தவளே, சிகண்டியுமாய்-சிகண்டியென்ற [துருபத] குமாரனையும், மருத்துவரே-சப்த மருத்துக்களே, துருபதேசன் மிகுபுகழ்கொள் சாத்தகி விராடன் எனும் மூவருமாய்-துருபத மகாராஜன், மிக்க புகழ்பெற்ற சாத்தகி, விராட ராஜன் என்னும் மூவருமாயும், விளங்கினர்-ஜனித்து விளங்கினர்கள்; (எ–று.)

பூரிசிரவசு-பூரிஸ்ரவா என்னும் வடசொல் திரிந்தது: இவன் சோமதத்தன் மகனென்பர். இவன் துரியோதனன் பக்கத்து அதிரதவீரரில் ஒருவன். கண்ணபிரான் மொழிப்படியே அருச்சுனன் இவன் தோளைத் துணிக்கப் பிறகு இவனைச் சாத்தகி தலை துணித்தான்.

நிகும்பன் என்ற அசுரன் யுத்தத்தில் தோல்வியடையாதவனென்றும், சிறந்த புத்திமானென்றும் கூறப்படுவன்: இவன் பூமியில் தேவாதிபன் என்ற ராஜச்ரேஷ்டனுகப் பிறந்தான். இவன் யார் என்று நிர்ணயித்துச் சொல்ல முடியவில்லை. ஆயினும், பின்வரும் சோமதத்தனுடு ஒருசேர முன்வைத்துக் கூறப்பட்டிருத்தலின், வாலவீமன் என்னும் பெயர் பெற்ற அரசனுவான் எனத் தோற்றுகின்றது. ஏனெனில், சோமதத்தனுடு ஒருசேர வாலவீமனும் பதினைந்தாம் நாட்போரில் அருச்சுனனுல் கொல்லப்படுகிறுன். [வில்லி: 15-ஆம் போர்ச்: செ: 4] இந்தச் சோமதத்தன் பூரிசிரவாவின் தந்தை. இவனைக் கலிங்க நாட்டரசனென்பாருமுளர். சிகண்டி இவன் துருபதனுகிய யாகசேனன் குமாரன். அலிவடிவாகப் பிறந்து பின் ஸ்தூணன் என்ற யட்சனுல் வரமாக ஆண்தன்மை கொடுக்கப்பெற்றனள். அம்பையே வீடுமனைப் பழிவாங்க இவ்வாறு பிறந்தாள்: திட்டத்துய்மனுக்கு இளவல். இவன் வீடுமனை வென்றவன். மருத்துக்களை ''மருத்துவர்'' என்றுர் இங்கு. இவர்கள் ஏழுபேராதலின்

''ஸப்தமருத்துக்கள்'' எனப்படுவர். இவர்கள் தேவர்களாவர்: கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, கீழ், மேல், பல யோனியுயிர் இவ்விடங்களிற் பயிலும் காற்றின் தேவர்களாவர். [மருத்து-காற்று]. துருபதேசன்-துருபதன்: பாஞ்சால தேசத்தரசன்: திரௌபதி, திட்டத்துய்மன் இவர்களை யாகத்தில் பெற்றவன்: யாகசேனன் எனப்படுவன்: துரோணனுக்கு நண்பன். சாத்தகி-கிருஷ்ணனுக்குத் தம்பி: போசகுலத் தலைவன்: கிருட்டினன் தூது போதலைக் கூடாது என மறுத்தவன். பாரதப் போர் முடிந்த பின்னர் கண்ணனொடு துவாரகை மீண்டுவந்து சேர்ந்தான், விராடன்-இவன் சத்துருக்களை யழித்து அவர்களின் தேசங்களுக்குத் தாபத்தையுண்டாக்குபவன்; வீரரில் வீரன். மச்ச நாட்டரசன். அஜ்ஞாத வாசத்தில் பாண்டவர்க்குப் புகலிட மாயிருந்தவன். உத்தரனுக்கும் சிவேதனுக்கும் தந்தை. துரோணனைக் கொலையுண்டான். (5)

6. பாண்டு, குந்தி, மாத்திரி, விதுரன், தருமன், வீமன், விசயன்—இவர்களின் ஜனனம்.

உத்தரதிக் கதிபதியே யுலகேத்தும்
பாண்டுவென வுதித்தான் சித்தி
புத்தியெனுந் தெய்வதமே புகல்குந்தி
மத்திரையாய்ப் புகுந்தார் பாச
முத்தலைகொ ளிமன்றனே விதுரனொடு
தருமனுமாய் முளைத்தான் வாயு
வித்தகனே வீமனுமாய் மேவினனே
கண்டலனே விசய னெனன்.

(இ-ள்). உத்தரதிக்கு அதிபதியே—வடக்கு திக்குக்குத் தலைவனாகிய குபேரனே, உலகு ஏத்தும் பாண்டு என-உலகோர் கொண்டாடும்படியான பாண்டுமகாராஜன் என, உதித்தான்-பிறந்தான்; சித்தி புத்தி எனும் தெய்வதமே-சித்திதேவி புத்தி தேவி என்றும் இரு தேவதைகளே, புகழ்-சிறப்பித்துச் சொல்லப் படுகின்ற, குந்தி மத்திரையாய்-குந்திதேவி, மாத்திரிதேவி யென்னும் பெயருடையராய் [ப்பாண்டுவின் மனைவியராய்], புகுந்தார்-ஜனித்தார்கள்; பாசம் முத்தலை கொள் இமன் தானே-பாசக் கயிற்றினையும் மூன்று பிளவு பட்ட உச்சிகளைக் கொண்ட சூலத்

தையும் கையிற்கொண்ட யமதேவன்தானே, விதுரனெடு தருமனு மாய்-விதுரனுகவும் தரும புத்திரனுகவும், முனேத்தான்–தோன்றி னன்; வாயு வித்தகனே-வாயுதேவனே, வீமனுமாய்–பீமசேனனுய்: மேவினன்-(பூவுலகில்) தோன்றிப் பொருந்தினன்; ஆகண்டலனே-இந்திரனே, விசயன் ஆனன்-அருச்சுனனுகப் பிறந்தான்; (எ-று).

உத்திரதிக்கு-வடக்கு: அதற்குத் திக்குப்பாலகன்-குபேரன். இவன் பாண்டுவாக அவதரித்தான் என்றதால் சகல செல்வங்களே யும் பெற்றுத் திகழ்ந்தான் பாண்டு என்று பெறவைத்தபடி. இனி, இவனேச் சப்த மருத்துக்களின் கூட்டத்திலிருந்து ஜனித்தவன் என்று முதனூல் கூறுகிறது. இவன் திருதராஷ்டிரனுக்குத் தம்பி. படைக்கலப் பயிற்சியில் சிறந்தவன்: மிகுந்த தைரியமும் பலமும் உள்ளவன். வியாசபகவான் அருளால் அம்பாலிகையினிடம் பிறந்தவன்: வெண்ணிறமுடையவன். குந்தியையும் மாத்திரி யையும் மணந்தவன்; கிந்தமன் என்பவனிடம் சாபம் பெற்று அதன்படி உயிரிழந்தான்: பாண்டவரைவரும் இவன் புத்திர ராவர். சித்தி புத்தி என்று சொல்லப்பட்ட தேவஸ்திரீகளே குந்தி மாத்திரி என்று ஜனித்தனர், குந்தி ஜெபித்த மந்திர பலத்தால் தருமன், வீமன், அருச்சுனன் மூவரையும் ஈன்றனள்: பின் சிலமந்திரங்களே மாத்திரிக்கு உபதேசிக்க அவளிடம் நகுலன் சகாதேவன் இருவரும் தோன்றினர். புத்திக்குப்பதில் த்ருதி என்றது முதனூல். [த்ருதி-ஸந்தோஷம். சித்தி-ஜயம். புத்தி-விவே கம்], முத்தலே-சூலம். இமன்-இயமன், யமன். இவன் தருமதேவ தை. இவன் அமிசமாகப் பூலோகத்தில் ஜனித்த வியாசபுத்திரர் விதுரர்: இவர் புத்திமான்களுள் சிரேட்டர்; மிகச்சிறந்த பாக்கிய முள்ளவர். திருதராஷ்டிரனுக்குத் தம்பியாவர்; வில்லில் வல்லவர்; பாண்டவர்பால் பேரன்புடையவர். தருமபுத்திரர் எனப்படும் தருமர் பாண்டவரில் மூத்தவர். யமதேவனது அருளால் குந்தி யிடம் பிறந்தவர். இவர் ஒழுக்கத்தழகு வாய்ந்தவர். வீமன் குந்தியிடம் வாயுதேவனுல் பிறந்தவன்; பதினுயிரம் யானே பலமுடையவன். ஆகண்டலன்–இந்திரன்: (நன்முகப் பகை வரைத்) துணிப்பவன். அருச்சுனன் இந்திரனருளால் குந்தியிடம் பங்குனியுத்தரத்தன்று தோன்றினன், சிலேத்தொழிலில் ஒப்பற்ற வன். காண்டீபம் என்பது இவனது வில்; அக்னிதேவனுல் கொடுக்கப்பட்டது. இவன் அபிமன்யுவுக்குத் தந்தை.

இச்செய்யுளில் பாண்டுவும் அவரது குடும்பமும் திறம்படப் பேசப்பட்டுள்ளது. (6)

7. நகுல சகாதேவர், திரௌபதி, திட்டத்துய்மன்—இவர்களின் ஜனனம்—இனி, அசுராம்சம் கொண்டு பிறந்தவர் பலரெனல்.

ஆயுறுவே தியர்கலியா லடனகுல
சாதேவ ராகி வந்தார்
மாயமறு சிர்மூர்த்தி கலியதனற்
றுரோபதையாய் வடிவம் பெற்றுள்
தேயுவெழிற் கலியதனற் றிட்டத்துய்
மப்பெயரோன் செனித்தான் மற்றுங்
காயமுறு வோரசுரர் கலியால்வந்
துதித்தவரைக் கழறற் பாற்றே.

(இ-ள்) ஆயுறு வேதியர்-அசுவினீ தேவர்கள், கலியால்-தமது மந்திர சக்தி யம்சத்தால், அடல்-வலிமை பெற்ற, நகுல சாதேவ ராகி-நகுல சகாதேவர் என்னும் இரண்டு குழந்தைகளாகி, வந்தார்-ஒரு சேரக்கருப்பத்திலிருந்து வெளிப்பட்டார்கள்; மாயம் அறு சிர்மூர்த்தி கலியதனல்-மாயம் நீங்கிய சிவபிரானது நெற்றிக்கண் அக்கினியின் சக்தியம்சத்தால் [துருபதன் வீட்டில் யஜ்ஞமேடையிலமைந்த யாகாக்கினியின் நடுவில் எழுந்த ஒரு பெண்] துரோபதையாய்-திரௌபதியாய், வடிவம் பெற்றுள்-எல்லா லக்ஷணங்களும் நிரம்பின தோற்றத்தைப் பெற்றிருந்தாள்; தேயு எழில் கலியதனல்-அக்கினிதேவனின் அழகு பொருந்திய மந்திரசக்தியம்சத்தால், திட்டத்துய்மப் பெயரோன்-திருஷ்டத்யும்நன் என்பவன், செனித்தான்-[துருபதன் வீட்டு யாகாக்கினியில் ஆகுதியாகச் சொரிந்த ஹவிசினின்றும்] தோன்றினன்: மற்றும்-மேலும், அசுரர்கலியால்-அசுரர்கள் பலரின் சக்தியம்சத்தால், காயமுறுவோர் வந்து-உடம்பெடுத்தவராய் [இப்பூவுலகிற்கு] வந்து, உதித்தவரை-பிறந்தவர்களைப்பற்றி, கழறல் பாற்றே-தொகையிட்டுச் சொல்லமுடியுமோ? (முடியாது) (எ-று); ஓகாரம்-எதிர்மறை.

ஆயுறுவேதியர்–ஆயுள்வேதியர்: 'ஆயுர்' என்பது 'ஆயுறு' என வந்தது. இவர்கள் இருவர்: அசுவினீ தேவர்கள்: தேவ

வைத்தியர்கள். "வாமனுதல் கண் மேலின்றும் இவள் பிறந்தாள்" என்று வில்லி பாரதம் கூறியபடி, "சிர்மூர்த்தி" என்றது இங்கே சிவபிராணைக் காட்டிவந்தது. இனி, 'சிர்மூர்த்தி' என்பதனை "ஸ்ரீதேவி' எனக்கொண்டு, அவளே வேறு நிறத்தோடு மானிட வடிவமெடுத்து வந்தாள் எனினுமாம். கலி-அமிசம்; ஒளி. இங்கே அச்சொல் மந்திரத்தின் சக்தி விகாசத்தைக் காட்டியது, துரோபதை-திரௌபதி என் பதன் சிதைவு, "வடிவம் பெற்றாள்" என்றவிடத்து அறிய வேண்டுவது:—இவள் இந்திராணியின் பாகத்திலிருந்து உண் டானாள்: திரௌபதி குட்டையுமல்லள், அதிக நெட்டையுமல்லள்; நீலோற்பலம் போன்ற நல்ல மணமும் தாமரைப் பூப்போன்ற நீண்ட கண்களையுமுடையவள்; மிகக் கறுத்தும் சுருண்டும் இருக்கிற கூந்தலினையும் சிறந்த அங்க லக்ஷணங்களையும் உடை யவள்; வைடூர்யக் கல் நிறமானவள். ஆகவே கண்டோர் மனத் தைக் கலக்குபவள். இவை முதனூலில் கூறியுள்ளபடி. திட்டத் துய்மன்-கனல்பயந்தோன்: பாரதப் போரில் இரண்டாம் நாள் முதல் பாண்டவர் பக்கத்துச் சேனைநாதன்; துரோணனைக் கொன்றவன்; அசுவத்தாமனுல் தலை துணிக்கப்பட்டான். த்ருஷ்டத்யும்நன் என்ற பெயர்-காம்பீரியமும் பாதுகாத்தல் தொழில் வன்மையும் உடையனுய் ஆற்றல் முதலியவற்றேடு சிறப்பாகப் பிறந்தவன் என்னுங் காரணம் பற்றியதென்று வியாச பாரதம் கூறுகின்றது. அசுரர் கலியால் வந்து உதித்தவர் களில்—இடிம்பன், இடும்பி, பகாசுரன், அலம்புசன், மூகாசுரன், புரோசனன், விருஷபர்வா, கடோற்கசன், அவனது மகன் அஞ்சனபன்மன், சடாசுரன், அலாயுதன், நிவாதகவசர், காலகேயர் என்ற இன்னுரை அடக்கலாம். (7)

8. உற்பவம் அறிந்த ஜனமேஜயன் தன்மரபோர் செய்கை மேலும் அறியவேண்டுதல்.

சாற்றிடுமிச் சுரரசுரர் தமதுகலி
யாலெவருந் தரணி மீது
தோற்றினர்மற் றவர்களப்பிற் சுருதித்தார்
எனமுனிவன் சொற்ற லோடும்
மாற்றலரைத் தெறும்வேலோன் வகுப்பவிஃ
துணர்ந்தனனெம் மரபோர் செய்கை
தேற்றமுற வெற்கிசைத்தி தெளிவுடையோ
யெனமேலோன் செப்ப லானுன்.

(இ-ள்.) சாற்றிடும்-இங்ஙனம் (மேற்கூறியபடி) சிறப்பித்துச்

சொல்லப்பட்ட, சுரர்அசுரர் தமது கலியால்-தேவர்கள் அசுரர் கள் என்ற இருவரதுசம்பந்தம்பெற்ற அம்சங்களால், தரணிமீது-இப்பூமியின் மேல், எவரும்-எல்லா வீரர்களும் அணங்குகளும், தோன்றினர்-ஜெனித்தார்கள்; மற்று-மேலும், அவர் களப்பில்-அந்தச் [சுராசுரர்களில்] சுரர்களின் வயிற்றினின்று, சுரர் உதித் தார்-தேவாம்சத்தோடு புத்திரர்கள் பலர் பிறந்தார்கள், என-என்று, முனிவன்-வைசம்பாயனன், சொற்றலோடும்-சொன்ன வுடனே,—மாற்றலரைத் தெறும் வேலோன்-பகைவர்களை யழித்த லில் வல்ல வேலியேந்திய ஜனமேஜய மன்னன், (முனிவனை நோக்கி) இஃது-இந்தப்படி யமைந்த பாரத வீரர் உற்பவத்தைப் பற்றி, வகுப்ப-நன்றாகப் பகுத்துச் சொல்ல, உணர்ந்தனன்-நான் தெரிந்துகொண்டேன்; (இனி) எம் மரபோர் செய்கை-என் னுடைய குரு வமிசத்தினரின் தொழில்புரிந்த வகைகளைப்பற்றி, தேற்றம் உற-நான் நன்கு தெளிந்து தேறும்படி, தெளிவுடை யோய்-தெளிவுறக் கூறுதலில் வல்லவரே! எற்கு-எனக்கு, இசைத்தி-சொல்லுவீராக, என-என்று பிரார்த்திக்க, மேலோன்-வைசம்பாயன முனிவன், செப்பலானன்-சொல்லத் தொடங் கினன்; (எ-று.)

—இங்ஙனம் மேலிச்சருக்கத்துக்குத் தோற்றுவாய் செய்தபடி.

களப்பு-கடலில் ஆழமில்லாத இடம்: இஃது கடலிடைப் பறவைகள் தங்குதற்கான திடரினைக் காட்டும். இங்கு அச்சொல் ''அவர்கள் வயிற்றினைக்காட்டி வந்தது''. சுரர்கலியால் தரணி மீது தோற்றியவரில்-பாண்டவரைவரையும், அசுரர் கலியால் தரணிமீது தோற்றியவரில்-துச்சாதனனுள்ளிட்ட நூற்றுவரை யும், சிசுபாலன், பகதத்தன், சராசந்தன் போன்றோரையும் எடுத்துக்காட்டாகக் கூறலாம். இனி, சுரர் களப்பில் சுரர் உதித் தார் என்றவிடத்து எடுத்துக்காட்டாகப் பின் கூறுவன காண லாம் :—

வர்ச்சஸ் என்று பேர்பெற்ற பராக்கிரமசாலியான சந்திர புத்திரன் தான் பெருங்கீர்த்திபெற்ற அபிமன்யு. இவன் அர்ச்சுன புத்திரனுகச் சுபத்திரையிடம் தோன்றினன். இனி, திரௌபதி புத்திரர்களாகிய பிரதிவிந்தியன், சுதசோமன், சுருதகீர்த்தி, சதாநீகன், சுருதசேனன் என்ற ஐவரும் விச்வரென்னும் தேவ கூட்டத்தைச் சேர்ந்தவராவர். முனிவனைத் தெளிவுடையோய்! என விளித்தது-கருத்துடையடைகொளி. உணர்ந்தனன்-தன்மையொருமை வினைமுற்று. எற்கு-எனக்கு. செப்பல்-திசைச் சொல் என்ப. (8)

பாரத வீரருற்பவச் சுருக்கம் முற்றிற்று.

———

ஒன்பதாவது

சந்திரவங்கிசம் யயாதிச்சருக்கம்.

சந்திரவமிசத்தரசர்களும் அவர்களுள் மிகு கியாதி பெற்ற யயாதியும் பற்றிக் கூறுஞ் சருக்கம் என்று பொருள்படும். வங்கிஷம்=வங்கிசம்; வமிசம். சந்திரன் குருகுலத்திற்கு முதல்வ னுதலின், குருகுல மன்னவர்களைப் பற்றிக் குறிப்பதற்கு முன் அவனைக் கூறித் தொடங்குதலின் 'சந்திர வங்கிசம்' என்றது. யயாதி-இந்த வம்ச விருத்திக்குப் பெரிதும் காரணமானவனுதலின் சிறப்புற இச் சருக்கம் அவனைக் குறிக்கின்றது. கையேட்டில் ''சந்திரவங்கிட மயாதிச் சருக்கம்'' எனக் காண்கின்றது. ''ஷ'' வுக்கு ''ட'' கொண்டார். வங்கிடம் என்ற கிலோமொழியோடு யயாதி என்ற வருமொழி புணரும்போது இயல்பாகக் கொள்ளு தலே தகுதியுடைத்து: ''எண் மூவெழுத்தீற்றெவ்வகை மொழிக் கும் முன்வரும் ஞநமயவக்கள் இயல்பும்'' என்றது விதி. ''உலகம் யாவையும்'' என்று கம்பன் தொடங்குதலும் காண்க. இனி ''தன்னெழி மெய்ம்முன் யகரம் வரின் இகரம் துன்னும் என்ற விதி'' இங்குப் பொருந்தாது. ஏனெனில் அஞ்ஞான்று 'வங்கிட மியயாதி' என வருதல் வேண்டும். அது சிதைந்து 'வங்கிட மயாதி' என ஆயிற்றெனல் சிறவாது. இனி வழக்கில் மரூஉவாகிச் சிதைந்து போயிற்று என்பாருமுளர். ''வங்கிடம்''[1] என்ற சொல்லி னும், ''வங்கிசம்'' என்பது சிறக்கும்.

வேறு

1. புகழ்பெற்ற சந்திரன் புதனைப் பெற்றமை.

பரைம திக்குமெம் பரன்சடை பயில்பவன் பாற்பாற்
றிரைம திக்கும்போ தமுதுடன் செனித்தவன் றிகழும்
நரைம திப்பெயர் நண்ணினேன் நாள்கணு யகனல்
லுரைம திக்கொளும் புதனைப்பெற் றுவந்திருந் திடுநாள்.

(இ-ள்.) பரை-பார்வதி, மதிக்கும்-பெரிதும் பாராட்டித் தொழும், எம் பரன்-எமது கடவுளாகிய சிவபெருமானின், சடை-சடாபாரத்தில், பயில்பவன்-எப்போதும் தங்கிப் பழகுபவனும்; பால் பால்-பாற்கடலிடத்துள்ள, திரை-பால் அலைகளை, மதிக்கும்

போது-கடையும்போது [தோன்றிய], அமுதுடன்-தேவாமிருதத்துடனே, செனித்தவன்-தோன்றியவனும்; திகழும்-விளங்குகின்ற, நரை-வெண்மையான, மதிப்பெயர் நண்ணினோன்-மதி என்ற நாமத்தையுடையவனும்; நாள்கள் நாயகன்-நட்சத்திரங்களின் கணவனும் அழகிய சந்திரன்,—நல் உரை-நல்ல வார்த்தைகளை, மதிக்கொளும்-புத்தியில் ஏற்றுக்கொண்டு அவற்றின்படி யொழுகும், புதனைப் பெற்று-புதன் என்னும் புத்திரனைப் பெற்று, உவந்து-மனமகிழ்ந்து, இருந்திடும்நாள்-இருந்திடும் நாளிலே; (எ-று.)—"குமரனோர் பொழிற்பாற்கண்டு" என மேலை மூன்றுங் கவியில் வருவதனோடு குளகமாய் இயையும்.

சிவபெருமானது சடைமுடிமேல் பிறைச்சந்திரன் எப்போதும் தங்கியிருக்கின்றனன் என்பது நூற் கொள்கை. பாற்கடல் கடைகின்றபோது முதன்முதலில் அந்தக் கடலிலிருந்து விஷம் தோன்ற அதன் வெப்பத்தைத் தணிக்குமாறு அமிருதத்துடனே சந்திரனும் தோன்றினன் என்பதாம். 'பால்பால்திரை' என்ற விடத்து, முதல் "பால்" என்ற சொல் 'பாற்கடலையும்' இரண்டாவது "பால்" என்றது ஏழனுருபாதலையும் நோக்குக. திரை என்பது கடல் நீருக்கு இலக்கணை. 'பால்' என்பது பாற்கடலுக்குத் தானியாகுபெயர். "வெண்மதி" என்பது பெருவழக்கு. நாள்கள்-அசுவினி முதலிய இருபத்தேழு நட்சத்திரங்கள்: இவர்களுக்குச் சந்திரன் நாயகன் என்றது என்னையெனில்-முறையே எந்த எந்த நட்சத்திரத்துடன் சந்திரன் சேர்ந்திருக்கின்றனனோ அந்தந்த நட்சத்திரநாளாக அத்தினம் வழங்கப்படுவது காணலாம். புதன் புத்தியினால் மேம்பட்டவன் என்றபடி. வியாழன் என்னும் தேவகுருவின் பத்தினியான தாரையைச் சந்திரன் கண்டு காதல் கொண்டு அவளொடு கூடிப் புதன் என்ற புதல்வனைப் பெற்றனன் என்க. பயில்பவன், செனித்தவன், நண்ணினோன், நாயகன்-ஒரு பொருள் மேல் வந்த பல பெயர்கள். "மதிக்கும்" என்ற சொற்பிரயோகத்தில் யமகம் என்னும் அணி காண்க.

இது முதல் ஆறு கவிகள்—முதற்சீரும் ஐந்தாஞ்சீரும் மாச்சீர்களாக வர, இடையில் வரும் மூன்று சீர்களும் பெரும்பாலும் விளச்சீர்களாக வந்த கலிநிலைத்துறை. (1)

2. மநுவின் புதல்வன், சாபத்தால் இளையென்னும் பெண்ணுதல்.

சூடு வார்சிலைக் கரத்தினன் மனுவருள் தோன்றல்
ஆடு வாரிலாண் பெண்களாய் பெண்களா ணுகத்
தோடு வார்குழை யுமைசபித் திடுந்தடந் தோய்ந்து
கோடு வார்மூலை யோடிளை யெனும்பெயர் கொண்டான்.

(இ-ள்). சூடு-தரித்த, வார்-நீண்ட, சிலை-வில்லியேந்திய, கரத்தினன்-கையையுடையனாய, மனு-மனுவென்ற அரசன், அருள்-பெற்ற, தோன்றல்-புதல்வனான இளன் என்பவன், (ஒருநாள்) ஆடுவாரில்-குளிப்பார்களாயின் அவர்களுள், ஆண் பெண்களாய்-ஆடவர் பெண்டிராயும், பெண்கள் ஆணுக-பெண்டிர் ஆடவராகவும் ஆய்விடுவர் என்று, தோடு வார் குழை உமை-தோட்டினையும் நீண்ட காதணியினையும் அணிந்த உமாதேவியார், சபித்திடும்-சாபமிட்டிருந்த, தடம்-பொய்கையில் (தான் அறியாமையால் சென்று) தோய்ந்து-படிந்து, கோடு வார் மூலையோடு-சற்றுக் கோணிய பருத்த மூலைகளைக் கொண்டு எழுந்து, இளை எனும் பெயர் கொண்டான்-இளையென்னும் பெண் பெயரினையும் தாங்கினன்; (எ-று.).

மநுபுத்திரனான இளனென்பவன் ஒரு கால் தேரிலேறிக் காடு சென்றவன், "இங்கு வந்து குளிப்பவர் ஆடவர் பெண்ணாய் விடுக" என்று பார்வதிதேவி சாபமிட்டிருந்த தடாகத்தில் தெரியாமல் படிந்து மூழ்கவே பெண்ணாகி இளையென்ற பெயரையும் கொண்டிருந்தான். [கவனிப்பு:—இந்த இளையென்ற பெண்ணைக் கண்டு காதலித்துப் புதன் சேர்கின்றான்]. (2)

3. புதனுக்கும் இளைக்கும் புதல்வனாகப் புரூரவா பிறந்து அரசனுதல்.

கொண்ட மங்கையைக் குளிர்மதிக் குமரனோர் பொழிற்பாற்
கண்டு வந்தவட் கலந்தபோ துதித்தகான் முளையே
மண்ட லம்புகழ் புரூரவா வெனும்பெயர் வனைந்து
திண்டி றற்கொளுந் திகிரிமா மன்னனாய்த் திகழ்ந்தான்.

(இ-ள்.) கொண்ட மங்கையை-இளையென்னும் பெயரைத் தாங்கிய பெண்ணை, குளிர் மதிக் குமரன்-குளிர்ந்த சந்திரனின்

புதல்வனுகிய புதன், ஓர் பொழில் பால் கண்டு-ஒரு சோலையிடத்துப் பார்த்து, உவந்து-களிப்புக்கொண்டு, அவட் கலந்தபோது-அவளோடு கூடியபோது, உதித்த-தோன்றிய, கான்முளேயே-புத்திரனே, (பின்னர்) மண் தலம் புகழ்-பூமியிலுள்ளோர் அனைவராலும் புகழப்பட்ட, புரூரவா எனும் பெயர் வனைந்து-புரூரவசு என்னும் பெயர் சூடி, திண்திறல் கொளும் திகிரி மா மன்னனுய்-மிக்க வலிமை கொண்ட ஆஜ்ஞாசக்கரத்தைச் செலுத்தி அரசாளும் சிறந்த அரசனுக, திகழ்ந்தான்-விளங்கினன்; (எ-று).

கான்முளே-மகன். மண்+தலம்=மண்டலம். திண்திறல்-ஒரு பொருட்பன்மொழி. (3)

4. அசுரர் கவர்ந்த உருப்பசியை மீட்டுப் புரூரவா இந்திரன் தூதினுல் பூமியில் மணந்திருத்தல்.

உருப்ப சித்தருப் பொழிலுழி யுலவல்கண் டவுணர்
விருப்பின் வந்தவட் கவர்ந்துவா னேகலும் விண்ணேர்
பொருப்ப யின்றுவெந் தரலுமிப் புரூரவா வெதிர்த்துச்
செருப்பு ரிந்துவென் றிந்திரன் தூதின்மின் சேர்ந்தான்.

(இ-ள்.) உருப்பசி-ஊர்வசி என்ற தேவமாது, தரு பொழில் உழி-மரங்களடர்ந்த சோலையினிடத்து, உலவல்கண்டு-உலாவுதலைப் பார்த்து, அவுணர்-அசுரர்கள், விருப்பின்வந்து-(அவள் மேல் வைத்த) காதலால் வந்துகிட்டி, அவட் கவர்ந்து-அவளைக் கைப்பற்றிக்கொண்டு, வான் ஏகலும்-ஆகாய வழியே செல்லலும், (அவள் கதறுங் குரல்கேட்ட) விண்ணேர்-தேவர்கள், பொரு பயின்று-போரிட்டு, வெந் தரலும்-(தோற்று) முதுகுகாட்டி ஓடலும், இ புரூரவா எதிர்த்து-இந்தப் பூரூரவசு (அவ்வசுரர்களை) எதிரிட்டுத் தகைந்து, செரு புரிந்து-போர் செய்து, வென்று-அவர்களை வென்று, (பின்) இந்திரன் தூதின்-இந்திரனுடைய தூதுவனுல், மின்-மின்னல்போல் பிரகாசிக்கும் ஊர்வசியை, சேர்ந்தான்-மணம்புரிந்து கூடியிருந்தான்; (எ-று.)

ஊர்வசி என்ற வடசொல்லின் திரிபு உருப்பசியென்பது. இவள் உருவாற் சிறந்தவள்; எனவே அசுரர் கவர்ந்தனர். பதரிகாச்சிரமத்தில் திருமாலாகிய நாராயண முனிவரின் ஊருவினின்று தோன்றிய காரணம்பற்றி, இவள் ஊர்வசியென்று பேர்

பெற்றாள். (ஊரு-தொடை). மித்திரனென்ற சூரியனது சாபத்தால் இவள் பூமியில் புரூரவஸோடு வசிக்குமாறு நேர்ந்ததென்ப. பொரு-பொருதல்; முதனிலைத் தொழிற்பெயர். வெந் தரல்-முதுகு காட்டியோடுதல்; எனவே தோல்வி குறிப்பது. தூதின்-இன், ஐந்தனுருபு ஏதுப் பொருளது. மின்-மின் போன்றவளுக்கு உவமையாகுபெயர். (4)

5. புரூரவசு ஆயுவையும், ஆயு நகுஷனையும் மைந்தராகப் பெறுதல். அகத்தியர் சாபத்தால் நகுஷன் சர்ப்பமாதல்.

வான மாதணைந் தாயுவைப் புரூரவன் பயந்தான்
ஏன யோன்பெறு நகுடனூ றியாகஞ்செய் தும்பர்
தான மோம்புநாட் சசியுவந் தணைகுவான் தவத்தோர்
ஆன மேந்தச்சென் றகத்தியன் சபிப்பபாம் பானான்.

(இ-ள்.) புரூரவன்-புரூரவசு, வானமாது அணைந்து-ஊர்வசியைச் சேர்ந்து, ஆயுவை பயந்தான்-ஆயு என்ற மைந்தனைப் பெற்றான்; ஏனையோன்-அந்த ஆயு, பெறு-பெற்ற, நகுடன்-நகுஷன் என்ற மைந்தன், நூறு யாகம் செய்து-நூறு அசுவமேதயாகஞ்செய்து, உம்பர்தானம்-இந்திர பதவியை, ஓம்பும் நாள்-அடைந்து அநுபவிக்கச் செல்லும் நாளில், சசி உவந்து அணைகுவான்-இந்திராணியை விரும்பிச் சேர்தல் பொருட்டு, தவத்தோர் ஆனம் ஏந்த சென்று-தவமுனிவர்கள் சிவிகையைச் சுமந்து செல்ல ஏறிச்சென்று, (இடைவழியில்) அகத்தியன் சபிப்ப-அகத்திய முனிவன் சாபமிட, பாம்பானான்-சர்ப்பமாய் விழுந்தான்; (எ-று),

புரூரவன் ஆயுவைத் தவிர, தீமான். அமாவசு, த்ருடாயுஸ், வனாயுஸ், சதாயுஸ் என்ற ஐந்து குமாரர்களையும் ஊர்வசி மூலம் பெற்றான். ஆயு ஸ்வர்ப்பானவி என்பவளிடம் நகுஷன், விருத்த சர்மா, ரஜி, கயன், அநேநஸ் என்ற புத்திரர்களைப் பெற்றான். இவர்களுள் நகுஷன் பற்றற்று நின்று தவத்தைச் செய்து நூறு அசுவமேதயாகமும் செய்து முற்றியதனால், தேவேந்திர பதவி பெற்று வானவர்க்கரசனுமாயினன். இந்திராணி மேல் வைத்த காதன் மிகுதியால் தன் சிவிகையைத் தாங்கிச் சென்ற ஏழு முனிவர்களுள் குறுமுனிவராதலால் மெதுவாய் நடந்த அகத்தியரை நோக்கி, விரைவிற் செல்க என்பான் "ஸர்ப்ப ஸர்ப்ப" [ஓடு

ஓடு] என்று கூறினைக, அகத்தியர் சினந்து "நீ ஸர்ப்பமாகுதி" என்று சபிக்க. அவன் அவ்விந்திரபதவியிழந்து உடனே பாம்பாகி நிலத்திற்கிடந்தானென்பது வரலாறு. ஆனம்=யானம்: சிவிகை. (5)

6. யயாதி மன்னனின் வரலாறு கூறத் தொடங்குதல்.

அன்ன வன்சுதன் யாரினுஞ் சிறந்தருள் யயாதி
பன்னும் பார்க்கவன் பாவைவேட் டிருவரைப் பயந்தான்
என்ன மன்னவன் அன்னவன் புகரவ னீன்றுள்
தன்னைச் சேர்குவா னேதுவே தெனமுனி சாற்றும்.

(இ-ள்.) அன்னவன்-அப்படிப்பட்டநகுஷனின், சுதன்-புத்திரனைவன், யாரினுஞ் சிறந்து அருள் யயாதி-எல்லாரினும் மேம்பட்டு அருளைச் செய்கின்ற யயாதி என்பவன்: [அந்த யயாதி] பன்னும்-சிறப்பித்துப் பேசப்படுகின்ற, பார்க்கவன்-சுக்ராசாரியனின், பாவை-பெண்ணகிய தேவயானியை, வேட்டு-மணந்து, இருவரை-யது, துருவசு என்னும் இரண்டு பிள்ளைகளை, பயந்தான்-பெற்றான்; என்ன-என்று வைசம்பாயனர் சொல்ல, மன்னவன்-அரசனகிய ஜனமேஜயன், அன்னவன்-அந்தயயாதி மன்னன், புகரவன் ஈன்றுள் தன்னைச் சேர்குவான்-சுக்ராசாரியன், பெற்ற பெண்ணகிய தேவயானியை மணஞ் செய்வதற்கு, ஏது ஏதுஎன-காரணம் யாது என்று வினவ, முனி-வைசம்பாயனர், சாற்றும்-சொல்லத் தொடங்கினர்: (எ-று.) அவர் கூறும் யயாதியின் வரலாற்றைச் சருக்க முடியுமளவும் காணலாம்.

வியாசபாரதத்தும் யயாதியின் உபாக்கியானம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, வில்லியாரும் "யயாதி யென்று கொண்டிவனையே யெவரினுஞ் சிறக்க, வியாதனும் புகழ்ந்துரைத்தது" என்றார். (ஆதி: குருகுலச்: 17). பார்க்கவன்-பிருகுவின் மகனுதலின் பார்க்கவன் எனப்பட்டான்: தத்திதாந்த நாமம். பாவை-தேவயானி என்பது. இது, தேவயானை என வரும். இவள் பயந்த குமரர் இருவர்-யது, துருவசு எனப்படுவர். புகரவன்-சுக்கிரன்: புகர் என்ற சொல்லே சுக்கிரன் எனப் பொருள்படுமாதலின், அவன் என்றது-சொல்லுருபு. ஈன்றுள்-வினையாலணையும் பெயர். சாற்றும்-செய்யுமென் முற்று. (6)

வேறு

7. இறந்த அசுரரைச் சுக்கிரன் தான் கற்ற விஞ்சையால் பிழைப்பித்தல்.

தகுவர்பெரு மானிடப பன்ம ஞழித்
தரைபுரக்கு நாளவன்பாற் சார்ந்தொண் சுங்கன்
இகலமரர் தமைவெல்வான் சூழ்ச்சி சொற்றங்
கிருந்திடல்கண் டரக்கர்மிசை யிமையோ ரோடு
மகபதிவந் தியற்றமரி லிறந்தோ ருய்ந்து
வருமிருத சஞ்சீவி மழைக்கோ ளெய்தி
புகலதுணி படுமரக்க ருடல்முன் போற்பொ
ருந்தியெழுந் தெதிர்ப்பசுரர் பொருதெய்த் தாய்ந்தே.

(இ-ள்.) தகுவர்-அசுரர்களின், பெருமான்-அரசனாகிய, இடப பன்னன்-வ்ருஷபர்வா, ஆழித்தரை புரக்கும் நாள்-பூவுலகத்தைக் காத்து ஆட்சிசெய்து வரும்நாளில், ஒண்சுங்கன்,-வித்தைகளில் வல்ல சுக்ராசார்யன், அவன்பால் சார்ந்து-அவனிடத்தை யடைந்து, இகல் அமரர் தமை வெல்வான்-பகைவர்களாகிய தேவர் களை வெல்லும்பொருட்டு, சூழ்ச்சி சொற்று-உபாயத்தைச்சொல்லி, அங்கு-அவன் சபையில், இருந்திடல் கண்டு-தங்கியிருத்தலைக் கேட்டு, மகபதி-இந்திரன், இமையோரோடு-தேவர்களோடும், அரக்கர் மிசைவந்து-அசுரர்கள் மேலே படையெடுத்து வந்து, இயற்று அமரில்-செய்த போரில், இறந்தோர்-(அசுரர்களில்) மடிந் தோர், உய்ந்துவரு-மீண்டும் உயிர்பெற்று எழுந்து வரும்படியான, மிருதசஞ்சீவி-'மிருதஸஞ்ஜீவினி' என்ற வித்தையை, மழைக் கோள்-சுக்கிரன், எய்தி-போர்க்களத்தையடைந்து, புகல-உச்ச ரிக்க, துணிபடும் அரக்கர் உடல்-பிளக்கப்பட்டுக் கிடந்த அசுரர் களின் உடலங்கள், முன்போல்-உயிரோடிருந்த காலத்திலிருந்தது போலவே, பொருந்தி எழுந்து எதிர்ப்ப-பொருத்தமுற்று (வீறு கொண்டு) எழுந்து எதிரிட்டுப் போர்புரிய, சுரர்-தேவர்கள், பொருது-(மீண்டும்) சமர் செய்து, எய்த்து-இளைப்படைந்து, ஆய்ந்து-(அங்ஙனம் இளைப்படைதற்குக் காரணத்தை) ஆராய்ந்து பார்த்து; (எ-று). "விஞ்சை கவர்ந்தெய்தென்ன" என மேலிற் கவியோடு இயையும்.

தகுவர்-அசுரர்: இடபபன்னன்-வ்ருஷபர்வா. சுங்கன்-சுக்கிரன். இவன் அசுரர்களுக்குக் குரு. இவனுக்குத் தெரிந்த

'மிருதஸஞ்சிவினி'' வித்தை, தேவகுருவாகிய பிருஹஸ்பதிக்குத் தெரியாது. மறைக்கோள்–சுக்கிரன். ஆய்தல்-தோற்று இகழ்ப் படைதற்குக் காரணத்தை ஆராய்தல்.

இது முதல் இருபது கவிகள்—முதலிரண்டு சீர்களும் ஐந்தாருஞ் சீர்களும் பெரும்பாலும் காய்ச்சீர்களாயும் ஏனைய நான்கும் மாச்சீர்களாயும் வந்த எண்சீராசிரிய விருத்தம். (7)

8. கசன் விஞ்சையைக் கற்றலும், அசுரரால் கொல்லப்படுதலும்.

சார்ந்துபதி சிவன்மகன் கயனை யுந்தித்
தானுணரா மிருதசஞ் சிவி விஞ்சை
தேர்ந்தருள்பார்க் கவனுழைபோய்க் கவர்ந்தெய் தென்னச்
செலுத்தவனுஞ் சென்றுபுகர் செப்பு மேவ
நேர்ந்தவன்போற் றிடும்பாவை தேவ யானை
நேயங்கொண் டிருப்பவதை நெடுநாட் பின்னர்
ஓர்ந்தடல்தா னவராற்ற தொருநாட் கான்பால்
உறனேக்கிக் கயன்சிரங்கொய் தொளித்தார் மன்னே.

(இ–ள்.) பதிசார்ந்து–தேவர்கள் தங்கள் அமராவதிப் பட்டணஞ் சேர்ந்து, சிவன்–பிருஹஸ்பதியினுடைய, மகன்–(ஜ்யேஷ்ட) புத்திரனுகிய, கயனை-கசன் என்பவனை, உந்தி–தூண்டி, தான் உணரா மிருதசஞ்சிவிவிஞ்சை-தன் தந்தையாகிய பிருஹஸ்பதி அறியாத மிருத சஞ்சிவினி என்ற வித்தையை, பார்க்கவன் உழைபோய்–சுக்கிராசாரியரிடம் சென்று, தேர்ந் தருள்–தெரிந்துகொள்; (பின்னர்) கவர்ந்து–அந்த விஞ்சையைக் கைக்கொண்டு, எய்து என்ன–வந்து சேர்வாய் என்று சொல்லி, செலுத்த–விடுப்ப, அவனும்-அந்தக் கசனும், சென்று-போய், புகர்-(அச்) சுக்கிராசாரியன், செப்பும்–சொல்லிக்கொடுத்த விஞ்சை யையும், மேவ-பொருந்த, நேர்ந்து-தெரிந்துகொண்டு, (மேலும்) அவன் போற்றிடும் பாவை-அச் சுக்கிராசார்யர் பெற்று வளர்த்து வருகின்ற பெண்ணுகிய, தேவயானை-தேவயானீ என்பவளோடு, நேயம் கொண்டிருப்ப-ஸ்நேகஞ் செய்துகொண்டிருக்க, அதை–அச் செய்தியை, நெடுநாள் பின்னர் ஓர்ந்து-அநேக நாட்கள் கழிந்த பின்னர்த் தெரிந்து, (அதற்கு) அடல்தானவர் ஆற்றது-வலிமை மிக்க அசுரர் மனம்பொறுமல், ஒருநாள்—, கான்பால் உறல் நோக்கி-காட்டுக்கு வருதலை(ச் சமயம்) நோக்கியிருந்து, கயன் சிரம்

கொய்து-கசனின் தலையைத் துணித்து, ஒளித்தார்-மறைந்து போனார்கள்; (எ-று.)—மன், ஓ-ஈற்றசை.

சிவன்-வியாழன், பிருஹஸ்பதி. கயன்-கசன்: இவன் பிருஹஸ் பதியின் ஜ்யேஷ்ட புத்திரன். செலுத்த + அவனும்=செலுத்தவ னும்: தொகுத்தல். முதனூலின்படி, கசனைக்கொன்று, துண்டு துண்டாகச் செய்து நாய்களுக்குப் போட்டனர். (8)

9. சுக்கிரன் கசனை உயிர்ப்பிக்க, அசுரர் அவனை மாவாகப் பொடிசெய்து, மதுவிற் கலந்து அந்தச் சுக்கிரனுக்கே கொடுத்தல்.

மாய்ந்திடலோர்ந் திடாளணங்கின் றவன்பா லெய்தி
வந்திலனென் றேழனென வருந்த மற்றோன்
ஆய்ந்துணர்ந்துய்ந் தெழமறையைச் சிந்தை செய்தான்
அக்கணமுய்ந் தவன்குருபா லடைந்து தாழ்ந்தான்
தேய்ந்தவிடை யகமகிழ்ந்தாள் நெடுநாட் சென்றூர்
தினமரக்கர் வனத்துறுமச் சிறுவ னூறி
வாய்த்தமது விற்கரைத்தா சானுக் கீந்தார்
வஞ்சமுண ராதவனு மாந்தி னனல்.

(இ-ள்.) அணங்கு-தேவயானை, மாய்ந்திடல் ஓர்ந்திடாள்-(தன்னெடு சிநேகங்கொண்ட) கசன் இறந்ததை அறியாதவளாய், ஈன்றவன்பால் எய்தி-தந்தையாகிய சுக்கிராசாரியரை யடைந்து, என் தோழன் வந்திலன் என-காட்டுக்குச் சென்ற என் சிநேகிதன் கசன் இன்னும் வரவில்லை என்று சொல்லி, வருந்த—, மற்றோன்-அந்தச் சுக்கிரரும், ஆய்ந்து உணர்ந்து-(தமது) ஞானத்தாலே ஆராய்ந்து தெளிந்து, உய்ந்து எழ-அந்தக் கசன் உயிர்பெற் றெழும்படி, மறையை-விஞ்சையை, சிந்தை செய்தான்-மனனஞ் செய்தான்; அவன்-அந்தக் கசன், அக்கணம்-அப்பொழுதே, உய்ந்து—உயிர்பெற்று, குருபால் அடைந்து-தனது குருவாகிய சுக்கிராசாரியரிடம் வந்து, தாழ்ந்தான்-அவரை வணங்கினன்: தேய்ந்த இடை-சிற்றிடையையுடைய தேவயானை, அகம் மகிழ்ந் தாள்-மனங்களிப்புக் கொண்டாள்: நெடுநாள் சென்று-பல நாட்கள் சென்றபின், ஓர் தினம்-ஒருநாள், அரக்கர்-அசுரர்கள், வனத்து உறும் அச் சிறுவன் நூறி-காட்டுக்குவந்த அந்தக் கசனைச் சிதைத்து, (மாவாகப் பொடி செய்து), வாய்த்த மதுவில் கரைத்து-தக்க மதுவுடனே சேர்த்துக் கரைத்து, ஆசானுக்கு-

தமது குருவாகிய சுக்கிரனுக்கே, ஈந்தார்-கொடுத்தார்கள்: அவனும்-அந்தக் குருவும், வஞ்சம் உணராது-[தமது சீடராகிய அசுரர்களின்] வஞ்சகச் செயலையறியாது, மாந்தினன்-(அந்த மதுவைப்) பருகினன்; (எ-று).—ஆல்-ஈற்றசை. இடை—இடையை யுடையாளுக்குச் சினையாகுபெயர். குருவுக்கே வஞ்சகஞ் செய்பவர் அசுரர் என அவர் கொடுமை கிளந்தவாறு உணர்க.

முதனூலின்படி, இரண்டாந்தரம் கசனை அரைத்து ஸமுத்ர ஜலத்திற் கரைத்தனர். மூன்றாவது தரம், அவனைக்கொன்று கொளுத்திச் சாம்பலை மாவாய்ப் பொடிசெய்து மதுவிற்கலந்து சுக்ரனுக்கே கொடுத்திட்டனர் என அறிக. (9)

10. மீண்டும் சுக்கிரன் கசனை உயிர்ப்பிக்க, அவன் இறந்த ஆசானை உயிர்ப்பித்தல்.

உண்டிலிகொ லெனுமிடையாள் உயிர்த்தோன் பால்புக்
குயிர்க்குடலாங் கயனைகதி ரொழிந்து மெய்தக்
கண்டிலனென்:றிரங்கபுகர் அரக்கர் செய்த
கபடமுணர்ந் தருமறையாற் கயன்போ மாவிக்
கொண்டிடச்செய் தகடுபிளந் தடைந்தெற் காவி
கொடுவெனமந் திரம்புகன்றூன் கூறும் வண்ணம்
விண்டிலன்செய் தவன்றெழுதான் தழீஇக்கொண் டாசான்
மிகமகிழ்ந்தான் அகமகிழ்ந்தாள் மின்னாள் மன்னே.

(இ-ள்.) உண்டு இலிகொல் எனும் இடையாள்-[இடை] உண்டோ இல்லையோ எனச் சங்கிக்கும்படி நுண்ணிதாகிச் சிறுத்த இடையை யுடையளாகிய தேவயானை, உயிர்த்தோன் பால்புக்கு-பெற்றெடுத்த தந்தையாகிய சுக்கிராசார்யரிடம் வந்து, ''உயிர்க்கு உடலாம் கயனை-என்னுயிர் தங்குதற்கு ஆதாரமாயிருக்கின்ற உடலாகிய கசனை, கதிர் ஒழிந்தும்-சூரியன் அத்தமித்த பின்னரும், எய்தக்கண்டிலென்-என்னிடம் வரக்கண்டேனில்லை''; என்று இரங்க-என்று பரிதபித்துக் கூற,—புகர்-சுக்கிராசார்யர், அரக்கர் செய்த கபடம் உணர்ந்து-அசுரர்கள் செய்த வஞ்சனையை யறிந்து, அருமறையால்-அறிதற்கரிய வித்தையினால், கயன்-கசனை, போம் ஆவி கொண்டிடச் செய்து-(தம்) வயிற்றுக்குள்ளிருந்து வெளியே போகவிருக்கும் உயிரைக் கொள்ளுமாறு நிலைபெறச் செய்து,—''(அவனை நோக்கி, கசனே!) அகடு பிளந்து-வயிற்றைக் கிழித்துக்கொண்டு, அடைந்து-வெளிவந்து, எற்கு-எனக்கு, ஆவி கொடு-உயிரை மீட்டுக்கொடு'' என-என்று சொல்லி, மந்திரம்

புகன்றான்-அந்த "மிருத ஸஞ்சிவினி" என்ற விஞ்சை மந்திரத்தை உபதேசித்தான்; கூறும் வண்ணம்-ஆசான் கூறியபடியே, விண்டிலன் செய்து-உயிர் போகாதவனுய் மீட்டு உயிர்ப்பித்து, அவன்-அவ்வாசானுகிய சுக்கிரனை, தொழுதான்-கைகூப்பி வணங்கினன: ஆசான்-சுக்கிராசார்யன், தழீஇக்கொண்டு-(சீடனுகிய) கசனைத் தழுவிக் கட்டியணைத்தபடியே, மிக மகிழ்ந்தான்—; மின்னுள்-தேவயானியும், அகமகிழ்ந்தாள்-மனங்களிப்புற்றாள்; (எ-று.)—மன், ஓ-ஈற்றசை.

கசன் தன் குருவாகிய சுக்கிராசாரியரிடமிருந்து வித்தையைப் பெற்றுக்கொண்டு அக் கணத்திலேயே அவரது வயிற்றினைப் பிளந்துகொண்டு வெளிவந்து, சுக்ரர் விழுந்திறந்ததைக் கண்டு, அவரைத் தான் கற்ற வித்தையினுல் எழுப்பிக் குருவை வந்தனஞ் செய்து நின்றான் என்பது இங்கு அறியவேண்டிய விவரம்.

இடையாள், மின்னுள் என்பன தேவயானியைக் குறிப்பன. "மூவழிச்சிறுகி" என்றபடி பெண்களுக்கு இடை சிறுத்து உளதோ இலதோ என ஐயப்படும்படி நுண்ணிதாய் இருத்தல் வேண்டும். இஃது உத்தம லட்சணம். கம்பரும் சீதையின் இடையைப் பற்றிச் சொல்லும்போது "பல்லியல் நெறியிற் பார்க்கும் பரம்பொருள் என்னையார்க்கும், இல்லையுண் டென்ன நின்ற இடையினுக்கு இடுக்கண் செய்தார்" என்று திறம்படக் கூறியுள்ளமை காண்க. உயிர்த்தோன்-வினையாலணையும் பெயர். தன்னை உயிராகவும் உயிர் தங்குதற்கு இடமாகிய உடலுக் கசனுகவும் கூறியது, கசன்தான் இனி தனக்கு ஆதாரம் என்று தேவயானி சுக்ரனுணர்தற்குச் சொன்னபடியென்க. கதிர்-சூரியனுக்கு இலக்கணை. விண்டிலன் செய்து—முற்றெச்சம். (10)

11. கசன் சுவர்க்கம் செல்வான் தேவயானியிடம் விடை வேண்டல்.

(இருகவிகள்—ஒரு தொடர்)

சின்னளங் கிருந்தொருநா ளும்பர்ச் செல்வான்
செம்மல்குரு விடுப்பவெழிற் றேவ யானை
தன்பால்வந் தெனைவிடுக்க வேண்டு மென்ன
தையல்பிரி வினுக்காற்றுள் தளர்ந்து விம்மி

என்னுசைப் படிவரைந்திங் குடன்வா ழாமல்
எய்திப்பய னென்பெறுவை யென்ன வன்னுன்
மின்னுயெற் குந்தைதந்தை யாநீ யெற்கு
விளம்பிலீயா மென்னமொழி விளம்பி னுயே.

(இ-ள்.) [கசன்] சின்னுள் அங்கு இருந்து-சில நாட்கள் ஆசான் பால் தங்கியிருந்து, ஒருநாள்—, உம்பர் செல்வான்-சுவர்க்க லோகம் செல்லும்பொருட்டு, செம்மல் குரு விடுப்ப-தலைமைகொண்ட சுக்ராசாரியர் விடைகொடுப்ப, [அந்தக் கசன்], எழில் தேவயானை தன்பால் வந்து-அழகிய தேவயானியிடம் வந்து, "என விடுக்க வேண்டும்" என்ன-'எனக்கு விடை கொடுத்தனுப்ப வேண்டும்' என்று சொல்ல,—தையல்-தேவயானியானவள், பிரிவினுக்கு ஆற்றுள்-கசனது பிரிவினைப் பொறுதவளாகி, தளர்ந்து-மனஞ்சோர்ந்து, விம்மி-அழுது, என் ஆசைப்படி-நான் விரும்பினபடியே, வரைந்து-என்னை மணஞ்செய்து கொண்டு, இங்கு உடன் வாழாமல்-இவ்விடத்துச் சேர வாழ்ந்திடாமல், எய்தி-சுவர்க்கலோகம் சென்று, என் பயன் பெறுவை?-என்ன நற்பயனைப் பெறப்போகின்றுய்: என்ன-என்று வினவ, அன்னுன்-அந்தக் கசன், 'மின்னுய்!-மின்னலைப்போல் பிரகாசிப்பவளே! எற்கு-எனக்கு, உந்தை-உன் தந்தையாகிய சுக்ராசாரியர், தந்தையாம்-தகப்பனுராவர்; நீ—, எற்கு-எனக்கு, விளம்பு இளையாம்-சிறப்பித்துக் கூறப்படுகின்ற தங்கையாவாய்; (இங்ஙனிருப்ப இதனை யறியாது) என்ன மொழி விளம்பினுய்-எந்த அடாத வார்த்தைகளைப் பேசினுய்'; (எ-று.)—இது, மேலைக் கவியில் "என்ன ..... அன்னுள் சீறி" என்பதனுடு குளகமாய்த் தொடரும்.

உம்பர்-சுரருலகம்; சுவர்க்கம், செம்மல்-தலைமை: பண்புப் பெயர். 'வரைந்து' என்றவிடத்துத் தேவயானை "மந்திரங்களைச் சொல்லிச் சாஸ்திர முறைப்படி என்னைப் பாணிக்ரஹணம் செய்வாயாக" என்று கூறியதாக அறிக. உந்தை-உன் தந்தை என்பதன் மரூஉ. உந்தை என் தந்தை என்றது என்னையெனில்-. சுக்ரருடைய எந்த வயிற்றில் தேவயானை வசித்தாளோ அதே வயிற்றில் கசனும் வசித்துத் தங்கியிருந்தமையால். ஆகவே, தர்மப்படி தேவயானை கசனுக்குச் சகோதரியாவாள். இளை-தங்கை: தங்கை என்றது கசன் வயதில் மூத்தவனுதலின்: இதனை 'வரைந்து கொள்" என்பதாலேயே தெளியலாம். "இறையோன் உயரினும் குறைவின்றென்மனுர்" என்றது சூத்திரம். 'என்ன மொழி விளம்பினுய்' என்றதால்-இவ்வாறு சொல்லாதே என்றபடி. (11)

12. தேவயானை கசனைச் சபிக்க அவன் அவளைச் சபித்தல்.

என்னகயன் பன்னதிரு வன்னுள் சீறி
எந்தையருண் மறைப்பயன்பொய்த் திடுக வென்னு
பன்னிசபித் திடவிஃதெற் குதவா தேலென்
பாலுணர்ந்தோர்க் குதவுமொரு பரிசிற் சாபஞ்
சொன்னதினுல் நினைமறையோர் அன்றி வேந்தர்
சூட்டுவர்தா ரெனச்சபித்துச் சுவர்க்க நண்ணி
அன்னமறை சுரர்க்கிசைத்தான் அரக்கர் செற்றங்
கவர்செயங்கொண் டனர்புகரோ னணங்கங் கோர்நாள்.

(இ-ள்,) என்ன-என்று சொல்லி, கயன்-கசன், பன்ன-(பின்னரும்) நிறுத்தி நிறுத்திப் பேச, திரு அன்னுள்-இலக்குமி போன்ற தேவயானை, சீறி-கோபித்து, "எந்தை-என் தந்தையார், அருள்-உபதேசித்தருளிய, மறைப்பயன்-விஞ்சை மந்திரத்தின் பயன், பொய்த்திடுக-(உன்னிடத்தில்) பொய்யாகக் கடவது," என்னு பன்னி சபித்திட-என்று நெருக்கிச் சொல்லிச் சாபமிட, (அதற்கு எதிராகக் கசன்) "இஃது-இந்த "ஸஞ்சீவினி" மந்திரம், எற்கு-எனக்கு, உதவாதேல்-உதவாமற் போனாலும், என்பால் உணர்ந்தோர்க்கு-என்னிடத்துக் கற்றவர்க்கு, ஒரு பரிசில் உதவும்-ஒரு விதம் உதவும்: சாபம் சொன்னதினுல்-என்னைச் சபித்ததனால், நினை-உன்னை, மறையோர் அன்றி-பிராமணர்களாகிய ரிஷிபுத்திரர்கள் நீங்கலாக, வேந்தர்-க்ஷத்திரியராகிய அரசர், தார் சூட்டுவர்-மணமாலையிடுவர்" என சபித்து-என எதிர்ச்சாபமிட்டு, சுவர்க்கம் நண்ணி-சுரருலகாகிய சுவர்க்கத்தையடைந்து, அன்ன மறை-அந்த "மிருதஸஞ்சீவினி" மந்திர விஞ்சையை, சுரர்க்கு-(ஆங்குள்ள) தேவர்களுக்கு, இசைத்தான்-சொல்லி உபதேசித்தான்: (அதன் காரணமாக) அரக்கர் செற்று-அசுரர்களையழித்து, அங்கு-அப்போது அவ்விடத்து, அவர்-அத்தேவர்கள், செயம் கொண்டனர்-வெற்றி பெற்றனர்; (இஃது இங்ஙனுக) புகரோன் அணங்கு-சுக்ரனின் பெண்ணுகிய தேவயானை, அங்கோர் நாள்-அவ்விடத்து ஒருநாள்;—(எ-று.) "சொல்வாள்" என மேலிற் கவியின் இறுதியிலுள்ள வினையோடு இயையும். இது குளகம். "குளகம்பல பாட்டொரு வினைகொள்ளும்".

பரிசில்-விதம்: "நான் யாருக்குக் கற்பிக்கிறேனை அவனுக்கு வித்தை ஒரு விதமாக பலித்துவிடும்" என்பதில் நோக்கு. பிருஹஸ்பதியின் புத்திரன் கசன் ஆதலின் பிராம்மணைத்தமனுவன்;

பிராமணராகிய சுக்ராசாரியரின் புத்திரியாதலின் தேவயானி பிராம்மணியாவாள். அவளுக்கு இட்டசாபம் க்ஷத்திரியனை மணக்க வேண்டுமென்பது.

[கவனிப்பு:-க்ஷத்திரியனைக் குறிப்பிட்டதற்கு ஒருகாரணமுண்டு. மநுஷ்ய வம்சமென்பது சூரியபுத்திரனுகிய மனுவை மூலபுருஷராகக் கொண்டு வருவது. பிரமக்ஷத்திரியர்கள் அந்த மனுவினிடமிருந்து உண்டானதனால் மானவர்கள் எனப்படுவர். இவர்கள் ஒருவரோடொருவர் சேர்ந்திருந்தனர். இவர்களுள் பிராமணர்களாயிருப்போர் க்ஷத்திரியர்களுக்கு வேதங்களை அங்கங்களுடன் கற்பித்தனர்.] (12)

13. கூறைமாறுடல்.

தரைபுரக்கும் அசுரேச னிடப பன்மன்
தந்தருள்சன் மிட்டையென்பாள் தன்னே டோரா
யிரரிகளை மாருடன்வந் திடச்சென் றுடை
யினையணைவைத் தலர்தடந்தோய்ந் திடும்போ தங்கு
வருமனிலன் சாய்ப்பகலை கலைந்தொன் றுக
மடவார்வந் திடைபுனைந்தார் மன்னன் பாவை
குருமகள்தூ சுடுப்பவவட் கிவள்பொன் னுடை
கொடுத்தவிகு ளையர்வெறுத்தக் கோதை சொல்வாள்.

(இ-ள்.) தரைபுரக்கும்-பூமியைக் காக்கின்ற, அசுரேசன்-இடபபன்மன்-அசுரர்களுக்குத் தலைவனுகிய விருஷபர்வா, தந்தருள்-பெற்ற, சன்மிட்டையென்பாள்-சர்மிஷ்டையென்பவள், தன்னோடு ஓர் ஆயிரர் இகுளைமார் உடன் வந்திட சென்று-தன்னுடன் ஓராயிரம் தோழியர் சூழ்ந்து வரப் போய், ஆடையினை-[தத்தம] ஆடைகளை, அணை வைத்து-கரையில் அவிழ்த்து வைத்திட்டு, அலர் தடம் தோய்ந்திடும்போது-பூக்கள் நிறைந்த தடாகத்தில் நீராடும்போது, அங்கு வரும் அனிலன்-அவ்விடத்து வீசிய காற்றுனது, சாய்ப்ப-சரித்துவிட, கலை-அந்த ஆடைகள், கலைந்து-கலைக்கப்பட்டு, ஒன்றுக-ஒரே குவியலாக, மடவார் வந்து-பெண்கள் கரையேறிவந்து, இடைபுனைந்தார்-இடுப்பிலே (தமக்குச் சமீபமாயுள்ள ஆடைகளை எடுத்துக்) கட்டிக்கொண்டனர்: (இங்ஙனுக) குருமகள்-சுக்கிராசாரியரின் பெண்ணுகிய தேவயானியின், தூசு-ஆடையை, மன்னன் பாவை உடுப்ப-விருஷபர்வாவாகிய மன்னனின் பெண்ணுகிய சர்மிஷ்டை உடுக்கும்படி, அவட்கு-அந்தச் சர்மிஷ்டைக்கு, இவள் பொன்னுடை கொடுத்த இகுளையர்-இந்தத் தேவயானியின் பீதாம்பரத்தையெடுத்துக் கொடுத்ததோழியரை,

வெறுத்து-, அ கோதை-அந்தத் தேவயானி, சொல்வாள்-கூறத் தொடங்கினள்; (எ-று).—அவள் கூறியதை மேலிற்கவியிற் காண்க.

காற்றினுலே ஆடைகள் கலந்து போகவே, அது தெரியாமல், அங்கே தான் வைத்துள்ள இடத்தில் தேவயானியின் ஆடையிருப்பவே அதனைச் சர்மிஷ்டை (இகுளையர் கொடுப்ப) உடுத்திக் கொண்டாள் என விவரங் காண்க. அணை-கரை; செய்கரை, வரும் அனிலன்-வந்தவன் இந்திரன்: அவன் ஜலக்கிரீடை செய்யுங் கன்னிகைகளின் ஆடைகளெல்லாவற்றையும் காற்று ரூபமாகிக் கலந்தான். 'இடைபுணர்ந்தனர்' என்றவிடத்து-தமக்குச் சமீபமாயுள்ள ஆடைகளை அநேகமாக எடுத்து உடுத்தனர் என அறிய வேண்டுவது. உடுப்ப..... கொடுத்த என இயையும். கோதை-மாலை; மாலை போன்றுளுக்கு ஆகுபெயர். (13)

14. சர்மிஷ்டை தேவயானையைக் கிணற்றில் தள்ளுதல்.

அரசர்குலத் தவளணிந்த மாசி னுடை
அந்தணர்தங் குலத்தவள்யா னணியு மாறே
உரைமினெனச் சொலும்பொழுதங் கரசன் பாவை
யுருத்தெனது தந்தையிடத் துனது தந்தை
தெரியும்விர குரைத்திரந்துண் டிருத்தல் காணுய்
தெரிவைனினக் கெனதாடை செவிதோ வென்றீர்த்
தொருகூவல் வீழ்த்தகன்றுள் இவருள் ளாழ்ந்தங்
கொருவல்லி பற்றித்துய றுழந்தாள் மன்னே.

(இ-ள்.) "அரசர் குலத்தவள் அணிந்த-க்ஷத்திரிய குலத்திலே பிறந்தவளாகிய நீ தரித்திருந்த, மாசின் ஆடை-[தூய்மையிழந்து] களங்கமுற்ற ஆடையை, அந்தணர் தம் குலத்தவள் யான்-பிராம்மண குலத்திற் பிறந்தவளாகிய நான், அணியுமாறே-தரிக்க வேண்டுவதோ (இது தகாது); உரைமின்-நீங்களே சொல்லுங்கள்" என-என்று, சொலும் பொழுது-சொன்னபோது, அங்கு-அவ்விடத்து, அரசன்பாவை-சர்மிஷ்டை, உருத்து-கோபித்து, "எனது தந்தையிடத்து உனது தந்தை-என் தகப்பனுராகிய வ்ருஷபர்வா அரசனிடத்து உன் தந்தையாகிய சுக்கிரன், தெரியும் விரகு உரைத்து இரந்து உண்டு இருத்தல்-தனக்குத் தெரிந்த உபாயங்களைச் சொல்லிக் கையேந்தி யாசித்து [அதனுற் பெற்றதைக் கொண்டு] வயிறு வளர்த்துப் புசித்து வாழ்தலை, காணுய்-நீனைத்

துப் பார்: தெரிவை!—ஏ பெண்ணே! நினக்கு-யாசகியோகிய உனக்கு, எனது ஆடை-எனது வஸ்திரம், செவிதோ-தரிக்கத் தகாததோ ?" என்று-என்று கடிந்து சொல்லி, ஈர்த்து-(வஸ்திரத் தைப் பிடித்துக்கொண்டிருந்த தேவயானியை) இழுத்து, ஒரு கூவல் வீழ்த்து-ஒரு கிணற்றில் தள்ளிவிட்டு, அகன்ருள்-போயினுள்; இவள்-இந்தத் தேவயானி, உள் ஆழ்ந்து-உள்ளே சென்று, அங்கு-அந்தக் கிணற்றில், (கிளைத்து முளைத்திருந்த புல் செடி கொடிகளுள்) ஒரு வல்லிபற்றி-ஒரு கொடியினைக் கையாற் பிடித்துக்கொண்டு, துயருமந்தாள்-துன்பப்பட்டுக்கொண்டிருந்தாள்; (எ-று) மன், ஓ-ஈற்றசை.

சுக்கிரன் அசுர குருவாதலின் அசுர மன்னனுக்கு அப்போதைக்கப்போது உபாயம் கூறுவது வழக்கம். விரகு-உபாயம். செவிதோ-செவ்விதன்றே என்றபடி. செவ்வி து என்பது செவிது எனக்குறுகி எதிர்மறை ஓகாரவினை பெற்று வந்தது. [குறிப்பு:—இந்த விவாதத்தால் நாம் அறியவேண்டிய உண்மை-ஒருவர் உடுத்த ஆடையை மற்றொருவர் உடுத்தல் உசிதமன்று என்பதுதான்]. (14)

15. கிணற்றிலிருந்து யயாதிமன்னன் தேவயானியைத் தூக்கிக் காப்பாற்றுதல்.

அவ்வனத்தில் வேட்டைபுகு யயாதிவேந்தன்
அறனசையாற் கூவலடுத் தவளை நோக்கி
இவ்வனத்துற் றிதில்விழுநீ யார்கொ லென்ன
ஏழைநிகழ் வுரைப்பவுணர்ந் தெடுத்து விட்டோர்
மெளவல்குழல் புகுதியென மீண்டான் பாவை
வருந்தியவ ணிருந்தொருவன் வரக்கண் டெந்தைக்
கிவ்வுரைசொற் றிடுதியென நடந்த தெல்லாம்
இசைப்பவவன் சென்றுபுகர்க் கிசைத்தான் மன்னே.

(இ-ள்.) அ வனத்தில்-அந்தக் காட்டில், வேட்டைபுகும்-வேட்டையாடுதற்குச் சென்ற யயாதி, வேந்தன்—, அறல் நசையால்-(தாகத்திற்கு) நீர் குடிக்கும் விருப்பினல், கூவல் அடுத்து-கிணற்றினருகே வந்து, (ஆங்கு) அவளை-அந்தத் தேவயானியை, நோக்கி-பார்த்து, இ வனத்து உற்று-இந்தக் காட்டிற்கு வந்து, இதில் விழும் நீ—, யார்கொல்-யாவளோ? என்ன-என்று வினவ, ஏழை-தேவயானி, நிகழ்வு-நடந்த நிகழ்ச்சிகளை, உரைப்ப-

சொல்ல, உணர்ந்து-தெரிந்துகொண்டு, எடுத்துவிட்டு-[அவளைக் கிணற்றிலிருந்து அவள் தனது வலக்கை கொடுப்பத்] தூக்கி வெளியே எடுத்துவிட்டு,— மௌவல் குமல்-முல்லைப்பூச் சூடிய கூந்தலையுடையவளே !, ஊர்புகுதி என்ன-உன் நகரத்திற்குச் செல்வாயாக, என-என்று அவளுக்கு விடை கொடுத்தனுப்பி விட்டு, மீண்டான்-தன் நகரத்திற்குத் திரும்பினான்: பாவை-தேவயானி, அவண்-அந்தக் கிணற்றினருகிலேயே, [ஊர் புகாமல்] வருந்தியிருந்து-அழுதுகொண்டிருந்து, (பின்னர்) ஒருவன் வரக் கண்டு—, எந்தைக்கு-என் தந்தையாகிய சுக்கிராசாரியருக்கு, இ உரை சாற்றிடுதி-இந்த சமாசாரத்தைச் சொல்வாய், என-என்று அவனிடம் கூறி, (பின்) நடந்தது எல்லாம் இசைப்பநிகழ்ந்த விருத்தாத்தங்ஙளெல்லாம் சொல்ல, அவன் சென்று-அவனும் போய், புகர்க்கு-சுக்கிரர்க்கு, இசைத்தான்-செய்திகளைக் கூறினான் ; (எ-று).—மன், ஓ-ஈற்றசை.

முதனூலின்படி, தேவயானி வரத் தாமதிக்கவே, சுக்கிரர் அவளது தாதியை விடுத்து அழைத்து வரச்சொல்ல, அவள் மூலம் தேவயானி செய்தி கூறி விடுத்ததாக அறிகிறோம். மௌவல்-முல்லை: இதனைக்கூறியது கற்புக்கு முல்லையாதலின். குமல்-கூந்தல்: கூந்தலையுடையாளுக்கு ஆகுபெயர்: அன்மொழித்தொகை யெனினுமாம். நடந்ததெல்லாம்-ஒருமைப் பன்மை மயக்கம். (15)

16. வ்ருஷபர்வா தன் மகள் செய்கைக்கு மன்னிப்பு வேண்டுதல்.

செல்வியுழை பார்க்கவன்வந் தறிவின் மாதர்
செய்தபிழை பொறுத்தியெனத் தேற்ற மின்னுள்
புல்லரிடத் துறுநல்லோர்க் கிடுக்க ணந்த
புரம்விடுத்தல் அறமெனவோர் பொழில்பால் அன்
வல்லியொடு மிருப்பவிஃ தரசோர்ந் தாங்கு [னென்
வந்தறிவிற் செய்பிழைக்கென் மகளை நீவிர்
சொல்லியதண் டனைபுரிவல் வருமி னென்றே
சுக்கிரனை டணங்கடியுந் தொழுதான் மன்னே.

(இ-ள்.) (விவரமறிந்த) பார்க்கவன்-சுக்கிராசார்யர், செல்வி உழை வந்து-தன் மகளாகிய தேவயானியிடம் வந்து, அறிவு இல் மாதர் செய்த பிழை பொறுத்தி என தேற்ற-நல்லறிவில்லாத பெண்டிர் செய்த பிழையாகும் இது என்று பொறுத்துக்கொள்

வாய் என்று சொல்லித் தேற்றுவிக்க, மின்னுள்-அந்தத் தேவயானி, "புல்லரிடத்து-ஒழுக்கங்கெட்ட அற்பர்களிடத்து [வசிப்பது], நல்லோர்க்கு-நல்லொழுக்கங்கொண்ட சான்றோர்களுக்கு, இடுக்கண் உறும்-துன்பத்தை விளைவிக்கும்": (ஆகவே) அந்த புரம் விடுத்தல் அறம் என-அந்த அசுரரின் நகரத்தை விடுத்துப் போதல் தருமம் என்று சொல்ல, (வ்ருஷபர்வாவின் நகரத்திற்குள் நுழையாமல்), அன்னென்-அச் சுக்கிராசார்யர், ஓர் பொழில் பால்-ஒரு சோலையிடத்து, வல்லியொடு-[தன் மகளாகிய] தேவயானியோடு, இருப்ப-தங்கியிருப்ப—, இஃது-இந்த விஷயத்தை, அரசு-வ்ருஷபர்வா வாகிய அசுர ராஜன், ஓர்ந்து-தெரிந்துகொண்டு, ஆங்கு வந்து-அந்தக் குருவினிடம் வந்து, "அறிவு இல் செய் பிழைக்கு-அறிவில்லாத பேதைமையோடு செய்த இந்தத் தவற்றுக்கு, என் மகளை-என் பெண்ணாகிய சர்மிஷ்டையை, நீவிர் சொல்லிய தண்டனை புரிவல்-நீங்கள் விதிக்கின்ற தண்டனையை அநுபவிக்கச் செய்வேன்: வருமின்-என்னுடன் வாருங்கள்", என்றே-என்று சொல்லி, [வ்ருஷபர்வா] சுக்கிரனொடு அணங்கு அடியும் தொழுதான்-சுக்கிரரோடு தேவயானியையும் அவர்களது திருவடியில் வீழ்ந்து வணங்கினன்; (எ-று):—மன், ஓ-ஈற்றசை.

"பாபிகளுடன் வசித்தால் பாபியாவான்": அவர்கள் வசிக்கும் மண்ணையே மிதிக்கக்கூடாது" என்ற சாஸ்த்ரார்த்தம் காட்டப் பட்டது. வல்லி-வல்லிக்கொடி போன்றவளுக்கு உவமையாகு பெயர். அணங்கு அடியும் தொழுதமை-ஆசான் மகளாதலின் அரசற்குத் தகுதியுடைத்தே. (16)

17. யயாதி மன்னன் தேவயானியைப் பொழிலிடத்துக் காணல்.

[இருகவிகள்—ஒரு தொடர்.]

இரதமொழி யரசினைப்பார்த் துனது பாவை
யிகழ்வையரா யிரரொடுமெற் கேவல் செய்வான்
தருகுவையேல் வருவமென விசைந்து தந்தான்
தையல்பிதா வுடன்நகரந் தனிற்போந் தோர்நாள்
ஒருபொழிற்க ணடைந்திவர்க ளேவ லாற்ற
உமைவிரத மூஞற்றினளங் குறும் யயாதி
யரசவர்கள் தமைக்கண்டற் புதமு யன்னேர்
அருட்கடன்கொண் டிருந்துபுக ரணங்கை நோக்கி.

(இ-ள்). இரத மொழி-இனிமையாக ரசமொழுகப் பேசும்

தேவயானீ, அரசனைப் பார்த்து-வ்ருஷபர்வாவை நோக்கி, உனது பாவை-உனது மகளாகிய சர்மிஷ்டை, இருநூ ஆயிரரொடும்-ஆயிரந் தோழிமார்களோடும், எற்கு-எனக்கு, ஏவல் செய்வான் தருகுவையேல்-பணிகள் செய்யும்படி பணிப் பெண்களாகத் தருவாயாகில், வருவம் என-உன் நகருக்குள் நானும் தந்தையும் வருவோம் என்று சொல்ல, இசைந்து-அங்ஙனமே செய்தற்கு) உடன்பட்டு, தந்தான்-கொடுத்தான்: தையல் தேவயானீ, பிதாவுடன்-தந்தையாகிய சுக்கிரனுடன், நகரம் தனில் போந்து-வ்ருஷபர்வாவின் நகரத்திற்கு வந்து தங்கி வசிக்கும்போது,— ஓர் நாள்-ஒரு தினத்தில், ஒரு பொழிற்கண் அடைந்து-ஒரு சோலையிடத்துவந்து, இவர்கள் ஏவல் ஆற்ற-இந்தச் சர்மிஷ்டை முதலாய ஆயிரம் தோழியர்களும் தானிட்ட பணிகளைச்செய்ய, உமைவிரதம் உஞற்றினள்-கௌரி விரதம் செய்தனள்: (அப்போது) அங்கு-அவ்விடத்து, உறும்-வந்து சேர்ந்த, யயாதி அரசு-யயாதி என்ற மன்னவன், அவர்கள் தமைக் கண்டு-அந்தத் தேவயானீயோடு சர்மிஷ்டை முதலாய தோழிப் பெண்களையும் கண்டு, அற்புதனுய்-(வியப்பினுல்) ஆச்சரியமுற்றவனுய், அன்னோர்—அவர்கள், அருள்-செய்த, கடன்-உபசாரங்களை, கொண்டு-பெற்றுக்கொண்டு, இருந்து-அங்குத் தங்கியிருந்து, (பின்) புகர் அணங்கை நோக்கி-சுக்கிராசாரியரின் பெண்ணை தேவயானியைப் பார்த்து; (எ-று),—"நீர் யார்கொல் என்ன" என மேலிற் கவியோடு தொடரும்.

"ஏவல் செய்வான்-வேலைக்காரியாக என்றபடி. அரசன் தன் மகளை இசைந்து வேலைக்காரியாகக் கொடுக்கும்போது சொன்ன சொற்கள் முதனூலில் கூறியுள்ளபடி போற்றத்தக்கவை, வ்ருஷ்பர்வா கூறினர்:—"ஒரு குலத்திற்காக ஒருவனை விட வேண்டும்: ஒரு கிராமத்திற்காக ஒரு குலத்தை விடவேண்டும்: ஒரு தேசத்திற்காக ஒரு கிராமத்தை விட்டுவிடவேண்டும்: தனக்காக (தன் ஆத்மா முத்தி பெறுவதற்காக)ப் பூமியையே விட்டுவிட வேண்டும் (விஷயங்களில் பற்றுதலை விடவேண்டும்)" என்பது. உமை விரதம்-பார்வதியை வழிபடும் விரதம்: கௌரி விரதம் எனப்படுவது. இது ஐப்பசி மாதத்தில் செய்யப்படும், இனி, இதுபோன்றதோர் விரதம் எனக்கொள்ளலுமாம். அற்புதனையது-பேரழகு படைத்த சர்மிஷ்டை யென்ற அசுரராஜாவின பெண் பிராமணப் பெண்ணுகிய தேவயானியின் பாதங்களைப் பிடித்துக் கொண்டிருப்பதனாலும், ஆயிரம் தோழிப் பெண்கள் ஒப்பில்லாத ரூபமுள்ளவர்களாயிருப்பதனாலும். அருட்கடன்-அரசர்க்கு நேர்தற்குரிய அதிதி உபசாரங்கள். இரதமொழி-அடையடுத்த பண்பாகுபெயர். இரதம்-இரசம்: இனிமை. (17)

18. தேவயானை முன்னைய விவரம் கூறித் தன்னை மணக்க யயாதியை வேண்டுதல்.

அறிந்துமறி யான்போனீர் யார்கொ லென்ன
அறியாய்கொல் எனையுனையான் அறிவல் கூவல்
உறைந்தபுக ரணங்கியான் நீயெ டுத்த
வேந்திவ்வொண் ணுதலாரி குனையரெற் குணர்தி
மறந்தருவே லரசவெனை யெடுப்பா னன்பின் [முன்னுள்
வலக்கரந்தந் திடலானீ மணவ னுவான்
சிறந்தபரை விரதமிவண் புரிகின் றேனீ
தெரியலணி குதியெனலுஞ் செம்மல் சொல்வான்.

(இ-ள்). அறிந்தும்-தெரிந்து வைத்தும், அறியான்போல்-தெரியாதவன் போல, நீர் யார்கொல் என்ன-நீர் யாவர் என்று (யயாதி) வினவ, (அதற்கு மறுமொழியாகத் தேவயானை) எனை அறியாய்கொல்-என்னை அறியமாட்டாயோ? உனை யான் அறிவல்-உன்னை எனக்குத் தெரியும்: கூவல் உறைந்த புகரணங்கு யான்-கிணற்றில் விழுந்து தங்கியிருந்த சுக்கிரரின் புதல்வி நான்; நீ எடுத்த வேந்து-நீர் என்னை தூக்கியெடுத்த அரசராவீர்: எற்கு-எனக்கு, இ ஒண்ணுதலார் இகுனையர்-இந்த ஒளி பொருந்திய நெற்றியையுடைய பெண்டிர் தோழியர்: முன்னுள்-முன்னொரு நாள், மறம் தருவேல் அரச!-வீரம் பொருந்திய வேலையேந்திய அரசரே! எனை எடுப்பான்-என்னைக் கிணற்றிலிருந்து காப்பாற்றும் பொருட்டுத் தூக்கியெடுக்கப்புகுந்து, அன்பின்-அன்போடு (விருப்பத்தோடு), வலக்கரம் தந்திடலால்-(உமது) வலக் கையைக் கொடுத்திட்டதால், நீ-நீர், மணவன் ஆவான் உணர்தி-(என்னை) மணந்தவனுவீர்: இதனை நன்கு தெரிந்துகொள்ளும்: இவண்-இந்த இடத்தில் (இப்போது), சிறந்த பரை விரதம் புரிகின்றேன்-சிறந்த கௌரி விரதம் அநுஷ்டிக்கின்றேன்: (ஆகவே இன்று நல்ல நாள்): நீ-நீர், தெரியல் அணிகுதி-யான் மணமாலையிட அதனை அணிவீராக, எனலும்-என்று சொல்லவும், செம்மல்-யயாதி மன்னவன், சொல்வான்—; (எ-று). யயாதி சொல்வதை மேலிக்கவியிற் காண்க.

அணங்கியான்-குற்றியலிகரம். மணவன்-மணவாளன்: கணவன்.

19. யயாதி மணம் மறுக்கத் தேவயானை தந்தையை வரவழைத்தல்.

[இரு கவிகள்—ஒரு தொடர்.]

அருமறையோர்க் கரசர்குலத் தணங்கா மன்னர்க்
கந்தணர்தங் குலத்தினணங் கடாதென் றோதுஞ்
சுருதிமுறை பிழைத்துனையான் வேட்ட னன்றே
சொற்றிடுதி யெனவதற்குத் தோகை யெந்தை
தருகுவனே லிசைகுவையோ வென்ன வேந்தன்
சதுமறைதேர்ந் திடும்புகரே தரில்யா னின்னை
எரிகரியாய் மணப்பலென அவளோர் சேடி
யினைவிடுத்தத் தனைவருவித் திறையைக் காட்டி.

(இ-ள்). அருமறையோர்க்கு-கிடைத்தற்கரிய பிராமணர்களுக்கு, அரசர் குலத்து அணங்கு ஆம்-(விவாகஞ் செய்து கொடுக்க) க்ஷத்திரிய குலத்துப் பெண்டிர்கள் உரியவர்களாவர்: (ஆனால்) மன்னர்க்கு-க்ஷத்திரிய குல அரசர்களுக்கு, அந்தணர்தம் குலத்தின் அணங்கு அடாது-பிராமண குலப் பெண்டிர்கள் கூடாது, என்று ஓதும் சுருதி முறை-என்று விதிக்கும் வேத நெறியை, பிழைத்து-தவற விட்டு, உனை-பிராம்மணியாகிய உன்னை, யான்-க்ஷத்திரியனாகிய யான். வேட்டல் நன்றே-விவாகஞ் செய்து கொள்ளுதல் முறையோ? சொற்றிடுதி-நீயே சொல்வாய், என-என்று யயாதி சொல்ல, அதற்கு—, தோகை-மயில் போன்ற சாயலினையுடைய தேவயானை, எந்தை தருகுவனேல் இசைகுவையோ-என் தந்தையாராகிய சுக்கிராசாரியர் மணஞ்செய்து தருவராகில் சம்மதிப்பையோ?, என்ன-என்று கேட்க, வேந்தன்-யயாதி மன்னவன், சதுமறை தேர்ந்திடும்-நான்கு வேதங்களிலும் வல்ல, புகரே-சுக்கிரரே, தரில்-கொடுக்க இசைந்தால், யான்—, நின்னை-உன்னை, எரி கரியாய் மணப்பல் என-அக்னி சாக்ஷியாக விவாகஞ் செய்து கொள்வேன் என்று சொல்ல, அவள்-அந்தத் தேவயானை, ஓர் சேடியினை விடுத்து-ஒரு தாதியை அனுப்பி, அத்தனை-தந்தையாகிய சுக்கிரரை, வருவித்து-வரவழைத்து, இறையைக் காட்டி-அரசராகிய யயாதியைக காட்டி; (எ-று.)—"இறை யெனக்கிங்கிவனெனவே" என மேற்கவியோடு இயையும்.

தோகை-உவமையாகுபெயர். எந்தை-என் தந்தையென்பதன் மரூஉ. எரி-அக்னி. கரி-சாக்ஷி. மணப்பல்-முன்னிலை வினைமுற்று. "எரிகரியாய் மணப்பல்" என்று மங்கலத்திற்கு அமங்கலந்

தோற்றப் பேசியிருப்பது அரசர் குலத்தவனுதலின்; அந்தண குலத்தவனன்று என்பதை வற்புறுத்துதற்கு என்க. [ஈண்டு ஒரு விஷயம் கவனித்தற்குரியது. மூதனூலின்படி தேவயானி யயாதியை நோக்கி "உம்முடைய ரூபமும் வேஷமும் ராஜாவைப் போலிருக்கின்றன. ஆனல் பிராமண வாக்கை வகிக்கிறீர்" என்று பேசியிருக்கின்ருள். "தன் வாக்கு பிராமண வாக்கன்று என்று நிரூபிப்பதற்காக இங்ஙனம் பேசினன்" எனப் பின்னேன் வேண்டும் விகற்பம் கூறியபடி எனக் கொள்ளலாம்.] "நிலத்திற் பிறந்தமை கால் காட்டும் காட்டும், குலத்திற் பிறந்தார் வாய்ச் சொல்" என்ருர் திருவள்ளுவனரும். "அக்னி சாக்ஷியாக மணப் பேன்" என்ற மேலான அருத்தத்தில், "எரிகரியாய் மணப்பல்" என்று வீழ்ச்சி தோன்றப் பேசியிருப்பதை ஆங்கிலத்தில் "Bathos" என்பர். (19)

20. யயாதியைத் தேவயானி மணந்து இரு புதல்வரைப் பெறுதல்.

மறையவருக் கியானியையா வாற்றி னுனும்
வலக்கரமுன் கூவலிடை வழங்க லானும்
இறையெனக்கிங் கிவனெனவே யிசைந்து வெள்ளி
யிறைவனுக்குக் கயன்சாபம் இயம்பி வேத
நெறிமணஞ்செய் தளிப்பவர ரிடபபன்மன்
நேரிழையோ டாயிரவர் நெருங்க மாதோ
டுறையுநகர் புகுந்தின்ப மருந்தி யின்ருன்
ஒப்பில்ய துருவசுவென் றுபயர் தம்மை.

(இ-ள்.) யான்–(தேவயானியாகிய) நான், மறையவருக்கு இயையா-பிராமணர்களுக்கு (மணம் செய்து) கொடுக்க முடியாத, ஆற்றினனும்-நீரியினுலும், முன் கூவலிடை-முன்னெரு நாள் கிணற்றிடத்து, வலக்கரம்-எனது வலக்கரத்தை உமது வலக்கரம் கொண்டு பிடித்து, வழங்கலானும்-(அதனை) உதவியிருத்தலாலும், இங்கு-இவ்வுலகில், இறை எனக்கு இவன் எனவே-கணவன் எனக்கு இந்த யயாதியே என நிர்ணயித்து, இசைந்து-உடன் பட்டு, வெள்ளி இறைவனுக்கு-(தன் தந்தையாகிய) சுக்கிராசாரி யருக்கு, கயன் சாபம் இயம்பி-கசன் இட்ட சாபத்தையும் சொல்லி, (அதனைக்கேட்ட தந்தை), வேதநெறி மணம் செய்து அளிப்ப-வேத விதிப்படியே விவாகச் சடங்குகளைச்செய்து பாணிக்கிரகணம் செய்து கொடுப்ப, வரர்-மேலோனகிய யயாதி மன்னவன்,

இடபபன்மன் நேரிழையோடு ஆயிரவர் நெருங்க-வ்ருஷபர்வாவின் புத்திரியாகிய சர்மிஷ்டையோடு அவளது தோழியர் ஓராயிரம்பேர் சூழ்ந்துவர, மாதோடு-தேவயானியோடு, உறையும் நகர் புகுந்து-தான் வசிக்கின்ற நகரத்துள் பிரவேசித்து, இன்பம் அருந்தி-(அந்தத் தேவயானியோடுகூடி) இன்பமநுபவித்து, ஒப்புஇல்-நிகரற்ற, யது துர்வசு என்று உபயர்தம்மை-யது, துர்வசு என்ற பேருடைய இரு பிள்ளைகளை, ஈன்றான்-பெற்றெடுத்தான்; (எ-று).

கசனிட்ட சாபம்-பிராமணனுகிய ரிஷி புத்திரன் எவனும் உன்னைப் பாணிக்கிரஹணம் செய்யப்போகிறதில்லை என்றது. இயம்பி-இயம்ப: எச்சத்திரிபு. வரன்-மணமகன்: சிறந்தவன். அது "வரர்" என வந்தது. உபயர்-இருவர்: வடசொல். (20).

21. சர்மிஷ்டை தன்னை வரிக்க யயாதியை வேண்ட அவன் மறுத்தல்.

இருவரையீன் றிடுமரசன் தேவ யானைக்
கிகுளையரோ டேவலியற் றிடப பன்மன்
தருமகள்வாழ் பொதும்பரிடத் துலவ வோர்நாட்
சார்ந்திடலு மவணைக்கித் தளர்ந்தோர் வேண்டும்
பொருடருவோ யுனையிரந்தேன் கருப்ப தானம்
புணர்ந்தருளீ யெனவவன்முன் புணர்ப்பின் றியாவும்
அருளியவாக் கென்றுயிரரோ டுனையுங் காட்டி
யறைந்தபுகர் மொழியையிகந் தணையே னென்றான்.

(இ-ள்). இருவரை ஈன்றிடும் அரசன்-(யது, துர்வசு) என்ற இரு பிள்ளைகளை[த் தேவயானியிடத்து]ப் பெற்ற யயாதி மன்னன், தேவயானைக்கு-அந்தத் தேவயானைக்கு, இகுளையரோடு ஏவல் இயற்று-(ஓராயிரம்) தோழிப் பெண்களோடு பணிகள் செய்து வருகின்ற, இடபபன்மன் தரு மகள் வாழ்-வ்ருஷபர்வாவின் பெண்ணுகிய சர்மிஷ்டை வாழ்கின்ற, பொதும்பரிடத்து-(அசோக வனிகை யென்னும்) தோட்டத்திடத்து, ஓர் நாள்—, உலவ-உலாவி வருமாறு, சார்ந்திடலும்-சேர்ந்திடலும், அவள்-அந்தச் சர்மிஷ்டை, நோக்கி-(யயாதியைப்) பார்த்து, "தளர்ந்தோர் வேண்டும் பொருள் தருவோய்!-தளர்ச்சியடைந்து சோர்ந்தவர்களுக்கு அவர்கள் விரும்புகின்ற பொருளை வழங்குபவரே! உன்னை இரந்தேன்-உம்மை யாசிக்கிறேன்: நீ-நீர், புணர்ந்து-என்னோடு கூடி, கருப்பதானம் அருள்-[பிள்ளைப் பேற்றுக்கான] கருப்பா

தானத்தைச் செய்வாயாக, என-என்று வேண்டிப் பிரார்த்திக்க, அவன்-அந்த யயாதி, [சர்மிஷ்டையை நோக்கி உன் தந்தையாகிய சுக்கிராசாரியர் உன்னைத் தேவயானியுடன் அனுப்பும்போது], முன்-என் முன்னர், யாவும் புணர்ப்பு இன்றி-எந்த விதத்திலும் சூழ்ச்சியில்லாமல், அருளிய வாக்கு-சொன்ன வார்த்தைகள் இவை, என்று-என்று சொல்லி, (மேலும்) ஆயிரரோடு உனையும் காட்டி-ஆயிரந் தோழிமாரோடு உன்னையும் சுட்டிக்காட்டி, அறைந்த-சொன்ன, புகர் மொழியை-சுக்கிராசாரியர் வார்த்தைகளை, இகந்து-கடக்க விடுத்து, அனையேன்-உன்னைச் சேரமாட்டேன், என்றான்-என்று யயாதி கூறினன்; (எ-று.)

சுக்கிராசாரியர் சொன்ன மொழி:—அரசரே! விருஷபர்வாவின் பெண்ணை ராஜகுமாரியும் உன்னால் எப்போதும் கௌரவிக்கத் தக்கவள்: ஆனால் இவளை நீ சயனத்தில் கூப்பிடத்தகாது; தொடவும் தொடாதே; தேவயானியின் பிரியத்தைச் செய்து சர்மிஷ்டையையும் காப்பாற்று. உனக்கு ச்ரேயஸ் உண்டாகக் கடவது" என்பது, தேவயானைக்கு" என்பது மத்திமதீபம். "தளர்ந்தோர் வேண்டும் பொருள் தருவோய்" என்ற விளி-கருத்துடையடைகொளியணி, புணர்ப்பு-சூழ்ச்சி, மாயம், தந்திரம். காட்டியறைந்தது என்றதால்-அவர் வாக்கு கடக்க முடியாதது என்று வற்புறுத்துதற்கு. கருப்பதானம்-வடசொல். (21)

22. பின்னர் சர்மிஷ்டைக்கு இசைந்து அவளோடு களித்திருத்தல்.

என்னலுமா தந்தணரான் மற்றே ராவிக்
கிறுதியுறு மிடத்துமணத் திடத்தும் பொய்ம்மை
பன்னலறம் வேட்கஞ்சிச் சரண்புக் கேனீ
பரிப்பதழ ககற்றிலறம் பழுதா மென்ன
சொன்னமொழிக் கிசைந்துபுணர்ந் தின்பவாரி
துளைந்துதயத் தகம்புகுந்தான் தோன்ற லந்தக்
கன்னிபிற ரறியாதவ் வரச ஞளுங்
கலந்திடவாழ்ந் தொருமகவைக் களிப்பி னின்றுள்.

(இ-ள்.) என்னலும்-என்று யயாதி சொன்னபோது, மாது-சர்மிஷ்டை, அந்தணரான்-பிராம்மணரால், மற்று ஓர் ஆவிக்கு-பிறிதோருயிருக்கு, இறுதி உறும் இடத்தும்-பிராணபத்துநேரும் போதும், மணத்திடத்தும்-விவாக காலத்திலும், பொய்ம்மை-

பொய்யை, பன்னல்-கூறுதல், அறம்-தருமமேயாம்: வேட்கு கஞ்சி-காமவேளுக்குப் பயந்து, சரண்புக்கேன்-உன்னைச் சரண மடைந்தேன்: நீ-நீர், பரிப்பது-என்னைத் தாங்குவது, அழகு-நேரிது; அகற்றில்-நீக்கினீராகில், அறம் பழுதாம்-தருமம் பழுது பட்டுப்போகும், என்ன-என்று, சொன்ன மொழிக்கு-சர்மிஷ்டை சொன்ன [சாதுரியமான சமாதான] வார்த்தைக்கு, இசைந்து-சரியென்று உடன்பட்டு, புணர்ந்து-அவளைச்சேர்ந்து, இன்ப வாரி துளைந்து-சிற்றின்பக் கடலில் மூழ்கி விளையாடி, உதயத்து-சூரியோதயத்தின்போது, தோன்றல்-யயாதி, அகம் புகுந்தான்-தன் நகர்வந்து வீடு புகுந்தான்:-அந்தக் கன்னி-அந்தச் சர்மிஷ்டை, அவ்வரசன்-அந்த யயாதி, பிறர் அறியாது-அயலார் அறியாதபடி, நாளும்-தினந்தோறும், கலந்திடவாழ்ந்து-தன்னோடு கூடிமகிழும்படி வாழ்ந்து, ஒரு மகவை-ஒரு பிள்ளையை, களிப்பின்-மகிழ்ச்சி தரும்படி, ஈன்றாள்-பெற்றாள்; (எ-று)

ஈன்ற பிள்ளையின் பெயர்-த்ருஹ்யு என்பது. பிராம்மணரால் மற்றோர் ஆவிக்கு இறுதி நேரும் இடத்துப் பொய்சொல்லலாம் என்றது ஏன் எனில்-சர்மிஷ்டையின் தந்தை சுக்கிரர் அந்தணர். அவரால் [அவர்சொன்ன வாக்கால்] இப்போது மகளுக்கு ஆவி போம்படி காமநோய் தலைக்கட்டியுள்ளது. ஆகவே அதனை உட்கோளாகக் கொண்டு சர்மிஷ்டை இதனைச் சொன்னாள், மற்றும் கலியாணகாலத்தில் அஃது செவ்வன் நிறைவேறப் பொய் சொல்லலாம். வள்ளுவரும் "பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த, நன்மை பயக்குமெனின்" என்றார். "சரண்புக்கேன்" என்றது-சரண்புகுந்தவரை ஆதரித்தல் கடப்பாடாதலின். (22)

23. சர்மிஷ்டை ஈன்ற புதல்வர்களைக் கண்டு தேவயானை வினவல்.

[இரு கவிகள்—ஒரு தொடர்.]

ஈன்றதுணர்ந் தடைந்தவள்பால் தேவ யானை
இம்மகவின் றிடுஞ்செயல்யா திசைத்தி யென்ன
மீன்றடங்கண் ணெருமுனிவன் வரத்தா லென்ன
மெய்யெனமீண் டனளவள்சன் மிட்டை மீட்டுந்
தோன்றலைச்சேர்ந் துபையரையீன் றெடுத்தா ளந்தச்
சுதர்களொரு மூவருந்தண் தொடைய யாதி
போன்றவனப் பினராய்வந் துலவ வீதி
புகர்மகள்கண் டழைத்தியாவர் புதல்வர் நீவிர்.

(இ-ள்.) தேவயானை—, ஈன்றது உணர்ந்து-சர்மிஷ்டைக்குக்

குழந்தை பிறந்ததைத் தெரிந்து கொண்டு, அவள்பால்-அவளிடத்து, அடைந்து-வந்து, 'இ மகவு ஈன்றிடும் செயல் யாது இசைத்தி என்ன-இந்தக் குழந்தையைப் பெற்றெடுத்த விதம் யாது சொல்வாய்' என்று வினவ, மீன் தடங்கண்-மீன் போன்ற விசாலமான கண்களைக்கொண்ட சர்மிஷ்டை, (அதற்குப் பதிலாக) "ஒரு முனிவன் வரத்தால்"—ஒரு ரிஷியின் வரத்தினாலே, என்ன-என்று சொல்ல, அவள்-அந்தத் தேவயானி, மெய்யென மீண்டனள்-உண்மை யென்று கொண்டு திரும்பிப்போயினள். (இஃது இங்ஙனுக) மீட்டும்-மறுபடியும், சன்மிட்டை-சர்மிஷ்டை, தோன்றலைச் சேர்ந்து-யயாதியோடுகூடி, உபையரை-இரண்டு பிள்ளைகளை, ஈன்றெடுத்தாள்-பெற்றாள்: அந்த சுதர்கள் ஒரு மூவரும்-அந்தப்பிள்ளைகள் மூன்று பேரும், தண் தொடை-இன்பந்தரும் தோற்றக்கட்டினில், யயாதி போன்ற வனப்பினராய்-யயாதியைப் போன்ற அதே [சாயையுடைய] அழகுடையவராய், வீதி வந்து உலவ-தெருவினில் வந்து உலாவ, புகர் மகள் கண்டு-சுக்கிரர் மகளாகிய தேவயானி பார்த்து, அழைத்து-அம்மூவரையும் தன் பாலழைத்து, நீவிர் - நீங்கள், யாவர் புதல்வர் - யாருடைய பிள்ளைகள்; (எ-று),

—'என்னலும்' என மேற்கவியோடு தொடரும்.

ஒரு முனிவன் என்றது ஒரு ரிஷி என்று பொருள்படவே தேவயானி மெய்யென நம்பி மீண்டாள். சர்மிஷ்டை நோக்கின்படி, யயாதியும் ஒரு ரிஷிதான்: ஆனால் ராஜரிஷி: ரிஷியென்பவன் நியாயமாகவும் தர்மத்தை விடாமலும் நடப்பவன். உபையர்-உபயர் என்பதன் இடைப்போலி. தண்மை-குளிர்ச்சி, இன்பம் தொடை-தொடர்ச்சி; கட்டுக்கோப்பு; இங்கே தேகத் தோற்றக் கட்டு. வனப்பு அழகு, ஒளி. இனி, தொடை-துடையெனக் கொண்டு துடையென்ற உறுப்பினழகில் யயாதி போன்ற அழகுடையராய் எனல் சிறவாது, அழைத்தியாவர்-குற்றியலிகரம். புகர்மகள் - நான்கனுருபு தொக்கது. உபையர் பெயர்-அனு, பூரு என்பன . (23)

24. சுக்கிரன் யயாதியைச் சபித்தல்.

[இரு கவிகள்—ஒரு தொடர்.]

என்னலும்யாம் யயாதிசுதர் தாய்சன் மிட்டை
என்றனர்கேட் டரசைவெறுத் திவள்போய் தாதைக்
கின்னவைசொற் றனளுருத்தப் புகர்வந் தென்சொல்
இகந்திடலால் நரைதிரைமூப் பெய்து கென்றான்

மன்னன்மழைக் கோள்தனைத்தாழ்ந் தெனைச் சன்மிட்டை
மகப்பேறுற் றிரந்திடலான் மறுத்தல் தீதென்
றுன்னிமணந் தனனுருத்த லறமோ வென்ன
வுவந்துபுகர் சுரந்தருளீ துரைப்பான் வேந்தே!

(இ-ள்). என்னலும்-என்று வினவவும், யாம்-யாங்கள் மூவரும், யயாதி சுதர்-யயாதியின் பிள்ளைகள்; தாய் சன்மிட்டை-தாய் சர்மிஷ்டாதேவி, என்றனர்-என்று விடையிறுத்தனர்; இவள் கேட்டு-தேவயானை கேட்டு, அரசை வெறுத்து-யயாதியை வேண்டாது சினந்து, போய்—, தாதைக்கு-தந்தையாகிய சுக்கிராசாரியருக்கு, இன்னவை-இந்த விருத்தாந்தங்களை, சொற்றனள்-சொன்னாள்; அ புகர்-அந்தச் சுக்கிரர், உருத்து-கோபித்து, "என் சொல் இகந்திடலால்-என் வார்த்தையை மீறி நடந்திடலால், (இந்த யயாதி மன்னவன்) நரை திரை மூப்பு எய்துக-வெள்ளிய தலை மயிரையும், உடற்றோல் சுருக்கத்தையும் முதுமையையும் அடைந்திடுக", என்றான்-என்று சபித்திட்டார்: (அது கேட்ட) மன்னன்-யயாதி, மழைக்கோள்தனைத் தாழ்ந்து-சுக்கிரரை வணங்கி, "சன்மிட்டை-சர்மிஷ்டையாகியவள் [உமது அசுர மன்னன் விருஷபர்வாவின் மகள்], எனை-என்னை, மகப் பேறு உற்று-புத்திர பாக்கியத்தைப் பெறவேண்டி, இரந்திடலான்-யாசித்துப் பிரார்த்தித்தமையால், மறுத்தல் தீது என்று உன்னி-(அதனை) மறுத்திடல் தீமை பயக்கும் என எண்ணி, மணந்தனன்-அவளைக் கூடினேன்: (ஆகவே) உருத்தல்-(என்மேல்) கோபித்தல், அறமோ-தருமமாகுமோ?, என்ன-என்று சுக்கிரரை வேண்ட, புகர்-அந்தச் சுக்கிரர், உவந்து-மகிழ்ந்து. அருள் சுரந்து-கருணையோடு, ஈது உரைப்பான்-இந்த வார்த்தைகளைச் சொல்லலானார்: வேந்தே-அரசனே! (எ-று.)—'உன் முதுமை நல்கி' என மேலிற் கவியோடு இயையும், இது, குளகம்.

'மறுத்தல் தீது' என்றவிடத்து அறியவேண்டிய விவரம்:—யயாதி சுக்கிரரை நோக்கி, "அசுரராஜன் மகள் சன்மிட்டை; நீர் அசுரர் குரு: அவளும் உம்மாலேயே எனக்குக் கொடுக்கப் பட்டாள். அவள் இவ்வுலகத்தில் வேறொரு கணவனை விரும்பவில்லை: நானே என்னை எவன் என்ன கேட்கிறானே அதையெல்லாம் அவனுக்குக் கொடுக்கவேண்டும் என்ற விரதம் மேற் கொண்டவன். தக்க பருவத்தின் பயனை யாசிக்கிற ஸ்திரீக்கு அதைக் கொடாமலிருக்கிற புருஷன் கர்ப்பஹத்தி செய்தவனுவன் என்பர் சாத்திரம் அறிந்த மஹான்கள். இவ்வாறு உள்ள காரணங்களை யாராய்ந்தே நான் பாவம் வருமென்ற பயத்தினால்

கலக்கமுற்றுச் சர்மிஷ்டையுடன் சேர்ந்தேன். நான் செய்ததைத் தருமமென்று நினைத்து என் விஷயத்தில் மன்னிக்கவேண்டும்" என்பது. வந்து-சொல்விழுக்காடு. நரை திரை மூப்பு-உம்மைத் தொகை. நரை=ஜரை: நரைமயிர், ஜரை-முதுமை. (24)

25. சுக்கிரன் யயாதிக்குச் சாபவிமோசனம் அளித்தல்.

[இரு கவிகள்—ஒரு தொடர்.]

மைந்தரி லொருவனுக்குன் முதுமை நல்கி
மற்றவனெவ் வனங்கொடுநீ வாழ்ந்து சின்னாள்
அந்தமகன் தனக்கேமீட் டனது வாழ்வும்
அரசுமரு ளெவ்வனமு மளித்தி யென்ன
தந்தமகண் முனிவகற்றி விடுத்துத் தூயோன்
தான்மீண்டான் மூப்பணுகித் தளர்வுற் றோர்நாள்
விந்தமலர் முகத்தேவ யானை தந்த
விறன்மைந்த ரிருவரையும் வேந்த னோக்கி.

(இ-ள்.) மைந்தரில்-உனது புதல்வர்கள் ஐவரில், ஒருவனுக்கு-யாரேனும் ஒருவனுக்கு, உன் முதுமை நல்கி-உனது கிழத்தனத்தைக் கொடுத்து, மற்று-அதற்கு மாறாக, அவன் எவ்வனம் கொடு-அவனது யௌவனத்தைப் பெற்றுக்கொண்டு, நீ—, சின்னாள் வாழ்ந்து-சில வருடங்கள் இன்பமநுபவித்து வாழ்ந்து (பின்), அந்த மகன் தனக்கே-அந்தப் புதல்வனுக்கே, மீட்டு-மறுபடியும், உனது வாழ்வும் அரசும் அருள்-உன்னுடைய இன்பவாழ்வையும், அரசாட்சியையும் கொடு; (மேலும்) எவ்வனமும் அளித்தி-உன் யௌவனத்தையும் கொடுத்திடுவாய், என்ன-என்று சாபவிமோசனத்திற்கு வழிசொல்லி, தந்த மகள்-தான் பெற்ற மகளாகிய தேவயானியின், முனிவு அகற்றி விடுத்து-கோபத்தைத் தணியவைத்துப் போகவிடுத்து, தூயோன் தான்-பரிசுத்தராகிய சுக்கிராசாரியர், மீண்டான்-தன் நகருக்குத் திரும்பினார்; வேந்தன்-யயாதி, மூப்பு அணுகி-கிழத்தனம் அடைந்து, தளர்வுற்று-தளர்ச்சியையடைந்து, ஓர் நாள்-ஒரு தினத்தில், விந்தமலர் முகத் தேவயானை தந்த-செந்தாமரை மலர் போன்ற அழகிய முகத்தையுடைய தேவயானி பெற்றெடுத்த, விறல் மைந்தர் இருவரையும் நோக்கி-வல்லமையுடைய யது, துர்வசு என்ற பிள்ளைகள் இருவரையும் பார்த்து; (எ-று.)—'இளமை நீவிர் வழங்குதிரோ' என மேலைக் கவியோடு இயையும்.

ஐந்து பிள்ளைகள்-தேவயானியின் பிள்ளைகள் இருவர்-யது, துர்வசு. சன்மிட்டையின் பிள்ளைகள் மூவர்-த்ருஹ்யு, அனு, பூரு. எவ்வனம்-யௌவனம் என்பதன் முதற்போலி. யௌவனம்-இளமை, வாலிபப் பருவம். கொடு-கொண்டு என்பதன் தொகுத்தல். அருள், அளித்தி-முன்னிலை வினைமுற்றுக்கள். விந்த மலர்-அரவிந்த மலர்: முதற்குறை, விந்தமலர் முகம்-உவமத்தொகை. சாபவிமோசனமாவது-இந்த மூப்பை அயலார்க்குப் பண்டமாற்றுப் போற்கொடுக்குமாறு அருள்புரிந்தமை. (25)

26. யயாதி பூருவின் இளமைகொண்டு மனஞ்சலிக்கக் காமவின்ப நுகர்ந்து பின் அந்தப் பூருவுக்கே அரச வுரிமை இளமை இவற்றைத் தந்திடுதல்.

வருமெனது முதுமைகொடும் இளமை நீவிர்
வழங்குதிரோ வெனவவர்கண் மறுப்ப வேந்தா
டரவினுருத் தெயினரவ ராதி ரென்றங்
கவர்ச்சபித்து நிசாசரர்மன் னளித்தாள் தந்த
பொருவில்சுதர் மூவரையு முசாவி மூத்த
பூருவழங் கிடவிளமை பூண்டு சின்னாள்
மருவிமட வார்போகம் வெறுத்த பின்னம்
மகற்கரசோ டளித்திளமை வனத்துட் புக்கான்.

(இ-ள்.) வரும் எனது முதுமை கொடும்-வரவிருக்கின்ற என்னுடைய கிழத்தனத்தைப் பெற்றுக்கொண்டும், இளமை-உங்களுடைய யௌவனத்தை, நீவிர்-நீங்கள், வழங்குதிரோ-எனக்குக் கொடுப்பீர்களோ? என-என்று கேட்க, அவர்கள் மறுப்ப—, வேந்து-யயாதி மன்னவன், ஆடு அரவின் உருத்து-படமெடுத்தாடும் நாகப்பாம்புபோற் சீறிச் சினந்து, எயினரவர் ஆதிர்-வேடர்களாகக் கடவீர், என்று-என்று சொல்லி, அவர்ச் சபித்து-அம்மைந்தர்களைச் சாபமிட்டு, நிசாசரர் மன்-அசுரவேந்த னாகிய வ்ருஷபர்வா, அளித்தாள்-பெற்றெடுத்த சர்மிஷ்டை, தந்த-ஈன்ற, பொருவு இல்-ஒப்பற்ற, சுதர் மூவரையும் உசாவி-மூன்று பிள்ளைகளையும் (அழைத்துக்) கேட்டு, மூத்த-(கடைசி பிள்ளையாயினும்) அறிவினில் மூத்திருந்த (முதிர்ச்சி பெற்றிருந்த), பூரு-பூருவென்பவன், வழங்கிட-கொடுத்திட, இளமை பூண்டு-அவனது யௌவனத்தைத் தான் ஏறிட்டுக்கொண்டு, சில் நாள்-சில ஆண்டுகள், மடவார் போகம் மருவி-மகளிர் சுகம் அநுபவித்து, வெறுத்த பின்-வெறுப்படைந்த பின்னர்,

அ மகற்கு-அந்தப் பூருவினுக்கே, அரசோடு இளமை அளித்து-அரசாட்சியோடு யௌவனத்தையும் திரும்பப் பெறும்படி கொடுத்து, வனத்துள் புக்கான்-வானப்பிரஸ்தாச்ரமம் மேற் கொண்டு சுவர்க்கம் பெறக் காடு புகுந்தான்; (எ-று).

கொடும்-கொண்டும் என்பதன் தொகுத்தல். எயினரவர், அவர்-சொல்லுருபு. ஆதிர்-ஆகுதிர் என்பதன் சிதைவு. அவர்ச் சபித்து-இரண்டாம் வேற்றுமையில் ஒற்றுமிக்கது. நிசாசரர்-நிசியில் (இருட்டில்) சஞ்சரிப்பவர்: அசுரர், அரக்கர், மன்-தலை வன்: வ்ருஷபர்வா. அளித்தாள்-வினையாலணையும் பெயர்: அளிக்கப்பட்டாள் என்ற பொருளது. மன் அளித்தாள்-மூன்ற னுருபு தொக்கது. மூத்த-அறிவில் மூத்த என்றபடி, வியாசபாரத முதனூலின்படி, பூரு ஈற்றுப்புதல்வனுவான். சில் நாள்-ஆயிரம் ஆண்டுகள் என்று முதனூல் கூறும். முதனூலின்படி நோக்கின் யயாதியிட்ட சாபம் பின்வருமாறு:—

யதுவுக்கு—அவன் சந்ததி ராஜ்யத்தை அடையாமலே போகக் கடவது என்றது.

துர்வசுக்கு—அவன் சந்ததி நாசத்தையடைவதோடு அவன் மிலேச்சர்களுக்கு ராஜாவாவான் என்றது.

த்ருஹ்யுவுக்கு—இன்பம் நிறைவேறாது போகவேண்டிய தென்றும், ராஜ்யமில்லாமலே சந்ததியோடு ஓடம் விடும்படி யான கழிப்பிரதேசத்தில் போஜன் என்ற பெயரோடு கிடப்பாய் என்றும் கூறியது.

அனுவுக்கு—அக்நிஹோத்திரத்தை விட்டவனுய்த் திரிய அவன் சந்ததிகள் யௌவன வயது வந்தவுடன் இறந்துபோதல் என்றது.

இங்ஙனம் நால்வர்க்கும் சாபமிட்டு, பூருவுக்குக் கொடுத்த ராஜ்யத்தின் எல்லைக்கோடிகளில் அவர்களைப் போக நியமித்தான்.

யதுவினிடமிருந்து யாதவர்கள் பிறந்தார்கள். துர்வசுவினிட மிருந்து யவனர்கள் பிறந்தார்கள். த்ருஹ்யுவின் புத்திரர்கள் போஜர்கள். அனுவின் புத்திரர்கள் மிலேச்ச சாதியார்கள். [இங்ஙனுகவே, ஈண்டு பொதுவாக "எயினரவராதிர்" எனச் சபித்தது.]

பூருவினிடமிருந்து பௌரவ வம்சம் தொடங்கியது. சந்திர வமிசம் பௌரவ வம்சம் என வழங்கும் சிறப்பினைப் பெற்றது என்றபடி.

(26)

வேறு

27. யயாதி தவமேற்கொண்டு சுவர்க்கம் புகுதல்.

[இரு கவிகள்—ஒரு தொடர்.]

காயிலை மிசைந்துந் தீர்ந்துங் கடுந்தவ மளப்பில் காலந்
தீயிடை புனற்க ணின்றுஞ் செய்தய னடைந்து நல்குந்
தூயநல் வரத்தான் மற்றேன் றெல்பதத் தனேகங் கால
மேயபின் யயாதி விண்ணோர் வியன்பத மடைந்து வாழ்நாள்.

(இ-ள்). யயாதி-, காய் இலை மிசைந்தும்-காயையும் இலையையும் உண்டும், தீர்ந்தும்-பின் அவற்றையும் விட்டு (ஒரு வருட காலம்) வாயுபக்ஷணஞ் செய்துகொண்டும், அளப்பு இல் காலம்-ஆயிர வருட காலம் பூர்ணமாக, தீயிடை-பஞ்சாக்னி மத்தியில் [ஒரு வருட காலம் நின்றும்], புனற்கண்-நீரின் மத்தியிலும் (ஒற்றைக் காலால்), நின்றும்-நின்றுகொண்டிருந்தும், கடுந்தவம் செய்து-கடுமையான தவத்தைச் செய்து, (பின்) அயன்-பிரமனை, அடைந்து-சேர்ந்து, (பிரம்மலோகத்திற்குப் போய்), நல்கும்-அவன் கொடுத்த, தூய நல் வரத்தால்-பரிசுத்தமான நல்ல வர பலத்தினாலே, மற்றேன்-அந்தப் பிரமனின். தொல்பதத்து-பழைய லோகத்திலேயே, அநேக காலம்-பல வருடங்கள் (ஆயிரம் வருடங்கள்), மேயபின்-தங்கியிருந்த பின்னர், விண்ணோர்வியன் பதம் அடைந்து-தேவர்களின் விசாலமான இந்திர லோகத்திற்குப் போய், வாழ்நாள்-வாழ்ந்து வரும் நாட்களில்: (எ-று.)-"ஒருதினம் மகவான் வேந்தனுடனிருந்துரைசெய்போது" என மேலிற் கவியோடு தொடரும்.

தீ-பஞ்சாக்னி: நாலு பக்கமும் நாலு அக்னிகளும் மேலே சூரியனும்.

இது முதல் சருக்கமுடியுமளவும் உள்ள ஆறு கவிகளும்-முதற் சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களாயும் மற்றையநான்கும் மாச்சீர்களாயும் வந்த அறுசீராசிரிய விருத்தம். (27)

28. யயாதி மேலோர் பிறர் புரிதவம் அவமதிக்கவே பூமியில் விழத் தொடங்குதல்.

ஒருதின மகவான் வேந்த னுடனிருந் துரைசெய் போதப்
புரவலன் முனிவர் விண்ணோர் புரிதவ மிகழ்ந்து தான்செய்
தருதவம் வியந்து கூற அரச!நின் றவங்க ளின்றே
டொருவிய தவனி சேர்கென் றுருத்தம ரேசன் சொற்றான்.

(இ-ள்). ஒரு தினம்-ஒரு நாள், மகவான்-இந்திரன், வேந்த

னுடன் இருந்து-யயாதியோடு ஒருசேர வீற்றிருந்து, உரைசெய் போது-அளவளாவிப் பேசிக்கொண்டிருந்தபோது, அ புரவலன்-அந்த யயாதி மன்னன், முனிவர் விண்ணோர் புரிதவம் இகழ்ந்து-ரிஷிகளும் தேவர்களும் இயற்றுகின்ற தவத்தினை அவமதித்து, தான் செய்தரு தவம் வியந்து கூற-தான் இயற்றின தவத்தினைப் பற்றிப் பெருமிதத்தோடு பாராட்டிக் கூற. (அதனைக் கேட்டு), அரச!-வேந்தனே! நின் தவங்கள்-நீ செய்த உன்னுடைய தவங்களின் பயன், இன்றோடு-இன்றைய தினத்தோடு, ஒருவியது-உன்னை விட்டு நீங்கியது: [எனவே] அவனி சேர்க-பூமியில் விழுக, என்று உருத்து-என்று கோபித்து, அமரேசன்-தேவேந்திரன், சொற்றான்-சொல்லினன்; (எ-று).

அகங்காரத்தினால், மேலோர்கள் செய்தவம் இகழ்ந்ததனால் அவர்கள் வசிக்கும் தேவலோகத்தை விட்டுப் பூமியிலே நழுவி வீழ நேர்ந்தது யயாதிக்கு; ஏனெனில் அவன் செய்த புண்ணியம் அழிந்து போகவே என்க. சேர்கென்று-வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். (28)

29. விழப்போகும் யயாதி பூமியினிடம் சேராமல் ஆகாயத்திலேயே நிற்கும்படி அருள்செய வேண்டுதல்.

கொற்றவன் மாழ்கி யான்சொற்
குற்றம்நீ பொறுத்து மண்பால்
உற்றுமந் தரத்தின்வைக வுவந்தருட்
புரிதி யென்னச்
சொற்றருள் வரமு நல்கிச்
சுரர்பதி யகற்ற வந்தா
சற்றருள் தவத்தோர் தம்முன்
னடிநிலம் படாம னின்றான்.

(இ-ள்). கொற்றவன்-யயாதி, மாழ்கி-வருந்தி, (இந்திரனை நோக்கி) யான்சொல் குற்றம்-நான் சொன்ன அவமதிப்புக் காரணமான குற்றத்தை, நீ—, பொறுத்து-மன்னித்து, மண்பால் உற்றும்-பூமியிலே விழவேண்டியவனையிருந்தும் (என்னை), அந்தரத்தின் வைக-ஆகாயத்திலேயே [சாதுக்களின் இடையே] தங்கியிருக்கும்படி, உவந்து-மன மகிழ்ச்சியோடு, அருள் புரிதி-கருணை செய்வாயாக, என்ன-என்று பிரார்த்திக்க, சுரர்பதி-தேவேந்திரன், சொற்று-அங்ஙனமே (கருணையொடு) வார்த்தை

சொல்லி, அருள் வரமும் நல்கி–அருளோடு கேட்ட வரத்தையும் கொடுத்து, சுரர்பதி-தேவலோகத்தினின்றும், அகற்ற-நீக்க, வந்து-பூமியை நோக்கி வந்து, ஆசு அற்று-குற்றம் நீக்கி, அருள்-அருளைச்செய்கின்ற, தவத்தோர் தம் முன்-சாதுக்களாகிய தவ மூடையோர் முன்னிலையில், அடி நிலம் படாமல்-பூமியில் தோயாத படி அந்தரத்திலேயே, நின்றான்—; (எ-று)

யயாதி இந்திரனை நோக்கி ''நான் தேவலோகத்தைவிட்டு விழும்போது, சாதுக்களின் நடுவே விழுவதற்கு விரும்பு கிறேன்'' என்றான். அதற்கு இந்திரன் ''யயாதியே! சாதுக்களின் சமீபத்திலேயே விழுவாய்: அங்கு விழுந்தால் திரும்பவும் இந்த ஸ்தானத்தை அடைவாய்: இதையறிந்துகொள். இனி, சமானர் களையும் மேலானவர்களையும் தாழ்ந்தவர்களையும் நீ அவமதியாதே'' என்று சொன்னான் என்பது ஈண்டு அறியவேண்டிய விவரம். மற்றும் ''தவத்தோர் தம்முன்'' என்றது அந்த சாதுக்களை. [அவர் நால்வர் என்பது மேற்கவியின் குறிப்பாற் பெறப்படும்: ஆங்குக் கூறுவாம்], சுரர்பதி-இந்திரன் என்றும் தேவலோகத் துப் பதி (அமராவதி) என்றும் இரு பொருள்பட நின்றது. (29)

30. தவத்தோராய சாதுக்கள் யயாதியின் தௌஹித்திரர்களென்று தெரியவரல்.

நின்றர சவரை நோக்கி நீவிர்யா ரெனலு மற்றோர்
வென்றிவேல் யயாதி தந்த மெல்லியல் புதல்வர் யாங்கள்
என்றலு மகிழ்ந்து யானே மியம்புமவ் யயாதி யென்ன
குன்றியீண் டுறல்யா தென்றூர் கூறினன் நிகழ்ந்த வெல்லாம்.

(இ-ள்.) நின்ற-அந்தரத்தில் நின்ற, அரசு-யயாதி மன்னன், அவரை நோக்கி-அந்தத் தவத்தோராய சாதுக்களைப் பார்த்து, நீவிர் யார் எனலும்-நீங்கள் யாவர் என்று வினவியதும், மற்றோர்-அந்தச் சாதுக்கள், யாங்கள்–நாங்கள், வென்றிவேல் யயாதி தந்த மெல்லியல் புதல்வர்-வெற்றி பொருந்திய வேலாயுதத்தைக் கொண்ட யயாதி மன்னவன் பெற்ற பெண்ணாகிய மாதவி யென் பவளின் புத்திரர்கள், என்றலும்-என்று தங்களை (அறிமுகம் செய்து) சொன்னவுடன், மகிழ்ந்து-சந்தோஷப்பட்டு, 'இயம்பும் அவ் யயாதி யானே'-நீங்கள் கூறிய அந்த யயாதி நான்தான், என்ன-என்று தெரிவித்துக்கொள்ள, (அந்தத் தௌஹித்திரர்கள் தாய்வழிப் பாட்டனரை நோக்கி) குன்றி-ஊக்கங்குன்றிச் சோர்ந்து, ஈண்டு-இந்த அந்தரத்திற்கு, உறல்-வந்து சேர்ந்தவிதம்,

யாது-எப்படி, என்றூர்—; (யயாதி) நிகழ்ந்த எல்லாம்-நடந்த கழ்ச்சிகளை யெல்லாம், கூறினன்-சொல்லினர்; (எ-று.)

தௌஹித்திரர்-மகளின் மகார். மாதவி என்பவள் யயாதியின் மகள். அவளுக்குப் புதல்வர்கள் நால்வர். அவர்கள் பெயர்-வசுமான், அஷ்டகன், பிரதர்த்தனன், சிபி என்ற அரசர்கள்: இவர்கள்தான் பின்னர் தவத்தோராய சாதுக்களாயினர். இவர்கள் மத்தியில் யயாதி வந்துசேர்ந்தார் என அறிய வேண்டுவது. [இந்நால்வருள் பிரதர்த்தனன் என்பவன் காசிராஜாவாவன்; வசுமான் என்பவன் இக்ஷ்வாகுவம்ச ராஜாவாவன்]. மெல்லியல்-அன்மொழித்தொகை: ஆகுபெயர் எனினுமாம். உறல்–தொழிற் பெயர். (30)

31. தௌஹித்திரர்கள் கேட்ட விஷயங்களுக்கெல்லாம் யயாதி தெளிவுபடப் பதிலிறுத்தல்.

அதிசயித் தவர்கள் போற்றி யறம்பவஞ் சுவர்க்கங் கும்பி
உதரங்கொள் கருவுற் பத்தி யுரைசெயா சிரம நான்கிவ்
விதமெலாம் வினவி வேந்தன் விளம்பிடத் தெளிந்து மேலாங்
கதியெமக் குளதோ வென்றூர் ககனநா டுமக்குண் டென்றான்.

(இ-ள்.) அவர்கள்-அந்த மகள்மகார், அதிசயித்து-[பாட்டனரைக் காண நேர்ந்தமைக்கு] ஆச்சரியமடைந்து, போற்றி-அவரைத் துதித்து, அறம் பவம்-தருமம் பாவம், சுவர்க்கம் கும்பி-சுவர்க்கம் நரகம், உதரம் கொள் கரு உற்பத்தி-வயிற்றில் ஜனிக்கும் கருவினுடைய தோற்றம் வளர்ச்சி, உரைசெய் ஆசிரமம் நான்கு-சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற நான்கு ஆச்சிரம நிலைகள், இவ் விதமெலாம்-இவற்றின் பாகுபாடுகளெல்லாம், வினவி-[தங்களுக்குச் சொல்லும்படி] கேட்டு, வேந்தன்-யயாதி, விளம்பிட-பரக்கச் சொல்ல, தெளிந்து-தெளிவாக அவற்றைப் பற்றித் தெரிந்துகொண்டு, (பின்னர்), மேலாங்கதி-மேலான சுவர்க்கலோகம், எமக்கு உளதோ-எங்களுக்கு உண்டோ! (கிடைக்குமோ) என்றூர்–என்று வினவினர்கள்: [அதற்குப் பாட்டனராகிய யயாதி], உமக்கு-உங்கள் நால்வர்க்கும், ககனநாடு-சுவர்க்கலோகம், உண்டு என்றான்-கிடைப்பது நிச்சயம் என்றான்; (எ-று.)

அறம்-பவம் (பாவம்); சுவர்க்கம்-கும்பி (நரகம்)-ஒன்றற் கொன்று மாறுபட்டவை. கருவுற்பத்தி - கருப்பந்தரித்தல்

ஆசிரமம் நான்கு-பெரும்பாலும் த்விஜர்களுக்கென ஏற்பட்டுள்ள பிரமசரியம், கிருஹஸ்தம், வானப்ரஸ்தம், சந்நியாசம் என்ற நான்கு நிலைகள். (த்விஜர்-இரு பிறப்பாளர்: இவர் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர்).

இனி, "இவ்விதமெலாம் வினவி" என்றவிடத்து அறிய வேண்டிய முக்கிய சாரம் பின் வருமாறு:—

அறம்—ஆத்மாவினுடைய ஹிதத்திலேயே ஊக்கத்துடனிருப்பது. வித்தையினாலும், தவத்தினாலும், பிறப்பினாலும் நிர்ணயிக்கப்பட்டு அவற்றில் மேற்பட்டவன் பூஜ்யனாகிறான்.

பாவம்—நல்ல கர்மங்களுக்கு விரோதி: இழிவான லோகத்திற்குக் காரணமாவது; சாதாரணமாகப் பணிவில்லாதவனிடம் காணப்படுவது. அயோக்கியர்களிடம் காணப்படும் இந்தப் பாவத்தைச் சாதுக்கள் ஒத்துக்கொள்வதில்லை; இந்தப் பாவபயத்தைப் போக்குகின்றவை நான்கு கருமங்கள். அவை—அக்னி ஹோத்ரம், மௌனம் (அதாவது இந்திரிய நிக்ரகம்), வேத மோதுதல், யாகஞ் செய்தல் என்பன.

சுவர்க்கம்—தவம், தானம், இந்திரியங்களை யடக்குதல், மனத்தைச் செயித்தல், நாணம், உள்ளும் புறமும் ஒத்திருத்தல், எல்லாப் பிராணிகளிடத்தும் தயை ஆகிய இந்த ஏழும் மனிதர்களுக்குச் சுவர்க்கலோகத்தின் பெரிய வாயில்கள் என்ப.

கும்பி-நரகம்:—புண்ணியம் போனபின் நரகம் சித்திக்கும்: அவர்கள் கழுகுகள், நரிகள் இவற்றின் கூட்டங்களுக்கு உணவாக ஆகும்படி பல பிறவிகளெடுப்பர்.

கருவுற்பத்தி :-"புஷ்பங்களையும் பழங்களையும் உண்பதனாலுண்டான ரத்தமானது புருஷவீரியமாக மாறுகிறது. அது புருஷனால் விடப்பட்டு ஸ்திரீயின் சோணிதத்தைச் சேருகின்றது. அஃது அவ்விடத்தில் கர்ப்பமாகப் பரிணமிக்கிறது. ஜீவன்கள் ஐம்பூதங்களில் அக்னியைத் தவிர ஏனைய பிருதிவி, அப்பு, வாயு, ஆகாசம் இவைகளையும் மரங்களையும் பூண்டுகளையும் அடைந்த பிறகு நான்கு கால்களுள்ளவைகளும் இரண்டு கால்களுள்ளவைகளுமான பிராணிகளெல்லாவற்றையும் அடைந்து கர்ப்பங்களில் சேருகின்றன". மற்றும் "பூக்களிலிருந்தும் காய்களிலிருந்தும் வந்த வீரியத்தை ஸ்திரீயின் ருதுகாலத்தில் கர்ப்பவாயு கர்ப்பாசயத்தில் கொண்டு வந்து விடுகிறது. அந்தக் கர்ப்பத்தில் அந்த

வாயு அந்த வீரியத்தின் சூட்சும அவயவங்களில் பிரவேசித்து நாளடைவில் கர்ப்பத்தை விருத்தியாகச் செய்கிறது."

நான்கு ஆசிரம நிலைகள்:—

பிரமசரியம்—இதனை மேற்கொண்டவன் பிரமசாரி: இவனுக்கான அம்சங்கள்:—உபாத்தியாயர் அழைத்த பின் அத்தியயனஞ் செய்யவேண்டும்; குருவின் காரியங்களை ஏவாமற்செய்யவேண்டும்; முன் எழுந்திருந்து பின் படுக்கவேண்டும்: பணிவுள்ளவனாய், இந்திரியங்களை யடக்கினவனாய், திருப்தியுள்ளவனாய், ஊக்கமுள்ளவனாய் ஒதுவதை விடாதவனுமாய் இருத்தல் வேண்டும்.

கிரஹஸ்தம்:—இதனை மேற்கொண்டவன் கிரஹஸ்தன். இவன் இல்லறத்தான். தர்மத்தினால் கிடைத்த தனத்தைப் பெற்றுக் கொண்டு எப்போதும் யாகமும் தானமும் செய்யக்கடவன்: விருந்தினர்களை உபசரிக்கக் கடவன்; பிறர் கொடாததை எடுத்துக் கொள்ளாமலிருக்கக்கடவன்.

வானப்பிரஸ்தம்:—இதனை மேற்கொண்டவன் வனத்தில் வசிக்கும் முனி. இவன் தன் சக்தியினால் ஜீவிப்பவன்: பாப காரியத்தை விட்டு நீங்கினவன்: பிறரைப் பீடிக்காதவன்; ஆகாரத்தையும் வியவகாரத்தையும் அடக்கினவன். இவன் மேலான ஸித்தியை அடைகிறான்,

சந்நியாசம்:—இதனை மேற்கொண்டவன் சந்நியாசி. தொழிலால் ஜீவிக்காதவன்: குணங்கள் நிரம்பினவன்: எப்போதும் இந்திரியங்களை ஜயித்தவன்: எல்லாவற்றையும் விட்டவன்: வீட்டில் படுக்காதவன்: கையில் ஒன்றுமில்லாதவன்: செய்கைகள் குறைந்தவன்: தனியாகத் தேசங்களில் சஞ்சரிப்பவன்.

அறம்பவம் சுவர்க்கம் கும்பிகருவுற்பத்தியாசிரமம் (இவ்விதமெலாம்)-உம்மை தொக்கு வந்தது. ஆசிரமம் நான்கு-தொகைச் சொல் பெற்று வந்தது. (31)

32. யயாதி தௌஹித்திரர்களோடு சுவர்க்கம் அடைதல்.

ஆயவர் மகிழ்ந்தார் மன்ன னவரொடுஞ்
சுவர்க்கஞ் சின்னாட்
போயபி னடைந்தார் நல்லோர்
புணர்ப்புண்டேல் முடியா துண்டோ?
தேயமன் னவவென் றுய்ந்தோன்
தெரிப்பவேந் தியயாதி மைந்த
னுயவன் செயலு மற்று
மருளென வவனுஞ் சொல்வான்.

(இ-ள்). ஆயவர்-அந்தத் தௌஹித்திரர்கள், மகிழ்ந்தார்-சந்தோஷப்பட்டார்கள்: சின்னாள் போய பின்-சில நாட்கள்கழிந்த பின்பு, மன்னனவரொடும்-யயாதி மன்னவரோடும் (ஒருசேர), சுவர்க்கம் அடைந்தார்—; (எனவே) நல்லோர் புணர்ப்புண்டேல்-சாதுக்கள் தொடர்பு ஏற்பட்டால், முடியாது உண்டோ-முடியாததும் உளதோ? (சுவர்க்கமும் சித்திக்கும்): தேய மன்னவ!-தேசத்தையாளும் ஜனமேஜயனே! என்று—, ஆய்ந்தோன்-வைசம்பாயனன், தெரிப்ப-தெரிவிக்க, வேந்து-அந்த ஜனமேஜய மன்னவன், யயாதி மைந்தனுயவன் செயலும்-யயாதியின் ஈற்றுப் புதல்வனுகிய பூருவின் செய்கைகளையும், மற்றும்-மேலும், அருள் என-சொல்வீராக என்று கேட்க, அவனும்-அந்த வைசம்பாயனனும், சொல்வான்-சொல்லத் தொடங்கினன்; (எ-று).—என மேல் சருக்கத்திற்குத் தோற்றுவாய் செய்தபடி.

சுவர்க்கத்தினின்றும் இந்திரனல் தள்ளப்பட்ட யயாதி சாதுக்களுடன் சேர்க்கை கிடைத்தபின் மறுபடியும் சுவர்க்கமடைந்தான் என்ற சிறப்புப் பொருளை "நல்லோர் புணர்ப்புண்டேல் முடியாதுண்டோ?" என்ற பொதுப் பொருள் கொண்டு சமர்த்தித்தது-வேற்றுப் பொருள் வைப்பணி. வேந்தியயாதி-குற்றியலிகரம் அலகு பெறவில்லை. முடியாதுண்டோ-முடியாததுண்டோ என்பதன் சிதைவு. (32)

சந்திரவங்கிசம் யயாதிச் சருக்கம் முற்றிற்று.

பத்தாவது

துட்டியந்தச் சருக்கம்

துட்டியந்தனது செய்தியைத் தெரிவிக்கும் சருக்கமென்பது பொருள். துட்டியந்தன் என்பவன் ஈலினனுக்கு ரதந்தரீயென்ப வளிடம் பிறந்தவன். துஷ்யந்தன்—துட்டியந்தன். இச்சருக்கத்து முதல் ஏழு கவிகளில் பூருவின் வமிசத்தைச் சொல்லி அதனில் வந்தவன் துட்டியந்தன் என்பது எடுத்துக் காட்டப்படுகிறது. பின்னர் இருபத்து நான்கு செய்யுட்களில் துட்டியந்தன் வரலாறு கூறப்படுகிறது.

வேறு

1. பூரு சனமேசயன் என்பவனைப் பெறுதல்.

சுவர்க்க மேவிய யயாதிதந் தருள்சுதன் பூரு
உவர்க்க டற்புவி யொருகுடை நீழலி லோம்பித்
தவர்க்கி ராமனுந் தளர்சென மேசெயன் றன்னைத்
துவர்க்க டுக்கும்வாய் கவுசலை தோகைவேட் டளித்தான்.

(இ-ள்.) சுவர்க்கம் மேவிய-சுவர்க்கத்தை யடைந்த, யயாதி—, தந்தருள்-பெற்ற, சுதன் பூரு-கடைசி புத்திரனுகிய பூரு, உவர் கடல் புவி-உப்புச் சமுத்திரத்தாற் சூழப்பட்ட பூவுலகத்தை, ஒரு குடை நீழலில் ஓம்பி-தன் ஒற்றை வெண்கொற்றக் குடையின்கீழ்த் தங்கும்படி பாதுகாத்து, தவர்க்கு-வில்லுக்கு, இராமனும்-தசரத இராமனும், தளர்-தளர்ந்து போவன் என்று சொல்லும்படி வில்லில் வல்லவனை, சனமேசயன் தன்னை-ஜனமேஜயன் என்ற புத்திரனை, துவர் கடுக்கும் வாய்-பவளத்தையொத்த சிவந்த வாயினையுடைய, தோகை கவுசலை-மயில் போன்ற சாயலைக் கொண்ட கௌசலையென்பவளை, வேட்டு-மணஞ் செய்துகொண்டு, அளித்தான்-பெற்றெடுத்தான்; (எ-று).

ஒரு குடை நீழலில் ஓம்பி-ஏகசக்ராதிபதி என்று குறித்தற்கு. தவர்-வில், "வில்லுக்கு ராமன்" என்பது பழமொழி. அதாவது விற்றொழிலில் வல்லவன் கோதண்டபாணியாகிய இராமனே என்பது: 'வல்வில் இராமன்' என்பதும் இது பற்றியே. அவனும் தளர்வன் என்றதால் ஜனமேஜயன் வில்லில் மிக வல்லவன் என்று அவன் புகழ் கிளந்தபடி. துவர்-பவளம். கடுக்கும்-ஒத்திருக்கும். ['கடுப்ப'—உவமவுருபு]. தோகை-உவமவாகுபெயர்.

இது முதல் ஏழுகவிகள்-முதற்சிரும் ஐந்தாஞ்சிரும் மாச்சிராய், ஏனைய இடை நின்ற மூன்று சீர்களும் பெரும்பாலும் விளச்சிராய் வந்த கலித்துறை. (1)

2—7. ஆறு கவிகள்—ஜெனமேஜயன் வம்ச வரலாறு துட்டியந்தன்வரை கூறும்.

2. அஹம்யாதி என்பவன்வரை கூறும்.

மற்ற வன்னெழில் சுநந்தையை வரைந்தணைந் தவள்பாற்
பெற்றி டும்பிராசீன் வானனுஞ் சத்தமா லினிப்பேர்
பற்றுரு விடைப் பாற்சய் யாதியைப் பயந்தான்
பெற்ற மைந்தனும் பானுமா மதிதனைத் தோய்ந்தே.

(இ-ள்.) அவன்-அச்சனமேஜயன், எழில்-அழகு பொருந்திய, சுநந்தையை-(மகத தேசத்து ராஜாவின் பெண்ணகிய) சுநந்தை யென்பவளை, வரைந்து-மணந்து, அணைந்து-சேர்ந்து, அவள்பால்-அவளிடத்து, பெற்றிடும்-ஈன்றெடுத்த, பிராசன்வானனும்-பிராசின்வான் என்பவனும், சத்தமாலினிப் பேர்-சப்தமாலினி என்ற பெயரைக் கொண்டவளாய், பற்று உரு இடை பால்-னகையால் பற்றுதற்கும் உருதபடி மிகவும் நுண்ணிய இடையை யுடையவளாகியவளிடத்து, சய்யாதியை-சையாதி என்ற மகனை, பயந்தான்-பெற்றான்; பெற்ற-அந்த சையாதி பெற்ற, மைந்தனும-அஹம்யாதி என்பவனும், பானுமதிதனை-(கிருதவீரியன் பெண் ணை) பானுமதியென்பவளை, (மணந்து) தோய்ந்தே-அவளைச் சேர்ந்து; (எ-று).—"சார்வபூமனை உயிர்த்தனன்" என மேற்கவி யோடு தொடரும்.

"பிராசின்வான்" என்பது பிராசின்வானன் என வந்துள்ளது. இந்த இடத்தில் 'பிராசனனும்' என்று ஏட்டில் பாடம். கிழக்குத் திசைக்கு 'பிராசி, பிராச்யதிசை' எனப் பெயர். இந்த அரசன் சூரியன் உதயமாகின்ற இடம் வரையில் கிழக்குத் திக்கை ஜயித்தான். எனவே "பிராசின்வான்" என்று பெயர். இவன் யது வம்சத்தில் பிறந்தவளாகிய ஆச்மகி என்பவளை மணம் புரிந்தான். இந்த "ஆச்மகி" என்றவளைத்தான் இங்கே "சத்தமாலினி" என்று குறிப்பிட்டுள்ளார். [மாலினி-பார்வதிக்குப் பெயர்]. உத்தம மாதர்க்கு இடை நுண்ணிதாயிருத்தல் லட்சணம். 'சையாதி'

என்பது 'சய்யாதி' என முதற்போலி பெற்று வந்தது. இந்தச் சையாதி திரிசங்குவின் பெண்ணை வராங்கி யென்பவளை மணந்து அஹம்யாதி என்ற புத்திரனைப் பெற்றான். அந்த அஹம்யாதி பானுமதியை மணந்தான் என விவரம் அறிக. இந்தப் பானுமதிக் குப்பிறந்தவன் சார்வபௌமன் என மேலைக்கவியிற் றொடரும். இங்ஙனிருப்பவே, ஈற்றடியில் ''சொற்ற மைந்தனும்''என ஏட்டில் காணும் பாடம் பொருந்தாது. மற்றும் முதலடியில் 'சுநந்தையை' என்றவிடத்து 'நந்தையை' என்று ஏட்டில் பாடம்: இதனை முதற் குறை எனக் கொளல் வேண்டும். (2)

3. அபராசீனன் என்பவன்வரை கூறும்.

சார்வ பூமனை யுயிர்த்தனன் சாற்றுமத் தனயன்
ஆர்வ மோடெழிற் சுந்தரைக்கீன் றருட்சய சேனன்
கார்வ ருங்குழற் சுசுரவைக் கன்னிபா லனங்க
னேர்வ ராச்சுர வீடண னிருபனை நேர்ந்தான்.

(இ-ள்.) [அஹம்யாதி] சார்வபூமனை-ஸார்வபௌமன் என்ற புத்திரனை, உயிர்த்தனன்-பெற்றனன்: சாற்றும்-சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, அ தனயன்-அந்தப் புத்திரன், ஆர்வமோடு-காதலோடு கூடி, எழில் சுந்தரைக்கு ஈன்றருள்-அழகு பொருந்திய சுந்தரையென்பவளுக்குப் பெற்றுக் கொடுத்த, சயசேனன்-ஜயத் ஸேனன் என்பவன், கார் வரும் குழல்-மேகம் போன்ற கரிய கூந்தலையுடைய, சுசுரவை கன்னிபால்-ஸுஸ்ரவையென்ற பெண்ணினிடத்து (அவளை மணந்து), அனங்கன் நேர்-மன்மதனை யொத்தவனும், வர ஆச்சுர வீடணன் (நேர்)-அரக்கர்களுக்குள் ளேயே சிரேஷ்டனான வீபீடணனை யொத்தவனும் ஆகிய, நிருபனை-அரசனுகிய அபராசீனன் என்பவனை, நேர்ந்தான்-பெற் றெடுத்தான்; (எ-று).

அஹம்யாதி பானுமதியிடத்துப் பெற்ற சார்வபௌமன் கேகயத்தரசன் பெண்ணை சுந்தரை என்பவளை ஐயித்துக் கொண்டு வந்து மணஞ் செய்து கொண்டானுதலின், அவளிடம் பிறந்த பிள்ளைக்கு ஜயத்ஸேனன் என்று பேரிட்டான்; இந்த ஜயத்ஸேனன் விதர்ப்ப ராஜாவின் பெண்ணுகிய ஸுஸ்ரவை என்பவளை விவாகஞ் செய்து கொண்டு, அவளிடம் அபராசீனன் என்ற புதல்வனைப் பெற்றான் என்பது அறியவேண்டிய விவரம்.

இந்த அபராசீனன் மன்மதனையும், தர்மாத்மாவாகிய விபீடணனை யும் ஒத்தவன் என்று அவன் மேன்மை கிளந்தபடி. (அபராசீனன்-அபராசிதன் என்பதனை நினைப்பூட்டுகின்றது). வரன்-சிரேஷ்டன்: அசுரன் = அரக்கன். வர + அசுர = வராசுர: தீர்க்கசந்தி பெற்ற வடமொழித்தொடர். அஃது 'வராச்சுர' என மிக்கு வந்தது. நேர்தல்-பெற்றுக்கொடுத்தல் என்ற பொருளில் வந்துள்ளது. இனி, 'சுந்தரை' என்றவிடத்து 'சுனந்தை' என்றும், 'சுசுரவை' என்றவிடத்து 'சுபத்திரை' என்றும் ஏட்டில் பாடம். (3)

4. தேவாதிதி (தேவாபி) என்பவன்வரை கூறும்.

ஏனை யோன்மரி யாதைவேட் டரிஹனீன் பவுமன்
சேனை பாற்றருந் திறனயு தாஞயி செவ்வாய்
மானை நேர்விழி வசுமதிக் குயிர்த்தவக் குரோதன்
தானை சேர்கருந் துவைக்குதே வாபியைத் தந்தான்.

(இ-ள்). ஏனையோன்-அந்த அபராசீனன், மரியாதை வேட்டு-(மற்றொரு விதர்ப்பராஜனின் புத்திரியாகிய) மரியாதை யென்ப வளை மணந்து, அரிஹன் ஈன் பவுமன்-அரிஹன் என்ற பிள்ளை யைப்பெற அவன் மூலம் பெற்ற மகாபௌமன் என்ற பேரன், சேனைபால் தரும்-(பிரசேனஜித் என்பவரின் பெண்ணாகிய) ஸுயஜ்ஞையிடம் பெற்றெடுத்துத் தந்த, திறன்-வலிமை மிக்க, அயுதாஞயி-அயுதாநாயி என்பவன், செவ் வாய்-சிவந்த வாயினை யும், மானை நேர் விழி-மான் போன்ற கண்களையும் உடைய, வசுமதிக்கு-[பூமிபோல் பொறுமை மிக்க] பாஸை என்றவளுக்கு, உயிர்த்த-பெற்றுக் கொடுத்த, அக்குரோதன்-அக்குரோதனன் என்ற பிள்ளை, தானை சேர்-புடவைகட்டிய, கருந் துவைக்கு-கருப்புக்கட்டிக்கு ('கண்டு' என்ற பெயரையுடையவளுக்கு என்ற படி), தேவாபியை-தேவாதிதி என்பவனை, தந்தான்-பெற்றுக் கொடுத்தான்; (எ-று).

அபராசீனன் என்பவன் மரியாதை என்பவளை மணந்து, அவளிடம் அரிஹன் என்ற மகனைப் பெற்றான். அந்த அரிஹன் அங்கதேசத்தரசன் பெண்ணை மணந்து மஹாபௌமன் என்ற பிள்ளையைப் பெற்றான். மஹாபௌமன் பிரஸேனஜித்தின் பெண்ணாகிய ஸுயஜ்ஞை என்பவளை மணந்து அயுதாநாயி என்பவனைப் பெற்றான். அயுதாநாயி ப்ருதுசிரவசின் பெண்

ணுகிய பாலை என்பவளை மணந்து அவளிடம் அக்குரோதனன் என்னும் மகனைப்பெற்றான்: அக்குரோதனன் கலிங்கராஜன் பெண்ணுகிய "கண்டு" என்பவளை மணந்து தேவாதிதி என்ற மகனைப்பெற்றான் என்பது ஈண்டு அறியவேண்டிய விவரம்: தேவ + அதிதி = தேவாதிதி. இதனைத் "தேவாபி" எனச் சிதைத்தபடி.

'அயுதாநாயி' என்ற பெயருக்குப் பதினாயிரம் பேரைக் கொண்டு வந்தவன் என்பது பதப்பொருள்: (அயுதம்=பதினாயிரம்; ஆநாயி—கொண்டுவந்தவன்). இவன் புருஷமேதம் என்ற ஈரயாகத்திற்காகப் பதினாயிரம் மனிதர்களைக் கொண்டுவந்தான். அதனால் இந்தப் பெயர் பெற்றான். இரண்டாமடியில் வந்துள்ள 'சேனை' என்பது 'ஸேனஜ்ஞை' என்பதன் சிதைவு; வசுமதி என்பதற்குப் பதிலாக முதனூலில் பாலை என்பவள் சொல்லப் பட்டிருப்பதால், அங்ஙனமே அவள் பெயரைக்கொண்டு, பூமி போல் பொறையுடையவள் என்று பொருள் செய்தபடி இங்கு. (வசுமதி-பூமி). அஃதேபோல் அக்குரோதனன் மனைவியின் பெயர் "கண்டு" என்பது. இச்சொல் 'கற்கண்டு' என்ற பொருளில் வந்து 'கருப்புக்கட்டி, கருப்பட்டி எனவும் வரும் ஈண்டு, அது, கருந்துவை' என வந்துளது. (கரும்பு துவைத்துப் பிழிதலால் சாறு வர, அதனால் 'கண்டு' செய்யப்படுவது சகஜம்). இந்தக் கரும்புக் கண்டிலிருந்து ஸ்திரீயாகிய கண்டினை வேறு பிரித்துக் காட்ட "தானை சேர்" என்ற அடைகொடுத்துக் கூறப்பட்டுளது. தானை-ஆடை, சேலை, புடவை: "புடவை கட்டிய கருந்துவை" என்று, "கண்டு" என்ற பெண்ணைக் கூறியிருத்தலால் இது இலக்கணையின் பாற்படும்: [குருதிக்கோட்டுக் குஞ்சரநகரம் என்று அத்தினபுரியைக் குறித்தல் பாலக் கொள்க]. "தானைசேர்" என்ற அடைமொழி கொடுத்திருத்தலால், இது "பறவாக் கொக்கு, பாயா வேங்கை" என்பன போலப் பிறகுறிப்பின்பாற் படும்: வெளிப்படை என்னவுமாம்.

இனி ,ஏட்டில், முதலடி, "ஏனையோன் மரியாதை வேட்டோன் றிடும் பவுமன்" என்று காண்கிறது. இஃது பொருந்தாது. ஏனெனில் முதனூலின்படி நோக்கின், "பவுமன்" என்பவன் மரியாதை என்பவளின் பேரனேயன்றிப் பிள்ளையன்று. எனவே, முதலடி செப்பஞ்செய்தபடி காண்க. அஃதேபோல் இரண்டா மடியில் 'அயுதானியன்' என்று ஏட்டிலிருப்பதை 'அயுதாநயி' என்றே சிதைக்காமல் கொண்டாலும் இழுக்கின்று. (4)

5– மதிநாரன் என்பவன்வரை கூறும்.

துரிசி லச்சுதன் திதிமரி யாதையைத் தோய்ந்தே
உரிச கன்றனை யுயிர்த்தன னுரைத்தவக் குமரன்
அரிச கன்றனைத் தேவைபா லீந்தன னவனும்
வருசு வாலிதோய்ந் துயர்மதி வான்றனைப் பயந்தான்.

(இ-ள்). துரிசில்-குற்றமற்ற, அ சுதன் திதி-அந்தத் தேவாதிதி என்ற குமாரன், மரியாதையை-(விதர்ப்ப ராஜாவின் பெண் ணுகிய) மரியாதை யென்பவளை, தோய்ந்து-மணந்து கூடி, உரிசகன்தனை-ரிசன் என்ற மகனை, உயிர்த்தனன்-பெற்றனன்: உரைத்த அ குமரன்-சொல்லப்பட்ட அந்தக் குமாரன், அரிசகன் தனை–ரிக்ஷன் என்ற மகனை, தேவைபால்-(அங்கராஜன் பெண் ணுகிய) வாமதேவியினிடத்தில், ஈந்தனன்-பெற்றான்; அவனும்-அந்த ரிக்ஷனும், வரு சுவாலி தோய்ந்து-(தக்ஷகன் பெண்ணுகி) வந்த ஜ்வலந்தி யென்பவளை மணந்து கூடி, உயர்-சிறந்த, மதிவான் தனை-மதிநாரன் எனப்படும் புத்திரனை, பயந்தான்-பெற்றெடுத் தான்; (எ-று).

துதி-தேவாதிதி என்பதன் நாமைகதேசம். அங்ஙனமே தேவை-வாமதேவி என்பதன் நாமைகதேசம்: தேவி என்பதைத் தேவை எனவும், ஜ்வலந்தி என்பதைச் சுவாலி எனவும் திரித்த படி. உரிசகன்-ரிசன்: க-பிரத்யயம்; அரிசகன் என்பதிலும் அஃதே. அரிசகன்-ரிக்ஷன், இந்த ரிக்ஷன் மகன் பெயர் 'மதிவான்' என்று கூறப்பட்டுள்ளது செய்யுளில். இவனை மதிநாரன் என்றும், அந்தியநாரன் என்றும் வழங்குவர். (5)

6. மதிநாரனைச் சரசுவதிதேவியே பர்த்தாவாக வரித்தமை.

அந்த மன்னவ னணிசர சுவதியாற் றணியின்
வந்து சத்திரப் பெயர்மகந் துவாதச வருட
முந்த செய்பொழு தந்நதி மயலடைந் துருவஞ்
செந்தி ருக்கிணை யாகியச் செம்மலைச் சேர்ந்தாள்.

(இ-ள்). அந்த மன்னவன்-அந்த அரசனுகிய மதிநாரன், அணி-அழகுபெற்ற, சரசுவதியாற்றணியின் வந்து-சரசுவதி நதிக் கரைக்கு வந்து, சத்திரப் பெயர் மகம்-சத்ர யாகத்தை, துவாதச

வருடம் உந்த-பன்னிரண்டு வருஷங்கள் கடக்க, செய்பொழுது-செய்கின்ற சமயத்தில் (யாகஸமாப்தி காலத்தில்), அ நதி–அந்தச் சரசுவதி நதியாகிய தேவி, மயல் அடைந்து-காம மயக்கங் கொண்டு, உருவம் செந் திருவுக்கு இணையாகி-தன் மேனி உருவம் செந்நிறமான இலக்குமிதேவிக்கு நிகராகும்படி செய்து, அ செம்மலி சேர்ந்தாள்-அந்த அரசனைக் கூடினாள்; (எ-று.)

சரசுவதி தேவியின் இயற்கை நிறம் வெண்மை. அவள் இலக்குமிபோல் செந்நிறத்தை மேற்கொண்டாள் என்றது மதிநாரனை வசீகரிப்பதற்கு என்க. (6)

7. துஷ்யந்தன் பிறப்புக் கூறும்.

அணங்கி னெய்துமந் நதியைவேந் தணைந்தவ ணுயிர்த்த
இணங்கு றுந்திட னகாளிந்திக் கின்றரு ணீலன்
வணங்கு நுண்மருங் கிரதந்தை மாதினுக் கினிய
குணங்கொ டுட்டியந் தப்பெயர்க் குமரனைக் கொடுத்தான்.

(இ-ள்). அணங்கின்-இலக்குமி போலே, எய்தும்-வருகின்ற, அந்நதியை-அந்தச் சரசுவதி நதிதேவியை, வேந்து-மன்னனாகிய மதிநாரன், அணைந்து-கூடி, அவண்-அவ்விடத்து, உயிர்த்த-பெற்றெடுத்த, இணங்குறும்-பொருத்தமுறுகின்ற, திடன்-திரஸ்நு என்பவன், அ காளிந்திக்கு-அந்தச் சிறந்த காளிந்தியென்பவளிடத்தில், ஈன்றருள்-பெற்ற, நீலன்-இலிலன் என்பவன், வணங்கு நுண் மருங்கு-துவளுகின்ற நுண்ணிய இடையையுடைய, இரதந்தை மாதினுக்கு-ரதந்தரி என்ற பெண்ணினிடத்து, இனிய குணங்கொள்-இனிய நல்ல பண்புகளைக் கொண்டுள்ள, துட்டியந்தப் பெயர்க் குமரனை-துஷ்யந்தன் என்ற பெயரையுடைய புதல்வனை, கொடுத்தான்-பெற்றெடுத்தான்; (எ-று).

திடன்-திரஸ்நு என்ற பெயர் திரிந்து இங்ஙனமாயிற்று. இவனுக்குத் "தம்ஸு" என்னும் பெயருமுண்டு. இது போலவே, நீலன்-இலிலன் என்றதன் திரிபு. ஈலினன் என்றும் வழங்குவர். இரதந்தை-ரதந்தரீ என்ற பெயர் திரிந்து இங்ஙனமாயிற்று. துஷ்யந்தன்-துட்டியந்தனமாயிற்று.

சரஸ்வதி மதிநாரனுக்கு (அந்தியநாரனுக்கு என்னவுமாம்) திரஸ்நு (திடன்) என்னும் புத்திரனைப் பெற்றாள். திரஸ்நு காளிந்தியென்பவளிடத்தில் இலிலன் (நீலன்) என்னும் புத்திரனை

யுண்டாக்கினன் என்பது முன்னிரண்டடிகளில் கூறிய விவரம். இந்த இலிலன் ரதந்தரி (இரதந்தை) யென்பவளிடம் **துஷ்யந்தன்** என்ற மூத்த புத்திரனைப் பெற்றெடுத்தான். [துஷ்யந்தனுக்கு உடன்பிறந்தோராக-சூரன், பீமன், ப்ரவஸு, வஸு என்பவர் தோன்றினர்]. துஷ்யந்தன் பகீரதன் பெண்ணாகிய லக்ஷ்மீ (லாஷி என்றும் கூறுவர்) யென்பவளை மணந்து அவளிடம் ஜனமேஜயன் என்ற புத்திரனைப் பெற்றான். பின்னர், அந்தத் துஷ்யந்தனே விசுவாமித்திரருக்கும் மேனகைக்கும் பிறந்த பெண்ணை சகுந்தலை யென்பவளை விவாஹம் செய்து கொள்ள அவர்களுக்குப் பரதன் பிறந்தான். அவனிடமிருந்துதான் பரத வம்சத்திற்குப் பெருங்கீர்த்தி ஆரம்பித்தது. [பரதன் அசுரரை வென்று சுரரைத் தேவலோகத்தில் நிலைநாட்டினன். இங்ஙன் பெருவீரனாக இருந்ததனால்தான் இவன் வம்சத்தவர் பாரதர் என்றும், அவர்கள் செய்த போர் பாரதப் போர் என்றும் கூறப் பட்டது. அசரீரவாணி துஷ்யந்தனுக்கு "நீ இவனைப் பரிக்க வேண்டும்" என்று சொன்னதனால், இவனுக்குப் பரத னென்று பெயர் வந்தது.] இவை ஈண்டு அறியவேண்டிய விவரங்கள்.

கொள்+துட்டியந்தன்—கொடுட்டியந்தன்; "ணளமுன்டண வும்.....ஆகுந் தநக்கள் ஆயுங்காலே" என்பது விதி. (நன்: மெய்யீற்றுப்: சூ. 34). (7)

வேறு

8. துட்டியந்தன் வேட்டையாடிக் களைப்புத்தீர்தல்.

இயம்பியவக் குமரன்கைத் தலங்கொண் டோங்கல்
எறிந்தெவரும் அதிசயிப்ப விரைக்கு மாழி
வயம்படுமிப் புவியொருவெண் குடைக்கீ ழோம்பி
வருநாளி லொருநாளொண் மணிகொள் திண்டேர்
கயம்பரியா ளுழையருட னியங்க ளார்ப்பக்
கானகம்போய் வேட்டைமிகக் களிப்புற் றூடி
அயம்விடுத்தோ டுழைத்தோடு முழைத்தொ டர்ந்தே
அயர்ந்தருகே பகீரதிதோய்ந் தணங்கு தீர்ந்தான்.

(இ-ள்.) இயம்பிய அ குமரன்-மேலே சொன்ன அந்தத்

துட்டியந்தன், கைத்தலங் கொண்டு-தனது கைகளைக்கொண்டு, ஓங்கல்-பெரிய மலைகளை, எவரும் அதிசயிப்ப-எல்லாரும் ஆச்சரியமுற, எறிந்து-எடுத்து எறிந்திட்டு, இரைக்கும் ஆழி வயம்படும் இப்புவி-சப்திக்கின்ற கடலால் சூழப்பட்டு அதன் வசப்பட்டுள்ள இந்தப் பூவுலகை, ஒரு வெண்குடைக் கீழ் ஓம்பி-(ஏக சக்கராதிபதியாக] ஒரு அரசாட்சியின் கீழேயே பாதுகாத்து, வருநாளில்—, ஒரு நாள்—, ஒள் மணி கொள் திண் தேர்-ஒளி பொருந்திய மணிகள் பதித்த திண்ணிய தேர்கள், கயம்-யானைகள், பரி-குதிரைகள், ஆள்-காலாட்கள், உழையருடன்-அமைச்சர்கள் இவர்களோடே, இயங்கள் ஆர்ப்ப-வாச்சியங்கள் முழங்க, கானகம்போய்-காட்டுக்குச் சென்று, வேட்டைமிகக் களிப்புற்று ஆடி-மிருகங்களை வேட்டையாடுதலில் மிக்க மகிழ்ச்சியோடு செய்து, அயம்விடுத்து-குதிரைகளையோட்டி, ஓடு-[மிருகங்களைத் தொடர்ந்து] ஓடுதலாலே, உழைத்து-மிகவும் பிரயாசைப்பட்டு, (பின்) ஓடு உழை தொடர்ந்தே-(அங்கே) ஓடிய ஒரு மானைத் தொடர்ந்து சென்று, அயர்ந்து-களைப்படைந்து, அருகே-பக்கத்தில் ஓடிய, பகீரதி-கங்கா நதியில், தோய்ந்து-படிந்து நீராடி, அணங்கு-(களைப்பாலுண்டாய) வருத்தம், தீர்ந்தான்-நீங்கினன்; (எ-று).

துட்டியந்தனைப் பற்றிச் சொல்லும்போது வியாசபகவான் 'அவன் மந்தர மலையைச் செடிகள் மரங்களுடன் கைகளால் தூக்கியெடுப்பான்'' என்று கூறியுள்ளார். நல்லாப்பிள்ளையும் தமது பாரதத்தில் ''இலகுறப் பெருங்கிரிகளைக் கரத்தெடுத் தெறிந்து'' என்றார். வெண்குடை-அரசாட்சியின் சின்னம். நாற்படைகளுடனும் அமைச்சர் ஒற்றர்களுடனும் வேட்டைக்குச் சென்றான் என்பது பெறவைக்கப்பட்டது. உழையர்-அருகிலிருப்பவர்: மந்திரியர் ஒற்றர் முதலிய ஏவலாளர். அயம்-குதிரை. வேகமாகக் குதிரைகளையோட்டி மிருகங்களைத் தொடர்ந்து துரத்தி வேட்டையாடுதல் மரபு. உழை-மான். மானைப் பிடிப்பதற்கு (சகுந்தலையைச் சேர்தற்கு) மானைத் துரத்தியபடி. இஃது ஓர் கவிமரபு. [அகப்பொருளிலும் ''கெடுதிவினுதல்'' என்ற துறை ஒப்பு நோக்குக,]. பகீரதி-பாகீரதியென்ற வடமொழித் தத்திதாந்த நாமத்தின் விகாரம்: பாகீரதி-பகீரதனாற் கொணரப் பெற்றதென்று பொருள்படும்.

இது முதற் பதினைந்து கவிகள்-ஒன்று, இரண்டு, ஐந்து

ஆறுஞ்சீர்கள் காய்ச்சீர்களும் மற்றையவை மாச்சீர்களுமாய் வந்த எண்சீராசிரிய விருத்தம். (8)

9. துட்டியந்தன் கண்ணுவரிருக்கைபுக்குச் சகுந்தலையைக் காணல்.

தீர்ந்தருகங் கொருபொழில்சென் றுலவி வந்தோர்
செப்பிடக்கண் ணுவமுனியா சிரம மீதென்
றேர்ந்திறைஞ்சி மீள்வலென வுழையர் தம்மை
ஒருவியவ ணுறுமுனிவ ருறையு டோறுஞ்
சார்ந்துபணிந் துரைத்தமுனி விபின மெய்தி
தந்தனைய மருங்கெனுங்கே சரியை யென்றுஞ்
சோர்ந்திடச்செய் திடுமூலியாங் கரியை மார்பிற்
சுமந்தொருபெண் ணேர்குறுகத் தோன்றல் கண்டான்.

(இ-ள்). தீர்ந்து-கனைப்புத் தீர்ந்து (துட்டியந்தன் இருப்ப) அங்கு-அப்போது அவ்விடத்து, அருகு ஒரு பொழில் சென்று-அண்மையிலே யிருந்த ஒரு சோலைக்குட்போய், உலவி வந்தோர்-சுற்றிப் பார்த்து வந்த ஏவலாளர், செப்பிட-சொல்ல, (அவர்கள் சொற்களிலிருந்து), ஈது-இங்கே யிருக்கும் இச்சோலையிடம், கண்ணுவ முனி ஆசிரமம்-கண்ணுவ முனிவரின் ஆசிரமமாகும், என்று ஓர்ந்து-என்று அறிந்து நிச்சயித்து, "இறைஞ்சி-முனிவரை வணங்கி விட்டு, மீள்வல்-திரும்பிவருவேன்", என-என்று, உழையர் தம்மை ஒருவி-உடன் வந்த ஏவலாளர் அனைவரையும் விட்டு நீங்கி, அவண்-அச்சோலையிடத்து, உறும்-பொருந்தி வசிக்கின்ற, முனிவர்-முனிவர்களின், உறையுள் தோறும் சார்ந்து-இருப்பிடங்கள்தோறும் கிட்டி, பணிந்து-(அன்னர்) திருவடிகளில் வணங்கி, (பின்பு) உரைத்த முனி-குறித்துச் சொல்லிக் காணச் சென்ற முனியாகிய கண்ணுவர், விபினம்-காட்டை, எய்தி-அடைந்திருப்ப-,—தோன்றல்-துட்டியந்தன், தந்து அனைய மருங்கு என்னும் சேரியை-நூலையொத்த நுண்ணிய இடையென்னும் சிங்கத்தை, என்றும் சோர்ந்திடச் செய்திடும்-எப்போதும் துவண்டு தளர்ந்து ஒசியும்படி செய்திடுகின்ற, மூலியாம் கரியை-கொங்கைகளாகிய யானைகளை, மார்பில் சுமந்து-தனது மார்பிடத்தே சுமந்து கொண்டு, ஒரு பெண்-ஒரு நங்கை, நேர் குறுக-தன்னை நோக்கி நேரே நெருங்கிவர, கண்டான்-பார்த்தான்; (எ-று.).

எய்தி-எய்த: எச்சத்திரிபு. தந்து-நூல்: நுண்மைக்கு எடுத்துக்காட்டு. கேசரியைக் கரி சோர்ந்திடச்செய்தல் என்றது-பருத்த கொங்கைகளின் பாரம் தாங்கமாட்டாமல் இடை துவளுவது. கொங்கைகளே யானையாக உருவகித்தல் மரபு. அதன் கோட்டை கொங்கைமுகடுகளுக்கு ஒப்புக் கூறுதலும் மரபு. (9)

10. துட்டியந்தனே அரசென அறிந்து சகுந்தலே வரவேற்க, அவன் அவளே யாவள் என வினவல்.

கண்டிவள்யா ரியாரெனவே கருதும் வேந்தை
கனங்குழையிவ் வுலகையொரு கவிகை நீழற்
கொண்டளிக்கு மரசெனவா சனந்தந் தின்சொற்
குறித்தொருதூண் மறைந்திருப்பக் குரிசின் மாதை
அண்டர்புகழ் முனிவரனெங் கெனலும் கான்பால்
அணுகினர்நா ழிகையிரண்டு ளடைவ ரென்ன
ஒண்டொடிநீ யார்தருங்கொம் பெனவத் தூயோன்
உயிர்த்தகொடி சகுந்தலைப்பே ருணர்தி யென்றுள்.

(இ-ள்.) கண்டு-பார்த்து, இவள் யார் யார் எனவே-இவள் யாராயிருப்பவள் என, கருதும் வேந்தை-ஆலோசிக்கும் அரசனை, கனங்குழை-சகுந்தலையாகிய பெண், இ உலகை-இந்தப் பூ மண்டலத்தை, ஒரு கவிகை நீழல் கொண்டு-ஒரு வெண்கொற்றக் குடையின் நிழலிலே வைத்து, அளிக்கும்-பாதுகாக்கின்ற, அரசு என-மன்னவனுகிய துட்டியந்தன் என நிச்சயித்து, ஆசனம் தந்து-அமர்ந்திடத் தவிசு அளித்து, இன்சொல் குறித்து-இனிய சொற்களைப் பேசி வரவேற்று, ஒருதூண் மறைந்திருப்ப-(நாணத்தினல்) ஒரு கம்பத்தின் அருகில் போய் மறைந்து நிற்ப, (அது கண்டு) குரிசில்-துட்டியந்தன், மாதை-சகுந்தலையை [நோக்கி], "அண்டர் புகழ் முனிவரன் எங்கு?"-தேவர்களும் புகழத்தக்க முனிச்சிரேட்டராகிய கண்ணுவர் எங்கே", எனலும்-என்று வினவலும், (அதற்கு விடையாகச் சகுந்தலை) கான்பால் அணுகினர்-(பழங்கள்கொண்டு வருவதற்காகக்) காட்டுக்குச் சென்றுள்ளார்: நாழிகை இரண்டுள் அடைவர்-இரண்டு நாழிகைக்குள் வந்து விடுவர்", என்ன-என்று சொல்ல, (துட்டியந்தன்), 'ஒண்தொடி-ஒளிபொருந்திய வளையல் களையணிந்த பெண்ணே! நீ யார் தரும் கொம்பு-நீ யாவர் மகள்?, என-என்று வினவ, (அதற்கு அவள்) அ தூயோன் உயிர்த்த

கொடி-அந்த விசுவாமித்திர முனிவன் பெற்ற பெண்ணுவேன்: சகுந்தலைப்பேர்-என் பேர் சகுந்தலை, உணர்தி-நீர் அறிந்து கொள்வீராக, என்றுள்-என்று பதிலிறுத்தாள்: (எ-று).

விருந்தினர்க்கு ஆசனமளித்து இன்சொற் கூறவேண்டுவது முறையாதலால் அவற்றைச் செய்திட்டபின், சகுந்தலை ஞாணத்தி னால் தூணருகில் மறைந்து நின்றுளென்க. பழங்கள் கொண்டு வருவதற்காகக் கான் அணுகினர் என்றது முதனூல்: யார் யார்-அடுக்குத் தொடர்: யாரி யார்-தன்னெழி மெய்ம்முன் யகரம் வர இகரம் துன்னிற்று. கனங்குழை-குழையையுடையாளுக்கு அடை யடுத்த ஆகுபெயர்: அன்மொழித்தொகையென்னவுமாம் நீழல்-நிழல் என்பதன் நீட்டல். எதிரே நிற்க வெட்கங் கொண்டு தூண் மறைவில் நின்றுள், உயிரிற் சிறந்தது ஞாணமாதலின் ஒண்டொடி-ஆகுபெயர்: அன்மொழித்தொகையுமாம். கொம்பு—கொடி—உவமையாகுபெயர்கள். தூயோன்-பரிசுத்தன்: முனிவ னான விசுவாமித்திரன் [மேனகையோடு சேர்ந்து இவளைப் பெற்ற னன். இஃது மேலைக் கவிகளாற் பெறப்படும்] 'உயிர்த்த' என்ற சொல்லாற்றலால், தூயோன் என்றது கண்ணுவரைக்காட்டாது விசுவாமித்திரனைக் காட்டிற்று. மேலை 12-ஆம் செய்யுளில் இதற்குச் சான்று காண்க. (10)

11—13, இனி. மூன்று கவிகள்—சகுந்தலை தன் சரிதை கூறுதல்.

11. கௌசிகன் தவஞ்செய்ய, அதனைக்கெடுக்க மேனகையைத் தேவேந்திரன் ஏவுதல்.

துறந்தமுனி நினைப்பயந்த செயலும் நாமந்
தோற்றியபான் மையுமெனக்குச் சொற்றி யென்ன
குறைந்தவிடை யொருவேதன் வினவ வெந்தை
கூறுபொழு துணர்ந்தபடி குறிப்பன் வேந்தே!
சிறந்தகவு சிகன்றவத்தி யதனல் வானுஞ்
செகமுமிக நொந்திடலாற் றேவர் கோமான்
நிறைந்ததவ மழியெனமே னகையை யேவ
நேரிழைசென் றொருதருவி னீழல் சேர்ந்தாள்.

(இ-ள்.) துறந்த முனி-துறவறம் மேற்கொண்ட விசுவாமித்தி ரன், நினைபயந்த செயலும்-உன்னைப் பெற்றெடுத்த செய்தியையும்,

நாமம்-சகுந்தலையென்ற பெயர், தோற்றிய பான்மையும்-உனக்கு உண்டாகிய வகையினையும், எனக்கு—, சொற்றி-சொல்லு வாயாக, என்ன-என்று (துட்டியந்தன்) கேட்க, குறைந்த இடை-தேய்ந்து நுண்ணியதாய இடையையுடைய சகுந்தலை, ஒரு வேதன் வினவ-ஒரு ரிஷி கேட்க, எந்தை-என் தந்தையாகிய கண்ணுவர், கூறுபொழுது-(அவனுக்குச்) சொல்லி வரும்போது, உணர்ந்தபடி-(நான் என் வரலாறு) தெரிந்து கொண்டபடியே, வேந்தே!—அரசரே! குறிப்பன்-உமக்குச் சொல்லுவேன்: (கேண்மின்)—சிறந்த கவுசிகன்-(முனிவர்களுட்) சிறந்த கௌசிகன் என்ற விசுவாமித்ர முனிவனின், தவத் தீ அதனால்-தவத்தில் தோன்றிய பெருந் தீயினால், வானும் செகமும் மிக நொந்திடலால்-தேவலோகமும் பூமியும் மிகவும் துன்பமுற்றதால், தேவர்கோமான்-தேவேந்திரன், மேனகையை-மேனகையென்ற அப்ஸரஸ் ஸ்திரீயை, 'நிறைந்த தவம் அழி' என ஏவ-பரிபூரணமான குறைவற்ற அவர் தவத்தை [இடையூறுகள் செய்து] விலக்கி அழிவுறச் செய்'என்று சொல்லி அனுப்ப, நேரிழை சென்று-அந்த மாது மேனகை போய், ஒரு தருவின் நீழல்-ஒரு மரத்தின் நிழலிலே, சேர்ந்தாள்-தங்கினாள்; (எ-று).

சொற்றி-முன்னிலை வினைமுற்று; சொல்-பகுதி: இ-விகுதி: த் எழுத்துப்பேறு. இடை-இடையையுடையாளுக்குச் சினையாகு பெயர். வேதன்—ரிஷி, சீடன் என்னவுமாம். எந்தை-என் தந்தை யென்பதன் மரூஉ. 'உணர்ந்தபடி குறிப்பன்' என்றதாலே தான்றேன்றியாகக் கூறுதல் பெண்டிர்க்கழகன்று என்று காட்டியபடி. கவுசிகன்-குசன் மரபினனாதலின், கௌசிகன் எனப் பட்டான். [பிரமனது புதல்வன் குசன்: அவனது புத்திரர் நால் வருட் குசநாபன் என்பவனின் மகன் காதி: காதியின் குமாரன் கௌசிகன்.] கவுசிகன்-கௌசிகன் என்பதன் விகாரம். தவம் முதலிய சிறந்த தொழில்களை மண்ணுலகத்தவர் மேற்கொள்வா ராயின், "எங்கே நமது பதவியைப் பெற்று விடுவரோ" என்ற பொறுமையினால் தேவர்கள் இடையூறு புரிவர் என்பர். கண்ணு வரை 'எந்தை'என்றதன் காரணத்தை மேலே 13-ஆஞ் செய்யுளால் அறியலாம். (11)

12. மேனகை முனிவன் மனத்தைப்பேதித்துச் சகுந்தலையைப் பெற்றுவிட்டிட்டுப் போக, முனிவனும் செல்ல, மகவைச் சகுந்தங்கள் காத்திருத்தல்.

மாதங்கங் கமழ்நறையைத் தென்றல் காட்ட
மலர்க்கணைவிட் டனங்கன்மிக மயலைப் பூட்ட
வேதங்கங் குளிர்ந்ததென முனிவ னுங்கே
எழுந்தெதிரே விழிக்கடங்கா வெழில் வாய்ந்துற்ற
பூதங்கங் குழலாளை நோக்கி மையற்
பூண்டணைந்தான் பயந்தெறிந்தப் பூவை போனள்
ஏதங்கள் அணுகாதங் கெனையத் தூயோ
னிடவருளாற் சகுந்தலைகாத் திருந்த தாலோ.

(இ-ள்). தென்றல்-வீசிய மந்தமாருதமானது, மாது அங்கம் கமழ் நறையை காட்ட-மேனகையின் உடம்பின் இயற்கை மணத்தோடு செயற்கை மணத்தையும் பரப்ப, அனங்கன்-மன்மதன், மலர்க்கணை விட்டு-புஷ்ப பாணங்களை தொடுத்து, மிக-மிகுதியாக மயலை பூட்ட-காம மயக்கத்தையுண்டாக்க, வேது அங்கம் குளிர்ந்தது என-[தவக்கனலினுலே] வெதுப்புற்றிருந்த உடம்பு குளிர்மை கொண்டு ஆறுதலடைந்தது கண்டு, (திருப்தியோடு) முனிவன்-கௌசிகன், ஆங்கே-அவ்விடத்தே, எழுந்து—, எதிரே-தனக்கு நேராக, விழிக்கு அடங்கா எழில் வாய்ந்து உற்ற-கண்ணுல் பார்த்தும் முடியாதபடி அளவு கடந்த அழகு பொருந்தி வந்துள்ள, பூதங்கு அம் குழலாளை-பூக்களைச் சூடிய அழகிய கூந்தலையுடைய மேனகையை, நோக்கி-பார்த்து, மையல்பூண்டு-மோகங்கொண்டு, அணைந்தான்-சேர்ந்தான்; (சேர்ந்தவுடன்) அ பூவை-அந்த மேனகை, [கருத்தரித்துக் குழந்தையைப்] பயந்து-பெற்றெடுத்து, எறிந்து-[ஒருபுறம்] வீசிப் போகட்டு, போனள்-(தனது அமராவதி நகரத்துக்குச்)சென்றுள்;(பின்னர்) அ தூயோன்-அந்தக் கௌசிக முனிவர், அங்கு-அந்த இடத்திலேயே, ஏதங்கள் அணுகாது எனை இட-கேடுகள் நெருங்கி வந்து நேராதபடி என்னை பத்திரப்படுத்தி வைக்க, அருளால்-கருணையாலே, சகுந்தலை-பறவைகள், காத்திருந்தது-பாதுகாத்திருந்தன; (எ-று.)—ஆல்,ஓ-அசைகள்.

தான் மேற்கொண்டு வந்த காரியம் முடிந்திட்டதென்று தாய் எறிந்து விட்டுப் போகவும் சகுந்தங்கள் அருளால் [தமது கருணையால்] காத்திருந்தன எனக் கொள்ளுதலே சிறக்கும். இனி,

"தூயோன் (தனது) அருளால் இட" என்றும், "இட தூயோனது அருளால் காத்தன" என்றும் கூட்டிக் கூறலுமாம். நறை-மணம், வாசனை. தேவ மாதர்க்கு இயற்கை மணமும் செயற்கை மணமும் உள என்று தெரிப்பதற்கு "அங்கம் கமழ் நறை" எனக் குறித்தார். அனங்கன்-அங்கமில்லாதவன்: மன்மதன் உருவிலி எனப்படுவன். மலர்க்கணை-ஐந்து பூ அம்புகள்-பஞ்சபாணம்:—முல்லை, அசோகு, தாமரை, மா, நீலம் என்பன. வேது-வெய்து, வெப்பமுற்றது; விழிக்கடங்கா-கண்ணுக்கு அளவுபடாத. பூவை-நாகண வாய்ப்புள்; அது போன்றவளுக்கு உவமவாகுபெயர்: இன்குரலுக்கு எடுத்துக் காட்டு; "ரிஷிப்பிண்டம் இராத்தங்காது" என்ப ஆதலால் "அணைந்தான் பயந்தாள்" என்றது. சகுந்தலை-பறவை: இது. நீரில் பயிலுவதாதலின், நீர்ப்புள். சகுந்த-பறவைகளினால், லாகிரஹிக்கப்பட்டவள் என்பது பதப்பொருள். ஆலோ-அதிசயப் பொருளில் வந்த குறிப்பிடைச் சொல். (12)

13. சகுந்தங்கள் காத்த மகவைக் கண்ணுவ முனிவர் கண்டெடுத்துச்சென்று சகுந்தலையென்று பேரிட்டுத் தந்தை யெனக் காத்த திறஞ்சொல்லித் தன் சரிதையை முடிக்க, மன்னவன் சகுந்தலையைக் கைப்பிடித்தல்.

அக்காலை யவ்வனத்தி னனேகர் சூழ
அடைந்திடுங்கண் ணுவமுனியா னரற்ற லேக்கித்
திக்காரென் றெடுத்தெனைமீண் டிருக்கை யெய்தி
சேர்ந்துசகுந் தலைகாத்தச் செயலி னப்பேர்
தக்காரும் புகழவழைத் தன்பி லேம்புந்
தன்மையினுற் றந்தையெனச் சாற்றி னேனென்
றிக்காரு மொழிசொலவேந் திவளைச் சேர்த
லியைபெனக்கைப் பற்றலுமா திகந்து சொல்வாள்.

(இ-ள்) அக்காலை-அப்போது, அ வனத்தின்-அந்தக்காட்டில், அநேகர் சூழ-அநேக முனிவர்கள் சூழ்ந்துவர, அடைந்திடும்-வந்து கொண்டிருந்த, கண்ணுவமுனி-கண்ணுவமுனிவர், யான் அரற்றல் நோக்கி-நான் கதறியழுவதைப்பார்த்து, 'திக்கு ஆர்' என்று எனை எடுத்து-இந்த மகவினைக் காப்பாற்றுவார்யார்" என்று என்னைத் தூக்கியெடுத்து, மீண்டு-திரும்பி, இருக்கை எய்தி-தமது ஆச்சிரமத்தையடைந்து, சேர்ந்து-உள்ளே நன்கு புகுந்து, "சகுந்தலை காத்த அ செயலின்-சகுந்தங்கள் பாதுகாத்திருந்த அந்தக்

காவலினுல், அ பேர் தக்காரும் புகழ அழைத்து-சகுந்தலே என்ற அந்தப் பெயரைத் தக்கசான்ரோர்களும் புகழும்படி (எனக்குச் சூட்டி) அழைத்து, அன்பின் ஓம்பும் தன்மையினுல்-பிரியத்தோடு போற்றி வளர்க்கும் பண்பினுல் (அம் முனிவரைத்), தந்தை எனச் சாற்றினேன்-பிதா எனச் சொன்னேன்; என்று—, இக்கு ஆரும் மொழி சொல-கருப்பஞ்சாறு போல் இனிக்கின்ற பேச்சினே யுடைய சகுந்தலே சொல்ல, (அதனைக்கேட்ட) வேந்து-துட்டியந்த ராஜன், இவளைச்சேர்தல்-இவளைக்கூடுதல், இயைபு என-பொருத்த முளதே என்று எண்ணி, கைப்பற்றலும்-(அவனது) கையைப் பிடித்தலும், மாது-சகுந்தலே, இகந்து-அவன் கைப்பிடிக்குள் அகப் படாது கடந்துநின்று, சொல்வாள்-சிலவார்த்தைகளைச் சொல்ல லானுள்; (எ-று); அவள் கூறியதை மேலேக்கவியிற் காண்க.

திக்கு - ஆதரவு, சகுந்த - பறவைகளினுல், லா - கிரஹிக்கப் பட்டவள் என்பது பதப்பொருள். ஆகவே மகளுக்குச் சகுந்தலே யென்று பேரிட்டழைத்தனர் கண்ணுவ முனிவர். "தந்தை யெனச் சாற்றினேன்" என்றது, முன்னர் 11-ஆஞ்செய்யுளில் "எந்தை கூறுபொழுதுணர்ந்தபடி குறிப்பன் வேந்தே" என்று சொல்லியிருத்தலே நோக்கி. மாதருக்கு ஈன்ரோன், வேரோர்கதித் துயர் தவிர்த்தோன், அன்னங்களிப்புடன் அளித்துக்காத்தோன் இம் மூவரும் பிதாவாவர். இக்கு-கரும்பு. இக்காரும் மொழி-உவமைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை: ஆரும்-உவமவுருபு. மன்னர் குலத்து விசுவாமித்திரன் பெற்ற மகளாதலின், மன்னவனுகிய தான் சேர்தல் இயைபு எனக் கைப் பற்றினன் துட்டியந்தராசன் என்க. (13)

14. சகுந்தலே தந்தைவந்து தரப்பின்பு மணஞ்செய்து கொள்ளலாமென்ன, மன்னவன் காந்தருவமணத்தால் இணக்குவிக்க, சகுந்தலே தனக்குப் பிறக்கும் புதல்வனுக்கு இராச்சியமளிக்க வரம்வேண்ட,அதனே யளித்து மன்னவன் அவளைக்கூடி மகிழ்ந்திட்டுப் பின் ஊர்க்கு வரவழைத்துக் கொள்வதாகக் கூறித் தான்மாத்திரம் போதல்.

தந்தையுணர்ந் துதகந்தந் திடுபின் சேர்தல்
தகவெனவேந் தெண்மணத்துள் தக்க தியார்க்கும்
கந்தருவ மாதலினுற் புணர்த னன்று
காரிகையே யெனவவளுங் கரைந்தென் காதன்

மைந்தனுக்குன் னரசளிப்பா யாகிற் சேர்தும்
மன்ன!வென விசைந்தரசவ் வரந்தந் தன்போ
டிந்துநுத லணைந்துனையான் வருவிப் பேனூர்
எய்தியபின் பெனவிருத்தி யேகினனால்.

(இ-ள்). தந்தை உணர்ந்து–பிதாவாகிய கண்ணுவர் தெரிந்து இசைந்து, உதகம் தந்திடுபின்-நல்ல ஜலத்தைக்கொண்டு தாரை வார்த்துத் தந்திட்ட பின்னர், சேர்தல்-நாம் கூடுதல், தகவு என–தக்கதாகும் என்று சகுந்தலை கூற, வேந்து-(அதற்கு) துட்டியந்த மன்னன், எண்மணத்துள்–எட்டுவகை மணத்துள், யார்க்கும். எவர்க்கும், தக்கது-தகுதியான மணம், காந்தருவம் ஆதலினால்-காந்தர்வ விவாஹம் ஆதலால், காரிகையே-அழகுள்ள பெண்ணே! புணர்தல் நன்று என-(நாம்) கூடுதல் நல்லதே என்று சொல்ல, அவளும்–அந்தச் சகுந்தலையும், கரைந்து-மனநெகிழ்ந்து, "என் காதல் மைந்தனுக்கு உன் அரசு அளிப்பாயாகில்-என்னிடத்துப் பிறக்கும் அன்புக்குரிய புதல்வனுக்கு உமது அரசாட்சியைக் கொடுப்பதாயிருந்தால், மன்ன-வேந்தனே! சேர்தும் என-(உம்மை) கூடுவேன் என்று சொல்ல, அரசு இசைந்து–மன்னவனும் உடன்பட்டு, அ வரம் தந்து-(அவள் கேட்ட) வரத்தைக் கொடுத்து, அன்போடு-காதலாதரத்தோடு, இந்துநுதல் அணைந்து-சந்திரன் போன்ற முகத்தையுடைய சகுந்தலையைக் கட்டித் தழுவி, உனை-உன்னை, யான்-நான், ஊர் எய்திய பின் வருவிப்பேன் என-என் ஊருக்குச் சென்றடைந்த பின்னர் வர வழைத்துக் கொள்வேன் என்று, இருத்தி-ஆச்சிரமத்திலேயே இருக்கச்செய்து (விடுத்து), ஏகினன்–போயினன்;(எ-று). ஆல்-ஈற்றசை.

உதகம் தந்திடுதல்-(திருமணத்தின்போது) புனித நீரைத் தாரை வார்த்துக் கொடுத்தல். மணமகளின் தந்தை மணமகனின் வலத் திருக்கையில் நல்ல ஜலத்தைத் தாரைவார்த்துக் கன்னிகா தானம் செய்வன் என்பது ஈண்டு உணரவைத்தது. நூல்களில் எண்வகை மணம் குறிக்கப்பட்டுள்ளன: அவற்றுள், காந்தருவ மென்பது எல்லார்க்கும் ஏற்புடையதாமென்றவாறு. எண்வகை மணம்-பிரமம், பிராசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தர்வம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்பன. பிரமம் என்பது-நாற்பத் தெட்டியாண்டு பிரமசரியம் காத்தாற்குப் பன்னீராட்டைப்

பிராயத்தானே யணிகல னணிந்து கொடுப்பது. பிரசாபத்தியம் என்பது-மைத்துன கோத்திரத்தான் மகள் வேண்டிச்சென்றுல் மறுது கொடுப்பது. ஆரிடம் என்பது-ஆவும் ஆனேறும் பொற்கோட்டுக் பொற்குளம்பினவாகச் செய்து அவற்றிடை நீரிற் கொடுப்பது, தெய்வம் என்பது-வேள்வி யாசிரியற்கு வேள்வித்தீ முன் வைத்துக் கொடுப்பது. காந்தர்வம் என்பது-இருவர் ஒத்தார் தாமே கூடும் கூட்டம்: அதனை யாமோர் கூட்டம் என்று உணர்வது. ஆசுரம் என்பது–கொல்லேறு கொண்டான் இவளையெய்தும், வில்லேற்றினன் இவளையெய்தும், திரிபன்றி எய்தான் இவளை எய்தும், மாலை சூட்டப்பட்டான் இவளை எய்தும் என இவ்வாறு சொல்லிக் கொடுப்பது. இராக்கதம் என்பது-அவடன்னினும் தமரினும் பெறுது வலிந்துகொள்வது. பைசாசம் என்பது-மூத்தாள் மாட்டும் துயின்றுள் மாட்டும் களித்தாள் மாட்டும் சார்வது. இங்ஙனம் எண்வகை மணததின் இலக்கணத்தை இறையனாரகப் பொருளுரை கூறியமுறை பின்பற்றிக் காட்டியபடி.

தக்கதியார்க்கும்-குற்றியலிகரம், இந்து நுதல்-உவமைத் தொகையன்மொழி: இனி, அடையடுத்த சினையாகுபெயர் எனினுமாம். ஊர்-துட்டியந்தன் ஊரின் பெயர் பிரதிஷ்டானம் என்பது. இது கங்கை யமுனைகளின் சங்கமத்தில் இருக்கின்றது. (14)

15. முனிவன் நிகழ்ந்ததையுணர்ந்து உவந்து, நடந்ததை யாவரும் அறியச் சொல்லுமாறு சகுந்தலையிடம் கூறி, ஆசீர்வதித்துப் பாதுகாத்திருத்தலைக் கூறும்.

உலகரசங் குறுமுழைய ருடனூர் புக்கான்
உயர்தவன்வந் திடப்பயத்தோ டுறுமப் பாவை
கலவிபயில் குறிவிளங்க நாணே டேத்தக்
கண்ணுவனேர்ந் தரசில்லாங் கருமந் தன்னைற்
சிலகுறுவெஞ் சினமின்றி யஞ்சேல் யார்க்குந்
தெரியநிகழ் வியம்புகெனத் தெரிவை யாவுஞ்
சொலவருள்கூர்ந் தரசளிக்கு மகப்பெற் றென்றுஞ்
சுகமொடுவாழ் கெனவாழ்த்தித் தூயோன் காத்தான்.

(இ-ள்) உலகு அரசு-பூவுலகைக்காக்கும் துட்டியந்த மன்னன்

அங்கு-அவ்விடத்தினின்று, உறும் உழையருடன்-கூடவந்த [மந்திரிமார் ஒற்றர் முதலிய] அரசச் சுற்றத்தோடும், ஊர் புக்கான்-தன் நகரம் வந்து சேர்ந்தான்: உயர்தவன் வந்திட-மேலான தவத்தைச் செய்த கண்ணுவர் தமது ஆச்சிரமத்திற்கு [காளிலிருந்து திரும்பி] வர, பயத்தோடு உறும் அ பாவை-அச்சத்தோடு கூடியிருந்த அந்தச் சகுந்தலை, கலவி பயில் குறி வீளங்க-(துட்டியந்தனோடு சேர்ந்த) புணர்ச்சிக் குறிகள் மேனியில் தோன்ற, நாணோடு-[பெண்களுக்குரிய சிறந்த அணியாகிய] வெட்கத்தோடு, ஏத்த-(தந்தையைத்) துதிக்க, கண்ணுவன் ஓர்ந்து-கண்ணுவர் தமது ஞானக்கண்ணினால் தெரிந்து, அரசு இல் ஆம் கருமம் தன்னால்-அரசனுக்கு மனைவியாகும் பெற்றியினால், சிலகுறு வெஞ்சினம் இன்றி-சில கணமே தங்கும் கொடிய கோபங் கொள்ளாமல் விடுத்து, [சகுந்தலையைப் பார்த்து] "அஞ்சேல்-பயப்படாதே: யார்க்கும்-அனைவர்க்கும், தெரிய-தெரியும்படி, நிகழ்வு இயம்புக என-நடந்த நிகழ்ச்சிகளைச் சொல்லுக" என்று கூற, தெரிவை-சகுந்தலை, யாவும் சொல-(நிகழ்ந்த) அனைத்தையும் சொல்ல, அருள்கூர்ந்து-கருணை மிகுந்து, தூயோன்-முனிவராகிய கண்ணுவர், "அரசு அளிக்கும் மக பெற்று-துட்டியந்த மன்னவன் கர்ப்பாதானம் செய்யப் புதல்வனைப் பெற்று, என்றும் சுகமொடு வாழ்க-எப்பொழுதும் நலமொடு வாழ்வாயாக", என-என்று, வாழ்த்தி-ஆசீர்வாதஞ்செய்து, காத்தான்-(அவளைப்) பாதுகாத்து வந்தான்; (எ-று).

பயம்-அச்சம்: இயற்கையாகவே நிச்சம் பெண்பாற்குரிய அச்சத்தோடு ஈண்டு செயற்கை அச்சமும் சேர்ந்தபடி. அரசு இல்-பட்டமகிஷி. சிலகுறு சினம்-சிலகணமே யிருக்கும் சினம்: அதுவே காத்தல் அரிது என்றார் வள்ளுவர். "குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயுங் காத்த லரிது". முனிவன் சினங் கொள்ளாமைக்குக் காரணம்-மன்னவன் பெருந்தேவியாயினமையாலும், உலகு புரக்கும் அரசனைக் கர்ப்பமாகக் கொண்டிருத்தலாலும். இயம்புகென - வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். (15)

16. சகுந்தலை பெற்ற புதல்வனுக்குப் பரதன் எனப் பெயரிட்டு வளர்த்துப் பூணூல் சடங்கு செய்வித்துச் சகல கலைகளையும் கற்பித்து மேம்படச் செய்து, கண்ணுவ முனிவர் தன் சீடர்

மூலமாகக் குமாரனுடன் சகுந்தலையை மன்னவனிடம் அனுப்புதல் கூறும்.

மதிநுதல்சூன் முதிர்ந்தீன்ற மகவுக் கேய
மாதவன்பேர் பரதனென வழங்கி வேத
விதியினயர் கடன்செய்தா ரணங்க ளோதி
விஞ்ஞையுஞ்சொற் றழையாவேல் வேந்தன் பாலச்
சுதனுடன்மா தினைச்சீட ருடனே கூட்டித்
தூண்டினன்சென் றவரரசைத் தொழும்போ தன்னோன்
கதிரிலைவேற் கண்ணியொடம் மகவு நோக்கிக்
கண்டுகொடு மறியான்போற் கழற லானோன்.

(இ-ள்.) மதிநுதல்-சந்திரன் போன்ற முகத்தழகையுடைய சகுந்தலை, சூல் முதிர்ந்து ஈன்ற-கருப்பம் முதிர்ந்து பெற்ற, மகவுக்கு-குழந்தைக்கு, ஏய-பொருத்தமான, பேர்-நாமம் [பெயர்]' பரதன் என-பரதன் என்று, மா தவன்-சிறந்த தவச்சிரேட்ட ராகிய கண்ணுவ முனிவர், வழங்கி-வைத்து, (ஐந்தாமாண்டில் க்ஷத்திரிய குழவிக்கு) வேத விதியின் அயர் கடன் செய்து-வேதத் தில் விதித்துள்ளபடி செய்ய வேண்டிய பூணூலிடுதல் முதலிய சடங்குகளைச் செய்து, ஆரணங்கள் ஓதி-வேதங்களை (ஸ்வரம் தவறு மல்) ஓதவைத்து. விஞ்ஞையும் சொற்று-அரசர்க்குரிய பிற வித்தைகளையும் சொல்லி வைத்துக் கற்பித்து, (ப்பின்) அழையா வேல் வேந்தன்பால்-(அடியோடு தன் மனைவியையும் புதல்வனையும் மறந்திருந்ததனால்) அவர்களைத் தன் ஊருக்கு (வாக்குத் தந்தபடி) அழைத்துக்கொள்ளாத வேலையேந்திய வீரனை துட்டியந்த மன்னவனிடத்து, அ சுதனுடன்-அங்ஙனம் கற்று மேம்பட்ட புதல்வனுகிய பரதனுடன், மாதினைக் கூட்டி-சகுந்தலையையும் உடன் செல்லும்படி செய்து, சீடருடனே தூண்டினன்-தன் சிஷ்யர்களோடு [அவர்கள் துணையாக வரும்படி] செலுத்தினன்; அவர்-அங்ஙனமே அவர்கள், சென்று-போய், அரசைத் தொழும் போது-மன்னவனை வணங்கும்போது, அன்னோன்-அந்தத் துட்டி யந்தன், கதிர் இலை வேல் கண்ணியொடு-ஒளி விடுகின்ற இலைவடி வாயமைந்த வேலாயுதம்போன்ற கண்களையுடைய சகுந்தலையோடு, அ மகவு நோக்கி-அந்தப் புதல்வனையும் பார்த்து, கண்டுகொடும்-முன்னர்ச் சகுந்தலையைப் பார்த்திருந்தும், அறியான்போல்-முன் பின் பார்த்தறியாதவன் போல, (ஒன்றுமே தெரியாதவன் போல), கழறலானோன்-சொல்லலானோன்; (எ-று).—கழறியதை மேலைக் கவியிற் காண்க.

மதிநுதல்-உவமைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. உலகம் ஏழினையும் பரிக்க வல்லவனென்ற காரணம் பற்றி, பரதனென்று நாமகரணஞ் செய்தனர் முனிவர். வேதவிதியினயர் கடனவது—சவுளம் (மூன்றுமாண்டு செய்வது) உபநயனம் (பூணூலிடும் சடங்கு—ஐந்தாம் ஆண்டிற் செய்வது) ஆரணங்கள் ஓதுதல்—பூணூல் போட்டபின் வேதங்கள் பயில வேண்டும். அதற்கேற்பப்பரதனுக்கு முனிவர்-நான்கு வேதங்கள், அவற்றிற்கு அங்கமான சீட்சை, வியாகரணம், சந்தசு, நிருக்தம், சோதிடம், கற்பம் என்பனவற்றைப் போதித்தார். மேலும் விஞ்ஞையும் சொல்லி வைத்தார்-[விஞ்ஞை-விஞ்சை-வித்தை-போலி]. விஞ்சைகளாவன—மீமாம்சை, நியாயம், புராணம், தர்ம சாஸ்த்ரம் என்பவற்றோடு அரசர்க்குரிய கலைகளாகிய தண்டநீதி, யானையேற்றம், குதிரையேற்றம், படைக்கலம் பயிறல் போன்றவற்றை. சுதன்-ஸுதன்: வடசொல். அடையா-ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். அம் மகவு நோக்கி என்ற விடத்து அறியவேண்டுவது என்னையெனில்-அப்போது பரதனுக்கு வயது பன்னிரண்டாகியிருந்தது என்பது. இதனை "பன்னிரண்டான வயதான அந்தக் குமாரனுக்கு எல்லா வேதங்களும் அஸ்திர வித்தையும் கற்பிக்கப்பட்டிருந்தன" என்ற வியாச பாரதத்தால் அறியலாம். கொடும்-கொண்டும் என்பதன் தொகுத்தல். (16)

17. மன்னவன் "நீ யார் இந்தக் குமரன் யாவன்" என்று சகுந்தலையை வினவ, அவனுக்கு நினைவு வரவேணுமென்று முன் னிகழ்ந்த நிகழ்ச்சியைச் சகுந்தலை கூறுதலைத் தெரிவிக்கும்.

திருவனைநீ யாவண்மக வுயிர்த்தோன் யாவன்
சேர்ந்ததிவண் யாதெனவத் தெரிவை வேட்டம்
வருமிடைகந் தருவமணத் தணைந்தா ளியானே
மண்புரக்க வரந்தரவிம் மகற்கே யூர்சென்
றுரியவமைச் சால்விளிப்ப லென்னும் வாய்மை
யொழிதலின்கண் ணுவன்கடன்சேய்க் குஞற்றி நாமம்
பரதனெனப் பகர்ந்திருக்கோ டளவில் விஞ்ஞை
பயிற்றினின்பா லுய்ப்பவந்தேம் பரிநீ யென்றாள்.

(இ-ள்). திருவனை நீ யாவள்-இலக்குமிபோலிருக்கின்ற நீ

யார்?, மக உயிர்த்தோன் யாவன்-குழந்தை பாலகனைப் பெற்ற தந்தை யார்?, இவண் சேர்ந்தது யாது-இவ்விடத்து நீர் வந்து சேர்ந்தது எக்காரணம் பற்றி?, என-என்று மன்னவன் துட்டியந்தன் கேட்க, அ தெரிவை-அந்தச் சகுந்தலை, "வேட்டம் வரும் இடை-நீர் வேட்டையாடுதற்குவந்த சமயத்தில், கந்தருவமணத்து-காந்தருவ விவாஹத்து, அணைந்தாள்-உம்மைக் கூடினவள், யானே-நான்தான்: இ மகற்கே-இந்தப் புதல்வனுக்கே,மண்புரக்க வரம்தர-பூமியை (உமக்குப்பின்) ஆளும்படியான வரத்தைக் கொடுத்து,(பின்)ஊர் சென்று-எமது ஊருக்குச்சென்று,(உங்களை) உரிய அமைச்சால் விளிப்பல்-தகுதிக்கேற்ற மந்திரிமார்களை யனுப்பி அவர்கள் மூலம் அழைத்துக்கொள்வேன்" என்னும்-என்று சொன்ன, வாய்மை ஒழிதலின்-வாக்குத்தவறினமையின் கண்ணுவன்-கண்ணுவ முனிவர், சேய்க்கு-குழந்தையாகிய இவனுக்குச் செய்யவேண்டிய, கடன்-சாதகருமம், நாமகரணம், சவுளம், உபநயனம் முதலிய சடங்குகளை, உஞற்றி-செய்து, நாமம்-பெயரை, பரதன் எனப் பகர்ந்து-பரதன் எனச் சொல்லி, இருக்கோடு-வேதங்களுடன், அளவு இல் விஞ்ஞை-அளக்கமுடியாத பல வித்தைகளையும் (கலைகளையும்), பயிற்றி-கற்பித்து [போதித்து வைத்து], நின்பால் உய்ப்ப-உம்மிடத்துச் செலுத்த, வந்தேம்-நாங்கள் வந்தோம்: நீ பரி-நீர் (எங்களைத்) தாங்குவீர், என்றாள்-என்று கூறிமுடித்தாள்; (எ-று).

இருக்கு-ருக்: இது நான்கு வேதத்தில் ஒன்றுக்குப் பெயராக வருவதன்றி, வேதமென்று பொதுப் பொருளையுங் காட்டும். (17)

18-19. இரு கவிகள்:—மன்னவன் சகுந்தலையின் பேச்சு கட்டுக்கதையாகும் என்று கூற, அச்சொற்கேட்டுச் சகுந்தலை இன்சொல் வன்சொற்களால் தன்னையும் புதல்வனையும் அங்கீகரிக்க வேணுமென்று கூறி வேண்டவும், அரசன் 'நான் முன்னம் உன்னைக் கண்டறிந்ததில்லையாகையால் நீ உன்னிடத்துச் சேறலே' தகுதி எனல்.

[இரண்டு கவிகள்–ஒரு தொடர்.]

18. கண்டதுமின் றணைந்ததுமின் றிவடான் சொற்றக்
கருமமெலாங் கற்றுணர்ந்த கதையா மென்றே
பண்டமைச்சர் தமக்கரசங் குரைப்ப வோர்ந்தப்
பைந்தொடியா ளுலகவர்பொய் பகர்ந்தா லாய்ந்தே

தண்டனைசெய் திடுநீயே பொய்ம்மை சொற்றூற்
சரதமினி யெவர்பாலாந் தையன் மார்க்குக்
கொண்டவலி தேசின்பங் கடவுள் யாவுங்
கொண்கனல திலையுணர்ந்துங் குறைசெய் தாயே.

(இ-ள்.) (சகுந்தலை கூறியதற்கு) அரசு-அரசன், கண்டதும் இன்று-இவளைப் பார்த்ததேயில்லை: அணைந்ததும் இன்று-(அங்ஙனிருப்பக்) கட்டித்தழுவியதும் இல்லை: இவள்—, தான் சொற்ற கருமம் எலாம்-தான் சொல்லுகின்ற செய்திகளெல்லாம், கதையாம்-கட்டுக்கதையாம், என்றே-என்று, பண்டு-அக்காலத்து, அமைச்சர் தமக்கு-தன்னைச் சூழவுள்ள மந்திரிமார்க்கு, அங்கு-அச்சபையிடத்து, உரைப்ப-சொல்ல, அ பைந்தொடியாள்-பசிய வளையல்களை யணிந்திருந்த அந்தச் சகுந்தலை, ஓர்ந்து-[நிகழ்பவற்றை] ஆராய்ந்து, உலகவர் பொய் பகர்ந்தால்-பூவுலகத்துள்ள உமது குடிமக்கள் பொய் பேசுவார்களேயானால், ஆய்ந்து தண்டனை செய்திடும் நீயே-அதனைப் பரிசீலனைசெய்து தண்டிக்கும் நீரே, பொய்ம்மை சொற்றூல்-பொய் பேசுவீரானால், சரதம்-உண்மை யென்பது, இனி எவர்பால் ஆம்-இனிமேல் எவரிடத்துக் காணப்படுவது? (ஒருவரிடத்துமில்லை): தையல்மார்க்கு-பெண்டிர்க்கு, கொண்ட வலி-தாம் கொண்டுள்ள வலிமை, தேசு-ஒளி, இன்பம்—, கடவுள்-தெய்வம், யாவும்-மற்றுமுள்ள அனைத்தும், கொண்கன் அலது இலை-கணவனைத் தவிர வேறு கிடையாது; உணர்ந்தும்-(இந்த உண்மை) உமக்குத் தெரிந்திருந்தும், குறை செய்தாயே-குற்றம் செய்தீரே; (எ-று.)

குறை-மனக்குறையுமாம்: கதை-நம்பத் தகுந்ததன்று. பைந்தொடி-பண்புத்தொகை. உலகத்து மெய்ம்மையைப் பாதுகாக்க வேண்டிய அரசனை நீயே பொய் கூறின், இனி சத்தியமென்பது எவரிடத்தும் நில்லாது போகும் என்பதாம். வேலியே பயிரை மேய்வதுபோல் பொய் கூறினரைத் தண்டிக்கவேண்டிய மன்னவனே பொய்கூறின், அப்போது கேட்பவரில்லை யென்பது உணரவைத்தபடி. (18)

19. தருமமகந் தவம்வீரதம் நாளு மோம்பிச்
சந்ததிதந் திடுவருன்போற் றந்த சேயை
யொருவியிகந் தவர்க்காணேன் அரசர் யார்க்கு
மூரித்தாய தருமகவு முயிர்மெய் போலு

மருவுமனை வியும்வாக்கு மியம்பிம் மூன்றும்
வருகினைக் கிங்கெனையாளின் மன்ன! வென்னுங்
தெரிவைமுகம் பார்த்தரசன் அறியே னின்னைச்
சேறியுன திடத்தெனவே சீறிச் சொற்றான்.

(இ-ள்). "தருமம்-தரும காரியங்கள், மகம்-யாகங்கள், தவம்—, விரதம்-நோன்புகள் (இவற்றை), நாளும்-தினந்தோறும், ஓம்பி-மேற்கொண்டு நடாத்தி, சந்ததி தந்திடுவர்-சந்தானத்தைப் பெறுவார்கள் (உலகில் மேலோர்): உன்போல்-உம்மைப்போல, தந்த-பெற்றெடுத்த, சேயை-பிள்ளையை, ஒருவி-(எனதன்று என) நீத்து விட்டிட்டு, இகந்தவர்-அறநெறி வழுவிக் கடந்தவரை, காணேன்-(நான்) கண்டதில்லை: (மற்றும்) அரசர் யார்க்கும்-மன்னரனைவர்க்கும், அருமகவும்-அரிய [மிகச் சிறப்புவாய்ந்த] மகனும், உயிர்மெய் போலும் மருவுமனைவியும்-உயிரும் உடலும் போலப்பொருந்தி ஒழுகுகின்ற மனைவியும், வாக்கும்-வாய்மையும் (சத்தியமான நிலைமையும்),உரித்தாயது-உரியனவாம்:மன்ன!-அரசனே! இயம்பு இம் மூன்றும்-விதந்து சிறப்பித்துச் சொல்லப்பட்ட இந்த மூன்று பேறுகளும், இங்கு-இப்போது இவ்விடத்து, எனை ஆளின்-என்னை யாட்கொண்டு ஏற்றுக்கொள்வீராயின், நினக்கு வரும்-உமக்குச் சித்திக்கும்," என்னும்-என்று விவாதித்துநின்ற, தெரிவை முகம் பார்த்து-சகுந்தலையின் முகத்தை [நேரே] நோக்கி, அரசன்-அந்தத் துட்டியந்த மன்னவன், 'அறியேன் நின்னை-[முன்னம்] உன்னைக் கண்டறிந்ததில்லை: உனது இடத்து சேறி-உனதிடத்துக்குப் போய்ச் சேர்வாய்', என-என்று,சீறி-கோபித்து, சொற்றான்-(மறுமொழி) கூறினன்; (எ-று.)

முதல் மூன்றடிகளால்-மனைவியையும் புத்திரனையும் அவமதித்தல் தக்கதன்று என்று மன்னவன் உளங்கொளப் பெறவைத்த படி. இகந்தவர்க்காணேன்-உயர்திணையிடத்து ஐயுருபு தொக்கது. சேறி-முன்னிலை வினைமுற்று: செல்-பகுதி, இ-விகுதி, த்-எழுத்துப்பேறு. மன்ன!-விளி சந்தர்ப்பத்துக்கேற்ப வந்து சிறக்கின்றது. (19)

20. சகுந்தலை தன்னை நொந்து கூறி மீளுதலைத் தெரிவிக்கும்.

சொற்றமொழி யுளம்வெதுப்பத் துயரா மாழி
துளைந்தணங்கன் றரசேநீ சொற்ற வாய்மை
சற்றுமறி யேனெனவின் றுரைத்த துன்மேற்
றவறன்றியான் செய்பவமே தந்தை தாயும்

பெற்றதின மேதுறந்தார் பதியா நீயும்
பெயர்கெனிலென் போற்பாவி பிறரியா ரியார்க்கு
மூற்றளிக்குங் கடவுளுமொன் றுளதென் மூல
முறழ்விழிநீர் சொரியமக வுடனே மீண்டாள்.

(இ-ள்.) சொற்றமொழி–மன்னவன் துட்டியந்தன் கூறிய வார்த்தைகள், உளம் வெதுப்ப-மனத்தை மிகவும் வருத்த, அணங்கு-சகுந்தலை, துயராம் ஆழி துளைந்து–துன்பக் கடலில் வீழ்ந்து தவித்து, "(துட்டியந்தனை நோக்கி) அரசே!-மன்னரே! அன்று-அற்றைத் தினத்து, (கண்ணுவராச்சிரமத்து) நீ-நீர், சொற்ற-சொல்லிய, வாய்மை-வார்த்தைகள், சற்றும் அறியேன் என-சிறிதேனும் அறிவேனில்லை என்று, இன்று-இற்றைத்தினம், உரைத்தது-(என்னை முகம்பார்த்துச்) சொல்லியது, உன்மேல் தவறு அன்று-உங்கள்மேல் பிழையன்று, யான்செய் பவமே-(அதற்கு மாறாக) நான் செய்த பாவமே: தந்தை தாயும் பெற்ற தினமே துறந்தார்–பெற்றெடுத்த தந்தையாகிய விசுவாமித்திரரும் தாயாகிய மேனகையும் என்னையின்ற அன்றையதினமே பக்கத்தில் விசி எறிந்துபோனார்கள்: பதியா நீயும்-எனக்குத் தலைவராகிக் கணவராகிய நீரும், பெயர்க எனில்-இவ்விடம் விட்டு உன்னிடத்திற்குப் போ எனில், என்போல் பாவி பிறர்யார்-என்னைப் போன்று கொடும் பாவங்களைச் செய்தவர் வேறு யாவருளர்? (எவருமில்லை): யார்க்கும்-கதியற்ற [என்போலியர்க்கும் உட்பட] அனைவர்க்கும், உற்று-பொருந்தி, அளிக்கும்-ரட்சிக்கும், கடவுளும் ஒன்று உளது-தெய்வமொன்று ஒரு உண்மைப் பொருள் என்றும் இருக்கின்றது" என்று—, ஆலம் உறழ்விழி-விஷத்தை யொத்த பார்வையையுடைய கண்கள், நீர் சொரிய-கண்ணீரைப் பெருக்க, மகவுடனே-புதல்வனுகிய பரதனுடனே, மீண்டாள்-(மன்னவையை நீத்துத்) திரும்பியிட்டாள்; (எ–று.)

யார்க்கும் கடவுள் ஒன்று உளது என்றவிடத்து அறிய வேண்டுவது-நல்லவர் கெட்டவர் ஆண்கள் பெண்கள் என்ற யாவர்க்கும் தெய்வமென்று ஒருத்தன் இருந்து, பெருந்துயரம் நேரிடும்போது அத்துயரைப் போக்கிப் பாதுகாக்கின்றன்: இதனைச் சகுந்தலை சொல்லியது ஏனெனில்-தன்னைப் பெற்றோர் கணவன் என்ற இவர்கள் முன்னமே கைவிட்டதனால், தெய்வமென்ற ஒன்று தன்னை இத்துயரத்தைப் போக்கிப் பாதுகாக்கும் என்ற துணிவுபற்றி. பாரதியாரும் தமது பாப்பாப் பாட்டில்,

"தெய்வம் உண்மையென்று தானறிதல் வேண்டும்" என்று வற்புறுத்திக் கூறியுள்ளமை காண்க. துயராம் ஆழி-உருவகம். ஆழி-ஆழமாகவுடையது என்ற காரணம் பற்றிக் கடலுக்குக் காரணக்குறி. பெயர்கெலில்-வியங்கோளின் அகர வீறு தொகுத்தல். யாரியார்க்கும்-"தன்னெழி மெய்ம்முன் யவ்வரின் இகரம் துன்னுமென்று துணிநரும் உளரே" என்பது விதி, (நன்னூல்: மெய்யீறு : 3) "உளது என்று ஆலம் உறழ் விழி" என்று பதம் பிரிக்கவேண்டும். ஆலம்-ஆலகாலம்: விஷம்: கண்டாரைத் தன் பார்வை அழகாலே வருத்தலால் 'ஆலம் உறழ் விழி' என்றது. உறழ்-உவமருருபு. இந்தச் செய்யுளில் அவலச்சுவை பயில்கின்றது காணலாம். (20)

21. அசரீரி சொல்லால் உண்மை யறிந்து சபையார் யாவரும் மகிழ்ந்து புகழத் துட்டியந்தன் மனைவியையும் புதல்வனையும் அங்கீகரித்துத் தன்மனை புகுதல்.

ஆயிடையங் கசரீரியா ளரசே! நீயிவ்
வணங்கினைமுன் விரும்பியது மடலின் மிக்க
சேயினைமற் றவளிடத்தின் றதுவு முண்மை
சேர்ந்துடனே வாழ்தியெனச் செப்ப வச்சொல்
ஏயுமென வவையினுளார் புகழ்ந்தார் வேந்தன்
இருவரையுந் தழிக்கொண்டங் கின்சொற் கூறிக்
கோயிலவ ருடன்புகுந்தா னுழையர்க் கோதிக்
கூடியதும் பழிக்கஞ்சி கூறு மாறும்.

(இ-ள்.) ஆயிடை-மீளும் சமயத்தில், அங்கு-அவ்விடத்துச் சபையில், அரசே!-மன்னவனே! என விளித்து, அசரீரியாள்-அசரீரிவாக்கினுள், "நீ இவ் அணங்கினை முன் விரும்பியதும்-நீ இந்தப் பெண்ணகிய சகுந்தலையை முன் அக்காலத்தில் [பன்னிரண்டாண்டுகட்கு முன்] [காதல்கொண்டு] விரும்பியதும், மற்றுமேலும், அடலின்மிக்க சேயினை-வலிமையில் மிகுந்த புதல்வனை, அவளிடத்து ஈன்றதுவும்-அச் சகுந்தலை மூலம் பெற்றெடுத்ததும், உண்மை-நிகழ்ந்த செயலே: (பொய்யன்று): உடனே-இப்போதே. சேர்ந்து-அவ்விருவர்களோடும் கூடி, வாழ்தி-வாழ்வாய்", என-என்று, செப்ப-சொல்ல—, அவையினுளார்-அந்தச் சபையிலிருந்தவர்கள், அ சொல் ஏயும் என-அந்த அசரீரியின் வார்த்தைகள் பொருந்துவனவே என்று, புகழ்ந்தார்-(மகிழ்ந்து) கொண்டாடினர்கள்: (அப்போது) வேந்தன்-துட்டியந்த மன்னன், இருவரை

யும் தழிக்கொண்டு-சகுந்தலை, புதல்வன் இருவரையும் கட்டித் தழுவி, அங்கு-அவ்விடத்து அப்போது, இன்சொல் கூறி-(தான் முன்னர் வன்மொழி கூறியவற்றைப் பொறுக்குமாறு) இனிய மொழிகளைச் சொல்லி(ச் சமாதானப்படுத்தி, [பின்னர்] உழையர்க்கு-தன்னருகேயிருந்த சபையோரை நோக்கி, கூடியதும்-தான் (முற்காலத்தில்) சகுந்தலையோடு அன்புகொண்டு இணைந்த வகையையும், (அதனை மறந்திட்டதனால் இன்று) பழிக்கு அஞ்சி கூறும் ஆறும்-தான் பழிக்குப் பயந்து கடிய கூறிய வகையையும், ஓதி-தெரியச் சொல்லி, அவருடன்-அவ்விருவருடனும், கோயில் புகுந்தான்-தன் அரண்மனையுட் சென்றான்; (எ-று.).

'அறவிக்குத் தெய்வந்துணை' என்றாற்போலச் சகுந்தலை தெய்வத்தின் மீது பாரத்தையிடவே, தெய்வம் அசரீரியாய் உண்மையை விளக்கியது; இஃது சகுந்தலையின் கற்பின்மாட்சியைத் தெரிவிக்குமென்க.

ஆ+இடை=ஆயிடை: சுட்டு நீண்டவிடத்து, யகரம் தோன்றிற்று. அசரீரி-ஆகாயவாணி. ஈன்றதுவும்-குற்றியலுகரம் வகரவுடம்படுமெய்பெற்று வந்தது. வாழ்தி-முன்னிலை வியங்கோள்: வாழ்த்துப் பொருளில் வந்தது. தழிக்கொண்டு-தழீஇக்கொண்டு என்பதன் குறுக்கல். உழையர்க்குக் கூடியதும்...கூறும் ஆறும் ஓதி..புகுந்தான் என இயையும். கூடியது, கூறுமாறு-இரண்டும் தொழிற்பெயர்கள்.

'அடலின்மிக்க சேய்' என்றவிடத்து அறியவேண்டிய விவரம்:—பரதனுக்கு ஆறு வயதானபோது, அவன் கண்ணுவராச்சிரமத்துக்கு உபத்திரவஞ் செய்துகொண்டிருந்த கொடிய மிருகங்களாகிய புலிகளையும், சிங்கங்களையும், பன்றிகளையும், செந்நாய்களையும், எருமைகளையும், கொண்டை முசுறுகளையும் கால்களினால் உதைத்தான். அவைகளைத் தன் தோள்வலிமையினால் பிடித்து அடக்கி ஆச்ரமத்திற்குச் சுற்றிலுமுள்ள மரங்களிற்கட்டி விளையாடுவான். பிறகு பகையாகிய ராக்ஷஸர்களையும் பிசாசங்களையும் யுத்தத்தில் குத்துச் சண்டையிற்கொன்று ரிஷிகளுக்கு மகிழ்ச்சியை விளைவித்தான். பெரிய பலமுள்ள ஓர் அசுரனைத் தன் முழங்காலடிகளினாலேயே உயிரை மாய்த்து விட்டான். அச்சத்தினாலேயே அசுரர்களும் ராக்ஷஸர்களும் அந்த ஆச்ரமத்திற்கு வருவதில்லை. இந்தவியத்தகு செய்கையைச் செய்த பரதனைக் கண்ணுவருள்ளிட்ட ஆச்சிரமவாசிகள் அனைவரும் பாராட்டி "இவன் எல்லாவற்றையும் அடக்குவதனால் ஸர்வதமனன் என்ற பெயருள்ளவனாக இருக்கக்கடவன்" என்று அவனுக்குப்

பெயரிட்டனர். இங்ஙனம் அந்தச்சேய் பரதன் பராக்கிரமத் தோடும் உற்சாகத்தோடும் பலத்தோடும் கூடினவனாக இருந்தான் என்பது. (21)

பரதவபிசம்

22. துட்டியந்தன் பலகாலம் வாழ்ந்து, மைந்தனுக்கு அரசு ஈந்து தான் தவத்திற்குச் செல்ல, பரதன் சிறக்க மேதினி புரந்து, புமன்யுவைப் பெற்றெடுத்தமை கூறும்.

மதலியொடும் மனிவியொடும் அநேக காலம்
வாழ்ந்தரசம் மைந்தனுக்கே மகுடஞ் சூட்டிக்
கதிபெறுவான் வனம்புகுந்தான் அந்த மைந்தன்
காத்துலக மொருகுடைக்கீழ் களிக்க வானோர்
சதமகஞ்செய் திரந்தவர்வந் தெதிர்வோர் யார்க்குந்
தனதுபெயர் விளங்கிடவே தலைமை கைக்கொண்
டிதழிலவுக் கிணைசுனந்தை தன்பாற் பூமன்
என்னுமொரு புதல்வனியீன் றெடுத்தான் மன்னே.

(இ-ள்). மதலியொடும்-பிள்ளையாகிய பரதனோடும், மனிவி யொடும்-மனிவியாகிய சகுந்தலியோடும், அநேக காலம் வாழ்ந்து-, அரசு-தன் அரசாட்சியை, அ மைந்தனுக்கே-அந்தப் பிள்ளையாகிய பரதனுக்கே, மகுடஞ் சூட்டி-கிரீடத்தை யணிவித்துக் கொடுத்து, கதி பெறுவான்-மோட்சம் பெறும்பொருட்டு, வனம்புகுந்தான்-(தவஞ்செய்யக்) காடுபுகுந்தான் துட்டியந்தன்: அந்த மைந்தன்-அந்தக் குமாரனாகிய பரதன், ஒரு குடைக்கீழ்-ஒப்பற்ற தன் கொற்றக் குடையின் நீழலில், உலகம்-உலகத்தவர், களிக்க-மகிழ்ச்சியோடு வாழுமாறு, காத்து-புரந்து, வானோர் களிக்க-தேவர்கட்கு உகப்பாக, சதமகம் செய்து-நூறு அசுவமேத யாகங் கள் செய்து, இரந்தவர்-யாசிப்பவர்க்கும், வந்து எதிர்வோர்-தன்னிடம்கிட்டிக் கண்ணெதிர்ப்படுவோர்க்கும்,யார்க்கும்-மற்றும் பிற அனைவர்க்கும், தனதுபெயர் விளங்கிடவே-தனதுபேர் பரதன் என்பது பிரகாசிக்கும்படி, தலைமை கைக்கொண்டு-சக்கரவர்த்தி யாகிய உயர்ந்த பதவியை ஏற்று,— இதழ்-அதரம், இலவுக்கு இணை-இலவம் பூவுக்கு ஒப்பு என்று சொல்லும்படி சிவந்த அழகு படைத்த, சுனந்தை தன் பால்-சுனந்தை யென்பவளிடத்து, பூமன் என்னும் ஒரு புதல்வனை-புமன்யு என்னுமொரு புத்திரனை, ஈன்றெடுத்தான்-பெற்றெடுத்தான்; (எ-று). மன், ஓ-ஈற்றசை.

பரதன் வானோர் களிக்கச் சதமகம் செய்தது என்றவிடத்து அறியவேண்டிய விவரம்:—பரதன் கோவித்தம் [கோக்களை அதாவது பசுக்களை மிகுதியாகவுடையது] என்று சொல்லப்பட்ட சிறப்புள்ள அசுவமேத யாகத்தைச் செய்தான்: அந்த யாகத்தில் கண்ணுவருக்கு ஆயிரம் பத்மங்கள் [ஆயிரம் கோடி] பொன்னைக் கொடுத்தான்: அவன் யமுனைக் கரையில் அநேக நூறு அசுவமேத யாகங்களையும், சரசுவதி நதிக்கரையில் மூன்நூறு அசுவமேத யாகங்களையும், கங்கைக் கரையில் நானூறு அசுவமேத யாகங்களையும் செய்தான். பரத வம்சத்திற்கு அவன் காலம் முதலாகப் பெரும் புகழ் பரவியது அவன் காசிராஜாவாகிய ஸர்வஸேனன் மகளான சுனந்தை யென்பவளை மணம்புரிந்து, அவளிடத்துப் புமன்யுவென்னும் புத்திரனைப் பெற்றான். பரத்வாஜ மஹரிஷியின் அநுக்கிரகமும் இவனுக்கு உண்டு. இலவம் பூ செந்நிற முடையது; எனவே அதனைப் பெண்டிரின் அதரத்தின் சிவப்புக்கு ஒப்புக் கூறுவர். பூமன்-புமன்யு என்பதன் பரியாயம். (22)

வேறு

23. நிகும்பன் (விகுஞ்சனன்) என்பவன் வரை கூறும்.

அனையவன் விசயை யென்னு
மணங்கைவேட் டருள்சு கோத்திரன்
எனுமகன் சுவர்ணை யென்பா
ளிடத்தனைந் துயிர்த்த அத்தி
கனுமொரு நகரந் தன்பேர்
காட்டிடச் செய்த சோதை
யினமணந் தடனி கும்ப
னெனும்புதல் வனைத்தந் தானே.

(இ-ள்.) அனையவன்-அந்த பூமன் என்பவன் (புமன்யு), விசயை என்னும் அணங்கை வேட்டு-விசயை யென்கின்ற பெண்ணை மணந்து, அருள்-பெற்ற, சுகோத்திரன் எனும் மகன்-ஸுஹோத்ரன் என்னும் புதல்வன், சுவர்ணை என்பாளிடத்து அனைந்து-சுவர்ணை என்பவளை மணந்து சேர்ந்து, உயிர்த்த-பெற்ற, அத்திகனும்-அத்திகன் (ஹஸ்தி) என்பவனும், ஒரு நகரம் தன் பேர் காட்டிடச் செய்து-ஒரு நகரத்தைத் தன்னுடைய பெயர் என்றும் நிலைத்து விளங்கும்படி நிர்மாணித்து, அசோதையினை மணந்து-யசோதை யென்பவளை மணந்துகொண்டு (அவளிடத்து), அடல் நிகும்பன் எனும் புதல்வனை-வலிமைமிக்க நிகும்பன் என்ற மகனை, தந்தான்-பெற்றெடுத்தான்; (எ-று.)

முதனூலாகிய வியாச பாரதத்தில் கூறப்பட்டுள்ள பெயர் களுக்கும் இங்குக் கூறப்படுகின்ற பெயர்களுக்கும் மாற்றங்கள் காணப்படுகின்றன. இவற்றைப் பின்னேன் வேண்டும் விகற்பம் கூறும் விதியின்கீழ் அடக்குவர். அங்ஙனம் நோக்க, விசயை என்பதற்குப் பதிலாகச் சுவர்ணை யென்ற பெயரும், சுவர்ணை என்பதற்குப் பதிலாக ஜயந்தியென்ற பெயரும் காணப்படு கின்றன. அங்ஙனமே நிகும்பன் என்பதற்குப் பதிலாக விகுஞ்சனன் என்ற பெயர் காண்கின்றது. அத்திகன் நிர்மாணித்த நகரம் அத்தினபுரமாகும். இது குரு வமிசத்தரசர்களுக்குத் தலைநகரமாய் இலங்கியது.

இது முதல் சருக்க முடியுமளவும் உள்ள கவிகள்—பெரும்பா லும் ஈரசைச்சீர் பயின்றுவந்த அறுசீராசிரிய விருத்தம். (23)

24. ஆசாமீளன் (அஜமீடன்) ஈன்ற புதல்வர்கள் இரண்டாயிரத்து நானூறு என்பது வரை கூறும்.

அத்தனை யனுஞ்சு தேவைக் களித்தரு ளாசா மீளன்
வித்தக வுருக்கை யோடு கவுசலை விசாலை யென்னு
முத்தணி தனத்தி னார்கள் மூவர்வேட் டவர்பாற் றந்த
புத்திர ரொருநூற் றெடும் புகலறு நான்க தாமே.

(இ-ள்.) அ தனையனும்-அந்த நிகும்பனும், சுதேவை களித்து-சுதேவி என்பவளோடு சேர்ந்து மகிழ்ந்து, அருள்-பெற்ற, ஆசா மீளன்-அஜமீடன் என்பவன், வித்தக (உ)ருக்கையோடு-சாமர்த் தியம் பொருந்திய ருக்கு [ரிஷை] என்பவளோடு, கவுசலை விசாலை என்னும்-கௌசல்யை, விசாலை என்ற பெயர்களைக்கொண்ட, முத்து அணி தனத்தினார்கள் மூவர் வேட்டு-முத்துமாலையைத் தொங்கவிட்டு அலையும் கொங்கைகளைக்கொண்ட மூன்று பெண்மணிகளையும் மணந்து, அவர்பால் தந்த-அம்மூவர் மூலம் பெற்றெடுத்த, புத்திரர்-புதல்வர்கள் (மொத்தம்), ஒரு நூற்றெடும்-நூறு என்ற எண்ணேடும், புகல்-உறழச் சொல் லும் (பெருக்கும்படி நின்ற), அறு நான்கது ஆமே-இருபத்து நான்கு என்பதாகும்: [அதாவது 24×100=2400] ஆக இரண் டாயிரத்து நானூறு பிள்ளைகள் ஆகும்; (எ-று.)

சுதேவை என்ற பெயருக்குப் பதிலாகச் சுந்தரை என்ற பெயரும், ஆசாமீளன் என்ற பெயருக்குப் பதிலாக அஜமீடன் என்ற பெயரும் காண்கின்றன வியாச பாரதத்தில்: மேலும், "மூவர்வேட்டு" என்று ஈண்டுக் கூறியிருப்ப, அங்கு ஐவரை வேட்டதாகக் காண்கின்றது. அவர்கள் பெயர்களும் பெரிதும்

மாறுபட்டுள்ளன. அவர்களின் பெயர்கள்—கைகேயி, நாகை, காந்தாரி, விமலை, ரிக்ஷை என்பன. ஆனால் அந்த ஐவரிடத்தும் பெற்ற புதல்வர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்து நானூறு என்பது மட்டும் ஒத்திருக்கின்றது. அறுநான்கு—இருபத்து நான்கு: (6×4). அந்த எண்ணை நூற்றோடும் உறழ—இரண்டாயிரத்து நானூறு (24×100=2400). இந்த இரண்டாயிரத்து நானூறு பேர்களும் தனித்தனியாக வம்சங்களை யுண்டுபண்ணினார்கள். அவர்களுள் சவ்வருணன் (ஸம்வரணன்) என்பவன் [இந்தப் பரத]வம்சத்தை விருத்திசெய்தவன். அது மேலைக் கவியிற் கூறப்படும். இந்த ஸம்வரணன் ரிக்ஷையின் புதல்வனுதலின், ''உருக்கையோடு'' என்று முதன்மை கொடுத்துப் பின்னர்க் கவுசலை, விசாலை இருவரையும் கூட்டிச் சொல்லியுள்ள சுவை போற்றத்தக்கது. இது மிகவும் கூர்ந்து கவனிக்கவேண்டிய நயம். உருக்கை-ரிக்ஷை என்ற பெயர் ருக்கை என ஆகிப் பின்னர் 'ரவ்விற்கம் முதலா முக்குறிலும்' (நன்னூல் : பதவியல் ; சூ. 21) என்ற விதி பற்றி உகரம் பெற்று வந்தது எனலாம். (ருக்கை-ரிக்ஷை என்பதன் பரியாயம்). தனயன்-தனயன் என்பதன் போலி. நான்கது-அது, பகுதிப்பொருள் விகுதி. (24)

குரு வமிசம்

25. பிரதீபன் என்பவன் வரை கூறும்.

சொற்றருள் குமரர் தம்மிற்
றூயசவ் வருண னென்போன்
குற்றமிற் றபதிக் கீன்ற
குருவவன் மரபு மப்பேர்
பெற்றது சுபலைக் கன்னேன்
பெற்றருள் பரீட்சித் தென்னுங்
கொற்றவன் சுமுத்தி ரைப்பேர்
கோதைபாற் பிரதீப னீன்றான்.

(இ-ள்.) சொற்றருள்-கீழே கூறப்பட்டுள்ள, குமரர் தம்மில்-இரண்டாயிரத்து நானூறு புத்திரர்களில், தூய-பரிசுத்தியையுடைய (குற்றமற்ற), சவ்வருணன் என்போன்-ஸம்வரணன் என்பவன், குற்றம்இல் தபதிக்கு ஈன்ற-மாசற்ற தபதி யென்பவளிடத்தில் பெற்ற (மகன்), குரு-குரு என்பவன்: அவன் மரபும்-அந்தக் குருவின் வமிசமும், அ பேர் பெற்றது-அந்தப் பேரினாலேயே சிறப்புப் பெற்றது (குருவமிசம் என்று புகழப்பட்டது):

சுபலீக்கு-சுபாங்கி என்பவளுக்கு (அவளை மணந்து), அன்னேன்-அந்தக் குரு மன்னவன், [அவள்மூலம்] பெற்றருள்-கொள்ளுப் பேரனைப் பெற்ற, பரீட்சித்து என்னும் கொற்றவன்-பரீட்சித்து என்கின்ற அரசன், சுமுத்திரைப் பேர் கோதைபால்-சுமித்திரை யென்று பேர்கொண்ட பெண்ணினிடத்து, (அவளை மணந்து) பிரதீபன் ஈன்றான்-பிரதீபன் என்னும் புத்திரனைப் பெற்றான்; (எ-று).

உருக்கை (ரிக்ஷ) என்பவள் மகன் சவ்வருணன் (ஸம் வரணன்). இவன் சூரியன் என்பவன் மகளான தபதி யென்ற பெண்ணை மணந்து குரு என்ற புத்திரனைப் பெற்றான். இவன் முதற்கொண்டு குருவமிசம் தொடங்குகிறது.

"வருகு லத்தவ ரெவரையும் வரிசையா லின்றும்
குருகு லத்தவ ரெனும்படி பேரிசை கொண்டான்"

என்றார் வில்லியும்; (குருகுலச் சருக்கம் : 32). இந்தக் குரு சுபாங்கி [சுபலீ] என்பவளை மணந்தான்: சுபாங்கி என்ற பெயர் சுபலீ யெனப் பரியாயமாக வந்தது எனலாம். இந்தச் சுபலீக்குக் குருவினிடம் பிறந்தவன் விதூரதன். அவன் ஸம்பரியை என்பவளை மணந்து அவளிடம் அனஸ்வான் என்ற மகனைப் பெற்றான். அந்த அனஸ்வான் அமிர்தை யென்பவளை மணந்து பரீட்சித்து என்ற மகனைப் பெற்றான், இது வியாச பாரதத்திற்கண்ட வமிசாவளி யாதலின், முரணுது அதற்கேற்ப இங்கும் பொருள் கூறப் பட்டது என அறிக. "சுபலீக்கு அன்னேன் பெற்றருள்" என் பதற்கு 'சுபலீயின் மூலம் அன்னேன் கொள்ளுப் பேரனைப் பெற்றருள்" என உரைகண்டது.

இனி, பரீட்சித்து சுமுத்திரை யென்பவளிடம் பிரதீபனை யீன்றான் என்றவிடத்து வியாச பாரதத்தோடு முரணுகிறது. பரீட்சித்து சுவேஷை யென்பவளிடம் பீமசேனன் என்ற புத்திரனைப் பெற்றான். அந்தப் பீமசேனன் சுகுமாரி யென்பவளை மணந்து பரிசிரவஸ் எனவும் வழங்கும் பிரதீபனைப் பெற்றான். எனவே, பிரதீபன் பரீட்சித்தின் பேரனுவன். சுவேஷை என்ற பெயர் சுமுத்திரை எனத்திரிந்து வந்தது. (25)

26. வீடுமன்வரை கூறும்.

ஆயவன் சுனந்தைக் கின்ற வடல்கொள்தே வாபி யோடு
மேயசந் தனுவைத் தந்தான் விளம்பிய முன்னேன் கான்பாற்
றாயமா தவத்தி னுற்றூன் றெல்புவி யிளையோன் காத்தான்
காயமா நதியைச் சின்னட் கலந்துவீ டுமனைத் தந்தான்.

(இ-ள்). ஆயவன்-அந்தப் பிரதீபன், சுனந்தைக்கு ஈன்ற-சுனந்தை என்பவளிடத்துப் பெற்ற, அடல்கொள் தேவாபியோடு-வலிமைகொண்ட தேவாபி யென்பவனோடு, மேய-(யாவராலும்) விரும்புந்தன்மையுள்ள, சந்தனுவைத் தந்தான்-சந்தனு என்பவனையும் பெற்றூன்: விளம்பிய முன்னேன்-(முதலிற் பிறந்தவனுகச்) சொன்ன தேவாபி, கான்பால்-காட்டிற்குச் சென்று, தூய மா தவத்தின் உற்றூன்-புனிதமான சிறந்த தவத்தை மேற்கொண்டொழுகினன்: (ஆகவே) இளையோன்-தம்பியாகிய சந்தனு, தொல் புவி-பழைமையாக வருகின்ற பூவுலகத்தை, காத்தான்-அரசு மேற்கொண்டு பாதுகாத்து வந்தான்: (இங்ஙனம் அரசனுயிருக்கும் போது), காயம் மாநதியை-ஆகாயத்தினின்று பூமிக்கு இறங்கி வந்த கங்கா நதியாகிய மங்கையை, சின்னள் கலந்து-சில நாட்கள் கூடிவாழ்ந்து, வீடுமனைத் தந்தான்-பீஷ்மனைப் பெற்றூன்; (எ-று).

பிரதீபன் சிபி சக்கரவர்த்தியின் பெண்ணுகிய சுநந்தி (சுனந்தை) என்பவளை மணந்து தேவாபி, சந்தனு, பாஹ்லீகன் என்ற மூவரைப் பெற்றூன். இவர்களுள் தேவாபி இளமையிலேயே தவமேற்கொண்டு வனம்புகுந்தான். சந்தனு பகீரதன் மகளெனப்படும் கங்காதேவியை மணந்து அவளிடத்து வீடுமன் (பீஷ்மன்) எனப் புகழ் பெற்ற மைந்தனைப் பெற்றெடுத்தான் இந்த வீடுமனுக்கு அவன் தாய் இட்ட பெயர் தேவவிரதன் என்பது. "பீஷ்மன்" என்ற சொல்—பயங்கரமானவனென்று பொருள்படும்: பயங்கரமான விரதத்தை மேற்கொண்ட மன வலிமை பற்றியது, இந்த வீடுமனென்ற பெயரென்க. இங்ஙனமே சந்தனு என்ற பெயர்க்கும் காரணமுண்டு. சம்-சுகத்தை, தனு-செய்கிறவன்: மூப்புள்ள எவரெவரைக் கைகளினுல் தொட்டாலும் அவர்களெல்லாம் சுகமடைந்து மறுபடியும் யௌவனத்தையடைகின்றனர்: ஆதலால் அவனைச் சந்தனு என்றனர். இனி, உரிய பிராயம் கடந்தபின் வயோதிகர்களான பெற்ரோருக்குச் சந்தானமாக உண்டானதனுல் இவனுக்குச் சந்தனு என்று பெயர் வந்தது என்பதுமுண்டு. சம்-சாந்தமானபோது, தனு-உண்டாக்கப்பட்டவன். இவனைச் "சாந்தனு" என்றும் காண்கின்றது.

கங்காதேவியிடத்துச் சந்தனுவுக்குப் பிறந்த எட்டாவது குழந்தை வீடுமன். முன்னர்ப் பிறந்த ஏழு சிசுக்களையும் கங்கை நீரில் எறிந்து மாயவைத்தாள். காயம்–ஆகாயம் என்பதன் மூதற்குறை. (26)

27. சந்தனு சத்தியவதியென்பவளையும் மணந்து இரு புதல் வரைப் பெற அவர்கள் சந்ததியின்றி யிறந்தமை கூறும்.

சத்திய வதியை மீட்டச்
சந்தனு தோய்ந்து யிர்த்த
சித்திராங் கதனே டேவி
சித்திர வீர னென்னும்
புத்திரர் தம்மின் மூன்னேன்
போர்புரிந் திறந்தான் பின்னேன்
பத்தினி யிருவர் வேட்டும்
பாலரைப் பெறுமுன் மாண்டான்.

(இ-ள்). அ-அந்த, சந்தனு—, மீட்டு-மறுபடியும், சத்திய வதியை-சத்தியவதியென்ற பெயருடைய (பரதவர்பதியின்) மகளை, தோய்ந்து-சேர்ந்து, உயிர்த்த–பெற்ற, சித்திராங்கதனே டே விசித் திரவீரன் என்னும்-சித்திராங்கதன், விசித்திரவீரியன் என்ற பெயர்களைத் தரித்த, புத்திரர்தம்மில்-இரு புதல்வர்களில், முன் னேன்-முன் பிறந்தவனுகிய சித்திராங்கதன், போர்புரிந்து-தன் பெயரையே பூண்டிருந்த சித்திராங்கதன் என்ற கந்தருவனோடு போரிட்டு, இறந்தான்—: பின்னேன்-தம்பியாகிய விசித்திர வீரியன், பத்தினி இருவர் வேட்டும்-அம்பிகை, அம்பாலிகை என்ற இரு பெண்களை மணஞ்செய்து கொண்டிருந்தும், பாலரைப் பெறும் முன்-புதல்வரைப் பெறுவதற்கு முன்னரே, மாண்டான்-இறந்துபோனன்; (எ-று).

சத்தியவதி என்பவள் யோசனகந்தி, காளி எனவும் படுவள் இவள் காளிந்தி (யமுனை) நதியில் நாவாய் செலுத்தும் வலைஞர்பதி யின் மகள். இவளைச் சந்தனு கண்டு காதல்கொண்டு ''உனக்குப் பிறக்கும் புத்திரனுக்கு அரசு அளிப்பேன்'' என்று வாக்குக் கொடுத்து மணம்புரிந்தனன். சந்தனு விண்ணுலகடைய அவன் மூத்த மகன் கங்காபுத்திரனுகிய வீடுமன் சித்திராங்கதனை சிம்மாசனத்தேற்றினன். இந்தச் சித்திராங்கதன் தேவர்களையும் எதிர்க்க, அவர்களுள் பலவானை சித்திராங்கதன் என்ற கந்தரு

வன் "நீ என்பேர் கொண்டிருப்பதைமாற்றி வேறொரு பெயராவது கொள்க; இல்லாவிடின் என்னோடாவது பொருக" என்ன, இந்த மன்னவன் அந்தக் கந்தருவனோடு பொருதற்கு இசைய, இருவர்க்கும் மூன்று வருடங்கள் ஹிரண்யவதீ யென்ற நதியின் கரையில் போர் நடக்க, முடிவில் மாயையால் சித்திராங்கத கந்தருவன் இவனைக் கொன்றுவிட்டான் என்று வியாச பாரதத்தால் பெறப் படுகின்றது.

விசித்திரவீரியன் காசிராஜன் மகளாகிய அம்பிகை அம்பாலிகைகளை மணந்தனன். அவர்களது சுயம்வரத்தின்போது வீடுமன் அவர்களைத் தேர்மீதேற்றிக் கொணர்ந்து தன் தம்பிக்கு மணம் புரிவித்தான். தம்பியாகிய விசித்திரவீரியன் ஏழு வருஷ காலம் ரமித்து மிகுபோகத்தால் ராஜயக்ஷ்மா என்ற க்ஷயரோகம் தோன்ற, அதனாலே சந்ததியின்றி யிறந்தான். (27)

28. வியாசன் அருளால் மூவர் தோன்றியமையும், பாண்டவரைவர் தோற்றமும் கூறும்,

இறந்தவன் தேவிமாருக் கிருக்கைவைத் தருள வியாதன்
சிறந்தருள் செயவந் துற்றூர் திருதராட் டிரனும் பாண்டுந்
துறந்தருள் விதுரன் றானுந் தோன்றினர் பாண்டு வேட்ட
மறந்தரும் வேற்கண் குந்தி மாத்திரைக் கைவர் வந்தார்.

(இ-ள்.) இறந்தவன்-மாய்ந்துபோன விசித்திரவீரியனுடைய, தேவிமாருக்கு-மனைவியராகிய அம்பிகை அம்பாலிகைகளுக்கு, இருக்கை-குடியிருப்பில் சயனத்தை, வைத்தருள-(சத்தியவதி) அமைத்துவைக்க, வியாதன்-வியாசபகவான், சிறந்து-சிறக்க, அருள்செய-சந்தானமீந்து அருள்புரிய, வந்து உற்றூர்-வந்து சேர்ந்தார்: (அதன்பயனாக) திருதராட்டிரனும்-திருதராஷ்டிரனென்னும் [விழிப்புலனில்லா] மகவும், பாண்டும்-பாண்டு என்னும் [விளர்த்தவுடல்கொண்ட] மகவும், துறந்து-போர்த்தொழிலைத் துறந்து நீத்து, அருள்-அனைவர்க்கும் அருள் செய்கின்ற, விதுரனும்-விதுரனென்னும் [யமனமிசமான] மகவும், தோற்றினர்-பிறந்தார்கள்: [அம்மூவருள்] பாண்டு வேட்ட-பாண்டு மணஞ் செய்துகொண்ட, மறம் தரும் வேல்கண் குந்தி மாத்திரைக்கு-வீரம் பொருந்திய வேலாயுதம் போன்ற கண்களையுடைய குந்தி மாத்திரை என்ற இருவரிடத்தும் [சேர], ஐவர் வந்தார்-ஐந்து புதல்வர்கள் தோன்றினர்கள்: (எ-று).

இருக்கை-குடியிருப்பு, ஆசனம்: ஈண்டு படுக்கை, சயனம் என்ற பொருளில் வந்தது. இதனை வைத்தருளியவள்-சத்தியவதி. "இருக்கமைத்தருள" என்றும் பாடம். வியாசபகவான், அருள் செய வந்ததற்குக் காரணம்–அவர் யோசனகந்தி, காளி என்ற பெயர்கொண்டிருந்த சத்தியவதியினிடம் பராசர முனிவர் அருளால் தோன்றியவராதலின். பராசர முனிவர் யோசனகந்தியாகிய சத்தியவதியை மீண்டும் கன்னிகையாவாய் என்று கட்டளையிட்டு விதித்தவராதலின், அவள் கன்னிகையாகிப்பின் சந்தனுவை மணந்தாள். சந்தனுவிடம் தோன்றியவர்கள் - வீடுமன் (கங்காதேவி மூலம்), சித்திராங்கதன், விசித்திரவீரியன் (சத்தியவதி மூலம்). ஆகவே வியாசன் வீடுமனைப்போலவே விசித்திரவீரியனுக்குச் சகோதர முறையினனாதலின் அவனை அருள்செய வேண்டினள் தாயாகிய சத்தியவதியென்க. அம்பிகை மகன் திருதராட்டிரன்; அம்பாலிகை மகன் பாண்டு. அம்பிகையின் தோழி மகன்-விதுரன். இம்மூவரும் வியாசனருளால் இம்மூவரிடத்தும் தோன்றினவர்கள். விதுரன் போர்த்தொழிலைத் துறந்தானென்பதைத் தனது வில்லை இரண்டு துண்டாக முறித்துப் போகட்டுவிட்டுப் பாரத யுத்தம் நடக்கையில் அங்கு இராமல் பலராமனுடன் தீர்த்தயாத்திரை சென்றிட்டதனால் அறியலாம். குந்தி-பாண்டுவை மணந்து தருமபுத்திரனையும், வீமனையும், அருச்சுனனையும் ஈன்றவள்: மகப்பேறு மந்திரத்தைப் பாண்டுவின் மற்றொரு மனைவியாகிய மாத்திரிக்கு உரைத்தவள்: மாத்திரி–நகுல சகதேவரைப் பயந்தவள். எனவே, ஐவர்-பஞ்சபாண்டவர்: தொகைக் குறிப்பு. (28)

29. ஜனமேஜயன் மகன் சதானிகன் என்பவன் வரை கூறும்.

சொற்ற பாண்டவரிற் பார்த்தன்
சுபத்திரைக் கபிமன் றந்தான்

மற்றவ னுத்தி ரைபால்
வழங்கிடப் பரிச்சித் துன்னைப்

பெற்றனன் மாத்தி ரைக்கே
பெருமகீ வபுட்டை தன்பாற்

குற்றமில் சதானி கப்பேர்
குமரனைப் பயந்தாய் மன்னே.

(இ-ள்.) சொற்ற-கீழ்ச்சொல்லிய, பாண்டவரில்-பாண்டு

புத்திரர் ஐவரில், பார்த்தன்-அருச்சுனன், சுபத்திரைக்கு-சுபத்திரையினிடத்தில், அபிமன்-அபிமன்யுவை, தந்தான்–பெற்றுக் கொடுத்தான்; அவனும்-அந்த அபிமன்யுவும், உத்திரைபால்-(விராடன் மகளாகிய) உத்தரையினிடத்து, பரிச்சித்து வழங்கிட-பரீட்சித்தாகியவனைப் பெற்றிட, (அவனும்) மாத்திரைக்கே-பத்திரவதி யென்பவளுக்கே, உன்னைப் பெற்றனன்-(ஜனமேஜயனாகிய) உன்னைப் பெற்றோன்: பெரும!-பெருமை பொருந்தியவனே!, நீ—, வபுட்டை தன்பால்–வபுஷ்டமை யென்பவளிடத்தே, குற்றம் இல்-குற்றமற்ற, சதானிகப்பேர் குமரனை-சதானீகன் என்னும் பெயருடைய புதல்வனை, பயந்தாய்-பெற்றெடுத்தாய்: (எ-று.)—மன், ஓ-ஈற்றசை.

சுபத்திரை-கிருஷ்ணனுக்குத் தங்கை: இவள் அருச்சுனனை மணந்து அபிமனைப் பெற்றோள்: பார்த்தன்-பிருதையின் மகன்; (பிருதை-குந்தி) இது அருச்சுனனுக்குச் சிறப்பாக வழங்கும்: காரணவிடுகுறி. உத்தரை-விராடன் மகள்: அபிமன்யுவுக்கு மணஞ் செய்விக்க, பரீட்சித்து பிறந்தான்: இவன் கர்ப்பத்தினின்று இறந்தே பிறக்கக் கிருஷ்ணன் பாதம்பட்டதனால் அந்தச் சிசுவுக்கு உயிர் உண்டாயிற்று. "குலமெல்லாம் பரிக்ஷீணமான பின் இவன் பிறந்ததனால், இவனுக்குப் 'பரிக்ஷித்து' என்பது பெயர் என்று சுபத்திரை பெயரிட்டாள். பரிச்சித்து-பரீட்சித்து என்பதன் சிதைவு. இவன் பத்திரவதி என்பவளை மணந்தான். அப்பெயரைப் பாகவதம் இராவதி என்று வழங்கும். இது இங்கு மாத்திரை எனவந்துளது. இவளை உத்தரகுமாரன் மகள் என்பர். உத்தரகுமாரன்-விராடனது இளைய மகன். வபுட்டை-வபுஷ்டமை: இவள் காசி தேசத்து ராஜாவாகிய ஸ்வர்ணவர்மா என்பவனின் மகள். (29)

30. அசுவமேததத்தன் ஈருகக்கூறி, வமிசம் முடிய வைத்து, மொத்தம் சந்திரன் தொடங்கி இவன் வரை ஆறு வமிசங்கள் ஆயினமை கூறும்.

மைந்தனும் வைதே கிப்பேர் மாதினுக் கசுவ மேத
வந்தனைப் பயந்தான் மற்றோன் வயிறுதிப் பவர்கள் யாரோ
இந்தாதி யிவனீறாக விருத்தியா றேழ தாகும்
உந்தனுக் கிவைவி யாதன் அருளினு லுரைத்தே னம்மா.

(இ-ள்.) மைந்தனும்-சதானீகனும், வைதேகிப்பேர் மாதி

னுக்கு-விதேஹ ராஜாவின் மகளாவ வைதேகி என்பவளிடத்து, அசுவமேதவந்தனை-அசுவமேத தத்தன் என்பவனை, பயந்தான்-பெற்றான்; [ஆகவே] இந்து ஆதி-சந்திரன் முதலாகத் தொடங்கி, இவன் ஈறுக-இந்த அசுவமேததத்தன் முடிவாக, விருத்தி-ஆண்ட வமிசங்கள், ஆறு-ஆறு ஆகும்; (இனி) மற்றோன் வயிறு உதிப் பவர்கள் யாரோ-இந்த அசுவதத்தனின் வயிற்றிலே பிறப்பவர்கள் யாராயிருந்தாலும், (அவர் முதற்கொண்டு) ஏழதாகும்-(ஆறும்) வமிசம் ஏழாய்விடும்; உந்தனுக்கு-ஜனமேஜயராஜனை உனக்கு, இவை-இந்த வமிசாவளிகளை, வியாதன் அருளினல்-வியாச பகவா னின் கிருபையினல், உரைத்தேன்-(குழம்பாமல்) சொல்லி முடித் தேன்; அம்மா-என்ன ஆச்சரியம் ! (எ-று).

ஆறு வமிசங்கள்: (1) சந்திர வமிசம் (2) பூரு வமிசம் (3) பரத வமிசம் (4) குரு வமிசம் (5) சந்தனு வமிசம் (6) பாண்டு வமிசம். வைதேகிப்பேர்-விதேக ராஜன் மகளாதலின் வைதேகி எனப் பட்டாள்: தத்திதாந்தநாமம். வியாசர் அருளில்லையேல் குழப்ப மில்லாமல் என்னல் சொல்ல முடியாது என்ற கருத்தை 'அம்மா' என்ற வியப்பிடைச் சொல்லால் பெறவைத்தார் வைசம்பாயனர் என்க. (30)

31. சந்தனு தொடங்கி நூற்றைவர் ஈறுகவுள்ள சரிதத்தை யியம்பவேண்டுதல் கூறும்.

என்னமா முனிவன் கூற விறைபணிந் திவர்க டம்மின்
மன்னுசந் தனுவை யாதி வகுக்குநூற் றைவ ரீறாய்த்
துன்னினர் சரித மெல்லாந் தொகுத்தனை விரித்தி யின்னும்
என்னமா தவமே யென்ன விருடியு மியம்ப லானன்.

(இ-ள்.) என்ன-என்று (ஜனமேஜயனை நோக்கி), மா முனிவன் கூற-சிறந்த வைசம்பாயனர் சொல்ல, இறைபணிந்து-மன்னவ னுகிய ஜனமேஜயன் வணங்கி, 'இவர்கள் தம்மின்-இவர்களுக் குள்ளே, மன்னு சந்தனுவை ஆதி-நிலையாக நிற்கும் சந்தனுவை முதலாகக்கொண்டு தொடங்கி, வகுக்கும்-கௌரவர் பாண்டவர் என இருபாலாராக வகுக்கநின்ற, நூற்றைவர் ஈறாய்-நூற்றைந்து பேர் இறுதியாக, துன்னினர்-பூவுலகிற்கு வந்தவர், சரிதம் எல்லாம்-சரித்திரம் முழுவதையும் (ஒன்றையும்விடாது), இன்னும்-மேலும், தொகுத்தனை-தொகுத்து (வகைப்படுத்தி), விரித்தி-விரி வாகச் சொல்வாய், என்ன-என்று ஜனமேஜயன் சொல்லிப் [பிரார்த்திக்க], இருடியும்-வைசம்பாயன ரிஷியும், மா தவமே

என்ன-"நான் செய்த தவத்தின் பாக்கியம்" என்று மகிழ்ந்து, இயம்பலானன்-(அவர்கள் வரலாற்றைச்) சொல்லலானன்;(எ-று). —இங்ஙனம் அடுத்த சருக்கத்திற்குத் தோற்றுவாய் செய்தவாறு.

நூற்றைவர்:—கௌரவர்கள்-நூறுபேர்; பாண்டவர்-ஐந்து பேர். கௌரவர் நூறுபேரும் திருதராட்டிரன் புதல்வர்கள். பாண்டவர் ஐவரும்-பாண்டுவின் புதல்வர்கள். இவர்கள் சரிதம்-மகாபாரதமாகும்: எனவே, தொகுத்து விரித்துச் சொல் என்றூர், அதாவது முக்கிய நிகழ்ச்சிகளைக் கோவைபடத் தொகுத்து, அவற்றை விவரமாகப் பெருக்கச் சொல்லுதல். மா தவமே என்றது—"மாதவன் சரிதமும் இடையிடை வழங்குதலால்" என்க. (31)

துட்டியந்தச் சருக்கம் முற்றிற்று.

பதினேராவது

சந்தனுச் சருக்கம்

சந்தனுச் சருக்கம்—சந்தனுவைப் பற்றிய சருக்கம் என விரியும்: இரண்டனுருபும் பயனுமுடன்றொக்கதொகை. சந்தனுவினது சருக்கம் எனப் பொருள்கொண்டால் ஆறும் வேற்றுமைத் தொகை.

வேறு

1. சந்தனு வேட்டையாடிக் கங்கைத்துக் கங்கையை யடைதல்.

மானகம் பெறுமதி மரபிற் சந்தனு
கானக வேட்டைபோய்க் கங்கைத்து நீர்நசை
தானகங் கொண்டவண் டரையில் வந்திடும்
வானகக் கங்கையாண் மருங்குற் றனரோ.

(இ-ள்.) மான் அகம் பெறு மதி மரபில்-மானைத் தன்னிடத்திலே கொண்டுள்ள சந்திரனின் வமிசத்தில் வந்த, சந்தனு-சந்தனு ராசன், கானகம் வேட்டை போய்-காட்டிற்கு வேட்டையாடப் போய், கங்கைத்து-கங்கைப்படைந்து (அதனுல்) நீர்நசை தான் அகம் கொண்டு-நீர் வேட்கையுற்று அதனைத் தீர்க்க உளங்கொண்டு, அவண்-அவ்விடத்து, தரையில் வந்திடும் வானகக் கங்கையாள் மருங்கு-பூமியில் இறங்கிவந்த ஆகாய கங்கா நதியின் [பெண் தெய்வத்தின்] பக்கலை, உற்றனன்-அடைந்தான்; (எ-று). அரோ-ஈற்றசை.

சந்திரனின் மானைக் களங்கம் என்பர்: மான் களங்கம்-சந்திர களங்கம். அந்தக் களங்கத்தைக் கொண்ட சந்திர மரபில் சந்தனு ஒரு களங்கத்தோடு தோன்றினன்; இது மேலை 11ஆங் கவியால் தெரியவரும். (அதாவது-பிரமசபையில் ஒருதரம் கங்காதேவியின் ஆடை விலகியபோது உள் அவயவத்தை வருணனுகிய நீர்க்கடவுள் பார்த்து மகிழவே, அவனைப் பிரமதேவர் இகழ்ந்து சாபமிட அவன் சந்தனு என்ற மன்னனுக வந்தான் என்பது.) [கங்காதேவியும் பூமியில் மானிடப் பெண்ணுகப் பிறக்கும்படி சாபம் இடப்பட்டது].

இது முதல் பதினெரு கவிகள்-பெரும்பாலும் மூன்றுஞ் சீரொன்று மாச்சீரும், மற்றை மூன்றும் விளச்சீர்களாகிய

கலிவிருத்தங்கள்: இவற்றில் நான்காஞ்சீர் கூவிளச் சீராகவே நிற்கும். (1)

2. அப்போது கங்கையின் பெண்தெய்வம் தோன்றியதைச் சந்தனு காணுதல்.

அயன்சபித் திடும்படி யந்த மாநதி
பயன்பெறப் பதுமையின் படிவங் கொண்டுதிண்
புயன்முனம் புகவவன் பூவை பொற்பறல்
அயர்வற விழிகளா லருந்தி னனரோ.

(இ-ள்.) அயன் சபித்திடும்படி-பிரமதேவன் இட்ட சாபத்தின் படி, அந்த மாநதி-அந்தச் சிறந்த கங்காநதிதேவி, பயன்பெற-அந்தச் சாபத்தின் விளைவை யநுபவிக்க, பதுமையின் படிவம் கொண்டு-இலட்சுமி போன்ற பேரழகு கொண்ட வடிவங் கொண்டு, திண்புயன் முனம் புக-வலிய தோள்களையுடைய சந்தனுவின் முன்னர் வர, அவன்–, பூவை-அப் பெண்ணின், பொற்பு அறல்-அழகாகிய நீரை, அயர்வு அற-தன் களைப்புச் சோகம் நீங்கும்படி, விழிகளால்-கண்களால், அருந்தினன்-பருகினன்; (எ-று) அரோ–ஈற்றசை.

நீர்நசை போகத் தண்ணீர் பருகியவன், அந்நதி தெய்வத்தின் அழகையும் பருகினன் என்றது நயம். பதுமை-லக்ஷ்மி: இரண்டாவது லக்ஷ்மியே நேரே வந்தாற்போலிருந்தது என்றது வியாச பாரதமும். பூவை-நாகணவாய்ப்புள்; பேச்சினிமைக்கு உவமையாக வருவது: உவமவாகுபெயர். அறல்–நீர். பொற்பறல்–உருவகம். (2)

3. கங்கையைக் காட்சியிற் கண்ட சந்தனுவின் ஐயமும் தெளிவும்.

தூய்மைகொள் தெய்விகத் தோகை யோவென
வாய்தரு மிடையவ ளடிக ளம்புவித்
தோய்தலின் மானிடத் தோகை யென்றுகொண்
டோய்தரு மிடைக்கர சுரைப்ப தாயினன்.

(இ-ள்) தூய்மைகொள்-பரிசுத்தமான, தெய்விகத் தோகையோ-தெய்வத்தன்மை பொருந்திய மயிலோ (இவள்), என-என்று, ஆய்தரும் இடை-ஆராயும்போது, அவள்-அந்தப்

பெண்ணினது, அடிகள்-பாதங்கள், அம்புவி தோய்தலின்-பூமியில் படுதலால், மானிடத் தோகை என்று கொண்டு-மானுட மயிலே (இவள்) என்று தெளிவுகொண்டு துணிந்து, ஒய்தரும் இடைக்குத்தளர்கின்ற இடையையுடைய அக்கங்கையாளாகிய பெண்ணுக்கு, அரசு-சந்தனு, உரைப்பது ஆயினன்-சொல்ல ஆரம்பித்தான்; (எ-று) அவன் உரைப்பதை மேற்காண்க.

தெய்விகத் தோகையோ மானிடத் தோகையோ என்பது ஐயம். பாதம் தோய்தலில் மானுட மகள் என்று துணிவு பிறந்தது. தோகை-மயில் போன்ற சாயலையுடையவளுக்கு உவமவாகுபெயர். இடை-சமயம், பொழுது. ஒய்தல்-தளர்தல், துவளுதல், ஒசிதல். இடை-இடையை யுடையாளுக்குச் சினையாகு பெயர். (3)

4. சந்தனு, ''நீ கன்னிகையாயின் என்னை மணக்க விருப்ப முண்டோ?'' என்று கேட்க, அக் கங்கையும் 'நான் என்ன செய்யினும் கேட்பதில்லை யென்றுல் மணப்பேன்' எனல்.

[இரு கவிகள்—ஒரு தொடர்.]

மங்கைநீ கன்னியேல் வதுவைக் கென்னினும்
புங்கவ ரிலையுளம் புகறி யென்னவந்
நங்கையு முலகொவா நடைசெய் வேனதை
அங்கிதம் புரிதியே லணைவல் யானரோ.

(இ-ள்.) மங்கை நீ-பெண்ணுகிய நீ, கன்னியேல்-மணமாகாதவளாயிருந்தால், வதுவைக்கு-விவாஹத்திற்கு, என்னினும்-என்னைக்காட்டிலும், புங்கவர்-சிறந்த புனிதர், இலை-இல்லை; உளம்-உன் மனவெண்ணத்தை, புகறி-சொல்வாய், என்ன-என்று சந்தனு கேட்க, அ நங்கையும்-அந்தக் கங்கையாகிய பெண்ணும், உலகு ஓவா நடை செய்வோர்-உலகத்தாருக்கு ஏற்காத ஒழுக்கத்தை மேற்கொண்டு செய்வேன் (யான்); அதை-அதற்கு, அங்கிதம் புரிதியேல்-அங்கீகாரம் வழங்குவாயானால், யான்-நான், (உன்னை) அணைவல்-மணப்பேன்; (எ-று) அரோ-ஈற்றசை.

நடை-ஒழுக்கம். அங்கிதம்-சம்மதம், உடன்பாடு, அங்கீகாரம். என்னின்-இன், ஐந்தனுருபு உறழ்பொரு. இலை-இல்லையென்பதன் இடைக்குறை. புகறி-முன்னிலை ஏவல் வினைமுற்று. ஓவா-ஒவ்வா, இடைக்குறை. அங்கிதம்-தொழிற்பெயர். அணைவல்-தன்மையொருமை வினைமுற்று. (4)

5. சந்தனு அவள் நிபந்தனைக்கு உடன்படல்.

மறுத்தியே லன்றுகொள் வடிவ மாற்றியான்
வெறுத்துனை யகல்வலென் விரத மற்றிவை
நிறுத்துவை யேலக நேர்கென் றுளவன்
குறித்தசொற் கிசைந்துடன் கொண்டு போயினன்.

(இ-ள்.) மறுத்தியேல்-என் நிபந்தனையை மறுத்துச் சொல் வாயானால், அன்று-அற்றைப்பொழுதே, கொள் வடிவம் மாற்றி-யான் கொண்டுள்ள இந்த மானிடப் பெண்வடிவத்தை விட்டு, யான்-நான், உனை வெறுத்து-உன்னை புறக்கணித்து, அகல்வல்-இந்த இடம் விட்டுப் போவேன்: என் விரதம்-என் ஆணை: இவை-இந்த விதிகளை, நிறுத்துவையேல்-கடைப்பிடித்துப் பிறழாது ஒழுகுவாயானால், அகம் நேர்க என்றுள்-(என்) சரீரத்தைக் கிட்டுவாய் என்றுள்: அவன்-அந்தச் சந்தனு, குறித்த சொற்கு இசைந்து-(அவள்) வற்புறுத்திச் சொல்லிய வார்த்தைகளுக்கு உடன்பட்டு, உடன்கொண்டு போயினன்-(அவளை) தன்னுடன் அழைத்துக்கொண்டு மனைக்குப் போயினன்; (எ-று.)

அகல்வல்-தன்மையொருமை வினைமுற்று. அகம்-சரீரம், உடம்பு. நேர்தல்-கிட்டுதல். இனி, அகம் நேர்க என்பதற்கு-வீடு சேர்வோம் என்றலுமாம். நேர்கென்றுள்—வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். (5)

6. சந்தனு கங்கையை மணந்து மகிழ, அவள் கருக்கொண்டு பெற்ற மைந்தனைக் கங்கை நீரிலெறிதல்.

சுருதியின் மணம்புரிந் தணங்குந் தோன்றலும்
இரதியும் மதனனு மென்ன வைகுநாட்
கருவுறீஇ யவளொரு காளை யீன்றதைப்
பொருதிரைக் கங்கையிற் புதைத்திட் டாளரோ.

(இ-ள்.) சுருதியின்-வேத விதிப்படி அக்னி சாட்சியாக, மணம் புரிந்து-விவாஹஞ் செய்துகொண்டு, அணங்கும்-கங்கை யாளும், தோன்றலும்-சந்தனுவும், இரதியும் மதனனும் என்ன-ரதிதேவியும் மன்மதனும்போல, வைகும்நாள்-இணைந்து மகிழ்ந்து வருநாளில், அவள்-அந்தக் கங்கையாள், கரு உறீஇ-கருவுற்று, ஒரு காளை ஈன்று-ஒரு பிள்ளையைப் பெற்று, அதை-அந்தக் குழந்தையை, பொரு திரை கங்கையில்-ஒன்றோடொன்று மோதுகின்ற

அலைகளைக் கொண்ட கங்கையாற்று நீரில், புதைத்திட்டாள்-வீசியெறிந்தாள்; (எ-று.) அரோ-ஈற்றசை.

கங்கையிற் புதைத்தல்-கங்கை நீரில் மறைந்திடும்படி வீசியெறிந்திடுதல். காளை-உவமவாகுபெயர். பொருதிரை-வீசுந்தொகை. (6)

7. வருந்தினுயினும் சந்தனு முன்னிலும் அவளிடம் அன்பு கொண்டிருக்க, அவள் பின்னும் ஆறு குழந்தைகளைப் பெற்றவுடன் கங்கையிலெறிந்து மாய்க்கவும் அவன் கண்டும் வாளா விருத்தல்.

மன்னவன் வெருவிமுன் வாய்மை யோர்ந்தவள்
தன்னுடன் முன்னினுந் தழுவி வைகுநாட்
கன்னிமற் றறுவரைக் களிப்பற் றீன்றுகொன்
றன்னதி புதைத்தன ளரசுங் காணவே.

(இ-ள்.) மன்னவன்-சந்தனுராசன், வெருவி-அச்சமுற்று (இருந்தானுயினும்), முன்-மணப்பதற்குமுன் (கொடுத்துள்ள), வாய்மை ஓர்ந்து-[நிபந்தனையாகிய] வாசகத்தை எண்ணிப் பார்த்து, அவள் தன்னுடன்-அந்தக் கங்கையாளிடம், முன்னினும் தழுவி வைகுநாள்-முன்னிருந்ததைக் காட்டிலும் மிக்க அன்பு கொண்டு மருவி வாழ்ந்திடும் நாள், கன்னி-அந்தக் கங்கையாள், மற்று-மேலும், அறுவரை-ஆறு குழந்தைகளை, களிப்பற்று-(உண்மையான) மகிழ்ச்சியின்றி, ஈன்று-பெற்று, கொன்று-பெற்றவுடன் அவர்களைக் கொன்று, அரசும் காணவே-சந்தனு ராசனும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, அன்னதி புதைத்தனள்-அந்த நதியிலே வீசியெறிந்தாள்; (எ-று.)

முன்னினும்-ஐந்தாம் வேற்றுமைப் பொருள் தந்தோரிடைச் சொல். அன்னதி—அந்நதி: எதுகை நோக்கி நகரம் னகரமாயிற்று. 'காணவே' என்றதால்-கண்டும் வாளாவிருந்தான் எனப் பெறவைத்தபடி. (7)

8. உலகோர் கங்கையாளின் செயலுக்கு விம்மியேங்க, மங்கை எட்டாம் முறை ஈன்றுளென்று கேட்டு மன்னவன் அவளிடம் செல்லல்.

பெற்றதா யெழுவரைப் பிழைத்திட் டாளென
வெற்றிகொள் உலகுளார் விம்மி யேங்கினர்

மற்றொரு சுதனையம் மாது யிர்த்ததை
ஒற்றுரைத் திடவர சுணர்ந்தங் கேகினன்.

(இ-ள்.) எழுவரை-ஏழுபேரை, பெற்றதாய்-பெற்றெடுத்த தாயாகிய கங்கையாள், பிழைத்திட்டாள் என-நீரில் புதைத்துக் கொன்று பிழை செய்திட்டாள் என்று, வெற்றிகொள் உலகுளார்-மங்கையர்கள், விம்மி ஏங்கினர்-விம்மி அழுதார்கள்: [இங்ஙனிருப்ப], அ மாது-அந்தக் கங்கையாள், மற்றொரு சுதனை-எட்டாவதாக மற்றுமொரு பிள்ளையை, உயிர்த்ததை-பெற்றதை, ஒற்று உரைத்திட-ஒற்றர்கள் சொல்லக் கேட்டு, அரசு-சந்தனு, உணர்ந்து-அறிந்து, அங்கு-அக் கங்கையாளாகிய மனைவியிடத்து, ஏகினன்-சென்றான்; (எ–று).

வெற்றிகொள் உலகு-மங்கையருலகம். அதாவது, தமது அழகாலே பிறரை மயக்கி வெற்றிகொள்கின்றவர் என்று மங்கையர்க்காகியது. மற்றும் ''நிறைமகவுடையவர் நெறிசெலீஇம் பொறிக், குறைமகக் குறையினும் கொடுப்பராமுயிர்'' என்றவாறு, பல புதல்வரையுடைய மங்கையரும் தமது மகவுள் பொறிக் குறையையுடைய ஒரு மகவு உயிர் நீங்கினும் தம்முயிரை மாய்த்துக்கொள்வர்: அங்ஙனிருப்ப, தான் பெற்ற புதல்வர் குற்றமற்ற பேரழகுடையவரெனக் கண்டும் ஏழுபேரைச் சிறிதும் அருளின்றிக் கொன்றனளே என்று விம்மியேங்கினர் மகளிர் என்க. (8)

9. சந்தனு அக்குழந்தையைத் தன்கையிற் கொண்டு, அவனைக் கொன்றிடாதிருக்குமாறு வேண்ட, அவன் செயலைக் கங்கையாள் கண்டித்தல்.

கைத்தலத் தேந்தியிக் காளை தன்னைநீ
பத்தியி னருள்கெனப் பணிய நீயெழு
புத்திர ரிறுத்தநாட் பொறுத்தின் றேங்குவ
தெத்திற முரையென வேந்த லோதுவான்.

(இ-ள்.) கைத்தலத்து ஏந்தி-தன் கையில் ஏந்திக்கொண்டு, (சந்தனு) இ காளை தன்னை-இந்தப் பிள்ளையை, நீ—, பத்தியின்-அன்போடு, அருள்க என பணிய-உயிர் போக்கிடாது அருள் புரிவாய் என்று வேண்டி வணங்க, (அப்போது கங்கையாள் சந்தனுவை நோக்கி), 'நீ எழு புத்திரர் இறுத்த நாள் பொறுத்து-

ஏழு புத்திரர்களையும் (நீரில் வீசியெறிந்து) யான் மூடித்த நாட்களிலே நீ [தடை செய்யாது] பொறுத்து, இன்று-இந்த நாள் மட்டும், ஏங்குவது-பொறுது வருந்தித் தடைசெய்வது, எத்திறம்-எக்காரணங்கொண்டு?, உரை - சொல்வாய்', என - என்று (கண்டித்து) வினவ, ஏந்தல்-அரசனுகிய சந்தனு, ஓதுவான்-சொல்லலானுன்; (எ-று.) அவன் கூறியதை அடுத்த கவியிற் காண்க.

மன்னவனுகிய சந்தனு பணிந்தது—தன் தேவியைத் தன் கருத்துக்கு இசைவிக்க வேணுமென்று எண்ணி. அருள்கெனவியங்கோளின் அகரவீறு தொகுத்தல். எத்திறம்-எழுவர் மைந்தரைக் கொன்ற அன்று என் செய்தாய்: இப்போது எட்டாவது குழந்தைக்காகக் கொண்ட இரக்கம் அப்போதெல்லாம் எங்கே போய்விட்டது என்று கண்டித்தபடி. ஏந்தல்-ஆண்பாற் சிறப்புப் பெயர். (9)

10. சந்தனு தான் தடுத்தமைக்குக் காரணம் கூறி, அவளை நோக்கி, 'நீ பெற்ற புதல்வரைக் கொன்ற காரணம் என்?' என்று வினவ, கங்கையாள் கூறத் தொடங்குதல்.

பொறுத்ததன் றுரைத்தசொற் பூண்டின் றம்மொழி
மறுத்ததம் புவிக்கொரு மகவு வேண்டிநீ
வெறுத்தெழு வரையடும் விதத்தொ டுன்செயற்
குறித்தியெற் கெனவவள் கூறு வாளரோ.

(இ-ள்). பொறுத்தது-நான் (நீ எழுவரைக் கொன்றபோதும்) பொறுத்திருந்தது, அன்று உரைத்த சொல் பூண்டு-(நம்) மணத்திற்கு முன்னர் அக்காலத்துச் சொன்ன நிபந்தனைச் சொல்லை மேற்கொண்டு: இன்று-இப்போது, அ மொழி மறுத்தது-அந்த நிபந்தனைச் சொல்லை மீறித் தடை செய்தது, அம் புவிக்கு ஒரு மகவு வேண்டி-அழகிய இந்தப் பூமியை (எனக்குப் பின்னர் ஆளுவதற்குச் சந்தானமாக) ஒரு பிள்ளையை விரும்பி: எற்கு-எனக்கு, (இப்போது) நீ—, எழுவரை வெறுத்து அடும் விதத்தொடு-ஏழு குழந்தைகளை வெறுத்து நீரில் வீசியெறிந்து கொன்ற முறைமையோடு, உன் செயல் குறித்தி-நீ செய்த காரியத்தின் காரணத்தையும் சொல்லுவாய், என-என்று சந்தனு கேட்க, அவள் கூறுவாள்-அந்தக் கங்கையாள் கூறுபவளானுள்; (எ-று). அரோ-ஈற்றசை. கங்கையாள் கூறுபவற்றை மேலைக் கவிகளிற் காண்க.

சந்ததி விருத்திக்காகவும் தனக்குப் பின்னர் நாட்டில் அராஜகம் ஏற்படக்கூடாது என்பதற்காகவும் மன்னவன் மகவு வேண்டியது. எற்கு-எனக்கு என்பதன் குறுக்கல். குறித்தி-முன்னிலை ஏவல் வினைமுற்று. (10)

11—14. (நான்கு கவிகள்—ஒரு தொடர்)—கங்கையாள் தன் சாப வரலாறு கூறி, அஷ்டவசுக்களின் சாபத்தைச் சொல்லிமுடிக்க, சந்தனு 'இன்னமொரு புதல்வனைப் பெற்ற பின் விண்ணுலகு சேரலாம்' என்ன, அவள் அவனை நோக்கிப் 'பல வகைப் போகங்களையும் நுகர்ந்து அரசியலை நிறுத்திப் பின்பு வருதி' எனக் கூறி, 'இந்த மகவைக் காளைப் பருவம் வரும் வரையில் வளர்த்து மீட்டும் உம்மிடம் அளிப்பேன்' என்று சொல்லி, எட்டாம் மகவோடு தன்னிருப்பிடம் செல்லல்.

11. கங்கையாள் தம் சாப வரலாறு குறித்தல்.

கங்கையான் வருணனீ கமலன் பேரவை
தங்குழி யனிலனுற் சரிய வென்கலை
அங்குநோக் குனைப்புவி யவத ரித்தெனை
டிங்கித முறச்சபித் திறையிங் கேவினன்.

(இ-ள்). யான்-நான், கங்கை-கங்காதேவி; நீ—, வருணன்: (ஒரு சமயம்) கமலன்-பிரமதேவனின், பேர் அவை-பெரிய சபையிலே, தங்கு உழி-நாம் தங்கியிருந்தபோது, என் கலை-என் ஆடை, அனிலனுல்-வாயுதேவனுல், சரிய-சற்று விலக, அங்கு-அந்த அவயவத்தினிடத்து, நோக்கு உனை-பார்த்த நின்னை, எனைடு புவி அவதரித்து-என்னோடு பூமியிலே பிறந்து, இங்கிதம் உற-(எண்ணிய) கருத்து முற்றுப்பெறும்படி, சபித்து-சாபமிட்டு, இறை-அந்தப் பிரமதேவன், இங்கு-இப்பூவுலகத்துக்கு, ஏவினன்-இருவரையும் அனுப்பினன்; (எ-று).

வருணன் பூமியில் குருகுலத்திற் சந்தனுவாகப் பிறக்க, கங்கையாளும் மானுட மகளாகப் பிறந்தாள். வியாச பாரதத்தின்படி, இட்சுவாகு வமிசத்தவனான மஹாபிஷக் என்ற அரசனே தான் செய்த தவவேள்விகளால் சத்தியலோகத்தைச் சேர்ந்திருந்தானாக. அவனே கங்கையின் அவயவத்தைக் கண்டதனுற் சபிக்கப்பட்டானென்று அறிகிறோம். பால பாரதத்திலும் அங்ஙனமே யுள்ளது: இங்கிதம்-கருத்து, எண்ணம். (11)

வேறு

12—14. மூன்று கவிகளில்—கங்கையாள் சந்தனுவுக்கு அஷ்டவசுக்கள் சாபத்திற் காளாயினமையும், சாப விமோசனமும் கூறி, இறுதியில் பெற்ற புதல்வனைத் தன்னுடன் கொண்டு மீளுதல்.

12. அஷ்டவசுக்களை வசிட்டன் சபித்தல்.

தரைவரு மெனைவந் திறைஞ்சியெண் வசுக்கள்
தமிலொரு வன்மனை யவடான்
நரமடந் தையினை நண்புகொண் டவட்கு
நரைதிரை மாற்றுவான் புகன்ற
உரைகொடு கபிலை கவர்ந்தமை வசிட்ட
னுருத்துல குதித்திடச் சபித்தான்
வெருவியெம் பதமென் றெய்துவ தென்று
வேண்டினம் அவனருள் கொண்டே.

(இ-ள்). எண்வசுக்கள்-அஷ்டவசுக்கள், தரை வரும் எனை வந்து இறைஞ்சி-பூமியை நோக்கி அவதரிப்பதற்காக வந்து கொண்டிருந்த என்னை வந்து வணங்கி (த் தம் வரலாறு சொல்லலானார்கள்): தமில் ஒருவன் மனையவள்தான்-எங்கள் எட்டுப்பேரில் ஒருவனுடைய மனைவிதான், நரமடந்தையினை நண்புகொண்டு-மானுட மகள் ஒருத்தியைச் சிநேகங்கொண்டு, அவட்கு-அத் தோழிக்காக (அவளது), நரைதிரை மாற்றுவான்–மூப்பினை மாற்றி யௌவனமாக்கும் பொருட்டு, புகன்ற–சொன்ன, உரை கொடு-வார்த்தையை மேற்கொண்டு, [நாங்கள் அதனைப் பூர்த்தி செய்ய] கபிலை கவர்ந்தமை-காமதேனுவைத் திருடியமையை, வசிட்டன்-வசிட்ட முனிவன் (அறிந்து), உருத்து-கோபித்து, உலகு உதித்திட சபித்தான்-இந்தப் பூலோகத்திலே பிறக்கும்படி சபித்திட்டான்; (நாங்கள்) வெருவி-அந்தச் சாபத்திற்குப் பயந்து, எம் பதம் எய்துவது என்று-எங்களுடைய வசுநிலையைத் திரும்ப அடைவது என்றைக்கு, என்று அவனருள் கொண்டே வேண்டினம்–என்று அவனருளை முன்னிட்டே பிரார்த்தித்தோம்; (எ-று).

ஆகாச கங்கையாயிருந்தவள் பூமியிலிறங்கும்போது வானத்திலிருந்து சாபத்தினாலே கீழே இறங்கி வந்துகொண்டிருந்த வசுக்கள் எண்மரும் அக் கங்காதேவியை வணங்கித் தம் வரலாறு

கூறினர். அட்டவசுக்களின் பெயர்—அனலன், அனிலன், ஆபன், சோமன், தரன், துருவன், ப்ரத்யூஷன், பிரபாசன். இவருள் கடைசியிற் கூறிய பிரபாசனின் மனைவி, மனுஷ்ய லோகத்தில் அழகிலும் யௌவனத்திலும் சோபிக்கின்ற ஜிதவதி யென்று பேருள்ள ராஜகுமாரியைத் தோழியாகக் கொண்டிருந்தாள். அவள் பேரழகு: உசினர் என்ற ராஜரிஷியின் புதல்வி. காமதேனுவின் பாலைக் குடிப்பவர் மூப்பும் பிணியும் இல்லாதவராகுவராதலின், இவள் தன் கணவனுகிய பிரபாசனை அந்தப் பசுவைக் கன்றோடு கவர்ந்து வரும்படி கூறினுள். அவன் பசுவைக் கவரச் செல்ல அவனுக்கு உடந்தையாயிருந்த மற்றை எழுவரும் கூட வசிட்டன் சாபத்திற்கு உள்ளாயினர் என விவரம் அறிய வேண்டியது.

இது முதல் இருபத்தொரு கவிகள்—ஒன்று மூன்று ஐந்து ஆறுஞ்சீர்கள் விளச்சீர்களாயும், ஏனையவை மாச்சீர்களாயும் வந்த எழுசீராசிரிய விருத்தங்கள். (12)

13. அஷ்டவசுக்களில் எழுவர்க்குக் கங்கையாள் சாபவிடையீதல் கூறினள் என்பது.

எழுவரு முடனே செனித்துமீண் டிடுதீர்
இன்மொழிக் கிசைந்தவ னெடுநாள்
விழைவிலா தவனுய்ப் பயில்வனென் றனன்யாம்
விண்பத மிழந்துவந் தனமென்
றழுதன ரவர்க்கியா னயன்சபித் தலீச்சொற்
ரூழிவேந் துதிக்குமண் ணவனைத்
தழுவுழி யென்கட் செனிமின்கள் ஒருவற்
றவிர்த்துமைத் தெறுவலென் றுரைத்தேன்.

(இ-ள்.) [வசிட்ட முனிவன்] எழுவரும்-(மனைவியின் பேச்சைக் கேட்டுப் பசுவினைக் கவர்ந்த பிரபாசன் தவிர ஏனைய) ஏழுபேரும், செனித்து-பூலோகத்தில் பிறந்து, உடனே-(பிறந்த) அப்போதே, மீண்டிடுதீர்-வானுலகிற்குத் திரும்பி வந்திடுவீர்: (ஆனல்) இன்மொழிக்கு இசைந்தவன்-மனைவியின் இனிய பேச்சுக்கு உடன்பட்டுத் தீச்செயல் புரிந்த பிரபாசன் மட்டும், நெடுநாள்-பல வருட காலங்கள், விழைவிலாது-பெண்ணின்பம் அற்றவனுய், அவனுய்-(பிள்ளைப் பேறின்றி) வீணனுய், பயில்வன்-வாழ்ந்திடுவன், என்றனன்-என்று கூறினர்; யாம்-யாங்கள், விண்பதம் இழந்து வந்தனம் என்று அழுதனர்-வானுலகு வாழ்வு விடுத்து வந்தோம்

என்று முறையிட்டுப் புலம்பினர்: அவர்க்கு-அந்த வசுக்களுக்கு, யான்-கங்கையாளாகிய நான், அயன் சபித்தலே சொற்று-பிரம தேவன் (எனக்கிட்ட) சாபத்தைச் சொல்லி, ''ஆழிவேந்து-வருண பகவான், மண் உதிக்கும்-பூமியில் அவதரிப்பான்: அவனைத் தழுவுழி-அவரைக் கணவனாக நான் ஏற்குங்காலத்து, என்கண்-என்னிடத்தில் (என் உதரத்தில் வந்து), செனிமின்கள்-[நீங்கள் எட்டுப்பேரும்] பிறப்பெடுங்கள்: ஒருவன் தவிர்த்து-கடைசியில் பிறப்பவனை நீக்கி, உமை-உங்கள் ஏழு பேரையும், தெறுவல்-கொன்று [பிறவி] போக்கிடுவேன், என்றுரைத்தேன்-என்று (அவர்களுக்குச்) சொன்னேன்; (எ-று).

மனைவியின் சொல்லைக் கேட்டு விழைந்து களவாடிய பிரபாசனுக்கு மானுடனாகிப் பெண்ணின்பம் நீங்கி மண்ணுலகில் பல நாளிருந்து பிறகு தன்பதவியை யடையுமாறும், அவனுக்கு உடந்தையாயிருந்த மற்றையெழுவர்க்கும் பூமியில் மானுடப் பிறவியெடுத்து உடனே மீளுமாறும் சாபவிடை தந்தனன் வசிட்டமுனிவனென்க. அதற்கேற்பவே, கங்கையாள் வயிற்றில் எண்மரும் உதிக்க, இறுதியில் பிறந்தவனைத் தவிர ஏனை எழுவரையும் பிறந்தவுடனே கங்கை நீரில் புதைத்து வானுலகுக்கனுப்பினாள்.

இன்மொழி-பண்புத்தொகை. இனி, இன்மொழி-இனிய மொழியுடையாள் எனப் பொருள்கொள்ளின் பண்புத்தொகையன் மொழி: ஆகுபெயருமாம். அவர்க்கியான்-குற்றியலிகரம்: அலகு பெறவில்லை. ஆழிவேந்து-வருணன். ''வருணன்மேய பெருமணலுலகம்'' என்றது தொல்காப்பியம். சாபத்தால் வருணன் சந்தனு ராஜனாகப் பிறந்தான். செனிமின்கள்-முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிமேல் விகுதிபெற்று வந்தது. செனித்தல்-பிறத்தல்: வடசொல். உமை-உம்மையென்பதன் தொகுத்தல். தெறுவல்-முன்னிலை ஏவல் வினைமுற்று. (13)

14. எட்டாங் குழந்தையின் தன்மையைப் பற்றி யறிந்த சந்தனு, கங்கையாளை நோக்கி ''இன்னமொரு புதல்வனைப் பெற்றபின் விண்ணுலகு சேரலாம்'' என்று கூற, அவள் சந்தனுவை நோக்கிப் 'பலவகைப் போகங்களையும் நுகர்ந்து

அரசியலே நிறுத்திப் பின்பு மீளுக' என்று சொல்லி, இறுதியிற் பெற்ற புதல்வனோடு அகன்றமை கூறும்.

அன்னபான் மையினீ மணந்திட வென்பால்
அவரவ தரித்தன ரெழுவர்
தன்னியட் டிவனேத் தந்தன னெனவித்
தனையனே டினமொரு மகவீன்
றின்னில மளிப்பான் வைத்திரு வரும்விண்
ணெய்துவ மெனப்புவி யின்மின்
மன்னிசின் னுட்பின் வருதியிம் மகவை
வளர்த்துமீட் டளிப்பலென் றகன்றாள்.

(இ-ள்.) அன்ன பான்மையின்-அப்படிப்பட்ட தகுதியில், நீ மணந்திட-வருணனுகிய நீ சந்தனுவாகி (என்னை) மணம்புரிந்து கொள்ள, என்பால்-என்னிடத்து, அவர் அவதரித்தனர்-அந்த அட்ட வசுக்களும் பிறந்தார்கள்: [அவர்களுள்] எழுவர் தன்னை அட்டு-ஏழுபேரைக் கங்கைநீரில் வீசிக்கொன்று, இவனைத் தந்தனன் என-இந்த எட்டாமவனை உனக்குக் கொல்லாமல் கொடுத்தேன் என்று சொல்ல, (அதனைக் கேட்ட சந்தனு) "இ தனையனோடு-இந்தப் பிள்ளையோடு, இனம்-இன்னமும், ஒரு மகவு ஈன்று-ஒரு பிள்ளையைப் பெற்று, இந் நிலம் அளிப்பான் வைத்து-இந்தப் பூமியைக் காக்கும்படி வைத்து, (பின்) இருவரும்-நாம் இருவரும், விண் எய்துவம் என-விண்ணுலகு சேர்வோம்" என்று சொல்ல, [அதற்குக் கங்கையாள்], "புவியின்-பூமியில், மின் மன்னி-பெண்டிரை மணந்து அவரோடு நிலைபெற்று வாழ்ந்து, சில் நாள் பின்-சில ஆண்டுகள் கழிந்தபின்பு, வருதி-[விண்ணுலகு] வருவாய்: (யான்) இ மகவை-இந்த எட்டாம் குழந்தையை, வளர்த்து-(காளைப் பருவம் எய்தும் வரை) வளர்த்து, மீட்டு-மறு படியும் அளிப்பல்-(உம்மிடம்) சேரக் கொடுப்பேன்", என்று-என்றுகூறி, அகன்றாள்-சென்றாள்; (எ-று).

கங்காதேவி அங்கேயே அந்தர்த்தானமாயினாள் என்றது வியாச பாரதம். எட்டாவது பிள்ளை பெண்ணின்பமற்று வீணனுய்ப் பயில்வன் என்று சாபமிருத்தலால், சந்ததி விருத்தி செய்பவனுய்ப் பூமியை யாளுதற்கு ஏற்ற மற்றொரு புதல்வனைப் பெற்ற பின் இருவரும் விண்ணுலகு செல்வோமென்று சந்தனு கங்கையாளிடம் தன் கருத்தினைத் தெரிவித்தானென்க. மின்-மின்னாலைப்

போன்றவளுக்கு உவமவாகுபெயர். மின்மன்னி-மின்னேடுமன்னி மூன்றனுருபு தொக்கது. வருதி-முன்னிலை வியங்கோள் வினை முற்று. அளிப்பல்-தன்மையொருமை வினைமுற்று. தனயன்-தனையன்: போலி. (14)

15. சந்தனு கங்கையாளைப் பிரிந்து வருந்தி வாழ்ந்துவர, ஒரு நாள் வேட்டையாடி முடித்துக் கங்கைக் கரையை யடைய, அங்கு ஓர் சிறுவனைக் காணுதல்.

மகவொடு மகன்ற மடந்தையைக் கருதி
மன்னவ னின்னலுற் றொருநாட்
புகரன வமைச்சர் திரளொடு வேட்டம்
போய்விலங் களப்பில்செற் றகன்ற
சுகமொழி யுடனே மகவையு நினைந்தே
சுரநதிக் கரையடைந் திடலுந்
திகழுறு மரியின் குருளைபோ லவனோர்
சிறுவனைப் புனலிடைக் கண்டான்.

(இ-ள்.) மன்னவன்-சந்தனுராசன், மகவொடும் அகன்ற மடந்தையைக் கருதி-குழந்தையோடும் தன்னை விட்டுப் பிரிந்து போன மனைவி கங்கையாளை நினைந்து, இன்னலுற்று-வருந்தி (வாழ்ந்துவர), ஒருநாள்—, புகர் அன அமைச்சர் திரளொடு-சுக்கிராசார்யர் போன்ற மந்திரிமார் குழுவோடு, வேட்டம் போய்-(கானகத்திற்கு) வேட்டையாடுதற்குப் போய், அளப்பு இல்-அளவற்ற (மிகுதியாக), விலங்கு செற்று-மிருகங்களைக் கொன்று, (பின்) அகன்ற சுகமொழியுடனே-தன்னைவிட்டுப் பிரிந்துபோன கிளி போன்ற பேச்சினிமையையுடைய கங்கையாளோடு, மகவையும் நினைந்தே-குழந்தையையும் நினைத்துக்கொண்டே, சுர நதிக் கரை அடைந்திடலும்-கங்காநதிக் கரையை அடைந்ததும், அவன்-அச் சந்தனு, திகழுறு-விளங்குகின்ற. அரியின் குருளை போல்-சிங்கக்குட்டி போன்ற, ஓர் சிறுவனை-ஒரு வாலிபனை, புனலிடை கண்டான்-நீரினிடைப் பார்த்தான்; (எ-று.)

அன-அன்ன: உவமவுருபு. சுகமொழி–உவமைத்தொகை. மொழி-மொழியை யுடையாளுக்கு ஆகுபெயர்: சுகமொழி-உவமைத் தொகையன்மொழியெனினுமாம். (15)

16. வந்த சிறுவன் ஒரு மோகனக்கணையை யேவிச் சந்த னுவை வீழ்த்திப் புனலில் மறைந்திட, கங்கையாள் மன முருகித் தன் மைந்தனோடு நதியினின்று வெளிவந்து, அரசனைக் கையாலெடுத்தணைத்துப் புத்திரனைக் கொடுத் திட்டுக் கூறுதல்.

கண்டிவன் குகனே சயிந்தனே மதனே
கண்ணனே வென்றுளத் தையங்
கொண்டவப் பொழுதோர் மோகனக் கணையக்
குமரனுய்த் தப்புனன் மறைந்தான்
மண்டலத் தரசன் மண்மிசை விழுவம்
மகவொடு பகீரதி யுருவம்
பண்டையி னெதிர்ந்தவ் வரசெடுத்தணைத்தப்
பாலனைக் கைக்கொடுத் திசைப்பாள்.

(இ-ள்.) கண்டு-சந்தனு பார்த்து, இவன்-இந்தச் சிறுவன், குகனே-முருகனே, சயிந்தனே-(இந்திரன் மகனுகிய) சயந்தனே, மதனே-மன்மதனே, கண்ணனே-கண்ணபிரானே, என்று—, உளத்திலே-மனத்திலே, ஐயம்கொண்ட-சந்தேகப்பட்ட, அப் பொழுது-அந்தச் சமயத்தில், ஓர் மோகனக்கணை-மோகத்தை யுண்டாக்கவல்ல ஒரு அம்பை (மோகனஸ்திரத்தை), அ குமரன்-அந்தச் சிறுவன், உய்த்து-(சந்தனு மார்பில் தைக்கும்படி) செலுத்தி, அ புனல் மறைந்தான்-அந்தக் கங்கை நீரினிடை மறைந்துபோனுன்: மண்டலத்து அரசன்-பூமிக்கு அரசனுகிய சந்தனு, மண்மிசை விழ-தரையின்மேல் விழவே, பகீரதி யுருவம்-கங்கையாளாகிய அழகிய உருவத்தினள், அ மகவொடு-அந்தப் புத்திரனுகிய சிறுவனோடு, பண்டையின் எதிர்ந்து-முன்னர்த் தோன்றிய தோற்றத்தோடு எதிர்ப்பட்டு, அ அரசு எடுத்து அணைத்து-அந்த அரசனைக் கையாலெடுத்துத் தழுவி, அ பாலனை-அந்தச் சிறுவனை, கைக்கொடுத்து-அவ்வரசன் கையிற் கொடுத் திட்டு, இசைப்பாள்-கூறலானுள்; (எ-று).—கங்கையாள் இசைத் ததை மேலைக் கவியிற் காண்க.

குகன்-முருகன்: அடியார் மனக்குகையில் வசிப்பவன் என்பது பற்றிவந்த பெயர். "ஆருயிர்க் குகைதோறும் வதிதலாற் குக னென்று" என்றது தணிகைப் புராணம் (நாட்டுப். 33). மதன்-மன்மதன் என்பதன் நாமைகதேசம்: இனி, மதன்-மதத்தை (காமக்களிப்பை) யுண்டாக்குபவனுமாம். கண்ணன்-க்ருஷ்ணன்:

கருநிறமுடைமையாலும், யாவர் மனத்தையும் கவர்ந்து இழுக்குந் தன்மையாலும் இப்பெயர் வழங்கும். இனி, (யாவர்க்கும்) கண்ணையொத்து அருமையாய் இருப்பவன் எனினுமாம். பகீரதி= பாகீரதி: பகீரதனற் பூமியிற் கொணரப்பட்டவள். பண்டையின் எதிர்ந்து என்றது–முன்னர் வந்ததுபோல் 'பதுமையின் படிவங் கொண்டு' என்றபடி. (16)

17. கணவன் கையிற்கொடுத்த பிள்ளையின் திறனை யெடுத்துக் கூறிப் பின் கங்கையாள் மன்னனை வழுத்தி நீரினுட் புகுந்தமை கூறல்.

வெற்றிகொ ளரச! விவன்பெயர் தேவ
விரதனீ பயந்தவன் பலநூற்
சொற்றிட வசிட்ட னுணர்ந்துவின் மறையுந்
துளவணி மழுப்படை யவன்பாற்
கற்றன னிவனுக் கிணையிலை யொருவர்
கடற்புவி யிவனெடு மளிசேய்
பெற்றவர் தமினின் றவம்பெறு மவரியார்
பெரும! வென் றுரைத்தறல் புகுந்தாள்.

(இ-ள்). வெற்றிகொள் அரச!-(எக்காரியத்திலும்) ஜயம் பெறும் அரசரே! இவன் பெயர்—, தேவவிரதன்—; நீ பயந்தவன்-உம்மால் (என்னிடத்துப்) பெறப்பட்டவன்: வசிட்டன்-வசிஷ்ட முனிவர், பல நூல் சொற்றிட–பல சாஸ்திரங்களைச் சொல்லிக் கொடுக்க, உணர்ந்து-அவற்றையெல்லாம் தெரிந்து, (மேலும்) வில் மறையும்-தநுர் வேதத்தையும், துளவு அணி மழுப்படையவன் பால்-திருத்துழாய் மாலையைப் பூண்டு மழுப்படை ஏந்திய பரசு ராமனிடத்து, கற்றனன்-கற்றுத் தேர்ச்சி பெற்றுள்ளான்: இவ னுக்கு ஒருவர் இணையிலை-இச் சிறுவனுக்கு நிகர் ஒருவரும் [இப் புவியில்] இல்லை; (நீர்) கடற் புவி-கடல் சூழ்ந்த இப் பூமியை, இவ னெடும்-இப் புதல்வனோடும், அளி-புரப்பாய்: சேய் பெற்றவர் தமில்-பிள்ளைப் பேறுடையவர்களுள், பெரும-பெருமையுடைய வரே! நின் தவம் பெறுமவர்-உம்மைப் போலே தவப்பேறு பெற்றவர், யார்-எவருளர்? (ஒருவருமிலர்), என்று உரைத்து-என்று சொல்லி, அறல் புகுந்தாள்-நீரினுட் புகுந்து மறைந்தாள்; (எ-று).

எனவே, தேவவ்ரதன் என்ற பெயர் இவனுக்குக் கங்கையா ளிட்டது என உணர்க. பரசுராமன் திருமாலின் ஏழாமவதார

மாதலின், ''துளவணி மழுப்படையவன்'' எனப்பட்டான். அளி-முன்னிலை வியங்கோள். அவரியார்-''தன்னெழி மெய்ம்முன் யவ்வரின் இகரம் துன்னும், பரசுராமன் வில் வித்தையில் மிகச்சிறந்தவர் என்பது அறிக. (17)

18. சந்தனு தன் புதல்வனைத் தேரின்மேல் வைத்துக்கொண்டு ஊரார் எதிர்கொள்ளத் தன் நகர் சேர்ந்து அவனை இளவரசனுக்கி வேட்டைக்குச் செல்லல்.

நோக்குழி நோக்குக் குணர்வுரு துழைநேர்
நோக்கிபோந் துயரீனை மதலை
பாக்கியம் பெறலான் மறந்தர சந்தப்
பாலனே டிரதமேற் பதியோ
ரூக்கமோ டெதிர்கொண் டிடப்புகுந் தொருநாள்
உயரிள வரசரிப் பீடத்
தாக்கியே வேட்டம் யமுனைபாற் சென்றுங்
கணுகிய சுகந்தமாய்ந் திடுங்கால்.

(இ-ள்). நோக்குழி-(சந்தனு) பார்த்துக்கொண்டிருக்கும் போதே, நோக்குக்கு உணர்வுரு து-கண்ணுக்குத் தெரியாது மறைந்து, உழைநேர் நோக்கி-மானை யொத்த பார்வையையுடைய கங்கையாள், போம்-போனதனனுண்டான, துயரீனை-துக்கத்தை, மதலை பாக்கியம் பெறலான் மறந்து-பிள்ளையைப் பெற்ற பாக்கியத்தினாலே மறந்து (போக்கி), அரசு-சந்தனு ராசன், அந்தப் பாலனோடு-அந்தப் பிள்ளையோடு, பதியோர் ஊக்கமோடு எதிர் கொண்டிட-தன் நகரிலுள்ளோர் கிளர்ந்த மகிழ்ச்சியோடு எதிர் கொண்டு வரவேற்க, இரதமேல் புகுந்து-தேரின்மேலேறிச் சென்று புகுந்து, ஒரு நாள்-ஒரு நல்ல நாளில், (அப்புதல்வனை) அரிப்பிடத்து-சிம்மாசனத்தில், உயர் இளவரசு ஆக்கியே-மேன்மையான இளவரசனாக அமரச் செய்தே, யமுனைபால் வேட்டம் சென்று-யமுனை நதிப் பக்கத்தில் வேட்டையாடுதற்குப் போய், ஆங்கு-அவ்விடத்து, அணுகிய-நெருங்கிய, சுகந்தம்-நல்ல நறுமணத்தை, ஆய்ந்திடுங்கால்-(எங்கிருந்து வருகின்றது முதலாக) ஆராயும்போது; (எ-று).—''ஒருத்தியைக் கண்டு'' என மேலைக் கவியோடு குளகமாய்த் தொடரும்.

உழை-மான். மான் விழி-மகளிரின் மருண்ட பார்வைக்கு உவமையாக வரும். 'நோக்குக்கு உணர்வுரு து'-அந்தர்த்தான

மாயினுள் என்றபடி. நோக்கி-இகரவிகுதி பெற்றுவந்த பெண் பாற் பெயர். போந் துயர்-பெயரெச்சத் தொடர். துயரினை மறந்து என இயையும். அஃதேபோல் இரதமேற் புகுந்து என இயையும். வேட்டம்-தொழிற்பெயர். (18)

19. யோசனகந்தியைக் கண்டு சந்தனு காதல்கொண்டு வினவி, அவளது தந்தையைச் சேர, அவன் பணிந்து நிற்ப, மன்னவனின் குறிப்பறிந்து தேர்ப்பாகன் வலிஞர் தலைவனிடம் பேசுதல்.

யோசனை யளவும் வாசம்வீ சிடுமெய்
யொருத்தியைக் கண்டியா ரென்னத்
தாசர்கோன் மகள்யான் மரக்கலம் விடுவான்
சார்ந்ததிங் கெனவர சவனை
நேசமோ டுயிர்த்தா னுழைபுக வவனு
நேருறீ யிறைஞ்சிடப் பாகை
பேசெனக் குறிப்பா லேவவோர்ந் தவனும்
பேதைதந் தைக்கிதைப் புகல்வான்.

(இ-ள்). அரசு-சந்தனு ராசன், யோசனையளவும்-ஒரு யோசனை தூரம் வரையில், மெய் வாசம் வீசிடும் ஒருத்தியை கண்டு-உடம்பினின்று நல்ல மணம் வீசிப்பரந்திடும் ஒரு மடந்தையைப் பார்த்து, யார் என்ன-நீ யார் என்று வினவ, (அவள்) யான்—, தாசர்கோன் மகள்-வலிஞர்பதியின் மகளாவேன்: இங்கு-இவ் யமுனைக் கரைக்கு, மரக்கலம் விடுவான் சார்ந்தது என-நாவாய் செலுத்துதற்காக வந்தேன் என்று காரணம் தெரிவிக்க, (சந்தனு) அவளை நேசமோடு உயிர்த்தான் உழை புக-அவளை அன்போடு பெற்று வளர்க்கின்ற வலிஞர்பதியிடம் செல்ல, அவனும்—, நேர் உறீ-நேரே வந்து, இறைஞ்சிட-வணங்க, (சந்தனுவும்) பாகை-(தன்) தேர்ப்பாகனை, பேசு எனக் குறிப்பால் ஏவ-நீ அவனோடு பேசுவாயாக எனச் சாடைகாட்டி (மணம் பேசுமாறு) தூண்ட, ஓர்ந்து-மன்னவன் குறிப்பறிந்து, அவனும்-அப் பாகனும், பேதை தந்தைக்கு-அந்த யோசனகந்தியின் தகப்பனிடத்து, இதைப் புகல்வான்-இந்த வார்த்தைகளைச் சொன்னன்; (எ-று).—தேர்ப் பாகன் கூறியவற்றை மேலைக்கவியிற் காண்க.

யோசனை-எட்டுமைல் என்பர். வேறுபடவும் கூறுப. தாசர்-வலிஞர், செம்படவர், பரதவர். தாசர்கோன்-வலிஞர் தலைவன்;

இவன் பெயர் "உச்சைச் ச்ரவஸ்" என்று பாலபாரதத்தும் வியாச பாரதத்தும் கூறப்பட்டுள்ளது. இந்தத் தாசனுல் வளர்க்கப்பட்ட கன்னிகை முதலில் மச்சகந்தியா யிருந்து பிறகு பராசர பகவனரு ளால் யோசனை தூரம் நறுமணம் வீசும் உடம்பைப் பெற்றுளாத லால், யோசனகந்தி என்று பெயர் பெறுவாளானுள். இவளைக் காளியென்றும், ஸத்தியவதி என்றும், வாஸவீ என்றும் வழங்கு வர். இவள்தான் வியாசன் தாய். உயிர்த்தான்-வினையாலணையும் பெயர். உறீ-உற்று: [அளபெடையிட்டு 'உறீஇ' என்றும் பாடங் கொள்ளலாம். அஞ்ஞான்று அளபெடை அலகு பெறவில்லை யென்ன வேண்டும்], பாகு-பாகன்: "பாகுகழிந்தி யாங்கணும் பறைபட வருஉம் வேகயானை" (சிலப்: 15, 46). வலைஞர்பதியிடத்து மன்னவன் அவன் மகளை நேரே கேட்க நாணிப் பாகன் மூலமாகக் கேட்டானென்க. (19)

20. தேர்ப்பாகன் கூறியதைக் கேட்ட தாசர்கோன் என் மகளிடம் பிறக்கும் பிள்ளைக்கு அரசளிப்பதானுல் மணத் திற்கு இசைவேன் எனல்.

குருகுலத் தரசன் கோதைவேட் டிடுவான்
குறித்துள துன்பெருந் தவமோ
அரிவைசெய் தவமோ மரபினர் தவமோ
அறிகிலே னெனவவ னென்புன்
மரபணங் கரசுக் குரிமையோ கங்கை
மகவர சோம்பிட விருப்ப
தருமட மங்கைத் தனையனென் செய்வான்
சாற்றுமி னென்னலும் பாகால்,

(இ-ள்). குருகுலத்து அரசு-குருகுல வேந்தனுகிய சந்தனு, உன் கோதை-உனது மகளை, வேட்டிடுவான் குறித்துளது-மணஞ் செய்துகொள்வதாகக் கருத்துக்கொண்டிருப்பது, உன் பெருந் தவமோ-நீ (முற்பிறப்பிற் செய்துள்ள) பெரிய தவத்தின் பயனே, (அன்றி) அரிவை செய் தவமோ-உனது மகள் செய்துள்ள தவத் தின் பயனே, (அன்றி) மரபினர் தவமோ-(உன்னுடைய) பரத குலத்தவர் செய்த தவத்தின் பயனே!, அறிகிலேன்-இன்ன தென்று தெரிகின்றிலேன், என-என்று தேர்ப்பாகன் (பாராட்டிச்) சொல்ல, (அதற்கு) அவன்-அந்த வலைஞர் தலைவன், கங்கைமகவு அரசு ஓம்பிட இருப்ப-கங்கையாள் புத்திரனுகிய தேவவ்ரதன் (சந்தனுவுக்குப்பின்) அரசாட்சியை ஏற்றுப் பாதுகாக்கும் மூத்த

மகனையிருப்ப, என்புன் மரபு அணங்கு-என்னுடைய கீழ்த்தரமான மரபினைச் சேர்ந்த மகள், அரசுக்கு உரிமையோ-[தன் மகன் மூலம்] அரசுபெற உரிமையுடையவளோ? மடமங்கை தரு-என் பெண் பெற்றுத் தருகின்ற, தனையன்-பிள்ளை, என் செய்வான்-என்ன பண்ணுவான்? சாற்றுமின்-சொல்லுங்கள், என்னலும்-என்று வினவவும்; பாகால்-பாகனால்; (எ-று). "அம்மொழி வெம்மை செவிக்கொளி" என மேற்கவியோடு தொடரும்.

"கங்கை மகவரசோம்பிட விருப்ப, தரு மடமங்கைத் தனையன் என் செய்வான்" என்றதனால் "இவள் வயிற்றிற் பிறக்கும் மகனுக்கே அரசு தருவதாக உடன்பட்டால் இவளை மணஞ் செய்துகொடுக்க இசைவேன்" என்ற குறிப்புத் தோன்றுதல் காண்க. கோதை-மாலை. மாலைபோன்றுளுக்கு உவமையாகு பெயர். வேட்டிடுவான்-வானீற்று வினையெச்சம்: குறித்துளது-குறிப்பு வினையாலணையும் பெயர். தவமோ-ஓகாரம் ஐயவினை. இனி 'அணங்கரசுக்கு'—அணங்கு-வருத்தத்தைச் செய்கின்ற, அரசுக்கு எனினுமாம்: "மழைவளங்கரப்பின் வான்பேரச்சம், பிழையுயிரெய்தில் பெரும்பேரச்சம்...மன்பதைகாக்கும் தொல் குடிப்பிறத்தல், துன்பமல்லது தொழுதகவில்லென" என்றது சிலப்பதிகாரம். ஷேக்ஸ்பியரும் " Uneasy lies the head that wears the crown " என்றார். சாற்றுமின்-முன்னிலை யொருமை. (20)

21. **வலைஞர்பதியின் மகளிடத்து ஆதரத்தால் சந்தனு உடல் மெலிய, பாகனால் அச் செய்தியைக் கங்கை மகன் [தேவவ்ரதன்] அறிந்து அந்த வலைஞர்பதியிடஞ் சென்று, அரசைத் தன் இளையதாயின் புத்திரனுக்கு அளிப்பதாக விரதங்கூறி மணம்நேர வேண்டுதல்.**

அம்மொழி வெம்மைச் செவிக்கொளி வேறொன்
றறைந்தில னூர்புகுந் தரசக்
கொம்மைவெம் முலையைக் குறித்துஉன் மதிபோற்
குறைவதைப் பாகனற் கங்கை
செம்மலங் கொருநா ளுணர்ந்துகொண் டந்தச்
சேயிழை தந்தைபாற் சென்றே
எம்மிள வரசு மெம்பிய ரரசெற்
கின்றவ ணதியன்றுன் மகளே.

(இ-ள்.) [பாகன் மூலம் சந்தனு] அ மொழி வெம்மை-அந்த

வலிஞர்பதியின் பேச்சின் கருத்துக் கொடுமையை, செவிக்கொளி-காதால் கேட்டு, வேறு ஒன்று அறைந்திலன்-வேறு ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை: ஊர் புகுந்து-அத்தினபுரி சேர்ந்து, அரசு-மன்னனுகிய சந்தனு, அ கொம்மை வெம்முலையை குறித்து-அந்தப் பருத்த விரும்பத்தக்க கொங்கைகளைக் கொண்டுள்ள யோசனகந்தியைப் பற்றி [நினைந்துநைந்தே], உன்மதி போல் குறைவதை-மதிமயக்கம் வந்தவன்போல் மெலிவதை, பாகனுல்-தேர்ப்பாகனுல், கங்கை செம்மல்-கங்காதேவியின் மகனை தேவவ்ரதன், அங்கு ஒரு நாள் உணர்ந்துகொண்டு-அவ்விடத்து ஒருநாள் தெரிந்துகொண்டு, அந்த சேயிழை தந்தைபால் சென்றே –அந்த யோசனகந்தியின் தந்தையாகிய வலிஞர்பதியிடம் போய், "எம் இள அரசு எம்பியர் அரசு-என்னுடைய இளவரசு பதவி என் தம்பியரது அரசபதவியாகும்: எற்கு-என்னை, ஈன்றவள்–பெற்றவள், நதியன்று-கங்காதேவியன்று, உன் மகளே-உன் மகளாகிய யோசனகந்தியே யாவள்; (எ-று).

என்னை ஈன்றவள் 'உன் மகளே' என்று சொன்னதனுலேயே சந்தனுவாகிய என் தந்தைக்கு மணஞ்செய்து கொடுப்பாய் என்றது குறிப்பிற் நிறம்பட வைத்தபடி காண்க. மொழி வெம்மை-சுடுசொல்: கொளி-கொளி இ என்றும் அளபெடுத்த பாடம் இருக்கலாம்: அஞ்ஞான்று அளபெடை அலகு பெற வில்லை யென்னவேண்டும். வெம்முலை-விரும்பத்தக்க முலை: வெம்மை வேண்டல் ' (தொல் உரி : 38). முலை-முலையையுடை யாளுக்குச் சினையாகுபெயர். உன்மதி-உன்மத்தம் பிடித்தவன். உன்மத்தம்-மதிமயக்கம், வெறி. சேயிழை-அன்மொழித்தொகை. எற்கு-எனக்கு என்பதன் சிதைவு : 'என்னை' என்ற பொருளில் உருபுமயக்கம். நதி-நதியின் பெண் தெய்வத்துக்காகியது. எம்பியர்-என் தம்பியர் என்பதன் மரூஉ. (21)

22. தேவவிரதன் செய்துகொண்ட விரதங்கள்.

பாட்டனீ யாமெற் கெந்தையுன் மருகன்
பரதவர் பெருமா! வோர் கொடியை
வேட்டிலேன் வேறோர் கொம்பையு மூன்றேன்
விழைவுறுஞ் சுதர்களா லியார்க்குங்
காட்டுமக் கதியு மெந்தையாற் பெறுவல்
காவலற் கருண்மண மென்றே
கேட்டிடப் பலரு மிப்பெரு விரதங்
கிளத்தினன் சான்றவி யின்றோன்.

(இ-ள்.) "பரதவர் பெருமா!-வலிஞர் பதியே! எற்கு-எனக்கு,

நீ—, பாட்டன் ஆம்-பிதாமகனுகிறாய்: எந்தை-என் தந்தையாகிய சந்தனு, உன் மருகன்-உனக்கு மருமகனுகிறார்: ஓர் கொடியை-ஒரு பெண்ணையும், வேட்டிலேன்-நான் மணஞ் செய்துகொள்ளேன்: வேறு ஓர் கொம்பையும் ஊன்றேன்-வேறோர் பெண்ணையும் (விரும்பி) பற்றிக்கொள்ளேன்: விழைவுறும் சுதர்களால்-விரும்பிப் பெறுகின்ற பிள்ளைகளால், யார்க்கும்-பெற்றோர் யாவர்க்கும், காட்டும்-கிடைக்குமென்று குறித்துக் காட்டிக் கூறப்படுகின்ற, அ கதியும்-அந்த நற்கதியும், எந்தையால்-என் தந்தையால் (என் தந்தையை மணக்குமாறு செய்ததன் பயனுக), பெறுவல்-(யான்) அடைவேன்: (ஆகவே) காவலற்கு-மன்னவனுகிய சந்தனுவுக்கு, மணம் அருள்-உன் மகளாகிய யோசனகந்தியைக் கொடுத்து மணம் நேர்வாயாக", என்றே—, பலரும் கேட்டிட-கூடியிருந்த அனைவருக்கும் கேட்கும்படி, சான்றவி ஈன்றோன்-கங்காதேவியின் புதல்வன், இ பெரும் விரதம் கிளத்தினன்-இந்தத் தீவிர விரதங்களைச் சொன்னன்.

"எந்தையால் பெறுவல்" என்றவிடத்து அறியவேண்டியது என்னென்னில்,-மகப் பெறுதார் நற்கதி யடையாரென்றும், புத்தென்ற நரகத்திற் சேர்வரென்றும் நூல்கள் கூறும். தந்தைக்கு மணஞ் செய்வித்ததன் பயனுகத் தனக்கு மகப்பெற்றோர் பெறும் நற்கதியும் உண்டாகுமென்றுனென்க. வேட்டல்-அக்னி சாட்சி யாக மணஞ் செய்துகொள்ளுதல். வேறோர் கொம்பையும் ஊன்றேன்-திருமணச் சடங்குகள் யாவையுமின்றி ஒரு பெண்ணைக் கைப்பற்றிப்போதல்: காமக் கிழத்தியர், காதற் பரத்தையர் போல்பவரைக் குறிக்குமெனலாம். கொம்பு-பெண்ணுக்கு உவம வாகுபெயர். ஊன்றேன் என்றது நயம். இழுக்கலுடையுழி ஊற்றுக்கோல்போல் நான் கொம்பினை ஊன்றிக்கொள்ளேன்: ஏனெனில் எனக்கு இழுக்கலே ஏற்படாது என்பது உட்கோள். 'கொடி' என்பதும் உவமவாகுபெயர். கொடி, கொம்பு இவைகளை யிட்டுச் சொன்னது-பரதவன் நிலைக்கு ஏற்ப அவன் அறிந்த வற்றையிட்டு என்க. சான்றவி-சானவி: ஜாஹ்நவி யென்ற வட சொல்லின் திரிபு. பகீரத சக்கரவர்த்தியின் பின்னே சென்ற கங்கை வழியிடையே ஜஹ்நு முனிவரின் வேள்வியை யழிக்க, அவர் பருகி அந்தப் பகீரதனது வேண்டுகோளினுல் தமது காதின் வழியாக விட்டதனுல், கங்கைக்குச் சானவி யென்று பெயர். கிளத்தல்-உரக்கச் சொல்லுதல். (22)

23. அவையிலிருந்தோர், தேவர் முதலியோர் பூ மழை பொழிந்து தேவவிரதனுக்கு வீடுமன் என்ற பெயரைச் சூட்ட, அவ் வீடுமன் தாசபூபதியை மகளுடனே அழைத்துக் கொண்டு அரண்மனையடைந்து சந்தனு பாதத்தில் பணிதல்.

இப்பெருஞ் சபத மியம்புழி சவைமாட்
டிருந்தனர் வியந்தன ரமரர்
அப்பொழு தலர்மா மழைசொரிந் திவனுக்
கடுத்தபேர் வீடும னென்றே
செப்பின ரிவனு மப்பெயர் புனைந்து
திமிலர்கோன் கிளையொடும் பதுமை
யொப்புருத் தனைய ளுடன்வர வூர்போந்
துயிர்த்தவ னடியிணை பணிந்தான்.

(இ-ள்). இப்பெருஞ் சபதம் இயம்புழி-இப்படிப்பட்ட தீவிரமான பெரும் விரதங்களைத் தேவவிரதன் கிளத்தியபோது, சவைமாட்டு இருந்தனர் வியந்தனர்-அங்கே சபையாகக் கூடியிருந்தவர்கள் அதிசயித்தனர்: அமரர்-தேவர்கள் (வானிலிருந்து), அப்பொழுது-சபத வார்த்தைகள் கூறிக்கொண்டே வரும்போது, அலர்மாரி சொரிந்து-மலர் மழையைப் பொழிந்து, இவனுக்கு-இந்தத் தேவவிரதனுக்கு, அடுத்த-பொருத்தமான, பேர்-பெயர், வீடுமன் என்றே செப்பினர்-பீஷ்மன் என்று சொல்லினர்: இவனும்—, அ பெயர் புனைந்து-அப்பெயரைத் தரித்து, (பின்) திமிலர்கோன்-வலைஞர்பதி, கிளையொடும்-தன் பரதவ சுற்றத்தோடும், பதுமை-இலக்குமி தேவியும், ஒப்பு உரு-ஒப்புச் சொல்லுதற்குப் பொருந்தாத பேரழகு படைத்த, தனையள்-தன் புத்திரியாகிய யோசனகந்தியோடும், உடன் வர-தன்னுடன் வர, ஊர் போந்து-அத்தினபுரியைச் சேர்ந்து, (அரண்மனையில்) உயிர்த்தவன் அடியிணை-தன்னைப் பெற்ற தந்தையாகிய சந்தனு மன்னவனின் உபய பாதங்களிலும், பணிந்தான்-வணங்கினன்; (எ-று).

இந்த வீடுமன் விரதங்கொண்டது வலைஞர்பதியின் முன்னிலையிலே யாகவும், அதனைக் கேள்வியுற்ற சபையோர் முதலியோர் வீடுமனென்ற பெயரை இவனுக்குத் தந்து மலர் மாரியும் பொழிந்தார் என்பதாம். பீஷ்மன்-பயங்கரமானவன்: பயங்கரமான விரதத்தை மேற்கொண்ட மனவலிமை பற்றியது,

இந்த வீடுமன் என்ற பெயர். திமிலர்கோன் கிளையொடும், தனயளொடும் உடன்வர வீடுமன் ஊர் புகுந்தான் என அன்வயம். 'தனயள்' என்பதன்பின் 'ஒடு' உருபு சேர்த்துப் பொருள்கொள்க. உயிர்த்தவன்-வினையாலணையும் பெயர். அடியிணை-இணையடி : முன்பின்னாகத் தொக்கது: இலக்கணப் போலி. (23)

24. சந்தனு வீடுமனிடத்துக் கூறும் முகமன்.

மதலையை மார்போ டணைத்துமோந் துச்சி
மைந்தநீ தந்தையர்க் குதவு
முதவியி னெனக்குச் சதமடங் கதிக
முதவினை யுனக்கியான் மகாருக்
கிதமுற வுதவு முதவியிற் சிறிது
மியற்றிலே னும்பர்நீ நினைநாள்
வதிவதன் றிடையில் வரப்பெரு னின்மேன்
மறலியென் றொருவர மளித்தான்.

(இ-ள்). (சந்தனு) மதலையை-மகனுகிய வீடுமனை, மார்போடு அணைத்து-மார்போடு கட்டித்தழுவி, உச்சி மோந்து—, மைந்த-புதல்வனே! நீ—, தந்தையர்க்கு உதவும் உதவியின்-(பெற்ற மகன்) தன்னுடைய தந்தையார் திறத்தில் உதவுகின்ற உதவியைக் காட்டிலும், எனக்கு—, சதமடங்கு அதிகம் உதவினை-நூறுமடங்கு மிக உதவிபுரிந்தாய்: உனக்கு—, யான்—, மகாருக்கு இதமுற உதவும் உதவியின்-(தந்தை தன்) புதல்வருக்கு உதவுகின்ற உதவியைப் போல, சிறிதும் இயற்றிலேன்-கொஞ்சமேனும் செய்தேனில்லை: (ஆகவே) நீ நினை நாள் உம்பர்வதிவது-நீ (சுவர்க்கத்துக்குச் செல்ல வேண்டுமென்று) எண்ணுகின்ற அந்த நாளிலேதான் நீ சுவர்க்கம் சென்று வதிவாய்: அன்று-அங்ஙனல்லாமல், நின்மேல்-உன்மேலே, மறலி-யமன், இடையில் வரம்பெறுன்-நடுவில் வரமாட்டான்: என்று—, ஒரு வரம் அளித்தான்-ஒப்பற்ற வரத்தைக் கொடுத்தான்; (எ-று).

இங்ஙனம் வேண்டும்போது இறத்தல் ''ஸ்வச்சந்த மரணம்'' எனப்படும். (24)

25. வலஞர்பதி யோசனகந்தியை முன் நிறுத்திப் பணிவுடன் அவள் வரலாற்றினைத் தெரிவிக்க, அதனைக் கேட்டபின் சந்தனு அவளை மணத்தல்.

தாசர்கோன் திருநேர் தையலை யந்தத்
தரணிபன் றனக்கெதிர் நிறுவித்
தேசுடை யிவளைத் திமிலர்தங் குலத்துத்
தெரிவையென் றுளங்கொளேல் வசுப்பேர்
ஏசறப் புனைந்த விராசன்மூன் னுயிர்த்த
விளங்கொடி யென்றவள் வரவும்
பேசியே விடுத்தா னரசுமத் தினமே
பிழையினற் றினமென மணந்தான்.

(இ-ள்). தாசர்கோன்-வலஞர்பதி, திருநேர் தையலை-இலக்குமியை யொத்த யோசனகந்தியை, அந்த தரணிபன் தனக்கு எதிர் நிறுவி-அந்தச் சந்தனுராசனின் எதிரிலே நிற்கவைத்து, தேசு உடை இவளை-உடலொளிபடைத்த இவளை, திமிலர் தம் குலத்து தெரிவை என்று-செம்படவர் குலத்துப் பெண்ணென்று, உளம் கொளேல்-கருதாதே: (இவள்) வசுப்பேர் ஏசு அற புனைந்த இராசன்-வசு என்ற பேரைக் குற்றமறக் கொண்ட சேதிப மன்னவன், முன் உயிர்த்த இளங்கொடி-முன்னுலே பெற்ற இளமை பொருந்திய பெண்ணவள்!, என்று—, அவள் வரவும் பேசியே-அவள் பிறந்த வரலாற்றையும் வந்த வகையையும் (விவரமாகச்) சொல்லியே, விடுத்தான்-(சந்தனுவிடம்) அனுப்பினன்: அரசும்-சந்தனுவும், அ தினமே-அன்றைய தினமே, பிழை இல் நல் தினம் என-குற்றமற்ற நல்ல சுபதினமென்று, மணந்தான்-(அவளை) விவாகஞ் செய்துகொண்டான். (எ-று).

'அவள் வரவு' என்றவிடத்து அறியவேண்டிய விவரம்:

சேதி ராஜாவான வசுவென்பவன் (உபரிசரவஸு எனவும் படுவன்) நோன்பால் வானத்திற் செல்லவல்ல விமானத்தைத் தேவேந்திரனருளாற் பெற்றான்: அன்னான் வானத்திற் சஞ்சரிக்கையில் ஒருகால் தன் மனைவியாகிய கிரிகையை நினைந்து காம விகாரங்கொண்டதனாற் சுக்கிலம் தோன்ற, அதனை ஒரு மரத்தின் இலையிலேந்தி ஒரு சியேனமென்னும் பறவையை யழைத்துக் கொடுத்துக் கிரிகையினிடத்துச் சேர்ப்பிக்குமாறு சொன்னன; சொல்லவும், வேறொரு சியேனப் பறவை அதனை இரையென்று கருதிப் பொர, அந்தச் சுக்கிலம் யமுனை நதியின் புனலில் முத்தின்

திரள் போல விழுந்திட்டது. அதனைப் பிரமனின் சாபத்தினால் மீனகப் பிறந்திருந்த அத்திரிகை யென்ற தேவமாது விழுங்க, அந்த மீன் கருக்கொண்டு முதிர்ச்சி யடைந்திருந்தது: அந்த மீனை வலைஞர் அகப்படுத்து அரிந்து பார்க்க ஒரு குமாரனும் ஒரு குமாரியும் அதன் வயிற்றினுள் இருந்தனர். அவர்களை அந்த வலைஞர்கள் தம் தலைவனை உச்சைச்சிரவசு என்பவனிடம் கொண்டுபோக, அவன் சேதிபனை வசு மன்னவனிடம் (உண்மையில்) அவனது மக்களாகும் அவர்களைக் கொண்டுவிட, அந்தச் சேதிபன் மத்ஸ்யன் என்ற பெயருடைய குமாரனை மட்டும் தன்னுடன் வைத்துக்கொண்டு, மச்சகந்தம் வீசிய கன்னிகை யாகிய மச்சகந்தியை அந்த வலைஞர்பதியிடமே கொடுத்து வளர்க்கச் செய்தான். அவள்தான் இந்த யோசனகந்தி. [மச்சகந்தியைப் பரிமளம் வீசும்படி யோசனகந்தியாக்கியவர் பராசர முனிவர். அவளிடத்துத்தான் வியாசர் தோன்றியது. வியாசர் தோன்றியபின் மீண்டும் யோசனகந்தியைப் பராசரர் கன்னிகையாக்கினர் என்பது மறக்கக்கூடாது.] (25)

26. யோஜநகந்தியிடம் சந்தனு இரு புதல்வரைப் பெற, அவர்களுக்கு வீடுமன் கல்வி பயிற்றுவிக்க, சந்தனு விண்ணுலகு அடைதல்.

அன்றக னதிமீண் டின்றிவ ளாக
வடைந்தன ளென்றுகொண் டவளோ
டொன்றிவாழ்ந் தரசன் சித்திராங் கதனை
டுரைத்தருள் விசித்திர வீரன்
என்றிரு மகப்பெற் றெடுத்தன னவர்க
ளிருவருஞ் சிலைகலை விஞ்ஞை
நன்றுவீ டுமனு லுணர்ந்தன ரொருநா
ணரேசனுஞ் சுரேசனு ரடைந்தான்.

(இ-ள்.) அரசன்-சந்தனு ராஜன்,—அன்று அகல் நதி-அன்றையதினம் விட்டுப்பிரிந்து சென்ற கங்கையாள், மீண்டு-மறுபடியும், இன்று-இன்றையதினம், இவளாக-இந்த யோசனகந்தியாக, அடைந்தனள்-நம்மிடம் [மனைவியாகவே] வந்துள்ளாள், என்று கொண்டு-என்று [மகிழ்ச்சி]கொண்டு, அவளோடு ஒன்றி வாழ்ந்து-அவளோடு ஒருமனப்பட்டு இணைந்து வாழ்ந்து, சித்திராங்கதனைடு உரைத்தருள் விசித்திரவீரன் என்று இரு மக பெற்றெடுத்தனன்-சித்திராங்கதன் என்பவனைடு சிறப்பாகப்

பேசப்படுகின்ற விசித்திரவீரியன் என்றவனையும் கூட்டி இரு பிள்ளைகளாகப் பெற்றனன்: அவர்கள் இருவரும்—, சிலை கலை விஞ்ஞை-தநுர் வித்தை, ஏனைய கலை வித்தைகள் எல்லாவற்றையும், நன்று-நல்ல தேர்ச்சி பெரிதாகப்பெற, வீடுமனுல்—, உணர்ந்தனர்-கற்றுத் தெரிந்தனர்: [இங்ஙனிருப்ப] ஒருநாள்—, நரேசனும்-சந்தனு மகாராஜனும், சுரேசனூர் அடைந்தான்-வானுலகு புகுந்தான்; (எ-று).

சந்தனு கங்கையாளிடம் பேராதரம் கொண்டிருந்தது போலவே இந்த யோசனகந்தியிடமும் இருந்தான் என்பது கூறப்பட்டது. சந்தனு கங்கையாளிடம் பெற்றவன்-வீடுமன். இந்த யோசனகந்தியிடம் பெற்றவர்-சித்திராங்கதன், விசித்திரவீரியன் என்ற இருவர். யோசனகந்தி, காளி, சத்தியவதி என்ற பெயர்கள் அபேதமாகச் சந்தனுவின் இரண்டாம் மனைவியாகிய இவளுக்கு வழங்கும். சிலை கலை விஞ்ஞை-உம்மைத்தொகை. விஞ்ஞை = விச்சை: வித்தை: போலி. "நன்று பெரிதாகும்" என்றது தொல்காப்பியம் (சொல்: உரி:47). நரேசன்-நரர்களுக்கு ஈசன் (எனவே மன்னவன்): சுரேசன்-சுரர்களுக்கு ஈசன் (எனவே தேவேந்திரன்)-இரண்டும் வடமொழித் தொடர்கள். ஈற்றடியில் பிராசம், பிறிதினவிற்சி காண்க. (26)

27. வீடுமன் சித்திராங்கதனைச் சிங்காதனமேற்ற அவன் அப்பெயர் கொண்ட கந்தருவனுல் இறத்தல்.

விதிமுறை தந்தைக் கயர்கட னிரப்பி
வீடும னம்புவிக் கெம்பி
அதிபனென் றவிர்மா முடிபுனைந் தனன்மற்
றவனர சோம்பியே வின்மைக்
கெதிரெவ ரெனக்கென் றிருத்தல்கேட் டவன்பே
ரெய்துகந் தருவன்வந் தென்பே
ரதையொழி மறுக்கி லமர்க்கடை யெனக்கேட்
டவனுட னிவனெதிர்ந் திறந்தான்.

(இ-ள்). வீடுமன்—, தந்தைக்கு-(இறந்த) சந்தனுவுக்கு, விதிமுறை-சாத்திரங்களில் விதித்துள்ளபடி, அயர்-செய்யவேண்டிய, கடன் நிரப்பி-ஈமச் சடங்குகளையும் சரம கிரியைகளையும் செய்து முடித்து, 'அம்புவிக்கு எம்பி அதிபன்' என்று-இந்த அழகிய பூமிக்கு என் தம்பியாகிய சித்திராங்கதன் ராஜா" என்று, அவிர்

மா முடி புனைந்தனன்-விளங்குகின்ற சிறந்த கிரீடத்தைச் சூட்டினன்: அவன்-அந்தச் சித்திராங்கதன், அரசு ஓம்பியே-அரசாட்சி செய்தே, ''வின்மைக்கு எனக்கு எதிர் எவர்'' என்று இருத்தல் கேட்டு-வில்லின் தொழில் வல்லமையில் எனக்கு நிகர் எவர் (யாருமேயில்லை) என்று இறுமாந்திருத்தலைக் கேள்விப்பட்டு, அவன் பேர் எய்து கந்தருவன் வந்து-அவன் பேரையே கொண்டிருந்த சித்திராங்கதன் என்ற கந்தருவராசன் வந்து, [இந்தச் சித்திராங்கதனை நோக்கி], ''என் பேரதை ஒழி-என் பேரை நீ வைத்துக்கொண்டிருத்தலை நீக்குவாய்: மறுக்கில் அமர்க்கு அடை-''மறுத்து நிற்பாயாகில் போருக்கு வருவாய்'', என-என்று அவன் சொல்ல, கேட்டு-அதனைக் கேட்டு, அவனுடன் இவன்-அந்தக் கந்தருவ ராசனோடு இந்தச் சித்திராங்கதன், எதிர்த்து-போரிட்டு, இறந்தான்-மாண்டுபோனன்; (எ–று).

வியாச பாரதத்தில்''சித்திராங்கதன் தன் வீரத்தினால் பூவுலக அசுரர்களை வென்று அவர்களை ஒரு பொருட்டாக மதியாமல் தேவர்களையும் எதிர்த்தானாக, பலவானை சித்திராங்கதனென்ற கருந்தருவன் ''நீ என்பேர் கொண்டிருப்பதை மாற்றி வேறொரு பெயராவது கொள்க: இல்லாவிடின் என்னோடாவது பொருக'' என்ன, இந்த மன்னவன் அந்தக் கந்தருவனோடு பொருதற்கு இசைய, இருவர்க்கும் மூன்று வருஷங்கள் ஹிரண்யவதி யென்ற நதியின் கரையில் போர் நடக்க, முடிவில் மிக்க மாயையில் வல்ல சித்திராங்கத கந்தருவன் இவனைக் கொன்றிட்டான்'' என்று உள்ளது. எம்பி-என் தம்பி என்பதன் மரூஉ. ''என் பேரதை யொழி'' என்றது–நாமம் கவர்ந்தனனென்ற குற்றச்சாட்டினால் என்க. (27)

28. வீடுமன் விசித்திரவீரியனுக்கு முடிசூட்ட, அவன் அரசுபுரிய, அஞ்ஞான்று காசிவேந்தன் தன் புதல்வியர்க்குச் சுயம்வரம் மொழிதல்.

சித்திராங் கதன்விண் ணடைதலி னினைய
சித்திர வீரனை முன்னென்
இத்தரா தலத்துக் கரசென மோலி
யிருத்தினு னிவனவன் வாய்மைக்
கொத்திரா சரும்வந் தடிதொழச் செங்கோ
லோச்சுநாள் காசிவேந் தறுகான்
மொய்த்திரா கஞ்செய் குமுற்புதல் வியர்கண்
மூவர்க்குஞ் சுயம்வர மொழிந்தான்.

(இ-ள்). சித்திராங்கதன்—, விண் அடைதலின்-இறந்து

சுவர்க்கஞ் சென்றனனதலின், இளைய சித்திரவீரனை-இளைய தம்பியாகிய விசித்திரவீரியனை, முன்னோன்-மூத்தவனாகிய வீடுமன், இத் தராதலத்துக்கு அரசு என-இந்தப் பூமிக்கு அரசனுவாய் என, மோலி இருத்தினன்-முடி சூட்டினன்: இவன்-இந்த விசித்திரவீரியனும், அவன் வாய்மைக்கு ஒத்து-அந்த வீடுமன் மொழிப்படியே அநுசரித்து, இராசரும் வந்து அடிதொழ-பல தேசத்து மன்னர்களும் வந்து தன் அடியிற்பணிந்து தொழும்படி, செங்கோல் ஒச்சு நாள்-அரசு செய்துவருங்காலத்தில், காசி வேந்து-காசி மன்னவன், அறுகால் மொய்த்து-வண்டுகள் கூடி, இராகம் செய்-ரீங்காரம் செய்கின்ற, குழல்-(பூக்களைச் சூடிய) கூந்தலையுடைய புதல்வியர்கள், மூவர்க்கும்-தன் புத்திரியர் மூன்று பேருக்கும் ஒரு சேர, சுயம்வரம் மொழிந்தான்-சுயம்வர நற்செய்தியைத் (தூதுவர் மூலம்) சொல்லியனுப்பினன்; (எ-று).

வீடுமன் மொழிப்படியே விசித்திர விரியன் புவியை அரசாட்சி புரிந்தான் என்பதாம். அறுகால்-வண்டுக்குச் சினையாகுபெயர்: அன்மொழித்தொகையுமாம். 'இராகம் செய்' என்றவிடத்து 'இளி வாய்வண்டு' (சிலப்பதி: 5-202), 'அறுபதம் ஐந்தினைப் பாடுகின்றது' (கம்ப. ரா.) முதலியனவினை. சுயம்வரமாவது-ஓர் இராச கன்னிகை ஓரிடத்திலே வருவித்துச் சேர்க்கப்பட்ட இராசகுமாரர் பலருள் தனக்குப் பிரியமான ஒருவனைத் தானே கணவனை ஏற்படுத்திக்கொள்ளுதல். மொழிந்தான்-தூதுவர் மூலம் ஓலை போக்கினன் என்றபடி. காசி மன்னவன் புதல்வியர் மூவர்—அம்பை, அம்பிகை, அம்பாலிகை என்பவர். (28)

29. வீடுமன் தன் தம்பிக்கு அந்தப் புதல்வியரை மணம் புரிவிக்குமாறு அவளோடு காசிக்குச் சென்று, அங்கிருந்த மன்னவர் முன்னிலையிலேயே அந்தக் கன்னியர் மூவரையும் தேர்மீது ஏற்றித் தம்பியொடு தன் நகர்க்கு எழுதல்.

நதிமக னெம்பிக் களையபூ வையரை
நான்மண முடிப்பலென் றவளே
டதிரலைக் கங்கை வளம்பெறுங் காசி
யடைந்திகு ளையரவ னிபர்கள்
பதிமுத றிறன்சொற் றிடவுணர்ந் தெய்தும்
பாவையர் முதியதன் றிறங்கண்
டிதயமை யுறச்சந் தனத்தெடுத் தவரை
யிருத்திதன் னிளவலோ டெழுந்தான்.

(இ-ள்). நதி மகன்-கங்கை மகனாகிய வீடுமன், "எம்பிக்கு-

என் தம்பியாகிய விசித்திரவீரியனுக்கு, அனைய பூவையரை-அந்த மூன்று கன்னியரையும், நான் மணம் முடிப்பல்-நான் விவாகம் செய்துவைப்பேன்" என்று-என்று சொல்லி, அவனோடு-அந்தத் தம்பியோடு, அதிர் அலை கங்கை வளம் பெறும் காசி அடைந்து-சப்திக்கின்ற அலைகளோடு கூடிய கங்காநதியினால் வளப்பத்தைப் பெற்றுச் சிறக்கும் காசிப்பதியைச் சேர்ந்து,—இகுளையர்-தோழிமார்கள், அவனிபர்கள்-(சுயம்வர மண்டபத்திற் கூடியிருக்கிற) மன்னர்களின், பதி முதல் திறன் சொற்றிட-ஊர் முதலிய கூறுபாடுகளை யெல்லாம் சொல்லிவர, உணர்ந்து-அவற்றைத் தெரிந்துகொண்டு, எய்தும்-ஒவ்வொரு மன்னரிடத்தும் வந்துபோகும், பாவையர்-அந்தக் கன்னியர்கள், முதிய தன் திறம் கண்டு-வயதாகி முதுமை யெய்தியிருக்கும் தன் பான்மை கண்டு, இதயம் ஐயுற-மனத்தில் சந்தேகங்கொள்ள, [அதனைக் கண்டு] அவரை-அவர்களை, சந்தனத்தெடுத்து-தேரிலேற்றி, இருத்தி-உட்காரவைத்து, தன் இளவலோடு-தன் தம்பியோடு, எழுந்தான்-[தன் நகர் செல்லப்] புறப்பட்டான்; (எ–று).

மணமாலை சூட்டவரும் கன்னிமார்க்கு அரசருடைய சரித்திரங்களை யுணர்ந்த செவிலியர் போன்றோர் இவர் இன்னரென்று கூறுதல் மரபு. அங்ஙனம் கூறிவரும்போது கேட்ட கன்னிமார் வீடுமனுக்கு மாலை சூட்ட விரும்பிவந்து, அவன் பிரமசாரியாயிருப்பது கண்டு ஐயுற்றுப் பின்வாங்கினர் என்றவாறு. சந்தனம்-ஸ்யந்தனம் என்ற வடசொல்லின் திரிபு: தேர். கங்கை வளம் (பெறுங்காசி)-மூன்றனுருபு தொக்கது. இகுளை-தோழிச்சொல்: சீத நாட்டுச் சொல் என்பர். (29)

30. மன்னவர் திரண்டுபொர, வீடுமன் வெற்றி பெற்றுக் கன்னிமாரை உடன்கொண்டு தன் நகர் சேர்ந்து போரிற் சற்று முந்திய சாலுவனிடத்து மனஞ்சென்றதறிந்து அம்பையை அவனிடத்துப்போக்கி, அம்பிகை அம்பாலிகைகளைத் தன் தம்பிக்கு மணம்புரிவித்தல்.

முதியன்முன் விரத மொழிந்தவன் மின்னூர்
மூவரைக் கிவர்திறம் யாதென்
றெதிரடைந் தமர்செய் தவனிப ரெவரு
மெய்த்திட வெற்றிபெற் றத்திப்

பதிபுகுந் தமரின் முந்திசா லுவன்பால்
பரிவுறு மம்பையைப் போக்கி
விதியினம் பிகையம் பாலிகை யனுசன்
வேட்பவி டுமன்மண முடித்தான்.

(இ-ள்). முதியன்–கிழவன், முன் விரதம் மொழிந்தவன்-(தான் மணப்பதில்லையென்று) முன் சபதஞ் செய்தவன்: (அப்படிப்பட்டவன்) மின்னுர் மூவரை-கன்னிப்பெண்கள் மூவரையும், கவர்திறம் யாது-கவர்ந்து (தேரின்மீது ஏற்றிக்கொண்டு) செல்லும் வகை யென்னே! என்று-என்று கூறிக்கொண்டு, எதிர் அடைந்து-எதிரே வந்து, அமர் செய்த-போரிட்ட, அவனிபர் எவரும்-மன்னவர்கள் அனைவரும், எய்த்திட-களைத்திட, வெற்றி பெற்று-ஜயமடைந்து, அத்திப்பதி புகுந்து-அத்தினபுரியைச் சேர்ந்து, (ஆங்கு) அமரின் முந்தி சாலுவன்பால் பரிவுறும் அம்பையை போக்கி-நிகழ்ந்த போரில் (சற்று) முற்பட்டவனான சாலுவனிடத்துக் காதலன்புகொள்ளும் அம்பையைச் செலுத்தி, (பின்) விதியின்-சாத்திர விதிப்படியே, அம்பிகை அம்பாலிகை-அம்பிகை அம்பாலிகை என்ற இருவரையும், அனுசன் வேட்ப-தம்பியாகிய விசித்திரவீரியன் ஓமம் வளர்த்துக் கொள்ளும்படி, வீடுமன்—, மணம் முடித்தான்-விவாகம் செய்துவைத்தான்; (எ-று).

சாலுவன்-சாலுவதேசத்து ராசன்: இவன் பெயர் பிரமதத்த னென்பது: இவன் வீடுமனுடன் எதிர்ப்போரில் வலிமையிற் சற்று முந்தினனென்க. 'வேட்ப' என்றதாலே மங்கல அக்னி வளர்த்து வீடுமன் மணஞ்செய்து வைத்தான் என்பது பெற வைத்தபடி. (30)

31. சாலுவன் 'பகைஞன் கவர்ந்த நின்னைக் கொள்ளேன்' என்றிட, அம்பை மீண்டு வீடுமனேச்சார, அவன் மணம் மறுக்க, அவள் தந்தையிடஞ் சொல்ல, அன்னன் வீடுமனுக்குத் தூதரை யேவுதல்.

சென்றவம் பையைச்சா லுவனெனை வென்றே
தெவ்வர்கொள் நினைமணம் புரியேன்
என்றலு மவண்மீண் டனங்கனுக் கிகலோ
னிடம்புகுந் திரந்தன ளக்கோன்

மன்றல்செய் கிலன்யான் வன்னிமீள் கெனவே
மடக்கொடி யிடுக்கணுற் றீன்ற
வன்றனக் கிதைச்சொற் றனளவன் றூதால்
வரநதி சுதன்மன முணர்ந்தான்.

(இ-ள்). சென்ற அம்பையை-(தன்னிடம்) வந்து சேர்ந்த அம்பையை, சாலுவன்—, "எனை வென்றே-என்னை ஜெயித்தே, தெவ்வர் கொள் நினை-பகைவர் கவர்ந்துபோன நின்னை, மணம் புரியேன்–விவாகம் செய்துகொள்ளேன்:" என்றலும்-என்று கூறவும், அவள்-அந்த அம்பை, மீண்டு-திரும்பி வந்து, அனங்கனுக்கு இகலோனிடம் புகுந்து–மன்மதனுக்குப் பகைவனாகிய வீடுமனிடம் சார்ந்து, இரந்தனள்-மணம் புரிந்துகொள்ளும்படி வேண்டினள்: அ கோன்-அந்த வீடுமன், யான்-நான், வன்னி-பிரமசாரி; (எனவே) மன்றல்-திருமணம், செய்கிலன்-செய்ய மாட்டுவனில்லை: மீள்க-நீ திரும்பிச் சாலுவனிடம் போகு, எனவே-என்று சொல்லிவிட, மடந்தை-அம்பை, இடுக்கணுற்று-துன்பமடைந்து, ஈன்றவன் தனக்கு-தன்னைப் பெற்ற காசிராஜனிடம், இதை சொற்றனள்-இந்த விவரத்தைச் சொல்லினள்: அவன்-அந்தக் காசிராஜன், தூதால்-தூதுவரை யனுப்பி அவர் மூலம், வரநதிசுதன் மனம்-கங்காபுத்திரனாகிய வீடுமனின் கருத்தை, உணர்ந்தான்-தெரிந்துகொண்டான்; (எ-று).

அனங்கனுக்கு இகலோன்-காமவிகாரமில்லாதவன் என்றபடி. 'அம்பை வீடுமனால் நிராகரிக்கப்பட்ட பின்பு தவத்தில் மனமூன்றியவளாய்க் காட்டிற்குச் சென்றாள்" என்ற இங்ஙனமே பால பாரதத்தில் உள்ளது, தந்தையிடம் சொற்றதாக இல்லை. (31)

32. தூதுவர் புகலவும் வீடுமன் மணம் மறுக்க, "பரசுராமனைச் சாரின் உன் எண்ணம் முடிவுறலாகும்" என்று தந்தை மகளுக்கு உபாயங்கூற, அம்பை பரசுராமனிடம் அடைந்து தன் குறையைத் தெரிவிக்க, அவனும் அவள் குறையை முடிப்பதாக உறுதிகூறி அபயமளித்தான்.

தூதையுய்த் துணர்ந்து முடன்படா மையினுற்
றுயருழந் துயிர்த்தவன் கடல்சூழ்
பூதலத் தவர்சொன் மறுக்கினு மழுவோன்
புகன்மொழி மருனென வவன்பான்

மாதினை விடுப்ப வவள்புகுந் திறைஞ்சி
மனத்துய ரனைத்தையு மவனுக்
கோதின ளவனும் அஞ்சனீ யென்றே
யொல்லையவ் வல்லியோ டெழுந்தான்.

(இள்.) தூதை-தூதுவரை, உய்த்து-அனுப்பி, உணர்ந்தும்-தெரியப்படுத்தியும், உடன்படாமையினால்-வீடுமன் ஒப்புக் கொள்ளாமையினால், துயருழந்து-வருத்தமுற்று, உயிர்த்தவன்-[அம்பையைப் பெற்ற] காசிராஜன், கடல்சூழ் பூதலத்தவர் சொல் மறுக்கினும்-கடலாற் சூழப்பட்ட பூமியிலுள்ளோர் சொற்களை மறுத்தாலும், மழுவோன் புகல் மொழி-பரசுராமன் கூறுகின்ற வார்த்தைகளை, மருன்-மறுக்கமாட்டான் (வீடுமன்), என-என நிச்சயித்து, அவன்பால்-அந்தப் பரசுராமனிடத்து, மாதினை விடுப்ப-அம்பையை அனுப்ப, அவள்—, புகுந்து-அவரிடம் சார்ந்து, இறைஞ்சி-வணங்கி, மனத்துயர் அனைத்தையும் ஓதினள்-தன் மனத்துக்கம் எல்லாவற்றையும் அம்முனிவனிடத்துச் சொல்லினாள்: அவனும்-அந்தப் பரசுராமனும், "அஞ்சல் நீ"-நீ பயப்படாதே: [உனக்கு அபயமளித்தேன்], என்றே-என்றுகூறி, ஒல்லை-விரைவிலே, அ வல்லியோடு - அந்த அம்பையோடு, எழுந்தான்-அத்தினபுரிக்குப் புறப்பட்டான்; (எ-று).

குரு ஆதலால் பரசுராமன் மொழியை வீடுமன் மறுக்க மாட்டானென்று காசிராஜன் கருதினன். தூது-தூதுவனுக்குப் பண்பாகுபெயர். உணர்ந்தும் - உணர்வித்தும் என்றபடி. தன்வினை பிறவினைப் பொருளில் வந்தது. உயிர்த்தவன்-வினையாலணையும் பெயர். மழுவோன்-மழுப்படை யேந்தியவன்: பரசுராமன். அஞ்சல்-அல்லீற்று எதிர்மறை வியங்கோள் வினை முற்று. ஒல்லை-விரைவுப் பொருளில் வரும் குறிப்பிடைச்சொல். வல்லி-அம்பைக்கு, உவமவாகுபெயர். (32)

வேறு

33. வீடுமன் பரசுராமனை எதிர்கொண்டு வணங்க, அவர் அம்பையை மணந்துகொள்ளுமாறு வீடுமனிடம் கூற, வீடுமன் தன் விரதத்தைத் தவிர்ந்து இசைவது இயலாது என மண மறுத்ததைக் கூறும்.

சந்த னத்தவளு டன்பு குந்துநதி
தந்த மைந்தநகர் சாருமுன்
வந்தி றைஞ்சிதரு பீட நண்ணிமட
மங்கை கொங்கைநல நுங்கநீ

சிந்தை செய்தியென விஞ்ஞை சொற்றகுரு
செப்ப சீடன்விர தந்தவிர்ந்
திந்த சொற்கிசைவ தாகி லெய்தனர
கீவல் வேண்டிலுயி ரென்னதும்.

(இ-ள்.) விஞ்ஞை சொற்ற குரு-தநுர்வித்தையைக் கற்பித்த குருவாகிய பரசுராமன், சந்தனத்து-தேரிலேறிக்கொண்டு, அவளுடன் புகுந்து-அந்த அம்பையுடனே சேர்ந்து, நதி தந்த மைந்தன்-கங்காநதியின் புத்திரனுகிய வீடுமனது, நகர் சாருமுன்-நகரமாகிய அத்தினபுரியை அடைவதற்கு முன்னேயே (அடைந்த வுடனே), வந்து-(வீடுமன்) எதிர்கொண்டு வந்து, இறைஞ்சி-வணங்கி, தரு பீடம் நண்ணி-தந்த ஆசனத்தின்மீது அமர்ந்து, "மடமங்கை கொங்கைநலம் நுங்க நீ சிந்தைசெய்தி"-இந்த அம்பையின் இன்பநலம் துய்க்க நீ யோசனை பண்ணுகிறுயே" என-என்று, செப்ப-சொல்ல, சீடன்-சிஷ்யனுகிய வீடுமன், விரதம் தவிர்ந்து-யான் மேற்கொண்டுள்ள பிரமசரிய விரதத்தை விட்டு, இந்த சொற்கு இசைவதாகில்-(குருவின் சொல் என்று மதித்து) இந்த உமது மொழிக்கு சம்மதிப்பேனேயானுல், எய்தல் நரகு-(யான்) அடைதல் நிச்சயம் நரகம்: வேண்டில் என்னதும் உயிர் ஈவல்-(ஆகவே) நீர் எனது உயிரைக் கேட்டாலும் (மகிழ்ச்சி யோடு) கொடுப்பேன்; (எ-று.)—"என்றியம்ப" என மேலைக் கவியில் தொடரும்.

மடமங்கை-அம்பை: மடம் என்பது பெண்டிர்க்குரிய குணம்: அஃது-கொளுத்தக்கொண்டு கொண்டது விடாமை. நுங்குதல்-பருகுதல்; இங்கு அநுபவித்தல். விஞ்ஞை=விஞ்சை: போலி. விஞ்ஞை-வித்தை: இங்கே தநுர்வித்தை (விற்பயிற்சி). ஈவல்-முன்னிலை வினைமுற்று.

இதுமுதல் இச்சருக்கம் முடியுமளவும் ஆறுகவிகள்-பெரும் பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ்சீர்கள் மாச்சீர்களும் ஈற்றுச் சீரான்று விளச்சீரும், மற்றை மூன்றும் காய்ச்சீருமாகி வந்த எழுசீராசிரியச் சந்த விருத்தங்கள். தந்த தந்ததன தந்த தந்ததன தந்த தந்ததன தந்தன என்பது சந்தக்குழிப்பு. (33)

34. வீடுமன் மறுத்தது கேட்டுப் பரசுராமன் தேர்மீது ஏறிப் பொர, ''விரதம் தவறுவதைவிடக் குருவுடன் பொருது மடிதலே நன்று'' என்று வீடுமனும் பொருமாறு தேரி லேறுதல்.

என்றி யம்பமழு வாளி மிக்கசின
மெய்தி மொய்யம ரியற்றுவான்
நின்ற தன்னிரத மேவி யஞ்சிதொழு
நிருபன் மீதுசில கோலலும்
அன்றி யம்புசப தந்த விர்ந்துடல
ளித்த றன்னில்குரு வமரிலே
பொன்று மாறுநல னென்று வீடுமனும்
பொரு துவானிரத மேறினன்.

(இ-ள்). என்று இயம்ப-வேண்டில் உயிரும் ஈவேன் என்று வீடுமன் சொல்ல, மழுவாளி-பரசுராமன், மிக்க சினம் எய்தி-மிகுந்த கோபமடைந்து, மொய் அமர் இயற்றுவான்-நெருங்கிய போரைச் செய்யும்பொருட்டு, நின்ற தன் இரதம் ஏறி மேவி-[சித்தமாக] நின்றிருந்த தன் தேரின்மேல் பொருந்தி, அஞ்சி தொழு நிருபன் மீது-பயந்து கைகூப்பி வணங்கிநின்ற மன்னனுகிய வீடுமன்மேல், சில கோலலும்-வில்லை வளைத்தலும், வீடுமனும்—, அன்று-அன்றையதினம் யமுனைக் கரையில் தாசபூபதியின் முன்னிலையில், இயம்பு-சொன்ன,சபதம்-விரதம், தவிர்ந்து-தவறி, உடல் அளித்தல் தன்னில்-சரீரத்தை (அம்பைக்கு)க் கொடுத்தலைக் காட்டிலும், குருவமரிலே-குருவோடு செய்யும் போரிலே, பொன்று மாறு-இறந்துபடுதல், நலன் என்று-சிறந்ததாகும் என்று, பொருதுவான்–போர் செய்யும்பொருட்டு, இரதம் ஏறினன்-தன் தேரின்மேலே ஏறிக்கொண்டான்; (எ-று).

உடல் அளித்தல்-திருமணஞ் செய்துகொள்ளல் என்ற பொருளது. இனி, உடம்படுதல் என்றுமாம். இயற்றுவான், பொருதுவான்-வானீற்று வினையெச்சங்கள். (34)

35. பத்து நாட்கள் சலிக்காமல் இருவரும் போரிடல்.

ஐயி ரண்டுதின மல்லு மெல்லுமொழி
யாமன் மன்னனுமி ராமனு
மையி ரண்டுபொர நின்றெ திர்ந்ததென
வாங்கி வெஞ்சிலைகு ணத்தொனி

செய்தி ரண்டுதிற லோர்கள் கண்டவர்தி
கைப்ப வம்பரம றைப்பநீள்
கையி ரண்டுமொழி யாம லெய்துகணை
கன்றி ருஞ்சமரி யற்றினர்.

(இ-ள்). ஐ இரண்டு தினம்-பத்து நாட்கள், அல்லும் எல்லும் ஒழியாமல்-இரவும் பகலும் விடாமல், மன்னனும் இராமனும்-வீடுமனும் பரசுராமனும், மையிரண்டு-இரண்டு செம்மறியாட்டுக் கடாக்கள், பொரநின்று-முட்டிப் போர் செய்தற்கு நின்று, எதிர்ந்ததென-எதிரிட்டு மோதியது போல, வெம் சிலை வாங்கி-கொடிய விற்களை வளைத்து, குணத்தொனி செய்து - நாணியினுல் ஒலி யெழுப்பி (டங்காரம் செய்து), கண்டவர் திகைப்ப - பார்த்தவர் அதிசயிக்கும்படி, நீள் கை இரண்டும் ஒழியாமல்-நீண்ட கைகளிரண்டினுலும் ஓய்வில்லாமல், கணை எய்து-அம்புகளைச் செலுத்தி, அம்பரம் மறைப்ப-ஆகாயத் திடம் மறையும்படி, கன்று-கோபித்து, இரண்டு திறலோர்கள்-இரு வீரர்களும், இரும் சமர்-பெரிய போரை, இயற்றினர்-செய்தார்கள்; (எ-று).

மை-செம்மறியாடு: தகர் : குணம்-வில்லின் நாண். குணத் தொனி-வில்லின் நாணேசை: டங்காரம் என்பர். (35)

36. பரசுராமனை வீடுமன் வென்றிட, அவ்விருவரும் தம்மிருப்பிடஞ் சேர்தல் கூறும்.

வேரி னெடுமற மன்னர் தங்கள்குலம்
வென்ற வீரமழு வாளிதன்
தேரி னெடுசிலை வாசி பாகுகொடி
சிந்தி நொந்தடிசி வப்பமீண்
டூரி னெடிபுக வென்றி ராகவனை
யொத்த சித்திரவி லாளியிப்
பாரி னெடுமுயர் விண்ணு ளோர்கடுதி
பண்ண வண்ணநகர் நண்ணினனன்.

(இ-ள்.) மற மன்னர் தங்கள் குலம்-வீர க்ஷத்திரியர்கள் வமிசத்தை, வேரினெடு வென்ற-இருபத்தொருகால் அடியோடு களைந்து வெற்றிபெற்ற, வீர மழு ஆளி-வீரனை பரசுராமன், (இப்போரில்), தன்-தனது, தேரினெடு சிலை வாசி பாகு கொடி சிந்தி-தேரோடு வில் குதிரை பாகன் கொடி முதலியவற்றைப்

போகட்டு இழந்து, நொந்து-மனம் வருந்தி, அடி சிவப்ப-பாதங்கள் சிவப்பேறும்படி (கன்றும்படி), மீண்டு-பின்வாங்கித் திரும்பி, ஊரின் ஓடி புக-தனது ஊருக்கு ஓடிப்போய்ச் சேர, வென்றி ராகவனை யொத்த சித்திர விலாளி-(பரசுராமனை) வென்ற தசரதராமனை யொத்த அதிசயிக்கத்தக்க வில்லையுடைய வீடுமன், இ பாரினோடு-இந்தப் பூமியிலுள்ளாரோடு, உயர் விண்ணுளோர் களும்-மேலான தேவர்களும், துதிபண்ண-ஸ்தோத்திரங்களைச் சொல்லிப் போற்ற, வண்ண நகர்-அழகிய அத்தினபுரியை, நண்ணினன்-அடைந்தான்; (எ-று).

"வென்றி ராகவனையொத்த சித்திரவிலாளி" என்று வீடுமனுக்குத் தசரதராமனை யொப்புக் கூறியது மிகவும் பொருந்தும். தசரதராமன் சிவதனுசை யொடித்துச் சீதையை மணந்து கொண்டு அயோத்திக்கு வரும் வழியிலேயே பரசுராமன் எதிர்ப்பட்டு அவ்விராமபிரானை வலுவிற் போருக்கு அழைக்க, அவன் அந்தப் பரசுராமனை வில்லின் மூலமாகவே வலிமையைக் கவர்ந்து தளர்வுறச் செய்தான். பரசுராமனை வென்றதில் வீடுமனுக்கு இராமன் ஒப்புக்கூறப்பட்டான். "கைவிராய சிலையோடு மெய்வலி கவர்ந்து முன்தளர்வுகண்டபோர், அவ்விராமனிகரென்னுமாறு" என்றார் வில்லியும். சிலை வாசி பாகு கொடி-உம்மைத்தொகை. 'பாரினோடும்'-உம்மை பிரித்துக் கூட்டப்பட்டது. ஈற்றடியில் ஈற்றுச்சீர்களில்-பிராசம் காண்க. (36)

37. வீடுமனைக் கொல்ல உறுதிகொண்டு அந்த அம்பை பெருந்தவமியற்றிச் சிகண்டியாதல்.

வாச மாலையிட வந்த காசிபதி
மங்கை பங்கமத டைந்துள
மூச லாடவன மெய்தி வீடுமனு
யிர்க்க வர்ந்திடுவ துன்னியே
மாசி லாததவ மாற்றி யம்பையருண்
மன்னி தன்வடிவ கற்றிபோய்
தேசு லாவுதுரு பதனி டத்தடல்சி
கண்டி யாயவத ரித்தனள்.

(இ-ள்) வாசம் மாலை இட-வாசனை பொருந்திய மணமாலையை யிடுவதற்கு, வந்த—, காசிபதி மங்கை-காசிராஜன் மகளாகிய

அம்பை, பங்கமது அடைந்து-ஈனமடைந்து, உளம் ஊசலாட-மனம் அலைவுற, வனம் எய்தி-காட்டுக்குச் சென்று, வீடுமன் உயிர் கவர்ந்திடுவது உன்னியே-பீஷ்மனது உயிரைப் போக்குவதை எண்ணியே, மாசுஇலாத தவம் ஆற்றி-குற்றம் இல்லாத தவத்தினைச் செய்து, அம்பை அருள் மன்னி-துர்க்காதேவியின் அருள் பொருந்தி, (அதனால்) தன் வடிவு அகற்றி-தன்னுடைய சுய வடிவத்தை யொழித்து, (பின்) தேசு உலாவு துருபதனிடத்து போய்-தேஜஸ் (உடலொளி) பரவும் துருபத மகாராசனிடத்துச் சென்று, அடல் சிகண்டியாய் அவதரித்தனள்-(அவனிடத்திலே) வலிய சிகண்டியென்ற பேரோடு தோன்றினள்; (எ-று).

பங்கம்-தோல்வி, வெட்கம், ஈனம் எனப் பொருள்படும். வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் தவம் மேற்கொண்டாள். பன்னிரண்டு வருஷங்கள் தவம் இருந்தாள் என்ப. அம்பை-துர்க்கை, உமாதேவி என்னவுமாம். "இயக்கி யருளினால்" என்றார் வில்லிபுத்தூரார். இனி, வீடுமனை மறுபிறவியிற் கொல்லும்படி சிவபெருமானிடம் வரம்பெற்று, அக்கினி பிரவேசஞ்செய்து பாஞ்சால தேசத்தரசனாகிய துருபத ராசனிடத்திற் பெண்ணாகப் பிறந்து சிகண்டியென்று பெயர்பெற்று ஆணென வழங்க வளர்ந்தனள்: பிறகு ஸ்தூணனென்ற யட்சனால் வரமாகத் தனது பெண்தன்மையை மாற்றி ஆண்தன்மை கொடுக்கப் பெற்றனளென்ப. (37)

38. விசித்திரவீரியன் இன்பமனுபவித்து க்ஷயரோகத்தால் விண்ணுலகடைந்தமை.

ஆழி சூழுமுல கோர்க ளுய்யவர
சாற்று மாற்றல்கொள் வீர னும்
மாழை மானுமிழி கோவை யொத்தவிதழ்
வாழை யன்ன துடை தாழ்குழல்
ஏழை மார்களிரு வோர்கள் போகமெனு
மின்ப மன்புடன ருந்துநாள்
ஊழி னலிரும னேய டைந்துடல
மொருவி வானகர மருவி னன்.

(இ.ள்). ஆழி சூழும் உலகோர்கள் உய்ய-கடலாற் சூழப்பட்ட உலகத்தவர்கள் வாழும்படி, அரசு ஆற்றும் ஆற்றல்கொள்-

நல்லரசு செய்துவரும் வல்லமைகொண்ட, வீரனும்-விசித்திர வீரியனும், மானைமானும்விழி-பெண்மானை யொத்த பார்வையும், கோவை ஒத்த இதழ்-கொவ்வைக் கனி போன்ற சிவந்த அதரத்தையும், வாழை அன்ன துடை-வாழைத் தண்டைப்போல் குளிர்ந்த தொடையையும், தாழ் குழல்-நீண்டு தாழ்ந்து இருக்கும் கூந்தலினையும் கொண்டுள்ள, ஏழைமார்கள் இருவோர்கள்-அம்பிகை அம்பாலிகை என்ற இரண்டு பெண்களுடைய, போகம் எனும் இன்பம்-புணர்ச்சியின்பத்தை, அன்புடன்-ஆதரத்தோடு, அருந்து நாள்-அநுபவித்து வருங்காலத்தில், ஊழினால்-விதியின் வயனாக, இருமல் நோய் அடைந்து-(ராஜயக்ஷ்மா என்ற] க்ஷய ரோகத்தை யடைந்து, உடலம் ஒருவி-உடலை நீக்கி, வானகரம்-விண்ணுலகம், மருவினன்-சேர்ந்தான்; (எ-று).

மிகு போகத்தால் க்ஷயரோகம் ஏற்படும்: அது ராஜயக்ஷ்மா எனப்படும். மானும், ஒத்த, அன்ன-உவமவுருபுகள். விழி, இதழ், துடை என்பனவற்றினீற்றில் உம்மை தொக்கு நின்றது. தாழ்குழல்-வினைத்தொகை. ஏழை-பெண். இன்பமன்பு, ஒருவி மருவி-பிராசம். (38)

சந்தனுச் சருக்கம் முற்றிற்று.

———

சந்திரனின் வமிசாவளி

(வில்லிபாரதம் கூறியபடி)

[பூரு வரையில்]

சந்திரன்
|
புதன்—இளை
|
புரூரவா—உருப்பசி
|
ஆயு
|
நகுஷன்
|
யயாதி—1. தேவயானை [சுக்கிராசாரியர் புதல்வி]



யது — துருவசு

2. சன்மிட்டை [விருஷபர்வாவின் புதல்வி]



த்ருஹ்யு — அனு — பூரு

சந்திரன் தொடங்கி அசுவமேததத்தன் ஈறுக ஆண்ட வமிசங்களின் பெயர்கள்.

சந்திர வமிசம்
|
பூரு வமிசம்
|
பரத வமிசம்
|
குரு வமிசம்
|
சந்தனு வமிசம்
|
பாண்டு வமிசம்

— ஆகிய ஆறும்.

பூருவின் வமிசாவளி

(முதனூலிற் கூறியபடி)

[பரதன் வரையில்]

பூரு—கௌசல்லை

ஜனமேஜயன்—சுநந்தை (மகததேசன் மகள்)

பிராசீன்வான்—[சத்தியமாலினி என்னும்] ஆஸ்மகி(யது வமிசத்தினள்)

சையாதி—வராங்கி (திரிசங்குவின் மகள்)

அஹம்யாதி—பானுமதி (கிருதவீரியன் மகள்)

சார்வபௌமன்—சுந்தரை (கேகயன் மகள்)

ஜயத்சேனன்—சுஸ்ரவை (விதர்ப்ப ராஜன் மகள்)

அபராசீனன்—மரியாதை (மற்றொரு விதர்ப்ப ராஜன் மகள்)

அரிஹன்—அங்கதேச ராஜன் மகள்

மஹாபௌமன்—ஸ்யஜ்ஞை (பிரசேனஜித் மகள்)

அயுதாநாயி—பாஸை (ப்ருதுச்ரவஸ் மகள்)

அக்குரோதனன்—கண்டு (கலிங்க ராஜன் மகள்)

தேவாதிதி—மரியாதை (விதர்ப்ப ராஜன் மகள்)

ரிசன்—வாமதேவி (அங்கராஜன் மகள்)

ரிக்ஷன்—ஜ்வலந்தி (தக்ஷகன் மகள்)

அந்தியநாரன் (மதிநாரன்)—சரஸ்வதி

திரஸ்நு (தம்ஸு)—காளிந்தி

இலிலன்—ரதந்தரி

துஷ்யந்தன்—(1) லாக்ஷி (பகீரதன் மகள்) | சூரன் | வீமன் | ப்ரவஸு | வஸு

ஜனமேஜயன் | (2) சகுந்தலை (விசுவாமித்திரன் மகள்)

பரதன்—சுநந்தை (காசி ராஜன் ஸர்வஸேனன் மகள்)

பூருவின் வமிசாவளி—தொடர்ச்சி.
(முதனூலிற் கூறியபடி)

பரதன் தொடங்கி ஜனமேஜயன் வரை

பரதன்—சுநந்தை (காசிராஜன் ஸர்வஸேனன் மகள்)

|

புமன்யு—சுவர்ணை (யதுவம்ச புத்திரி)

|

ஸுஹோத்ரன்—ஜயந்தி (இக்ஷ்வாகுவம்ச புத்திரி)

|

ஹஸ்தி—யசோதை (திரிகர்த்ததேசத்தரசன் மகள்)
(ஹஸ்தினபுர நகரம் நிர்மாணித்தவன்)

|

விகுண்சனன்—சுந்தரை (யது வமிசம்)

|

அஜமீடன்—1. கைகேயி, 2. நாகை, 3. காந்தாரி, 4. விமலை, 5. ரிக்ஷை

|

(இந்த ஐந்து மனைவியரிடத்தும் மொத்தம் இரண்டாயிரத்து நானூறு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் தனித்தனியாக வம்சங்களை யுண்டுபண்ணினார்கள்). [ரிக்ஷையினிடம பிறந்த ஸம்வரணன் வம்ச விருத்திசெய்தவன்]

|

ஸம்வரணன்—தபதி (சூரியன் புத்திரி)

|

குரு—சுபாங்கி (யது வம்சம்)

|

விதூரதன்—ஸம்பரியை (மகதராஜன் மகள்)

|

அனஸ்வான்—அமிர்தை (மகதராஜன் மகள்)

|

பரிக்ஷித்—சுவேஷை (பாகுகன் மகள்)

|

பீமசேனன்—சுகுமாரி (கேகயராஜன் குமாரி)

|

பரிசிரவஸ் (பிரதீபன்)—சுநந்தி (சிபி சக்கரவர்த்தி பெண்)

|

தேவாபி (இளமையிலேயே வனம் புகுந்தான்)	சந்தனு—1. கங்காதேவி (பகீரதன் மகள்)
	பாஹ்லீகன்
	தேவவிரதர் (பீஷ்மர்)
	—x—
	சந்தனு—2. ஸத்யவதி (காளி, யோசனகந்தி எனவும்படுவள்: பரதவர்பதி மகள்)
	சித்திராங்கதன்—(கந்தர்வனால் கொல்லப் பட்டான்)
	விசித்திரவீரியன்—(அம்பிகை, அம்பாலிகை காசிராஜன் பெண்கள்) (சந்ததி யுண்டாகுமுன்னரே இறந்தான்).

வமிசம் இடையீடுபட அதன் நிவிருத்தி

வியாசரால்—வமிசத் தொடர்ச்சி

பராசர முனிவர்—ஸத்யவதி (யோசனகந்தி, காளி)

|

வியாசர் (த்வைபாயனர் எனவும் படுவர்)

இவர் வரபலத்தால் தோன்றினவர்கள்—

அம்பிகையிடம்—திருதராஷ்டிரன்

அம்பாலிகையிடம்—பாண்டு

(அம்பிகையின் தோழி மூலம்—விதுரன்)

திருதராஷ்டிரன்—காந்தாரி

|

துரியோதனன், துச்சாதனன் முதலாகச் சித்ரகன் வரையுள்ள நூற்றுவரும், துச்சளை என்ற பெண்ணும் (இவள் சயித்திரதன் மனைவி)

|

துரியோதனன்
(பானுமதி மூலம்)

|

இலக்கணகுமாரன்

துச்சாதனன்

|

துச்சனி
(இவனைச் சயசேனன் என்று பெருந்தேவனார் பாரதம் கூறும்)

பாண்டு வமிசம்

பாண்டு—I குந்திதேவியிடம் மந்திரபலத்தால் தோன்றினவர்கள்:

|

1. தருமபுத்திரர் (தருமராசன் மந்திரத்தால்)
2. வீமன் (வாயுதேவன் மந்திரத்தால்)
3. அருச்சுனன் (இந்திரன் மந்திரத்தால்)

பாண்டு வமிசம்—தொடர்ச்சி.

பாண்டு—II மாத்திரியிடம் மந்திர பலத்தால் தோன்றினவர்கள்:

4. நகுலன்
5. சகதேவன் } (அசுவினி தேவர்கள் இருவர் மந்திரத்தால்)

திரௌபதி மூலம் :—

தருமன் — பிரதிவிந்தியன்

வீமன் — சுதசோமன்

அருச்சுனன் — சுருதகீர்த்தி

நகுலன் — சதானீகன்

சகதேவன் — சுருதசேனன்

ஏனையோர் மூலம் :—

தருமன் — தேவகி (சைப்பியன் மகள்) — யௌதேயன்

வீமன் — ஜலந்தரை (காசி ராஜன் மகள்) — சர்வத்திராதன் [இடும்பி மூலம்—கடோற்கசன்]

அருச்சுனன் — சுபத்திரை (கிருஷ்ணன் சகோதரி) — அபிமன்யு [உலூபியிடம்—இராவான்; சித்திராங்கதையிடம் பப்ருவாஹனன்]

நகுலன் — ரேணுவதி (சேதி ராஜாவின் பெண்) — நிரமித்ரன்

சகதேவன் — விஜயை (மத்திர தேசத்தரசன் மகள்) — ஸுஹோத்ரன்

அபிமன்யு—உத்தரை (விராடன் மகள்)

பரிக்ஷித்து—பத்திரவதி

ஜனமேஜயன்—வபுஷ்டமை

[குறிப்பு: இவனுக்குத்தான் வைசம்பாயனர் பாரத கதை சொல்லுவது.]

சதாநீகன்—(விதேஹ ராஜாவின் பெண்) — அசுவமேததத்தன்

சங்குகர்ணன்

இவ்வாறு இந்தப் பூரு, பாண்டு இவர்களுடைய வமிசம் அட்டவணையிட்டுச் சொல்லப்பட்டது.

பன்னிரண்டாவது

சம்பவச் சருக்கம்

சம்பவம்=ஸம்பவம்: பிறத்தலென்று பொருள். இந்தச் சருக்கத்தில், விசித்திரவீரியனுடைய மனைவியரான அம்பிகை அம்பாலிகையர்பால் திருதராட்டிரனும் பாண்டுவும் தோன்றியதும், திருதராட்டிரன் மனைவியான காந்தாரியினிடத்தும் பாண்டுவின் மனைவியரான குந்தி மாத்திரியிடத்தும் துரியோதனன் முதலிய நூற்றுவரும் பஞ்ச பாண்டவரும் தோன்றியதும், பாண்டு இறந்ததும், இம்மக்களின் வளர்ச்சியும் கூறப்படும்.

வேறு

1. யோசனகந்தி கொழுந்தியரிடத்து மகவை யுண்டாக்குமாறு வீடுமனிடம் சொல்லல்.

இளைய மைந்தனு மிறந்திடப் பயந்தவ
ளேங்கிவா னதிதன்கான்
முளையை மைந்தகே ளவம்பெறுங் குருகுல
முயர்ச்சியுற் றிடுவானீ
தளைய விழ்ந்ததார் துறந்தநின் கொழுந்தியர்
தழிமகப் பெறவாசை
விளையு மென்னுளத் தன்னைசொல் புரத்திநின்
விரதம்பொய்த் திடாதென்றுள்.

(இ-ள்). இளைய மைந்தனும் இறந்திட-இளைய புதல்வனுகிய விசித்திரவீரியனும் மாளவே, பயந்தவள்-பெற்ற யோசனகந்தி, ஏங்கி-துயரமுற்று, வான்நதிதன் கான்முளையை-கங்காபுத்திரனுகிய வீடுமனை நோக்கி, "மைந்த-குமாரனே! கேள்-யான் சொல்வதைக் கேட்பாயாக: அவம் பெறும் குருகுலம்-(இடையறுமைக்குக் காரணமான புதல்வரையில்லாமையால்) வீணே கழியும் இந்தக் குருவமிசம், உயர்ச்சியுற்றிடுவான்-(சந்ததி பெருகுதலால்) உயர்வுபெற்றுத் திகழும்படி, நீ—, தளை அவிழ்ந்த தார் துறந்த-மலர்முறுக்கு விரிந்துள்ள மாலைகளை (இனிச் சூடமாட்டாது) நீத்த, நின் கொழுந்தியர்-உன் உடன்பிறந்தானுடைய மனைவிமாரை, தழி-அணைந்து சேர்ந்து, மக பெற-பிள்ளைகளைப் பெற, என்

உளத்து ஆசை விளையும்-என்மனத்தில்-ஆசையுண்டாகின்றது; அன்னை சொல் புரத்தி-தாயின் சொல்லைத் தட்டாது பாதுகாப் பாய்: (அதன் மூலம) நின் விரதம் பொய்த்திடாது-உன்னுடைய சபதமும் பிழைபடாது" என்றுள்-என்று கூறினள்; (எ-று).

கான்முளை-மகன். கொழுந்தியர் தார் துறந்தது-கைம்மைப் பெண்டிர் ஆனதனாலே. தளை-மலர்முறுக்கு: "புதுவது தளைவிட்ட தாதுசூழ் தாமரை (கலித்: 69). என் உளத்து ஆசைவிளையும் என்று அன்னை கூறியது-தேவர நீதிபற்றி யென்க. தேவர நீதி யாவது-கணவனையிழந்து மகப்பெறுத கைம்பெண்ணனவள் சந்ததி விருத்தியின்பொருட்டுத் தேவரனோடு [தேவரன்-கணவ னுடன் பிறந்தவன்] சேர்ந்து மகப்பெறலாமென்ற முறைமை. விரதம் பொய்த்திடாது என்றதற்குக் காரணம்-தாய் சொல்லி யதைச் செய்யுஞ் செயலாதலால். விரதமாவது-பெண்களை மணவாமையாகிய நோன்பு. புரத்தி-முன்னிலையேவல்.

இது முதல் இருபத்தொன்பது கவிகள்—முதலது மாச்சீரும் ஈற்றது காய்ச்சீரும் இடையில் வருவன பெரும்பாலும் விளச் சீர்களும் ஆகிய அறுசீராசிரிய விருத்தங்கள். (1)

2—9. (எட்டுக்கவிகள்—ஒருதொடர்):—வீடுமன் மறுத்து, முனிவரால் அரச மாதர் மகவைப் பெற்றுற்போற் செய்வதே முறை என்று கூறி, அதற்குச் சான்றாக தீர்க்கதமஸ் என்ற ரிஷியின் கதையினைத் தெரிவித்தல்.

2. அவ்வு ரைச்செவி புகுமுனம் அம்மவென்
ஞருயிர் பொன்றுலும்
இவ்வு ரைக்கிசை யேன்சுதர் வரும்படி
யியம்புவன் கேண்முன்னம்
பவ்வி யப்பெயர் முனிமனை கருக்கொளும்
பருவம்பொன் னவர்சேர்போ
தொவ்வு றுதிஃ தறிஞருக் கெனவகட்
டுறைபவ னுரைசெய்தான்.

(இ-ள்). அ உரை-அன்னை கூறிய அந்த வார்த்தைகள், செவி புகு முனம்-காதில் விழுவதற்கு முன்னாலேயே, (கேட்ட வுடனே என்றபடி), அம்ம-அம்மா!, என் ஆருயிர் பொன்றுலும்-என் அரிய உயிர் நீங்கிப்போனாலும், இ உரைக்கு இசையேன்-

இந்த வார்த்தைகளுக்குக் கட்டுப்பட்டுச் சம்மதியேன்: சுதர் வரும்படி-புதல்வர்கள் உண்டாகும் விதத்தை, இயம்புவன்-சொல்கின்றேன்: கேள்-கேட்பீராக: முன்னம்-முன்னொரு காலத்தில், பவ்வியப் பெயர் முனி-பௌவியர் என்ற பெயரையுடைய முனிவரது (உசத்யரது), மனை-மனைவியாகிய மமதை யென்பவள், கருக்கொளும் பருவம்-கருக்கொண்டிருந்த சமயத்தில், பொன்னவர்-பிருஹஸ்பதி, சேர்போது-புணருஞ்சமயத்தில், அகட்டு உறைபவன்-முன்னரே வயிற்றில் கருப்பத்திலிருந்த குழந்தை, 'அறிஞருக்கு இஃது ஒவ்வுறுது-ஞானியாகிய உமக்கு இச் செயல் தகாது', என-என்று, உரைசெய்தான்-கூறினன்; (எ-று.)

அம்ம-அன்னையை நோக்கியவிளி: இனி 'அம்ம கேட்பிக்கும்' (தொல். சொல் : 278) என்ற பொருளில் இடைச்சொல். இனி, உரையசைச் சொல் எனினுமாம். "உயிர் போனாலும் விரதம் தவறேன்" என்று வீடுமன் கூறி, மேலும் புத்ரோத்பத்திக்கு உபாயம் தெரிவிப்பதற்காகத் தீர்க்கதமஸ் என்னும் ரிஷியின் கதையை மேலிக்கவியிலிருந்து தொடங்கி ஏழு கவிகளில் கூறுகிறார். உசத்யர் என்ற முனிவரின் பெயர் இங்கே "பவ்வியர்" என வந்துளது. அவர் மனைவி பெயர் மமதை. பிருஹஸ்பதி உசத்யருடைய கனிஷ்ட சகோதரர்: எனவே மமதைக்கு மைத்துனர். அவர் புணர வந்தபோது கருப்பத்திலிருந்த உசத்யருடைய புத்திரன் "இது தகாது" என அறிவுறுத்தினன்: அவன் வயிற்றுக்குள்ளிருந்த போதே ஆறு அங்கங்களுடனுங் கூடிய வேதத்தை அத்தியயனஞ் செய்திருந்தான். பொன்னவர்-பொன்-பிருஹஸ்பதி: அவர்-சொல்லுருபு. (சுக்கிரனை வெள்ளி என்பர்). அகடு-வயிறு. உறைபவன்-வினையாலணையும் பெயர். (2)

3. சொற்ற லுங்குரு வெகுண்டுடற் றம்மகச்
சூளுரைத் தனன்மூற்ற
மூற்ற நாண்முதற் றீர்க்கதமப் பெயருடன்
துயர்கொடு வேதங்
கற்ற வன்னொரு வேதிய னல்கிய
காரிகை வேட்டின்பம்
பெற்று யிர்த்தனன் சுதர்பலர் மனைதுயர்
பெரிதுற யாதென்றான்.

(இ-ள்). (கருப்பத்திலிருந்த சிசு) சொற்றலும்-(இது தகாது

என்று) சொன்னவுடனே, குரு-பிருஹஸ்பதி, வெகுண்டு-கோபித்து, உடற்று-வருத்துவதற்காக, அ மக சூள் உரைத்தனன்-அந்தக் குழந்தைக்குச் சாபங் கொடுத்தனன்: (அதன் பயனாக) தோற்றம் உற்ற நாள்முதல்-உலகில் பிறந்த நாள் தொடங்கி, [பிறவிக் குருடனாய்] தீர்க்கதமப் பெயருடன்-தீர்க்கதமஸ் என்ற பெயரோடு, வேதம்-வேதங்களை, துயர்கொடு கற்றவன்-(கண் தெரியாமையால்) சிரமப்பட்டுக் கற்றுக்கொண்டவன்: (இவன்) ஒரு வேதியன் நல்கிய காரிகை-ஒரு பிராமணன் பெற்ற பெண்ணை [ப்ரத்வேஷி என்பவளை], வேட்டு-மணந்து, இன்பம் பெற்று-சுகம் அநுபவித்து, சுதர் பலர்-பல பிள்ளைகளை, உயிர்த்தனன்-பெற்றான்: (பிறகு) மனை-மனைவியாகிய ப்ரத்வேஷி, பெரிது துயர் உற-மிக்க துன்பத்தை யடைய, [கணவனாகிய தீர்க்கதமஸ்] யாது என்றான்-உன் துன்பத்துக்கு யாது காரணம் என்று வினவினான் (எ-று).—காரணம், மேலேச் செய்யுளிற் காண்க.

பிருஹஸ்பதி கொடுத்த சாபம்–"நீ நீண்ட இருளையடைவாய்' என்பது. இருள்-கண் தெரியாமை; நீண்ட இருள்-தீர்க்க தமஸ் சுதர் பலர்-கௌதமர் முதலிய புத்திரர்கள். (3

4. மறைந்த நாண்முத னின்பணி செய்தற
வருந்தின னினியெம்மைத்
தணந்து செல்கென வின்றுதொட் டரிவையர்
தமக்கருந் தனமாகும்
வணந்த ரும்பரு வங்குலம் வாய்க்கினு
மணவ(ன்)வீந் திடிற்றுங்கா
தணிந்த மங்கல மொருவிடக் கடவதென்
றவனுருத் துரைசெய்தான்.

(இ-ள்). மணந்த நாள் முதல்-[பிறவிக் குருடராகிய உம்மை] விவாகம் செய்துகொண்ட நாள் முதற்கொண்டு, நின் பணி செய்து-உமக்குப் பணிவிடைகளைச் செய்தே, அற வருந்தினன்-மிகவும் வருத்தமுற்றேன்: இனி—, எம்மை-என்னையும் புதல்வர் களையும், தணந்து செல்க என-விட்டுப் போவாயாக. என்று சொல்ல,—(அதற்கு விடையாக) அவன்-அந்த தீர்க்கதமஸ் ரிஷி, 'இன்றுதொட்டு-இன்று முதல், அரிவையர் தமக்கு-பெண்டிருக்கு, வணம் தரும் பருவம்-அழகு கொடுக்கும் பருவம், குலம்-நல்ல

குலம்,(முதலியன) வாய்க்கினும்-நேர்பட்டாலும், அருந் தனமாகும் மணவன்–பெறுதற்கரிய செல்வமாகும் கணவன், வீந்திடில்-இறப்பானேயானால், அணிந்த மங்கலம்–தாங்கள் அணிந்திருக்கின்ற திருமாங்கலியம், தாங்காது ஒருவிடக்கடவது-தரிக்காது நீக்கிவிடக்கடவது'' என்று—, உருத்து-கோபித்து, உரை செய்தான்-கூறினன்; (எ-று).

ரிஷி பத்தினி புத்திரர்கள் கிடைத்ததனாலே அப்போது தன் கணவரை விரும்பாமல் ''நான் இனிமேல் உம்மைப் போஷிப்பதற்கு முடியாதவள்: எந்தக்காலத்திலும் கஷ்டத்தினால் வருந்திக் கொண்டு பிறவிக் குருடனையும் பிள்ளைகளையும் நான் போஷிக்க மாட்டேன்'' என்றாள் என்பது முதலிரண்டடிகளினால் அறிய வேண்டிய விஷயம். (4)

5. வெய்ய வம்மொழிக் கவள்வெகுண் டொல்லையிவ்
விருத்தனைக் கொடுநீவிர்
ஐய முற்றிடா தோருழை விடுமினென்
றறைதலு மவண்மைந்தர்
செய்ய பூந்துணர் புனைதனிற் பிணித்தலைச்
சேணதி விடச்சென்றே
துய்ய மாமறை வழுவிலா தோதுமத்
தூயனேர் துறைசேர்ந்தான்.

(இ-ள்). அவள்-அந்தப் பிராம்மணி ப்ரத்வேஷி, வெய்ய அ மொழிக்கு வெகுண்டு-கடூரமான அந்த வார்த்தைகளுக்குக் கோபித்து, இ விருத்தனை-இந்தக் கிழவனை, ஒல்லை-விரைவிலேயே, கொடு-தூக்கிக்கொண்டு, நீவிர்-நீங்கள், ஐயம் உற்றிடாது-சிறிதும் சந்தேகப்பட்டுத் தயங்காமல், ஓர் உழை விடுமின்-ஓரிடத்திலே விட்டுவிட்டு வாருங்கள், என்று அறைதலும்-என்று சொன்னவுடனே, அவள் மைந்தர்-அவளுடைய புத்திரர்கள், செய்ய–செவ்விதாகிய, பூந்துணர்-பூங்கொத்துக்களாலே அலங்கரிக்கப்பட்ட, புனைதனில்-ஓடமொன்றில், பிணித்து-(தந்தையைச்) சேர்த்துக்கட்டி, அலை-அலைகளை வீசிக்கொண்டு, சேண்-தூரத்தில் ஓடுகின்ற. நதி-கங்கையாற்றில், விட-பிரவாகத்தில் போகுமாறு விட, சென்றே–போய், துய்ய மாமறை வழுவிலாது ஓதும் அ தூயேன்-புனிதமான சிறந்த வேதங்களைக் குற்றமில்லாதபடி

ஓதுகின்ற அந்தப் புனிதனை ரிஷியும், ஓர் துறை சேர்ந்தான்-ஒரு நீர்த்துறையில் ஒதுக்கப்பட்டு (உயிருக்கு ஆபத்தின்றி)ச் சேர்ந்தான்; (எ-று).

"வழுவிடாது ஓதும்" என்ற பாடத்திற்கு வழுக்கி இடையீடு படுதல் இல்லாதபடி ஓதும் என்க. வழுவிலாது-உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம் என்ற ஸ்வரம் தவறுமல் என்க. (5)

6. அத்து றைப்புன லாடவுற் றிடும்பலி
யரசனு ரணமோதும்
வித்த கன்றனைப் பணிந்துடன் கொடுமனை
மேவி விடாயாற்றி
யித்த ரைப்புரந் திடச்சுத ரிலையென
தில்லவள் தனைக்கூடி
புத்தி ரர்த்தர வேண்டுமென் றிரந்தவன்
புடைமனை தனையுய்த்தான்.

(இ-ள்.) அத்துறை-அந்தக் கங்கை நீர்த்துறையிலே, புனலாட உற்றிடும்-நீராடுதற்கு வந்து சேர்ந்த, பலி அரசன்-பலியென்னும் அரசன், ஆரணம் ஓதும் வித்தகன் தனை-வேதம் ஓதுகின்ற அறிஞனாகிய தீர்க்கதமஸ் ரிஷியை, [நீரினின்று எடுத்து] பணிந்து-வணங்கி, உடன்கொடு-கூட அழைத்துக்கொண்டு, மனைமேவி-அரண்மனையை யடைந்து, விடாய் ஆற்றி-களைப்பினைப் போக்கி, 'இ தரை புரந்திட சுதர் இலை-(எனக்குப் பின்) இந்தப் பூமியைப் பாதுகாப்பதற்குப் புதல்வர்கள் இல்லை: (ஆகவே) எனது இல்லவள் தனைக்கூடி-எனது மனைவியாகிய சுதேஷ்ணை யென்பவளைச் சேர்ந்து, புத்திரர்த் தரவேண்டும்-புத்திரப்பேறு அளிக்கவேண்டும்',என்று—, இரந்து-பிரார்த்தித்து, அவன்புடை-அந்த ரிஷியினிடத்து, மனைதனை-தன் மனைவியை, உய்த்தான்-அனுப்பினன்; (எ-று).

"சந்ததி அபிவிருத்திக்காகப் புத்திரர்களை உற்பத்தி பண்ணுவதற்குக் குணங்கள் நிரம்பின ஒரு பிராம்மணரைத் தனம் கொடுத்துப் பிரார்த்திக்க வேண்டும்" என்பது சாத்திர மரபு ஆதலின், பலி பிராமணோத்தமரான தீர்க்கதமஸிடம் கண் பொட்டையாயிருந்தும் தன் மனைவியை உய்த்தான் என்பது அறிய வேண்டுவது. (6)

7. பன்னி தன்னெழிற் கொத்ததா தியைவிடப்
பண்ணவன் அவட்புல்கி
துன்னு வெவ்விட மீனியவர் பதிஞெரு
சுதனுயிர்த் தனன்வேந்த
னன்ன மைந்தர்கண் டஞருற முனியிவ
ரன்றுகின் சுதர்பாங்கி
தன்னி டத்துதித் தவரென நொந்தவன்
தன்மனைக் கிதமோ துதும்.

(இ-ள்.) பன்னி-பத்தினியாகிய சுதேஷ்ணை, தன் எழிற்கு ஒத்த தாதியை-தன் அழகுக்கு ஒத்த அழகு படைத்த வேலைக் காரியை, விட-[தனக்குப் பதிலாக] அவரிடம் அனுப்ப, பண்ணவன்-அந்த முனிவன், அவட்புல்கி-அவளைக் கட்டியணைத்து, (அவளிடம்), துன்னு-நெருங்கிய, வெம்விடம் அனையவர்-கொடிய விஷத்தை யொத்தவராகிய, பதிஞெரு சுதன்-பதிஞெரு புத்திரர் களை, உயிர்த்தனன்-பெற்றெடுத்தான்: வேந்தன்–பலியரசன், அன்ன மைந்தர் கண்டு-அப்படிப்பட்ட புதல்வர்களைக் கண்டு, அஞர் உற-வருத்தமடைய, முனி-தீர்க்கதமஸ் ரிஷி, (அவ்வரசனை நோக்கி), "இவர் நின்சுதர் அன்று-இவர்கள் உன் புதல்வர்கள் அல்லர்: பாங்கிதன் இடத்து உதித்தவர் என–தாதியாகிய வேலைக்காரியிடத்துப் பிறந்தவர்கள்" என்று சொல்ல, அவன்-அந்தப் பலியரசன், நொந்து-மனம் வருந்தி, தன் மனைக்கு-தன் மனைவியாகிய சுதேஷ்ணைக்கு, இதம் ஓதும்-இனிய நல்லுரைகளைச் சொன்னன்; (எ-று).

தாதியின் மகளை அனுப்பினள் என்றும் அவள் சூத்திரப் பெண் என்றும் முதனூல் கூறும்: அவள் கர்ப்பத்தில் கக்ஷீவான் முதலிய பதிஞெருவர் புதல்வர்கள் உண்டானார்கள், மஹரிஷி "எனக்கு ஜனித்ததனால் என் புத்திரர்களே யாவர்: உன் புத்திரர் கள் அல்லர்" என்று அந்த அரசனுக்குச் சொன்னர். அதற்கேற்ப, அப்புதல்வர்களும் வேதமோதுவதைக் கண்டு அரசன் அஞருற் றான் என அறியவேண்டிய விவரம். பன்னி=பத்னீ: வடசொற் சிதைவு. ஓதும்-செய்யுமென் முற்று ஆண்பாலுக்கு வந்தது. (7)

8. தூய ஞயொரு மைந்தனீ முனிவனைத்
தோய்ந்தளி யெனமின்னுள்
நாய கன்மொழிக் கிசைவதே கற்பென
நண்ணலும் அவள்மேனி
நேய மோடிரு கரங்கொடு முனிவர
னீவியே பரிசித்தோர்
சேயுண் டாவனென் றுரைத்தனன் அவளுமோர்
சிறுவனைப் பயந்திட்டாள்.

(இ-ள்). நீ—, முனிவனைத் தோய்ந்து-தீர்க்கதமஸ் ரிஷியைப் புணர்ந்து, தூயனுய்-பரிசுத்தனுகிய, ஒரு மைந்தன்-ஒரு புதல்வனை, அளி-பெற்றுக்கொடுப்பாய், என-என்று சொல்ல, மின்னுள்-மின்னலைப்போல் பிரகாசிக்கின்ற சுதேஷ்ணை, நாயகன் மொழிக்கு இசைவதே கற்பு என—கணவன் சொற்படியே ஒழுகுவதே கற்பு நெறியாகும் எனக்கொண்டு, நண்ணலும்-[அம்முனிவரிடம்] சேர்தலும், முனிவரன்-(அந்த) முனிச்சிரேட்டர், அவள் மேனி-அவளது உடம்பினை, நேயமொடு-அன்போடு, இரு கரம் கொடு-இரண்டு கைகளினுல், நீவியே-தடவியே, பரிசித்து-தொட்டுப் பார்த்து, ஓர் சேய் உண்டாவன் என்று உரைத்தனன்-ஒரு குழந்தை பிறக்கும் என்று சொல்லினன்; (அதற்கேற்பவே) அவளும்-அந்த சுதேஷ்ணையும், ஓர் சிறுவனை-ஒரு பிள்ளையை, பயந்திட்டாள்-பெற்ருள்; (எ-று).

தூயனுயொரு-தூயனுபவொரு என்றபடி. அளி-முன்னிலை வியங்கோள். பயந்த சிறுவன் பெயர் அங்கன் என்பது மேலைச் செய்யுளால் விளங்கும். அங்கங்களைக் கரங்கொடு பரிசித்துப் பிறந்தவனுதலின் இப்பெயர் பெற்ருன். [குறிப்பு:—இந்த அங்கனேடு வங்கன், களிங்கன், புண்ட்ரன், ஸும்ஹன் என்ற புத்திரர்களும் தோன்றினர். அவர்கள் பெயர்களினுல் புவியில் புகழ்பெற்ற தேசங்கள் நிலவின: அவைகள் அங்கம், வங்கம், களிங்கம், புண்ட்ரம், ஸும்ஹம் எனப்பட்டன.] (8)

9. அங்க ராசனென் றவன்பெயர் கொடுபுவி
யளித்தனன் மழுவாளி
துங்க மன்னவர் குலங்களைத் திடவவர்
தோகையர் முனிவோராற்

சங்கை யிற்சுத ருயிர்த்தன ரவ்வணங்
தகுமகப் பெறவென்றே
கங்கை தந்தவ னுரைத்தலும் பரிமள
கந்திசொற் றிடலானுள்.

(இ-ள்). அவன்-அச்சிறுவன், அங்கராசன் என்று பெயர் கொடு-அங்கன் என்ற பெயரைக்கொண்டு, புவி அளித்தனன்-பூமியை ஆட்சிசெய்து புரந்தான்: [இதுவரையில் தீர்க்கதமஸ் கதை கூறினேன் இனி] மழுவாளி-பரசுராமன், துங்க மன்னவர் குலம் கலைந்திட-புனிதமான க்ஷத்திரிய வமிசங்களை யழித்திட, அவர் தோகையர்-அந்த மன்னர்களின் மனைவிமார், முனிவோரால்-அந்தணராய ரிஷிகளால், சங்கையில்-கணக்கில்லாத, சுதர்-புதல்வர்களை, உயிர்த்தனர்-பெற்றெடுத்தனர்: (அவர்கள் மூலம் வமிசத்தை வளர்த்தார்கள்): அவ்வணம் - அவ்வகையே (அதுமாதிரியே), தகு மக பெற-தக்க புதல்வர்களைப் பெறுவாயாக, என்றே—, கங்கை தந்தவன்-வீடுமன், உரைத்தலும்-சொன்னவுடனே, பரிமளகந்தி-யோஜனகந்தியாகிய அன்னை, சொற்றிடலானுள்-சொல்லலானாள்; (எ-று).—அவள் சொல்லியதை மேலிற்கவியிற் காண்க.

மழுவாளி இருபத்தொரு கால் மன்னர்களைக் கலைந்திடவே க்ஷத்திரிய வமிச விருத்திக்குக் கேடு ஏற்பட்டது. அதை நிவர்த்திப்பதற்கு உபாயம் மேற்கொள்ளப்பட்டது. அந்த உபாயத்தையே மேற்கொண்டு சந்தனு வமிசத்தை (குரு வமிசத்தை) இப்போது விருத்தி செய்யலாம் என்று ஏதுகாட்டினன் வீடுமன் என்க. க்ஷத்திரிய மகளிர் காம விச்சையினலன்றிக் குல விருத்திக்காக முனிவரைச் சேர்ந்தது சாஸ்திர சம்மதமாதலால் கற்புக்கிழுக்காகாது. கொடு-கொண்டு: தொகுத்தல். வணம்-வண்ணம்: இடைக்குறை. (9)

10. வீடுமனது உடன்பாட்டைப் பெற்று யோஜனகந்தி வியாசனைச் சிந்தித்து வரச்செய்தல்.

மைந்த கன்னியிற் பராசரன் றனக்கியான்
வழங்கிய சுதன்வியாதன்
அந்த மைந்தன்யா னினைந்துழி யெய்துவான்
அறைந்ததுமீண் டனனன்னேன்

வந்து றும்படி யுளங்கொலோ வெனவவன்
மகிழ்ந்தமை யெனவன்னே
சிந்தை செய்தனள் அவனடைந் திறைஞ்சவச்
சிறுவனுக் கவள்சொல்வாள்.

(இ-ள்). மைந்த –! யான்–, கன்னியின்-கன்னியாயிருக்கும் போது, பராசரன் தனக்கு-பராசர முனிவனிடத்து, வழங்கிய-பெற்றெடுத்த, சுதன்-மகன், வியாதன்-வியாசனுவான்: அந்த மைந்தன்—, யான் நினைந்துழி-யான் நினைக்கும்போது, எய்துவான்-வருகின்றேனென்று, அறைந்து-சொல்லி, மீண்டனன்-தந்தையோடு சென்றிட்டான்: அன்னோன்-அந்த வியாசர், வந்து உறும்படி உளங் கொலோ-வந்து பொருந்தும் விதம் உன் மனத்துக்கு ஏற்றதோ?, என-என்று அன்னை கேட்க, அவன்-அந்த வீடுமன், மகிழ்ந்து-சந்தோஷித்து, அமை என-அமைப்பாயாக என்று கூற, அன்னை-யோசனகந்தி, சிந்தை செய்தனள்-(அவனை) நினைத்தாள்: அவன்-அந்த வியாசன், அடைந்து இறைஞ்ச-வந்து வணங்க, அ சிறுவனுக்கு-அந்தப் புதல்வனுக்கு, அவள்—, சொல்வாள்—; (எ-று).—அவள் சொல்லுவதை மேலேக்கவியிற் காண்க.

தனக்கியான்-குற்றியலிகரம் அலகு பெற்றது. எய்துவான்-வினையெச்சம். சிறுவன்-பருவங் குறித்ததன்று: புதல்வன் என்ற பொருளது. (10)

11. தாய் ''குருகுலத்தை யுண்டாக்குவாய்'' என்ன, வியாசனும் இசைய, தன் மருமகளிரை அம்முனிவனுல் சந்ததி வளர்க்க இசைவித்தல்.

குறைமி குந்தவிக் குருகுலம் விளங்கநின்
கொழுந்தியர் தமைக்கூடி
நிறைமி குந்தநன் மகவருள் கெனவவன்
செய்குது மெனமெய்யில்
நறைமி குந்தவண் மருகியர்க் குலகியல்
நவின்றுடன் படத்தேற்றி
கறைமி குந்திடுங் கங்குலம் பிகைதனைக்
கடிமல ரணைசேர்த்தாள்.

(இ–ள்.) குறைமிகுந்த இ குருகுலம்-புத்திர சந்ததியில்லாத குறைமலிந்த இந்தக் குருவமிசம், விளங்க-(சந்ததி பெற்றுச்)

சோபிக்கும்படி, நின் கொழுந்தியர் தமைக் கூடி-உனது உடன் பிறந்தோனுடைய மனைவியரைச் சேர்ந்து, திறம்மிகுந்த நல்மக அருள்க என-வன்மை மிகுந்த நல்ல புத்திரர்களைப் பெற்றுத் தருக என்று சொல்ல, அவன்-அந்த வியாசன், செய்குதும் என-அப்படியே செய்வேன் என்று சொல்ல, (உடனே) மெய்யில் நறை மிகுந்தவள்-யோசனகந்தி, மருகியர்க்கு-(தன்) மருமகளிருக்கு, உலகியல் நவின்று-உலகோரியற்கையைச் சொல்லி. உடன்படத் தேற்றி-அவர்களை இசைவிக்கும்படி தெளியவைத்து, (பின்) கறை மிகுந்திடும் கங்குல்-இருள் செறிந்திடும் நிசியில், அம்பிகை தனை-அம்பிகையை, கடிமலர் அணை சேர்த்தாள்-வாசனை மிகுந்த பூம் பள்ளியில் படுக்கவைத்தாள்; (எ-று).

மெய்யில் நறைமிகுந்தவள்-பரிமளகந்தி, யோசனகந்தி என் பதன் பரியாயம். உலகியல்-சான்றோர் ஒழுக்க நெறி: "உலக மென்பது உயர்ந்தோர் மாட்டே" (திவாகரம்). அருள்கென-வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். செய்குதும்-தன்மை யொருமை வினைமுற்று. (11)

12. அம்பிகை அச்சத்தினால் கண்மூடிய வண்ணம் வியாசனைச் சேர, அவன் கருத்தோற்றுவித்து, விழிப்புலனில்லா மகவு உதிக்குமென்று தாயினிடம் தெரிவித்தல்.

காயம் புன்மணங் கமழ்ந்தொளி கருகிடக்
கற்றைசெஞ் சடையோடுங்
தூய வியாதனங் கெய்தலு மஞ்சியத்
தோகைகண் புதைத்திட்டாள்
ஆய வன்புணர்ந் தனைக்கவள் குறியுரைத்
தயுதமும் மதயானை
ஏயு மொய்ம்புடை மைந்தன்வந் துதித்திடும்
இலைவிழிப் புலனென்றான்.

(இ-ள்). காயம்-(வியாசனது) உடம்பு, புல்மணம் கமழ்ந்து-புல்லின் மணம் வீசி, ஒளி கருகிட-ஒளி குறைந்துபோக, கற்றை செஞ்சடையோடும்-தொகுதிப்பட்ட சிவந்த சடைமுடியோடும், தூய-புனிதனான, வியாதன்-வியாசன், அங்கு-அந்த அம்பிகை யிடத்து, எய்தலும்-வருதலும், அஞ்சி-பயந்து, அ தோகை-அந்த மாது, கண் புதைத்திட்டாள்-கண்களை மூடிக்கொண்டாள்: (அப்போது) ஆயவன்-அந்த வியாசன், புணர்ந்து-கருப்பதித்து,

அனைக்கு-அன்னைக்கு, அவள் குறி உரைத்து-அவளிடத்து நிகழ்ந்த உடலினடையாளத்தைக் கூறி, அயுதம் மும்மதயானை ஏயும் மொய்ம்புடை மைந்தன்-பதினாயிரம் மதயானைகள் கொண்டுள்ள பலத்தையுடைய மகன், வந்து உதித்திடும்-வந்து பிறப்பான்; (ஆனால் அந்த மகவுக்கு) விழிபுலன் இலை என்றான்-கண்ணுகிய பொறி இருக்கமாட்டாது என்று கூறினன்; (எ-று).

புல்மணம்-தருப்பைப் புல்லின் வாசனை; முனியாதலின் பவித்திரத்திற்குத் தருப்பை உபயோகிப்பர். தோகை-அம்பி கைக்கு உவமவாகுபெயர். குறி-உடற்குறி. அனை-அன்னையென் பதன் தொகுத்தல். அயுதம்-பதினாயிரம். மும்மதம்-கன்னமதம், கைமதம், கோசமதம் என்ற மூவகைப்பட்ட மதநீர். இலை-இல்லை என்பதன் இடைக்குறை. [இந்த மைந்தன்தான் திருதராட்டிர னுகிய பிறவிக்குருடன்.] (12)

13. தாய் சொற்படியே வியாசன் அம்பாலிகை மனைசேர அவள் அம்முனிவனைக் கண்டு கருத்தோன்றுமுன் அச்சத் தால் உடல் வெளுக்க, அவளிடம் கருவளித்து வியாசன் தாயினிடத்துச் சென்று பிறக்கும் குமாரன் உடல் முழுவதும் வெளுத்திருப்பான் எனல்.

மீட்டு மன்னையச் சுதனையம் பாலிகை
யின்னிடத் தொருமைந்தன்
வேட்டு ளேனென முனியிசைந் தறைபுக
வெருவிமெய் விளர்த்திட்டாள்
கோட்ட மில்லவன் அவளணைந் தன்னைபாற்
குறுகியக் குறிதன்னைக்
காட்டி மெய்விளர்த் திடுஞ்சுத னுதித்திடுங்
காண்குதி யெனச்சென்றான்.

(இ-ள்). மீட்டும்-மறுபடியும், அன்னை-யோசனகந்தி, அ சுதனை-அந்த மைந்தனுகிய வியாசனை, அம்பாலிகையின் இடத்து-அம்பாலிகையின் மூலம், ஒரு மைந்தன்-ஒரு பிள்ளையை, வேட்டு ளேன் என-விரும்பியுள்ளேன் என்று கூற, முனி-வியாசன், இசைந்து-(அவ்வேண்டுகோளுக்கு) உடன்பட்டு, அறை புக-அவளது படுக்கையறையுள் நுழைய, [அவள்] வெருவி-பயந்து, மெய் விளர்த்திட்டாள்-உடல் வெளுப்பாயினள்: கோட்டம் இல்லவன்-(யாதொரு) குற்றமும் இல்லாத வியாசன், அவள்

அணைந்து-அவளைக் கட்டித்தழுவி, அன்னைபால் குறுகி-தாயினிடம் வந்து, அ குறி தன்னைக் காட்டி-அவளிடத்து நிகழ்ந்த உடல் அடையாளத்தைத் தெரிவித்து, மெய்விளர்த்திடும் சுதன் உதித்திடும்-உடல் முழுவதும் வெளுத்திருக்கும் பிள்ளை பிறப்பான், காண்குதி-(நீ) தெரிந்துகொள், என-என்று சொல்லி, சென்றுன்-தன்னிருப்பிடம் போனுன்; (எ-று).

'அறைபுகவெருவி' என்றதனுலே 'கருத்தோன்று முன்' என்பது பெறப்பட்டது. கோட்டம்-கோணுதல்: கோடு-பகுதி, அம்-தொழிற்பெயர்விகுதி. கோட்டம் இல்லவன்-சொற்கோட்டம், உட்கோட்டம் முதலிய இல்லாதவன்: நற்குணசீலன் என்றபடி. காண்குதி-முன்னிலை வினைமுற்று. [இந்த மைந்தன்தான் பாண்டு என்பவன்]. (13)

14. திருதராட்டிரனும் பாண்டுவும் பிறக்க, தாய் மகிழ்ந்து மீண்டும் வியாசனை நினைத்து அழைத்து அம்பிகையிடம் செலுத்த, அவள் பயந்து தன் தாதியை அணையிற் செல்ல விடுத்தல்.

கண்ணில் மைந்தனும் பாண்டுவு முதித்திடக்
கண்டுளங் களியெய்தி
விண்ண டைந்தமா முனிவனைப் பயந்தவள்
மீள்வு மழைத்திந்த
மண்ண ளித்திடுஞ் சுதனையம் பிகையுழி
வழங்கென வவள்பாலப்
பண்ண வன்புகப் பயந்தவள் தாதியைப்
பஞ்சணை யணைவித்தாள்.

(இ-ள்). கண்ணில் மைந்தனும்-கண் பொறியற்ற திருதராட்டிரனும், பாண்டுவும்-(உடல் வெளுத்த) பாண்டுவும், உதித்திடக் கண்டு-பிறந்ததைப் பார்த்து, உளம் களி எய்தி-மனம் மகிழ்ந்து, விண்ணடைந்த மாமுனிவனைப் பயந்தவள்-வானில் தன்னிருப்பிடஞ் சென்ற வியாசனைப் பெற்றவளாகிய யோசனகந்தி, மீளவும் அழைத்து-மறுபடியும் (அவனை நினைத்து) அழைத்து, அம்பிகையுழி-அம்பிகையிடத்து, இந்த மண் அளித்திடும் சுதனை-இந்தப் பூமியைப் புரக்கும்படி ஒரு புதல்வனை, வழங்கு என-பெற்றுக்கொடுப்பாயாக என்று சொல்ல, அ பண்ணவன்-அந்த முனிவன், அவள்பால் புக-அவளிடத்துப்

போக, அவள்—, பயந்து-அஞ்சி, தாதியை-தனது பரிசாரிகைப் பெண்ணை, (தனக்குப் பதிலாக), பஞ்சணை-பஞ்சு மெத்தைப் படுக்கையில், அணைவித்தாள்-சேர விடுத்தாள்; (எ-று).

அன்னை இருமைந்தரையும் கண்டு களிபெய்தியது-குருகுலம் பொற்புறுதலால் என்க: பயந்தவள்-முன்னது வினையாலணையும் பெயர்: பின்னது-(பயந்து + அவள்) வினையெச்சத் தொடர்: 'பயந்து' என்ற வினையெச்சம் அணைவித்தாள் என்ற வினையோடு முடியும். தாதி-பரிசாரிகைப் பெண், வேலைக்காரி: இவள் சூத்திரப் பெண் என்பது முதனூலால் பெறப்படும். (14)

15. தாதியோடு இன்பந்துய்த்தபின் வியாசமுனி தாயினிடம் வந்து, நிகழ்ந்த செய்தியைச் சொல்லி, "யமனமிசமாகப் பிறக்கும் இந்த மகவு: இனிப் புத்திரர் பொருட்டு என்னை நினையற்க" என்று கூறிச் செல்ல, விதுரன் உதித்தல்.

இரதி வேளொடும் புணர்வதொத் திகுளைதோய்ந்
திடமுனி மகிழ்ந்தன்னை
யருக டைந்தெழி லம்பிகைத் தோழியை
யஞ்சியுய்த் தனளன்னுள்
புரித வத்தறக் கடவுள்வந் துதிக்குமென்
புணர்ப்பினின் மகவாசை
யொருவு கென்றுரைத் தகன்றனன் விதுரனு
யுதித்தனன் யமன்வந்தே.

(இ-ள்). இரதி வேளொடும் புணர்வது ஒத்து-ரதிதேவி மன்மதனோடும் கலவி நிகழ்த்துவதொப்ப, இகுளை தோய்ந்திட—தோழியாகிய தாதிப்பெண் சேர்ந்திட, முனி மகிழ்ந்து-வியாச முனிவன் களிப்புற்று, அன்னை அருகடைந்து-தாயின் அருகே வந்து, எழில் அம்பிகை-அழகுபொருந்திய அம்பிகை, அஞ்சி-பயந்து, தோழியை-(தனது) தாதியை, உய்த்தனள்-(என்னிடம்) செலுத்தினள்: அன்னுள்-அந்தத் தாதிப்பெண், புரி தவத்து-(முற்பிறப்பிற்) செய்துள்ள தவத்தின் பயனால், அறக்கடவுள் வந்து உதிக்கும்-தருமதேவதை வந்து (அவள் வயிற்றிடை) பிறக்கும்: (இனி) 'என் புணர்ப்பினின் மக ஆசை ஒருவுக'-என் சேர்க்கையினாலே பிள்ளைப் பேற்றில் ஆசையை நீக்குக", என்று உரைத்து-என்று சொல்லி, அகன்றனன்-தன் இருப்பிடம் சென்றான்: [அம் முனிவன் சொற்படியே] யமன் வந்து-தரும

தேவதையாகிய யமன் [மனுஷ்ய ஜன்மத்தில்] வந்து, விதுரனுய் உதித்தனன்-விதுரன் என்ற பெயர் தரித்துப் பிறந்தான்; (எ-று).

முதலடியில் கூறிய உவமையால்-தாதிப்பெண் அந்த முனிவன் மனத்தைக் கவர, அவன் பரவசனுகி இன்பமனுபவித்த தன்மை தெரியவரும். இந்தச் சந்தர்ப்பத்தில் பால பாரதம் "கீதத்தினுல் மான் வசப்படுவது போல அந்தப் பரிசாரிகைப் பெண்ணுல் ஐம்புலனே வென்ற அந்த மஹர்ஷி வசீகரிக்கப்பட்டான்" என்று கூறும்.

[கவனிப்பு: குரு வமிசத்தை விருத்தி செய்ய விசித்திரவீரிய னுடைய மனைவியராகிய அம்பிகை அம்பாலிகையினிடம் முறையே திருதராட்டிரனும் பாண்டுவும் வியாச மஹரிஷியின் அருளால் தோன்றினர்கள் என்பது உணர வேண்டுவது. திருதராட்டிரன் பிள்ளைகள் நூற்றுவரும் பாண்டுவின் புத்திரர்கள் ஐவரும் வம்ச விருத்தி செய்தனர் என்பதும் உணர வேண்டுவது. அஃது பின்னர் விளங்கும்]. (15)

16—21: **ஆறு கவிகள்—ஒரு தொடர்: ஆணிமாண்டவ்யர் வரலாறு கூறும்.**

16. **மூன்று புத்திரரும் வீடுமனிடம் பல கலைகளையும் கற்றல்: யமன் வந்து விதுரனுக உதித்தமைக்கு ஏது கூறல்.**

மைந்தர் மூவரும் பலகலை வின்மறை
மதகரித் தேர்மாவும்
உந்தும் விஞ்ஞையோ டுணர்ந்தனர் வீடும
னுழையென விறைகூற்று
வந்து தித்ததே திகளபா லெனமுனி
வகுக்குமாண் டவியப்பேர்
அந்த ணாளனேர் நகர்மருங் கிருக்கைசெய்
தருந்தவம் புரிநாளில்.

(இ-ள்). வீடுமன் உழை-வீடுமனிடத்து, மைந்தர் மூவரும்-புதல்வர்கள் மூவரும், மதகரி தேர் மாவும் உந்தும் விஞ்ஞையோடு-மதயானை, இரதம், குதிரை இவைகளைச் செலுத்தும் வித்தைகளோடு, வில்மறை-தநுர்வேதம், பலகலை-இன்னும் பலகலைகள் இவற்றையும், உணர்ந்தனர்-கற்றுத்தேர்ந்தனர், என-என்று வைசம்பாயனர் கூற, இறை-அரசனுகிய ஜனமேஜயன், 'இகளை

பால்-தாதியாகிய தோழிப் பெண்ணிடத்து, கூற்று-யமனுகிய தருமதேவதை, வந்து உதித்தது ஏது?-வந்து பிறந்தது எக் காரணம் பற்றி, என-என்று வினவ, முனி-வைசம்பாயனர், வகுக்கும்-வகைப்படுத்திச் சொல்லலானுர்:—மாண்டவியப்பேர் அந்தணனன்-மாண்டவ்யர் என்ற பெயரையுடைய பிராமண ரிஷி, ஓர் நகர் மருங்கு இருக்கைசெய்து-ஒரு நகரத்தின் பக்கத்திலே தங்கியிருந்து, அருந்தவம் புரிநாளில்-அரிய தவத்தைச் செய்து வரும் நாளில்; (எ-று).—"சோரர் வந்து" என மேலைக் கவியோடு இயையும். இது, குளகம். 'குளகம் பலபாட்டொருவினை கொள்ளும்'.

யானை யேற்றம், குதிரை யேற்றம், ரதவேற்றம், தநுர்வேதம், படைக்கலப் பயிற்சி முதலிய பல கலைகளையும் வீடுமன்பால் கற்றுத்தேர்ந்தனர் என்றமையால், வீடுமனின் போர்த்திறமை விளங்கும். தனது குருவாகிய மழுவாளியையே வென்றவர் என் பதை நினைக. முனி வகுக்கும்-செய்யுமென் முற்று ஆண்பாலுக்கு வந்தது. நகர்மருங்கு-நகர்ப்புறத்து என்றபடி. (16

17. மாண்டவ்யர் ஆச்ரமத்தில் திருடர்கள் ஒளிந்துகொள்ளுதல்.

அந்த கர்க்கர சகத்தினிற் சோரர்வந்
தரும்பொருள் கவர்ந்தந்தப்
பன்ன ருந்தவன் சூழல்வாய்ப் புகுதலைப்
பார்த்துகா வலர்பின்போய்
மன்னு கள்வர்யாண் டென்னலும் மவுனியாம்
மாமுனி பேசாமல்
உன்ன ருந்தவ முஞற்றினன் சோரரங்
கொளித்தமை யவர்கண்டார்.

(இ-ள்). அ நகர்க்கு அரசு அகத்தினில்-அந்த நகர்க்கு ராஜாவின் அரண்மனையில், சோரர் வந்து-திருடர்கள் புகுந்து, அரும் பொருள் கவர்ந்து-கிடைத்தற்கு அரிய மிக்க தனங்களைத் திருடிக் கைப்பற்றி, அந்தப் பன்ன அருந்தவன் சூழல்வாய் புகுதலை-அந்தச் சொல்லுதற்கரிய தவத்தைச் செய்கின்ற மாண்டவ்ய ரிஷியின் இருப்பிடத்துட் புகுந்து போதலை, காவலர் பார்த்து-அரண்மனைக் காவலர்கள் பார்த்து, பின்போய்-அத்

திருடர்கள் பின்னாலே தொடர்ந்துபோய், [உள்ளிருந்த ரிஷியைப் பார்த்து], மன்னு கள்வர் யாண்டு என்னலும்-(இந்த இடத்தில்) பொருந்திய திருடர்கள் எங்கே போனார்கள் என்று வினவவும், மவுனியாம் மாமுனி-மௌன விரதத்தை மேற்கொண்டிருந்த ரிஷி, பேசாமல்-வாய்திறந்து பதில் சொல்லாமல், உன்ன அருந்தவம் உஞற்றினன்-நினைத்தற்கும் அரிய தவத்தைச் செய்துகொண்டிருந்தான்: சோரர்-திருடர்கள், அங்கு-அவ்விடத்து, ஒளித்தமை-ஒளிந்துகொண்டிருத்தலை, அவர் கண்டார்-அந்தக் காவலர் பார்த்தனர்; (எ-று).

பன்ன + அரும் = பன்னரும், உன்ன + அரும் = உன்னரும்-னகரமொழியீற்று அகரவுயிர்முன் வருமொழி அகரம் கெட்டது, எதுகையில் ந, ன ஒலி ஒற்றுமையால் வரும். (17)

18. மாண்டவ்யரைத் திருடனென்றெண்ணிக் கழுவேற்றுதல்.

காண்ட லும்பிணித் தவருடன் முனியையுங்
காவலர் பொருளோடும்
ஆண்ட கைக்கெதிர் விடுப்பவச் சோரரை
யரசனுஞ் சிரமாற்றி
நீண்ட சூலமேன் முனிவனை யிருத்தினன்
நிமலனும் வருந்தாமல்
மாண்ட ருந்தவ முஞற்றுநா ளவனுழை
வந்துவா னவர்சொல்வார்.

(இ-ள்). காவலர்-அரச காவலாளர்கள், காண்டலும்-ஒளிந்திருந்த அந்தத் திருடர்களைக் கண்டவுடனே, பிணித்து-அவர்களைக் கட்டி, அவருடன்-அவர்களோடு, முனியையும்-மாண்டவ்யரையும், பொருளோடும்-(கவர்ந்த) திரவியங்களோடும், ஆண்தகைக்கு எதிர் விடுப்ப-அரசனுக்கு முன்னாலே நிறுத்த, அரசனும்—, அசோரரை-அந்தத் திருடர்களை, சிரம் மாற்றி-சிரச்சேதஞ்செய்து, முனிவனை-ரிஷியை, நீண்ட சூலம் மேல்-நீளமாயிருந்த கழுவின் மேலே, இருத்தினன்-ஏற்றித் தொங்கவிட்டான்: நிமலனும்-குற்றமற்ற ரிஷியும், வருந்தாமல்-துயருறாமல், மாண்ட-மாட்சிமைப்பட்ட, அருந்தவம் உஞற்றுநாள்-அரிய தவத்தைச் செய்துவரும் நாளில், வானவர்-தேவர்கள், அவனுழை வந்து-அவனிடத்து வந்து, சொல்வார்-கேட்டார்கள்; (எ-று) —அவர்கள் கேட்டதை மேலுக்கவியிற் காண்க.

ஆண் தகை-ஆண்மையாகிய தகுதியை (குணத்தை) யுடையான் என விரியும்; பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. மாண்ட-மாண், பகுதி. (18)

19. மாண்டவ்யரைக் கழுவினின்று விடுவித்தல்.

தாழ்வி யற்றினோர் தருக்குற மீமனந்
தரிப்பதென் னெனத்தூயோன்
ஊழ்வி னீப்பய னிஃதென வுரைத்தலும்
உம்பரே கினர்வேந்தன்
தாழ்வி லாதறிந் திருடியை வணங்கியென்
றன்பிழைச் சமியென்றுள்
ளாழ்ந்த சூலம்விட் டகற்றினன் இன்போடு
மஞரிலான் வனம்புக்கான்.

(இ-ள்.) தாழ்வு இயற்றினோர்-(உமக்குத்) துன்பத்தை விளைவித்தவர்கள், தருக்குற-செருக்குற்றுத்திரிய, மீ மனம் தரிப்பது என்-நீர் மட்டும் மனத்திற் பொறுமைகொண்டிருப்பது ஏன், என-என்று கேட்க. தூயோன்-புனிதராகிய ரிஷி, இஃது-இந்தத் தண்டனை, ஊழ்வினைப் பயன்-முற்செய்த விதியின்பயன்; என உரைத்தலும்-என்று சொல்லவும், உம்பர்-தேவர்கள், ஏகினர்-போயினர்: வேந்தன்-(இதனையறிந்த) மன்னன், தாழ்வு இலாது அறிந்து-ரிஷி குற்றஞ் செய்யாததைத் தெரிந்து, இருடியை வணங்கி-அந்த ரிஷியினை நமஸ்கரித்து, என்றன் பிழை சமி என்று-என்னுடைய பிழையைப் பொறுத்துக்கொண்டு மன்னிக்கவும் என்று வேண்டிக்கொண்டு, உள் ஆழ்ந்த சூலம்விட்டு அகற்றினன்-உள்ளே பதிந்திருந்த கழுவினின்று அவரை நீக்கி விடுவித்தான்: (ரிஷியும்) இன்போடு-இன்பத்தோடு, அஞர் இலான்-துன்பம் நீங்கினவனுய், வனம் புக்கான்-காடு புகுந்தான்; (எ-று).

தாழ்வு-முன்னது துன்பம் என்ற பொருளிலும், பின்னது குற்றம் என்ற பொருளிலும் வந்துளது. தருக்கு-செருக்கு, களிப்பு. தாழ்வு இயற்றினவர்-அரசர் முதலியோர். தரித்தல்-பொறுத்தல். சமி-க்ஷமிஎன்ற வடசொல்: [க்ஷமை-பொறுமை] முன்னிலை வியங்கோள், இனி, உள்ளாழ்ந்த சூலத்தைச் சற்று, விட்டு அகற்றினன்-உடம்பிலேயே தங்கும்படிவிட்டு அகற்றினன் என்று கூறினுமாம். சூலத்தை இழுக்க முடியாமையால் அதை அடியில் சிறிது வெட்டிவிட்டான் வேந்தன்: எனவே, உள்ளே நின்றுபோன சூலத்துண்டுடன் கூடவே அந்த ரிஷி திரிந்துகொண்டிருந்தார். ஆகவே, அவரை ஆணிமாண்டவ்யர் என்று உலகோர்

வழங்கலாயினர். சூலத்துண்டு உடம்பில் தங்கியிருந்தபோதிலும் அவர் இன்போடு அஞரிலாராய்த்தவஞ்செய்ய வனம் புகுந்தார் என்றபடி. (19)

20. மாண்டவ்யர் தருமதேவதையாகிய யமனைக்கிட்டி 'இப் படிப்பட்ட பலனை யநுபவிக்கத் தான் செய்த தீவினை யாது' எனக் கேட்டறிதல்.

உறுதவம்புரிந் தந்தண னுலகெலா
முலவிபன் முனிவோர்கள்
செறிதரும்படி யமபுர மடைந்துமுன்
செய்வினை யாதென்ன
மறலி தும்பியை யிளமைமீ கழுவிடும்
வல்வினை யிஃதென்ன
அறிவில் ஞான்றுசெய் சிறுபிழை தவத்தினேற்
கமைத்தலெவ் வறனென்றான்.

(இ-ள்). அந்தணன்-அந்த மாண்டவ்ய ரிஷி, உறு தவம் புரிந்து-மிக்க தவத்தைச் செய்து, உலகெலாம் உலவிட-பூவுலக முற்றும் சுற்றி வந்து, (பின்) பல் முனிவோர்கள்-பல ரிஷிகளும், செறிதரும்படி-சூழ்ந்து வரும்படி, யமபுரம் அடைந்து-யமபுரத் தைச் சேர்ந்து (யமனை நோக்கி) 'முன் செய்வினை யாது' என்ன-முன்னர் தான் செய்த தீவினை யாது என்று வினவ, மறலி-யமன், 'இளமை-இளம்பிராயத்தில், மீ—, தும்பியை-வண்டு முதலிய பறவைகளை(ப் பிடித்து), கழு இடும்-(அவற்றின் வாற்புறத்தில்) எஃகுத் துண்டுகளைக் குத்தி வருத்தும், வல்வினை-வலிய வினையின் பயன் விளைவு, இஃது என்ன-இது என்று சொல்ல, (அதற்கு ரிஷி) அறிவில் ஞான்று-[நன்மை எது தீமை எது என்ற] அறிவில்லாத இளம் பிராயத்திலே, செய்-செய்த, சிறு பிழை-சிறிய பிழைக்கு (சடாக இத்தகைய பெரிய தண்டனையை), தவத்தினேற்கு-பற்றற்றுத் தவஞ்செய்யும் முனிவராகிய எனக்கு, அமைத்தல்-விதித்தல், எவ் அறன்-எப்படித் தருமமாகும் ?, என்றான்-என்று (தருமதேவதையாகிய யமனை) வினவினன்; (எ-று).

மறல்-கொடுமை: அதனையுடையவன் மறலி; இ-பெயர் விகுதி. உறுதவம்-உரிச்சொற்றொடர். "வல்வினை" என்றது—தானமானது ஸ்வல்பமாகக் கொடுக்கப்பட்டாலும் அநேக மடங் காக விருத்தியாகிறது போலவே அற்ப பாவமும் அதிக துக்க மாகிய பயனைக் கொடுக்கும் என்பது பற்றி. (20)

21. மாண்டவ்யர் யமனைச் சபித்தல்.

என்று மைந்தனுழ் யாரையும் விடாதுயிர்
யாவுமொன் றெனத்தூயோன்
இன்று தொட்டினி யேழிரண் டாண்டள
வியற்றிய பவம்யார்க்கும்
என்று மெய்துரு திருக்கவென் றருளிமுன்
எனைமுனிந் திடலால்நீ
சென்று தாழ்குலத் துதித்தியே யென்றுசூள்
செப்பியே முனிமீண்டான்.

(இ-ள்). [ரிஷி வினவியதற்கு] என்று-சூரியனின், மைந்தன்-குமாரனாகிய யமன், ஊழ் யாரையும் விடாது-விதி எவரையும் கடக்க விடாது: உயிர் யாவும் ஒன்று-உலகத்து ஜீவராசிகள் எல்லாம் ஒருநிகரனவே: என-என்று விடை கூற, தூயோன்-ரிஷி, 'இன்று தொட்டு-இன்று தொடங்கி, இனி ஏழிரண்டாண்டு அளவு இயற்றிய பவம்-இனிமேல் பிறந்தது முதல் பதினென்காண்டு பிராயம் வரையில் செய்கின்ற பாவம், யார்க்கும் என்றும் எய்துரு திருக்க-எந்தப் பால்யனுக்கும் என்றைக்கும் பயன் விளைக்காது இருக்கட்டும், என்று அருளி-என்று அருளிச் செய்து விதித்து, முன் எனை முனிந்திடலால்-[முன் செய்த சிறிய குற்றத்திற்குப் பெருந்தண்டனை விதித்து] முற்பட்டு என்னை இம்சித்ததால், நீ சென்று-நீ போய், தாழ்குலத்துதித்தியே-சூத்திர ஜன்மத்திற் பிறப்பாயாக, என்று சூள் செப்பியே-என்று சாபமிட்டே, முனி-மாண்டவ்யர், மீண்டான்-வனம் திரும்பினர்; (எ-று).

பிறந்தது முதல் பதினாவது பிராயம் வரையில் ஒரு பால்யன் எதைச் செய்தாலும் அதனால் பாபம் வராது என்று மாண்டவ்யர் உலகத்தில் விளைப்பயனுண்டாவதற்கு ஒரு வரம்பு ஏற்படுத்தினர். பவம்=பாவம். யமன் சூரியனின் புத்திரனவன். (21)

22. வீடுமன் திருதராட்டிரனுக்கு முடி சூட்டி, பாண்டுவைச் சேனாபதியும் விதுரனை அமைச்சனுமாக வைத்தல்.

ஆன தாற்சமன் விதுரனு யிகுளாபா
லணுகின னெனவேந்தன்
மேன டந்ததை விளம்பென முனிசொலும்
விழியிலா னரசாகச்

சேனை காவலன் பாண்டுவாய் விதுரனைத்
தெரிந்துரை யமைச்சாக
வான திக்கவ தரித்தவ னிவ்வணம்
வகுத்துவைத் தனனன்றே.

(இ-ள்.) ஆனதால்-முனி சூள் செப்பியதால், சமன்-யமன், விதுரனுய்-விதுரன் என்ற பேரோடு, இகுளைபால்-தாதியிடத்து, அணுகினன்-பிறந்தான், என-என்று வைசம்பாயனர் சொல்லி முடிக்க, வேந்தன்-ஜனமேஜய ராஜன், மேல் நடந்ததை விளம்பு என-மேல் நிகழ்ந்ததைச் சொல்வாயாக என்று பிரார்த்திக்க, முனி சொலும்-வைசம்பாய முனிவர் சொல்லலானார்: விழியிலான் அரசு ஆக-பிறவிக் குருடனுகிய திருதராட்டிரன் அரசனுக, பாண்டு—, சேனை காவலன் ஆய்-சேனுபதியாக, விதுரனை—, தெரிந்து உரைசெய் அமைச்சாக-அப்போதைக்கப்போது அரசியற் காரியங்களை ஆராய்ந்து உரைக்கும் மந்திரியாக, இவ்வணம்-இந்தப்படி, வானதிக்கு அவதரித்தவன்-கங்கா புத்திரனுகிய வீடுமன், வகுத்து வைத்தனன்-வகைசெய்து நியமித்து வைத்தனன்; (எ-று).—அன்றே-தேற்றம்.

சமன்-யமன். இகுளை-தோழி, பாங்கி, இங்கே தாதி. முனி சொலும்-செய்யுமென்முற்று.

திருதராட்டிரனை அரசாக்கியது-அவன் வேதாத்தியயனத்தில் ஊக்கமுள்ளவன்: ராஜநீதி சாஸ்திரங்களிற் கரைகண்டவன். பாண்டுவைச் சேனுபதியாக்கியது-தனுர்வேதத்திலும், யானை யேற்றம், குதிரை யேற்றம், கதாயுத்தம், கத்தி கேடகங்கள் பல வகை அஸ்திரங்கள் இவற்றிலும், அர்த்தசாஸ்திரங்களிலும், தர்ம சாஸ்திரங்களிலும் கரைகண்டவன். விதுரனை அமைச்ச ராக்கியது-எல்லாச் சாஸ்திர விஷயங்களிலும் நுட்பமறிந்தவரும் கிரஹிப்பதிலும் ஊகிப்பதிலும் ஸமர்த்தருமாகியவர். இவருக் கொப்பான தர்மநிஷ்டனும், தர்மத்தையறிந்தவனும் மூவுலகங் களிலும் யாரும் இருந்ததில்லை, ஆகவே வீடுமன் இவ்வணம் வகுத்தார். [குறிப்பு: திருதராட்டிரன் முடிசூட்டப்பட்டானுயினும், கண்ணில்லாதவனுதலால், சேனுபதியான பாண்டுவே ராஜாவாக ஆண்டனனென்று வியாச பாரதம் கூறும்]. (22)

23. வீடுமனேவலினுல் தூதர்போய்க் காந்தாரபதியைக் கண்டு எமது அரசனுகிய திருதராட்டிரற்கு நுமது கன்னி கையைத் தருகவென்ன அவனும் இசைய, காந்தாரி 'இனி

யாஞெருவரையும் கண்ணுற் காணேன்' என்று தன் கண்ணைத் தகட்டினுல் புதைத்தல்.

விண்ணி லாதவ னெத்தகாந் தாரனை
வீடுமன் விடுந்தூதர்
தண்ணி லாமர பிறைக்குநின் மகடனைத்
தருகென விசைவானுன்
கண்ணி லானெனத் தமர்சொல வமைப்பெனக்
கற்புடைக் காந்தாரி
மண்ணி லாருநோக் கலனெனத் தகட்டினுல்
மலர்விழி பொதிந்திட்டாள்.

(இ-ள்). விண்ணில் ஆதவன் ஒத்த காந்தாரனை-ஆகாயத்தில் ஒளிவிடும் சூரியன்போல் பிரபை (புகழ்) படைத்த காந்தாரதேசத் தரசனை, வீடுமன் விடும் தூதர்-பீஷ்மன் அனுப்பிய தூதர்கள், "தண்நிலா மரபு இறைக்கு-குளிர்ச்சி பொருந்திய சந்திரவமிசத்து மன்னராகிய திருதராட்டிரனுக்கு, நின் மகள் தனை-நுமது மகளாகிய காந்தாரியை, தருக என-திருமணஞ் செய்து கொடுக்கவும்" என-என்று செய்தி சொல்ல, இசைவு ஆனன்-(அவனும்) சம்மதித்தான்: தமர்-[காந்தாரனது] சுற்றத்தார், கண்ணிலான் என சொல-குருடன் என்று சொல்ல, கற்புடை காந்தாரி-கற்பு நெறியுடைய காந்தாரி, அமைப்பு என-இது கடவுளின் சிருட்டி எனக் கொண்டுதேறி, 'மண்ணில் ஆரும் நோக்கலன் என-பூமியிலே வேறொருத்தரையும் புருஷராகப் பாரேன்' என்று நிச்சயித்து, தகட்டினுல்-பொற்பட்டத்தினுல், மலர்விழி-மலர்போல் அழகிய தன் கண்களை, பொதிந்திட்டாள்-மறைத்து மூடிக்கொண்டாள்; (எ-று).

காந்தார அரசன் பெயர் சுபலன். 'ஆதவன் ஒத்த' என்றது-சூரிய வமிசத்தவன் என்ற குறிப்பினது. "ஞாயிறன்னவாய்மை" என்றதும் நினைக. நிலா மரபு-சந்திர வமிசம். தருகென-வியங் கோளின் அகரவீறு தொகுத்தல். அமைப்பு-விதிக் கடவுளால் ஏற்பட்டது என அமைவது: எனவே கடவுட்சிருஷ்டி. தகடு-பொற்றகடு: பொற்பட்டம். மலர்விழி-உவமத்தொகை. (23)

24. காந்தாரியின் திருமணம், சூரன் மகளாகிய குந்தி குந்தி போசரில்லத்து வளர்தல். அப்போது அங்கு வந்த துருவாச

முனிவனுக்கு வளர்ப்புத் தந்தையின் சொற்படி குற்றேவல் புரிதல்.

விழிப டுங்குரு பதிக்குயிர்த் தவன்மண
மெல்லியல் புரிந்தீந்தான்
குழிப டும்பணை யுடைவடம துரைவாழ்
குந்திபோ சரிற்சூரன்
மொழிப டுஞ்சின மிகுந்துரு வாதமா
முனிபுகத் தன்பாங்கர்
வழிப டும்படி யுயிர்த்திடும் பிரதையாம்
மகடனைப் பணித்திட்டான்.

(இ-ள்.) விழிபடும்-விழியில்லாத, குரு பதிக்கு-திருதராட்டிரனுக்கு, உயிர்த்தவன்-காந்தாரியைப் பெற்ற சுபலன், மெல்லியல்-அந்தக் காந்தாரியை, மணம்புரிந்து-விவாகஞ் செய்து, ஈந்தான்-தாரைவார்த்துக் கொடுத்தான்: (இஃது இங்ஙனுக) குழிபடும் பணையுடை-குழிகளாக அளக்கப்பட்ட வயல்களையுடைய, வட மதுரை வாழ்-வடமதுரையில் வாழ்ந்துவந்த, குந்திபோசர் இல்-குந்திபோஜராஜனின் மனையில், மொழி படும சினம் மிகும்-யாவர் வாக்கினாலும் சொல்லப்படுகின்ற கோபத்திலே மிகுந்த, துருவாத மாமுனி-துருவாச முனிவன், புக-வந்து சேர, (அவரை வரவேற்ற குந்திபோசன்), தன்பாங்கர்-அந்த முனிவனிடத்து, வழிபடும்படி-உபசரிக்கும்படி, சூரன் உயிர்த்திடும் பிரதையாம் மகள்தனை-யதுகுல மன்னனான சூரன் பெற்றெடுத்த பிரதை யென்கின்ற மகளை, (தனக்கும் ஸ்வீகார புத்திரியானவளை), பணித்திட்டான்-நியமித்தான்; (எ-று).

தன் அத்தை குமாரனான குந்திபோசனுக்கு மகவில்லாக் குறையை நீக்க யதுகுல மன்னனாகிய சூரன் என்பவன் தான் வாக்களித்தபடி முதற் குழந்தையாகிய பிரதை யென்பவளை வளர்ப்புப் பெண்ணாகக் கொடுத்தான்: அந்தப் பிரதை குந்திபோசனால் வளர்க்கப்பட்டது பற்றி, குந்தியென்று வழங்கப்படுவாளாயினள். எனவே குந்திபோசனின் ஸ்வீகாரபுத்திரி குந்தியாவள். வடமதுரை யதுவமிசத்தாரின் நகர். எல்லார் வாக்கிலேயும் கோபமுனி என்று பேர் வாங்கினவராதலின், 'மொழிபடும் சினமிகும் துருவாச மாமுனி' என்றது. [சகுந்தலையைச் சபித்ததை நினைக], 'சூரன் உயிர்த்திடும் பிரதையாம் மகள்' என இயைத்துப் பொருள் கொள்க. அவளை உயிர்த்தவன்-சூரன்: வளர்த்தவன்-குந்திபோசன். குழிபடும் பணை-வயல்களைக் குழிக

ளாக அளப்பர்: பன்னீரடிச் சதுரக்குழி என்பதுண்டு. இனி, 144 சதுர அடி முதல் 576 சதுர அடிவரை கொண்ட நிலவளவை யும் குழி என்பர். இப்படி குழி என்பது-பற்பல விடங்களில் வெவ்வேறாய் வழங்கும் ஒரு நில அளவு. விழிபடும், படுதல்-இல்லாது போதல்: இல்லாமை. உயிர்த்தவன்-வினையாலணையும் பெயர். மெல்லியல்-பண்புத்தொகையன்மொழி. (24)

25. பிரதை பன்னிரண்டு மாதம் பணிவிடை புரிய, மனமுவந்த துருவாசன் ஒரு மந்திரத்தையுபதேசித்துச் செல்லல்.

யாவ ரும்பணி செயற்கரும் வெகுளிகொ
ளிருந்தவன் றனக்கேவல்
பூவ ருங்குழல் வருடமொன் றெருதினம்
போற்செய மகிழ்ந்தம்ம
நீவ ரும்படி நினைத்தபோ தடைந்தவர்
நிகர்தருஞ் சுதர்நல்குந்
தேவ ருன்னுழை புகுமறை யிஃதெனச்
செப்பியே முனிமீண்டான்.

(இ-ள்.) யாவரும் பணிசெயற்கு-யார் எந்தப் பணி செய்தா லும் அதற்கு, அரும் வெகுளிகொள்-[தன்னுல்] பொறுத்தற்கரிய கோபத்தைக்கொள்ளும், இருந் தவன் தனக்கு-மிக்க தவத்தைச் செய்த துர்வாச முனிவனுக்கு, ஏவல்-பணிவிடைகளை, பூ வரும் குழல்-பூக்கள் சூடப்பட்ட கூந்தலை யுடைய குந்தி, வருடம் ஒன்று-ஒருவருட காலம், ஒரு தினம் போல் செய-தலைநாளில் (முதல் தினத்தில்) செய்தது போலவே மிக்க அக்கறையுடன் செய்ய, மகிழ்ந்து-முனிவன் களிப்புற்று, [குந்தியை நோக்கி] அம்ம-கேள்: 'நீ –, வரும்படி நினைத்தபோது –, தேவர் உன்னுழை புகும் மறை இஃது-தேவர்கள் உன்னிடத்து வந்து சேர்கின்ற மந்திரம் இது: அடைந்து-அவர்கள் வந்து, அவர் நிகர் தரும் சுதர் நல்கும்-அவர் ஒவ்வொருவரும் தம்மையொத்த புத்திரரைத் தருவர். என-என்று, செப்பியே-அந்தத் தேவர்களைக் குறித்த மந்திரத்தை உபதேசித்த பின், முனி மீண்டான்-முனிவன் தன்னிருப்பிடம் திரும்பினன்; (எ-று).

எதைச் செய்தாலும் கோபிப்பவர் துர்வாச முனிவர்: உக்கிர மான தவமுள்ளவர்; தருமத்தைப் பரீக்ஷிப்பதில் தம் அபிப்பிரா யத்தை வெளிவிடாதவர்: கொடிய பிராமணர்: ஆனல் சுத்தமான மனமுள்ளவர்: எனவே அவரை எல்லா வகையான பரிசரிகை களாலும் குந்தி திருப்தி செய்வித்தாள். உதாரணமாக, ஒவ்வொரு

நாளும் தவறுமல் தயிர், நெய் முதலிய உபகரணங்களை ஆயிரக் கணக்காகக் கொடுத்து உபசாரஞ் செய்தாள் என்றது வியாச பாரதம். "வருடம் ஒன்று ஒரு தினம் போல்" என்ற விடத்து அறியவேண்டியது-முதல் நாளில் எவ்வளவு அக்கறையோடும் சதுரப்பாட்டோடும் பூர்ணமாகப் பணிவிடை செய்தாளோ அஃதே போல் பன்னிரண்டு மாத தினங்களிலும் செய்தமை. "ஒரு நாள் செல்லலம் இருநாள் செல்லலம், பலநாள் பலரொடு பயின்று செல்லினும், தலைநாள் போன்ற விருப்பினன் மாதோ" என்ற ஔவையின் பாடலடிகள் ஒப்புக்கொள்க (புறம்:101) இனி 'வருடமொன்று ஒரு தினம் போல் செய்தனள்' என்பதற்கு-கால நீட்டிப்புத் தோன்றிச் சோர்வுபடாமல், ஒரு வருடம் கழிந்ததே தெரியாமல் ஒரு நாள் போல ஓடிப்போயிற்று என்று சொல்லும்படி முனிவனுக்கு மகிழ்ச்சி மீதுரச் செய்தமை எனினுமாம். "அம்ம கேட்பிக்கும்" (தொல். இடை : 28) அவர் நிகர்தரும் சுதர் நல்குவர்-"நீ இந்த மந்திரத்தினால் எந்த எந்தத் தேவதையை ஆவாகனஞ் செய்வாயோ அந்த அந்தத் தேவதையின் மகிமை யோடுகூடிய புத்திரன் உனக்குப் பிறப்பான்" என்று முனிவர் சொன்னர். குழல்-குழலையுடையாளுக்கு ஆகுபெயர். அவர் நல்கும் என இயையும் செப்பு-திசைச் சொல். (25)

26. மறைப்பயனைக் காணக் குந்தி சூரியனைக்கருதி யுச்சரிக்க, அவன் அங்கு வந்து அவளை அணைக்கப்புக அப்போது அவள் 'நான் கன்னிகை' என மறுக்கச் சூரியன் கோபித்துக் கூறலுறுதல்.

குந்தி யம்மறைப் பயனுணர் வானுளங்
குறித்திடு முழிவெய்யோன்
வந்து கைகளால் அணைப்பகன்னிகையென
மறுத்தன ளவனென்னைச்
சிந்தை செய்தழைத் திவண்தடுத் திடுதலின்
தெரிவைநின் குலத்தோரும்
மந்தி ரஞ்சொலு முனியுமென் படாரென
வடிவினுங் கொதித்தோதும்.

(இ-ள்). குந்தி-பிரதையானவள், அ மறை பயன் உணர்வான்-அந்த மந்திரத்தின் பலனை அறியும் பொருட்டு, உளம் குறித்திடும் உழி-(சூரியனை) மனத்தில் நினைத்தபோது, வெய்யோன்-அச் சூரியன், வந்து-அவள் எதிரிலே (நிலாமுற்றத்திலே) வந்து, கைகளால் அணைப்ப-கைகளால் அவளைத் தழுவப்புக, 'கன்னிகை'

என-'யான் கன்னிகையாவேன்: என்னைத் தொடாதே' என, மறுத்தனள்-தடுத்தாள்: [இதனைக்கண்ட] அவன்-சூரியன், (குந்தியைநோக்கி) தெரிவை-பெண்ணே! என்னைச் சிந்தை செய்து அழைத்து-என்னை மனத்தாலே தியானித்து மந்திரத்தாலே அழைத்து, (நான் வந்தபின்) இவண்-இவ்விடத்து, தடுத்திடுதலின்-தடைசெய்தலினாலே, நின்குலத்தோரும்-உன்னுடைய வமிசத்துளோரும், மந்திரம் சொலும் முனியும்-உனக்கு அம் மந்திரத்தை யுபதேசித்த துருவாச முனிவனும், என் படார்-என்ன பாடு படமாட்டார்? [அவர்களைச் சபித்திடுவேன்] என-என்று, வடிவினும் கொதித்து-தன்மெய்யின் வெப்பத்தைக்காட்டிலும் கொதிப்படைந்து, ஓதும்-சொல்லத் தொடங்கினன்: (எ—று.) சூரியன் சொன்னதை மேலிற் கவியிற்காண்க.

நின் குலத்தோர் என்படார்-என்சாபத்தினால் நின்குலமே யழிந்திடும் என்றபடி. முனி என்படார்-கோபத்தால் ஜ்வலிக்கின்ற கண்ணால் அந்த முனியே யில்லாதபடி எரித்துவிடுவேன் என்றபடி. 'அழைத்து' என்றது- 'என்ன பயனைப் பெறும் பொருட்டு, என்ற கருத்தினது. வடிவினும் கொதித்து-இன், உறழ்பொருள்: [சூரியனே அனற்பிழம்பு: அதனினும் வெப்பு என்றபடி]. அவன் ஓதும்-செய்யுமென்முற்று ஆண்பாலுக்கு வந்தது. (26)

27. சூரியன் உரை கேட்டுக் குந்தி இசைய, அவன் சேர்க்கையால் கருக்கொண்டு அவள் மைந்தனைஒருவனைப்பெறல்.

தந்தை சீறுமென் றஞ்சனீ யிசைதிமுத்
தலம்புகழ் சுதனெய்து
முந்து கன்னிநீ யாகுவை யெனப்பல
மொழிந்துடன் படத்தேற்றி
அந்த மாதகங் குழைந்திட வின்பமூண்
டகலுமுன் கருக்கொண்டக்
குந்தி யாதுலர் குறைகெடக் கன்னனுங்
குமரனைப் பயந்திட்டாள்.

(இ.ள்). தந்தை-குந்திபோசனுகிய-தகப்பன், சீறும் என்று-கோபிப்பானென்று, நீ—, அஞ்சல்-பயப்படாதே: இசைதி-(என்னுடு சேர்தற்கு) சம்மதிப்பாய்: (உன்னிடம்) முத்தலம்புகழ் சுதன் எய்தும்-மூவுலகும் புகழும்படியான குமாரன் தோன்றுவான்: முந்து-முன்னிருந்தது போலவே, நீ—, கன்னி ஆகுவை-கன்னிகையாவாய்: என-என்று [சூரியன்] பலமொழிந்து-பல புகழ்ச்சியுரைகளைச் சொல்லி, உடன்படத்தேற்றி-அவள் இசையும்படி

தெரிவித்து, அந்த மாது அகம் குழைந்திட இன்பம் உண்டு-(பின்) அந்தக் குந்தி மனம் நெகிழும்படி (அவளோடு) கலவிச் சுவையையநுபவித்து, அகலும் முன்-மறைந்து போவதற்கு முன்னேயே [மறைந்தவுடனே] அ குந்தி–அந்தகக்குந்தி, கருக்கொண்டு-கருப்பந்தரித்து, ஆதுலர் குறைகெட-தரித்திரர்களுடைய துன்பங்கள் நீங்கும்படி, கன்னனும் குமரனை-கர்ணன் என்ற புதல்வனை, பயந்திட்டாள்-பெற்றெடுத்தாள்; (எ:று.)

தந்தை-சூரன் எனினுமாம். 'தந்தை சிறும் என்று அஞ்சல் நீ' என்றது-நீ இப்போது இருப்பதுபோலவே கன்னிகையேயாய் விடுவாய்'' என்ற கருத்துப்பற்றி. அதனைச் சூரியனே பின்னர் ''மூந்து கல் னி நீ யாகுவை'' என்பதால் வலியுறுத்துகிறான். இன்பம் உண்டு-''உண்டற்குரிய வல்லாப்பொருளை, உண்டனபோலக் கூறலும் மரபே''. ஆதுலர்-தரித்திரர்; யாசகர் என்க. 'ஆதுலர் குறைகெட' என்ற விடத்து-இந்திரனே பிராமண ரூபங்கொண்டு அவனைடு பிறந்த கவச குண்டலங்களை யிரக்க அவற்றைக் கர்ணன் உவப்போடு உடம்பைச் சேதித்துக்கொடுத்தமை நினைக, கவசகுண்டலங்களை அறுத்ததனால் கர்ணன் என்று பேர்பெற்றான் என்பர் (க்ருணு என்ற பகுதி சேதிப்பது என்ற பொருளில் வரும்). இனி, சூரியன் வைத்த பெயர் என்பர் வில்லிபுத்தூரர். (உத்தியோக : கிருட். தூது, செ: 154). (27)

28. கவச குண்டலங்களோடு பிறந்த மைந்தனைக் கண்டு அவசமுற்றுப் பின் தெளிந்து, உலகப் பழிப்புக்கு அஞ்சி ஒரு பெட்டியில் அக் குழந்தையை வைத்துக் கங்கையின் பெருக்கிலே விட்டிடுதல்.

திவசஞ் செய்பவ னருளினன் முன்புபோற்
தெரிவைகன் னிகையாகிக்
கவச குண்டலத் துடன்வரு மகவினைக்
கண்டுகண் புனல்சோர
அவச மெய்திபின் தெளிந்துல குறும்பழிக்
கஞ்சிபெட் டகத்தாக்கி
நவச முத்திர மொத்தமந் தாகினி
நதியொழுக் கினண்மன்னே.

(இ-ள்). திவசம் செய்பவன்-நாள் உண்டாக்குபவனுகிய சூரியன், அருளினல்-கிருபையினல், முன்பு போல்–முன்னிருந்தது போலவே, தெரிவை-குந்தி, கன்னிகையாகி-கன்னிப்பெண்ணாகி, கவச குண்டலத்துடன் வரு மகவினை-கவச குண்டலங்களோடு வந்து பிறந்த குழந்தையை, கண்டு-பார்த்து, கண் புனல் சோர

அவசம் எய்தி–கண்களில் ஆனந்தக் கண்ணீர் சொரியத் தன்வசந் தப்பிய நிலையையடைந்து, பின் தெளிந்து-பின்னர் ஒருவாறு தெளிவுபெற்றுத் தன்வசமாகி, உலகு உறும் பழிக்கு அஞ்சி-உலகத்தோர் கூறும் பழிமொழிக்குப் பயந்து, பெட்டகத்து ஆக்கி-பெட்டிக்குள்ளே பொதிந்து வைத்து, நவ சமுத்திரம் ஒத்த-புதியதோர் சமுத்திரம் போன்ற, மந்தாகினி நதி-கங்கா நதியில், ஒழுக்கினள்–செலுத்தினள்; (எ-று).—மன், ஓ-சற்றசை.

திவசஞ் செய்பவன்-தினகரன்; பகலவன்: எனவே சூரியன். திவசம்-நாள், தினம். மகவினைக் கண்டதனால், 'புனல்' ஆனந்தக் கண்ணீர்க்காகியது. பழி-கன்னிப் பருவத்து மகப் பெற்றமை. மந்தாகினி-கங்கை: சாதாரணமாக, தேவலோகத்திலுள்ள கங்கைக்கு மந்தாகினி யென்றும், பூலோகத்தில் வந்ததற்குக் கங்கை யென்றும், கீழுலகத்திற் பாய்வதற்குப் போகவதி யென்றும் பெயர் கூறுப, (28)

29. நதிப் பெருக்கில் வந்த பெட்டியில் அதிரதனும் அவன் மனைவியாகிய ராதையும் குமரனைக் கண்டு மகிழ்ந்து வளர்த்துவர, கர்ணன் பரசுராமனிடம் வில் முதலியன கற்று விளங்குதல்.

நதிர தத்துறு மதலையை யவண்புனல்
நசைகொடு புகுஞ்சூதன்
அதிர தன்மனை யிராதையுங் கண்டெடுத்
தளிப்பமன் னவர்வெம்போர்
எதிர தம்பட விருந்திடு மழுவுடை
இராமனுற் சிலைவிஞ்சை
முதிர தன்னினை யிலையெனக் கற்றவன்
முதன்மையோ டிருந்திட்டான்.

(இ-ள்.) நதி ரதத்து உறு மதலையை-கங்கைப் பெருக்கிலே பேழையாகிய ரதத்திலே பொருந்தி வருகின்ற குழந்தையை, அவண்-அப்போது அவ்விடத்து, புனல் நசைகொடு புகும்-நீர் எடுத்துப்போகும் வேட்கையோடு வந்து புகுந்த, சூதன் அதிரதன் மனை இராதையும் கண்டு எடுத்து-தேர்ப்பாகனாகிய அதிரதனென் பவனும் அவன் மனைவியாகிய இராதை என்பவளும் பார்த்து[க் கரையோரம் தள்ளி] எடுத்து, அளிப்ப-(தமது புதல்வன்போல்) பாதுகாத்து வளர்த்து வர (அவன் வாலிபனாகி),—மன்னவர்-

க்ஷத்திரியர்களை, வெம்போர் எதிர்-கொடிய போர்க்களங்களிலே எதிர்த்து, அதம்பட-கொன்று, விருந்திடும்-[பேய்களுக்கும் கழுகுகளுக்கும் காகங்களுக்கும்] களத்தில் நிணவுணவளிக்கும், மழுவுடை இராமனல்-பரசுராமனிடத்து, சிலை விஞ்ஞை முதிரவில் வித்தை முற்றும், தன் இணை இலை என கற்று-தனக்கு நிகர் யாருமில்லை யென்று புகழ்பெறக்கற்று, அவன்-அந்தமைந்தன், முதன்மையோடு-தலைமை பெற்று, இருந்திட்டான்-விளங்கினன்; (எ-று).

நதிரதம்-நதியிலே வருகின்ற ரதம் எனப் பேழைக்காயிற்று. இனி நதியாகிய ரதத்தில் வருகின்ற மதலை எனினுமாம்: அஞ்ஞான்று நதிரதம்-உருவகம். ரதம் என்பது இங்கே பொதுவாக வாகனத்திற்காயிற்று. சூதனும் மனைவியும் நீர்கொள்ள வந்தனர்: அவர்கள் குழந்தையைக் கண்டெடுத்து வஸுஷேணன் என்று பெயரிட்டனர். [வஸு-திரவியத்துடன், ஸேனன்-சம்பந்தப்பட்டவன்: நல்ல ரத்தினங்களோடும் கவசகுண்டலங்களோடும் கிடைத்தவன்]. இவன் [வீடுமனைப் போலப்] பரசுராமனிடம் வில்வித்தை கற்று விளங்கியவன். அதம்=ஹதம். விருந்திடுதல்-களவேள்வி வேட்டல் என்றபடி. (29)

வேறு

30. குந்திக்குச் சுயம்வரம் ஏற்படுத்தவே மன்னர் திரள, அவள் மணமாலையைப் பாண்டுவுக்கே சூட்டுதல்.

பேர்கொண் டசூரன் மணவோலையைப் பெட்பி னுய்ப்பப்
போர்கொண் டமன்னர் பூமேலளி போன்று மொய்த்தார்
வார்கொண் டகொங்கை மணமாலையை மன்னர் தம்முள்
ஏர்கொண் டபாண்டு புயமீதணிந் திட்ட னளே.

(இ-ள்.) பேர்கொண்ட-புகழ்படைத்த, சூரன்-சூரனுகிய யது குலத்தரசன், மணவோலையை-தன் மகள் குந்தி (பிரதை)யின் மணத்தைப்பற்றிய ஓலைச் செய்தியை, பெட்பின்-ஆசையோடு, உய்ப்ப-விடுப்ப, போர்கொண்ட மன்னர்-வீரர்களாகிய அரசர்கள், பூமேல் அளிபோன்று-பூவை வண்டுகள் மொய்ப்பது போலே, மொய்த்தார்-கூடினார்கள்; (அப்போது அந்தச் சுயம்வரத்தில்) வார் கொண்ட கொங்கை-கச்சணிந்த தனங்களையுடைய குந்தி, மணமாலையை—, மன்னர் தம்முள்-(குழுமியிருந்த) மன்னர்களுள், ஏர்கொண்ட பாண்டு புயம் மீது-அழகு படைத்த பாண்டு மன்னனின் தோளின்மேல், அணிந்திட்டனள்-சூட்டினள்; (எ-று).

கொங்கை-சினையாகுபெயர்.

இது முதற் பதினெரு கவிகள்—பெரும்பாலும் மூன்றுஞ் சீரொன்று காய்ச்சீர் அல்லது கனிச்சீராகவும் ஏனையவை மாச்சீர் களாகவும் வந்த கலிநிலைத்துறைகள். இந்தப் பகுப்பில் அடிக்குப் பதினன்கெழுத்துக்கள் அல்லது பதினைந்தெழுத்துக்களைக் கொண்டு செய்யுட்கள் உள்ளன. (30)

31. மத்திரராசன் தன் புதல்வியைத் தானேதர, அவளையும் பாண்டு மணந்து, இரு மங்கையரோடும் வேட்டையாடுமாறு கானஞ் சேர்ந்து, அங்கு வேட்டையாடிய பின், ஒரு கலை மான் தன்பிணையோடு கிரீடித்தமை கூறல்.

கருமா னிகர்த்த குழல்வேட்டபின் காவன் மத்திரன்
தருமான் மணந்தவ் விருவோரொடுஞ் சார்ந்து கானிற்
பெருமான் மிருகம் பலநூறிய பின்வி ரகத்து
ஒருமான் பிணையு முகந்தாடல் கண்ணுற் றனனே.

(இ-ள்.) (பாண்டு மன்னவன்) கருமால் நிகர்த்த-கரிய மேகத்தை யொத்த, குழல்-கூந்தலையுடைய குந்தியை, வேட்ட பின்-மணந்த பின்பு, காவல் மத்திரன்-அரசனுகிய மத்திர தேசத் தவன், தரு-தானுகவே (உகந்து) தந்த, மான்-பெண்ணுகிய மாத்திரியை, மணந்து—, அ இருவரொடும்-அந்த இரு மனைவி யருடனும், கானில் சார்ந்து-காட்டுக்கு (வேட்டையாடி விளையாடச்) சென்று, பெரு மான்-யானை முதலாகிய, பல மிருகம் நூறிய பின்-பல விலங்குகளை யெல்லாம் கொன்ற பின்பு, விரகத்து-காம இச்சையினல், ஒரு மான்-ஒரு ஆண்மானும், பிணையும்-பெண் மானும், உகந்து-மகிழ்ந்து, ஆடல்-புணர்ந்து கிரீடித்தலை, கண் ணுற்றனன்-பார்த்தான்; (எ-று.)

மால்+நிகர்த்த=மானிகர்த்த: "மெலிமேவினனவும்" என்பது விதி (நன் : மெய்யீற் : சூ. 24). மால்-மேகம்: "சிலைமாலுருமு" (தஞ்சைவா : 164). "மாலின் புயல்காத்த மால் வண்ணன்" (பெருந்தேவனர் பாரதம்). குழல்-ஆகுபெயர். மத்திரன் தரு மான்-மத்திர தேசாதிபதியான ருதாயன னென்பவன் மகள் மாத்திரி: மான்-உவமவாகுபெயர்: மான் விழிக்கு உவமை கூறப்படும். மாத்திரியைத் தந்தை தானே மணஞ்செய்து தந்தான் என்றது இங்கு. ஆனல் பால பாரதத்தில், வீடுமன் தன் வில் வலியாற் கவர்ந்து கொண்டுவந்து மாத்திரியைப் பாண்டுவுக்கு மனைவியாக்கினன் என்று உள்ளது. வியாச பாரதத்தில் வீடுமன் சென்று மாத்திரியைப் பாண்டுவுக்குத் தருமாறு கேட்க, மத்திர

பதி இசைந்தானென்று உள்ளது. பெருமான்-யானை; மான்-'மா' என்பதனோடு 'ன்'-சாரியை வந்தது: ''ஆ மா கோனவ் வகீணயவும் பெறுமே'' என்பது விதி. (நன் : உருபு புணரியல் : சூ. 9). பிணை-பெண்மான்: எனவே 'ஒரு மான்' என்றது ஆண்மானாகிய கலைக்கு ஆயிற்று. (31)

32, பாண்டு அந்தக் கலைமானை அம்பினால் விழுத்த, அது முனிவன் ஆகிப் பாண்டுவைச் சபித்தமை கூறும்.

விட்டான் பகழி விழுந்ததவ வேட மெய்தி
மட்டார் தொடையாய் விரகத்தடு மாற்றி னீயும்
இட்டா னுபோகத் தெனைப்போல விறத்தி யென்னு
பட்டான் மனையு மிறந்தாள்தழல் பாய்ந்து மன்னே.

(இ-ள்.) (பாண்டு) பகழிவிட்டான்-[கண்ணுற்ற மானின் மேல்] அம்பைச் செலுத்தினான்: விழுந்தே-அந்தக் கலைமான் கீழே விழுந்து, தவ வேடம் எய்தி-முனிவனாகி, '' (பாண்டுவைப் பார்த்து) மட்டு ஆர் தொடையாய்!-தேன்பொருந்திய மலர் மாலையை யணிந்த மன்னவனே! நீயும்—, விரகத் தடுமாற்றில்-காமவிச்சையினால் கலங்கி, இட்ட அனுபோகத்து-இஷ்டப்பட்ட படி இன்பத்தை யநுபவிக்கும்போதில் தானே, எனைப் போல-என்னைப் போலவே, இறத்தி-இறந்திடுவாய்'', என்னு-என்று சபித்து, பட்டான்-இறந்துபோனான்; மனையும்-(பெண்மானாகிக் கிரீடித்த) அந்த முனிவனின் மனைவியும், தழல் பாய்ந்து இறந்தாள்-தீயிற் குதித்து இறந்து[அவனைத்தொடர்ந்தே] போயினாள்; (எ-று)—மன், ஓ-ஈற்றசை.

கலைமான் உருவம் எடுத்தவன் கிந்தமன் என்ற முனிவன். அவன் புணர்ச்சியின்பத்திலாழ்ந்திருந்தபோது இடையே அம்பெய்து வீழ்த்தியதால் பாண்டுவுக்குச் சாபங்கொடுத்து இறந்தான். அவன் இறந்தபின் அவன் மனைவி சிதையடுக்கி அதில் அவனுடம்பையேற்றி நெருப்பு வைத்து அத்தழலிற் பாய்ந்து தன்னுடம்பை நீத்தாளென்க. கணவனுடன் தீப்பாய்ந்தவர், அவன்புக்க உலகம் புகுவரென்பது இங்கு அறியத்தக்கது. இட்ட+அநுபோகம்=இட்டானுபோகம்; தீர்க்கசந்தி பெற்ற வடமொழித்தொடர். இட்டம்-இஷ்டம். இறத்தி-இகரவீற்று வியங்கோள்: வைதற்பொருளில் வந்தது. (32)

33. பிறகு பாண்டு பத்தினிமாரோடு இமயத்து அருந்தவஞ் செய்ய விரும்புதல்.

மானை னேபேரோன் மனையாளொடு மாய்ந்து விண்ணோர்
வானு டடைந்தான் றுயரெய்தியம் மன்னர் மன்னன்
மீனுர் விழியா னுடன்மாதவ வேட மெய்திக்
கானு ரிமயத் தருமாதவங் காதல் செய்தான்.

(இ-ள்.) மானை-மான் வேடங்கொண்ட, பேரோன்-பேர் படைத்த கிந்தமன் என்னும் முனிவன், மனையாளோடு-தன் மனைவியோடு, மாய்ந்து-இறந்து, விண்ணோர் வான் நாடு அடைந்தான்-தேவர்களது சிறந்த நாடாகிய சுவர்க்கம் புகுந்தான்: அ மன்னர் மன்னன்-அந்தப் பாண்டு சக்கரவர்த்தி, துயர் எய்தி-(சபித்ததனாலே) துயரமுற்று, மீனுர் விழியானுடன்-மீன் போன்ற விசாலமான நீண்ட கண்களையுமுடைய இரு மனைவியருடனும், மா தவ வேடம் எய்தி-சிறந்த தவக்கோலத்தைப் பூண்டு, கான் ஆர் இமயத்து-காடுகள் நிறைந்த இமயமலைப் பிரதேசத்து, அரு மா தவம்-செய்தற்கரிய சிறந்த தவத்தை. காதல் செய்தான்-(செய்ய) விரும்பினன்; (எ-று).

இனி, முதலடியில் உள்ள 'மனையாளொடு' என்றவிடத்து 'ஒடு'வை எடுத்து, 'மானை னேபேரோனொடு' மனையாள் மாய்ந்து-மாய, (அவன்) விண்ணோர் வானுடடைந்தான் என்பது நேரிது. மாய்ந்து-மாய: எச்சத்திரிபு. விண்ணோர் வானுடு-சுவர்க்கம். பாண்டு சத்சிருங்கபர்வதத்தில் தவம்புரிந்தானென்று நூல்கள் கூறும். (33)

34. பாண்டு தவம் புரிகையில் ஆங்குள்ள முனிவரோடு நட்புக் கொண்டு, அவர்களோடு பிரமலோகம் சென்று புகமுயல, 'மகப்பேற்றிலாசையில்லார்க்குப் புகலரிது' என்று அவனை நிறுத்தி அவர்கள் போதல்.

சின்னுள் தவஞ்செய் திடுபின்வட திக்கி னெய்தி
மன்னு முனிவோ ரொடுநேய மன்னி மன்னன்
அன்னு ருடனே யயனூருக் கணுக மைந்தர்
தன்னு சையற் றேர்க்கரிதென் றவர்தா முயர்ந்தார்.

(இ-ள்.) சின்னுள்-சில நாட்கள், தவம் செய்திடு-தவம் செய்திட்டு, பின்—, வட திக்கின் எய்தி-வடதிசை நோக்கிச்

சென்று, (ஆங்கு) மன்னு-தங்கியிருந்த, முனிவரோடு-இருடிய ரோடு, நேயம் மன்னி-நட்புக்கொண்டு, மன்னன்-அரசனுகிய பாண்டு, அன்னருடனே-அந்த முனிவர்களோடு, அயன் ஊருக்கு அணுக-பிரமனது லோகத்துச் சேர, (அப்போது அங்கு) அவர்-அம்முனிவர்கள், "மைந்தர் தன் ஆசை அற்றோர்க்கு அரிது-(இந்த லோகத்துப் புகுதல்) மகப்பேற்றிலாசையில்லாதவர்க்கு இயலாது" என்று-என்று சொல்லி, உயர்ந்தார்-[தாங்கள்] மேனேக்கிச் சென்றார்கள்; (எ-று.)

மன்னுதல் – தங்குதல். மன்னு.....மன்னி - செ ா ன் மு ர ண் தொடை. அயன் ஊர்-பிரமலோகம்: சத்தியலோகம். ஈற்றடி மகப் பேற்றின் இன்றியமையாமை குறிப்பது. (34)

35—36. இரண்டு கவிகள்:—பாண்டு குந்தியிடம் மகப்பேற்றின் சிறப்பைச் சொல்லுதல் கூறும்.

முனிவோர் மொழி கேட்டிடராழி மூழ்கி மன்னன்
கனிவாய் பிரதை தனேநோக்கிக் கழறு மில்லோர்க்
கினிதான மைந்த ரிலேயேன் மகவியல் விரதம்
நனியாற் றிடினு மரியமுத்தி நண்ணல் மன்னே.

(இ-ள்). முனிவோர் மொழி கேட்டு-இருடியர்கள் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, மன்னன்-பாண்டு, இடர் ஆழி மூழ்கி-துன்பக்கடலுள் அழுந்தி, (பின்) கனிவாய் பிரதைதனே நோக்கி-கொவ்வைக்கனிபோற் சிவந்த வாயையுடைய குந்தியைப் பார்த்து, கழறும்-(பின் வருமாறு) சொல்லலானுன்: இல்லோர்க்கு-இல்லறத் தார்க்கு, இனிதான-இனிமையைப் பயப்பதான, மைந்தர்-புதல் வர்கள், இலேயேல்-இல்லாமற் போகுமானுல், மகம் வியல்விரதம்-வேள்விகளும் பரந்த பலவகை விரதங்களும், நனி ஆற்றிடினும்-நன்கு மிகுதியாகச் செய்தாலும், முத்தி நண்ணல்-மோட்சத்தைக் கிட்டுவதென்பது, அரிய-இயலாது; (எ-று.) மன், ஓ-ஈற்றசை.

'முனிவோர் மொழி கேட்டு இடராழி மன்னன் மூழ்கி'-என்ற விடத்து அறிய வேண்டிய கதா சந்தர்ப்பம்:

"அயனூருக்கு அணுகுதல் மைந்தர்தன் ஆசையற்றோர்க்கு அரிது" என்று முனிவோர்கள் கூறியதைக் கேட்டு, பாண்டு "மகப்பேறில்லாதவனுயினும் நான் செய்யும் பெருந்தவத்தாற் பிரமலோகம் புகுவேன்" என்றனுக, அங்கிருந்த முனிவர்கள் "உனக்கு மகவுண்டாகும் என்பதை நாங்கள் ஞானக்கண்ணுல்

அறிந்துள்ளோம்'' என்று கூறிச்சென்றனர்: பிறகு ''முனிவனது சாபத்தைப் பெற்ற எனக்கு மகவு எப்படியுண்டாகும்'' என்று பாண்டு மன்னவன் சிந்தையிலாழ்ந்திருந்தான் என்பது. பின் னிரண்டடிகளால், ''புத்திரரைப் பெறுதோரால் இல்வாழ்வின் இனிமை பெறமுடியாதென்பதும், அவர்கள் இம்மை மறுமைகளி யிழப்பதோடு வீடு பேறும் நண்ணகிலார் என்பதும் பெறவைக்கப் பட்டன. மக வியல் விரதம்-உம்மைத்தொகை. அரிய-அரியது. (35)

36. சுதனுல் பிதுர்க்கள் பசிதீர்ப்பதச் சுதனை நல்லார்
பதியாற் பெறுவர் முனிசாபம் படர்ந்த தெற்கிங்
கதனுற் பிறர்நீ யணைந்தே மகவளித் தெனக்குக்
கதிகாட் டெனவேந் தினிதோத கவுந்தி சொல்வாள்,

(இ-ள்.) பிதிர்க்கள்-பிதிரர்கள், சுதனுல்-புதல்வனுல், பசி தீர்ப்பது-(தங்கள்) பசியைத் தீர்த்துக்கொள்வர்: அ சுதனை-அத்தகைய புதல்வனை, நல்லார்-மகளிர், பதியால்-(தங்கள்) கணவரால், பெறுவர்-பெற்றுக்கொள்வர்; (இது சாதாரணமுறை) [ஆனுல்] எற்கு-எனக்கோ, இங்கு-இப்போது, முனி சாபம் படர்ந்தது-கிந்தம முனிவனின் சாபம் ஏற்பட்டுள்ளது: அதனுல்—, நீ—, பிறர் அணைந்தே-பிறராகிய முனிவரையோ தேவரையோ சேர்ந்து, மகவு அளித்து-புதல்வனைப் பெற்று, எனக்கு கதி காட்டு-(அப் புதல்வன் மூலம்) எனக்கு நற்கதி பெற வகை செய்வாய்: என-என்று, வேந்து-பாண்டு மன்னன், இனிது ஓத-இனிமையாகச் சொல்ல, கவுந்தி-குந்தி, சொல்வாள்-பதில் பேசினுள்; (எ-று). அவள் சொல்லியதை மேலிக்கவியிற் காண்க.

பிதுருக்கள் வசிக்குமிடம் தென்திசை யாதலின் தென்புலத் தார், தென்பாலவர் எனப்படுவர். இவர்கள், படைப்புக்காலத்து அயனுற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதி. இவர்கள் தேவ வர்க்கத்திற் சேர்ந்தவரென்பதும் வேதம் முதலிய நூல்களிற் கண்டன. பிறர்-தவத்திற் சிறந்த பிராமணர், முனிவர், தேவர் இன்னேர். இவர்கள் மூலமாக நீ மகப்பெறின், அதனுல் யான் நீக்கதி சேராது நற்கதி சேர்வேனுதலால், அவ்வாறு நிகழ்த்த மனம் வைக்க வேண்டும் என்று பாண்டு இனிது வேண்டிக் கொண்டவாறு. கவுந்தி-குந்தி என்பதன் சிதைவு. (36)

37—38. குந்தி மறுத்துக்கூற, பாண்டு பின்னும் வற்புறுத்திப் பிறர் செயலையும் காட்டுதல்.

இரண்டுகவிகள்-ஒரு தொடர்.

37. பொற்புக் கயங்க பசியால்புலி புல்ல ருந்திற்
கற்புக் கணியார் பிறர்மேன்மனங் கருது மென்ன
வெற்புக் கனதோ ளிறைகேகய வேந்த னில்லாள்
நற்புத் திரரைப் பிறரான்முன நல்கி லாளோ.

(இ-ள்.) [குந்தி தன் கணவரை நோக்கி] பொற்பு-அழகு, கயங்க-மெலியும்படி, பசியால்-பசியினாலே வாடி, புலி-புலியானது, புல் அருந்தில்-புல்லைத் தின்னுமேயானால், (அஞ்ஞான்று) கற்புக்கு அணியார்-கற்புக்கு ஆபரணமாகத் திகழ்கின்ற மகளிர், பிறர்மேல் மனம் கருதும் என்ன-அயல் புருஷர்பால் கருத்துவைப்பர் என்று சொல்ல, (அதற்கு) வெற்பு கன தோள் இறை-மலையைப் போல் கனத்த தோள்களையுடைய பாண்டு, கேகய வேந்தன் இல்லாள்-கேகய தேசத்தரசன் சாரதண்டாயனி என்பவனது மனைவியான சுருதசேனை என்பவள், நல் புத்திரரை-நல்ல புதல்வர்கள் மூவரை, பிறரால்-தவசித்தி பெற்ற பிராமணனை வரித்து அவரால், நல்கிலாளோ – (தன் கணவனுக்குப்) பெற்றுக் கொடுக்க வில்லையோ ? (எ-று).

'நல்கிலாளோ ?' என்றதால் - அப்படியே நீயும் தவத்திற் சிறந்த பிராமணனைக் கொண்டு புத்திரனை யுண்டாக்கிக் கொள்வதற்கு என் கட்டளையின் மேல் சீக்கிரம் முயற்சிசெய் என்றபடி. பொற்பு-அழகு, பொலிவு. கயங்குதல்-மெலிதல், சோர்தல், பசிப் பிணி யென்னுமோர்பாவி "மானைமில் சிதைக்கும்" என்றது மணிமேகலை. புலி அறப்பசித்தும் புல்லைத் தின்னாது என்பது முதுமொழி. அதுபோலக் கற்புடை மாதர் காமம் கைம்மிகினும் பிறரை நெஞ்சில் கருதார்: பின்னிரண்டடிகளில் குறித்த வரலாறு:—சாரதண்டாயனி என்னும் கேகயதேசத்தரசன் கற்புள்ளவளும் புகழுமுள்ளவளுமான சுருதசேனை யென்னும் பெயருள்ளவளை விவாகம் செய்துகொண்டான். அவள் தன் கணவனால் புத்திர உற்பத்தி செய்துகொள்ளும்படி கட்டளையிடப் பட்டு ருது ஸ்நானஞ்செய்து நியமத்துடனிருந்து இரவில் நாற்சந்தி கூடுமிடத்திலிருந்த தவவலித்திபெற்ற ஒரு பிராமணனை வரித்து, ஆண்பிள்ளை பிறப்பதற்கான பும்ஸவன கிரியையில் அக்நியில் ஹோமஞ் செய்து அந்தக் கிரியை முடிந்தபின் அந்தப் பிராமணருடன் கூடவே சேர்ந்திருந்தாள். அதனால், அவள்

துர்ஜயன் முதலான மூன்று மஹாரதர்களைப் பெற்றுள் என்பது. (37)

38. கன்மாட பாதன் மனையாள்குரு கருணை கொண்டு
முன்மா மகவீன் றிலளோமறை முழுத மைத்தோர்க்
குன்மா மிமாரீன் றிலரோவெமை யுவன் வரத்தான்
மன்பாரி நூறு மகவாங்கரு வாய்ந்த தோர்வாய்.

(இ-ள்.) கன்மாட பாதன் மனையாள்-கன்மாஷ பாதன் என் பவனுடைய மனைவி, குரு கருணை கொண்டு-குருவாகிய வசிட்ட முனிவரின் அருளினாலே, முன்-முற்காலத்து, மா மகவு ஈன்றிலளோ-சிறந்த புத்திரனைப் பெறவில்லையோ? (பெற்றுள்): [மேலும்] மறை முழுது அமைத்தோர்க்கு-வேதத்தை முற்றும் வகுத்துச் சீர்பெற அமைத்த வியாசர்க்கு, உன் மாமிமார்-உன் னுடைய மாமியர்களாகிய அம்பிகை, அம்பாலிகை யிருவரும், எமை ஈன்றிலரோ-எம்மைப் புதல்வர்களாகப் பெற்றுக்கொள்ள வில்லையோ? யுவன்-இளைஞராகிய வியாசரின், வரத்தால்-வர பலத்தால், மன்-அரசனுகிய திருதராஷ்டிரனின், பாரி-பார்யை யாகிற காந்தாரி, நூறு மகவு ஆம் கரு வாய்ந்தது-நூறு புத்திரர் களைப் பெறும்படியான கருவைப் பாதுகாத்து உயிர்த்தது: ஓர் வாய்-(இவைகளை) மனங்கொள்வாய்; (எ-று).

கன்மாடபாதன் வரலாறு :—கன்மாடபாதன் என்பவன் பெயர் மித்திரசகன். இவன் வேட்டையாடச் சென்றபோது ஓர் இராக்கதனைக் கொன்று சென்றான். அதற்குப் பழிவாங்கு நிமித்தம் அந்த இராக்கதனின் தம்பி பரிசாரக வேடம் தரித்து இந்த மித்திரசகனிடம் போய் இவன் மடைப்பள்ளிக்கு அதிப னானான். ஒருநாள் வசிஷ்டர் இவ்வரசன் மனைக்கு விருந்தினராய்ப் போக, அப் பரிசாரகன் ஒரு நரனைக் கொன்று அம் மாமிசத்தைப் பாகஞ் செய்து முனிவர்க்கிட முனிவர் அதுகண்டு சினந்து அரசனை இராக்கதனாக வென்று சபித்தார். அரசன் தன்மீது குற்றமில்லாதிருக்கச் செய்தே சபித்த வசிட்டர்க்குப் பிரதி சாப மிடத் துணிந்து கையில் நீரை யெடுக்க மனைவி கண்டு தடுத்தாள். அப்படித் தடுத்தலும் அந்நீரைத் தனது பாதத்தில் விட்டுக் கொள்ளக் கன்மாஷ பாதனாயினான். அது கண்ட வசிட்டர் உண்மையுணர்ந்து ஈராண்டிற் சாபவிமோசனமாக வென்று அனுக்கிரகித்தார். மற்றும், அவன் மனையாளுக்கு மகப்பேறு உண்டாகும்படி அருள் செய்தார். [கன்மாஷபாதன்-களங்க முடைய பாதத்தை யுடையவன்; பாதத்தில் களங்கமாவது-கருகிப்

போய்க் கறுப்பாக இருத்தல்; சந்திரனுக்குக் களங்கம் போலே இருப்பதொன்று: "மேனி கருகிக் கன்மாடனுனன்" என்றது குற்றாலத் தலபுராணம்: (வட வருவி. 17) கன்மஷம்-அழுக்கு].

இனி, ஸௌதாசன் மதயந்தி யென்ற தன் மனைவியிடம் வசிஷ்ட முனிவர் மூலமாய் அச்மகன் என்ற புத்திரனைப் பெற்ற தையும் வியாச பாரதம் கூறும். திருதராஷ்டிரன் முதலிய தாங் களும் வியாசர் மூலமாகப் பிறந்ததையும் பாண்டு மன்னன் குந்தி தேவிக்கு நிதரிசனமாக எடுத்துக் காட்டினன். மற்றும், வியாசர் வரபலத்தால், காந்தாரி நூறு மகவுகொண்ட கருப்பம் வாய்க்கப் பெற்றாள்: [பின் அக்கரு குழம்பிப் பூமியில் விழ, அப்போதும் வியாசர் வரத்தின்படி தாழியிற்பெய்த தசைகள் உறுப்பு நிரம்பித் தாமே அந்தத் தாழியைப் பிளந்துகொண்டு வெளிவரும் வரையிற் பாதுகாத்திருந்து நூறு புதல்வர்களைப் பெற்றாள் என்பதும் நினைக].

யுவன்-பதினாறுக்கு மேல் முப்பது வயசுக்குட்பட்டவன். பாரி-மனைவி. (38)

39. குந்தி துருவாசரிடம் பெற்ற மந்திரமேன்மையைக் கணவற்குத் தெரிவித்தல்.

எனவேந் தியம்பிப் பின்னும்பிற ரியல்பு ணர்த்த
கனிவாய் பிறரை நயவேன்சுரர் கருணை கொண்டு
மனதான் மைந்தர் பெறுவேனென வள்ளல் கன்னன்
றனையீன் றதன்றி முனிமாமறை தன்மை சொற்றாள்.

(இ-ள்.) என வேந்து இயம்பி-என்று பாண்டு மன்னன் சொல்லி, பின்னும்-மேலும், பிறர் இயல்பு உணர்த்த-பிறர் ஒழுகிய தன்மையையும் (குந்திக்கு) எடுத்துச் சொல்ல, கனி வாய்-கொவ்வைக் கனி போன்ற சிவந்த வாயினையுடைய குந்தி, பிறரை நயவேன்-பிற ஆடவரை விரும்பிச் சேரேன்: சுரர் கருணை கொண்டு-தேவர்களுடைய கிருபையினால், மனதால் மைந்தர் பெறுவேன்-மனத்தினால் எண்ணிக் குமாரர்களைப் பெறுவேன், என-என்று சொல்லி, வள்ளல் கன்னன் தனை ஈன்றது அன்றி-உதாரனன கர்ணனைப் பெற்றதைத் தவிர்த்து, முனி-துருவாச முனிவரின், மா மறை தன்மை-சிறந்த மந்திரத்தின் மேன்மையை, சொற்றாள்-சொல்லினாள்: (எ-று.)

பிறரியல்பு-உத்தாலகர் போன்றவர் தன்மை. கனிவாய்-சினையாகுபெயர், மனதால்-கருத்தால். கர்ணன் தனக்குப்

புத்திரனுக விவாகம் நிகழ்வதற்கு முன்னமே பிறந்ததால் அதனைச் சொல்லுதலைத் தவிர்த்தாள் குந்தி. (39)

40. குந்திதேவி தருமராசனை யமனை மந்திரத்தால் அழைக்க அன்னன் வந்து அவளோடு கலத்தல்.

அம்மா துரைகேட் டரசன்மகிழ்ந் தறமி குந்த
செம்மா மகவாய்த் தருந்தேவரைச் சிந்தி யென்ன
வெம்மா முலையவ் வணமுள்ளிய மெய்த்த வத்தோன்
அம்மா மறையாற் சமன்வந்தவள் தனைப்பு ணர்ந்தான்.

(இ-ள்.) அ மாது உரை கேட்டு-அந்தக் குந்தி சொன்ன மொழிகளைக் கேட்டு, அரசன் மகிழ்ந்து-பாண்டு சந்தோஷமுற்று, அறம் மிகுந்த-தருமம் நிரம்பிய, செம்-செவ்வையாகிய, மா-சிறந்த, மகவாய் தரும் தேவரை-குழந்தையைக் கொடுக்கும் தேவதை யாகிய தருமராசனை, சிந்தி என்ன-கருத்தில் வைத்துத் தியானிப் பாய் என்று சொல்ல, அவ்வணம்-அவ்வகையே, வெம் மா முலை-விரும்பத்தக்க பருத்த கொங்கைகளையுடைய குந்திதேவி, உள்ளிய-மனத்தில் நினைத்த, மெய் தவத்தோன் அ மா மறையால்-உண்மை யான தவத்தினையுடைய துருவாச முனிவர் உபதேசித்த அந்தச் சிறந்த மந்திரத்தால், சமன் வந்து-யமதருமராசன் வந்து, அவள் தனை புணர்ந்தான்-அந்தக் குந்தியோடு சேர்ந்தான்; (எ-று)

வெம்மை - விருப்பம் : '-வெம்மை வேண்டல்' (தொல் : சொல் : 334) சமன்-யமன் : போலி. (40)

வேறு

41. தருமபுத்திரன் பிறத்தல்.

நன்னிலைக் கோள்கள் யாவு நண்ணிடு முகூர்த்தந் தன்னில்
இந்நில முழுது மோம்பு மிவனென முனிவர் கூற
உன்னரு மும்பர் வாழ்த்த வுதிட்டிர னுதித்தான் வேந்தன்
பன்னரு முவகை யாழிப் படிந்திட ரொழித்தான் மன்னே.

(இ-ள்.) கோள்கள் யாவும்-கிரகங்களனைத்தும், நன்னிலை நண்ணிடு முகூர்த்தம் தன்னில்-நல்ல நிலைகளில் இருக்கும் முகூர்த்த வேளையில், இ நிலம் முழுதும் ஓம்பும் இவன் என-இப் பூவுலகம் முழுவதும் இவன் ஆண்டு பாதுகாப்பன் என்று,

முனிவர் கூற-முனிவர் சொல்ல, உன்ன அரு உம்பர் வாழ்த்த-நினைத்தற்கும் அரிய மேன்மையையுடைய தேவர்கள் ஆசிர்வதிக்க, உதிட்டிரன் உதித்தான்-தருமபுத்திரன் பிறந்தான்; வேந்தன்-பாண்டு ராசன், பன்ன அரு-சொல்லுதற்கரிய, உவகை ஆழி படிந்து-மகிழ்ச்சிக் கடலில் தோய்ந்து, இடர் ஒழித்தான்-மகப் பேறில்லாக் குறை நீங்கினன்; (எ-று). மன், ஓ-ஈற்றசை.

உதிட்டிரன்=யுதிஷ்டிரன்; போரில் நிலையாக நிற்பவன் என்று காரணப் பொருள்படும். இவன் ஐப்பசி மாதத்தில் வளர்பிறையில் பஞ்சமியன்று கேட்டை நட்சத்திரத்தில் அபிசித்திற் பிறந்தானென்று முதனூல் கூறும்.

இது முதல் பன்னிரு கவிகள் — பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களும், மற்றைய மாச்சீர்களுமாகிய அறுசீராசிரிய விருத்தங்கள்- (41)

42. குந்தி மகப்பெற்றதைக் கேள்வியுற்ற காந்தாரி பொறுமை கொண்டு வயிறு உள்ளே குழம்புமாறு கல்லால் இடித்துக் கொள்ள, அதனால் கரு பையோடு அழிந்து பூமியில் விழ, வியாசன் வந்து அதனைக் காணுதல்.

செழுந்தவப் பயனற் குந்தி செல்வனைப்
பயந்தாள் துன்ப
மொழிந்தன னென்னுஞ் சொற்கேட்
டுளம்பொரு தகட்டில் நாட்ட
மிழந்தவேந் தில்லாள் கல்லா
லிடித்தனள் கருப்பம் பையோ
டழிந்துமண் விழுந்த தெய்தி
யக்கணம் வியாதன் கண்டான்,

(இ-ள்). 'செழும் தவப்பயனால் குந்தி செல்வனை பயந்தாள்-செழித்த தவத்தின் பயனைக் குந்தி புதல்வனைப் பெற்றாள், (அதனால்) துன்பம் ஒழிந்தனள்—', என்னும் சொல் கேட்டு-என்னும் செய்தியைக் கேள்வியுற்று, உளம் பொறுது-மனம் பொறுமல், நாட்டம் இழந்த வேந்து இல்லாள்-பிறவிக்குருடனாகிய திருதராட்டிரன் மனைவியாகிய காந்தாரி, அகட்டில்-(தனது) வயிற்றினில், கல்லால் இடித்தனள்-கல்லால் மோதினாள்: [அதனால் குழம்பி] கருப்பம் பையோடு அழிந்து மண் விழுந்தது-

கருப்பம் கருப்பப்பையுடனே சிதைந்து (குருதி பொங்கப்) பூமியில் விழுந்தது: அ கணம்-அந்த சமயத்திற்குச் சேர, வியாதன்-வியாச முனிவன், எய்தி-(அவ்விடத்து) வந்து, கண்டான்-[விழுந்த கருப்பையைப்] பார்த்தான்; (எ-று).

நூறு மகவைக் கொண்ட கருப்பமாதலால் அப்பிண்டம் இரண்டு யாண்டு சென்றும் கெட்டியா யிருக்கவே, குந்தி மகவைப் பெற்றதிற் பொருமைகொண்டு காந்தாரி கல்லால் வயிற்றை மோதிக்கொண்டனள் என்க. (42)

43. வியாசன் கோசத்தசையை நூறு கூறு செய்து நெய்ந் நிரம் பிய நூறு கும்பங்களிலிட்டு, மிச்சமான மாமிசப் பகுதியை ஒரு கலசப் பானையிலிட்டு வைத்துக் காந்தாரியை நோக்கி, 'என் வரத்தால் தசைகள் உருவுபெற்று நிரம்பும் வரையில் தொடாது பாதுகாப்பாய்' என்று கூறுதல்.

தரையிடை விழுந்த கோசத் தசையினைத் தாழி தோறுந்
திருமுனி நூறு கூறு செய்துருக் கிழுதி லேற்றிக்
கரமுதற் சேட மாங்கோர் கடத்திலிட் டுதிக்கு மட்டுந்
தெரிவைநீ தொடா தளித்தி செனிக்குமென் வரம்பொய்
யாதே.

(இ-ள்.) தரையிடை விழுந்த கோசத் தசையினை-பூமியிலே விழுந்த கருப்பையிலே யிருந்த மாமிசத்தை, திருமுனி-சிறந்த வியாச முனிவன், நூறு கூறு செய்து-நூறு பாகமாகச் செய்து, தாழி தோறும்-தாழிகளிலெல்லாமுள்ள, உருக்கு இழுதில் ஏற்றி-உருக்கின நெய்யில் இட்டு, கரமுதல் சேடம்-இடக்கரத்தில் மிச்ச மாயிருந்த துண்டினை, ஆங்கு-அவ்விடத்திலுள்ள, ஓர் இடத்தில் இட்டு-ஒரு கலசப் பானையிலிட்டு,— (பின் காந்தாரியை நோக்கி) தெரிவை-பெண்ணே! நீ—, உதிக்கும் மட்டும்-ரூபத்தைப் பொருந்தித் தோற்றுங் காலம் வரையில், தொடாது-கையால் தொடாதே, அளித்தி-பாதுகாப்பாய்: செனிக்கும்-புதல்வர்கள் பிறப்பர்: என் வரம் பொய்யாது-என்னுடைய வரம் பழுது படாது; (எ-று).

இதனால், இழுதைக்கொண்ட நூறு தாழியிலும் அந்தக் கோசத் தசையினை யிட்டமை பெறப்படும். கரம்-கை: இங்கே இடக்கை. முதல்-ஏழனுருபு. சேடம்-மிச்சம் என நின்றது. 'தொடாது அளித்தி' என்றதால்-தாழியிற் பெய்த தசைகள்

உறுப்பு நிரம்பித் தாமே அந்தத் தாழியைப் பிளந்துகொண்டு வெளிவரும் என்பது பெறப்படும். (43)

44. காந்தாரி உற்பவிக்கும் பருவத்தை நோக்கியிருப்ப, தீ நிமித் தங்கள் உடன் தோன்றத் துரியோதனன் தோன்றுதல்.

என்னசொற் றிருடி யேக வீற்றனீ யடைந்து வைகும்
பன்னக மென்ன வன்னீ பருவம்பார்த் திருந்தா ளோர்நாள்
மன்னிய விரவிற் சோரி மழைதர வோரி கூவத்
துன்னிலீ கோள்கள் நிற்பச் சுயோதனன் தோன்றி னனே.

(இ-ள்). என்ன சொற்று-என்று சொல்லி, இருடி-வியாச முனிவன், ஏக-செல்ல, ஈற்று அனீ அடைந்து வைகும்-ஈன்ற முட்டையைக் கொண்ட புற்றையடைந்து தங்குகின்ற, பன்னகம் என்ன-பாம்பு போல, அன்னீ-தாயாகிய காந்தாரி, பருவம் பார்த்து இருந்தாள்-உற்பவிக்கும் பருவத்தை நோக்கியிருந்தனள்: ஓர் நாள்-ஒருதினம், மன்னிய இரவில் சோரி மழைதர-பொருந்திய இராத்திரியில் [ஆகாசத்திலிருந்து] இரத்த மழை பொழிய, ஓரி கூவ-நரிகள் ஊளையிட, கோள்கள்-கிரகங்கள், துன்னிலீ நிற்ப-தீங்கு விளைவிக்கும் நிலைகளில் இருக்க, சுயோதனன்-துரியோ தனன், தோன்றினன்-பிறந்தான் ; (எ-று).

'பன்னகம் என்ன' என்ற உவமையால் கொடுமை தொனிக் கும். ஈற்று-ஈனப்பட்டது: [செயப்படுபொருள் விகுதி புணர்ந்து கெட்டுத் திரிந்த பெயர். ஸுயோதனன் என்ற வடசொல்-நன்கு [வெற்றி யுண்டாகப்] பொருபவனென்று பொருள்படும். (44)

45. பாண்டுவின் ஏவலால் குந்தி மீண்டும் மந்திரத்தால் வாயுதேவனை வரவழைத்துக் கூடி, நல்ல முகூர்த்தத்தில் வீமனைப் பெற, அவனை யடுத்துக் காந்தாரிக்குத் துரியோ தனனின் தம்பியரும் துச்சளையும் தோன்றுதல்.

பின்றைநாள் அன்ப னேவற் பெற்றரு மறையாற் குந்தி
வென்றிவா யுவினைக் கூடி வீமனைப் பகலி லீன்றாள்
அன்றுதொட் டோரோர் நாளில் அகிதுசற் கிளையோர்யாருந்
துன்றியுற் பவித்த பின்னர் துச்சளை யுதித்தாள் மன்னோ.

(இ-ள்). குந்தி-குந்திதேவி, பின்றை நாள்-துரியோதனன் பிறந்த நாளுக்கு அடுத்த நாள், அன்பன் ஏவல் பெற்று-கணவ னாகிய பாண்டுவின் கட்டளையைப்பெற்று, அரு மறையால்-[துருவாச

முனிவர் உபதேசித்த] அரிய மந்திரத்தால், வென்றி வாயுவினை கூடி-வெற்றி பொருந்திய வாயுதேவனைச் சேர்ந்து, வீமனை பகலில் ஈன்றாள்-வீமசேனனை உச்சிப்போதில் பெற்றாள்: அன்று தொட்டு-அன்றைத்தினம் தொடங்கி, ஓர் ஓர் நாளில்-(அடுத்தடுத்து) ஒவ்வொரு நாளில், அகி துசற்கு-பாம்புக் கொடியையுடைய துரியோதனனுக்கு, இளையோர் யாரும்-தம்பிமாராகிய துச்சாதனன் முதலிய தொண்ணூற்றொன்பதின்மரும், துன்றி-நெருங்கி (அடுத்தடுத்து), உற்பவித்த பின்னர்-பிறந்த பின்பு, துச்சளை-துச்சளை யென்னும் பேரையுடைய ஒரு பெண்ணும், உதித்தாள்-பிறந்தாள்; (எ-று). மன், ஓ-ஈற்றசை.

பகலில் ஈன்றாள்-சூரியன் உச்சியை யடைந்ததனாற் சிறந்த முகூர்த்தத்தில் பெற்றாள். இந்த முகூர்த்தம்-'அபிஜித்' எனப் படும். "அபிஜித் ஸர்வதோஷக்ந:" என்ற மேற்கோள் இங்குக் காணத்தக்கது. அகி-பாம்பு: துசம்-துவசம் என்பதன் இடைக் குறை. துரியோதனன் பாம்புக்கொடியை யுடையவன். தனது கொடுமைக்கு அறிகுறியாகத் துரியோதனன் பாம்பைத் தனது கொடியிற் கொண்டனன். அது-நன்றியறிவின்மை, எப்பொழுதும் வக்கிரகதியிற் செல்லுந் தன்மை, நாவிரண்டுடைமை என்பவற் றிற்கும் அறிகுறியாகின்றது. பின்றைநாள் வீமனை ஈன்றாள் என்ற தாலே-துரியோதனனுக்குப் பின் வீமன் தோன்றினன் என்க. [எனவே, தரும புத்திரனுக்குப் பின்னும் வீமசேனனுக்கு முன்னும் தோன்றியவன் துரியோதனன்.] பின்னிரண்டடிகளால், துரியோதனன் தம்பிமார்களெல்லாம் வீமசேனனுக்குப் பின் பிறந்தவராவர் என்பதை அறியலாம். துரியோதனன் பிறந்த நாளுக்கு அடுத்த நாள் வீமசேனனுக்குப்பின் துச்சாதனன், அடுத்தநாள் மற்றொருவன் என இவ்வாறாகத் துரியோதனன் தம்பிமார் தொண்ணூற்றொன்பதின்மரும் தோன்றினர் என்க. துச்சளை பிறந்ததற்குக் காரணம்-காந்தாரி தனக்குப் பெண் உண்டாகவேண்டும் என்று நினைத்தாள். அதற்கேற்பவே வியாசர் "நூற்றுக்கு மேல் மிஞ்சியிருக்கிற இந்த ஒரு பாகம் நீ விரும்பின படி பாக்கியசாலியான பெண்ணைப் பிறக்கப்போகிறது" என்று சொல்லி ஆசீர்வதித்தார். இதுதான் துச்சளையின் ஜனனம். (45)

46. பங்குனியுத்தரத்தில் அருச்சுனன் பிறத்தல்.

திங்கணன் னுதலாள் பாண்டு செம்மல்தன் ஏவல் கொண்டு
புங்கவன் மறையை யுள்ளிப் புரந்தரன் றன்னைக் கூடி
மங்கல நிமித்தம் வாய்ப்ப வானவர் முனிவர் வாழ்த்தப்
பங்குனி யுத்தரத்திற் பற்குனன் றன்னை யின்றாள்.

(இ-ள்.) திங்கள் நன் நுதலாள்–சந்திரன் போன்ற அழகிய

நெற்றியையுடைய குந்திதேவி, பாண்டு செம்மல் தன்-பாண்டு மன்னவனுடைய, ஏவல் கொண்டு-கட்டளையை மேற்கொண்டு, புங்கவன் மறையை உள்ளி-துருவாச முனிவன் உபதேசித்த மந்திரத்தை நினைத்து [அதன்படி வந்து நின்ற], புரந்தரன் தன்னை கூடி-இந்திரனோடு சேர்ந்து, மங்கல நிமித்தம் வாய்ப்ப-மங்களகரமான நற்குறிகள் தோன்ற, வானவர் முனிவர் வாழ்த்த-தேவர்களும் முனிவர்களும் ஆசீர்வதிக்கவும், பங்குனி உத்தரத்தில்-பங்குனியுத்தர நாளில், பற்குனன் தன்னை-அருச்சுனனை, ஈன்றாள்-பெற்றெடுத்தாள்; (எ-று).

பங்குனியுத்தரத்திற் பிறந்ததனால், பிறந்த அக்குமாரனுக்குப் பல்குநன் என்று பேராயிற்று. பல்குநன் என்ற இச் சொல் பற்குனன் என்று திரிந்துவரும். (46)

47. பாண்டுவின் கட்டளைப்படி குந்தி மாத்திரிக்கு அந்த மந்திரத்தை யுபதேசிக்க, அவள் நினைத்தபடி அசுவினி தேவர்கள் வந்து அருள் செய்ய, இரண்டு புத்திரர் மாத்திரிக்கு ஒருசேரப் பிறத்தல்.

பத்தியி னிவட்கிங் கன்பன் பகரெனக் கவுந்தி யோதும்
உத்தம மறையான் மைந்த ருபையர்வந் திடுமா றுள்ளி
மித்திரன் பயந்த வாயுள் வேதியர் தம்மைக் கூடி
மத்திரை நகுல சாதே வரைப்பயந் தெடுத்தாள் மன்னோ.

(இ-ள்). அன்பன்-பாண்டுவாகிய கணவன், (குந்தியை நோக்கி) இங்கு-இப்போது, இவட்கு-இந்த மாத்திரிக்கு, பத்தியின்-சிரத்தையோடு, பகர் என-(அந்த மந்திரத்தை) உபதேசிப்பாய் என்று கட்டளையிட, [அதன்படியே], கவுந்தி ஓதும் உத்தம மறையால்-குந்தி உபதேசித்த சிறந்த மந்திரத்தால், மத்திரை-மாத்திரி, மைந்தர் உபையர் வந்திடுமாறு-குமாரர்கள் இருவர் வந்து பிறக்குமாறு, மித்திரன் பயந்த ஆயுள் வேதியர் தம்மை உள்ளி-சூரியன் பெற்ற தேவ வைத்தியர்களாகிய அசுவினி தேவதைகளிரண்டு பேரையும் நினைத்து, (அவர்கள் இருவரும் வந்து நிற்ப), கூடி-அவர்களைக்கூடி, நகுல சாதேவரை-நகுல சகதேவர்களை, பயந்தெடுத்தாள்-பெற்றெடுத்தாள்; (எ-று). மன், ஓ-ஈற்றசை.

ஓதும்-பெயரெச்சம். உபையர்-வடசொல். மித்திரன்-சூரியன். அசுவினி தேவர்கள் இருவரும் சூரிய குமாரர்கள். இவர்கள் தேவ

வைத்தியர். மத்திரை-மத்திர ராசன் மகள்: மாத்திரி. நகுல சாதேவர்-நகுலன், சகதேவன் என்ற இருவர். (47)

48. அக் குமாரர்கள் பெற்றோர் மகிழ வளர்ந்து பூணூல் பூண்டு வித்தைகள் பயின்று விளங்குதல்.

அத்தனு மன்னை மாரு மளவிலா வுவகை பூப்பச்
சித்தசற் கிளையோற் கொவ்வுஞ் செவ்வியுந் திறனும் வாய்ப்பப்
புத்திரர் வளர்ந்து மூந்நூற் புனைந்தபின் கலியோ டேதி
உத்தமரிடத்தோர்ந் தியாரு மொப்பில்வாழ்ந் துறையுநாளில்.

(இ-ள்). அத்தனும்-தந்தையாகிய பாண்டுவும், அன்னைமாரும்-தாய்மாராகிய குந்தியும் மாத்திரியும், அளவிலா உவகை பூப்ப-அளவில்லாத மகிழ்ச்சியடைய, புத்திரர்-குமாரர்கள் ஐவரும், சித்தசற்கு ஒவ்வும் செவ்வியும்-மன்மதனுக்கு ஒப்பாகும் வனப்பும், இளையோற்கு ஒவ்வும் திறனும்-முருகனுக்கு ஒப்பாகும் வல்லமையும், வாய்ப்ப-முறையே பொருந்த, வளர்ந்து—, (பின்னர்) மூந்நூல் புனைந்தபின்-பூணூல் தரித்த பின்பு, கலியோடு-வேதம் முதலாகிய அறுபத்து நான்கு கலைகளோடு, ஏதி படைக்கலங்களைப் பற்றியும், உத்தமரிடத்து ஓர்ந்து-சிறந்த ஆசிரியர்களிடத்தே பயின்று அறிந்து, யாரும்-எவரும், ஒப்பு இல்-நிகரில்லாதபடி, வாழ்ந்து—, உறையும் நாளில்-வசித்துவரும் நாளில்; (எ-று)—,

'வேனிற் கோடை வந்திறுத்த தன்றே' என மேலைக்கவியோடு குளகமாய் இயையும்.

இரண்டாமடியில் முறைநிரனிறைப் பொருள்கோள். ஏதி-படைக்கலம், ஆயுதம். இங்கே ஆயுதப் பயிற்சியைக் காட்டும், மூந்நூல்-மூப்புரிநூல் என்றபடி. உத்தமரிடத்து ஓர்ந்தமை:— பாண்டவர்களுக்கு உபநயநம் முதலிய சம்ஸ்காரங்களைச் செய்து வைத்தவர்-வசுதேவர் அனுப்பின புரோகிதராகிய கசியப கோத்திரத்தைச் சேர்ந்த பிராமண ச்ரேஷ்டர். அவர்களுக்குத் தனுர் வித்தை முதலியவற்றைப் பயிற்றுவித்தவர் சுக்ர ராஜன் என்னும் சமர்த்தர். இவர் கடல் சூழ்ந்த பூமியை வில்லினால் ஜயித்தவர். சதச்ருங்க மென்னும் மலையில் தவஞ் செய்துகொண்டிருந்தார். அவருடைய பயிற்சியினாலும் அன்பினாலும் பாண்டவர்கள் வில் வித்தையில் சமர்த்தராயினர்கள். பீமசேனன் கதாயுதத்திலும், யுதிஷ்டிரர் ஈட்டிச் சண்டையிலும், நகுல சகதேவர்கள் கத்தி கேடகங்களிலும் சவ்யசாசியாகிய (இரண்டு கையாலும் அம்பு

விட வல்லவன்) அர்ச்சுனன் தனுர் வேதத்திலும் கரைகண்டவ ரானர்கள். அளவிலா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். சித்தசன்-மன்மதன்: மனத்தில் தோன்றுபவன் என்ற காரணம் பற்றியது. இளையோன்–இளைய குமாரனை முருகக்கடவுள்: மூத்த குமாரனகிய விநாயகனை விலக்குதற்கு 'இளையோன்' என்றார். (48)

49. இளவேனிற்காலம் [வசந்த காலம்] வருதல்: அதன் முடிவினை முதுவேனில் பார்த்திறுத்தல்.

காவெலாந் தளிர்கள் செய்யக் கருங்குயிற் றொனிகள் செய்யப்
பூவெலாம் வாசஞ் செய்யப் பொலிநிலா விரகஞ் செய்ய
மாவெலா மிசைகள் செய்ய மதனரர் ராட்சி செய்யக்
கூவெலா மழற்றும் வேனிற் கோடைவந் திறுத்த தன்றே.

(இ-ள்). கா எலாம் தளிர்கள் செய்ய-சோலைகளிலெல்லாம் செந்நிறத் தளிர்கள் தோன்ற, கருங் குயில் தொனிகள் செய்ய-கரிய குயில்கள் இனிய குரல்களை யெழுப்பிக் கூவ, பூ எலாம் வாசம் செய்ய-புஷ்பங்களெல்லாம் நறுமணம் பரப்ப, பொலி நிலா விரகம் செய்ய-விளங்குகின்ற நிலவு (பிரிந்த காதலர்க்கு) பிரிவுத் துன்பத் தை மிகுவிக்க, மா எலாம் இசைகள் செய்ய-வண்டுகளெல்லாம் இனிய ரீங்காரங்களைச் செய்ய, மதனரர்-மன்மதனர், ஆட்சி செய்ய-செங்கோலோச்ச, (இவ்வளவு சிறப்புக்களுடன் இள வேனிற் காலம் நிலவியது: அது கழியும் மெலிவு பார்த்து), கூ எலாம் அழற்றும் வேனில் கோடை-பூமி முற்றும் வெப்பஞ் செய்யும் முதுவேனில் கோடைகாலம், வந்து—(ஒருபுறம்) வந்து, இறுத்தது-தங்கலாயிற்று; (எ-று).

ஆட்சி செய்யும் அரசனது மெலிவு பார்த்து அவன் பகை யரசன் பாசறையில் ஒருபுறம் வந்து இறுத்தல் போல, இளவேனி லரசன் மெலிவு நோக்கி முதுவேனில் இறுத்தது என்க. கருங் குயில் என்பதில் கருமை என்பது போல, "கூவெலாம் அழற்றும்" என்றது வேனிற் கோடைக்கு இயற்கை யடைமொழி. கூ–பூமி. அழற்றும்-அழலச் செய்யும், "செய்ய" என்ற ஒரே சொல் ஒரே பொருளில் பலமுறை வந்தது-சொற்பொருட்பின்வருநிலையணி. மதனரர்-'அர்' சிறப்பு விகுதி. மா-வண்டு: மாவுடைத்தார் (புற. வெ. 6, 7, கொளு). (49)

50. வசந்தன் [மன்மதன்] ஆடல் தொடங்கல்.

பிரிவின ராகம் போழும் பெருங்கணை யாயும் இன்பம்
பருகின ரனந்தல் செய்யப் பாங்கணை யாய தென்றும்
உருவிலி கரத்தின் வைத்த வொண்மலர் கழையு மன்னோர்க்
கொருபெருங் கூற்று மாய்ச் சிற்றுண்டியு மாய தாலோ.

(இ-ள்). என்றும்-எக்காலத்தும், உருவிலி கரத்தில் வைத்த ஒண்மலர்-மன்மதன் தன் கையிற்கொண்டுள்ள ஒளி பொருந்திய மலர்கள், பிரிவினர் ஆகம் போழும்-பிரிந்து வருந்துகின்ற காதலர்க்குத் தமது மார்பினைப் பிளக்கும், பெருங் கணையாயும்-பெரிய அம்புகளாகவும்: இன்பம் பருகினர் அனந்தல் செய்ய-[பிரியாது தழுவி] இன்பம் அநுபவிக்கும் காதலர்க்கு நித்திரைச் சோர்வினை விளைவிக்க, பாங்கு அணை[யாயும்]-சொகுசான படுக்கையாகவும், ஆயது-ஆயின; (மற்றும்) கழையும்-(மன்மதனது) கரும்பு வில்லும், அன்னோர்க்கு-அந்தப் பிரிவினருக்கும் இன்பம் பருகினவர்க்கும் முறையே, ஒரு பெருங் கூற்றுமாய் சிற்றுண்டியு [மாய்]-பெரியதோர் கொடிய யமனுமாய், [அப்டம்போல்] பணியாரமுமாய், ஆயது-ஆகியது: ஆலோ-என்ன ஆச்சரியம்! (எ-று).

'பாங்கணையாயும் ஆயது, சிற்றுண்டியுமாய் ஆயது' எனக் கூட்டிப் பொருள் முடிவு செய்துகொள்க. எனவே, மன்மதன் கரத்து மலர்-பிரிவினர்க்குப் பெருங்கணையாயும் சேர்ந்தார்க்குப் பாங்கு அணையாயும் ஆயது; அங்ஙனமே கழை-பிரிவினர்க்குக் கூற்றும், சேர்ந்தார்க்குச் சிற்றுண்டியாயும் ஆயது. சிற்றுண்டி-பலகாரவகை, பொறிக்கறிபோல்வன. ஆலோ-அதிசயங் குறிக்க வந்த குறிப்பிடைச்சொல். கழையும்-உம்மை, இறந்தது தழீஇயது. மலர் ஆயது, கழை ஆயது என வினைமுடிபு காண்க. (50)

51. வசந்தன் ஆடலால் மாத்திரியினிடத்துப் பாண்டு காதல் பூண்டு அவளைச்சேர்தல்.

தென்றறே ரேறி வேழச் சிலைகுழைத் தளிநா ணேற்றி
மன்றறேர் தொடைகள் சிந்தி வசந்தனு மலைத லாலே
பொன்றறேர்ந் திடாமற் பாண்டு பொற்பின்மத் திரைவேட் டின்ப
நன்றறே ரெனவன் னுளு நவிலலும் வலிதிற் சேர்ந்தான்.

(இ-ள்). தென்றல் தேர் ஏறி-தென்றலாகிய தேரின் மேல் ஏறிக்கொண்டு, வேழம் சிலை குழைத்து-கரும்பாகிய வில்லை

வளைத்து, அளிநாண் ஏற்றி-வண்டினமொய்ங்காகிய நாண் கயிற்றினைப் பூட்டி, மன்றல் தேர் தொடைகள் சிந்தி-வாசனை யோடு தெரிந்தெடுத்த மலரம்புகளைச் செலுத்தி, வசந்தனும்-மன்மதனும், மலைதலாலே-காமப்போர் விளைத்தலாலே, (அதனில் மயங்கி) பாண்டு-பாண்டு மன்னவன், பொன்றல் தேர்ந்திடாமல்-கிந்தம முனிவன் சாபத்தால் (தான்) இறந்துபோதலையும் மறந்து, பொற்பின் மத்திரை வேட்டு-அழகினிற் சிறந்த மாத்திரியை விரும்பி, (அவளை நோக்கி) இன்பம் நன்றல் தேர் என–காம இன்பம் துய்த்தல் நன்றுதலை நீ தேர்வாய் என்று கூற, அன்னவளும்-அந்த மாத்திரியும், நவிலலும்-(சாபம் நினைத்து உடன்படாமை) சொல்லுதலும், (பாண்டு) வலிதின் சேர்ந்தான்-வலாற்காரமாகக் கூடினன்; (எ-று).

மன்மதனுக்குத் தென்றல்–தேர்; கரும்பு-சிலை [வில்]; சுரும்பு [வண்டு]-நாண்; அரும்பு [மலர் மொட்டுக்கள்]-அஸ்திரம். இவை களைக் கொண்டு மகளிரைப் படையாகச் செலுத்திக் காமப் போரிடுவன் என்பது மரபு. மன்மதனது மலரம்புகள் ஐந்து: எனவே ஐங்கணைக் கிழவன் என்றும் பஞ்சபாணன் என்றும் வழங்கப்படுவன். பஞ்சபாணம்-தாமரை மலர், அசோக மலர், மா மலர், முல்லை மலர், நீலோற்பலமலர் என்பன. அவ் அம்புகளை மறைந்து நின்று மனத்திலெய்து மலைவன். நன்றல்-நன்றுதல்: தொழிற்பெயர். (51)

52. பாண்டு சாபத்தின்படி காமவின்பத்தாலிறக்க, மனைவியரும் புத்திரரோடு அரற்றுதல்.

ஓவிய மனையா ளின்ப முண்ணும்போ தண்ணல் வான
மேவிய துணரா ளோக வேடையென் றெண்ணி மீட்டும்
ஆவிகாண் கிலளாய் மேல்வீழ்ந் தரற்றல்கேட் டேங்கிக் குந்தி
தேவியுஞ் சுதரோ டுற்றச் செயலுணர்ந் தரற்றி னாளால்.

(இ-ள்). இன்பம் உண்ணும்போது-கலவியின்பம் அநுபவிக் கும் போது, ஓவியம் அனையாள்-சித்திரப் பதுமை போன்ற மாத்திரி, [அவசையாகி], அண்ணல் வானம் மேவியது உணராள்-பாண்டு[உயிரொடுங்கிச்] சுவர்க்கம் சென்றதை அறியாள்:போகம் வேடை என்று எண்ணி-இன்பமநுபவித்ததாலேற்பட்ட வெதுப்புச் சோர்வு என்று நினைத்து, மீட்டும்-மறுபடியும், ஆவி காண்கிலளாய்-உயிர் போனதை யுணர்ந்து, மேல் வீழ்ந்து

அரற்றல் கேட்டு-பாண்டுவின் உடலின்மேல் விழுந்து கதறுகின்ற குரலைக்கேட்டு, குந்தி தேவியும்—, ஏங்கி-வருத்தமுற்று, சுதரோடு உற்று-புத்திரர்களோடு வந்து, அ செயல் உணர்ந்து-கணவன் இறந்து போனதை யறிந்து, அரற்றினள்-கதறிப் புலம்பினள்; (எ-று). ஆல்-ஈற்றசை.

ஓவியம் அனையாள் என்றதால் அழகோடு அவசையாயின மையும் புலப்படும். (52)

வேறு

53. புதல்வரைக்கொண்டு முனிவர் அந்திமக்கடனை நடத்த, மாத்திரி சிதையனலிற் குளிக்க, ஈமக் கடன்கள் முடிந்த பின் அம்முனிவர்கள் குந்தியை மக்களோடு அஸ்தினபுரியிற் சேர்க்க, திருதராஷ்டிரன் வணங்கிய புத்திரரைத் தழுவி யாதரித்துத் தன்புத்திரரோடும் ஒருசேர வளர்த்துவருதல்.

ஆண்டுறையு முனிவர்புகுந் திரங்கி வேந்துக்
கரற்றிடுமா தரைச்சுதரை யாற்றித் தேற்றிப்
பாண்டுவினே டழற்புகுமத் திரைக்கு நூலின்
படிகடன்செய் தவர்நகர்பாற் படுத்த வாங்கு
மாண்டகனிட் டனுக்கனுசன் றுதை யாதி
மன்னவரோ டரசிரங்கி வந்து தன்காற்
பூண்டிரங்கு மைவரையா தரித்தான் பெற்ற
புதல்வர்கணூற் றுவரொடுமண் புகழ வம்மா.

(இ-ள்). ஆண்டு-அந்த சதசிருங்கபர்வதத்தில், உறையும்-வசிக்கின்ற, முனிவர்-முனிவர்கள், புகுந்து-வந்து, இரங்கி-இரக்கமுற்று, வேந்துக்கு-இறந்த பாண்டு மன்னனின் பொருட்டு, அரற்றிடும்-கதறிப் புலம்புகின்ற, மாதரை சுதரை-மனைவியரையும் புதல்வர்களையும், ஆற்றித் தேற்றி-ஆறுதல் கூறித் தெளிவித்து, பாண்டுவினேடு-இறந்த பாண்டுவோடு, அழல் புகும் மத்திரைக்கு-ஈம எரியிற் புகுந்த மாத்திரிக்குஞ்சேர, நூலின்படி-சாத்திர முறைப்படி, கடன்செய்து-ஈமக் கடன்களைச் செய்வித்து, (பின்னர்) அவர் நகர்பால் படுத்த-அவர்களது அஸ்தினபுரியில் அவர்களைச் சேர்ப்பிக்க, ஆண்டு-அந்த அத்தினபுரியில், அரசு-திருதராஷ்டிரன், மாண்ட கனிட்டனுக்கு அனுசன்-இறந்த தம்பிக்குத் தம்பியாகிய விதுரன், தாதை-வீடுமன், ஆதி-ஆகிய,

மன்னவரோடு-அரசர்களோடு, இரங்கி-இரக்கமுற்று வந்து, தன் கால் பூண்டு இரங்கும் ஐவரை-தன் பாதத்தில் வீழ்ந்து தலையால் வணங்கும் பாண்டு புத்திரர் ஐவரையும், பெற்ற புதல்வர்கள் நூற்றுவரோடு-தான் பெற்ற பிள்ளைகளாகிய (கௌரவர்) நூறு பேரோடு, (ஒருசேர ஓரிடத்தில்), மண் புகழ்-பூமியிலுள்ளார் பாராட்டும்படி, ஆதரித்தான்-(அன்பினோடு தழுவிப்) பாதுகாத்து வளர்த்தான்; (எ-று). அம்மா-ஈற்றசை: வியப்பிடைச் சொல் என்னவுமாம்.

மாத்திரி தன் புதல்வரிருவரையும் காக்குமாறும், தான் அனலிற் குளிக்குமாறும் குந்திதேவியிடம் அனுமதிவேண்டிப் பெற்று, புதல்வரைத் தழுவி உச்சிமோந்து அந்தக் குந்தியின் கையில் ஒப்பித்து மகிழ்வோடு தீப்பாய்ந்தனள் என்று பால பாரதம் கூறும். வியாச பாரதத்தின்படி, பாண்டுவின் தகன ஸம்ஸ்காரமே சதசிருங்க பர்வதத்தில் நடந்ததாக, மற்றை உத்தரக் கிரியைகள் [அஸ்தினபுரத்திலே திருதராஷ்டிரன் முதலியோராற் செய்விக்கப்பட்டனவென்று தெரியவரும். மற்றும், குந்தியோடு பாண்டவர் அத்தினபுரியைச் சேர்ந்தபோது தரும புத்திரனுக்கு வயசு பதினாறு, வீமனுக்கு பதினைந்து, அருச்சுனனுக்குப் பதினொன்று, இரட்டையரான நகுல சகதேவர்க்குப் பதின்மூன்று என்றும் அந்நூலால் தெரியவரும். சூதர், கனிட்டன், அனுசன்—வட சொற்கள்.

இது முதல் இச்சருக்க முடியுமளவும் மூன்று கவிகளும் அடுத்த சருக்கத்து முதல் பதினெட்டுக் கவிகளும்—பெரும்பாலும் ஒன்று, இரண்டு- ஐந்து ஆறுஞ்சீர்கள் காய்ச்சீர்களும் சிறுபான்மை கனிச்சீர்களும் கொண்டு, மூன்று, நான்கு, ஏழு, எட்டாஞ்சீர்கள் மாச்சீர்களாகவே வந்த எண்சீராசிரியவிருத்தம்.(53)

54. கிருஷ்ணன் வசுதேவர் முதலியோரோடு அத்தினபுரிக்கு வந்து, குந்தியையும் பாண்டவரையும் தேற்றி, வீடுமன் முதலியோர் செய்த உபசாரத்தை யேற்று முகமன் கூறித் தன் நகர் மீளுதல்.

தந்தையொடு மன்னையொடுந் தமைய னோடுந்
தகுங்குந்தி போசரொடு தந்தி மூதூர்
வந்துபிதா வுடனுதித்தான் தன்னை யாற்றி
மைத்துனரை வரைத்தேற்றி மாயோன் கங்கை

நந்தனனந் தகன்விதுரன் முதலோர் தம்மை
நயந்துதநீஇ யுபசரிக்கு நலம்பெற் றுங்கள்
உந்தருள்பெற் றிடுமைவர்க் கெய்தி லேத
மும்முதென வின்சொல்பல வுரைத்து மீண்டான்.

(இ-ள்.) மாயோன்-ஸ்ரீ கிருஷ்ணன், தந்தையொடும்-பிதாவாகிய வசுதேவரொடும், அன்னையொடும்-தாயாகிய தேவகியோடும், தமையனெடும்-அண்ணனாகிய பலராமனெடும், தகும் குந்திபோசரொடும்-தகுதிபடைத்த குந்திபோசன் அவன் குலத்துளார் இவர்களோடும். தந்திமூதூர் வந்து-அத்தினபுரிக்கு வந்து, பிதாவுடன் உதித்தாள் தன்னை–தன் தந்தையாகிய வசுதேவரோடு தங்கையாகப் பிறந்த குந்திதேவியை, ஆற்றி-ஆறுதலடையும்படி தேற்றி, மைத்துனர் ஐவரை தேற்றி-(தன்) மைத்துனர் முறையினரான பாண்டவரைவரையும் தேற்றித் தெளிவித்து, (பின்)-கங்கை நந்தனன் அந்தகன் விதுரன் முதலோர் தம்மை-வீடுமன் திருதராஷ்டிரன் விதுரன் முதலியோரை, நயந்து தநீஇ-விரும்பி அன்போடு தழுவி, (அவர்களால்) உபசரிக்கும் நலம்பெற்று-விருந்தினர்க்குச் செய்யும் உபசாரங்களைப் பெற்று, (விடை கொள்ளும்போது), 'உங்கள் உந்து அருள் பெற்றிடும் ஐவர்க்கு-உங்களுடைய பொங்கும் கருணையைப் பெற்று வாழும் பாண்டவர் ஐவர்க்கு, ஏதம் எய்தில்–கேடு உண்டாகுமாஅல், உம்முது'-அது உங்களைச் சேர்ந்தது: [நீங்களே பொறுப்பாவீர் : ஆகவே நன்கு பாதுகாப்பீர்], என-என்று கூறி, இன்சொல் பல உரைத்து-இனிய பல முகமனுரைகள் சொல்லி, மீண்டான்-தன் னூருக்குத் திரும்பினன்; (எ-று.)

அந்திமக் கடன்களைச் செய்துமுடித்திட்டுக் காட்டிலிருந்து நாட்டில் இப்போதுதான் வந்து சேர்ந்தனராதலால், உறவின் முறையினரான வசுதேவன் முதலியோர் அவர்களைக் காணுமாறு வந்தனரென்க. சூரன் வசுதேவற்குத் தந்தை, [பிரதைக்கு] குந்திக்குத் தந்தை: எனவே கிருஷ்ணனுக்கு அத்தை முறையினள் குந்தி. அத்தை மைந்தரை மைத்துனர் என்றும் வழங்குவர். தந்தியானை: தந்தத்தையுடையது. தந்தி மூதூர்-அத்தினபுரி. (அத்தியானை). உம்முது- 'உமது' என்ற சொல் 'உம்மது' என மகரம் இரட்டித்துப் பின் 'உம்முது' எனத் திரிந்து வந்தது.

மாயோன் வந்து, ஆற்றி, தேற்றி, தழீஇ, பெற்று, உரைத்து, மீண்டான் என வினையெச்ச முடிபு காண்க. மீண்டது துவார கைக்கு. அஃது அடுத்த பாடலால் விளங்கும். (54)

55. பாண்டவரும் கௌரவரும் சிறுவராய் விளையாடுகையில், வீமன் வலிக்கு அஞ்சிக் கௌரவர் வாட்டமுறல்.

அணிதுவரை யாதவர்கள் புகுந்தார் வேந்தன்
அளித்தருணூற் றுவருடனே யைவர் கூடி
மணிமறுகில் விளையாடி வளர்ந்காள் வீமன்
வலிக்கஞ்சிக் கவுரவரு வணலல் வாடும்
பணிநிகர்த்தா ரெனச்சென்மே செயன்கேட் டாவார்
பகைத்ததுவும் முன்பின்னுய்ப் பவஞ்செய் வாறும்
துணிதரவெற் குரைத்தருள வேண்டு மென்னத்
தோழவைசம் பாயமுனி சொல்வ தானன்.

(இ-ள்). யாதவர்கள்-[க்ருஷ்ணன், வசுதேவன், பலராமன் முதலியவர் உள்ளிட்ட] யதுகுலத்தினர், அணி துவரை-அழகிய (தமது நகராகிய) துவாரகை, புகுந்தார்-போய்ச் சேர்ந்தார்கள்: வேந்தன்-திருதராட்டிரன், அளித்தருள்-பெற்றெடுத்த, நூற்றுவ ருடனே-துரியோதனுதியர் முதலிய நூறு பிள்ளைகளுடனே, ஐவர் கூடி-பாண்டு புத்திரர் ஐவரும் கூடி, மணி மறுகில் விளையாடி வளர்ந்தனர்-அழகிய தெருவிலே (ஒருசேர] விளையாடி வளர்ந்து வருகின்ற காலத்தில், வீமன் வலிக்கு அஞ்சி-வீமசேனனின் வலிமைக்குப் பயந்து, கவுரவரும்-கௌரவர்களாகிய துரியோத னுதியர் நூற்றுவரும், உவணலல் வாடும் பணி நிகர்த்தார் என-கருடனுல் வாட்டமுறுகின்ற பாம்புகள் போல ஒடுங்கினர் என்று சொல்ல, சென்மேசெயன் கேட்டு-ஜனமேஜயன் செவியுற்று, ஆவார் பகைத்ததுவும்-(முன்னர்) நண்பராயிருந்தவர் பகைமை கொண்டதும், முன்பின்னுய் பவம் செய்வு ஆறும்-அண்ணன் தம்பி முறையாய் [ஒருவர் பின் ஒருவர்] பிறந்த வகையும், துணிதர-தெளிந்து தெரியும்படி, எற்கு-எனக்கு, உரைத்தருள வேண்டும்-சொல்லியருளவேண்டும், என-என்று பிரார்த்திக்க, தோழன்-அன்பனுகிய, வைசம்பாய முனி—, சொல்வதானன்-சொல்ல லுற்றன்; (எ-று).

உவமையால், வீமனுக்கும் துரியோதனுதியர்க்கும் பகைமை தோன்றியமையும், துரியோதனுதியர் வீமனை வெல்லும் ஆற்றலிலர் என்பதும் பெறப்படும். கருடன் நாகங்களை யுண்ணுமாறு தேவேந்திரனிடம் வரம் பெற்றதை நினைக. பவம்-பிறப்பு. செய்வு-தொழிற்பெயர்; 'வு' விகுதி பெற்றது. முன் பின்னுய்ப் பவம் செய்தல்-ஜ்யேஷ்ட கனிஷ்ட முறையிற் பிறத்தல். முன், பின்-காலவாகுபெயர். துணிதர-தெளிவுபெற; தா-துணைவினை. தோழன்+வைசம்பாயன முனி-தோழ வைசம்பாயன முனி: "சில விகார மாமுயர்திணை" என்பது விதி. (நன்னூல்: உயிரீற்று: 9); வைசம்பாயன முனி-இருபெயரொட்டுப் பண்புத்தொகை, (55)

சம்பவச் சருக்கம் முற்றிற்று.

பதின்மூன்றுவது

வாரணவதச் சருக்கம்

வாரணவதம் என்ற ஊரில் நடந்த செய்தியைக் கூறுகின்ற சருக்கமென்று பொருள். இச் சருக்கத்தின் முதல் முப்பத்தெட்டுப் பாடல்கள் வரையில் பாண்டவ துரியோதனாதியர்களது இளம் பருவத்து நிகழ்ச்சிகளும், யுதிட்டிரனை இளவரசனாக்கியமையும் எடுத்துக்கூறி, அதன்பின் துரியோதனாதியர் பாண்டவரை வாரணவத நகரத்துக்குச் செலுத்தத் திட்டமிட்டு, அங்ஙனமே செலுத்தின செய்தியையும் கூறுகின்றார். அதனால், இப்பெயர் தகுமைபற்றி வந்ததென்க. [வாரணவதம்-காசி யென்ப].

1. முன்பின்னுய்ப் பவஞ்செய்த ஆறு கூறல்.

தருமனுக்காண் டிகூயோன்கட் செவிகே தனக்கோன்
றனக்கொருநா ளிகூயோன் மாருதியன் னேனுக்
கொருபதோ டெண்பான்றி னம்பின் காமபால
னுவன்றனக்கை யாயுதன்மும் மதிபின் னேனவ்
வரியினுக்கோ ரயனம்பின் னரன்மற் கோனுக்
காண்டுபின்மத் திரைபுதல்வர் சுயோத னற்கோ
ரொருதினம்பின் னவன்பின்வந் தவர்கள் கன்னற்
குதிட்டிரன்பின் பதினைந்தாண் டுணர்தி மன்னே.

(இ-ள்). தருமனுக்கு—, ஆண்டு இகூயோன்-ஒரு வருடங் கழித்துப் பின் பிறந்தவன், கட்செவி கேதனன்-பாம்புக் கொடியையுடைய துரியோதனன்; கோன் தனக்கு-அந்தத் துரியோதன ராசனுக்கு, ஒரு நாள் இகூயோன் மாருதி-ஒரு நாள் கழித்துப் பிறந்தவன் வீமசேனன்: அன்னேனுக்கு-அந்த வீமனுக்கு, ஒருபதோடு எண்பான் தினம் பின்-பதினெட்டு நாட்கள் கழித்துப் பிறந்தவன், காமபாலன்-பலராமன்; உவன் தனக்கு-அந்தப் பலராமனுக்கு, ஐ ஆயுதன்-பஞ்சாயுதங்களையுடைய கிருஷ்ணன், மும்மதி பின்னேன்-மூன்று மாதங்கள் இகூயவன்; அ அரியினுக்கு-அந்தக் கிருஷ்ணனுக்கு, ஓர் அயனம் பின் நரன்-ஆறு மாதம் பின் பிறந்தவன் அருச்சுனன்: கோனுக்கு-தகுமையிற் சிறந்த அந்த அருச்சுனனுக்கு, ஆண்டு பின்-ஒரு வருடங் கழித்துப் பின் பிறந்தவர், மத்திரை புதல்வர்-நகுல சகதேவர்: (இஃது இப்படியாக) சுயோதனற்கு-துரியோதனனுக்கு, பின் வந்தவர்கள் - பின்பிறந்தவர்களாகிய துச்சாதனன் முதலிய

தொண்ணூற்றொன்பதின்மரும், ஒரொரு தினம் பின்னவன்-ஒவ்வொருநாளில் அடுத்தடுத்துப் பிறந்தவன்: கன்னற்கு-கர்ணனுக்கு, யுதிட்டிரன்-தருமபுத்திரன், பதினைந்தாண்டு பின்-பதினைந்தாண்டுகள் பின்னல்பிறந்தவன்: (இந்த விவரத்தை) உணர்தி-தெரிந்து கொள்வாயாக; (எ-று). மன், ஓ-ஈற்றசை.

'உணர்தி' என்று வைசம்பாயனர் ஜனமேஜயனுக்குச் சொன்னர். இந்தச் செய்யுளின்படி நோக்கின் தெரியவருவன:—துரியோதனன் தருமபுத்திரருக்கு ஒராண்டு இளையவன்: துரியோதனன் வீமனை விட ஒரு நாள் பெரியவன்: வீமனுக்கும் அவன் தம்பியாகிய அருச்சுனனுக்கும் வித்தியாசம் 9 மாதம் 18 நாள்: நகுல சகதேவர் இரட்டையர்: அவர்கள் அருச்சுனனுக்கு ஒரு ஆண்டு இளையவர். வீமனுக்குப் பதினெட்டு நாள் சின்னவன்-பலராமன்: கிருஷ்ணன் பலராமனுக்கு மூன்று மாதம் சின்னவன். எனவே வீமனுக்கு-3 மாதம் 18 நாள் சின்னவன் கிருஷ்ணன்: துரியோதனனுக்கு-3 மாதம் 19 நாள் சின்னவன் கிருஷ்ணன்: தருமனுக்குக் கிருஷ்ணன்-1 வருடம் 3 மாதம் 19 நாள் சின்னவன். இனி துரியோதனன் தம்பியர் 99 பேரும் நாள்கள் அடுத்தடுத்துப் பிறந்துள்ளமையால், மொத்தம் அவர்கள் பிறப்பு 3 மாதம் 9 நாள் வரை (99 நாட்கள்) நிகழ்ந்திருத்தல் வேண்டும். அதாவது, துரியோதனனுக்கும் அவனுடைய இறுதி தம்பியாகிய துஷ்பராஜயனுக்கும் வித்தியாசம் 3 மாதம் 9 நாள். அங்ஙனையின், துரியோதனன் தம்பியர் அனைவரும் கிருஷ்ணனுக்கு மூத்தவர் ஆவர் என்பது உணரவேண்டுவது.

கேதனம்-கொடி. மாருதி-வீமன்: மாருதம்-காற்று: வாயு காற்றின் மைந்தன் வீமன். தத்திதாந்தநாமம். காமபாலன். பலராமன்; இவனை நம்பி மூத்தபிரான் என்பது வழக்கு-ஐயாயுதன்-சங்கு, சக்கரம், வில், கதை, வாள் என்ற பஞ்ச (ஐந்து) ஆயுதங்களையுடையவன் திருமால். கிருஷ்ணன் திருமாலின் ஒன்பதாவது அவதாரமாவன்: 'அரி' என்றதும் திருமாலையே. அயனம்-வருடத்தில் பாதி: ஆறு மாதம். நரன்-அருச்சுனனுக்கு இப்பெயர் வந்தது: வந்த வகை:—முன்னொரு காலத்தில் குரு சிஷ்ய கிரமத்தை உலகத்தில் அனைவர்க்கும் விளக்கும்பொருட்டு நரனென்னும் சிஷ்யனும் நாராயணனென்னும் குருவுமாகப் பதரிகாச்சிரமத்தில் திருமால் தோன்றிச் சிஷ்யனுக்குக் குரு தத்துவப் பொருள்களை உபதேசிப்பதாக வீற்றிருக்கின்றனர்: "நரநாரணனுலகத்தறநூல், சிங்காமை விரித்தவனெம் பெருமான்" என்பது பெரிய திருமொழி. அவர்கள் தாமே இங்கு முறையே அருச்சுனனுங் கண்ணனுமாக அவதரித்தவர். இது

பற்றியே அருச்சுனனுக்கு, நரனென்று ஒரு பெயர். வில்லிபுத் தூரரும்" நன்னிலா வெறிக்கும் பூணாய் நரனு நாரணனுமானோம்", என்று கிருஷ்ணன் வாக்கின் மூலம் தெரியவைத்துள்ளார். (வீட்டுமர் முதற்போர் : 6) இச் செய்யுளில் வந்துள்ள நான்கனுருபு பெரும் பாலும் முறைக்கு இயைபொருளாக வந்துளது. (1)

2. பாண்டவரும் துரியோதனாதியரும் கங்கையில் நீர் விளை யாட்டு நிகழ்த்தி உண்டாட்டு செய்து துயிலும்போது, தூங்குகிற வீமனைத் துரியோதனாதியர் கொடிகளாற் கட்டிக் கங்கையில் எறிதல்.

இருவருக்கப் புதல்வர்களு மொருநாட் கூடி
யெய்திபகி ரதிநதிநீ ரிசைவுற் றாடிக்
கரையடைந்தாங் குறுமாடத் தமுதுண் டியாருங்
கண்டுயிலு மிரவில்வருங் கரும மோரா
வுரகமுயர்த் தவனுற்றற் பெறுவான்முன்னண்
புறுங்கன்னன் சவுபலன்பின்னோர்க ளோடும்
விரகெண்ணி மாருதிதிண் புயமுங் காலும்
வீக்கிவடத் தந்நதியுள் வீழ்த்தி னனால்.

(இ-ள்). இருவருக்கம் புதல்வர்களும்-இருவகுப்பினராகிய புத்திரர்களும் [பாண்டு புத்திரர்களும், திருதராட்டிரன் புத்திரர் களும்], ஒரு நாள் கூடி—, பகீரதிநதி எய்தி-கங்கையாற்றினை யடைந்து, இசைவுற்று நீர் ஆடி-மனம் பொருந்தி நீர் விளையாட்டு நிகழ்த்தித் துளைந்தாடி, கரை அடைந்து-கரையேறி, ஆங்கு-அவ்விடத்து, உறு-பொருந்தக் கட்டப்பட்டுள்ள, மாடத்து-மாளிகையிலே, அமுது உண்டு-இனிய உணவை நுகர்ந்து, யாரும்-அனைவரும், கண் துயிலும் இரவில்-தூங்கும் இராத்திரி (நடுநிசி) யில், உரகமுயர்த்தவன்-துரியோதனன், வரும் கருமம் ஓரா-செய்யவேண்டிய காரியத்தைச் சிந்தை செய்து, முன்-முன்னு லேயே, ஆற்றல் பெறுவான் நண்புறும் கன்னன்-தனக்குப் பக்க பலம் மிகுதற்பொருட்டுச் சிநேகஞ்செய்துகொண்ட [பல பராக் கிரமங்களிற் சிறந்த] கர்ணன், சவுபலன்-(மாமனாகிய) சகுனி, பின்னோர்களோடும்-தம்பிமார்கள் இவர்களோடும், விரகு எண்ணி-[வீமனை வீழ்த்தும்] உபாயத்தைச் சூழ்ந்து, மாருதி திண் புயமும் காலும்-வீமனது வலிமை படைத்த தோள்களையும் கால்களையும் (ஒரு சேர இறுகும்படி), வடத்து வீக்கி-கயிற்றினால் கட்டி, அநதியுள்-அந்தக் கங்காநதியில், வீழ்த்தினன்-நடுவில் போகட்டான்; (எ-று). ஆல்-ஈற்றசை.

ஓரா-ஓர்ந்து: செய்யா என்னும் வாய்பாட்டு உடன்பாட்டெச்சம். இனி, "ஓராது" என்று பாடங்கொள்ளின் அஞ்ஞான்று வருங்கருமம் ஓராது'-வரப்போகின்ற பயனை ஆராய்ந்து பாராமல் என்று பொருள்கொள்ள வேண்டிவரும். ஆற்றல் பெறுவான் முன் நண்புறுங் கன்னன்-வீமனுடைய வலிமைக்கு ஆற்றாத துரியோதனன், தனக்குப் பக்கபலம் மிகுதற் பொருட்டுப் பல பராக்கிரமங்களிற் சிறந்த கர்ணனை வரவழைத்துத் தனக்கு ஏற்ற துணைவனுக்கிக் கொண்டானென்பதாம். உண்டியாரும்-குற்றியலிகரம். (2)

3. வீமன் கட்டுவிடுவித்துக் கரையேற, பின்பு துரியோதனன் அவன்மேற் பாம்புகளைக் கடிக்கவிட, அவைகளை அழித்திட்டு வீமன் உயிர் பிழைக்கவே, துரியோதனன் அவனைக் கழுவில்விழுத்த, அவன் சூதறிந்து உய்தல்.

விழுந்துநிமிர் விசையில்பிணி துணிசெய் தேறி
விழிதுயிலு மாருதியை மீட்டுங் கொல்வான்
கழிந்தபுக ழினர்விடுமா சுணங்க ளெய்திக்
கடித்திடலும் பிசைந்தொலிக்குங் கருமஞ் சேர்த்தங்
கெழுந்துடனூர் புகுந்தொருநாள் வசிக ளூட்டி
யிகுத்திடப்பா தகர்ப்புரிவஞ் சனையோ ராதா
றிழிந்தவர்க ளுடலுடி வீம னச்சு
திசைவண்டா லுணர்ந்துகடந் தேறி மீண்டான்.

(இ-ள்). விழுந்து-நீரில் விழுந்து, நிமிர் விசையில்-[மூழ்காது தலை தூக்கி] மேல் எழுந்த வேகத்தில், பிணி-கட்டுக்களை, துணி செய்து-(தன் உடல் வலியால்) துண்டித்து, ஏறி-கரையேறி, விழிதுயிலும்-(மீண்டும்) தூங்குகின்ற, மாருதியை-வீமனை, மீட்டும்-மறுபடியும், கொல்வான்-கொல்லும் பொருட்டு, கழிந்த புகழினர் [புகழ் கழிந்தனர்]-புகழ் நீங்கினவராகி இழிவே பெற்ற துரியோதனாதியர் சகுனி முதலியோர், விடு மாசுணங்கள்-விட்ட கொடிய பாம்புகள், எய்திக் கடித்திடலும்-வீமனை நெருங்கிக் கடிக்கவும், (அவன்) பிசைந்து-(அவை துடித்தழியும்படி) கைகளால் பிசைந்துகொண்டே, ஒலிக்கும் கருமம் சேர்த்து-(இடி போல) முழக்கஞ் செய்துகொண்டு, அங்கு-அவ்விடத்தினின்று, எழுந்து-(உயிர் பிழைத்து) எழுந்து, உடன்-வந்த துணைவர்களுடன் கூடி, ஊர் புகுந்து-அஸ்திநாபுரி சேர்ந்து, (இருப்ப), ஒரு நாள்—, பாதகர்-கொடிய துரியோதனன் முதலியோர், (கங்கை

யாற்றில்) வசிகள் நாட்டி-(கூரிய) கழுக்களை, [வெளித் தெரியாதபடி நீரினுள்ளே வரிசையாக] நாட்டி, இகுத்திட-அழித்துவிடும்படி புரி-செய்த, வஞ்சனை-சூழ்ச்சியினை, ஓராது-அறியாமல், வீமன்—, ஆறு இழிந்து-நதியில் இறங்கி, அவர்களுடன் ஆடி-அந்தப் பாதகரோடும் உடன் சேர்ந்து நீரில் குதித்து விளையாடி. அ சூது-அவர்கள் செய்த வஞ்சனையை, இசை வண்டால் உணர்ந்து-ஒலிக்கின்ற வண்டுகள் [மேல்] உட்கார்ந்திருந்ததாலே ஊகித்தறிந்து, கடந்து-அந்த இடத்தினைத் தாண்டித் தூரே குதித்து, ஏறி-கரையேறி, மீண்டான்.-(துன்பமின்றி அத்தினபுரிக்குத்) திரும்பினன்; (எ-று)

துரியோதனன் கங்கைத்துறையில் இரும்பினாலும், செம்மரத்தாலும் கூரிய கழுக்களை நீரின்மேல் தோன்றுதபடி உள்நாட்டச் செய்து வீமனை "நீரில் விளையாடலாம் வா" என்று வஞ்சனையாக அழைத்துப்போய் "இங்கிருந்து நீ நீரில் குதிக்கிறாயா பார்ப்போம்" என்ன, அப்பொழுது கண்ணன் கருவண்டினுருவங் கொண்டு கழுமுனைதோறும் உட்கார்ந்திருக்க, வீமன் அதனை நோக்கி, "இது என்ன நீரோட்டத்தில் வண்டுகள் உட்கார்ந்திருக்கின்றனவே" என்று உற்றுப்பார்க்கும்போது அவற்றின் கீழ் வசிகள் நாட்டியிருக்கக்கண்டு, தன் சங்கேதப்படி அவை நாட்டியிராத இடம்பார்த்துத் தாண்டிக்குதித்துக் கரையேறி மீண்டான் என்பது இங்குக் குறித்த வரலாறு. இந்தவிடத்து இவ்வரலாறு பாலபாரதத்திலாவது, மகாபாரதத்திலாவது காணப்படவில்லை. கழிந்த புகழினர்-வடமொழி நடை. "கறித்திடலும்" என்று பாடபேதம். வீமன் ஒலிசெய்தது-நாகங்கள் இடியொலிகேட்டு நடுங்குமாதலின். இசைவண்டு - ஒலிக்கும்வண்டு. வண்டுக்கு இசைத்தல் இயல்பு, இனி, இசை-புகழ் எனக் கொண்டு, வீமனைக் காப்பாற்றுதற்குக் காரணமாதலாலே புகழ்வண்டாயின எனினுமாம்; "கழிந்த புகழினராய் அப்பாதகர் இருப்ப, ஏறிய புகழின வாயின வண்டுகள்" என்பது நயம். (3)

4. பின்னொருநாள் துரியோதனன் வீமனுக்கு விஷமூட்டிக் கயிற்றாற்கட்டிக் கங்கையில் அமிழ்த்த பாதாளஞ்சென்ற வீமனை அங்குள்ள நாகங்கள் கடிக்க, அதனால் முந்தின

விஷம் நீங்க, வீமனுக்கு வாசுகி ஆதரவளிப்ப அவனிடத்து எட்டுநாள் தங்கியிருத்தல்.

உணத்தகும்பல் விதத்தினும்பின் ஞெருநா ணஞ்சிட்
டுணர்வுதுறந் துறங்குழிபாம் புயர்த்தோன் கங்கை
பிணித்துவடத் தமிழ்த்திடப்பா தலம்புக் கூதை
பெருந்தவத்தி லுதித்தவனப் பிலத்துள் வாழ்மா
சுணத்தொகுதி கடித்திடுமவ் விடத்தான் முன்னர்த்
துய்த்தவிடங் காலபிணி துணிசெய் தோதும்
பணித்தலீவா சுகிதழியா தரிப்ப வங்கெண்
பகல்கும்ப கன்னனிற்கண் படைசெய் தானுல்.

(இ-ள்) பின்ஞெருநாள்-மற்றொருநாள், உண தகும் பல்விதத் தினும்-உண்பதற்குத் தகுந்த பலவித உண்டிகளிலும், நஞ்சு இட்டு-விஷத்தைக் கலந்து கொடுக்க, (வீமனுண்டு) உணர்வு துறந்து உறங்கு உழி-அறிவு நீங்கி (மயங்கித்) தூங்கும்போது, பாம்பு உயர்த்தோன்-துரியோதனன், வடத்து பிணித்து-கயிற்றி னல் கட்டி, கங்கை அமிழ்த்திட-கங்கையாற்று நீரில் தள்ளி யமிழப்பண்ண, ஊதை பெருந் தவத்தில் உதித்தவன்-வாயுபுத்திர னாகிய அவ் வீமன், பாதலம் புக்கு-பாதாளம் சேர்ந்து, (அங்கு) அ பிலத்துள் வாழ் மாசுணம் தொகுதி-அந்தக் கீழறைகளில் வசிக்கின்ற பாம்புக் கூட்டங்கள், கடித்திடும் அ விடத்தால்-கடித் ததனால் ஏறிய அந்த விஷத்தினால், முன்னர் துய்த்த விடம் கால-முன்னால் உணவோடு உண்ட விஷம் வெளிக்கக்கி நீங்க, (அதனால்) பிணி துணி செய்து-(கயிற்றால் கட்டிய) கட்டுக்களைத் துணிபடச் செய்து, (பின்னர்) ஓதும் -சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, பணி தலீ வாசுகி-நாகராசனை வாசுகி, தழி-தழுவி, ஆதரிப்ப-பாது காக்க, அங்கு-அதன் மாளிகையிடத்து, எண் பகல்-எட்டுத் தினங்கள், கும்பகன்னனின்-கும்பகர்ணன்போல, கண்படை செய் தான்-தூங்கினன்; (எ-று). ஆல்-ஈற்றசை.

உணவில் பல்விதமாவன-உண்பன, தின்பன, பருகுவன, நக்குவன என்பவை. சோறு, கறி, பாயசம் முதலிய உணவுகளி லெல்லாம் வீமனுக்குத் தெரியாதபடி மிக்க விஷம் கலந்து உண்பித்தனர். ஊதை-காற்று, வாயு. பெருந்தவத்தில்-மந்திர பலத்தால். வாயுவினிடத்து உதித்தவன் என்றது-ஆடவர் வயிற் றில் கருப்பம் இரண்டு மாதம் தங்கிப் பின்னர் பெண்டிர் வயிற்றில் சேர்கிறதென்னும் நூல் வழக்குப்பற்றியும், ஒருவனது மனைவியின்

வயிற்றில் தோன்றியவரை அவன் வயிற்றில் தோன்றியவரென்னும் வழக்குப்பற்றியும் என்க. முன்னர்த் துய்த்தவிடம் கான்றது என்னையெனில்,-ஸ்தாவர விஷமான நஞ்சுணவிற்குச் சங்கம விஷமான அரவினங்கடித்து ஏற்றிய (விஷம்) மாற்றுயிற்றென்க. பணி-பாம்பு. அவற்றிற்குத் தலை-தலைவன்: எனவே நாகராசனுகிய வாசுகி. தழி-தழீஇ என்றது குறுகி நின்றது. ஆதரிப்பஅமுதளித்து ஆதரித்தான் என்பர். குந்தியின் தாய்மரபினரோடு வாசுகிக்கு உறவு முறைமையுள்ளதனால், ஆர்யகனென்ற நாகமாதா மகனை அரசன் மொழிப்படி, வாசுகி வீமனுக்கு ஆயிரம் யானை வலிமைதரவல்ல திவ்ய ரசத்தைப் பானஞ்செய்வித்தனனென்று வியாசபாரதத்திற் கூறியுள்ளது. பேருறக்கத்திற்குக் கும்பகர்ணன் எடுத்துக்காட்டு. "கும்பகருணனும் தோற்று உனக்கே பெருந்துயில்தான் தந்தானே" என்றார் நாச்சியாரும். கும்பகர்ணன் – இராவணனுக்குத் தம்பி. கண்படை-கண்மூடியுறங்குதல்; துயில். (4)

5. வீமனின்றித் துரியோதனன் மாத்திரம் நகரம் சேரக் குந்தியும் புதல்வர் நால்வரும் வருந்தி எங்குத் தேடியும் காணாது போகவே, வீடுமனையண்டிக் கேட்க, அவர் தேறுதல் கூறிவிடுத்தல்.

சுகப்படுவா னிவனைநதி வீழ்த்த பாவிச்
சுயோதனன்மற் றவருடனூர்ச் சுடரோ னுழி
புகப்புகுத வீமன்வரக் காணு தாயும்
புதல்வர்களு மெவ்விடனும் புகுந்து நாடி
யகப்படவி லாமையினுல் உறக்க முண்ணல்
அகன்றுவி டுமற்குரைப்ப வவன்கேட் டாயுண்
மிகப்படுவோ னிவர்வஞ்சத் திறவா னெய்தும்
மெலிவொழிமி னெனவுறுதி விளம்பி யுய்த்தான்.

(இ-ள்) பாவி சுயோதனன்-கொடியவனுகிய துரியோதனன், சுகப்படுவான்–(தான்) சேமமாயிருக்கக் கருதி, இவனை-இந்த வீமனை, நதி வீழ்த்த-கங்கையில் அமிழ்த்தி, மற்றவருடன்-ஏனைய தம்பிமார் முதலியோருடன், சுடரோன் ஆழி புக-சூரியன் மேலைச் சமுத்திரத்தில் மூழ்கி மறைய [சூரியாத்தமனத்தில்], ஊர் புகுத-அத்தினபுர நகரில் புக, (அப்போது) வீமன் வர காணாது-வீமன் உடன்வருதலைக் காணுமல், ஆயும்-தாயாகிய குந்திதேவியும், புதல்வர்களும்-மற்றைப் பாண்டவர் நால்வரும், எவ்விடனும்

புகுந்து நாடி-எல்லாவிடங்களிலும் நுழைந்து தேடியும், அகப்படவிலாமையினால் - காணக்கிடைக்காமையினால், உறக்கம் உண்ணல் அகன்று-துயில் உணவு நீத்து, வீடுமற்கு உரைப்ப-பிதாமகனுகிய பீஷ்மனிடம் சொல்ல, அவன் கேட்டு-அப் பாட்டனுர் [இச்செய்தி] கேட்டு, "ஆயுள்மிகப் படுவோன்-வீமன் ஆயுள் மிகுதியாகப் பெற்றவன்: இவர் வஞ்சத்து இறவான்-இந்தத் துரியோதனுதியரது சூழ்ச்சியினால் இறக்கமாட்டான்: எய்தும்-(கொஞ்சநாளில்) வந்து சேருவான்: மெலிவு ஒழிமின்-வருத்தம் நீங்குங்கள்" என-என்று, உறுதி விளம்பி, (தன் ஞானக்கண்ணால் உணர்ந்து) தேறுதல் கூறி, உய்த்தான்-அவர்களை (வருந்தாதபடி) அனுப்பினன்; (எ-று).

வீழ்த்த-வீழ்த்தி: எச்சத்திரிபு, சுடரோன் ஆழிபுக-பிறிதின விற்சி. ஆய்-தாய். உறக்கமுண்ணல்-உம்மைத் தொகை. எய்தும்-எய்துவான்: செய்யுமென்முற்று ஆண்பாலுக்கு வந்தது. ஒழிமின்—முன்னிலைப் பன்மைவினைமுற்று. (5)

6. **வீமனை நாகங்கள் சுமந்து கங்கைக் கரையிற் கொண்டு சேர்க்க, அவன் உற்றூர்க்கு மகிழ்ச்சியையும் உருதார்க்கு அச்சத்தையும் விளைத்தல்.**

மற்றபக லயர்வுதணந் தெழுந்து நாகர்
வாசுகியே வலிற்சுமந்து வருமுன் மார்க்க
முற்றுபகீ ரதியணைமேல் விடுப்ப வீமன்
உளமறுகி வரும்வழிபார்த் துழலு மாயு
நற்றுணைவர் சிறுதாதை தாதை தாதை
நகர்சனர்வே தியர்குரவர் நண்ணு மென்றே
சொற்றசோ திடர்முதலோர் மகிழ்ச்சி யோங்கச்
சுயோதனனு தியர்நடுங்கத் துன்னி னனுல்.

(இ-ள்) மற்ற பகல்-அடுத்த நாளில், அயர்வு தணந்து எழுந்து-(வீமன்) இளைப்புத் தீர்ந்து எழுந்திருந்து, நாகர்-நாகங்கள், வாசுகி ஏவலில் சுமந்து - (தன்னை) வாசுகியினது கட்டளையினால் சுமந்துகொண்டு, முன் வரு மார்க்கம் உற்று-முன்பு (தான்) வந்த நீரின் வழியாய்க் கொண்டுவந்து, பகீரதி அணைமேல் விடுப்ப-கங்கையின் கரையில் சேர்ப்பிக்க, - வீமன் - வீமசேனன், உளம் மறுகி வரும்வழி பார்த்து உழலும் ஆயும்-மனம் வருந்தித் தான் வரும் வழிமேல் விழிவைத்துத் துன்புறுகின்ற தாயாகிய

குந்தியும், நல்துணைவர்-நல்ல சகோதரர்களும், சிறுதாதை-சிறிய தந்தையாகிய விதுரரும், தாதை தாதை-பாட்டனாகிய வீடுமரும், நகர் சனர்-நகர மக்களும், வேதியர்-பிராமணர்களும், குரவர்-பெரியோர்களும், நண்ணும் என்றே சொற்ற சோதிடர்-"வீமன் வந்து சேர்வான்" என்றே நன்னிமித்தங்கள் பார்த்துச் சொன்ன சோதிடக் கலைஞர்களும், முதலோர்-முதலாய ஏனையோரும், மகிழ்ச்சி ஓங்க-பெருங்களிப்புக் கொள்ளவும் (அதே சமயத்தில்) சுயோதனனுதியர்-துரியோதனன் முதலிய பாதகர்கள், நடுங்க-(அச்சத்தினால்) நடுக்கங்கொள்ளவும், துன்னினன்-(அத்தினபுரியை) நெருங்கினன்; (எ-று) ஆல்-ஈற்றசை.

வீமன் துன்னினன் என இயையும். ஆயும் என்றவிடத்து உம்மையைப் பிறவிடத்தும் கூட்டி எண்ணுப் பொருளதாக்குக. நல் துணைவர் என்றதால்-தருமன் அருச்சுனன் நகுலன் சகதேவன் இவர்களைக் குறித்தது. சிறுதாதை-விதுரன். தாதை-பாண்டு: தாதை தாதை-தந்தைக்குப் பெரிய தந்தை: வீடுமன். (எனவே வீடுமன் பாண்டவர்க்குப் பாட்டனாகிறான். வேதியர் நகர்சனரில் அடங்குவராயினும் தனியே எடுத்துக் கூறியது அவர்களின் சிறப்புப்பற்றி. குரவர்-கிருபர், துரோணர், அசுவத்தாமா போன்ற பெரியோர்கள் நண்ணும்-செய்யுமென்முற்று. ஈண்டுப் பெயராய் வந்து நின்றது: குறிப்பு வினையாலணையும் பெயர். நாகர்-படமும் வாலும் உடையராய் மனித வடிவமுந் தெய்வப் பிறப்புமானதொரு சர்ப்ப சாதியார். குரவர்-குரு என்பதன் பன்மையான குரவ: என்னும் வடசொல்லின் திரிபு. (6)

7-8. வீமன் அத்தினபுரி சேர்ந்து தாயைத் தேற்றி வாழ்ந்திருப்ப, கிருபாசார்யனது வரலாறு கூறுதல்.

இரண்டுகவிகள்—ஒருதொடர்.

7. அத்திநகர் புகுந்தின்ருள் துணைவர்க் காடு
மரவகே தயர்வஞ்ச மறிவித் தூதை
புத்திரன்மற் றவர்க்கவலம் புரியான் முன்போற்
பொருந்தியவ ருடனுடல் புரிநாண் முன்னுற்
சித்திரவிற் சரத்துவன்றன் றவத்தை யிந்திரன்
செலுத்துமுருப் பசிமயலாற் றீர்ந்து வில்லோ
டத்திரமும் வீரியமும் விடுத்தா னவ்விந்
தவண்கொறுக்கை விழுந்தாண்பெண் ணுய தாலோ.

(இ-ள்). ஊதை புத்திரன்-காற்றின் மைந்தனாகிய வீமன்,

அத்தினகர் புகுந்து-அத்தினபுரியுள் புகுந்து, ஈன்றாள்-தாயாகிய குந்திக்கும், தாணவர்க்கு-சகோதரர்களாகிய நால்வர்க்கும், ஆடும் அரவ கேது-படமெடுத்தாடும் பாம்பினைக் கொடியிற்கொண்ட துரியோதனனின், அயர் வஞ்சம் அறிவித்து-செய்த சூழ்ச்சியைத் தெரியப்படுத்தி, மற்று-(அவர்க்கு) மாறாக, அவலம் புரியான்-கேடு விளைவிக்காதவனாய், முன்போல்-முன்னர் இருந்தது போலவே, பொருந்தி-மனம் இசைவுற்று, அவருடன்-அத் துரியோதனாதியருடன், ஆடல் புரிநாள்-விளையாட்டு நிகழ்த்திவரும் காலத்தில்,— சித்திரம் வில் சரத்துவன்றன் தவத்தை-அழகிய வில்லினைக் கொண்ட சரத்துவான் என்னும் முனிவனுடைய தவத்தினை, முன்னல்-அவனுக்கு முன்னாலே போகும்படி, இந்திரன் செலுத்தும்-இந்திரன் அனுப்பிய, உருப்பசி மயலால் தீர்ந்து-உருப்பசியின்மேல் கொண்ட மோகத்தால் விடுத்து, (மேலும்) வில்லோடு அத்திரமும் வீரியமும் விடுத்தான்-தான் கொண்டிருந்த வில்லினோடு அஸ்திரத்தையும் [நழுவிய] சுக்கிலத்தையும் விட்டிட்டான்: அ விந்து-அந்தச் சுக்கிலம், அவண்-அவ்விடத்திலிருந்த, கொறுக்கை விழுந்து-நாணற்கட்டையில் விழுந்து, ஆண் பெண் ஆயது-ஒரு ஆண் மகவும் ஒரு பெண் மகவுமாக ஆயிற்று; ஆலோ-என்ன ஆச்சரியம்! (எ-று).

தவத்தைத் தீர்ந்து என இயையும். கொறுக்கை-நாணல். ஊதை புத்திரன்-நான்கனுருபு தொக்கது. ஆலோ-வியப்புக் குறிப்பிடைச் சொல்.

கோதமனென்னும் முனிவனது குமாரனும், தான் பிறந்த பொழுது அம்புகளுடனே பிறந்ததனால், 'சரத்வான்' என்று பெயர் பெற்றவனுமான (சரம்-அம்பு) முனிவன் இளமையில் வேத மோதுதலினும் வில்வித்தை தேர்தலில் மிக்க விருப்புற்று அதில் நன்கு தேர்ந்து பின்பு பெருந்தவஞ் செய்து வருகையில் தனது தவத்தைக் கெடுத்தற் பொருட்டு இந்திரனால் ஏவப்பட்டு வந்த ஜாநபதி யென்னும் தேவ கன்னிகையைக் கண்டு காமுற்றதனால், அவன் விருப்பத்திற்கேற்ப அருகிலுள்ள நாணற்கட்டையில் ஓராண்மகவும் ஒரு பெண் மகவும் உண்டாயின, தனது தவநிலை குலைந்ததற்குக் கழிவிரக்கங்கொண்ட அம்முனிவன் உடனே அக் குழந்தைகளையும் தனது வில் அம்புகளையும் அங்கே விட்டிட்டு அப்பாற் சென்றான் என்பது இச்செய்யுளில் அறியவேண்டிய விவரம். (7)

8. அவ்வழிசந் தனுவேட்டை யெய்தி நோக்கி
அத்திரபுட் டிலுந்தனுவு மவர்க ளோடும்
வவ்விபுக்கூர் பெயர்கிருபன் கிருபி யென்ன
வகுத்தளிக்கு நாட்பயந்தோன் வந்தங் கேந்தற்
கிவ்விருவர் வரவறிவித் தணங்கைத் துரோணற்
கிந்துதனு விஞ்ஞைசுதற் கியம்பி மீண்டான்
வெவ்வின்மறை குருகுலத்துப் புதல்வர்க் கோதி
வீடுமனு லக்கிருபன் மேன்மை பெற்றான்.

(இ-ள்) அ வழி - அந்த மார்க்கமாக, சந்தனு—, வேட்டை எய்தி-வேட்டையாட வந்து, நோக்கி-ஆண் பெண் மகவுகளைக் கண்டு, அத்திரபுட்டிலும் தனுவும் - (கீழேபோகட்டுக்கிடந்த) அம்பறாத்தூணியையும் வில்லையும், அவர்களோடும் - அந்த இரண்டு மகவுகளோடும், வவ்வி-எடுத்துக்கொண்டு, ஊர் புக்கு-அத்தினபுரி புகுந்து, பெயர் கிருபன் கிருபி என்ன-ஆண் மகவுக்குக் கிருபன் என்றும் பெண் மகவுக்குக் கிருபியென்றும் பெயர்களை, வகுத்து அளிக்கும் நாள்-நிர்ணயித்து நாமகரணம் செய்த நாளில், பயந்தோன்-பெற்ற தந்தையாகிய சரத்துவான், அங்கு வந்து-அவ்விடத்திற்கு வந்து, ஏந்தற்கு-சந்தனுவுக்கு, இ இருவர் வரவு அறிவித்து-இந்த இருவருடைய பிறப்பினைப்பற்றி வரலாறு தெரிவித்து, (பின்பு) அணங்கை - கிருபியை, துரோணற்கு - துரோணனுக்கு, ஈந்து-திருமணஞ் செய்துகொடுத்து, சுதற்கு-புத்திரனுகிய கிருபனுக்கு, தனு விஞ்ஞை இயம்பி-வில்வித்தையைக் கற்றுக்கொடுத்து, மீண்டான்-தன் ஆச்சிரமத்திற்குத் திரும்பினன்: (பின்னர்) அ கிருபன்-அந்தக் கிருபன், வெம் வில் மறை—கடுமையான வில்வித்தையை, வீடுமனுல்-பீஷ்மரின் ஏவலால், குருகுலத்துப் புதல்வர்க்கு ஓதி-குருவம்சத்துப் பிறந்த பாண்டவர் கௌரவர்களுக்குக் கற்றுக்கொடுத்து, மேன்மை பெற்றான்-சிறப்புற்று விளங்கினன்; (எ-று).

சரத்துவான் குழந்தைகளையும் தனது வில் அம்புகளையும் விட்டிட்டு அப்பாற் சென்றபின், வேட்டைக்குச் சென்ற சந்தனு மகாராஜன் கதியற்றிருந்த அக்குழந்தைகளைக் கிருபையோடு எடுத்துவந்து வளர்த்ததனல், அவர்கட்கு முறையே கிருபனென்றும் கிருபியென்றும் பெயர்கள் உண்டாயின. பிறகு ஒருகால் அந்தச் சரத்வான் அத்தினபுரிக்கு வந்து தன் மகனை கிருபனுக்கு வில்வித்தை முழுவதையும் கற்பித்துக் கொடுத்துச் சென்றதனால், கிருபன் சிறந்த வில்லாசிரியனுய் அங்கு விளங்கினன் என வரலாறு அறிக.

கௌதமகுலத்தார் ஆதியில் க்ஷத்திரிய சம்பந்தமுடையராதலால், க்ஷத்திரியத்தன்மையோடு கூடின பிராமணர்களாயிருந்தார்களாதலின், வில் முதலிய படைக்கலங்கட்கு உரியராயினரென அறிக. வெவ் வின்மறை-விரும்பத்தக்க வில்வித்தையெனினுமாம்: "வெம்மை வேண்டல்" (தொல்: சொல்: 334) (8)

9–10. வீடுமன் கிருபனினுஞ் சிறந்த ஒரு குருவை நாடியிருப்ப, துரோணன் வரலாறு கூறுதல்.

இருகவிகள் குளகம்.

9. பகீரதிதந் தவன்கிரு பனிடத்தின் மைந்தர்
பயில்விஞ்ஞைக் கதிகமுறப் பயிற்று விப்பான்
சகமதில்வே ரொருகுருவாய்ந் திருந்தான் வேள்வி
தனிற்பரத்து வாசன்மே னகையி னல்வின்
துகவிடுத்த துரோணகும்பத் துதித்த துரோண
னுயிர்த்தவன்பால் பலகலையு முணர்ந்து பின்னும்
பகருமழு விராமனிடத் தேகி விஞ்ஞை
பயின்றுரிய கிருபிநலம் பருகி வாழ்நாள்,

(இ-ள்). பகீரதி தந்தவன்-வீடுமன், கிருபனிடத்தில்-கிருபாசாரியனிடத்தில், மைந்தர்-குலகுலத்துக் குமரர் நூற்றைவரும், பயில் விஞ்ஞைக்கு-கற்கின்ற வித்தைக்கும், அதிகம் உற பயிற்றுவிப்பான்-அதிகமாகக் கற்றுக்கொடுக்கும் பொருட்டு, சகமதில்-குருநாட்டிலே, வேரொரு குரு ஆய்ந்து இருந்தான்-[இந்தக் கிருபனினும் சிறந்த] வேரொரு ஆசிரியனைத் தேடிக் கொண்டிருந்தான்: [இது நிற்க]:

பரத்துவாசன்-பரத்துவாசனென்னும் முனிவன், வேள்வி தனில்-யாகஞ் செய்துகொண்டிருக்கையில், மேனகையினல்-மேனகையென்னும் தேவமாதைக்கண்டு காமுற்றதனல், விந்து உக-வீரியம் நெகிழ்ந்துவிழும்படி, விடுத்த துரோண கும்பத்து-செலுத்திய பதக்களவு கொண்டதொரு பாத்திரத்தினின்று, உதித்த-தோன்றிய, துரோணன்-துரோணன் என்னும் பெயருடைய குமாரன், உயிர்த்தவன்பால்-தன்னைப் பெற்ற தந்தையாகிய பரத்துவாச முனிவனிடத்து, பலகலையும் உணர்ந்து-கலைகள் பலவற்றையும் கற்றுத் தெரிந்து, பின்னும்-மேலும், பகரும்-சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, மழு இராமனிடத்து ஏகி-பரசுராமன்பாற் சென்று, விஞ்ஞை பயின்று-வில் முதலிய

ஆயுதப் பயிற்சிகளைக் கற்றுத் தேர்ந்து, உரிய கிருபி-தன் குலத்துக் கேற்ற கிருபியென்னும் மாதினை மணந்து, நலம் பருகி-அவளிடத்து இன்பம் துய்த்து, வாழ்நாள்-வாழ்ந்துவரும் நாளில்; (எ-று.) 'ஈசன் இல்புகுந்து' என மேலைக்கவியோடு குளகமாய்த் தொடரும்.

அங்கிரஸ் என்னும் முனிவனது குலத்தில் தோன்றிய பரத்துவாச மஹரிஷி கங்கைத் தலைப்பில் யாகஞ் செய்துகொண் டிருக்கையில் அங்கு ஈராட வந்த ஒரு தேவமாதின் கட்டழகைக் கண்டு காதல்கொண்டு வீரியம் நெகிழ்ந்து உருக, அவனது விருப்பத்தால் ஒரு துரோண கலசத்திலிருந்து ஒரு குமாரன் பிறந்தான்: அவனுக்குத் துரோணனென்று பெயராயிற்று என அறிக. அந்தத் தேவமாதின் பெயர் கிருதாசி என்பது. துரோணம்-இரண்டு மரக்கால்; பதக்கு. தந்தையிடத்துக் கற்ற பல கலைகள்-வேதம் நான்கு, வேதாங்கம் ஆறு, உபாங்கம் நான்கு என்க. அவை யாவன;—ருக், யசுஸ், சாமம், அதர்வணம் என்ற வேதம் நான்கு: சிக்ஷை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், சோதிடம், கல்பம் என்ற வேதாங்கம் ஆறு: மீமாம்சை, தர்க்கம், புராணம், தர்ம சாஸ்திரம் என்ற உபாங்கம் நான்கு என இவை. பரசுராமரிடத்துக் கற்றவை-வில் முதலிய படைக்கலப் பயிற்சி: இந்தத் துரோணன் அக்நிவேசனென்னும் முனிவ னிடத்தும் படைக்கலம் தேர்ந்தனன். அந்தணரும் படைக்கு உரிய ரென்பதை "இடையிரு வகையோ ரல்லது நாடிற், படைவகை பெறுஅ ரென்மனார் புலவர்" என்ற தொல்காப்பியச் சூத்திரத் திரத்தின் உரையில் 'நாடின்' என்பதனால் ஒரு சார் அந்தணரும் படைக்கு உரியரென்பது கொள்க: அவர் இயமதங்கியாரும், துரோணனும், கிருபனும், முதலாயினரெனக் கொள்க என்றதால் அறிக. (9)

10. அக்கிருபி கற்புநிலை யுணர்வான் ஈசன்
அருந்தவரில் புகுந்துபசி யவித்தி யென்ன
இக்குமொழி யமுதுதவ விசைய வாடை
யின்றித்தரி னன்றயிர்வ லென்ரு னன்னாள்
மைக்களன்சொற் படிவறுவை யகற்றி யோதி
மறைப்பவமு தேந்திவரு வள்ளத் தெந்தை
சுக்கிலம்விட் டகல்வதை பரிமுன் வைத்தாள்
துய்த்தபரி யகட்டுதித்தான் றுரங்கத் தாமா,

(இ-ள்). அ கிருபி கற்புநிலை உணர்வான்-அந்தக் கிருபியின்

கற்பின் திண்மையைப் பரிசோதிக்கும்பொருட்டு, ஈசன்-சிவ பிரான், அருந்தவர் இல் புகுந்து-அரிய தவத்தைச் செய்துள்ள துரோணரில்லத்துட் புகுந்து, பசி அவித்தி என்ன-பசி போக்கு வாயாக என்று கேட்க, இக்கு மொழி-கரும்புபோல் பேச்சினிமை யையுடைய கிருபி, அமுது உதவ-உணவு கொடுக்க, இசைய-சம்மதிக்க, [அப்போது அவ் ஈசன்] ஆடை இன்றி தரின்-நிர்வாண மாகக் கொடுப்பின், நன்று அயிர்வல் என்றான்-பெரிதாக உண்பேன் என்று கூறினன்: (அது கேட்டு) அன்னள்-அந்தக் கிருபி, மை களன் சொற்படி-கறுத்த கண்டத்தையுடைய சிவ பிரான் மொழிந்தபடியே, அறுவை அகற்றி-(உடுத்த) சேலையை நீத்து, ஓதி மறைப்ப-(தழைத்த) கூந்தல் அவயவம் மறைப்ப, அமுது ஏந்தி வரு-உணவினை யெடுத்துவந்த, வள்ளத்து-வட்டிலில், எந்தை-சிவபிரான், சுக்கிலம் விட்டு அகல-(தம்) வீரியத்தை நெகிழவிட்டு நீங்க, அதை-அந்த வட்டிலை, பரி முன் வைத்தாள்-குதிரையின் முன் வைத்தாள்: துய்த்த பரி அகட்டு-உட்கொண்ட குதிரையின் வயிற்றில், துரங்கத்தாமா-அசுவத்தாமா, உதித் தான்-பிறந்தான்; (எ-று).

துரோணன் மனைவியாகிய கிருபியின் கட்டழகைக் கேட்டும் ஒருகால் கண்டும் அவளிடம் மிகக் காமுற்ற சிவபிரானது அருளி னால் ஒரு குதிரையினிடமாக ஒரு ஆண் குழந்தை தோன்றிற் றென்றும், அதன் பெயர் அசுவத்தாமனென்றும் அறிக. துரோணனுக்குக் கிருபியினிடம் சிவாமிசமாகப் பிறந்த பிள்ளை அசுவத்தாமனென்றும் நூற்கொள்கையுண்டு. இவன் பிறந்த போது உச்சைச்சரவம் என்னுங் குதிரையைப் போல் கனைத்தான் ஆதலின் ஆகாய வாணி "இந்தக் குழந்தை அசுவத்தாமா என்ற பெயரோடிருப்பன்" என்று சொல்லிற்று. அசுவம்-குதிரையைப் போன்ற, ஸ்தாமா-சப்தமுடையவன். உணர்வான்-வானீற்று வினையெச்சம். அவித்தி-முன்னிலைவினைமுற்று. இக்குமொழி-உவமத்தொகையன்மொழி. "நன்று பெரிதாகும்" (தொல்: சொல்: 343). அயிர்வல்-தன்மை யொருமை வினைமுற்று. (10)

11. வீடுமன் துரோணனை வரவழைத்து எதிர்கொண்டு உபசரிக்க, அவன் வீடுமனுக்கு ஆசிபுகலல்.

அரிக்கரியோன் மதிக்கரிய கற்பி னுளும்
அரியமறைக் கொடிமுனியு மன்பி னேந்திப்
பரிக்குரிய பெயரோனை வளர்க்கு நாளிற்
பகீரதிசேய் தனுவல்ல பரிசு கேட்டக்

குருக்கொணர்வான் விடுந்தூதர் விளிப்ப மற்றோன்
குழவியொடுந் துணைவியொடுங் குலவு மத்தி
புரிக்கடைந்தங் கவனியற்றுங் கடன்கொண் டாசி
புகன்றுதவி சிருந்திதனைப் புகல லுற்றான்.

(இ-ள்). அரிக்கு அரியோன்-திருமாலுக்கு(த் தன் அடியைக் காண முடியாதபடி) அரியவனாகிய சிவபிரானும், மதிக்கு அரிய-மதிப்பிடுதற்கு அரியதாகிய, [திண்மையுடைய] கற்பினளும்-கற்பையுடையவளாகிய திருபியும், அரிய மறைக்கொடி முனியும்-ஓதுதற்கு அரிய வேதத்தைக் கொடியாகக் கொண்ட துரோணனும், பரிக்குரிய பெயரோனை-அசுவத்தாமனை, வளர்க்கும் நாளில்-வளர்த்து வருங்காலத்தில்–, பகீரதிசேய்-வீடுமன், தனு வல்ல பரிசுகேட்டு-[துரோணனின்] வித்தின்றமையின் வல்லமையைப் பற்றிக் கேள்வியுற்று, அருகு கொணர்வான்-அவனைக் குருவாக்கும் நோக்கத்தோடு கொணரும் பொருட்டு, விடும் தூதர்–அனுப்பிய தூதுவர், விளிப்ப–(சென்று) அழைப்ப, மற்றோன்-அந்தத் துரோணன், குழவியோடும் துணைவியொடும்–குழந்தையாகிய அசுவத்தாமனோடும் மனைவியாகிய திருபியோடும், குலவு–விளங்குகின்ற, அத்திபுரிக்கு அடைந்து-அத்தினபுரிக்கு வந்து, அங்கு–அவ்விடத்து அரண்மனையில், அவன் இயற்றும்- அவ்வீடுமன் எதிர்கொண்டு செய்த, கடன் கொண்டு-உபசாரங்களை யேற்றுக் கொண்டு, ஆசி புகன்று-(அவனுக்கு) ஆசீர்வாதங்கள் செய்து, தவிசு இருந்து-ஆசனத்தில் எழுந்தருளியிருந்து, இதனை–இந்தச் செய்தியை, புகறல் உற்றான்-(வீடுமனுக்குச்) சொல்லலானான்; (எ-று.)

துரோணனை வீடுமன் வரவழைக்க வேணுமென்று விரும்பிய போது, அந்தத் துரோணன் தானே அத்தினபுரியைச் சேர்ந்தானென்று பிற நூல்கள் கூறும். பிராமணர்க்கு வேதத்தைக் கொடியாகக் கூறுதல் மரபு. எனவே, முனி-அந்தணனைக் காட்டிற்று. அதனால்தான் அந்தணனாகிய துரோணன் வீடுமனுக்கு ஆசி புகன்றதும். பரிசு-விதம். கடன்-முகமன். 'இதனை' என்பது மேல் வரும் துருபதன் செய்தியைக் குறிக்கும். (11)

12-13. துருபதன் செய்தியைத் துரோணன் வீடுமனுக்குக் கூற, அவன் கௌரவ பாண்டவரைத் துரோணனிடம்

ஒப்பித்துத் தன் சபதத்தை நிறைவேற்றிக் கொள்ளச் சொல்லுதல்.

இரண்டு கவிகள்—ஒரு தொடர்.

12 மூன்றுருப தனுநானு நண்பா யங்கி
முனியிடத்திற் பலகலிவின் முதலாம் விஞ்ஞை
நன்றுபயி ளிலவன் அரசு செய்யு
நாளெனக்கு நாடருத்த நல்கப் பேசிச்
சென்றனன்யான் வனத்தினருந் தவஞ்செய் திந்தத்
திருவினவேட் டரளிச் சேய்பெற் றுன்பா
லின்றியர சியற்றிடுநா ளவன்பாற் புக்கேன்
எனையவன்யா ரெனநின்னண் பினன்யா னென்றேன்.

(இ-ள்).முன்-முன்னாட்களில்,துருபதனும் நானும்-(இப்போது பாஞ்சால நாட்டதிபதியாகிய) துருபதராசனும் அந்தணனாகிய நானும், நண்பாய்-சிநேகிதராய், அங்கி முனியிடத்தில்-அக்னிவேச முனிவனிடத்தில், பலகலி-பலகலைகளையும், வில் முதலாம் விஞ்ஞை-வில் வித்தை முதலாய படைக்கலப் பயிற்சிகளையும், நன்று பயில் நாளில்-செவ்வையாகப் பயின்று வருங்காலத்தில், அவன்-அந்தத் துருபதன், அரசு செய்யும் நாள்-தான் அரசனாகி ஆட்சி செய்யும்போது, எனக்கு-[நண்பனாகிய] எனக்கு, நாடு அருத்தம் நல்க பேசி-பாதி ராச்சியத்தைக் கொடுப்பதாகச் சொல்லி, சென்றனன்-(தன் நாடு) போய்ச் சேர்ந்தான்: யான்-நான், வனத்தின்-(காடு சென்று அக்) காட்டில், தவம் செய்து-தவத்தை மேற்கொண்டிருந்து, (பின்பு) இந்த திருவினவேட்டு-இந்தக் கிருபியை மணந்து, அரளில் இசேய் பெற்று-சிவபிரானருளால் இந்தக் குழந்தை அசுவத்தாமனைப் பெற்று, (அவனுக்கு ஊட்ட) ஆன்பால் இன்றி-பசுவின் பால் இல்லாது போகவே, (ஒரு பசு வாங்கிவருவோம் என்று) அவன்பால்-அந்தத் துருபதன் பக்கல், அரசு இயற்றிடு நாள்-அவன் அரசனாகி ஆட்சி செய்யுங் காலத்து, புக்கேன்-சென்றேன்: அவன்-அந்தத் துருபதன், எனை-என்னைப் (பார்த்து), யார் என-நீ யார் என்று கேட்க, யான் நின் நண்பினன் என்றேன்-நான் உன்னுடைய சிநேகிதன் என்று பதில் சொன்னேன்; (எ-று).

அங்கிமுனி-அங்கிவேசன்: [அக்னி வேசன்] இவன் அக்கினியினின்று பிறந்தவனென்றும், பரத்துவாச முனிவனிடமிருந்து ஆக்நேயாஸ்திரம் பெற்றுப் பின்பு அந்த அஸ்திரத்தைத் துரோண

னுக்குக் கொடுத்தனனென்றும் வடநூலால் விளங்கும். துருபதன்-பாஞ்சால தேசத்து ராசன்: யாகசேனன் எனவும் படுவன். சோமகனது மகனை பிருஷதனென்பவனது குமாரன். பரத்துவாச முனிவனும் பிருஷத மகாராசனும் ஒருவர்க்கொருவர் மனங்கலந்த நண்பராதலால், பரத்துவாச குமாரனை துரோண னிடத்துப் பிருஷத குமாரனை துருபதன் இளமையில் நண்பு கொண்டிருந்தானென அறிக. துரோணன் தவஞ் செய்ததை விடுத்துக் கிருபியை மணந்தது-இல்லறத்தை மேற்கொண்டு பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி என்ற மற்றை மூன்று ஆச்சிரமத்தார்க்கும், கதியற்றவர், ஏழைகள் முதலானவர்களுக் கும் உணவு இடம் முதலிய வேண்டுவன கொடுத்து உதவுதற்குத் தக்க உரிமையுடைய கிருகத்தாச்சிரமமாதலின் என்க. திரு-இலக்குமி போல் பேரழகு படைத்த கிருபி என்றபடி. குழந்தைப் பருவத்துக்கு இன்றியமையாதது பசுவின் பால் ஊட்டுவித்தல் என்பது அறியவேண்டுவது. அருத்தம்=அர்த்தம்: பாதி; வட சொல். (12)

13. இறைவனதற் கந்தணர்நண் பரசர்க் கியாதென்
றேசிநகைத் திகழ்ந்தனன்யா னியாருங் கேட்ப
அறையுமொழி தவிர்ந்தனர்யார் நீயோ யானே
அமரிரதத் துடன்கவர்ந்துன் னரசிற் பாதி
பெருவலீஃ துறுதியெனப் புகன்றிங் குற்றேன்
பெரும!வென வரசமுனி பெரியோய்! எங்கட்
சிறுவர்தமக் குனதுவிஞ்ஞை பயிற்றி யாக
சேனநீவென் றுன்சபதஞ் செலுத்தென் றோதி.

(இ-ள்). இறைவன்-துருபத ராசன், அதற்கு-"யான் நின் நண்பினன்" என்று சொன்னதற்கு, அந்தணர் நண்பு அரசர்க்கு யாது என்று ஏசி-பிராமணரின் சிநேகம் க்ஷத்திரியர்க்கு எதற்கு என்று பழித்து, நகைத்து-சிரித்து, இகழ்ந்தனன்-பரிகசித்தனன்: யான்-நான், யாரும் கேட்ப-அனைவரும் கேட்கும்படி, — "அறையும் மொழி–சொன்ன வார்த்தையை, தவிர்ந்தனர் யார் நீயோ யானே-மீறியவர் யார் நீயா நான்? (நீ தான்): அமர்-போரில், இரதத்துடன் கவர்ந்து-உன் தேர்க்காலோடு உன்னைக் கட்டிச் சிறைப்படுத்தி, உன் அரசில் பாதி பெறுவல்-உன் ராஜ்யத்தில் பாதி பகுதியை யான் பெறுவேன்: இஃது உறுதி–இது திண்ணம்," என புகன்று-என்று சொல்லிச் சபதஞ் செய்து, பெரும-பெரியோனே! இங்கு-இவ்வத்தினபுரிக்கு, உற்றேன்-வந்து சேர்ந்தேன், என–என்று கூற, (அது கேட்டு) அரசமுனி-வீடுமன், 'பெரியோய்'!-

பெருமை யுடையவரே! எங்கள் சிறுவர் தமக்கு-எங்களுடைய குருகுலப் புதல்வர்களுக்கு, உனது வின்னை பயிற்றி-உமது வில் வித்தையைக் கற்றுக் கொடுத்துத் தேர்ச்சியுறச் செய்து, யாக சேனை வென்று-துருபதனைச் செயித்து, உன் சபதம் செலுத்து-உமது சபதத்தை நிறைவேற்றிக்கொள்ளும்', என்று ஓதி-என்று சொல்லி; (எ-று). "புதல்வர்தமைக் காட்டி" என மேலைக் கவியோடு குளகமாய்த் தொடரும்.

மொழிதவிர்ந்தனர் நீயோ யாரையே? என்றதால்-நீ முன்பு எனக்குப் பாதியரசு கொடுப்ப வாக்குதத்தஞ் செய்ததைத் தவறினையேயாயினும், நான் இப்பொழுது உன் விஷயமாகச் சொல்லும் சபதத்தைத் தவறாது நிறைவேற்றுவேன் என்பது குறிப்பிற்பெற வைக்கப்பட்டது. இரதத்துடன் கவர்ந்து உன் அரசில் பாதி பெறுவல் என்றது-தேர்க்காலில் கட்டிக் கைக் கொள்வேன் என்ற பொருளது. இதனைக் குறித்தது ஏனென்னில்-"ரதமுள்ளவன் ரதமில்லாதவனுக்கு நேசனாகான், ராஜ்ய மில்லாதவன் ராஜாவுக்கு ஸ்நேகனாகான்" என்று துருபதன் சுட்டுக்காட்டி ஏசியிகழ்ந்தமையால் என்க. (13)

14. அரசர்க்கு உரிய வரிசைகளை வீடுமன் துரோணனுக்கு அளிக்க, அன்றுமுதல் கௌரவ பாண்டவர் துரோணனிடம் கல்வி பயிலத் தொடங்கித் தேர்ச்சிபெற, அவர்களில் அருச்சுனன் சிறந்து குருவுக்குப் பிரியனாதல்.

பரதகுலப் புதல்வர்தமைக் காட்டிக் கூட்டிப்
பார்வேந்தர்க் குளவரிசை பலவு நல்கி
வரத! வின்று முதலெம்மி லொருவ னாகி
வாழ்தியெனத் துரோணமுனி வாங்கு சாபச்
சுருதிகுரு குலப்புதல்வர் பயில நாளுஞ்
சொற்றனன்கற் றிடுந்திறனிற் சுருசி மைந்தன்
பருதியினை மற்றவர்மின் மினியை யொத்தார்
பகர்குருவு நரன்மீதே பரிவு கூர்ந்தான்.

(இ-ள்). (வீடுமன்) பரதகுலப் புதல்வர்தமைக் காட்டி-பரதனது குருகுலத்திலுதித்த மைந்தர்கள் நூற்றைவரையும் (துரோணனுக்கு)க் காட்டி, கூட்டி-அவர்களை ஒன்றாகச் சேர ஒப்புவித்து, (அவருக்குப்) பார் வேந்தர்க்கு உள வரிசை பலவும் நல்கி-பூமியிலுள்ள அரசர்க்குளவாகிய சிறப்புச் சின்னங்கள் பலவற்றையும் கொடுத்து, 'வரத-சிரேட்டனே! இன்று முதல்-

இன்றைத்தினம் முதற்கொண்டு, எம்மில் ஒருவன் ஆகி-எங்களில் ஒருத்தனைப், வாழ்தி-சிறப்புற வாழ்வாயாக', என-என்று உபசார மொழிகூற, துரோணமுனி-துரோணாசாரியர், வாங்கு-வினைந்த, சாபம்-வில்லினைப் பற்றிய, சுருதி-வேதத்தை (தநுர் வேதத்தை), குருகுலப் புதல்வர் பயில-கௌரவ பாண்டவர்கள் (நூற்றைவரும்) கற்கும்படி, நாளும்-தினந்தோறும், சொற்றனன்-சொல்லிக்கொடுத்தனன்: கற்றிடும் திறனில்-தேர்ச்சிபெறுந் துறையில், சுஞசி மைந்தன்-இந்திரன் மகனாகிய அருச்சுனன், பருதியினை-சூரியனை (யொத்தான்); மற்றவர்-மற்றையோர், மின் மினியை-மின்மினிப் பூச்சியை, ஒத்தார்-ஒத்தனர்; பகர் குருவும்-சிறப்பித்துப் பேசப்படுகின்ற [புகழ் படைத்த] ஆசிரியராகிய துரோணரும், நரன்மீதே-அருச்சுனன் மேலே, பரிவு கூர்ந்தான்-மிக்க அன்புடையவனாயினன்; (எ-று).

'வரிசை பலவும் நல்கி' என்றவிடத்து, "குருகுலத்தவர்க்கு இராச்சியம் முதலிய செல்வம் எவ்வளவு உண்டோ அவ்வளவுக்கும் நீயே அரசன்" என்று வீடுமன் துரோணனுக்கு உபசார மொழி கூறினதாக முதனூல் கூறுவதையும் நோக்குக. வரிசை பல-தேர், கொடி, விருது, கழல் முதலியன. "படையுங் கொடியும் குடையும் முரசும், நடை நவில் புரவியும் களிறும் தேரும், தாரும் முடியும் நேர்வன பிறவும்..... செங்கோலரசர்க்குரிய" என்றது காண்க. சாபச்சுருதி-தநுர்வேதம், வில் வித்தை; வடமொழித் தொடர். சாபம்-வில்: சுருதி=ஸ்ருதி: வேதம். சுஞசி-இந்திரன்: சுஞசு, சுஞசீரன் எனவும் வரும். காட்டிய உவமையால்-அருச்சுனனுக்கும் மற்றையோர்க்கும் சிறிதும் ஒப்புமையில்லாமல் மிக்க வேறுபாடு இருக்குந்தன்மையை யுணர்த்தியபடி. நரன்-அருச்சுனனுக்கு உள்ள பல பெயர்களுள் இதுவும் ஒன்று. முன்னொரு காலத்தில் குரு சிஷ்ய கிரமத்தை உலகத்தில் அனைவர்க்கும் விளக்கும் பொருட்டு நரனென்னும் சிஷ்யனும் நாராயணனென்னும் குருவுமாகப் பதரிகாச்சிரமத்தில் திருமால் தோன்றினதாலின், நரன் என்ற சொல் சிஷ்யனைக் காட்டி இங்கும் வந்த நயம் காண்க. நன்முகக் கல்வி தேர்பவரிடம் பரிவுகூர்தல் ஆசிரியர்க்கு இயல்பே யென்ற உண்மை காட்டப்பட்டது. பரத குலப் புதல்வர் என்று பரதனை விதந்து எடுத்ததற்குக் காரணம்-இவன் மிகச் சிறந்த வீரனுகத் திகழ்ந்தமை பற்றி: இதனை,

"சுரச மூகமுஞ் சுராரிகள் சமூகமுஞ் சூழ
விரசு பூசலின் வாசவ னடுங்கிவெங் கிடுநாள்
அரசர் யாவரு மறுமுகக் கடவுளென் றயிர்ப்பப்
புரசை நாகமூன் கடவின னகமும் புரந்தோன்" என்ற

வில்லியார் பாடலாலும் அறியலாம். (குருகுலச் : செ : 27) (14)

15. ஏகலவனென்ற வேடனது செய்தி.

ஏகலவ னென்றொருவே டுவன்வில் விஞ்ஞை
யியம்புமெனப் பணிந்தினர்க் கிசையே மென்னு
மாகலிதேர் துரோண னுரு மணலாற் கோட்டி
வணங்கிசிலை யுணர்ந்தமையம் முனியோர்ந் தும்பர்
கோகலியி னுதித்தநரன் வின்மைக் கொத்தோர்
குவலயத்தில் லெனும் வாய்மை குறையா வண்ணம்
கூகலியி னிறத்தெயினன் வலது கையங்
குட்டமதைத் தெக்கிணையாய்க் கொண்டான் மன்னே.

(இ-ள்). ஏகலவன் என்று ஒரு வேடுவன்-ஏகலவ்யன் என்ற பெயர் கொண்ட ஒரு வேடன், பணிந்து-வணங்கி, வில் விஞ்ஞை-வில் வித்தை, இயம்பும் என-(எனக்குச்) சொல்லிக்கொடும் என்று இறைஞ்ச, 'ஈனர்க்கு இசையேம்'-கீழ்மகற்குக் கற்பிக்க மனமொருப்படேம்'', என்னும்-என்று சொன்ன, மா கலி தேர் துரோணன் உரு-சிறந்த வில் வித்தையில் தேர்ச்சி பெற்ற துரோணாசாரியர் உருவத்தை, மணலால் கோட்டி-மணலால் ஒரு பிரதிமை செய்து வைத்து, வணங்கி-வழிபட்டு, சிலை உணர்ந்தமை-வில் வித்தையில் தேர்ச்சிபெறக் கற்றவகையினை, அ முனி ஓர்ந்து-அந்தத் துரோணாசாரியர் தெரிந்து,-உம்பர்கோ கலியின் உதித்த நரன்-தேவேந்திரன் மந்திர உச்சாரணத்தால் பிறந்த அருச்சுனனின், வின்மைக்கு-வில்லின் திறமைக்கு, ஒத்தோர்-நிகரானவர் குவலயத்து இல்-இப்பூமியில் இல்லை, எனும்-என்று (தான் சொற்ற), வாய்மை-வார்த்தையின் உண்மை, குறையா வண்ணம்-பழுதுபடாதபடி, கூ கலியின் நிறத்து எயினன்-பூமியின் ஆடையாகிய கடலின் நிறத்தை (கரு நிறத்தை)க் கொண்டுள்ள வேடனாகிய ஏகலவனின். வலது கை-வலக்கையின், அங்குட்டமதை-பெருவிரலை (கட்டை விரலை), தெக்கிணையாய்-தக்ஷிணையாக, கொண்டான்-பெற்றுக்கொண்டான்; (எ-று). மன், ஓ-ஈற்றசை.

இச் செய்யுளில் கூறியுள்ள விவரம் பின் வருமாறு:

துரோணன் அருச்சுனனிடத்து மிக்க பரிவுகொண்டு அவனை நோக்கி 'உன்னினும் மேம்பட்ட மாணாக்கர் எனக்கு எவரும் இல்லை' என்று கூறி, அவ்வர்க்கும் கல்வி கற்றுக்கொடுத்து வந்தார். அப்போது இரணியதநுஸ் என்ற வேடர் தலைவனது குமாரனான ஏகலவ்யன் என்பவன் துரோணரை யடுத்து, 'எனக்கு வித்வித்தை கற்றுக்கொடுக்க வேண்டும்' என்று கேட்க, அக்குரு

கௌரவர்களிடமுள்ள தாக்ஷிண்யத்தினால் சிந்தித்து 'நீ வேடன் மகன்' என்று சொல்லி, அவனைச் சிஷ்யனாக அங்கீகரிக்க விரும்பாமலிருந்தும் அவனை நோக்கி "பயிற்சியில் மேம்படும் நீ என் மாணாக்கனே: உனக்கு அனுமதி கொடுத்தேன்: போகலாம்" என்று சொன்னார். அவன் வணங்கி விடைபெற்றுத் தான் இருக்கும் வனத்திற் சென்று தன் குடிசையில் துரோணரைப்போல் ஒரு பிரதிமை செய்து வைத்து அவ்வுருவையே துரோணராகப் பாவித்துக் குருவாகக்கொண்டு மிகுந்த பக்தியோடு அவ்விக்கிரகத்திற்குப் பூசைபண்ணி அப்பூசையின் பலனால் அஸ்திரசஸ்திரப் பயிற்சிவகையனைத்தும் தன் மனத்தில் தானே தோன்றப் பெற்றுத் துரோணனுக்குத் தெரியாமலே வில்வித்தையில் அருச்சுனனினும் தேர்ந்துவந்தான்; இங்ஙனம் இருக்கையில், துரோணன் கட்டளைப்படி வேட்டைக்குச் சென்ற குருகுல குமாரர்கள் தம்முடன் சென்ற ஒரு நாயின் வாயில் குரைக்க முடியாதபடி ஒருவனால் ஒருங்கே ஏழம்புகள் பிரயோகிக்கப் பட்டமையைக்கண்டு வியந்து நாணி அங்ஙனம் பிரயோகித்தவனை நாடிக் கண்டு விசாரித்துத் துரோண சிஷ்யனென்று அறிந்து மீண்டும் நகருக்கு வந்து நிகழ்ந்த செய்தியனைத்தையுங் குருவினிடம் கூறினர். பின்பு அருச்சுனன் ஏகலவ்யனையே சிந்தித்த வனாய் ஏகாந்தத்தில் துரோணனையடுத்து 'என்னினும் மேம்பட்ட சிஷ்யன் இருக்காமல் என்னைக் கற்பிப்பதாக முன்பு நீர் சொல்லியிருக்க, இங்ஙனம் ஒருவன் உளனே' என்று குறைகூற, துரோணன் சிறிது சிந்தித்துத் தேர்ந்து அருச்சுனனையழைத்துக் கொண்டு ஏகலவ்யனிடம் வந்து, தன்னை வணங்கியுபசரித்த அவனை நோக்கி 'சிஷ்யனாகிய நீ குருவாகிய எனக்குத் தக்ஷிணை கொடுக்கக்கடவாய்' என்ன, அதற்கு அவன் 'என்ன வேண்டும்? கட்டளையிட்டது எதுவாயினும் கொடுப்பேன்' என்றவளவிலே, துரோணன் "உன் வலக்கைக் கட்டைவிரலைக் கொடுப்பாய்" என்று கூற, ஏகலவ்யனும் வாக்குத்தவறாமல் மகிழ்ச்சியோடு அவ்விரலைத் துணித்துக் குருதக்ஷிணை கொடுத்தனன்; பின்பு அவன் மற்றைய விரல்களால் அம்பு தொடுக்கலானானெனினும் முன்போலச் சிறப்புறானென்; அதனால் அருச்சுனன் மகிழத் துரோணனும் அருச்சுனனுக்கு முன்பு சொன்ன சொல் தவறுதவனானென் என்பது.

உம்பர்கோ-இந்திரன்: கலை-கல்வி, மந்திரம். மந்திரத்தால் குந்தி இந்திரனையெண்ணப் பங்குனி யுத்தரத்தில் அருச்சுனன் பிறந்தான் என்பது நினைக. வாய்மை - துரோணன் சொற்ற சொல்; கூ-பூமி: கலை - ஆடை. கூகலை - கடல். கடலின் நிறம். கருமை. ஏகலவ்யன் வேடனாதலின், கரு நிறத்தினன். குகனைப்

பற்றிக் கம்பரும் "அற்காணிற் கண்டனைய அழகமைந்த மேனி யான்" என்றதும் காண்க. அங்குட்டம்=அங்குஷ்டம்: கைப் பெருவிரல். தெக்கிணை-தக்கிணை, தக்ஷிணை: குருவுக்குச் செலுத்த வேண்டிய காணிக்கை. குருபக்திக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டு ஏகலைவன் என்னும் எயினன். (15)

16. அருச்சுனனது வில்திறத்தின் சிறப்பும் அவன் துரோணனை முதலியினின்று உய்வித்தமையும் கூறுதல்.

பிறங்காழி கிணற்றுவிழத் துரோண னீர்க்கின்
பிளவதனற் கரையளவும் பிரயோ கஞ்செய்
திறங்காம லெடுத்துசுதர்க் கிதைசொற் றிவ்வா
லிலைமுழுதுந் துளைத்திடுநீ ரெனுமுன் றெவ்வைப்
புறங்காணு நரன்துளைத்தான் பின்னு மோர்நாள்
புனல்குடையுந் தடத்திடங்கர் பொற்றூள் பற்றத்
திறங்காண்பான் விடுமினெனுங் குருவை யாருந்
திகைப்பவொரு கணையினதைச் செகுத்து மீட்டான்.

(இ-ள்). பிறங்கு-விளங்குகின்ற, ஆழி-மோதிர மொன்று கிணற்று விழ-கிணற்றிலே விழுந்திட, துரோணன்—, ஈர்க்கின் பிளவு அதனல்-அம்பினிறகின் பிளவுபட்ட பகுதியினல், [ஓரம் போடு மற்றோரம்பு இணையும்படி நீளச்செய்து], கரையளவும்-கிணற்றில் தரைமட்டம் வரையில், பிரயோகம் செய்து-தொடுத்து விடுத்து, இறங்காமல் எடுத்து-கிணற்றுக்குள்ளே இறங்காம லேயே அதனை யெடுத்து, சுதர்க்கு இதை சொற்று-குருகுலக் குமாரர்களுக்கு இந்த அத்திரத்தின் திறத்தினை [க்கண்கூடாகக் காட்டி]ச் சொல்லிக்கொடுத்து, (பின்பு அவர்களை நோக்கி) இவ் ஆலிலை முழுதும் நீர் துளைத்திடும்-இந்த ஆலமரத்தினது இலைகளை யெல்லாம் நீங்கள் அம்பு தொடுத்து ஊருருவித் துளைக்கும்படி செய்வீர், எனும் முன்-என்று கூறும் முன்னரே, (விரைந்து), தெவ்வைப் புறங்காணும் நரன்–பகைவர்களை முதுகுகாட்டி யோடும்படி செய்யவல்ல வீரனகிய அருச்சுனன், துளைத்தான்-துளை செய்திட்டான்; பின்னும் ஓர் நாள்-பின்னர் மற்றொருநாள் புனங்குடையும் தடத்து-நீராடுகின்ற நீர்நிலையிலே, இடங்கர் பொன்தாள் பற்ற-முதலையானது [துரோணனது] அழகிய காலைக் கவ்விக்கொள்ள, அதன் பிடியினின்று (துரோணன் தன்னை விடுவித்துக்கொள்ள வல்லவனையினும்) திறம் காண்பான்-தன் சிஷ்யர்களின் திறமையைப் பரீட்சித்துப் பார்க்கும்பொருட்டு,

'விடுமின்' = என்னை முதலியின் வாயினின்று விடுவித்துக் காப்பாற்றுங்கள்', எனும் குருவை-என்று விரைந்து கூறிய குருவை, [காப்பாற்ற முன்வராமல்] யாரும் திகைப்ப-குருகுலக் குமாரர்கள் எல்லோரும் திகைத்துச் சும்மா நிற்க, [அப்போது அருச்சுனன்], ஒரு கணையின்-ஒரு பாணத்தினாலே, அதைச் செகுத்து-அதனைப் பிளந்துதள்ளி, மீட்டான்-குருவை (அதன் பிடியினின்று) விடுவித்துக் காப்பாற்றினான்; (எ-று).

கிணற்றில் விழுந்த மோதிரத்தைத் துரோணன் தான் கற்ற இஷ்காஸ்திரத்தின் வல்லமையால் எடுத்தார் என்றது வியாச பாரதம். [இசிகப்படை என்பதோர் அம்பு கம்பராமாயணத்தில் வந்துளது. "இசிகப்படையெய்தான்" (கம்ப: நிகும்பலை: 130)] ஈர்க்கு-அன்பினிறகு; "சிலைவாளிடமீர்க்கு" (கம்பரந்தாதி, 21) புறங்காணும் - புறங்காணவல்ல என்றபடி, இன்னும் தெவ்வர் ஏற்படவில்லையாதலின். (16)

17. துரோணன் அருச்சுனனுக்கு ஒரு சிறந்த அஸ்திரம் அளித்து, மாணாக்கர் கல்வி நிலைமையை அனைவர்க்கும் காட்டலுறல்.

அன்றிடங்கர் செகுத்திபங்காத் தவன்போ லின்றென்
னுயிர்தந் தோம்பினையென் றரிய வாளி
யொன்றுதவி சுதனினும்பற் குனன்மே லன்புற்
றெழுகியிடுந் துரோணமுனி யொருநாள் மைந்தர்
தன்றிறல்பார்த் திடுமெனவீ டுமனுக் கோதி
தயங்குமணி யரங்கினிடை தக்க நாளிற்
சென்றுபலி கொடுத்தரியோ டுழையை யூருந்
திருப்பரவி யவர்விஞ்ஞை தெரிப்ப தானான்.

(இ-ள்) அன்று - [ஆதிமூலமே! என்று கதறிய] அந்நாள், இடங்கர் செகுத்து - முதலையைத் துணித்து, இபம் காத்தவன் போல் - (கஜேந்திரன் என்னும்) யானையைக் காத்தவனாகிய திருமால்போல, இன்று-இவ்வையநாள், என் ஆருயிர் தந்து-என் அரிய உயிரைத்தந்து, ஓம்பினை-காப்பாற்றினாய், என்று-என்று பாராட்டி, அரிய வாளி யொன்று உதவி - பெறுதற்கரிய அம்பொன்று கொடுத்து, சுதனினும் பற்குனன்மேல் அன்புற்று ஓழுகியிடும்-தன் மைந்தனாகிய அசுவத்தாமனைக்காட்டிலும் அருச்சுனன்மேல் அன்பு பொருந்தி நடக்கலுறும், துரோணமுனி-துரோணாசாரியன், ஒருநாள்—, வீடுமனுக்கு—,'மைந்தர் தன் திறல்

பார்த்திடும்' என ஓதி-'புதல்வர்களது கல்விநிலை வல்லமையைப் பார்த்திடுவீர் நீர்' என்று சொல்லி, மணி தயங்கு அரங்கினிடை-இரத்தினங்கள் விளங்கப்பெற்ற யுத்தரங்கத்திலே, தக்க நாளில் சென்று-நல்ல முகூர்த்தத்தில் போய், பலிகொடுத்து-[கொடுத்தற்கு உரிய] பலியைக் கொடுத்து, அரியோடு உழையை ஊரும் திரு பரவி - சிங்கத்துடனே கலைமானுகிய வாகனத்தையேறி நடத்துகிற துர்க்கையைத் துதித்து, அவர் விஞ்ஞை-அந்தப் புதல்வர்களின் வித்தைத் திறனை, தெரிப்பதானன்-வெளிப்படுத்துவதாயினன்; (எ-று).

திருமாலை யுவமை கூறியது என்னெனின்-அன்று முதலை வாய்ப்பட்ட காலுக்கு யாதோ ரூறுபாடுஞ் செய்யாது அதனைப் பற்றிய முதலையின் வாயையே துணித்துக் குறிக்கொண்டு காத்தமைபோல, இன்று துரோணனது காலுக்கும் யாதோ ரூறுபாடும் நேராதவாறு அருச்சுனன் கணைவிட்டுக் காத்த பெற்றிமை நோக்கி. அரிய வாளி-பிரமசிரஸ் என்னும் அஸ்திரம்; இது தடுக்கவொண்ணாதது, ஒப்புயர்வற்றது. பற்குனன்=பல்குநன்: பங்குனி யுத்தரத்திற் பிறந்தநலை அருச்சுனனுக்குப் பங்குநன் என்று பெயராயிற்று. ஒழுகியிடும்-இடு, துணைவினை. மைந்தர்தன் திறல்-பன்மையொருமை மயக்கம். அரங்கு-ரங்க மென்ற வடசொல்லின் திரிபு; இது-படைக்கலத் திறங்காட்டுதற்கு நிருமிக்கப்பட்ட இடம். துர்க்கை படைக்கலங்கட்கும் போருக்கும் உரிய தலைவியாதலால், யுத்தரங்க பூமியிற்புகும் போது வேண்டிய பலிகொடுத்துத் துர்க்கையைத் துதித்து வணங்கிச் செல்லுதல் மரபு. துர்க்கைக்குச் சிங்கமும் கலைமானும் வாகனமாம். 'மகளிர் யாவரும் இலக்குமியின் சொரூபம்' என்ற கொள்கையைத் தழுவி, துர்க்கையைத் 'திரு' என்றார். அன்றியும், துர்க்கைக்கு வீரலக்ஷ்மியென்று ஒரு பெயரும் உண்டு. விஞ்ஞை-வித்தை: இங்கு வித்தையின் திறனுக்கு ஆகிவந்தது. (17)

18. குருகுலக்குமரர் தமது படைக்கலத் திறமும், குதிரை யானை தேர் நடத்தும் திறமும் காட்டுதல்.

தேசிகர்க ளிருவரையுந் தொழுது மைந்தர்
சிலைவணக்கிக் குணத்தொனியுஞ் செய்து துரோணன்
பேசிலக்க மதையிலக்கில் வாளி யெய்து
பிளந்துபல படைத்திறனும் பின்னுங் காட்டி

வாசிமத கரிகொடிஞ்சித் திண்டே ரேறி
வாயுமன கதிதாழும் வகையூர்ந் திட்டார்
காசினியிற் படைவல்லோர் திகைப்பக் கங்கை
கான்முளையா தியரெவருங் களிப்ப மன்னே.

(இ-ள்). தேசிகர்கள் இருவரையும் தொழுது-தமது ஆசிரியர் களாகிய கிருபன் துரோணன் இருவரையும் வணங்கித் தொழுது, மைந்தர்கள்-குமாரர்கள், சிலை வணக்கி-வில்லை வளைத்து, குணம் தொனியும் செய்து-நாணினுல் ஒலியெழுப்பி, துரோணன்—, பேசு இலக்கம் அதை-குறிப்பிட்டுச் சொல்லுகின்ற இலட்சியத்தை, இலக்கில் வாளி எய்து-இலக்காகக் கொண்டு அதனில் அம்பு தொடுத்து, பிளந்து-அதனைத் துண்டாக்கி, பின்னும்-மேலும், பல படைத்திறனும் காட்டி-பல வகைப்பட்டவையான படைக் கலப் பிரயோகமெல்லாம் திறம்படக் காண்பித்து, காசினியில்-உலகத்திலுள்ள, படைவல்லோர்-ஆயுதங்களிலும் ரதகஜதுர கதங்களைச் செலுத்துதலிலும் வல்லவர்கள், திகைப்ப-அதிசயித்து நிற்கும்படியும், (அதே சமயத்தில்) கங்கை கான்முளை ஆதியர் எவரும் களிப்ப-கங்காபுத்திரனுகிய வீடுமன் முதலானேர் அனை வரும் மகிழும்படியும், வாசி-குதிரைகள், மதகரி-மதம் பெருகப் பெற்ற யானைகள், கொடிஞ்சி திண் தோ-கொடிஞ்சி யென்னும் முன்னுறுப்பினைக் கொண்ட திண்ணிய தேர்கள் இவற்றை, ஏறி-(செலுத்துதற்கு) ஏறி, வாயு மனம் கதி தாழும் வகை-காற்று வேகம் மனோவேகம் என்ற இவைகள் சஞ்சரிப்பும் கீழ்ப்படும் வகையில் (அதிவிரைவாக), ஊர்ந்திட்டார்-(நடை விகற்பங்களைக் காட்டிக்) கடவினர்கள்; (எ-று). மன், ஓ-ஈற்றசை.

துரோணன் பேசு இலக்கம்-பெரிய இலக்கு, மிக நுண்ணிய இலக்கு, அசையும் இலக்கு, அசையாத இலக்கு முதலியன. வாளி யெய்தல்-எடுத்தல், தொடுத்தல், விடுத்தல், மீட்டல் முதலிய நான்கு வகையிலும் கைத்திறன் காட்டுதலோடு மேனேக்கி யெய்தல், நேரே யெய்தல் போன்ற சில வகைகளையும் செய்து காட்டுதல். தேசிகர்-ஆசிரியர்: கிருபரும் துரோணரும். இனி, தேசிகர்-பிதா எனக்கொண்டு, திருதராட்டிரனையும், பிதா மகனுகிய வீடுமனையும் குறிக்கும் என்னலுமாம். குணம்-வில்லின் நாணி, நாண்கயிறு, வில்நாரி. தொனி-டங்காரத்தொனி. வாசிகரி தேர், வாயுமனம்-உம்மைத்தொகை. திகைப்ப, களிப்ப ஊர்ந் திட்டார் என முடிக்க. (18)

வேறு

19. துரியோதனனும் வீமனும் கதைப்போர் தொடங்க, அவர்கள் போரில் மிகுதலே அசுவத்தாமன் விலக்குதல்.

பொங்கரவு சிங்கமெழு துங்கொடியி னுக்கதிபர்
புகர்முகமி ரண்டெ திர்வபோற்
செங்கைகதை கொண்டெதிர்ந டந்துபத சாரியைதி
ரிந்துருமி னெற்றி பொருது
மங்கிருவ ரும்பகைகொ டுப்பொருத வுன்னுபொழு
தப்பரிசு ணர்ந்து வடிவேற்
புங்கவனி கர்த்தகுரு வின்குமரன் வந்திவர்கள்
பொருமுனம்வி லக்கி னனரோ.

(இ-ள்) பொங்கு அரவு-சீறியெழுகின்ற நாகம், சிங்கம்-சிங்க வேறு, எழுதும் கொடியினுக்கு அதிபர்-[இரண்டும் முறையே தனித்தனியே] எழுதப்பட்டிருக்கின்ற கொடிகளையுடைய துரியோதனன் வீமன் இருவரும், புகர்முகம் இரண்டு எதிர்வ போல்=யானைகள் இரண்டு ஒன்றோடொன்று எதிர்க்கின்ற தன்மைபோல, செம் கை-தமது சிவந்த கைகளில், கதை கொண்டு எதிர் நடந்து-கதாயுதத்தை ஏந்திக்கொண்டு ஒருவர்க்கெதிர் மற்றொருவர் நடந்து, பத சாரியை திரிந்து-கால்களையிட்டுப் பல கதி வகைகளைச் செய்து, உருமின் எற்றி-இடிபோலத் தாக்கி, பொருதும்-சண்டையிட்டும், (பின்பு) அங்கு-அந்த யுத்தரங்கத்தில், இருவரும்-இரண்டு பேரும், பகை கொடு-வயிரங்கொண்டு, பொருத-சண்டையிட, உன்னும்பொழுது-எண்ணும்போது, அ பரிசு உணர்ந்து-[அவர்கள் உட்பகைமை கொண்டிருக்கின்ற] அந்த நிலைமையை யறிந்து, - வடிவேல் புங்கவன் - கூரியவேலாயுதத்தையேந்திய பரிசுத்தனாகிய முருகவேளை, (வீரத்தில்) நிகர்த்த-ஒத்திருக்கின்ற, குருவின் குமரன் - அசுவத்தாமன், வந்து - [இவர்களிடை] வந்து, இவர்கள் பொரு முனம்-இந்த இருவரும் மீண்டும் சண்டையில் மோதுதற்கு முன்னம், விலக்கினன் - தடுத்து நிறுத்தினன்; (எ-று). அரோ-சுற்றசை.

துரியோதனனுக்கு-நாகக் கொடி, வீமனுக்கு-சிங்கக் கொடி, புகர்முகம்-முகத்தில் புள்ளியுடையது என யானைக்குக் காரணக் குறி. பதம்-பாதம்; கால், சாரியை=சாரிகை: மண்டலவித கதிகள்: வலசாரி, இடசாரி, மண்டலம், பவுரி என்பன. முருகனையொத்தவன் அசுவத்தாமன்: "கந்தமகவையீன்ற காளகண்டனருளால்,

வந்தமகவு இம்மகவு'' என்றூர் வில்லிபுத்தூரரும் (ஆதி: வாரணவத: 42). துரோண குமாரனுதலின், 'குருவின் குமரன்' என்றது.

இதுவும் அடுத்த கவியும் - பெரும்பாலும் முதலிலந்து சீர்கள் விளங்காய்ச் சீர்களும், மற்றையவை மாச்சீர்களுமாகிய எழுசீராசிரிய விருத்தம். (19)

20. அருச்சுனன் தனது வில்லின் திறமையைக் காட்டவும், அப்பொழுது கர்ணன் எழுந்து சிங்கநாதஞ் செய்தல்.

ஆரியன்வி லோசனமு ணர்ந்தவன டித்தொழுத
டற்சிலைவ ணக்கி திமிரஞ்
சூரியனி பங்கொலைம டங்கலர வங்கருடன்
சோதியழ ரை மெனவே
பேரியச ரங்களவ ணுற்றவர்வி யந்துபுகழ்
பேசும்வகை வீசு நரன்முன்
வீரியமி யம்பியரி நாதமுமி யற்றியவண்
மேவினனி னன்கு மரனே.

(இ-ள்) ஆரியன் - துரோணாசாரியனது, விலோசனம் உணர்ந்து-கண்ணின் குறிப்பையறிந்து, அவன் அடி தொழுது-அவரது திருவடிகளை வணங்கி, அடல் சிலை வணக்கி-வலிய வில்லை வளைத்து, திமிரம் சூரியன்-இபம் கொலை மடங்கல்-அரவம் கருடன்-சோதிஅழல் நாரம் எனவே பேரிய சரங்கள்-இருளும் (அதற்கு மாறான) சூரியனும், யானையும் (அதற்குப் பகையான) கொல்லுந்தன்மையுள்ள சிங்கமும், பாம்பும் (அதற்குப் பகையான) கருடனும், சொலிக்கின்ற அக்கினியும் (அதற்கு மாறான) ஜலமும் என்று பேர்பெற்ற [தெய்வத்தன்மையுள்ள] அம்புகளை, அவண் உற்றவர் வியந்து புகழ் பேசும் வகை-அந்த அரங்கத்திற்கு வந்தவர் அனைவரும் அதிசயித்துத் தன் புகழைச் சிலாகித்துப் பேசும்படி, வீசும்-எய்து அவற்றின் திறத்தை வெளிக்காட்டிய, நரன்முன்-அருச்சுனனுக்கு முன்னர், வீரியம் இயம்பி-தன் வீரத்தனத்தை (பெருமிதந் தோற்றப்) பேசி, அரி நாதமும் இயற்றி-சிங்கநாதமும் செய்து, இனன் குமரன்-சூரிய குமாரனாகிய கர்ணன், அவண் மேவினன்-அங்கு வந்தான்; (எ-று).

அருச்சுனன் முன்பு தானே ஓர் அஸ்திரத்தை எய்து அதன் திறத்தை வெளிக்காட்டி வியப்புண்டாக்கி உடனே அதற்குப் பகையான அஸ்திரத்தைக்கொண்டு தணித்து இங்ஙனமே மிக்க

விநோதக் காட்சிகளை விளைத்தனன்: இதனை அனைவரும் பாராட்டவே கர்ணன் அவனினும் விஞ்சிய தனது விற்றிறமை காட்டுவதாக வீரவாதம் பேசிச் சிங்கநாதமுஞ் செய்து முன்வந்து நின்றான் எனக்கொள்க. விலோசனம்-கண்: கண்ணின் குறிப்புக்கு ஆகிவந்தது. விலோசனம், திமிரம், நாரம், நாதம்-வடசொற்கள். கொலை-மடங்கலுக்கு இயற்கையடைமொழி. நாரம்-நீர், ஜலம். பேசும் வகை வீசு - பிராசம்: இனன் - சூரியன். அரி - சிங்கம், சிங்கநாதஞ் செய்தல் - சிங்கம்போலே கர்ச்சித்துப் பேரொலியெழுப்புதல். (20)

வேறு

21. அருச்சுனனினும் சிறப்பாகக் கர்ணன் தனது வில்திறம் காட்டுதல்-துரியோதனன் களிக்க அருச்சுனன் நாணுதல்,

குந்தி முந்து யிர்த்த மைந்தன் குருவை யுள்ள முள்ளியே
உந்து நாக கேத னுதி யோர் களிக்கப் பற்குனன்
சிந்தை நொந்து நாணு மாறு சிலைவ ணக்கி யவனினும்
விந்தை வாளி சிந்தி கற்ற விஞ்சை யங்கு காட்டினான்.

(இ-ள்) குந்தி முந்து உயிர்த்த மைந்தன் - குந்திதேவி முற்பட்டு முதலில் பெற்றெடுத்த பிள்ளையாகிய கர்ணன், குருவை உள்ளம் உள்ளியே-தனது குருவாகிய பரசுராமனை மனத்தாலே தியானித்து வணங்கி, உந்து நாக கேதன் ஆதியோர் களிக்க-ஊர்கின்ற நாகப்பாம்பினைக் கொடியிலே எழுதிக்கொண்ட துரியோதனாதியோர் மகிழும்படியும், (அதேசமயத்தில்) பற்குனன்-அருச்சுனன், சிந்தை நொந்து நாணும் ஆறு - மனம் வருந்தி வெட்கமுறும்படியும், சிலை வணக்கி-வில்லை வளைத்து, அவனினும் விந்தை வாளி சிந்தி-அந்த அருச்சுனன் விடுத்த அம்புகளினும் விசித்திரமான அம்புகள் பலவற்றை விடுத்தும், கற்ற விஞ்சை-தான் கற்ற வித்தையின் சிறப்புக்களை, அங்கு-அவ்வரங்கத்தில், காட்டினான்-மெய்ப்பித்தான்; (எ-று).

இது முதற்பத்துக் கவிகள் - பெரும்பாலும் ஈற்றுச் சிரொன்று விளச்சீரும், மற்றையாறும் மாச்சீர்களுமாகிய எழுசீராசிரிய விருத்தங்கள். இனி இவற்றை முதல் ஆறு சீர்களையும் மூன்று பெருஞ்சீராகப் பிரித்துக் கலிவிருத்தமென்ன வேண்டுமென்பது ஒருசாரார் கொள்கை. இச் செய்யுட்களில் வந்துள்ள மோனை, எதுகை, பிராசம் முதலியன ஒலிசெய்யும் திறம் பாராட்டத்தக்கது. (21)

22. கர்ணன் அருச்சுனனைத் தன்னோடு தொந்த யுத்தஞ் செய்ய அழைக்க, இருவரிடையே நிகழும் வீர வார்த்தை.

கன்னன் வந்து தன்மு னின்று கார்மு கப்போர்செய்தும்வா
வென்ன வென்னே டமரியற்ற விணைகொ லோநீ யென்றனன்
வன்னி யென்ன வெகுள லும் வலாரி சூனு மமரினின்
சென்னி கொண்ட ரங்க பூசை செய்வ லென்று சீறினான்.

(இ-ள்) கன்னன் வந்து-கர்ணன் வந்து, தன் முன் நின்று-தனக்கு முன்னே நின்றுகொண்டு, கார்முகம்போர் செய்தும் வாவிற்போரிடுவோம் வருவாய், என்ன-அன்று அறைகூவ, (அதற்கு) வலாரி சூனும்-இந்திரன் சிறுவனுகிய அருச்சுனனும், நீ—. என்னோடு அமர் இயற்ற-என்னோடு போர்செய்ய, இணைகொல் ஒசமான மானவனே?, என்றனன்-என்று கூறி, வன்னி என்ன வெகுளலும்-நெருப்புப்போலே சினத்தலும், (கர்ணன்) 'அமரில்-நிகழும் போரில், நின் சென்னி கொண்டு-உன் தலையை வெட்டிக் கைக் கொண்டு, அரங்க பூசை செய்வல் - யுத்தரங்கத்துக்குப் பூசை செய்வேன்,' என்று - என்று சொல்லி, சீறினான் - மிகவும் கோபித்தான்; (எ-று).

அரங்க பூசை செய்வல் என்று சீறினவன் கர்ணன் என்பது அடுத்த செய்யுளால் தெற்றென விளங்கும். வலாரி - இந்திரன்: சூனு-பிள்ளை; எனவே அருச்சுனன், போரிடுபவர் சரிநிகர்சமான மானவராக விருத்தல் வேண்டுமென்பது யுத்த முறை. வன்னி-அக்கினி, நெருப்பு. என்றனன்-முற்றெச்சம்: இஃது 'வெகுளலும்' என்றதனோடு இயையும். (22)

23. அதுகண்டு அனைவரும் திகைக்கக் கிருபன் நீதி கூறத் தொடங்கத் துரியோதனன் அதனை மறுக்கத் தொடங்குதல்.

பருதி மைந்தன் விசையன் மீது படைதொ டங்க யாவரும்
வெருவு மெல்லை கிருபன் வைய வேந்தர் வேந்தன் மைந்தனை
டிரத பாகு மகன்வெ குண்டி யம்ப லேத மென்னவக்
குருவு ளங்தொ திப்ப நாகக் கொடிய னீதி யம்புவான்.

(இ-ள்) பருதிமைந்தன்-சூரிய குமாரனுகிய கர்ணன், விசையன்மீது - அருச்சுனன்மேல், படை தொடங்க - ஆயுதத்தைப் பிரயோகிக்கத் தொடங்க, (அதுகண்டு) யாவரும்-ஆங்குக் கூடியிருந்த அனைவரும், வெருவும் எல்லை-அஞ்சும்போது, கிருபன்-

கிருபாசாரியன் (எழுந்து), வையம் வேந்தர் வேந்தன் மைந்தனோடு-பூமியைக் காக்கின்ற சக்கரவர்த்தியின் குமாரனாகிய அருச்சுனனோடு, இரதம் பாகு மகன்-தேர்ப்பாகனின் மகனாகிய கர்ணன், வெகுண்டு இயம்பல் ஏதம் என்ன-கோபித்து அறைகூவல் குற்றமாகும் என்று சொல்ல, அ குரு உளம் கொதிப்ப-அந்தக் கிருபாசாரியரின் மனம் வெதும்பும்படி, நாகக்கொடியன்-துரியோதனன், ஈது-இந்த வார்த்தைகளை, இயம்புவான் - கூறுவானாயினன்; (எ-று)—துரியோதனன் கூறியதை மேலிக்கவியிற் காண்க.

பாண்டு மைந்தனாயினும், அருச்சுனனைச் சக்கரவர்த்தியாகிய திருதராட்டிரன் மகனாகக் கூறியது பெரிய தந்தை என்ற முறை பற்றி. மற்றும், திருதராட்டிரன் முடிசூட்டப்பட்டானாயினும், கண்ணில்லாதவனாதலால், சேனாபதியான பாண்டுவே ராஜாவாக ஆண்டனனென்று வியாசபாரதம் கூறும். (23)

24. துரியோதனன் இன்னாரின்னார்க்குச் சாதிபேதம் கருதத் தக்கதன்று என்று கூறி, பிறப்பினால் இழிவின்மைக்குச் சில உதாரணங் காட்டல்.

பூத லத்து மன்னர் கற்ற புலவர் வீரர் திறலினோர்க்
கேது சாதி பேத முண்டி ருக்கி லோது நுதல் விழி
யாதி வேயில் வேள்ச ரத்தில் அடிக ளுங்கொ றுக்கையில்
சாத முற்ற தோர்ந்து மிந்தத் தகுதி யோத லாகுமோ.

(இ-ள்) பூதலத்து மன்னர்-உலகத்தில் அரசாட்சிபூண்ட அரசர்களுக்கும், கற்ற புலவர்-படித்த புலவர்களுக்கும், வீரர்-வீரரென்று மதிக்கப்பட்டவர்களுக்கும், திறலினோர்க்கு-தவச் சிரேட்டர்களுக்கும், சாதிபேதம் ஏது உண்டு-சாதி வேற்றுமைகள் எங்கே உள? (கிடையாஃ) இருக்கில்-இருக்குமானால், ஓது-நிரூபித்துக்காட்டிச் சொல்லு (என்று கிருபனை நோக்கிக் கூறி), [மேலும்] நுதல்விழி ஆதி-நெற்றிக் கண்ணையுடைய ஆதியங் கடவுளாகிய சிவபிரானின், சாதம்-[ஜாதம்] பிறப்பு, வேயில்-மூங்கிலிலாகும்; வேள் சரத்தில்-முருகக் கடவுள் நாணலிலாகும்; அடிகளும்-தேவரீரும், கொறுக்கையில்-நாணற்கட்டையிலாகும்; [இங்ஙனம்] (சாதம்) உற்றது ஓர்ந்தும்-பிறப்பெடுத்ததை யறிந்திருந்தும், இந்த தகுதி ஓதல் ஆகுமோ?-இந்தத் தாரதம்மியம் கூறல் பொருத்தமுடையதாகுமோ? (ஆகாது); (எ-று).

ஏது? என்று வினவியபின் 'இருக்கில் ஓது' என்றது-சாதி பேதமின்மையை வற்புறுத்துதற்கு. நுதல்விழி யாதி-சிவபிரான்,

சிவபிரான் மூங்கிலில் தோன்றிய கதை :— அனைத்தும் அழியும் பிரளய காலத்தில் தமக்கும் அழிவு நேரிடுமென்று கவலையுற்று வேதங்கள் பலநாள் சிவபிரானைக் குறித்துத் தவம்புரிந்து அப்பிரானது தரிசனத்தைப்பெற்று "பிரளயகாலத்தில் நீர் தாமிர சபையில் நின்று செய்யுந் திருநடனத்தை நாங்கள் தரிசிக்க வேண்டும்; பிரளயத்திலும் அழிவில்லாத அத்தலத்தில் நாங்கள் மூங்கிலாய் நின்று எப்போதும் நிழலைச்செய்ய, நீர் எங்களிடம் முத்தாய்த் தோன்றி எங்களுக்குப் பிள்ளையுமாகவேண்டும்" என்று வரங்கேட்க, சிவபிரான் அதற்கு இணங்கித் திருநெல்வேலியில் வேணுவனத்தில் மூங்கில் முத்தாகி அம்மூங்கிலின்கீழ் எழுந்தருளியிருக்கின்றனனென்பதாகும். இதனால், அத்தலத்துச் சிவபிரானுக்கு வேணுவன நாதனென்று திருநாமம். **வேள் சரத்தில் தோன்றியது :—** தேவர்கள் வேண்டியபடி சூரபதுமன் முதலிய கொடிய அசுரர்களை அழித்தற்பொருட்டு ஒரு குமாரனை யுண்டாக்கக் கருதிய சிவபிரானது திருமேனியினின்று வெளிப் பட்ட திவ்வியதேஜசை அக்கினியும் வாயுவும் கங்கையிற்செலுத்த, அதனது ஒரு மடுவாய் நாணற்காட்டையடுத்துள்ள சரவணப் பொய்கையினின்று முருகக் கடவுள் தோன்றினனென்பதாம். கிருபர் நாணற்கட்டையில் (கொறுக்கையில்) பிறந்தமை முன் கூறப்பட்டது.

'அடிகள்' என்று உயர்ந்தோரைக் கூறுதல் மரபு. சாதம்= ஜாதம்: பிறப்பு: வடசொல். தகுதி-தகுதியின்மை குறிப்பது. (24)

25. துரியோதனன் கர்ணனை அங்கதேசத்துக்கு அரசனுக்கு தல்.

என்று சொற்றி ராச ராச னிரத பாகன் மைந்தனை
வென்றி கொள்ளு மங்க தேச வேந்த னுக்கு வேனென
மின்ற யங்கு முடிக வித்து விசயன் வீம னஞ்சுமா
ரென்று மெய்யு முயிரு மென்ன வொத்து வாழு நாளிலே.

இதுவும், அடுத்த கவியும்-குளகம்.

(இ-ள்) என்று சொற்று - என்று (கிருபனை நோக்கிக்) கூறி, இராசராசன் - துரியோதனன், இரதம் பாகன் மைந்தனை - தேரோட்டியின் மகனை கர்ணனை, வென்றி கொள்ளும் அங்க தேச வேந்தனுக்குவேன் என - (பிறதேயங்களினும் சிறப்புற்று) வெற்றிகொள்ளும் அங்கதேசத்துக்கு அரசனுக்குவேன் என்று அனைவரும் அறியக்கூறி, மின் தயங்கு முடி கவித்து-ஒளி விடுகின்ற

கிரீடத்தைச் சூட்டி, வீசயன் வீமன் அஞ்சுமாறு-அருச்சுனனும் வீமனும் பயப்படும்படி, (தானும் அக் கர்ணனும்) ஒன்றும் மெய்யும் உயிரும் என்ன ஒத்து-பொருந்திய உடம்பும் உயிரும் ஒன்றோடொன்று இணைந்திருப்பதுபோலே ஒற்றுமைப்பட்டு. வாழும் நாளிலே-வாழ்ந்துவருங் காலத்தில்; (எ-று). —'குரு மைந்தர் தம்மை நாடி' என அடுத்த கவியோடு இயையும்.

"என்னெடு அமரியற்ற இணைகொலோ நீ" (செ: 22) என்று அருச்சுனன் ஏசியதனாலும், கிருபன் 'தேர்ப்பாகன் மகன் வேந்தர் வேந்தன் மைந்தனை அறைகூவியது ஏதம்' என்று குறை கூறியதனாலும், துரியோதனன் கர்ணனுக்கு ஏற்பட்டுள்ள அவ் விழிவுதீர்ந்து பெருமையுறுமாறு அங்கதேசத்துக்கு அரசனாக முடிசூட்டினன். சிவபிரானால் எரிக்கப்பட்ட மன்மதனது அங்கம் வீழ்ந்த இடம், அங்கதேசமாயிற்று. 'ஒத்து வாழும் நாளிலே' என்றதால் கர்ணனுக்கு அர்த்தாசனம் கொடுத்தமை குறிப்பு எனலாம். தன் ஆசனத்தில் அர்த்தாசனம் அளித்து அதில் தன்னுடன் இருத்துதல், அரசர் செய்யும் ஒரு பெருமரியாதை. (25)

26. துரோணன் தனக்குரிய குருதட்சிணைக்கீடு இன்னதெனக் கூற, அதனை முடித்தற்குக் கௌரவ பாண்டவர்கள் பாஞ் சால நாடு போதல்.

படைகள் வல்ல திறலின் வெய்ய
பகையை வெல்வ ரென்றுமாண்
புடைய மைந்தர் தம்மை நாடி
யுரிய தக்கி ணைக்கிடாய்
முடிகொள் யாக சேன னீச்செய்
முனையில் தேரி னெடுகவர்ந்
தடைமி னென்று குருவி டுப்ப
வவர்ப ணிந்து போயினர்.

(இ-ள்) குரு-துரோணாசாரியர், படைகள் வல்ல திறலின்-படைக்கலங்களைப் பிரயோகிக்கவல்ல திறமையினால், வெய்ய பகையை வெல்வர் என்று-கொடிய பகைவர்களையும் அடக்கி வெல்லக்கூடியவர்கள் என்று, மாண்புடைய மைந்தர்தம்மை நாடி-மாட்சிமை பொருந்திய குருகுலக் குமாரர்களையடைந்து, [அவர்களை நோக்கி] உரிய தக்கிணைக்கு இடாய் (ஈடாய்)-குரு வுக்குச் சிஷ்யர்கள் கொடுப்பதற்குரிய தக்ஷிணைக்கு ஈடாக,

முடிகொள் யாகசேனனை-அரசனுகிய துருபதனை, செய் முனையில்-செய்கின்ற போரில். (கொல்லாமல்) தேரினெடு கவர்ந்து-(உயிருடனே) தேரோடு பிணித்துக் கைப்பற்றி, அடைமின் என்று விடுப்ப-திரும்பி வருவீர் என்று சொல்லி அனுப்ப, அவர் பணிந்து போயினர்-அக் குமாரர்கள் [குருவை] வணங்கிப் பாஞ்சால நாட்டுக்குச் சென்றார்கள்; (எ-று).

திறலின்-ஐந்தனுருபு-ஏதுப்பொருளது, வெய்ய-பெயரெச்சம். ஈடாய் என்பது 'இடாய்' எனக் குறுகியது ஒசைநயம்பற்றி. தக்கிணை = தக்ஷிணை: வடசொல். (26)

27. அக்குமாரர்கள் பாஞ்சாலன் ஊரை முற்றுகையிடுதல்.

உந்து தேரி னொதை யும்ப லோதை கற்கி யோதைபோர்
முந்து வீர ரோதை பேரி முதலி யங்க ளோதையாற்
சிந்தி னொதை சிந்த வாளி சிந்த மைந்தர் சீறியே
வந்து தேசி கன்றெ வூர்வ ளைந்து போர்தொ டங்கினர்.

(இ-ள்) உந்து தேரின் ஓதை-செலுத்துகின்ற தேர்களின் ஓசை, உம்பல் ஓதை-யானைகள் பிளிறுகின்ற ஓசை, கற்கி ஓதை-குதிரைகள் கனைப்பின் ஓசை, போர்முந்து வீரர் ஓதை-போரில் முந்துகின்ற வீரர்களின் ஓசை, பேரிமுதல் இயங்கள் ஓதை-பேரிகை முதலான வாத்தியங்களின் ஓசை, ஆல்-இவைகளால், சிந்தின் ஓசை சிந்த-கடலின் ஓசையும் கீழ்ப்படும்படியாக, (அப்போது) மைந்தர் சீறியே-குமாரர்கள் கோபித்து, வாளி சிந்த வந்து-அம்புகள் பொழிய நடந்து வந்து, தேசிகன் தெவ் ஊர்-குருவின் பகைவனுகிய துருபதனின் பாஞ்சல நகரத்தை, வளைந்து-சூழ முற்றுகையிட்டு, போர்தொடங்கினர்-போரை ஆரம்பித்தார்கள்; (எ-று).

நால்வகைப் படைகள் எழுப்பிய ஓசையும் பல போரியங்கள் எழுப்பிய ஓசையும் கடலின் ஆரவாரத்தையும் விஞ்சியன என்றபடி, உம்பல்-யானை; கற்கி-குதிரை. சிந்து-கடல்; சமுத்திரம். இஃது இடைவிடாது எப்போதும் ஒலித்துக்கொண்டிருத்தலின், 'ஆர்கலி' எனப்படும். அந்தக் கடலின் ஓசையும் கீழ்ப்படும்படி பேரொலியெழுந்ததென்றபடி. இதனைப் "படையியங் கரவம்" என்பர். தெவ்-பகைமை: பகைவனுக்குப் பண்பாகு பெயர். மூன்றுமடியில் பயிலும் மெல்லின ஓசைநயம் பாராட்டற் பாலது. (27)

28. அதனையுணர்ந்து யாகசேனன் போருக்குவர, சோமகரோடு கௌரவர்க்கும், யாகசேனனோடு அருச்சுனனுக்கும் போர் நிகழ, அதனில் கௌரவர் பின்னிட, அருச்சுனன் துருபதனைப் பிணித்துக் குருவின்முன் கொணர்தல்.

குருகு லத்து மைந்தர் போர்க்குத் துறுதல்
சோம கேசரோர்ந்
தெரியு குப்ப விருகண் வந்தி யற்று
போரில் கவுரவர்
வெருவி வந்த வழிம டங்க
விசயன் யாக சேனனைக்
குரக தங்கொள் தேர்பி ணித்துக்
குருமுன் விட்டி றைஞ்சினன்.

(இ-ள்.) குருகுலத்து மைந்தர்–குருகுலக் குமாரர்கள் அனைவரும், போர்க்குத் துறுதல்–போரிட நெருங்குதலில, சோமகேசர்–சோமக குலத்து அரசர்கள், ஓர்ந்து-அறிந்து, இருகண் எரி உகுப்ப வந்து–இரண்டு கண்களும் நெருப்பினைச் சொரியச் சினந்து வந்து, இயற்று போரில்–செய்த போரில், கவுரவர்–துரியோதனாதியர், வெருவி-அஞ்சி, வந்த வழி மடங்க-வந்த வழியே மறிந்து ஓட, [அதற்கு மாறாக] விசயன்-அருச்சுனன், யாகசேனனை-துருபதனை, குரகதம் கொள் தேர் பிணித்து-குதிரைகள் கட்டிய தேரோடு (தேர்க்காலோடு) சேர்த்துக்கட்டி, குருமுன் விட்டு-துரோணன் முன் கொணர்ந்து நிறுத்தி, இறைஞ்சினன்-வணங்கினன்; (எ-று.)

துறுதல்-நெருங்குதல்: அடைதல்: "சோர்பொழு தணி நகர் துறுகுவர்" (கம்பரா : திருவவ : 132). பாஞ்சாலராசர்கள், சோமகனென்னும் அரசனது குலத்தவராதலால், சோமகரெனப் பட்டனர்; சோமகன்-துருபதனது பாட்டன். எண்ணில் மிக்கிருப்பினும் ஆற்றலில் மிக்கிலர் என்பது தோன்ற "கவுரவர் வெருவி வந்த வழிமடங்க" என்றது. அருச்சுனனுக்கு 'விசயன்' என்ற சொல்லை இங்கு இட்டுக் கூறியது பாராட்டத்தக்கது. விசயன்-விசேஷமான வெற்றியை யுடையவன் என்று காரணப் பொருள் படும். (28)

29. துரோணன் யாகசேனனைப் பரிகசித்து அவனுக்கு உயிர் வாழ்க்கையோடு பாதியரசும் அளித்தல்.

துருப தேயன் றன்னை நோக்கித்
துரோண னும்புன் முறுவல்செய்
தரச! வென்னை யோர்கி லாதன்
றவம தித்த நின்னையான்
நரனை யுய்த்து வென்று ளேனிங்
நாளி னீயந் நாளெனக்
குரைசெய் ஞால மமையு மற்ற
துதவி னேனின் றுயிரொடே.

(இ-ள்). துரோணனும்—, துருபதேயன் தன்னை நோக்கி-துருபதனைப் பார்த்து, புன்முறுவல் செய்து-இகழ்ச்சிச் சிரிப்புச் செய்து, அரச!-மன்னனே! என்னை ஓர்கிலாது-என் திறமையை அறியமாட்டாமல், அன்று-உன்னை நான் பார்க்கவந்த அன்றைய தினம், அவமதித்த நின்னை-ஏசியிகழ்ந்த உன்னை, யான்-நான், நரனை உய்த்து-(என் மாணக்கனுகிய) அருச்சுனனை யனுப்பி, இந்நாளில் வென்றுளேன்-இன்றைய தினம் [உன்னையும் உன் ராச்சியம் முழுவதையும்] வெற்றிபெற்றுள்ளேன்: நீ—, அ நாள் எனக்கு உரைசெய் ஞாலம் அமையும்-அந்த நாளில் (நாம் அங்கி வேசனிடத்தில் கல்விகற்ற காலத்து) எனக்குக் கொடுப்பதாகச் சொல்லிய பாதியிராச்சியம் போதும், மற்றது-மற்றதோர் பாதியை, இன்று உயிரொடே உதவினேன்-இப்போது உனது உயிரோடு சேர்த்துக்கொடுத்தேன்; [பெற்றுக்கொள்] (எ-று).

இப்பொழுது என் மாணக்கனைக்கொண்டு வென்றதனால், உன் இராச்சியம் முழுவதும் எனக்கு உரியதேயாய்விட்டது. எனினும், "அறையுமொழி தவிர்ந்தனர் யார் நீயோ யானே" என்றதனாலும், "உன் அரசிற்பாதி பெறுவலிஃதுறுதி" என்று சபதங் கூறியதனாலும், அந்த வாக்குத்தவறுமல் ஒரு பாதியையே கொண்டு மற்றப் பாதியை உனக்கே பிரித்துக்கொடுத்திடுவேன் என்பது ஈற்றடியின் கருத்து. பாஞ்சால தேசத்தில் கங்கா நதியின் தெற்கிலுள்ள பகுதியைத் துருபதனுக்குக் கொடுத்து வடக்கிலுள்ள பகுதியைத் துரோணன் தனக்கு உரியதாகக் கொண்டனனென முதனூலால் அறிக. புன்முறுவல்-இகழ்ச்சி தெரிப்பது. அரசே! என்ற விளி-நீ சொன்ன வாய்மை தவறி இங்ஙனம் தோல்வியுற்று அரசர்க்குள் அதமனையினை என்ற இகழ்ச்சி

தோற்றுவிப்பது. 'அன்று அவமதித்தது' என்றது–'' அந்தணர் நண்பு அரசர்க்கு யாது'' என்று ஏசி நகைத்து இகழ்ந்தது. 'நரனையுய்த்து' என்ற சொற்கிடக்கையில் 'சாதாரண மானிடனை' யனுப்பி என்ற குத்தற்பொருளுந் தோன்றும். (29)

30. யாகசேனன் விடுபட்டு அவமானத்தோடு ஊர் சேர்ந்து, துரோணனைக் கொல்ல ஒரு மகனையும், அருச்சுனனை மணக்க ஒரு மகளையும் நல்க வேண்டுதல்.

சேறி யென்ன லோடு நாணி சென்னி தாழ்த்தி யோசனை
நாறு மாலை துருப தேய னகரி மேவி துரோணனைக்
கோறல் செய்யு மைந்த னேடு குனிவில் பற்கு னற்கிதழ்
ஊற னல்க வல்ல கன்னி யொன்று நல்க வேண்டினான்.

(இ-ள்) [உதவினேன் நின் உயிரோடே என்று கூறித் துரோணன் மேலும்] சேறி - உன் ஊர்போய்ச் சேர்வாய், என்னலோடும்-என்று (கட்டவிழ்த்துவிட்டுச்) சொன்னவுடனே, யோசனை நாறு மாலை துருபதேயன்-ஒரு யோசனை தூரம் கமழும் மாலையைத் தரித்த துருபதன், நாணி-வெட்கமுற்று, சென்னி தாழ்த்தி-தலையால் வணங்கி, நகரி மேவி-தனது பாஞ்சால நகரம் புகுந்து,-துரோணனைக் கோறல் செய்யும் மைந்தனேடு-துரோணனைக் கொல்லவல்ல புதல்வனேடு, குனிவில் பற்குனற்கு-வில்லை வளைத்தலில் வல்ல அருச்சுனற்கு, இதழ் ஊறல் நல்க வல்ல, கன்னி ஒன்று-அதரபானம் அருத்தவல்ல ஒரு கன்னிகையையும் நல்க-[தனக்கு] அருளுமாறு, வேண்டினான்-முனிவரரைப் பிரார்த்தித்தான்; (எ-று).

பிரார்த்தித்த முனிவரரின் பெயர் யாசன் உபயாசன் என்பது அடுத்த கவியில் விளங்கும். கோறல் - தொழிற்பெயர்: கொல்-பகுதி: தல்-விகுதி. சேறி-முன்னிலை ஏவல் வினைமுற்று: செல்-பகுதி, இ-விகுதி, த்-எழுத்துப்பேறு. இதழ் ஊறல்-வாலெயிறு ஊறிய நீர். பற்குனற்கு நல்கவல்ல கன்னி-பிறினவிற்சியணி. (30)

வேறு

31. உபயாசனும் யாசனும் துருபதனுக்காகப் புத்திரகாம யாகத்தைச் செய்து முடித்து ஒரு மகனையும் மகளையும் தோற்றுவித்தல்.

அருங்கான் புகுந்தாங் குபையாசன்
யாச னெனும்பே ரருந்தவர்க்கு
வருங்கா ரியஞ்சொற் றிரப்பவவர்
வகுத்தோர் வேள்வி பொருண்மிச்சில்
தருங்கா லியின்மன் னவன்மனைகு
தகமுற் றிடலா லதைத்தழல்பெய்
திருங்கான் முனையோ டொருகொடியை
இறைவன் மகிழத் தோற்றுவித்தார்.

(இ-ள்). (துருபதன்) அருங்கான் புகுந்து-புகுதற்கரிய காட்டிற்புகுந்து, உபையாசன் யாசன் எனும் பேர் அருந்தவர்க்கு-உபயாசன் யாசன் என்ற இருபெருந் தவவிருடியர்க்கு, வரும் காரியம் சொற்று-தான் வந்த காரியத்தின் காரணத்தைச் சொல்லி, இரப்ப-பிரார்த்திக்க, அவர் - அந்த யாச உபயாசர், ஓர் வேள்வி வகுத்து-ஒரு யாகத்தைச் செய்து, பொருள் மிச்சில் தரும் காலியில்-அவியுணவின் சேஷத்தைத் தரப் புகும்போது, மன்னவன் மனை-அந்தத் துருபதனின் மனையாள், சூதகம் உற்றிடலால்-பூப்படைந்தாளாதலால், அதை-சேடித்த அந்த அவிசை, தழல் பெய்து - அக்கினியிலே ஆகுதிசெய்து, இருங்கான்முனை யோடு-சிறந்த புத்திரனோடு, ஒரு கொடியை-கொடிபோன்ற [அழகிய] ஒரு பெண்ணையும், இறைவன் மகிழ தோற்றுவித்தான்-துருபதராசன் களிக்கும்படி பிறப்பித்தான்; (எ-று).

ஓமசேடத்தைக் கொடுக்குஞ் சமயத்தில் அரசன் மனைவி பூப்புற்றிருந்தாளாதலின், முனிவன் மந்திர சுத்தமான அந்த அவிசை அனலிற் பெய்து அங்குநின்று மகனையுண்டாக்கினனென்பது. சேடத்தைக் கொடுக்கப்புகுஞ் சமயத்தில் அரசன் மனைவி செருக்குக்கொண்டு அதனை வாங்கியுண்ணுவதற்கு மறுத்தாள் என்று முதனூல் கூறும். மற்றும், முதனூலின்படி:— கங்காதீரத்திலுள்ள அந்தணர் பலர் வசிக்கும் இடத்தில் யாஜன் உபயாஜன் என்று இரண்டு பிரமவிருடிகள் தவ வொழுக்கத்திற் சிறந்திருந்தனரென்றும், அவர்களுள் மூத்தவனை யாஜன் தலைவனாய் நின்று, இளையவனை உபயாஜனைப் புரோகிதனாகக்

கொண்டு யாகஞ் செய்வித்தனரென்றும் விளங்குகிறது. கொடி-கொடிபோன்ற பெண்ணுக்கு உவமவாகுபெயர்.

இது முதல் ஐந்து கவிகள்-பெரும்பாலும் மூன்று ஆருஞ் சீர்கள் காய்ச்சீர்களும், மற்றையவை மாச்சீருமாகிய **அறுசீராசிரிய விருத்தங்கள்.** (31)

32. திருஷ்டத்யும்நன் திரௌபதி இவர்கள் தோற்றம்.

சிரத்தின் முடிதோள் தனில்வலியஞ்
செவியிற் குழைமெய் தனிற்கவசங்
கரத்திற் சிலையும் வனைந்தனங்கன்
கவினு லயரத் தடந்தேர்மே
லொருத்த னுதித்தா னவன்பின்னர்
உதித்தாள் கரிய குழற்செவ்வாய்
முருத்து முறுவ லொருத்திமலர்
முளரித் தவிசின் மொய்குழல்போல்.

(இ-ள்). சிரத்தில் முடி-தலையில் கிரீடமும், தோள்தனில் வலியம்-தோள்களில் வலியங்களும், செவியில் குழை-காதுகளில் குண்டலங்களும், மெய்தனில் கவசம்-உடம்பில் கவசமும், கரத்தில் சிலையும்-கைகளில் வில்லும், வனைந்து-பூண்டு, அனங்கன்-மன்மதனும், கவினுல்-இவனுடைய பேரழைக்கண்டு அதனுல், அயரமனஞ்சுழல, தட தேர்மேல்-பெரிய தேரின் மேலே, ஒருத்தன்-திருஷ்டத்யும்நன் என்னும் ஒப்பற்றவோர் புதல்வன், உதித்தான்-(ஓமாக்கினியினின்று) வெளிப்பட்டான்: அவன் பின்னர்-அவனுக்கு பின்பு, கரிய குழல்-கருமையான கூந்தலும், செவ்வாய்-சிவந்த வாயும், முருத்து முறுவல்-மயிலிறகினடிபோன்ற வெள்ளிய பற்களையும் உடைய, ஒருத்தி-திரௌபதி என்னும் ஒப்பற்றவோர் பெண், முளரி மலர் தவிசின் மொய் குழல்போல்-செந்தாமரை மலரை ஆசனமாகக்கொண்டு அடர்த்த கூந்தலினையுடைய இலக்குமி போல[ப் பேரழகுடன்], உதித்தாள்-(ஓமாக்கினியினின்று) வெளிப்பட்டாள்; (எ-று).

முருந்து-மயிலிறகினடி: பெண்களின் பற்களுக்கு உவமை கூறப்படுவது. முருத்து-முருந்து என்ற மென்றொடர் வன்றொடராயிற்று. முளரி மலர்த்தவிசு-ஓமாக்கினிக்கு ஒப்பு எனலாம். (32)

33. ஆகாயத்தில் அசரீரிவாக்கு எழல்—துருபதன் மனமகிழ, திருஷ்டத்யும்நன் துரோணனிடம் வில்வித்தை கற்றல்.

முன்ன ரொருத்தி யரக்கர்குல
மூடிக்கப் பிறந்தா ளின்றுமிவண்
மன்னர் குலத்தை முடித்திடுவான்
வந்தா ளெனுஞ்சொல் வானெழுந்த
துன்னும் படிவந் தெய்தலின்வேந்
துள்ள மகிழ்ந்தா னுயர்ந்தவர்பாற்
பன்னுங் கலையுந் தனுமறையும்
பயின்ரு னழலுற் பவஞ்செய்தான்.

(இ-ள்). முன்னர்-முன்பு (திரேதாயுகத்தில்), ஒருத்தி-ஒரு பெண், அரக்கர் குலம் முடிக்க-இராக்கதர் குலம் அழியும்படி, பிறந்தாள்-[பூமியினின்று] தோன்றினள்: இன்னும்-இப்போதும் [துவாபர யுகத்தில்] இவண் மன்னர் குலத்தை முடித்திடிவான்-இப் பூமியில் க்ஷத்திரிய வம்சத்தை அழியும்படி செய்திடுதற்கு, [ஒருத்தி] வந்தாள்-வந்துள்ளாள், எனும் சொல்-என்னும் ஓர் அசரீரி வாக்கு, வான் எழுந்தது-ஆகாயத்தில் உண்டாயிற்று: வேந்து-துருபதராசனும், உன்னும்படி-தான் கருதியபடியே, வந்து எய்தலின்-ஒரு மகனும் ஒரு பெண்ணும் வந்து (தன்னை) அடைந்திடவே, உள்ளம் மகிழ்ந்தான்-மனங்களித்தான்; (இங்ஙனுக) அழல் உற்பவஞ் செய்தான்-அக்கினியினின்று பிறந்த திருஷ்டத்யும்நன், உயர்ந்தவர்பால்-மிகச் சிறந்தவராகிய துரோணரிடத்து, பன்னும் கலையும்-சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற கலைகளையும், தனு மறையும்-தநுர்வேதத்தையும் [வில் வித்தையையும்], பயின்ரு-நன்கு முற்றக்கற்ரு; (எ-று).

பூமியில் தோன்றிய பெண்ணை சீதையால் ராக்ஷசகுலம் முழுவதும் நாசமாயிற்றென்பது, இராமாயணத்தில் பிரசித்தம். யாகாக்னியில் தோன்றிய இந்தத் திரௌபதி நிமித்தமாக நிகழ்ந்த பாரதயுத்தத்தில் பல அரசர்களும் பந்துமித்திர பரிவாரங்களுடன் இறத்தற்கு மூலமாய் நிற்றல், பாரதத்தில் பிரசித்தம். துருபதன் உள்ளம் மகிழ்ந்தது-தான் கருதியபடி பகைவெல்லுதற்கு மகனையும் மணம் முடித்தற்கு மகளையும் தகுதியாகப் பெற்றமையால் என்க. 'உயர்ந்தவர்' என்ற சொல் துரோணரைக் காட்டி வந்தது என்னையெனில், "மரணமிவனுல் தனக்கென்பதுணர்ந்தும் தநுர்வித்தையை மருது கற்பித்துக் கொடுத்தருளினன்'

ஆதலின். 'அழலுற்பவஞ்செய்தான்' என்று திருஷ்டத்யும்நனைச் சுட்டியது, ஒரு கருத்துபபற்றி. அழல் அரணியினின்று தோன்றியே அவ்வரணியை அழிப்பதுபோல திருஷ்டத்யும்நன் துரோண னிடத்தினின்று வில்வித்தை கற்றே பின்பு அவனை அழிப்பவ னாகிறான்: எனவே இத்தொடர்- கருத்துடையடைகொளி. (33)

34-35. இருகவிகள்—ஒரு தொடர்: வியாசன் சொற்படி யோசனகந்தி, அம்பிகை, அம்பாலிகை மூவரும் தவமியற்றி நற்கதி பெறல்.

34. இன்ன வண்ண மிவனிருப்ப
இகனூற் றுவரோ டைவர்பல
மன்னர் வணங்க வாழ்ந்திடுநாள்
மறைநான் கமைத்தோன் வந்தன்னை
தன்னை வணங்கிப் பாண்டவருந்
தகுநூற் றுவருஞ் சமர்புரிவான்
உன்னி யிருந்தா ரெனப்பெரியோர்
உரைக்கும் மாற்றம் பழுதாமோ.

(இ-ள்.) இந்த வண்ணம்-இந்த விதமாக, இவன் இருப்ப-இந்தத் துருபதன் [செயல்களாற்றி] மகிழ்ந்திருப்ப, இகல் நூற்றுவரோடு-[பகைமை கொண்டு] மாறுபடுகின்ற துரியோத னாதியர் நூறுபேரோடு, ஐவர்-பஞ்சபாண்டவர்கள், பல மன்னர் வணங்க-பல அரசர்கள் தங்களைப் பணிய, வாழ்ந்திடும்நாள்-வாழ்ந்துவரும் காலத்தில்,—மறை நான்கு அமைத்தோன்-வேதங் களை நான்காக வகுத்த வியாசன், வந்து-அத்தினபுரிக்கு வந்து, அன்னை தன்னை வணங்கி-தாயாகிய யோசனகந்தியைப் பணிந்து, 'பாண்டவரும் தகுநூற்றுவரும்-பாண்டவரைவரும் கொடுமையில் தகுதிபடைத்த துரியோதனாதியர் நூற்றுவரும், சமர்புரிவான் உன்னியிருந்தார் என-போரிடும் நினைவோடே யிருக்கின்றார்கள் என்று, பெரியோர் உரைக்கும் மாற்றம்-சான்றோர்களாகிய பெரி யோர்கள் சொல்லுகின்ற வார்த்தை, பழுதாமோ-நிறைவேறாது போமோ ? (நிறைவேறியே தீரும்); (எ-று).—'அதனால் இவண் உற்றிடல் நன்றன்று' என மேலிற்கவியில் தொடரும்.

நூற்றைவரைப் பல மன்னர் வணங்கியமை-அவர்களது வீரம் நோக்கி என்க. வியாசனது அன்னை-யோசனகந்தி:

இவனைக் காளியென்றும் சத்தியவதி யென்றும் வழங்குப. தகுநூற்றுவர்-பொறுமை கொடுமை யிவற்றில் தகுதி படைத்தவர் என்க. பெரியோர்-வீடுமன், விதுரன், கிருபன் போன்றோர். (34)

35. அதனை லிவணுற் றிடல்நன்றன்
றடவி புகுந்துன் மருகியரோ
டிதமார் தவஞ்செய் கெனவிடுப்ப
விசைந்த மடவார் மூவரும்போய்
கதமா றியநற் றவஞ்சின்னாள்
களிப்பி னியற்றிக் கனற்கண்ணன்
மதனை ருடல மெரித்தபிரான்
மலர்த்தா ணீழல் வைகினரால்.

(இ-ள்). அதனால் [பாண்டவரும் கௌரவரும்] சமர்புரிவ ராதலினால், இவண் உற்றிடல்-இங்கேயே நகரில் இருத்தல், நன்று அன்று-நன்மை பயவாது; (ஆகவே) அடவி புகுந்து-காட்டுக்குச் சென்று, உன் மருகியரோடு-உனது மருமகள் இருவரோடு, இதம் ஆர் தவம் செய்க என விடுப்ப-நன்மை நிறைந்த தவத்தை, மேற்கொண்டு செய்வாயாக எனச்சொல்லி யனுப்ப, இசைந்த-அங்ஙனமே தவஞ்செய்ய உடன்பட்ட,மடவார் மூவரும் போய்-பெண்டிர் மூன்றுபேரும் சென்று, கதம் ஆறிய நல் தவம்-உக்கிரம் தணிந்த நல்ல தவத்தை, சில் நாள் - சிலதினங் கள், களிப்பின் இயற்றி–மகிழ்ச்சியோடு செய்து, (பிறகு) கனல் கண்ணால் மதனர் உடலம் எரித்த பிரான்-(நெற்றியிலுள்ள) அக்னி சொரூபமான கண்ணினால் மன்மதனை உடலெரிந்து அழியும்படி விழித்த சிவபிரானின், மலர்த்தாள் நீழல்-பூப்போன்ற திருவடி களின் நீழே, வைகினர்-தங்கினர்;(இறந்து கைலாயஞ்சேர்ந்தனர்) (எ–று).

தன் குலத்துப் பிறந்த குமரர்கள் ஒருவரோடொருவர் மாறுபட்டுச் சண்டையிடுவதைக் கண்ணாற் காண்பது நன்றன் றாதலின், அத்தினபுரி நீத்து அடவிசென்று தவஞ்செய்து முத்தி யடைதல் முறையென்று வியாசன் சொன்னபடியே அன்னையாகிய யோசனகந்தி தன் மருகியராகிய அம்பிகை, அம்பாலிகையரோடு காடு புகுந்து, மூவரும் தவமேற்கொண்டு சின்னாள் கழித்து இறந்து சிவபெருமான் திருவடிநீழலை யடைந்தனர் என்பது அறியவேண்டிய விவரம். மருகியர்-விசித்திரவீரியன் மனைவிய ராகிய அம்பிகை, அம்பாலிகை யிருவரும் சந்தனு மனைவியாகிய

யோசனகந்திக்கு மருகியராவர். கதம்-உக்கிரம், கோபம். கதம் ஆறியதவம்-சாந்தம். மதனுர் உடலம் எரித்த பிரான் திருவடியை யடைந்தனர் என்றதால்-இம்மூவரும் காமத்தை வென்று தவஞ் செய்தனர் என்பது குறிப்பு. மலர்த்தாள் நீழல்வைகினர்-பிறிதினவிற்சி.

மதனனை எரித்த கதை: முன்னொரு காலத்திற் கைலாசகிரியிலே பரமசிவன், சனகர் முதலிய நால்வர்க்கு யோக நிலைமையை யுணர்த்துதலினிமித்தம் தான் யோகஞ் செய்துகொண்டிருக்கை யில், பிரமனேவலால் மலரம்புகளை யெய்து தனது தவத்தைக் கெடுக்கலுற்ற மன்மதனைச் சினந்து நெற்றிக் கண்ணை விழித்து அதன் நெருப்புக்கு இரையாய் உடலெரிந்து சாம்பலாய்ப் போம்படி செய்தனனென்பது கதை. (35)

வேறு

36—37. வீடுமன் தருமபுத்திரனை மதித்து, அவனுக்கு இளவரசு முடிசூட்டுதல்.

இருகவிகள்—ஒரு தொடர்.

36. மைந்தர்க ளிற்குரு மாமர போம்பப்
புந்திமி குங்கலை பொற்புடை தூயோன்
உந்தறன் மைந்தனு திட்டிர னென்ன
அந்தக னெடுமவ னனுசனை யாய்ந்தே.

(இ-ள்). [வீடுமன்], அந்தகனெடும்-பிறவிக் குருடனுகிய திருதராட்டிரனேடும், அவன் அனுசனை-அவனது தம்பியான விதுரனேடும், ஆய்ந்தே-ஆராய்ந்து யோசித்து,—மைந்தர்களில்-குருகுல புத்திரர்களில், குரு மா மரபு ஓம்ப-சிறந்த குருவமிசம் கெடாமல் பாதுகாக்க (வல்லவன்), புந்தி மிகுங்கலை பொற்பு உடை தூயோன்-அறிவிற் சிறந்து மிகுகின்ற கலைகளின் அழகினை யுணர்ந்த புனிதனும், அறன் உந்து மைந்தன்-யமதருமராசனுக் குப் பிறந்த குமாரனும் ஆகிய, உதிட்டிரன் என்ன-யுதிஷ்டிரனே [தருமனே] யாவன் என்று நிர்ணயித்து; (எ-று.) "மவுலி புனைந்தனன்" என மேலைக் கவியில் இயையும். இனி, 'யுதிட்டிரன் என்ன ஆய்ந்தே' என்று கொண்டு, மேலைக் கவியில் வரும் "இளவரசிவனென மவுலி புனைந்தனன்" என்று இயைத்துக் கொள்ளலுமாம்.

இது முதல் நான்கு கவிகள்-பெரும்பாலும் நான்காஞ் சீரொன்று மாச்சீரும், மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகிய **கலிவிருத்தங்கள்.** (36)

37. வீடுமன் தருமபுத்திரனுக்கு இளவரசு முடிசூட்டுதல்.

இத்தல மதனினுக் கிளவர சிவனென்
றுத்தம னெனவு திட்டிர னுக்கங்
கெத்தல மும்புக ழெய்திய கங்கை
புத்திரன் மவுலிபு னைந்தனன் மன்னே.

(இ-ள்). எ தலமும் புகழ் எய்திய கங்கை புத்திரன்-எல்லா வுலகத்தாராலும் புகழப்படுகின்ற வீடுமன், இ தலம் அதனினுக்கு-இந்தப் பாரத பூமிக்கு, இளவரசு இவன் என்று-இவன் இளவரச னுவான் என்று [பறைசாற்றி], உத்தமனை உதிட்டிரனுக்கு-மிகச் சிரேட்டனை தருமபுத்திரனுக்கு, அங்கு-அந்த அத்தினபுரி யில், மவுலி புனைந்தனன்-முடிசூட்டினன்; (எ-று). மன், ஓ-ஈற்றசை.

புனைந்தனன்-புனைவித்தனன் என்றபடி. (37)

38. தருமபுத்திரன் இளவரசாயினமைக்கு அனைவரும் மகிழ்தல்.

ஒப்பில்கு ணத்தினு திட்டிர னென்பான்
இப்பெரு முலகினுக் கிளவர சானன்
அப்பக லோகைய டைந்திலர் யாவர்
கைப்புறு தெவ்வர்க ளித்திடின் மன்னே.

(இ-ள்). ஒப்பில்-நிகரற்ற, குணத்தின்-நற்குணங்களால், உதிட்டிரன் என்பான்-தருமபுத்திரன் என்று சிறப்பித்துச் சொல்லப்படுபவன், இ பெரும் உலகினுக்கு-இந்தப் பெரிய (பாரத பூமியாகிய) உலகத்திற்கு, இளவரசு ஆனன்-இளவரசாக முடி சூட்டப்பட்டான்: அப் பகல்-அன்றையதினம், கைப்புறு தெவ்வர் களித்திடின்-வெறுப்புக்கொள்ளும் பகைவருங்கூட மகிழ்ந்தனராயின், ஓகை-உவகை [மகிழ்ச்சி], அடைந்திலர் யாவர்-அடையாதவர் எவர் உளர்? (ஒருவருமிலை; எல்லோ நம் மகிழ்ந் தனர் என்றபடி;) (எ-று). மன், ஓ-ஈற்றசை.

இச்செய்யுள்-கவிக்கூற்று, ஓகை-உவகை யென்பதன் மரூஉ. கைப்பு-கசப்பு: இங்கே வெறுப்பினைக் காட்டுவது. (38)

39. துரியோதனன் மட்டும் பொருமை கொண்டு சகுனி கர்ணன் தம்பியொடு உசாவுதல்.

அரசறன் மைந்தன ளித்தல் பொறுமல்
உரகப தாகையு யர்த்தவன் வெய்யோன்
தருமக னிளவலச் சவுபல னோடு
மொருதின மிரவினு சாவுத லானன்.

(இ-ள்). அறன் மைந்தன்-தருமபுத்திரன், அரசு அளித்தல் பொறுமல்-இளவரசாய் அரசாட்சி செய்தலைப் பொறுக்காமல், உரகபதாகை யுயர்த்தவன்-நாகக்கொடியை யுயரத் தூக்கிய துரியோதனன், வெய்யோன் தரு மகன்-சூரிய புத்திரனாகிய கர்ணன், இளவல்-தம்பியாகிய துச்சாதனன், அ சவுபலன் ஓடு-[வஞ்சனை சூழ்தலில் பிரசித்திபெற்ற] அந்தச் சகுனி மாமன் இவர்களோடு, ஒரு தினம்-ஒரு நாள், இரவின்-இராத்திரியில், உசாவுதல் ஆனன்-ஆராயலானான்; (எ-று).

துஷ்டசதுர்த்தர் கூடி ஆராய்ந்தனர் என்றபடி, நாகக்கொடியோன், வெய்யோன் மகன், அச்சவுபலன், இளவல் (அறிவு முதிராதவன்) என்ற கருத்தில் இச்சொற்கள்வந்து அவர்களது கொடுமையைத் தெரிப்பன. உசாவுதல்-ஆராய்தல். (39)

வேறு

40. துரியோதனன் உசாவ, சகுனி பதில் கூறுதல்.

தருமனுக் கெந்தை யிளவர சரிமை
தந்தன னஃதுமக் கியைபோ?
உரைமினென் றரசங் குசாவலுஞ் சகுனி
யுந்தைதா னவர்வயப் படலான்
அரசனக் குறுமோ வவர்தமக் கேவ
லாற்றுதி யெவ்வணம் வெல்வாய்
குரிசினி யாதல் கனவலோ வாண்மை
கொண்டுமென் பயன்பெறூர்க் கென்றான்.

(இ-ள்) அரசு-துரியோதனன், எந்தை-என் தந்தையாகிய திருதராட்டிரன், தருமனுக்கு—. இளவரசு உரிமை தந்தனன்-இளவரசனுகும் தகுதியைக் கொடுத்துள்ளான்: அஃது-அங்ஙனம் (அவன்) கொடுத்தமை, உமக்கு இயைபோ? - உங்களுக்குச் சம்மதமோ? உரைமின் - சொல்லுங்கள், என்று —, அங்கு – அப்

போது, உசாவலும் – வினவலும், - சகுனி - மாமனுகிய சகுனி (முற்பட்டு) [துரியோதனனே நோக்கி] உந்தைதான்–உன் தந்தை யாகிய திருதராட்டிரன்தான், அவர் வயம்படலான் - அந்தப் பாண்டவர் பக்கல் சார்தலான், அரசு உனக்கு உறுமோ?- அரசாட்சி உனக்கு வருமோ? (வராது); அவர் தமக்கு - அப் பாண்டவர்க்கு, ஏவல் ஆற்றுதி – பணிவிடைகள் செய்யப் போகிறாய்: (ஆகவே) எவ்வணம் வெல்வாய்-எங்ஙனம் [அவர்களை மிஞ்சி] வெல்லப் போகிறாய்: நீ—, குரிசில் ஆதல் கனவலோ - நீ அரசனுதல் கனவலவோ? பயன் பெறூர்க்கு – கருதியபயனைப் பெறுதவர்க்கு, ஆண்மை கொண்டும் என்? - வீரம் இருந்தும் என்ன பிரயோசனம்? (ஒன்றுமில்லை); (எ-று).

சகுனி மாமன் துரியோதனனைக் குத்தலாகச் சொல்லிக் கிளப் பியவகை பாராட்டத்தக்கது. "உந்தைதான் அவர் வயப்பட லான்" என்பது – "உந்தை தானவர் வயப்படலான்" என்றும் ஒலித்தலால், இஃது சாடு. ஏவல்-குற்றேவல்: சிறிய பணிகள். 'கனவலவோ' என்பது 'கனவலோ' எனக் குறுகிற்று. 'வாண்மை' என்று கொண்டால், வாளின் வலிமை என்று பொருள்படும். வணம் - வண்ணம் என்பதன் தொகுத்தல். துரியோதனனை 'அரசு' என்றது திருதராட்டிரன் முதற் புதல்வ னுதல் நோக்கி.

இதுமுதல் இச்சருக்கம் முடியும்வரையுள்ள இருபத்து நான்கு கவிகள் - பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்து ஆறுஞ் சீர்கள் விளச்சீர்களும் ஏனையவை மாச்சீர்களுமாய் வந்த எழுசீராசிரியவிருத்தங்கள். (40)

41. துச்சாதனன் தன் கருத்தைக் கூறக் கர்ணன் அவனை இகழ்தல்.

மாதுல னுரைகேட் டனுசன்முன் னவனை
வணங்கிப்பாண் டவர்க்கர சுரிமை
தாதைதந் திடில்யாம் புரிவதெத் தொழிலோ
தயர்வகன் றிசைத்தவா மிகநன்
ரோதுமங் கவரைக் கரவின்செற் றுலக
மொருங்கடை குவமென வதற்கங்
காதபன் மதலை மிகவெகுண் டரசர்க்
காண்மையீ தாங்கொலென் றறைவான்.

(இ-ள்) மாதுலன் உரை கேட்டு - மாமனுகிய சகுனியின்

பேச்சைக்கேட்டு, அனுசன்–தம்பியாகிய துச்சாதனன், முன்ன வனை வணங்கி - தமையனை துரியோதனனை நமஸ்கரித்து, தாதை–நமது தந்தையாகிய திருதராட்டிரன், பாண்டவர்க்கு—, பாண்டு மைந்தர்க்கு, அரசுரிமை தந்திடில் - குருநாட்டின் அரச வுரிமையைக் கொடுத்திட்டாரானால், யாம்-நாம், புரிவது-செய்ய விருப்பது, எத்தொழில்-என்ன வேலை (குற்றேவலா?) ஒது-(நீ) சொல்லு: (நமது தாதை) அயர்வு அகன்று - (கொஞ்சங்கூட) மனவருத்தங்கொள்ளாமல், இசைத்தவா-[தருமனுக்கு இளவரசு கொடுக்கச்] சம்மதித்துச் சொன்னவகை, மிக நன்று - மிகவும் அழகிது! (நேர்மையன்று): (ஆகவே) ஒதும் அவரை - சிறப் பித்துப் பேசுகின்ற அந்தப் பாண்டவரை, கரவின் செற்று-வஞ்சக வழியால் ஒழித்து, உலகம் ஒருங்கு அடைகுவம்-பூவுலக ஆட்சியை ஒருசேரக் கைக்கொள்வோம், என–என்று வீரவாதம் பேச, அதற்கு - அந்தத் துச்சாதனன் கூற்றுக்கு, அங்கு – அப் போது, ஆதபன் மதலை - சூரிய புத்திரனை கர்ணன், மிக வெகுண்டு-மிக்க கோபங்கொண்டு, 'அரசர்க்கு ஆண்மை ஈதாங் கொல்' - மன்னவர்க்கு [வஞ்சனை வழியை மேற்கொள்வதாகிய] இம்முறைதான் தான் ஆண்மையோ? [வீரமோ?], என்று அறை வான்-என்று கடிந்து கூறலானான்; (எ-று) - கர்ணன் கூறியதை மேலைக்கவிகளிற் காண்க.

ஒது-முன்னிலையேவல் வினைமுற்று. இசைத்தவா, ஆ-ஆறுஎன் பதன் விகாரம். ஒதும் அவரை-பெயரெச்சம்: அங்கு-அசை. கரவு-வஞ்சகம். கொல்-இடைச்சொல், வினுப்பொருளில் வந்தது. (41)

42—44: கர்ணன் கூறிய வார்த்தைகள்—அவற்றைக் கேட்டுத் திருதராட்டிரன் சொற்றது.

மூன்றுகவிகள்—ஒரு தொடர்.

42 அரவினந் தனக்கிங் குவணனஞ் சுறுமேல்
அநுசன்சொற் படிசெய லாமிவ்
விரவினி லவரை யொருகணக் கிரைதந்
திடுவல்யா னரவுதீண் டிடின்மந்
திரமருந் ததனு லொழிப்பரன் றெனின்மாய்த்
திடுமென வுணர்ந்துமொன் னலரைப்
பிரியமுற் றேவல் செயத்துணிந் தனையெண்
பெருந்திறற் பெருமையோர் கிலையே.

(இ-ள்). அரவினம் தனக்கு-பாம்புக் கூட்டங்கட்கு, இங்கு-

இப்போது, உவணன் அஞ்சுறும் ஏல்-கருடன் பயப்படுவானையின், (அப்போது) அநுசன் சொற்படி-தம்பி துச்சாதனன் சொல்லிய வஞ்சக வழியின்படி, செயலாம்-நாம் மாறு செய்யலாம்: (அது வீரர்க்கு அழகன்று): யான்-நான், இ இரவினில்-இன்று இராத்திரியில், அவரை-அந்தப் பாண்டவரை, ஒரு கணைக்கு-(எனது) ஒரு பாணத்துக்கு, இரை தந்திடுவல்-இரையாக்கிடுவேன்: ('ஒரே அம்பினால் அழிப்பேன்'). [உலகோர்] அரவு தீண்டிடின்-பாம்பு கடிக்குமாயின், மந்திரம் மருந்து அதனால் ஒழிப்பர்-அதன் விஷத்தை மந்திரம் (மூலிகையாலான) மருந்து இவைகளால் போக்க முயலுவர்: அன்று எனின்-அங்ஙனம் முயலாது வாளா இருப்பின், [அந்த விஷம்] மாய்த்திடும்-கடியுண்டவரைக் கொன்றுவிடும், என உணர்ந்தும்-என்ற இந்த உண்மையைத் தெரிந்திருந்தும், [அந்த விஷம்போன்று நீக்கவேண்டிய] ஒன்னலரை-பகைவராகிய பாண்டவர்க்கு, பிரியமுற்று-அன்போடு, ஏவல் செய்யத் துணிந்தனை-குற்றேவல்களைச் செய்ய நிச்சயித்துள்ளாய்: எண்-மதிக்கத்தக்க, [உனது] பெருந்திறல் பெருமை-பெரிய வலிமையாலாகிய சிறப்பினை, ஓர்கில்-நீ எண்ணிப் பார்க்க வில்லை; (எ.று) ஏ-ஈற்றசை.

இங்ஙனம் கர்ணன் கூறியது துரியோதனனை நோக்கி. மேலைச் செய்யுட்களும் அவனையே நோக்கியன. முதலடியில் "பாம்புக்குப் பகை கருடன்" என்பது குறிக்கப்பட்டது. (42)

43. திருவினிற் றிறனிற் பெருமையிற் புகழிற்
சேனையிற் சோதரத் தொகையிற்
செருநிலத் தெய்தும் வெற்றியி னின்போற்
சிறந்துளா ரியாரர சறன்சேய்
புரியில்யா னினைஞர் புரிவதென் புனலிற்
பொருந்துமுப் பாயதென் வின்மை
குரிசிறந் தவனுக் கிளவர சன்றிக்
குலத்துதித் தவர்க்குள தாமோ?

(இ-ள்) திருவினில்-செல்வச் சிறப்பில், திறனில்-வலிமையில், பெருமையில்-மேன்மையில், புகழில்-கீர்த்தியில், சேனையில்-(நால் வகைப்) படையில், சோதரத் தொகையில்-உடன்பிறந்தோர் எண்ணிக்கையில், செருநிலத்து எய்தும் வெற்றியில்-போர்க்களத்து அடையும் வென்றிச் சிறப்பில், நின்போல்-உன்னைப் போலே, சிறந்துளார் யார்-மேன்மையுற்றிருப்பவர் யார்? (ஒருவருமிலர்: அங்ஙனிருப்ப), அறன்சேய்-தருமபுத்திரன், அரசு

புரியில்-அரசு செய்வானேயாயின், யான்-(கர்ணனாகிய) நான், இளைஞர்-தம்பியராகிய துச்சாதனன் முதலியோர், புரிவது என்?-செய்யவேண்டிய காரியம் என்ன? (அந்த அரசைமீட்டு உனக்குத் தருவதே: அதனைச் செய்யமாட்டாது) என் வின்மை-எனது வில்லின் வல்லமை, புனலின் பொருந்தும் உப்பாயது-நீரிற் கலந்த உப்புப்போல் மறைந்து கிடக்கின்றது; (வெளிப்படுத்த வேண்டாவோ): குரிசில்-பேரரசனாகிய திருதராட்டிரன், தந்தவனுக்கு-பெற்ற பிள்ளைக்கு, இளவரசு அன்றி-இளவரசு முடி சூட்டுவதல்லாமல், குலத்துதித்தவர்க்கு-குலத்திற்பிறந்த காரணத்தைக் கொண்டு அவர்க்கு (தருமபுத்திரனுக்கு), உளது ஆமோ?-உரித்தாகுமோ? (ஆகாது); (எ-று).

அப்பொடுபெய்த உப்பேபோல என் வின்மை மறைந்து கிடக்கின்றதே! என்கிறான் கர்ணன். உவமை பயனின்மை காட்டவந்தது. குரிசில்-ஆண்பாற் சிறப்புப் பெயர்: இங்குத் தலைவனுக்காகித் திருதராட்டிரனைக் காட்டிற்று, 'இல்' என்ற இடப்பொருளுக்குரிய ஏழனுருபு அடுக்கி இங்கு எண்ணுப் பொருளில் வந்தது. உளாரியார்-"தன்னெழி மெய்ம்மூன் யகரம்வர இகரம் துன்னிற்று". யானிளைஞர்-உம்மைத்தொகை, குரிசில் + தந்தவனுக்கு = குரிசிறந்தவனுக்கு: "னலமுன்றன வும்..... ஆகும் தநக்களாயுங்காலே" என்றது விதி (நன்: மெய்யீற்: 34). (43)

44. தாதைபின் னவன்சொற் றடுக்கொணு தென்றே
தருமன்பா லெத்திறங் கண்டோ
மேதினி யுந்தை யளித்ததென் றினன்சேய்
வெகுளலுந் தனதுதுன் பொருவி
ஆதர வொடுவேந் தவன்றனைத் தழுவி
யறன்மகன் பெறுமர சதனை
யேதுவந் திடினு மாற்றிநின் குடைக்கீழ்
இருத்துவ லுருத்திடே லென்றான்.

(இ-ள்) தாதை-தந்தையாகிய திருதராட்டிரன், பின்னவன் சொல்-தம்பியாகிய விதுரன் சொன்ன வார்த்தைகளை, தடுக்கொணாது என்றே-தடுத்து மீறக்கூடாது என்ற காரணத்தாலோ, (அன்றி) தருமன்பால்-தருமபுத்திரனிடத்து, எ திறம் கண்டோ-என்ன சாமர்த்தியம் தெரிந்தோ, மேதினி-இந்தப் பூமியின் ஆட்சியை, உந்தை-உன் தந்தை, அளித்தது-(தருமனுக்குக்) கொடுத்தது, என்று-, இனன்சேய்-சூரிய குமாரனான கர்ணன்,

வெகுளலும்-கோபங் கொள்ளலும், (அதுகண்டு) வேந்து-பேரரச னாகிய திருதராட்டிரன், தனது துன்பு ஒருவி-தனது துன்பத்தை நீத்து, ஆதரவொடு - மிக்க அன்போடு, அவன்தனைத் தழுவி-(எதிரிலே நின்றிருந்த) துரியோதனனைத் தழுவியனைத்து, அறன் மகன் பெறும் அரசு அதனை-தருமபுத்திரன் பெறுகின்ற அரசாட் சியை, ஏது வந்திடினும் மாற்றி-எத்தகைய தடைகள் வந்தாலும் (பொருட்படுத்தாது அவனிடத்தினின்று) மாற்றி, நின் குடைக் கீழ் இருத்துவல்-உனது கொற்றக்குடையின்கீழே இருக்குமாறு செய்வேன்: உருத்திடேல்-(என்மேல்) சினங்கொள்ளாதே, என் றான்-என்று கூறினன்; (எ-று).

'நின் குடைக்கீழ்' என்றதால் துரியோதனனைத் தழுவிக் கூறியதாகக் கொண்டது. இனி, கர்ணனையே தழுவிக் கூறியதாகக் கொள்ளினும் இழுக்கின்று.

இனன்-சூரியன். துன்பு-துன்பம், இருத்துவல் உருத்திடேல்-பிராசம். (44)

45. திருதராட்டிரனை நோக்கிச் சகுனி கூறுதல்.

அம்மொழி வினவி சவுபல னரசே!
யவ்வகைத் துணிந்திடிற் பெரியோர்
தம்மொழி மறுத்தா ரெனும்பழி சூட்சி
சாற்றுவ னுயொடை வரையும்
நம்மிறை வனைக்கொண் டவர்பிதாக் கதியின்
நண்ணுறுங் காரியங் காட்டிச்
செம்மணி கொழிக்குங் கங்கைசூழ் காசி
சேர்ந்திடச் செலுத்துவை யென்னில்.

(இ-ள்) அ மொழி வினவி - திருதராட்டிரன் கூறிய அந்த வார்த்தையைக்கேட்டு, சவுபலன் - சகுனி, (கூறுவானுயினன்): அரசே! - மன்னனே / அ வகை துணிந்திடில் - துரியோதனன் குடைக்கீழ் ஆட்சியை இருத்துவதாகத் துணிவு செய்திடில், பெரியோர்தம் மொழி மறுத்தார் எனும் பழி (உண்டாகும்)- "பெரியோர்களாகிய வீடுமன் விதுரன் போன்றவர்களுடைய கருத்தை மறுத்தார் மன்னன்" என்ற பழி [ஏற்படும்]: சூட்சி சாற்றுவன் - [அத்தகைய பழியேற்படாதவாறு] ஒரு உபாயத்தை நான் சொல்லுகிறேன்: [அஃதுயாதெனில்], நம் இறைவனைக் கொண்டு-நம் அனைவர்க்கும் தலைவராகிய வீடுமனைக்கொண்டு, ஆயொடு ஐவரையும்-தாயாகிய குந்தியோடு அவளது குமாரர்

ஐவரையும், அவர் பிதா-இறந்துபோன பிதாவாகிய பாண்டு, கதியின் நண்ணுறுங் காரியம் காட்டி-பிதிர்லோகம் அடையும்படியான பிதிர்க்கருமங்கள் செய்யவேண்டிய இன்றியமையாமையைத் தெரியவைத்து, [அந்தப் பிதிர்க்காரியங்களைச் செய்வதற்காகச் சிறந்த இடமாகிய] செம்மணி கொழிக்கும் கங்கைசூழ் காசி சேர்ந்திட-சிவந்த ரத்தினங்களைக் கரையில் ஒதுக்கிக்கொண்டு வரும் கங்காநதி சூழ்ந்த காசி க்ஷேத்திரம் போய்ச் சேர்ந்திடுமாறு, செலுத்துவை என்னில்-அனுப்பிவைப்பாயானால்; (எ-று). "மன்னவர் யாரும் நின் வயப்படுவர்" என மேலிற்கவியில் இயையும்.

சூட்சி-உபாயம். ஆய்-தாய் என்பதன் மரூஉ. கங்கையின் கரையில் காசி க்ஷேத்திரத்தில் பித்ருகாரியங்கள் செய்தால் இறந்துபோன ஆத்மா நற்கதியாகிய மோட்சமடைந்து பித்ருலோகத்தில் (தென்புலத்தார் உலகில்) நிரந்தரமாகக் களிப்புற்று வாழும் என்பது நூற்கொள்கை. [இக்காலத்திலும் காசி, கயா முதலிய க்ஷேத்திரங்களில் பித்ருகாரியங்கள் செய்து வருதலை நோக்குக]. 'காசி' என்று சகுனி இங்குக் கூறியதால். 'வாரணவதம்' என்பது அந்த நகரைக் குறித்தது என்ன வேண்டும். [காசியை வாரணசி என்பது மரபு]. இனி, வாரணவதம் என்பது-அத்தினபுரத்தையடுத்துக் கங்கைக்கரையிலுள்ள பழைய ஊர் என்பது வில்லிபாரதத்தால் தெரியவரும். (பாரத; வாரண: 109). (45)

46. துரியோதனன் தந்தையைநோக்கிக் கூறல்.

மன்னவர் யாரு நின்வயப் படுவர்
வையமு மொருங்குநீ புரப்பாய்
என்னலு மதற்குச் சம்மதித் திருக்கை
யெய்தினர் ஒருதின மரசன்
றன்னுழி துரியோ தனன்புகுந் தைய!
தருமகன் கொடியவ னெனினும்
இந்நிலத் துயிர்த்தோ ரிகழ்ந்திடா ரவரே
யினியதெய் வதமென வுணர்த்தும்.

(இ-ள்) மன்னவர் யாரும்-அரசர்கள் அனைவரும், நின்வயப் படுவர்-உன் அதீனமாவர்: வையமும்-பூமியையும், ஒருங்கு-ஒருசேர முழுவதையும், நீ—, புரப்பாய்-ஆட்சி புரிந்து காப்பாய், என்னலும்-என்று சகுனி சொல்லி முடித்தவுடனே, அதற்குச் சம்மதித்து-அவன் சொல்லியவற்றுக்கு உடன்பட்டு, இருக்கை எய்தினர்-(தத்தம) இருப்பிடஞ்சேர்ந்தனர்; -ஒருதினம்-ஒருநாள்,

அரசன் தன்னுழி - திருதராட்டிரனிடத்திற்கு, துரியோதனன் புகுந்து-துரியோதனன்சென்று, ஐய!-தந்தையே! தருமகன்-பெற்ற பிள்ளை, கொடியவன் எனினும்-தீயவனாயிருந்தாலும், இ நிலத்து-இந்தப் பூமியில், உயிர்த்தோர்-[அந்தப் பிள்ளையைப்] பெற்ற தாய்தந்தையர், இகழ்ந்திடார் - அவனைப் பழிக்கமாட்டார்கள்: அவரே-அத்தகைய [உயர்ந்த] பெற்றோரையே, இனிய தெய்வ தம் என உணர்த்தும்-இனிமை பொருந்திய கடவுளர் என மறைகள் கூறும்; (எ-று).

"மாத்ரு தேவோ பவ பித்ரு தேவோ பவ" என்றதற்குத் துரியோதனன் காட்டும் கட்டளைக்கல் நகைத்து மகிழ்தற் குரியது. (46)

47-48. மேலும் துரியோதனன் கூறலுற, தந்தை அவனை யறிவுறுத்தல்.

இரு கவிகள்—ஒரு தொடர்.

விழைவுறுஞ் சுதரை யிழிவுசெய் திகலே
விளைப்பவர்க் குன்பத மளித்த
தழகெனக் குமர னுரைத்தன னதற்கங்
கரசிரு செவிபுதைத் தெவரிப்
பழிமொழி புகல்வர் உனதெண மிதுவோ
பரதவங் கிடத்தின முந்து தித்தோன்
வழிவழி யுலகம் புரப்பதே யிளைஞர்
மற்றவன் பணியினிற் பதுவே.

(இ-ள்) விழைவுறும் சுதரை-அன்பு செய்து விரும்புகின்ற பிள்ளைகளை, இழிவு செய்து-இழிவாக நடத்தி, இகலே விளைப்ப வர்க்கு-பகைமையையே வளர்க்கின்ற பாண்டவர்க்கு (தரும புத்திரனுக்கு) உன் பதம் அளித்தது-உன் அரச பதவியைக் கொடுத்தது, அழகு - மிகவும் நேர்மையானது! (அழகன்று என்றபடி): என-என்று, குமரன் உரைத்தனன்-துரியோதனன் சொன்னான்; அதற்கு-அந்த மொழிக்கு, அங்கு-அப்போது, அரசு-திருதராட்டிரன், இரு செவி புதைத்து-இரண்டு காதுகளையும் பொத்திக்கொண்டு, எவர் இப்பழிமொழி புகல்வர் - இப்பழிச் சொல்லைச் சொல்பவர் யாவர்? (உன்னையன்றி எவருமிலர்) உனது எணம் இதுவோ? உன்னுடைய கருத்து இவ்வளவு கெட் டுப்போனதோ? பரத வங்கிடத்து - (இந்தப்) பரதவமிசத்தில்,

இனம் - இன்னமும் (இதுவரையில்) மூந்து உதித்தோன்-முன்னர்ப் பிறந்த மூத்தோனது, வழிவழி-வமிச பரம்பரைதான்; உலகம்-இந்தப் பூவுலக அரசாட்சியை, புரப்பது-ஏற்றுப் பாதுகாத்து வருவது: இளைஞர்-தம்பியரானவர்கள், மற்று அவன் பணியினில்-மூத்தோனுகிய அவனுக்குப் பணிவிடைகளைச் செய்வதிலேயே, நிற்பது-நிலைத்து நிற்பது: (இஃது வழக்கம்); (எ-று).

எணம்-எண்ணம்: தொகுத்தல். வங்கிடம் = வங்கிஷம்: வமிசம், இனம்-இன்னம் என்பதன் தொகுத்தல். வழிவழி-பரம்பரை பரம்பரையாக, புரப்பது, நிற்பது-குறிப்பு வினை முற்றுக்கள். (47)

48. அந்தக னெனினு மூந்துதித் தவனே
யரசென நின்சிறு தாதை
யெந்தனை மவுலி புனைந்துல கெல்லா
மென்வயப் படுத்திசொன் மருளுய்
சந்தத மேவற் றொழிலினின் றரசு
தான்புரி வித்தன னவன்போன்
மைந்தநீ தருமற் கேவல்செய் துடனே
மருவிவாழ்ந் திசைபெறு கென்றான்.

(இ-ள்) "அந்தகன் எனினும்-(நான்) பிறவிக்குருடனுனலும் மூந்து உதித்தவனே-முற்பட்டு மூத்தவனுகப் பிறந்தவனே, அரசு என-அரசாட்சிக்கு உரியவனென, நின் சிறு தாதை-உன்னுடைய சிறிய தந்தையாகிய பாண்டு, எந்தனை-என்னை, மவுலி புனைந்து முடிசூட்டி, உலகெல்லாம்-பூமி முழுவதும், என் வயப்படுத்தி-என் அதீனத்தின்கீழ்வைத்து, சொல் மருளுய்-யான் கூறும் வார்த்தைக்கு மறுப்புக் கூறுதவனுய், சந்ததம்-எப்போதும், ஏவல் தொழிலில் நின்று-பணிவிடைகள் செய்யும் கருமத்திலேயே நிலைத்து நின்று, தான் அரசு புரிவித்தனன்-தான் என்னை அரசு செய்யும்படி உதவினன்; அவன்போல்-அந்தப் பாண்டுவைப் போல, மைந்த-குமாரனே! நீ-நீயும், தருமற்கு ஏவல் செய்தேனினக்கு மூத்தவனுகிய தருமபுத்திரனுக்குப் பணிவிடைகள் செய்தே. உடன் மருவி வாழ்ந்து-அவனுடன் (மனம்) பொருந்தி வாழ்ந்து, இசைபெறுக என்றான்-புகழ் பெறுவாயாக" என்று கூறி முடித்தான் (திருதராட்டிரன்); (எ-று.)

சிறு தாதை அரசு புரிவித்தனன் என இயையும். 'உடனே' என்றவிடத்து ஏகாரம் பிரித்து முன்னர் வந்துள்ள 'செய்து' என்பதனோடு கூட்டப்பட்டது. பெறுகென்றான்-வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். எந்தை-யாம் + தன் + ஐ = எந்தை: "யாம் எம் ஆம்" (நன் : உருபு : 8) தன்-சாரியை. (48)

49. தந்தைக்குத் தனயன் துரியோதனன் மறுமொழி கூறல்.

தந்தையீ துரைப்பச் சிந்தை வேறுகித்
தனயனும் குருகுலத் தரசே!
மூந்துநீ புரந்த முறைமையி னுலக
முழுவது மெனக்கலால் அவர்க்கே
துந்தையை முதலோ ரோரமா யுரைத்த
துணர்கிலேத் தருமனுக் கடங்கி
வந்தனை புரிந்து வாழ்தலின் வனத்தின்
மாதவர் பணிநல னென்றான்.

(இ-ள்) தந்தை ஈது உரைப்ப-தகப்பனாகிய திருதராட்டிரன் இதனைச் சொல்ல, சிந்தை வேறுகி-மனம் மாறுபட்டு, தனயனும்-பிள்ளையாகிய துரியோதனனும், குருகுலத்து அரசே!-குருவமிசத்து வேந்தரே! மூந்து நீ புரந்த முறைமையின்-முற்பட்டு நீ காக்கின்ற தகுதியினால், உலகம் முழுவதும்-இந்தப் பூவுலகம் முற்றும், எனக்கு அலால்-(உன் மூத்தபிள்ளையாகிய) எனக்குச் சேர்வதல்லாமல், அவர்க்கு ஏது-அந்தப் பாண்டவர்க்கு எங்ஙனம் சேர்வது? (சேர்வதாகாது): உந்தை முதலோர்-உன் தந்தையாகிய வீடுமன் முதலியோர், ஓரமாய்-பாரபட்சமாய் (ஒருபாற் கோடி), உரைத்தது உணர்கிலை-சொன்னமொழிகளை நீ (ஓர மென்று) தெரிகின்றியில்லை; தருமனுக்கு அடங்கி—, வந்தனை புரிந்து-வணக்கம் தெரிவித்துக்கொண்டு (பணிந்து), வாழ்தலின்-வாழ்ந்து வருதலைக்காட்டிலும், வனத்தின் மாதவர் பணி நலன்-காட்டில் வசிக்கும் சிறந்த தவசியர்க்குப் பணிந்து குற்றேவல் செய்தல் நலம்பயக்கும், என்றான்-என்று கூறிமுடித்தான்; (எ-று).

"மூந்து நீ பிறந்த முறைமையின்" என்றும் பாடமிருக்கலாம். உந்தையை முதலோர்-ஐ-சாரியை. வாழ்தலின், இன்-ஐந்தனுருபு உறழ்பொருவு. (49)

50–51. தந்தை தந்த அரசை எவ்வணம் கவர்வது? என, அதற்குத் துரியோதனன் சூழ்ச்சி சொல்ல, தந்தை கவலையுறல்.

இரு கவிகள்—ஒரு தொடர்.

மதலைசொற் கிரங்கி யருளுளம் வேறுய்
மன்னனு நினதுளங் குமர!
இதுவெனிற் றருமற் களித்திடு மரசை
யெவ்வணங் கவர்வதோ தெனலுஞ்
சுதனதற் குரைப்பான் கடன்முறை பாண்டு
தோன்றலுக் கியற்றுவா னெவர்க்
கிதமொழி புகன்று வாரண வதத்திற்
கின்றவ ளுடன்செலுத் துவையேல்.

(இ-ள்) மதலை சொற்கு இரங்கி-பிள்ளையாகிய துரியோதனன் மொழிக்கு இரக்கப்பட்டு, மன்னனும்-திருதராட்டிர வேந்தனும், அருளுளம் வேறுய்-கருணையுள்ளம் மாறி, 'குமர!-மகனே! நினது உளம் இது எனில்-உனது கருத்து இதுவாகுமானால், தருமற்கு அளித்திடும் அரசை-தருமபுத்திரனுக்குக் கொடுத்திட்ட அரசாட்சியை, எவ்வணம் கவர்வது-எப்படி மீட்டுக் கைப்பற்றுவது? ஓது-[உபாயம்] சொல், எனலும்-என்று கேட்டவுடனே, சுதன்-மகனுகிய துரியோதனன், அதற்கு உரைப்பான்-உபாயம் கேட்டதற்குச் சொல்லுவான்; (பின்வருமாறு): பாண்டு தோன்றலுக்கு-இறந்துபோன பாண்டு ராசனுக்கு, இயற்றுவான்-பிதிர்க்கடன்களைச் [செவ்வனே] செய்யும்பொருட்டு, ஐவர்க்கு இதம் மொழி புகன்று-பாண்டவரைவர்க்கும் நன்மை பயக்கும் வார்த்தைகளைச் சொல்லி. வாரணவதத்திற்கு-காசி க்ஷேத்திரத்திற்கு, ஈன்றவளுடன்-[அவர்களைப் பெற்ற] தாயாகிய குந்தியோடு, செலுத்துவையேல்-அனுப்பிடுவாயானால்; (எ-று).-'உலகம் பரிப்பல் யான்' என மேலைக்கவியில் குளகமாய் இயையும்.

ஓது-முன்னிலையேவல் வினைமுற்று. இயற்றுவான்-வானீற்று வினையெச்சம். ஐவர்-தொகைக்குறிப்பு. (50)

51. துணைவர்மா துலனு ரியன்மகன் கன்னன்
துணையெனக் குறுவர்மற் றெவரும்
பணிதர வுலகம் பரிப்பல்யா னென்னப்
பயந்தவன் பாண்டவ ரவ்வூர்
அணுகில்வே தியரும் விதுரன்வீ டுமனு
மரசரு மவருட னகல்வர்
இணையறு பவரின் றிவணர சாகா
தென்செய்கே னெனச்சுத னுரைப்பான்.

(இ-ள்) துணைவர்-தம்பிமார்கள், மாதுலன்-மாமனுய சகுனி, ஆரியன் மகன்-துரோணரின் குமாரனுகிய அசுவத்தாமன், கன்னன்-கர்ணன் இவர்கள், எனக்குத் துணை உறுவர்-எனக்கு [அரசாட்சியில்] துணைசெய்வர்; (ஆகவே) மற்று எவரும் பணிதர-எல்லோரும் என்னைப்பணிந்து வணங்க, யான்—, உலகம்-இந்தப் பூவுலகத்தை, பரிப்பல்-தாங்குவேன்: என்ன-என்று (துரியோதனன்) கூற, பயந்தவன்-பெற்ற திருதராட்டிரன், பாண்டவர்-பாண்டவரைவரும், அ ஊர் அணுகில்-அந்த வாரணவத நகரம் சென்றுவிடுவாராயின், வேதியரும்-பிராமணர்களும், விதுரன் வீடுமனும்-விதுரனும் வீடுமனும், அரசரும்-ஏனைய தேசத்தரசர்களும், அவருடன்-அந்தப் பாண்டவருடன், அகல்வர்-(கூடவே) நம் நாட்டைவிட்டுப் போய்விடுவர்: இணையறுபவர் இன்றி-ஒப்பற்றவர்களாகிற அவர்கள் இல்லாமல், இவண்-இவ்விடத்து, அரசு ஆகாது-(நமது) அரசாட்சி சிறவாது: என் செய்கேன்-(அப்போது) நான் என்ன செய்வேன், என-என்று தந்தை கூற, சுதன் உரைப்பான்–மகன் பதில் சொல்லலாயினன்; (எ-று) சுதன் கூறியதை மேலிற்கவியிற் காண்க.

வேதியரை முற்கூறியது அவரது மேன்மைநோக்கி, 'பார்ப் பார்க்கல்லது பணிபு அறியலேயே" என்றது பதிற்றுப்பத்து (ஏழாம்பத்து). ஆரியன்-பூசிக்கத்தக்கவன் என்ற பொருளது: இங்கே அந்தணனுகிய துரோணனைக் காட்டி வந்தது. அசுவத்தாமன் எப்போதும் துரியோதனன் பக்கத்தினன். (51)

52. தந்தையின் கவலைக்குத் துரியோதனன் மாற்று காட்ட, அவன் இசைந்து பாண்டவரை வாரணவதம் ஏவ நிச்சயித்தல்.

உந்தனை விதுர னெருவிடா னவரோ
டுந்தைசென் றிடானவன் றனைவிட்
டந்தணன் ஒழியான் அவன்றனைக் கிருபன்
அகன்றிடா னச்சுவத் தாமன்
எந்தனைப் பிரியா னவரையே வெனலும்
இறைவனங் கதற்கிசைந் தொருநாள்
வந்திருந் தவைபாற் றந்தையை முதலோர்
மருங்குறப் பாண்டவர்க் குரைப்பான்.

(இ-ள்) உந்தனை - [தமையனை] உன்னை, விதுரன்—, ஒருவிடான் - விட்டு நீங்கான்; அவரோடு - பாண்டவர்களோடு, உந்தை - உன் பெரியதந்தையாகிய வீடுமன், சென்றிடான் - போக மாட்டார்; அவன் தனை விட்டு-அந்த வீடுமனைவிட்டு, அந்தணன்-துரோணன், ஒழியான்-போகமாட்டான்; அவன்தனைக் கிருபன் அகன்றிடான்-அந்தத் துரோணனைக் கிருபன் விட்டுப் பிரியான்; அச்சுவத்தாமன்-[அவர் பிள்ளையாகிய] அசுவத்தாமன், எந்தனைப் பிரியான் – என்னைவிட்டுப் பிரிந்துபோகமாட்டான்: (ஆகவே) அவரை - அந்தப் பாண்டவர்களை, ஏவு எனலும்-கட்டளையிட்டு வாரணவதத்திற்குச் செலுத்துவாய் என்று சொல்லவும், இறைவன்-திருதராட்டிரன், அங்கு-அப்போது, அதற்கு இசைந்து-அனுப்புவதற்கு உடன்பட்டு, - ஒருநாள் - ஒருதினம், அவைபால் வந்திருந்து - சபையினிடத்து வந்து எழுந்தருளியிருந்து, தந்தை முதலோர் மருங்கு உற-வீடுமன் முதலானவர்கள் பக்கத்திலிருப்ப, பாண்டவர்க்கு—, உரைப்பான் - சொல்லுவானாயினன்; (எ-று).

தந்தையை-ஐ, சாரியை. நீர்+தன்+ஐ=நுந்தனை: "நீர் நும் ஆம்" (நன்: உருபு: 8) தன்-சாரியை. 'நுந்தனை' என்பது 'உந்தனை' என வந்தது. (52)

53. பாண்டு இறந்தது குறித்துத் திருதராட்டிரன் பாண்டவர் முன் கலுழ்தல்.

புந்தியி னிகரி லெம்பிபோல் பவர்கள்
புவியிடத் தின்னமு மொருவர்
வந்துதிப் பவரு முளர்கொலோ கடன்யான்
மாய்ந்தில னவன்செய வெனக்கு

முந்தவ னிறந்தா னெனுமொழி கேட்டு
முடிந்தில னிருந்தனன் பாவி
எந்தனைப் போல்வா ருளர்கொலோ வென்ன
யாவரு மிரங்கிடக் கலுழ்ந்தான்.

(இ-ள்) புந்தியில்-புத்தி கூர்மையில், நிகரில்-ஒப்பற்ற, எம்பி போல்பவர்கள்-என் தம்பியைப் போன்றவர்கள், புவியிடத்து-இந்தப் பூமியில், இன்னமும்-இனிமேலும், ஒருவர்-ஒருத்தர், வந்து உதிப்பவரும்-வந்து பிறப்பவரும், உளர்கொல் ஓ-இருக்கிறாரோ? (இருக்க முடியாது); எனக்கு— கடன்-ஈமக்கடன்களை, செய-அந்தத் தம்பியாகிய பாண்டு செய்யும்படி, யான்மாய்ந்திலன்-நான் (அவனுக்கு முன்னே) இறந்தேனில்லை; முந்து-(எனக்கு) முற்பட்டு, அவன் இறந்தான் எனும் மொழி கேட்டு-அவன் இறந்துபோனான் என்னும் வார்த்தை செவிப்பட்டும், முடிந்திலன் இருந்தனன்-என் உயிரை முடித்துக்கொள்ளாதவனாய் உயிரோடு இருக்கிறேன்: எந்தனைப்போல்வார் பாவி உளர்கொலோ-என்னைப் போல்பவர் பாவஞ் செய்தவர் (உலகில்) உளரோ? (இருக்கமாட்டார்கள்): என்ன-என்று இவ்வாறு அரற்றி, யாவரும் இரங்கிட-சபையில் கூடியிருந்த அனைவரும் இரக்கமுற்று வருந்தும்படி, கலுழ்ந்தான்-கண்ணீர் சொரிந்து அழுதான்; (எ-று).

முடிந்திலன் இருந்தனன்-முற்றெச்சம், (53)

54. திருதராட்டிரன் பாண்டவரைநோக்கி வாரணவதஞ்சென்று பாண்டுவுக்குப் பிதிர்க்கடன் ஆற்றச் சொல்லுதல்.

பூண்டிடு துயர மொருவிமீட் டரசன்
புதல்வரை நோக்கியே யுந்தை
பாண்டுநற் கதியிற் புகுந்தன னெனினும்
பாலனற் கடன்முறை செய்ய
வேண்டுமா தலினும் அன்னையு நீரும்
மேதகு வாரண வதம்புக்
காண்டிருந் துந்தை மகிழ்ந்திடக் கடன்செய்
தரசுநீர் புரந்திடு மென்றே.

(இ-ள்) [பின்னர் ஒருவாறு தேறி] பூண்டிடு-மேற்கொண்ட, துயரம் ஒருவி-வருத்தம் நீத்து, மீட்டு-மறுபடியும், அரசன்-திருத

ராட்டிரன், புதல்வரை நோக்கியே-(தன் தம்பி) புத்திரர்களாகிய பாண்டவரைப் பார்த்து,-உந்தை-உங்கள் தந்தையாகிய, பாண்டு,-பாண்டுராசன், நற்கதியில் புகுந்தனன் எனினும்-நல்ல பித்ரு லோக பதவியை யடைந்தனனெனினும், பாலனல்-புத்திரர்களால், கடன்முறை செய்யவேண்டும் ஆதலின்-பிதிர்க்கடனை முறைப்படி செய்யவேண்டுவது அவசியமாதலின், நும் அன்னையும் நீரும்-உமது தாயாகிய குந்தியும் நீங்களும், மேதகு-மேன்மை தங்கிய, வாரணவதம்புக்கு-(கங்கைக் கரையிலுள்ள) வாரணவதம் என்ற ஊரில் சேர்ந்து, ஆண்டு இருந்து-அவ்விடத்தில் தங்கியிருந்து, உந்தை மகிழ்ந்திட - உம் தந்தையாகிய பாண்டு சந்தோஷமடையும்படி, கடன் செய்து-பிதிர்க்கருமங்களைக் [குறைவறச்] செய்து முடித்து, அரசு நீர் புரந்திடும் - (பின்பு) அரசினையேற்று நீர் ஆட்சிபுரிவீர், என்றே-என்று கூறி; (எ-று). "புரோசனன் றன்னை மந்திரியாகவே பொருத்திட" .. விடுத்தான் என மேலைக் கவியோடு தொடரும்.

உந்தை-உன் தந்தை என்பதன் மரூஉ. நற்கதி-முத்தியெனினுமாம். (54)

55. பாண்டவர் அத்தினபுரி விடுத்து வாரணவதம் புறப்படல்.

மற்றவ ருடனே புரோசனன் றன்னை
மந்திரி யாகவே பொருத்திக்
கொற்றவன் விடுத்தான் அவனுடன் கங்கைக்
குமரன்வில் விதுரனை சிரியர்
பொற்றுணை பதந்தாழ்ந் தங்கவ ராசி
புகன்றிட விடைகொடு தம்மைப்
பெற்றவ ளுடனே பாண்டுதன் புதல்வர்
பெயர்ந்தன ரந்நகர் கடந்தே.

(இ-ள்) கொற்றவன்-திருதராட்டிரன், அவருடனே-அந்தப் பாண்டவருடனே, புரோசனன் தன்னை - புரோசனனென்னும் பேருள்ளவனை, மந்திரியாகவே பொருத்தி-மந்திரியாக நியமித்து, அவனுடன் விடுத்தான்-அந்தத் தருமனுடன் அனுப்பினன்; பாண்டு தன் புதல்வர் - பாண்டவர்கள், கங்கைக்குமரன் வில் விதுரன் ஆசிரியர் பொன்துணை பதம் தாழ்ந்து-வீடுமன் வில்லேந்திய விதுரன் துரோணன் இவர்களது அழகிய இரண்டு திருவடி

களிலும் வீழ்ந்து வணங்கி, அங்கு - அப்போது அவ்விடத்து அவர் ஆசி புகன்றிட - அவர்கள் ஆசீர்வாதமொழிகள் சொல்லிட, விடைகொடு - விடைகொண்டு, தம்மைப் பெற்றவளுடனே - தமது தாயாகிய குந்திதேவியுடனே, அ நகர் கடந்தே பெயர்ந்தனர் - அந்த அத்தினபுரியைத் தாண்டியே சென்றனர்; (எ-று).

'புரோசனன்' - இவனைப்பற்றி வில்லிபுத்தூரர் "பொதுமையிலாத புரோசனனென்னும் மதியுடைய மந்திரி" என்றார்; எனவே நடுவு நிலைமையில்லாதவன். வில்விதுரன் – விஷ்ணு தநுசு, சிவதநுசு இரண்டினுக்கும் ஒப்பான சிறந்த வில்லினையுடையவனதலாலும், விற்றொழிலில் நிகரற்றவனதலாலும் "வில்" என்ற அடைசேர்த்து விதுரனுக்குக் கூறப்பட்டது என்க. கொடு-கொண்டு என்பதன் தொகுத்தல். (55)

56. துரியோதனன் புரோசனனை அரக்கு மாளிகை யமைக்கச் சதி சொல்ல, அவன் விரகறிந்து விதுரன் பாண்டவர்க்கு அறியவைத்து எச்சரித்தல்.

ஆண்டர வுயர்த்தோன் புரோசனன் றன்னை
யழைத்துபாண் டவர்தமை நண்பு
பூண்டிருந் தரக்கின் மனைபுரிந் துறங்கும்
பொழுதழற் கூட்டுவான் கரைத்து
மீண்டனன்அந்தச் சுயோதன னரசால்
விடுத்ததும் புரோசனன் விரகும்
பாண்டவர்க் கறிய விதுரனங் கன்பாற்
பணித்திப நகர்புகுந் தனனால்.

(இ-ள்) ஆண்டு - [அவர்கள் சென்ற] அப்போது, அரவு உயர்த்தோன் - நாகக்கொடியுயர்த்திய துரியோதனன், புரோசனன் தன்னை அழைத்து - புரோசனனுகிய மந்திரியைத் தனியே அழைத்து, பாண்டவர்தமை நண்பு பூண்டிருந்து - பாண்டவர்களோடு சிநேகங்கொண்டிருப்பது போலிருந்து, அரக்கின்மனை புரிந்து - அரக்குமாளிகை கட்டச்செய்து, [அதனில் அவர்கள்] உறங்கும்பொழுது - இரவில் தூங்கும்பொழுது, அழற்கு ஊட்டுவான் கரைத்து - நெருப்புக்கு இரையாக்கும்படி சொல்லி, மீண்டனன் - (தனது அரண்மனை) திரும்பினன்; அந்தச் சுயோதனன்-

அந்தத் துரியோதனன், அரசால் விடுத்ததும் - திருதராட்டிரனைக் கொண்டு [வாரணவதம்] அனுப்பத் திட்டமிட்டதையும் புரோசனன் விரகும்-புரோசனனின் வஞ்சனை உபாயத்தையும், விதுரன் —, அங்கு – அப்போது, அன்பால் - பரிவினால்: பாண்டவர்க்கு அறிய பணித்து - பாண்டவர்க்கு அறியும்படி சொல்லி, இபம் நகர் புகுந்தனன்-அத்தினபுரநகர் திரும்பினான்; (எ–று).

கரைத்து-சொல்லி: "அறங் கரை நாவின்" (தொல்: பாயிரம்) அரசால்-ஆல், கருவிப்பொருளது. இபம்-யானை; அத்தி. (56)

57. தருமபுத்திரன் தாயோடும் தன் தம்பியரோடும் வாரணவத நகர் புகுதல்.

பிரிவினுக் காற்றா துடனகர் மாக்கள்
பெயர்ந்திட வவர்தமக் கினிய
உரைபுகன் றாரிற் புகும்படி நிறுவி
யுதிட்டிரன் கனிட்டரோ டாயும்
பருவம்பார்த் தழலுக் கிடவரு வானும்
படர்ந்திடக் கீற்றிள மதிய
மருவுசெஞ் சடிலத் தெம்பெரு மான்வாழ்
வாரணா வதநகர் புகுந்தான்.

(இ-ள்) நகர் மாக்கள் - அத்தினபுர மக்கள், பிரிவினுக்கு ஆற்றாது-பாண்டவர் தாயோடு பிரிதலுக்குப் பொறுக்க முடியாமல் வருந்தி, பெயர்ந்திட-பின்னால் தொடர்ந்துவர, அவர்தமக்கு இனிய உரை புகன்று - அந்த நகர மக்களுக்கு இனிமையான வார்த்தைகளைச் சொல்லி, ஊரில் புகும்படி நிறுவி-அத்தினபுரியில் சேரும்படி செய்து, யுதிட்டிரன்-தருமபுத்திரன், கனிட்டரோடு-தம்பிமார்களோடு, ஆயும்-தாயும், பருவம் பார்த்து அழலுக்கிட வருவானும் - சமயம் நோக்கித் தீக்கிரையாக்கவெண்ணி வரும் புரோசனனும், படர்ந்திட - கூடவர, கீற்று இள மதியம் - பிறைச் சந்திரன், மருவு-பொருந்திய, சடிலத்து எம்பெருமான்-சடையையுடைய சிவபெருமான், வாழ் - கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற, வாரணவத நகர் - காசி க்ஷேத்திரத்தில், புகுந்தான்-பிரவேசித்தான்; (எ-று).

இந்தப் பாரத நூலாசிரியர் வாரணவதம் என்ற நகரைக் காசி எனவே கொண்டுள்ளார் எனத் தெரிகிறது. வேறு சிலர்

அத்தினபுரியையடுத்துக் கங்கைக்கரையில் உள்ளதோர் நகரம் என்பர். 'அழலுக்கிட் வருவான்' என்று புரோசனனைக் குறித்தது - தொழில் அடியாகக் கொண்டுவந்த பெயர். யுதிட்டிரன் கனிட்டரோடு-பிராசம். (57)

58. வாரணவதத்தில் அரக்கு மாளிகையிலிருந்து கொண்டே அரசு புரிதல்.

இரண்டுகவிகள்—குளகம்.

வயமுறும் பாண்டு வனத்திறந் திடுநாள்
வயதுபன் னிறதாந் தருமன்
கயநக ரெய்தி வருடம்பன் மூன்று
கழிந்தன பங்குனி மதியவ்
வியனக ரடைந்தெம் பரன்பதம் பணிந்து
விரகின்மந் திரிபுரி யகத்தின்
இயலுணர்ந் ததனி லவன்மொழி வழுவா
திருந்தர சியற்றிடு நாளில்.

(இ-ள்) வயம் உறும் - வெற்றியோடிருந்த, பாண்டு - பாண்டு ராசன், வனத்து இறந்திடுநாள்-காட்டிலே உயிர்நீத்தபோது, தருமன் - தருமனுக்கு, வயது பன்னிறதாம் - வயது பதினெறு: கயநகர் எய்தி - அத்தினபுரம் வந்து, வருடம் பன்மூன்று கழிந்தன-பதின்மூன்று வருடங்கள் கழிந்துபோயின: (ஆகவே இருபத்தொன்பதாம் வயதில் தருமன்) பங்குனிமதி - பங்குனி மாதம், அவியன் நகர் அடைந்து - அந்தப் பரந்த வாரணவத நகரம் சேர்ந்து, எம் பரன் பதம் பணிந்து-என்னுடைய மேலான தெய்வமாகிய சிவபெருமானின் பாதங்களை வணங்கி, விரகின் மந்திரி புரி அகத்தின்-வஞ்சனையாக புரோசனன் அமைத்த அரக்கு மாளிகையின், இயல் உணர்ந்து - தன்மைகளையெல்லாம் ஆராய்ந்தறிந்து, அதனில் - அந்த அரக்கு மாளிகையில், அவன் மொழி வழுவாது-அந்த விதுரன் சொன்ன எச்சரிக்கை வார்த்தைகளைக் கருத்திற்கொண்டு பிழைபடாது, இருந்து - வீற்றிருந்து, அரசு இயற்றிடு நாளில் - அரசாட்சி புரிந்து வருங்காலத்தில்' (எ-று). - 'தபதியனெருவன் புகுந்து' என மேற்கவியோடு தொடரும்.

அந்தப் பாண்டவர்கள் பங்குனி மாதம் எட்டாவதுநாள் ரோகிணி நட்சத்திரத்தில் புறப்பட்டு வாரணவதம் போய்ச்

சேர்ந்தனர் என்றது முதலால். கயநகர்-கஜநகர்: அத்தினபுரி. கஜம்-யானை, அத்தி. எம்பரன் பதம் பணிந்து என்றதால்-இந்நூலாசிரியர் சைவப்பற்றுடையவர் என்று தேறுகிறது. மந்திரி புரி அகத்தின் இயல் உணர்ந்து என்றதால்-அந்தப் புரோசனன் அன்புடையான்போன்று அமைத்துக்கொடுத்த அரக்கு மாளிகையின் தன்மைகளையுணர்ந்தார் தருமன்: எப்படியெனில்-நெய் அரக்குகளோடு சேர்ந்த கொழுப்பின் நாற்றத்தை மோந்து இது நெருப்புக்காகச் செய்யப்பட்டதென்று பீமசேனனுக்குச் சொல்லலானார். இந்த வீடு தீப்பிடிப்பதற்கு எளிதாகச் செய்யப்பட்டிருக்கிறது: சணல், குங்கிலியம், முஞ்சம்புல், விழல், மூங்கில், முதலான பொருள்களையெல்லாம் நெய்யில் நனைத்து இந்த வீடு கட்டப்பட்டுள்ளது: மேலும், இந்த வீட்டைச் சுற்றிலும்கூடத் தீப்பிடிக்கத்தக்கவையான புல், விழல், பருத்தி, மூங்கில், மரம், பாய் இவைகளும் போடப்பட்டிருக்கின்றன என்றார். (58)

59. சிற்பியொருவன் வீமனிடம் வந்து ஒரு செய்தி சொல்லல்.

பூமனி லதிகன் றபதிய னொருவன்
புகுந்துவீ மனைப்பணிந் தழைத்திம்
மாமனை யரக்கி னியற்றுநா ணீருய்
வானருள் விதுரனே வலின்யான்
தோமறு தொழில்செய் பவரறி யாமற்
சுரங்கமொன் றியற்றின னதற்குப்
போமது வழியித் தூண்பறித் தெய்தில்
புகுந்திடுங் கானகத் தென்றான்.

(இ-ள்) பூமனில்-பிரமனைக்காட்டிலும், அதிகன்-மேம்பட்டவனை, தபதியன் ஒருவன்-சிற்பியொருத்தன், புகுந்து-அந்த மாளிகையினுள் வந்து, வீமனைப் பணிந்து-பீமசேனனை வணங்கி, அழைத்து-தனியே கூப்பிட்டு, இ மா மனை-இந்தப் பெரிய மாளிகை, அரக்கின் இயற்றும் நாள்-அரக்கினாலே செய்யப்பட்ட போது, நீர் உய்வான்-நீங்கள் உயிர்தப்பிப் பிழைக்கும்படி, அருள்விதுரன்-கருணையுள்ளம்படைத்த விதுரனின், ஏவலின்-கட்டளைப்படி, யான்-நான், தொழில் செய்பவர் அறியாமல்-பிற சிற்பியர் வேலை செய்பவர்கள் அறியாதபடி இரகசியமாக, தோம் அறு சுரங்கம் ஒன்று-குற்றமற்ற நிலவறை வழியொன்று, இயற்றினன்-செய்துள்ளேன்: அதற்குப் போமது வழி-அந்த நிலவறைக்குப் போகும்வழி, இ தூண்பறித்து-இந்தக் கம்பத்தை (வலிமைகொண்டு) பெயர்த்தெடுத்து (விடுதலாகும்): எய்தில்-

அச்சுரங்கவழிபோனால், கானகத்து புகுந்திடும்-காட்டில் கொண்டு சேர்க்கும், என்றான்-என்று கூறினன்: (எ-று)

பூமன்-பிரமன்: சிருட்டிக்குமவன். தபதியை அவனைக் காட்டிலும் அதிகன் என்றது-பாண்டவர்க்கு அனுகூலமாக விதுரனிட்ட கட்டளையைப் பிறரறியாமல் நிறைவேற்றிய வல்லமையுடைய சிற்பியாதலின் என்க. ஸ்தபதியென்ற வடசொல், தபதியென விகாரப்பட்டது: அதன்மேல் அன்-ஆண்பால் விகுதி. வீமனிடம் கூறியது ஏனென்னில் - ஆற்றலிற் சிறந்த அவனே பாண்டவரை வரையும் காக்கும் உபாயத்தைக் கூறக் கேட்டற்கு உரியனென் பதுபற்றி. உய்வான் - வானீற்று வினையெச்சம். தோம் - தோஷம்: குற்றம். (59)

60-61. வீமன் தபதிக்குப் பரிசளித்து விடுப்ப, பாண்டவர் பகலில் வேட்டையாடி இரவில் விழிப்புடன் இருத்தல்.

இரு கவிகள்—ஒரு தொடர்.

என்றதன் சூட்சி புகன்றிடுந் தபதிக்
கின்புறப் பரிசளித் தேவி
வன்றழ லிடுவான் பருவம்பார்த் திருக்கு
மந்திரிக் கினியரா யொழுகிச்
சென்றுநா டோறும் வனத்திடை வேட்டஞ்
செய்திர வொருபகல் துயிலற்
றொன்றியங் கொருஞான் றைவரு மிரவி
லுவனெடு மரசிய லுசாவி.

(இ-ள்) என்று-, அதன் சூட்சி-அந்தச் சுரங்கத்தின் வழியே உய்யும் உபாயத்தை, புகன்றிடும்-சொன்ன, தபதிக்கு-சிற்பிக்கு, இன்புற-அவன் மகிழும்படி, பரிசளித்து ஏவி-பரிசு கொடுத்து அனுப்பிவிட்டு. வன் தழல் இடுவான்-கொடிய நெருப்பை வைப்பதற்கு, பருவம் பார்த்திருக்கும் மந்திரிக்கு - சமயம் பார்த்துக் கொண்டிருக்கும் புரோசனனுக்கு, இனியராய்-நண்பராய், ஒழுகி-நடந்துவந்து, நாடோறும் வனத்திடை சென்று-தினந்தோறும் [பகலில்] காட்டினுக்குப்போய், வேட்டம் செய்து-வேட்டையாடி விட்டு, இரவொடு பகல் துயில் அற்று - இராத்திரியோடு பகற் பொழுதும் வாசியறத் தூக்கமின்றி, ஒன்றி-பொருந்தியிருந்து, அங்கு அப்போது, ஒருஞான்று-ஒருநாள், ஐவரும்-பாண்டவர்கள் ஐந்துபேரும், இரவில் - இராத்திரியில். உவனுடன் - புரோசன

னுடன், அரசியல் உசாவி - அரசாட்சி விஷயங்களைப்பற்றி ஆராய்ந்து. (எ-று),—'இவணீ துயிலென' என மேலேக்கவியில் தொடரும்.

வேட்டையென்ற வியாஜத்தினால் பகலையும். கண் விழிப் பினால் இரவையும் போக்கினர் பாண்டவர்: இங்ஙனம் இவர் செய்தது, எக்காலத்துப் புரோசனனால் தீங்குவினையுமோ என்ற அச்சத்தினாலென்க. உசாவி - உசாவுவதுபோல் நீளிரவாக்கி என்பது குறிப்பெச்சம். (60)

61. புரோசனனை அருகில் படுக்கவைத்து, வீமன் அரக்கு மாளிகையில் தீப்பற்ற வைத்துத் தன்னை வரையும் தாயையும் உடன்கொண்டு சுரங்கவழியே சென்று காடடைதல்.

எம்முட னிவணீ துயிலென வவ்வதக்
திவர்களுஞ் சேக்கையி னிருப்ப
அம்முறை யமைச்சன் றுயிலுழி வீமன்
அம்மனை விருந்துசெய் தழற்குத்
தம்முனை டிளைஞர் தாயையுங் கொண்டு
சாற்றுதூண் பறித்தது வழியாய்க்
கம்மியன் வகுத்த நிலவறை நொடியிற்
கடந்துகானடைந்தன னன்றே.

(இ-ள்) எம்முடன்-எங்களுடனருடன், இவண்-இவ்விடத்து அரக்கு மாளிகையில், நீ—, துயில் என - தூங்குவாயாக (எனப் புரோசனனுக்குக்கூறி) அவை தந்து-படுக்கையைக் கொடுத்து, இவர்களும்-இந்த ஐந்துபேர்களும், சேக்கையின் இருப்ப-படுக்கை யில் படுத்திருப்ப, அ முறை-அவர்கள் கூறியபடியே, அமைச்சன்-மந்திரியாகிய புரோசனன், துயிலுழி-(நன்றாகத்) தூங்கும்போது, வீமன்-வீமசேனன் (எழுந்து), அ மனை-அந்த அரக்கு மாளிகையை, அழற்கு விருந்து செய்து-தீக்கிரையாக மூட்டி, தம் முன்னுடன்-தன் தமையனாகிய தருமபுத்திரனோடு, இளைஞர் - தம்பியர்களையும், தாயையும்-குந்திதேவியையும், கொண்டு - உடன் அழைத்துக் கொண்டு, சாற்று தூண்பறித்து - (தபதி முன்னர்க்) கூறிய கம்பத்தைப் பெயர்த்து, அது வழியாய் - (அந்தக் கம்பத்தின்கீழ் அமைத்து வைத்துள்ள) துவார வழியாய், கம்மியன் வகுத்த நிலவறை நொடியில் கடந்து-தபதி கூறுபடுத்திவைத்த சுரங்கப் பாதையினை இமைப்பொழுதினில் தாண்டி, கான் அடைந்தனன்-காட்டினையடைந்தான்: (எ-று) அன்றே - தேற்றம்.

வீமன் அடைந்தனன் என இயையும். காரணமின்றியழைத்து ''எம்முடன் இவண்நீ துயில்'' என்று கூறின் ஐயமுறுவானென்று கருதி, அரசியலுசாவுவார்போன்று அழைத்து நெடும்பொழுது உசாவிப் பின்பு அங்ஙனம் கூறினரென்க. எரித்து என்ற பொருளில் 'தமற்கு விருந்து செய்து' என வேறு வாய்பாட்டாற் கூறினது, பிறிதினவிற்சியணி. வீமன் அடைந்தகான் - இடிம்பவனம் ஆகும். பறித்து அது வழியாய் - அது, நெஞ்சறிசுட்டு. இனி, பறித்தது என்பதைக் குறிப்பு வினையாலணையும் பெயராய்க் கொண்டு பறித்ததாலேற்பட்டதுவாரம் எனப் பொருள் கொள்ளலுமாம். (61)

62. நகரத்தவர் கண்டு பாண்டவரும் குந்தியும் எரிந்தனரென்று அழுதல்.

செஞ்சுட ரெழுமுன் னெழுந்திடு நகரோர்
செஞ்சுட ரருந்தக நோக்கி
நஞ்சிடப் புகுந்த தாயொடும் வேடர்
ஐவரும் புரோசனன் றானுங்
துஞ்சிய துணரா தைவரு மாயுந்
துஞ்சினர் சுயோதனன் புரிந்த
வஞ்சனை தனிலென் றுளம்பதைத் தழுதார்
மற்றவர் செயலறி யாதே.

(இ-ள்) செஞ்சுடர் எழுமுன் எழுந்திடு நகரோர்-சூரியன் உதிப்பதற்குமுன் தூங்கியெழுந்திடுகின்ற நகரத்து சனங்கள், செஞ்சுடர் – சிவந்த நெருப்பு, அருந்து - உண்ட, அகம் - அரக்கு மாளிகையை, நோக்கி-பார்த்து,-நஞ்சிடப் புகுந்த-விஷத்தைக் கொடுத்துப் பாண்டவரைக் கொல்லும் எண்ணத்தோடு வாரணவதம் வந்து அரக்கு மாளிகையிற் புகுந்த, வேடர் ஐவரொடு தாயும்-ஐந்து வேட்டுவர்களோடு அவர்கள் தாயும், புரோசனன் தானும்-புரோசனனும், துஞ்சியது உணராது-வெந்து இறந்து போனதை அறியாமல், சுயோதனன் புரிந்த வஞ்சனைதனில்-துரியோதனன் செய்த வஞ்சகச் சூழ்ச்சியால், ஐவரும் தாயும் துஞ்சினர்-பாண்டவரைவரும் தாயாகிய குந்தியும் எரிந்து இறந்தனர், என்று-என்று எண்ணி, உளம் பதைத்து-மனம் பதறி, மற்று இவர் செயல் அறியாதே-மற்று இந்தப் பாண்டவர் தாமே தீக்கொளுவித் தப்பிச் சென்று உய்ந்த செயலை அறியமாட்டாதே, அழுதார்-கதறியழுதார்கள்; (எ-று).

செஞ்சுடர்-சூரியன், அக்கினி இரண்டினையும் ஒப்பக் காட்டி வந்தது. அகம்-மனை, மாளிகை. பாண்டவர்க்கு விஷம் கலந்த தேனைக் கொடுத்துக் கொல்லும்படி துரியோதனனால் அனுப்பப் பட்ட ஐந்து வேடர்களும் அவர்கள் தாயும் அன்று அங்கு வந்திருந்து தீவாய்ப்பட்டு இறந்தனரென்பது அறியவேண்டிய விவரம். 'தாயொடும்' என்ற இடத்து 'ஒடு' பிரித்துக் கூட்டப் பட்டது. துஞ்சியது உணராது - குறிப்பு வினையாலணையும் பெயர். (62)

63. இச்செய்தியறிந்து துட்டசதுர்த்தர் விதுரன் தவிர, ஏனையோர் பலரும் வருந்துதல்.

எரிக்குண வாளர் ராயொடு மைவ
ரெனுமொழி கேட்டலு மறமே
யுருக்கொளும் விதுரன் சவுபல கன்ன
னுரககே தவன்பிளே னன்றி
தரிக்கிலா துன்பக் கடலழுந் தினரந்
தகனும்வீ டுமனுமா ரியருந்
திருக்கிளர் நகரின் மாக்களுங் கடல்சூழ்
செகதலத் தரசரு மம்மா.

(இ-ள்) ஆயொடும் ஐவர்-தாயோடும் பஞ்சபாண்டவர்கள், எரிக்கு உணவானர்-தீக்கு இரையாயினர், எனும் மொழி கேட்டலும்-என்னும் வார்த்தை செவிப்பட்டவுடனே, அறமே உருக் கொளும் விதுரன்-தருமசொரூபியான விதுரன், சவுபலன்-சகுனி மாமன், கன்னன்-கர்ணன், உரக கேது-நாகக் கொடியையுடைய துரியோதனன், அவன் பினேன்-அவன் தம்பியாகிய துச்சாதனன், அன்றி-இவர்களைத்தவிர, அந்தகனும்-பிறவிக் குருடனாகிய திருதராட்டிரனும், வீடுமனும் - பீஷ்மனும், ஆரியரும் - துரோணாசாரியரும், திருகிளர் நகரின் மாக்களும்-செல்வச்சிறப்பினால் விளங்குகின்ற அத்தினபுர நகர மக்களும், கடல்சூழ் செகதலத்து அரசரும்-கடலால் சூழப்பட்டுள்ள பூவுலகத்து மன்னர்களும், தரிக்கிலா-(இந்தச் செய்திகேட்டுப்) பொறுக்கமுடியாத, துன்பக் கடல் அழுந்தினர்-துக்கசாகரத்தில் மூழ்கினர்; (எ-று). அம்மா-இரக்கக் குறிப்பிடைச்சொல்.

விதுரன் வருந்தாததற்குக் காரணம்-தான் சொல்லி அனுப்பிய தபதியமைக்கும் சுரங்கப்பாதை வழியாக நிச்சயம் பாண்டவர் தாயுடன் தீக்கிரையாகாது உயிர் தப்பியிருப்பர் என்ற உறுதி: துட்டசதுர்த்தர் வருந்தாமைக்குக் காரணம் வெளிப்படை. கேது-கொடி. பிறேன்-பின்னேன் என்பதன் தொகுத்தல். விதுரன், சவுபலன், கன்னன், உரககேது, அவன் பிறேன்-இப்பெயர்களின் பின் உம்மை தொக்கது. தரிக்கிலா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (63)

வாரணவதச் சருக்கம் முற்றிற்று.

பதினன்காவது

வேத்திரகியச் சருக்கம்

வேத்திரகியம் என்னும் இடத்தில் நிகழ்ந்த செய்கையைச் சொல்லும் சருக்கமென்பது பொருள். இடத்தின் பெயர் இடத்து நிகழும் நிகழ்ச்சிகளின் மேலாகி வந்தது. பாண்டவரும் குந்தியும் இடிம்பவனம் சேர்ந்தது, அங்குத் தம்மைக் கொல்லும்படி இடிம்பனென்னும் அரக்கனால் அனுப்பப்பட்ட இடிம்பி வந்து வீமனைக்கண்டு காமுற்றது, அதுகண்டு கோபித்து வந்த இடிம்பனை வீமன் கொன்றது, பின்னர்த் தாயின் சொற்படி வீமன் இடிம்பியை மணந்தது, வியாசர் வந்து பாண்டவரைச் சாலி கோத்திர முனிவன் சூழல் சேர்ந்திருந்து பின்னர் வேத்திரகியம் செல்லச்சொல்லி இதோபதேசம் செய்தது, இடிம்பி கடோற் கசனைப் பெற்றது, பாண்டவர் அந்தணர்வேடம் பூண்டு வேத்திர கியஞ் சார்ந்து ஓர் அந்தணன் மனையில் வசிக்கையில் அவ்வூர வர்க்கு இடையூறு விளைத்துவந்த பகாசுரனை வீமன் போரிட்டுக் கொன்றொழித்தது, துருபதன் திரௌபதிக்குச் சுயம்வரங் குறிக்க, அதனைச் செவியுற்ற பாண்டவர் பாஞ்சால நகரத்திற்குப் பிரயாணப்படுதல் முதலியன இச்சருக்கத்துக் கூறப்படும்.

வேறு

1. வீமன் உடன்பிறந்தோரையும் தாயையும் கொண்டு ஒரு வனத்தின் சாரல் எய்துதல்.

நரனு திட்டிர னிருபு யத்தினு
நகுல னெடிளை யோன்ம ருங்கினு
வெரினி லன்னையு மாக்கொ டேகுகால்
விசையி லவ்வனத் தடியொ டும்விழுங்
தருவின் மேனடந் தளவில் யோசனை
தான்க டந்தொரு சார லெய்திஞன்
உரைசெ யும்பதி னயி ரங்களி
றொத்த தோள்வலி பெற்ற வீமனே.

(இ-ள்) உரை செயும்-சிறப்பித்துப் பேசப்படுகின்ற, பதினா யிரம் களிறு ஒத்த தோள்வலி பெற்ற வீமன் – பதினாயிரம் ஆண் யானைகளின் வலிமையையொத்த தோள்வலிமையையுடைய வீமசேனன், - நரன் உதிட்டிரன் இருபுயத்தினும் - அருச்சுனன்

தருமன் இருவரையும் இரண்டு தோள்களிலும், நகுலனைடு இளையோன் மருங்கினும் - நகுல சகதேவர் இருவரையும் இடுப் பிலும், வெரிநில்-முதுகில், அன்னையும்-தாயும், ஆ கொடு-ஆகக் கொண்டு, ஏகு கால் விசையில் - செல்கின்ற கால்களின் வேகத் தால், அ வனத்து - அந்த காட்டில், அடியொடும் விழும் தருவின்மேல் நடந்து-வேரோடு சாய்ந்து வீழும் மரங்களின்மேல் (கால்களைவைத்து) நடந்து, அளவு இல் யோசனை தான் கடந்து-பலயோசனைகள்தூரம் தாண்டிப்போய், (பின்னர்) ஒரு சாரல் எய்தினன் - (அவ்வனத்தின்) ஒரு மலைப்பக்கம் அடைந்தான்; (எ-று).

வீமனுக்கு வாசுகி ஆயிரம் யானை வலிமைதரவல்ல திவ்ய ரசத்தைப் பானஞ் செய்வித்தனன் என்று வியாசபாரதத்திற் கூறியுள்ளதை யொட்டி நோக்க, இங்கே பதினாயிரங்களிறு வலிமைபெற்றவன் வீமன் எனத் தேறுகிறது. வெரிந்-முதுகு. ஆ-ஆறு என்பதன் விகாரம். கொடு - கொண்டு என்பதன் தொகுத்தல். யோசனை-எட்டுமைல்: வேறு தூரமும் கூறுப.

இதுமுதல் ஏழு கவிகள் -பெரும்பாலும் இரண்டு நான்கு ஆறு எட்டாஞ் சீர்கள் விளச்சீர்களும், மற்றையவை மாச்சீர்களுமாகி வந்த எண்சீராசிரிய விருத்தங்கள். (1)

2. இடிம்பி வந்து வீமனை வினவி, பின் அவனுக்குத் தான் கூறும் விடை.

அரிய வவ்வனத் துறும ரக்கிவந் தடல்கொள்
வீமனை யாவர் நீவிரிவ்
விரவில் வந்தவா றுரையெ னுவவ னியான
டைந்ததோ துவனீ யார்கொலெற்
குரைசெய் யென்னமற் றவளு ரைக்குமிங் குறும
ரக்கனென் னணணி டிம்பனுர்
நரர டைந்திடு மூடைதெ ரிந்துண நடவி
னனெனைக் கொணரு மாறரோ.

(இ-ள்) அரிய-புகுதற்கு அரிய, அ வனத்து-அந்தக் காட்டிலே உறும்-வசிக்கின்ற, அரக்கி வந்து-ஒரு இராக்கதப்பெண் வந்து, அடல்கொள் வீமனை - வலிமை பொருந்திய வீமனைப் பார்த்து, யாவர் நீவிர்-நீங்கள் யாவர்? இ இரவில் வந்த ஆறு உரை-இந்த நடுநிசியில் இங்கு வந்த வகையென்னை? சொல்லிடு, எனு-என்று வினவ, அவன்-அந்த வீமன், யான் அடைந்தது ஓதுவன் நீயார்

கொல் எற்கு உரைசெய் என்ன-நான் வந்த வகையினைச் சொல்லு கிறேன்: (அதற்கு முன்) நீ யார் என்பதை எனக்குச் சொல்லு வாய் என்று கேட்க, அவள் உரைக்கும்-அந்த இடிம்பி கூறத் தொடங்கினள்: இங்கு உறும் அரக்கன் என் அணன் இடிம் பனர் - இங்கே வசிக்கின்ற இராக்கதன் என் அண்ணன் இடிம் பன் என்னும் பெயருடையான் (இந்த வனம் அவனுக்கு உரியது: இடிம்பவனம்); நரர் அடைந்திடும் முடை தெரிந்து - மனிதர் பெற்றிருக்கின்ற சரீர சம்பந்தமான வாசனை [வீசுதலை] யறிந்து, உண-அந்த நரர்களை யுண்பதற்காக, எனை-என்னை (யழைத்து), கொணருமாறு-உங்களைக் கொண்டுவரும்படி, நடவினன்-அனுப்பி யுள்ளான் (எ-று); அரோ-ஈற்றசை.

அணன்-அண்ணன் என்பதன் தொகுத்தல். இடிம்பனர் உயர்வுபற்றிவந்த பால்வழுவமைதி. உண-உண்ண என்பதன் தொகுத்தல். நடவினன்-பிறவினை. (2)

3. இடிம்பி மேலும் வீமனை நோக்கிக் கூறுதல்.

உம்மைக் கொல்லவந் துன்னெ ழிற்குகந்
துருவி லிச்சரத் தோடு வெண்மதி
வெம்மை கொல்லநொந் துழலு வேனையிவ்
விரக நோய்கெடத் தழுவ வொன்னலர்
தம்மைக் கொல்லுவோய்! உள்ளம் வைத்திடு
சாலஞ் செய்திடி னிருதன் வந்திவண்
நம்மைக் கொல்லுமந் தரமெ ழுந்துனை
நான்கொ டேகுவ னோர்வ ரைக்கணை.

(இ-ள்) உம்மைக் கொல்லவந்து-உங்களைக் கொல்ல வேண்டு மென்று எண்ணிவந்து, உன் எழிற்கு உகந்து - உன்னுடைய அழகினுக்கு மனமகிழ்ந்து, உருவிலி சரத்தோடு-மன்மதனது அம்போடு, வெண்மதி வெம்மை கொல்ல நொந்து - வெள்ளிய சந்திரனது நிலா நெருப்பாகி வருத்த அதற்கு நைந்து, உழலு வேனை-தவிக்கின்ற என்னை, இ விரக நோய் கெடத் தழுவ உள்ளம் வைத்திடு - இந்த விரக வேதனை தீரும்படி கட்டித்தழுவ மனங் கொள்வாய்: ஒன்னலர் தம்மைக் கொல்லுவோய்-பகைவர்களைக் கொல்லும் பேராற்றலுடையவரே! சாலம் செய்திடின்-விகற்பஞ் செய்வாயாயின், நிருதன் வந்து - (என் அண்ணன்) அரக்கன் இடிம்பன் வந்து, இவண்-இவ்விடத்து, நம்மைக் கொல்லும்-நம்

இருவரையும் கொன்றுவிடுவன்: (ஆகவே) நான்—, அந்தரம் எழுந்து – வானத்திலெழும்பி, உனை-உன்னை, கொடு-கொண்டு, ஓர் வரைக்கண் ஏகுவன்-ஒரு மலையினிடத்தே செல்வேன்; (எ-று);

என்னை விரகநோய்கெட நீ தழுவுதல்-மன்மதனுகிய அரக்கனினின்று நானும், இடிம்பனுகிய அரக்கனினின்று நீயும் நானும் ஆகிய இருவரும் தப்பியுய்தற்குக் காரணமாகும் என்றுள். வீமனைக் 'கொல்லுவோய்!' என விளித்துப் பின் "நிருதன் கொல்லும்" என்றது இடிம்பனின் பேராற்றலும் பெருவலிமையும் பெறவைத்தற்கு என்க. சாலம்-விகற்பம், வேற்றுமை. கொடு-கொண்டு என்பதன் தொகுத்தல். "தீ நிலா அனல் சிந்து மால்" என்றார் குமரகுருபரர் மதுரைக்கலகம்பகத்து. நிருதன் கொல்லும்-செய்யுமென்முற்று. (3)

4. அவள் வேண்டுகோளை மறுத்து வீமன் தனது ஆண்மை கூற, இடிம்பன் வந்து தங்கையைச் சீறுதல்.

இதுவும், அடுத்த கவியும்—குளகம்.

என்றி டிம்பிசொற் றிடலு மாருதி யெம்மி
னுரைவிட் டுன்னு டின்பமுண்
டொன்றி வாழ்தலா டவர்க ளாண்மையோ உன்முன்
வந்தபோ தெந்த னுண்மைபார்
என்று சொற்றிடு மெல்லை கூரெயிற் றிடிப்பன்
வந்திளை யாளைக் கூவிநீ
கொன்று தின்றிடு நரரைக் கூடுவான் கொண்ட
மையனன் றென்று சீறியே.

(இ-ள்) என்று இடிம்பி சொற்றிடலும் – என்று இடிம்பி சொன்னவுடனே, மாருதி-வீமன், எம் மி(ன்)னுரை விட்டு-எமது மனிதவினத்தைச் சேர்ந்த மகளிரை விட்டு, உன்னுடு இன்பம் உண்டு-[அரக்கியாகிய] உன்னுடு கலவியின்பம் அருந்தி, ஒன்றி–மனமொருப்பட்டு, வாழ்தல் - வாழ்க்கை நடத்துவதென்பது, ஆடவர்கள் ஆண்மையோ–ஆண்களுக்கு வீரமாகுமா? (ஆகாது); உன் முன்-உனது அண்ணன் இடிம்பனுர், வந்தபோது –, எந்தன் ஆண்மை பார்-என்னுடைய சூரவீரத்தனத்தை [நேரிற் கண்ணுற்] பார், என்று—, சொற்றிடும் எல்லை-சொல்லும் வேளையில், கூர் எயிற்று இடிம்பன் - கூரிய பற்களையுடைய இடிம்பன், வந்து—, இளையாளைக் கூவி-தங்கையாகிய இடிம்பியை யழைத்து, நீ-[அரக்கி

யாகிய] நீ, கொன்று தின்றிடும் நரரை – (உணவாகக் கொண்டு) கொன்று புசிக்கின்ற மானுடரை, கூடுவான்–(மணங்கொண்டு) புணர்தற்கு, கொண்ட மையல் நன்று–கொண்டுள்ள காம மயக்கம் மிக அழகிது! (அழகிதன்று) என்று சீறியே-என்று மிகவும் கோபித்து; (எ-று) "மானிடா" என அடுத்த கவியோடு குளகமாத் தொடரும்.

மாருதி-மாருதத்தின் மகன் வீமன்: (மாருதம்-வாயு, காற்று) மினேர் - மின்னேர் என்பதன் தொகுத்தல்: மின்னலிப்போல் ஒளிவிடுகின்ற மகளிர், மின் - உவமவாகுபெயராய் மகளிரைக் காட்டும். முன்-முன்பிறந்தவனுக்குக் காலவாகுபெயர். கூவுதல்–அழைத்தல்: "உன்னைக் கூவுவான் வந்து நின்றேம்" (திருப்பாவை-8). நன்று - சொல்லுவான் குறிப்பினாலே நன்றன்று என்றபடி: எதிர்மறைப் பொருளது. (4)

5. இடிம்பன் வீமனைநோக்கி வீரவாதம் செய்தலும் வீமன் மறுமாற்றமும்.

மானி டாவுனக் கடல்கொ டானவர்
மான டாதடா வான மாதர்கள்
தான டாவுனக் குரிய ரங்குயிர்
சார வுய்த்துடல் தன்னை யுண்பவ்
னான டாவென மேவி டிம்பனு
நணுக வெங்கதா யுதன்வெ குண்டினிக்
கான டாதடா வோர்க ணத்துனை
கால னூர்குடி யேற வுய்ப்பனே.

(இ–ள்) மானிடா - மானுடனே! உனக்கு—, அடல் கொள் தானவர் மான்-வலிமைபொருந்திய அரக்கர் குலப்பெண், அடாது அடா-பொருந்துவதாகாது அடா!: அடா-! உனக்கு உரியர்-உனக்குத் தகுதியாகச் சேரவுரிமையுடையவர், வானமாதர்கள்தான்-தேவலோகத்துப் பெண்டிர்தான்! அங்கு - அந்தத் தேவலோகத்துக்கு, உயிர்-உன்னுடைய உயிர், சார - போய்ச்சேரும்படி, உய்த்து – செலுத்தி, உடல்தன்னை - (எஞ்சியுள்ள) உடம்பை, உண்பவன் நான் அடா-தின்பவன் நான் அடா [தெரிந்துகொள்] என-என்று வீரவாதம் கூறிக்கொண்டு, மேவு-பொருந்தி, இடிம்பனும்—, நணுக - நெருங்க, வெங்கதாயுதன் - கொடிய கதையையேந்திய வீமன், வெகுண்டு – கோபித்து, இனி-, அடா-! கான் அடாது - உனக்குக் காடு [வசிக்கத்] தகாது: (ஆகவே) உனை-

உன்னை, ஓர் கணத்து-ஒரு நொடிப்பொழுதில், காலன் ஊர்-யம புரத்துக்கு, குடியேற - [நீ போய்] குடியேறி வாசஞ்செய, உய்ப் பன்-செலுத்துவேன்; (எ-று).

காலனூர் குடியேறவுய்ப்பன் என்றது - **பிறிதினவிற்சியணி:** உன்னைக் கொல்வேன் என்றபடி, அடா - இகழ்ச்சி விளக்கும் இடைச்சொல்; முன்னிலை யாண்பால் விளியடையாய் வரும்; இதன் பெண்பால்-'அடி'. மான்-உவமவாகுபெயர். (5)

6. வீமனுக்கும் இடிம்பனுக்கும் நிகழ்ந்த போர் கூறும்.

இதுவும், அடுத்த கவியும்—குளகம்.

என்றி யம்பிமா ருதிநி சாசர
னெயிறு நாவுடன் சிதற வாயினிற்
சென்று குத்தினன் அவனும் வீமனைச்
சீறி மோதினன் ரூள்கள் பெற்றுயர்
குன்ற மொன்றெடொன் றெதிர்தல் போல்சினங்
கொடுபி டுங்கிய தருகொ டெற்றிதோ
ளொன்றெ டொன்றிடித் துருமி டித்தென
வுபைய ருஞ்சமர் புரியு மெல்லையில்.

(இ-ள்) என்று இயம்பி - என்று சொல்லி, மாருதி – வீமன். நிசாசரன் - அரக்கனுகிய இடிம்பனது, எயிறு நாவுடன் சிதற - பற்கள் நாவோடு சிதறும்படி, சென்று - கிட்டி, வாயினில் குத்தினன்—; அவனும் - அந்த இடிம்பனும், வீமனை—, சீறி மோதினன்-சினந்து தாக்கினன்; தாள்கள் பெற்று-கால்களைக் கொண்டு, உயர் குன்றம் ஒன்றெடொன்று எதிர்தல் போல்-உயர்ந்த குன்றுகள் ஒன்றோடொன்று எதிர்த்துவந்து போர் புரிதல்போல, சினங்கொடு-கோபங் கொண்டு, பிடுங்கிய-வேரோடு பறித்தெடுத்த, தரு கொடு எற்றி - மரத்தைக் கொண்டு மோதி, தோள் ஒன்றெடொன்று உருமு இடித்தென இடித்து-இருவர் தோள்களும் ஒன்றோடொன்று இடி யிடித்தாற்போலப் பேரொலி பட மோதியிடித்துக்கொள்ள, உபையரும் - இருவரும், சமர் புரியும் எல்லையில்-போர் செய்யும்போது; (எ-று) 'அவ்வரக்கனை .....உடல்பிளந்திடுங் கொற்ற வீமனை' என மேலைக் கவியோடு குளகமாய்த் தொடரும்.

நிசாசரன்–இரவில் சஞ்சரிப்பவன் என்ற காரணம்பற்றி அரக்கனைக் காட்டும்; எனவே காரணப்பெயர். பழித்ததனால் வாயில்

முதலிலடித்தான். தாள்கள்பெற்றுக் குன்றம் எதிர்தல்போல் என்றது-இல்பொருளுவமையணி. கொடு-கொண்டு, தொகுத்தல். உருமு-இடி. (6)

7. வீமன் இடிம்பனை வதைத்தல்.

அடலி பத்தினை யடும டங்கலி
னவ்வ ரக்கனை யலகை நாய்நரி
கொடிய ருந்திட வுடல்பி ளந்திடுங்
கொற்ற வீமனை யுற்ற வெம்பகை
கடிவ னென்றனை துணைவர் தம்முளங்
களிசி றந்திட மயல்கொள் வல்லியு
மிடரு மின்பமு மொருங்க டைந்தன
ளிரவி யவ்விடை யுதய மாயினன்.

(இ-ள்) அடல் இபத்தினை - வலிய யானையை, அடு மடங்கலின் - கொல்லுகின்ற சிங்கத்தைப்போல, அ அரக்கனை - அந்த இடிம்பனை, அலகை நாய் நரி கொடி அருந்திட - பேய்நாய்நரிகாகம் இவை யுண்ணும்படி, உடல் பிளந்து - அவனது உடம்பைத் துணித்து, இடும்-விருந்தாக இடுகின்ற, கொற்றம் வீமனை-வெற்றி வீமனை, - (இவன் இனி) உற்ற வெம்பகை கடிவன் என்று - நேர்கின்ற கொடிய பகைவர்களைக் (கட்டாயம்) கொல்வனென்று, அனை துணைவர் தம் உளம் களிசிறந்திட - அன்னையாகிய குந்தியும் உடன்பிறந்தாரும் தமது மனத்தில் மகிழ்ச்சிபொங்கிடவிருப்ப, (அதேசமயத்தில்) மயல்கொள் வல்லியும்-காம மயக்கம் கொண்டிருந்த இடிம்பியும், இடரும் இன்பமும் ஒருங்கு அடைந்தனள்-துன்பமும் இன்பமும் ஒருசேரப் பெற்றனள்: அ இடை-அந்தச் சமயத்தில், இரவி - சூரியன், உதயம் ஆயினன் – தோன்றினன்; (எ-று).

குந்தி தருமன் முதலியோர் மிக வலிய அரக்கனைக் கொன்ற செயலைக் கண்ணெதிரிற் கண்டதனால், வீமன் இனி அரிய பெரிய பகைவரனைவரையும் தவறாது கொல்வானென்று நிச்சயித்துக் களித்தனரென்க. தமையனிறந்ததனால் வருத்தமும், தன்னைக் கணவனாக வரிக்கப்பட்ட வீமனை இடையூறின்றிச் சேரலாமென்னுமோர் கருத்தினால் மகிழ்ச்சியும் இடிம்பிக்கு ஒருங்கு நிகழ்ந்தனவென்க. இடரை முன்னும் இன்பத்தைப் பின்னுமாக நிறுத்தியதனால், இவளுக்குச் சோகம் தோன்றிக்கழிய முந்திய காதலே நிலைத்து நின்றதென்க.

கொடுக்கப்பட்டுள்ள உவமை வீமனது வெற்றி குறிக்கும். வீமன் சிங்கக்கொடியோன் என்பதும் நினைக. கொடி-காக்கை. அலகை நாய்நரி கொடி-உம்மைத் தொகை: போர்க்களத்துவந்து பிணந்தின்பவை இவை. அனை-அன்னையென்பதன் தொகுத்தல். வல்லி-பூங்கொடி: மகளுக்கு உவமவாகுபெயர். அ+இடை= அவ்விடை; வகரவுடம்படுமெய் பெற்றுவந்தது. (7)

8. வீமன் இடும்பியை மணம் மறுத்தலும் அவள் குந்தியிடம் சேறலும்.

வேறு

மயலுறுமவ் விடிம்பிமன தறிந்து வீமன்
வலியரக்கர் குலக்கொடியை மனிதர் சேர்வ
தியல்பலமங் கையர்மனதி யா ரறிந்தோர் சேர்வா
னெய்தியசூர்ப் பணகிதனை யிளவற் ருனுங்
குயமரிந்த தறியாய்கொ லெம்முன் மன்றற்
கொள்ளுமுன முனதின்பங் கொள்ளே னென்ரே
ரயலடைந்தா னவ்வுரைகேட் டிடிம்பி குந்தி
யடியணைந்து தன்செயல்க ளறைவ தானுள்.

(இ-ள்) வீமன்-வீமசேனன், மயல் உறும் அ இடிம்பி மனது அறிந்து - காமமயக்கங்கொண்ட அந்த இடிம்பியின் கருத்தைத் தெரிந்து, வலியரக்கர் குலக்கொடியை-வலிமையமைந்த அரக்கர் குலத்தில் பிறந்த பெண்ணுகிய உன்னை, மனிதர் சேர்வது இயல்பு அல - மானிட இனத்தைச்சேர்ந்த நாங்கள் புணர்வது தகுதி யன்று,: (மேலும்) மங்கையர் மனது அறிந்தோர் யார்-பெண் டிரின் மனத்தினை உள்ளபடியறிந்தவர் யார்? (ஒருவருமிலர்); [முன்னர் யுகத்தில்] சேர்வான் எய்திய சூர்ப்பணகிதனை-இராம பிரானைப் புணரவேண்டும் என்று எண்ணி நெருங்கிய சூர்ப்ப ணகையை, இளவல் தானும் - அவன் தம்பியாகிய இலக்குமண னும், குயம் அரிந்தது அறியாய்கொல் - முலைக்கண்களை யறுத் தெறிந்ததைக் கேட்டறிந்ததில்லையோ? (அந்தக்கதிதான் உனக் கும் இப்போது நேரும்.): எம் முன்-எமது தமையனுகிய தருமன், மன்றல் கொள்ளும் முனம்-திருமணம் செய்துகொள்வதற்கு முன்னே, உனது இன்பம் கொள்ளேன்-உன்னோடு கலவியின்பம் கொள்ளமாட்டேன், என்று-என்று மறுத்து, ஓர் அயல் அடைந் தான்-ஓரயலிடத்தைச் சேர்ந்தான்: இடிம்பி—, அ உரை கேட்டு- அந்த வீமன் கூறிய வார்த்தைகளைச் செவியேற்று, குந்தி அடி அணைந்து - குந்திதேவியின் பாதங்களை நெருங்கி, (குந்தியிடம்

சென்று), தன் செயல்கள்-தான் செய்ய விரும்பும் காரியங்களை, அறைவதானுள்-கூறலாயினுள்; (எ-று.),—அவள் கூறுபவற்றை மேலேக்கவியிற் காண்க.

மங்கையர் மனக்கருத்து அறிவது கடினம் என்பதைச் சிந்தாமணியாசிரியர் "பெண்ணெனப்படுவ கேண்மோ பீடில பிறப்பு நோக்கா, உண்ணிறைவொன்றுமில்லா வொராயிர மனத்த வாகும்" என்றார். "பெண்ணின் மனத்தை யொருப்படுப்பேன் என்னும் எண்ணிலொருவன்" என்றதும் நோக்குக. "தமையன் விவாகமின்றியிருக்கையில் தம்பி விவாகஞ்செய்து கொள்ளலாகாது" என்ற தருமசாஸ்திரக்கொள்கையை "எம்முன் மன்றற் கொள்ளு முன் உனதின்பங்கொள்ளேன்" என்றதால் பெறவைத்தான் வீமன். அரக்கமகளிரை மனிதர் மணக்கலாகாது என்பதை "வருத்த நீங்கரக்கர்தம்மின் மானுடர் மணத்தல் நங்கை, பொருத்தமன்றென்று சாலப் புலமையோர் புகல்வர்" என்ற இராமாயணத்தாலும் அறிக. இராமவிலக்குமணரைக் காதலித்த சூர்ப்பணகை அங்கபங்கப்பட்ட செய்தி, இராமாயணத்திற் பிரசித்தம்.

இதுமுதல் ஆறுகவிகள் - பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆறுஞ்சீர்கள் காய்ச்சீர்களாகவும், ஏனையவை மாச்சீர்களாகவும்வந்த எண்சீராசிரியவிருத்தங்கள். (8)

9. இடிம்பி குந்தியிடம் தன் செயல்களைப்பற்றிக் கூறுதல்.

மாண்டவரக் கனுக்கிளையா ளென்னை யன்னேன்
வதைப்பவுமை விடுப்பவந்துன் மகன்மேன் மையல்
பூண்டனனீ துணர்ந்தொன்றும் புகலா துற்றாய்
பொருந்திடில்யா னுனதிடத்திற் புகுவா னீவிர்
வேண்டுமிட மெவணெனினுங் கொண்டு போவல்
விழைந்தபொருள் கொணர்ந்தளிப்பன் மேலோர் போல
ஈண்டுறுமுக் காலமுணர்ந் துரைப்ப னின்சேய்
இசைந்தணையா னெனிற்றழல்பாய்ந் திறப்ப லென்றாள்.

(இ-ள்) [நான்] மாண்ட அரக்கனுக்கு இளையாள்-இறந்து போன இடிம்பனுக்குத் தங்கையாவன்: என்னை—, அன்னேன்-அவ் இடிம்பன், உமை - உங்களை, வதைப்ப - கொல்வதற்காக, விடுப்ப-அனுப்ப, வந்து-நான் வந்து, உன் மகன்மேல்-உன் குமாரனுகிய வீமன்மேல், மையல் பூண்டனன் - காதல் நோய் கொண்டேன்: ஈது உணர்ந்து-இந்தச் செய்தி தெரிந்திருந்தும்,

ஒன்றும் புகலாது உற்றாய் - ஒரு வார்த்தைகூடச் சொல்லாது இவ்விடம் மேவினாய்: யான்-நான், உனது இடத்தில் பொருந்திடில்-உனது அருகிலேயே இருப்பேனேயாஞல், நீவிர் புகுவான் வேண்டுமிடம் எவண் எனினும்-நீங்கள் போய்ச் சேருவதற்கு விரும்பும் இடம் எதுவாயிருந்தாலும் ஆங்கு, கொண்டு போவல்-(உங்களைக்) கொண்டு சேர்ப்பேன்: (மேலும்) விழைந்த பொருள்-நீங்கள் விரும்பும் பொருள்களனைத்தையும், கொணர்ந்து அளிப்பன் - கொண்டுவந்து கொடுப்பேன்: மேலோர் போல - சிறந்த சோதிடர்களைப்போல, ஈண்டு - இவ்வுலகத்து, உறும் முக்காலம் உணர்ந்து-பொருந்திய இறப்பு நிகழ்வு எதிர் என்ற மூன்றுகாலங்களையும் தெரிந்து, உரைப்பல்-கூறுவேன்: (அங்ஙனிருப்ப என்னை), நின் சேய்-உனது மகனுகிய வீமன், இசைந்து அஃனயான் எனின்-மனமொருப்பட்டு ஏற்றுக்கொள்ளானுயின், தழல் பாய்ந்து-நெருப்பில் வீழ்ந்து, இறப்பல் என்றுள்-இறந்துபடுவேன் என்று [குந்தியை நோக்கிக்] கூறினுள்; (எ-று).

இச்செய்யுள் - இடும்பியின் பேச்சுத்திறத்தினைச் சிறப்புறக் காட்டுகிறது. புகுவான் - வானீற்று வினையெச்சம். போவல், அளிப்பன், உரைப்பல், இறப்பல் - தன்மையொருமை வினைமுற்றுக்கள். (9)

10. குந்தி தனயரோடு ஆய்ந்து இடும்பியை மணக்கும்படி வீமனுக்குக் கூறி அவனை உடன்படச் செய்தல்.

அவ்வுரைகேட் டுதிட்டிரனு மிற்றை நாண்மே
லணுகுசெயல் புகறியென அவளும் நீவிர்
இவ்வனம்விட் டொருவனஞ்சென் றவண்சேர் வாவி
யிரும்புனல்தோய்ந் திடுநலத்தால் வியாத னுங்கள்
எவ்வமகற் றிடவருவா னெனமுன் னேனும்
இனஞர்களு மன்னையுமாய்ந் திதய மொத்தங்
கொவ்வில்கதை யவனையழைத் தவளைச் சேர்வா
னுடன்படுத்தி யவளொடுமாண் டொருவிச் சென்றார்.

(இ-ள்), அ உரை கேட்டு-அந்த இடும்பியின் வார்த்தையைக் கேட்டு, யுதிட்டிரனும் - தருமபுத்திரனும், இற்றை நாள்மேல்-இன்றைய தினம் முதற்கொண்டு, அணுகு செயல் - (யாங்கள்) கிட்டவேண்டிய இடம் காரியம் இவற்றைப்பற்றி, புகறி என-சொல்வாயாக என்று கேட்க, (முக்கால முணர்ந்த) அவளும்-அந்த இடும்பியும், 'நீவிர் - நீங்கள், இவனம் விட்டு - இந்த வனத்தைவிட்டு, ஒருவனம் சென்று - (சாலிகோத்திரவனமென்

னும்) ஒரு வனத்திற்குச் சென்று, அவண் சேர் வாவி இரும்புனல் தோய்ந்திடு நலத்தால்-அங்குள்ள தடாகத்தின் மிக்கநீரில் மூழ்கி ஸ்நானஞ்செய்யும் பாக்கியத்தால், வியாதன் உங்கள் எவ்வம் அகற்றிட வருவான்] வியாசபகவான் உங்களுடைய துன்பத்தைப் போக்கிட வருவார், என-என்று (தெரிந்து கூற), முன்னோனும்-தமையனை தருமனும், இளைஞர்களும்-தம்பியரும், அன்னையும்-தாயாகிய குந்தியும், ஆய்ந்து-(இடிம்பி கூறிய அனைத்தையும் கொண்டு) ஆராய்ந்து, இதயம் ஒத்து-மனம் ஒருமித்து, அங்கு-அவ்விடத்திற்கு, ஒவ்வு இல் கதையவனை அழைத்து-இணங்குத லில்லாத கதையில் வல்ல வீமனை அழைத்து, அவளைச் சேர்வான் உடன்படுத்தி-அந்த இடிம்பியை மணம்புரிந்துகொண்டு சேரும் படி சம்மதிக்கவைத்து, ஆண்டு-அவ்விடத்தை, ஒருவி-நீத்து, அவளொடு-அந்த இடிம்பியுடனே, சென்றார்-[சாலிகோத்திரவனம் நோக்கிச்] செல்லலானார்; (எ-று).

"மேலோர்போல ஈண்டுறும் முக்காலமும் உணர்ந்து உரைப்பல்" என்று கூறவே, அந்த இடிம்பியைச் சோதிக்கும் நிமித்தம் "இற்றைநாண்மேல் அணுகுசெயல் புகறி" என்றான் தருமன். வாவி-சாலிகோத்திரசரஸ். ஒவ்வல்-ஒவ்வுதல், இணங் குதல், இசைதல். இசைதலில்லாத வீமனை இசையவைத்து என்றபடி. ஆண்டு ஒருவி-இடிம்பவனத்தை நீத்து, கதையவன்-வீமன்: பொருட்பெயர். இற்றை-'இன்று' என்ற மென்றொடர்க் குற்றியலுகரம் வன்றொடராகி, ஐகாரச்சாரியை பெற்று வந்தது, புகறி-முன்னிலையேவல்வினைமுற்று: புகல்-பகுதி, இ-விகுதி-த்-எழுத்துப்பேறு. இரும்புனல்-பெயரெச்சத் தொடர். ஒவ்வில்-இல், எதிர்மறை குறிப்பது, சேர்வான்-வினையெச்சம். (10)

11. வியாசமுனிவந்து கூறியபடி பாண்டவர்கள் சாலிகோத்திர முனிவன் சூழல் சேர்தல்.

போந்தெதிர்கண் டொருதடமங் கதனி லாடிப்
பொருந்துழிவந் தருள்வியாதன் பொற்ருள் போற்றி
நீந்தரிய துயரகன்ரு ரவனும் வாழ்த்தி
நீர்சாலி கோத்திரமா முனிவன் சூழற்
சேர்ந்திருந்து சிலநாள்பின் மறையோ ராகிச்
செப்பரும்வேத் திரகீயஞ் சேரு மென்ரு
சாந்தமுறு முனியகன்ரான் பாண்டு மைந்தர்
சாலிகோத் திரமுனிவன் சூழல் சார்ந்தார்.

(இ-ள்) போந்து-சென்று, ஒரு தடம் எதிர்கண்டு-ஒரு

தடாகத்தை எதிரிலே பார்த்து, அங்கு - அவ்விடத்து, அதனில் ஆடி - அந்த நீரில் மூழ்கி, பொருந்துழி, [அதன் கரையில்] தங்கியிருந்தபொழுது, வந்த - ஆங்கு வந்த, அருள் வியாதன் - கருணை நிறைந்த வியாச முனிவனின், பொன் தாள் போற்றி - அழகிய திருவடிகளைத் துதித்து வணங்கி, நீந்த அரிய துயர் அகன்றூர் - கடத்தற்கரிய துன்பத்தினின்று விடுபட்டார்: அவனும்-அவ்வியாசனும், வாழ்த்தி - ஆசீர்வதித்து, "நீர் - நீங்கள், சாலிகோத்திர மாமுனிவன் சூழல் சேர்ந்திருந்து-சிறந்த சாலிகோத்திர முனிவன் ஆச்சிரமத்தைச் சேர்ந்து அங்கேயே தங்கி, சிலநாள் பின்-சில நாட்கள் கழித்து, மறையோர் ஆகி-பிராமண வேடங்கொண்டு, செப்ப அரும் வேத்திரகீயம் சேரும் சொல்லுதற்கரிய (சிறந்த) வேத்திரகீயமென்னும் இடத்தைப் போய்ச்சேருங்கள், என்ஞ-என்று கூறி, சாந்தம் உறு முனி அகன்றூன்-சாந்தண்மை பூண்ட முனிவன் போயினன்; (பின்னர் அவன் கூறியபடியே) பாண்டுமைந்தர்-பாண்டவர்கள், சாலிகோத்திர முனிவன் சூழல் சார்ந்தார்-சாலிகோத்திர முனிவன் ஆச்சிரமம் அடைந்தார்; (எ-று).

சாலிகோத்திரன்=சாலிஹோத்ரன்: சாலியென்ற நெல்வின் ஹோமத்தினால் தோன்றியவன்: புருபுண்ணியனென்னும் முனிவன் இல்லறம் நடத்துகையில் பிள்ளையில்லாக் குறையால் சாஸ்திரவிதிப்படி சாலியஜ்ஞத்தைப் புரிகையில் பிரதியட்சமான திருமாலின் அநுக்கிரகத்தாற் பிறந்த குமாரனுக்குச் சாலிகோத்திரனென்ற பெயர் அத்திருமால் கட்டளையின்படி வைக்கப்பட்டது என வரலாறு அறிக. 'மறையோராகி' என்றது-துரியோதனியரால் இன்னரென்று அறிந்து இடரிழைக்க வொண்ணாதபடி பிராமண வேடங்கொண்டவராகி என்றபடி. வந்தருள்-வந்த+அருள்: நீந்தரிய-நீந்த+அரிய: பெயரெச்சத்தின் அகரவீறு தொகுத்தல், என்ஞ-செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம். (11)

12. வீமனும் இடும்பியும் இன்பந்துய்த்துக் கடோற்கசனைப் பெற, அவன் பாண்டவரை வணங்கி விடைபெற்றுத் தாயொடும் போதல்.

குந்திபணி புரியுமிராக் கதியும் வாயு
குமரனுங்கா னகந்தோறும் குன்றந் தோறுங்
கந்திருவ மெனுமணங்கொண் டெயினர் மாதுங்
கந்தனும்போற் றுய்த்தின்பங் கடோற்க யப்பேர்

மைந்தனையின் றனரவனுந் தந்தை மாரை
வணங்கிநினைந் திடும்பொழுதே வந்து மேவ
லெந்தலைக்கொண் டியற்றுவலென் றவர்க ளுய்ப்ப
யின்றவள்தன் னுடன்வரக்கொண் டேகி னனல்.

(இ-ள்) குந்திபணி புரியும் இராக்கதியும் - குந்திதேவிக்குப் பணிவிடைகளைச் செய்கின்ற இடும்பியும், வாயுகுமரனும் - வீமனும், கானகம் தோறும்-காட்டிடங்களிலும், குன்றம் தோறும்-குன்றினிடங்களிலும், கந்திருவம் எனும் மணம் கொண்டு-காந்தர்வ விவாஹம் செய்துகொண்டு, எயினர்மாதும் - வேடர் குலப்பெண்ணாகிய வள்ளியம்மையும், கந்தனும்போல் – முருகக் கடவுளும்போல, இன்பம் துய்த்து-கலவியின்பம் அருந்தி, [அதன் விளைவாக] கடோற்கயப்பேர் மைந்தனை ஈன்றனர்-கடோற்கசன் என்ற பெயரைக்கொண்ட குமாரனைப் பெற்றனர்: அவனும்-அந்தக் கடோற்கசனும், தந்தைமாரை வணங்கி-தந்தையராகிய பாண்டவர்களை நமஸ்கரித்து, "நினைந்திடும் பொழுதே வந்து உம் ஏவல் என் தலைக்கொண்டு இயற்றுவல்—நீங்கள் என்னை நினைக்கும் சமயத்திலேயே (தாமதிக்காமல்) வந்து உங்கள் கட்டளைகளை என் சிரமேற்கொண்டு நிறைவேற்றுவேன்", என்று-என்று கூறி, (பின்னர்) அவர்கள் உய்ப்ப-அந்தத் தந்தையர் விடைகொடுத்தனுப்ப, தன்னுடன்—, ஈன்றவள் வரக்கொண்டு-பெற்றதாயாகிய இடும்பியும் வர அவளையும் அழைத்துக் கொண்டு, ஏகினன் - (இடும்பவனத்துக்குச்) சென்றான்; (எ-று)—ஆல் - ஈற்றசை.

முருகக்கடவுள் வள்ளிமலையில் வந்து அங்கு வேடரிடை வளர்ந்து வந்த வள்ளியம்மையைக் காந்தருவமணம் புணர்ந்து மலைச்சாரலில் தினைப்புனத்திலும் சுனைக்கரையிலும் மலர்ப்பொழிலிலும் அவளுடன் கூடிக்குலாவியமை, புராணங்களிற் பிரசித்தம். குந்திபணி-குந்திதேவிக்கு வந்தனைவழிபாடுகளாகிய பணி. காந்தருவ மணமாவது-காதலர் தம்முள் மனமொத்துக்கூடுங் கூட்டம். கடோற்கசன்:- கடம் - குடம்: உத்கசம் - மயிரில்லாதது: இவனுடைய குடம்போன்றதலை மயிரின்றியிருந்ததனால் கடோத்கசனென்று இவனுக்குப் பெயரிடப்பட்டதென்று வடநூல் கூறும். முன்னொருகாலத்தில் சிவபிரான் அளித்தவரத்தின்படி, இராக்கதஸ்திரீகளுக்குப் பிறக்கும் பிள்ளைகள் பிறந்தபொழுது தாயினவ் வளவு பருவ வளர்ச்சியுறுதலால் கடோத்கசன் பிறந்தவுடனே

பாண்டவரைத்தொழுது பேசுவானுயினனென அறிக. வீமன் இடிம்பியை மணக்கும்போது கூறிய வாக்குப்படியே மகன் பிறந்தபின் அவள் அவனைவிட்டு நீங்கினள் என மூதனூல் கூறும். இராக்கதி-பெண்பால்: இராக்கதன்-ஆண்பால். இயற்றுவல்-தன்மை யொருமை. (12)

13. பாண்டவர் பிராமண வேடங்கொண்டு வேத்திரகீயம்சார, அவ்வூரந்தணர் வரவேற்க, அவர்களை ஓரந்தணன் தன் மனைக்கு அழைத்துச் செல்ல, அங்குத்தங்கி, நாளும் விருந்தினராய் உண்டு காலங்கழித்தல்.

அருந்தவரின் படிவங்கொண் டாயோ டைவர்
அணிகெழுவேத் திரகீய மடைந்தா ரவ்வூர்
பொருந்துமறை யவரெதிர்கொண் டின்சொற் கூறப்
புகலுமவர் தமிலொருவன் புகழின் மிக்கோள்
வருந்தியழைத் தெனதகத்தி னிருமி னென்ன
மற்றவர்கள் வணக்கத்தின் மருவி நாளும்
விருந்தினராய் அவரவர்க ளகங்க டோறும்
வேண்டவுண வருந்தியவண் மேவு நாளில்.

(இ-ள்) அருந் தவரின் படிவம் கொண்டு-சிறந்த பிராமண ரின் வேடங்கொண்டு, ஆயோடு ஐவர் - தாயோடு பாண்டவ ரைவரும், அணிகெழு - அழகு நிரம்பிய, வேத்திரகீயம் அடைந் தார்-வேத்திரகீய நகரம் அடைந்தனர்: (அப்போது) அ ஊர் பொருந்து மறையவர்-அந்த ஊரிலே தங்கி வசிக்கின்ற பிராமணர் கள், எதிர்கொண்டு இன்சொல் கூற - எதிர்கொண்டழைத்து முகமன் கூற, புகலும் அவர்தமில் ஒருவன்-அந்தப் பிராமணர் களிற் சிறப்பித்துப் பேசப்படுகின்ற ஓரந்தணன், புகழின் மிக்கோன்-கீர்த்தியினால் மேன்மைபடைத்தவன், (இவர்களை) வருந்தி அழைத்து-மிக்கபரிவுடன் அழைத்து, எனது அகத்தினில் இருமின் என்ன-எனது கிருஹத்தில் தங்கியிருங்கள் என்று வேண்ட, மற்றவர்கள்-மற்ற பிராமணர்கள், வணக்கத்தின்-வணக்கத்தோடு அழைக்க, (அதற்கு,) மருவி-மனம் பொருந்தி, நாளும் விருந்தினராய்-ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வீட்டில் விருந்தினராய்ச் சென்று, அவரவர்கள்-அந்தந்த வீட்டுக்குரிய வர்கள், அகங்கள்தோறும் - தமது வீடுகள்தோறும், வேண்ட-

பிரார்த்திக்க, உணவு அருந்தி-இனிய உணவு உண்டு, அவண் மேவு நாளில்-அந்த ஊரில் பொருந்தியிருக்கும்காலை; (எ-று).

வேத்திரகீயே நகரத்திற் சேர்ந்தார் என்று பாலபாரதமும் கூறுகின்றது. ஆனால் வியாசபாரதத்தால், பாண்டவர் சேர்ந்த நகரம் ஏகசக்கர நகரமென்பதும், அங்கு இவர்களுறைந்த இடம் வேத்திரகீயம் எனப்படுமென்பதும் பெறப்படும். வணக்கத்தின்-இன், ஐந்தனுருபு ஏதுப்பொருளது. வணக்கம் - வந்தனை, வழிபாடு, தெண்டனிட்டு அழைத்தல். (13)

வேறு

14. ஒருநாள் பாண்டவர் தங்கியிருக்கிற வீட்டுக்குரிய பார்ப்பனி துயர்படுதலைக்கண்டு குந்தி காரணம் வினவ, அவள் பகன் எனும் அரக்கன் செய்தியைக் கூறல்.

மருவு மனையினுக் குரிய மறையவன்
மனைவி படுதுயர் பிரதைகண்
டுரைசெ யெனவவ ளறைவள் பகனெனு
மொருவ னிசிசர னெவரையும்
பருகி திரிபவ னவனை நகரினர்
பதமொ டறுசுவை யொருசக
டொருவ னரபலி யிடுது மெனசொலி
யுதவி வருவர்க டினமுறை.

(இ-ள்) மருவு - தாங்கள் தங்கியிருக்கின்ற, மனையினுக்கு உரிய - வீட்டுக்குச் சொந்தமான, மறையவன் – பிராமணனது, மனைவி –, படுதுயர்-அநுபவிக்கின்ற துன்பத்தை, பிரதை கண்டு-குந்திபார்த்து, (அவளை நோக்கி) உரை செய் என - இதற்குக் காரணத்தைச் சொல்வாய் என்று வினவ, அவள்-அந்த மறையவன் மனைவி, அறைவள் - கூறலானாள்: பகனெனும் நிசிசரன் ஒருவன் - பகன் என்னும் பெயரையுடைய ஒரு இராக்கதன், எவரையும் பருகி-எல்லாரையும் கொன்று, திரிபவன்-திரிகின்றான்: அவனை-அந்த இராக்கதனைப் [ப் பார்த்து], நகரினர்-வேத்திரகீய நகரத்தினர், பதமொடு அறுசுவை ஒரு சகடு-அறுவகை ருசியும் அமைந்த ஒரு பண்டிச்சோறு, நரபலி ஒருவன்-ஒரு மனிதனுகிய பலி (இவை), இடுதும்-(உனக்கு) உணவாக இடுவோம், என சொலி–என்று உடன்பாடு சொல்லி, (அதன்படியே) தினம் முறை-

நாடோறும் முறைமைப்படி, உதவி வருவர்கள் - கொடுத்துக் கொண்டு வருகின்றார்கள்; (எ-று).

நகரினர் தாங்களே நாளுக்கு ஒரு வீடாக முறைவட்டம் ஏற்படுத்திக்கொண்டு ஒருவண்டிச் சோற்றையும், ஓராளையும் பகனுக்கு உணவாக இடுவதாக ஒப்பந்தஞ்செய்து அவனைச் சாந்தப்படுத்தினர் என்பது அறியவேண்டியது. நரபலி - வட மொழித் தொடர்.

இதுமுதல் ஆறு கவிகள் - பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகி வந்த எழுசீராசிரியச் சந்த விருத்தங்கள். தனன தனதன தனன தனதன தனன தனதன தனதன என்பது இதுமுதல், [அடுத்த கவி தவிர (செ: 15)], மற்ற ஐந்தனுக்கும் சந்தக் குழிப்பாக் கொள்க. (14)

15. அதுகேட்டுக் குந்தி தனது மக்களில் ஒருவனை அனுப்பு கிறேன் என்றமை கூறும்.

இன்றெ மனைமுறை யொன்று மகன்மக
ளின்றி யொருவர்வே றின்மையாற்
குன்றி துயர்படு கின்ற னெனசொலக்
குந்தி யருள்கொடெம் மைந்தரிற்
சென்று நிருதனைக் கொன்று வருமொரு
செம்ம லுளனருள் கின்றவன்
ஒன்று நரபலி கொண்டு தருகுவ
தின்றெ டொழிவுற வென்றலும்.

(இ-ள்) இன்று எம் மனை முறை-இன்றையதினம் எம்முடைய வீட்டின் முறையாகும்: ஒன்று மகன் - ஒரு பிள்ளை எனக்கு: [ஒன்று] மகள்-ஒரு பெண் எனக்கு: இன்றி-இவர்களைத் தவிர, வேறு ஒருவர் இன்மையின்-வேறொரு மகனே மகளோ இன்மை யால், குன்றி - மனஞ் சோர்ந்து, துயர்படுகின்றன் - துயரப்படு கின்றேன், என-என்று, சொல-(அம் மனையவள்) கூற, (கேட்ட) குந்தி—, அருள்கொடு - கருணைமிகுந்து, "எம் மைந்தரில் - எனது பிள்ளைகளில், சென்று–போய், நிருதனைக் கொன்று-அந்த இராக் கதனைக் கொன்று, வரும்-வெற்றியோடு திரும்பி வரும்படியான,

ஒரு செம்மல் உளன்-ஒரு [ஆண்மைமிக்க] வீரன் இருக்கின்றான்: [அவன் எப்படிப்பட்டவனெனில்], நரபலி ஒன்று கொண்டு தருகுவது இன்றொடு ஒழிவு உற அருள்கின்றவன் - நரபலியாக ஒருவனைச் செலுத்தித் தருவதென்பது இன்றைத்தினத்தோடே ஒழிந்துபோகும்படி அருள்செய்கின்ற சமர்த்தன்" என்றதும்-என்று [குந்தி] கூறவும்; (எ-று).

எனது மகனை ஏகபுத்திரனதலால், அவனைச் செலுத்தி விடின் சந்ததியின்றி வமிசம் அழியும்; எனது ஒரே மகனைப் பலி செலுத்தலாமென்றால், அவள் ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு அவனுக்குரிய பொருளாய்விட்டதனால், அவனைச் செலுத்த இடமில்லை, என்று மனைக்குரியவள் கூறினாள். [இனி, மேலும் அறிய வேண்டிய விவரம்:— மனையாட்டி தன்னையே செலுத்துவ தென்றால், வேறொருவர் உதவுவாரில்லை; அதனால் அவள் கணவன் விரும்பகில்லான்: தன் கொழுனனைச் செலுத்தும் விஷயத்தில் உண்டாகிற துயரத்துக்கு எல்லையில்லை: ஆகவே, பலவகையிலும் தன் துயரத்துக்குப் பரிகாரமில்லாமையைக் கூறினள் எனக் காணவேண்டுவது], 'செம்மல் நிருதனைக் கொன்றுவரும்' என்று குந்தி கூறியது-முன்னர் வீமன் இடும்பனைக் கொன்றிருக்கும் வலிமை நோக்கி என்க. மேலும், தங்களையெல்லாம் அரக்கு மாளிகையினின்று உய்வித்தமையை யுட்கொண்டு அவனை "அருள்கின்றவன்" என்று சிறப்பித்தாள்.

இந்தக் கவியின் சந்தக்குழிப்பு-தன்ன தனதன தன்ன தன தன தன்ன தனதன தன்னன என்பது. (15)

16. **அதுகேட்டு மகிழ்ந்து அவ்வீட்டார் சமையல் செய்யத் தொடங்க, வீமன் மகிழ, தருமன் வருந்த, அத் தருமனைக் குந்தி தேற்றல்.**

அரிய மறையவ னுரிய மனைவியொ
டளவி லுவகைகொண் டடுபொழு
துரிய புதல்வரோ டிதனை யனைசொல
வுலவை மகன்மகிழ் மருவினன்
தரும னுளைவொடு வலிகொள் புதல்வனை
தருக நரபலி துணியுமா
றுரைசெய் யெனவவ ளிவனு மகிழமு
னுணரும் வலிதனை யுரைசெய்வாள்.

(இ-ள்) அரிய மறையவன் - [அந்த வீட்டுக்குரிய] மேன்மை

தங்கிய பிராமணன், உரிய மனைவியொடு - தனக்குரிய மனையாளோடு, அளவில் உவகை கொண்டு – மட்டற்ற மகிழ்ச்சியோடு, அடு பொழுது - [அறுசுவையுண்டி] சமையல் செய்தபோது, அனை - அன்னையாகிய குந்தி, இதனை - அவர்களில் ஒருவனை அனுப்புவதாகத் தான் நிச்சயித்துள்ள இச்செய்தியினை, உரிய புதல்வரோடு சொல-தனது பிள்ளைகளோடு சொல்ல, [அதனைக் கேட்டவுடனே] உலவை மகன் - காற்றின் மைந்தனை வீமன், மகிழ் மருவினன் - மகிழ்ச்சி கொண்டனன்: (அதே சமயத்தில்) தருமன் - தருமபுத்திரன், உளைவொடு - மிக்க மனவருத்தத்தோடு, (குந்தியை நோக்கி) "வலிகொள் புதல்வனை நரபலி தருக துணியுமாறு உரை செய்" என - "வலிமைகொண்ட புதல்வனுகிய வீமனை (அரக்கனுக்கு) நரபலியாகச் செலுத்தத் துணிந்தவிதம் என்னே சொல்வாயாக" என்று கேட்க, அவள் - அக் குந்திதேவி, இவனும் மகிழ - இந்தத் தருமபுத்திரனே மகிழும்படி, முன் - முன்னொருசமயம் (வீமன் மிகச்சிறு குழந்தையாய் இருந்த போது), உணரும் - தான் நேரிற் கண்டுணர்ந்த, வலிதனை - [வீமனுடைய] அபரிமிதமான உடல் வலிமையினை, உரை செய் வாள்–சொல்லலானாள்; (எ-று) அவள் சொல்லியதை மேலிற் கவியிற் காண்க.

அனை - அன்னையென்பதன் தொகுத்தல். உலவை – காற்று: உலவுவது என்ற காரணம்பற்றி வந்தது. மகிழ் - மகிழ்ச்சி: முதனிலைத் தொழிற்பெயர். உளைவு-தொழிற்பெயர். தருக - தருதற்கு என்றபடி. (16)

17. வீமனின் அபரிமித வலிமையைக் குந்தி தருமனுக்குத் தெரியப்படுத்தல்.

அரசி னுடனொரு வரையின் மிசைசெலு
மளவி லெனதுகை வழுவிவீழ்ந்
தருளு முனதிள வலின்மெய் யசைவில
வுடைய வரைசத பிளவதாய்
தெரிவ னொருமதி குழவி தனிலவன்
றிறலை யதுகொடு நரபலி
தருக துணிவுள னுணர்தி யெனவறன்
றனையன் மிகவியந் தனனரோ.

(இ-ள்) அரசினுடன் - பாண்டுமகாராசனுடன், ஒரு வரையின்மீசை செலும் அளவில் - ஒரு மலையின் மீது ஏறிச்செல்லும்

போது, எனது கை வழுவி வீழ்ந்து உருளும் உனது இளவலின்-என்னுடைய கையினின்று வழுவிக்கீழே விழுந்து உருளுகின்ற உனது தம்பியாகிய வீமனின், மெய் அசைவில்-உடல் (சிறிது) அசைந்ததாலே, அ வரை - (விழுந்த) அந்த மலையிடம், சத பிளவதாய் உடைய - நூறு பிளப்புக்களையுடையதாய்ச் சிதறி யுடைந்தபோக, (இப்படி) ஒரு மதி குழவிதனில் - ஒரு மாத குழந்தையாயிருக்கும் போதே, அவன் திறலை தெரிவன்-அவனது மிக்க வலிமையை யான் அறிவேன்: அது கொடு-அதனை எண்ணி, நரபலி தருக துணிவு உளன்-(வீமனை)நரபலியாக அனுப்பித்தரத் துணிவு கொண்டுள்ளேன். உணர்தி-தெரிந்துகொள்வாய், என என்று குந்தி சொல்ல, அறன் தனையன்-தருமபுத்திரன், மிக வியந் தனன்-மிகவும் அதிசயித்தனன்; (எ-று) அரோ-ஈற்றசை.

அகரச்சுட்டு வரையொடு கூட்டப்பட்டது. கொடு-கொண்டு: தொகுத்தல்- உணர்தி முன்னிலை வினைமுற்று. (17)

18. வீமன் சோற்றுவண்டியில் ஏறிச்செல்லுதல்.

பவன னருள்பவன் றுணைவர் தமதொடு
பருகி பதமுத லியவெலாஞ்
சவலை யிடையினர் சொரிய நிறைதரு
சகடு தனிலிரு பகடுசேர்த்
தெவரு மெமதுயி ரருடி யெனபல
விதவு சொலவதி லேறியே
கவன நெறிபுகுந் தறிய பகனிடங்
ககன முறநிமிர்ந் தனனரோ.

(இ-ள்) பவனன் அருள்பவன்-வாயுவினால் தரப்பட்ட வீமன், தமது துணைவரொடு-தனது உடன்பிறந்த நால்வரோடு, பருகி-உணவு உண்டு, (பின்னர்) சவலை இடையினர்-மெலிந்த இடையை யுடைய பெண்டிர், பதம் முதலியவெலாம் சொரிய-சோறுகறி முதலிய உணவுப் பொருள்களையெல்லாம் கொட்டி நிரப்ப, (அதனால்) நிறைதரு சகடுதனில் – [பூரணமாக] நிறைந்த பண்டி யில், இரு பகடு சேர்த்து - இரண்டு கடாக்களைக் கட்டி, - எவரும் - [கூடியிருந்த] அனைவரும், "எமது உயிர் அருடி - எங்களது உயிரைக் காப்பாற்றுவாய்" என-என்று, பல இதவு சொல-பல முகமன் வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டிருப்ப, அதில் ஏறியே-அந்தப் பண்டியில் ஏறிக்கொண்டு. கவனநெறி புகுந்து - காட்டு வழியிலே நுழைந்து, பகன் இடம் அறிய-பகாசுரன் இருக்கும்

இடத்தை அறியும் பொருட்டு, ககனம் உற நிமிர்ந்தனன்- ஆகாயம்வரை உயர நிமிர்ந்து பார்த்தனன்; (எ-று)- அரோ - ஈற்றசை.

தமதொடு-ஒடு பிரித்துக் கூட்டப்பட்டது. 'பருகி' என்றது ஏனைய உண்பன, தின்பன, நக்குவனவாகிய பொருள்களுக்கும் ஆகிவந்தது. சவலை-மெலிவு. சகடு-ஶகடம் என்ற வடசொல்லின் விகாரம். அருடி—முன்னிலை வியங்கோள்: அருள் - பகுதி: இ-முன்னிலை விகுதி: த்-எழுத்துப்பேறு. இதவு-இதம், முகமன் அதில்-அதனில்: அன்சாரியை கெட்டு நின்றது. கவனம்-காடு. ஆகாயம் உற நிமிர்ந்தனன் என்றது உயர்வு நவிற்சியால் கூறியது. ககனம்-ஆகாயம். (18)

19. வீமன் பகனைக்கண்டு சோற்றையுண்ண, அவன் கோபங் கொண்டு வீமனைக் கைகளால் புடைத்தல்.

பசியொ டொருவரை மிசையி னுறுபகன்
பயிலு நிலைகணுற் றுலவைசேய்
அசன முழுவது நுகர வஃதறிந்
தணுகி நிசிசரன் முனிவொடெற்
கிசையு முணவினை மிசையு நினையுணு
மிடையி னஃதெவ ணுளதென
வொசிய பிடரில்குத் தினனு ணனமடி
யுதர மிழியகை யயரவே.

(இ-ள்) பசியொடு-மிக்க பசியோடு, ஒரு வரை மிசையின்- ஒரு மலையின்மேலே, உறு பகன்-பொருந்தியிருந்த பகாசுரனது, பயிலும் நிலை கண்உற்று - நடமாடும் நிலைமையைப் பார்த்து, உலவை சேய் - வீமன், அசனம் முழுவதும் நுகர - சோற்றுணவு அனைத்தையும் உண்ண, நிசிசரன் - அரக்கன், அஃது அறிந்து- அவன் உண்டதைக் கண்டு, முனிவொடு அணுகி-கோபத்தோடு நெருங்கி "எற்கு-எனக்கென, இசையும்-பொருந்த [ஒப்பந்தப்படி] வைத்துள்ள, உணவினை-சோற்றை, மிசையும் நினை-உண்ட உன்னை, உணும் இடையின்-[நரபலியாக] யான் உண்ணும்போது, அஃது-நீ உண்ட உணவு, எவண் உளது? - எங்கே போவது? [என்வயிற்றினுள்ளேதானே உள்ளது?] என - என்று சீறி, ஒசிய-ஒடியும்படி, பிடரில் - கழுத்தின் பின்புறத்தில், கை அயர - தன்கைகள் ஓய்ந்துசோரும்படியும், உண் அனம் அடி உதரம் இழிய-வீமன் உண்ட சோறு அடிவயிற்றில் இறங்கும்படியும், குத்தினன்-விசையோடு குத்தினன்; (எ-று).

பசியால் பகன் பயிலும் நிலையாவது-பற்களோடு நாக்கை மென்று தின்றுகொண்டு, மனம் வேவ நெடுமூச்செறிந்து, புகை கிளம்பும் முகத்தோடு, எல்லாப் பக்கங்களிலும் கண்களைச் சுழல விட்டு நோக்கிக்கொண்டிருக்கும் நிலை. கணுற்று - கண்ணுற்று என்பதன் குறுக்கல். அசனம்-சோறு: இங்கே உணவுவகைகள், 'நினையுணும் இடையின் அஃது எவண் உளது' என்ற இதில்' பல பண்டங்களையுண்ட உன்னையுண்பதால் பண்டத்தையும் உன்னையும் தனித்தனியே புசித்தலாகிய இரண்டு வேலையில்லாமற் போய்விடுகிறதென்று பாராட்டினன் என்க. குத்தின குத்து-சோறு அடிவயிற்றில் இழிதலாகிய நன்மைக்குக் காரணமாகிய தாகக் கூறியது - தகுதியின்மையணி: வட நூலார் 'விஷமாலங் காரம்' என்பர். உணும்=உண்ணும், அனம்=அன்னம்: இடைக் குறை.

உண் + அனம் + அடி + உதரம் + இழிய=உணனமடியுதர மிழிய. இழிய, அயர என்ற வினையெச்சங்கள் 'குத்தினன்' என்ற வினைமுற்றொடு முடியும். 'ஒரு வரை' என்றது - யமுனாநதியை யடுத்துள்ள ஒரு மலையினைக் குறித்தது. இசையும் உணவினை யிசையும் நினை-பிராசம். (19)

வேறு

20. வீமன் முற்றும் புசித்துப் பின் வீரவாதங்கூறிப் போர் தொடங்க, இருவரும் பொருத வகையினைக் கூறும்.

சற்று மின்றியன முற்று முண்டுலவை
தந்த வன்பகனை நோக்கிநீ
கற்ற லென்கொலம ருற்றி யற்றுகென
கைப்பு டைத்துரனில் குத்தியே
மற்றெ ழிற்றிறனி ருனு மன்னவனும்
வல்ல செய்துயர்ம ரங்கள்கொண்
டெற்றி யுஞ்சிலைகள் விட்டெ றிந்துமினை
யின்றி வெஞ்சமரி யற்றினர்.

(இ-ள்) அனம் முற்றும்—சோறு முழுவதும், சற்றும் இன்றி-ஒரு பருக்கை கூட இல்லாமல்,உண்டு-அருந்தி, உலவை தந்தவன்-வீமன், பகனை நோக்கி—, நீ—, கற்றல் என்கொல்-கற்ற (போர்த் திறங்கள்) என்ன? உற்று அமர் இயற்றுக என - பொருந்திப் போர் செய்வாயாக என்று அறைகூவி, கைப்புடைத்து-இரண்டு

கைகளையும் தட்டி, உரனில் குத்தியே - (பகனுடைய) மார்பிலே குத்தி, (பின்பு) மல் தொழில் திறனில் தானும் அன்னவனும் வல்ல செய்து-மல்யுத்தஞ்செய்யும் வகைகளில் தானும் அந்தப் பகனும் செய்யவல்ல திறங்களெல்லாம் செய்து (பின்), உயர் மரங்கள் கொண்டு - உயர்ந்த மரங்களை [ப் பிடுங்கிக் கைகளிற்] கொண்டு, எற்றியும் - மோதிக்கொண்டும், சிலைகள் விட்டு எறிந்தும்-கற்களை வீசியெறிந்தும், [ஒருவர்க்கொருவர்] வெம் சமர்-கொடிய போரினை, இணை இன்றி – இனி (இந்தச் சமர்க்கு) ஒப்பில்லை என்னும்படி, இயற்றினர்-செய்தார்கள்; (எ-று).

உலவை தந்தவன் - காற்றின் மகன்: வீமன். இயற்றுகென-வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். இணையின்றி-தமக்கு வேறொருவர் ஒப்பு இன்றி என்னவுமாம்,

இதுமுதல் ஆறு கவிகள் - பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்தாஞ்சீர்கள் மாச்சீர்களும், ஏழாஞ்சீர் விளச்சீரும், மற்றைய வைவிளங்காய்ச்சீர்களுமாகிய எழுசீராசிரிய விருத்தங்கள். (20)

21. பகனைக் கொன்று வீமன் ஊருக்கு மீண்டு, ஸ்நாநஞ் செய்து, மனைபுகுந்து பந்துமித்திரரோடு அளவளாவுதல்.

அடிகொ டென்புபொடி படவு தைத்துபக
லுக மெற்றிதலை திருகியே
படியு ருட்சகடி னிட்டி வர்ந்துபதி
பாங்க ருய்த்தொர்தட மூழ்கியே
சுடரெ டுப்பமனை துன்னி வேதியனை
துணைவி யொடுதொழுத னையைமுன்
னெடுப ணிந்திளைஞர் தனைவ ணங்ககதை
யோன்ம கிழ்ந்தவரைத் தழுவினன்.

(இ-ள்) அடிகொடு-தன் கால்களைக்கொண்டு, என்பு பொடிபட உதைத்து - எலும்புகள் முறிந்துநொருங்கிப் பொடியாகும்படி உதைத்து, பகன்-பகாசுரனது, ஆகம்-உடம்பை, எற்றி-உதைத்தெறிந்து, தலை திருகியே-தலையைத்திருகி, படி உருள் சகடின் இட்டு-தரையில் சக்கரங்களால் உருண்டுவருகின்ற பண்டியில் போகட்டு, இவர்ந்து–அப் பண்டியிலேறி வந்து, பதி பாங்கர் உய்த்து–ஊருக்குப்பக்கத்து வெளிப்புறத்திற் செலுத்தி, ஓர் தடம்

மூழ்கியே-ஒரு தடாகத்தில் ஸ்நாநஞ்செய்து, - [பின்னர்]. சுடர் எடுப்ப-(நகரமெங்கும்) மங்கள விளக்குகளை ஏற்ற, மனை துன்னி-[தங்கியிருந்த] வீடுபுகுந்து, (முன்னர்) வேதியனை துணைவியொடு தொழுது-(மனைக்குரிய) அந்தணனையும் அவரது மனைவியையும் வணங்கி, (பின்பு) அனையை முன்னெடு பணிந்து - தாயாராகிய குந்தியையும் தமையனாகிய தருமபுத்திரனையும் பணிந்து, (அதன் பின்னர்) இளைஞர் - தம்பியர் மூவரும், தனை வணங்க—தன்னை வணங்க, கதையோன்-வீமன், மகிழ்ந்து-சந்தோஷித்து, அவரைத் தழுவினன்-அத் தம்பியரை அணைத்துக்கொண்டான்; (எ-று).

வேத்திரகீய நகரத்திலுள்ளார் பார்த்துத் துன்பம் நீங்கி மனம் மகிழ்தற்பொருட்டு அவ்வரக்கனது திருகிய தலையைப் பண்டியிலிட்டுக் கொணர்பவனனன். ஒடு-ஈரிடத்தும் எண்ணெடு. வீமன் கதாயுதத்தில் வல்லவனதலின், கதையோன் எனப்பட்டான். மனை துன்னிய வீமனது செயல் அடைவு கண்டின்புறத் தக்கது. தனக்கு மூத்தோரைப் பணிதலும், தனக்கு இளையோரைத் தழுவுதலும் முறையென்பது காட்டப்பட்டது. (21)

22. நகரத்திலிருந்த பலரும் வீமனைப் பாராட்டியமை.

அன்பொ டன்னமுனி யாசி கூறிடவு
மன்னை யாருரைவ ழங்கவும்
பின்பு தன்றுணைவர் தன்ன தாண்மைநிலை
பேச வந்திறல்கொள் வீமனை
பொன்பு ணர்ந்ததட மார்பின் மால்கொலென
புகழ்ந்து மற்றுளச னங்களும்
இன்பொ டும்பகன்மு டைத்த லைக்கணுறி
யிசைவி ளம்பினர்வி யந்தரோ.

(இ-ள்) அன்ன—அத்தகைய சிறப்புப் பொருந்திய, முனி-(வீட்டுக்குரிய) அந்தணன், அன்பொடு - பரிவுடன், ஆசி கூறிடவும் - வாழ்த்துக் கூறவும், அன்னை - தாய் [குந்தி], ஆர் உரை-அன்பு நிறைந்த பேச்சுக்களை, வழங்கவும் - சொல்லவும், பின்பு - பின்னர், தன் துணைவர் - தன் உடன் பிறந்தோர், தன்னது-[வீமனுகிய] தன்னுடைய, ஆண்மைநிலை பேசவும் - பராக்கிரமச் செயலைப் பாராட்டிக் கூறவும், திறல் கொள் வீமனை - வலிமை கொண்ட வீமனை, மற்றுள சனங்களும் - மற்றும் அந்நகரத்திலிருந்த சனங்களெல்லாம், பொன் புணர்ந்த தட மார்பின் மால்

கொல் என - இலக்குமி தங்கிய விசாலமான மார்பினையுடைய திருமாலோ? என்று சங்கித்து, புகழ்ந்து - பாராட்டி, (பின்னர்) பகன் முடைத்தலை-பகாசுரனது புலால்நாற்றம் வீசும் தலையை, இன்பொடும் - மகிழ்ச்சியோடும், கண் உறி - கண்ணால் பார்த்து, வியந்து - (அதனை வலிமையோடு திருகியெடுத்த) திறனை அதிசயித்து, இசை விளம்பினர் - (அந்த வீமசேனனுடைய) புகழைக் கூறினர்கள்; (எ-று): அரோ-ஈற்றசை.

துஷ்டநிக்கிரகஞ் செய்து சிஷ்டரைப் பரிபாலிக்குஞ் செயல் இவ் வீமனுக்கும் இருத்தலால், 'மால் கொல்' எனப் புகழ்ந்தனர். 'கணுறீஇ' - என்றும் பாடம் காண்கிறது. (22)

23. இனி, துருபதன் வரலாறு : முன்னர்க்கொண்ட அவனது கவலையும் அவன் பின்னர்க் கொண்ட உட்கருத்தும்.

இதுவும், அடுத்த கவியும்—குளகம்.

இந்த வாறிவர்க ளிங்கி ருப்பவுல
கெங்கு மைவர்கள ரக்ககத்
தந்த மாயினரெ னுஞ்சொ றன்செவிய
டைந்தி டத்துருப தேயனுண்
ணெந்து சோதிடர்க ளாலும் வான்மொழி
நுவன்ற தாலுமரு டேசிகன்
வெந்தி லார்வருவ ரென்ப தாலுமகள்
விசய னுக்குரிய ளாமெனை.

(இ-ள்) இந்தவாறு இவர்கள் இங்கு இருப்ப-இந்தவிதமாக இந்தப் பாண்டவர்களும் குந்தியும் இவ் வேத்திரகீய நகரில் தங்கியிருப்ப, உலகு எங்கும் - பூமியினிடங்களிலெல்லாம், ஐவர்கள்-பாண்டவர்கள் ஐவரும், அரக்கு அகத்து அந்தமாயினர்-அரக்கு மாளிகையில் இறந்துபோயினர், எனும் சொல் - என்று பேசும் வார்த்தை, தன் செவி அடைந்திட - தன் காதிலும்பட (தானும் கேட்கும்படி நேரவே), துருபதேயன் - துருபதராசன், உள் நொந்து-மனம் வருந்தி, (பின்னர்) சோதிடர்களாலும்-சோதிடம் பார்த்துச் சொன்னவர்களாலும், வான்மொழி நுவன்றதாலும்-ஆகாயவாணி சொன்னதாலும், அருள் தேசிகன் வெந்திலார் வருவர் என்பதாலும்-கருணைமிகுந்த (தனது) குரு பாண்டவர்கள் எரிந்து மாளவில்லையாதலின் நிச்சயம் வருவர் என்று சொன்னதாலும், மகள்-தனது மகளாகிய திரௌபதி, விசயனுக்கு-அருச்சுனனுக்கு, உரியளாம் எனை – (மணத்தற்கு) உரிமையுடைய

வளாவள் என்று கருதி; (எ-று) 'தேறி' என அடுத்த கவியோடு குளகமாய்த் தொடரும்.

வான்மொழி நுவன்றது-"இவள் பாண்டவர்க்கு உரியளாய்ப் பல அரசர்கள் இறத்தற்கு மூலமாவள்" என்றது. தேசிகர் வருவர் என்றது-பாண்டவர்கள் அரக்கு மாளிகையில் இறந்து போயினரென்ற உலக வதந்தியைக் கேட்டவுடனே மிகவும் கவலை கொண்ட துருபதன் தன் குருவைச் சரணமடைந்து 'இனி என் செய்வது' என்று வினவ, அவன் தனது ஞானக்கண்ணால் உண்மையையுணர்ந்து 'அவர் இறந்திலர்' என்று கூறித் துருபதனைத் தேற்றினர் என்பது. அந்தம்-முடிவு. துருபதன் ஆஸ்திக னுதலால் சோதிடர்மொழி, வான்மொழி, குருமொழி இவற்றில் மிக்க நம்பிக்கை கொண்டு அதனால் இன்னும் இவள் அருச் சுனனையே மணஞ்செய்துகொள்வளென்று உறுதிகொண்டிருந் தனன். எனை - செய்யாவென்னும் வாய்பாட்டு உடன்பாட் டெச்சம். (23)

24. துருபதன் சுயம்வரநாள் குறித்தலும், அரசர் திரள, அதனைப் பாண்டவர் செவியுறல்.

இதுவும், அடுத்த கவியும்—குளகம்.

தேறி யோலைதிறன் மன்ன வர்க்குவிட
சேயி ழைக்குரிய வதுவைநாட்
பாறு லாயவடி வேலின் மன்னர்குழு
பதியி றுத்ததிவை நிற்கவே
வீறு பாண்டவர்கண் மேவு மாமனையில்
வேதி யன்ஞெருவன் மேவவே
மாறி லாதவழி பாடி யற்றியெவண்
வதித லிங்குவரு வாறெனை.

(இ-ள்) தேறி - மனவமைதிகொண்டு நிச்சயித்து, மன்ன வர்க்கு - பிறதேச மன்னர்களுக்கு, ஓலை திறன் விட - சுயம்வர நாள் குறித்து ஓலையைத் திறம்பட வரைந்து [தூதுவர் மூலம்] அனுப்ப, [அதனைக்கண்ட] பாறு உலாயவடிவேலின் மன்னர் குழு-பருந்துகள் பின் தொடர்ந்து உலாவும்படி கூரிய வேலாயுதத்தை யேந்திய வீரர்களாகிய் மன்னர்களது கூட்டம், சேயிழைக்கு உரிய வதுவைநாள்-திரௌபதிக்கு உரித்தாகிய சுயம்வரதினத் தில், பதி இறுத்தது-(திரௌபதியொருத்தியை விரும்பி) நகரில்

தங்கியது; இவை நிற்க - இவை இப்படியாக:— வீறுபாண்ட வர்கள் மேவு மாமனையில் - தனிச் சிறப்போடு பாண்டவர்கள் தங்கியிருக்கின்ற பெரிய வீட்டில், வேதியன் ஒருவன் மேவ-ஒரு பிராமணன் வந்துபொருந்த, (அவனுக்கு) மாறு இலாத வழிபாடு இயற்றி-ஒப்பில்லாத உபசாரங்களைச் செய்து, (அவனை நோக்கி) எவண் வதிதல் - நீர் எங்கு வசிக்கிறீர்: இங்கு வரு ஆறு என்?- இவ்விடத்துக்கு வந்த வகை என்ன? (எ-று) — ஆ - ஈற்றசை. "எங்களுக்குரைசெய்" என மேலைக் கவியில் தொடரும்.

திரௌபதிக்குச் சுயம்வரமென்று உலகமெங்கும் தெரிவித் தால் அவளைப் பெறும் விருப்பத்தாற் பலரும் வரும்போது பாண்டவரும் வருவரென்று கருதிச் சுயம்வரம் நாட்டி அதற்குரிய ஓலையைத் தூதர் மூலமாக எல்லாத்தேசத்தரசர்க்கும் அனுப் பினன் என்க. சுயம்வரமாவது— (ஓர் இராசகன்னிகை ஓரிடத் திலே வருவித்துச் சேர்க்கப்பட்ட இராசகுமாரர் பலருள் தனக் குப் பிரியமான ஒருவனைத்) தானே கணவனாக ஏற்படுத்திக் கொள்ளுதல். பாறு-பருந்து. வேலின் பின் உலாயது - தசை நிணங்கிடைக்கும் என்னும் நசையால். மாறு - ஒப்பு. வதுவை-விவாகம்: இலக்கணையாய் அதை நிச்சயித்தற்கு உரிய சுயம்வரத் தைக் காட்டிற்று. (24)

25. வந்த அந்தணனைப் பாஞ்சால நகர்ப் புதுமை பற்றிப் பாண்டவர் வினவுதல்.

எங்க ளுக்குரைசெ யென்ன மாமுனியி
யம்பு வானுலகு சூழ்ந்துபல்
கங்கை யாடிபல மன்னர் தம்பதிகள்
கண்ட பின்றுருப தன்னகர்
தங்கி வேடைய தகற்றி மேக்குதிசை
சார வந்ததிவ ணென்னவத்
துங்க வேற்றுருப தன்ப திப்புதுமை
தூய்மை யோயருளெ னச்சொல்வான்.

(இ-ள்) எங்களுக்கு உரைசெய் - எங்களுக்குச் சொல்வாய், என்ன-என்று கேட்க, மாமுனி-சிறந்த அந்த அந்தணன், இயம்பு வான் - சொல்லத் தொடங்கினன்: "உலகு சூழ்ந்து - இந்தப் பூவுலகில் பல இடங்களில் சுற்றி, பல் கங்கை ஆடி – பல தீர்த்தங் களில் நீராடி, பல மன்னர்தம் பதிகள் கண்ட பின் - பல அரசர் களுடைய தலைநகரங்களைப் பார்வையிட்ட பின், துருபதன் தன்

நகர் தங்கி - துருபதமகாராசனின் பாஞ்சால நகரில் தங்கியிருந்து, வேடையது அகற்றி - (பல இடங்களில் சுற்றிக் கண்டுவந்ததாலேற்பட்ட) வெப்பத்தை யாற்றிக்கொண்டு, மேக்குதிசை சார இவண் வந்தது-மேற்குத்திக்குப்பக்கமாக இங்குவந்து சேர்ந்தேன்", என்ன-என்று சொல்ல, (இதனைக்கேட்ட பாண்டவர்) தூய்மையோய்-பரிசுத்தமான அந்தணரே! துங்க வேல் அ துருபதன் தன் பதிப்புதுமை அருள் - பெருமை பொருந்திய வேலாயுதத்தை யேந்திய அந்தத் துருபதனுடைய நகரின் அதிசயத்தைப் பற்றித் தெரிவிப்பாயாக, என - என்று வினவ, சொல்வான் - (அந்த அந்தணன்) கூறத்தொடங்கினன்; (எ-று).

புண்ணிய நதிகள் அனைத்தையும் கங்கையென்று கூறுதல் மரபு. வேடை - வெப்பம்: சுற்றிய களைப்பினாலாகியது. மேக்கு-மேற்கு. புதுமை-அதிசயம், அற்புதம், நூதனம். அருள்-முன்னிலையங்கோள். அகரச்சுட்டு பிரசித்திகாட்டுவது. (25)

வேறு

26-32. அந்தணன் துருபதன்றன் பதிப்புதுமை பாண்டவர்க்குக் கூறுதல்.

ஏழு கவிகள்—ஒரு தொடர்.

அவற்றுள் : 26 முதல் 30 வரை - திரௌபதியின் பேரழகும் அவயவச்சிறப்பும் கூறும். (கேசாதிபாத வருணனை)
31 — திரௌபதியின் பண்புநலம் கூறும்.
32—சுயம்வரத்திற்கு மன்னர் திரண்டமை கூறும்.

26. பார்புரந் தருளுந் துருபதன் மகத்திற்
பயந்திடுந் துரோபதி யென்னும்
பேர்பெறு மணங்கின் பேரெழிற் சிறிது
பேசுவ னேசிலீர் சூலார்
கார்பயந் திரிந்திந் திரன்சரண் புகுதக்
கடிந்திருண் டிலகுபூங் குழலாள்
ஊர்பிறை யுடைந்து சிவன்சடை யொளிப்ப
வோட்டிய திலதவா ணுதலாள்.

(இ-ள்) பார்புரந்தருளும் துருபதன் - பூமியைக்காக்கின்ற துருபதராசன், மகத்தில் - யாகத்தின்மூலம், பயந்திடும் - பெற்ற, துரோபதியென்னும் பேர்பெறும் அணங்கின் - திரௌபதியென்

கின்ற பேர்படைத்த பெண்மணியின், பேர்எழில் சிறிது பேசுவன்-மிக்க அழகினைப்பற்றிச் சிறிதே கூற முயலுவேன்: ஏசிலீர்-பழிக்காதீர்கள்: சூல் ஆர் கார் பயந்து-கருக்கொண்டு முதிர்ந்த கருமேகம் அஞ்சி, இந்திரன் சரண் புகுத-(வச்சிராயுதமுடைய) இந்திரனிடம் அடைக்கலம் புகுமாறு, கடிந்து-அதனை முனிந்து [துரத்தும்படியாக], இருண்டு இலகு பூங்குழலாள்-கறுத்து விளங்குகின்ற அழகிய கூந்தலினையுடையவள்: ஊர் பிறை உடைந்து-ஆகாயத்தில் செல்லுகின்ற சந்திரன் பிளவுண்டு, சிவன் சடை ஒளிப்ப-சிவபிரானின் சடையிலே ஒளிந்துகொள்ளும்படி, ஓட்டிய-(அதனைத்) துரத்திய, திலதம் வாள் நுதலாள்-திலகம் தீட்டிய ஒளிபொருந்திய நெற்றியையுடையவள்; (எ-று).

ஏசுதல்-முற்றிலும் பேசமுடியவில்லையே என்பதாலாயது. இந்திரனிடம் சரண்புகவே அவன் மேகவாகனனுமினன். கருமேகத்தையும் கடிந்த கூந்தல் என்று அதன் கருமைநிறம் பாராட்டியபடி. பிறைச்சந்திரனும் புறங்காட்டும் ஒளி நெற்றியினையுடையாள்: அந்த நெற்றிக்கு மேலும் அழகூட்டுவது திலதம். கார் சரண்புகுந்தது, பிறை சடையொளிந்தது என்பன காட்சியணியின்பாற்படும் என்ப. துரோபதி-திரௌபதி என்பதன் சிதைவு.

இதுமுதல் இச்சருக்க முடியுமளவும் உள்ள எட்டுக்கவிகள்—பெரும்பாலும் இரண்டு, நான்கு, ஏழாஞ்சீர்கள் மாச்சீர்களாகவும், ஏனையவை விளச்சீர்களாகவும் வந்த எழுசீராசிரியவிருத்தங்கள். (26)

27. இந்திர தனுவை யந்தரத் தகற்றி
யிணையறு மிணைபுரு வத்தாள்
சிந்துவைப் புவிக்குப் புறத்தலைந் தரற்றச்
செய்தரி பரந்தகூர் விழியாள்
முந்துறுங் குமிழை யெண்மல ருடனே
முதுகுகண் டணிகொணை யியினள்
செந்துவர் முருக்கை கடலினில் வனத்திற்
செலுத்திய செய்யவா யிதழாள்.

(இ-ள்) இந்திரதனுவை-வானவில்லை, அந்தரத்து அகற்றி-ஆகாயத்திலிருந்து நீக்கி[ய பெருமையையுடைய], இணையறு-ஒப்பற்ற, இணை புருவத்தாள்-இரண்டு புருவங்களையுடையவள்: சிந்துவை-கடலை, புவிக்குப்புறத்து-பூமிக்கு வெளியே, அலைந்து-

அலைவீசித் திரிந்து, அரற்ற-ஒலிக்கும்படி, செய்து—, அரி பரந்த கூர் விழியாள்-செவ்வரி நீண்டோடிய கூரிய கண்களையுடையவள்: முந்துறும் - முற்பட்ட, குமிழை-குமிழம்பூவை, எள் மலருடனே - எள்ளின் பூவுடனே, முதுகு கண்டு - புறங்காட்டியோடச்செய்து, அணிகொள் — அழகுபொருந்திய, நாசியினள் — மூக்கினையுடையாள்: செந்துவர் முருக்கை - சிவந்த பவளத்தையும் முருக்கம் பூவையும், [முறையே] கடலினில் வனத்தில்-கடலுக்குள்ளும் காட்டிற்குள்ளும் போய் ஒளியும்படி, செலுத்திய-ஓட்டிய, செய்ய வாய் இதழாள்-சிவந்த வாயிலதரத்தையுடையாள்; (எ-று).

வானவில்போல் வளைந்த புருவத்தினள்: கடலினும் பெரிய கண்கள் உடையவள். குமிழம்பூ, எட்பூ இவைகளை ஏசிய நாசியையுடையவள்: செம்பவளம், முருக்கம்பூ போன்றதனினும் சிவந்த அதரத்தினள்: கொள் + நாசி = கொணசி: ளகரத்தின் முன் நகரம் ணகரமாயிற்று: "ணளமுண்டணவும் ஆகும் தநக்களாயுங்காலே" (நன்: மெய்யிற்: 34) 'செந்துவர் கடலினில், முருக்கை வனத்தில் செலுத்திய' என முறையே இயைதலால், முறை நிரனிறையணிபடக் கூறப்பட்டது அந்தரத்தகற்றி, அலைந்தரற்றச்செய்து, முதுகுகண்டு, வனத்திற் செலுத்தி என்பன மிகையுயர்வுநவிற்சியணி. (27)

28. நறைகொளு முல்லை முகையினை முருந்தை
நாணுற நகைசெயு நகையாள்
குறையொடு வள்ளைவென்றர வெற்றி
கொண்டொளிர் குண்டலச் செவியாள்
மறைவொடு குறையுங் கறையும்பெற் றிடலான்
மதியந்தாழ்ந் தடிதொழு முகத்தாள்
சிறையளி மரையைக் காந்தளை வனத்திற்
செலுத்துநீ ளொலிவளைக் கரத்தாள்.

(இ-ள்) நறைகொளும் முல்லைமுகையினை - வாசனை கொண்டுள்ள முல்லையரும்பினையும். முருந்தை-மயிலிறகினடிக் குருத்தினையும், நாணுற-வெட்கி [யொளியும்படி], நகைசெயும்-சிரிக்கின்ற, நகையாள் - பற்களையுடையவள்; குறையொடு - கத்தரிக் கருவியோடு, வள்ளை - வள்ளைக் கொடியையும், வென்று - கீழ்ப்படுத்தி, அரவு எற்றிகொண்டு ஒளிர் குண்டலம்-நாகத்தைப் புறக்கணித்தொதுக்கி விளங்குகின்ற குண்டலங்களையணிந்த, செவியாள்-காதுகளையுடையவள்: மறைவொடு - மறந்துகொள்வதோடு

[அத்தமித்தலோடு], குறையும் கறையும் பெற்றிடலான் - குறை தலையும் (தேய்தலையும்) களங்கத்தையும் கொண்டிருத்தலால், மதியம் தாழ்ந்து - சந்திரன் பணிந்து, அடிதொழும் – பாதங்களைக் கும்பிடுகின்ற, முகத்தாள் - முகத்தையுடையவள்: சிறை அளி மரையை - சிறகுகளையுடைய வண்டுகள் மொய்க்கின்ற செந் தாமரைப் பூவையும். காந்தள்-செங்காந்தள் மலரையும், வனத் தில் செலுத்தும் – முறையே தண்ணீரிலும் காட்டிலும் புகும்படி துரத்தும், நீள் ஒலி வளை-மிக்க ஒலிசெய்யும் வளையல்களையணிந்த, கரத்தாள்-கையையுடையவள்; (எ-று).

முருந்து-மயிலிறகினடிக்குருத்து: "முருந்தேய்க்கு முட்போல் எயிற்றினுய்" (ஏலாதி: 7) நகை-சிரிப்பு, பல். குறை-குறைக்கும் கருவிக்கு ஆகுபெயர்: கத்தரி. குறை-துண்டம். கத்தரிக்கோலின் வளைவைக்காதினுக்கு ஒப்புக்கூறுதல் மரபு "மயிர்குறை கருவி மாண்கடையன்ன....காது" (பொருநராற்றுப்படை, 29-30).

அரவு எற்றியொளிர் குண்டலம் என்றது – நாகபடம் என்ற காதணியை: இஃது பாம்பின் படத்தின் உருவங்கொண்ட மகளிர் காதணிவகை. மதியம் பணியும் முகம் என்றது முகத்தின் மாசு மறுவின்மைநோக்கி. மரை - தாமரை என்பதன் முதற்குறை. தாமரை நீரில் இருப்பதாதலின் 'வனம்' என்ற சொல் நீருக் காகியது. அஃதே காந்தளுக்கு வரும்போது காந்தள் செடியாத லின் காட்டினுக்காகியது. வனம்-நீர், காடு. (28)

29. பொருப்பொடு மருப்பை யிகழ்ந்தவிர் சுணங்கு
பூண்டுவார் கீண்டிய முலையாள்
விருப்பொடு மரிதுஞ் சடைநலங் கவற்றி
மிளிர்மயி றொழுங்குவு தரத்தாள்
கருப்பொடு மலரைந் துடையவ னுருவிற்
காணுதற் கரியதா மிடையாள்
திருப்பொலி மணிச்சே டனைப்பிலம் புகுத்திச்
சிறப்புவாய்ந் தகனிதம் பத்தாள்.

(இ-ள்) பொருப்பொடு - மலையோடு, மருப்பை - யானை தந் தத்தை, இகழ்ந்து - கீழ்ப்படுத்தி ஏசி, அவிர் - விளங்குகின்ற, சுணங்கு - தேமல, பூண்டு - அணிந்து, வார் - கச்சினை, கீண்டிய - கிழித்து வெளிமுகங்காட்ட முயலும், முலையாள் - கொங்கைகளை யுடையாள்: விருப்பொடும் - ஆதரத்துடனும், அரி துஞ்சு – வண்டுகள் தூங்குகின்ற, அடை - இலையின், நலம் - அழகினை, கவற்றி - கவலச்செய்து, மிளிர் - ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற,

மயிரொழுங்கு - உரோம ரேகையினையுடைய, உதரத்தாள் - வயிற்றினையுடையாள்: கருப்பொடு - கரும்பு வில்லோடு, மலர் ஐந்து உடையவன் - பஞ்சபாணங்களையுடையவனாகிய மன்மதனுடைய, உருவின் - உருவத்தைக் காட்டிலும், காணுதற்கு அரியதாம் இடையாள் - காண்பதற்குத் தெரியாது அரிதாகிய இடையையுடையவள்; திரு பொலி மணி சேடனை - அழகு விளங்குகின்ற மாணிக்கத்தைத் தலையிலேயுடைய ஆதிசேடனையும், பிலம்புகுத்தி-பாதலத்திற்கு அனுப்பி, சிறப்புவாய்ந்த - [அத்தகைய அதனால்] சிறப்பு மிகுந்த, அகல் - அகன்ற, நிதம்பத்தாள் - அல்குலையுடையாள்; (எ-று).

முலை பொருப்பினையிகழ்ந்தது - பருமையில்: மருப்பினையிகழ்ந்தது - முலைக்கண்களின் கூர்மையில். சுணங்கு - தேமல்; நிறவேறுபாடு: பொன்னுரைபோலச் சிறிதும் பெரிதுமாகப் படர்வது. வார் கீண்டிய முலை-கச்சைப்பொருமுலை. கரிய வண்டினமொழுங்கு பசிய இலையில் இருப்பதுபோல, கரிய மயிரொழுங்கு ஆலிலை போன்ற வயிற்றில் ஒழுகியிருப்பது. மன்மதன் உருவிலியாதலின் காண முடியாதவன்: அவனைப்போல இவளது இடையும் காண முடியாததுதான். எனினும் அவனினும் இடை காணுதற்கரியது என்றதென்னையெனில் - அவனை அநங்கன்: அங்கமில்லாதவன். எனவே காணமுடியாதிருத்தல் இயல்பு. ஆனால் இவளது இடையோ ஒரு அங்கமாக இருக்கின்றது. அங்கன் இருந்து கொண்டே காணுதற்கரியதாயிருத்தலின் 'அவனுருவிற் காணுதற்கரியதாம் இடையாள்' என்றது. நிதம்பம்-இடைக்குந் தொடை மூலத்துக்கும் நடு: அல்குல். இதற்குப் படமுடை அரவினையொப்புக் கூறுதல் மரபு. "புற்றரவல்குல்" என்றாள் ஆண்டாளும் திருப்பாவையில் (செ: 11]. ஆதிசேடன் பாதலத்திலிருந்து கொண்டு பூமியைத் தாங்குகின்றான் என்பது வழக்காதலின், அவன் பாதலம் புகுந்தமைக்கு ஒரு காரணம் கற்பித்துக் கூறியவாறு. சேடன்-ஆதிசேடன்: நாகங்களிற் சிறந்தவன். (29)

30. மிளிர்கத லியைக்காய்ந் தொளிர்தரும் துடையாள்
வனவரா லிடுங்கணைக் காலாள்
தளிர்கவின் கெடவெஞ் சினங்கொளும் பதத்தாள்
சஞ்சலை யஞ்சுறும் வடிவாள்
கிளியின மிறைஞ்சித் துதிதரு மொழியாள்
கிளர்குயி றளர்வுறுஞ் சுரத்தாள்
ஒளிசிறை மயூரம் பணிசெய்சா யலினுள்
ஓதிமம் பேதுறு நடையாள்.

(இ-ள்) மிளிர் கதலியைக் காய்ந்து - ஒளியுள்ள வாழையை

முனிந்து (கீழ்ப்படுத்தி), ஒளிர்தரும் - அதனினும் மிக்கு விளங்குகின்ற, துடையாள் - தொடையையுடையவள்: வனம் வரால்-அழகிய வரால்மீன், இடும்-வணங்கும், கணைக்காலாள்-கணைக்கால் கனையுடையவள்: தளிர் கவின் கெட-மாந்தளிரின் அழகு கெடும்படி, வெஞ்சினம் கொளும் - வெவ்விய கோபத்தைக் கொள்ளும் [சிவந்த என்றபடி], பதத்தாள் - கால்கனையுடையவள்: சஞ்சலை-இலக்குமி தேவியே, அஞ்சுறும் - [நமக்கில்லையே என்று] அச்சங் கொள்ளும்படியான, வடிவாள் - மேனியழகுடையவள்: கிளியினம் - கிளியின் கூட்டங்கள், இறைஞ்சி - வணங்கி, துதிதரும்-தோத்திரஞ் செய்யும், மொழியாள்-பேச்சினையுடையவள்: கிளர் குயில்-எழுச்சிபெற்ற குயில், தளர்வுறும் - (நாணிச்) சோர்வடையும், சுரத்தாள் - இசையினையுடையாள்: ஒளி சிறை மயூரம்-பிரகாசம் பொருந்திய தோகையினையுடைய மயில், பணிசெய்-கீழ்ப்படிந்து குற்றேவல் புரியும்படியான, சாயலினள் - சோபையினையுடையவள்: ஓதிமம்-அன்னப்பறவை, பேதுறும்-வருந்தும்படியான, நடையாள்-நடையழகினையுடையவள்; (எ-று).

கதலி - வாழை: மகளிரின் தொடைக்கு வாழையை ஒப்புக் கூறுதல் மரபு: "குறங்கென மால்வரையொழுகிய வாழை" (சிறுபாண்: 20-21) கணைக்காலுக்கு வரால்மீன் ஒப்பு: "காலோ இளஞ்சினைவரால்" என்றார் அரிச்சந்திர புராணத்தும், "சினங் கொளும்" என்றது சிவப்பு நிறம் காட்டும் குறிப்பினது: "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள" என்றது தொல்காப்பியம். சஞ்சலை-இலக்குமி: கிளி-பேச்சினிமைக்கு ஒப்பு. குயில்-இசையில் இராகச்சுரத்தினினிமைக்கு ஒப்பு. குயில் பஞ்சமசுரத்தில் பாடுவது என்பர்: அதனையும் தளர்வுறச் செய்யும் சுரத்தினள் என்றதனாலே இவளது கண்டத்தினின்றெழும் தொனி உச்ச சுவரத்தில் சஞ்சரிக்கும் இயல்பினதென்பது பெறப்படும். சுரம்-ஸ்வரம், சாயல் - சமுதாய சோபை: சாயலுக்கு மயிலை ஒப்புக் கூறுதல் மரபு, "மயில் மயில்குளிக்குஞ்சாயல்" என்றது சிறுபாண் (16). மகளிர் நடைக்கு அன்ன நடையை ஒப்புக் கூறுவர். "அஞ்சல் மடவனமே! உன்றன் அணிநடையும், வஞ்சியனையார் அணிநடையும்—விஞ்சியது, காணப்பிடித்தது காணென்றான் களிவண்டு, மாணப் பிடித்ததார் மன்" என்றது நளவெண்பா. "ஓதிமம் ஒதுங்கக்கண்ட உத்தமன் உழைய ளாகும், சீதைதன் நடையைநோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்" என்றும், "தோகைக்கொம்பின் அன்னவர்க்கன்னம் நடைதோற்றுப், போகக்கண்டு வண்டினமார்க்கும் பொழில் கண்டார்" என்றும் கூறியது கம்பராமாயணம். கேசாதிபாத வருணனை முற்றியது. (30)

31. திளெரபதியின் பண்புநலங் கூறுவது.

அறந்தனி லுமையு மழகினிற் றிருவும்
அரியகல் வியிலிசை மகளுஞ்
சிறந்திடுங் கற்பிற் சாலியு மருளிற்
சிந்துவும் பொறையில்பூ மகளும்
புறந்தர வயங்கொண் டெழிற்கெழி லாமப்
பூவையை நரற்களித் திடவு
மறந்திக ழொருமைந் தனைத்துரோ ணனைத்தான்
வதைக்கவும் மகத்தினிற் பெற்றான்.

(இ-ள்) அறம் தனில் உமையும்-தருமஞ் செய்தலில் உமாதேவியையும் (காமாட்சியம்மையையும்), அழகினில் திருவும்-அழகொடு சிறத்தலில் இலக்குமியையும், அரிய கல்வியில் இசை மகளும்-மேன்மையான கல்வியறிவில் சரசுவதியையும். சிறந்திடும் கற்பில்-[எல்லாப் பெண்மை நலன்களிலும்] சிறந்து விளங்குகின்ற கற்பினில், சாலியும்-அருந்ததியையும், அருளில்-கருணையில், சிந்துவும்-சமுத்திரத்தையும், பொறையில்-பொறுமையில், பூமகளும்-பூமிதேவியையும் விஞ்சி நிற்றலால் [அவர்கள்], புறந்தர-முதுகிட, வயங்கொண்டு-வெற்றிகொண்டு, எழிற்கு எழிலாம்-அழகினுக்கு அழகுசெய்யும், அ பூவையை-அந்தத் திளெரபதியை, நரற்கு-அருச்சுனனுக்கு, அளித்திடவும்-(மணத்தில்) கொடுத்திடவும், மறம் திகழ் ஒரு மைந்தனை-வீரம் செறிந்து விளங்குகின்ற ஒரு மகனுகிய திட்டத்துய்மனை, துரோணனைத்தான் வதைக்கவும்-துரோணனைக் கொல்லவும், மகத்தினில் பெற்றான்-யாகத்தின் மூலம் பெற்றான் (துருபதன்); (எ-று).

கச்சிப்பதியில் உமையம்மை காமக்கோட்டத்து எழுந்தருளியிருந்து முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்த்தனள்: அதற்காகச் சிவபெருமான் அட்சயபாண்டம் ஒன்றையும் இரண்டு சராவங்களையும், இருநாழி நெல்லையும் அவட்குக் கொடுத்தருளினன். காமாட்சியம்மையாம் உமாதேவியை "அறப்பெருஞ் செல்வி" என்று சேக்கிழாரும் "இச்சைப்படி தன்பேரற மெண்ணுன்கும் வளர்க்கும் பச்சைக்கொடி" என்று வில்லிபுத்தூரரும் குறித்துள்ளமை நினைக. இசைமகள்-சரசுவதி: வீணுபாணியாதல் குறிக்கொள்க. இனி, இசை-புகழ் எனினுமாம்: "செஞ்

சொல் வஞ்சியைப் போற்றில் .. அழியாப்பெருஞ்சீர்தருமே" என்றார் கம்பர் தமது சரசுவதியந்தாதியில். சாலி-அருந்ததி: நட்சத்திர நிலையிலும் தனது கணவனை வசிட்டரைவிட்டு நீங்காதிருத்தலின், கற்பினுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாவள்: "சாலியொருமீன் தகையாளே" என்று கண்ணகியைப்பற்றி இளங்கோவடிகள் கூறியதும் நினைக. திருமண நிகழ்ச்சிகளில் "அருந்ததி காட்டல்" ஒன்றாகும். சிந்து-கடல்: கருணைக்கடல், தயா சமுத்திரம், கருணைசமுத்திரம் முதலிய வழக்குக்கள் காண்க. பொறுமைக்குப் பூமிதேவி எடுத்துக்காட்டாவள்: எல்லாவற்றையும் பொறுத்தலில் பூமி மிகச்சிறந்ததாதலை "ஸர்வம் ஸஹா" என்னும் அதன் வடமொழிப் பெயராலும் உணரலாம். ஸ்ரீவால்மீகி பகவானும் "க்ஷமயாப்ருதிவீஸமம்" [பொறுமையால் நிலவுலகை ஒப்பவன்] என அருளிச்செய்திருத்தலுங் காண்க. "புறந்தர வயங்கொண்டு" என்றது உயர்வு நவிற்சியணிபடக் கூறியதென்க. எழிற்கு எழில்-அழகினுக்கு அழகு: "அமிழ்தினைச் சுவைசெய்தென்ன அழகினுக்கழகு செய்தார்" என்றார் கம்பரும். பூவை-உவமவாகுபெயர்: இன்குரலையுடைமைக்கு நாகணவாய்ப்புள் உவமை. நரன்-அருச்சுனன். மகம்-யாகம்: புத்திரகாமயாகம். உபயாசன் யாசன் இவர்களைக்கொண்டு செய்வித்தது. (31)

32. சுயம்வரத்திற்கு மன்னர் திரண்டமை கூறும் [வந்த அந்தணன் இதனோடு தன்னுரை முடித்தமை.]

பெற்றிடுந் துருப தேயனிவ் வுலகிற்
பேசிய கொடுமொழி கேட்டு
நற்றவ ருடனுற் றுசாவிபூங் கொடிக்கு
நன்குடை வேள்விமுற் றுவன்போற்
கொற்றபஞ் சவர்கள் வரவுபார்த் திருந்தான்
குறித்திடுந் தினமடைந் திடுமுன்
மற்றவன் நகர்பால் அரசர்பூ சுரரு
மற்றனே கருமடைந் தனரால்.

(இ-ள்) பெற்றிடும்-மகத்தில்மகனும் மகளும் பெற்ற, துருப தேயன்-துருபதராசன், இ உலகில்-இத்தப் பிரபஞ்சத்தில், பேசிய கொடுமொழிகேட்டு-வதந்தியாகப் பரப்பிய கொடிய வார்த்தையைக்கேட்டு [பாண்டவர் அரக்குமாளிகையில் மாண்டனர் என்ற

கொடுமொழி கேட்டு] நல் தவருடன் - நல்ல முனிவர்களுடன், உசாவி - ஆராய்ந்து ஆலோசனைசெய்து, பூங்கொடிக்கு - திரௌபதிக்கு, நன்குடை வேள்வி - நல்ல (மங்களகரமான) கலியாணத்தை, முற்றுவன்போல் - செய்துமுடிக்க வேண்டும் என்ற எண்ணமுடையவன்போல், கொற்றம் பஞ்சவர்கள் வரவு பார்த்திருந்தான்-வெற்றியையுடைய பாண்டவர்களின் வருகையை எதிர் பார்த்திருந்தான்: [இஃது இப்படியிருப்ப], குறித்திடும் தினம் அடைந்திடும் முன்-குறித்த சுயம்வரநாள் வருதற்கு முன்னு லேயே, அவன் நகர்பால்-அவனுடைய பாஞ்சால நகரத்துக்கு, அரசர் - மன்னர்களும், பூசுரரும் - பிராமணர்களும், மற்று அநேகரும் மற்றுமுள்ள வைசிய வேளாளராகிய எல்லோரும், அடைந்தனர்-வந்து சேர்ந்தனர்; (எ-று) ஆல்-ஈற்றசை.

வேள்வி-கலியாணம். "நாமூன்பு தொண்டுகொண்ட வேள்வியில்" (பெரியபுராணம்: தடுத்தாட்: 127) என்றதும் காண்க. கொடி - உவமவாகுபெயர். (32)

33. சுயம்வரத்திற்குப் பாண்டவர் புறப்பட, வழியில் வியாச முனிவன் வந்து தோன்றி, இனி நடக்கப்போகுஞ் செய்தியைக் குறிப்பாகக் கூறுதல்.

ஆங்குயா னுணர்ந்த வதிசய மிஃதென்
றறைந்துவிப் பிரன்செல வைவர்
பூங்கொடி மன்றற் கனியொடு மவண்போம்
பூசுர ருடன்செலு நெறிவந்
தோங்குநூல் வியாத னிரவினின் றிடாதங்
குற்றுபாஞ் சாலிதார் பெறின்முன்
னீங்குரு வடைத லாண்மையென் றகன்றூன்
நிருபரும் அவ்வண நடந்தார்.

(இ-ள்.) விப்பிரன்-வந்த பிராமணன், ஆங்கு-அந்தப் பாஞ்சால நகரில், யான் உணர்ந்த அதிசயம் இஃது-நான் அறிந்து வந்த அற்புதமான செய்தி இந்தச் சுயம்வரம், என்று அறைந்து செல-என்று சொல்லிவிட்டு (அவன்) போக, ஐவர்-பஞ்சபாண்டவர்கள், அனையொடு-தாயோடு, பூங்கொடி மன்றற்கு-திரௌபதியின் சுயம்வரத்திற்கு, அவண் போம் – (அந்த வேத்திரகீயத்திலிருந்து புறப்

பட்டு) அந்தப் பாஞ்சால நகரத்திற்குப் போகின்ற, பூசுரருடன்-அந்தணர்களுடன், செல்லும் நெறி-போகும் வழியில், ஓங்குநூல் வியாதன் வந்து-சிறந்த வேதங்களை வகுத்தருளிய வியாச முனிவன் வந்து, "இரவினில் நின்றிடாது-இராத்திரியில் (இடைவழியில்) எங்கும் தங்கிவிடாது நடந்து கொண்டே, அங்கு உற்று-அந்தப் பாஞ்சால நகரிற்சேர்ந்து, பாஞ்சாலி தார் பெறின்-திரௌபதியின் மணமாலையைப் பெற்றால் (பெற்றபின்பு), ஈங்கு-இந்தச் சமயத்தில் இந்த விடத்தில், முன் உரு அடைதல் ஆண்மை-முன்னுலிருந்த உங்கள் உண்மை வடிவத்துடன் வெளிப்படுதல் ஆண்தன்மைக்குரிய செயலாம்," என்று-என்று சொல்லி, அகன்றான்-போயினன்: நிருபரும்-பாண்டவர்களும். அவ்வணம்-அவ்வியாசன் கூறியபடியே (இரவினில் எங்கும் தங்கி நின்றிடாது), நடந்தார்-பாஞ்சால நகர் நோக்கி நடந்து சென்றனர்; (எ.று).

பூசுரர்-பூதேவர்: வானுலகத்துத் தேவர் போலப் பூமியில் விளங்குபவரென்ற காரணத்தால், பிராமணர் பூசுரர் எனப் பட்டார். ஓங்குநூல்-நான்கு வேதங்கள். பாஞ்சாலி-பாஞ்சால தேசத்தரசன் மகள்; தத்திதாந்த நாமம். மன்றல்-விவாகம்: இலக்கணையாய் அதை நிச்சயித்தற்குரிய சுயம்வரத்தை யுணர்த்திற்று. (33)

வேத்திரகீயச் சருக்கம் முற்றிற்று.

———

பதினேந்தாவது

சித்திர ரதச் சருக்கம்

சித்திரரதன் என்னுங் கந்தருவனைப் பற்றிய சருக்கம் என விரியும். இரண்டனுருபும் பயனுந் தொக்கதொகை. சித்திர ரதனது சருக்கம் எனின் ஆரும்வேற்றுமைத்தொகை: தொக்கு நின்ற ஆரும் வேற்றுமை செய்யுட்கிழமைப் பொருளது.

சித்திரரதன்-கங்கைக் கரையில் ஜலக்கிரீடை செய்து கொண் டிருந்த கந்தருவன்: இவன் அருச்சுனனோடு பொருது பிறகு நண்பாய்த் திரௌபதியின் சுயம்வரத்துக்குச் செல்லும் பாண்ட வர்க்கு வழி முதலிய காட்டியவன்.

வேறு

1. சித்திரரதன் அருச்சுனனை எதிர்த்தல்.

பாண்டவர்தா யுடனிரணிற் கங்கை யோர்பாற்
படர்வதையங் நதியின்மினுர் பலரோடாடு
மாண்டகுசித் திரரதனென் றுரைக்கும் வீணை
வல்லவன்கண் டிவ்விருள்புன் மனிதர் நீவிர்
ஈண்டெனது வலியுணரா தடைத னன்றென்
றிகழவிகழ்ந் தான்றிறல்கண் டிடவந் தோமென்
றுண்டுநர னகைப்பசிலை வளைத்தன் னெனம்
பளப்பில்விட விவனுமுனிந் தழலம் புய்த்தான்.

(இ.ள்.) பாண்டவர்-பாண்டு புத்திரர் ஐவரும், தாயுடன்-குந்தி யுடன், இரவில்-இராத்திரியில், கங்கை ஓர்பால் படர்வதை-கங்கா நதியின் ஒரு புறத்து நடந்து செல்வதை, அந்நதியின்-அந்தக் கங்கையாற்று நீரில், மீனுர் பலரோடு ஆடும்-பெண்டிர் பலரோடு நீர்விளையாட்டு நிகழ்த்தி நீராடும், மாண்டகு சித்திரரதன் என்று உரைக்கும் வீணை வல்லவன் கண்டு-மாட்சிமை பொருந்திய சித் திரரதன் என்று பேர்படைத்த கந்தருவன் பார்த்து, (அவர்களை நோக்கி), "நீவிர்-நீங்கள், புன் மனிதர்-அற்ப மானிடர்கள், இவ்விருள்-இந்த இருட்டிலே, ஈண்டு-இந்த விடத்து, எனது வலி உணராது-எனது வல்லமை யுணராமல், அடைதல் நன்று-வந்தது மிக அழகாயிருக்கிறது!" என்று இகழ-என்று (செருக்குத்

தோன்ற) இகழ்ந்துகூற, (அதற்குப் பதிலாக) நரன்-அருச்சுனன், இகழ்ந்தான் திறங் கண்டிட வந்தோம் என்று ஆண்டு நகைப்ப-இகழ்ந்தவனுகிய உன்னுடைய வல்லமையைக்காண வந்திருக்கிறோம் என்று சொல்லி அவ்விடத்துச் சிரிக்க, அன்னேன்-அந்தச் சித்திரரதன், சிலைவளைத்து-வில்லை வளைத்து, அளப்பில் அம்புவிட-எண்ணமுடியாத பல அம்புகளைச் செலுத்த, இவனும்-இந்த அருச்சுனனும், முனிந்து-கோபித்து, அழல்அம்பு உய்த்தான்-ஆக்நேயாஸ்திரம் செலுத்தினன்; (எ-று)

அழலம்பு-ஆக்நேயாஸ்திரம்: நெருப்பைக் கக்குவதோர் அத்திரம். மினுர்-மின்னுர்: இடைக்குறை. வீணைவல்லவன்-கந்தருவன். நன்று-பிறகுறிப்பு: நன்றன்று என்றபடி. இகழ்ந்தான்-வினையாலணையும் பெயர். அருச்சுனன் நகைத்தது-இகழ்ச்சி பற்றினது.

இதுமுதல் இச்சருக்க முடியுமளவும் உள்ள கவிகள்—ஒன்று இரண்டு ஐந்து ஆறுஞ்சீர்கள் காய்ச்சீர்களாகவும் ஏனையவை மாச்சீர்களாகவும் வந்த எண்சீராசிரியவிருத்தங்கள். (1)

2. சித்திரரதன் தோற்றுத் தருமனிடம் சரணம் புகல்.

தொடுகணைக டனைப்பொடிசெய் துடல முற்றுஞ்
சுடவயர்வோன் சிகைபிடித்தீர்த் தண்ணன் முன்னர்
விடுநரனை யவன்மகிழ்வுற் றருள்கூர்ந் தெம்பி
விடுதியென விலக்கவிவ ரைவ ரென்றுட்
கொடுதருமன் முகநோக்கிப் புகழ்ந்து நுங்கை
குறுகினன்கா வெனச்சரணங் குறுக வச்சம்
படுகலெனக் கந்தருவ னவர்நண் பெய்திப்
பார்த்தன்வலி புகழ்ந்தனலம் பவன்பாற் பெற்றான்.

(இ-ள்) தொடுகணைகள்தனை-(கந்தருவன்) விட்ட அம்புகளையெல்லாம், பொடிசெய்து-பொடியாக்கி, (அருச்சுனன்விட்ட அந்த ஆக்னேயாஸ்திரம்) உடலம் முற்றும் சுட-அவனது உடம்பு முழுவதையும் எரிக்க, (அதனால்) அயர்வோன்-தளர்வோனை அவனது, சிகை பிடித்து ஈர்த்து-தலைமயிரைப் பிடித்து இழுத்து வந்து, அண்ணன் முன்னர்-தமையனுகிய தருமபுத்திரன் முன்னிலையில், விடு நரனை-நிறுத்திய அருச்சுனனை, அவன்-அத் தருமன், மகிழ்வுற்று-சந்தோஷமடைந்து, அருள்கூர்ந்து-(கந்தரு

வன்மேல்) கருணைகொண்டு, "எம்பி!- தம்பியே! விடுதி - அவனை விடுதலை செய்வாயாக" என – என்று சொல்லி, விலக்க - தடுக்க, (இதனையுகித்து) "இவர் ஐவர் - இவர்கள் பஞ்சபாண்டவராவர்", என்று உட்கொடு-என்று மனத்திற்கருதி, தருமன் முகநோக்கிப் புகழ்ந்து - தருமனை நேரேபார்த்துத்துதித்து, "நும் கை குறுகினன் கா - உமது இடத்தையண்டியுள்ளேன்: காப்பாற்றுவாய்" என - என்று சொல்லி, சரணம் குறுக - அவரது திருவடிகளை நெருங்க, (தருமபுத்திரன் அக் கந்தருவனைநோக்கி) "அச்சம் படுகல்-அஞ்சவேண்டா," என-என்று அபயம் அளிக்க, கந்தருவன் - சித்திரரதன், அவர் நண்பு எய்தி – அப்பாண்டவர்களின் நட்பைப்பெற்று, பார்த்தன் வலி புகழ்ந்து - அருச்சுனனின் வல்லமையைப்போற்றி, அவன்பால்-அவ் அருச்சுனனிடமிருந்து, அனல் அம்பு–ஆக்னேயாஸ்திரத்தை, பெற்றான்—; (எ-று).

எம்பி-என்தம்பி என்பதன் மரூஉ. விடுதி-முன்னிலையேவல். உட்கொடு-உட்கொண்டு என்பதன் தொகுத்தல். கை-ஏழனுருபு: இடப்பொருளது. கா-முன்னிலை வியங்கோள். படுகல்-அல்லீற்று எதிர்மறை வினைமுற்று. பார்த்தனிடம் ஆக்னேயாஸ்திரம் பெற்றுச் சித்திரரதன் கந்தர்வாஸ்திரத்தைக் கொடுத்தான் என்றது முதனூல். (2)

3-5 : சித்திரரதன் மன்னர்க்கு அறிவுறுத்தி வழிகாட்டப் புரோகிதரின் இன்றியமையாமையை யுணர்த்துதல்: சவ்வருணன் வரலாறு கூறல்.

மூன்று கவிகள்—ஒரு தொடர்.

பெற்றிடுகந் தருவன்வாக் குறுதி யொன்று
பேசுவா னெண்ணிநரன் வதன நோக்கிச்
சொற்றரைக் காவலர்க்கெல்லா மிருத்தல் வேண்டுந்
தூயபுரோ கிதரிலரேற் றுன்ப மெய்தும்
மூற்றிகழ்நுங் குலம்வருசவ் வருண னென்போன்
முன்னருங்கான் வேட்டமதாய்ச் சென்றங் கோர்பால்
உற்றெருபெண் பலமாத ருடன்மே வக்கண்
டுண்மயல்கொண் டுருகநயந் துவளுங் கண்டாள்.

(இ-ள்) பெற்றிடு கந்தருவன்-ஆக்னேயாஸ்திரத்தைப்பெற்ற சித்திரரதன், ஒன்று வாக்குறுதி பேசுவான் எண்ணி - ஒரு

உறுதிமொழியைச் சொல்ல நிச்சயித்து, (அதற்காக) நரன் வதனம் நோக்கி - அருச்சுனன் முகத்தைப்பார்த்து(ச் சொல்ல லானன்:): "சொல் - சிறப்பித்துப் பேசப்படுகின்ற, காவலர்க்கு எல்லாம்-அரசர்களுக்கெல்லாம், தூய புரோகிதர்-பரிசுத்தமான நன்மனம் படைத்துள்ள புரோகிதர், இருத்தல் வேண்டும்-(கூடவே) இருத்தல் அவசியமாகும்: இலரேல் - (புரோகிதர்) இல்லையெனில், துன்பம் எய்தும்-துயரம் வந்தடையும்: முன்-முற்காலந்தொட்டு, திகழ் - விளங்கி வருகின்ற, நும் குலம் வரு-உமது குருவம்சத்தில் வந்த, சவ்வருணன் என்போன் - ஸம்வரணன் என்பவன், முன்னரும் கான்-கிட்டுதற்கரிய காட்டகத்து, வேட்டமதாய்ச் சென்று-வேட்டையாடுதற்காகப்போய், அங்கு-அந்தக் காட்டின், ஓர்பால்-ஓரிடத்து, உற்று - பொருந்தியிருந்து, ஒரு பெண் பல மாதருடன் மேவக்கண்டு - ஒரு அணங்கு பல மகளிரோடு ஆங்கு வருதலைப்பார்த்து, உள் மயல்கொண்டு-மனத்திலே காமமயக்கங்கொண்டு. உருக - நெகிழ, உவளும் - அந்த அணங்கும், நயந்து - (எதிர்நோக்குத்தர) விரும்பி, கண்டாள் பார்த்தாள்; (எ-று).

வாக்குறுதி-உறுதியானவாக்கு, பேசுவான்-வானீற்று வினையெச்சம், சவ்வருணன்-ஸம்வரணன் என்பதன் சிதைவு. வேட்டம்-தொழிற்பெயர். புரோகிதன் என்னுஞ் சொல்லுக்கு—(வைதிக காரியங்களிலும் மந்திராலோசனையிலும்) முன்னே வைக்கப்படுபவனென்றும் பின்னேவரும் நன்மை தீமைகளை முன்னமே யறிந்து சொல்பவனென்றும் காரணப்பொருள். (3)

4. சவ்வருணன் காதலித்த தபதியென்பாள் பிரிந்துசெல்ல, அவன் வருந்தியிருத்தல்.

புறந்திகழ்மின் னுரறியா தருகுற் றண்ணற்
பொற்பெலா முணர்ந்திவன்சவ் வருண னேயென்
றறிந்தரச! கதிர்மகளியான் தபதி யென்பேர்
ஆசைநின்பா லடைந்தன னுயினுமென் னுதை
யுறுங்கருணை பெறுகுவையேற் புணர லாமென்
றுதிபுய லோதிமினு ருடன்விண் போக
பிறிந்துதன துளவள்பின் னேக மாழ்கிப்
பெருகருற் றரசிடர்பெற் றிருக்கு நாளில்.

(இ-ள்.) புறம் திகழ் மின்னுர் அறியாது-வெளியிலே விளங்க

நின்றுகொண்டிருந்த மாதர் அறியாதபடி, அருகு உற்று-கிட்டே சென்று, அண்ணன் பொற்பு எலாம் உணர்ந்து-அந்த ஆண் மகனின் அழகெலாம் கண்டறிந்து, இவன் சவ்வருணனே என்று அறிந்து —. அரச! யான் கதிர்மகள்-நான் சூரியனின் புதல்வி: என்பேர் தபதி—; ஆசை-எனக்கு உமதுமேல் ஆசைதான்: ஆகவே, நின்பால் அடைந்தனனியினும்-உம்மிடத்து வந்தனனியினும், என் தாதை-என்தகப்பனராகிய சூரியனின், உறுங் கருணை பெறுகுவையேல்-பெருங் கருணையைப் பெறுவாயானால், புணரலாம் என்று-யாம் இருவரும் மணஞ்செய்து கொள்ளலாமென்று, ஓதி-சொல்லி (ப்பின்) புயல் ஓதி-மேகம் போன்று கரிய கூந்தலியுடைய தபதி, மினருடன்-கூடவந்த மாதருடன், விண் போக-வானத்திற் சென்றுவிட, (அப்போது) தனது உள்-தன்னுடைய மனமானது, பிரிந்து-தன்னைவிட்டுப் பிரிந்து, அவள் பின் ஏக-அவள் பின்னேயே தொடர்ந்து போக, (அதனால்) மாழ்கி-மிகவும் வருந்தி, பெருநகர் உற்று-தன்னுடைய தலைநகராகிய அத்தினபுரியை யடைந்து, அரசு-சவ்வருணன், இடர் பெற்று-துன்பத்தை யனுபவித்துக்கொண்டு, இருக்கும் நாளில்-வாழுங் காலத்து: (எ.று) "அங்கவன்பால் வசிட்டமுனி யடைந்து" என மேலிற் கவியோடு குளமாய்த் தொடரும்.

உள்–மனம்: "தலைகொடு வந்தானுண்மலிய (புற. வெ. 4, 12' கொளு). (4)

5. சவ்வருணனுக்கு வசிட்டமுனி தபதியை மன்றல் செய்துவைத்துப் புரோகிதனுய் (குருவாய்) அமைந் தமை கூறும்.

அங்கவன்பால் வசிட்டமுனி யடைந்து மற்றோன்
அடிதொழப்பொற் றுறுதுயர்கண் டகற்ற வெண்ணிச்
செங்கதிர்ப்பாற் புகுந்தரசின் செயல்சொற் றன்னோன்
திருமகளைத் தரக்கொடுபோய்ச் செய்து மன்றல்
புங்கவன்சென் றனனவர்க்கே குருவந் துற்றோன்
புகன்றவைபோ லொருமுனியைக் குருவாய்ப் பெற்றோல்
பங்கமுறு தெனவிசயன் வசிட்டன் சீர்த்தி
பகரெனச்சித் திரரதனும் பகர்வ தானான்.

(இ-ள்). அங்கு-அவன் நகரத்திற்கு, அவன்பால்-அந்த சவ்வருணனிடத்து, வசிட்டமுனி அடைந்து-வசிட்டமுனிவன்

வந்து, மற்றோன்-அந்தச் சவ்வரணனுல், அடி தொழப்பெற்று-திருவடி வணங்கப்பெற்று, உறுதுயர்கண்டு-அவன் படுகின்ற மிக்க காம நோய் வருத்தம்பார்த்து, அகற்ற எண்ணி-அதனைப் போக்கக் கருதி, செங்கதிர்பால் புகுந்து-[தபதியின் தந்தையாகிய] சூரிய னிடம் சென்று, அரசின் செயல் சொற்று-மன்னன் சவ்வருணன் படும் துயரச் செயல்களைச் சொல்லி, [அதனைக் கேட்டு மன மிரங்கிய] அன்னோன்-அச்சூரியன், திரு மகளைத் தர-தனது அழகிய பெண்ணைக் கொடுக்க, கொடுபோய் மன்றல் செய்து-அழைத்துக் கொண்டுபோய்த் திருமணம் செய்துவைத்து, புங்கவன்-தூயனை வசிட்டன், சென்றனன்-தன் ஆச்சிரமம் சென்றான்: அவர்க்கே-அந்தச் சவ்வரண மன்னனுக்கே, வந்து உற்றான் குரு புகன்றவை போல்-வந்து சேர்ந்த குருவாகிய வசிட் டன் உறுதிமொழிகள் கூறிச்சென்றதுபோல, (நீங்களும்) ஒரு முனி யைக் குருவாய்ப் பெற்றால்-ஒரு முனிவரைப் புரோகிதராய்ப் பெற்றால், பங்கம் உறுது-(யாதொரு) பழுதும் நேர்படாது (எல்லாம் மங்களமாகவே முடியும்), என-என்று சித்திரரதன் கூற, (அதனைக் கேட்ட) விசயன்-அருச்சுனன், ''வசிட்டன் சீர்த்தி பகர்'' என-வசிட்டமுனிவனின் மிக்க புகழைப் பற்றிச் சொல்லவும்'' என்று கேட்க, சித்திரரதனும்—, பகர்வதானன்-கூறலுற்றான்; (எ-று). மேல் 25 ஆஞ் செய்யுள் வரையில் இருபது கவிகளால் வசிட்டன் பெருமை கூறப்படுகின்றது.

குருவந்துற்றான்-வந்துற்றானகிய குரு என மாறுக. ''சீர்த்தி மிகுபுகழ்'' (தொல் உரி : சூ. 16) (5)

6. கவுசிகவேந்தன் வேட்டையாடிக் களைப்புத்தீர வசிட்ட ஞச்சிரமம் நண்ணியது.

தாரணிமொய்ம் புடையகவு சிகப்பேர் வேந்தன்
தானையொடு மமைச்சரொடுந் தனிய ரோடும்
ஆரணியத் தடைந்துபல மிருக வேட்டை
யாடிதிரி தருநாளிற் றெடர்ந்து தேடி
ஓரணிமான் காணுதா தபத்தா லெய்ப்புண்
டுறுநெறிதாட் சுடத்தளர்ந்தோர் வனங்கண் ணுற்றங்
கேரணிமெய் யயர்வகன்று வசிட்டா சீர்ம
மிஃதெனமா தவர்சொலவங் கெய்தி ஞனுல்.

(இ-ள்). தார் அணி மொய்ம்பு உடைய கவுசிகப்பேர் வேந்தன்-மாலையணிந்த தோள்களையுடைய கௌசிகனென்ற

பெயரையுடைய அரசன், தானையொடும்-தன் படைகளோடும், அமைச்சரொடும் – மந்திரிமாரோடும், தனையரோடும் – பிள்ளைகளோடும், ஆரணியத்தடைந்து-காட்டிற்கு வந்து, பல மிருக வேட்டையாடி திரிதரு நாளில்-பல விலங்குகளை வேட்டையாடி (மேலும் சிலவற்றைத் தேடித்) திரிகின்ற நாளில்,ஓர் அணி மான்-அழகிய மானொன்று, தொடர்ந்து தேடி காணாது-பின் தொடர்ந்தே சென்று தேடியும் காணமல் போய்விடவே, ஆதபத்தால்-(சூரிய) வெப்பத்தினால், எய்ப்புண்டு-களைப்படைந்து சோர்வுற்று, உறு நெறி-போகின்ற வழியில், தாள் சுட தளர்ந்து-கால்களிற் சுடுதலாலே தளர்ச்சியடைந்து, ஓர் வனம் கண்ணுற்று-ஒரு நீர்நிலையைக் கண்டு, அங்கு-அவ்விடத்து, ஏர் அணி மெய் அயர்வு அகன்று–அழகு பொருந்திய தனது உடம்பின் தளர்ச்சி நீங்கியிருப்ப, (அப்போது) மா தவர்-முனிவர்கள், (கௌசிகனை நோக்கி), "இஃது வசிட்டாசிர்மம்" என சொல-"நீர் இப்போது தங்கும் இந்த இடம் வசிட்டாச்சிரமமாகும் என்று சொல்ல, அங்கு எய்தினன்–அங்குப்போய்ச் சேர்ந்தான்; (எறு). ஆல்-ஈற்றசை.

மொய்ம்பு-வலிமை: தோள். கவுசிகப்பேர் வேந்தன்-க்ஷத்திரியனாகிய கௌசிகன்; இவன் தான் பின்னர் விச்வாமித்திரன் என்றபேர்பெற்றுப் பிரமரிஷி ஆகுபவன் ஆதபம்-வெயில், வெப்பம். வனம்-நீர்: இங்கு நீர்நிலை, தடாகம்: ஏர்-அழகு. ஆசிர்மம் ஆசிரம மென்பதன் சிதைவு. (6)

7. **கவுசிகன் விருந்திட்ட காமதேனுவைத் தனக்குக் கொடுக்கும்படி வசிட்டமுனிவனைக் கேட்டல்.**

மிகுதுயரின் வருமனிகத் தொடுவேந் துற்ற
வெம்பசியைத் தணித்திடுவான் விழியாற் காட்டி
புகல்வசிட்ட னருட்படியே கபிலை யெண்ணில்
பூவையர்தம் வடிவுகொடு புசிக்கு முண்டி
சகமுடைவேந் தனுக்குமவன் உடன்வந் தோர்க்குந்
தந்திபரி கணங்களுக்குந் தகுந்த வண்ணம்
அகமகிழ வுதவிதன துருவ மெய்திற்
றப்பசுவை முனிவனைவேந் தளியெற் கென்றான்.

(இ-ள்) மிகுதுயரின் வரும் அனிகத்தொடும்-மிக்க பசித்துன்பத்தோடு வருகின்ற சேனையோடும், வேந்து-கவுசிக மன்னன், உற்ற-கொண்ட, வெம்பசியை தணித்திடுவான்-கொடிய பசியைப் போக்கும்பொருட்டு, விழியால் காட்டி-தன் கண்சாடையி

னுலேயே தெரிவித்து, புகல் - எல்லாராலும் புகழப்படுகின்ற, வசிட்டன் அருள்படியே-வசிட்ட முனிவனின் கருணைசென்ற வழியிலே (தானும்சென்று), கபிலை-காமதேனுவாகிய பசு, எண்ணில் பூவையர்தம் வடிவுகொடு-கணக்கற்ற பெண்டிரின் வடிவத்தைக் கொண்டு, புசிக்கும் உண்டி-உண்ணத்தக்க உணவு வகைகளை, சகமுடை வேந்தனுக்கும்-உலகத்தையாளும் கௌசிக மன்னனுக்கும், அவன் உடன் வந்தோர்க்கும்-அவனோடுகூட வந்த அமைச்சர் தனயர்களுக்கும், தந்திபரி கணங்களுக்கும்-யானை குதிரை முதலியவற்றின் கூட்டங்களுக்கும், தகுந்த வண்ணம்-தக்கபடி, அகமகிழ உதவி-மனங்களிக்கும்படி கொடுத்து, தனது உருவம் எய்திற்று-தன்னுடைய சுயரூபமான பசு உருவத்தை யடைந்தது: (இந்த அதிசயத்தைக்கண்ட) வேந்து-கவுசிகன், முனிவனை-வசிட்டனை (நோக்கி), 'அப்பசுவை எற்கு அளி'-அந்தப் பசுவை எனக்குக் கொடுத்துவிடுவாய்", என்றான்-என்று கேட்டான்; (எ.று).

புசிக்கும் உண்டி' என்றது-வேந்தன், உடன்வந்தோர், யானை, குதிரை என்ற அவரவர்களுக்கும் அவையவைகளுக்கும் புசிப்பதற்கு ஏற்ற உணவு என்க. தணித்திடுவான்-வினையெச்சம். தந்திபரி-உம்மைத்தொகை. அளி-முன்னிலையேவல். (7)

8. வசிட்டன் வாளாவிருப்பக் கவுசிகன் கபிலையைக் கவர முயல அது தன்வலிமை காட்டல்.

அம்முனிவ னெனதன்றிந் திரனு னென்ன
அவ்வகையேல் வவ்வுவனென் றனிகத் தோடுஞ்
செம்மல்வளைந் தெறிந்துவடம் பிணிப்ப ஆன்போய்
சீர்தவனைப் பணிந்திஃதுன் செயலோ வென்ன
மும்மையோர் வசிட்டனென் னுத்தரமன் றண்ணல்
மொய்ம்புகொடு கவர்ந்தனனின் முரண்காட் டென்ன
கம்மிதமுற் றிடவரசன் சேனை யாழி
கபிலையுமந் தரமென்னக் கலக்கிற் றன்றே.

(இ-ள்) அ முனிவன்-அந்த வசிட்டன், எனது அன்று-இந்தப் பசி என்னுடையதன்று: இந்திரன் ஆன் என்ன-இந்திரனுடைய பசு என்றுசொல்ல, (கவுசிகன்), அ வகையேல்-அப்படியானால், வவ்வுவன் என்று - பலாத்காரமாகக் கைப்பற்றுவேன் என்று கூறி, அனிகத்தோடும்-தன் படைகளோடும், செம்மல்-அந்தக் கவுசிகமன்னன், வளைந்து-அதனை வளைத்துக்கொண்டு, வடம் எறிந்து பிணிப்ப-கயிற்றினை வீசியெறிந்து அதனைக் கட்ட

மூயல, ஆன்போய்-அந்தப்பசு சென்று, சிர் தவனைப் பணிந்து, சிறந்த தவச்சிரேட்டனகிய வசிட்டனைப்பணிந்து, "இ. . .து உன் செயலோ" என்ன-இவன் என்னைப் பிணிக்கவருவது உமது அனுமதியின்படியோ? என்று வினவ, (அதற்குவிடையாக) மும்மை ஓர் வசிட்டன்-மூன்றுகாலங்களையும் ஆராய்ந்து அறிய வல்ல வசிட்டமுனிவன், "என் உத்தரம் அன்று-என் அநுமதி யின்படியன்று: அண்ணல்-கவுசிகன், மொய்ம்புகொடு-தன் வலிமைகொண்டு, கவர்ந்தனன்—(தன்படை சூழவைத்துக்) கவர முயல்கின்றனன் : (ஆகவே) நின் முரண் காட்டு-உனது வலிமையையும் அவனுக்குக் காட்டுவாயாக," என்ன-என்று சொல்ல, (உடனே) கபிலையும்-பசுவும், அரசன் கம்மிதம் உற்றிட-கவுசிகன் நடுக்கமடையும்படி, சேனை ஆழி-(அவனது) சேனைசமுத் திரத்தை, மந்தரம் என்னக் கலக்கிற்று-மந்தரமலை யென்று சொல்லும்படி கலங்கச்செய்தது; (எ-று), அன்றே-தேற்றம்.

மந்தரமலையை நாட்டிப் பாற்கடலைக் கடைந்து கலங்கவைத் ததுபோல, இங்குக் காமதேனு கவுசிகன் சேனைக் கடலைக் கலங்க வைத்தது என்பது உவமையால் பெறவைக்கப்பட்டது. மந்தரம் சுழன்றதுபோலக் கபிலையும் சுழன்று கலக்க, மன்னன் கம்மிதம் உற்றான் என்க. சேனையாழி-உருவகம். ஆன்-பசு: "ஆமாகோ னவ்வணையவும் பெறுமே" (நன்: உருபு: 9) செம்மல், அண்ணல்-ஆண்பாற் சிறப்புப் பெயர்கள். மொய்ம்பு, முரண்-வலிமை என்ற பொருளன. செயல்-அநுமதி, ஆணை என்ற பொருளது இங்கு. வசிட்டன் திரிகாலஞானியாதலின் 'மும்மை யோர் வசிட்டன்' எனப்பட்டான். மும்மை-மூன்றுகாலத்தைக் காட்டிவந்த ஆகுபெயர். வவ்வுவன் - தன்மையொருமை விகா முற்று. கொடு-கொண்டு என்பதன் தொகுத்தல். (8)

9. கபிலை வெற்றிகொள்ளவே, வசிட்டனைக் கவுசிகன் மகார் நூற்றுவர் தாக்கிச் சாம்பராதல்.

வாலாலுங் காலாலுங் கோட்டி னாலும்
மயிர்க்குழிநின் றெழுந்தானை வருக்கத் தாலும்
வேலாதி படைகொடம ரியற்றுந் தானை
மிகமடியச் சமராடி விசயங் கொண்டே
மேலான சுவர்க்கநக ரெய்திற் றுன்போய்
வேந்துயிர்த்த சுதர்மூனிசெய் வீரகென் றூழி
யாலால மெனச்சினங்கொண் டொருநூ றம்புய்த்
தத்தவன்கண் விழிப்பபொடி யாகி மாண்டார்.

(இ-ள்) வேலாதி படைகொடு அமர் இயற்றும் தானை மிக

மடிய-வேல் முதலிய படைகளைக்கொண்டு போரிட்ட (கவுசிகனது) சேனை பலவும் அழிந்து போகும்படி, ஆன்-காமதேனு, (தன்) வாலாலும்—, காலாலும்—, கோட்டினாலும் - கொம்புகளினாலும், மயிர்க்குழி நின்று-மயிர்க்கால்களிலிருந்து, எழும்-உற்பத்தி செய்து தோன்றவைத்த, தானை வருக்கத்தாலும்-தனது சேனை வகைகளாலும், சமர்ஆடி-போர்செய்து, விசயம் கொண்டு-வெற்றி பெற்று, (பின்பு) மேலான சுவர்க்க நகர் போய் எய்திற்று-தேவலோகத்து அமராவதி நகரம் போய்ச்சேர்ந்தது: (இதனைக்கண்ட) வேந்து உயிர்த்த சுதர்-கவுசிகனது புத்திரர்கள் நூற்றுவர், முனி செய் விரகு என்று-வசிட்ட முனிவன் செய்த வஞ்சனையுபாயம் இது என்று உட்கொண்டு, ஆழி ஆலாலம் எனச் சினங்கொண்டு-கடலில் தோன்றிய ஆலகால விஷம்போலக் கொடிய கோபத்தைக் கொண்டு, ஒரு நூறு அம்பு உய்த்து-நூறு அம்புகளைச்செலுத்தி, அ தவன் கண் விழிப்ப-அந்த வசிட்டமுனிவன் கண்ணைத்திறந்து உருத்து நோக்க, பொடியாகி-சாம்பராகி, மாண்டார்- (நூற்று வரும்) இறந்து போனார்; (எ.று.)

ஆலாலம்–ஆலகாலவிஷம்: பாற்கடலைக் கடைந்தகாலத்து உலகத்தை யழிப்பது போலெழுந்ததோர் கொடிய விஷம். [இதனைச் சிவபெருமான் உண்டு தமது கண்டங் கறுத்தார்.] (9)

10. கவுசிகன் வசிட்டனிடம் தோற்றுத் தவமேற்கொண்டு ராஜரிஷியாதல்: ஆகியும் வசிட்டனைப் பகைத்தல்.

சதமகரு மடியவர சுளம்பொ ருதத்
தவமுனிமீ துருத்துசத சரமுய்த் தன்னோன்
எதிர்நடுந்தண் டத்தினவை யடங்க நோக்கி
யிருந்தவத்தை வியந்துபுவி யிகந்து நாற்றிக்
கதனினுமா தவஞ்செய்தயன் முதலோ ரெய்தி
யருணமங் கொடுமுனிவ ருகிச் சாலி
பதியெதிர்போந் தவனினதூர் சுகமோ வென்ன
பகைத்துனகந் தையையழிப்ப னென்று மீண்டான்.

(இ.ள்.) சதமகரும் மடிய - (தனது) நூறுபுதல்வர்களும் இறந்து போகவே, அரசு உளம் பொருது–கவுசிகன் மனம் வெதும்பி, அ தவமுனிமீது உருத்து-அந்த வசிட்டமுனிவன்மீது கோபித்து, சதசரம் உய்த்து-நூறு அம்புகளைச் செலுத்தி, அன்னோன்-அந்த வசிட்ட முனிவன், எதிர்நடும் தண்டத்தின் அவை அடங்க நோக்கி-எதிரே (தனக்கு முன்னை) நட்ட கோலில் அந்த

அம்புகள் முற்றும் ஒடுங்குதலேப்பார்த்து, இரும்தவத்தை வியந்து-தவத்தின் பெருமையைக்கண்டு அதிசயமுற்று, புவி இகந்து-(தனது) பூவுலக ஆட்சியை வெறுத்தொதுக்கி, நால்திக்கதனினும் மா தவம்செய்து-நாற்றிசைகளிலேயும் சிறந்த தவத்தைச் செய்து, (அதனால்), அயன் முதலோர் எய்தி-பிரமன் முதலாய தேவர்கள் வந்துகிட்டி., அருள் நாமம் கொடு முனிவனுகி-அருளிய பெருமை பொருந்திய பேரைப்பெற்று ராஜரிஷியாகி, (ச் சிறந்திருப்ப அப்போது) சாலிபதி எதிர் போந்தவன்-அருந்ததியின் கணவனுகிய வசிட்டன் எதிரே வந்தவன், (கவுசிகனேநோக்கி) "நினது ஊர் சுகமோ" என்ன-நினது பிரஜைகள் சௌக்கியமா? என்று வினவ, பகைத்து-விரோதங்கொண்டு, உன் அகந்தையை அழிப்பன்-உன் கர்வத்தையடக்கி யொழிக்கிறேன்", என்று-என்று சபதமிட்டு, மீண்டான்–தனது இருப்பிடம் திரும்பினன்; (எ.று).

தண்டம்-வடசொல். முனிவர்கள் கையில் கொள்ளும் தடி போன்ற கோலுக்குத் தண்டம் என்று பெயர், நாற்றிக்கு-நால்+திக்கு"=னல முன்றனவும்.... தங்கள் ஆயுங்காலே" என்பது விதி. அயன் முதலோர் கவுசிகனுக்கு அருளியநாமம்-ராஜரிஷி (அதன் பின்னர்) பிரமரிஷி. முனிவனுகி-க்ஷத்திரியன் ரிஷியாயினன். சாலி-அருந்ததி. பற்றற்ற ரிஷியாயின பின் வசிட்டன் "நினது ஊர் சுகமோ" என்று குத்தலாக வினவவே சினந்து பகைத்தான் என்க. (10)

11. கல்மாஷபாதன் விருத்தாந்தம் கூறுவது—பிராமண ஞெருவனின் பசிபோக்க முனைந்தது.

பன்னருஞ்சீர் அயோத்திநக ரான்கன் மாட
பாதன்முன ரொருமுனிவன் பசியோ டைய்தி
அன்னமெற்கூ ஞெடுநல்கென் றிரப்ப வவ்வேந்
தளிப்பலென வினனத்த மாம்போ திற்போய்
நன்னுதலார் மயக்கினதை மறந்து மீட்டு
நள்ளிருளி னினைந்துதுயர் நண்ணி யன்னேற்
கின்னமுதோ டினளிப்பா னடுவோர்க் கோத
வீய்த்துமெனப் போந்தவரு னிசையா வாற்றல்.

(இ-ள்.) பன்னரும் சீர்-சொல்லுதற்கரிய சிறப்பினையுடைய, அயோத்தி நகரான்-அயோத்தி நகரத்தைச் சேர்ந்தவனுகிய, கன் மாடபாதன்-கல்மாஷபாதன் என்னும் (இக்ஷ்வாகு வம்சத்து) அரசன், முனர்-முன்னர், ஒருமுனிவன் பசியோடு எய்தி - ஒரு பிராமணன் பசியால் வருந்திவந்து, "அன்னம் ஊஞெடு எற்கு நல்க"—

எனக்கு மாமிசம் சேர்ந்த உணவைக் கொடுப்பாயாக, என்று இரப்ப-என்று யாசிக்க, அவ்வேந்து-அந்த அரசன், அளிப்பல் என-கொடுக்கின்றேன் என்று சொல்லி, இனன் அத்தமாம் போதில் போய்-சூரியன் அத்தமனமாகும்போதுசென்று, [அந்தப் புரம் புகவே] நன்னுதலார் மயக்கின் அதை மறந்து-அழகிய பெண்களினால் மயங்கிப் பிராமணனுக்குச்சொன்ன உணவிடுதலை மறந்து, மீட்டும்-மறுபடியும், நள்ளிருளில் நினைந்து-நடு நிசியில் ஞாபகம்வர நினைந்து, துயர் நண்ணி – வருத்தம் மேலிட்டு, அன்னோற்கு - அந்தப் பிராமணனுக்கு, இன் அமுதோடு ஊன் அளிப்பான் - இனிய மாமிசங்கலந்த உணவையிடும் பொருட்டு, அடுவோர்க்கு ஓத – தன் சமையற்காரர்களுக்குச் சொல்ல, (அவர்களும்) ஈய்த்தும் எனப் போந்தவர் - இதோ கொணர்ந்து கொடுக்கின்றோம் என்று போனவர்கள், ஊன் இசையா ஆற்றால் - மாமிசம் கிடைக்காமற் போனமையால்; (எ-று) "மானிடரூனெடும் அனம்தந்தனர்" என மேற்கவியோடியையும்.

மாமிசம் கிடைக்காமையைச் சமையற்காரர் சொல்ல, அதனைக்கேட்ட கல்மாஷபாதன், அப்போது கவிகளால் ஏவப்பட்ட கிங்கரன் என்ற ராக்ஷஸனால் ஆவேசிக்கப்பட்டிருந்தனனதலால், சமையற்காரரை நோக்கி "மனிதர் மாமிசத்தினுலாவது அவனுக்குப் போஜனம் செய்வி" என்று பலமுறை சொல்ல, அப்படியே அவர்களும் செய்தார்கள் என்பது விவரம் காண வேண்டுவது. கிங்கரன் ஆவேசித்ததை மேலேச் செய்யுள் 14-ஆல் உணரலாம். இனன்–சூரியன். ஈய்த்தும்-"ஈ" என்பதனடியாகப் பிறந்த தன்மைப் பன்மைவினைமுற்று: "தும்" - விகுதி. போந்தவர்-வினையாலணையும் பெயர். இசையா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (11)

12. பிராமணன் கல்மாஷபாதனைச் சபித்துப் போதலும், பின்பு அவன் வசிட்டன்மகன் சத்தியோடு முரணுதலும் கூறும்.

மானிடரூ னெடுமனந்தந் தனருண் டந்த
மாமுனிவ னன்.துணர்ந்து மன்னன் மக்கள்
ஊனிடலா லவனுமன். தருந்த வென்ன
வுருத்துசபித் தேகவன். துணர்ந்தவ் வேந்தன்
தானிடருற் றிருந்தொருநா ளடவி வேட்டஞ்
சாருமுழி வசிட்டன்மகன் சத்தி யந்தக்
கானிடமுற் றிருத்தல்கண் டாட்கோன் வந்தாற்
கண்டுமப்பாற் பெயர்ந்திடலா காதோ வென்றான்.

(இ-ள்) மானிடரூனெடும் அனம் தந்தனர்-(அந்தச் சமையற்

காரர்) நரமாமிசத்தோடு உணவு கொடுத்தனர்: (அதனை) அந்த மாமுனிவன் உண்டு-அந்தப் பிராமணன் சாப்பிட்டு[ப் பின்பு யோகதிருஷ்டியினால்], அஃது உணர்ந்து-அந்த நரமாமிச அன்னத்தைத் தெரிந்துகொண்டு, ''மன்னன் மக்கள் ஊனிடலால்-எனக்கு மன்னனைச்சேர்ந்த சமையற்காரர்கள் நரமாமிச போஜனமிட்டதால், அவனும் அஃது அருந்த என்ன-அந்த மன்னனுகிய கல்மாஷபாதனும் மனிதர்மாமிசங்களில் விருப்பமுற்று உண்ணட்டும்'' என்று, உருத்து சபித்து ஏக-கோபித்துச் சாபமிட்டுப் போக,-அஃது உணர்ந்த அவேந்தன்-அதனையறிந்த அந்தக் கல்மாஷபாதன், தான் இடருற்று இருந்து-தான் மிகவும் துன்பப் பட்டுக் கொண்டிருந்து, ஒருநாள்—, அடவி-காட்டினில், வேட்டம் சாரும் உழி-வேட்டையாடுதலினிமித்தம் போனபொழுது, வசிட்டன் மகன் சத்தி-வசிட்டமுனிவனுடைய மூத்தமகனுகிய சத்தியென்பவன், அந்தக் காட்டினிடம் உற்றிருத்தல் கண்டு-அந்தக் காட்டிலே தான்போகும் வழியிலே வந்திருத்தலைப் பார்த்து, (அவனை நோக்கி) ''ஆள்கோன் வந்தால் - தேசத்தை ஆளும் மன்னன் வருவானனால், கண்டும்-அவனைப் பார்த்தபின்னரும், அப்பால் பெயர்ந்திடலாகாதோ - வழியிடைவிலகி ஒருபுறமாகச் செல்லக்கூடாதா?, என்றான்-என்று சொன்னன்; (எ-று).

சத்தியென்பவர் வசிட்டருடைய நூறுபுத்திரர்களில் மூத்தவர்: சிறந்த மஹாத்மா: ஒற்றையடிப் பாதையான வழியிற் போகும்போது, தனக்கு நேராகவந்த அவரைப்பார்த்துக் கல்மாஷபாதன் 'நம்முடைய வழியைவிட்டு விலகும்' என்று சொன்னன். ஈற்றடியில் ''திருத்தல்கண்டம் புவிக்கோன்'' என்றும் பாடம். (12)

13. மன்னன் சத்தியைத் தண்டாலடிக்க அவன் சாபமிட, அப்போது விசுவாமித்திரன் வந்து அரசனது அறிவை வேறுக்குதல்.

இரண்டு கவிகள்—ஒரு தொடர்.

சத்தியதற் கந்தணன்யான் றவஞ்செய் கின்றேன்
தராபதிநீ பெயர்தியெனற் றகுமோ வென்ன
வித்தலவேந் துருத்துதண்டா லடித்து மற்றோன்
இராக்கதனைச் சபிப்பதுய ரெய்தி யாசான்

புத்திரனென் றுணர்ந்திறைஞ்சிச் சாப மென்று
போமெனக்கோ தெனுஞ்சமய நாடி விச்வா
மித்திரன்வந் துனைச்சபித்தோ ளெடும்பின் னுரை
வீட்டியுணென் றரசறிவை வேற தாக்கி.

(இ-ள்) அதற்கு - 'அப்பாற்பெயர்ந்திடலாகாதோ' என்று கேட்டதற்கு விடையாக, சத்தி-சத்திமுனிவர், 'அந்தணன் யான்- நான் பிராமணன்: தவம் செய்கின்றேன் - தவம் மேற்கொண்டிருப்பவன்: நீ-நீயோ, தராபதி-க்ஷத்திரியன்: [ஆகவே நீ என்னைப்] பெயர்தி எனல் தகுமோ - 'வழியிடைவிட்டு விலகு' என்றல் தக்கதோ (தக்கதாகாது), என்ன-என்று கூற, (அதனைக் கேட்ட) இத் தல வேந்து-இந்தப் பூவுலக மன்னனாகிய கல்மாஷபாதன், உருத்து - கோபித்து, தண்டால் அடித்து - தடியால் அவனைத் தாக்கி, மற்றோன் இராக்கதனாய் சபிப்ப துயர் எய்தி - மற்று அந்தச் சத்திமுனிவன் அவனை 'ராக்ஷஸனாவாய்' என்று சபிக்கத் துயரமடைந்து, (பின்பு) ஆசான் புத்திரன் என்று உணர்ந்து- புரோகிதனாகிய வசிட்டமுனிவனின் புதல்வனாவன் என்பதை யறிந்து, இறைஞ்சி - அவன் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, "சாபம் என்று போம்: எனக்கு ஓது" - நீரிட்ட சாபம் என்றைக்கு விமோசனமாகும்: எனக்குத் தெரியச் சொல்லும்", எனும் சமயம் நாடி-என்று சாபவிடை கேட்குஞ் சமயத்தைப்பார்த்து, (தமதுபகைமையால் பழியைத் தீர்த்துக்கொள்ளும் வகையில்) விச்வாமித்திரன் வந்து - விச்வாமித்திரமுனிவன் அங்கு வந்து, "உனைச் சபித்தோளெடும் பின்னுரை வீட்டி உண்"-உன்னைச் சபித்த சத்தியோடு அவன் தம்பியராகிய தொண்ணூற்றொன்பது பேரையும் அழித்துக்கொன்று உண்பாய்" என்று-என்று (துர்ப் புத்தி) புகட்டி, (அகற்கேற்ப) அரசு அறிவை வேறது ஆக்கி- அரசனுடைய அறிவையும் பேதலித்து (கொன்றுதின்பதில் மூளுமாறு) வேறுபடுத்தி; (எ-று). — "அரக்கனைச் சேர்த்தேவினன்" என மேற்கவியில் குளகமாகத் தொடரும்:

"அரசன் பிராம்மணனுக்கு வழிவிட வேண்டுமென்பதுதான், எல்லாத் தர்மங்களிலுமுள்ளது" என்பது விதி. ராக்ஷஸனைப் போல் ரிஷியை அடித்ததால் சத்தி முனிவர் "நீ ராக்ஷஸனாவாய்" என்று சபித்தார், மேலும் "மனிதர் மாமிசத்தில் ஆசை வைத்து இந்தப் பூமியெல்லாம் திரிவாய்" என்றும் சபித்தார் என்பது ஈண்டறியவேண்டிய விவரம். விசுவாமித்திர முனிவன் தமது பிள்ளைகள் நூற்றுவரையும் அழித்தமையால் வசிட்டன்மீது பழிக்குப் பழிவாங்கிப் பகைமை தீர்த்துக்கொள்ள வெண்ணி,

இங்ஙனம் அவர்களை விட்டியுண்ணும்படி கல்மாஷபாதன் மனதைப் பேதலித்து அறிவையும் வேறுக்கினன். மற்றும் அதற்கேற்பக் கிங்கரன் என்ற ராக்ஷஸனை அரசனுள் ஆவேசிக்கும் படி செய்தான் என்பதை மேற்செய்யுளால் அறிக. ஒது-முன்னிலை வியங்கோள். சபித்தோன் – வினையாலணையும்பெயர். உண்-முன்னிலையேவல். (13)

14. கிங்கரன் என்ற ராக்ஷஸன் ஆவேசித்த கல்மாஷபாதன் வசிட்ட புத்திரர்கள் நூற்றுவரையும் கொன்று தின்று நிற்ப, துயரமேலிட்டு வசிட்டன் உயிர்விட முயன்றும் இறவாது இருத்தல்.

அரசறியா தவன்மெயிற்கிங் கரனென் றோதும்
அரக்கனைச்சேர்த் தேவினன்மற் றவனங் காசான்
தருமகர்யா ரையுஞ்சபித்தோ ளெடுங்கொன் றுண்டான்
சதமகரு மடிந்தசெய தந்தை கேளா
பருவரலுற் றுளமாற்ரு னுகி மாய்வான்
பயோததிவீழ்ந் தனன்வருணன் பணிந்தங் கேந்திக்
கரைவிடமீட் டுயாவரைமீ தேறி வீழ்ந்தான்
காசினிமா தேந்தியுயிர் காத்தாள் பின்னும்.

(இ-ள்). அரசு அறியாது-கல்மாஷபாத மன்னன் அறியாத படி, அவன் மெயில்-அவனது உடம்பினுள், கிங்கரன் என்று ஓதும் அரக்கனை-கிங்கரனென்னும் ராக்ஷஸனை, சேர்த்து-உட்புக [ஆவேசிக்கும்படி] வைத்து, ஏவினன்-[வசிட்டபுத்திரர்மேல் விசுவாமித்திரன்] விடுத்தான்; மற்று அவன் அங்கு ஆசான்தரு மகர் யாரையும்-அப்போது ஆவேசிக்கப்பட்ட அந்த மன்னன் வசிட்ட முனிவரது பிள்ளைகள் தொண்ணூற்றொன்பது பேரில் ஒருவரையும் விடாமல் அனைவரையும், சபித்தோளெடும்-சாபமிட்ட சத்தி என்ற வசிட்ட புத்திரனேடும் (சேர்த்து நூறு பேரையும்), கொன்று உண்டான்-கொன்று தின்றான்: சதமகரும் மடிந்த செயல்-நூறு பிள்ளைகளும் இறந்த செய்தியை, தந்தை கேளா-தகப்பனுகிய வசிட்டன் கேள்விப்பட்டு, பருவரல் உற்று-துன்பமடைந்து, உளம் ஆற்றுனுகி-மனம் பொறுதவனுகி, மாய் வோன்-தன் உயிரை மாய்த்துக்கொள்ளும் பொருட்டு, பயோததி வீழ்ந்தனன்–சமுத்திரத்தில் விழுந்தான்: (ஆனல்) வருணன்–சமுத்திரராசனுகிய வருணபகவான், அங்கு-அப்போது, பணிந்து-அவ்வசிட்டனை வணங்கி, ஏந்தி-[கைகளில்] ஏந்திக்கொண்டுவந்து,

கரைவிட–கரையிலே உயிரோடு சேர்ப்பிக்க, மீட்டு–மறுபடியும், (வசிட்டன்), உயர்வரைமீது ஏறி–(யாவராலும் தப்பி) உய்ய முடியாத உயரமுள்ள மகாமேரு மலைமேலேறி, வீழ்ந்தான்-கீழே விழுந்தான்: (ஆனல் அப்போதும்) காசினிமாது ஏந்தி–பூமிதேவி [தன் கைகளில்] ஏந்தி, உயிர்காத்தாள்-அவ்வசிட்டனது உயிரைக் காப்பாற்றினள்: பின்னும்-மேலும் (வசிட்டன்] 'அனலில் விழுந்து' என மேற்கவியோடு தொடரும்.

கேளா-செய்யா என்னும் வாய்பாட்டு உடன்பாட்டெச்சம். மாய்வான்-வானீற்று வினையெச்சம். உயா-[உய்யா] ஈறு கெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். காசினிமாது-இருபெயரொட்டு. (14)

15. சத்தியின் பாரியை கருக்கொண்டிருத்தலையறிந்து வசிட்டன் தற்கொலை செய்வதை நிறுத்தித் தன் ஆசிரமஞ் சேர, அப்போது கல்மாஷபாதன் அவளைத் துரத்திவர, அவள் வசிட்டனைச் சார ஆங்கு வசிட்டன் அவனை நேரே காணுதல்.

அனலில்விழுந் தஃதுபுன லாகநஞ்சுண்
டஃதுமமு தாகவுயி ரகன்றி லாஞுய்
மனதழுங்கி முதற்குமரன் சத்தி யில்லாள்
வன்கருப்பன் னிரண்டாண்டாய்த் தாங்க லோர்ந்து
தனியர்பெருஞ் சோகமகன் றினிதா சிர்மஞ்
சார்ந்துமுனி யிருந்திடும்போ தரக்க னம்வேந்
தனியகருத் தாங்குவளைத் துரப்ப வஞ்சி
யவளோடிச் சொலவசிட்ட னவனேர் போந்தான்.

(இ-ள்). முனி-வசிட்டமுனிவன், அனலில் விழுந்து-நெருப்பில் விழுந்து, அஃது புனலாக-அந்த நெருப்பு நீராகக் குளிர்ந்திருப்ப, உயிர் அகன்றிலானுய்-உயிர் நீங்காதவனுய், [அஃதேபோல்] நஞ்சு உண்டு-விஷத்தையுட்கொண்டு, அஃது அமுதாக-அந்த விஷம் அமிருதமாகவே, உயிர் அகன்றிலானுய்—, மனது அழுங்கி-மனம் சோகமுற்று, (பின்) முதற்குமரன் சத்தி-தனது மூத்த குமாரன் சத்தியின், இல்லாள்-மனைவியாகிய அதிருச்யந்தி என்பவள், வன் கரு-வலிய கருப்பத்தை, பன்னிரண்டு ஆண்டாய்த் தாங்கல் ஓர்ந்து-பன்னிரண்டு வருடங்களாய்த் தரித்திருத்தலை யறிந்து, (அதனல்) தனியர் பெருஞ் சோகம் அகன்று-புத்திரர்களின் இறப்பினலே யேற்பட்டிருந்த பெருத்த மனச்சோர்வு நீங்கப்

பெற்று, இனிது-இனிமையோடு, ஆசிர்மம் சார்ந்து-ஆசிரமஞ் சேர்ந்து, இருந்திடும்போது-தங்கியிருக்கும் சமயம், அரக்கனும் வேந்து-ராக்ஷஸன் ஆவேசிக்கப்பட்ட மன்னனுகிய கல்மாஷ பாதன், அனைய கரு-அப்படிப்பட்ட வலிய கருவை, தாங்குவனை-தாங்கியிருப்பவளான அதிருச்யந்தியை, துரப்ப-துரத்திக்கொண்டு வர, அஞ்சி-பயந்து, அவள் ஓடிச் சொல-அந்த அத்ருச்யந்தி ஓடிப்போய்ச் சொல்ல, வசிட்டன்–, அவன் நேர் போந்தான்–அந்தக் கல்மாஷபாதனுக்கு நேரே வந்தான்; (எ-று).

அனல் புனலானதும், நஞ்சு அமுதானதும் வசிட்டனின் மேன்மைக்கும் தெய்வீகத் தன்மைக்கும் சான்றாகும். தனியர் பெருஞ்சோகம் - தனியராலேற்பட்ட பெருஞ்சோகம் என்றபடி. ஆசிர்மம்-ஆசிரமம் என்பதன் சிதைவு. தாங்குவள்-தாங்குபவள்: வினையாலணையும்பெயர். 'ஓர்ந்து' என்றது-தன் வயிற்றிலிருந்த கருப்பம் வேதாத்யயனஞ்செய்ய ஆரம்பித்துப் பன்னிரண்டு வருஷங்கள் ஆகின்றன என்று வசிட்டனை நோக்கி அதிருச்யந்தி கூறியதாலென்க. இந்தக் கர்ப்பத்தில் பிறந்தவர் பராசரர் என்ற பெயரினர். (15)

16. வசிட்டன் கல்மாஷபாதனுக்களித்த சாபவிமோசனமும், புத்திரப்பேறும்.

கண்டுமஞ்சா தார்க்குமிராக் கதன்மேற் றூயோன்
கமண்டலத்தி னீர்தெளிப்பக் காயத் துற்றோன்
விண்டகன்றன் றனதுருவாய் அரசா சான்றாள்
விழுந்தொர்முனி சூளானின் சுதரை யான்கொன்
றுண்டுகொடி யவனனேன் காத்தி யென்றான்
உவனருள்கூர்ந் தஞ்சலெனப் பதியின் மோலி
கொண்டனைய விறைக்கணிதந் தவனில் லாள்பாற்
குமரனெரு வனைத்தந்தா சிரமஞ் சேர்ந்தான்.

(இ-ள்) கண்டும் அஞ்சாது-வசிட்டனைப் பார்த்தும் பயப் படாமல், ஆர்க்கும் - ஆரவாரிக்கும், இராக்கதன்மேல் - ராக்ஷஸா வேசங்கொண்டிருந்த கல்மாஷபாதன்மேல், தூயோன்-பரிசுத்த னுகிய வசிட்டமுனிவன், கமண்டலத்தின் நீர் தெளிப்ப—(தம் முடைய) கமண்டலத்திலுள்ள புனிதமான நீரை அவன்மேல் தெளிக்க, (உடனே அவன்) காயத்து உற்றோன் - உடம்பினுள் ஆவேசித்திருந்த ராக்ஷஸனுகிய கிங்கரன், விண்டு அகன்றான்-

உடம்பினைவிட்டு நீங்கிப்போயினன்: (பிறகு) அரசு-மன்னனுகிய சல்மாஷபாதன், தனது உருவாய்-தான் முன்னர்க்கொண்டிருந்த சுயவுருவத்தோடு, ஆசான் தாள்விழுந்து-புரோகிதனுகிய வசிட்ட முனிவனின் காலில் விழுந்து வணங்கி, (அவரைநோக்கி) "ஓர் முனி சூளால் நின் சுதரை யான் கொன்று உண்டு கொடியவனுனேன்– ஒரு முனிவனுகிய சத்தி என்பவரால் இடப்பட்ட சாபத்தால் உம்முடைய புத்திரர்களை நான் கொன்றுதின்று கொடிய ராக்ஷஸனுகத் திரிந்தேன்: காத்தி-என்னைக் காப்பாற்றுவாயாக, என்றுன்-என்று கெஞ்சினுன்: உவன்-வசிட்டன், அருள்கூர்ந்து-கருணைமிகுந்து, 'அஞ்சல்' என-பயப்படாதே: உனக்கு அபயம் தந்தேன் என்று சொல்லி, (பின்னர்) பதியின்-அவனது அயோத்தியா நகரத்தில், அனைய இறைக்கு-மேற்கூறியவாறு பண்புகளைக் கொண்டிருந்த அரசனுக்கு, மோலிகொண்டு அணிதந்து-கிரீடத்தைக்கொண்டு அபிடேகஞ்செய்வித்து, (மற்றும்) அவன் இல்லாள் பால்-அந்தக் கல்மாஷபாத மன்னனின் மனைவியினிடத்து (அவன் விரும்பியபடி), குமரன் ஒருவனைத் தந்து - புத்திரன் ஒருவனைப் பிறக்கும்படி செய்து, ஆசிரமம் சேர்ந்தான்-தனது ஆச்சிரமத்தை யடைந்தான்; (எ-று).

கல்மாஷபாதன் இக்ஷ்வாகுகுல அபிவிருத்திக்காகப் புத்திர ஸந்தானத்தைத் தன் மனைவிமூலம் அருளும்படி வசிட்டமுனிவனைப் பிரார்த்திக்க, அவரும் சொன்னசொல் தவறுத பிராம்மணைத்தமரானதால், அவன் மனைவிக்கு ருதுகாலம்வந்தபோது தேவதைகளின் நடையையநுசரித்து ஸ்பரிசமாத்திரத்தினுல் அந்த அரசிக்கு அருள்புரிய, அவளுக்கு உடனே கருப்பம் உண்டாக, பின் அச்மகன் என்ற புத்திரன் பிறந்தான். [குறிப்பு: பன்னிரண்டாவது வருஷத்தில் கருப்பம் கல்லினுல் வயிற்றில் இடிக்கப்பட்டு வெளிவந்தது: அந்தக் கர்ப்பம் அச்மகனைப் பிறந்தது என்பது வரலாறு. ஆனல் இந்நூலில் சத்தியின் பாரியை அதிருச்யந்தி பன்னிரண்டாண்டுகள் கருப்பந்தாங்கியதாகக் கூறப்பட்டுள்ளது. அதுவும் சரியே: எப்படியெனில், சத்திமுனிவரின் மனைவியாகிய அதிருச்யந்தியின் வயிற்றிலிருந்த கர்ப்பம் வேதாத்யயனஞ்செய்ய ஆரம்பித்துப் பன்னிரண்டு வருஷங்கள் ஆயின. இந்த விஷயம் அதிருச்யந்தி தன்னை வினவிய வசிட்டருக்குச் சொல்லியது.]

காயத்துற்றேன் - விசுவாமித்திரனுல் ஏவப்பட்ட கிங்கரனென்னும் ராக்ஷஸன். ஆசான்-வசிட்டன்: இக்ஷ்வாகு வம்சத்தினருக்கு வசிட்டன் ஆசான் ஆவர். ஆசான் - புரோகிதன்: 'உமது பிள்ளையால்' என்று கூறுது, 'ஓர் முனிசூளால்' என்றது

நயம். காத்தி, அஞ்சல்-முன்னிலை வியங்கோள் வினைமுற்றுக்கள், பதி-அயோத்தி: இக்ஷ்வாகு மன்னரின் தலைநகர். (16)

17. சத்திமகனுகிய பராசரன் தன் பிதாவைக் கல்மாஷபாதன் கொன்றதைக் கேட்டு உலகத்தையே நாசஞ்செய்ய யத்தனித்தபோது வசிட்டன் தன் பேரனுக்கு உண்மை தெரிவிக்கத் தொடங்குதல்.

மைந்தனிலா ளகட்டின்மறை யோதி நாளும்
வளர்ந்தபரா சரனுதிப்ப வசிட்ட னேகை
சிந்துபடிந் தன்றுமுதல் கடன்கள் செய்வ
செய்தனனு ரணமுதனூற் றெளிந்தம் மைந்தன்
தந்தையர்க டமையரக்கன் செகுத்தற் கேளா
தானவரோ டுலகனைத்துந் தகிப்பா னெண்ணி
வந்தபிதா மகனடியைத் தொழுதான் பேரன்
வந்தசெய லுணர்ந்தவனும் வகுப்பான் மன்னே.

(இ-ள்). மைந்தன் இலாள் அகட்டில்-தன் மகனுகிய சத்தியின் மனைவியாகிய அதிருச்யந்தியின் வயிற்றிலேயே, மறை ஓதி-வேதாத்யயனஞ் செய்துகொண்டு, நாளும்-பன்னிரண்டு வருட காலமாகத் தினந்தோறும், வளர்ந்த-வளர்ந்துவந்த, பராசரன் உதிப்ப-பராசரமுனி பிறந்து வெளிப்பட, வசிட்டன்-பிதா மகனுகிய வசிட்டமுனிவன், ஓகை சிந்து படிந்து-மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி, அன்றுமுதல்-பிறந்தவன்றுதொடங்கி, செய்வ கடன்கள்-செய்யவேண்டிய கடமைகளாகிய சாதகருமம், நாம கரணம், அன்னப் பிராசனம், உபநயநம் போன்றவைகளை, செய் தனன்-(குறைவறச்) செய்துமுடித்தான்: அ மைந்தன்-அந்தப் பராசரனும், ஆரணம் முதல் நூல் தெளிந்து-வேதம் முதலாகிய நூல்களைத் தெளிய வுணர்ந்து, (பின்பு) தந்தையர்கள் தமை-தன்னுடைய தந்தையராகிய சத்தியுள்ளிட்ட நூற்றுவரையும், அரக்கன் செகுத்தல் கேளா-கிங்கர ராக்ஷஸனுவேசித்த கல்மாஷ பாதன் கொன்று தின்றமை கேள்விப்பட்டு, [அதற்கு மாறுக] தானவரோடு உலகு அனைத்தும்-அரக்கரோடு எல்லாவுலகங்களை யும், தகிப்பான் எண்ணி வந்து-சுட்டெரித் தொழிக்க நிச்சயித்து வந்து, அ பிதாமகன் அடியைத் தொழுதான்-அந்தச் சிறந்த பாட்டனுராகிய வசிட்டன் திருவடிகளில் வணங்கினன்: பேரன் வந்த செயல் உணர்ந்து-(தனது) பேரனுகிய பராசரன் வந்த காரியத்தைத் தெரிந்து, அவனும் வகுப்பான்-அந்த வசிட்டனும்

அவனுக்கு நல்லுண்மை சொல்லலாயினன்: (எ-று). மன், ஓ-ஈற்றசை.

ஓகைசிந்து-உருவகம். ஆரணம் முதலாகிய நூல் தெளிந்து-வேதம், வேதாங்கங்கள், இதிகாச புராணங்கள், தரும சாத்திரங்கள் போல்வன தெளிந்து என்றபடி. கேளா-செய்யாவென்னும் வாய்பாட்டு உடன்பாட்டு வினையெச்சம்: தகிப்பான்-பானீற்று வினையெச்சம். (17)

18—25: வசிட்டன் தன் பேரனுக்குக் கிருதவீர்யன் வரலாறு கூறத் தொடங்கி, அவன் வமிசத்து க்ஷத்திரியர்கள் விருத்தாந்தம் பரக்கக் கூறுதல்.

எட்டுக் கவிகள்—ஒரு தொடர்.

18. கிருதவீரியன் மகங்கள் செய்து பின் தன்மகனுக்குப் பட்டங்கட்டி உலகுநீத்தல்.

முந்தரக்கன் தந்தையரைச் செகுத்த பண்பான்
மூவுலகும் பொடியாக முடிப்பா னெண்ணி
வந்ததுணர்ந் தனமருள்கொண் மைந்த! வுன்றன்
மனந்தெளிய வொருகாதை வகுப்பன் கேளென்
றந்தமுனி புகலுமுனைர் கிருத வீரி
யப்பெயர்வேந் தந்தணருக் களவில் செம்பொன்
தந்துநெடு நாளரிய மகங்கள் செய்தே
தானிறந்தா னுலகாளத் தனைய னம்மா.

(இ-ள்). மைந்த-பேரனை பராசரனே! முந்து-முற்பட்டு, அரக்கன்-கிங்கரன் ஆவேசித்த கல்மாஷபாதன், தந்தையரைச் செகுத்த பண்பால்-உன் தந்தையர் நூற்றுவரையும் அழித்துத் தின்ற காரணத்தால் [சினம் மூண்டு], மூவுலகும் பொடியாக முடிப்பான் எண்ணி வந்தது உணர்ந்தனம்-மூன்று உலகங்களையும் நீறுக ஆகும்படி செய்ய நினைத்து நீ வந்த தன்மையை அறிந்தேன்; அருள்கொள்-கிருபைசெய்; உன்றன்-உன்னுடைய, மனம் தெளிய-மனம் தெளிவுறும்படி, ஒரு காதை வகுப்பன்-ஒரு சரிதம் கூறுகிறேன்: கேள்-(செவி கொடுத்துக்) கேட்பாயாக, என்று—, அந்த முனி-அந்த வசிட்ட முனிவன், புகலும்-சொல்லலாயினன்: முன்-முற்காலத்தில், கிருதவீரியப்பெயர் ஓர் வேந்து-கிருதவீரியன் என்ற பெயரைக்கொண்ட ஒரு அரசன், அந்தணருக்கு-பிராம்மணருக்கு,

அளவில் செம்பொன் தந்து - கணக்கற்ற பொற்காசுகளைத் [தக்கிணையாகவும், தானமாகவும்] தந்து, நெடுநாள் - பல நாட்கள் நீடிக்க, அரிய மகங்கள் செய்தே-செய்தற்கரிய யாகங்கள் பல செய்தே, (பின்னர்) உலகாளத் தனையன் - (தனக்குப் பின்பு) உலகையாளுவதற்காகத் தன் புத்திரனை(ப் பட்டங்கட்டித்), தான் இறந்தான் - தான் உயிர்நீத்தான்; (எ-று) அம்மா - ஈற்றசை. இனி, இதனை வியப்பிடைச் சொல்லாக்கொண்டு மேற்செய்யுளில் வரும் "அப்புதல்வன்" என்பதொடு கூட்டினுமாம்.

தனையன் உலகாளத் தானிறந்தான் என மாறும். கிருத வீர்யன் என்பவன் புகழ்பெற்ற ஓரரசன். வேதம் தெரிந்தவர் களாகிய பிருகுவம்சத்தவரால் யாகஞ்செய்விக்கப்பெற்றவன்: அந்தப் பார்க்கவர்களை நிரம்பின தனதான்யங்களினால் திருப்தி யடையச் செய்தவன். எனவே பார்க்கவர்களிடம் பெருத்த தனமிருப்பதை அரசர்களனைவரும் அறிவர். இந்த விவரம் ஈண்டு அறியவேண்டியது. பாட்டனார் பேரனை "மைந்த!" என்று விளித்தது - அன்புபற்றிவந்த மரபுவழுவமைதி: கிருத வீர்யப் பெயர் - வகையுளிபெற்றுவந்தது. (18)

19. கிருதவீரியனைச் சேர்ந்த மன்னர்கள் [க்ஷத்திரியர்கள்] தனத்துக்காகப் பிருகுவம்சத்தவர்களைக் கொல்ல, அப் போது ஒரு பிராம்மணி பயந்தோடியமை கூறும்.

அப்புதல்வ னினைஞரொடு நிதியா சைகொண்
டத்தனயர் மகத்தில்பொரு ளளிக்கப் பெற்ற
விப்பிரரை யழைத்தெந்தை யும்பால் வைத்த
மிகுங்கனகப் பொருளுமக்கே னீதி ரென்னச்
செப்பவவ ரெமக்குரிய தளியே மென்னச்
செகுத்துகுலத் தொடும்பொருள்கொ காண்டனர்மாண்
றப்பிபிரு கெனுமுனிவ னில்லா ளோடித் [டாரிற்
தாளெளித்துற் றனளிமயச் சயிலத் தம்மா.

(இ-ள்) அப்புதல்வன் - அந்தக் கிருதவீர்யன்மகன், இனைஞ ரொடு-தன் தம்பியர் தோழர்களோடு, நிதி ஆசைகொண்டு-தனத் தில் பேராசைவைத்து, அத்தன்-தமது தமப்பனாகிய கிருதவீர்ய மன்னன், அயர்மகத்தில்-செய்த யாகங்களின்போது, பொருள் அளிக்கப்பெற்ற விப்பிரரை அழைத்து-தனதான்யங்கள் [மிகுதி யாகக்]கொடுக்கப்பெற்ற பிருகுவம்சத்து அந்தணர்களையழைத்து

"எந்தை - எமது தந்தை கிருதவீரியமன்னர், உம்பால் வைத்த-உம்மிடத்துக் கொடுத்துவைத்த [கொடுத்த], மிகும் - அபரிமித மான, கனகப்பொருள்-பொன் முதலிய தனங்கள், உமக்கு ஏன்?-உங்களுக்கு எதற்காக? ஈதி - [எமக்குக்] கொடுத்துவிடும்," என்ன செப்ப-என்று சொல்ல, அவர்-அந்தப் பிருகுவமிசத்துப் பிராம்மணர்கள், "எமக்கு உரியது - அந்தப் பொன் முதலிய தனங்கள் எங்கட்குச் சொந்தமானவை: (ஆதலின்) அளியேம்-கொடுக்கமாட்டோம்" என்ன - என்று மறுமொழி சொல்ல, [உடனே அவர்கள்] குலத்தொடும்-தங்களது பிருகுவமிசத்தைச் சேர்ந்த அனைவரோடும், செகுத்து - கொன்றொழித்து, பொருள் கொண்டனர்-[அவர்களது] தனங்களனைத்தையும் அபகரித்துக் கைக்கொண்டனர்' (இங்ஙனம்) மாண்டாரில் தப்பி-இறந்துபோன வர்களொடு உடன் இறவாமல் உயிர்பிழைத்து, பிருகு எனும் முனிவன் இல்லாள் ஒடி-பிருகு என்னும் பிராம்மணனின் மனைவி மாத்திரம் ஒடிப்போய், தான் ஒளித்து— தன்னை யொளித்து மறைத்துக்கொண்டு, இமயச் சயிலத்து உற்றனள்-இமயமலையை அடைந்தனள். (எ.று.) அம்மா-ஈற்றசை.

விப்பிரர்-யாகஞ்செய்வித்த பிருகுவம்சத்தவர்-ஈதிர்-முன்னிலை யேவல். அளியேம்-தன்மை எதிர்மறைவினைமுற்று. மாண்டார்-வினையாலணையும் பெயர். (19)

20. பிராம்மணியின் தொடையின்வழி பிறந்த அரும்பகன் (ஒளர்வர்) என்பவன் கிருதவீர்யமரபினரான க்ஷத்திரியர் களை யொழிக்கவெண்ணிக் கடுந்தவம் புரிதல்.

ஒளித்திருக்கும் பிருகுமுனி பன்னி நூறுண்
டுருவினிற் கருத்தாங்கி யொருவ னின்றுள்
அளித்தமக னரும்பகனு ரணமோர்ந் தோர்நாள்
அரசர்குலத் தவர்பொருள்கொண் டகறல் கேளா
இளக்குமுல கேழினையும் பொடிசெய் வான்போய்க்
கேடிறவம் புரிதருநாட் கிளத்தும் வானோர்
துளக்கமுற்று முலகேழு மெரிந்த தின்னற்
றுன்னினரக் கிருதவ்வீ ரியன் மைந்தர்.

(இ-ள்) ஒளித்திருக்கும் - மறைந்து ஒளிந்துகொண்டிருந்த, பிருகுமுனி பன்னி - பிருகு என்னும் பிராம்மணனின் மனைவி,

நூறுண்டு - நூறு வருடங்களாக, ஊருவினில் - தனது தொடையினில், கரு தாங்கி-கருப்பத்தைத் தாங்கியிருந்து, ஒருவன்-ஒரு புத்திரனை [ஔர்வர் என்ற பெயரினன்], ஈன்றாள் - பெற்றாள்: அளித்தமகன்–பெற்ற பிள்ளையோ, அரும் பகன்-அரிய சூரியனைப் போன்றவன்: (அவன்) ஆரணம் ஓர்ந்து – வேதங்களை அத்தியயனஞ்செய்து [அறிவு முதிரப்பெற்று], ஓர்நாள்-ஒருநாள், அரசர் குலத்தவர் - கிருதவீர்யனைச் சேர்ந்த க்ஷத்திரியர்கள், பொருள் கொண்டு - [தான் பிறந்த] பிருகுவமிசத்துப் பிராம்மணர்களின் தனங்களை யபரித்துக்கொண்டு, அகறல் கேளா-போயினமையைக் கேள்வியுற்று, - இளக்கும் சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற, உலகு ஏழினையும் - ஏழுலகங்களையும், பொடிசெய்வான் - நீறுக்கும் பொருட்டு, போய் - காட்டிற்குப்போய், கேடு இல் தவம் புரிதரு நாள்-அழிதலில்லாத தவத்தைச் செய்திடும் நாளில், - இளத்தும் வானோர் - புகழப்படுகின்ற தேவர்கள், துளக்கம் உற்றார் - நடுக்க மடைந்தனர்: உலகு ஏழும் எரிந்தது - ஏழுலகங்களும் எரியலாயின: அ கிருதவீரியன் மைந்தர்·அந்தக் கிருதவீரியனின் புதல்வர்களாகிய க்ஷத்திரியர்கள், இன்னல் துன்னினர் - துயரத்தை யடைந்தார்கள்; (எ-று).

இமயமலைச்சாரற்குப்பயந்தோடின பிராம்மணியின் தொடையில் தரித்திருந்த கர்ப்பம் அத்தொடையைப் பிளந்துகொண்டு வெளியில் குழந்தையாக வந்தது. அது பகனைப்போல் [சூரியனைப் போல்], பேரொளிசெய்து, க்ஷத்திரியர்களுடைய கண்பார்வைகளை அபகரித்துக்கொண்டே வெளிப்பட்டது. ஊரு-தொடை தொடையைக் கிழித்துக்கொண்டு பிறந்தகாரணத்தால் "ஔர்வர்" எனப்பட்டார். மிகுந்த தவத்தினால் ஒளிவிசும் அந்தப் பிருகு வம்சபுத்திரராகிய ஔர்வமுனிவர் (அரும்பகன் எனப்பட்டார் இங்கு) தமது பிதிர்க்களைத் திருப்திசெய்விப்பதற்காகத் தமது வமிசத்துப் பார்க்கவர்களின் பகைதீர்க்க விரும்பி உலகேழினையும் அழியும்படி செய்யவெண்ணி உக்கிரமான பெருந்தவத்தினால் கோபுறச்செய்தார்:. இதனால், தேவர்கள் நடுங்கினர்:. உலகேழும் எரியலாயின.

பன்னி-பத்னி என்பதன் சிதைவு. (20)

21. க்ஷத்திரிய மடவார் பிராம்மணியைச் சரண்புக, இமையவர் கள் ஔர்வரின் பிதுர்க்கள்பால் சரண்புகுந்து, அவன் தவக்கனலை விலக்கவேண்டுதல்.

இரண்டு கவிகள்—ஒரு தொடர்.

அவ்வரசர் குலமடவா ரஞ்சி யோடி
அரும்பகன்ரு யிடத்தடைந்து தொழுது பட்ட
வெவ்விடர்சொற் றுயிரிரப்ப விரங்கி யன்னாள்
வினைவிடுமோ வெருவலிர்யான் காப்ப லென்ன
எவ்வமகன் றவண்யாரு மிருந்தா ருண்ணெஞ்
திமையவர்க ளரும்பகன்றன் பிதுர்க்கள் பாற்புக்
கெவ்வுலகும் பொடிப்படநுங் குலத்தோர் மைந்த
னியற்றுதவக் கனலடைந்த தொருங்கு மன்னே.

(இ-ள்) அவ்வரசர் குலமடவார்-அந்த க்ஷத்திரியர்களின் மனைவியர், அஞ்சி ஓடி-[தங்கள் குலத்துக்கேற்படும் அழிவுக்குப்] பயந்து ஓடிப்போய், அரும் பகன் தாயிடத்து அடைந்து தொழுது-அரிய பகனின் [ஔர்வரின்] தாயினிடத்துச் சரணடைந்து அவனை வணங்கி, பட்ட வெவ் இடர் சொற்று-தாங்கள் அநுபவித்த கஷ்டங்களையெல்லாம் சொல்லி, உயிர் இரப்ப-தங்கள் உயிரையும் தங்கள் கணவன்மார் உயிரையும் காக்க வேண்ட, அன்னாள் இரங்கி-அந்தத் தாயாகிய பிராம்மணி மனமிரக்கப்பட்டு (அவர்களை நோக்கி), "வினை விடுமோ-நீங்கள் செய்துள்ள தீவினை உங்களை விடுமோ: (இருந்தாலும்) வெருவலிர்-பயப்படாதீர்கள்: யான் காப்பல்-நான் காப்பாற்றுகிறேன்," என்ன-என்று அபயம் அளிக்க, யாரும்-அவர்களனைவரும், எவ்வம் அகன்று-துன்பம் விடுத்து, அவண் இருந்தார்-அவ்விடத்தே தங்கியிருந்தனர்: (இ-ள்து இங்ஙனமாக) இமையவர்கள்-தேவர்கள், உள் நொந்து-மனம் வாடி, அரும்பகன்தன் பிதுர்க்கள்பால் புக்கு-அரியபகனுடைய ஔர்வரின் பிதுர்க்களிடத்தே சென்று சரண்புகுந்து. [அப் பிதுர்க்களை நோக்கி], "நும் குலத்து ஓர் மைந்தன் இயற்று தவக்கனல்-உமது பிருகுவம்சத்திலே பிறந்த ஒருபிள்ளை செய்கின்ற தவத்தின் ஜ்வாலையானது, எ உலகும் பொடிப்பட-எல்லா வுலகமும் நீறுகும்படி, ஒருங்கு அடைந்தது-எல்லாவிடங்களிலும் ஒருசேரச்சென்றது; (எ-று.) மன், ஓ-சற்றசை.

ஒரு மைந்தன் செய்கின்ற தவக்கனலால் எவ்வுலகும் பொடிபடுதல் நியாயமோ என்ற குறிப்பினது, 'விடுமோ'- வேற்றுப்பொருள்வைப்பணி. வெருவலிர் - முன்னிலையசைவியங்கோள். காப்பல்-தன்மையொருமை. எவ்வம்=ஏவம்: துன்பம். (21)

22. பிதிர்க்கள் சொற்படி ஔர்வர் கோபக்கனலைச் சமுத்திரத்தில் விட்டது.

ஆதலினீ ரத்தவத்தை யகற்றி லெங்கட்
காகுமுப காரமென வவர்க ளந்த
மாதவஞ்செய் பவன்பாற்போந் தாசி சொற்றும்
மரபினர்யா மெனவுணர்த்தி வருமா றெல்லாம்
ஓதிதவ மொழிந்துயிரைக் காத்தி யென்ன
வுவன்றொழுதென் றவத்துறுந்தீ யொழியா வண்ணம்
ஏதுசெய்வ லெனவவராய்ந் துததி வையென்
றிசைப்பவிசைந் தவனுமவ்வா றிட்டான் மன்னே.

(இ-ள்) ஆதலின் - தவக்கனல் ஒருங்கடைந்ததாதலின், நீர்-நீவிர், அத்தவத்தை அகற்றி - அந்தக் கடுந்தவத்தை நிறுத்தி வைத்து, எங்கட்கு உபகாரம் ஆகும் என-எங்களுக்குச் சகாயஞ் செய்வீராகுக எனப் பிரார்த்திக்க, அவர்கள்-அந்தப் பிதுர்க்கள், அந்த மா தவம் செய்பவன்பால் போந்து-அந்தக் கடுர தவத்தைச் செய்கின்ற ஔர்வரிடம் சென்று, ஆசி சொற்றும் மரபினர் யாம் என உணர்த்தி - (உனக்கு) ஆசீர்வாதஞ்சொல்லும் மூதாதைய ராவோம் நாங்கள் என உணரவைத்து, வரும் ஆறு எல்லாம் ஓதி-இங்ஙனம் நிகழ்ந்ததற்குக் காரணம் முதலாய விவரங்களெ யெல்லாம் சொல்லி, தவம் ஒழிந்து உயிரைக் காத்தி என்ன-தவத்தை விட்டு நீங்கி உயிர்களை [யழிக்குஞ் சங்கற்பத்தைக் கைவிட்டு]க் காப்பாற்றுவாயாக என்று அறிவுறுத்த, உவன்-அந்த ஔர்வர், தொழுது-வணங்கி, "என் தவத்து உறும் தீ ஒழியாவண்ணம்-என் தவத்தினுலேற்பட்ட கனல் நீங்காதபடி, ஏது செய்வல்-யான் என்ன செய்யக்கடவேன்" என-என்று அவர்களிடம் விண்ணப்பிக்க, அவர்-அப் பிதுர்க்கள், ஆய்ந்து-[ஒன்றுகூடி] ஆராய்ந்து, "உததி வை என்று இசைப்ப-சமுத் திரத்தில் இடுவாய்" என்று கூற, அவனும்-அந்த அரும்பகனும் [ஔர்வரும்], இசைந்து-மனமொருப்பட்டு, அவ்வாறு இட்டான்-அங்ஙனமே சமுத்திரத்தில் (தன்) கோபத்தை விட்டுவிட்டான்; (எ-று) மன், ஓ-ஈற்றசை.

பிதுர்க்கள் மூதாதையராதலின் ஆசீர்வாதஞ் செய்வதற்கு உரியர் என்பது கூறப்பட்டது. ஆகவே ஒளர்வருக்கு ஆசிசொற்றது அவன் நன்மைக்காக: அவனது கோபம் அவன் செய்த தவத்தின் வன்மையைக் கெடுக்குமாதலின். 'வரும் ஆறு எல்லாம் ஓதி' என்றவிடத்து அறியவேண்டிய விவரம் பின்வருமாறு: பிதுர்க்கள் ஒளர்வரைநோக்கி, "குழந்தாய்/ உன் கோபத்தையடக்கு: க்ஷத்திரியர்கள் ஹிம்சித்தபோது நாங்கள் பரிசுத்தாத்மாக்களான பார்க்கவர்களனைவரும் சக்தியில்லாமல் எங்கள் வதையை ஏற்றுக்கொண்டோம் என்று எண்ணுதே: நாங்களாகவே க்ஷத்திரியர்களால் கொல்லப்படுவதை விரும்பினோம். ஏனெனில் நீண்ட ஆயுளினால் எங்களுக்குத் துயரம் உண்டாயிற்று. குபேரனே நமக்கு அபரிமிதமான தனத்தைக் கொடுத்தபோதிலும், ஸ்வர்க்கத்தை விரும்புகின்ற நமக்கு அந்தத் தனத்தினால் யாதுபயன்? குழந்தாய்! நீ செய்யக் கருதியுள்ள இந்தக் காரியம் எங்களுக்கு இஷ்டமன்று. எல்லாவுலகங்களையும் க்ஷத்திரியர்களையும் அழிக்க முனைவது பாபம், எனவே மனத்தை யடக்கு: தவத்தின் பெருமையையும் வன்மையையும் கெடுக்கும் கோபத்தை விட்டுவிடு" என்பது.

"என் தவத்துறுதி ஒழியாவண்ணம் ஏதுசெய்வேன்" என்ற விடத்து அறியவேண்டிய விவரம் பின் வருமாறு:— ஒளர்வர் பிதுர்க்களை நோக்கி "நிறைவேற்றப்படாத கோபம், அக்னி அரணிக்கட்டையை எரிப்பதுபோல் என்னை எரித்துவிடும்; என் கோபத்தினால் உண்டான எந்த அக்னி உலகங்களையெரித்துண்ண விரும்புகிறதோ அதனையடக்கினால், அது தன் வலிமையினால் என்னையே எரித்துவிடுமே. ஆதலால், உலகங்களுக்கும் எனக்கும் எது நன்மையோ அதனைக் கட்டளையிடுங்கள்" என்று கேட்க, அவர்கள் "அதனை ஜலத்தில் விட்டுவிடு: உனக்குச் சுகம் உண்டாகட்டும்: உலகங்கள் ஜலத்தை ஆதாரமாகக் கொண்டவை. எல்லாரஸங்களும் ஜலமயம்: உலகமே ஜலமயம். இந்த அக்னி ஜலத்தையெரித்துக்கொண்டு சமுத்திரத்தில் நிற்கட்டும்" என்றனர். ஒளர்வர் அங்ஙனமே தன் கோபத்தினாலுண்டான அக்னியைச் சமுத்திரத்தில் வீட்டுவிட்டார். அதுதான் வடவாமுகாக்கினி எனப்படுவது. [இந்த அக்னி பெருங்குதிரைத்தலையாகிச் சமுத்திரஜலங்களையுண்ணுகின்றது. அஃது அக்னியை வாயிலிருந்து கக்கி நீரைக் குடிக்கிறது.] அடுத்த செய்யுளில் இது குறிக்கப்பட்டுள்ளது காண்க.

காத்தி,வை-முன்னிலையேவல்கள். செய்வல்-தன்மையொருமை.

23. வசிட்டர் உபதேசத்தினால் பராசரன் உலகத்தை யழிப்பதை விட்டு ராக்ஷஸரையழிப்பதற்கு யாகஞ்செய்ய ஆரம்பித்தல்.

ஆழியினுற் றத்தவத்தீ வருநீ ருண்டங்
கமர்ந்துவட வாமுகப்பே ரணுகிற் றன்னோர்
வாழிடம்புக் கனரணிய குமரன் முய்பால்
வந்திருந்தா னுதலினால் வைய மெல்லாம்
பூழிபட வெரிப்பதொழிந் ததுந்தை மார்கள்
பொன்றிடச்செற் றுண்டவிராக் கதர்கு லத்தைப்
பாழுறச்செய் கெனவசிட்டன் விடுப்ப வேகிப்
பராசரனெண் ணாறுநாண்மா தவஞ்செய் தானால்.

(இ.ள்] அத் தவத் தீ-அந்த ஒளர்வர் விடுத்த தவக்கனல், ஆழியின் உற்று-சமுத்திரத்தில் சேர்ந்து, வரு நீர் உண்டு-மேன் மேல் பெருக்கிவரும் நீரை வற்றச் செய்யுமாறு குடித்து, அங்கு அமர்ந்து-அச் சமுத்திரத்திலேயே நிலையாகத்தங்கி, வடவாமுகப் பேர் அணுகிற்று-வடவாமுகாக்கினியென்ற பேரைப் பெற்றது: அன்னோர்-அந்தப் பிதுர்க்கள், வாழிடம் புக்கனர்-தங்கள் பிதுர் லோகத்தை யடைந்தனர்: அனைய குமரன்-அந்த அரும்பகன் (ஒளர்வர்),தாய்பால் வந்திருந்தான்-தன் தாயாகிய பிராம்மணியினி டத்து வந்துசேர்ந்தான்: ஆதலினால்—, வையமெல்லாம்-பூவுலக முற்றும், பூழிபட எரிப்பது ஒழிந்தது-புழுதிப்பொடிபட எரிப்பது நீங்கிற்று: [இது இங்ஙன்நிற்க]: (நீ) உந்தைமார்கள்-உன் தந்தை யராகிய சத்தி முதலிய நூற்றுவரை, பொன்றிடச் செற்று-அழி யும்படி கோபித்து, உண்ட-தின்று நின்ற, இராக்கதர் குலத்தைப் பாழுறச்செய்க-ராக்ஷஸக் கூட்டத்தை யழித்துப் பாழாக்குக" என-என்று, வசிட்டன் விடுப்ப-[பிதாமகனாகிய] வசிட்டன் கட்டளையிட்டனுப்ப, பராசரன் ஏகி-[பேரனாகிய] பராசரன் போய், எண் அறு நாள்-நாற்பத்தெட்டு நாட்கள், மா தவம் செய் தான்-சிறந்த தவத்தை மேற்கொண்டான்; (எ-று). ஆல்-ஈற்றசை.

வடவாமுகாக்கினி (முன்னுரையில் குறித்தபடி) சமுத்திரத் தினிடையிலுள்ளதொரு பெண்குதிரையின் முகத்தில் ஒரு பெருந் தீயமைந்துள்ள தென்றும், அது சமுத்திர நீரை மழை முதலிய வற்றால் மிகாதபடி உறிஞ்சி நிற்பதென்றும், அத்தீக் கற்பாந்த காலத்து மேலெழுந்து வெளிப்பட்டு உலகங்களை யெரிப்ப தென் றும் நூற்கொள்கை. பால்-ஏழனுருபு. உந்தை-உன் தந்தை என்பதன் மரூஉ-செய்கென-வியங்கோளின் அகரவீறு தொகுத்தல்

எண்ணறுநாள்-நாற்பத்தெட்டு நாட்கள் (8×6): இனி, எண்ணறு-கணக்கற்ற எனினுமாம். மா தவம்-சிறந்த யாகம்: 'தவம்' என்பது இங்கே யாகத்தைக்குறித்து வந்தது. பராசரன் செய்த யாகத்தின் செயர் ராக்ஷஸ ஸத்ரம் என்பது. (23)

24. தவத்தீக்கு அஞ்சி (யாகத்தீக்கு அஞ்சி) அசுரர் அயனிடம் உரைப்ப, அவரது அறிவுரையால் பராசரன் தவத்தை முடித்துக் கொண்டமை.

அத்தவத்தீ புவியளவிற் றசுரர் யாரும்
அஞ்சியய லெடுரைப்ப அவனும் விண்ணோட்
டுத்தமருந் தவம்புரியும் பராச ரன்பால்
உற்றுனது குலக்குரவர் கதியி னுற்றூர்
புத்தியிலா தசுரர் செயுங் கொடுமை யெல்லாம்
பொறுத்துதவம் விடுத்தியெனப் புகல மற்றோன்
இத்தவத்தீ யகல்வதெவ்வா றெனலு மெண்க
ணிறைமேற்பான் மால்வனத்தி னிடுதி யென்றான்.

(இ-ள்) அத்தவத்தீ-அந்த யாகத்திலிருந்து எழுந்த அக்னி, புவியளவிற்று-பூவுலகமட்டும் பரவியது: [எனினும் ராக்ஷஸர்கள் எரிந்து போயினர்: எனவே] அசுரர் யாரும்-எஞ்சிய ராக்ஷஸர் அனைவரும், அஞ்சி-பயந்து, அயலெடு உரைப்ப-பிரமதேவனிடம் முறையிட்டுச்சொல்ல, அவனும்-அந்தப் பிரமனும், விண்ணோட்டு உத்தமரும்-அத்ரி, புலஸ்தியர், புலகர், க்ரது ஆகிய தேவலோகத்துமுனிவர்களும் (ஒருசேர), தவம் புரியும் பராசரன்பால் உற்று-யாகம் செய்கின்ற பராசரமுனிவனிடம் வந்து சேர்ந்து, உனது குலக்குரவர்-உன்னுடைய குலத்திலிறந்துபோன தந்தையர்கள், கதியின் உற்றூர்-நல்ல தெய்விக நிலையை அடைந்துள்ளார்கள்: புத்தியிலாது-நல்லறிவு இல்லாமல், அசுரர்செயும் கொடுமை எல்லாம் - ராக்ஷஸர்கள் செய்கின்ற தீமைகளையெல்லாம், பொறுத்து- (உமது) கருணையினாலே தாங்கி, தவம் விடுத்தி (இந்தக்) கடுந்தவத்தை நீக்குவாயாக, என-என்று, புகல-சொல்ல, (அதற்கு) மற்றோன்-அந்தப் பராசரன், 'இ தவத்தீ அகல்வது எவ்வாறு' - இந்தத் தவக்கனல் போவது எந்த விதம்' எனலும் - என்று வினவியவுடன், எண் கண் இறை-எட்டுக்கண்களையுடைய பிரமதேவன், ''மேல் பால்-(இமயமலையின்) வடபுறத்திலுள்ள, மால் வனத்தின் - பெருங்காட்டில், இடுதி - இட்டிடுவாய்'' என்றான் - என்று விடையிறுத்தான்; (எ-று).

உனது குலக்குரவர் கதியினுற்றூர் என்றது என்னையெனில்,- சத்திமுனிவர் சுவர்க்கத்தில் சேர்ப்பிக்கப்பட்டார்: ஏனையதம்பியர் நூற்றுவரும் தேவர்களுடன் சேர்ந்து மகிழ்ச்சியோடு விளையாடு கின்றனர். [குறிப்பு:- கல்மாஷபாதனும் சுவர்க்கம் சேர்ந்தான்.]

நான்முகனுதலின் பிரமனை "எண்கணிறை" என்றது. விடுத்தி-முன்னிலேவியங்கோள். (24)

25. பராசரன் அசுரர்க்கருள்புரிந்து வசிட்டனிடம் அடைதல்.

அங்கவனு மவ்வனத்தி லவ்வா றுய்த்தான்
அவ்வனலுந் தவாக்கினிப்பே ரறைய வாங்கே
தங்கியிருந் ததுபிரம லெடு விண்ணோருந்
தமதிடம்புக் கனர்கள்பரா சரனுந் தன்பாற்
கங்குனிறத் தசுரரடைந் திறைஞ்சி நிற்பக்
கருணைபுரிந் தேவிபிதா மகன்பா லெய்திப்
பங்கயத்தா டொழுதடையத் தன்மை சொற்றூன்
பாட்டனுமங் கவற்புல்லிப் பரிவு கூர்ந்தான்.

(இ-ள்) அங்கு-அப்போது, அவனும்-அந்தப் பராசரனும், அ வனத்தில்-அந்த [இமயமலே]ப் பெருங்காட்டில், அவ்வாறு-(தவத்தீயின்ஜ்வாலே சிறிதும் குறையாத) அந்தப்படியே, உய்த் தான்-இடுவித்தான்: அ அனலும்-அந்த அக்கினியும், தவாக் கினிப்பேர் அறைய-"தவாக்கினி" என்று பெயர்சொல்லும்படி [என்றும் குறைவுபடாததாய்], ஆங்கே-அந்தப் பெருங்காட்டில், தங்கியிருந்தது-நிலேபெற்றிருந்தது: [இ.·.து இப்படியாக] பிரமலெடு விண்ணோரும்-பிரமதேவலேடு தேவர்களும், தமது இடம் புக்கனர்கள்-தத்தமது வாழிடம் சேர்ந்தார்கள்: பராசர னும்-, தன்பால்-தன்னிடத்து, கங்குல் நிறத்து அசுரர் அடைந்து-கரியநிறமுடைய ராக்ஷஸர்கள் வந்து, இறைஞ்சி நிற்ப-வணங்கி நிற்க, கருணைபுரிந்து-(அவர்கள் உயிர்கொண்டு உய்யுமாறு) அருள்செய்து, ஏவி-(அவர்களே) விடைகொடுத்துவிடுத்து, (பின்பு) பிதாமகன்பால் எய்தி-பாட்டனாராகிய வசிட்டனிடம் வந்து, பங்கயத் தாள் தொழுது-தாமரைமலர் போன்ற பாதங் களில் வீழ்ந்து வணங்கி, தன்மை-நிகழ்ந்த விருத்தாந்தங்களே, அடைய-(ஒன்றும் விடாமல்) முறையே முற்றும், சொற்றூன்-சொல்லினன்: பாட்டனும்-வசிட்டனும், அங்கு-அப்போது அவ்விடத்து, அவன் புல்லி-அந்தப் பேரனேத் தழுவி, பரிவு கூர்ந் தான்-அன்புமிகுந்தவனனன்; (எ-று).

"தவாக்கினி" என்று பேர் உண்டாயிற்று. ஏனெனில் அந்த அக்னி இன்னமும் அந்தப் பெருங்காட்டில் எப்போதும் ராக்ஷஸர் களையும் மரங்களையும் கற்களையும் தின்றுகொண்டு பருவகாலந் தோறும் காணப்படுகிறது என்ப. தவா + அக்கினி = தவாக்கினி: தவா-கெடாத, குறைவுபடாத, இறவாத.

[குறிப்பு:- நீரில் அணையாத அக்னி - வடவாமுகாக்கினி. நிலத் தில் அணையாத அக்னி-தவாக்கினி என்பது உணர்த் தப்பட்டது.] (25)

26. இங்ஙனம் வசிட்டன் பெருமையைச் சித்திரரதன் விசய னுக்குக் கூறிமுடித்துப் பின்னர் யுதிட்டிரன் கேட்ப, அவர் கள் ஏற்கவேண்டிய புரோகிதரை யுரைத்தல்.

அவ்வசிட்டன் சீர்த்தியையா ருரைக்க வல்லார்
அடல்விசய! வென்றிசையாழ்க் கதிபன் கூற
ஒவ்விலுதிட் டிரனவனை நோக்கி வேந்தர்க்
கொருமறையோ னிலாதவர சோங்கு ரூதென்
றெவ்வமற வெமக்குமுன முரைத்தா யந்த
வியல்பின்முனி வரர்யாரோ வெண்ணி யோதிற்
செவ்வியுடை யாயவரைச் சேர்து மென்னச்
செப்பவதற் கவனுமுரை செய்வான் மன்னே.

(இ-ள்) அடல் விசய! - வலிமைமிக்க அருச்சுனனே! அ வசிட்டன் சீர்த்தியை - அந்த வசிட்ட முனிவனின் மிகுபுகழை, யார் உரைக்க வல்லார்-[முற்றும்] சொல்ல வல்லவர் யாவருளர்? (ஒருவருமிலர்) என்று—, இசையாழ்க்கு அதிபன் கூற-கந்தருவ னாகிய சித்திரரதன் கூறிமுடிக்க, (பின்னர்) ஒவ்வுஇல் உதிட் டிரன் - ஒப்பில்லாத தருமபுத்திரன், அவனை நோக்கி - அந்தச் சித்திரரதனைப்பார்த்து, "வேந்தர்க்கு - அரசர்க்கு, ஒரு மறை யோன் இலாத அரசு - ஒரு புரோகிதன் இல்லாத அரசாட்சி, ஓங்குரூது - வளர்ச்சியுற்றுச்சிறவாது" என்று—, எவ்வம் அற - துன்பம் நீங்கும்படி, எமக்கு - [பாண்டவர்களாகிய] எங்களுக்கு, முனம்-முன்னர், உரைத்தாய் - கூறியுள்ளாய்: அந்த இயல்பின் முனிவரர் யாரோ? - அந்தக் குணங்களையுடைய புரோகிதச் சிரேட்டர் யாவரோ? எண்ணி ஒதின் - ஆய்ந்துபார்த்துச் சொல் வீராலல், செவ்வியுடையாய்! - நேர்மையுடையவனே! அவரைச் சேர்தும் என்ன செப்ப - அவரை[ப் புரோகிதராகக்கொண்டு] சேர்வோம் என்று சொல்ல, அதற்கு—, அவனும் - அந்தச் சித்திர

ரதனும், உரை செய்வான் - சொல்லலாயினன்; (எ-று) மன், ஓ-ஈற்றசை.

"சீர்த்தி மிகுபுகழ்" (தொல், உரி: 16) கந்தருவர் யாழில் வல்லவராதலின், கந்தருவனாகிய சித்திரரதனை "யாழ்க்கதிபன்" என்றது. ஒவ்வு-ஒப்பு, மறையோன்-புரோகிதன் என்ற பொருளது இங்கு. வேதம்வல்ல பிராம்மணன் புரோகிதனாயிருத்தல் மரபு. வசிட்டன் இக்ஷ்வாகுவம்சத்து மன்னர்க்குப் புரோகிதனாயிருந்தார். சதானந்தன் ஜனகமகாராஜர்க்குப் புரோகிதனாயிருந்தார். இங்ஙனமே கண்டுகொள்க. முனம்-முன்னம் என்பதன் இடைக்குறை. செவ்வி - நேர்மை. சேர்தும் - தன்மைப்பன்மை வினைமுற்று. (26)

27. உற்கயமென்ற தீர்த்தத்தில் பாண்டவர்கள் தௌமியரைப் புரோகிதராக வரித்தது.

உற்கயமென் றொருதீர்த்த முளது முன்னங்
கொருவனுளான் தௌமியப்பே ருடையா னந்தச்
சற்குணனை யடைந்துடன்கொண் டேகு மின்யான்
தரும்பரிக ணீவிரர சாளு நாள்வந்
தற்புதமோ டுமதுழிப்புக் கிடுமென் றியாமோன்
அறைந்துவிடுத் தனனவண்சென் றனைய தூயோன்
பொற்கழறும்ந் தினிமைபுகன் றுடனே யந்தப்
புனிதன்வரக் கொடுகவுந்தி புதல்வர் போனர்.

(இ-ள்) "உற்கயம் என்று ஒருதீர்த்தம் உளது-உற்கசம் என்று புனித நீர் நிலையுள்ளது: அங்கு-அந்தத் தீர்த்தத்தின் கரையில், முன்-முன்னரிருக்கும் ஆசிரமத்தில், ஒருவன் உளான்-ஒரு முனிவன் இருக்கின்றான்: தௌமியப் பேருடையான்-தௌமியன் என்னும் பெயருடையவன்: அந்தச் சற்குணனை அடைந்து-அந்த நற்குணங்கள் பொருந்தியவரைப்போய்ச்சேர்ந்து, உடன் கொண்டு-(அவரை) உங்களுக்குத் துணையாகும் புரோகிதனாக உடன்கொண்டு, ஏகுமின்-வழியைக் கடந்து செல்லுங்கள்: யான் தரும் பரிகள்-நான் கொடுக்கின்ற (சிறந்த) குதிரைகள், நீவிர் அரசு ஆளும் நாள்-நீங்கள் அரசாட்சிபெற்று ஆளுங்காலத்து, வந்து—, அற்புதமோடு-(எல்லோரும்) வியக்கும்படி, உமது உழிபுக்கிடும் - உங்களிடம் சேரும்", என்று-, யாமோன் - கந்தருவனாகிய சித்திரரதன், அறைந்து-சொல்லி, விடுத்தனன்-அவர்களை விட்டு நீங்கினன்: கவுந்தி புதல்வர்-குந்தியின் புதல்வர்களாகிய

பாண்டவர்கள், அவண் சென்று-அந்த உற்கசதீர்த்தம் அடைந்து, அனைய தூயோன்-(கந்தருவன் கூறியபடி) சற்குணங்களையுடைய அப்படிப்பட்ட புனிதனை தௌமியமுனிவனின், பொன் கழல் தாழ்ந்து-அழகிய திருவடிகளில் வணங்கி, இனிமை புகன்று-இனிய வார்த்தைகள் சொல்லி(ப் புரோகிதனாகக் கொண்டு), உடனே - அப்பொழுதே (தாமதிக்காமல்), அந்தப் புனிதன் வாக்கொடு-அந்த முனிவன் உரையின்படியே (அவர் கூறுவன கேட்டுக்கொண்டே). போனர்-(வழிநடை வருத்தம் தெரியாமலே அரிய வழியை எளிதிற்கடந்து) சென்றனர்; (எ-று).

தௌமியன்-தேவலமுனிவனது தம்பி. வேதம் வல்லார் களனைவரினும் சிறந்தவர். உயர்ந்த புத்தியும் சிறந்த வாக்கும் உள்ளவர். பிருஹஸ்பதிக்கு நிகராயிருந்தவர். ஏகுமின் - முன்னிலைப்பன்மை வினைமுற்று. கழல்-தானியாகுபெயர். (27)

சித்திரரதச் சருக்கம் முற்றிற்று.

பதினேழாவது

திரௌபதி மாலையிட்ட சருக்கம்

திரௌபதியானவள் கலியாணத்திற்குரிய பூமாலையை அருச்சுனனுடைய தோள்களில்இட்ட செய்தியைக் கூறுஞ் சருக்கம் என்று பொருள்படும்: அருச்சுனனுக்கு உரிமை பூண்ட திரௌபதியைத் தாயின் சொற்படி பாண்டவர் ஐவரும் மணஞ்செய்து கொண்ட வரலாறு இச்சருக்கத்திற் கூறப்படுகின்றது.

வேறு

1. பாண்டவர் அதிகாலை பாஞ்சால நகரம் புகுதல்.

பரவைசூ ழுலகங் காக்கும் பாண்டவர் சுரமுங் காடும்
ஒருவியே துருப தேய னூர்க்கணித் துற்றூர் வேள்வித்
தெரிவைவீற் றிருக்குந் தெய்வத் திருநக ரிஃதென் றன்னோர்க்
குரைசெயு மதுபோற் காலை யொலித்தன புட்க ளம்மா.

(இ-ள்) பரவை சூழ் உலகம்-கடலாற் சூழப்பட்ட உலகத்தை, காக்கும்-பாதுகாக்கின்ற, பாண்டவர்—, சுரமும்-அருநெறியையும், காடும்-காட்டையும், ஒருவியே—கடந்து நீங்கியே, துருபதேயன் ஊர்க்கு அணித்து உற்றூர்–துருபதராசனின் பாஞ்சாலநகர்க்கு அருகில் வந்துசேர்ந்தனர்: (அப்போது) புட்கள்-பறவைகள் எல்லாம், "வேள்வித் தெரிவை-யாகத்தீயினின்றெழுந்த திரௌபதியாகிய பெண், வீற்றிருக்கும்-தங்கியிருக்கும், தெய்வத்திருநகர் இ.ஃது என்று-தெய்வத்தன்மை பொருந்திய அழகிய நகரம் இதுதான்" என்று, அன்னோர்க்கு-அந்தப் பாண்டவர்க்கு, உரை செயுமது போல்-சொல்லுவன போல, காலை-அதிகாலைப்போதில், ஒலித்தன-சப்தித்தன. (எ-று) அம்மா-ஈற்றசை: வியப்பிடைச்சொல் எனினுமாம்.

சுரம்-அருநெறி, பாலைவனம். காலையில் இயற்கையாகப் புட்கள் ஒலித்தலைப் பாண்டவர்க்குத் "திருநகர் இ.ஃது" என்று உரை செயுமது போல் எனத் தற்குறிப்பேற்றவணி படக் கூறினர் தெரிவை-பருவங்குறிப்பதன்று.

இதுமுதல் பதினெட்டுக்கவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களும், மற்றவை மாச்சீர்களுமாகிய அறுசீராசிரிய விருத்தங்கள்,

2. சூரியோதயமாதல்.

அங்ஙகர்ப் புதுமை வெய்யோ
னங்கையாற் சுட்டி யைவர்க்
கின்னதென் றுணர்த்து வான்வந்
தெய்தல்போற் கரங்க ணீட்ட
மின்னிடை யுமக்கே வாய்ப்ப
வேந்தர்சோர்ந் திவ்வா றோடு
மென்னல்காட் டுதல்போற் றுன்னு
மிருட்குல மிரிந்த தாலோ.

(இ-ள்) வெய்யோன் - சூரியன், அ ஙகர்ப் புதுமை - அந்தப் பாஞ்சால நகரத்தின் நூதனங்களை, அங்கையால் சுட்டி-அழகிய கைகளாலே குறித்துக்காட்டி, ஐவர்க்கு-பஞ்சபாண்டவர்க்கு, இன்னது என்று உணர்த்துவான் - இன்னின்னவை என்று அறிவிக்கும்பொருட்டு, வந்து எய்தல்போல் - அந்நகர்க்கு வந்து அடைந்ததுபோல், (உதித்து), கரங்கள் நீட்ட – தன்கிரணங் களாகிய கைகளை நீட்டிப்பரப்ப, (அதனால்) துன்னும் இருள் குலம்-நெருங்கிய இருளின்கூட்டம், "மின்னிடை உமக்கே வாய்ப்ப திரௌபதியானவள் உங்களுக்கே கிட்டுதலாலே, வேந்தர் சோர்ந்து இவ்வாறு ஓடும்-பிறமன்னர்கள் மனம்வருந்தி இந்த விதமாகத்தானே போரிட்டு ஓடப்போகிறார்கள்", என்னல் காட்டுதல் போல் - என்று தெரிவிப்பதுபோலே, இரிந்தது - ஓடி மறைந்தது; (எ-று). ஆலோ - ஈற்றசை.

'எய்தல்போல், காட்டுதல்போல்' என்றவிடங்களில் தற்குறிப் பேற்றவுவமையணி காண்க. அங்கை - பண்புத்தொகை. ஐவர்-தொகைக்குறிப்பு. இன்னது-குறிப்பு வினையாலணையும் பெயர். உணர்த்துவான் - வினையெச்சம். எய்தல், என்னல் - தொழிற் பெயர்கள். கரங்கள்-உருவகம். மின்னிடை-மின்னலைப்போன்ற இடையையுடையாள்: உவமைத்தொகையன்மொழி: இனி, அடை யடுத்த சினையாகுபெயரெனினுமாம். (2)

3. ஐம்பொறிகளும் களிக்கப் பாண்டவர் செல்லுதல்.

ஐம்பெரும் பூதம் போல்வா
ரயாவினைத் தென்றன் மாற்றப்
பைம்பொழில் கனிக ணல்கப்
பல்லியஞ் சுபங்கள் சொல்ல

வம்பலர் வாசம் வீச
மயூரநின் ரூடல் காட்டத்
தம்பெரும் பொறிக ளைந்துந்
தனித்தனிக் களிப்பச் சென்ரூர்.

(இ-ள்) ஐம்பெரும் பூதம் போல்வார்-நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் ஐந்து பெரிய பூதங்களைப்போன்ற பஞ்ச பாண்டவரது, அயாவினை - தளர்ச்சியினை, தென்றல் மாற்ற-தென்றற்காற்று போக்க,-பைம்பொழில்-பசியசோலைகள், கனிகள் நல்க-(இனிய) பழங்களைக் கொடுக்க,-பல்லியம் சுபங்கள் சொல்ல-பல வாச்சியங்கள் மங்களங்களைத் தெரிவித்து ஒலிக்க,-வம்பு அலர் வாசம் வீச-புதிய மலர்கள் வாசனையை வீச,-மயூரம் நின்று ஆடல் காட்ட-மயில்கள் (ஆங்காங்கு நின்று) நர்த்தனஞ் செய்து காட்ட,-[இங்ஙனம்], தம்பெரும் பொறிகள் ஐந்தும்-மெய்வாய் கண்மூக்குசெவி என்ற தமது ஐம்பெரும் இந்திரியங்களும், தனித்தனி களிப்ப-தனித்தனியாக மகிழ்ச்சிபெற, சென்ரூர்-போயினர்; (எ-று).

"தென்றல் மாற்ற" என்றதால் மெய்யிற்கு ஊற்றின்பமும், "கனிகள் நல்க" என்றதால் வாய்க்குச் சுவையின்பமும், "பல்லியஞ்சுபங்கள் சொல்ல" என்றதால் செவிக்கு ஓசையின்பமும், "வம்பலர் வாசம் வீச" என்றதால் மூக்கினுக்கு நறுமண (நாற்றம்) இன்பமும், "மயூரம் நின்ரூடல்காட்ட" என்றதால் கண்ணுக்கு ஒளியின்பமும் பெற அவர்கள் போயினர் என்பதறிக. "கண்டுகேட்டுண்டுயிர்த்துற்றறியும் ஐம்புலனும்" தனித்தனியே இன்பமுற்றவகையினைத் திறம்படக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

பிரபஞ்சசிருஷ்டிக்குப் பஞ்சபூதங்கள் மூலகாரணமாதல் போல, தருமசிருஷ்டிக்குப் பஞ்சபாண்டவர் மூலகாரணமாயினர் பாரதகாலத்து என்பது அறிக. அயா - வழிவந்தவருத்தம், தளர்ச்சி, சோர்வு. கனிகள் + நல்க = கனிகணல்க: "ணளமுன் டணவும் ஆகும் தநக்களாயுங்காலே" என்பது விதி. வம்பு-புதுமை. (3)

4-5. இரண்டு கவிகள்—பாண்டவர்க்கு நிகழும் நன்னிமித்தம் கூறும்.

பதுமமொட் டொன்று வள்ளும்
பதங்கணுற் றளிகண் மொய்ப்ப
அதைதுரந் தொருவண் டத்தேன்
அருந்தலு மாவி யின்மா
மூதிர்கனி விழுவொன் றுண்பான்
முயன்றபன் மீன்க டம்மைக்
கதுமெனத் துரந்தோர் வாளைக்
களித்தருந் துதலுங் கண்டார்.

(இ-ள்) பதுமம் மொட்டு ஒன்று - தாமரையரும்பொன்று வள்ளும்பதம் - வாய் விடுகின்ற சமயத்தை (மலரும் சமயத்தை கணுற்று-பார்த்து, அளிகள் மொய்ப்ப-வண்டுகள் ஆரவாரிக்க, அதைத்துரந்து — அந்த மொய்த்தலை விட்டு, ஒருவண்டு-ஒருவண் டானது, (அந்த அரும்பின் உள்ளே புகுந்து), அ தேன் அருந் தலும்-அங்கிருக்கும் தேனையுண்ணுதலையும்,—

ஆவியில்-ஒரு நீர்த்துறையில், மா முதிர் கனி ஒன்று விழ-முதிர்ந்து பழுத்த மாங்கனியொன்று விழ, (அதனை) உண்பான்-உண்பதற்கு, முயன்ற பன்மீன்கள் தம்மை-முயற்சிசெய்த பல மீன்களை, ஓர் வாளை-ஒரு வாளைமீன், கதுமெனத் துரந்து-விரை வாக வோட்டி, கனி அருந்துதலும்-(அந்த) மாங்கனியை யுண்ணு தலையும், கண்டார்-பார்த்தார்கள்; (எ-று).

திரௌபதியைக் கருதிவந்த பலர் வாளாசூழ்ந்து நிற்கத் தாம் தடையறச்சென்று அவளைப் பெறுதல் கூடும் என்பதற்கு,— வண் டின் செயலை ஓர் அறிகுறியாக எண்ணிச் சென்றனரென்க.

அஃதேபோல், திரௌபதியைக் குறித்துத் தம்தமக்கு உரியளாகக்கடவளென்ற விருப்பத்தோடு பற்பல அரசர்வந்து சூழ்ந்து நிற்கத் தாம்தடையறச் சென்று அவர்களைப் பயன்பெறு தொழிபவராக்கி அவளைக் கைக்கொண்டு கவலையற நுகர்ந்து வாழலாமென்பதற்கு,—மாங்கனியை மீன்களுக்கு இல்லாமல் வாளைமீன் கவர்ந்த இச்செயலைச் சூசகமாகக் கண்டனர் என்க.

அதைத்துரந்து-மொய்த்த அளிகளைத் துரந்து என்றுமாம்: அஞ்ஞான்று, 'அதை' என்ற ஒருமை - சாதியொருமையாகும், ஆவி - வாவி: குளம். உண்பான் - பானீற்று வினையெச்சம். கதுமென - விரைவுக் குறிப்பிடைச்சொல். (4)

5. ஆங்கதை நிமித்த மாக
வகங்கொடு செல்லு மைவர்
வாங்குவி னுதலா ளுங்கள்
வரவுகா ணும லாவி
நீங்குவா னிருந்தாட் காப்பா
னீர்புகு மென்று கூவும்
மாங்குயிற் குரலுங் கேட்டு
மனங்களி கூர்ந்து சென்றூர்.

(இ-ள்) ஆங்கு-அந்த இடத்தில், அதை-அந்த வண்டு வாளை இவற்றின் செயல்களை, நிமித்தமாக - நல்ல அறிகுறிச் சூசகங்களாக, அகம் கொடு-மனத்திற்கொண்டு, செல்லும்-போகின்ற, ஐவர்-பஞ்சபாண்டவர்கள்—

"வாங்கு வில் நுதலாள் - வளைந்த வில்போன்ற நெற்றியையுடைய திரௌபதியானவள், உங்கள் வரவு காணுமல் - உங்களுடைய வருகையைக் காணுதவளாய், ஆவி நீங்குவான் இருந்தாள் - உயிர்போகும் நிலையிலிருக்கின்றாள்: காப்பான் - அவளைக் காப்பாற்றும் பொருட்டு, நீர் புகும்-நீங்கள் (அவளரண்மனைக்குப்) போய்ச்சேருங்கள், என்று - என்று கூறுவதுபோலே, கூவும்-கூவுகின்ற, மாங்குயில் - மாமரத்திலிருக்கின்ற குயிற்பறவைகளின், குரலும் கேட்டு - இனிய தொனியையும் கேட்டுக்கொண்டே, மனம் களி கூர்ந்து - மனமகிழ்ச்சிமிகுந்து, சென்றூர்-வழிநடந்துபோனார்கள்; (எ-று).

இது, தற்குறிப்பேற்றவணி. வில் நுதலாள் - உவமைத்தொகை. நீங்குவாள்-வினையாலணையும்பெயர். (5)

6. பாண்டவர் பாஞ்சால நகரம் புகுதல்.

நெறியிடைப் பொழில்க டோறு
நிமித்தமிவ் வண்ணம் வாய்ப்ப
மறிவிழி வாய்க்கு மென்ன
மனமகிழ்ந் தனங்க டுஞ்சுஞ்

செறிபணை மருத நீங்கிச்
சேணக ரதனை நோக்கி
வறிதிதென் றிகழ்ச்சி செய்யும்
வளங்கொளந் நகரி புக்கார்.

(இ-ள்) நெறியிடை பொழில்நள்தோறும்-வழியிடையிலுள்ள சோலைகளிலெல்லாம், நிமித்தம் இவண்ணம் வாய்ப்ப-நற்குறிச் சூசகங்கள் இந்தப்படியே பொருத்தமாயிருக்க, மறி விழி வாய்க்கும் என்ன மனம் மகிழ்ந்து - மான்கண்போன்ற பார்வையினையுடைய திரௌபதி நமக்குக் கிடைப்பள் என்று மனங்களித்து,—அனங்கள்-அன்னப்பறவைகள், துஞ்சும்-தங்குகின்ற, செறி பணை மருதம் நீங்கி-நெருங்கிய வயல்கள் சூழ்ந்த மருதநிலத்தை விட்டு நீங்கி (க்கடந்து), சேண் நகர் அதனை நோக்கி-தூரத்தில் வானிலுள்ள அமராவதியைப்பார்த்து, இது வறிது என்று இகழ்ச்சி செய்யும்-இந்த இந்திரனது நகரும் தரித்திரம்பிடித்ததாகும்என்று இகழ்ந்து ஏசுகின்ற, வளம் கொள் - [சிறந்த] வளப்பத்தைக் கொண்ட, அ நகரி புக்கார்-அந்தப் பாஞ்சால நகரத்தினுட் புகுந்தனர்; (எ-று).

மறிவிழி-விழியையுடையாளுக்கு ஆகுபெயர். அனம்-அன்னம் என்பதன் இடைக்குறை. வறிது-தரித்திரம்: வறுமையையுடையது. ஈற்றடியில் வீறுகோளணிபடக் கூறியபடி. (6)

7. அந்நகரத்து வீதிகளில் நாட்டிய துவசங்களின் வருணனை.

பைந்தொடி வதுவைக் கொல்லை
பாண்டவர் தம்மை நீவிர்
வந்திடு மென்று மற்ற
மன்னரைப் போமி னென்றுஞ்
செந்தளி ரங்கை காட்டிச்
செப்பல்போற் கொடிக ளெல்லாம்
அந்தர மளக்கு மாடத்
தாடிடும் வீதி கண்டார்.

(இ-ள்) கொடிகள் எல்லாம் - அந்நகரத்து நாட்டப்பட்ட துவசங்களெல்லாம்,—பைந்தொடி வதுவைக்கு - திரௌபதியின் சுயம்வரத்துக்கு, ஒல்லை-விரைவாக, பாண்டவர்தம்மை-பாண்டவர்களை, நீவிர் - நீங்கள், வந்திடும் என்றும் - வந்து சேருங்கள்

என்றும், மற்ற மன்னரை-திரண்ட ஏனைய அரசர்களே, போமின் என்றும்-நீங்கள் திரும்பி (உங்கள் நகரத்துக்குச்) செல்லுங்கள் என்றும், செந்தளிர் அங்கை காட்டிச் செப்பல்போல்-சிவந்த தளிர்போன்ற அழகிய கைகளைக் காட்டிச் சொல்வதுபோல, அந்தரம் அளக்கும மாடத்து-வானத்தை அளாவி அளக்கின்ற உயரிய மேல்மாளிகைகளில், ஆடிடும்-அசைந்தாடுகின்ற, வீதி கண்டார்-தெருக்களைப் பார்த்தனர்; (எ-று).

இங்கு ஆடைகளைக் கைகளாகவும், கொடிகளை அக்கைகளை யுடையராகவும் கொள்க. தற்குறிப்பேற்றவணி. ''செய்யவளிருந்தா ளென்று செழுமணிக் கொடிகளென்னும், கைகளீட்டியந்தக் கடிநகர் கமலச்செங்கண், ஐயனையொல்லைவாவென்றழைப்பது போன்றதம்மா'' என்ற கம்பராமாயணப்பாடலும் (பால:மிதிலைக் காட்சிப்படலம்: செ. 1) ''ஈண்டுநீவரினும் எங்கள் எழிலுடைக் கொண்டல்வண்ணன் பாண்டவர்தங்கட்கல்லால் படைத்துணை யாகமாட்டான், மீண்டுபோகென்றென்றந்த வியன்மதிற்குடுமி தோறும், காண்டகுபதாகையாடை கைகளாற்றடுப்பபோன்ற'' என்ற வில்லிபாரதப்பாடலும் (உத்தி: வாசுதேவனைப் படைத் துணை: செ. 6). ''போருழந்தெடுத்த வெல்போர் நெடுங்கொடி, வாரல் என்பனபோல்மறித்துக் கைகாட்ட'' என்ற சிலப்பதி காரப் பாடலடியும் (புறஞ்சேரி. வரி. 189-190) ஒப்புநோக்குக. இங்ஙனம் கொடிகளின் அசைதலை வருணித்தல் கவிமரபு. பைந் தொடி-பண்புத்தொகையன்மொழி. ஒல்லை-விரைவுப்பொருளில் வருங் குறிப்பிடைச்சொல். அந்தரமளக்கும் மாடம் என்றது-மிகையுயர்வுநவிற்சியணி. (7)

8. பாண்டவர் அந்நகரில் ஒரு குயவன் வீட்டில் இடங் கொள்ளுதல்.

வாரணி முரசுஞ் சங்கும்
வாரியோ டிகலி யார்ப்பத்
தேரணி களிறு வாசித்
திண்டிறற் பதாதி சூழத்
தாரணி நிருபர் மொய்த்துச்
சார்தரு மறுகு நீங்கிக்
கூரணி வேலா ராங்கோர்
குலாலன்மா மனைபுக் குற்றார்.

(இ-ள்) வார்அணி முரசும்-வாரினாலே வரிந்து கட்டப்பட்ட

அழகிய முரசங்களும், சங்கும்-(ஊதும்) சங்கங்களும், வாரியோடு இகலி-கடலோடு மாறுபட்டு, ஆர்ப்ப-ஆரவாரித்து ஒலிக்க, தேர் அணிகளிறு வாசி திண்திறல் பதாதி சூழ-தேர்களும் அலங்காரஞ் செய்யப்பட்ட ஆண்யானைகளும் குதிரைகளும் மிக்கவலிமை யுடைய காலாட்படையினரும் தம்மைச் சூழ்ந்துவர,-தார் அணி நிருபர் மொய்த்து-மாலைகளையணிந்த மன்னர்கள் திரண்டுகூடி, சார்தரு - சேர்ந்துள்ள, மறுகு நீங்கி-தெருக்களைக் கடந்துபோய், கூர் அணி வேலார்-கூரிய அழகிய வேலாயுதத்தையேந்தியிருந்த பாண்டவர்கள், ஆங்கு - அந்தப் பாஞ்சால நகரில், ஓர் குலாலன் மாமனை புக்கு உற்றூர் - ஒரு குயவனுடைய பெரிய வீட்டிலே சென்று தங்கினர்; (எ-று).

'அந்தணர் குயவர் மனையில் தங்கலாம்' என்பது நூற் கொள்கை. "வாரியோடிகலியார்ப்ப" என்றது - கடலோசையினு மிக்கு என்றபடி, நாற்படைகள் சூழ நிருபர்மொய்த்தனர் என்றது அவரவரது ஆடம்பரம் தோற்ற. "வேலார்" என்றது முன்னைய நிலைமைநோக்கி, இப்போது அந்தணராயிருத்தலின் என்க. (8)

9. பாண்டவர் சுயம்வரமண்டபஞ் சேர்தல்.

கற்பகத் தடக்கை வீரர் கவுந்தியைக் கும்ப காரன்
பொற்பகத் திருத்தி வந்த பூசுர ருடன்சென் றேங்கும்
வெற்பகத் தரிக ளன்ன வேந்தர்சூ முவையிற் சிம்புள்
சிற்பகத் துரிபோர்த் தன்ன செயலொடு மேவி னரே.

(இ-ள்) கற்பகத் தடக்கை வீரர் - கற்பக விருட்சம்போல மாறாது வழங்கும் பெரிய கைகளையுடைய பாண்டவர்கள், கவுந் தியை - குந்திதேவியை, கும்பகாரன் - குயவனுடைய, பொற்பு அகத்து இருத்தி - அழகிய வீட்டினுள் தங்கவைத்து, வந்த-சுயம்வரங் காணவந்த, பூசுரருடன் சென்று - அந்தணர்களோடு ஒருசேரவுடன்போய், ஓங்கும் வெற்பு அகத்து அரிகள் அன்ன வேந்தர்சூழ் அவையில் - உயர்ந்த மலையிடத்து வாழ்கின்ற சிங்கங்கள் போன்ற [பராக்கிரமம் வாய்ந்த] மன்னர்கள் சூழ்ந்து திரண்டுள்ள சுயம்வர மண்டபத்தில், சிம்புள் - சரபப் பட்சி யானது, சில் – அற்பமாகிய, பகத்து - கொக்கினுடைய, உரி போர்த்து அன்ன - தோலைப் போர்த்துக்கொண்டாற்போன்ற, செயலொடு - செய்கையோடு, மேவினர் - பொருந்தியிருந்தார்கள்; (எ-று).

பராக்கிரமம் மிகுந்த பாண்டவர் அத்திறத்தை வெளிக் காட்டாது நீறுபூத்த நெருப்புப்போல உள்ளடக்கிச் சாந்தகுண முடைய அந்தணர்களின் வடிவத்தை மேற்கொண்டுள்ளாராத லின், சரபப்பறவை கொக்கின் தோலைப் போர்த்தாற்போன்ற செய்கையராய் இருந்தார் என்றார். சிம்புள்-சரபம்: சிங்கத்தைக் கொல்லவல்லதாகக் கூறப்படும் எட்டுக்காலியுடைய புள். புள்-பட்சி: பறவை. சில்-அற்பம்: பகம்-கொக்கு. கும்பம்-பானை, குடம் முதலியன: கும்பகாரன்-அவற்றைச் செய்யும் குயவன். குயவன் வீடு 'பொற்பகம்' ஆயிற்று பாண்டவர்கள் குந்தியொடு தங்குவதாலே. பூசுரர்-நிலத்தேவர்: பிராம்மணர்: அந்தணர். ஓங்கும் வெற்பு என்றது-அந்தந்த மன்னர்கள் தங்கியிருக்கின்ற மாளிகைகளைக் காட்டுவது: இனிப் பரந்த சுயம்வரமண்டபத்தைக் காட்டுவதென்னலுமாம். ஈற்றடியில் உவமையணிபடக் கூறினர். (9

10. பாண்டவர்க்காகத் திரௌபதி இரங்குதல்.

மூன்றுகவிகள்—ஒரு தொடர்.

அந்தண ருருவின் வேந்த ரவையிடை யையர் சேர்தற்
புந்தியி லுணரா ளந்தப் புரத்திருந் தணிபாஞ் சாலி
இந்திரன் மகன்றன் பொற்பு மிரதமுஞ் சிலையுங் கோட்டி
பைந்தொடி மார்கள் காட்டும் படங்கணுற் றுருகிச் சோரும்.

(இ-ள்) அந்தணர் உருவின்-பிராமணர் வடிவத்துடன், வேந்தர் அவையிடை-மன்னர்களது சபையில், ஐவர்-பஞ்சபாண்டவர்கள், சேர்தல்-வந்து உடன் வீற்றிருத்தலை, புந்தியில் உணராள்-தனது அறிவினால் உணரமுடியாதவளாய், அந்தப் புரத்து இருந்து-அந்தப்புரத்திலேயே யிருந்துகொண்டு (வெளி வராமல்), அணி பாஞ்சாலி-அழகிய திரௌபதியானவள், இந்திரன் மகன்தன் பொற்பும் இரதமும் சிலையும் கோட்டி-அருச்சுனனது அழகினையும் அவன் ஏறுந் தேரினையும் (அவன் கையுள்ள) வில்லினையும் வரைந்துகாட்டி, பைந்தொடிமார்கள்-திரௌபதியின் தோழிமார்கள், காட்டும்-(அவள் காணும்படி) காட்டுகின்ற, படம் கணுற்று-படத்தைப்பார்த்து, உருகிச் சோரும்-உள்ளம் உருகி நைந்துபோவாள்; (எ-று).

திரௌபதியின் தோழிமார்கள் அருச்சுனனின் உருவத்தைப் படத்திற் சித்திரித்து அவளுக்குக் காட்டினராக, அவள் அந்தப் படத்திலேயே அன்புநோக்கைச் செலுத்தி மனம் உருகினளென் பதாம். சோரும்-செய்யுமென்முற்றுப் பெண்பாலுக்கு வந்தது. (10)

11. திரௌபதியின் மனநிலை யிருந்தவா கூறுவது.

பாண்டவர்க் குரிய ளாகும்
பான்மையா லுவகை கூரும்
மீண்டடை குவரோ வெய்தா
திருப்பரோ வென்று சோரும்
மூண்டழ லென்னை யின்ற
முறைகொடு மருகர் தம்மை
மாண்டிடக் கொளுவு மோவென்
மாதவ மென்னை வென்னும்.

(இ-ள்) பாண்டவர்க்கு உரியளாகும் பான்மையால்-பாண்டவர்க்குத்தான் வரைதற்குரியளென்கின்ற தன்மையினால், உவகை கூரும்-மகிழ்ச்சிமிகப்பெறுவாள்: மீண்டு-மறுபடியும், அடைகுவரோ எய்தாது இருப்பரோ என்று சோரும்-இவ்விடம் வந்து சேருவரோ அல்லது வராமல் இருந்துவிடுவரோ என்று தளர்வாள்: மூண்டு-மேன்மேல் கிளர்ந்தெழுகின்ற, அழல்-அக்னியானது, என்னை என்ற முறை கொடு-என்னைப் பெற்றெடுத்த முறையை (மனத்திற்) கொண்டு, மருகர் தம்மை-மருமகனுகுபவர்களை, மாண்டிட-இறந்துபோகும்படி, கொளுவுமோ-எரிக்குமோ? (எரிக்காது: ஆகவே பாண்டவர்கள் அரக்கு மாளிகையில் பற்றிய நெருப்பில் மாண்டிருக்கமாட்டார்கள்): என் மா தவம் என்னை-யான் செய்த பெருந்தவம் எப்படித்தோ?, என்னும்-என்று வாய்வெருவுவாள்; (எ-று).

கூரும், சோரும், என்னும்-இவை, செய்யுமென்முற்றுக்கள் பெண்பாலுக்கு வந்தன. அடைகுவரோ எய்தாதிருப்பரோ-ஓகார விடைச்சொல் ஐயப்பொருளில் வந்தது. முறை-தொடர்பு. கொடு-கொண்டு என்பதன் தொகுத்தல். கொளுவுமோ-ஓகாரம் எதிர்மறை. என்னை-ஓகாரம் வினை. (11)

12. ''அருச்சுனனையன்றிப் பிறரை மணஞ்செய்யேன்'' என்று திரௌபதி துணிவுகொண்டு வருந்தியிருத்தல்.

தனஞ்செய னிடத்தி லெந்தை
தருமுன மெனக்கு நேர்ந்த
தனஞ்செய னெய்தி மன்ற
முன்புரிந் திலனேல் சிங்கா

தனஞ்செய னறகோன் மன்னர்
தமக்குத்தார் தரியேன் மாவ
தனஞ்செய னளினம் போல்வீர்
தழற்புகுந் திறப்ப லென்னும்.

(இ-ள்) தனம் - சீதனப்பொருளை, செயனிடத்தில் - [கன்யா சுல்கமாகவைத்த சுழல்சக்கரத்தின் இலக்கை எய்து வீழ்த்திய] வெற்றியோனிடத்தில், எந்தை - என் தந்தையாகிய துருபதன், தரும் முனம் - கொடுப்பதற்கு முன்னே, எனக்கு நேர்ந்த - எனக் கென நிர்ணயிக்கப்பட்ட, தனஞ்செயன் எய்தி - அருச்சுனன் வந்து, மன்றல் தான் புரிந்திலனேல் - விவாகத்தைத்தான் செய்து கொள்ளாமலிருந்தால், - சிங்காதனம் செயன் அற - (தாங்கள் அமரும்) சிம்மாசனம் வென்றிச்சிறப்பு இல்லாதபடி, கோல்-அரசாட்சி செய்யும், மன்னர்தமக்கு - அரசர்களுக்கு, தார் தரியேன் - மணமாலையைச் சூட்டமாட்டேன்: (அதற்கு மாறாக) மா வதனம் செய நளினம் போல்வீர்! - சிறந்த நெற்றி செந் தாமரை மலரைப்போல் விளங்கும் தோழியீர்! தழல் புகுந்து இறப்பல் என்னும்-(எந்த அக்னியினின்று தோன்றினேனே) அந்த அக்னியிலேயே வீழ்ந்து உயிர்துறப்பேன் என்பாள்; (எ-று).

தனம்-சீதனம் என்பதன் முதற்குறை, சீதனம்-மணமகள் கொண்டுவரும் சீர்வரிசை. செயன்-குறித்த இலக்கை வெற்றியுற எய்து அடித்து வீழ்த்துபவன். எந்தை-என் தந்தையென்பதன் மரூஉ. செயன் அற கோல்மன்னர்-தோல்வியுற்று [ப் பிறர்க்குக் கப்பங்கட்டி] ஆட்சி செய்யும் அரசர்கள். கோல்-அரசாட்சிக்கு இலக்கணை. செய-செய்ய: சிவந்த. என்னும்-செய்யுமென்முற்று. இச்செய்யுள் யமகம். 'தனம் செயனிடத்தில் எந்தை தரும்முனம், என்றது - பிறிதினவிற்சியணி. (12)

13—14. தோழியர் திரௌபதியைத் தேற்றி அவளை அலங்கரிக்கப் புகுதல்.

(இரண்டு கவிகள்–ஒரு தொடர்)

13. முருந்திள நகையிவ் வண்ண
மொழிந்திட ராழி யாழ்ந்து
வருந்திடு மமையத் தோதுஞ்
சோதிடம் வழுவா தென்றும்

புரந்திடுங் கடவு ளென்றும்
பொய்க்குமோ விரத மென்றும்
பொருந்தல ரறியா வேடம்
பூண்டடைந் திருப்ப ரென்றும்.

(இ-ள்). முருந்து-மயிலிறகினடிபோன்று மெல்லிய, இள நகை-புன்சிரிப்புடைய பற்களைக்கொண்ட திரௌபதி, இவண்ணம் மொழிந்து-இந்த வகையே வாய்விட்டுச் சொல்லி, இடர் ஆழி ஆழ்ந்து வருந்திடும் அமையத்து-துயரக் கடலில் மூழ்கி வருந்துகின்ற சமயத்தில்—, [தோழியர்], சோதிடம் வழுவாது என்றும்-சோதிடர்கள் [பாண்டவர்கள் அரக்குமாளிகையில் இறவாது உயிருடனுள்ளனர் என்று] சொன்ன சோதிட சாத்திரக் கொள்கை பிழைபடாது என்றும், கடவுள் புரந்திடும் என்றும்-தெய்வம் அவர்களைக் காப்பாற்றும் என்றும், விரதம் பொய்க்குமோ என்றும்-நீ மேற்கொண்டுள்ள சங்கற்பம் பொய்யாகித் தவறுமோ?(ஒருக்காலும் தவறாது) என்றும், பொருந்தலர்-பகையரசர்கள், அறியா-அறியாதபடி (கண்டுகொள்ளாதபடி), வேடம்பூண்டு-மாறுவேடந் தாங்கி, அடைந்திருப்பர் என்றும்-[சுயம்வரத்திற்கு] வந்திருப்பர் என்றும்; (எ-று). இஃது "உன் செங்கரம் பிடிப்பன் என்றும்" என மேலைக்கவியிற் குளகமாய் முடியும்.

நகை-பற்களுக்கு ஆகிவந்தது. இளநகை-திளெபதிக்கு-பண்புத்தொகையன்மொழி. இடராழி-உருவகம். அமயம்-அமையம்; இடைப்போலி, 'என்று' என்னும் எண்ணிடைச் சொல் அடுக்கி மேலைக் கவியில் வரும் "தேற்றி" என்ற வினையெச்சத்தோடு இயையும். அறியா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (13)

14. தலைவளைத் தரசர் நாணத்
தனஞ்செய னெய்தி யின்றே
சிலைவளைத் திலக்கு மெய்துன்
செங்கரம் பிடிப்ப னென்றும்
குலைவளைத் திலங்கு வாழைக்
குறங்கினு ராருத் துன்பத்
தலைவளைத் தேற்றி வேள்விக்
கரும்புன லாட்டி மீட்டும்.

(இ-ள்). தலை வளைத்து-தலையைக் குனிந்து, அரசர்-பிற அரசர்கள், நாண-வெட்கும்படி, தனஞ்செயன்-அருச்சுனன்,

எய்தி-[சுயம்வர மண்டபத்துக்கு] வந்து, இன்றே-இன்றைப் பொழுதே, சிலை வளைத்து-வில்லை வளையவைத்து, இலக்கு எய்து-சக்கரச் சுழலினிடையிலுள்ள இலட்சியக் குறியை அம்பெய்து வீழ்த்தி, உன் செங்கரம் பிடிப்பன் என்றும்-உன்னுடைய சிவந்த அழகிய கையைப் பிடிக்கப்போகிறான் [பாணிக்கிரகணஞ் செய்வான்] என்றும்,—

குலைவளைத்து-குலைகளைத் தள்ளித் தலைசாய்த்து, இலங்கு-விளங்குகின்ற, வாழை-வாழையினை யொத்த, குறங்கினர்-தொடையினையுடைய தோழியர்கள், ஆறுத்துன்பத்து அலைவளை-தணியாத வருத்தத்தால் அலைபவளாகிய திரௌபதியை, தேற்றி-தெளியவைத்து, (பிறகு) வேள்விக்கு-விவாகச் சடங்கிற்காக, அரும்புனல் ஆட்டி-பெறுதற்கரிய [புனித நதிகளின்] தீர்த்தத்தால் மங்கள ஸ்நானஞ் செய்வித்து, மீட்டும்-மேலும்; (எ-று). "சிறப்புக்கள் பலவுஞ் செய்தார்" என மேற்கவியில் குளகமாய்த் தொடரும்.

வாழையை மகளிர் குறங்கினுக்கு ஒப்புச் சொல்லுதலை "குறங்கென மால்வரையொழுகிய வாழை" (சிறுபாண்: வரி 20-21) என எதிர்நிலையுவமைபடக் கூறியவிடத்துத் தெற்றென உணரலாம். முதல் மூன்றடிகளில் "வளைத்து" என்ற ஒரே சொல் ஒரே பொருளில் பலமுறை வந்தது-சொற்பொருட்பின் வருநிலை. ஈற்றடியில் வந்துள்ள "அலைவளை" என்பது-குறிப்பு வினையாலணையும் பெயர். செங்கரம் பிடித்தல்-பாணிக்கிரகணஞ் செய்தல்: திருமணச் சடங்கில் முக்கியமானதொன்று; "கைத்தலம் பற்றக் கனைக்கண்டேன் தோழிநான்" (நாச். திரு. 6-6) என்பதும், "நீ என் மாமகள் நன்னெடு மன்னுதியென்னத், தாமரையன்ன தடக்கையினீந்தான்" என்பதும் (கம்ப: பால: கடி: 87) நினைக. (14)

15. தோழியர் திரௌபதிக்கு அலங்காரஞ் செய்தல்.

விலையிலை நிழைக்கே யிந்த மேதினி பெறுதென் றேதுங்
கலையினை நிலவச் சேர்த்திக் கலன்பல விசையப் பூட்டி
மலையசக் கலவை சாத்தி மணங்கமழ் தாமஞ் சூட்டிச்
சிலைமதற் கரசு நல்குஞ் சிறப்புகள் பலவுஞ் செய்தார்.

(இ-ள்) விலையின்-விலைமதிக்கப் புகின், ஓர் இழைக்கே-ஒரு நூலிழைக்கே, இந்த மேதினி பெறுது-இந்த நிலவுலகம் ஈடாகாது, என்று ஓதும் கலையினை-என்று சிறப்புற்றுச் சொல்லும் பட்டாடையினை, நிலவச் சேர்த்தி-அழகு மேலும் விளக்கம்

பெறும்படி (அவட்கு) உடுத்தி, (பின்பு) பல கலன் இசைய பூட்டி-பல ஆபரணங்களை (அவட்குத்) தகுதியாக அணிவித்து, மலையசக் கலவை சாத்தி-பொதியமலையிலிருந்து கொணர்ந்த சந்தனத்தை மட்டித்து, மணம் கமழ் தாமம் சூட்டி - மணம் வீசுகிற மலர் மாலையை (அவட்கு முடியிற்) சூட்டி, (இங்ஙனம்) சில மதற்கு அரசு நல்கும் சிறப்புகள் பலவும் செய்தார் – கரும்புவில்லியேந்திய மன்மதனது ஆட்சி ஓங்கும்படியான அலங்காரங்கள் பலவற்றையும் செய்தார்கள்; (எ-று).

"செய்தார்" என்ற வினைமுற்றுக்கு எழுவாய் முற்செய்யுளில் வந்துள்ள "வாழைக்குறங்கினர்" என்பது. மலையசம்=மலையஜம். மலையமலையில் தோன்றுவது. "சந்தனத்தடவரை" என்று பொதியமலையை வழங்குதல் காண்க. மன்மதன் – காமத்தை விளைவிக்கும் கடவுள்: அவனுக்குப் படை பெண்டிர்: ஆகலின் அவனதரசு ஓங்கும்படி திரௌபதிக்குச் சிறப்புகள் பலவுஞ் செய்தனர் தோழியர் என்றார். சேர்த்தி, பூட்டி, சாத்தி, சூட்டி என்ற வினையெச்சங்கள் அடுக்கி வந்து "செய்தார்" என்ற முற்றொடு முடிந்தன. (15)

16. திரௌபதி தோழியர் அழைத்துவரச் சுயம்வரமண்டபம் புகுதல்.

தாதலைந் தளிகடுஞ்சுந் தார்குழற் கொவ்வைச் செவ்வாய்
சூதிள முலையாள் வேந்தன் சொற்படி யாய வெள்ளம்
மீதுவெண் குடைக விப்ப விளங்குசா மரையி ரட்ட
போதின்மே னடந்து வேள்வி புரிதருஞ் சாலை புக்காள்.

(இ-ள்) தாது அலைந்து - மகரந்தத்துகள்களிற் படிந்து, அளிகள்–வண்டுகள், துஞ்சும்-துயில்கின்ற, தார்-பூமாலை சூட்டியுள்ள, குழல்- கூந்தலினையும், கொவ்வை செவ்வாய் - கோவைக் கனி போன்ற சிவந்த வாயினையும், சூது இள முலையாள்-சூதாடு கருவியையொத்து இளையவான கொங்கைகளையும் உடைய திரௌபதி, வேந்தன் சொற்படி - அரசனுகிய தந்தை துருபதன் சொல்லியபடியே, ஆய வெள்ளம் - (தனது) தோழியர் கூட்டம், மீது-தன் சிரசின்மீது, வெண்குடை கவிப்ப-வெள்ளிய குடையைப் பிடித்துவர, விளங்கு சாமரை இரட்ட-விளங்குகின்ற சாமரைகள் மாறிமாறி வீசப்பட, போதின்மேல் நடந்து - (பரப்பப்பட்ட) பூக்களின் மேலே (தனது மென்மையான கால்களைவைத்து) நடந்து, வேள்வி புரிதரும் சாலை புக்காள் - விவாகச் சடங்கு நிகழ்விருக்கும் [சுயம்வர] மண்டபச்சாலைக்குள் புகுந்தாள்; (எ-று).

சூதாடுகருவி முலைக்கு ஒப்பு. கவிப்ப, இரட்ட என்ற வினையெச்சங்கள் 'நடந்து' என்ற வினையெச்சத்தோடு தொடர்ந்து 'புக்காள்' என்ற முற்றைக் கொண்டு முடிந்தன. செவ்வாய்-பண்புத்தொகை. கொவ்வை-அதன் கனிக்கு ஆகுபெயர். (16)

17. திரௌபதியைக் கண்ட அரசர்கள் உள்ளம் வெதும்பியுருகுதல்.

பூட்டுவில் அரசர் யாரும் பொருமதன் விடுமம் பாலே
மூட்டழ லென்ன வுள்ள மூண்டனர் மீட்டு நெய்யுங்
காட்டமுஞ் சொரிவ போலுங் கவின்பெறு வடிவங் காட்டித்
தோட்டலர் வேய்ந்த வோதித் துரோபதி தோன்றி னாளே.

(இ-ள்) வில் பூட்டு அரசர் யாரும் - வில்லை நாணேற்றிய அரசர்கள் அனைவரும், பொரு மதன் விடும் அம்பாலே - காமப் போர் செய்கின்ற மன்மதன் விடுகின்ற பூவம்புகளாலே, மூட்டு அழல் என்ன-பற்றப்பட்ட நெருப்புப்போல, உள்ளம் மூண்டனர்-மனம் எரியுற்றனர்: [இங்ஙனுக] மீட்டும் - மேலும், நெய்யும் காட்டமும் சொரிவ போலும் - நெய்யையும் விறகையும் அந்த (மன) எரியில் இடுவதுபோல, தோடு அலர் வேய்ந்த ஓதி துரோபதி-இதழ்களோடு கூடிய மலர்களைச்சூடிய கூந்தலையுடைய திரௌபதி, கவின் பெறு வடிவம் காட்டி - அழகு பெற்ற தன் உருவத்தைக்காட்டியபடியே, தோன்றினாள் - [அந்தச் சுயம்வர மண்டபத்தில்] வந்து சேர்ந்தாள்; (எ-று),

மன்மதன் காமம் விளைக்க அதனால் வருந்தினர் அரசர் என்பது முதலடியின் கருத்து, திரௌபதியின் தோற்றம் அந்தக் காமத்தீயினை மேலும் மூண்டழலச்செய்தது என்றபடி. காட்டம்= காஷ்டம்: விறகு. துரோபதி-திரௌபதியென்பதன் சிதைவு. (17)

18. அப்போது திருஷ்டத்யும்நன் ''இலக்கைத் (தவருது) எய்து வீழ்த்தியவற்குத் திரௌபதி உரியள்'' எனல்.

மண்டலம் புகழிச் சாபம்
வாங்கியிவ் வைக்கோற் கொண்டிவ்
விண்டலத் துழலி லக்கும்
வீழ்த்திட வல்ல பேர்க்கே

மண்டமற் பிறந்த பாவை
மாலையு மிடுவ லென்று
திண்டிற லரசர் கேட்பச்
செப்பினன் திட்டத் துய்மன்.

(இ-ள்). மண்தலம் புகழ் இ சாபம் வாங்கி-பூவுலகத்தோர் புகழும்படியாகவுள்ள இந்த வில்லினை வளைத்து, இ வை கோல் கொண்டு-இந்தக் கூரிய அம்புகளைக்கொண்டு, விண்தலத்து உழல் இ இலக்கும்-மேலிடத்துச் (சக்கர யந்திரத்தினிடையில்) சுழலுகின்ற இந்த குறியையும், வீழ்த்திட வல்ல பேர்க்கு-கீழே அறுந்து விழும்படி எய்யவல்ல அவருக்கு, மண்டு அழல் பிறந்த பாவை-மூண்டெரிகின்ற நெருப்பினின்று தோன்றிய பெண்ணகிய இந்தத் திரௌபதி, மாலையும் இடுவள்-மண மாலையையும் சூட்டுவள், என்று—, திண் திறல் அரசர் கேட்ப-மிக்க வலிமையையுடைய அரசர்கள் [செவிகொடுத்துக்] கேட்கும்படி, திட்டத் துய்மன்-திருஷ்டத்யும்நன், செப்பினன்-சொல்லினன்; (எ-று.)

விண்தலம்-மேலிடம்: மேலிடத்து வேகமாகச் சுற்றுகின்ற சக்கரவடிவமான யந்திரத்தினது நடுவிலே நிலையில்லாது அசைந்து கொண்டேயிருக்கிற இலக்கினை எவர் அம்பெய்து வீழ்த்துகின்றாரோ அவருக்கு உரியள் திரௌபதி என்றான் திருஷ்டத்யும்நன் என்பது அறியவேண்டுவது. திருஷ்டத்யும்நன் என்ற பெயர்-காம்பீர்யமும் பாதுகாத்தல் தொழில் வன்மையும் முடையனாய் ஆற்றல் முதலியவற்றோடு சிறப்பாகப் பிறந்தவனென்னுங் காரணம் பற்றியதென்று வியாச பாரதம் கூறுகின்றது. ''வையேகூர்மை'' என்பது தொல்காப்பியம் (உரியியல் சூ : 91) இலக்கும் என்ற இடத்து உம்மை முன்னர்க்கூறிய சாபம் வாங்குதல், வைக்கோற்கொள்ளுதல் இவ்விரண்டினையும் தழுவுவதென்க. மாலையும் இடுவள்–உம்மை 'கரம் பிடித்தலேயன்றி' என்பதையுட்கொண்டதென்க. திண்திறல் - ஒருபொருட்பன்மொழி. மண் + தலம் = மண்டலம், விண் + தலம் = விண்டலம்; திண் + திறல் = திண்டிறல்;—இம்மூன்றிடத்தும் ''ளளமுன்டணவும் ஆகும் தநக்களாயுங்காலே'' என்பது விதி. (18)

வேறு

19. அதுகேட்டு அரசர்கள் கலங்கினும் ஆசையருது தனுவளைக்கக்கருத, அப்போது தோழியர் திரௌபதிக்கு அந்த

அரசர்களே இன்னரின்னரென்று கூறத்தொடங்கல்.

தழற்க ணுதித்தா னியம்புமொழி
தனைக்கேட் டிதயந் தடுமாறி
எழிற்கொ ளணங்கைக் கைப்பிடிக்கு
மிச்சை யதனற் றனுவளைப்பான்
கழற்கா லணிந்தக் காவலர்கள்
கருது மமையத் திகுளையர்வண்
குழற்கா ரோதிக் கவரவர்கள்
உரன்பேர் புகழு முரைக்கின்றூர்.

(இ-ள்) தழற்கண் உதித்தான்-அக்கினியினின்று தோன்றிய திட்டத்துய்மன், இயம்பு மொழிதனைக் கேட்டு-சொன்ன வார்த்தைகளைக்கேட்டு, இதயம் தடுமாறி-மனங்கலக்கமுற்று, (இருப்பினும்) எழில்கொள் அணங்கை-அழகு பொருந்திய திரௌபதியை, கைபிடிக்கும் இச்சை யதனல்-திருமணஞ் செய்து கொள்ளும் ஆசையினல், கழல்கால் அணிந்த அ காவலர்கள்-வீரக் கழலிட்ட காலிற்கட்டியுள்ள அந்த அரசர்கள், தனு வளைப்பான் கருதும் அமையத்து-வில்லை வளைத்து நாணேற்றும்படி நினைக் கின்ற சமயத்தில், இகுளையர்-தோழியர்கள் (வந்து), வண்குழல் கார் ஓதிக்கு-அடர்ந்த கரிய கூந்தற்றொகுதியையுடைய திரௌ பதிக்கு, அவரவர்கள்-அந்தந்த அரசர்களுடைய, உரன் பேர் புகழும்-வலிமையும் பேரும் பெருமையும் [தெரியும்படி], உரைக் கின்றூர்-கூறலாயினர்கள்; (எ-று).

'ஆசை வெட்கமறியாது' என்றவாறு அரிய குறியை எய்யத் தமக்கு இயலாதாயின் மானக்கேடு நேருமேயென்பதைச் சிறிதும் ஆலோசியாமலே திரௌபதியினிடங்கொண்ட காதல்மிகுதியால் அரசர்களெல்லாரும் அந்த இலக்கை எய்ய முயலுங் கருத்தின ராயினரென்பதாம். பாரதங்களில் திருஷ்டத்யும்நன் திரௌ பதிக்கு ஆங்கு வந்திருந்த மன்னரைக் காட்டினனென்று காண் கின்றது. அதற்குமாறாக இவ்வாசிரியர் 'இகுளையர்' என்றூர்: வில்லியாரோ செவிலித்தாயர் என்று குறித்தார். உரனும்புகழும் கூறுவது - "பெருமையும் உரனும் ஆடூஉமேன" என்ற விதிபற்றி. (தொல். களவி. 7) பேர் – பெயர், நாமம். உதித்தான் - வினை யாலணையும் பெயர். கைப்பிடித்தல்-பாணிக்கிரகணம்: திருமணஞ் செய்தற்கு இலக்கணை. வளைப்பான் - பான்ஈற்று வினையெச்சம்.

ஓதி-ஆகுபெயர். உரன் பேர் புகழ்-உம்மைத்தொகை. அணிந்தக் காவலர்கள்-நிலமொழியின் அகரவீறு தொகுத்தல்.

இது முதல் நான்கு கவிகள்-பெரும்பாலும் மூன்று ஆருஞ்சீர்கள் காய்ச்சீர்களும் மற்றையவை மாச்சீர்களுமாகிய **அறுசீராசிரிய விருத்தம்.** (19)

20—22. வந்திருந்த பல அரசர்களைக் குறித்துக்காட்டி, "இவர்களுள் இலக்கு எய்பவன் உனக்கு உரியான்" என்று தோழியர் கூறுதலைத் தெரிவிக்கும்.

(மூன்று கவிகள்—ஒரு தொடர்)

20. சலத்துக் கிவனே குருகுலத்துத்
தலைவன் துரியோ தனனிவர்கள்
குலத்துக் குரிய விளைஞரிவன்
கொடுஞ்சூ திழைக்குஞ் சவுபலன்பூ
தலத்துக் கிவனே தியாகியெனுந்
தகைமை சான்ற கன்னனிவன்
நலத்துக் குவந்த விராமனிவ
னவன்பின் வருமச் சுதனணங்கே.

(இ-ள்.) அணங்கே-பெண்ணே! சலத்துக்கு இவனே-கோபத்திற்கு எடுத்த மன்னன் இவனே: (இவன் யாரெனில்) குருகுலத்துத் தலைவன் துரியோதனன்-குரு வமிசத்துத் தலைவனுகிய முதற் பிள்ளை துரியோதனன்: இவர்கள்—இதோ இருப்பவர்கள், குலத்துக்குரிய இளைஞர்-குருகுலத்தைச் சேர்ந்த துரியோதனன் தம்பியர்: இவன்-இதோ இருப்பவன், கொடும் சூது இழைக்கும் சவுபலன்-கொடிய சூதாட்டத்தினையாடும் சகுனி: [கொடிய வஞ்சனை புரியும் சகுனி என்றுமாம்]: பூதலத்துக்கு-இந்நில வுலகத்திலே, இவனே தியாகி எனும் தகைமை சான்ற கன்னன்-இவன்தான் தியாகஞ்செய்தலில் தலை சிறந்தவன் என்று கூறும் பெருமையில் ஓங்கிய கர்ணனுவன்: இவன்-இதோ இருப்பவன், நலத்துக்கு வந்த இராமன்-(மகளிரைத்) தழுவும் இன்பத்திற்கென இட்டுப்பிறந்த பலராமன்: இவன்-இதோ இருக்கின்றவன், அவன் பின் வரும் அச்சுதன்-அந்தப் பலராமனுக்குப் பின் பிறந்த தம்பியாகிய கண்ணனுவான்; (எ-று).

சலம்=கோபம்: சலம் என்ற வடசொல்லின் திரிபு. சூது-சூதாட்டம்: வஞ்சனை. சகுனி இரண்டிலும் வல்லவன்; சவுபலன்-சுபலனென்னும் அரசனது மகன் சகுனி: தத்திதாந்தநாமம். தக்கோராடாச் சூதாதலின் "கொடுஞ்சூது" எனப்பட்டது. நலம்-பெண்மைநலம் துய்க்கும் இன்பம்: வில்லியாரும் பலராமனைப் பற்றிக் குறிக்கும்போது "களபக் கொங்கையர் மெய்ந்நலத்தான் மகிழுஞ் சிந்தையினன்" என்றார். பலராமன்—கண்ணனுக்குத் தமையன்: திருமாலின் எட்டாம் அவதாரம். வசுதேவனுடைய பத்தினியருள் தேவகியின் கருப்பத்தில் ஆறுமாசமும், ரோகிணியின் கருப்பத்தில் ஆறுமாசமும் இருந்து பிறந்தவன்: அச்சுதன்-தன்னை யண்டினவரை நழுவவிடாதவன் என்ற பொருளது: கண்ணபிரானைக் காட்டிவந்தது: [அநந்யாஶ் சிந்தயந்தோமாம்". 'சர்வதர்மான்பரித்யஜ்ய", முதலிய கீதா சுலோகங்களை நினைக. அருச்சுனனும் கீதையினிறுதியில் "நஷ்டோமோகஸ்ம்ருதிர்லப்தா, த்வத்ப்ரசாதாந் மயச்யுதா" எனக் குறிக்கின்றனன்,] (20)

21. திருமாற் குகந்த விளவலிவன்
றிறல்சாத் தகிமற் றிவன்சேதிப்
பெருமா னிவனே துளவோனைப்
பின்கண் டிசைகொள் சராசந்தன்
பொருமால் களிநன் ஞற்கோட்டுப்
புகர்மா நிகர்மா மதமாமேல்
வருவோ னிவனே பகதத்தன்
வயமத் திரன்மற் றிவனம்மா.

(இ-ள்) திருமாற்கு உகந்த இளவல் இவன்-இதோ இருப்பவன் கண்ணபிரானுக்குப் பிடித்தமான தம்பியாவன்: திறல் சாத்தகி-(இவன் பெயர்) வலிமைமிக்க சாத்தகி யென்பது; இவன்-இதோ இருப்பவன், சேதிப்பெருமான்-சேதிநாட்டரசன் சிசுபாலன்: இவனே-இதோ இருக்கும் இவன்தான், துளவோனைப் பின்கண்டு இசைகொள் சராசந்தன்-கண்ணபிரானைப் புறங் காட்டி யோடச்செய்து புகழ்கொண்ட சராசந்தன்: இவனே-இதோ இருப்பவன், பொரு மால் களி நல் நாற்கோட்டு புகர்மா-போர்செய்யுந்தன்மையுள்ள பெரிய மதக்களிப்புக் கொண்ட அழகிய நான்கு தந்தங்களையுடையதாய்ப் புள்ளிகளைக் கொண்டுள்ள ஐராவதத்தை, நிகர்-ஒத்திருக்கின்ற, மா மத மாமேல்-பெரிய மத

யானைமேல், வருவோன்-ஏறிவருபவனுகிய, பகதத்தன்-பகதத்தன் என்னும் மன்னன்: இவன்-இதோ இருப்பவன், வய-வெற்றி யையுடைய, மத்திரன்-மத்திர நாட்டரசன் சல்லியன் என்பவன்; (எ.று). அம்மா-ஈற்றசை.

திருமால்-ஒன்பதாம் அவதாரம் கண்ணபிரானுகச் செய்தவன். அவன் தம்பி சாத்தகி. சாத்தகி-ஸாத்யகி: சத்தியகனது புத்திரன். யதுகுலத்தரசர்களுள் வசுதேவனுக்கு உடன்பிறந்த முறையாகிறவனும் சினி யென்பானது மகனுமான சத்தியகனது குமாரனை சாத்தகி, பிராயத்திற் கண்ணனினும் இளையவனுதலால், கண்ணனுக்குத் தம்பிமுறையாவன்.

சேதிப்பெருமான்-சேதி தேசத்து அரசன் சிசுபாலன். சிசுபாலன்—வசுதேவனது உடன் பிறந்தவனும், சேதிதேசத்து அரசனுகிய தமகோஷனுக்குப் பத்தினியுமாகிய சுருதசிரவை யென்பவளுடைய மகன்.

சராசந்தன்:—இவன் மகத தேசத்து அரசனை பிருகத்ரதனென்பவனுடைய மைந்தன். தனது பெண்கள் இருவரைக் கம்சனுக்கு மணஞ்செய்வித்திருந்தான், பின்பு கண்ணபிரான் கம்சனைக் கொன்றது காரணமாகச் சராசந்தன் வெகுகோபங் கொண்டு கிருஷ்ணனை வமிசத்தோடு அழிக்க வேண்டுமென்று பெருஞ்சேனையோடு எதிர்த்துக் கண்ணனது மதுராபுரியை வளைத்தான். அதேசமயத்தில் யவன தேசாதிபதியான காலயவனன் என்ற அரசனும் மதுரையைத் தாக்கவந்தான். அப்பொழுது கண்ணன் ஏககாலத்து இருதிறத்தாரோடு பெரும் போர் செய்தால் யாதவசேனைக்கு நாச முண்டாகக் கூடுமென்று நினைத்துச் சமுத்திரராசனைப் பன்னிரண்டு யோசனை தூரம் இடம் விடும்படி கேட்டு மேல்கடலிடையே பகைவர் உட்புக வொண்ணுதபடி மிகவும் பாதுகாவலுடையதான துவாரகா நகரத்தை நிருமித்து மதுரையிலிருந்த சனங்களை யெல்லாம் அந் நகரத்திற்கொண்டு சேர்த்துத் தானும் அங்கேயே துவாரகையில் தங்கியிருந்தனன். கண்ணன் இங்ஙன் செய்தது, சராசந்தனுக் குப்பயந்து பங்கப்பட்டதாகவே முடிதலால், அவனுக்கு அஞ்சிக் கண்ணன் மதுரையை விட்டுத் துவாரகைக்கு ஓடினனென்று ஓரபவாதம் பரவியது. அதனைக்கொண்டே இங்கு "துள வோனைப் பின்கண்டு இசைகொள் சராசந்தன்" என்றது. பின்—பின்புறமுள்ள முதுகுக்கு ஆகுபெயர்.

பகதத்தன்:—நரகாசுரனது மகன்: கண்ணன் நரகாசுரனைக் கொன்றபின் அப்பெருமானால் அவனது பிராக்சோதிஷபுரம் என்னும் பட்டணத்தில் இராச்சிய பட்டாபிஷேகஞ் செய்யப் பட்டவன்: ஒருகாலத்தில் தேவாசுர யுத்தத்தில் தோல்வி யடைந்த தேவேந்திரன், இவனைத் துணைவேண்ட, இவன் சென்று பொருது அசுரரை யொழித்து இந்திரனுக்கு அரசாட்சி யை நிலைநிறுத்தினன். அக்காலத்தில் நூறுயிரம் யானை பல முடைய சுப்பிரதீகம் என்னும் தெய்வ யானை இந்திரனால் இவ னுக்கு அளிக்கப்பட்ட தென்றும், அதனைப் பதினாயிரம் யானையை யொத்த பலவானாகிய இவன் பட்டத்து யானையாகக்கொண்டு அதன்மேல் ஏறிப்பொருது தவறாது பகைவென்று வந்தனனென் றும் அறிக. இவன் யானைப்போரில் வல்லவன்.

'நன்னுற் கோட்டுப் புகர்மா' என்றது ஐராவதத்தை: இது இந்திரனது பட்டத்து யானை: வெண்ணிறத்தையும் நான்கு தந் தங்களையும் உடையது. எட்டுத்திசை யானைகளுள் கீழ்த்திசைக்கு உரியதும் இதுவே.

மத்திரன்–மத்திர நாட்டரசன் சல்லியன்: (பகைவர்க்கு அம்பு நுனிபோல் (வருத்தஞ்செய்) பவன்: சல்யம்:அம்புமுனை பாண்டு மகாராசனது இரண்டாவது மனைவியாகிய மாத்திரிக்கு உடன்பிறந்தவன். வய-உரிச்சொல், (21)

22, போருக் கரியே றிவனீலன்
பொருதைத் துறைவ னிவனுத்தித்
தாருக் குரியோ னிவன்கூடற்
றலத்துக் கதிபன் றுனிவரிப்
பாருக் கதிபர் நின்பொருட்டாற்
பலரும் திரண்டா ரிலக்கெய்யும்
பேருக் கலங்கல் வேய்ந்திடுதி
பெருங்கற் பதனுக் கருந்ததியே!

(இ-ள்.) இவன்-இதோ இருப்பவன், போருக்கு அரியேறு நீலன்-போர்செய்தலில் சிங்கம் போன்ற நீலன் என்னும் அரசன்; இவன்-இதோ இருப்பவன், பொருதைத் துறைவன்-சேரன்: இவன்-இவனே, ஆத்தித்தாருக்கு உரியோன்–ஆத்திப்பூமாலை யைத் தனக்கு அடையாளமாலையாகக் கொண்டுள்ள சோழன்

ஆவன்: இவன்-இதோ இருப்பவன், கூடல் தலத்துக்கு அதிபன் தான்-தென் மதுரை நகருக்கு அரசனுகிய பாண்டியனே: இவர்-இதோ இருப்பவர்கள் (எல்லாம்), இ பாருக்கு அதிபர்-இந்தப் பூமியிலுள்ள பல தேசங்களுக்கும் அரசர்களாவர்: பலரும் நின் பொருட்டால் திரண்டார்-[இங்ஙனம்] பலதேசத்து அரசர்களும் உன்னைத் திருமணஞ் செய்து கொள்வதற்காகக் குழுமியுள்ளனர்: (ஆகவே) பெருங் கற்பு அதனுக்கு அருந்ததியே! - பெருமை பொருந்திய கற்பினுக்கு எடுத்துக்காட்டாகும் அருந்ததிபோன்ற திரௌபதியே ! இலக்கு எய்யும் பேருக்கு-நிர்ணயித்த குறியை அம்பால் எய்துவிழ்த்தும் மன்னருக்கு, அலங்கல் வேய்ந்திடுதி-மணமாலையைச் சூட்டுவாயாக! (எ.று) [என்று தோழியர் கூறினர் என வருவித்து முடிக்க.]

நீலன்-பிரசித்தரான அரசர்களுள் ஒருவனுக முதனூலிலும் குறிக்கப்பட்டுள்ளான்: இவனை மாஹிஷ்மதீ நாதனென்று பாலபாரதம் கூறுகிறது. அந்தப் பாலபாரதத்தில் தமிழ் மன்னரைக் கூறவில்லை பொருநை-ஆன்பொருநைநதி: அதற்குரியவன் சேரன்: சோழர்க்கு ஆத்திப் பூமாலையுரியது. கூடல்-நான்மாடக்கூடல்: மதுரை, வேய்ந்திடுதி-முன்னிலையேவல். கற்பினுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு அருந்ததி: ஏனெனில், நட்சத்திர நிலையிலும் தனது கணவராகிய வசிட்டரைப் பிரியாதிருத்தலின் என்பர். அரியேறு-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. (22)

வேறு

23. சில அரசர்கள் சோர்வுறச் சில அரசர்கள் ஊக்கங்கொண்டு எழுதல்.

வாசமிகு மலர்க்குழலாட் கிகுளை மார்கள்
வகுத்திடும்போ தகங்கலங்கி மன்னர் தம்முள்
ஆசனத்தில் சிலரிருந்தார் சிலர்வி லின்மாண்
பதனெடிலக் கருமையுமெண் ணும லாண்மை
பேசியெழுந் தனர்சிலர்பார்த் தயலே நின்றூர்
பெயர்க்கமுடி யாதுசில பேர்தோ ணைந்தார்
ஏசிசிலர் இருகையா லெடுத்து நாரி
யேற்றமுடி யாதமையு மென்றே விட்டார்.

(இ-ள்) வாசம் மிகு மலர்க் குழலாட்கு-வாசனை மிகுந்த மலர்களைச் சூடிய கூந்தலையுடைய திரௌபதிக்கு, இகுளைமார்கள்-

தோழியர்கள், வகுத்திடும்போது-அந்தந்த அரசர்களைப்பற்றி வகைப்படுத்திச்சொல்லி வந்தபோது, மன்னர் தம்முள்-அரசர்கள் தங்களுக்குள்ளே, அகம் கலங்கி-மனம் குழப்பமுற்று, (அதனால்) சிலர்-சில அரசர்கள், ஆசனத்தில் இருந்தார்-தாங்கள் உட்கார்ந் திருந்த பீடங்களிலேயே எழுந்திராதிருந்தனர்: சிலர்-சில அரசர் கள், வில்லின் மாண்பதனைடு இலக்கு அருமையும் எண்ணுமல்-வில் லின் பெருமையோடு அக்குறியையெய்தலில் அருமையையும் ஆலோசியாமல், ஆண்மை பேசி எழுந்தனர்-வீரவார்த்தை சொல் லிக்கொண்டு எழுந்தனர்: சிலர்-சில அரசர்கள், பார்த்து-வில்லை யும் இலக்கையும் பார்த்து, அயலே நின்றார்—[அவற்றிற்குப்] புறத்தே நின்றனர்: சிலபேர்-சில அரசர்கள், பெயர்க்க முடியாது-வில்லை யசைக்கவும் முடியாமல், தோள் நொந்தார்-தோள் வலி யெடுத்து வருந்தினர்: சிலர்-சில அரசர்கள், ஏசி-ஏளனஞ்செய்து, இருகையால் எடுத்து-இரண்டு கைகளாலும் வில்லைத் தூக்கி யெடுத்து, நாரி ஏற்ற முடியாது-வில்லின் நாணியைப் பூட்ட முடியாமல், அமையும் என்றே-இது போதும் [எங்கட்கு] என்று சொல்லிக்கொண்டே, விட்டார்-(அம்முயற்சியைக்) கைவிட்டார் கள்: (எ.று).

ஆசனத்தில் சிலர் இருந்தார், சிலர் ஆண்மை பேசி யெழுந் தனர், சிலர் கிட்டேசென்று பார்த்து அயலே நின்றனர், சிலர் பெயர்க்க முயன்று முடியாது தோள் நொந்தனர்; சிலர் ஏசி எடுத்து நாரியேற்ற முடியாது கைவிட்டனர்—என ஒன்றன் மேலொன்று உயர்த்திச் சொல்லிக்கொண்டே செல்கின்றனராத லின், இஃது மேன்மேலுயர்ச்சியணியின்பாற்படும். வில்லின்-வில் லின் என்பதன் இடைக்குறை:

இது முதற்பதினொன்று கவிகள்—பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆறுஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றைய நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட எண்சீராசிரிய விருத்தங்கள். (23)

24. கண்ணன் பலராமனைடு சொல்லித் தன் குலத்தாரைத் தடுத்தலும், சல்லியன் விற்றிறம் காட்டமுயன்று தரையில் வீழ்தலும் கூறும்.

மூரிசிலை யெடுத்துவளைத் தணிநா ணேற்ற
முயன்றிடுதங் குலத்தினரை முகில்போன் மேனி
வாரிசநா பன்றடுத்துக் குந்தி மைந்தர்
மறையவர்போ லுருமாறி வந்து மேவுங்

காரியந்தேர்ந் தலாயுதனே டருளிச் செய்தான்
கனைகழற்காற் சல்லியன்றன் கரத்தால் வில்லை
வாரியெடுத் தெதிர்நிறுவி நாணி யேற்ற
மாட்டாதத் தனுவினெடு மண்மேல் வீழ்ந்தான்.

(இ-ள்) மூரிசிலை எடுத்துவளைத்து-வலிய வில்லைத் தூக்கியெடுத்து வளையவைத்து, அணி நாண் ஏற்ற-அழகிய நாணிக் கயிற்றைமாட்ட, முயன்றிடும் தம் குலத்தினோரை-முயற்சி செய்கின்ற தனது யதுகுலத்து மன்னர்களை, முகில்போல் மேனி வாரிச நாபன் தடுத்து-மேகநிறவுடலுடைய பத்மநாபன் தடுத்துநிறுத்தி, குந்தி மைந்தர்-பாண்டவர்கள், மறையவர்போல்-பிராமணர்களைப் போல, உருமாறி-வேடம்தாங்கி, வந்து—,மேவும் காரியம் தேர்ந்து-செய்யப்போகும் செயலையறிந்து, அலாயுதனோடு-பலராமனோடு, அருளிச்செய்தான்—[அவர் செய்யப்போகும் செயலை] சொல்லினான்; [இஃது இங்ஙனமை] கனை கழல் கால் சல்லியன்-சப்திக்கின்ற வீரக்கழலையணிந்த கால்களையுடைய சல்லியராசன், தன் கரத்தால்-தன் (வலிய) கைகளினால், வில்லை வாரி எடுத்து எதிர் நிறுவி நாணி ஏற்றமாட்டாது-வில்லைச்சேர்த்துப்பிடித்தெடுத்துத் தனக்கு எதிராக நிறுத்தி நாண்கயிற்றைமாட்ட முடியாது போக, அ தனுவினெடு-அந்த வில்லோடு (தன் உடம்புஞ்சேர) மண்மேல் வீழ்ந்தான்-தரையின்மேல் வீழ்ந்திட்டான்; (எ-று)

வாரிசம்-தாமரை, பதுமம். நாபன்-நாபியையுடையவன். அலாயுதன்=ஹலாயுதன்: கலப்பையை ஆயுதமாகவுடையவன். சல்லியன் தன் வலிமையைக்கொண்டு இரண்டு கைகளாலும் அவ்வில்லைத் தழுவியெடுத்து எதிர் நிறுத்தியிட்டனனெனினும் அதன்பின் ஒரு கையில் விற்பிடித்து மற்றொரு கையால் நாணியை எடுத்து ஏற்ற இயலாமல் அதற்குரிய முயற்சி செய்தவளவிலே வில்லோடு வீழ்தலால், தன் உடம்பு தரையிற்பட சாய்ந்திட்டான் என்பதாம்.

'அத்தனு' என்றவிடத்து, 'தனு' என்ற சொல் வில்லைக் காட்டுவதோடு உடம்பையும் குறிப்பாற்காட்டிப் பொருள் படும்படியமைத்த திறம் பாராட்டத்தக்கது. தனு-வில் என்ற பொருளில் தநுஸ் என்ற வடசொல்லின் விகாரம். [உடம்பைக் குறிக்கும்போது தநு என்ற வடசொல்லின் விகாரமுமாம்.] (24)

25. பின்னும் பகதத்தன் முதலாய அரசர்கள் விற்றிறங்காட்ட முயன்று மாட்டாதொழிதலைக் கூறும்.

வார்பெறுசா பத்தைபக தத்த னேந்தி
மாட்டிடநாண் மாட்டாமல் வாகு சோர்ந்தான்
தார்பெறுமா கதனுண்மார் பளவும் போக்கித்
தளர்ந்தான்பின் சாண்கொணர்ந்தான் சமர்வே னீலப்
பேர்பெறுவேந் தரவுயர்த்தோன் விரனான் கெல்லைப்
பிணித்தனனுண் பொன்மாரி பெய்யுங் கையான்
சிர்பெறுநாண் மயிர்க்கிடைக்கீழ் நின்ற தென்னச்
சிலைவாங்கி முடியதன்காற் சிதற வீழ்ந்தான்.

(இ-ள்) வார் பெறு சாபத்தை-வரிந்து கட்டப்பட்ட வில்லை, பகதத்தன் ஏந்தி-பகதத்தன் கையிற் பிடித்தெடுத்து, நாண் மாட்டிட மாட்டாமல்-நாண்கயிற்றை வில்லின் முனையில் மாட்ட முடியாமல், வாகு சோர்ந்தான்-தோள் வலிமையிழந்து தளர்ந்து (அவ்வளவில்) விட்டிட்டான்: தார் பெறு மாகதன்-மார்பில் மாலையைத்தரித்த மகதநாட்டரசனாகிய சராசந்தன், நாண் மார்பளவும் போக்கி-நீண்ட நாணியை[ப் பூட்டுங்கோடியின்] ஒரு மார்புதூரம் வரையிலும் கொண்டுபோய், தளர்ந்தான்-[அதற்குமேல் இயலாதவனாய்த்] தளர்ச்சியடைந்தான்: பின்-(அவனுக்குப் பின்னர்), சமர் வேல்-போரிடவல்ல வேலைஏந்திய, நீலப் பேர்பெறு வேந்து-நீலன் என்ற புகழ்பெற்ற அரசன், சாண் கொணர்ந்தான்-(அவ்விற்கோடி) ஒருசாண் தூரத்திலுள்ளதென்ற அளவும் கொணர்ந்தான்: (அதற்குமேல் இயலாதவனானன்); அரவு உயர்த்தோன்-துரியோதனன், விரல் நான்கு எல்லை நாணி பிணித்தனன்-நான்கு விரல் தூரமேயுள்ளது என்று சொல்லு மளவும் நாணியைக் கொண்டுபோய் மாட்ட முயன்றான்: [அதற்குமேல் இயலாதவனானன்.]: (பின்பு) பொன் மாரி பெய்யும் கையான்-கனகமழைபொழியும் வள்ளன்மையுடைய கைகளைக் கொண்ட கர்ணன், சிர் பெறு நாண்-சிறப்புப்பொருந்திய நாண் கயிறு, மயிர்க்கிடைக்கீழ் நின்றது என்ன-ஒரு மயிரினளவு தூரத் தின்கீழ் நின்றதென்று சொல்ல (அது வரையிலும்), சிலைவாங்கி-வில்லை வளைத்து, அதன் கால்-அதனுடைய முனையானது, முடி சிதற-தன் கிரீடத்தைத் தாக்கிச்சிந்த, வீழ்ந்தான்-தரையில் வீழ்ந்திட்டான்; (எ-று).

பகதத்தன் ஒருகையால் வில்லையெடுத்து நிறுத்தி மற்றொரு கையால் நாணியையும் எடுத்து மாட்ட முடியாமல் தோள்சோர்ந்

தான். மாகதன் - சராசந்தன்: அவன் நாடு மகதம்: கர்ணன் அவ்வில்லை எளிதில் எடுத்து வளைத்து நாணேற்றி விரைவாக அம்பைத் தொடுத்து எய்யச் சித்தனவளவில் திரௌபதி உரத்த குரலோடு "நான் பாகன்மகனை விவாகஞ்செய்துகொள் ளேன்" என்று மறுத்துக்கூறவே, அவன் உடனே வருத்தத் தோடு வில்லையெறிந்துவிட்டு மீண்டனனென முதனூல் கூறும். இச்செய்யுளிலும் மேன்மேலுயர்ச்சியணி காண்க. பொன்மாரி- உருவகம். "காவலன் கன்னன் கையும் பொழிந்தது கனகமாரி"- என்றூர் வில்லியும். (25)

26. அந்தண வடிவங்கொண்டிருந்த அருச்சுனன் எழுந்து பேசலுறல்.

பரியசிலை வளையாமல் வளைத்துச் சென்னி
பருவரலுற் றரசரெலாம் பயிலும் வேலை
அரியமறை யவர்நாப்பண் ணுருவ மாறி
யடைந்திருக்கும் விசயனெழுந் தடல்பாஞ்சாலற்
குரியமகன் றனைப்பார்த்திவ் வுலகாள் வேந்த
ரொழியவிலக் கரியமறைக் குரியோர் வீழ்த்தாற்
றெரியலணங் கணிந்திடுமோ செப்பு கென்னத்
திட்டத்துய் மனுமிதனைச் செப்ப லானன்.

(இ-ள்) பரிய சிலை வளையாமல் - பருத்த வில்லை (எடுத்து) வளைக்க முடியாமல், சென்னி வளைத்துப் பரவரல் உற்று–தலையை [மட்டும்] வளைத்து [அதனால்] நோவடைந்து, அரசர் எலாம்- மன்னர்களெல்லாம், பயிலும் வேலை-(அங்குமிங்குமாக) நடமாடும் போது, அரிய மறையவர் நாப்பண் - மேன்மை பொருந்திய பிராமணர்களின் நடுவில், உருவம்மாறி – மாறுவேடம் பூண்டு, (பிராமணர்போலவே), அடைந்திருக்கும் - எழுந்தருளியிருக்கும், விசயன் எழுந்து-அருச்சுனன் எழுந்து,-- அடல் பாஞ்சாலற்கு உரிய மகன்தனைப் பார்த்து-வலிமை பொருந்திய திட்டத்துய் மனைப்பார்த்து,-"இ உலகு ஆள் வேந்தர் ஒழிய-இந்தத் தரையினை யாள்கின்ற மன்னர்களைத் தவிர, அரிய மறைக்கு உரியோர்- சிறப்புப்பொருந்திய வேதத்தையுரிமையாகக்கொண்ட பிராமணர் கள், இலக்கு வீழ்த்தால்-குறியை எய்து வீழ்த்தினால், அணங்கு- திரௌபதியானவள், தெரியல் அணிந்திடுமோ - மணமாலையைச் சூட்டுவளோ, செப்புக என்ன-சொல்லுவாயாக, என்ன-என்று கேட்க, திட்டத்துய்மனும்—, இதனை-இவ்வார்த்தைகளை, செப்ப லானன்-சொல்லலாயினன்; (எ-று).

சிலைவளைக்காமல் சென்னிவளைத்து என்றது நயம். செப்பு கென்ன-வியங்கோளின் அகரவீறு தொகுத்தல். (26)

27. திட்டத்துய்மனிடம் அனுமதி பெற்று இலக்கை எய்யத் திரௌபதி அருச்சுனனுக்கு மணமாலை சூட்டுதல்.

அரைசரினு மந்தணர்க ளிலக்கு வீழ்த்தால்
அதிகநல மதுவருந்தி யளிகள் பாண்செய்
விரைகமழ்தார் சூட்டுதற்குத் தாழ்வோ வென்ன
விளம்பிடும்போ தடல்விசயன் வேந்தர் நாணக்
கரதலத்தத் தனுவேந்தி நாணு மேற்றிக்
கணைதொடுத்தந் தரத்துழலுங் கயலை வீழ்த்தான்
திருவினும்பொற் பினண்மகிழ்ந்தவ் விடலை தோண்மேற்
செங்கழுநீர் திருத்தாமஞ் சேர்த்தி னளே.

(இ-ள்) "அரைசரினும்-அரசர்களைக் காட்டிலும், அந்தணர் கள்-பிராம்மணர்கள், இலக்கு வீழ்த்தால்-குறியை எய்து வீழ்த்தி னால், அதிக நலம்-இன்னும் அதிக சிறப்பாகும்: அளிகள் மது அருந்தி - வண்டுகள் தேனைக்குடித்து, பாண் செய் - பாட்டிசைக் கின்ற, விரை கமழ் தார்-வாசனை வீசுகின்ற மணமாலையை, சூட்டுதற்கு - [அங்ஙன் வீழ்த்தியவன்] தோளில் இடுதற்கு, தாழ்வோ-குறைவோ ? (குறைவாகாது), என்ன-என்று, விளம் பிடும்போது-திட்டத்துய்மன் சொல்லியபோது, அடல் விசயன்-வலிமைமிக்க அருச்சுனன், வேந்தர் நாண-[ஆங்குள்ள] அரசர்கள் வெட்கும்படி, கரதலத்து-தன் கையில், தனு ஏந்தி-வில்லையேந்தி நாணும் ஏற்றி-நாண் கயிற்றையும் வில்லின் நுனியில் மாட்டி, கணை தொடுத்து-அம்பினையெய்து, அந்தரத்து உழலும் கயலை-மேலே [யந்திர சக்கரத்திற் பொருந்திச்] சுழல்கிற மச்ச இலக்கை, வீழ்த்தான்-கீழேயறுத்துத் தள்ளினான்: திருவினும் பொற்பினள் மகிழ்ந்து-இலக்குமியினும் அழகுபடைத்த திரௌப பதி களிப்புற்று, அ விடலை தோள் மேல்-அந்த வீரன் தோளிலே செங்கழுநீர் திரு தாமம் - செங்கழுநீர்ப் பூவினாலாகிய அழகிய மணமாலையை, சேர்த்தினள்-(அவன் மார்பில்) இட்டாள்; (எ.று).

அந்தணன் இராசகன்னிகையை மணத்தல் அப்பெண்ணின் குலத்தார்க்குப் பெருமையாகுமேயன்றி இழிவாகாது என்ற கருத்துப்பற்றி "அதிக நலம்" என்றான் திட்டத்துய்மன். கயல்-மீன்: இங்கே இலக்காக வைத்திருக்கும் மச்சம். விடலை-ஆண்பாற் சிறப்புப் பெயர்.

அரைசரினும் - இன், ஐந்தனுருபு. உறழ்பொரு. அரைசர்- இடைப்போலி. (27)

28. முனிவரும் தேவரும் மகிழ அருச்சுனன் திரௌபதியோடும் உடன்பிறந்தாரோடும் செல்ல, துரியோதனன் முனிதல்.

வேதியர்கள் மாதவர்கள் புகழ்வோ ரார்ப்ப
விரைமலர்மா மழைபெய்து விண்ணோ ரார்ப்ப
மீதலத்துந் துமிமுழங்கச் சங்க மார்ப்ப
வேந்தர்மலர் முகங்கருக விசயன் வாங்கு
மாதனுகைத் தலத்தேந்தி மாலை வேய்ந்தம்
மயிலினெடுந் துணைவரிரு மருங்கு மொய்ப்பக்
காதலொடு மேகிடும்போ தரசர் தம்மைக்
கனலின்முனிந் தரவுயர்த்தோன் கரைப்ப தானன்.

(இ-ள்) வேதியர்கள்-பிராம்மணர்களும், மா தவர்கள்-சிறந்த முனிவர்களும், புகழ்வோர்-துதிபாடகர்களும், ஆர்ப்ப-(மகிழ்ச்சியால்) ஆரவாரிக்க, விரை மலர் மா மழை பெய்து-வாசனையுள்ள பூமழைகளை மிகுதியாகச் சொரிந்து, விண்ணோர்-வானவர்கள், ஆர்ப்ப – (மகிழ்ச்சியால்) ஆரவாரிக்க, மீ தலம் - மேலிடத்து [வானத்தில்] துந்துமி முழங்க - (தேவர்கள் முழக்கிய) துந்துபி வாத்தியம் ஆரவாரிக்க, சங்கம் ஆர்ப்ப-சங்க வாத்தியங்கள் ஒலிக்க, வேந்தர் மலர்முகம் கருக-அரசர்களுடைய மலர்போல் மலர்ச்சியடைந்திருந்த முகங்கள் வாடவும், விசயன்-அருச்சுனன், வாங்கு - தான் வளைத்த, மா தனு - சிறந்த வில்லை, கை தலத்து ஏந்தி-தன் கையிலே ஏந்திக்கொண்டு, மாலை வேய்ந்து-[திரௌபதி தன் தோளிலிட்ட] செங்கழுநீர் மாலையைத் தரித்துக்கொண்டு, அ மயிலினெடும் - அந்தத் திரௌபதியுடனும் துணைவர் இரு மருங்கும் மொய்ப்ப-உடன்பிறந்தோர் இரண்டு பக்கங்களிலும் சூழ்ந்துவர, காதலொடும் ஏகிடும்போது-அன்புடனே [சுயம்வர மண்டபத்தினின்று] செல்லும்போது, அரவுயர்த்தோன்-துரியோதனன், அரசர்தம்மை-கூடியுள்ள அரசர்களை, கனலின் முனிந்து-நெருப்புப்போலக் கோபித்து, கரைப்பது ஆனன் மனத்தில் உறுத்தும்படி கூறலானன்; (எ-று).

ஆர்ப்ப, ஆர்ப்ப, முழங்க, ஆர்ப்ப, கருக முதலியன அடுக்கி 'வேய்ந்து' என்ற வினையெச்சத்தோடியையும். வேந்தர் முகம் கருகியது-நாணத்தினால். மயில்-உவமவாகுபெயர். (28)

29. துரியோதனன் தூண்டுதலால் அரசர்கள் போர்க்கு எழ, அந்தணர் போர் செய்யத் தொடங்க, அவர்களை விலக்கி வீமனும் அருச்சுனனும் எதிர்த்துப் போரிடுதல்.

ஆர்த்துறுமந் தணனொருவன் வலியாற் பெண்கொண்
டகலச்செய லின்றிகுலத் தாண்மை யின்றிப்
பார்த்திருந்தீ ரென்செயவென் றிகழ்ந்தா னூழிப்
பவ்வமென வார்த்தரசர் பலருங் கூடிப்
போர்த்தொடங்க வார்த்தெதிர்ந்து கையாற் றண்டாற்
பூசுரர்போர் புரியுமிடைப் பொன்னேர் மின்னைச்
சீர்த்தருமன் பின்னிருத்தி வீமன் பார்த்தன்
சினத்துமுனி வரைவிலக்கிச் செருச் செய்தாரே.

(இ-ள்) "அந்தணன் ஒருவன்–பிராமணனொருவன், ஆர்த்து-கூச்சலிட்டு, உறு வலியால்-மிக்க வல்லமையால் பெண்கொண்டு அகல – ஒரு பெண்ணைச் சுயம்வரத்திற் கைக்கொண்டு நீங்க, செயல் இன்றி – (அவனைத் தடுத்து நிறுத்துஞ்) செயலொன்றுஞ் செய்யாமல், குலத்து ஆண்மை இன்றி-க்ஷத்திரிய குலத்திற்கேற்ற வீரமுங்காட்டாமல், என் செயப் பார்த்திருந்தீர் - என்ன வேறு காரியம்செய்ய நினைத்திருந்தீர் : (அவன் கைக்கொண்டு போவதைப்)பார்த்திருந்தீரே! என்று—,இகழ்ந்தான்-ஏளனஞ்செய்தான் (துரியோதனன்): (அதனைக்கேட்ட) அரசர் - மன்னர்கள், ஊழிப் பவ்வமென ஆர்த்து - யுகாந்தகாலத்துச் சமுத்திரம் போலப் பொங்கி யாரவாரித்து, பலரும்கூடி - அனைவரும் ஒருசேரத் திரண்டு, போர் தொடங்க - சண்டைக்குவர, (அதனைக்கண்ட) பூசுரர் - பிராமணர்கள், ஆர்த்து எதிர்ந்து-கூச்சலிட்டு எதிரிட்டு, கையால்-தங்கள் கைகளாலும், தண்டால்-(தாங்கள் ஏந்தியுள்ள) தண்டங்களாலும், போர் புரியும் இடை-சண்டையிடும்சமயத்தில், முனிவரை விலக்கி - பிராம்மணர்களை விலகச்செய்து, வீமன் பார்த்தன் - வீமசேனனும் அருச்சுனனும், பொன் ஏர் மின்னை-பொன்போலழகிய திரௌபதியை, சீர் தருமன் பின் இருத்தி - சிறப்புப்பொருந்திய [தமையனுகிய] தருமனுக்குப் பின்னே நிற்கவைத்து, சினத்து - (பின்) மிக்க கோபங்கொண்டு, செரு செய்தார் - போரைத் தொடங்கிச்செய்யலாயினர்; (எ–று).

ஓரந்தணன் கன்னிகையைக் கைக்கொண்டதற்காகப் பொறுமைகொண்டு அரசர்கள் போர்க்கு எழுவதை நோக்கி, சாதியபிமானத்தால் அந்தணரெல்லாரும் கோபங்கொண்டு

அரசரை எதிர்ப்பாராயின ரென்க. பொன் ஏர் மின் - இலக்கு மியையொத்த திரௌபதி யெனினுமாம்: ஏர்-உவமவுருபு. மின்-உவமவாகுபெயர். மூத்தோனதலின், தருமன் பின் நிறுத்தினர். (29)

30, அருச்சுனன் கர்ணனை வெல்ல, வீமன் சல்லியனை வெல்லுதல்.

கொல்லியலுக் கந்தணனே வல்லோ னென்னக்
கொடையுடையா னவமதித்துக் குனிவில் வாங்க
வில்லியலுக் கிவனென்னும் விசயன் றன்கை
வில்வாங்கி யுடற்பிளந்தான் விசிக மொன்றூல்
மல்லியலுக் கிவனிகர்யா ரென்னும் வீமன்
மதியாமல் வந்துதன்முன் மறப்போ ராற்றுஞ்
சல்லியனை யடிமுடியும்வளைத்து வான்மேற்
றூனெறிந்தான் அவனயர்ந்தான் தரைமேல் வீழ்ந்தே.

(இ-ள்) "கொல் இயலுக்கு அந்தணனே வல்லோன் - போர்த்தொழில் செய்தற்குப் பிராம்மணனு வல்லமையுடையவன்", என்ன - என்று பொங்கி, கொடையுடையான் – கர்ணன், அவமதித்து - [எழுந்த அந்தணவேடத்தானை] இகழ்ந்து, குனிவில்வாங்க - வளைந்த வில்லை மேலும் வளைக்க,—வில் இயலுக்கு இவன் என்னும் விசயன்-விற்றொழிலுக்கென [இட்டுப் பிறந்தவன்] இவன் என்று புகழ்பெற்ற அருச்சுனன், தன்கை வில் வாங்கி தன்னுடைய கையிலிருந்த வில்லை வளைத்து, விசிகம் ஒன்றூல் - அம்பொன்றினால், உடல் பிளந்தான் - (அவனது) மார்பைப் பிளந்திட்டான்; (இ.·.து இங்ஙனுக) மல் இயலுக்கு இவன் நிகர்யார் என்னும் வீமன்-மல்யுத்தஞ் செய்யும் தொழிற்கு இவனுக்கு ஒப்புயார்? ஒருவருமில்லை என்று புகழ்படைத்த வீமன், மதியாமல்-தன்னை [ஒருபொருட்டாக] மதிக்காமல் அவமதித்து, தன்முன் வந்து - தனக்கு முன்னர் வந்து நின்று, மறப்போர் ஆற்றும் - அதர்மமான போரைச் செய்கின்ற, சல்லியனை—, அடிமுடியும் வளைத்து - காலையும் தலையையும் ஒருசேர வளைத்துப்பிடித்து, வான்மேல் - ஆகாயத்தினிடத்தே, தான் எறிந்தான் - தான் வீசியெறிந்தான்; அவன்-அச்சல்லியன், தரைமேல் வீழ்ந்து - பூமியின் மேல் வீழ்ந்து, அயர்ந்தான் - தளர்ச்சியடைந்தான்; (எ-று).

இயல் - தொழில் என்ற பொருளது. (30)

31. கண்ணன் விலக்கவே மற்றையரசர்கள்செல்ல, பாண்டவர் குந்தியிடம் சென்று ''இன்று ஒரு பிக்ஷை பெற்றோம்'' என்ன, 'அதனை ஐவரும் உண்ணும்' என்று அவள் கூறுதல்.

வென்றிடினும் பின்றரினும் மறையோர் வெம்போர்
மிக்கவசை யென்றெருவி மீட்டும் வேத
ரன்றிவர்மா ருதிநரனென் றைய மூற்றங்
கச்சுதனல் விலக்கிடப்பட் டரசர் யாருஞ்
சென்றபின்மா துடனீவர் குலாலன் வாழுஞ்
செழுமனைமுன் றினிலடைந்தித் தினமோ ரையம்
நன்றுபெற்றே மென்செய்வ மெனமா தாவும்
நயந்துணுமை வருமெனவே நவின்றுண் மன்னே.

(இ-ள்) ''வென்றிடினும்-ஜயித்தாலும், பின்தரினும்-(முதுகு' காட்டிப்) பின்னிட்டாலும், மறையோர்-பிராம்மணர்களோடு வெம்போர்-கொடிய போரைச் செய்தல், மிக்க வசை-பெருத்த பழிப்புக்கிடனாகும்'' என்று-என்று எண்ணி, அரசர் யாரும்-எல்லா அரசர்களும், ஒருவி-போர் செய்தலைத் தவிர்த்திருந்து, (பின்பு) மீட்டும்-மறுபடியும், 'வேதர் அன்று இவர்-இவர்கள் இருவரும் பிராம்மணர்கள் அல்லர்; மாருதி நரன் என்று ஐயமுற்று-வீமனும் அருச்சுனனும் என்று சந்தேகங்கொண்டு [போருக்குவர], அங்கு-அப்போது, அச்சுதனல் விலக்கிடப் பட்டு-கண்ணபிரானால் [இனிப் போர் வேண்டாமென்று] விலக் கப்பட்டு, சென்றபின்-தத்தம ஊர்களுக்குச் சென்றபின், ஐவர்-பாண்டவரைவரும், மாதுடன்-திரௌபதியுடன், குலாலன் வாழும் செழுமனை முன்றினில் அடைந்து-குயவன் வாழிடமாகிய செழித்த வீட்டின் முன் வாயிலினை யடைந்து, ''இ தினம்-இன் றையதினத்தில், ஓர் ஐயம் நன்று பெற்றோம்-ஒரு பிக்ஷை பெரிதும் பெற்றுவந்தோம்: என் செய்வம்-இதனை என்ன செய்வது?'' என-என்று கேட்க, மாதாவும்-தாயாகிய குந்திதேவியும், ''ஐவரும்-நீங்கள் ஐந்துபேரும், நயந்து-விரும்பி, உணும்-உண்ணுங்கள்,' என-என்று, நவின்றுள்-சொல்லினள்; (எ-று) மன், ஓ-ஈற்றசை.

வியாசபாரதம் கூறும் விவரம் பின் வருமாறு:—மன்னவர்கள் துருபதனோடு பொருமாறு மாறுபட, போருக்குச் சித்தராகி அருச்சுனனும் வீமனும் கர்ணசல்லியரைவெல்ல, தருமன் முதலி

யோர் துரியோதனுதியரை வென்றனராக, மீண்டும் அரசர்கள் குழுமிப் போர்வேண்டுக்க முனைகையில் கண்ணபிரான் அப்போரை விலக்கினன் என்பது.

சிலகாலமாய் அந்தணவடிவங்கொண்டுள்ள இவர்களில் வீமனும் அருச்சுனனும் நாடோறும் வெளிச்சென்று தமது சாதிக் குரிய ஏற்றல் தொழிலால் உணவை ஈட்டிக்கொணர்ந்து மீண்டு வந்தவுடனே தம் தாயை நோக்கி 'இன்று பிக்ஷைகொணர்ந்தோம்' என்று சொல்லி, அவளனுமதிபெற்று அதனைத் தமையன் தம்பிய ருடன் உண்ணும் வழக்கத்தின்படி, திரௌபதியைக் கொணர்ந்த தினத்திலும் கூறுகின்றார்களாதலால், "இத்தினம் ஓரையம் நன்று பெற்றோம்" என்றார். "நன்று பெரிதாகும்" (தொல்: சொல்: 343), உணும் - உண்ணும் என்பதன் இடைக்குறை. ஐயம் - பிக்ஷை: பிச்சை: நுகரப்படும் பொருள். (31)

32. கழிவிரக்கமுற்ற குந்திக்குத் தருமன் தேறுதல் கூறல்.

இருகவிகள்---குளகம்.

இருந்தகத்து ளிஃதியம்பிப் புறம்ப ரெய்தி
யெழிலணங்கை விழிகளிப்ப வினிதி னேக்கி
அருந்துமமு தென்னநினைந் தென்ன வாய்மை
யறைந்துளனென் றிடர்க்கிடமா மன்னை தன்னைத்
திருந்துமறை நின்மொழிகின் னினைவின் வண்ணஞ்
சிந்தையில்யாம் ஐவருமிச் சித்தோ மம்ம!
வருந்தலென வுதிட்டிரன்றுழ்ந் தின்சொற் கூற
வருமூழி தனவவளு மனங்கொண் டம்மா.

(இ-ள்) அகத்துள் இருந்து - வீட்டிற்குள் இருந்தபடியே, இஃது இயம்பி - இதனைச் சொல்லியபின், புறம்பர் எய்தி - (உள்ளிருந்து) வெளியே வந்து, எழில் அணங்கை - அழகுமிக்க திரௌபதியை, விழிகளிப்ப - கண்கள் களிக்கும்படி, இனிதின் நோக்கி - இனிமையாக [அன்போடு] பார்த்து, "அருந்தும் அமுது என்ன நினைந்து - உண்ணும் உணவு என்று எண்ணி, என்ன வாய்மை அறைந்துளன் - என்ன வார்த்தை சொல்லியுள்ளேன்," என்று -, இடர்க்கு இடமாம் அன்னை தன்னை - துன்பப்பட்டுக் கொண்டிருந்த தாயை, யுதிட்டிரன் - தருமபுத்திரன் (நோக்கி), 'அம்ம! - தாயே!, நின் மொழி திருந்து மறை - உனது வார்த்தை

வேதத்தின் தன்மையதாம்: நின் நினைவின் வண்ணம் - உனது எண்ணத்தின்படியே, யாம் ஐவரும் - நாங்கள் ஐந்துபேரும், சிந்தையில்-மனப்பூர்வமாக, இச்சித்தோம் (அவளை) விரும்பியுள்ளோம்: (ஆகவே) வருந்தல் - நீ வருத்தப்படாதே' என - என்று சொல்லி, தாழ்ந்து - வணங்கி [நமஸ்கரித்து], இன்சொல் கூற– இனிய வார்த்தைகளைச் சொல்ல, அவளும்-அந்தத் தாயும், இது வரும் ஊழ் என-இச்செயல் விதிவசத்ததாமென, மனங்கொண்டு-நினைத்து; (எ-று) அம்மா-ஈற்றசை: 'அகத்தினுட்போந்திருந்தாள்' என மேற்கவியோடு குளகமாய்த் தொடரும்.

தாய் வார்த்தை வேதவாக்கியம்போலக் காரணங் சுருதாமலே விதிரூபமாக அங்கீகரிக்கத்தக்கதென்பான் "திருந்துமறை நின் மொழி" என்றான். சாத்திர விரோதமானதைச் சொல்லத்தக்கவனல்லாத தருமன் ஒரு பெண்ணை நாங்கள் ஐவரும் மணஞ் செய்துகொள்ள இச்சிக்கின்றோமென்றல் அப்பெண்ணினிடத்து வைத்த காதல்பற்றியேயன்று விதிவயத்தனையென்பது தெரிய "அவளும் ஊழிதென மனங்கொண்டாள்" என்பதனைப் பெற வைத்தார். "நின்சொல் ஆரணப்படியதாகும்" என்று தருமன் கூறியதாக வில்லிபுத்தூரரும் குறித்துள்ளார். வருந்தல் - அல்லீற்று எதிர்மறை வியங்கோள் வினைமுற்று. புறம்பர்-அர், ஈற்றுப்போலியாக வந்தது. (32)

33. கண்ணபிரான் பலராமனுடன் குந்தியைக் கண்டு, பாண்டவரைத் தழுவித் துவரை சேர்தல்.

எழிலனைத்து மொருவடிவாய் வந்து தோன்றும்
இளங்கொடியோ டகத்தினுட்போந் திருந்தா ளங்கோர்
குழையுடைய பலதேவ னுடன்மா யோனுங்
குறுகிபிதா வுடன்றேன்றுங் குந்தி தன்னைத்
தொழுதுரிய மைத்துனரை முறையாற் புல்லிச்
சுகம்வினவி யாம்துவரை துன்னி கன்னி
விழைவின்மண மயர்தினம்வந் தரசோ டாய்ந்து
வேண்டுவசெய் குவமெனவே விளம்பிச் சென்றார்.

(இள்) [குந்திதேவி] எழில் அனைத்தும்-அழகு முற்றிலும், ஒருவடிவாய் வந்து தோன்றும்-[திரண்டு] ஒரு உருவந்தாங்கி வந்து தோன்றியதுபோல விளங்கும், இளங்கொடியோடு-

திரௌபதியுடனே, அகத்தினுள் போந்து இருந்தாள்-வீட்டுக் குள்ளே திரும்பிவந்து தங்கியிருந்தாள்: ஆங்கு,அப்போது, ஓர்-ஒற்றையாகிய, குழையுடைய பலதேவனுடன்-குண்டலத்தைக் காதிலணிந்திருந்த பலதேவனோடு, மாயோனும்-கண்ணபிரானும், குறுகி-அந்த வீட்டினை யடைந்து, பிதாவுடன் தோன்றும் குந்தி தன்னை-(தமது) தந்தையாகிய வசுதேவருடன் சகோதரியாகத் தோன்றிய குந்தியை, தொழுது-கைகூப்பி வணங்கி, உரியமைத் துனரை முறையாற் புல்லி-தனக்குச் சுற்றமாதற்குரிய மைத் துனன்மார்களாகிய தருமன் முதலான பாண்டவரை [அவரவர் வயதிற்கேற்ப] முறைமையால் தழுவி, சுகம் வினவி-(அவர்களின்) சேமம் விசாரித்து, "யாம் துவரை துன்னி-யாங்கள் இருவரும் துவாரகைக்குச் சென்று, கன்னி விழைவின் மணம் அயர் தினம் வந்து-கன்னிகையாகிய திரௌபதியின் விவாகம் நடக்கும் தினத் தன்று வந்து, அரசோடு ஆய்ந்து-திருதராட்டிரனுகிய அரசனோடு ஆராய்ந்து, வேண்டுவ செய்குவம்-தக்கனவற்றைச் செய்வோம், என-என்று, விளம்பிச் சென்றூர்-கூறிப்போயினர்; (எ-று).

வசுதேவனுக்குத் தங்கை குந்தி: இருவரும் முறையே யதுகுலத்தரசனுகிய சூரனுக்கு மகனும், மகளும் ஆவர். குந்தி பிரதை என வழங்கப்படுவள். சூரன் தன் பெண்ணை பிரதையை வளர்க்குமாறு ஸ்வீகார புத்திரியாகக் குந்திபோசனுக்குக் கொடுத்தமையால், அந்தப் பிரதை குந்தி எனப்பட்டாள். ஆகவே குந்தி கண்ணபிரானுக்கு அத்தை முறையினளாவள்: பாண்டவர் மைத்துனன் முறையினராயினர். இளங்கொடி-அடையடுத்த உவமவாகுபெயர், பலதேவனை 'ஒற்றைக்குழையோன்' என்றூர் மேல் அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம் செய்யுள் 43-இலும். (33)

34—36. துருபதன் தன்மகன் திருஷ்டத்யும்னனை மறைவாகப் பதிவிருந்து நிகழ்வனவற்றை யறிந்துவந்து கூறச் சொல்லுதல்.

(மூன்று கவிகள்—ஒரு தொடர்)

34. அன்றமரில் பின்றருமன் னவர்போல் வெய்யோன்
அவிர்கிரண மழுங்கிகுடக் ககன்ரு னப்போர்
வென்றிபெறு விசயன்முக மலர்ச்சி போல
வெண்மதிதன் கதிர்பரப்பி விளங்கிக் கீழ்பா

னின்றெழுந்தா னவ்விரவிற் றுருப தேயன்
நின்னினையோ டகன்முனிவர் நீர்மை யாவுஞ்
சென்றுணர்ந்தெய் தெனமகனை விடுத்தான் யார்க்குந்
தெரியாதக் குலாலனகஞ் சேர்ந்து மற்றோன்,

(இ-ள்) அன்று அமரில் - அன்றைய போரில், பின்தரும்-பின்னிடைந்து ஓடிய, மன்னவர்போல - அரசர்களைப்போல, வெய்யோன் - சூரியன், அவிர்கிரணம் மழுங்கி - விளங்குகின்ற ஒளிக்கதிர்கள் மழுங்கிப்போக, குடக்கு அகன்றோன்-மேற்குத் திசையில் அத்தமித்தான்: அ போர் - அந்தப் போரில், வென்றி பெறு விசயன்-வெற்றிபெற்ற அருச்சுனனது, முகமலர்ச்சி போல-முகம் பிரகாசித்ததுபோல, வெண்மதி-வெள்ளிய சந்திரன், தன் கதிர் பரப்பி-தன்னுடைய (குளிர்ந்த) நிலாக்கிரணங்களைப் பரவச் செய்து, விளங்கி - விளக்கமுற்று, கீழ்பால்நின்று - கிழக்குத் திசையினின்று, எழுந்தான்-உதித்தான்: அ இரவில்-அந்த இராத்திரியில், துருபதேயன்-துருபதராசன், [திட்டத்துய்மனை நோக்கி] "நின் இளையோடு-உன் தங்கையாகிய திரௌபதியோடு, அகல் முனிவர் நீர்மையாவும்-(அவளைக்) கூட்டிச்சென்ற பிராம்மணர்களின் தன்மைகளையெல்லாம், சென்று-(நீ) போய், உணர்ந்து எய்து-அறிந்து (திரும்பி இவ்விடத்திற்கு) வருவாய்" என-என்று சொல்லி, மகனை-திட்டத்துய்மனை, விடுத்தான்-[துருபதன்] அனுப்பினான்; (அங்ஙனமே) மற்றோன்-அந்தத் திட்டத்துய்மன், யார்க்கும் தெரியாது-எவருக்கும் தெரியாதபடி, அ குலாலன் அகம் சேர்ந்து-அந்தக் குயவனது வீட்டினையடைந்து; (எ-று) "அன்னவர்தம் சரிதமெலாமுணர்ந்து" என மேலிற்கவியிற் குளகமாய் இயையும்.

முதலிரண்டடிகளில் தற்குறிப்பேற்றவுவமையணி காண்க.
இளை-இளையோளுக்கு ஆகுபெயர். (34)

35. அன்னவர்தம் சரிதமெலா முணர்ந்து மன்பால்
அடைந்தணங்கோ டம்மறையோ ரருட்கு லாலன்
தன்னகமுற் றன்னையொடு மிருந்தார் மாமன்
றனையடுமால் அவணெய்தி தணந்த பின்னர்
கன்னனைமத் திரனைவெலு மிருவ ரிவ்வூர்
கலிமுனிவர் மனையில்பலி கவர்ந்தே யன்னை
முன்னர்கொடு வைத்தனரப் பலியை யன்னாள்
மொழிவணமென் பின்வரும்பான் மொழியி னுளும்.

(இ-ள்) அன்னவர்தம் சரிதம் எலாம் உணர்ந்து - அந்த அந்தணவடிவத்தினர் வரலாறு எல்லாம் தெரிந்துகொண்டு, மன்பால் அடைந்து-(தந்தையாகிய) துருபதராசனிடம் வந்து,- [கூறலுற்றுன்] "அம் மறையோர்-அந்த அந்தணர்கள், அணங்கோடு - திரௌபதியோடும், அருள் குலாலன் தன் அகம் உற்று - கருணையையுடைய குயவனது வீட்டினையடைந்து, அன்னையொடும் இருந்தார்-தாயோடும் உடன்சேரவிருந்தார்கள்: (அப்போது) மாமன்றனை அடு மால்-தன் மாமனுகிய கம்சனைக் கொன்ற கண்ணபிரான், அவண் எய்தி - அவ்வீட்டிற்கு வந்து, தணந்தபின்னர் - (அவர்களது தாயைக் கண்டுபேசி) நீங்கிய பின்னர், கன்னனை மத்திரனை வெலும் இருவர்-கர்ணனையும் சல்வியனையும் முறையே [போரில்] வென்ற இரண்டுபேரும், இ ஊர் கலைமுனிவர் மனையில் - இந்த ஊரிலேயுள்ள கல்வியில் வல்ல அந்தணர்கள் வீடுகளில், பலி கவர்ந்தே - [உணவினைப்] பிக்ஷையாக வாங்கிவந்தே, அன்னை முன்னர் கொடு வைத்தனர்-தாய் முன்னே கொண்டு வைத்தனர்: அன்னுள் மொழிவணம்-அந்தத் தாய் கூறியபடியே, அ பலியை - அந்தப் பிக்ஷையுணவை, என் பின்வரும் பால் மொழியினும் - எனக்குப்பின் தங்கையாகத் தோன்றிய பால்போல் இனிய பேச்சினையுடைய திரௌபதியும்; (எ-று) "பகிர்ந்து இனிதுதவி" என மேலைக்கவியிற் குளகமாகத் தொடரும்,

மன்-அரசன்: துருபதன். பால்-ஏழனுருபு. தன் மனையில் தங்க இடம் உதவினனுதலின், "அருட்குலாலன்" என்றது. மால்-திருமாலின் அவதாரமாகிய கண்ணபிரான். அன்னை மொழிந்த வண்ணம் முதனூலின்படி யறியவேண்டுவது பின்வருமாறு:— "பிக்ஷையில் முதல் பாகத்தை எடுத்துப் பலியையும் பிராம்மண பிக்ஷையும் கொடு: எவர்கள் அன்னத்தை வேண்டுகின்றனரோ அவர்களுக்கும் எந்த மனிதர் நம்மைச் சுற்றி அடுத்திருக்கின்றனரோ அவர்களுக்கும் அன்னத்தைக் கொடு. அதன் மிச்சத்தை உடனே இரண்டாகப்பகுத்து அதிலொரு பாதியை என் நாலு புத்திரர்களுக்கும் எனக்கும் உனக்குமாகவும், மற்றொரு பாதியைப் பிமனுக்காகவும் பிரித்துக்கொடு" என்பது. பால் மொழியினுள்-உவமைத்தொகை. "மன்பால் அடைந்து" என்ற இஃது, மேற்கவியில் "அமுற்பிறந்தோன் புகல" என்பதனோடு இயையும். "அணங்கோடம் மறையோர்" என்று தொடங்கி, அடுத்த செய்யுளில் "துஞ்சற் பொருந்தினள்" என்பது வரை திட்டத்துய்மன் கூற்று. (35)

36 அருந்திடநால் வருக்கருத்த மொருவற் கர்த்த
மாகபகிர்ந் தினிதுதவி யதனிற் சேட
மிருந்ததைத்தன் மாமியொடு மருந்தி யன்னாள்
ஏவலின்வெவ்வே றுதயிற் கிடஞ்செய் தியாரும்
பொருந்ததுயி லிவளுமவ ளருகிற் றுஞ்சற்
பொருந்தினளென் றழற்பிறந்தோன் புகல யாவுந்
தெரிந்திடக்கேட் டவரேபாண் டவரென் றியாக
சேனனெணி மீட்டுந்தேர்ந் திடுவான் மன்னே.

(இ-ள்). நால்வருக்கு அருந்திட அருத்தம்-[ஐவரில் ஒருவனைத் தவிர்த்த] நால்வருக்கும் புசிக்கும்படி பாதி பாகத்தையும், ஒருவற்கு அர்த்தமாக-ஒருவனுக்கு மட்டும் மீதி பாதி பாகத்தையும், பகிர்ந்து-பகுத்துவைத்து, இனிது உதவி-அன்போடு கொடுத்தபின், அதனிற் சேடம் இருந்ததை-அங்ஙன் பகுத்தபின் அந்தப் பிக்ஷையில் மிகுந்திருந்ததை, தன் மாமியொடும் அருந்தி-தனது மாமியாரோடும் உண்டு, அன்னாள் ஏவலின்-அந்த மாமியின் ஆணைப்படி, துயிற்கு இடம் வெவ்வேறு செய்து-தூங்குதற்கு இடம் தனித்தனியே அமைத்து, யாரும் பொருந்த-இந்த ஐவரும் கண்துயில, இவளும் அவள் அருகில் துயில் துஞ்சல் பொருந்தினள்-இந்தத் திரௌபதியும் அந்தத் தாயின் சமீபத்தில் தூங்குதலை மேற்கொண்டாள்" என்று—, அழல் பிறந்தோன் புகல-அக்னியினின்று பிறந்த திட்டத்துய்மன் சொல்ல, யாக சேனன்-துருபதன், யாவும் தெரிந்திடக் கேட்டு-எல்லா விவரங்களையும் தெரியக்கேட்டபின், அவரே பாண்டவர் என்று-அவர்கள் ஐவரும் பாண்டவரே என்று, எணி-நினைத்து, மீட்டும்-மேலும். தேர்ந்திடுவான்-பரிசோதித்தறிபவனானன்: (எ-று) மன், ஓ-ஈற்றசை.

நால்வர்-வீமனைத்தவிர்த்த நால்வர். ஒருவன்-வீமசேனன், அருத்தம்=அர்த்தம்: பாதி. அதனிற் சேடமாவது-அந்த ஐவரும் தத்தம உணவில் தொடக்கத்திலேயே புசிப்பதற்குமுன் கொஞ்சம் பகுதியை மிச்சமாகவைப்பது எனக்கொள்க. எணி–எண்ணியென்பதன் தொகுத்தல். (36)

வேறு

37. பின்னும் ஐயந்தீர்தற்பொருட்டுத் துருபதன் தனது புரோகிதனையனுப்புதல்.

மற்றபகல் புரோகிதனு மறைமுனியை
விடுப்பவவர் மருங்கினன்னேன்
உற்றுமது குலங்குடிநா மங்களெம
திறையுணர வுண்மை யாகச்
சொற்றிடுத லுறுதியெனச் சொல்வதற்கங்
குதிட்டிரனுந் தோகை தன்னை
முற்றறிந்திங் திடவேண்டு மளித்துணர்தல்
அரசர்க்கு முறைய தாமோ.

(இ-ள்) மற்றபகல்-அடுத்த நாள். புரோகிதனும் மறை முனியை-(தன்) புரோகிதனுகிய அந்தணனை, விடுப்ப-(சோதித்து வர) அனுப்ப, அன்னேன்-அந்தப் புரோகிதன், அவர்மருங்கின் உற்று-அந்த ஐவர்பக்கல் வந்து, உமது குலம் குடி நாமங்கள்-உங்களுடைய பிறந்தகுலம், குடிமரபு, பெயர்கள் இவ்விவரங்களை, எமது இறை உணர-எம்முடைய அரசராகிய துருபதன் உணரும் பொருட்டு, உண்மையாகச் சொற்றிடுதல் உறுதி என-பொய்யின்றி நிஜமாகவே சொல்லுதல் (உங்கட்கு) நன்மை பயக்கும் என்று, சொல்வதற்கு-கூறியதற்கு [விடையாக] அங்கு-அப்போது, யுதிரட்டிரனும்-தருமபுத்திரனும், "தோகைதன்னை-திரௌபதியை, முற்று அறிந்து ஈந்திடவேண்டும்-எங்களைப் பற்றி முழுவதும் அறிந்த பின்னர்க் கொடுத்திருக்கவேண்டும்: (அங்ஙனன்றி) அளித்து உணர்தல்-கொடுத்தபின்னர் அறிய விரும்புதல், அரசர்க்கு-(சுயம்வரம் நாட்டிய) மன்னர்க்கு, முறையது ஆமோ-நேர்மையாகுமோ?" (ஆகாது) (எ-று).

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின் எண்ணுவ மென்ப திழுக்கு" என்றபடி திரௌபதியை எங்களுடன் அனுப்புவதற்கு முன்னர்ச் சோதித்திருத்தல் வேண்டும்: அங்ஙனன்றி, அவளைக் கொடுத்தபின் அறிதலென்பது அரச நீதியாகாது என்றான் யுதிட்டிரன். சொல்வதற்கு-குறிப்புவினையாலணையும் பெயர். தோகை-உவமவாகுபெயர்.

இதுமுதல் ஆறுகவிகள்-முதல் நான்கு சீர்கள் காய்ச்சீர்களும் மற்றையிரண்டு மாச்சீர்களுமாகிவந்த அறுசீராசிரியவிருத்தங்கள். (37)

38. துருபதன் மேலும் அவர்களைச் சோதித்தல்.

தூயவசென் றரசனீநீ தெருட்டுகென
விடுப்பவவன் றோன்றல் பாற்போந்
தாயபரி சுரைப்பவவன் அறிதுமெனப்
பலபண்ட மடல்விற் றூணி
சாயகமுங் கொடுத்தனுப்ப விரப்பவருக்
குளதெல்லாந் தந்து வெம்போர்க்
கேயபடைக் கலங்கொண்டா ரிதனலுந்
தெளியாம லின்னு மாய்வான்.

(இ-ள்). [யுதிட்டிரன் இங்ஙனம் கூறி] தூயவ!-புனிதராய புரோகிதரே! சென்று-(இங்கிருந்து) போய், நீ-நீர், அரசனை-துருபதமன்னனை, தெருட்டுக என-தெளிவிப்பீராக என்று கூறி, விடுப்ப-அனுப்ப, அவன்-அந்தப் புரோகிதன், தோன்றல்பால்-துருபதராசனிடத்து, போந்து-வந்து, ஆய பரிசு உரைப்ப-தான் ஆய்ந்தறிந்து வந்தவகையினை சொல்ல, அவன்-அத்துருபதன், அறிதும் என-மேலும் (ஐயம் தெளியப்) பரிசோதித்தறிவோம் என்று, பலபண்டம் அடல்வில் தூணி சாயகமும் கொடுத்து அனுப்ப-பல பொருள்களையும் [அவற்றோடு சேர] வலிய விற்களையும் அம்பறாத்தூணிகளையும் அம்புகளையும் கொடுத்துத் [தூதுவர் மூலம்] அனுப்ப, (அந்த ஐவரும்) இரப்பவருக்கு-யாசித்தவர்களுக்கு, உளது எல்லாம் தந்து-(அனுப்பிய) பண்டங்களெல்லாவற்றையும் கொடுத்து, வெம்போர்க்கு ஏய-கொடிய போரைச் செய்தற்குப் பொருந்திய, படைக்கலம் கொண்டார்-ஆயுதங்களைமட்டும் (தாங்கள்) எடுத்துக்கொண்டார்கள்: இதனலும்-இந்தச் செய்கையினலும், தெளியாமல்-[துருபதன் மனத்தில்] ஐயம் தெளியாதுபோக, இன்னும்-மேலும், ஆய்வான்-ஆராய்ந்து சோதிக்கத் தொடங்கினன்: (எ-று).

எல்லாத் திரவியங்களையும் கொடுத்து, யுத்தத்திற்குரிய படைக்கலங்களில் மனஞ் செலுத்திக்கொண்ட செயலிலிருந்தே இவர்களை க்ஷத்திரியர்களாகிய பாண்டவராயிருப்பரெனத் தெளிதல் வேண்டுமென்றபடி. தெருட்டுகென-வியங்கோளின் அகர வீறு தொகுத்தல்: தோன்றல்-ஆண்பாற் சிறப்புப்பெயர். ஆய-ஆய்ந்த. உளதெல்லாம்-ஒருமைப் பன்மை மயக்கம். (38)

39. துருபதன் அவர்களை இரதங்களில் ஏறிவரச் செய்து தழுவுதல்.

அந்தணரா தியவருணர்க் கமைத்த மணி
யிரதமளித் தவர்கள் தம்மை
மைந்தநீபோய்க் கொணர்தியென மற்றவன்புக்
கழைப்பவவர் மரபுக் கேயுஞ்
சந்தனமீ தடைந்தணங்குந் தாயுமொரு
தேரில்வரச் சார்ந்து மாமன்
வந்துதமைத் தழுவுறமற் றவனியிவர்
தழுவியவை மன்னி னரால்.

(இ–ள்.) [துருபதன் தன் மகனை நோக்கி] "மைந்த-மகனே! நீ—, போய்-சென்று, அந்தணர் ஆதிய வருணர்க்கு அமைத்த-பிராமணர்கள் முதலாய வருணத்தவர்களுக்கு என்று ஏற்படுத்தப் பட்ட, மணி இரதம் அளித்து-அழகிய தேர்களைக் கொடுத்து, அவர்கள் தம்மை-அந்த அந்தணர் ஐவரையும், கொணத்தி-அழைத்துக் கொண்டுவா" என-என்று கட்டளையிட, மற்று அவன் புக்கு அழைப்ப-(அங்ஙனமே)அவனும் சென்று அவர்களை யழைக்க, அவர்–அந்த ஐவரும், மரபுக்கு ஏயும் சந்தனம் மீது அடைந்து-தங்கள் அரச குலத்துக்கேற்பப் பொருந்திய தேர்களின் மீது ஏறிவந்து, அணங்கும் தாயும் ஒரு தேரில் வர-திரௌபதியும் குந்திதேவியும் ஒரு தேரில் ஏறிவர, சார்ந்து-துருபதனரண் மனையைச் சேர்ந்து, மாமன் வந்து தமை தழுவுற-மாமனராகிய துருபதன் எதிர்கொண்டு வந்து தம்மைத் தழுவியணைக்க, மற்று அவனி இவர் தழுவி-அதற் குப்பிரதியாக அந்த மாமனை இவர்கள் தழுவி, அவை மன்னினர்-சபையை யடைந்தனர்; (எ-று).ஆல் – ஈற்றசை வியப்புமாம்.

மரபுக்கேற்ப ஏயும் சந்தனம் என்றதால், க்ஷத்திரியர்க்கெனச் சமைந்த தேரில் ஏறிவந்தனர் என்பது குறிப்பு. சந்தனம்=ஸ்யந்தனம்: தேர்: வடசொல்.

ஒருவரையொருவர் எதிர் தழுவவே அரச குலத்தினரென்பது தேற்றம், அந்தணர் அரசரைத் தழுவாராதலின் என்க. (39)

40. அந்தண வடிவத்துடனிருந்த ஐவரும் தமது உண்மை வடிவொடு தோன்றுதல்.

தாயுடன்மா தந்தபுரந் தனிற்புகவு
மன்னவையி றவிசி னைவர்
மேயபொழு தைவரெனுந் துணிவல்லா
துளத்தையம் வேந்தன் மாறு
தாயவரை யுள்ளபரி சறைமினென
வினவமற் றவர்க டங்க
டூயவடி வொடுமவையோர் தோன்ற[ல்]விழி
மனங்களிப்பத் தோன்றி னரால்.

(இ-ள்) தாயுடன்-குந்தியோடும், மாது-திரௌபதி, அந்தப் புரம் தனில் புகவும்-அந்தப்புரத்தினில் சேரவும், மன்னவையின்-அரசசபையிடத்து, தவிசின்-ஆசனங்களில், ஐவர் மேய பொழுது-ஐந்து அந்தணவடிவத்தினரும் எழுந்தருளியபோது, ஐவர் என்னும் துணிவு அல்லாது-பஞ்சபாண்டவர்கள்தாம் இவர்கள் என்னும் நிச்சயம் ஏற்படாமல், வேந்தன் உளத்து ஐயம் மாறு-துருபதராசன் மனத்தில் சந்தேகம் நீங்காதிருப்பவே, ஆயவரை-அந்த ஐவரையும் (நோக்கி), உள்ள பரிசு அறைமின் என வினவ-உண்மையான [உங்கள்] தன்மையைச் சொல்லுங்கள் என்று கேட்ப, அவர்கள்-அந்த ஐவரும், தங்கள் தூய வடிவொடும்-தங்கள் [நிஜமான] புனித வடிவத்தோடும், அவை-அந்தச் சபையில், ஓர் தோன்றல் விழி மனம் களிப்ப-ஒப்பற்ற துருபதனின் கண்ணும் மனமும் மகிழும்படி, தோன்றினர்—; (எ-று). ஆல்-ஈற்றசை.

'அவையோர் தோன்றவிழி' என்றும் பாடங் காண்கின்றது. அஞ்ஞான்று, தோன்றல் என்பது ஈற்றுமெய் கெட்டு நின்று கூவிளங்காய்ச்சீராயதென்ன வேண்டும். (40)

41. திரௌபதி ஐவருக்கும் மனைவியாவள் என்று தருமன் கூறுதல்.

முன்னுருவ மெய்தியபின் முரசுயர்த்தோன்
நாற்றுவர்க்கு முன்னென் செய்த
இன்னலொடு முரைத்திடக்கேட் டிஃதூமென்
றின்சொல்புகன் றியாக சேனன்

தன்னிகர்பற் குனற்கின்றே தனிமணஞ்செய்
குவமென்னத் தருமன் கேளாக்
கன்னியையா மைவருமே கடிமணஞ்செய்
குவமென்னக் கழறி னனே.

(இ-ள்) முன்னுருவம் எய்திய பின்-முன்னைய [பழைய] பாண்டவராகும் ரூபத்தையடைந்த பின்னர், முரசுயர்த்தோன்-முரசக்கொடியை யுயரத்தூக்கிய தருமன், நூற்றுவர்க்கு முன்னேன்-[திருதராட்டிர புத்திரர்] நூறுபேர்களுக்குள் மூத்தவனாகிய துரியோதனன், செய்த-செய்திட்ட, இன்னலொடும்-துன்பங்களோடும், (தாங்கள் இருந்ததை), உரைத்திடக்கேட்டு-கூறியதைக்கேட்டு, யாகசேனன்-துருபதன், இஃது ஊழ் என்று இன்சொல் புகன்று-இஃது விதிவசத்ததாகும் என்று (தேறும்படி) இனிய சொற்களைப்பேசி, (மேலும்) தன்னிகர் பற்குனற்கு-தனக்குத்தானேயொப்பான அருச்சுனனுக்கு, இன்றே-இன்றைத்தினமே, தனிமணம் செய்குவம் என்ன-ஒப்பற்ற திருமணத்தைச் செய்வோம் என்று கூற, (அதனை) தருமன் கேளா-தருமபுத்திரன் கேட்டு, கன்னியை-திரௌபதியை, யாம் ஐவருமே-நாங்கள் ஐந்துபேருமே (அவளைக்) கடிமணம் செய்குவம் என்ன கழறினன்-கலியாணஞ் செய்துகொள்வோம் என்று உறுதிபடக் கூறினன்; (எ·று).

பற்குனன்-பங்குனி யுத்தரத்திற் பிறந்ததனால் பல்குனன் என்று பெயராயிற்று: அது பற்குனன் என வந்தது. இன்னலொடும்-உம், இசைநிறையுமாம்: கேளா-செய்யாவென்னும் வாய்பாட்டு உடன்பாட்டெச்சம். கடிமணம்-உரிச்சொற்றொடர். (41)

42. அதற்கு உடன்படாத துருபதனுக்கு வியாசர் அறிவுறுத்தலுறல்.

ஒருபதிமா தருக்கலதெண் ணிலருளரோ
வீஃதென்னென் றுறுக ணெய்துந்
துருபதவேந் துளத்தையந் தொலைத்திடுவான்
வியாதனெதிர் தோன்றி யாரும்

இருபதந்தாழ்ந் திருத்தணமே லிருந்தைவர்க்
கரசே!நின் னேழை தன்னைத்
திருமணமாற் றுதற்கியற்கை செப்புவன்கே
ளெனவெடுத்துச் செப்ப லானன்.

(இ-ள்) "மாதருக்கு - (ஒரு) கன்னிப்பெண்ணுக்கு, ஒருபதி அலது-ஒரு கணவனேயல்லாமல், எண்ணிலர் உளரோ-பலர் இருப்பரோ? இஃது என் என்று - இஃது என்ன (பழி) என்று, உறுகண் எய்தும் - துன்பத்தையடைகின்ற, துருபத வேந்து உளத்து ஐயம் - துருபதராசனின் மனத்துதித்த சந்தேகத்தை, தொலைத்திடுவான் - நீக்கும் பொருட்டு, வியாதன் - வியாச முனிவர், எதிர் தோன்றி-அவனுக்கு எதிரில் வந்து, யாரும் இருபதம் தாழ்ந்து-அனைவரும் (தமது) இரண்டு பாதங்களில் வீழ்ந்து வணங்கி, இருத்து அணைமேல் இருந்து-(எழுந்தருள வேண்டுமென) இட்டு வைத்திருந்த ஆசனத்தின்மேல் அமர்ந்திருந்து, "அரசே! - துருபத மன்னனே! நின் ஏழைதன்னை - உனது புதல்வியாகிய திரௌபதியை, திருமணம் ஆற்றுதற்கு - விவாகஞ்செய்து கொடுப்பதற்கான, இயற்கை-இயல்பினை, செப்புவன்கேள்-சொல்லுகிறேன்; கேட்பாயாக, என எடுத்து - என்று சிறப்புறத் தனியெடுத்து, செப்பலானன்-சொல்லத் தொடங்கினன்; (எ-று).

தொலைத்திடுவான்-வானீற்று வினையெச்சம். ஏழை - பெண்ணுக்குப் பண்பாகுபெயர். (42)

வேறு.

43—50. இனி, எட்டுக்கவிகள்—திரௌபதியின் முற்பிறப்பு வரலாறு கூறும்.

இப்பவத்தி னின்றவத்தா லழலிற் றோன்று
மெழிலனமுற் பவத்தினளா யினியாய்த் தோன்றி
யொப்பின்மறை மவுற்கல்லிய முனிவ னென்போற்
குரியமனை யவளானு ஞவனு மந்தத்
துப்பிதழாள் கற்புமன்பு முணர்வான் மாறுத்
துவக்குநோ யுடன்மூப்பின் றோற்றங் கொண்டான்
அப்படிவங் கொண்டுமிவண் முன்போ லேவ
லாற்றினண்மற் றவன்மீட்டு மறிவா னேர்ந்தாள்.

(இ-ள்). இ பவத்தின்–இந்தப் பிறப்பில், நின் தவத்தால்-உன்னுடைய தவச் சிறப்பினால், அழலில் தோன்றும்-அக்னியினின்று வெளிப்பட்ட, எழில் அனம்-அழகுடையஅன்னப் பறவை

போன்ற இந்தத் திரௌபதி, முன் பவத்தில்-முற்பிறப்பில், நளாயினியாய்த் தோன்றி-நாளாயணி என்ற பெயருடையவளாய்ப் பிறந்து, ஒப்பில்-நிகரில்லாத, மறை-வேதங்களில் வல்ல, மவுற் கல்லிய முனிவன் என்போற்கு-மௌத்கல்ய முனிவன் என்னும் பெயருடையவற்கு, உரிய மனையவள் ஆனள்-தக்க மனைவியாக ஆயினள்; உவனும்-அந்த மௌத்கல்ய முனிவனும், அந்தத் துப்பிதழாள் கற்பும் அன்பும் உணர்வான்-பவளம்போற் சிவந்த அதரத்தையுடைய அந்த மனைவியினது கற்பினையும் அன்புப் பிணைப்பினையும் அறிதற்பொருட்டு, மாறு துவக்கு நோயுடன்-குறையாத குட்ட நோயுடன், மூப்பின் தோற்றம் கொண்டான்-முதுமையை யுடையவனுகவும் வடிவுகொண்டான்: அப் படிவம் கொண்டும்-அத்தகைய (வெறுக்கத்தக்க) வடிவத்தையுடையவனு யிருந்தும், இவள்-இந்த நாளாயணி, முன்போல்-(இந்தவடிவங் கொள்வதற்கு) முன்னிருந்தது போலவே, ஏவல் ஆற்றினள்-(அவன்) கட்டளையிடும் பணிகளைச் செவ்வனே செய்துவந்தனள்: (இங்ஙனி நப்ப,) அவன்-அந்த மௌத்கல்ய முனிவன், மீட்டும் மேலும், அறிவான்-பரிசோதித்து அறியும்பொருட்டு, ஓர்நாள்-ஒருதினம்; (எ-று). ''போனகத்தில் விரல்விழுத்தான் என மேலிற்கவியிற் குளகமாய்த் தொடரும்.

அந்த மௌத்கலியன், நாளாயணியின் கற்பின் உறுதியையும் அன்பின் நிலையையும் சோதிக்கக் கருதி, மிகுந்த குஷ்ட நோயும் அதனுற் சிதைந்த வடிவமும், மிக்க கிழத்தனமும் அதனல் உடம்பில் துர்க்கந்தமு முடையவனுய்த் தோற்றங்கொண்டான். கற்பு-பதிவிரதா தருமம். துவக்கு நோய்-உடல் நோய்: `த்வக்-வட சொல்: தோல்: உடம்புக்கு இலக்கணை. அனம்-அன்னம் என்பதன் இடைக்குறை. அறிவான்-வினையெச்சம்.

இது முதல் ஒன்பது கவிகள்-ஒன்று இரண்டு ஐந்து ஆறுஞ் சீர்கள் காய்ச்சீர்களும் மற்றையவை மாச்சீர்களாகவும் வந்த **எண்சீராசிரிய விருத்தங்கள்.** (43)

44. போனகத்தின் விரல்விழுத்தான் றணிவிற் காமம்
பூண்டுமதன் பயனறியாப் பூவை யந்த
வானகத்தின் விரலகற்றிக் கூசா தன்பன்
வைத்திடுமிச் சிலேநுகர்ந்தாள் மகிணன் நோக்கித்
தானகத்தின் மகிழ்வெய்திப் பிணிகொ டோற்றந்
தணந்தனங்க னில்வடிவு தான்கொண் டாடுங்
கானகத்தின் மயிலனையா டன்னை நோக்கிக்
கவின்கொளருந் ததியொவ்வாக் கற்பி னுளே.

(இ-ள்). போனகத்தின் விரல்விழுத்தான்-[அந்த மௌத்கல்யன்] தான் உண்ணும் உணவில் அழுகிய தன் விரலை விழச் செய்தான்: தணிவில் காமம் பூண்டும் அதன் பயன் அறியாப் பூவை-அடங்காத காமவிச்சை கொண்டிருந்தும் அதனைச் சுவைத்து அநுபவியாமலிருந்த அந்த நாளாயணி, அந்த வானகத்தின் விரல் அகற்றி-அந்த மேலான விரலை அப்புறப்படுத்தி, கூசாது-சற்றும் அருவருப்புக் கொள்ளாமல், அன்பன் வைத்திடும் மிச்சிலை நுகர்ந்தாள்-கணவன் மிச்சப்படுத்திவைத்த சேடத்தை உட்கொண்டாள்: (இதனை) மகிணன் நோக்கி-கணவனுகிய முனிவன் பார்த்து, தான் அகத்தின் மகிழ்வு எய்தி-தன்னுடைய உள்ளத்தில் பூரிப்படைந்து, பிணிகொள் தோற்றம் தணந்து-குட்டநோய் கொண்டிருந்த வடிவினையொழித்து நீக்கி, அனங்கனில் வடிவு தான் கொண்டு-மன்மதனினும் (மிக்க அழகையுடைய) வடிவத்தைக் கொண்டு, ஆடும் கானகத்தின் மயில் அனையாள் தன்னை நோக்கி-காட்டிலே தோகை விரித்தாடுகின்ற மயில் போன்று மகிழ்ச்சிகொண்ட நாளாயணியைப் பார்த்து, "கவின்கொள் அருந்ததி ஒவ்வா கற்பினளே!-அழகுகொண்ட அருந்ததியும் ஒப்பாகாதபடி கற்பினிற் றலைசிறந்தவளே! (எ-று) [என விளித்து]-"வேண்டும் வரம் என்னெனினும் அளிப்பல்". என மேற்கவியோடு குளகமாய்த் தொடரும்.

ஒருநாள் முனிவன் உண்ட மிச்சிலில் அவனுடைய கைவிரலொன்று அழுகி அற்று விழுந்துகிடக்கக்கண்டு சிறிதும் அருவருப்புக்கொள்ளாமல் அவ்வுணவை அன்போடு உண்டனள் நாளாயணி, அங்ஙனம் அவள் நிலைகுலையாது வழிபட்டுவந்ததை அவன் பார்த்து மிகுந்த திருப்திகொண்டு தனது நோய் வடிவத்தையொழித்துத் தவமகிமையாற் காமனினுஞ் சிறந்த கட்டழகுடைய வடிவத்தைக் கொண்டனன் என்பதாம். பூவை-உவமவாகுபெயர். வானகம் - பெருமை, மேன்மை. இனி, "அந்த வால்நகத்தின் விரல்" எனக் கொண்டு, 'அந்த வெள்ளிய நகத்தோடு கூடியவிரல்' எனினுமாம். மகிணன் - மகிழ்நன் என்பதன் மரூஉ, அனங்கனில் - ஐந்தனுருபு உறழ்பொருவு. ஒவ்வா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். கற்பினுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு அருந்ததியாவாள். அவளையும் விஞ்சி நின்றுள் நாளாயணி என்பது குறிப்பு. (44)

45. வேண்டுவர மென்னெனினு மளிப்ப னின்னுள்
விழைந்தவர மூரைத்தியென மிளிர்வேற் போலு
நீண்டவிழி யினளுநின தின்ப போக
நீங்காமற் பெறும்வரமே நேர்க வென்னச்
சேண்டொடுமோங் கலுநதியு மரனு நீண்டச்
செழுங்கொடியு மாகியுயிர்த் திரள்க ளாகப்
பூண்டுருவ மிருவோரு மளவில் காலம்
புணர்ந்தின்பக் கலவிநலம் புசித்தார் மன்னே.

(இ-ள்) வேண்டும் வரம் என்னெனினும் - நீ விரும்புகின்ற வரம் எதுவாயிருந்தாலும், அளிப்பல்-(யான்) கொடுப்பேன்: நின் உள் விழைந்த வரம் உரைத்தி-நினது மனம் விரும்புகின்ற வரத்தைச் சொல்லுக, என-என்று முனிவன் கூற, மிளிர்வேல் போலும் நீண்ட விழியினளும் ஒளிர்கின்ற வேலாயுதம் போன்று நீண்ட கண்களையுடைய நாளாயணியும், நினது இன்ப போகம் நீங்காமல் பெறும் வரமே நேர்க என்ன - உம்முடைய கலவியின்ப சுகத்தை இடையறாது பெறும்படியான வரத்தை யருள்வீராக என்று கேட்க, (அவரும் அங்ஙனமே அருள) இருவோரும் - மௌத்கல்யரும் நாளாயணியும், சேண் தொடும் ஓங்கலும் நதியும் - வானத்தைத் தொடும்படியுயர்ந்த மலையும் (அதனைச்சார்ந்து பெருகுகிற) நதியும், மரனும் நீண்ட அச் செழுங் கொடியும் ஆகி-மரமும் (அதன் மேற்படரும்) செழித்த அந்தப் பூங்கொடியுமாய், [மேலும் இங்ஙனமே இன்றியமையாது பொருந்திய துணையாகி] உயிர்த்திரள்களாக உருவம் பூண்டு-பலவகையுயிர்க் கூட்டங்களாக உருவங்கள் தாங்கி, அளவில் காலம் புணர்ந்து-அளவில்லாத நெடுங்காலம் கூடியிருந்து, இன்பக் கலவிநலம் புசித்தார் - இன்பமயமான போகச் சுவைநலனைத் துய்த்தார்கள்; (எ-று). மன், ஓ-ஈற்றசை.

அம்முனிவன் குன்றுக வடிவுகொள்ள இவள் நதியாக வடிவு கொண்டு அதனைச் சார்ந்தும், அவன் மரவடிவுகொள்ள இவள் கொடிவடிவுகொண்டு அதனைத் தழுவியும், இவ்வாறு பற்பல உயிர்ப்பேதங்களில் அவ்வவற்றிற்குத்தக உருவம் பூண்டு புக்கு அவ்விருவரும் சுகானுபவஞ் செய்தனரென்க. "புசித்தார்" என்றது - 'உண்டற்குரிய வல்லாப்பொருளையுண்டதுபோலக் கூறலும் மரபே' என்ற விதிபற்றி. (45)

46 அருந்திநல மிறந்தபினு மிந்திர சேனை
யாகியிவள் அப்பதியை யடைந்தாண் மற்றோன்
பிரிந்துதவத் தகலவவ ளாற்ற தின்பம்
பெறநினைந்தைந் தெனுந்தொழிற்குப் பிராணை நோக்கி
வருந்திதவ மியற்றிடுநா ளவன்வந் தெண்ணம்
வகுத்தியெனப் பதிவேண்டும் வழங்கென் றைந்து
தரங்கேட்டா னைந்துபதி பெறுதி யென்றான்
சகத்தியல்போ வீஃதென்றுள் சம்பு சொல்வான்.

(இ-ள்) நலம் அருந்தி-கலவியின்பநலம் துய்த்து, இறந்த பினும்-மரணமெய்திய பின்னரும், இவள்-இந்த நாளாயணி, இந்திரசேனையாகி-இந்திரசேனையென்ற பேரையுடையவளாய், அ பதியை அடைந்தாள்-அந்த மௌத்கல்யமுனிவனையே வந்து சேர்ந்தாள்; மற்றோன்-அந்த முனிவன், பிரிந்து-அவளைப் பிரிந்து, தவத்து அகல-தவத்தை மேற்கொள்ளச்செல்ல, அவள்-அந்த இந்திரசேனை, ஆற்றாது-தாள முடியாமல். இன்பம் பெற நினைந்து-(மேலும்) கலவியின்பத்தைப்பெற எண்ணி, ஐந்து என்னும் தொழிற்குப் பிராண நோக்கி-பஞ்ச கிருத்தியங்களைச் செய்யும் சிவபிரானைக் குறித்து, வருந்தி-உடலை வருத்தமுற வாட்டி, தவம் இயற்றிடு நாள்-தவத்தைச் செய்யுங்காலத்து, அவன் வந்து-அச் சிவபிரான் தோன்றி, எண்ணம் வகுத்தி என-உன் நினைவினைத் தெளியச்சொல்வாய் என்று வினவ, (அதற்கு அந்த இந்திரசேனை) "பதிவேண்டும் வழங்கு" என்று—"எனக்குக் கணவன்வேண்டும் தருவாயாக" என்று, ஐந்து தரம் கேட்டாள்-ஐந்து முறை கேட்டாள்: (ஆகவே சிவபிரான்), ஐந்துபதி பெறுதி என்றான்-ஐந்து கணவன்மார்களைப் பெறுவாய் என்று வரங் கொடுத்தான்: (அதனைக் கேட்டு அவள்) இஃது சகத்து இயல்போ என்றுள்-இங்ஙன் நிகழ்வது இப் பூவுலகத்தியற்கைக்குத் தகுமோ என்று வினவினாள்; (அதற்கு) சம்பு-சிவபிரான், சொல்வான்-சொல்லலாயினன்; (எ. று.) சம்பு சொன்னதை மேலைக்கவியிற் காண்க.

இந்திரசேனை தவம் மேற்கொண்டதற்குக் காரணம்—முற் பிறப்பிற் கணவனை அந்த மௌத்கல்ய முனிவனையே பதியாகப் பெற அடுத்தாளாதலின், அவன் தவத்திற்கு இடையூறாக இந்திர சேனை தன்னை மணந்து கொள்ளுமாறு வேண்டவே, அன்னை "நீஎன் தவத்திற்கு இடையூறு புரிவதனால் நீபத புத்திரியாய்ப் பிறக்க, உன்னை ஐவர் மணப்பர்" என்று சபித்தாளாக, பிறகு சிவனை நோக்கித்தவம் புரிந்தாளென்று வியாச பாரதமும், தவம்

புரியுமாறு மௌத்கல்யன் கூறியதாகப் பால பாரதமும் கூறும்.

இவள் தவத்துக்கு உகந்த சிவபிரான் கட்புலனாக, இவள் "எனக்கு ஏற்ற கணவனைத் தருக" என்று ஆதரத்தால் ஐந்துதரம் அடுக்கிச் சொல்லி வேண்டினாள். [சிவபிரானும் "அப்படியே ஆகுக[2] என்று ஐந்து தரம் கூறி, அவள் ஐந்து கொழுநரைப் பெறும்படி அனுக்கிரகித்தனன் என்பது மேலைக்கவியால் விளங்கும்], சிவபிரானுக்குரிய ஐந்து தொழில்கள்-ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல்-இவற்றைப் பஞ்ச கிருத்தியங்கள் என்பது சைவசித்தாந்தம்- தொழிற்குப்பிராணை-நான்கனுருபு தகவுப் பொருளது. வகுத்தி-முன்னிலையேவல்வினை முற்று: வழங்கு, பெறுதி-முன்னிலை வியங்கோள் வினைமுற்றுக்கள். சம்பு-சுகத்தைத் தருபவன்; சிவன். (46)

47. ஐந்துதரங் கேட்டதனற் பதியைந் தாய
தப்பதியை வருபவத்தி னடைந்து மற்றோர்
முந்துபெறு மனிவியர்போ லுருவங் கொண்டு
மொய்குவை நீயவரவர்க்கு முறையா யின்பந்
தந்துநித்(தி)யக் கன்னிகையா யிருத்தி யென்று
தாணுசொலப் பதியிம்மை தன்னி னல்கென்
றிந்துநுதல் கேட்பவரன் கங்கை தோய்ந்தங்
கிருந்துகலும்ந் துசாவுவர்க்கொண் டெய்தி
லென்பால்.

(இ-ள்) ஐந்து தரம் கேட்டதனல்-ஐந்து முறை அடுக்கிச் சொல்லி வேண்டியதனல், பதி ஐந்து ஆயது-உனக்குக், கணவன் மார் ஐந்துபேர் ஆயினர்: அ பதியை-அந்த ஐந்து கணவன்மாரையும், வரு பவத்தின் அடைந்து-அடுத்த பிறப்பில் (ஐன்மத்தில்) சேர்ந்து, மற்றோர்-ஏனைய சாதாரண மக்கள், முந்து பெறு மனிவியர்போல் முற்பட்டுப் பெறுகின்ற மனிவிமார்களைப்போல, நீ-உருவங் கொண்டு-நீயும் தோற்றங்கொண்டு, மொய்குவை-அவர்களைக் கூடியிருப்பாய்: [மற்றும்] நீ-, அவரவர்க்கு-அந்த ஐந்து கணவன்மார்க்கும், முறையாய் இன்பம் தந்து-வரிசைப்படியே இன்பத்தைக்கொடுத்து, [பின்னரும்] நித்தியக் கன்னிகையாய் இருத்தி-நிரந்தரமான கன்னிப் பெண்ணாகவே யிருப்பாய், என்று தாணு சொல-என்று சிவபிரான் சொல்ல, (அதனைக் கேட்ட) இந்து நுதல்-இந்திரசேனை, (அவரை நோக்கி), இம்மை தன்னில் பதி நல்கு என்று கேட்ப-இந்தப் பிறப்பிலே எனக்குக் கணவ

ஞெருத்தனே அருளுவாய் என்று கேட்க (அதற்கு) அரன்-சிவபெருமான், கங்கை தோய்ந்து-[நீ போய்க்] கங்கையில் நீராடி, அங்கிருந்து கலுழ்ந்து அந்தக் கங்கை நீரில் நின்று கொண்டு தனியே அழுது, [அப்போது அங்கு வந்து உன்னை], உசாவுவர்க் கொண்டு-(காரணம் வினவிக் கொண்டே) விசாரிக்க வந்த வனை உன்னுடன் அழைத்துக் கொண்டு, என்பால் எய்தில்-என்னிடத்து வருவாயாஞல் ; (எ-று). "காட்டுவல் யான் பதியை" என மேற் கவியோடு குளகமாய்த் தொடரும்.

சிவபிரான் ஐந்து கொழுநரைப் பெறும்படி அனுக்கிரகித்தற்கு இந்த இந்திரசேனை மகிழாமல் தக்க ஒரு பதியைப் பெறும்படி பிரார்த்திக்க, பரமசிவன் "நீ ஐந்துதரம் வேண்டிய படி நான் உனக்கு ஐந்துதரம் அருளியது தவறாது ; ஆனல் அவ்வரத்தை அடுத்த ஜன்மத்தில் அநுபவிக்கும்படி அருள் செய்கிறேம்" என்று அனுக்கிரகித்து அவளைக் கங்கா நதியில் மூழ்கி வரும்படியும் அங்ஙனம் மூழ்கி வரும்பொழுது எதிரில் தோன்றி உசாவும் புருஷனைத் தன்னிடம் அழைத்து வரும்படியும் கூறியனுப்பினர் என்பது இங்கு அறியவேண்டிய விவரம். "மனைவியர் போல் உருவங் கொண்டு' என்றது-மானுட மகள் மனைவியானது போல உருவங்கொண்டு என்றபடி. 'தந்து நித்யக்' எனக் கொளின் காய்ச்சிர்க்கு நன்கு பொருந்தும். தாணு=ஸ்தாணு; சிவன். இந்து நூதல்-உவமைத்தொகையன் மொழி. உசாவுவர்க்கொண்டு-உயர்திணையிடத்து ஐயுருபுதொக்கது. (47)

48. காட்டுவல்யான் பதியையென விசைத்தங் கேகிக்
கங்கைபடிந் தரற்றிடுமக் கன்னி கண்ணீர்
மாட்டுருதா மரையான புதுமை பார்த்தவ்
வழிவரும்வா சவனழுமம் மாதை நோக்கிக்
கேட்டனன்றுன் பொழிப்பையெனி னுரைப்பனென்றுள்
கிளத்தொழிப்ப லெனவவளுங் கிலேசஞ் செய்தோன்
கோட்டுகயி லேக்கிரிவீற் றிருப்ப னன்னேன்
கூறுவனீ வருதியெனக் கொண்டு போந்தாள்.

(இ-ள்). [அரன் உசாவுவர்க் கொண்டு என்பால் எய்தில்] யான் காட்டுவல் பதியை என-நான் உன் கணவனுகுபவனைக் காட்டுவேன் என்று கூறி முடிக்க, அ கன்னி-அந்த இந்திர சேனை, விசைத்து அங்கு ஏகி-வேகமாக விரைந்து அந்தக்

கங்கைக் கரைக்குச் சென்று, கங்கை படிந்து-கங்கா நதியில் மூழ்கி, அரற்றிடும்-கதறியழுகின்றதாலான, கண்ணீர் மாட்டு-உரு-கண்ணீர் (கங்கையில் விழ) அதனினின்று தோன்றிய உருவம், தாமரையான புதுமை - பொற்றாமரையான விந்தைச் செயலை, அவ் வழி வரும் வாசவன் பார்த்து–அந்த கங்கைக் கரையின் வழியே வந்த இந்திரன் பார்த்து, அழும் அ மாதை நோக்கி-அழுகின்ற அந்த இந்திரசேனையைப் பார்த்து, கேட்டனன்-காரணம் வினவினன்: [அதற்கு அவள்) துன்பு ஒழிப்பை எனின் உரைப்பன் என்றாள்-என் துன்பத்தை நீக்குவதாயிருந்தால் சொல்லுகிறேன் என்றாள்: [இதனைக் கேட்ட இந்திரன்] கிளத்து ஒழிப்பல் என-சொல்வாயாக: நான் உன் துன்பத்தை நீக்குகிறேன் என்று கூற, அவளும்-அந்த இந்திரசேனையும், கிலேசம் செய்தோன்-துன்பத்தை விளைவித்தவன், கோடு கயிலை கிரி வீற்றிருப்பன்-சிகரங்களைக் கொண்ட கைலாய மலையில் எழுந்தருளியிருப்பன் : அன்னோன்–அந்தச் சிவபிரான், கூறுவன்-[என் அழுகைக்குக்] காரணம் கூறுவான்: நீ வருதி எனக் கொண்டு போந்தாள்-நீ [என்னுடன்] வருவாயாக என்று கூறி அவ்விந்திரனையும் உடன்கொண்டு [சிவபிரானிடம்] போனாள்; (எ-று).

சிவபெருமான் ஆணைப்படியே சென்ற இந்திரசேனை அப்பொழுதே ஒரு பதியைப் பெறாமல் மறுபிறப்பில் ஐந்து பதிகளைப் பெறவேண்டுமேயென்று கொண்ட சோகத்தோடு கங்கையில் முழுகியெழுகையில், அவளது விழிகளினின்று பெருகிய கண்ணீர் கங்கையில் விழுந்து பொற்றாமரையான விந்தைச் செயலை அங்கு வந்த இந்திரன் பார்த்து "இது என்ன?" என்று வினவிக் கொண்டு அவளையடுத்தனன். அவள் அவனைத் தன்னுடன் வந்து செய்தியறிந்து கொள்ளும்படி சொல்லியழைக்க, அவ்வாறே அந்த இந்திரன் அவளைத் தொடர்ந்து சிவபிரானிடம் சென்றான் என விவரம் அறிக.

கண்ணீர் மாட்டு-மாடு, ஏழனுருபு, கிளத்து-முன்னிலையேவல். ஒழிப்பல்-தன்மையொருமை, வருதி-முன்னிலை வியங்கோள். (48).

49. இந்திரநீ யிவளைமணந் திடுகென் றீசன்
இயம்பவவன் மறுத்தலுமே யெம்முன் வந்தும்
வந்தனைசெய் திலைமொழியுந் தடுத்தாய் உன்றன்
வலியுணர்தும் எனச்சீறி மதத்த நின்போல்

முந்துறவான் புரந்தவர்க ணால்வ ரிந்த
முழையுளர்வீ முடனென்ன மொழிந்தான் வீழ்ந்தங்
கெந்தையருட் புரிதியென நால்வரோடும்
இவனுமிறைஞ் சிடவருள்கூர்ந் தீசன் மீட்டும்.

(இ-ள்.) 'இந்திர–தேவேந்திரனே! நீ—, இவனை-இந்த இந்திர சேனையை, மணந்திடுக-விவாகம் செய்துகொள்வாயாக, என்று ஈசன் இயம்ப-என்று சிவபெருமான் சொல்ல, அவன்-அந்த இந்திரன், மறுத்தலும்—, 'எம் முன் வந்தும்-என் முன்னர் வந்த போதும், வந்தனை செய்திலை-வணக்கஞ் செலுத்தவில்லை; மொழியும் தடுத்தாய்-கூறியவார்த்தையையும் மறுத்தாய்: உன்றன் வலி உணர்தும்-உன்னுடைய வலிமையைக் காண்போம், எனச்சீறி-என்று கோபித்து, ''மதத்த-செருக்குக்கொண்ட, நின்போல்-உன்னைப்போல, முந்துற வான்புரந்தவர்கள் நால்வர்-முன்னமே பொருந்திய இந்திரர்கள் நான்குபேர், இந்த முழை உளர்-இந்தப் பிலத்துள் இருக்கின்றனர்: (நீயும்) உடன் வீழ் என்ன மொழிந்தான்—[அந்நால்வருடன்] சேர அப் பிலத்துள் வீழ்ந்து கிடப்பாய் என்று சொல்லினன்; (அங்ஙனமே) அங்கு வீழ்ந்து-அந்தப் பிலத்தினுள் விழுந்து, (பின்பு) நால்வரோடும் இவனும் 'எந்தை அருள் புரிதி' என இறைஞ்சிட-நான்குபேரோடு இவனும் சேர்ந்து 'எம் தந்தையாகிய கடவுளே! அருள்புரிவாயாக' எனப் பிரார்த்தித்து வணங்க, ஈசன்—சிவபெருமான், அருள்கூர்ந்து - கிருபைசெய்து, மீட்டும்-மேலும்; (எ-று) 'வல்லிவிரக மொழித்திடுமின் என விடுப்ப' என மேற்கவியில் குளகமாய்த் தொடரும்.

'வந்தனை செய்திலை' என்றது-இந்திரசேனையுடன் தொடர்ந்து செல்லுகையில், அங்கு மனைவியுடன் சூதாடிக்கொண்டிருந்த சிவபிரானை மதியாது அலட்சியஞ்செய்து செருக்கிப்பேசினது. சிவபிரான் இந்திரனை நோக்கி 'இனி இப்படி ஒருபோதும் உபேக்ஷைசெய்யாதே' என்று அறிவு கூறி ஒருமலையிடையிலுள்ள ஒரு குகையைக்காட்டி, 'உன்னைப்போன்றவர்கள் அடங்கிய இதற்குள் நீயும் செல்' என்று சொல்ல அவன் சற்றுத்தாமதிக்க, சிவபிரான் சினங்கொண்டு விழித்துப்பார்த்து ''நீ இளமையினால் என்னை அவமதித்தது பற்றி, இதற்குள் நுழை'' என்று அதட்டி வலியப்புகுத்த, கூப்பிய கையனாய் அவன் உட்புகுவானினன் என முதனூலில் விவரம் காண்க. வான் புரந்தவர்கள்-இந்திரர். முழையுள் முந்துற இருந்த இந்திரர் நால்வர்-விச்வபுக், பூததாமா சிபி, சாந்தி என்பவர்; பிந்திய இந்திரன் பெயர், தேஜஸ்வி என்பது. மதத்த-மதம் என்பதனடியாகப்பிறந்த பெயரெச்சம்; மதம்-செருக்கு. (49)

50. மேதினியிலேவரும்போ யுதித்திவ் வல்லி
விரகமொழித் திடுமினென விடுப்ப வந்தே
பூதலத்தி லிவரைவ ராக வந்தப்
புரந்தரரை வருந்தோற்றம் புரிந்தார் கூற்றே
மாதருமன் வளிவீமன் சுஞ்சிபார்த்தன்
மருத்துவரே நகுலஞ்சொடு வருஞ்சா தேவ
னேதுமிவ ரைவருக்கு மவரே தாதை
உன்கணிந்திர சேனையும்வந் துதித்தா ளன்றே.

(இ-ள்) மேதினியில்-பூவுலகத்தில், ஐவரும் போய் உதித்து-நீங்கள் ஐந்து இந்திரர்களும் போய் அவதரித்து, இ வல்லி விரகம் ஒழித்திடுமின் என விடுப்ப-இந்த இந்திரசேனையென்ற பெண்ணின் காமநோய் தாபத்தை நீக்கிடுமின் எனச்சொல்லியனுப்ப, (அங்ஙனமே) அந்தப் புரந்தரர் ஐவரும்-அந்த இந்திரர்கள் ஐந்து பேரும், பூதலத்தில் வந்தே-பூவுலகத்திற்கு வந்து, இவர் ஐவராக-இந்தப் பாண்டவர் ஐவராக, தோற்றம் புரிந்தார்-அவதரித்தார்கள்; கூற்றே-யமதருமராசனே, மா தருமன்-சிறந்த தருமபுத்திரன் [ஆவன்]: வளி-வாயு, வீமன்-பீமசேனன் [ஆவன்]: சுஞ்சி-இந்திரன், பார்த்தன்-அருச்சுனன் [ஆவன்]: மருத்துவரே-அசுவினீ தேவர்களே, நகுலஞ்சொடு வரும் சாதேவன்-நகுலசகதேவர்கள் [ஆவர்]: [எப்படியெனில்] ஒதும் இவர் ஐவருக்கும்-சிறப்பித்துப் பேசப்படுகிற இந்தப் பாண்டவரைவர்க்கும், அவரே தாதை-அவர்களே [முறையே] தகப்பனுராவார்கள்: உன்கண்-உன்னிடத்து, இந்திரசேனையும்வந்து-இந்திரசேனையும் திரௌபதியாக வந்து, உதித்தாள்-தோன்றினாள்; (எ.று) அன்றே-தேற்றம்.

சிவபெருமான் கூறியபடியே அந்த இந்திரர்கள் ஐவரும் மேதினியில் பிறப்பவராயினர். அப்பெருமான் அவர்களை நோக்கி "என்னை மதியாத குற்றத்தால் நீங்கள் ஐவரும் பூலோகத்தில் மநுஷ்யராசராய்ப் பிறந்து, இராசகன்னிகையாக மறுபிறப்பெடுக்கும் இவளொருத்தியை மணம் புரிந்துகொண்டு, துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனஞ் செய்து குற்றந்தீர்ந்து மீண்டும் விண்ணுலகமடைவீர்" என்று கட்டளையிட, அவ்விந்திரர் ஐவரும் "நாங்கள் மானுடப்பிறப்பெடுக்கையில் எங்கட்கு யமனும் வாயுவும் இந்திரனும் அசுவினீதேவர்களும் தந்தையராகுக" என்று வேண்ட, முக்கட்கடவுள் அங்ஙனமே அருள்செய்து அவர்கட்கு இம்மங்கையை மனையாளாகுமாறு நியமித்தான் என்ற விவரத்தை முதனூலால் அறியலாம்.

வல்லி – வல்லிக்கொடி போன்ற இந்திரசேனை: உவமவாகு பெயர். சுஞ்சி - இந்திரன், மருத்துவர் - தேவவைத்தியர்களாகிய அசுவினீதேவர். (50)

51. வியாசர் வார்த்தையால் துருபதன் மனந்தெளிந்து தன் மகளை ஐவர்க்கும் மணம்புரிவிக்கத் தொடங்கல்.

கனலுதித்தாட் கிவரைவ ரன்ப ராய
கருமமுணர் கெனஞானக் கண்ணு மீந்தான்
அனையவிழி கொடுபார்த்தங் குளத்தி னைய
மகன்றுவகை யொடுமன்ற லயர்வான் வேந்தன்
மனதினினைந் தொற்றேவத் துவரை வாசன்
வந்தணங்கும் பாண்டவரும் வனைவான் பற்பூண்
புனைமௌலி யினிதளித்தான் துருப தேயன்
பொருந்துதினந் தனில்வதுவை புரிவித் தானே.

(இ–ள்) கனம் உதித்தாட்கு – அக்னியினின்று தோன்றிய இந்தத்திரௌபதிக்கு, இவர் ஐவர் அன்பர்-இந்தப் பாண்டவரை வரும் கணவராவர்: ஆய கருமம் உணர்க உன - அங்ஙனுகிய பூர்வீக வரலாற்றுச்செயலைத் தெளிய அறிவாயாக என்றுகூறி, (வியாசர் மேலும்), ஞானக்கண்ணும் ஈந்தான் - ஞானக் கண்ணையும் கொடுத்தருளினன்; (ஆகவே) அனைய விழிகொடு பார்த்து - அப்படிப்பட்ட ஞான விழியைக்கொண்டு பார்த்து, அங்கு உளத்தின் ஐயம் அகன்று-அப்போது மனத்தில்தோன்றிய சந்தேகம் நீங்கி, வேந்தன் - துருபதராசன், உவகையொடு - மகிழ்ச்சியோடு, மன்றல் அயர்வான் - விவாகம் செய்விப்பவனாய், மனதில் நினைந்து - மனப்பூர்வமாக நிச்சயித்து, ஒற்று ஏவ - தூதுவர்களை [ச்செய்தி தெரிவித்துவர] அனுப்ப, துவரை வாசன் வந்து - துவாரகையை வாழிடமாகக்கொண்ட கண்ணபிரான் வந்து, அணங்கும் பாண்டவரும் வனைவான் - திரௌபதியும் பாண்டவர்களும் அலங்கரித்துக்கொள்ளும் பொருட்டு, பல்பூண் - பல ஆபரணங்களையும், புனைமௌலி - சூட்டிக்கொள்ளுதற்குரிய கிரீடங்களையும், இனிது அளித்தான் - அன்போடு கொடுத்தான் துருபதேயன் - துருபதராசன், பொருந்து தினம் தனில் - தகுதி யான நல்லதோர் சுபதினத்தில், வதுவை புரிவித்தான் - விவாகம்-செய்யத்தொடங்கினன்; (எ. று.)

பாண்டவரைவரும் திரௌபதியும் என்ற இவர்களது முற்பிறவி வரலாற்றை வியாசன் துருபதனுக்கு எடுத்துக்கூறித்

தெளிவித்ததுமல்லாமல், இவ்வுண்மையை அத்துருபதன்தானே தெளிந்துகொள்ளும்படி அவனுக்குத் திவ்வியமான ஞானக் கண்ணையும் தனது தவமகிமையால் அருளினன் என்பதாம். இனி இவ்வரலாறு முழுவதையும் வியாசன் துருபதனைத் தனியே அழைத்துச்சென்று அவனுக்கு மாத்திரமே கூறினனென முதனூல் தெரிவிக்கும்.

துவரை - துவராபதி: மரூஉ. வேனவான் - விளையேச்சம். பூனமௌலி - வினைத்தொகை. (51)

52. பாண்டவரைவரும் கலியாண மண்டபஞ் சேர்தல்.

வேத வேதரும் வேந்தரும் தொக்குற
வாதி யாரணத் தோடிய மார்த்தெழக்
கோதி லாக்குணக் கொற்றவ ரைவருஞ்
சோதி மாமண மண்டபந் துன்னினர்.

(இ.ள்.) வேத வேதரும்-வேதத்தில் வல்ல அந்தணர்களும், வேந்தரும்-அரசர்களும், தொக்குற-திரண்டிருப்ப, ஆதி ஆரணத் தோடு-பழைய மறைகளின் ஒலியோடு, இயம் ஆர்த்துஎழ-வாச்சியங்கள் ஆரவாரித்து ஒலிக்க, கோதிலாக் குணக் கொற்றவர் ஐவரும்-குற்றமற்ற நற்குணங்களையேயுடைய அரசராகிய பாண்டவரைவரும், சோதி மாமண மண்டபம் துன்னினர்-ஒளிபொருந்திய சிறந்த திருமண மண்டபத்தையடைந்தனர்; (எ.று).

ஆரண ஆர்ப்பு - வேதகோஷம், கோதிலா - ஈறுகெட்ட எதிர் மறைப்பெயரெச்சம்.

இதுமுதல் ஏழுகவிகள்-பெரும்பாலும்முதற் சிரொன்று மாச்சீரும், மற்றவை விளச்சீர்களுமாகிய கலிவிருத்தங்கள். (52)

53. தருமனுக்கும் திரௌபதிக்கும் நடந்த விவாகத்தை இது முதல் மூன்று கவிகளிற் கூறுகிறார்.

அன்ன காலை யருளறன் மைத்தனை
மன்று பொற்றவி சேற்றி யலத்தக
வன்னி தோற்றிய மாமயி றன்னைவைத்
துன்ன ருஞ்சடங் குள்ளவை யாற்றினர்.

(இ-ள்.) அன்ன காலை-[மணமண்டபத்தை யடைந்த] அந்தப் பொழுதில், அறன் - தருமதேவதையாகிய யமன், அருள் - பெற்ற,

மைந்தனை - தருமபுத்திரனை, மன்று – [அரசர்கூடிய] சபையில், பொன் தவிசு ஏற்றி-அழகிய பொன்னாலான ஆசனத்தில் உட்கார வைத்து, அலத்தகம் - செம்பஞ்சுக்குழம்பு ஊட்டி அலங்காரஞ் செய்யப்பட்டிருந்த, வன்னி தோற்றிய மாமயில் தன்னை-அக்கினியி னின்று பிறந்த சிறந்தமயில் போன்ற சாயலினையுடைய திரௌ பதியை, வைத்து - (அத் தருமபுத்திரனுக்கு) வலப்பக்கத்து இருத்தி, உன்ன அரும் சடங்கு உள்ளவை - நினைத்தற்கும் அரிய செய்யவேண்டிய திருமணச் சடங்குகளை, ஆற்றினர் - தௌமிய முனிவன் முதலாயசிரேட்டர்கள் செய்யத்தொடங்கினர்; (எ.று).

சடங்குகள் - திருமாங்கலியதாரணம், தீவலம்வருதல், பொரி சிந்துதல் போன்றவை, இவை மேலிரண்டு செய்யுட்களில் கூறப் படும். அலத்தகம்-செம்பஞ்சுக்குழம்பு: மணமகளுக்கு அலங்காரஞ் செய்தற்கு உபயோகிக்கப்படுவது. 'அலத்தக மாமயில் தன்னை' எனக்கூட்டிப் பொருள்முடிவு செய்துகொள்க., இனி 'அலத்தக வன்னி' என்பதற்குச் செம்பருத்தி போற்சிவந்த அக்னி' எனப் பொருள்கொள்ளலுமாம், மயில்-உவமவாகுபெயர். (53)

54. மங்க லம்பல வாய்ந்தவண் மாமரு
மங்க லம்புனை மாமுலை மீதொளிர்
மங்க லம்புனைந் தானருள் வாய்தரு
மங்க லந்தம னத்தறன் மைந்தனே.

(இ-ள்.) மங்கலம் பல வாய்ந்தவள் - பலமங்களங்களும் ஒருசேரத்தங்கப்பெற்றவளாகிய திரௌபதியினது, மா–சிறந்த மருமம் – மார்பிடத்து, கலம் புனை மா முலை மீது-முத்தாரம் புனைந்த பருத்த முலையின்மீது, ஒளிர் மங்கலம் புனைந்தான் - விளங்குகின்ற திருமாங்கலியநாணை யணிவித்தான் : [யாவ னெனில்] அருள்வாய்-கருணையிடத்து (கருணையோடு), தருமம் கலந்த–அறமும் சேர்ந்திருக்கின்ற, மனத்து - மனதினையுடைய, அறன்மைந்தன் - தருமபுத்திரன்; (எ.று).

வடத்தோடு விம்முமுலையாதலின் 'கலம் புனைமாமுலை' என்றது. மங்கலம்-மங்கலநாண்; திருமாங்கலியம், தாலி. "அருள் வாய் தருமம் கலந்த" என்றது அருளும் அறனும் ஒருசேர வாய்க்கப்பெற்ற என்றபடி. வாய்-ஏழனுருபு. (54)

55. செந்த முல்வலஞ் செய்துவித் தொண்பொரி
சிந்தி மற்றுள செய்பொருண் முற்றியே
வந்து கும்பிடத் தௌமிய ரதிய
அந்த ணர்பல ராசிசொற் ரூரரோ.

(இ-ள்.) செந்தமுல் வலம் செய்து - ஓமாக்னியைப் பிரதட்சிணஞ்செய்து, வித்து ஒள் பொரி சிந்தி - நெல்லினுலாகிய வெள்ளிய பொரியைக் (கையினுல் அக்கினியில்) சொரிந்து, மற்று உள செய்பொருள் முற்றி-மற்றுஞ்செய்யத்தக்கனவாயுள்ள சடங்குகளையும் செய்து முடித்து, வந்து - இருவருமாய் வந்து, கும்பிட - நமஸ்கரிக்க, (அப்போது) தௌமியன் ஆதிய அந்தணர் பலர்-தௌமியன் முதலாகிய பிராம்மணர்கள் பல்லோர், ஆசி சொற்ரூர் - ஆசிர்வாதவசனங்கள் சொல்லி வாழ்த்தினர்; (எ.று). அரோ-ஈற்றசை.

செந்தழல் வலஞ்செய்தல் – பாணிக்கிரகணத்தின்பின் மணமகன் தன் கையால் மணமகளது கையைப் பற்றிக்கொண்டு அக்கினியை வலம் வருதல், ஒரு சடங்கு. மற்றொரு சடங்கு-நெற்பொரிகொண்டு ஓமஞ்செய்தல். இது 'லாஜஹோமம்' எனப்படும். மற்று உள செய்பொருள் - அம்மி மிதித்தல், அருந்ததி காட்டுதல்போல்வனவும் மற்றும் மந்திரபூர்வமாகச் செய்யும் ஓமாதிகளும். (55)

56. பின்பு திரௌபதிக்கும் வீமன் முதலிய நால்வர்க்கும் தனித் தனியே திருமண நிகழ்தல்.

நாட்டு மவ்வணம் நால்வரும் அத்தினம்
வேட்டு ளார்வட மீனினுங் கற்பினைக்
காட்டு நித்திய கன்னியை நூல்வழி
தோட்டு மாமலர் தொங்க லணிந்தரோ.

(இ-ள்) நாட்டும் - நிர்ணயித்தபடியே, அ வணம் - தனித் தனியாக, நால்வரும் - வீமன் முதலிய நான்குபேரும், அத்தினம்-அன்றைத்தினத்திலேயே, வடமீனினும் கற்பினைக் காட்டும் நித்திய கன்னியை-அருந்ததியினும் கற்பினிற் சிறந்து விளங்கும் நிரந்தரமான கன்னிகையை, நூல்வழி – சாத்திர விதிப்படியே, தோடு மா மலர் தொங்கல்-இதழ்களோடுகூடிய சிறந்த மலர்களாலாகிய மணமாலையை, அணிந்து - அணிவித்து [சூட்டுவித்து], வேட்டுளார்–மணஞ்செய்துகொண்டார்கள்; (எ-று).

'அவ்வணம்' என்றதனாலே – நால்வரையும் தனித்தனியே மணம் செய்யும்போது ஒவ்வொருவர்க்கு ஒவ்வொருமுறை அக்கினி பிரவேசஞ்செய்து மீண்டு எழுந்தனளென்க. அக்கினி பிரவேசஞ் செய்ததால்தான் ''வடமீனினும் கற்பினைக்காட்டும் நித்திய கன்னியை'' என்றது. ஒவ்வொருவரையும் மணஞ்செய்யும்போது கன்னிகையாயிருத்தல் வேண்டுமாதலால், அதன்பொருட்டுத் தீக் குதித்து எழுந்தனளென்க. 'நூல்வழி' என்றவிடத்து 'நூல்' என்றது திருமங்கலியநாணையும் குறிப்பாக உணர்த்துவதாகும். (56)

57. துருபதன், மருமக்களுக்குப் பலவகை வரிசைகளையளித்தல்.

ஆர முல்கரி யாகத் துருபதன்
நீர ளித்தந் நிருபருக் கேயபொற்
றேரும் யானையும் வாசியுஞ் சேனையும்
பாரும் மாதன மும்பல நல்கினன்.

(இ-ள்) ஆர் அமல் கரியாக - மிக்க அக்னியே சாட்சியாக, துருபதன் – துருபதராசன், நீர் அளித்து - (திரௌபதியைத்) தாரைவார்த்துக்கொடுத்து, அ நிருபருக்கு ஏய – அந்த அரசர் களாகிய மருமக்களுக்கு ஏற்பப் பொருந்திய, பொன் தேரும்- அழகிய தேர்களையும், யானையும்-யானைகளையும், வாசியும்-குதிரை களையும், சேனையும்-காலாட்படைகளையும், பாரும் - நிலபுலங்களை யும், மா தனமும்-சிறந்த பெரிய செல்வங்களையும், பல-இன்னும் பலவற்றையும், நல்கினன்-கொடுத்தான்; (எ-று).

கன்னிகையின் தந்தை மந்திரபூர்வமாகத் தானநீரைத் தன் கையால் மருமகன் கையில் வார்த்துக் கன்னிகாதானஞ் செய்ய, அதனை அவன் ஏற்றல் இயல்பு. கரி–சாக்ஷி. நால்வகைப் படை களையும் நல்கினன் என்றவிடத்து ஒவ்வொன்றுக்கும் உம்மை கொடுத்துக் கூறியது அவற்றின் தனித்தனி எண்ணிக்கை மிகுதி தெரிப்பதற்கு என்க. (57)

58. பாண்டவரின் செய்தியை ஒற்றரால் அறிந்து யாவரும் வருத்தமற்றிருத்தல்.

வாட்ட டங்கண் மகிழ்ந்திட நூல்வழா
வேட்ட வின்பம் விழுங்கித் துருபத
னுட்டி லேவரு நண்ணிய தொற்றராற்
கேட்டி யாருங் கிலேசமற் றூரரோ.

(இ-ள்) வாள் தட கண் - ஒளிபொருந்திய விசாலமான கண் களையுடைய திரௌபதி, மகிழ்ந்திட - களிக்கும்படி, நூல்வமா-சாத்திர நூல்முறை வழுவாதபடி, வேட்ட - சடங்குகளைச் செய்து திருமணஞ்செய்துகொண்டதலைான, இன்பம்-சுகானுபவ இன்பத்தை, விழுங்கி-முற்றும் அநுபவித்துக்கொண்டு, துருபதன் நாட்டில்-துருபதனது பாஞ்சாலதேசத்தில், ஐவரும் நண்ணியது-பாண்டவர்கள் ஐவரும் சேர்ந்திருத்தலை, ஒற்றரால் கேட்டு-வேவுகாரர்களால் கேள்விப்பட்டு, யாரும் - எவரும், கிலேசம் அற்றூர்-வருத்தம் நீங்கினர்; (எ-று) அரோ-ஈற்றசை.

அரக்கு மாளிகையில் எரிந்து இறந்துபோகாமல் தப்பிப் பாண்டவர்கள் பாஞ்சால நகரத்தில் விவாகத்தைப்பெற்று மீண் டும் முளைத்துத் தோன்றியுள்ளார்கள் என்ற செய்தி ஒற்றரால் கேள்வியுற்று அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர் என்பது கூறப் பட்டது. வாட்டடங்கண்-அடையடுத்த சினையாகுபெயர். வமா-வமாது: ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். நண்ணியது-தொழிற்பெயர், கேட்டியாரும்-குற்றியலிகரம். (58)

வேறு

59. துரியோதனுதியர் [துட்ட சதுட்டர்] மட்டும் பாண்டவரை அமரிற்கொல்ல எண்ணங்கொண்டிருத்தல்.

அவ்வா றுணர்ந் தங்கேச னுமடன்மா மனுமுனிவின்
வெவ்வா ரழ னிகர்தம்பியும் விடநாகமே தனனும்
எவ்வா றிடர் செய்தேமவ ரிறந்தாரிலை யினிசூ
தொவ்வாத மரிற்கொல்வதொன் றுளதென்னவி ருந்தார்.

(இ-ள்) அவ்வாறு உணர்ந்து - பாண்டவர் இறவாது [பாஞ்சால நகரின் துருபதனது அரண்மனையில் அவன் மகளைத் திருமணஞ்செய்து கொண்டு] சுகமாக உள்ளார் என்பதை யறிந்து, அங்க ஈசனும்-அங்கநாட்டுக்குத் தலைவனுகிய கர்ண னும், அடல் மாமனும்-வஞ்சனையில்வலிய சகுனியும், முனிவில்-கோபத்தில், வெவ் ஆர் அழல்நிகர் - கொடிய மிக்க நெருப்பினை யொத்திருக்கின்ற, தம்பியும் - துச்சாதனனும், விட நாக தனனும் - விஷத்தையுடைய பாம்பைக் கொடியில் எழுதித்தூக்கிய துரியோதனனும், 'எவ்வாறு இடர் செய்தேம் அவர் இறந்தார் இலை - எவ்வளவு வகைகளில் துன்புறுத்தினேம், ஆனல் அந்தப் பாண்டவர்கள் இறக்கவில்லையே; (ஆகையால்) இனி-இனிமேல், சூது ஒவ்வாது-வஞ்சனை வழிகளில் அவரையொழிப்பதென்பது

பொருந்தாது: அமரில் கொல்வது ஒன்று உளது·போர்செய்து அப் போரில் அவர்களைக் கொல்வதென்பதோர் வழியுளது·· என்ன இருந்தார்-என்று ஆலோசித்து இருந்தார்கள்; (எ-று.)

அங்கேசன்-கர்ணன்: அங்க+ஈசன்=அங்கேசன்: குணசந்தி பெற்ற வடமொழித் தொடர்.

இது முதல் நான்குகவிகள் - பெரும்பாலும் நான்காஞ் சீரொன்று மாச்சீரும், மற்றவை மூன்றும் மாங்கனிச்சீர்களுமாகி வந்த கலிவிருத்தங்கள். (59)

60. திருதராட்டிரன் விதுரனையனுப்பிப் பாண்டவர்களை அத்தினை புரிக்கு வரவழைத்தல்.

முழுதுந்தெரிந் தப்பான்மைகண் முன்னேனெடு விதுரன்
விழைவோடுரை செயமற்றவன் மேற்செய்கையெண்
ணுறுவான்
பழுதிற்கனிட் டனையுய்த்தனை பயின்றுன்கன னுடன்பாம்
பெழுதுங்கொடி யவன்வந்தவ ணிறைஞ்சிப்புகல் கின்றுன்.

(இ-ள்) அப்பான்மைகள் முழுதும் தெரிந்து-துட்டசதுட்ட ருடைய எண்ணங்கள் முழுவதையும் அறிந்து, விதுரன்—,முன்னே னெடு - தனக்கு முன்பிறந்தவனை திருதராட்டிரனெடு, விழை வோடு - ஆதரத்தோடு, உரை செய - சொல்ல, அவன் - அத்திருத ராட்டிரன், மேல் செய்கை எண்ணுறுவான்-மேலே தான் செய்ய வேண்டிய காரியத்தைப்பற்றி யோசிப்பவனும், பழுது இல் கனிட்டனை உய்த்து-குற்றமற்ற தம்பியாகிய விதுரனைப் பாண்ட வரிடம் [அவர்களையழைத்துவருமாறு] அனுப்பி, அனை பயின் றுன்-படுக்கையிற் சயனித்தான்; (அப்போது) பாம்பு எழுதும் கொடியவன் கனனுடன் வந்து - துரியோதனன் கர்ணனெடும் வந்து, அவண்-அந்தப் படுக்கையிடத்து, இறைஞ்சி-(தந்தையை) வணங்கி, புகல்கின்றுன்-சொல்லத் தொடங்கினன்; (எ-று).

கனன்-கன்னன் என்பதன் தொகுத்தல் பாம்பெழுதுங் கொடியவன் - கருத்துடையடைகொளி. (60)

61. துரியோதனன் விதுரனைப் பழித்தல்.

விரகோதிய விதுரன்சொலை மெய்யென்றுநீ நம்பி
அரசேபழி பெறுகின்றனை யவனண்பொழி யெனலுந்
துரியோதனன் மொழிதன்செவி சுடவந்தக னெந்தே
பெரியோர்புகழ் விதுரன்சொலைப் பிழையென்பது தகுமோ.

(இ-ள்) விரகு ஒதிய **விதுரன்** சொலை - வஞ்சனையாகிய உபாயத்தைச் சொல்லிய விதுரன் வார்த்தையை, மெய் என்று நீ நம்பி-உண்மையானதென்று நீ நம்பி, அரசே-! பழிபெறுகின்றனை-பழிப்பெய்துகின்றாய்; அவன் நண்பு ஒழி - அவனது நட்பினை நீக்குக, எனலும் - என்று சொல்லவும், துரியோதனன் மொழிதன் செவி சுட-அந்தத் துரியோதனன் கூறிய வார்த்தைகள் தன் காதுக்குக் கொடூரமாகவிருப்பவே, அந்தகன்-பிறவிக்குருடனுகிய திருதராட்டிரனும், நொந்து - மனம் வருந்தி, பெரியோர்புகழ் **விதுரன்** சொலை - சான்றோர்களால் போற்றப்படுகின்ற விதுரனுடைய வார்த்தைகளை, பிழை என்பது தகுமோ - தவறுனவை (வஞ்சனையுடையவை) என்று கூறுதல் நியாயமாகுமோ? (நியாயமாகாது); (எ-று).

விதுரன் சொல்-பாண்டவரையழைத்துச் சமாதானப்படுத்தி அரசில் பாதியீதல் போன்றவை. (61)

62. **துரியோதனன் வீமனெடு மனமொத்து வாழேன் எனல்.**

எண்ணுதமர் கொல்வேனெனு மெண்ணந்தணந் துடனே
மண்ணுளுவ தழகென்றுரை செயமைந்தனும் வீமன்
விண்ணுளவுய்த் தென்பால்வரில் விழைவோடுடன் வாழ்வன்
நண்ணுரென வெண்ணுதவந் நால்வோரொடு மென்றான்.

(இ-ள்) [திருதராட்டிரன்] "எண்ணுது - ஆராய்ந்து பாராமல், அமர் கொல்வேன் என்னும் எண்ணம்-போரில் பாண்டவர்களைக் கொன்றொழிப்பன் என்னும் தீய எண்ணத்தை, தணந்துவிட்டு, உடனே - (அதற்குப்பதிலாக), மண்ணுளுவது அழகு என்று-[அவர்களுடன் ஒருசேர ஒருமித்து] இப்பூமியையாள்வது தகுதியுடைத்து" என்று, உரை செய-சொல்ல, [அதனைக்கேட்ட] மைந்தனும் - துரியோதனனும், "வீமன் விண்ணுள உய்த்து-வீமசேனனை வானுலகத்திற் செலுத்தி, என்பால் வரில் - மீதி நால்வரும் என்னிடம் வருவார்களாயின், விழைவோடு உடன் வாழ்வன்-அன்போடு [அந்நால்வருடன்] ஒருசேர வாழ்வேன்: (மேலும்) அந்நால்வோரொடு-அந்த நான்குபேரொடு, நண்ணுர் என எண்ணுது - [அவர்களைப்] பகைவர் என்று எண்ணுமல், வாழ்வன் –, என்றான்-என்று கூறி முடித்தான்; (எ-று).

விண்ணுள உய்த்து என்றது, பிறிதினவிற்சியணி. வீமனை நண்ணுர் என எண்ணுவேன் என்பது குறிப்பு. (62)

திரௌபதி மாலையிட்ட சருக்கம் முற்றிற்று.

பதினேழாவது

தருமபுத்திரர் பட்டாபிஷேகச் சருக்கம்

தருமபுத்திரர்க்குத் திருதராட்டிரன் பட்டாபிஷேகஞ் செய்வித்த செய்தியைக் கூறுஞ் சருக்கம் என்பது பொருள். பட்டாபிஷேகம் - மகுடஞ்சூட்டுதல்.

வேறு

1. திருதராட்டிரன் பெரியோரை உசாவுதல்.

உரககே துரைப்பக் கன்னன்
உருத்திக ளிவர் தம்மைப்
பொருதுவென் கண்டி லேனேல்
புரித்திருந் தென்கொ லென்சொல்
தெரிமினென் றுரைப்ப நாட்டங்
தெரிகிலான் ஒற்ற ரேவிக்
குரவரை விளித்து ணர்த்திக்
கூறுமி னியற்கை யென்றான்.

(இ-ள்) உரகேது உரைப்ப-நாகக்கொடியோன் (இவ்வாறு) சொல்ல, கன்னன் உருத்து - கர்ணன் கோபித்து, ஐவர் தம்மை பொருது வெங் கண்டிலனேல் - பாண்டவரைவரையும் போரில் முதுகுகாட்டியோடும்படி செய்யாதுபோவேனுகில், புரித்திருந்து என்கொல் - (யான் உன் அன்னத்தை) உண்டிருந்து என்னபயன்? என்சொல் தெரிமின் - என்வார்த்தையை அறிந்துபாருங்கள், என்று உரைப்ப-என்று கூறிமுடிக்க, நாட்டம் தெரிகிலான்-கண் தெரியாது குருடனுகிய திருதராட்டிரன், ஒற்றர் ஏவி - வேவு காரரை அனுப்பி, (அவர்மூலம்) குரவரை விளித்து-பெரியோர்களை வரவழைத்து, உணர்த்தி - (கருதியுள்ளவற்றை) அவர்கள் அறியும்படி சொல்லி, இயற்கை கூறுமின் என்றான்-இவ்வழக்கப்படி நியாயமாகச்செய்யவேண்டிய காரியத்தைச் சொல்லுவீராக என்று வேண்டினன்; (எ-று).

இயற்கை-வழக்கம்: கொள்கை.

இதுமுதல் எட்டுக்கவிகள்—பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ்சீரும் விளச்சீர்களும்,மற்றவை மாச்சீர்களுமாகிய அறுசீரா சிரியவிருத்தங்கள். (1)

2. வீடுமன் கூறியதற்குக் கிருபனும் துரோணனும் இசைவு தெரிவித்தல்.

புரவலர் பெரும பாண்டு
புதல்வரை வருவித் திங்குன்
அரசினை யிருகூ றாக்கி
யவர்க்கொரு கூறு நல்கி
உரிமையின் வாழ்த்த னன்றென்
லுயர்நதிக் குமரன் கூறக்
கிருபனு மரிய வேத
கேதுமீ தியற்கை யென்றார்.

(இ-ள்) புரவலர் பெரும!-அரசர்க்குள் சிறந்தவரே! பாண்டு புதல்வரை இங்கு வருவித்து - பாண்டவர்களை இந்த அத்தினபுரிக்கு வரவழைத்து, உன் அரசினை இரு கூறு ஆக்கி - உன் ஆளுகைக்குட்பட்ட பரப்பினை இரண்டு பாதியாகப் பிரித்து, அவர்க்கு - அந்தப் பாண்டு மைந்தர்க்கு, ஒரு கூறு நல்கி-ஒரு பாதியினைக் கொடுத்து, உரிமையின் வாழ்தல் நன்று-நட்போடு வாழ்ந்திடுதல் நலமுடைத்து, என்று—, உயர்நதிக்குமரன் - கங்கா புத்திரனாகிய வீடுமன், கூற-சொல்ல, (அதனைக்கேட்டு) கிருபனும்—, அரிய வேதகேதும்-சிறந்த வேதங்களைக் கொடியாகக் கொண்ட அந்தணனாகிய துரோணனும், ஈது இயற்கை என்றார் - இஃது நியாயமானதே என்று கூறினர்கள்; (எ-று).

பிராமணர்க்குக் கொடி வேதம் என்ப. (2)

3. கர்ணன் இகழ்ந்து பேசத் துரோணன் சீறிச் செப்புதல்.

உரைத்திடும் வாய்மை தானே
யொன்னலர் நீவி ரென்னத்
தெரித்ததென் றிகழ்ந்து கன்னன்
செப்பலுந் துரோணன் சீறிப்
பரித்தெடுத் தளித்துக் கல்வி
பயிற்றும்யாம் பகைஞரே நீ
ஒருத்தனே நண்பன் போர்வென்
றுலகிவர்க் களித்தி யென்றான்.

(இ-ள்) [இவர்கள் சொன்னதைக்கேட்ட] கன்னன்-கர்ணன், 'உரைத்திடும் வாய்மைதானே-நீங்கள் மூவர் கூறும் வார்த்தைகள்

தாமே, நீவிர் ஒன்னலர் என்னத் தெரித்தது - நீங்கள் (துரியோதனனுக்குப்) பகைவர்கள் என்பதைத் தெரியக்காட்டியது', என்று இகழ்ந்து செப்பலும் - என்று பரிகசித்துப் பேசலும், துரோணன்—, சீறி-கோபித்து, 'பரித்து எடுத்து அளித்து கல்வி பயிற்றும் யாம் பகைஞரே-அன்போடு கையிலெடுத்தணைத்துக் காப்பாற்றிக் கல்வியையும் போதிக்கின்ற நாங்கள் பகைவரே யாவோம்: நீ ஒருத்தனே - நீயொருத்தன்தான், நண்பன் - (இத் துரியோதனனுக்குச்) சிநேகிதன்: (ஆகவே) இவர்க்கு - இந்தத் துரியனுக்கு, உலகு போர்வென்று-இவ்வுலகத்தையே போரிலே வெற்றிகொண்டு அளித்தி - கொடுப்பாயாக', என்றான் - என்று கழறினன்; (எ-று).

துரோணன் பேச்சின்திறம் சாலப்போற்றத்தக்கது. (3)

4. **விதுரன் துரோணன் சினந்தணிவித்துத் திருதராட்டிரனை நோக்கிக் கூறுதல்.**

வெவ்வழ றன்னிற் சீறும்
வேதியன் றனைவி தூரன்
இவ்வுரை பொறுத்தி யென்ன
விறைஞ்சிமுன் னவனை நோக்கிச்
செவ்வியி னவர வர்க்குன்
செகதல மிருகூ றாக்கி
எவ்வமெய் தாம னல்கி
யிசையொடும் வாழ்தி யென்றான்.

(இ-ள்) வெவ் அழல் தன்னில் சீறும் வேதியன் தனை-கொடிய நெருப்புப்போலச் சிவந்து கோபிக்கின்ற துரோணனை நோக்கி, விதூரன்-விதுரன், 'இ உரை பொறுத்தி என்ன - [கர்ணன் கூறிய–] இந்த வார்த்தைகளைப் பொறுத்திடுவாய்' என்று தணிய வைத்து, இறைஞ்சி - அந்தத் துரோணனை வணங்கி, (பின்) முன்னவனை நோக்கி - திருதராட்டிரனைப் பார்த்து, - உன் செக தலம் இருகூறு ஆக்கி - உன்னுடைய அரசாட்சிப் பரப்பினை இரண்டு பாதியாகப்பிரித்து, அவரவர்க்கு-துரியோதனாதியர்க்கும் பாண்டவர்க்கும், எவ்வம் எய்தாமல்-துன்பம் வராதபடி, செவ்வியின் நல்கி - தகுதிப்படக் கொடுத்து, இசையொடும் வாழ்தி என்றான்-புகழோடும் வாழ்வாயாக என்று கூறினன்; (எ-று).

முன்னவன் - முற்பிறந்தவன் : திருதராட்டிரன். வாழ்தி - முன்னிலை வியங்கோள். (4)

5. திருதராட்டிரன் பாண்டவரை அத்தினபுரிக்கு வரவழைத்தல்.

தம்பியீ துரைப்ப வேந்தத்
தகைபுரிந் திடுவென் நீபோய்
இம்பர்க்கொண் டைவர் தம்மை
யெய்தென விதுரன் சென்றங்
கம்பிகை தனயன் வாய்மை
யடங்கலு முரைப்ப வைவர்
நம்பிமற் றவன்பி னத்தி
நகரிவந் தெய்தி னரே.

(இ-ள்) தம்பி ஈது உரைப்ப-தம்பியாகிய விதுரன் இங்ஙனம் சொல்ல, வேந்து - திருதராட்டிரன், அ தகை புரிந்திடுவென்-அங்ஙனமே செய்திடுவேன்: நீ போய்—, ஐவர்தம்மை - பஞ்ச பாண்டவர்களை, இம்பர்க் கொண்டு எய்தென-இவ்வத்தினபுரிக்கு அழைத்துக்கொண்டு வருவாயாக என்று சொல்ல, (அங்ஙனமே) விதுரன்—, சென்று - பாஞ்சால நகருக்குப்போய், அங்கு - அவ்விடத்து(த் துருபதன் அரண்மனையில்) அம்பிகை தனயன் வாய்மை-அம்பிகையின் புத்திரனாகிய திருதராட்டிரன் சொல்லியனுப்பிய வார்த்தைகளையெல்லாம், அடங்கலும் உரைப்ப-முழுவதையும் (ஒன்றும் விடாமல்) சொல்ல, ஐவர் நம்பி-அந்தப் பாண்டவரைவரும் (அந்தத் திருதராட்டிரன்) பேச்சை நம்பி, அவன் பின்-அந்த விதுரன் பின்னே, அத்தினகர் வந்து-அத்தினபுரிக்கு வந்து, எய்தினர்-சேர்ந்தார்கள்; (எ-று).

புரிந்திடுவென் - தன்மையொருமை விகுதிமுற்று. விதுரன் துருபதநகரம் சென்று அங்கே கிருஷ்ணன் முதலானோர் இருக்கும்போது திருதராட்டிரன் சொல்லிய செய்தியைத் தெரிவித்தார் என அறிக. (5)

6. பாண்டவர்களைக் கௌரவர்கள் எதிர்கொண்டழைப்ப, அவர்கள் அரசவை புகுதல்.

சகுனியுந் துணைவர் தாமுந்
தத்துவெம் பரித்தா மாவும்
நகருறு மரசர் யாரு
நடந்தெதிர் தழீஇக்கொண் டின்சொற்

புகலமா தன்னை யந்தப்
புரம்புகத் தானை நிற்ப
மகமுதித் தவன்மா யோனை
வருமர சவையிற் புக்கார்.

(இ-ள்) சகுனியும்—, துணைவர்தாமும் - தம்பியராகிய துச்சாதனன் முதலியோரும், தத்து-ஒளி வீசுகின்ற, வெம்-பராக்கிரமமுடைய, பரித்தாமாவும்-அசுவத்தாமனும், நகர் உறும் அரசர் யாரும் - நகரத்திலேயிருந்த அரசர்களனைவரும், எதிர் நடந்து-எதிர்கொள்ள நடந்துவந்து, தழீஇக்கொண்டு - (அந்தப் பாண்டவர்களைத்) தழுவிக்கொண்டு, இன்சொல் புகல்-இனிய வார்த்தைகளை முகமனைகப் பேச, (அப்போது) மாது அன்னை அந்தப்புரம் புக-திரௌபதியும் குந்திதேவியும் அந்தப்புரத்தினில்போக, தானை நிற்ப - (கூட வந்த) படைகள் அரண்மனையுட் புகாது வெளியே நிற்க, மகம் உதித்தவன்-யாகாக்கினியினின்று தோன்றிய திட்டத்துய்மனும், மாயோன்-கிருஷ்ணனும், ஐவரும்-பஞ்சபாண்டவரும், அரசவையில் புக்கார் - திருதராட்டிரனது சபையில் புகுந்தனர்; (எ-று).

பரித்தாமா-அசுவத்தாமன். தத்துதல்-ஒளிமுதலியன வீசுதல்: 'தத்தொளி மணிமுடி' (சிவக: 144). வெம்மை - பராக்கிரமம்: 'உலக மூன்றுமென் வெம்மையினுண்டது' (கம்ப: அதிகா: 4) மாதன்னை - உம்மைத்தொகை. தானை-அருபதன் சீர்வரிசைகளாக அனுப்பியவை: மகம் - யாகம்: ஓமாக்கினி. (6)

7. **பாண்டவர் நூற்றுவரோடு வேற்றுமையின்றி அரசுபுரிந்து வருதல்.**

தந்தையை கங்கை யீன்ற
தனயனைக் கிருப ஞுதி
அந்தணர் தமைப்ப ணிந்தங்
கரசன்சொற் கொண்டு பாண்டு
மைந்தர்நூற் றுவரோ டாழி
மாநில முழுது மொன்னுர்
வந்தடி பணிய வோம்பி
மருவிவாழ்ந் திருந்தார் மன்னே.

(இ-ள்) பாண்டு மைந்தர்-பாண்டவர்கள், தந்தையை-திருதராட்டிரனை, கங்கை ஈன்ற தனயனை-கங்கா புத்திரனுகிய விடுமனை

கிருபன் ஆகி அந்தணர் தமை - கிருபாசார்யர் முதலாய பிராம் மணர்களை, பணிந்து-வணங்கி நமஸ்கரித்து, அங்கு-அப்போது, அரசன் சொற் கொண்டு - திருதராட்டிரன் மொழிப்படியே, நூற்றுவரோடு - (அவன் புத்திரர்களாகிய) கௌரவர் நூறுபேர் களுடனே, ஆழி மாநிலம் முழுதும் - கடலாற்சூழப்பட்ட பெரிய பூவுலகம் முழுவதையும், ஒன்னர் வந்து அடி பணிய ஓம்பி-பகை வர்கள் அஞ்சி வந்து தங்கள் பாதங்களில் பணிந்து வணங்கும்படி பாதுகாத்து, மருவி வாழ்ந்திருந்தார்-(தங்களுள்) ஒற்றுமையாய்க் கூடி வாழ்ந்திருந்தார்; (எ-று). மன், ஓ-ஈற்றசை.

நூற்றுவரும் ஐவரும் என்ற இரண்டு பகுப்பு இல்லாமல் அந்த நூற்றைவரும் தங்களுள் மருவி வாழ்ந்தனர் என்றபடி. (7)

8. திருதராட்டிரன் தருமனுக்கு முடிசூட்டுதல் கூறும்.

இருதிறத் தவரு மைந்தாண்
டிவ்வணம் வாழு நாளிற்
குரவரோ டிருந்து சாவிக்
குணில்பொரு முரச மாதி
உரைசெய்பல் லியங்க ளார்ப்ப
வுயர்ந்துளோ ராசி கூற
ஒருதின மௌலி வேந்த
னுதிரட்டிரற் கணிவித் தானே.

(இ-ள்) இரு திறத்தவரும்-பாண்டவர் கௌரவர் என்ற இரு பகுப்பினரும், இவ்வணம்-இங்ஙனம் ஒற்றுமையாக, ஐந்தாண்டு-ஐந்து வருடங்கள், வாழும் நாளில் - வாழ்ந்துவந்த காலத்து, வேந்தன்-திருதராட்டிரன், குரவரோடு இருந்து உசாவி-[வீடுமன் துரோணன் கிருபன் போன்ற] பெரியோர்களோடு ஒருசேர வீற்றிருந்து அவர்களோடு கலந்து விசாரித்து, குணில் பொரு முரசம் ஆதி உரைசெய் பல் இயங்கள் ஆர்ப்ப-குறுந்தடியால் அடித்தொலியெழுப்பப்படுகிற முரசம் முதலாகிய புகழ்பெற்ற பலவகை வாச்சியங்கள் ஆரவாரிப்ப, உயர்ந்துளோர் ஆசி கூற-மேன்மக்களாகிய அந்தணர்கள் ஆசீர்வாதங்கள் கூறிட, ஒரு தினம்-நல்லதோர் சுபதினத்தில், உதிட்டிரற்கு-தருமபுத்திரற்கு, மௌலி அணிவித்தான்-மகுடம் சூட்டுவித்தான்; (எ.று).

முரசமாதி பல்லியங்கள் என முரசத்தை முற்கூறியது அதன் மாட்சிமை பற்றி என்க. இந்த முரசு மூன்று வகைப்படும்:

வெற்றி முரசு, கொடை முரசு, மங்கல முரசு என மும்முரச முமதிர் காவிரிநாடன்' என்றார் குமரகுருபரரும். (8)

வேறு

9. திருதராட்டிரன் ஏவலால் தருமன் கண்ணபிரானுடன் காண்டவப்பிரத்தம் என்னும் வனஞ்சேர்தல்.

இருநில மருத்த மதற்கிவன் அரசென்
றெழின்முடி புனைந்தபி னொருநாள்
தருமனந் தகன்ற னேவல்கைக் கொண்டு
சௌரியோ டிளைஞருங் கிளையும்
அருகினெய் துறநாற் றூனதற் சூழ
வணங்கனை யோடுமுன் மரபோர்
மருவிய நகர மழிந்துகா ளக
மன்னுகாண் டாவன மடைந்தான்.

(இ-ள்) இருநில அருத்தம் அதற்கு இவன் அரசு-'இந்த நிலவுலக ஆட்சியில் பாதிப்பகுதிக்கு இந்தத் தருமன் அரசனுவன்' என்று-என்று பிரகடனஞ் செய்து, எழில்முடி புனைந்தபின்-அழகிய மகுடத்தைச் சூட்டியபின், ஒருநாள்-ஒரு தினம், தருமன்—, அந்தகன்தன் ஏவல் கைக்கொண்டு-குருடனுகிய திருதராட்டிர னுடைய கட்டளையை மேற்கொண்டு அதன்படியே, சௌரியோடு-கண்ணபிரானேடு, இளைஞரும் கிளையும் அருகின் எய்துற-தம்பி யரும் சுற்றத்தவரும் பக்கத்தில் நெருங்கிவர, நால் தானை தற்சூழ-நால்வகைப் படைகளும் தன்னைச் சூழ்ந்துவர, அணங்கு அனை யோடு-திரௌபதியோடும் தாயாகிய குந்தியோடும், முன் மரபோர் மருவிய நகரம்-முன்பு பழைய அரசர்கள் இருந்ததான (நல்ல) நகரமொன்று, (பின்பு) அழிந்து கான் ஆக மன்னு-அழிந்துபட்டுக் காடாக நிலைபெற்ற, காண்டாவனம் அடைந்தான்-காண்டவப் பிரத்தம் என்னும் வனத்தைப் போய்ச் சேர்ந்தான்; (எ-று).

துரியோதனுதியரின் துர்ப்போதனையினுற் பாண்டவரைக் காண்டவப் பிரத்தத்திற்குச் செல்லுமாறு திருதராட்டிரனேவி னென்பது, முதனூலால் விளங்கும். அருத்தம்=அர்த்தம்: பாதி. சௌரி-திருமால்: எனவே, கண்ணபிரான். அணங்கனை-உம்மைத் தொகை: அணங்கும் அனையும்: அனை-அன்னை யென்பதன் தொகுத்தல். "பேய்நகரெனுமாறு யாவரும் வழங்காப் பிறங்கு நீள் கானிடை யழிந்ததூநகர்" என்றும், 'காண்டவப் பிரத்த மென்னுமத் தழல்வனம்" என்றும் வில்லியாரும் குறித்தார்.

இது முதல் ஏழு கவிகள்-ஒன்று மூன்று ஐந்து ஆறுஞ்சீர்கள் விளச்சீர்களாகவும், ஏனையவை மாச்சீர்களாகவும் வந்த எழுசீராசிரிய விருத்தங்கள். (9)

10. அங்கு நகர் செய்தற்குக் கண்ணன் இந்திரனோடு விசுவகர்மனை வருவிக்க, அந்த இந்திரன் விசுவகர்மனை நோக்கி 'இங்கு ஓர் நகர் செய' என்ன, அங்ஙனமே விசுவகர்மன் சிறந்ததொரு நகரத்தையமைத்தல்.

ஆண்டடைந் ததற்பின் ஐவர்வீற் றிருப்பான்
அணிநக ரொன்றுமா தவனும்
வேண்டிவா சவனை நினைதலு மவனும்
விச்சுவ கன்மனே டெய்தி
நீண்டவன் பணிகொண் டெவ்வுல கத்து
நிகரிதற் கிலையெனு நகரொன்
றீண்டமைத் திடுதி யென்னவத் தபதி
யாவரும் வியப்புற வமைத்தான்.

(இ-ள்) ஆண்டு-அந்தக் காண்டவப்பிரத்தத்தை, அடைந்த தற்பின்-சேர்ந்த பின்பு, ஐவர் வீற்றிருப்பான்-பாண்டவர்கள் சம்பிரமமாக எழுந்தருளியிருப்பதற்காக, அணிநகர் ஒன்று-அழகிய நகரம் ஒன்றினை, மாதவனும்-கண்ணபிரானும், வேண்டி-(அவர்களுக்கு) அமைத்துக்கொடுப்பதாக விரும்பி, வாசவனை நினைதலும்-(தேவர் தலைவனை) இந்திரனைச்சிந்திக்கவும், அவனும் விச்சுவகன்மனோடு எய்தி-அந்த இந்திரனும [தனது பரிவாரங்களில் ஒருவனை] விசுவகர்மனோடு வந்து, நீண்டவன் பணி கொண்டு-கண்ணனது கட்டளையைப் பெற்றுக்கொண்டு (அதன் பின்னர்) "எவ்வுலகத்தும் நிகர் இதற்கு இலை எனும் நகரொன்று ஈண்டு அமைத்திடுதி" என்ன-எந்த உலகத்திலேயும் இந்த நகருக்கு ஒப்பானது இல்லை என்று சொல்லும்படி ஒரு நகரத்தை இந்தக் காண்டவ வனத்தில் நிர்மாணிப்பாய்" என்று இந்திரன் சொல்ல, அ தபதி-அந்த [விச்சுவகன்மனாகிய] சிற்பியும், யாவரும் வியப்புற அமைத்தான்-அனைவரும் அதிசயிக்கும்படி உண்டாக்கினான்; (எ-று).

காண்டவப்பிரத்தத்தில் முன்னோர் இருந்த தொன்னகரம் முன்னமே அழிந்துவிட்டதாதலின் அங்குப் பாண்டவர் எங்ஙனம் வசித்தற்கு இயலும் என்று திருவுளம்பற்றிய கண்ணபிரான்

அங்குத் தேவத்தச்சனை விசுவகர்மனைக் கொண்டு காடு கெடுத்து நாடாக்கி ஒரு திருநகரஞ் செய்விக் கருதி, அதன் பொருட்டுத் தேவர் தலைவனை இந்திரனைச் சிந்தித்தவளவிலே, அவன் வந்து சேர, அவனது பரிவாரங்களில் ஒருவனை விசுவகர்மனும் அவனுடனே வந்து நின்றனன் என்பதாம். கண்ணபிரானது திருவுள்ளத்தை யறிந்து அதற்கேற்ப இந்திரன் விசுவகர்மனுக்குக் கட்டளையிட்டனன் என்பதை 'நீண்டவன் பணிகொண்டு' என்பதால் பெறவைத்தார். நீண்டவன்–திரிவிக்கிரமனாய் உலகளந்த திருமால்: இங்கே கண்ணனைக் காட்டியது, விசுவகர்மா-தேவதச்சனுகி அநேக திவ்யாபரணங்களையும், விமானாதிகளையும் அவர் கட்கு நிருமித்துக் கொடுப்பவன். தபதி=ஸ்தபதி: வடசொல். (10)

11. அந்நகரச் சிறப்பை அனைவரும் கொண்டாடுதல்.

இலகுபன் மணிக ணிரப்பிபொன் மயமா
யெவ்வுல கினுமுன மமைத்த
பொலனகர்க் கெல்லாம் பெருமையுந் திருவும்
பொற்புமின் பழுமெழு மடங்கு
நலன்பெறச் சிற்ப நூலினர் திகைப்ப
நாரணன் முதலியர் வியப்பப்
பலவளஞ் சுரப்ப வசதியம் பயப்பப்
பார்ப்பவர் நயப்புறப் படைத்தான்.

(இ-ள்) இலகு பல் மணிகள் நிரப்பி - விளங்குகின்ற பல நவரத்தினங்களை வரிசையாகப் பதித்துவைத்து, பொன்மயமாய்-பொன்னால் முற்றும் ஆகியதாய், எ உலகினும் - எந்த உலகத்திலும், முனம் - முன்னர், அமைத்த - நிருமாணித்த, பொலன் நகர்க்கு எல்லாம்-அழகிய நகரங்களெல்லாவற்றிலும், பெருமையும் - பெருமையிலும், திருவும் – செல்வத்திலும், பொற்பும் - அழகிலும், இன்பமும்-இன்பச்சிறப்பிலும், எழு மடங்கு நலன் பெற-ஏழுமடங்கு பொலிவுபெறும்படி, சிற்ப நூலினர் திகைப்ப-சிற்ப சாத்திரத்தில் வல்லவர் அதிசயிப்பவும், நாரணன் முதலியர் வியப்ப - கண்ணபிரான் முதலானவர்கள் ஆச்சரியப்படவும், பல வளம் சுரப்ப - பலவகை வளப்பங்களும் பொங்கிப்பெருகவும், அதிசயம் பயப்ப - சிறப்புமிகுதிகள் உண்டாகவும், பார்ப்பவர் நயப்புற - கண்டோர் விரும்பும்படி, படைத்தான் - உண்டாக்கினன்; (எ–று).

"நலன்பெறப் படைத்தான்" - என முடியும். திகைப்ப, வியப்ப, சுரப்ப, பயப்ப, நயப்புற என்ற வினையெச்சங்கள் அடுக்கி

'படைத்தான்' என்ற முற்றினைக்கொண்டு முடிந்தது. அதிசயம்-சிறப்பு, மிகுதி. (11)

12-13. அங்ஙகரத்தின் சிறப்பு.

இருகவிகள்—ஒரு தொடர்.

பாதலத் தளவு மாழ்ந்தகல் கிடங்கும்
பருதிதேர் தடுத்துயர் மதிலும்
மீதலத் தளவு கண்டகோ புரமும்
உயர்ந்தவேந் தவையுமந் திரமும்
ஆதுல ரழைக்குந் தோரண மறுகும்
அரிவையர் நடம்பயி லரங்கும்
பூதலச் சுரரா தியர்கண்மா ளிகையும்
புரவிமா தங்கசா லிகளும்.

(இ-ள்) பாதலத்து அளவு ஆழ்ந்து அகல் கிடங்கும்-பாதாள லோகத்தளவும் கீழேதாழப்போய்ப் பரந்த அகழியும், பருதி தேர் தடுத்து உயர் மதிலும்-சூரியனது தேரை [வானத்திற் செல்ல வொட்டாது] தடுத்து அதற்கும் மேலே உயர்ந்துள்ள மதிலும், மீ தலத்து அளவு கண்ட கோபுரமும்-வானத்தினது முகட்டு அளவினைக்காணும்படி உயர்ந்த கோபுரங்களும், உயர்ந்த வேந்து அவையும்-சிறப்புற்ற அரச சபாமண்டபமும், மந்திரமும்-அரண் மனையும், ஆதுலர் அழைக்கும் தோரணமறுகும்-வறியவர்களை [உணவு பெற்றுப்போக] அழைக்கின்ற கொடித்தோரணங்களைக் கொண்ட வீதிகளும், அரிவையர் நடம் பயில் அரங்கும்-மகளிர் நடனம் பழகுகின்ற இடங்களும், பூதலச் சுரர் ஆதியர்கள் மாளிகையும்-பூதேவராகிய அந்தணர் முதலாகிய நால்வகை வருணத்தவர்களுக்கான மாளிகைகளும், புரவி மாதங்க சாலை களும்-குதிரைப் பந்திகளும், யானைக்கூடங்களும்; (எ-று) மேலைச் செய்யுளிலுள்ள 'மருதவேலிகளும்' என்பதோடு குளகமாய்த் தொடரும்.

பாதலத்தளவும் அகழி ஆழ்ந்து அகன்றுள்ளது என்றதால் அதன் ஆழமும் அகற்சியும் பெறப்படும்: ''நாகமொன்றகன் கிடங்கு'' என்றூர் கம்பரும் [நாகம்-பாதாளலோகம்]. சூரியனது தேரைத் தடுத்துயரும் மதில் என்றதும், வானத்தளவு கண்ட கோபுரம் என்றதும்—தொடர்புயர்வுநவிற்சியணி.

ஆதுலர்சாலைகளில் தோரணங்களில் கொடிகள் நாட்டப்பட்

டிருக்கும்: அந்தக் கொடிகள் அடையாளமாகி ஆதுலர்களை உணவு பெற்றுப்போக அழைக்கின்றன என்றார். தற்குறிப்பேற்றவணி. [ஆதுலர்சாலை-அசக்தர்க்கும் வறியவர்க்கும் உண்டியும் உறைவிடமும் அமைக்கும் சாலை], பூதலச் சுரர்-பூமியில் தேவர்போன்றவர்; பூசுரர், அந்தணர். 'ஆதியர்கள்' - அரசர், வணிகர், வேளாளரைக் குறிப்பது. மாதங்கம் - யானை. (12)

13. கன்னலின் பழன மருத வேலிகளும்
கடலென நிறைந்தவா விகளும்
பொன்னகர்க் காவோ டுயர்ந்தபூங் காவும்
போதனும் சேடனும் வாக்காற்
பன்னவு மனத்தா னினைக்கவும் விழியாற்
பார்க்கவு மிகவரி தாகத்
தன்னறி வதனா லொருநகர் தேவத்
தபதிமா வினைதமா யமைத்தான்.

(இ-ள்) பழன மருதம் - மருதநிலங்களில், கன்னலின் வேலிகளும் – கரும்பினாலாகிய வேலிகளும், கடலென நிறைந்த வாவிகளும் - கடலோ வென ஐயுறும்படி நீர்நிரம்பி யலைமோதுகின்ற தடாகங்களும், பொன்னகர்க் காவோடு உயர்ந்த பூங்காவும் - அமராவதி நகரிலுள்ள கற்பகச் சோலையினும் உயர்ந்த பூஞ்சோலைகளும்,—

போதனும்-பிரமனும், சேடனும் - ஆதிசேடனும், வாக்கால் பன்னவும் - வாயினால் வருணித்துச் சொல்லவும, மனத்தால் நினைக்கவும் - மனத்தினால் எண்ணிப்பார்க்கவும், விழியால் பார்க்கவும் - (தமது) கண்களினால் [நன்கு விழித்துப்] பார்க்கவும், மிக அரிதாக - மிகவும் இயலாதபடி, [அவ்வளவு மேன்மைச்சிறப்போடு] தன் அறிவதனால் - தன் அறிவுத்திறமையினால், ஒரு நகர்- ஒப்பற்றதோர் நகரத்தை, தேவத் தபதி - தேவ சிற்பியாகிய விசுவகன்மா, வினைதமாய் அமைத்தான் - மிக அற்புதமாய் நிருமாணித்தான்; (எ-று).

மருதநிலத்தில் வேலிகள் கரும்பினாலாகியன என்றதால் அந்நாட்டின் மருதநிலவளச் சிறப்புத் தெரிவிக்கப்பட்டது. போதன்-பிரமன். சரசுவதிகேள்வன்: வேதமீந்தவன். சேடன்-ஆதிசேடன்: அறிவிற்சிறந்தவன் எனப்பட்டு எடுத்துக்காட்டாவன்: ஆயிரம் நாப்] படைத்தவன். பிரமன் - எண்கண்ணன்; ஆதிசேடன் - ஈராயிரங்கண்ணன்: இவ்வளவு சிறப்புள்ளவர்கள்

இருவருமே தமது திரிகரணங்களாலே உணர முடியாதபடி மேன்மைவாய்ந்தது விசுவகன்மா நிர்மாணித்த நகரம் என்றூர். இதனால் அவ்விருவரினும் அறிவிற்சிறந்தவன் விசுவகன்மா என்று அவன் சிறப்புக் கிளந்தபடி. (13)

14. அந்நகரத்துக்குக் கண்ணன் இந்திரப்பிரத்தம் என்று பேரிடப் பாண்டவர் நகரப் பிரவேசஞ் செய்தபின், அனைவரும் தமதிடஞ் சேர்தல்.

இந்திரை தன்தா யகமதாம் புரத்திற்
கிந்திரப் பிரத்தமென் றொருபேர்
அந்தரத் திமையோர் நாயகன் புகன்றூன்
அழகர சிருக்குமந் நகரிற்
குந்திதன் புதல்வ ரொருசுப தினத்திற்
குடிபுகுந் தினிதிருந் ததற்பின்
வந்தவர் பலரும் தமதிடம் புகுந்தார்
மாயனுந் துவரைபோ யடைந்தான்.

(இ-ள்). இந்திரைதன்-இலக்குமியினுடைய, தாயகமது ஆம் புரத்திற்கு-பிறப்பிடமாகிய (இந்த) நகரத்திற்கு, இந்திரப் பிரத்தம் என்று ஒரு பேர்-இந்திரப் பிரஸ்தம் என்கின்ற ஒப்பற்ற பெயரை, அந்தரத்து இமையோர் நாயகன்-வானத்துத் தேவர் களுக்குத் தலைவனாகிய கண்ணபிரான், புகன்றூன்-சூட்டினன்: அழகு அரசு இருக்கும் அ நகரில்-அழகானது ஆட்சி செய்யும் அந்த இந்திரப்பிரத்தத்தில், குந்திதன் புதல்வர்-பாண்டவரைவரும், ஒரு சுபதினத்தில் குடிபுகுந்து-ஒரு நல்ல மங்களகரமான நாளில் பிரவேசஞ்செய்து, இனிது இருந்ததற்பின்-சுகமாகத் தங்கியபின், வந்தவர் பலரும்-[அவரது நகரப் பிரவேசம் காண] வந்திருந்த அனைவரும், தமதிடம் புகுந்தார்-தங்களது ஊரினை அடைந்தார்கள்; மாயனும்-கண்ணபிரானும், துவரைபோய் அடைந்தான்-துவாரகையைப் போய்ச்சேர்ந்தான்; (எ-று).

இந்திரை-இலக்குமி. மிக்க செல்வச் சிறப்போடு கூடியது இந்திரப்பிரத்தம் என்றபடி. பிரஸ்தம் என்ற வடசொல்-தங்கு மிடம் என்று பொருள்படும். இந்நகரம் அமைத்தற்கு இந்திரன் ஏவுதற் கருத்தாவாயினுதலால், அவன்பெயரால் இதற்கு இந்திரப்பிரத்தமென்று பெயரிடப்பட்டதென்க. இமையோர் நாயகன்-கண்ணபிரான்: இவன்தான் பெயரிட்டவனென்பதை வில்லிபுத்தூரரும் "இந்திராபதியவ் விந்திரன் பெயரா லிந்திரப்

பிரத்தமென்றிட்டான்'' என்று கூறிப் பெறவைத்தார். துவரை–மரூஉ. (14)

15. ஒருநாள் நாரதமுனிவன் அங்கு எழுந்தருளி அவர்கட்கு ஒரு கதை கூறத் தொடங்கல்.

அன்னைசொற் கேட்டும் அனுசர்சொற் கொண்டும்
அழல்வரு மரிவைசொற் குவந்தும்
இந்நிலந் தழைப்ப வரசுதிட் டிரன்செய்
திருக்குநா ணாரதன் புகுந்தம்
மன்னவ ரியற்றுங் கடன்கைகொண் டாசி
வழங்கிப்பின் பொருத்தியை வருக்கும்
பன்னியா தலினுற் பகைவரு மென்னப்
பகருமோர் கதையவர்க் கம்மா.

(இ-ள்). உதிட்டிரன்–தருமபுத்திரன், அன்னை சொல் கேட்டும்-குந்தி தேவியின் சொல்லைக் கேட்டு அதன்படியும், அனுசர்சொல் கொண்டும்-தம்பிமார்களுடைய சொல்லின்படியும், அழல்வரும் அரிவைசொற்கு உவந்தும்-ஓமாக்கினியில் தோன்றிய பெண்ணாகிய திரௌபதியின சொல்லைக் கேட்டு மகிழ்ந்து அதன் படியும், இந்நிலம் தழைப்ப-இந்தப் பூவுலகம் செழிக்கும்படி, அரசு செய்திருக்கும் நாள்-அரசாட்சி செய்துவரும் காலத்தில், [ஒரு நாள்] நாரதன் புகுந்து–நாரதமுனிவன் வந்து, அ மன்னவர் இயற்றும் கடன் கை கொண்டு-அந்தத் தருமபுத்திரன் செய்த உபசாரங்களை யேற்றுக்கொண்டு, ஆசி வழங்கி-ஆசீர்வாதஞ் செய்து, பின்பு-பின்னர், ஐவருக்கும் பன்னி ஒருத்தியாதலினால்-ஐந்து பேருக்கும் பத்தினி ஒருத்தியேயாயிருப்பதனால், பகை வரும் என்ன-விரோதம் ஏற்படுமென்று (அதனை விளக்க) அவர்க்கு-அந்த ஐவர்க்கும், ஓர் கதை பகரும்-ஒரு கதையைச் சொல்லுவா ராயினர்; (எ-று). அம்மா-ஈற்றசை.

பன்னி-பத்னீ: வடசொல். மனையாள் என்ற பொருளது. (15)

வேறு

16—20. இது முதல் ஐந்து கவிகள்—சுந்தோபசுந்தர் வரலாறு

மூவர்தம் வரமும் பெற்றோர்
மூவுல கடங்க வென்றோர்
மாவட மேரு பாலோர்
மாநகர் பெற்று வாழ்வோர்

தேவரும் தவரும் அஞ்சுந்
திறலினர் தானை நான்கோர்
தாவரும் படைகள் பெற்றோர்
தமக்கிணை தாமே யாவோர்.

(இ-ள்). மூவர் தம் வரமும் பெற்றோர்-பிரம விஷ்ணு சிவன் என்ற திரிமூர்த்திகளிடமும் வரம் பெற்றவர்கள்: மூவுலகு அடங்க வென்றோர்-[சுவர்க்கம், மத்திமம், பாதாளம் என்ற] மூன்று உலகங்களையும் முற்ற வென்றவர்கள்: மா வடமேரு பால்-பெரிய வடமேரு மலையின் சாரலில், ஓர் மா நகரம் பெற்று வாழ்வோர்-ஒரு பெரிய நகரத்தைத் தலைநகராகக்கொண்டு வாழ்பவர்: தேவரும் தவரும் அஞ்சும் திறலினர்-தேவர்களும் முனிவர்களும் பயந்து நடுங்கும்படி வலிமை கொண்டவர்: ஓர் தானை நான்கு-ஒப்பற்ற சேனைகள் நால்வகையினையும், தா அரும் படைகள்-தவறுதலில்லாத ஆயுதங்களையும், பெற்றோர்-பெற்றவர்கள்; தமக்கு இணை தாமே ஆவோர்-தங்களுக்கு ஒப்பு தாமே யாவ ரன்றிப் பிறரில்லை; (எ-று).

மூவர்-தொகைக்குறிப்பு. தானைநான்கு-ரதகஜதுரகபதாதி கள். படைகள்-படைக்கலங்கள். தா அரும்-(பகைவரைக் கொல்லுதலில்) தவறுதல் இல்லாத: (தபுதல்-அழித்தல்). "உங்க ளிருவர்க்கும் பிறவுயிர்களெவற்றாலும் மரணமில்லை" என்று மூவரும் வரமளித்தார்களாதலால் 'தமக்கிணை தாமே' என்றது.

இதுமுதல் இச்சருக்கம் முடியுமளவும் ஆறுகவிகள்-இச்சருக் கத்தின் முதற்கவிபோன்ற **அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.**

17. மானவர்க் கிமனுஞ் சுந்தோ
வசுந்தரென் றுரைக்கு நாமத்
தானவ ரிருவ ரன்னோர்
தான்செயு மிடுக்க ணைடி
வானவர் வணங்கிக் கூற
மலரயன் கேட்டுத் தீயோ
ரானவ ரொருவ ராலு
மழிவுரு வரமு மோர்ந்தே.

(இ-ள்) மானவர்க்கு இமனும்-மனிதர்களுக்கு யமனுகும், சுந்தோவசுந்தர் என்று உரைக்கும் நாமம் தானவர் இருவர்-சுந்தர் உபசுந்தர் என்று சொல்லப்படுகின்ற பெயரையுடைய அசுரர்கள் இரண்டுபேர் [இருந்தனர்]: அன்னோர் தான் செயும் இடுக்கண்-அந்த இரண்டு அசுரர்களும் செய்கின்ற துன்பங்களை, வானவர்

ஓடி வணங்கிக் கூற-தேவர்கள் ஓடிச்சென்று பணிந்து சொல்ல, [அவற்றை] மலரயன்-பிரமதேவன், கேட்டு-செவியுற்று,-தீயோர் ஆனவர்-அந்தத் தீயவர்கள், ஒருவராலும்-எவராலும், அழிவு உறு-அழிக்கப்படாது (பெற்றிருந்த), வரமும் ஓர்ந்தே-வரத்தையும் ஆராய்ந்து பார்த்து; (எ-று) — "உருவமாய்ச் செய்து" என மேலிக்கவியில் குளகமாய் இயையும்.

இமன்-யமன். சுந்தர்+உபசுந்தர்-சுந்தோபசுந்தர்; குணசந்தி பெற்ற வடமொழித் தொடர். இந்த இருவரும் இரணியகசிபு என்ற அசுரராசனது குலத்தில் நிகும்பனென்றவனது புத்திரர்களாவர்.

வரமும் ஓர்ந்தே-இடுக்கண் கேட்டதோடு என இறந்தது தழீஇயது. மலரயன்-அயனுக்குப் பிறப்பிடம் தாமரைமலர். (17)

18. தெரிவைமார்க் குள்வ னப்பிற்
நிலத்தள வெடுத்தெ டுத்தோர்
உருவமாய்ச் செய்தி குக்கு
முபாயமும் அவளுக் கோதி
நிருதர்பால் விடுத்தா னந்த
நேரிழை புகலு மன்னோர்
வருவதே திருப்ப தெங்ஙன்
வழங்கென வுரைக்க லுற்றாள்.

(இ-ள்) தெரிவைமார்க்குள்-மங்கையர்களது, வனப்பில்-அழகினில். நிலத்து அளவு எடுத்து எடுத்து-எள்ளளவு எள்ளளவாக எடுத்துத்திரட்டி, ஓர் உருவமாய் செய்து-ஒரு பெண்ணைச் செய்வித்து, அவளுக்கு-அந்தத் திலோத்தமையினிடத்து, இகுக்கும் உபாயமும் ஓதி-[சுந்தோபசுந்தரைக்] கொல்லும் சூழ்ச்சியையும் சொல்லிக்கொடுத்து, அந்த நேரிழை-அந்த அழகிய திலோத்தமையை, [பிரமதேவன்] நிருதர்பால்-அந்த அசுரர் இருவரிடம், விடுத்தான்-அனுப்பினன்: (அவளைக்கண்டு) புகலும் அன்னோர்-தீயோர் என்று [உலகோராற்] பேசப்படுகின்ற அந்த அசுரர்கள், வருவது ஏது?-நீ வந்த வரலாறு என்ன? இருப்பது எங்ஙன்-நீ வாழ்கின்றது எவ்விடம்? வழங்கு-சொல்வாயாக, என-என்று கேட்க, உரைக்கல் உற்றாள்-அவள் சொல்லத் தொடங்கினள்; (எ-று).

உலகத்தில் அழகுடைய மங்கையரது உடம்பிற்சிறந்த

அழகை எள்ளளவு எள்ளளவாக எடுத்துத்திரட்டி அதுகொண்டு அமைக்கப்பட்ட பெண் திலோத்தமை: திலம் – எள், உத்தமா-மேலானவள். செய்து - செய்வித்து: விசுவகர்மாவைக்கொண்டு பிரமன் செய்வித்தனன். நேரிழை விடுத்தான் - இரண்டனுருபு தொக்கது, நேரிழை - பண்புத்தொகையன்மொழி. வருவது, இருப்பது - தொழிற்பெயர்கள். வழங்கு - முன்னிலையேவல். இனி, புகலும் – புகுதலும் என்றுமாம். (18)

19. பார்பயில் பதிக டோறும்
பதிதனை நாடிக் காணேன்
நேர்பயி லுங்கள் பால்வந்
தெய்தினே னிருவர் தம்மிற்
போர்பயின் றொருவன் வென்று
புணருவ தியல்பா மென்றச்
சீர்பயில் திலோத்த மைப்பேர்
தெரிவையு முரைத்தாள் மன்னே.

(இ-ள்) பார்பயில் பதிகள் தோறும்-பூமியிலேயுள்ள நகரங்கள் ஒவ்வொன்றிலும், பதிதனை-(எனக்கு வேண்டிய) கணவனை, நாடிக்காணேன் - தேடியும் காணவில்லை; (ஆகவே) பயில் உங்கள்பால் - சஞ்சரிக்கின்ற உங்கள் இருவரிடத்திலும், நேர் வந்து எய்தினேன்-நேராகவந்து சேர்ந்தேன்: இருவர்தம்மில்-உங்களிருவரில், போர்பயின்று ஒருவன் வென்று - போரிட்டு ஒருத்தன் வெற்றிபெற்று, புணருவது இயல்பாம்-என்னைக் கைக்கொள்வது முறைமையாகும், என்று—, அ சீர் பயில் திலோத்தமைப்பேர் தெரிவையும் உரைத்தாள்-அந்தச் சிறப்புப்பொருந்திய திலோத்தமையென்ற பெயரைக்கொண்ட பெண்ணும் சொல்லினாள்; (எ-று) மன், ஓ-ஈற்றசை. (19)

20. வேறுபட் டிடாமல் வாழ்வோர்
மெல்லியன் மைய லாலே
மாறுபட் டெனக்கெ னக்கிம்
மானென மலைந்து வெம்போர்
நீறுபட் டழிந்தா ரந்த
நேரிழை யயன்பாற் புக்காள்
ஊறுபட் டிருந்தோ ரியாரு
முளமகிழ் வெய்தி னரே.

(இ-ள்) வேறுபட்டிடாமல் வாழ்வோர்-மனவேறுபாடில்லாமல்.

மல் [ஒற்றுமையாய்] வாழ்ந்துவந்த சுந்தோபசுந்தர், மெல்லியள் மையலாலே-திலோத்தமையாகிய பெண்ணிடத்து வைத்த காதல் மயக்கத்தாலே, மாறுபட்டு-விரோதங்கொண்டு, இ மான்-இந்தப் பெண், எனக்கு எனக்கு என வெம்போர் மலிந்து-எனக்குத்தான் எனக்குத்தான் என [உரிமைகொண்டாடி] கொடிய போரைச் செய்து, ஈறுபட்டு அழிந்தார்-சாம்பராய் நசித்துப்போனார்கள், (பிறகு) அந்த நேரிழை - அந்தத் திலோத்தமை, அயன்பால் புக்காள் - பிரமதேவனிடம் போய்ச்சேர்ந்தாள்: ஊறுபட்டிருந்தோர் யாரும் - (அந்த அசுரர்களால்) துன்பப்பட்டிருந்த அனைவரும், [இப்போது], உளம் மகிழ்வு எய்தினர் - மனமகிழ்ச்சி கொண்டார்கள்; (எ-று).

இங்கு அறியவேண்டிய கதையின் விவரம்: திலோத்தமையின் அழகை வியந்து ஒருங்கு காமுற்று அருகில் சென்று அவளுடைய வலக்கையைச் சுந்தனும், இடக்கையை உபசுந்தனுமாகப் பிடித்துக் கொண்டார்கள், இயல்பில் மிக்க கொழுப்புடைய அவ்விருவரும் காமக்களிப்புற்றுத் தம்மில் மாறுபட்டு அண்ணன் தம்பியைநோக்கி "தமையனுகிய என்னுற் காதலிக்கப்பட்ட இவள் உனக்குத் தாய்முறையன்றே? இவளை நீ விரும்புதல் தகுதியோ?" என்ன, அதற்கு ஏற்பத் தம்பி தமையனைநோக்கி 'தம்பியாகிய என்னுற் காதலிக்கப்பட்ட இவள் உனக்கு மருமகள் முறையன்றே? இவளை நீ விரும்பலாமோ?' என்று கூறிக் கோபங் கொண்டு தம் கையிலுள்ள கதாயுதத்தால் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு போர்செய்து இருவரும் ஒருங்கே ஒருவரால் ஒருவர் அழிந்தனர் என்பது.

இவ்வரலாற்றை நாரதமுனிவன் இங்குப் பாண்டவர்க்கு எடுத்துக் கூறினது, திரௌபதியொருத்தியினிடம் காதல்கொள்ளுகிற பாண்டவரைவரும் ஒருவருக்கொருவர் எக்காலத்தும் மனவொற்றுமை கெடாதிருக்கும்படி ஒரு நியமனத்தைச் செய்துகொள்ளவாகும்.

வாழ்வோர்-வினையாலணையும்பெயர். மெல்லியல், நேரிழை-பண்புத்தொகையன்மொழி. எனக்கெனக்கு - அடுக்குத்தொடர். மான்-உவமவாகுபெயர். (20)

21. நாரதன் திரௌபதி சம்பந்தமாகப் பாண்டவர்க்குக் கூறிய ஒரு நியமப்படி அவர்கள் வாழ்தல்.

ஆதலா லழல்வந் தாளை
யாண்டினுக் கொருவ ராகக்
காதலோ டணைத னீவிர்
கடனணைக் கண்டோ ரோராண்
டேதம தகல்வான் தீர்த்த
யாத்திரைக் கேகு மென்னு
மாதவன் சொலிப்போ னுனவ்
வாறிவர் நடந்தார் மன்னே.

(இ-ள்) ஆதலால் - [சுந்தோபசுந்தர் வரலாறு கேட்டீர்] ஆகையினால், ''அழல் வந்தாளை-திரௌபதியை, [நீவிர் ஐவிரும்], ஆண்டினுக்கு ஒருவராக-வருடத்திற்கு ஒருத்தராக, காதலோடு அணைதல் - அன்போடு கூடி வாழ்ந்திருத்தல், நீவிர் கடன்- உங்களது கடமை: (அந்த ஒரு வருடத்திற்குள்) அணை கண்டோர்- இவள் ஒருத்தரோடு சேர்ந்திருக்கும்பொழுது இவளைக் கண்டவன், ஏதம் அது அகல்வான் - அந்தத் தோஷம் நீக்குவதற்காக (ப்பரிகாரமாக), ஓர் ஆண்டு - ஒரு வருடகாலம், தீர்த்த யாத்திரைக்கு ஏகும் - புண்ணிய தீர்த்தங்களில் நீராடச் செல்லவேண்டும்'', என்னு-என்று நியமம் செய்து, மாதவன்-நாரத முனிவன், சொலிப் போனன்-(அங்ஙனமே) சொல்லிச் சென்றான்: அ ஆறு- அவர் கூறிய வழிப்படியே, இவர் நடந்தார்-இந்தப்பாண்டவர்கள் ஒழுகிவந்தார்கள்; (எ-று). மன், ஓ-ஈற்றசை.

ஆண்டினுக்கொருவராக அணைதல் என்றவிடத்து அறிய வேண்டுவது - தருமபுத்திரன் முதலாகத் திரௌபதியைத் தாம் விவாகஞ்செய்த முறைப்படியே கூடிவாழ்தல் என்பது. அழல் வந்தாள் - வினையாலணையும்பெயர். அணைதல் - தொழிற்பெயர். அணைக்கண்டோர்-இரண்டனுருபு தொக்கது. கண்டோர்-ஒன்றன் பாற் குறிப்புவினையாலணையும்பெயர். கண்டோர் ஏகும்-படர்க்கையில் ஒருமைப்பெயர். ஏகும் - செய்யுமென்முற்று. சொலி- சொல்லி என்பதன் தொகுத்தல். (21)

தருமபுத்திரர் பட்டாபிஷேகச் சருக்கம் முற்றிற்று.

———

பதினெட்டாவது

அருச்சுனன் தீர்த்தயாத்திரைச் சருக்கம்

அருச்சுனனது தீர்த்தயாத்திரை வரலாற்றைக் கூறுஞ் சருக்கமென்று பொருள். தீர்த்த யாத்திரை - புண்ணிய தீர்த்தங் களில் நீராடுதலே உத்தேசித்துப் பிரயாணஞ் செய்தல்.

வேறு

1. தருமபுத்திரனது நீதி தவறுத அரசாட்சியில் ஒரு அந்தணன் வந்து முறையிடுதல்.

தருமந்தவ றெய்தாவுயிர் தழைப்பப்புவி தருமன்
ஒருவெண்குடை நிழலிற்புரந் திடுநாள்களி லொருநாள்
மருவுஞ்சவை முன்வந்தொரு மறையோன்முறை யிடலும்
வருதுன்பதை நரனேதென வருமாமுனி பகர்வான்.

(இ-ள்) தருமன் - தருமபுத்திரன், தருமம் தவறு எய்தா தருமம் (சிறிதும்) தவறுதபடி, உயிர்தழைப்ப-உயிர்கள் செழித்து வாழும்படி, புவி - இவ்வுலக அரசாட்சியை, ஒரு வெண்குடை நிழலில் - ஒற்றை வெண்கொற்றக்குடையின் கீழே (ஏக சக்ராதி பதியாய்), புரந்திடும் நாள்களில் ஒருநாள்-பாதுகாத்துச் செலுத்தி வரும் நாள்களில் ஒருநாள்,— ஒரு மறையோன் - ஒரு அந்தணன், மருவும் சவை முன்வந்து - பொருந்திய அரச சபையின் முன்னர் வந்து, முறையிடலும் - (தன் குறையைத்) தெரிவிக்கவும், நரன்- அருச்சுனன், வரு துன்பு அதை ஓது என-உனக்கு வந்த துன்பத் தைச் சொல்லுவாய் என்று வினவ, வரு மாமுனி - வந்த அந்த அந்தணன், பகர்வான்-சொல்லத் தொடங்கினன்; (எ-று).

நீதி தவறுத ஆளுகையைக் குடைநிழல் என்றல் மரபு.

இது முதல் பன்னிரு கவிகள் - பெரும்பாலும் நான்காஞ் சீரொன்று மாச்சீரும், மற்றவை மூன்றும் மாங்கனிச்சீர்களுமாகி வந்த கலிவிருத்தங்கள். (1)

2. அந்தணன் செய்தி கூற அருச்சுனன் அபயமளித்து, வில் லெடுக்க உள்ளே செல்லல்.

என்பாற்பசு நிரையாவையு மெயினர்கவர்ந் ததனுன்
மன்பாலுரை செய்வானிவண் வந்தேனென விசயன்

உன்பானிரை மீட்டீகுவ னுரவோரையும் வெல்வேன்
துன்பானதை யொழிநீயென சொற்றுனக முற்றுன்.

(இ-ள்) [அந்த மறையோன்] 'என்பால் பசுநிரை யாவையும் எயினர் கவர்ந்ததனால் - என்னிடத்துள்ள பசுக்கூட்டங்களனைத்தையும் வேடர்கள் கவர்ந்து சென்றதால், மன்பால் உரைசெய்வான் இவண் வந்தேன் - அரசராகிய தருமரிடத்துச் சொல்லி முறையிட இவ்விடத்து வந்தேன்', என - என்று கூற, விசயன் - (அதனைக்கேட்ட) அருச்சுனன், 'உன்பால் நிரைமீட்டு ஈகுவன் - பசுக்கூட்டங்களைமீட்டு உன்னிடத்துக் கொடுப்பேன்: உரவோரையும் வெல்வேன் - வலிய வேடர்களையும் வெற்றிகொள்வேன்: (ஆகவே) நீ—, துன்பானதை ஒழி-துயரத்தைவிட்டொழிப்பாய், என-என்று, சொற்றுன் – சொல்லி (அபயமளித்து), அகம் உற்றுன்-அரண்மனையுள் பிரவேசித்தான்; (எ-று).

'விசயன்' என்றது கருத்துடைமொழி. துன்பானது - ஆனது, சொல்லுருபு. சொற்றுன்-முற்றெச்சம். அகம்-உள்ளிடம். (2)

3. **வில்லெடுக்கச் சென்றவிடத்துத் தருமனுடனே திரௌபதியைக் காணவே, அருச்சுனன் வேடர்களை வென்று நிரை மீட்டுக்கொடுத்து, தீர்த்தயாத்திரைக்குத் தருமனிடம் விடைபெற்றுச் செல்லல்.**

மூன்னெனெடு மின்னளுறு முறைகண்டுள நாணு
தன்னேர்சிலை கொள்ளாநெறி தள்ளாமுனை வெல்லா
வன்னனிரை மீளாவினி தளியாமுனி மொழியான்
மன்னேடுடு செய்யாபல வனமாடிடச் சென்றுன்.

(இ-ள்) முன்னேனெடு-தமையனை தருமனோடு, மின்னள்-திரௌபதி, உறும் முறைகண்டு - பொருந்தியிருக்கின்ற தன்மையைப்பார்த்து, நாணு - (மனத்தில் மிகவும்) வெட்கங்கொண்டு தன் ஓர் சிலை கொள்ளா - தனது ஒப்பற்ற வில்லை [விரைவாக] எடுத்துக்கொண்டு, நெறி தள்ளா - [நெடுந்தூரமாகிய] வழியிற் போய், முனை வெல்லா - போர்செய்து (வேடர்களை) வென்று, அன்னன் நிரை மீளா - அந்த மறையோனது பசுக்கூட்டங்களை மீட்டு, இனிது அளியா - (அம்மறையோன்) மனம் மகிழும்படி கொடுத்து, (பின்னர்) முனி மொழியான் - நாரதமுனிவனது சொல்லின்படியே, (தான் தீர்த்தயாத்திரை செல்லும் பொருட்டு

விடைபெறுவதற்காக) மன்னெடு - தருமபுத்திரனை, உடு செய்யா-தண்டனிட்டுப்பணிந்து, வனம் பல ஆடிட சென்றான்-தீர்த்தங்கள் பலவற்றிலும் நீராடப்புறப்பட்டான்; (எ-று).

நிரைமீளா-நிரைமீட்டு: நிரைகவர்தல்-பொருளிலக்கணத்தில் வெட்சியென்னும் திணையும், நிரைமீட்டல் கரந்தையென்னுந் திணையுமாம், மன்னெடு-மன்னன்; உருபுமயக்கம். உடுசெய்தல்-தண்டனிடல், பணிதல். உடு-ஓடக்கோல், தண்டம். அக் கோல் போலே தரையில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்குதல் - உடு செய்தல் எனப்பட்டது. வனம்-நீர். (வடசொல்). (3)

4. அருச்சுனன் உலூபியை மணஞ்செய்து கொள்ளல்.

பலமாதவ ரொடுமாதவர் படிவங்கொடு கங்கா
சலமாடிய நரனப்புனல் தனிலாடிடு முரகக்
குலமாதரி லுலூபிப்பெயர் கொண்டாடனைக் கண்டே
நலமாந்திட வவள்பின்பில நகரெய்திம ணந்தான்.

(இ-ள்) பல மா தவரொடு – பல சிறந்த தவத்தினராகிய அந்தணர்களோடு, (தானும்) மா தவர் படிவம் கொடு - சிறந்த தவ அந்தணவேடத்தைக் கைக்கொண்டு, கங்கா சலம் ஆடிய நரன் - கங்கை நீரில் ஸ்நானஞ்செய்த அருச்சுனன் (அப்போது அங்கு), அப்புனல் தனில் ஆடிடும் உரகக்குல மாதரில் - அந்தக் கங்கை நீரில் நீராடிடும் நாககன்னிகைகளுள், உலூபிப்பெயர் கொண்டாள்தனைக் கண்டே - உலூபியென்ற பெயரைக்கொண்டிருந்தவளைப் பார்த்தவுடனே, நலம் மாந்திட - அவளது அழகு நலத்தைப் பருகிட, அவள் பின் - அவள் பின்னே சென்று, பில நகர் எய்தி – பாதாளலோகத்துநாகர் நகரையடைந்து, மணந்தான்-அவளை மணஞ்செய்துகொண்டான்; (எ-று).

நீராடும்போது அந்நீரினிடையே உலூபியை அருச்சுனன் கண்டானாக, காதல்கொண்ட அன்னாள், பிலவழியே நாகலோகத்துத் தன் மாளிகைக்கு அவனை யழைத்துக்கொண்டு போயினாளென்று பாரதங்கள் கூறும். மா தவர் படிவம் கொள்ளுதல்-மரவுரியுடுத்தல், சடைமுடி தரித்தல், மான்றோல் போர்த்தல், புலித்தோலிலிருத்தல் முதலியன. (4)

5. அருச்சுனன் நாகலோகத்திற் சிலநாள் இருந்து இராவானைப் பெற்று, அவ்வுலகினின்று மீண்டு தெற்குநோக்கிச் செல்லுதல்.

மீனஞ்சுறு விழியாண்மன விழைவின்படி யதர
பானஞ்சில நாளுண்டிர வானைப்பயந் தொருநாட்
சேனஞ்சுழல் வேலோனதி சேதுற்றிம வரைசார்
கானஞ்செறி நீராடிதெக் கணமெய்தின னன்றே.

(இ-ள்), மீன் அஞ்சுறு விழியாள்-மீனும் (இவள் கண்ணழகுக்குத் தோற்றோமே என்று) நடுங்கும்படியான விழிகளையுடைய உலூபியின், மன விழைவின்படி-மன விருப்பத்தின்படியே, அதர பானம் சிலநாள் உண்டு-இதழ்சுவைத்தல் முதலானவற்றைச் சில நாட்கள் சுகாபநுவஞ்செய்து, இராவானைப் பயந்து-இராவானென்ற புதல்வனைப் பெற்று, ஒருநாள்-ஒருதினம், சேனம் சுழல் வேலோன்-பருந்துபின் சூழவரும்படி வேலாயுதத்தை யேந்திய அருச்சுனன், நதி சேது உற்று-(நாகலோகத்திலிருந்து மீண்டு பிலவழியாகக்) கங்காநதியின் செய்கரையை யடைந்து, இமவரைசார்-இமயமலையைச் சார்ந்து, கானம் செறி நீராடி-காடுகளில் மிகுதியாகவுள்ள புண்ணிய தீர்த்தங்களில் நீராடி, தெக்கணம் எய்தினன்-தெற்குத்திசையை யடைந்தான்; (எ-று).

மீனஞ்சுறு விழியாள்-மீனையும் விஞ்சும் கண்ணழகு படைத்தவள் உலூபி என்றபடி. அதரபானம்-பிற கலவிக்கரணங்களுக்கும் உபலட்சணம். இராவாந்-வடமொழிப் பெயர். அராவானெனப் பெயர் குறித்தல், வடநூலுக்கு முரணும். சேனம்-பருந்து, வேலின் நுனியில் பகைவரைக் குத்திய நிணத்தசை யிருப்பதால் அதனை உண்ண விரும்பிச் சேனம் சுழலும் என்றது. தசையினிடத்து நசையால் பருந்து முதலிய பறவைகள் சுழல்வதைப் 'பாறு பின்செல' எனக் கம்பரும் (பால: வரைக்: 5), 'கழுகு தொடர்தர' என வில்லிபுத்தூரரும் (ஆதி: வேத்திரகீயச்: 40) கூறியதாலும் உணரலாம். சேது-செய்கரை. தெக்கணம்-தக்ஷிணம் என்ற வடசொற்றிரிபு. (5)

6. யமுனை முதலிய தீர்த்தங்களில் நீராடித் திருவேங்கடமலை, திருக்காளத்திமலை, திருத்தணிகைமலை முதலியவற்றைக் கண்டு பணிதல்.

கதிரோனருள் யமுனைநதி முதலாகிய கடவுள்
நதியாவையு மினிதாடிபின் நாகாசல மெய்தி

துதியாவன சரனன்பினைச் சோதித்தவர் தம்மை
மதியாதிருத் தணிகாசல வரைகண்டுப ணிந்தான்.

(இ-ள்) கதிரோன் அருள்-சூரியன் பெற்ற [புதல்வியாகிய] யமுனைநதி – யமுனையாறு, முதலாகிய–, கடவுள் நதி யாவையும் இனிது ஆடி–தெய்வத்தன்மை பொருந்திய ஆறுகள் அனைத்திலும் நன்முக ஸ்நானஞ்செய்து, பின் - பின்னர், நாகாசலம் எய்தி- திரு வேங்கடமலையை அடைந்து, துதியா-[அங்குள்ள ஸ்ரீநிவாசனைத்] தோத்திரஞ்செய்து துதித்து, [(பின்னர் அங்கிருந்து புறப்பட்டு) வனசரன் அன்பினைச் சோதித்தவர் தம்மை–வேடனாகிய கண்ணப் பனின் பக்தியினைப் பரிசோதித்துப்பார்த்த திருக்காளத்தீசரை மதியா-மதித்துத்துதித்து. [பின்னர்ப் புறப்பட்டு] தணிகாசல வரை கண்டு - திருத்தணிகைமலையைக் கண்டு, பணிந்தான் நமஸ்கரித்தான்; (எ-று).

யமுனைநதியைச் சூரியன் புதல்வியென்பர், நாகாசலம் - சேஷாத்ரி: அரவக்கிரி எனவும்படும். பரமபதநாதனது ஆஜ்ஞை யின்படி ஆதிசேஷனே மலையுருவமானதனாலும், மேருமலையி லிருந்து ஆதிசேஷனுடனே வாயுவினாற் கொணரப்பட்டதனாலும், இதற்கு இப்பெயர் வாய்த்தது, இது-திருமாலினது திவ்ய தேசங்கள் நூற்றெட்டனுள் ஒன்றும், வடநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டில் முதலதுமாகிய தலம். [அத் திருமலையில் ஆகாச கங்கை, பாபவிநாசம், பாண்டவ தீர்த்தம், குமாரதாரை, தும்புரு தீர்த்தம், கோனேரி, ஆழ்வார் தீர்த்தம் முதலிய பல புண்ணிய தீர்த்தங்கள் இருக்கின்றன]. வனசரன்-வேடன். காளத்தீசர் தமது கண்ணில் குருதிபெருக்கிக் கண்ணப்பனாகியவேடனைப் பக்திக்காகச் சோதித்துப் பார்த்தவர் எனக்கொண்டு அவரை மதியாமலேயே அருச்சுனன் அப்பாற்சென்று திருத்தணிகை மலையை யடைந்தான் என்றும் உரை வகுக்கலாம். அஞ்ஞான்று மதியா-மதியாமல் என எதிர்மறை வினையெச்சமாகும். 'மதித்து' என்று பொருள்படும்போது, செய்யாவென்னும் வாய்பாட்டு உடன்பாட்டு வினையெச்சமாகும். வில்லிபுத்தூரரும் காளத்தி மலையைக் குறிக்கவில்லை: திருவேங்கட மலைக்கு அடுத்துக் கச்சிப் பதியை யடைந்ததாகக் குறித்துள்ளதையும் நோக்குக. திருத் தணிகை வரையில் முருகப் பெருமான் சூரபன்மன் முதலிய அவுணர்களைப் பொருது வெற்றிகொண்டு செருத்தணியுமாறு வந்து தங்கினர். "செருத்தணிகையே" திருத்தணிகை யாயிற்று என்ப: "வரையிடங்களில் சிறந்தது தணிகை மால்வரையே"

என்றது கந்த புராணம். தணிகாசலம்-தணிக+அசலம்: தீர்க்க சந்தி பெற்ற வடமொழித் தொடர். அசலம்-சலியாதது; மலை. தணிகாசலவரை-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. திருப்பதிகளைக் கூறினும், திருப்பதிகளிலுள்ள பெருமான்களை வணங்கினதாகவே கருத்து. (6)

7. காஞ்சிபுரத்திலுள்ள சிவபிரானையும் திருமாலையும் வணங்கிப் பின் திருக்கழுக்குன்றம், திருவண்ணாமலை யிவற்றைத் தொழுதல்.

வரைமாதற மியற்றும்பதி வந்தேமெனு நதிதோய்ந்
தொருமாநிழ லுறைவோரையு மும்பற்கிரி யுறைதேப்
பெருமானையும் பணிந்தாரண பிறங்கற்றொழு தயன்மால்
உருமாறியு மறியாதவ ருறையுங்கிரி கண்டான்.

(இ-ள்). வரைமாது-பர்வதராசன் மகளாகிய உமையம்மை, அறம் இயற்றும் பதி வந்து-மூப்பத்திரண்டு தருமங்களையும் செய்து காட்டிய காஞ்சிப்பதிக்கு வந்து, (அங்குள்ள) ஏழ் எனும் நதிதோய்ந்து-ஏழு நதிகளிலும் நீராடி, (பின்னர்) ஒரு மா நிழல் உறைவோரையும்-ஒப்பற்ற ஒற்றை மாமரத்தின் கீழே எழுந்தருளியிருக்கின்ற ஏகாம்பரநாதரையும், உம்பல்கிரி உறை தேப்பெரு மானையும்-அத்திகிரியில் எழுந்தருளியுள்ள தேவப்பெருமானுகிய வரதராசரையும், பணிந்து-நமஸ்கரித்து, (பின்பு) ஆரண பிறங்கல் தொழுது-வேதகிரியாகிய திருக்கழுக்குன்றத் தெம் பிரானைத் தொழுது வணங்கி, அயன்மால் உருமாறியும் அறியாதவர்–பிரமனும் விட்டுணுவும் [முறையே அன்னப் பறவையாயும் வராகமாயும்] மாற்றுருக்கொண்டு [முறையே முடி அடி] தேடியும் கண்டறிய முடியாதபடி [ஜோதிப் பிழம்பாய்த்] தோன்றிய சிவபிரானர், உறையும்-எழுந்தருளியிருக்கின்ற, கிரி–திருவண்ணாமலையையும், கண்டான்-தரிசித்தான்; (எ-று).

காஞ்சிபுரத்திற்கு வந்த காமாட்சியம்மை, அங்கு மூப்பத்திரண்டு தருமங்களையும் வளர்த்தனளென்றும், அதற்காகச் சிவபிரான் அட்சய பாண்டம் ஒன்றையும், இரண்டு சராவங்களையும் இருநாழி நெல்லையும் அவட்குக் கொடுத்தருளினனென்றும், வரலாறு அறிக. 'அறப்பெருஞ் செல்வி' என்று சேக்கிழாரும், 'பேரறமெண்ணுன்கும் வளர்க்கும் பச்சைக்கொடி' என்று வில்லியாரும் காட்சியம்மையைக் குறித்துள்ளார்கள். மூப்பத்திரண்டு தருமங்களாவன:—கோதானம், பூமிதானம், கன்னிகா

தானம், சத்திரங்கட்டுதல். குளம் வெட்டுதல், சாலையமைத்தல், தண்ணீர்ப்பந்தல் வைத்தல், ஆவுரிஞ்சுதறிநாட்டல், மடங் கட்டுதல், வீடு கட்டிக்கொடுத்தல், பசுவுக்குப் புல்லிடுதல், விலங்குகட்கு இரை கொடுத்தல், பறவைகளுக்கு இரையளித்தல், மகப்பெறுவித்தல், மக வளர்த்தல், மகவுக்குப் பாலளித்தல், மகவுக்குச் சோறளித்தல், ஒதுவார்க்கு உணவு அளித்தல். ஏழை கட்கு அன்னமிடுதல், நோய்க்கு மருந்து தருதல். விலைகொடுத்து உயிர் காத்தல், ஆடையழுக்ககற்ற வண்ணரை வைத்தல், க்ஷௌரத்திற்கு நாவிதரை, வைத்தல், தாம்பூலந்தருதல், அணி கலன் அளித்தல், தலைக்கு எண்ணெய் தருதல், பிறர் கடன் தீர்த்தல், பிச்சையிடுதல், அகதிப் பிணஞ்சுடுதல், ஆடையளித்தல், தின்பண்டம் நல்கல், துயர்தீர்த்தல் என்பன; இவற்றிற்சில, வேறு வேருகவுங்கூறப்படும்.

ஏழ்நதிகள்-கம்பை, பம்பை, மஞ்சனி, பிச்சி, கலிச்சி, மண்ணி, வெஃகா என்பன. ஒரு மா நிழல் உறைவோர்-ஏகாம்பர நாதஸ்வாமி, காஞ்சிபுரத்தில் வேதவடிவமான ஒரு மாமரத்தின் கீழ்ச் சிவபிரான் சிவலிங்கவடிவமாய் எழுந்தருளியிருக்கின்றன னென்க. இது, பஞ்ச சிவலிங்க ஸ்தானங்களுள் பிருதிவிலிங்க ஸ்தானம். உம்பல்-யானை, அத்தி. உம்பல்கிரி-அத்திகிரி. இந்திர னது யானையாகிய ஐராவதம் நெடுநாள் தவஞ்செய்து மலை வடிவங்கொண்டு எம்பெருமானைத் தரித்தலால், அம்மலைக்கு 'அத்திகிரி' என்று பெயராயிற்றென்றும், கஜேந்திராழ்வான் பூசித்துப் பேறுபெற்ற மலையாதலால் அப்பெயர் நிகழ்ந்த தென்றுங் காரணங் கூறுவர், தேப்பெருமான் - வரதராசர்: தேவராஜன் எனவும், தேப்பெருமாள் எனவும் வழங்கப்படுவர்.

ஆரணம்-வேதம். ஆரண பிறங்கல்-வேதகிரி: திருக்கழுக் குன்றம் எனப்படும் தலம். வேதங்களே மலையாய் நிற்றலின் இதற்கு வேதகிரி என்று பெயர். நாடோறும் உச்சிக்காலத்தில் இரண்டு கழுகுகள் வந்து பூசித்து அன்னம் உண்டு போகுமாத லின், 'கழுக்குன்றம்' என்ற பெயர் ஏற்பட்டது. இத்தலத்துச் சிவபெருமானுகிய வேதபுரீச்வரர் மாணிக்கவாசகருக்குக் குருவடி வாகக் காட்சியருளிய தலம்.

ஈற்றடியில் குறித்த வரலாறு: தாம் தாம் கடவுளென்னும் கருத்துக்கொண்டு ஒருவர்க்கொருவர் பகைமை பூண்டு போர் தொடங்கிய பிரம விஷ்ணுக்களின் மாறுபாட்டை யொழிக்கும்

பொருட்டுப் பரமசிவன் அவ்விருவருக்கும் நடுவில் ஒரு பெரிய சேர்திமலை வடிவமாய்த் தோன்றி நின்றனனென்றும், பின்பு சுருங்கிய அந்த அக்கினி மலையே திருவண்ணுமலை யென்றும் சைவ நூற் கொள்கை. (7)

8. பெண்ணையாற்றில் நீராடித் திருக்கோவலூர்ப் பெருமானைத் தரிசித்த பின், திருநாவலூர், திருவதிகை. திருவயிந்திபுரம், சிதம்பரம், ஸ்ரீரங்கம் பெருமான்களைத் தரிசித்தல்.

பெருக்கோடுறு பெண்ணைத்துறை பிறப்பேழ்கெட மூழ்கித்
திருக்கோவலூர் திருநாவலூர் திருவீரட்ட மதிகை
இருக்கோதிய வயிந்திராபுரி யெழிலம்பல மரங்கந்
தருக்கோமகன் மகனெய்தியத் தலத்தேவரைத் தொழுதான்.

(இ-ள்). (பின்பு) தரு கோமகன் மகன்-கற்பக விருட்சத்திற்குத் தலைவனுகிய இந்திரனின் மகனை அருச்சுனன்,— பெருக்கோடு உறு-வெள்ளப் பெருக்கெடுத்து ஓடுகின்ற, பெண்ணை-தென் பெண்ணையாற்றின், துறை-நீர்த்துறையிலே, ஏழ்பிறப்பு கெட மூழ்கி-ஏழுவகைப் பிறப்புக்களும் நீங்கும்படி ஸ்நாநஞ் செய்து, [பின்னர் ஆங்கு அதன் கரையிலுள்ள] திருக்கோவலூர்-திருக்கோவலூரையும், [அங்கிருந்து புறப்பட்டு], திருநாவலூர்-திருநாவலூரையும், திருவீரட்டம் அதிகை-திருவதிகை வீரட்டானத்தையும், இருக்கு ஓதிய அயிந்திராபுரி-வேதத்திற் சிறப்பிக்கப்பட்டுள்ள திருவயிந்திராபுரியையும், எழில் அம்பலம்-அழகு பொருந்திய சிதம்பரத்தையும், அரங்கம்-ஸ்ரீரங்கத்தையும், எய்தி-அடைந்து, அ தலத்தேவரை-அந்தந்தத் தலத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமான்களை, தொழுதான்-நமஸ்கரித்துக்கொண்டே வந்தான்; (எ-று).

'பெருக்கோடுறு பெண்ணைத்துறை' என்றவிடத்து "உருகுங் கமழ்நெய் பாலிருபாலுங் கரையொத்துப் பெருகுந்துறை" என்ற வில்லியார் வாக்கு நினைக. ஏழுவகைப் பிறப்பாவன-தேவர், மனிதர், மிருகம், பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. 'பிறப்பேழ்கெட' என்றது-இனி எந்தப் பிறப்பிலும் ஒருகாலும் பிறந்து வருந்தாதபடி என்றவாறு. ஈண்டு, முதலிற் கூறியுள்ள நான்கு தலங்களும் நடுநாட்டிலுள்ளவை; ஏனைய இரண்டும் சோழ நாட்டைச் சேர்ந்தன.

திருக்கோவலூர்:—நடுநாட்டிலுள்ள திருமாலின் திருப்பதி யிரண்டனுள் ஒன்றும், தென்பெண்ணை யாற்றின் தென்கரையி லுள்ளதுமாகிய திவ்விய தேசம். முதலாழ்வார்கள் மூவரும் மொழி விளக்கேற்றி முகுந்தனைத் தொழுத இடம். இங்குப் பெருமாள் திருநாமம்-தேகளீசன், திரிவிக்கிரமன், ஆயனர். தாயார் திருநாமம்-பூங்கோவல் நாச்சியார், பூங்கோயிலாள்.

திருநாவலூர்:—நாவல் மரம் தலவிருட்சம்: இறைவன் பெயர்-நாவலேசுவரர், ஐம்புநாதர், பக்தஜனேசுவரர். இறைவி பெயர்-சுந்தரநாயகி, மனோன்மணியம்மை. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பிறந்த தலம். திருவதிகை வீரட்டானம்:—சிவபிரானது பராக்கிரமம் விளங்கும் இடமான எட்டுத் தலங்கள் அட்ட வீரட்டமென்றும், அட்டவீரட்டானமென்றும் பெயர் பெறும். வீரட்டம், வீரட்டானம்=வீரஸ்தானம். அவற்றில் திருவதிகை திரிபுரத்தை யெரித்த தலம்: திருநாவுக்கரசு நாயனாரைச் சூலநோய் தவிர்த்து ஆட்கொண்ட தலம் இதுவே. இறைவன்-வீரட்டானேசுவரர்; அம்பிகை-திருவதிகை நாயகி. திருவயிந்திராபுரி:—திருவஹீந்த்ர புர அஹி - நாகங்களுக்கு, இந்திரன்-தலைவனை ஆதிசேடன்: ஆதியில் ஆதிசேடனால் நிருமிக்கப்பட்டதால், இவ்வூர்க்கு அகிந்த்ர புரம் என்று பெயர்: இது கருடநதியின் கரையது; விஷ்ணு ஸ்தலம், திருமால் திருநாமம்-தேவநாதன்; தாயார்-ஹேமாப்ஜ வல்லி. அம்பலம் - திருச்சிற்றம்பலம்: சிதம்பரம்; பொன்னம்பலம் எனப்படுவது: பொன்மயமான சபை; கனகசபை. இது பஞ்ச சபைகளுள் ஒன்று: இங்குச் சிவபிரான் திருநாமம்-சபாநாயகர்; அம்பிகை-சிவகாமியம்மை. சைவர்களால் 'கோயில்' எனச் சிறப்பிக்கப்படும் தலம். அரங்கம்-திருவரங்கம்; ஸ்ரீரங்கம்:—திருமால் திருவுள்ளமுவந்து எழுந்தருளியிருக்கும் இடமாதல் பற்றி 'ரங்கம்' என்று அவ்விமானத்துக்குப் பெயர்: அது, அரங்கம் என வந்தது. நூற்றெட்டுத் திருமால் திருப்பதிகளுள் தலைமை பூண்டது; சோழ நாட்டில் உபயகாவேரி மத்தியில் உள்ளது: கோயிலென்றும், பெரிய கோயிலென்றும் மறு பெயருடையது. பூலோக வைகுண்டமெனப்படுகிற மகிமையையுடையது. இங்குப் பெருமாள் திருநாமம்-ஸ்ரீரங்கநாதன்; பிராட்டி - ஸ்ரீரங்கநாயகி.

தலந்தோறும் உம்மை விரித்துக்கொள்க. (8)

9. பல தீர்த்தங்களில் நீராடி மதுரை சேர்ந்து, ஆங்கோர் சோலையில் அந்தணருடன் அருச்சுனன் தங்குதல்.

பொன்னித்துறை முதலாகிய பொய்கைபல மூழ்கி
மன்னுந்தமிழ் எதிரேறிய வைகைப்பதி யெய்தி
தென்னன்றனைக் கண்டங்கவன் செய்பூசனை கொடுவான்
துன்னும்பொழில் பயின்முனரன் துறவோரொடு மம்மா.

(இ-ள்). நரன்-அருச்சுனன், பொன்னித்துறை முதலாகிய பொய்கை பல மூழ்கி-காவேரியாற்றின் நீர்த்துறைகள் முதற் கொண்டு பல தீர்த்தங்களில் நீராடிக்கொண்டே, மன்னும் தமிழ் எதிர் ஏறிய-நிலைபெற்ற தமிழ் எழுதப்பெற்ற ஏடு கரையே நீரை எதிர்த்துச் சென்று ஏறிய, வைகைப்பதி எய்தி-மதுரை மாநகரை யடைந்து, அங்கு-அந்த நகரில், தென்னன்தனைக் கண்டு-பாண்டிய ராசனைப் பார்த்து, அவன் செய் பூசனை கொடு-அவன் எதிர் கொண்டழைத்துச் செய்த வந்தனை வழிபாடுகளை யேற்றுக் கொண்டு, (பின்பு) வான் துன்னும் பொழில்-ஆகாயத்தை யளாவுஞ் சோலையில், துறவோரொடும் பயின்முன்-அந்தண ரோடும் தங்கினன்; (எ-று). அம்மா-ஈற்றசை.

இரண்டாமடியிற் குறித்த கதை: திருஞான சம்பந்தர் சமணர்களை வென்று சைவ மதத்தை நிலைநிறுத்தும் பொருட்டுப் பாண்டிய நாட்டுக்குச் சென்றார். அப்பொழுது சமணர்கள் அரசன் முன்னிலையில் 'நாம் இருநிறத்தேமும் நமது சமய சித்தாந் தத்தை யெழுதிய ஏட்டை ஓடுகின்ற வையையாற்றிலே இடு வோம்: அவற்றில் எதிர்ந்து செல்லும் ஏடே மெய்ப்பொருளை யுடையது' என்று சொல்ல, அதற்கு நாயனார் உடன்பட்டபின், சமணர்கள் "அஸ்தி, நாஸ்தி" என்னும் தங்கள் மதக்கோட் பாட்டை எழுதிய ஏட்டை நதிப்பெருக்கில் இடுதலும், அதனை அப்பெருக்கு அடித்துக்கொண்டு போய்விட்டது. உடனே, நாயனார் "வாழ்க வந்தணர்" என்று தொடங்கும் பாசுரத்தைப் பாடி ஏட்டிலெழுதி அதே ஏட்டைத் தமது கையினால் வைகை நதியில் இட, அவ்வேடு நதியிலே எதிர்ந்து நீரைக் கிழித்துக் கொண்டு சென்றது என்பதாம். நாலடியாரைப் பற்றிய கதை யைக் கொள்வாருமுளர். செய்பூசனை-வினைத்தொகை: கொடு-கொண்டு என்பதன் தொகுத்தல். வான் துன்னும் பொழில் உயர்வு நவிற்சி. (9)

10. பாண்டியனது மகள் சித்திராங்கதை ஒரு செய்குன்றினைச் சேர, அவளெதிர் அருச்சுனன் நிஜவடிவத்தோடு நெருங்க அவளும் மையல் கொளல்.

செழியன்புரி தவத்தால்வரு சித்திராங்கதை யெனுமான்
விழிவந்தவ ணுயத்தொடும் விளையாடிய செய்குன்
றுழிகண்டருச் சுனன்றன்முன துருக்கொண்டணை வானவ்
வழியெய்தின னவளும்மிவன் மயல்கொண்டிசை வாளுள்.

(இ-ள்). செழியன்புரி தவத்தால் வரு-பாண்டியன் சித்திராங்கதன் செய்த தவத்தின் பயனுய் வந்து பிறந்த, சித்திராங்கதை எனும் மான்விழி வந்து - சித்திராங்கதை என்ற மகள் வந்து, அவண், - அந்தச் சோலையில் ஆயத் தொடும்–தோழிப் பெண்களோடும், விளையாடிய-, செய்குன்று உழி - (செயற்கையாகச்) செய்யப்பட்ட குன்றினிடத்து, அருச்சுனன் கண்டு - அருச்சுனன் பார்த்து, தனது முனது உருக்கொண்டு அணைவான்-தன்னுடைய முன்னைய நிஜ வடிவத்தைக்கொண்டு நெருங்குவானுகி, அவழி எய்தினன் - அந்த வழியே வந்தான்; அவளும் - அந்தச் சித்திராங்கதையும், இவன் மயல் கொண்டு- இவன்மேல் மோகங்கொண்டு, இசைவு ஆளுள் - ஒருப்பட்டாள்; (எ-று).

செழியன் - பாண்டியன்: செழுமையையுடையவன் என்ற காரணம்பற்றியது. இந்தப் பாண்டியன் பெயர் சித்திரவாகனன் என்பது; சித்திராங்கதன் எனவும்படுவன். சித்ரவாஹனன் என்ற வடமொழிப் பெயர்-அழகிய வாகனத்தையுடையவனென்றும், சித்ராங்கதா என்ற வடமொழிப் பெயர் - அழகிய தோள் வளையையுடையவனென்றும் பொருள்படும். செய்குன்று-இயற்கையாக அமைந்த மலையன்றிப் பிற்காலத்தில் விளையாட்டுக்காக மலைபோல் அமைக்கப்பட்ட இடம். மான்விழி - மான் போன்ற விழியுடையாளுக்கு-உவமைத்தொகையன்மொழி. உழி-ஏழனுருபு. முனது - முன்னது என்பதன் தொகுத்தல். முனதுரு - தவவேடத்தையொழித்து நிஜ வடிவமாகிய உருவம். அணைவான்-வானீற்று வினையெச்சம். இவன் மயல் [கொண்டு] - ஏழனுருபு தொக்கது. இசைவு - தொழிற்பெயர். (10)

11. அருச்சுனனும் சித்திராங்கதையும் கந்தருவ முறையாற்கூடி இன்பம் நுகர, அவள் பின்பு அச்செய்தியைத் தன் தோழியர்க்குச் சொல்லுதல்.

மயலாலவ ணிருவோர்களு மாலுந்திரு வும்போல்
அயலாயமு முனிவோர்களு மறியாதிசை வல்லோர்
முயலாமண வியலின்சுக முழுதுண்டபி னவளச்
செயல்யாவையு மாயத்தொடு சென்றேதின ளன்றே.

(இ-ள்) அவண்-அச் செய்குன்றினிடத்து, இருவோர்களும்-அருச்சுனனும் சித்திராங்கதையும், மாலும் திருவும்போல்-திருமாலும் இலக்குமியும்போல, மயலால் - காமமோகத்தால், அயல் ஆயமும் முனிவோர்களும் அறியாது - பக்கத்திலுள்ள தோழியர்கூட்டமும் அந்தணர்களும் அறியாதபடி [தனியே சென்று], இசை வல்லோர் முயலா - கந்தருவரும் முயன்று பெற முடியாத, மண இயலின் சுகம் - கந்தருவ மணமுறைமையினால் பெற்ற காமநுகர்ச்சியின்பத்தினை, முழுது உண்டபின்-முற்றும் அநுபவித்த பின்பு, அவள் - அந்தச் சித்திராங்கதை, அச்செயல் யாவையும் - அங்கு நிகழ்ந்தவெல்லாவற்றையும், ஆயத்தொடு-தோழியர்களிடத்தில், சென்று - போய், ஓதினள் - எடுத்துரைத்தனள்; (எ-று) அன்றே - ஈற்றசை: தேற்றமுமாம்.

அன்றே - அப்போதே எனினுமாம். திருமாலின் மார்பினை விட்டு இறையேனும் அகலகில்லேன் என்று என்றும் பிரியாது இலக்குமியிருப்பவளாதலின் அவ்விருவரையும் ஈண்டு உவமை காட்டியபடி. இசை வல்லோர் - யாழோர்: கந்தருவர். 'முயலா' என்றதால் - இன்பநுகர்ச்சிக்கேயுரிய கந்தருவர்களினும் மிக இன்பம் நுகர்ந்தனர் இவ்விருவரும் என்பதாம். காந்தருவம்-காதலர் தம்முள் மனமொத்துக் கூடுங் கூட்டம்.

இனி, வியாசபாரதப்படி நோக்கின் - மணலூரில் அருச்சுனன் சென்றபோது ஆங்குத் தன் விருப்பின்படி செல்லும் சித்திரவாகனன் மகளைக் கண்டு காதல்கொண்டவனுப் அவள் தந்தையைக் கண்டு தன் விருப்பத்தைத் தெரிவித்தான். அவனும் தன் மகளைக் காதலிப்பவன் அருச்சுனனென்று அறிந்து உவந்து, தன் மகளுக்குப் பிறக்கும் புத்திரனைத் தனக்குத் தத்தகுமாரனாகத் தரும் ஏற்பாட்டுடன் மணஞ்செய்து கொடுத்தான் என்பது அறியலாம். (11)

12. அச்செய்தியைத் தோழியர் பாண்டியனுக்குச் சொல்ல, அவன் அருச்சுனன் வரவியல்பறிந்து மகிழ்தல்.

உயிரன்னவர் மயிறன்னையு முடன்கொண் டகமெய்திப்
பயிறண்மல ரணையுய்த்துரு வில்லிவெஞ்சமர் பட்டச்
செயறந்தவ னுக்கோதினர் செழியன்சிலை மீளி
இயல்போர்ந்துள மகிழ்வெய்தின னிருள்போழ்ந்தினன் வந்தான்.

(இ-ள்) உயிரன்னவர்–உயிர்போன்ற தோழிமார்கள், மயில் தன்னையும்-சித்திராங்கதையையும், உடன்கொண்டு-கூட அழைத்துக்கொண்டு, அகம் எய்தி-மனையினுள் புகுந்து, பயில்-மிகுதியாகச் சொரிந்துள்ள, தண் மலர் அணை உய்த்து-குளிர்ச்சி பொருந்திய பூக்களைக்கொண்ட படுக்கையிலே (அவளைப்) படுக்கவைத்து, உருவிலி வெஞ்சமர் பட்ட-மன்மதன் செய்த கொடிய போரினால் வருத்தப்பட்ட, அ செயல்-அந்தச் செய்தியை, தந்தனுக்கு-தந்தையாகிய சித்திரவாகனனுக்கு, ஓதினர்–சொன்னார்கள்: செழியன்-பாண்டியனும், சிலை மீளி–வில் தொழிலில் சிங்கம் போன்ற அருச்சுனனின், இயல்பு ஓர்ந்து-வந்த தன்மையையறிந்து, உளம் மகிழ்வு எய்தினன்–மனமகிழ்ச்சிகொண்டான்: (அப்போது) இனன்-சூரியன், இருள்போழ்ந்து-இருட்டினைப் பிளந்துகொண்டு, வந்தான்–உதித்தான்; (எ-று).

மயில்-உவமவாகுபெயர். உருவிலி-அநங்கன்: மன்மதன்: காமத்தை விளைவிக்குங் கடவுள். தந்தவன்-குறிப்பு வினையாலணையும் பெயர். சிலைமீளி-உருவகம்: அருச்சுனனைக் காட்டும். மீளி-சிங்கம். இயல்பு-பண்பு எனினுமாம். (12)

வேறு.

13. அருச்சுனன் மதன் வேதனையில் இரவு கழித்து அந்தணருடன் துயிலுணர்ந்து காலைக்கடனைச் செய்து பாண்டியன் அவை புக, அவன் 'என் மகளை உனக்கு மணஞ்செய்விப்பேன்' எனக் கூறி, அருச்சுனனிடம் ஒரு வரம் வேண்டிப் பெறுதல்.

தரியலர்வெந் தரவமரிற் சயங்கொள் பார்த்தன்
தனியிரவங் கசனமரிற் றளர்ந்து காலை
அரியகடன் முனிவரொடு மியற்றி வேந்தன்
அவைபுகுந்தா னிவனரனென் றவனும் புல்லி

ஒருமகளெற் கரசியற்று மகன்வே றின்றி
யுறுதுயர்நீ பெறுமகனு லொழியென் றியார்க்குங்
திருவதுவை முடங்கல்விடுத் தெவருஞ் சூழத்
தெரிவையைப்பற் குனற்குமணஞ் செய்தீந் தானே.

(இ-ள்) அமரில்-போரில், தரியலர் வெந் தர–பகைவர் முதுகு காட்டியோடும்படி செய்து, சயம் கொள் பார்த்தன் - வெற்றியைப் பெறுகின்ற விசயன், தனி இரவு-தனிப்பட்டவனுய் இராத்திரிப் போது, அங்கசன் அமரில் தளர்ந்து - மன்மதனிட்ட போரில் தளர்ச்சியடைந்து, காலை - விடியற்காலையில், முனிவரொடும்-அந்தணருடன், அரிய கடன் இயற்றி - செய்தற்கு வேண்டிய கடன்களை அரிதிற்செய்து, வேந்தனவை புகுந்தான்-பாண்டியன் சபையில் நுழைந்தான்: இவன் நரன் என்று - இவன் அருச்சுனனே என்று, அவனும் புல்லி–அந்த அரசனும் தழுவி, (அவனை நோக்கி) "எற்கு - எனக்கு, ஒரு மகள் – ஒரு பெண் (இவள்), [ஆகவே] அரசு இயற்றும் மகன் வேறு இன்றி உறுதுயர் - எனக்குப் பின்னர் அரசு செய்வதற்கு ஆண்பிள்ளையொருத்தருமின்றி [யான்] படுகின்ற மிக்க துன்பத்தை, நீ பெறும் மகனுல் ஒழி-நீ பெறப்போகின்ற பிள்ளையினுல் ஒழிப்பாயாக [எனக்கு அவனை அபிமான புத்திரனுகக் கொடுக்கவேண்டும்]" என்று-என்று கூறி வரம்வேண்டி, (பின்பு) யார்க்கும் - அனைவர்க்கும், திரு வதுவை முடங்கல் விடுத்து-திருமணப் பத்திரிகைகளை யனுப்பி, எவரும் சூழ-அனைவரும் வந்துசேர, தெரிவையை - சித்திராங்கதையை, பற்குனற்கு - அருச்சுனனுக்கு, மணம் செய்து - விவாகஞ்செய்து, ஈந்தான் - (தாரைவார்த்துக்) கொடுத்தான்; (எ-று).

அங்கசன்–மனதில் தோன்றுபவன் : மன்மதன். 'உறுதுயர் நீ பெறுமகனுலொழி' என்றது - எனது மகள் பெறும் பிள்ளையை எனக்கே (எனது சந்ததி விருத்தியின்பொருட்டு அபிமான புத்திரனுகக்) கொடுத்துத் துயரம் ஒழிப்பாய் என்றபடி. போரில் தளராத பார்த்தனும் அங்கசனிட்டபோரில் தளர்ந்தான் என்றது நயம். ஒழி-பிறவினைப் பொருளில் வந்தது.

இதுமுதற் பதினெரு கவிகள் - பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆருஞ்சீர்கள் காய்ச்சீர்களும் மற்றைய நான்கும் மாச்சீர்களுமாகிய கழிநெடிலடி நான்குகொண்ட எண்சீராசிரியவிருத்தங்கள்.

14. அருச்சுனன் சித்திராங்கதையினிடமாகப் பெற்ற புதல்வனைச் சித்திரவாகனனுக்குக் கொடுத்துப் பிரயாணப் பட்டுத் திருமாவிருஞ்சோலைமலை, சேது, அகத்தியமலை, கன்னித்தண்துறை இவற்றைத் தரிசித்தபின் பரசுராம ஞ்சிரமம் சேர்தல்.

உருவிலியு மிரதியும்போற் சுரத வின்பம்
உபையருமுண் டுறுநாளி லொருநா ளம்மான்
தருமகன்பப் புருவாகன் றன்னைப் பார்த்தன்
தமிழ்நாடற் கினிதளித்தத் தலத்துள் தீர்த்தஞ்
சுருதிமுனி வரரொடுந்தோய்ந் தெய்தி தென்பாற்
சோதிதிரு மலைப்பணிந்து துளவ நாறுந்
திருவணைதோய்ந் தகத்தியன்வெற் பிறைஞ்சிக் கன்னி
நினைத்துபர சுராமனு சிரமங் கண்டான்.

(இ-ள்) உருவிலியும் இரதியும்போல்-மன்மதனும் ரதியும் போல, சுரத இன்பம்-புணர்ச்சியின்பத்தை, உபையரும் உண்டு-இருவரும் ஒக்க அநுபவித்து, உறு நாளில்-பொருந்திவரும் நாட்களில், ஒருநாள் - ஒருதினம், அ மான் தருமகன்-அந்தச் சித்திராங்கதை பெற்ற பிள்ளையாகிய, பப்புருவாகன்தன்னை-பப்புருவாகன் என்பவனை, பார்த்தன்-அருச்சுனன், தமிழ்நாடற்கு-பாண்டிய மன்னனுகிய சித்திரவாகனனுக்கு, இனிது அளித்து-அன்போடு [அபிமான புத்திரனுக]க் கொடுத்து, (பின்பு) அ தலத்துள்-அந்தப் பாண்டிய நாட்டிலுள்ள, தீர்த்தம்-புண்ணிய தீர்த்தங்களில், சுருதி முனிவரரொடும் தோய்ந்து - வேதங்களில் வல்ல அந்தணர்களோடும் ஸ்நானஞ் செய்பவனுய் (ப் புறப்பட்டு), தென்பால் எய்தி-தெற்குத்திசையை யடைந்து, சோதி திருமலை பணிந்து-திருமாலிருஞ் சோலைமலை யழகரைத் தண்டனிட்டு வணங்கி, துளவநாறும் திருவணை தோய்ந்து-திருத்துழாயின் வாசனை வீசும் சேதுவில் நீராடி, அகத்தியன் வெற்பு இறைஞ்சி-அகத்தியர் மலையை வணங்கி, கன்னி நினைத்து-கன்னியாகுமரித் நுறையில் நீராடி, பரசுராமன் ஆசிரமம் கண்டான்-பரசுராமராச்சிரமத்தை (மலை நாட்டில்) தரிசித்தான் ; (எ-று)

பப்புவாகன்-பப்புவாஹநன் என்ற வடமொழிப் பெயர். பிங்கலவர்ணமான குதிரைகளையுடையவனென்று பொருள்படும் 'துளவம் நாறும் திருவணை' என்றது - இராமபிரான் அன்பர்களிட்ட திருத்துழாயின் நறுமணம் நீங்காத திருவடிகளால் மிதித்து

நடந்து சென்றதனால், அத்துழாயின் நறுமணம் நீங்காது எப் பொழுதும் அங்குச் செறிந்திருக்கும் என்றபடி: வில்லிபுத்தூரரும் "ஒரு வில்வீரன்...சென்றவழி இன்றளவும் துளவநாறுஞ்சேது" என்றார். திருத்துழாய் திருமாலுக்கு உரியது. அகத்தியன் வெற்பு-பொதியமலை யெனினுமாம். கன்னி-குமரி நீர்த்தம்; இது, பின்னர்க் கடலாற் கொள்ளப்பட்டதென்ப. பரசுராமன் ஆசிரமம்-பரசுராம க்ஷேத்திரம். பரசுராமன் தான் வசப்படுத்திய பூமி முழுவதையும் காசியப முனிவனுக்குத் தானஞ்செய்த பின்னர், அம்முனிவன் "நீ எனக்குக் கொடுத்துவிட்டதான பூமியில் வசித்தல் தகுதிபன்று" என்ன, இப்பரசுராமன் "அங்ஙனமே யாகுக" என்று கடற்கரை சேர்ந்து தனக்கு இடங்கொடுக்கும்படி அக்கடலை வேண்டி, அதன் அனுமதிப்படி, அதில் தனது கோடாலிப் படையை வீசியெறிய அது சென்று விழுந்த பன்னிரண்டு யோசனை தூரம் கடல் விலகிவிட, அப் பூமியில் அப் பெருமான் வசித்தனன்; அவ்விடம் பரசுராம க்ஷேத்திரம் என்று பெயர் பெறும்: அது மலைநாட்டின் முக்கியமான பாகமாம். 'சோலை திருமலை' என்றும் பாடமிருக்கலாம்,—அழகர் மலையைக் குறிப்பதாதலின். உபையர்-வடசொல். மான்–உவமவாகு பெயர். (14)

15. அருச்சுனன் ஐந்து தேவமாதர்களின் சாபத்தை நீக்கிக் கோகர்ணத்திறைவனை வழிபட்டுத் துவாரகை சார்ந்து சங்கியாசி வேஷங்கொள்ளல்.

வரம்பலைக்கும் பொருநைமுத லியபற் றீர்த்தம்
வந்துபடிந் தைந்துதட வனந்தோய்ந் தோரைந்
தரம்பையரிந் திரன்சாபத் திடங்க ராகி
அணங்குறுவோர் தொல்லைவடி வாக நல்கித்
திரபெறுகோ கன்னமுறு மரனைப் போற்றிச்
செழுந்தவரை யவணிறுவித் திருவாழ் துவரா
புரம்புகுந்தச் சுதனிலையா டன்னை வேள்வி
புரிவான்பற் குனன்முக்கோற் புனித னனன்,

(இ-ள்.) வரம்பு அலைக்கும்-கரையில் மோதியலைக்கின்ற பொருநை முதலிய பல் தீர்த்தம் வந்து படிந்து-பொருநையாறு முதலாகிய பல புண்ணிய தீர்த்தங்களில் வந்து மூழ்கி, (பின்பு) ஐந்து தட வனம் தோய்ந்து-ஐந்து தடாகங்களின் நீரில் நீராடி, (அங்கு) ஓர் ஐந்து அரம்பையர்-ஐந்து தேவமாதர்கள், இந்திரன் சாபத்து-இந்திரனிட்ட சாபத்தினால், இடங்கர் ஆகி-முதலைகளாகி,

அணங்கு உறுவோர் - வருத்தமுற்றிருப்போர், (அவ்வருத்தம் நீங்கித்) தொல்லை வடிவு ஆக நல்கி-பழைய சுய ரூபத்தை அடையும் படியாக அநுக்கிரகித்து. (பின்பு) திரம் பெறு-நிலையாக என்றுமுள்ள, கோகன்னம் உறும் அரனை போற்றி-கோகர்ணம் என்னும் க்ஷேத்திரத்திலுள்ள சிவபிரானைத் துதித்து வணங்கி, செழுந் தவரை அவண் இறுவி-(தன்னைநோடுவந்த) சிறந்த தவமுனிவர்களை அவ்விடத்திலேயே இருக்கச்செய்து, (பின்னர் திருவாழ்துவராபுரம் புகுந்து-இலக்குமி வாழ்கின்ற [செல்வச் சிறப்போடு கூடிய] துவாரகை நகரைச் சேர்ந்து, பற்குனன்-அருச்சுனன், அச்சுதன் இளையாள் தன்னை-கண்ணபிரானின் தங்கையாகிய சுபத்திரையை, வேள்வி புரிவான்-விவாகஞ் செய்து கொள்ளும் நிமித்தமாக, முக்கோல் புனிதன் ஆனன்-திரிதண்டத்தையுடைய சந்நியாசியாயினன்; (எ.று).

பொருநை-இங்கே, சேரநாட்டு ஆன் பொருநை நதியைக் குறிப்பது : [தாமிரபர்ணி எனக்கொள்வது அடைவுக்குச் சேராது]. ஐந்து தடாகங்கள்-ஸௌபத்ர தீர்த்தம், பௌலோம தீர்த்தம், காரந்தம தீர்த்தம், அசுவமேத பல தீர்த்தம், பாரத்வாஜ தீர்த்தம் என்னும் ஐந்து புண்ணிய தீர்த்தங்கள்.

இங்குக் குறித்துள்ள சாபவிமோசன வரலாறு :— அருச்சுனன் மேற்குறித்த ஐந்து புண்ணிய தீர்த்தங்களைக்கண்டு அவற்றில் ஐந்து முதலைகள் இருந்து இறங்குபவரை யெல்லாம் கவர்தலால் அவை எவராலும் நீராடாது விடப்படுகின்றன என்று அறிந்து அம்முதலைகளைத் தொலைக்கக் கருதி மிக்க தைரியத்தோடு அவற்றில் அகஸ்திய தீர்த்தமான ஸௌபத்திரத்தில் இறங்கி நீராட, அதிலிருந்த பெரிய முதலை அருச்சுனனைப் பற்றிக் கொண்டது; அவன் அதனை விடாமல் தனது வலிமையினால் இழுத்துக் கரையிற் சேர்த்த வளவில், அம் முதலை, திவ்வியசௌந்தரியமுடைய ஒரு தேவமாதாக மாறிற்று. அது கண்டு வியந்த அருச்சுனன் 'நீயார்'? உன் வரலாறு என்ன ? என்று வினவ, அவள் கூறுவாள் :— "குபேரனுக்குப் பிரியமானவளான வர்க்கையென்னும் அப்சரப் பெண் யான். ஸௌரபேயி, ஸமீசி, புத்புதா, லதா என்ற எனது தோழியர் நால்வருடன் யான் செல்லுகையில் மிக்க அழகுள்ள ஒரு முனிவன் பெருந்தவஞ் செய்தல்கண்டு அத்தவத்துக்கு இடையூறு செய்யக் கருதி, நாங்கள் ஐவரும் ஆடல் பாடல் முதலிய விநோதங்களால் அவன் மனத்தைக் கலக்கத் தொடங்கியபோது, நீலி கலங்காத அவன் எங்களை முதலைகளாகும்படி சபித்தான். உடனே நாங்கள் அவனையே சரணமடைந்து எங்கள் பிழையைப் பொறுத்தருளுமாறு பிரார்த்திக்க, "நூறு வருஷம் கழிந்த வளவில்

உங்களை ஓர் உத்தம புருஷன் நீரினின்று கரையேற்றுவன் : அப் பொழுது உங்கட்கு இச்சாப வடிவம் ஒழியும்'' என்று சாபவிடை கூறியருளினன்: அதுமுதல் நாங்கள் முதலைகளாய் இந்த ஐந்து தீர்த்தங்களிலும் வசிக்கிறோம். என்னைப்போலவே மற்றை நால் வரையும் நீ சாபந்தவிர்த்தருளுக' என்று கூற, அருச்சுனன் அங் ஙனமே மற்றைய தீர்த்தங்களிலும் இறங்கி அம் முதலைகளையும் இழுத்து வெளியே விட, அவையும் தேவமாதர்களாய்ச் சென்றன. பின்பு அனைவரும் அச்சமின்றி அத்தீர்த்தங்களில் இறங்கி நீராட லாயினர் என்ற வரலாற்றின் விவரத்தை முதலாலால் அறியலாம். இந்த வரலாற்று விஷயம் பாலபாரதத்திற் குறிக்கப்பட்டிலது. திரம்=ஸ்திரம். கோகன்னம்-கோகர்ணம்: துளுவ நாட்டிலுள்ள சிவதலம். இராவணன் தவஞ் செய்து தனது இலங்கை அழியா திருத்தற்பொருட்டு அங்குத் தாபித்துப் பூசித்தற்காகப் பெற்றுச் சென்ற சிவலிங்கம், விநாயகரைக்கொண்டு தேவர்கள் செய்த சூழ்ச்சியால் இடையில் தங்கி, இராவணன் தனது இருபது கரங் களாலும் பற்றிபிழுக்கவும் வாராது பசுவின்காது போலக் குழைந்து காட்டியதால், இது கோகர்ண மெனப்படும். கோகர் ணம்-பசுவின் காது. இத் தலத்துச் சிவபிரான் திருநாமம்-மகாப லேசுவரர்: அம்பிகை-பெரிய நாயகியம்மை, (15)

16. அருச்சுனன் ரைவதககிரியில் மழைக்காலத்து ஓர் ஆல மரத்தினடியிற் சேர்ந்து கண்ணனை நினைக்க, அப்பெருமான் தோன்றி வணங்க. அவனுக்கு ஆசிகூறித் தான் வந்த காரியமுஞ் சொற்றல்.

குடதிசைமித் திரனேகக் கங்கு லெய்திக்
கூரிருளெண் டிசைபோர்ப்பக் குரிசி லந்தத்
தடநகர்சூ ழிரேவகதிகா சயில மெய்தித்
தடித்திடித்துப் பெய்யுமழை தன்னு லாங்கோர்
வடதருவின் பொதும்பர்புகுந் தினிய நண்பன்
வரும்படிசிந் தனைசெய்தான் மாலு நண்பன்
இடமெய்த்தொழுதிடலு மவனு மாசி
யியம்பிமுனி யாஞ்செயலு மிசைத்தான் மன்னே.

(இ-ள்). மித்திரன்-சூரியன், குடதிசை ஏக-மேற்கு திக்கில் போய் அத்தமிக்க, கங்குல் எய்தி-இரவு வந்து, கூர் இருள் எண் திசை போர்ப்ப-மிக்க இருட்டு எட்டுத்திசையிலும் கவிப்ப, குரிசில்-அருச்சுனன், அந்த தட நகர்சூழ்-அந்த விசாலமான துவாரகாபுரியைச் சார்ந்த, இரேவதிகா சயிலம் எய்தி-ரைவதக

மென்னும் மலையை யடைந்து, தடித்து-மின்னி, இடித்து-இடியொலி செய்து, பெய்யும் மழை தன்னில்-பெய்கின்ற மழையினூலே (நனையாதிருக்கும் பொருட்டு), ஆங்கு-அம்மலையினிடத்து, ஓர் வடதருவின் பொதும்பர் புகுந்து-ஒரு ஆலமரத்தினது செறிவினுள் புகுந்து, இனிய நண்பன் வரும்படி-தன் மனத்துக்கு இனிய சிநேகிதனை கண்ணபிரானை[த் தன்னிடம்] வரும்படி, சிந்தனை செய்தான்-தியானித்தான்: மாலும்-கண்ணபிரானும், நண்பன் இடம் எய்தி-அருச்சுனனுடைய சிநேகிதன் இருந்த ஆலமரத்தை யடைந்து, தொழுதிடலும்-(அவனை) வணங்கியவுடனே, அவனும்-அந்த அருச்சுனனும், ஆசி இயம்பி-ஆசீர்வாத வசனங்களைச் சொல்லி வாழ்த்தி, [பின்னர் தான்], முனியாம் செயலும் இசைத்தான்-திரிதண்ட சந்நியாசியாகிய செய்தியையும் சொன்னான் (எ-று). மன், ஓ-ஈற்றசை.

முனியாகியது-சுபத்திரையைப் பெறுவதற்காக. (16)

17. அருச்சுனன் கருத்தையறிந்து கண்ணன் துவாரகை திரும்ப, மறுநாள் விடியற்காலையில் அம்மலையில் இந்திர விழவுக்காகப் பலராமன் பலரும் சூழச் சுபத்திரையோடும் வந்து சேர, அனைவரும் சந்நியாசியை வணங்கின பின்பு கண்ணன் வந்து வணங்குதல்.

உரியநர னினைவையறிந் தமலன் கங்குல்
ஒழிந்தபினர் வருவலென வுரைத்துர் போந்தேழ்
பரியவன்வந் தெழுந்தபினர் மழைக்கா லத்திற்
பாகசா தனற்குவிழாப் பண்ண முன்னோன்
புரியவரியா தவர்போச ரினையா ளோடும்
போந்துமுனி வனைத்தொழுதப் பொருப்பி னுற்றங்
கரியவிழா தொடங்குபொழு திவனும் வந்தங்
கடிதொழுதான் மனவணக்க மவனுஞ் செய்தான்.

(இ-ள்). உரிய-மைத்துனமுறைமைக்கு உரிய, நரன்-அருச்சுனனது, நினைவை அறிந்து-கருத்தையறிந்து, அமலன்-கண்ணபிரான், 'கங்குல் ஒழிந்தபினர் வருவல்' என உரைத்து-இரவு நீங்கிய பின்னர் வருவேன் எனச் சொல்லி, ஊர்போந்து-துவாரகை சேர்ந்து, ஏழ் பரியவன் வந்து எழுந்த பினர்-சூரியன் உதித்த பின்னர், மழைக் காலத்தில்-மாரிக்காலத்தில், பாகசாதனற்கு விழாப்பண்ண-இந்திரனுக்கென விழாக்கொண்டாட, முன்னோன்-[தமையனாகிய] பலராமன், புரியவர்-துவாரகாபுரியிலுள்ளவர்கள்

யாதவர்-யதுகுலத்தவர்கள், போசர்-போச குலத்தவர்கள் [இவர் கள் சூழ்ந்திருக்க], இளையாளோடும்-தங்கையாகிய சுபத்திரை யோடும், போந்து-ரைவதககிரிக்கு வந்து, முனிவனைத் தொழுது-அங்குள்ள [அருச்சுன] சந்நியாசியை வணங்கி, அ பொருப்பின் உற்று-அந்த மலையில் பொருந்தியிருந்து, அரிய விழா தொடங்கும் பொழுது-சிறப்பான இந்திர விழாவினை ஆரம்பிக்கும்போது, இவனும் வந்து-இந்தக் கண்ணபிரானும் அவ்விடத்து வந்து, அடிதொழுதான்-அந்த [அருச்சுன] சந்நியாசியின் பாதங்களில் பணிந்தான்: அவனும்-அந்த அருச்சுனனும், மன வணக்கம் செய் தான்-(கண்ணனைத் தனது) மனத்தால் வணங்குதலைச் செய்தான்; (எ-று).

அருச்சுனன் சுபத்திரையை மணத்தல் எளிதில் நிகழ்வதற்கு ஸ்ரீகிருஷ்ணன் இந்திர விழா என்று ஒரு வியாஜம் வைத்து இங்ஙன் யாவரையும் கூடுமாறு ஏவினனென்க. பாகசாதனன்= பாகஸாஸநன்-இந்திரன்: பாகனென்ற அசுரனை யழித்தவனென்று பொருள்படும்; பாகன்-விருத்திராசுரனுடன் பிறந்தவன். உரிய நரன் என்றவிடத்து, உரிமையாவது-கண்ணனுக்கு அருச்சுனன் அத்தை மகனாகும் உரிமை; அருச்சுனன் கண்ணனது தந்தையான வசுதேவனுக்கு உடன் பிறந்தவளான குந்தியின் குமாரனாதல் காண்க. புரியவர் + யாதவர்-புரியவரியாதவர்: "தன்னெழி மெய்ம் முன் யகரம்வர இகரந்துன்னிற்று". இந்த இகரம் அலகு பெற வில்லை. புரியவர் யாதவர் போசர்-உம்மைத்தொகை. (17)

18. கண்ணன் அருச்சுனனுக்குச் சூழ்ச்சி சொல்லிச் சுபத் திரையை அம்முனிவனுக்குப் பணிவிடை புரியுமாறு பணித்தல்.

இருவருமொத் திருந்திடும்போ தந்த வெற்பி
னிடைமயில்போற் சுபத்திரைநே ரெய்த லேக்கிப்
பொருசிலபற் குனன்மைய லெய்த மாலும்
புகலெம்ம னோரறியாப் பொன்னன் னீனைத்
திருமணஞ்செய் தும்பதிகொண் டடைதி யென்றத்
தெரிவையையங் கழைத்துமுனி செப்பு மேவ
லிருபருவ மயர்கெனச்சொற் றுடன்கொண் டேர்போந்
திவண்மனையி லவனைவைத்தங் கேகி னனே.

(இ-ள்) இருவரும் ஒத்து இருந்திடும்போது-(அருச்சுனன் கிருஷ்ணன் என்ற) இரண்டுபேரும் மனமொருப்பட்டு (ஏகாந்தத் தில்) இருந்தபொழுது, அந்த வெற்பினிடை-அந்த ரைவதககிரியி

னிடத்து, மயில்போல் - மயில் வருவதுபோலே, சுபத்திரை–, நேர் எய்தல் நோக்கி - நேராகத் தம்மையடைய வருதல் நோக்கி, பொரு சிலை பற்குனன் மையல் எய்த - போர் செய்யும் வில்லில் வல்ல அருச்சுனன் மோகங்கொள்ள, மாலும் - கண்ணபிரானும், 'புகல் எம்மனோர் அறியா - சிறப்பித்துப் பேசப்படுகின்ற எம்மவர்கள் அறியாதபடி [ரகசியமாக], பொன் அன்னாள் - இலக்குமி போலழகிய சுபத்திரையை, திருமணம் செய்து-விவாகஞ் செய்து கொண்டு, உம் பதி கொண்டு அடைதி - உமது நகரத்துக்கு (அவளை) உடனழைத்துக்கொண்டு சென்று சேர்வீராக' என்று-சொல்லி, அ தெரிவையை - அந்தச் சுபத்திரையை, அங்கு அழைத்து – அவ்விடத்து வரவழைத்து, 'முனி செப்பும் ஏவல் இருபருவம் அயர்க என சொற்று - இந்தச் சந்நியாசி சொல்லுகின்ற குற்றேவல்களையெல்லாம் நான்குமாச காலம் செய்வாய்' என்று (அவளிடம்) சொல்லிக் கட்டளையிட்டு, (பின்பு) உடன் கொண்டு – அந்த அருச்சுன சந்நியாசியைத் தன்னுடன் வரக் கொண்டு, ஊர்போந்து - துவாரகையைச் சேர்ந்து, அவனை - அந்தச் சந்நியாசியை, இவள் மனையில் - இந்தச் சுபத்திரையில்லத்தில், வைத்து–தங்கச் செய்து, அங்கு-அவ்விடத்தினின்று, ஏகினன்-சென்றான்; (எ-று).

சுபத்ரா - மங்களகரமான நல்லிலக்கணமமைந்தவளென்க. "எம்மனோர் அறியாதபடி' என்றது என்னையெனில், - சுபத்திரையைத் துரியோதனனுக்கு மணஞ்செய்விக்கவேண்டுமென்பது மூத்தவனான பலராமனது உத்தேசமாதலால் என்க. இருபருவம்-நான்கு மாசம். பருவம், இருது என்பன ஒரு பொருளன. ஒரு நாளுக்குமேல் ஓர் ஊரில் தங்காமல் கிராமைகராத்திரமாய்த் திரியும் முறைமையையுடையரான சந்நியாசிகள் மழைக்கால மாகிய நான்கு மாசங்களில் மாத்திரம் ஒரேயிடத்தில் வசித்திருக்கலாமென்பது நூற்கொள்கை. அந்தச் சாதுர்மாஸ்ய ஸங்கல்ப விதிப்படி இத்துறவி இப்பொழுது இங்கு நான்குமாசகாலம் இருப்பானென்று கொண்டு, 'இருபருவம்' என்றான். 'இரு பொழுது' என்று பாடங் காண்கிறது: அதற்கும் இதுவே பொருள். இனி, 'பொழுது'-காலை, மாலை என்பது சிறவாது. (18)

19. சில மெய்க்குறிகளால் சுபத்திரை அச்சந்நியாசியைச் சங்கித்து அவனூர் வினவ, அவன் பதிலிறுத்தல்.

தனக்காக முனிவடிவங் கொண்டு சார்ந்த
தனஞ்செயனென் றறியாமற் றானு மேவற்
றினக்கால மிகுளையரோ டாற்றித் தோற்றுஞ்
சிலைநரன்மெய்க் குறியாற்சந் தேகித் தோர்நாள்

சினக்காம மயக்கமுதற் பகைவென் றேய்ந்தின்
திருநகர்யா தெனவினவுந் தெரிவை மீதே
மனக்காதல் கொண்டனங்கன் அமரி னெய்த்தோன்
வாழ்நகரிந் திரப்பிரத்த மயிலே யென்றான்.

(இ-ள்) தனக்காக - தன்னை மணஞ்செய்து பெறுவதற்காக, முனிவடிவம் கொண்டு - சந்நியாசிக் கோலங்கொண்டு, சார்ந்த - நெருங்கியுள்ள, தனஞ்செயன் என்று அறியாமல் - அருச்சுனன் என்று தெரிந்துகொள்ளாமல், தானும் - சுபத்திரையாகிய அவளும், ஏவல் - பணிவிடைகளை, தினம் - நாடோறும், காலம் - குறித்த சமயம் தப்பாமல், இகுளையரோடு ஆற்றி - தோழியர் களோடு செய்து வந்து, ஓர்நாள் - ஒருதினம், நரன் மெய் தோற்றும் சிலைக் குறியால் - அருச்சுனனுடைய உடம்பில் தோன்றிய வில் தழும்பினால், சந்தேகித்து - ஐயமுற்று, சினம் காமம் மயக்கம் முதல் பகைவென்றேய்! - வெகுளி, விழைவு, அவிச்சை முதலாகிய குற்றங்களை (நெருங்கவிடாது) வென்ற முனிவரே!, நின் திருநகர் யாது என - உம்முடைய அழகிய ஊர் எது; என்று, வினவும் தெரிவை மீது - வினவிய சுபத்திரைமேல், மனக்காதல் கொண்டு அனங்கன் அமரின் எய்த்தோன் - உள்ளத்தால் அன்புகொண்டு மன்மதன் செய்த போரில் தளர்ந்துபோனவனை அருச்சுனன், (அவ் வினவிற்கு விடையாக) மயிலே - மயில் போன்ற சாயலை யுடைய பெண்ணே! வாழ்நகர் - யான் வசிக்கும் ஊர், இந்திரப் பிரத்தம் - இந்திரப்பிரஸ்தம், என்றான் - என்று கூறினான்; (எ-று).

சிலைக் குறி - வில் தழும்பு. இத்தழும்பு கண்டே அவனை விற்றொழிலில் வல்லவனென்று அறுதியிடலாம். வில் தழும்பினைக் கூறுமிடத்துச் சிந்தாமணியுரையில் கூறியுள்ளதை நினைக; "முன் கைச் சந்துக்கும் முழங்கைக்கும் இடையில் முன்கைச் சந்தைச் சேர்ந்து உத்தமவிலக்கணத்தையுடைய கைவிரல் களைந்துக்கு அருகே யானைத் தோலிற் சுண்ணம்பையுரைத்ததுபோலக் காழ்ப் பேறி வெண்ணிறங்கொண்டு சிறுமீன் வடிவமாய்த் தோன்றுகிற மூன்று விரல் நீளமுள்ள சிலைத்தழும்பு" என்றது. முப்பகை வென்றேய்! என்று விளித்ததால், மெய்யுணர்ந்தவரே! தத்துவ ஞானியே! என்று விளித்தவாறு. "காமம் வெகுளி மயக்க மிவை மூன்றன் நாமம் கெடக்கெடு நோய்" (திருக்குறள் - மெய்யுணர் தல்-10) 'அனங்கன் அமரில் எய்த்தோன்' என்றதால்-அருச்சுன னுடைய காமதாபத்தைத் தெரிவித்தவாறு. மயில்-உவமவாகு பெயர்.

20. இருவரும் சம்பாஷிக்கும்போது வார்த்தையாடி வினவிய தோழிக்கு அருச்சுனன் கூறிய விடை.

வெற்றிநர னெழியமற்றோர் தம்மை வல்லி
வினவமுனி யேனையரை வினவி சாபக்
கொற்றவனே நீமறந்த தென்னே தென்னைக்
கோதையவன் றனைமனதிற் குறித்த பண்பாற்
சற்றுநினைந் திலனென்றோர் தோழி சொல்லத்
தனஞ்செயனெங் குளனறிந்தாற் சாற்று மென்றுள்
நற்றவனு மற்றவனீ ராடி யுங்கண்
நன்மனையிற் சுபத்திரைக்காய் நண்ணு மென்றான்.

(இ-ள்). வல்லி-சுபத்திரையானவள், வெற்றிநரன் ஒழிய-விசயனுகிய அருச்சுனனைத் தவிர, மற்றோர் தம்மை-ஏனையவர் களைப் பற்றி, வினவ-விசாரிக்க, முனி-தவசியாகிய படிவத்தினன், 'ஏனையோரை வினவி-மற்றை நால்வரைப்பற்றி விசாரித்து, சாபக் கொற்றவனே-விற்றொழிலில் வெற்றிபெறும் அருச்சுனனே, நீ மறந்தது என்-நீ ஏன் மறந்து [விசாரியாது] விட்டாய்: ஓது-சொல்வாயாக', என்ன-என்று கேட்க, (அதற்கு) ஓர் தோழி-தோழியருள் ஒருத்தி, "கோதை-சுபத்திரையானவள், அவன்தனை-அந்த அருச்சுனனை, மனதில் குறித்த பண்பால்-(தனது) மனத்தகத்து [எழுதி மறவாது] வைத்திருக்கின்ற தன்மையினால், சற்று நினைந்திலள்-சிறிதும் நினைத்தாளில்லை: [மறந்தால்தானே நினைப்பது என்றபடி], என்று சொல்ல-, (அப்போது சுபத்திரையின் மற்றொரு தோழி), "தனஞ்செயன் எங்கு உளன்-அருச்சுனன் எங்கே யிருக்கின்றனன்: அறிந்தால் சாற்றும்-தெரிந்திருந்தால் சொல்லுங்கள்", என்றுள்-என்று வினவினள்: (அதற்கு விடையாக) நல்தவனும்-நல்ல தவத்தோனுகிய அந்த [அருச்சுன] சங்கியாசியும், அவன் நீராடி-அந்தத் தனஞ்செயன் புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து, உங்கள் நல் மனையில்-உங்களுடைய நல்ல மாளிகையில், சுபத்திரைக்கு ஆய்-சுபத்திரைக்கு ஆகும்படி, நண்ணும் என்றனன்-வந்துசேருவான் என்று கூறினர்; (எ-று).

சங்கித்த சுபத்திரையே 'தனஞ்செயன் எங்கு உளன்?' என்று வினவியதாகப் பால பாரதத்திலுள்ளது, நண்ணும்-செய்யுமென் முற்று ஆண்பாலுக்கு வந்தது. (20)

21. அந்தச் சொல்லால் சந்நியாசியை அருச்சுனனேயென்று அறிந்து சுபத்திரை காமக் குறிப்புக்கொள்ள, அச்சமயத்தில் அருச்சுனன் சுபத்திரையைக் கைப்பிடிக்கவே, அவள் காமமீதூரக் கலங்குதல்.

அந்தமொழி கேட்டிடலு நாண மெய்தி
அணிமுலைகள் புளகங்கொண் டயிர்த்து நின்றப்
பைந்தொடியை நரன்விரகக் கனற்கங் காற்றுப்
பற்றிக்கர மீர்த்திடலும் பாங்கி மார்கள்
வந்துதடுத் தோவியம்போல் பவனை யங்கோர்
மாதவிப்பந் தரிற்கொடுபோய் வண்டு பாடுங்
கந்தமல ரணைகிடத்தி னர்கள் காமக்
கனல்கொளுவ வவளுமுளங் கலங்கி னளே.

(இ-ள்) அந்த மொழி கேட்டிடலும்-அந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே, நாணம் எய்தி - வெட்கமடைந்து, அணி முலைகள் புளகம்கொண்டு - அழகிய முலைகள் மயிர்க்கூச்செறிய, அயிர்த்து நின்ற-ஐயங்கொண்டு நின்ற, அ பைந்தொடியை - அந்தச் சுபத்திரையை, நரன் - அருச்சுனன், விரகம் கனற்கு அங்கு ஆற்ரு-காமதாபமாகிய நெருப்புக்கு அப்போது பொறுக்கமுடியாது, கரம் பற்றி ஈர்த்திடலும் – (அவளது) கையைப்பற்றியிழுத்திடலும், (அதுகண்டு) பாங்கிமார்கள் – (அவளது) தோழியர்கள், வந்து தடுத்து - அங்கு வந்து அந்தச் சந்நியாசியைத் தடுத்து நிறுத்தி(ப் பின்னர்), ஓவியம்போல்பவனை - சித்திரம்போல் அழகியவனுகிய அவனை, அங்கு - அவ்விடத்திலிருந்த, ஓர் மாதவிப் பந்தரில் கொடு போய் - ஒரு மாதவிக்கொடிப்பந்தலின் இடத்து அழைத்துக்கொண்டுபோய், வண்டு பாடும் கந்த மலரணை கிடத்தினர்கள் - வண்டுகள் இசைக்கின்ற வாசனையையுடைய பூக்கள் பரப்பிய படுக்கையின்மேலே படுக்கவைத்தார்கள்: அவளும்-அந்தச் சுபத்திரையும், காமக்கனல் கொளுவ - காமத்தாலாகிய விரகநெருப்பு எரிக்க, உளம் கலங்கினள் - மனம் கலக்கமுற்ருள்; (எ-று).

பைந்தொடி - பண்புத்தொகையன்மொழி, ஆற்ரு-எதிர்மறை வினையெச்சம். ஓவியம்-அழகுக்கு எடுத்துக்காட்டு. (21)

22. சுபத்திரைக்குத் தோழியர் சைத்தியோபசாரஞ் செய்தும் காமதாபம் ஆறுமை.

கலங்குநிலை யுயிரனைய தோழி மார்கள்
கண்டழற்றும் பெருங்காமக் கனலைத் தீர்ப்பான்
இலங்கொளிநித் திலவடமு மாரச் சேறும்
இமசலமு மலங்கலுமார் பிடங்கொண் டோங்கி
விலங்கனிகர் முலையினணிந் தால வட்டம்
விசிறினர்மா தழற்குழம்பை வீசிக் கொப்பூழ்
துலங்கிடச்செய் தரக்கியர்போ லாவி கொள்ளத்
துணிந்தீரென் றிகுளையரைத் தூறு மெல்லை.

(இ-ள்) கலங்குநிலை - சுபத்திரை [காமக்கனலால்] கலக்க முறும் நிலைமையினை, உயிர் அனைய தோழிமார்கள் கண்டு-அவளது உயிர்போன்ற தோழிப் பெண்கள் பார்த்து, அழற்றும் - வருத்து கின்ற, பெருங்காமக் கனலை - பெரிய காமத்தியை, தீர்ப்பான்- அவித்து நீக்கும் பொருட்டு, [அதற்கு மாற்றாக], இலங்கு ஒளி நித்திலவடமும்-விளங்கிப் பிரகாசிக்கின்ற முத்துமாலையும், ஆரம் சேறும் - சந்தனக் குழம்பும், இம சலமும் - குளிர்ந்த பன்னீரும், அலங்கலும் - (குளிர்ந்த) பூமாலையும் (ஆகிய இவைகளை) மார்பு இடங்கொண்டு-மார்பினிடத்துப் பொருந்தியிருந்தலைக்கொண்டு, ஓங்கி - விம்மி வளர்ந்து, விலங்கல் நிகர் முலையின் அணிந்து - மலை போல் பருத்துள்ள முலைகளின்மேலே அணிவித்தும் (இட்டும் அப்பியும்), ஆலவட்டம் விசிறினர் - (மேலும்) பெரிய விசிறி கொண்டும் வீசினர்: (அப்போதும் காமவெப்பம் தணியாது) மாது-சுபத்திரை, இகுளையரை - (தனது) தோழியரை நோக்கி, 'அழல் குழம்பை வீசி – நெருப்புக் கலவையை வீசி, கொப்பூழ் துலங்கிடச்செய்து - நாபியைக் கலங்கிடச்செய்து, அரக்கியர் போல் - இராட்சசிகளைப்போலே (இரக்கமின்றி), ஆவி கொள்ளத் துணிந்தீர் - (என்) உயிரைக் கவர்ந்துகொள்ள நிச்சயித்துள்ளீர்', என்று தூறும் எல்லை-என்று பழிக்கும்போது; (எ-று) "இனன் மேற்பாற்கடலின் ஆழ்ந்தான்" என மேலைக்கவியிற் குளகமாய்த் தொடரும்.

முத்து மாலை, சந்தனக்கலவை, பன்னீர், பூமாலை, விசிறியாகிய இவை வெப்பந்தணிக்கும் உபகரணங்கள். துலங்குதல்–கலங்கு தல்: "துலங்குகின்றேனடியேன்" (திருவாச : 6, 28) தூற்றுதல்- பழித்தல். தீர்ப்பான்-பானீற்று வினையெச்சம். (22)

23. சுபத்திரை ஆற்றுமைமீதூர வருந்துதல்.

கடுங்காமத் தொடுயாமுங் காய்த னன்றே
கன்னியென் றினன்மேற்பாற் கடலி ளுழ்ந்தான்
அடுங்கால னெனக்கங்கு லெய்திற் றுலோன்
அனங்கனமர்க் குதவிசெய வடைந்தான் பார்த்தன்

படுங்காத றனியிலக்கா யவன்மெய் தோற்றம்
பகலிரவுங் கண்டுருகும் பாவை தன்மேற்
கொடுங்காம னலர்க்கணையெய் தமர்செய் தானக்
கோதைபொரு தின்னபல கூற லுற்றாள்.

(இ-ள்.) இனன்-சூரியன், யாமும்-நாமும் (ஒரு சேரக்), கடுங் காமத்தொடு கன்னி காய்தல் நன்றே என்று-கொடிய காமதாபத் தோடு வருந்தும் சுபத்திரையைக் காய்ந்து வருத்துதல் நல்லதோ (தீயதே) என்று எண்ணி, மேல்பால் கடலின் ஆழ்ந்தான்-மேற் குச் சமுத்திரத்தில் மூழ்கி அத்தமித்தான்: (அதன் பின்னர்) கங்குல்-இராப்போது, அடும் காலன் என-கொல்லுகின்ற யம னென்னும்படி, எய்திற்று-வந்தது: ஆலோன்-சந்திரன், அனங் கன் அமர்க்கு-மன்மதனிடும் போருக்கு, உதவிசெய அடைந்தான்-உதவுவதற்காக உதயமானான்; [இங்ஙனுகவே] கொடும் காமன்-அந்தக்கொடிய மன்மதன், பார்த்தன் படும் காதல்தனி இலக்காய்-(சுபத்திரையிடத்து) அருச்சுனன் உண்டாக்கிய காதல் தாபத்தை இலக்காகக்கொண்டு, பகலிரவும் அவன் மெய் தோற்றம் கண்டு உருகும் பாவை தன்மேல்-இடைவிடாது எப்போதும் அந்த அருச்சுன னுடைய உடம்பினழகையும் தோற்றப்பொலிவினையும் பார்த்து மனம் நெகிழ்கின்ற சுபத்திரையின் மேலே, அலர்க்கணை எய்து-புஷ்பபாணங்களைத் தொடுத்துவிடுத்து, அமர்செய்தான்-போரிட்டான்: (அதற்கு) அ கோதை-அந்தச் சுபத்திரை, பொருது-பொறுக்கமுடியாமல், இன்ன பல-இப்படிப்பட்ட (காமவேதனை கொண்ட) பல வார்த்தைகளை, கூறலுற்றாள்-சொல்லத் தொடங்கினாள்; (எ-று).

முதலடியில் ஏதுத்தற்குறிப்பேற்றவணி படக் கூறியது. கங்குல் வருகைக்குக் காலன் வருகையை உவமித்தது-உயிரை வருத்துதல் நோக்கி. ஆலோன்-சந்திரன். 'உதவி செய' என்றதால் சூரிய னுக்கிருந்த கருணையிரக்கங்கூட இந்தச் சந்திரனுக்கில்லையே என்று இரங்கியபடி. படுதல்-உண்டாக்குதல். மெய்-மெய்யின் அழகுக்கும், தோற்றம்-தோற்றப்பொலிவுக்கும் ஆகும். காம

னுக்குக் கொடுமையாவது - ஒரு அபலையை வருத்துவது. கோதை-உவமவாகு பெயர். (23)

வேறு

24-29. ஆறு கவிகள் — காமவேதனைகொண்ட சுபத்திரை தன் மனத்திலே நினைத்தவற்றையும் சொன்னவற்றையும் கூறும். [அவற்றுள்]

24-25. இரு கவிகள்:—காமனைக்குறித்துக் கூறியன.

24. அரிவை பங்கன் அழற்கண் திறந்துன
துருவ நீறு யொழித்து மொழிந்திடா
தருவ மாக விருந்தெ னைக்கொலக்
கருதி யோகழைக் கார்முக மாரனே.

(இ-ள்). கழை கார்முகம் மாரனே! - கரும்பை வில்லாக ஏந்திய மன்மதனே! அரிவை பங்கன்-பார்வதியை இடப்பாகத்திற் கொண்ட சிவபிரான், அழல்கண் திறந்து-(தன்) நெற்றிக்கண்ணைத் திறந்து விழித்து, உனது உருவம் நீறுய் ஒழித்தும்-உனது வடிவத்தைச் சாம்பராய் ஒழியச் செய்தும், ஒழிந்திடாது-நீ யொழிந்து போகாமல், அருவமாக-உருவிலியாக, இருந்து-இருந்துகொண்டே (வாழ்வது) எனைக் கொலக் கருதியோ-என்னைக் கொல்வதற்காக எண்ணியோ ? (எ-று).

மன்மதனுக்கு வில்-கரும்பு. இங்குக் குறித்த கதை:—சிவபெருமான் யோகஞ் செய்கையில் அதனைக் கெடுக்குமாறு மன்மதன் அப்பெருமான்மேல் மலரம்புகளைத் தொடுக்க, அப்பரமன் சினந்து தன் நெற்றிக்கண்களைத் திறந்தனனாக, அதனினின்று எழுந்த நெருப்பொறி சுட்டதனால் மன்மதன் தன் அங்கத்தை யிழந்து அது முதல் அனங்கனாயினன் என்பதாம். மாரன்-(ஆண் பெண்களை ஆசை நோயால்) மரண வேதனைப்படுத்துங் கடவுள்.

இது முதல், ஐந்து கவிகள்-பெரும்பாலும் முதற்சீரும் நான்காஞ்சீரும் முறையே மாச்சீராயும் விளச்சீராயும் அமைய, இடையிலுள்ள இரண்டு மூன்றுஞ்சீர்கள் பெரும்பான்மை விளச்சீராகவும் சிறுபான்மை மாச்சீராகவும் வந்த கலிவிருத்தங்கள். (24)

25. ஆவி கொள்ள நீயஞ்சுவை யோமுனங்
கோவி யர்க்கித யங்கொளப் பூங்கணை
யேவி தந்தைக் கிடர்செய் துலகெலாம்
பாவி யென்னப் பழிபெறுங் காமனே.

(இ-ள்). முனம்-முன்னொருநாள், கோவியர்க்கு-கோபஸ்த்ரீகளுக்கு, இதயம் கொள-இதயத்தில் தைக்கும்படி, பூங்கணை ஏவி-மலரம்புகளைச் செலுத்தி, (மேலும்) தந்தைக்கு இடர்செய்து-[யாவர்க்கும்] தகப்பனுகிய சிவபெருமானுக்குத் துன்பத்தை விளைவித்து, [இங்ஙனம் நீங்கு செய்தமையால்] உலகு எலாம்-எல்லா உலகத்தவரும், பாவி என்னப் பழிபெறும் காமனே!-பாவி என்று சொல்லிப் பழிக்கும்படி யிழிவுபெற்ற மன்மதனே!, நீ—, ஆவிகொள்ள-என்னுடைய உயிரைக் கவர, அஞ்சுவையோ-பயந்து தயங்குவையோ? (தயங்கமாட்டாய்); (எ-று).

கண்ணன்மேல் பிரேமைவைத்த கோபியர்க்கு மன்மதன் அவஸ்தையை விளைவித்தமை பாகவதத்தில் பிரசித்தம். இனி, தந்தை-விஷ்ணு எனக்கொண்டு, இலக்குமியை இறையேனும் விட்டுப் பிரியாதபடி தன் மார்பிலேயே இறை கொள்ளும்படி அவருக்குக் காமத்தை விளைவித்து இடர் செய்தது. உலகிலுள்ள ஆண் பெண்களுக்கெல்லாம் மன்மதாவத்தையை விளைவிப்ப வனுதலின் 'பாவி' என்று தூற்றும்படியாயினன் என்றது. அஞ்சுவையோ-ஓகாரம் எதிர்மறை. (25)

26—27. இருகவிகள்; சந்திரனைக் குறித்துக் கூறியன.

26 தேய்ந்த தோர்ந்துனைச் செஞ்சடை வைத்தவன்
காய்ந்த தன்மையைக் கண்டங் கரவையும்
வேய்ந்து ளாரெனில் வெய்யவ ருன்னைப்போல்
வாய்ந்து ளாரெவர் மாநிலத் திந்துவே.

(இ-ள்) இந்துவே-சந்திரனே! தேய்ந்து ஓர்ந்து-(நீ) தேய்ந்து ஒளியிழத்தலையறிந்து, உனை செஞ்சடை வைத்தவன்-உன்னை[க் காப்பதற்காகத் தமது] சிவந்த சடை முடியில் தரித்தவனுகிய பரமசிவன், காய்ந்த தன்மையைக் கண்டு-[நீ நிலவாகிய நெருப்பினைச் சொரிந்து அவரை] வருத்திய இயல்பினைப் பார்த்து, அங்கு-அந்தச் சடைமுடியிலே (உன்னோடு ஒருசேர வைகும்படி), அரவையும்-நாகத்தையும், வேய்ந்துளார் எனில்-சூடியுள்ளார் என்றால், உன்னைப்போல் வெய்யவர்-உன்னைப்போன்று (உனக்கு நிகராய) கொடியவர், மாநிலத்து-இந்தப் பெரிய பூமியில், எவர் வாய்ந்துளார்-எவர் இருக்கின்றார்? (ஒருவருமிலர்;) (எ-று).

நீ தேய்ந்துபோதலைத் தவிர்த்து உன்னை வளரச்செய்த சிவபெருமானையே காமோத்தீபகப் பொருளாகிக் காய்ந்தனையே: இத்

தகைய தகாத செயலைச் செய்தாயாதலினால் அவர் உன்னை எப் போதும் பிடித்து விழுங்கும்படி சித்தமாக நாகப் பாம்பினையும் அணிந்துள்ளார். இதனால் உன்னுடைய கொடுமை தேற்றம்: கொடுமை செய்தலில் உனக்கு நிகர் எவருமில்லை என்றுள் சுபத்திரை.

கிரகண காலங்களில் சந்திரனை இராகு கேதுக்களாகிய பாம்பு கள் விழுங்குகின்றன என்பது மரபு: எனவே, சந்திரனுக்குப் பகை பாம்பாகும். முதலடியிற் குறித்த கதை :—தக்ஷ முனிவன் சந்திரனை 'க்ஷயமடைவாயாக' என்று சபிக்க, அச்சாபத்தாற் சந்திரன் பதினைந்து கலைகளும் குறைந்து மற்றைக்கலை யொன்றை யும் இழப்பதற்கு முன்னம் சிவபிரானைச் சரணடைய, அப்பெரு மான் அருள்கூர்ந்து அவ்வொற்றைக் கலையைத் தன் தலையி லணிந்து மீண்டும் கலைகள் வளர்ந்து வரும்படி அனுக்கிரகித்தன னென்பது. அரவு வேய்ந்தது என்பதிலடங்கிய குறிப்பு:—தாரு கவனத்து முனிவர்கள் ஏவிய நாகங்களைச் சிவபெருமான் ஆபரணங் களாகக் கொண்டனரென்பது. இச் செய்யுளில் நிதர்சனவணி. (26)

27 உனக்குத் தீங்கொன் றுஞற்றில னீதொரீஇ
எனக்குத் தீங்குசெய் தாலஃ தேற்குமோ
நினக்குத் தீங்கதி ழைத்திடு நீள்பணி
தனக்கத் தீங்குசெய் தாற்றகுந் திங்களே.

(இ-ள்) திங்களே-சந்திரனே! உனக்கு—, தீங்கு ஒன்றும் உஞற்றிலன்-தீமை யொன்றும் செய்தேனில்லை: ஈது ஓரீஇ-இதனை (எண்ணிப்பாராது) விடுத்து, எனக்குத் தீங்கு செய்தால்-எனக் குத் தீமை செய்வாயாயின், இஃது ஏற்குமோ-இதனை இந்தவுலகு [சரியென] ஏற்றுக்கொள்ளுமோ? (கொள்ளாது): (இச்செயலுக்கு மாறுக] நினக்கு-உனக்கு, தீங்கது இழைத்திடும் நீள்பணி தனக்கு-தீங்கு செய்திடுகின்ற நீண்ட நாகப்பாம்பினுக்கு, அத்தீங்கு செய் தால் தகும்-எனக்குச் செய்கின்ற தீமையைச் செய்வாயானால் அது தக்கதாகும்; (எ-று).

தீங்கொன்றும் செய்யாத என்னிடத்துத் தீங்கு செய்தல் தகாது: உனக்குத் தீங்கு செய்து உன்னைக் கவரவரும் நாகப் பாம்பினுக்குப் பிரதி தீங்கு செய்தால் அது தக்கதாகும், நல் லோரை நலியாது நீயோரை நலிவது தக்கதே என அறிவுறுத்திய படி.

ஓரீஇ-சொல்லிசை யளபெடை. இ.ஃ. தேற்குமோ-ஆய்தம் அலகு பெற்றது. நிங்கது, அது-சொல்லுருபு. (27)

28. தென்றலை நோக்கிக் கூறியது.

மலைய வெற்பர சன்மக ளைப்புணர்
சிலைந ரன்றனைச் சேர்த்திட வெண்ணிய
நிலைய றிந்துகொ ணீயென தாருயிர்க்
குலைவைத் துண்ணவந் துற்றனை தென்றலே.

(இ-ள்). தென்றலே-தென்றற் காற்றே! மலையவெற்பு அரசன் மகளை-பாண்டிய மன்னன் மகளாகிய சித்திராங்கதையை, புணர்-புணர்வதற்காக, சிலை நரன்தனை-வில்லில் வல்ல அருச்சுனனை, சேர்த்திட, -(அவளோடு) கூடும்படி செய்திட, எண்ணிய நிலை-எண்ணமிட்ட நிலைமையினை, நீ அறிந்துகொள்-நீ ஞாபகப்படுத்திக் கொண்டறிவாயாக; (அப்படிப் பட்ட நல்லவனுயிருந்த நீ இப் போது) எனது ஆருயிர்க்கு உலைவைத்து உண்ண வந்து உற்றனை-அபலையாகிய என்னுடைய அரிய உயிருக்கு அதனைக் கொதிக்கவைத்துச் சமைத்துண்பதற்கு வந்து பொருந்தி யுள்ளாய்; (எ-று).

இச்செயல் தகாதது என்று தென்றலுக்கு அறிவுறுத்திய வாறு. மலையவெற்பு - பொதிகைமலை: இதனைத் தென்னன் பொருப்பு என்பர். எனவே மலையவெற்பரசன் தென்னன் எனப் படும் பாண்டியனுவன். இங்குச் சித்திரவாகனனைக் குறிக்க வந்தது. அருச்சுனன் சித்திராங்கதையை மணந்தமையைச் சுபத் திரை தெரிந்து வைத்திருந்தாள் என்பது பெறப்படுகிறது-உயிருக்கு உலைவைத்தல் என்றது - உலக வழக்குப் பற்றியது. உலைவைத்தல் - உலையேற்றுதல்: சமையல் செய்வதற்கு உலைப் பானையை அடுப்பில் வைத்தல். "உலைப்பெய்து அடுவதுபோலுந் துயர்" என்றது நாலடியாரும். (செ: 114) (28)

வேறு

29. கடல், குயில், கிளி, இரவு இவற்றை நோக்கிக் கூறியது.

குரைசெய் கடலே குழறுங் குயிலே
உரைசெய் கிளியே யொழியா விரவே
புரைசெய் திடவென் புகரே தெனவே
விரைசெய் குழலாண் மிகநொந் தனளே.

(இ-ள்) குரை செய் கடலே - ஒலிக்கின்ற கடலே!, குழறும் குயிலே - அலறுகின்ற குயிலே!, உரைசெய் கிளியே - பேசுகின்ற

கிளியே! ஒழியா இரவே - நீங்காத இரவே! (நீங்கள்) புரை செய்திட-என்னை உள்ளே துளைப்பதற்கு, என் புகர் ஏது? - நான் செய்த குற்றம்தான் யாது? (சொல்லுங்கள்) என – என்று வினவி, விரைசெய் குழலாள்-வாசனை வீசுகின்ற கூந்தலையுடைய சுபத்திரை, மிக நொந்தனன் - மிகவும் வருந்தினள்; (எ-று).

இச்செய்யுள் – காமமிக்க கழிபடர்கிளவி. கடலோசை, குயில் கூவல், கிளிமிழற்றல், இருள்செறிதல் - இவை காமத்தால் வரும் மகளிர்க்கு மேலும் வருத்தத்தை விளைவிக்கும் காமோத்தீபக உபகரணங்களாகும். புரை–உட்டுளை, குற்றம்.

இதுமுதல் நான்கு கவிகள்-நான்கு சீர்களும் மாச்சீர்களாகவே வந்த கலிவிருத்தம். (29)

30. தோழியர் சுபத்திரையை ஆற்றுவித்தல்.

எனநின் றமலற் கிளையா ளிருகண்
புனல்கொண் டழுதே புரளும் பொழுதங்
கனமென் னடையா ரஞ்சே லமவென்
றினிதின் மொழிசொற் றிடராற் றினரால்.

(இ-ள்) என நின்று - [என்புகரேது] என வினவி நின்று, அமலற்கு இளையாள் - கண்ணபிரானுக்குத் தங்கையாகிய சுபத்திரை, இரு கண் புனல்கொண்டு - இரண்டு கண்களிலும் நீர் நிரம்பியிருந்து, அழுதே புரளும் பொழுது – அழுதுகொண்டே தரையில் வீழ்ந்து புரளுகின்ற சமயத்தில், அங்கு-அந்த இடத்து அப்போது, அனம் மெல் நடையார் - அன்னப்பறவைபோன்ற மென்மையாகிய நடையழகினையுடைய தோழியர், 'அம - அம்மா! அஞ்சேல் - பயப்படாதே', என்று இனிதின் மொழிசொற்று- என்று இனிமையாகப் பல வார்த்தைகளைச்சொல்லி, இடர் ஆற்றினர் – துயரத்தைப் போக்கினர்; (எ-று) ஆல் - ஈற்றசை.

அனம் - அன்னம் என்பதன் தொகுத்தல். அம - அம்ம! என்பதன் தொகுத்தல். அஞ்சேல் - முன்னிலை எதிர்மறை வியங்கோள். (30)

31. சுபத்திரை இரவைக் குறித்து இரங்கத் தோழியர் ஆற்று வித்தல்.

யுகமா யினதிங் கொழியுங் கதிரோன்
புகுமா றிலதென் புகன்மின் னெனமா
தகமாழ் கலுமங் கனையார் நிசிநா
ழிகைமூன் றினிலே கிடுமென் றனரே.

(இ-ள்) இங்கு - இவ்விடத்து, [இராத்திரிப்போது] யுகமா யினது - யுகமாக நீட்டிக்கின்றது: ஒழியும் கதிரோன் - நீங்கிய சூரியனே, புகும் ஆறு இலது - தோன்றும் வழியும் இல்லை: என் - இஃது என்ன [தொல்லை?]: புகன்மின் - சொல்லுங்கள், என-என்று, மாது - சுபத்திரை, அகம் மாழ்கலும் - மனம் மயங்கு தலும், அங்கனையார் - (அவளது) அழகிய தோழிப் பெண்கள், 'நிசி - இராப்போது, நாழிகை மூன்றினில் - (இன்னும்) மூன்று நாழிகைப்போதினுள், ஏகிடும் - போய்விடும்', என்றனர் - என்று மறுமொழி கூறி ஆற்றினர்; (எ-று).

நாழிகை - அறுபது விநாடிகொண்ட நேரம்: அதாவது, இருபத்துநான்கு நிமிடங்கள். புகன்மின்னென - னகரம் விரித்தல். மா தகமாழ், நா ழிகைமூன், றினிலே கிடுமென் - வகையுளி. ஒழி யும்-பெயரெச்சம். புகன்மின் – முன்னிலையேவல். யுகமாயினது இரவு - "இற்றை நீடிரவொன்று அஞ்சுகந்தத்தை விளக்கும்" என்னூர் திவ்விய கவி திருவேங்கடத்தந்தாதியிலும். (31)

32. சூரியன் உதயமாயினனென்பது.

கங்குற் பொழுதுங் கதறுங் கடலுந்
திங்கட் கனலுஞ் சிலைவேள் மருமம்
மங்கைத் துயரும் மடியும் படியேழ்
துங்கப் பரிதேர் சுடர்தோன் றினவால்.

(இ-ள்) கங்குல் பொழுதும்-இராத்திரிப்போதும், கதறும் கடலும்-கடலின் ஒலியும், திங்கள் கனலும்-சந்திரனின் அனல் வெப்பமும், சிலைவேள் மருமம் அங்கை துயரும்-மன்மதனது மார்பு உள்ளங்கை இவற்றின் துன்பமும், மடியும்படி-ஒழிந்து போகும்படி, ஏழ் துங்கப்பரி-பரிசுத்தமான (குற்றமற்ற) ஏழு குதிரைகளும், தேர்-(அவைகட்டியுள்ள) தேரும், சுடர்-அதனுள் ஏறியிருக்கின்ற சூரியனும், தோன்றினர்-வெளியில் தோன்றினர் கள்; (எ-று). ஆல்-ஈற்றசை.

ஏழுகுதிரைகள் கட்டியுள்ள தேரில் சூரியன் வருவதாகக் கூறுதல் மரபு. "பச்சைமா ஏழுமேறப் போயாறு மேறினார்" என்றார் கம்பரும். (பால: கையடை: 23) 'கதறும் கடலும்' என் பதை 'கடலின் கதறும்' என மாற்றிப் பொருள் கொள்க. கதறு– கதறுதல்: முதனிலைத் தொழிற்பெயர். சந்திரன் நிலவை நெருப் புப்போலச் சொரிதலால், 'திங்கட்கனல்' என்றது. மன்மதன் பாணம் விடும்போது அவனது மார்பு விரிந்தும் நெரிந்தும் துன் பப் படுதலும், அவனது உள்ளங்கை நாணியிழுத்து அழுத்திப் பிடித்தலால் துன்பப் படுதலும் இயற்கை. பகற்போதில் மன் மதன் போரிடான் என்பது குறிப்பு. பரிதேர் சுடர்-உம்மைத் தொகை: 'தோன்றின' என்ற பன்மை முற்றுக்கொண்டு முடிந் தது. இச்செய்யுளில் உடனிகழ்ச்சியணி காண்க. (32)

வேறு

33. சுபத்திரைபட்ட காமவேதனையைத் தோழியர் தேவகிக்குத் தெரிவிக்க. அவள் கண்ணனுக்கு உரைத்தல்.

அன்ன காலையி லிகுளைய ரணங்கணி ரவு
தன்னிற் பட்டவேந் துயரெலாந் தாயொடு மூரைத்தார்
அன்ன மாதுகேட் டமலனே டுரைத்தன ளவனும்
முன்ன வன்னறி யாமண முடித்திட வெண்ணி.

(இ-ள்.) அன்ன—(சூரியன் உதிக்க) அப்படிப்பட்ட, காலை யில்-காலைப்போதில், இருளையர்-தோழியர், அணங்கனள்-சுபத் திரை, இரவு தன்னில் பட்ட வேம் துயர் எலாம் - இராத்திரி முழு வதும் அநுபவித்த கொடிய வேதனைகளையெல்லாம், தாயொடும் உரைத்தார்-தாயாகிய தேவகி (அறியும்படி) சொல்லினர்கள்: அன்ன மாது கேட்டு-அந்தச் சுபத்திரை (இதனைக்) கேட்டு, அமல னோடு-கண்ணபிரானோடு, உரைத்தனள்-சொன்னாள்: அவனும்- அந்தக் கண்ணனும், முன்னவன் அறியா - தமையனுகியபலராம னுக்குத் தெரியாதபடி, மணம் முடித்திட எண்ணி-சுபத்திரையின் விவாகத்தை முற்றுவிக்கத் திட்டமிட்டு; (எ.று). 'ஏகினன்' என்ற வினைமுற்றைக்கொண்டு அடுத்த கவியில் குளகமாய் முடியும்.

சுபத்திரையைத் துரியோதனனுக்கு மணஞ்செய்விக்க வேண்டு மென்பது மூத்தவனான பலராமனது உத்தேசமாதலால், அவனறி யாமலேயே மணம் முடித்திட எண்ணினான் கண்ணபிரான் என்க.

இது முதல், எட்டுக்கவிகள் - பெரும்பாலும் முதற்சீரும் ஐந்தாஞ்சீரும் மாச்சீர்களும், மற்றை மூன்றும் விளச்சீர்களுமாகிய கலிநிலைத்துறைகள். (33)

34. பலராமனுட்பட யாதவரனைவரையும் கண்ணன் வேறு வியாஜத்தால் வேற்றிடத்துக்கு அழைத்துக்கொண்டு செல்லுதல்.

துவரை யின்புறத் தோர்பில நகரத்திற் றுன்னுஞ்
சிவனுக் காண்டுக டொறும்புரி திருவிழாக் காண்பான்
உவரி யங்கமு முழுபடை யிராமனு மூரியோர்
எவருஞ் சூழவங் கேகினை னென்னையா ளுடையான்.

(இ-ள்) என்னை ஆளுடையான் - என்னையாட்கொண்ட தலை வனுகிய கண்ணபிரான், துவரையின் புறத்து-துவாரகைக்குப் பக் கத்து வெளியிலுள்ள,ஓர் பில நகரத்தில்-ஒரு நகரத்தின் குகையில், துன்னும்-எழுந்தருளியிருக்கின்ற, சிவனுக்கு - சிவபிரானுக்கு, ஆண்டுகள் தோறும் புரி-வருடந்தோறும் செய்து வருகின்ற, திரு விழாக் காண்பான்-திருவிழாவினைக் கண்டு களிக்கும் பொருட்டு, உவரி அங்கமும்-கடல்போற் பரந்த சேனைகளும், உழு படை இராமனும்-கலப்பையைப் படையாக்கொண்ட பலராமனும், உரியோர் எவரும்-சுற்றத்தார்கள் அனைவரும், சூழ-(தன்னைச்) சூழ்ந்து வர, அங்கு-அந்தப் புற நகரத்திற்கு, ஏகினன்-சென்றான்; (எ-று).

என்னையாளுடையான் என்றதால் நூலாசிரியரின் கிருஷ்ண பக்தி விளங்குகிறது. 'பிலநகரத்தில்-என்பதை 'நகர பிலத்தில்' எனமாறுக. இனி, பாதல நகர் எனினுமாம். இந்த நகரை உள்த் வீபம் 'மகாத்வீபம்' என்பதுமுண்டு. உவரி:கடல். அங்கம்-அர சுக்கு அங்கமாகிய நால்வகைப்படைகள். பலராமன் அலாயுதன் எனப்படுவன். [அலம்-கலப்பை.]. (34)

35. துவாரகைக்கு அன்றிரவு இந்திராணியோடும் முனிவர் களோடும் இந்திரனும் வருதல்,

அற்றை நாளிர வதனிடை யருச்சுனன் றன்னைப்
பெற்ற வாசவன் வரும்படி நினைந்திடப் பிதாவுங்
கற்றை வார்குழற் சசியொடுங் கடகளி றுகைத்துங்
குற்று ளானருந் தவர்பல ருடனடைந் திடவே.

(இ-ள்). அற்றை நாள் இரவு அதனிடை-அன்றைய தினத்து நடுவிராத்திரியில், அருச்சுனன் தன்னை-அருச்சுனனை, பெற்ற-[மந்திர மூலம் குந்தியிடத்து] உண்டாக்கிய, வாசவன்-இந்திரன், வரும்படி-(அவ்விடத்து) வந்து சேரும்படி, நினைந்திட-(கண்ண பிரான்) நினைக்க, (அவன் நினைவின்படியே), பிதாவும்-தந்தையாகிய இந்திரனும், கற்றை வார்குழல் சசியோடும்-தொகுதிப்பட்டு நீண்ட கூந்தலையுடைய இந்திராணியோடும், கடகளிறு உகைத்து-மதஜலம் பெருகப்பெற்ற ஐராவதத்தைச் செலுத்தி, அருந்தவர் பலர் உடனடைந்திட-அரிய தவத்தைச் செய்த முனிவர்கள் பலர் தன்னுடன் வந்து சேர (அவர்களோடும்), அங்கு உற்றுளான்-அந்தத் துவாரகைக்கு வந்து சேர்ந்தான்; (எ-று).

சசி-இந்த்ராணீ: இந்திரன் மனைவி. ஐசுவரியமுடையவ ளென்று பொருள்படும். (35)

36. கண்ணபிரான் அனைவரையும் உபசரித்தல்.

கண்ணன் றன்னைவேற் கண்ணினுட் கருதிடக் களவின்
வண்ணன் வெள்வளை வண்ணனு மறிவுரு வண்ணம்
விண்ணெ னப்பொலி வியனகர் மேவிமண் டபத்தில்
நண்ணி வந்தவர் யாரையு நயந்துப சரித்தான்.

(இ-ள்) கண்ணன் தன்னை - [தன் அண்ணனுகிய] கண்ண பிரானை, வேல் கண்ணினுள் - வேலாயுதம்போற் கூரிய கண்களை யுடைய சுபத்திரை, கருதிட-(மனத்தில்) நினைத்திட, (அப்போதே) களவின் வண்ணன் - களாப்பழம்போற் கறுத்த நிறம் படைத்த கண்ணபிரானும், வெள்வளை வண்ணனும் அறிவுருவண்ணம்-வெண்மையான சங்குபோன்ற நிறம் கொண்ட பலராமனும் அறிவுருதபடி, விண் எனப் பொலி வியல் நகர் மேவி - தேவநகர் (அமராவதி) போல அழகுவிளங்கிப் பரந்த துவாரகை நகரை யடைந்து, மண்டபத்தில் நண்ணி - திருமண மண்டபத்தைச் சேர்ந்து. வந்தவர் யாரையும் - திருமணத்திற்கு வந்தவரனைவரை யும், நயந்து - அன்போடு விரும்பி, உபசரித்தான் - மரியாதை பண்ணினான்; (எ-று):

கண்ணன் நிறம் - கருமை; பலராமன் நிறம் - வெண்மை. வெள்வளை வண்ணன் - சங்கவண்ணன். களவு - களாப்பழம்; கரு நிறத்திற்கு எடுத்துக்காட்டு, உபசரித்தல்-வழிபடுதல்; மரியாதை பண்ணுதல். (36)

37. இந்திரன் அருச்சுனனையும் இந்திராணி சுபத்திரையையும் முறையே அலங்கரிக்க, வசிட்டன் முதலிய முனிவர்கள் அங்கு வந்து சேர்தல்.

தந்த பார்த்தனைக் குலிசனும் தையலைச் சசியும்
அந்த மாகவங் கலங்கரித் தணிமிசை வைத்தார்
வந்த மாதவர் பலருடன் வசிட்டமா முனியுஞ்
சந்த மாமறைப் படியுள சடங்குகள் செய்தார்.

(இ-ள) தந்த - (குந்தி மூலம்) பெற்றெடுத்த, பார்த்தனை-அருச்சுனனை, குலிசனும் - தந்தையாகிய இந்திரனும், தையலை-பெண்ணுகிய சுபத்திரையை, சசியும்-இந்திராணியும், அந்தமாக-அழகு பொலியும்படி, அங்கு - அந்தத் திருமண மண்டபத்து, அலங்கரித்து-ஆபரணங்களைப்பூட்டி அணிபெறச்செய்து, அணி மிசை வைத்தார் - ஆசனத்தின்மேல் அமரச்செய்தனர்: வந்த மா தவர் பலருடன் - திருமணத்திற்கென விஜயஞ்செய்த சிறந்த பல தவச்சிரேட்டர்களுடன், வசிட்ட மா முனியும் - வசிட்ட மாமுனி வரும், சந்தம் மா மறைப்படி உள சடங்குகள் - ஒலியோடு ஓதப் படுகின்ற வேதத்திற் கூறியபடியுள்ள விவாகச் சடங்குகளை, செய்தார் - செய்துவைத்தார்; (எ-று).

வசிட்டமாமுனி - வசிட்டபகவான்: கண்ணனது சங்கற்பத் தால் முனிவர்களோடு அங்கு வந்து சேர்ந்தார். மறைப்படியுள சடங்குகள்-காப்புநாண் அணிதல் (கங்கண தாரணம்), கைத்தலம் பற்றல் (பாணிக்கிரகணம்), மங்கலநாண் அணிதல் (திருமாங் கல்ய தாரணம்), தீவலஞ்செய்தல் (அக்னிபிரதட்சிணம்), அம்மி மிதித்தல் (அஸ்மாரோபணம்), பொரிமுகந்தட்டல் (லாஜஹோமம்), மஞ்சனமாட்டல் (மங்கள ஸ்நாநம்), முதலியன: "மாமுது பார்ப்பான் மறைவழிகாட்டிடத் தீவலஞ்செய்வது" என் றது சிலப்பதிகாரமும். (37)

38. கண்ணன் சுபத்திரையைத் தாரைவார்த்துக் கொடுத்துக் கலியாணம் நிறைவேற்றல்.

தனஞ்செ யன்கரி யாயியந் தழங்கிட மன்ம
தனஞ்செ யன்மிக செய்பரு வங்கொடை யலைமால்
தனஞ்செ யன்றனக் கறலுட னுதவியந் தணர்க்குத்
தனஞ்செ யன்மண மலர்க்கையாற் றணிவுறத் தந்தான்

(இ-ள்) தனஞ்செயன் - அக்னிதேவன், கரியாய்-சாட்சியாய்., இயம் தழங்கிட - [மங்கள] வாச்சியங்கள் முழங்க, மன்மதன் அஞ்சுவயல் மிக செய் பருவம் கொள் தையலே - மன்மதனுகிய காமக்கடவுள் ஐந்து மலரம்புகளையும் எய்தலே மிகுதியாகச் செய்யும்படி தக்கபக்குவத்தைக் கொண்டுள்ள சுபத்திரையை, மால் - கண்ணபிரான், தனஞ்செயன் தனக்கு - அருச்சுனனுக்கு, அறலுடன் - நீருடன், உதவி - தாரை வார்த்துக் கொடுத்து அந்தணர்க்கு - பிராம்மணர்களுக்கு, தனம் - [தக்கிணையாகச்] செல்வத்தை, மணம் செயல் மலர்க்கையால் - திருமணஞ் செய்து வைத்த மலர்போல் மெல்லிய கைகளால், தணிவு அற - குறையில்லாதபடி, தந்தான் – கொடுத்தான்; (எ-று).

தனஞ்சயன் - அக்னி. கரி - சாட்சி, 'அக்னி சாட்சியாகத் திருமணஞ்செய்தல் மரபு. அஞ்சு - ஐந்து என்பதன் முற்றுப் போலி: ஐந்து அம்புகளுக்கு-எண்ணலளவையாகுபெயர், வயல்-வயத்தல்; தொழிற்பெயர். பருவம் - பக்குவம். கொள் + தையலே = கொடையலே, "ளைமுன் டணவும் ஆகும் தநக்களாயுங்காலே" என்பது விதி. மால்-திருமால்: இங்குக் கண்ணபிரானைக் காட்டியது. அறல்-நீர், 'உதவி' என்ற வினையெச்சம் 'தந்தான்' என்ற வினைமுற்றைக்கொண்டு முடிதலால், தருதலும் கண்ணபிரான் செயலாயிற்று; ஆகவே, 'செயல்' என்பது 'செய்வித்தல்' என்ற பொருளில் வந்ததாக்கொள்ளவேணும். மலர்க்கை - உவமத் தொகை. இச்செய்யுள் யமகம். [மேலையிரண்டு செய்யுட்களும் யமகம்] (38)

39. கண்ணன் விசயனுக்கும் இந்திரனுக்கும் விடைகொடுத்த பின் பலராமனைச் சேறல்.

மன்ற லாயபின் மாதுடன் மாவிச யனுந்தன்
மன்ற லம்புக விடைகொடுத் தருந்தவ ருடன்வான்
மன்ற லஞ்செலத் தமவிடை பெற்றபின் மாமா
மன்ற லந்துள வோன்பிலத் துழிவலே யடைந்தான்.

(இ-ள்) மன்றல் ஆய பின்-திருமணம் நடந்தேறிய பின்னர் மா விசயனும் - பெருமையுடைய அருச்சுனனும், மாதுடன்-சுபத்திரையுடன், தன்மன் தலம் புக விடை கொடுத்து - தருமபுத்திரன் இருக்கும் இந்திரப்பிரத்த நகரம் செல்ல விடையளித்து, வான் மன் - தேவலோகத்துத் தலைவனுகிய இந்திரன், அரும் தவருடன்-செய்தற்கரிய தவத்தைச் செய்த முனிவருடனே,

தலம் செல-தனது (இருப்பிடம் செல்ல,) தமவிடை பெற்றபின்-தம்மிடத்து விடைபெற்றுப் போனபின், மா மா மன்றல் அம்துள வோன் - மிக்க மிகுதியான வாசனையையுடைய திருத்துழாயை யணிந்தவனுகிய கண்ணபிரான், பிலத்துழி - குகையினிடத்து, வளை-[வெண்மையான] சங்குபோன்ற வண்ணனுகிய பலராமனை, அடைந்தான் - வந்து சேர்ந்தான்; (எ-று).

தன் மன்தலம் - இந்திரப்பிரத்த நகர். வான் மன் - இந்திரன். தம-ஆறனுருபேற்றது. மா-மிகுதி. மாமா-ஒருபொருட் பன்மொழி: மீமிசைச்சொல். வளை - சங்கு: சங்குபோன்ற நிறத்தானுக்குப் பண்பாகுபெயர். (39)

40. கண்ணன் கொடுத்த தேரைச் சுபத்திரை செலுத்த, அருச்சுனன் துவாரகாபுரியினின்று இந்திரபிரத்த நகர் நோக்கிச் செல்லுதல்.

துவரை வேந்தரு டேர்சுபத் திரைநடத் திடத்தா
துவரை நேர்புய னெறிகொளத் தொன்னக ராரி
துவரை யில்லெவ னெனமுனிந் தவன்றனைச் சூழத்
துவரை போல்விழி சிவந்திவ னவர்களைத் துரந்தான்.

(இ-ள்) துவரை வேந்து - துவாரகாபுரிக்குத் தலைவனுகிய கண்ணபிரான், அருள் - கொடுத்த, தேர் - தேரினை, சுபத்திரை நடத்திட-சுபத்திரை செலுத்த, தாது வரை நேர் புயன்-காவிக்கல் மலையையொத்த தோள்களையுடைய அருச்சுனன், நெறி கொள-வழிகாட்டிச்செல்ல, (இதனைக் கண்ட) தொல் நகரார் - பழைய நகரத்தவர்கள், "இதுவரை இல் - இன்றுவரையில் இங்ஙனம் அக்கிரமம் நிகழ்ந்தது இல்லை: எவன்?"- இதனைச் செய்தவன் யாவன்?", என முனிந்து - என்று கூச்சலிட்டுக் கோபித்து, அவன்தனைச் சூழ-அந்த அருச்சுனனைச் சூழ்ந்துகொண்டு தடுக்க, இவன்-இந்த அருச்சுனன், துவரைபோல் விழி சிவந்து-துவரை தானியம்போல் கண்கள் [சினத்தால்] சிவப்படைய, அவர்களைத் துரந்தான்-அந்தத் துவாரகாபுரத்தவரை யோட்டினன்; (எ-று).

தாது - காவிக்கல்: தாதுவரை-காவிக்கன்மலை, இஃது அருச்சுனன் தோள்களுக்கு ஒப்புக்கூறப்பட்டது நிறம்நோக்கி என்க. 'துவரைபோல் விழிசிவந்து' என்றது-உலக வழக்குப்பற்றி வந்த) உவமை. அருச்சுனனை எதிர்க்கவந்த யாதவ சேனையின் தலைவன்-விப்ருதுச்ரவஸ் என்பவன். (40

வேறு:

41. அருச்சுனன் இந்திரப்பிரத்தஞ் சேர்தல்.

வென்றுநரன் தன்பதிபுக் கணங்கை யங்கோர்
விரகுன்னி முன்னர்மனை விடுத்தா னன்னாள்
சென்றழலுற் பவித்தவளைக் குந்தி தன்னைச்
சேவித்தங் கவராசி சிரத்திற் கொள்ள
பின்றனுவல் லபனெய்தித் தரும மோடு
பிரதையையுந் தொழுதிருந்தான் பிலம்போந் துற்றோர்
நன்றுவரை யோர்முரச மறைதற் கேட்டு
நடுநடுங்கி யறிந்திடுவான் நகரி புக்கார்.

(இ-ள்). நரன் வென்று-அருச்சுனன் (தன்னை) எதிர்க்க வந்த யாதவ சேனையை வென்று, தன்பதி புக்கு-தனது நகராகிய இந்திரப்பிரத்தம் புகுந்து, அணங்கை-சுபத்திரையை, அங்கு-அந்த நகரில், ஓர் விரகு உன்னி-ஒரு உபாயத்தை நினைந்து, முன்னர் மனை விடுத்தான்-முதலிற் றிருமணஞ் செய்துகொண்ட மனைவியாகிய திரௌபதியின் வீட்டில் அச் சுபத்திரையைத் தங்கும்படி அனுப்பினன்: அன்னாள்-அந்தச் சுபத்திரை, சென்று-உட்புக்கு, அழல் உற்பவித்தவளை குந்திதன்னைச் சேவித்து-நெருப்பினின்று தோன்றிய திரௌபதியையும் குந்தி தேவியையும் வணங்கி, அங்கு-அப்போது, அவர் ஆசி-அவ்விருவரும் கூறிய ஆசீர்வாதங்களை, சிரத்தில் கொள்ள-தலையால் வணங்கிப் பாராட்டி யேற்றுக்கொள்ள, பின்-பின்னர், தனு வல்லபன் எய்தி-வில்லில் வல்ல அருச்சுனன் வந்து, தருமனோடு பிரதையையும் தொழுது-தருமனையும் குந்தியையும் வணங்கி, இருந்தான்-அங்குத் தங்கியிருந்தான்: பிலம் போந்து உற்றோர்-குகையுள் சென்று சிவோத்ஸவம் கண்டு திரும்பின யாதவர்கள், நல் துவரை யோர் முரசம் அறைதல் கேட்டு-நல்ல துவாரகாபுரியிலுள்ளோர் அடிக்கின்ற முரசொலி கேட்டு, நடுநடுங்கி-அச்சமுற்று, அறிந்திடுவான்-முரசறையும் காரணத்தைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு, நகரி புக்கார்-துவாரகையுள் புகுந்தார்கள்; (எ-று).

விரகு-தந்திரம். உபாயம். விரகு உன்னி என்றது-சுபத்திரையை இடைச்சி வேஷத்தோடு அனுப்ப நினைந்தது. திரௌபதி கூறிய ஆசி மொழிகள்-"உனது கணவன் எதிரியில்லாமலிருக்கக் கடவன்: நீ வீரனை புத்திரனைப் பெறுவாயாக; அவ்வாறே, கணவன் அன்புக்குரியவளாயிருக்கக் கடவாய்" என்பன.

இது முதல் நான்கு கவிகள்-பெரும்பாலும் ஒன்று இரண்டு ஐந்து ஆறுஞ்சீர்கள் காய்ச்சீர்களும், மற்றைய நான்கும் மாச்சீர் களுமாகிய கழிநெடிலடி நான்கு கொண்ட எண்சீராசிரிய விருத் தங்கள். (41)

42. கண்ணன் பலராமனுக்குச் செய்தியைத் தெரிவிக்க, அவன் சேனையுடன் அருச்சுனனைத் தொடர்ந்து போகுதலைக் கண்ணன் தடுத்தல்.

இல்லிடைவை கியயதிபற் குனனு மானை
யெடுத்தவன்போ யினனுமென் றிராம னோடு
சொல்லிடமா லவன்வெகுண்டங் கெம்பி யந்தச்
சோரன்முடி யித்தினமே துணிப்ப லென்ன
பல்லியமார்த் திடவங்க நாலி னோடும்
படர்ந்திடுவா னெழுந்திடவெம் பரன் றடுத்து
வல்லமையாற் கவர்பவரு முளரோ வம்மான்
மகளெனவவ் வினனெனவே வழக்குச் சொற்றான்.

(இ-ள்). மால்-கண்ணன், இராமனோடு-பலராமனோடு, "இல் லிடை வைகிய பதி பற்குனனும்-நமது மனையிலே தங்கியிருந்த துறவி அருச்சுனனும்: மானை எடுத்து அவன் போயினனும்-சுபத் திரையைக் கவர்ந்துகொண்டு அவன் போய்விட்டானும்" என்று—, சொல்லிட-சொல்ல, (கேட்ட) அவன்-அந்தப் பலராமன், வெகுண்டு-கோபித்து, அங்கு-அந்தவிடத்திலேயே, எம்பி-எழுந்து குதித்து, 'அந்தச் சோரன் முடி இத்தினமே துணிப்பல்' என்ன-'அந்தக் கள்வனின் தலையை இற்றைத் தினத்திலேயே வெட்டி யெறிவேன்' என்று வீரவாதம் பேசி, பல் இயம் ஆர்த்திட-பல வகை போர் வாச்சியங்களும் முழங்கிட, அங்கம் நாலினோடும்-நால்வகைப் படைகளோடும், படர்ந்திடுவான் எழுந்திட-மேற் செல்வதற்காக எழுந்து புறப்பட, எம்பரன் தடுத்து-எம்பெருமா னாகிய கண்ணபிரான் (அவன் போதலைத்) தடைசெய்து, (பின் பலராமனை நோக்கி) 'வல்லமையால் கவர்பவரும் உளரோ?— தமது சூழ்ச்சி வன்மையினால் [நமது தங்கை சுபத்திரையைக்] கவர்ந்து செல்வாரும் உண்டோ (அஃது இயலாத காரியம்:) (பின்னை என்னையெனில்), அம்மான் மகள் என வவ்வினன்-மாமன் மகளாவள் என்ற உரிமை கொண்டாடிக் கைப்பற்றினன்', எனவே-என்றே, வழக்கு சொற்றான்-நியாயங்காட்டிக் கூறினன்; (எ-று).

'யதிபற்குனனும், போயினனும்' என்று ஒன்றும் அறியாதவன் போல் கண்ணன் கூறியது நயம். எம்புதல்-எழுதல்: உலக வழக்குச் சொல், இனி, 'எம்பி' என்று விளித்ததுவுமாம். அங்கம் நாலு-ரதகஜதுரகபதாதிகள். படர்ந்திடுவான்-வானீற்று வினையெச்சம். எம்பரன் என்றது-நூலாசிரியரின் பக்தி தெரிப்பது. வல்லமையால் கவர்பவரும் உளரோ என்று-பலராமன் வல்லமையைப் பாராட்டியபடியுமாம். வசுதேவன் அருச்சுனனுக்கு மாமனுவன். மாமன் மகனே அத்தை மகன் மணத்தல் வழக்கு. (42)

43. கண்ணன் பலராமனோடு இந்திரப் பிரத்தஞ் சேர்தல்.

சொற்றிடலு நீபுரிந்த விரகி தென்னத்
துணைவனைமுன் னவன்வெறுப்பத் துளவோ னென்பாற்
குற்றமுள தாயினுநீ பொறுத்தி யென்னக்
கொண்டகம்புக் கனனெற்றைக் குழையோன் யாம்போய்
வெற்றிநரன் றனக்கணங்கை விதியி னல்கி
மீள்வதற னெனவமலன் வெள்ளை மேனிக்
கொற்றவனே டரசர்குழாந் தானை சூழக்
குலவுமிந்த்ரப் பிரத்தம்போய்க் குறுகி னானே.

(இ-ள்). சொற்றிடலும்-கண்ணன் வழக்குச் சொன்னவுடனே, முன்னவன்-தமையனாகிய பலராமன், நீ புரிந்த விரகு ஈது என்ன நீ செய்த தந்திரம் இது என்று பதிலளித்து, துணைவனை வெறுப்ப-தம்பியை வெறுத்துக்கொள்ள, (அதனைக் கண்ட) துளவோன்-கண்ணபிரான், 'என்பால் குற்றம் உளதாயினும் நீ பொறுத்தி' என்ன-'என்னிடத்துக் குற்றமிருக்குமாயின் நீ பொறுத்து (என்னை) மன்னிப்பாயாக என்று கூறி, கொண்டு-அவனையும் உடன்கொண்டு, அகம் புக்கனன்-மனையுட் புகுந்தான்: (அப்போது), ஒற்றைக் குழையோன்-ஒரு கர்தணியை யுடைய பலராமன், 'யாம் போய்-நாம் அனைவரும் சென்று, வெற்றி நரன் தனக்கு-நம்மை வெற்றிகொண்ட அருச்சுனனுக்கு, அணங்கை-சுபத்திரையை, விதியின் நல்கி-வேத விதிப்படி சடங்குகள் செய்து தாரைவார்த்துக் கொடுத்து, மீள்வது-திரும்பத் துவாரகை சேர்வது, அறன் என-முறைமையாகும் என்று சொல்ல, [அங்ஙனமே] அமலன்-கண்ணபிரானும், வெள்ளை மேனிக் கொற்றவனோடு-வெள்ளை நிறவுடம்பையுடைய பலராமனோடு, அரசர் குழாம் தானை சூழ-அரசர் கூட்டங்களும் படைகளும் சூழ்ந்துவர, குலவும் இந்திரப்பிரத்தம் போய்க் குறுகினனன் – விளங்குகின்ற இந்திரப்பிரத்த நகரம் போய்ச் சேர்ந்தான்; (எ-று).

'என்பால் குற்றம் உளது: ஆயினும் நீ பொறுத்தி" என்று பொருள்படுவதோடு, 'என்பால் குற்றமிலது' என்று எதிர்மறையும்மையாகவும் பொருள்படும். ஒற்றைக்குழையோன் - ஒரு காதணியுடையவன்: முன்னரும் 'ஓர் குழையுடைய பலதேவன்' என்றார். (திரௌபதி மாலையிட்ட: செ: 33) (43)

44. சுபத்திரைக்கும் அருச்சுனனுக்கும் மீட்டும் மணஞ்செய்து சீதனச் சிறப்புக்கள் கொடுத்தல்.

மைத்துனரை வருமெதிர்கொண் டழைப்ப மாயோன்
வந்தரசர் தமையொற்றூல் வருவித் தோர்நாள்
மொய்த்தநுசுப் பினையாளை மீட்டு மன்றற்
புரிந்துநரன் றனக்குதவிப் பூவு மானுந்
தத்துபரி யுங்கரியுந் தேரும் பூணும்
தாதியரு மாடையுஞ்சீ தனந்தந் தான்பால்
ஒத்திடுமே னியனுடன்யா தவர்க ளியாரு
மூர்புகவுய்த் தொருவனுமங் குற்றூன் மன்னே.

(இ-ள்) மைத்துனர் ஐவரும் எதிர்கொண்டு அழைப்ப-அத்தைமகாராகிய பாண்டவர் ஐவரும் எதிர்கொண்டு (நடந்து வந்து) அழைக்க, மாயோன் - கண்ணபிரான், வந்து - அரசர் தமை - பல அரசர்களையும், ஒற்றூல் வருவித்து - தூதுவர்களை யனுப்பி வரவழைத்து, ஓர் நாள் - ஒருதினம், பொய்த்த நுசுப்பு இனையாளை - மிகவும் நுண்ணிய இடையையுடைய தங்கையாகிய சுபத்திரையை, மீட்டும் மன்றல் புரிந்து - மறுபடியும் திருமணஞ் செய்வித்து, நரன் தனக்கு உதவி - அருச்சுனனுக்குக் கொடுத்து, பூவும்-பூமியும் [நிலங்களும்], ஆனும் - பசுக்களும், தத்து பரியும்-தாவிப்பாய்கின்ற குதிரைகளையும், கரியும்-யானைகளையும், தேரும்-தேர்களையும், பூணும் - ஆபரணங்களையும், தாதியரும் - பணிப் பெண்களையும், ஆடையும் - துணிகளையும், சீதனம் தந்தான்-மணமகட்குக் கொடுக்கும் பொருள்களாகக் கொடுத்தான்: (பின்னர்) பால் ஒத்திடும் மேனியனுடன் - பால்போல் வெள்ளிய நிறங்கொண்ட உடம்பையுடைய பலராமனுடன், யாதவர்கள் யாரும் - வந்திருந்த யாதவர்கள் அனைவரையும், ஊர் புக உய்த்து-துவாரகைக்குச் செல்லுமாறு விடுத்து, அங்கு - அந்த இந்திரப் பிரத்தத்திலேயே, ஒருவனும் - தான்மட்டும் தனியனாக, உற்றூன்-தங்கினான்; (எ-று). மன், ஓ-ஈற்றசை.

ஒற்று-வேவுகாரர் எனினுமாம். பொய்த்த நுசுப்பு-உண்டோ இல்லையோ என்று ஐயம் விளைவித்து இல்லையென்னும்படியான அவ்வளவு நுணுகிய இடை என்றபடி. முதல் மணம் மணமகள் வீட்டிலும் இரண்டாவதாக அதனையே மணமகன் வீட்டிலும் நிகழ்த்தியதைக் கூறியபடி. சீதனம்=ஸ்ரீதனம்: மகட்குக் கொடுக்குஞ் செல்வம்:; மணச்சிறப்புப் பொருள்கள். யாதவர்களியாரும் - 'தன்னெழிமெய்ம் முன் யகரம்வர இகரம் துன்னிற்று'. (நன்: மெய்யீறு: 3) (44)

வேறு

45. சுபத்திரை கருக்கொள்ளல்.

இரவொடு பகலு மிடைவிடா துளமொத்
திரதியும் மதனனும் போலத்
தெரிவையு நரனு முலையுமார் பகமுங்
திளைப்பவர் இதழமு தூற்றப்
பருகிவெங் காமப் பசிதணிந் தின்பப்
பரவையிற் படிந்திடு நாளிற்
கருமுகி லளகக் கன்னிதன் வயிற்றிற்
கருப்பம்வந் தெய்திய தன்றே.

(இ-ள்) இரவொடு பகலும் இடைவிடாது - இரவும் பகலும் இடையீடுபடாதபடி, உளம் ஒத்து - மனமொத்து, இரதியும் மதனனும்போல, ரதிதேவியும் மன்மதனனும் போல, தெரிவையும் நரனும் - சுபத்திரையும் அருச்சுனனும், முலையும் மார்பகமும் திளைப்பவர் - முலையைக்கொண்டும் மார்பினைக் கொண்டும் முறையே இன்பம் அநுவிப்பவராய், இதழ் அமுது ஊற்றப் பருகி - அதரங்கள் இனிய நீரைப் பெருக்க அதனைச் சுவைத்து, வெங்காமப்பசி தணிந்து - மிகுதியான காமத்தாலான பசி யாறி, இன்பப் பரவையில் - சுகாநுபவக் கடலில், படிந்திடும் நாளில் - தோய்ந்திடும் காலத்து, கருமுகில் அளகம் கன்னிதன் வயிற்றில் - கார்மேகம்போற்கரிய கூந்தலையுடைய சுபத்திரையின் வயிற்றினில், கருப்பம் வந்து எய்தியது - கருப்பம் வந்து தோன்றியது; (எ-று) அன்றே - தேற்றம்.

சுபத்திரை கருத்தரித்தாள் என்றபடி. பெண்டிர்க்கு முலையும் ஆடவர்க்கு மார்பும் திளைப்பதற்கான கருவிகள். அதரபானஞ் செய்து காமப்பசி தணிந்தனர் என்றார்.

இதுமுதல் சருக்க முடியுமளவும் உள்ள ஆறு கவிகள்- பெரும்பாலும் ஒன்று மூன்று ஐந்து ஆருஞ்சீர்கள் விளச்சீர் களும் மற்றை மூன்றும் மாச்சீர்களுமாகிவந்த எழுசீராசிரியவிருத் தங்கள். (45)

46. சுபத்திரையினிடமாக அபிமன்யு பிறத்தல்.

இடையுருக் காட்டி முலைமுகங் கறுத்தம்
பெனும்விழி குழிந்தக டோங்கி
நடைதளர் வாகி நெட்டுயிர்ப் பெறிந்து
நரம்புகள் பசந்துடல் விளர்த்துப்
படைவிழி யுடையச் சுபத்திரை சிலநாட்
பருவர லெய்தியங் கொருநாள்
அடையலர் நடுங்க வைவரும் மகிழ
அரியவா ளபிமனைப் பயந்தாள்.

(இ-ள்) இடை உரு காட்டி-இடையானது உருவம் தெரியும் படி பெருத்து, முலைமுகம் கறுத்து - கொங்கைகளின் நுனிகள் கருநிறமடைந்து, அம்பு எனும் விழி குழிந்து - அம்புபோன்ற கண்கள் குழிவிழுந்து, அகடு ஒங்கி - வயிறு உயர்ந்து முன்வந்து, நடை தளர்வாகி - நடக்கும் நடை சோர்வடைந்து, நெட்டுயிர்ப்பு எறிந்து - பெருமூச்சுவிட்டுக்கொண்டு, நரம்புகள் பசந்து - நரம்பு கள், பசுமை நிறமடைந்து, உடல் விளர்த்து - உடம்பு வெளுத்து, (இங்ஙனம்) படை விழி உடை அ சுபத்திரை-வேற்படைபோன்ற கண்ணினையுடைய அந்தச் சுபத்திரை, சிலநாள் பருவரல் எய்தி- சில நாட்கள் துன்பப்பட்டு, அங்கு ஒரு நாள் - அப்போதொரு நாள், அடையலர் நடுங்க - பகைவர் அஞ்சும்படியும், ஐவரும் மகிழ - ஐவர் மகிழும்படியும், அரிய வாள் அபிமனை பயந்தாள்- அருமையாக ஒளிபொருந்திய அபிமன்யுவைப் பெற்றாள்; (எ-று).

முதலிரண்டடிகளில் கருக்கொண்ட மகளிரின் மேனி நிற வேறு பாடுகள் காட்டப்பட்டன. தன்மைநவிற்சியணி. நடுங்க, மகிழ பயந்தாள் - உடனிகழ்ச்சியணி. அபி-பயமற்றவன்; மன்யு - கோப முள்ளவன். படைவிழி-உவமைத்தொகை. [குறிப்பு:- அபிமனின் போர்த்திறம் பாரதப்போர் பதின்மூன்றும் நாளில் விளங் கும்]. (46)

47. குழந்தை அபிமன்யு வளர்தல்,

குருகுலந் தழைப்பக் குமரன் வந்துதிப்பக்
கொற்றவ ரைவரு மகிழ்வுற்
றிருபிறப் போருக் களப்பிலான் கணமும்
இருநிதிக் குவைகளும் வழங்கி
அருமறைப் படிசெய் கடன்முறை வழாம
லாற்றிபொற் றொட்டிலி லேற்றித்
தெரிவைமார் தாலாட் டிடவளர் பிறைபோற்
சிறுவனை வளர்க்குநா டன்னில்,

(இ-ள்) குமரன் – அபிமன்யு, குருகுலம்தழைப்ப வந்து உதிப்ப – குருகுலம் செழிக்கும்படி வந்து பிறக்கவே, கொற்றவர் ஐவரும் மகிழ்வுற்று - பாண்டவரைவரும் சந்தோஷமடைந்து, இருபிறப்போருக்கு - துவிஜரான அந்தணர்களுக்கு, அளப்பு இல் ஆன் கணமும்–அளவற்ற பசுக்கூட்டங்களையும், இரு நிதிக்குவை களும் - பெரிய செல்வக்குவியல்களையும், வழங்கி - கொடுத்து, (பின்னர்) அருமறைப்படி - அரிய வேதவிதிமுறைப்படி, செய் கடன் - செய்யவேண்டிய சடங்குகளை, முறை வழாமல் ஆற்றி- மரபு கெடாமல் செய்து, பொன் தொட்டிலில் ஏற்றி - பொன்னு லாகிய தொட்டிலிற் கிடத்தி, தெரிவைமார் தாலாட்டிட - மகளிர் பாடல்கள்பாடித் தாலாட்ட, சிறுவனை - அபிமன்யுவை, வளர் பிறை போல் - [சுக்கிலபட்சத்து] வளர்ந்துவரும் பிறைச்சந்திர னைப்போல, வளர்க்கும் நாள்தன்னில் - வளர்த்துவரும் நாட்களில்; (எ–று) 'துரோபதை.. பயந்தெடுத்தனள்' என மேலேக்கவியிற் குளகமாய்த் தொடரும்.

தாய்வயிற்றிற் பிறத்தலாகிய இயற்கைச் சன்மத்தோடு உபநயநச் சடங்குகளால் வருகிற ஞான சன்மமும் ஒருபிறப்பாமென் பது நூற்கொள்கையாதலால், அந்தணரை இருபிறப்பாளரென் றது. மறைப்படி செய்கடன்கள் - ஜாதகருமம், நாமகரணம் என்பன. தாலாட்டு, தால்-நாக்கு, ஆட்டு-அசைத்தல்: எனவே நாவினையசைத்துப்பாடும் பாட்டு. (47)

48 திரௌபதி உபபாண்டவரைப் பயத்தல்.

தருமனுற் பிரிதி விந்தனை வாயு
தனயனுற் சுருதிசன் மனைவின்
னரன்றனுற் சுதகீர்த் தியையெழி லுடைய
நகுலனுற் சதானிகன் றன்னை

பருணிதர் புகழ்சா தேவனுற் சுதசே
னன்றனைப் பயந்தெடுத் தனளால்
துருபதன் றவத்தா லழலிலுற் பவித்த
துரோபதை யென்னுமா தம்மா.

(இ-ள்) துருபதன் தவத்தால்-துருபதராசன் செய்த தவத்தின் பயனுய், அழலில் உற்பவித்த-அக்னியினின்று தோன்றிய, துரோபதை என்னும் மாது-திரௌபதியானவள், தருமனுல் பிரிதிவிந்தனை-தருமனுல் பிரதிவிந்தியனையும், வாயு தனயனுல்-வாயு புத்திரனை வீமசேனனுல், சுருதிசன்மனை-சுதசோமனையும், வில் நரன் தனுல்-வில்லில்வல்ல அருச்சுனனுல், சுதகீர்த்தியை-சுருதகர்மாவையும், எழிலுடைய நகுலனுல்-அழகுடைய நகுலனுல், சதானிகன்தன்னை-சதாநீகனையும், பருணிதர் புகழ் சாதேவனுல்-புலவர்களால் புகழப்படுகின்ற சகாதேவனுல், சுதசேனன்தனை-சுருதஸேநனையும், பயந்தெடுத்தனள்-பெற்றெடுத்தாள்; (எ-று). ஆல்-ஈற்றசை: வியப்புமாம். அம்மா-ஈற்றசை.

ஐந்து பிள்ளைகளும் வருஷத்திற்கு ஒருவராய்ப் பிறந்தனரென்று முதனூலினுல் அறியலாம். இவர்கள் உபபாண்டவரென்றும், பஞ்சதிரௌபதேயரென்றும் கூறப்படுவர். பிரிதிவிந்தன்-பிரதிவிந்த்யன் என்பதன் சிதைவு. சுருதிசன்மன்-சுதசோமன் என்பதன் மாற்றம். சுதகீர்த்தி-சுருதகர்மா எனப்படுபவன். சதானிகன்-சதாநீகன் என்பதன் குறுக்கல், சுதசேனன்-சுருதஸேநன் என்பதன் மாற்றம். துரோபதை-திரௌபதியென்பதன் சிதைவு. பருணிதர்-ஞானபரிபாகமுடையவர்: புலவர். (48)

49. படைக்கலந் தேர்தலில் அறுவரில் அபிமன்யு சிறத்தல்-தருமன் மேலும் வேதிகையென்பவளை மணந்து அவள் மூலம் சாதேயனைப் பயத்தல்.

பூதமோ ரைந்துக் கமைத்திடுங் குணம்போற்
பொலிதரு மைந்தரை வருக்கும்
வேதநூற் படியே செய்வன செய்து
வின்மறை முதலிய கலையும்
ஓதுவித் தறுவர் தம்மிலு மபிம
னுயர்தல்கண் டைவரு மகிழ்ந்தார்
ஈதலாற் றருமன் வேதிகை யினைவேட்
டெழில்கொள்சா தேயனைப் பயந்தான்.

(இ-ள்) பூதம் ஓர் ஐந்துக்கு - பஞ்சபூதங்களுக்கும், அமைத்திடும் குணம்போல் - இன்னின்னவற்றுக்கு இன்னின்ன குணம் என்று சிறப்பித்து அமைத்திடுதல்போல, பொலிதரு - (குணங்களால்) விளங்குகின்ற, மைந்தர் ஐவருக்கும் - பிள்ளைகள் ஐவருக்கும் (உபபாண்டவர் ஐவருக்கும்), வேதநூற்படியே செய்வன செய்து - வேதத்திற் கூறியுள்ளபடியே செய்யவேண்டிய (ஜாதகருமம் நாமகரணம் அந்நப்பிராசநம் சௌளம் முதலிய) கடமைகளை(ச் சாஸ்திரவிதிப்படி உரிய காலங்களிற்) செய்து, (அதன் பின்பு) வில்மறை முதலிய கலையும் ஓதுவித்து – வில்வித்தை முதலான ஆயுதக்கலைகளையும் கற்பித்து, அறுவர் தம்மிலும் அபிமன் உயர்தல் கண்டு - (உபபாண்டவரைவர் அபிமந்யு என்ற) ஆறுபேர்களிலும் அபிமந்யு சிறத்தலைக்கண்டு, ஐவரும்- (தந்தையராகிய) பாண்டவர்கள் ஐவரும், மகிழ்ந்தார் - களிப்புக் கொண்டார்கள்: ஈது அலால் - இதைத்தவிர, தருமன் - தருமபுத்திரன், வேதிகையினை வேட்டு - வேதிகையென்பாளை மணந்து, எழில்கொள் சாதேயனைப் பயந்தான் – அழகுமிக்க சாதேசன் என்பவனைப் பெற்றான்: (எ–று).

பிருதிவிக்கு மணமும், அப்புக்குச் சுவையும், தேயுவுக்கு ஒளியும், வாயுவுக்கு ஊறுவும், ஆகாயத்துக்கு ஒலியும் குணமாம். அருச்சுனன் பிள்ளையாயினும் அபிமந்யு உயர்தல்கண்டு ஐவரும் மகிழ்ந்தார் என்றது - ஐவரில் வேற்றுமை மாற்றியபடி. ஐவர் மனமும் ஒருபடித்தானதே என்று உணரவைத்தபடி.

வின்மறை-தநுர்வேதம்: இது நான்கு பாதங்களையும் பத்து வகைகளையும் உடையது என்பர். [நான்கு பாதங்களாவன:– சூத்ரம், சிக்ஷை, பிரயோகம், ரகசியம் என்பன. பத்துவகைகளாவன – ஆதானம், ஸந்தானம், மோக்ஷணம், நிவர்த்தனம், ஸ்தானம், முஷ்டி, பிரயோகம், பிராயச்சித்தம், மண்டலம், ரகசியம் என்பன. வல்லார்வாய்க்கேட்டுணர்க.] (49)

50. வீமன் முதலிய நால்வரும் பிற மகளிரை மணந்து புதல்வரைப் பெறுதல்.

சுகுணனுஞ் சுதனை வீமனு மளித்தான்
சுரிகுழற் சலதரை யிடத்தில்;
நகுலனும் இரேணு மதிக்குமித் திரனை
நல்கினன் இளையசா தேவன்

மிகுவனப் புடைய விசயைபா லளித்தான்
விறல்கொள்சேந் திரனையை வருக்குந்
தகுமகா ரீரா ருமிள வேனிற்
றணந்தவர்க் கியமனின்வந் ததுவே.

(இ-ள்) வீமனும் - வீமசேனனும், சுரிகுழல் சலதரையிடத்தில்-சுருண்ட கூந்தலையுடைய சலதரை யென்பாளிடத்தில், சுகுணனும் சுதனை அளித்தான்-சுகுணன் என்னும் பிள்ளையைப் பெற்றான்: நகுலனும்—, இரேணுமதிக்கு-இரேணுமதி யென்பாளிடத்து, மித்திரனை நல்கினன்-மித்திரன் என்பவனைப் பெற்றளித்தான்: இளைய சாதேவன்-எல்லாரிலும் இளையவனாகிய சகதேவன், 'மிகுவனப்புடைய விசயைபால்-மிக்க அழகையுடைய விசயை யென்பாளிடத்து, விறல்கொள் சேந்திரனை அளித்தான்-வெற்றிகொள்ளும் ஜயேந்திரன் என்பானைப் பெற்றான்: இங்ஙனம்-இவ்வாறாக, ஐவருக்கும் தகும் மகார்-பாண்டவரைவருக்கும் தக்க [ஏற்ற] பிள்ளைகள், ஈர் ஆறும்-பன்னிருவராகும்: [இதுநிற்க] இளவேனில்-வசந்த காலம், தணந்தவர்க்கு-ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்த ஆடவர்க்கும் மகளிர்க்கும், இயமனின் வந்தது-யமன் வருத்துவது போல (வருத்தஞ் செய்ய) வந்தது; (எ.று).

பாண்டவர் ஐவரில் ஒவ்வொருவருக்கும் இரண்டு பிள்ளைகளாக, மொத்தம் அவர்கள் பத்துப்பேர் ஆயினர். அவர்களோடு அருச்சுனனுக்கு உலூபியினிடம் பிறந்த இராவானையும், சித்திராங்கதையினிடம் பிறந்த பப்ருவாகனனையும் சேர்த்துப் பன்னிருவராயினர் என்று உணர்க. [குறிப்பு :— கடோற்கசன் அரக்கிமகனுதலாலும், வேதவிதிப்படி மணஞ்செய்து அதனிற் பிறந்தவனல்லனுதலாலும் அவனை நீக்கினர் என்க.]. இளவேனிற்பருவம்-வசந்த காலம் எனப்படும். இந்தக் காலத்து மன்மதனது முயற்சியாலாகுந் தொழிலாகிற சிற்றின்ப விளையாட்டுக்கள் மிகும்: எனவே, பிரிந்தார்க்கு இந்த வசந்த காலம் காமோத்தீபகமாக எரித்து வருத்தும். யமன்-உடலையும் உயிரையும் கூறுபடுத்துபவனுதலின், வருத்தும் இளவேனிலுக்கு அவனை உவமை குறித்தார். சுரி குழல்-பண்புத்தொகை. இயமனின், இன்-ஐந்தனுருபு ஒப்புப் பொருளது. வந்ததுவே–வகரவுடம்படுமெய் பெற்று வந்தது (50)

அருச்சுனன் தீர்த்த யாத்திரைச் சருக்கம்

முற்றிற்று.

பத்தொன்பதாவது

காண்டவதகனச் சருக்கம்

தேவேந்திரனுக்கு உரியதாய்ப் பூலோகத்திலுள்ளது காண்டவமென்னும் வனம்: அவ் வனத்தைக் கிருஷ்ணர்ச்சுனர்களது அநுமதிப்படி அக்னிதேவன் எரித்திட்ட செய்தியைக் கூறுகின்ற சருக்கம் என்று பொருள்; காண்டவதகனம் என்ற வடமொழித் தொடர் – ஆரும்வேற்றுமைத்தொகை: தகனச்சருக்கம் என்ற தொடர்–இரண்டனுருபும் பயனும்தொக்கதொகை.

வேறு.

1. சோலை மன்மதனுக்கு அளித்தல்.

தங்குபொழி லெனுங்கொல்லன் தளிரென்னும்
உலைக்கனலிற் றண்பூ வென்னும்
வெங்கணையும் அளிகளெனும் வின்னணும்
தாதென்னும் வெறுக்கை தன்னிற்
கொங்கணுகி வரும்பொதியக் குன்றுயிர்த்த
தென்றலெனுங் கொடிஞ்சித் தேரும்
பொங்குசினை யெனுங்கரத்தாற் புரிந்து மதன்
றனக்களித்தல் போன்ற தாலோ.

(இ-ள்) தங்கு பொழில் எனும் கொல்லன் - இருத்தற்கேற்ற சோலையென்கின்ற கொல்லனவன், தளிர் என்னும் உலைக்கனலில் - [மாந்தளிர்போன்ற] தளிர்கள் என்கின்ற உலைக்களத்துள்ள நெருப்பில், தண்பூ என்னும் வெங்கணையும் - குளிர்ச்சி பொருந்திய பூக்கள் என்கின்ற கொடிய அம்புகளையும், அளிகள் எனும் வில்நாணும் - வண்டுகள் என்கின்ற வில்நாணியையும், தாது என்னும் வெறுக்கை தன்னில் - மகரந்தங்கள் என்கின்ற செல்வத்தினில், கொங்கு - வாசனை, அணுகி வரும் - நெருங்கி வரும், பொதியக்குன்று உயிர்த்த தென்றல் எனும் கொடிஞ்சித் தேரும் - பொதியமலையில் தோன்றுகின்ற தென்றலென்கின்ற கொடிஞ்சியையுடைய தேரினையும், பொங்கு - விளங்குகின்ற, சினை எனும் கரத்தால்-கிளைகள் என்னுங் கைகளால், புரிந்து-[விரும்பிச்] செய்து, மதன் தனக்கு - மன்மதனுக்கு, அளித்தல் போன்றது - கொடுத்தலைப் போன்றதாயிற்று [இளவேனிலின் வரவு என்றபடி]; [எ-று] ஆலோ - ஈற்றசை.

வசந்தகாலவரவின் வருணனை இது. பொழிலென்னும் கொல்லன் தளிரென்னும் உலைக்கனலில் பூவென்னும் கணையையும், அளிகளென்னும் வில்நாணியையும், தென்றலென்னுந் தேரினையும் சினையென்னுங்கரத்தால் புரிந்து [செய்து], அந்தக் கரத்தாலேயே மன்மதனுக்கு அளித்தான் என்றார். பொழிலானது-மைந்தரும் மகளிரும் காதல்கொண்டு கூடிவிளையாடுதற்கு ஏற்ற ரமணீயமான இடமாதலின், அதனைக் கருவிகள் சமைத்துக் கொடுக்கும் கொல்லனை உருவகஞ்செய்தார். மாந்தளிர்போன்ற தளிர்கள் செந்நிறமாகவிருத்தலின் உலைக்கனலாக உருவகித்தார். மன்மதனுக்குப் போர்செய்யுங் கருவிகள்:- அம்பு – மலர்கள்: வில்நாணி - வண்டிஞெழுங்கு. தேர் - தென்றற்காற்று. இவை கனைக்கொண்டு தனக்குச்சிறந்த வசந்தகாலத்து மன்மதன் ஸ்திரீ புருஷர்களைச் சிற்றின்பவசப்படுமாறு தூண்டுவன். மகரந்தப் பொடிகளைத் தூவிக்கொண்டு வாசனையோடு தென்றல் வீசுகின்றது; எனவே, பொன்னிறமாக மகரந்தப்பொடிகள் இருத்தலால், அவற்றைத் 'தாது என்னும் வெறுக்கை' ஒன்று உருவகித்தார். வெறுக்கை - செல்வம், பொன். கொங்கு - வாசனை. தளிரும் வண்டிஞெழுங்கும் தம்மைக் காண்போர்க்கு வேட்கை விளைக்குங் காமோத்தீபகப் பொருள்களாகும். தென்றற்காற்றின் பிறப்பிடம் தென்பாண்டிநாட்டுப் பொதிகைமலையென்பர். சினையென்னும் கரம் - உருவகம்.

இச்செய்யுளில் உருவகவணியும் தற்குறிப்பேற்றவணியும் சேர வந்துள்ளன: எனவே, சேர்வையணி.

இறுமுதல் ஏழுகவிகள் - பெரும்பாலும் முதல் நான்குசீரும் காய்ச்சீர்களும், மற்றை இரண்டும் மாச்சீர்களுமாகிய அறுசீராசிரிய விருத்தங்கள். (1)

2. கிருஷ்ணுர்ச்சுனர் வேனில் விழா வயரத் தேவியரோடும் சோலை சேர்ந்து களித்தல்.

பூந்துளவக் கருமுகிலும் பொருதுசிலைத்
தழும்பேறும் புயத்தி னனும்
வாய்ந்தவவர் தமக்குரிய மனைவியரும்
புரசனரும் வனபூங் காவிற்
போந்துமலர்க் கொய்தணிந்தும் பொற்சிவிறி
நீராடற் புரிந்து மாரன்
ஏந்துமலர்க் கணைக்குமிளைத் திடாமல்கல
வித்தொழிலு மியற்றி னரே.

(இ-ள்.) பூந்துளவக் கருமுகிலும்-அழகிய திருத்துழாயை யணிந்த கரிய மேக நிறங்கொண்ட கண்ணபிரானும், பொருது-போரிட்டதனால், சிலைத் தழும்பு ஏறும் புயத்தினனும்-வில்தழும்புகள் நிரம்பப் பெற்ற தோள்களையுடைய அருச்சுனனும், அவர் தமக்கு உரிய வாய்ந்த மனைவியரும்-அந்தக் கிருஷ்ணர்ச்சுனர்க் குரியவராய்ப் பொருந்திய மனைவிமார்களும், புரசனரும்-நகரத்துச் சனங்களும், வனம்-காண்டவ வனத்திலுள்ள, பூங்காவில் போந்து-பூஞ்சோலையுள் சென்று, மலர் கொய்து அணிந்தும்-பூக்களைப் பறித்துச் சூடியும், பொன் சிவிறி நீராடல் புரிந்தும்-அழகிய துருத்தி கொண்டு விசி நீரில் விளையாடல் செய்தும், மாரன் ஏந்து மலர்க்கணைக்கும் இளைத்திடாமல்-மன்மதன் ஏந்தி விடுக்கின்ற புஷ்பபாணங்களுக்கும் சளைத்திடாமல், கலவித்தொழிலும் இயற்றினர்-காம நுகர்ச்சித் தொழில்களையும் புரிந்தார்கள்; (எ-று).

துளவக் கருமுகில்-கண்ணபிரானுக்கு வந்த உருவகம். புரம்-இந்திரப்பிரத்த நகரம். சிவிறி-துருத்தி: நீரைத் தூவுதற்காம் கருவி. கலவித் தொழில்-புணர்ச்சித் தொழில்கள். (2)

3. **அக்கினிதேவன் அந்தணவடிவு கொண்டு அங்கு வந்து, தன்னையுபசரித்த கிருஷ்ணர்ச்சுனர்களை உணவு வேண்ட அவர்களும் கொடுக்க உடன்படல்.**

இவ்வண்ணம் வேனில்விழா வினிதியற்றி
மலர்க்காவி னிருக்கு நீல
வவ்வண்ண மேனியர்பான் மறையவனாய்
தழற்கடவுள் வரலு மற்றோர்
செய்வண்ண கடனிரப்பச் செந்தழலு
மிகும்பசியாற் சேர்ந்து ளேன்யான்
உய்வண்ண மோதனமெற் குதவுமென
அவருமதற் குடன்பட் டாரே.

(இ-ள்). இவ்வண்ணம்-இப்படியாக, வேனில் விழா-வசந்தோற்சவத்தை, இனிது இயற்றி-இனிமையாகச் செய்து முடித்து, மலர்க்காவின் இருக்கும்-பூஞ்சோலையில் தங்கியிருந்த, அ நீல வண்ண மேனியர்பால்-அந்தக் கருநிறம் படைத்த கிருஷ்ணர்ச்சுனரிடத்து, தழற்கடவுள்-அக்கினிதேவன், மறையவனாய் வரலும்-அந்தணவடிவத்தோடு வரவும், மற்றோர்-அந்தக் கிருஷ்ணர்ச்சுனர், செய்வண்ண கடன் நிரப்ப-(அந்தணனிடத்துச்) செய்ய வேண்டிய உபசாரக் கடமைகளையெல்லாம் குறைவறச்செய்து

முடிக்க, செந் தழலும்-அக்கினி தேவனும், 'மீகும் பசியால் சேர்ந்து ளேன்-மிக்க பசியினாலே (வாடி) உங்களை யடைந்துள்ளேன்: (ஆகவே) யான் உய்வண்ணம்-நான் உயிர்தரிக்கும்படி, எற்கு-எனக்கு, ஓதனம் உதவும் என-உணவு தருவீராக' என்று கூறி யிரப்ப, அவரும்-அந்தக் கிருஷ்ணர்ச்சுனர்களும், அதற்கு-அந்த அக்கினி தேவனுச்கு உணவளிப்பதற்கு, உடன்பட்டார்-சம்மதித் தார்கள்; (எ-று) ஏ-ஈற்றசை.

கிருஷ்ணர்ச்சுனர் இருவரும் கரியமேனியராதலால் 'கிருஷ்ணர்' என்றே பெயர்பெறுவர். இங்கே, நீலமேனியர்' எனப்பட்டார், நீலம், கறுப்பு-இவை அபேதமாகக் கூறப்படும். ''கரியமேனியரி ருவர்'' என்றார் வில்லியும், செய்கடன் நிரப்புதலாவது-எதிர் கொண்டு வந்து நமஸ்கரித்து ஆசனத் தமரவைத்து வந்தகாரியம் வினவுதல் முதலியன. (3)

4. உடனே அவ்வந்தணன் தான் இன்னனென்று உண்மை தெரிவித்துக் காண்டவ வனத்தைத் தனக்கு இரையாக அளிக்குமாறு வேண்டி, இந்திரன் செய்யும் இடையூற்றை யும் தடுக்க வேண்டுதல்.

தருதுமென மொழிகேட்டுத் தந்திடப்பெற்
றருந்தினன்போற் றருக்குற் றோதும்
அருமறையந் தணனல்லேன் அழலோன்யான்
காண்டவப்பே ரடவி யுண்பான்
கருதிமுகம் வைத்திடில்யான் கருமுகிலே
ழாலவிப்பான் ககன வேந்தன்
முரணதனு னீர்விலக்கின் முழுதுமருந்
துமெண்ணம் முடியு மென்றான்.

(இ-ள்.) தருதும் எனும் மொழிகேட்டு-'கொடுக்கின்றோம் உணவு என்ற வார்த்தையைக் கேட்டு, (அக்கினிதேவன்) தந்திடப் பெற்று அருந்தினன் போல் தருக்குற்று-உணவு கொடுக்கப்பெற்று உண்டவன் போலே செருக்கடைந்து, 'அருமறை ஓதும் அந்தணன் அல்லேன்-அரிய வேதங்களை யோதுகின்ற பிராமணன் அல் லேன்: யான் அழலோன்-நான் அக்கினி; காண்டவப்பேர் அடவி உண்பான் கருதி-காண்டவம் என்ற பேரையுடைய இந்த வனத் தையுண்பதனை மனத்தினெண்ணி, யான் முகம் வைத்திடில்-நான் வாய்வைத்தால், (உடனே) ககன வேந்தன்-இந்திரன், கருமுகில்

ஏழால் அவிப்பான்-கரிய ஏழுமேகங்களையும் அனுப்பி, (அவற்றைக் கொண்டு) என்னைத் தணித்துவிடுவான்: நீர்-நீவிரிருவரும், முரண தனல்-(உமது) வலிமையினால், விலக்கின்-[அந்த மேகங்கள் மழை பொழிவதைத்] தடுத்து விடுவதாயின், முழுதும் அருந்தும் எண்ணம் முடியும் என்றான்-(வனம்) முழுவதையும் உண்ண வேண்டும் என்று (யான்) கொண்டிருக்கும் எண்ணம் நிறைவேறும் என்று கூறினன்; (எ-று.)

நிஜ வடிவத்தோடு வந்து கேட்டால், இந்திரனுக்குரிய அவ் வனத்தை யெரித்தற்கு அவ்விந்திரன் மகனை அருச்சுனனும் அவ் விந்திரனுக்குத் தம்பியாகிய உபேந்திரனது திருவவதாரமான கண்ணபிரானும் அநுமதி செய்யாரென்னுங் கருத்தினால் அக்கினி ஒளித்து வந்து வேண்டினனென்க. காண்டவன் என்பது-இந்திரன் பெயர்களுள் ஒன்றென்று சப்தார்ணவம் என்னும் வட மொழி நிகண்டிற் கூறியிருத்தலால், காண்டவ வனம் என்பதற்கு— இந்திரனது காடு என்று பொருள் கொள்ளலாம்; அது காண்டவ மென வழங்கிற்று. முகம்-வாய். ககனவேந்தன்-இந்திரன். ககனம்-ஆகாசம். இந்திரன் 'மேகவாகனன்' ஆதலின், என்மேல் சப்த மேகங்களையும் ஏவி மழை பொழிவித்து என்னை அவித்து விடுவான் என்பது குறிப்பு. (4)

5. 'நீ வேண்டியபடியே அருந்துக' என்று அநுமதிதர, அக்கினி தேவன் கண்ணனருளால் அருச்சுனனுக்கு வில் முதலியன அளித்தல்.

வேண்டுவதுங் களையிதுவே வேறிலையென்
றலுமவர்கள் விழைந்த வண்ணங்
காண்டவநீ யருந்துகெனக் கனற்கடவுண்
மகிழ்ந்தமலன் கருணை தன்னால்
தூண்டுசிலீ முகம்பொய்யாத் தூணியும்பொன்
ருத்தனுவும் சுவேத மாவும்
தாண்டுகவித் துவசமுறுந் தடந்தேரும்
விசயனுக்குத் தந்தான் மன்னே.

(இ-ள்.) கனற் கடவுள்-அக்கினிதேவன், 'உங்களை வேண்டுவது இதுவே வேறு இலை என்றலும்-உங்களிருவரையும் நான் யாசிப்பது இஃதொன்றுமே வேறெதுவும் இல்லை' என்று கூறியவுடனே, அவர்கள்-அந்தக் கிருஷ்ணார்ச்சுனர்கள், 'நீ விழைந்த வண்ணம் காண்டவம் அருந்துக என-நீ விரும்பியபடியே [உன்

இச்சைப்படியே] காண்டவ வனம் முழுவதையும் உண்டிடுக என்று அநுமதிதர,[அக்கினிதேவன்] மகிழ்ந்து-களிப்புக்கொண்டு, (அப்போது) அமலன் கருணை தன்னால்-கண்ணபிரான் அருளால், தூண்டு சிலீமுகம் பொய்யாத் தூணியும்-எய்கின்ற அம்புகள் (எடுக்க எடுக்கக்) குறையாமல் நிறைகிற (இரண்டு) அம்பறாத் தூணிகளையும், பொன்றாத் தனுவும்-அழிவில்லாத வில்லையும், சுவேத மாவும்-(நான்கு) வெள்ளைக் குதிரைகளையும், தாண்டு கவி துவசம் உறும் தட தேரும்-குதித்துச்செல்லுகின்ற குரங்கினைக் கொடியில் எழுதக் கொண்டு நாட்டப்பட்டுள்ள விசாலமான தேரையும், விசயனுக்கு,-அருச்சுனனுக்கு, தந்தான்-கொடுத் தருளினான்; (எ.று.) மன், ஓ-ஈற்றசை.

சிலீமுகம் - வடசொல்; கூர்மையுள்ள நுனியையுடைய தென்பது பொருள்: அம்பு, பொய்யாத் தூணி-அக்ஷய தூணீரம். அருச்சுனன் வலக்கையினால் மாத்திரமன்றி இடக்கையினாலும் அம்பு தொடுக்கும் திறமுடையனாய்ச் சவ்வியசாசியென்று பேர் பெற்றவனதலால் அதற்கு ஏற்ப இருபுறத்தும் இரண்டு அம் பறாத் தூணிகள் கட்டிக்கொள்வன் என்க. இரண்டு தூணி களைத் தந்தனனென்று முதனூலாசிரியர் வெளிப்படையாகக் கூறியுள்ளார். இங்குக் கொடுக்கப்பட்ட வில், காண்டீபமென்னும் பெயருள்ளது. சுவேத மா-சாதியொருமை; நான்கினையும் காட்டுவது. குரங்கு வடிவமெழுதிய துவசத்தையும் உடையது தேர் என்க. (5)

6. அருச்சுனன் நாணியைத் தெரித்து ஒலியெழுப்ப, அக்னி அவ்வனத்தைச் சூழ்ந்து கொள்ளுதல்.

சாரதியூர்ந் திடவந்தத் தடந்தேர்புக்
கருச்சுனனத் தனுவை வாங்கி
ஆரணியத் துறுமுயிர்க ளயர்த்தண்ட
முகடுமுடைந் தமர ரஞ்ச
நாரியொலி செய்தனனேழ் நாவுடையான்
நரன்சிலையு ளனினக் கையுஞ்
சூரமும்வாழ் கெனவாழ்த்திச் சூழ்ந்துதிசை
வனந்தகிப்பான் றொடங்கி னனல்.

(இ-ள்) அருச்சுனன்—, சாரதி ஊர்ந்திட - பாகன் செலுத்த, அந்தத் தட தேர் புக்கு - அந்த விசாலமான தேரிலே ஏறி, அ தனுவை வாங்கி - அந்தக் காண்டீவம் என்னும் வில்லினை

வளைத்து, - ஆரணியத்து உறும் உயிர்கள் அயர்த்து - காட்டிலே யுள்ள பிராணிகளெல்லாம் சோர்ந்து தளரவும், அண்டமுகடும் உடைந்து - பூமியின் மேல் உச்சிபிளந்துபடவும், அமரர் அஞ்ச - தேவர்கள் பயப்படவும், நாரி ஒலி செய்தனன் - நாணியைக் (கைவிரலால் தெறித்து) ஒலி எழுப்பினன்: (அப்போது) ஏழ் நா உடையான் - ஏழு நாக்குகளைக்கொண்ட அக்கினிதேவன், நரன் சிலையும்-அருச்சுனனுடைய வில்லையும், நளினம் கையும்-[அதனைத் தெறித்த] தாமரைமலர்போன்ற கையையும், சூரமும் - சூரத் தன்மையையும், வாழ்க என வாழ்த்தி - [என்றும் நிலைபெற்று] வாழ்கவென்று கூறி வாழ்த்தி, (பின்னர்) திசை சூழ்ந்து - நான்கு திக்குக்களிலும் வளைந்து, வனம் தகிப்பான் – காண்டவ வனத்தை எரிப்பதற்கு, தொடங்கினன் - ஆரம்பித்தான்; (எ-று). ஆல்-ஈற்றசை.

ஏழு நாவையுடையவன் அக்கினி 'எழுநா' என்று அக்கினிக்கு ஒரு பெயர். அக்கினியினது சுவாலைகளேழும் அவனுக்கு நா எனப்படும். அவை காளி, கராளி, மனோசவை, சுலோகிதை, சுதூம்பரவருணி, புலிங்கினி, விசிவரூபி என்று பெயர் பெறுவன. அயர்த்து, உடைந்து, அஞ்ச என்ற வினையெச்சங்கள் அடுக்கி 'செய்தனன்' என்ற முற்றோடு முடியும். தகிப்பான் - பாலீற்று வினையெச்சம். (6)

7. அவ்வனத்திலுள்ள எல்லாவுயிர்களும் எரிபட்டு அழியும் படி அக்கினி வளர்ந்து தகித்தல்.

உகமுடிவி னுலகமெலா மொருங்கு சுட
வெழுமடங்க லுருவம் போல
அகலண்ட மளவுமெண்டிக் கடங்கலுந்தன்
னுருவைவளர்த் தன்பான் மிக்க
புகலனிலன் வந்துதவி புரியநர
காரணர்கள் புறத்திற் காப்ப
சகலவுயிர் களுமடியத் தழலோனவ்
வனமுழுதுந் தகித்திட் டானே.

(இ-ள்) உகமுடிவில் - யுகாந்தகாலத்தில், உலகம் எலாம்-எல்லா வுலகங்களையும், ஒருங்கு சுட - ஒருசேரத் தகிக்க, எழும் கிளர்ந்து எழுகின்ற, மடங்கல் - ஊழித்தீயின், உருவம் போல-வடிவம் போல, அகல் அண்டம் அளவும் - அகன்ற பூவுலகப்

பரப்பு முழுவதும், எண் திக்கு அடங்கலும் - எட்டுத் திக்குக்கள் முழுவதும், தன் உருவை வளர்த்து - தன்னுடைய வடிவத்தை யோங்கச்செய்து, (அப்போது) அன்பால் மிக்க புகல் அனிலன் வந்து உதவி புரிய - நேசத்தால்மிகுந்த புகழ்பெற்ற வாயுதேவன் சேரவந்து துணைசெய்ய, நரநாரணர்கள் - கிருஷ்ணர்ச்சுனர்கள், புறத்தில் காப்ப-வெளியிடத்தே [யாவரும் இடையூறு செய்யாமல்] பாதுகாப்ப, தழலோன் - அக்கினிதேவன், சகல உயிர்களும் மடிய - எல்லாப் பிராணிகளும் உயிரழிந்து சாகும்படி, அ வனம் முழுதும் தகித்திட்டான் - அந்தக் காண்டவவனம் முழுவதையும் எரித்திட்டான்; (எ-று).

இனி, 'மடங்கல் உருவம் போல' என்பதற்கு - வடவாமுகாக்கினியின் வடிவம்போல என்னவுமாம். வடவாமுகாக்கினியென் பது கடலிடையுள்ளது. கடலிடையிலுள்ளதொரு பெண்குதிரை யின் முகத்தில் ஒரு பெருந்தீ யமைந்துள்ளதென்றும், அது கடல் நீரை மழை முதலியவற்றால் மிகாதபடி உறிஞ்சி நிற்பதென்றும், அத்தீக் கற்பாந்தகாலத்து மேலெழுந்து வெளிப்பட்டு உலகங்களை யெரிப்பதென்றும் நூற்கொள்கை. நெருப்புக்கு நெருங்கிய நண்பன் காற்று. புகல்-சிறப்பித்துப் பேசப்படுகின்ற; எனவே புகழ்பெற்ற என்றபடி. நரன்-அருச்சுனன், நாரணன்-கண்ண பிரான். (7)

வேறு.

8. அக்கினியின் புகை சுவாலைகளின் வருணனை.

குலவு மாரழற் சினத்தொடும் பசியொடுங்
கொண்டருந் திடுந்தூமம்
அலரி யாலுடைந் தவ்வனத் துறுமிருள்
அகன்றுவா னழல்போன்ற
பலம ரங்களி னெரிபடர்ந் தெரிவது
பழுப்புதிர்ந் திளவேனில்
உலவை தோறுமொண் டழல்நிறத் தளிர்களை
யுயிர்த்திலங் குவபோன்ற.

(இ-ள்) குலவும் ஆர் அழல்-விளங்குகின்ற பெரு நெருப் பானது, சினத்தொடும் பசியொடும் கொண்டு-கோபத்தோடும் [மிக்க] பசியோடும் இருந்து, அருந்திடும்-எரித்து உண்பதனா லான, தூமம்-புகைகளானவை, அலரியால் உடைந்து-சூரியனால்

சிதறி, அ வனத்து உறும் இருள் அகன்று-அந்தக் காண்டவ வனத்துப்பொருந்தியிருந்த இருட்டு நீங்கி, வான் அழல் போன்ற-ஆகாச நெருப்புப் போலத் தோற்றமளித்தன; [இ ·.து இங்ஙனுக] பல மரங்களின் எரி படர்ந்து எரிவது-பல மரங்களிலும் நெருப்புப் பற்றிப் பரவி எரியும் சுவாலைகளானவை, பழுப்பு உதிர்த்து - (பின்பனிக் காலத்தில்) சருகுகள் உதிர்ந்து போக' (அடுத்து வந்த) இளவேனில்-வசந்த காலம், அழல் நிறத் தளிர் கனை-நெருப்புப் போல் செந்நிறம் வாய்ந்த (புதிய) தளிர்கனை, உலவைதொறும்-மரக் கொம்புகள்தோறும், மொண்டு-அள்ளி' உயிர்ந்து - வெடிக்கச் செய்து தோற்றுவிக்க. [அச்செந்தளிர்கள்] இலங்குவ போன்ற–விளங்குவ போன்றன; (எ று.)

முன்னிரண்டடிகளில் அக்கினிப்புகையின் வருணனையும் பின்னிரண்டடிகளில் அக்கினிச் சுவாலையின் வருணனையும் குறித்தபடி. 'தூமம் வானமழல் போன்ற' என்றும், 'எரிபடர்ந்தெரிவது அழல் நிறத்தளிர்கனை யுயிர்த்திலங்குவபோன்ற' என்றும் இயையும். தூமம்போன்ற, எரிவதுபோன்ற-ஒருமைப் பன்மை மயக்கம். தூமம்-புகை; எரிவது-அக்கினிச்சுவாலை. அலரி-சூரியன். அகன்று-அகல என எச்சத்திரிபு. 'புகை அழல்போன்ற' என்றது-புகையினிடையிடையே சிறிது ஒளியோடுகூடிய நெருப்புக்கதிர்கள் தோன்றுதலால் என்க. மரங்கள் பற்றியெரியும் போது தோன்றுகின்ற அக்கினிச்சுவாலைகள்-சருகுகளெல்லாம் உதிர்ந்து மரக்கொம்புகளில் வெடிக்கப்பெற்ற புதிய செந்தளிர் போல் இலங்கின என்றார். தன்மைத்தற்குறிப்பேற்றவணி; நிறமும் வடிவும் பற்றியது.

இது முதல் ஐந்து கவிகள்-மூதற்சீர் மாச்சிரும் ஈற்றுச்சீர் காய்ச்சிரும், மற்றவை விளச்சீர்களுமாகிவந்த அறுசீராசிரிய விருத்தங்கள். (8)

9. அவ்வனத்திலுள்ள பலவகை விலங்குகளும் பறவைகளும் எரிபட்டு அழிதல்.

மடங்கல் யாளிவா ரணம்பீணை புலிமரை
வனகிடி முதன்மாக்கள்
அடங்க லும்புய லிடியென விரைத்திரைத்
தாசைநான் கினுமோடி
இடங்கி டைத்திடா தழலிடை யிறந்தன
வெழுந்துவான் மிசைவிட்ட
படங்கள் போற்செலும் புட்களு மிறந்தன
பற்குன னுலம்மா.

(இ.ள்) மடங்கல்-சிங்கம், யாளி-யாளியானை, வாரணம்-யானை, பிணை-மான், புலி-புலி, மரை-மரைமான், வனகிடி-காட்டுப் பன்றி, முதல்-முதலிய, மாக்கள்-பிராணிகள், அடங்கலும்-முழுவதும், புயல் இடி என இரைத்து இரைத்து-மேகத்தின் இடி முழக்கம்போலப் பேரொலி பலபடச்செய்து, ஆசை நான்கினும் ஓடி-நான்கு திக்குக்களிலும் ஓடி, இடம் கிடைத்திடாது-தப்பியுய்யப் புகலிடம் இல்லாமல், அழலிடை இறந்தன-நெருப்பிலே வெந்து அழிந்தன; (மற்றும்) வான் மிசை விட்ட படங்கள் போல்-ஆகாயத்தில் பறக்கவிட்ட காற்றாடிகள்போல, எழுந்து செலும் புட்களும்-மேலெழுந்து பறந்து செல்லும் பறவைகளும், பற்குனனுல்-அருச்சுனன் [விடுத்த] அம்புகளால், இறந்தன-[அடிபட்டு நெருப்பில் வீழ்ந்து] மரிந்தன; (எ.று.)

மடங்கல்-சிங்கம்: பிடரிமயிர் மடங்கியிருப்பது என்ற காரணம்பற்றிவந்த பெயர். யாளி-யானையின் தந்தமும் துதிக்கையும் சிங்கத்தின் முகமுமுடையதாகக் கருதப்படும் மிருகம்: யாளியானை என்பதுமுண்டு. கிடி-பன்றி. இரைத்திரைத்து-அடுக்கு பன்மை பற்றியது. ஆசை-திசை: 'ஆசா' என்ற வடசொல் 'ஆசை' என ஆயிற்று: ஆவீறு ஐயான வடசொல், படம்-காற்றாடி, "மணிப் பொலம் பூட்சிறூர் விடுக்கும் வான்படம்" (காஞ்சிப்புரா: நகர. 98). முதலடியில் உம்மைத்தொகை. நான்கினும், உம்மை-முற்றும்மை. படங்கள் போற்செலும்புட்கள்-உவமையணி. (9)

10. காண்டவ வனத்தில் தீப்பற்றிய செய்தியை இந்திரன் அறிந்து எழுதல்.

மழையெ னப்புகும் புகையினிற் பொன்னெனு
மாநகர் கரிந்தோங்குங்
கழைவெ டித்தலிற் செவிடுபட் டழற்பொறி
கதுவலி னுடல்வெந்தின்
றுழையி டத்தவ னம்புர மெரிப்பதோ
யுகமுடி வோவென்னு
குழைய டுத்தகட் புலோமசை நாயகன்
குலகுலங் தெழுந்தானே.

(இ-ள்) மழை எனப்புகும் புகையினில்-மேகமென்று சொல்லும்படி கவிந்துபுகுகின்ற புகையினுல், பொன் எனும் மாநகர் கரிந்து-அமராவதியென்கின்ற சிறந்த [இந்திர] நகரம் கரிந்து போய், ஓங்கும் கழை வெடித்தலின்-உயர்ந்து வளர்ந்த மூங்கில்

கள் [நெருப்பினால் சுடப்பட்டு] வெடித்தலாலே, செவிடுபட்டு-(அதனாலுண்டாகின்ற ஒலிகேட்டுக்) காதுகள் செவிடாகி, அழல் பொறி கதுவலின் உடல் வெந்து - நெருப்புப்பொறி பற்றுதலாலே தேகம் வெந்துபோய், - 'இன்று - இன்றையதினம், உமை யிடத்த வன் - மானை இடக்கையிலேந்திய பரமசிவன், நம் புரம் எரிப் பதோ – நமது பட்டணத்தை [த்திரிபுரம் எரித்ததுபோலே] எரிக் கின்றானே (அல்லது) யுகமுடிவோ – யுகாந்தகாலத்தீயோ', என்னு' என்று சங்கித்து, குமை யடுத்த கண் புலோமசை நாயகன்-காதணியை நெருங்கும்படி நீண்ட கண்களையுடைய இந்திராணி யின் கணவனாகிய இந்திரன், குலுகுலுங்கு எழுந்தான் - நடுநடுங்கி இருக்கையைவிட்டு எழுந்தான்; (எ-று).

புகையினிற் பொன் கருகியது என்றது நயம்: பிறிதின் குணம் பெறலணி. மூங்கில்களைத் தீப்பற்றியெரித்தலால் அவை வெடிக் கையிலுண்டான கடிய ஓசையைக்கேட்டு இந்திரன் காதுகள் செவிடாயின என்றார்: உயர்வுநவிற்சியணி, உமையிடத்தவன்-மான்போன்ற பார்வதியை இடப்பாகத்துடையவன் என்று கூறிப் பரமசிவனுக்காக்கலுமாம், யுகமுடிவில் ஊழித்தீ உல கனைத்தையும் அழிக்கும் என்ப. குமையடுத்தகண்-காதளவோடிய கண். மகளிர்க்குக் கண் நீண்டிருத்தல் அழகு. புலோமசை-இந்திராணி. புலோமஜா என்ற வடசொல் – புலோமனென்ற அசுரனிடத்தினின்று பிறந்தவளென்று பொருள்படும்: இது இந்திராணியின் பெயராகும். குலுகுலுங்கு-இரட்டைக்கிளவி. (10)

11. காண்டவவனம் எரிதலால் இந்திரன் கண்ணுற்று மேகங்கள் ஏழினையும் ஏவித் தீயையவிக்கும்படி ஆணையிடல்.

எழுந்தி ருந்தயி ராவத மிசைபுகுந்
திறுதியின் றெனவூக்க
மழிந்த தேவரை யாதரித் தவரொடும்
அடைந்துகாண் டவக்கானங்
கொழுந்து விட்டழ லாடிநின் றருந்திய
கொள்கைகண் டுளமாற்றா
பொழிந்த வித்திடு மெனமுகி லேழையும்
போக்கினன் புருகூதன்.

(இ-ள்.) புருகூதன்-இந்திரன், எழுந்திருந்து-இருக்கையை விட்டெழுந்து, அயிராவதம் மிசை புகுந்து-ஐராவத யானையின் மேலேறி,-'இன்று இறுதி' என ஊக்கம் அழிந்த தேவரை-'இன் றைக்கு யுகமுடிவு' என்று கவலைகொண்டு வலியிழந்த தேவர்

கனை, ஆதரித்து - அன்புசெய்து, அவரொடும் அடைந்து - அவர் களோடும் வந்து, - காண்டவக்கானம் - (தனது) காண்டவவனம், அழல் கொழுந்துவிட்டு ஆடிநின்று அருந்திய கொள்கை கண்டு- அக்கினி கொழுந்துவிட்டு எரிந்துதகித்துநின்று (மூற்றிலும்) உண்டு அழித்த நிலைமையினைப் பார்த்து, உளம் ஆற்ரு - மனம் பொருமல், முகில் ஏழையும் [ஏழ் முகிலையும்]-சப்த மேகங்களையும், 'பொழிந்து அவித்திடும்' - 'நீங்கள் பெருமழைபொழிந்து அத் தீயைத் தணியச்செய்வீர்' என-என்று ஆணையிட்டு, போக்கினன்- விடுத்தான்; (எ-று)

புருகூதன் - இந்திரன்: யாகத்தில் மிகுதியாக அழைக்கப் படுபவனென அவயவப்பொருள்படும். ஆற்ரு - ஆற்ரது: ஈறு கெட்ட எதிர்மறை வினையெச்சம். அவித்திடும்-முன்னிலைப்பன்மை வினைமுற்று: உம் - விகுதி. முகில்ஏழு - சத்தமேகம்: சம்வர்த்தம், ஆவர்த்தம், புட்கலாவர்த்தம், சங்காரித்தம், துரோணம், காள முகி, நீலவருணம் என்ற ஏழுமேகங்கள். (11)

12. கிருஷ்ணர்ச்சுனர் காண்டவவனத்தை யெரிப்பித்தலை இந்திரன் பார்த்துச்சினந்து தேவர் படையை யேவுதல்.

அறத்தி னுக்கிடர் வினைத்திடு மரக்கரோ
டாருயி ரொன்றேனும்
புறத்தி னிற்செலா தடவியை யிரதமேற்
புகுந்துசூழ் வருமேக
நிறத்தின் மைந்தனை டனுசனைப் பார்த்துதன்
நெஞ்சழன் ரூரூத
மறத்தி னைடமர் செய்மினென் றவர்மிசை
வானவர் தமையுய்த்தான்.

(இ-ள்) அறத்தினுக்கு இடர் வினைத்திடும் - தருமத்திற்கு இடையூறு செய்யும், அரக்கரோடு - இராக்கதர்களோடு (மட்டு மன்றி), ஆருயிர் ஒன்றேனும் புறத்தினில் செல்லாது - அரியவுயிர் ஒன்றுகூடத்தப்பி வெளியினிலே போகாதபடி, இரதம் மேல் புகுந்து - [அக்கினிதேவன் கொடுத்த] தேரின்மேலேறிப் புகுந்து, அடவியை சூழ்வரும் மேகநிறத்தின் மைந்தனைடு - காண்டவ வனத்தைச் சுற்றிச்சுற்றிவரும் கரியநிறத்தையுடைய குமார னாகிய அருச்சுனனைடு, அனுசனை - தன் தம்பி உபேந்திரனாகிய கண்ணனையும், பார்த்து - கண்ணுற்று, தன் நெஞ்சு அழன்று-

தன் மனத்திற் கோபங்கொண்டு, "ஆரூத மறத்திலேடு அமர் செய்மின் - தணியாத வீரத்தோடு போர்செய்யுங்கள்", என்று - என்று கட்டளையிட்டு, வானவர்தமை - தேவர்களை[ப் படையோடு செல்ல], அவர்மிசை உய்த்தான் - அவ்விருவர்மேலும் செலுத்தினன்; (எ-று).

எப்புறத்திலும் எவரும் அவ்வக்கினிக்கு இடையூறு செய்யாதிருத்தற்பொருட்டும், அவ்வனத்திலுள்ள பிராணிகள் தப்பியோடி வெளிச்செல்லாதபடி தவிர்த்தற்குமாக இருவரும் இங்ஙனம் குறிக்கொண்டு சூழ்வருவாராயினர். அனுசன் – தம்பி: இந்திரனுக்குத் தம்பி உபேந்திரன்: அவன் கண்ணபிரானைத் திருவவதரித்தான் என்பது ஈண்டு அறியவேண்டுவது, செய்மின் - முன்னிலையேவல் வினைமுற்று, மிசை - ஏழனுருபு. (12)

வேறு.

13. மேகங்கள் செருக்கி மழைபொழிந்தும் கனலை அவிக்க மாட்டாமை.

ஏழுமே கமும்போந் தெழுபெருங் கடலு
ளிருந்தநீ ரருந்திவான் புகுந்திங்
காழியா னடுக்க லெடுக்கினு நரனம்
படுக்கினு மவிக்குது மெனவார்த்
தூழியிற் பொழிவ போன்மழை பொழிந்த
துதாசனன் சொரிந்ததா ரைகளாற்
றுழுநா வேழு நனைத்தனன் முகந்
தணிந்திலன் பொழிமினென் றெதிர்ந்தான்.

(இ-ள்) ஏழுமேகமும் போந்து - சப்தமேகங்களும் வந்து, எழு பெருங்கடலுள் இருந்த நீர் அருந்தி - ஏழுபெருங்கடலினுள்ளும் இருந்த நீரைப்பருகி, வான் புகுந்து - ஆகாயத்திடத்தே சென்று, 'இங்கு - இப்போது இவ்விடத்து, ஆழியான் அடுக்கல் எடுக்கினும் - கிருஷ்ணன் [முன்பு கோவர்த்தனமலையையெடுத்தது போல] மலையையெடுத்து(க் குடையாகப்பிடித்து)த் தடுத்தாலும், நரன் அம்பு அடுக்கினும் - அருச்சுனன் அம்புகளைத் தொடர்ச்சியாகத் தொடுத்துத் தடுத்தாலும், அவிக்குதும் - (தடுக்கமாட்டாதபடி முனைந்து) அக்னியைத் தணித்துவிடுவோம்', என - என்று, ஆர்த்து - [இடிபடப்] பேரொலிசெய்து, ஊழியில் பொழிவ போல் – யுகாந்தகாலத்தில் [பேரளவுபடப்] பொழிவதுபோல்,

மழை பொழிந்தது - மழையைப் [பேரளவில்] சொரிந்தது; (அப்போது) உதாசனன் – அக்கினி, சொரிந்த தாரைகளால்- பொழிந்த மழைத்தாரைகளால், தாழும் நா ஏழு நனைத்தனன்– (வறண்டதால்) தொங்கிப்போன (தனது) நாக்குகளையும் ஈரமாக்கினன்: தாகம் தணிந்திலன் - தாகம் முற்றும் தணியவில்லை; (ஆதலின்) பொழிமின் என்று எதிர்ந்தான்-'நன்கு பொழியுங்கள்' என்று கூறி எதிரிட்டான்; (எ-று).

எழுபெருங்கடல் - உப்புக்கடல், கருப்பஞ்சாற்றுக் கடல். கட்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், நன்னீர்க்கடல் உதாசனன் = ஹுதாசநன்: இந்தப்பெயர் ஹுத + அசந என்று பிரிந்து, (தன்பக்கல்) ஹோமஞ்செய்யப்பட்ட பொருளை உணவாகக்கொள்பவனென்று பொருள்படும். போந்து, அருக்கி, புகுந்து என்ற வினையெச்சங்கள் அடுக்கி 'அவிக்குதும்' என்ற வினைமுற்றைக்கொண்டு முடிந்தன, ஏழுமேகம்-சாதியொருமை; எனவே, 'பொழிந்தது' என்ற ஒருமைமுற்றைக்கொண்டுவந்தது. இனி, பன்மையொருமைமயக்கம் என்பாருமுளர்.

இதுமுதல் இச்சருக்கம் முடியுமளவும் பெரும்பாலும் இரண்டு நான்கு ஏழாஞ்சீர்கள் மாச்சீர்களும், மற்றை நான்கும் விளச்சீர்களுமாகிய கழிநெடிலடிநான்குகொண்ட எழுசீராசிரியவிருத்தங்கள். (13)

14. அருச்சுனன் அம்பெய்து மழையைத் தடுத்துச் சரக்கூடங் கட்ட, அதன்வருணனை.

பொழிமழை யதனை னனைந்திடு வதன்முன்
பொங்கழ றனக்கருச் சுனன்வான்
முழுவதுஞ் சரத்தா லினைத்தொரு கவிகை
முடிமிசை கொடுத்தன னதைச்சூழ்ந்
தொழுகுநீர் தரளத் தொங்கல்போன் றனவுள்
ளோங்கழற் காம்புபோன் றனவப்
பழுவமுள் ளுறுந்தக் ககனெனு நண்பன்
படுவனென் றிரங்கினன் மகவான்.

(இ-ள்) பொழி மழையதனை னனைந்திடுவதன் முன் - பொழிகின்ற மழையினாலே நன்கு நனைந்துபோவதற்கு முன்னே, பொங்கு அழல்தனக்கு - கிளர்ந்தெரிகின்ற அக்கினிக்கு, அருச்

சுனன் —, வான் முழுவதும் சரத்தால் இணைத்து - ஆகாய [முகடு] முழுவதையும் அம்புகளின் பரப்பினால் சேர்த்து, கவிகை - குடை யொன்றை, முடிமிசை கொடுத்தனன் - தலைக்குமேல் தாங்குமாறு கொடுத்தான்: அதைச்சூழ்ந்து ஒழுகு நீர் - அந்தச் சரக்கூட மாகிய குடையைச்சுற்றி [ஒரத்தில்] ஒழுகுகின்ற மழைநீரருவிகள், தரளம் தொங்கல் போன்றன - முத்துமாலைகளைத் தொங்கவிட் டாற் போன்றிருந்தன; உள் ஒங்கு அழல் – சரக்கூடத்திற் குள்ளே உயர்ந்தெழுகின்ற அக்னிச்சுவாலைகள், காம்பு போன்றன - அக்குடையின் காம்புகளைப்போன்றிருந்தன; அ பழுவம் உள் உறும் தக்ககன் எனும் நண்பன் - அந்தக்காட்டுக்குள் அகப் பட்டிருக்கும் தக்ஷகனென்னும் சிநேகிதன், படுவன் என்று - இறந்துபடுவனே என்று, மகவான் - இந்திரன், இரங்கினன் - வருந்தினன்; (எ–று).

அந்த அக்னியின்மேல் மழைத்துளிசிறிதும் விழாதபடி அம்பு களை யடர்த்தியாகத் தொடுத்துச் சரக்கூடங்கட்டினன் அருச் சுனன். அக்கினிக்குமுடி–சுடர்க்கொழுந்து. கவிகை – கவிந்திருப் பது எனக் குடைக்குக் காரணக்குறி. கவிகைபோற் சரக் கூடத்தை அருச்சுனன் கட்டியதனால் இடையே நீர் சிறிதும் விழாமல் சுற்றிலும் நீர்விழுவது, அருச்சுனன் அக்கினிதேவனுக்கு அளித்த சரக்கூடமாகிய கவிகைக்கு முத்துத்தொடையல்போன் றிருந்ததென்க: தன்மைத்தற்குறிப்பேற்றவணி. [குடையின்சுற்றிலும் தொங்குகின்ற சரங்கள் ஜாலரென்று உலகில் வழங்கப்படும்.] பூமியிலிருந்து பார்ப்பவர்க்குச் சரக்கூடம்வரையும் தாவியெரியும் சுவாலைகள் - சரக்கூடமே ஒரு குடையாக, அந்தக் குடையின் [செங்நிறக்] காம்புகளைப்போன்றிருந்தன: தற்குறிப்பேற்றவணி. தக்ககன் - தக்ஷகன் என்னும் நாகராசன். (14)

15. தட்சகன் மனைவியை அருச்சுனன் அம்பெய்து வீழ்த்துதல்.

கூடிவிண் ணவரத் தக்ககன் றனையக்
கொடுங்கணை மண்டபஞ் சுற்றித்
தேடியெங் கணுங்கூய்த் திரிதொறு மவன்றன்
தேவிதன் மகவினை வீழுங்கி
நாடியந் தரமீ தெழலுமோ ரம்பால்
நரனவ டலையையு மகவின்
நீடிய வாலுந் துணித்தனன் மகவான்
நேயனந் தனையனை தரித்தான்.

(இ-ள்). விண்ணவர் கூடி-தேவர்கள் ஒன்றுகூடி, அ தக்ககன் தனை-அந்தத் தக்ஷகனென்னும் நாகராசனை, அ கொடுங்கனை மண்டபம் சுற்றித் தேடி-வளைந்த அம்புகளைக் கொண்டாக்கிய அந்தச் சரக்கூடத்தைச் சூழ்ந்து வந்து தேடி, எங்கணும் கூய்த் திரிதொறும்-எல்லாவிடங்களிலும் [அவனைக்] கூவியழைத்துத் திரியும்போது, அவன் தன் தேவி-அந்தத் தக்ஷகனுடைய மனைவி யாகிய பெண் பாம்பு, தன் மகவினை விழுங்கி-தன் குட்டியாகிய [அசுவசேனனென்னும்] சிறு நாகத்தை வாயினுட்கொண்டு, நாடி-ஆராய்ந்து பார்த்து, அந்தரம் மீது எழலும்-(தப்பியுய்ய) வானத்தின்மீது பறந்தெழுந்தவளவில், ஓர் அம்பால்-ஒரு அம்பைக் கொண்டு, நரன்-அருச்சுனன், அவள் தலையையும்-அந்தப் பெண் பாம்பின் தலையினையும், மகவின் நீடிய வாலும்-குட்டியினது நீண்ட வாலினையும், துணித்தனன்-துண்டித்தனன்: (அதுகண்டு) மக வான்— இந்திரன், (அப்போது) நேயன் அம் தனையன்-தனது சிநேகிதனுகிய தக்ஷகனின் அழகிய மகனுகிய அசுவசேனனை, ஆதரித்தான்-காப்பாற்றினன்; (எ-று).

அருச்சுனன் அம்பினால் துணித்து வீழ்த்தியபோது அந்தத் தக்ஷகன் மனைவியாகிய நாகமாதின் தலையும் உடலும் வேருகித் தலை அக்கினிக்கு வெளியிலும் உடல் அக்கினிக்கு உள்ளுமாக விழுந்ததனால் தாய் இறக்க, அதன் வாயிலுள்ள மகன் மாத்திரம் வால் துணிப்புண்டவளவோடு பிழைத்தனனென்று அறிக. இந்திரன் ஆதரித்ததால் அந்த மகன் பிழைத்த வகையினை அடுத்த செய்யுளால் அறிக. (15)

16 அசுவசேனன் அஸ்திரமாய்க் கர்ணனை யடைதல்.

அப்பெருந் தழலில் வருணவத் திரம்விட்
டமரர்கோன் அணைத்தெடுத் தளிப்ப
தப்பிய வுரக வச்சுவ சேனன்
தனஞ்செயற் கியார்பகை யெனவாய்ந்
தொப்பிலங் கேச னென்றுணர்ந் தவன்பால்
உற்றெனைப் பகழியாய் நரன்மேல்
உய்ப்பையென் றடைந்தே னெனவவ னழைத்தவ்
வுரகனை யிருத்தியா தரி தான்.

(இ-ள்.) அமரர்கோன்-தேவேந்திரன், அ பெருந்தழலில்-அந்தப் பெரிய தீயில், வருண அத்திரம் விட்டு-வாருணாஸ்திரத்

தைப் பிரயோகித்து, அணைத்து-(அதனைப் பற்றிய தீயைத்) தணித்து, எடுத்து-(கையில்) எடுத்து, அளிப்ப-காப்பாற்ற, தப்பிய உரகம் அச்சுவசேனன்-உயிர் பிழைத்த சிறு நாகமாகிய அசுவசேனன், தனஞ்செயற்கு யார் பகை என ஆய்ந்து-அருச்சுனனுக்குப் பகையுள்ளவர் யாரென்று [பலரையும் விசாரித்து] ஆராய்ந்து, ஒப்பு இல்-நிகரற்ற, அங்கேசன்-அங்கதேசாதிபதியாகிய கர்ணன், என்று உணர்ந்து-என்று அறிந்து, அவன்பால்-அக் கர்ணனிடத்து, உற்று-சேர்ந்து, 'எனைப் பகழியாய் நரன்மேல் உய்ப்பையென்று அடைந்தேன்' என-என்னை அத்திரமாய்க் கொண்டு அருச்சுனன்மேல் செலுத்துவாய் என்று நினைந்து உன்னை (ச்சரண்) அடைந்தேன்' என்று கூற, அவன்-அந்தக் கர்ணன், அவ் உரகனை அழைத்து-அந்த நாகப் பாம்பினைத் தன்னிடம் வரும்படியைழத்து, இருத்தி - தன்னிடமே யிருக்கும் படி நிறுத்தி, ஆதரித்தான்-காப்பாற்றி வந்தான்; (எ-று).

வருணன் நீருக்குக் கடவுளாதலின், அவனது அத்திரம் அக்னியை அணைத்து விடுமாதலின், அந்த வாருணாஸ்திரத்தைப் பிரயோகித்துக் காப்பாற்றினன் என்றார். பாண்டவர்களும் துரியோதனாதியர்களும் துரோணாசாரியரிடத்தில் கற்றுத் தேர்ந்த பின்பு தம் தம் திறங்காட்டியபோது கர்ணன் தான் இடையிற் பிரவேசித்துத் தன் திறங்காட்டி அருச்சுனனோடு மாறுபட்டு "கார்முகப் போர் செய்தும் வா" என்று கூறி வன்னியென்ன வெகுளலும், வலாரிசூனும் 'அமரில் நின் சென்னிகொண்டு அரங்கபூசை செய்வலென்று சிறிச் சபதங் கூறியுள்ளானாதலால், அவன் கர்ணனுக்குப் பகையென்பது பிரசித்தம். அங்க+ஈசன் = அங்கேசன்: குணசந்தி. உய்ப்பை-வியங்கோள். (16)

17. இந்திரன் அங்குத் தக்ஷகனைக் காணுமல் அருச்சுனன் மீது கோபித்துப் போர்க்கெழ, மற்றை முப்பத்து முக்கோடி தேவரும் கூட எழுதல்.

தக்ககன் மகவைக் கண்டளித் ததற்பின்
தக்ககன் றன்னைக்காண் கிலனுய்
மிக்கதுன் பெய்தும் வாசவன் விசயன்
விடுங்கணைக் குடைந்தெழு முகிலுந்
தொக்கவிண் ணவரு மிரிதல்கண் டுள்ளஞ்
சுடச்சுட மிகவெகுண் டவன்மேல்
புக்கெதிர்ந் தனன்முப் பத்துமுக் கோடி
புலவருந் தனித்தனிப் பொரவே.

(இ-ள்.) தக்கசன் மகவை-தக்ஷகன் குமாரனுகிய அசுவ சேனனை, கண்டு அளித்ததற்பின்-கண்டெடுத்துப் பாதுகாத்த பின்பு, தக்ககன் தன்னைக் காண்கிலனுய்- [தன் நண்பனுகிய] தக்ஷக னைக் காண வியலாதவனுய், மிக்க துன்பு எய்தும் வாசவன்-மிகுந்த துன்பத்தை யடைந்த இந்திரன்,—விசயன் விடும் கணைக்கு-அருச்சுனன் செலுத்துகின்ற அம்புகட்கு, உடைந்து-தோற்று, எழு முகிலும்-ஏழுமேகங்களும், தொக்க விண்ணவரும்-தொகுதிப்படக் குழுமிய தேவர்களும், இரிதல் கண்டு-(புறங் காட்டி) ஓடுதலைக்கண்டு, உள்ளம் சுடச்சுட மிக வெகுண்டு-(தனது) மனம் கொதிப்படைய மிகவும் கோபித்து, அவன்மேல்-அந்த அருச்சுனன் மேல், முப்பத்து முக்கோடி புலவரும் தனித் தனி பொரவே-முப்பத்து மூன்றுகோடி தேவர்களும் தனித்தனி யாக எதிர்த்து நின்று போரிடும்படி செய்து, புக்கு-தானும் (போரில்) பிரவேசித்து, எதிர்ந்தனன்-எதிரிட்டான்; (எ.று).

தான் பெற்ற சிறந்த புதல்வனுகிய அருச்சுனன் மீது கோபிக் கும்படி இந்திரனுக்குத் தக்ஷகனிடம் இருந்த நண்பின் சிறப்பு, இதனில் விளங்கும். சுடச்சுட – அடுக்கு மிகுதி பற்றியது. [குறிப்பு:—முப்பத்து மூன்றுகோடி தேவர்களுக்கும் தலைமையாய் நின்ற முப்பத்து மூன்று தேவர்களில் இருவர் தவிர மற்றையோர் பொருது தோற்றோடியதை மேலைக் கவியிற் கூறுவர்]. (17)

18. முப்பத்து மூன்று தலைமைத் தேவர்களில் இருவரொழிய மற்றையோர் வந்து பொருது தோற்றோடுதல்.

வருகதி ரொழியப் பன்னெரு கதிரும்
வகுக்குமத் தொகையுருத் திரரும்
விரதபூ டணனை யொழியெழு வசுவும்
விளங்கிரு மருத்துவர் தாமும்
பொருதிழந் தேறு மூர்தியும் படையும்
போயருச் சுனன்சரத் துடலங்
குருதிகொப் பளிப்பக் குலகுலந் துளம்வெந்
கொடுத்திரிந் தனருயிர் விழைந்தே.

(இ-ள்) வருகதிர் ஒழிய - (அந்த மாதத்திற்கு உரியனுய்) வருகின்ற சூரியனைத்தவிர, பன்னெரு கதிரும் - மற்றைப்பதினெரு ஆதித்தர்களும், அத் தொகை வகுக்கும் உருத்திரரும்-அங்ஙனமே தொகுதிப்பட எண்ணும் ஏகாதசருத்திரரும், [பதினெரு உருத்திர

ரும் என்றபடி], விரதபூடணனே ஒழி - பிரமசரிய விரதம்பூண்ட வீடுமனைத்தவிர்த்த, எழு வசுவும் - வசுக்கள் எழுவரும், விளங்கு இரு மருத்துவர்தாமும் - [புகழொடு] விளங்குகின்ற அசுவினி தேவர் இருவரும், பொருது - (அருச்சுனனோடு) போரிட்டு, இழந்து - தோல்வியுற்று, ஏறும் ஊர்தியும் படையும் போய் - தாங்கள் ஏறிவந்த வாகனங்களும் [கையிற்பிடித்த] ஆயுதங்களும் அழிந்துபோக, அருச்சுனன் சரத்து - அருச்சுனன் விடுத்த அம்புகளால், உடலம் குருதி கொப்பளிப்ப – உடம்பிலே இரத்தம் பெருகிச்சொரிய, உளம் குலைகுலைந்து - மனம் நடுநடுங்கி, உயிர் விழைந்து - தங்கள் தங்களது உயிரை [க் காப்பாற்றிக்கொள்ள] விரும்பி] வெங் கொடுத்து இரிந்தனர் - முதுகுகொடுத்து ஓடிப் போயினர்; (எ-று),

வருகதிர் - அந்த மாதத்திற்கு உரிய சூரியன்: பன்னெரு கதிர் - மற்றைப் பதினெரு மாதங்கட்கும் உரிய சூரியர்கள். எனவே துவாதசாதித்தியரில் ஒருவர் நீங்கலாக ஏனைய பதினெருவர். துவாதசாதித்தியராவார்:— இந்திரன், தாதா, பர்ஜந்யன், த்வஷ்டா, பூஷா, அரியமா, பகன், விவஸ்வான், விஷ்ணு, அம்சுமான், வருணன், மித்ரன் என்னும் பெயரினர். பன்னெரு = பதினெரு: மரூஉ. பதினெரு உருத்திரர்கள் [ஏகாதசருத்திரர்] ஆவார்-மாதேவன், சிவன், உருத்திரன், சங்கரன், நீலலோகிதன், ஈசானன், விசயன், வீமதேவன், பவோற்பவன், கபாலி, சௌமியன் என்னும் பெயரினர். விரதபூடணன் - வீடுமன்: பிரபாசன் என்ற வசு இவனுவன். எனவே அட்டவசுக்களில், இவனை யொழிந்த எழுவர். ஆக, ஆதித்தர் பதினெருவரும், உருத்திரர் பதினெருவரும், வசுக்கள் எழுவரும் அசுவினி தேவர் இருவரும் சேர்ந்த முப்பத்தொரு தலைமைத் தேவர்களும் போரில் புறங் கொடுத்து ஓடினர் என்பது பெறவைக்கப்பட்டது. ஆதித்தியர்க்கான ஊர்தி - பச்சைநிறக் குதிரை ஏழும் ஒற்றைத்தனியாழித் தேரும்: அவர்க்கானபடை - கூரிய கதிர்கள், உருத்திரர்க்கான ஊர்தி-ஏறுகள் [எருதுகள்]: அவர்க்கான படை-மழுவும் சூலமும். வசுக்களுக்கான படை-புயவலிமை. குலைகுலைந்து - இரட்டைக் கிளவி. வெங் - முதுகு. (18)

19. திக்பாலகர்கள் போர்செய்ய மாட்டாமை.

மண்டழ லழலோ டயிக்கிய மானன்
வாயுவு மவற்குநண் பானன்
சண்டனவ் வனத்தின் மடியுயிர் கணக்கிற்
சஞ்சல மெய்தினன் வருணன்
தெண்டிரைக் கடல்கள் வறத்தல்கண் டழிந்தான்
திறலுடை நிருதியு மதியுந்
துண்டவெண் பிறைவேய்ந் தவனுமிங் கிவர்நேர்
தொடங்கல்போ ரரிதென மீண்டார்.

(இ-ள்). மண்டு அழல்-மூண்டெழுகின்ற அக்கினி தேவன், அழலோடு அயிக்கியம் ஆனன்-(அவ்வனத்தை யெரிக்கிற) அக்கினி யோடு சேர்ந்து கலந்தான்: வாயுவும்-வாயுதேவனும், அவற்கு நண்பு ஆனன்-(வனத்தை யெரிக்கிற) அந்த அக்கினிக்குத் துணை யாய் விட்டான்: சண்டன்-யமனும், அவ்வனத்தில்-அந்தக் காண்டவ வனத்தில், மடி உயிர் கணக்கில்-மிகுதியாக அழிகிற சிவராசிகளைக் கணக்கிடுதலிலேயே, சஞ்சலம் எய்தினன்-மனக் கவலைமிக்கவனானன்: வருணன்-வருணனும், தென் திரைக்கடல் கள் வறத்தல் கண்டு அழிந்தான்-(எழுவகை மேகங்களும் ஒருங்கு முகந்து கொள்ளுதலால்) தெளிந்த அலைகளைக்கொண்ட கடல் களெல்லாம் வற்றுதலைக் கண்டு மனமழிந்தான்: திறலுடை நிருதியும்-வலிமையை யுடைய நிருருதியும், மதியும்-குபேரனும், துண்ட வெண்பிறை வேய்ந்தவனும்-வெண்மையான பிறைச் சந்திரனை (முடியிற்) பூண்டவனாகிய சிவனும், இங்கு-இப்பொழுது [இவ்விடத்தில்], இவர் நேர்–இந்தக் கிருஷ்ணர்ச்சுனர்களுக்கு நேரெதிராக, போர் தொடங்கல் அரிது என-போரினைச் செய்ய ஆரம்பித்தல் இயலாதது என்று (கைவாங்கி), மீண்டார்-தம்தம் இடங்களுக்குத் திரும்பிப் போனார்கள்; (எ-று).

திக்குப் பாலகர் எழுவருடைய நிலைமையை இச்செய்யுளிற் கூறுகின்றார். [இந்திரன் கிழக்குத் திக்குப் பாலகன் என்பது நினைக]. இந்திரன், அக்கினி, யமன், நிருருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்னும் எண்மரும் அஷ்டதிக் பாலகர்; இவர் களைக் கிழக்கு முதலாக முறையே கொள்க. எழுவரில் நால்வர் [அக்கினி, வாயு, யமன், வருணன்] வேறுபட்டுப் போர் செய்ய முனையாமையால், மற்ற மூவரும் [நிருருதி, குபேரன், ஈசானன்] "இனி நாம் மாத்திரம் என் செய்வோம்; போர் தொடங்கலரிது

என இனைத்து மீண்டனர். இது 'இங்கு' என்பதனால் விளங்கும்: இங்ஙனம் எம் இனத்தவரான நால்வர் வேறுபட்டுச் சென்ற இப்பொழுது என்றபடி. மதி-குபேரன். 'மீண்டார்' என்றதால் தத்தம் ஊர்திகளில் ஏறித் திரும்பினர் எனக் கொள்ளலாம். குபேரனுக்கு ஆண் குதிரையும், நிருருதிக்கு நரனும் ஈசானனுக்கு எருதும் வாகனங்கள். (19)

20. அருச்சுனன் இந்திரனோடு உக்கிரமாகப் போர் தொடங்குமளவில், அசரீரி புகன்ற வார்த்தை.

வந்தவிண் ணவரைப் புறங்கொளத் துரந்து
வயம்பெறு நரனும்வெஞ் சமர்செய்
தந்தையை மதியா தவனிடித் துவசந்
தனையறுத் தமர்பொரு மளவில்
இந்திரன் தனக்கங் கசரீரி புகன்ற
தினியதக் ககன்குருக் கேத்திர
முந்தடைந் தனனிங் கிலையரி திவர்போர்
முனைதணந் தேகுமி னெனவே.

(இ-ள்.) வந்த விண்ணவரைப் புறங்கொளத் துரந்து-[தன் மேல் போரிட] வந்த தேவரை முதுகு காட்டியோடும்படி துரத்தி, வயம்பெறு-வெற்றி கொண்ட, நரனும்-அருச்சுனனும், வெஞ்சமர்செய் தந்தையை மதியாது-கொடிய போரைச் செய்கின்ற தகப்பனரையும் மதிக்காமல், அவன் இடித்துவசம்தனை அறுத்து-அவனது இடியின் வடிவமெழுதிய கொடியைத் துண்டித்து, அமர் பொரும் அளவில்-போரிடும் சமயத்தில், இந்திரன் தனக்கு-இந்திரன் கேட்கும்படி அவனிடத்து, அங்கு-அவ்விடத்து, அசரீரி-ஆகாய வாணி, புகன்றது-(பின்வருமாறு) சொல்லிற்று: (அஃது சொன்னது என்னையெனில்) 'இனிய தக்ககன் குருக்கேத்திரம் முந்து அடைந்தனன்-[சுற்றத்தாரினும்] இனிய வனை தக்ஷகன் முன்னமே குருக்ஷேத்திரத்தை யடைந்துள்ளான்: இங்கு இலை-இந்தக் காண்டவ வனத்திடத்து அவன் இல்லை; இவர் போர் அரிது-இந்தக் கிருஷ்ணர்ச்சுனர்களோடு போரிடுதல் கடினம்:(ஆகவே) முனை தணந்து ஏகுமின்-போர் முனையை விடுத்து (ப் போரையொழிந்து) உங்கள் இருப்பிடத்திற்குச் செல்லுங்கள்', என-என்று; (புகன்றது); (எ-று.)

அவன் துவசம் இடிதனையறுத்து என்று மாற்றி-அவ்விந்திரனுக்குக் கொடியாகிற இடியைத் துண்டித்து என்றும் உரைக்

கலாம். அசரீரி-சரீரமில்லாத சொற்றெய்வம்: எனவே, ஆகாய வாணி எனப்பட்டது. குருக்கேத்திரம்-குருக்ஷேத்திரம் என்பதன் சிதைவு. முந்து-காண்டவ வனம் எரித்தற்கு முன்பே. 'தக்ககன் முந்து அடைந்தனன்' என்றதால், நீங்கள் இவ்வளவு கோபித்துக் கடும் போர் தொடங்குவதற்கு ஏற்ற காரணம் இல்லையென்ற வாறு. ''தக்ககன் எனும் நண்பன் படுவனென்று இரங்கினன் மகவான்'' என்று 14-ஆங்கவியில் வந்தது, அவன் குருக்ஷேத்திரம் சேர்ந்ததையறியாமையாலாகும். 'எனவே புகன்றது' என இயையும். (20)

21. அசரீரிவார்த்தைகேட்டு இந்திரன் போரொழிய, அருச்சுனன் வெற்றிச்சங்கம் முழக்குதலும், கண்ணன் அவன் திறத்தை வியத்தலும், தேவர்களும் இந்திரனும் முனிவர்களும் அருச்சுனனைப் புகழ்தலும்.

வாசவ னந்த மொழிசெவிப் படலும்
வானவ ரொடுநகர் புகுந்தான்
பூசலில் விசயம் பெற்றருச் சுனனும்
பொலியும்வெண் சங்கமும் குறித்தான்
கேசவன் உளத்தில் அதிசயித் தனனக்
கிரீடிவல் லபங்கள்கண் டமரர்
பேசிய மகவா னுரதன் முதலாம்
பெருந்தவர் களும்புகழ்ந் தனரே.

(இ-ள்) வாசவன் - இந்திரன், அந்த மொழி செவிப்படலும்-அந்த அசரீரியின் வார்த்தையைக்கேட்டவுடன், (மகிழ்ந்து) வானவரொடு - தேவர்களோடு, நகர் புகுந்தான்-தனது அமராவதி நகரஞ்சேர்ந்தான்: பூசலில் - நிகழ்ந்தபோரில், விசயம் பெற்று-ஜயமடைந்து, அருச்சுனனும்—, பொலியும் வெண்சங்கமும் குறித்தான் - விளங்குகின்ற (தனது) வெள்ளிய சங்கத்தையும் ஊதி முழக்கினன்: கேசவன் - கண்ணபிரான், உளத்தில் - மனத்தில், அக் கிரீடி வல்லபங்கள் கண்டு - அந்த அருச்சுனனின் போர்த் திறங்களைப் பார்த்து, அதிசயித்தனன் - ஆச்சரியப்பட்டான்; அமரர் - தேவர்களும், பேசிய மகவான் - [இனிப் போர் செய்ய மாட்டேன் என்று] பேசிச்சென்ற இந்திரனும், நாரதன் முதலாம் பெருந்தவர்களும் - நாரதன் முதலான பெரிய இருடிகளும், புகழ்ந்தனர் - (அருச்சுனனைப்) புகழ்ந்தார்கள்; (எ-று).

பகைவரை வென்றொழித்தபின்பு தமது பெருமிதந்தோன்றப் போர்க்களங்கொண்டு தமது வெற்றிக்கு அறிகுறியாகத் தம் சங்கத்தை முழக்குதல் வீரரியல்பு. கண்டு அதிசயித்தனன் என இயையும். பேசிய - பெயரெச்சம். பெருந்தவர்களும், உம்மை-முன்னருள்ள அமரர், மகவான் இருவரையும் தழுவியது. மகவான் பேசியதை 'புடவியிலொருவரொடுமினிப்பூசல் பொரேனெனப் போன வாசவனும்" என்றார் வில்லியும். (21)

22. அக்கினியினின்று தப்பியவர்கள்.

தக்ககன் தனக்கவ் வனத்திடை யில்லந்
தங்கிய மயனுமேல் வாளி
புக்கலும் வெருவி யருச்சுன ! வபயம்
புரத்தியென் றிரந்தனன் திருமால்
அக்கண மருள்கொண் டவன்றனைப் புரந்தான்
அவனெடு தக்ககன் மகவும்
நக்கனேர் தவத்தோன் றனக்கொரு குரீஇ
நல்குபுண் ணுன்குமுய்ந் ததுவே.

(இ-ள்) தக்ககன் தனக்கு - தக்ஷகனுடைய, அ வனத்திடை இல்லம் - அந்தக் காண்டவவனத்து மாளிகையில், தங்கிய - தங்கியிருந்த, மயனும் - மயனென்னும் அசுரசிற்பியும், மேல் வாளி புக்கலும் - தன்மேல் அக்கினியாகிய அம்பு பாயவரலும், வெருவி - பயந்து, 'அருச்சுன ! அபயம் புரத்தி' என்று இரந்தனன் - 'அருச்சுனா ! நான் உனக்கு அடைக்கலம், என்னைக் காப்பாற்று' என்று கெஞ்சிவேண்டினன்: அக்கணம் - அப்போது, திருமால் - கண்ணபிரான், அருள்கொண்டு - கிருபைசெய்து, அவன்தனை - அந்த மயனை, புரந்தான் - காப்பாற்றினன்; அவனெடு - அந்த மயனோடு, தக்ககன் மகவும் - தக்ஷகன் மகனாகிய அசுவசேனனும், நக்கன் நேர் தவத்தோன் தனக்கு - சிவனையொத்த மந்தபால னென்னும் முனிவனுக்கு, ஒரு குரீஇ - ஒரு (கருங்கிறக்) குருவியானது, நல்கு - பெற்றுக்கொடுத்த, புள் நான்கும் - நான்கு பறவைக்குஞ்சுகளும், உய்ந்தது - (அந்த அக்கினியினின்று) தப்பிப் பிழைத்தன; (எ-று).

தக்ஷகனுடைய மாளிகையினின்று நெருப்புக்குப் பயந்து ஓடின மயன் 'அருச்சுனா ! அபயம்' என்று அரற்ற அர்ச்சுனன் அபயங் கொடுக்க, அம்மயனைக்கொல்லும்படி கோபத்தாற்கண் சிவந்து

சக்கராயுதத்தையெடுத்த கண்ணபிரானும் அருச்சுனன் அபயங் கொடுத்ததைக் கண்டு தானும் அவன் பக்கல் கருணை செய்தான் என்பது இங்கு அறிய வேண்டிய விவரம். மயன்–அசுர சிற்பி. கிருஷ்ணர்ச்சுனர் நோக்கத்தைக் கண்டு, அக்கினியும் மயனைத் தகித்திலனென முதனூல் கூறும். அதற்கேற்ப, வாளி என்பது-அக்கினியாகிய அம்பு என்று பொருள் கொள்ளப்பட்டது. நக்கன்-சிவன்: தவத்தோன் - மந்தபாலனென்னும் முனிவன். அவன் தர்மந் தெரிந்தவர்களில் முதன்மையானவராய், ஆத்மத் தியான முள்ளவராய், உறுதியான நியமமுள்ளவராய், சாஸ்திர ஞான முள்ளவருமாய் இருந்தமையால் சிவனேடு ஒப்பிடப்பட்டார் அவனுக்கு ஒரு குருவி நான்கு குஞ்சுகளை ஈன்று கொடுத்தது என்றது-மந்தபாலனருளால் தோன்றிய நான்கு இளைய சார்ங்கப் பறவைக் குஞ்சுகளை: இது முதனூலால் தெளியப்படும் ஒரு குரீஇ என்றது - ஜரிதையென்னும்பெயருள்ள பெண்சார்ங்க பட்சியை. மந்தபாலன் சார்ங்கபட்சி ரூபமெடுத்து ஜரிதையைக் கூடி நான்கு சிறுகுஞ்சுகளைத் தனக்குப் புத்திரர்களாகும்படி யுண்டாக்கினர். அந்த நான்கு குஞ்சுகளின் [புத்திரர்களின்] பெயர்கள்-ஜரிதாரி, ஸாரிஸ்ருக்வன், ஸ்தம்பமித்ரன், துரோணன் என்பவை. இந்தக் குஞ்சுகளைக் காப்பாற்றும்படி அக்கினியிடம் மந்தபாலரிஷி வரங்கேட்டுப் பெற்றார் என்பது அறியவேண்டு வது. மற்றும், இந்தச் சார்ங்கப் பறவைக்குஞ்சுகள் அக்கினி யைப் பிரார்த்தித்ததனாலும் அவன் இவைகளை எரிக்காது விட்டான். ஆக, காண்டவவனம் எரிக்கப்பட்டபோது அசுவ சேனன், மயன், நான்கு சார்ங்கப்பறவைக்குஞ்சுகள் என்ற இவ்வறுவரைமட்டும் அக்னி தகிக்கவில்லையென்றபடி. புள்+நான்கு=புண்ணான்கு. "ஞள முன் டணவும் ஆகும் தாக்களாயுங் காலே" என்பது விதி. குரீஇ - குருவி என்பது அளபெடுத்து வந்தது: ஈங்கு, அளபெடை அலகுபெற்றது. புரத்தி - முன்னிலை வியங்கோள். (22)

23. அக்கினி வெம்பசிதணிந்து திருப்தியடைந்து கிருஷ்ணர்ச் சுனர்களை வாழ்த்திச்செல்ல, அவ்விருவரும் இந்திரப்பிரத்த நகரம் அடைதல்.

அவ்வுயி ரொழிந்த சராசர மனைத்தும்
அறுபதி யோசனை யென்னும்
வெவ்வன முழுது மருந்திதன் னுதர
வெம்பசி தணிந்துதா சனனுங்

தெவ்வடு வேலார்க் காசிசொற் றகன்றூன்
திறலின ரிருவருந் தேர்மேல்
எவ்வகை யியமு மிரைத்திட யாரும்
எதிர்கொள நகரிவந் தடைந்தார்.

(இ-ள்) அ உயிர் ஒழிந்த - மேற்கூறிய ஆறு உயிர்களைத்தவிர, (ஏனைய) சர அசரம் அனைத்தும் - ஐங்கமமும் ஸ்தாவரமுமாகவுள்ள பொருள்களெல்லாம், அறுபது யோசனை என்னும்- அறுபதுயோசனைதூரம் பரந்துள்ளன என்று சொல்லும்படியான [விஸ்தீரணமுள்ள], வெவ்வனம் முழுதும் - அந்தக் கொடிய காண்டவவனம் முழுவதையும், அருந்தி - உண்டு, தன் உதர வெம்பசி தணிந்து - தன் வயிற்றுக் கொடியபசியாறி, உதாசனனும் - அக்கினியும், தெவ் அடு வேலார்க்கு ஆசி சொற்று - பகைவரைக் கொல்லுகின்ற வேலாயுதத்தையேந்திய கிருஷ்ணர்ச்சுனர்க்கு ஆசீர்வாதத்தையும் சொல்லி, அகன்றூன் - போயினன்; திறலினர் இருவரும் - வலிமைவாய்ந்த கிருஷ்ணர்ச்சுனரிருவரும், தேர்மேல் - (அக்கினியீந்த) தேரின்மேல் ஏறி, எ வகை இயமும் இரைத்திட - எல்லாவகை வாச்சியங்களும் முழங்க, யாரும் எதிர்கொள - அனைவரும் எதிர்கொண்டு வரவேற்ப, நகரி வந்து அடைந்தார் - இந்திரப்பிரத்த நகரத்தையடைந்தார்கள்; (எ-று),

சர + அசரம் = சராசரம்: தீர்க்கசந்தி. சரம் - ஐங்கமம்: அசையும்பொருள், இயங்குதிணைப்பொருள். அசரம்-ஸ்தாவரம். அசையாப்பொருள்i நிலைத்திணைப்பொருள். யோசனை - காதம்: பத்துமைல். அறுபது+யோசனை=அறுபதியோசனை: "யவ்வரினியியாம்" (நன்: உயிரீற்: 14). 'யாரும்' என்றது - தங்கள் சுற்றத்தார்களும், துணைவர்களான தருமன் முதலிய நால்வரும், அந்நகரத்திலுள்ள ஜனங்களும். (23)

24—28. ஐந்துகவிகள்—ஒருதொடர். மந்தபால முனிவன் வரலாறு.

24. மந்தபால முனிவன் வீட்டுலகம் புக வியலாமை தெரிவித்தல்.

என்னமா தவன்சொற் றிடவர சிருடி
யீன்றதுங் குருவியுய்ந் தமையும்
பன்னுகென் றிறைஞ்ச முனிசொலு மந்த
பாலனு மாதவ னென்போன்

தன்னுழி யொருநாட் புகும்பரா சரனைத்
தானுப சரித்துவீ டுறயான்
உன்னிச்சென் றிடிலக் கதிவிழிக் கெதிரா
தொழிவதென் னுரையென வுரைப்பான்.

(இ-ள்) என்ன - என்று (காண்டவதகன வரலாற்றை), மா தவன் சொற்றிட - சிறந்த தவசியாகிய வைசம்பாயனர் சொல்ல அரசு - ஜனமேஜயன், இருடி ஈன்றதும் - மந்தபாலரிஷி (குருவிக் குஞ்சுகளைப்) பெற்றமையும், குருவி உய்ந்தமையும் - குருவிக் குஞ்சுகள் நான்கும் உயிர்பிழைத்தமையும்பற்றி, பன்னுக என்று இறைஞ்ச - விவரமாகச்சொல்லுவாயாக என்று பிரார்த்திக்க, முனி சொலும் - வைசம்பாயனன் கூறத்தொடங்கினன்:—மந்த பாலனும் மாதவன் என்போன் - மந்தபாலன் என்கின்ற சிறந்த இருடி, தன் உழி – தன்னிடத்து, ஒருநாள் புகும் பராசரனை- ஒருநாள் வந்துசேர்ந்த பராசரன் என்ற மகரிஷியை, தான் உபசரித்து - தான் வந்தனவழிபாடுகள்செய்து, வீடு உற யான் உன்னி சென்றிடில் - வீட்டுலகம்புகுதற்காக நான் நினைத் துப்போவேனேயானால், அ கதி - அந்த மோட்சகதி, விழிக்கு எதிராது ஒழிவது என் - என் கண்பார்வைக்குத் தென்படாது போவது எக்காரணம்பற்றி? உரை என - (எல்லாம் அறிந்த நீர்) சொல்வீர் என்றுகேட்ப, உரைப்பான் - [அப் பராசரன்] சொல்ல லாயினன்; (எ-று).

முனி சொலும் செய்யுமென்முற்று ஆண்பாலுக்கு வந்தது. (24)

25. மந்தபாலரிஷி ஆண்குருவிருபத்தில் பெடையொடு சேர்ந்து குஞ்சுகளைப் பிறப்பித்தல்.

பெருந்தவ! மைந்தர் பெறுகிலர் கதியைப்
பெறலரி தெனுமிருக் குணர்ந்தும்
வருந்தலென்? மகவை மணம்புரிந் துதவில்
வாய்க்குமக் கதியென மீண்டான்
கருந்தடங் கணரைத் தொடேனென அவனோர்
கருக்குரிப் பெடையொடவ் வாணைப்
பொருந்தலும் பெடைநா லண்டமீன் றதனைப்
பொரித்துபார்ப் பினைப்புரிந் ததுவே.

(இ-ள்) பெருந்தவ! - பெரிய தவத்தைச்செய்த மந்தபால முனிவரே! 'மைந்தர் பெறுகிலர் - பிள்ளைகளைப் பெறுதவர்கள்

கதியைப்பெறல் அரிது - மோட்சகதியைப் பெறுதல் முடியாது' எனும் - என்கின்ற, இருக்கு உணர்ந்தும் - வேத மொழியினைத் தெரிந்திருந்தும், வருந்தல் என் ? - (நீர்) வருத்தப்படுதல் ஏன் ? மணம் புரிந்து - விவாகஞ் செய்துகொண்டு, மகவை உதவில்- பிள்ளைகளைப் பெறுவீரேயாகில், அ கதி வாய்க்கும் - அந்த மோட்ச கதி கிட்டும், என - என்று கூறி, மீண்டான் – (அந்தப் பராசரன்) போயினன்; (பிறகு) அவன் - அந்த மந்தபாலன், கருந் தட கணரைத் தொடேன் என - கருமையான விசாலமான கண்களை யுடைய பெண்டிரைத் தீண்டேன் என்று கூறி, ஓர் கருக்குரிப் பெடையொடு அ ஆணைப் பொருந்தலும் - ஒரு கரியகுருவிப் பெட்டையொடு அதன் ஆண்பறவையாய் (ரூபமெடுத்துப்) புணர் தலும், பெடை - அந்தப் பெண்குருவி, நால் அண்டம் ஈன்று- நான்கு முட்டைகளையிட்டு, அதனைப் பொரித்து - அவற்றை (அடைகாத்து)ப் பிறப்பிக்கச்செய்து, பார்ப்பினை-[பிறந்த] குஞ்சு களை, புரிந்தது - விரும்பியது, [அன்புசெய்திருந்தது]; (எ-று)

புத்திரனில்லாதவர் மோட்சகதியடைய முடியாது: அதற்கு மாறுகப் 'புத்' என்ற நரகம் அவர்களுக்குச் சித்திக்கும். அந்த 'புத்' என்ற நரகத்தினின்று பிதாவைக் காப்பாற்றுகிறானதலின் 'புத்ரன்' எனப்பட்டான், 'மகவை யுதவில்' என இயைக்க. மந்தபால முனிவன் 'எந்த ஜன்மத்தில் அதிக சந்ததிகள் சீக்கிரத் தில் உண்டாகும்' என்று ஆலோசனைசெய்து சிந்திக்கும்போது பறவைகளுக்குக் குஞ்சுகள் அதிகம் என்று அறிந்தார். ஆகவே, கருக் குருவி ரூபமெடுத்து ஜரிதையென்னும் பெயருள்ள பெண் குருவியையடைந்தார் என்பது விவரம். [இந்தக் குருவிகளைச் சார்ங்கப்பறவைகள் என்பதுமுண்டு.] "பார்ப்பெனப்படுவது பறப்பவற்றிளமை" என்றது தொல்காப்பியம். புரிதல் - விரும்பு தல். 'புரந்ததுவே' என்றும் பாடமிருக்கலாம். குரி - குருவி என்பதன் சிதைவு. [25]

26. காண்டவ வனத்தில், கனல்சூழ, தாய்ப் பறவைக்கும் குஞ்சுகளுக்கும் நிகழ்ந்த சம்பாஷணை.

வேண்டிய மகப்பெற் றனமென முனிவன்
மிகமகிழ்ந் தருந்தவத் தடைந்தான்
காண்டவ வனத்தக் கருக்குரி மகவைக்
காத்திருந் ததுகனல் சூழ
ஆண்டொரு வலியிற் புகுமெனச் சிறுரும்
அதிற்புகி லெலியுணும் அழலியாம்
மாண்டிடிற் கதியாம் உனதுயிர் புரக்கின்
மகவினிப் பெறுகுவை யெனலும்,

(இ-ள்.) வேண்டிய-நற்கதிக்குச் செல்வதற்கான, மகப் பெற்றனம்-பிள்ளைகளைப் பெற்றோம், என-என்று, முனிவன் மிக மகிழ்ந்து-மந்தபால முனிவன் மிக்க சந்தோஷமடைந்து, அருந் தவத்து அடைந்தான்-அரிய தவத்தைச் செய்யப் போனன்: காண்டவ வனத்து—, அ கருக்குரி-ஜரிதை யென்னும் அந்தப் பெண் கருங்குருவி, மகவைக் காத்திருந்தது-தன் நான்கு குஞ்சுகளையும் பாதுகாத்துக் கொண்டிருந்தது; (இங்ஙனிருப்பக் காண்டவ வனத்தைக்) கனல் சூழ-நெருப்பு சுற்றிக்கொள்ள, ஆண்டு ஒரு-அங்குள்ளதோர், வளையில் புகும்-எலிவளையில் புகுந்து கொள்ளுங் கள், என-என்று (தாய்ப்பறவை குஞ்சுகளை நோக்கிக் கூற), சிறாரும்-அச் சிறு குஞ்சுகளும், அதில் புகில்-அந்த வளைக்குள் புகுந் தால், எலி உணும்-எலி எங்கள் நால்வரையும் தின்றுவிடும்: (அதற்கு மாறாக) யாம்—,அழல் மாண்டிடில்-நெருப்பில் எரிந்து இறந்தாலும், கதியாம்-நல்ல கதியுண்டாகும்: [தாயே!] உனது உயிர் புரக்கின்-உனது உயிரை (நெருப்பினின்று) காப்பாற்றிக் கொள்ளின், இனி-மேலும், மக-பிள்ளைகளை, பெறுகுவை-பெறும் வாய்ப்பு உண்டு, எனலும்-என்று சொல்லவும்: (எ-று) 'ஆயும் அகன்றது' என மேலிலக்கவியோடு குளகமாய் இயையும்.

"வளைக்குள் எலியால் தின்னப்பட்டால் இழிவான மரணம் வரும்: சிலாக்கியமான அக்னியில் சரீரத்தை விட்டால் பிரம்ம லோகத்தில் சாச்வதமான வாசம் நிச்சயம்; அம்மா! நீ இறந்தால் நம்முடைய குலத்திற்குச் சந்ததியுண்டாகாது. தாயே! எங்களிட முள்ள பாசத்தைவிட்டு அக்னியில்லாமலிருக்கிற இடத்திற்குப் பறந்துபோ. நாங்கள் இங்கே இறந்தாலும் உனக்குப் பிள்ளைக ளுண்டாகும்" என்று குஞ்சுகள் தாய்ப் பறவையை நோக்கிக் கூறி யன என்பது ஈண்டு முதனூலால் அறிய வேண்டிய விவரம்.

அழல்+யாம்=அழலியாம்: "தன்னெழி மெய்ம்முன் யவ்வரின் இகரந் துன்னும்" (26)

27. குஞ்சுகள் அழலினின்று உயிருய்ந்தமை.

ஆயுமவ் வழலுக் கஞ்சியம் பரத்தில்
அகன்றதச் சிறுர்துதித் திடலால்
தேயுவுள் ளிரங்கி விடுத்தன னுய்ந்தச்
சிறுவர்பா லகன்றதா யெய்தி
காயுமிவ் வழலி னுய்ந்தமை முனிவன்
கருணையென் றிருந்தனள் முனியும்
வேயுறு மடவி யெரித்தல்கேட் டன்றோர்
வீயுமே யெனவெரி யயர்ந்தான்.

(இ-ள்) ஆயும் - தாய்ப்பறவையும், அ அழலுக்கு அஞ்சி- அந்த அக்னிக்குப் பயந்து, அம்பரத்தில்-ஆகாயத்தில், அகன்றது- பறந்து சென்றுவிட்டது: அ சிறுர்-அந்தச் சிறுகுஞ்சுகள், துதித் திடலால் - தோத்திரஞ்செய்தமையால், தேயு - அக்னியும், உள் இரங்கி - மனமிரக்கங்கொண்டு, விடுத்தனன் - [அக்குஞ்சுகள் நான்கினையும் எரிக்காது] உயிரோடு விடுத்தான்: உய்ந்த அ சிறுவர்பால் - தப்பிப்பிழைத்த அந்தச் சிறு குஞ்சுகளிடத்து, அகன்ற தாய் எய்தி - விட்டுச்சென்ற தாய்ப்பறவை மீண்டு வந்து, 'காயும் இ அழலின் உய்ந்தமை முனிவன் கருணை' - 'எரிக் கின்ற இந்த நெருப்பினின்று தப்பிப்பிழைத்தமை [கணவனுகிய] மந்தபால முனிவரின் கிருபையினலாகும்', என - என்றுகொண்டு, இருந்தனள் - (அவரை நினைந்து குஞ்சுகளோடு) இருந்தனள்: (அப்போது) முனியும் - மந்தபாலனும், வேய் உறும் அடவி எரித்தல் கேட்டு - மூங்கில்கள் பொருந்திய காண்டவவனம் எரிபடுதலைக் கேள்வியுற்று, "ஈன்றோர் வியுமே என - தான் பெற்றெடுத்த குஞ்சுகள் நான்கும் இறந்துபடுமே" என்று மதி மருண்டு, எரி - அக்னி செய்த வாக்குதத்தத்தையும், அயர்ந்தான்- மறந்துபோனன்; (எ-று).

அக்னிசெய்த வாக்குதத்தமாவது:— உன் புத்திரர்களை எரிக்க மாட்டேன் என்பது. மந்தபாலமுனிவன் அக்னியைப்பார்த்து "காண்டவவனத்தைக் கொளுத்தும்போது என் புத்திரர்களை விட்டுவிடவேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். அப்போது அக்கினிபகவான் "அஃது அப்படியே ஆகட்டும்" என்று வாக்கு தத்தஞ் செய்தார். அதனை இப்போது விசனமேலீட்டால் மந்த பாலன் மறந்துபோனர் என்பது கூறப்பட்டது.

எரி - எரிசெய்த வாக்குதத்தத்திற்கு இலக்கணை. அயர்த்தல்- மறத்தல். முதலடியில் மோனையழகுகாண்க. உய்ந்தச்சிறுவர்- பெயரெச்சத்தின் அகரவீறு கெட்டது. (27)

28. மந்தபால முனிவன் உயர்கதி எய்தினமை.

வருந்துத லென்கொல் வன்னிமுன் னுனக்கு
வழங்கிய வரமுள தெனலால்
தருந்தனை யருக்கங் கிறுரு தெனவே
சாற்றிய சிடர்சொற் கேட்டு
பெருந்தவன் மகிழ்ந்தவ் வனம்புகுந் துரிய
பெடையொடச் சிறுரையோர் வனத்தில்
இருந்திட விருத்தி யெய்தருங் கதியை
எளிதினி லெய்தின னன்றே.

(இ-ள்) (மந்தபாலமுனிவன் அயர்ந்ததைக்கண்ட) சிடர்-சிஷ்யர்கள், [அவரைநோக்கி] 'வருந்துதல் என் ? - நீர் வருத்தப் படுவது ஏன் ? (வருந்துதல் வேண்டாம்): வன்னி முன் உனக்கு வழங்கிய வரம் உளது - அக்னிதேவன் முன்னர் (நீர் பிரார்த்தித்த போது) உமக்குக்கொடுத்த வாக்குதத்தம் உள்ளது : அதனால்-தரும் தனையருக்கு - நீர் பெற்றெடுத்த புத்திரர்களாகிய குஞ்சு களுக்கு, அங்கு – அக் காண்டவவனத்து, ஈறு உறுது - அழிவு ஒன்றும் நேரிடாது, என சாற்றிய - என்று கூறிய, சொல் கேட்டு-வார்த்தைகளைக் கேட்டு, பெருந்தவன் மகிழ்ந்து - மந்தபால முனிவன் சந்தோஷமுற்று, அ வனம் புகுந்து - அந்தக் காண்டவ வனத்திற் புகுந்து, உரிய பெடையொடு - தனக்குரிய பெண் பறவையாகிய மனைவி ஜரிதையொடு, அ சிறுரை - அந்தச் சிறு குஞ்சுகளையும், ஓர்-ஒரு, வனத்தில் - காட்டில், இருந்திட இருத்தி-பத்திரமாக இருந்து வசிக்கும்படி செய்திட்டு, (பின்பு) எய்த அருங்கதியை - அடைதற்கரிதாகிய வீட்டுலகத்தை, எளிதினில் எய்தினன் - எளிதாக (யாதொரு சிரமமுமின்றி) அடைந்தனன்; (எ-று). அன்றே - தேற்றம்.

வருந்துதல் – தொழிற்பெயர். என்கொல் - கொல்; அசை. எய்தரும் – அகரவீறுதொகுத்தல். (28)

29. இந்த ஆதி பருவத்தின் நூற்பயன்.

இக்கதை யளவு மாதியம் பருவ
மென்றருந் தவனுரைத் திடலும்
அக்கண மரச னங்கநெக் குருகி
அரும்பகண் ணீருள மகிழ்ந்தான்
தக்கபா வஞ்ஞாற் றெழுபத்தொன் றிதனுட்
சரித்திரம் படித்தவர் கேட்டோர்
மிக்கவன் புடனே பொருள்விரித் தவரும்
விரும்புமப் பொருளடை குவரே.

(இ-ள்.) இ கதை அளவும் ஆதியம்பருவம் என்று-இந்தக் காண்டவதகன வரலாறு வரையும் ஆதிபருவமாகும் என்று, அருந்தவன்-வைசம்பாயனன், உரைத்திடலும்-சொல்லவும், அ கணம்-அப்போது, அரசன்-ஜனமேஜயன், அங்கம் நெக்குருகி-உடம்பு நெகிழ்ச்சியுற்று, கண்ணீர் அரும்ப-கண்களில் நீர் தோன்ற, உளம் மகிழ்ந்தான்-மனம் மகிழ்ச்சியுற்றான்: [இது நிற்ப, இனி], தக்க பா அஞ்ஞாற்றெழுபத்தொன்று-தகுதியுடைத்தான பாட்டுக்களின் எண்ணிக்கை மொத்தம் ஐந்நூற்றெழுபத்தொன்று

கும் : இதன் உட்சரித்திரம்-இந்தப் பாட்டுக்களுள் கூறப்பட்டுள்ள சரிதத்தை, படித்தவர்-செய்யுளாகப் படித்தவர்களும், கேட்டோர்-செவியுற்றவர்களும், மிக்க அன்புடனே பொருள் விரித்தவரும்-பேரன்புடனே விரிவுரை செய்தவர்களும், விரும்பும் அ பொருள்-[யாவராலும்] விரும்பப்படுகின்ற அந்தப் பேரானந்தத்தை, அடைகுவர்-எய்துவார்கள்; (எ,று)

ஆதிபருவம் மொத்தம் ஐந்நூற்றெழுபத்தொன்று செய்யுட்களைக்கொண்டது என்பது இதனால் பெறவைக்கப்பட்டது. இங்ஙனம் தொகையிட்டது, இடைச்செருகல் நீக்குதற்கு என்க. இனி, பலச்ருதி கூறுமுகத்தான் அந்தமிலின்பத்தழிவில் வீடு அடைகுவர் என்றார். அப்பொருள்-'அ' பிரசித்தி காட்டும், சிறந்த பொருள், மேலானபொருள், பரம்பொருள், வீடு என்றபடி. "சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" (தொல்காப்பியம்) "சிறப்பு ஈனும்" (குறள்) என்றவையும் நோக்குக. விரித்தவரும்-உம்மை முன்னும் இயைந்தது. அஞ்ஞூறு-ஐந்நூறு என்பதன் முற்றுப்போலி. (29)

காண்டவ தகனச் சருக்கம் முற்றிற்று.

ஆதிபருவம் முற்றிற்று

சுபம்.

ஆதிபருவத்தின் அரும்பதவகராதி முதலியன

அ-பிரசித்திகாட்டும், வியா. உற்.-8

அக்கினியின் துவசம்-இடிவடிவம் எழுதியது-காண். தக, 20

அக்கினியினின்று தப்பியவர்கள்-காண். தக. 22

அக்குரோணி, சிறப். பாயி. 8

அகடு-வயிறு, உதங்க. 36

அகத்தியர்க்கு நேர் வில்லிபுத்தூரன், பாயி. 8

அகத்தியன் சாபத்தால் நகுடன் சர்ப்பமாதல், சந்தி. வங். 5

அகத்தியன் வெற்பு-அருச். தீர். 14

அகம்-சரீரம், உடம்பு, சந்தனு சரு. 5

அகி-பாம்பு: அகி கேது-பாம்புக் கொடியையுடைய துரியோதனன், சிறப். பாயி. 11

அங்கசன்-மன்மதன், நகர. சரு. 3

அங்கம் நாலு-நாலுவகைப் படை, அருச். தீர். 42

அங்கிதம்-சம்மதம், உடன்பாடு, அங்கீகாரம், சந்த. சரு. 4

அங்கீரஸின் புத்திரர்கள் மூவர்-பிரபஞ். உற். 8

அங்குட்டம்=அங்குஷ்டம்-கட்டை விரல், வார. 15

அங்கேசன் (அங்க+ஈசன்)-கர்ணன் [குணசந்தி], திரௌ. மா. 59

அச்சுதன்-கண்ணன், திரௌ. மா. 20

அச்சுவசேனன்-தக்ஷகன் மகன், காண். தக. 116

அசரீரி-சரீரமற்ற ஆகாயவாணி, துட். 21

அசனம்-சோறு, உணவு, வேத். 19

அசி-வாள், நாட்டுச்சரு— 1

அசுவினி தேவர்கள் தோற்றம், பிரபஞ். உற். 10

அஞ்சல்-பயப்படாதே (அல்லீற்று எதிர்மறை வியங்கோள்) சர்ப்ப. யாக. 5

அஞ்ஞாறு=ஐந்நூறு: முற்றுப்போலி, காண். தக. 29

அடவி-காடு, சித். சரு. 12

அடா-இகழ்ச்சி குறிக்கும் இடைச்சொல், வேத். 5

அடாது-பொருந்தாது, வேத். 5

அடிசிவத்தல், சந்த. சரு. 36

அடிசிறுத்தல் மகளிர்க்கழகு, பாயிர. 4

அடுக்கல்-மலை, (கோவர்த்தனகிரி), காண். தக. 13

அடுவோர்-சமையற்காரர், சித். சரு. 11

அடை-இலை, வேத். 29

அண்டம்-முட்டை, உதங்க. 17

அணங்கை விதியின் நல்குதல், அருச். தீர். 43

அணன்-அண்ணன் என்பதன் தொகுத்தல், வேத். 2

அணிந்தக்காவலர்கள், நிலைமொழியின் அகரவீறு தொகுத்தல். திரௌ. மா. 19

அணைதருதல்-படுக்கைகொடுத்தல், வார. 61

அத்தி-யானை, பாயி. 3

அத்திகன் அத்தினபுரி அமைத்தல், துட். 23

அத்திகன் [ஆஸ்திகன்] மாதுலர்கள்பால் பெற்ற வரம், சர்ப்ப யாக. 12

அத்திநகரி-அத்தினபுரி, தரும. பட். 5

அத்திரி வமிசம், அங்கிரஸ் வமிசம், பிரபஞ்ச. உற். 8

அத்தினபுரத்து ஆடவர் சிறப்பு, நகர. 3

அத்தினபுரத்து மகளிர் சிறப்பு, நகர. 4

அதம்-ஹதம், சம். 29

அதரபானம்-இதழ் சுவைத்தல், அருச். தீர். 5

அதிரதனும் இராதையும் கர்ணனை வளர்த்தவர், சம். 29

அந்தகன்-யமன், பாயி. 4

அந்தணர் ஆதிய வருணர், திரௌ. மா. 39

அந்தணர் குயவர் மனையில் தங்கலாம், திரௌ. மா. 8

அந்தணர்க்கு வேதம் கொடியாகும், வார. 11

அந்தரம்-ஆகாயம், சந்தி. வங். 29, நகர. 2

அபிமன்=அபிமன்யு, (அபி-பயமற்றவன், மன்யு-கோபமுள்ளவன்) அருச். தீர். 46

அம்பஞ்சான்=[அஞ்சு அம்பான்]-மன்மதன், பாயி. 4

அம்பை-துர்க்காதேவி, சந்த. சரு. 37

அம-அம்ம என்பதன் தொகுத்தல், அருச். தீர். 30

அமரர்கோன்பரி-உச்சைச்சிரவம், உதங்க. 19

அயமேதம்-அசுவமேதம், சிறப். பாயி. 13

அயன்-பிரமன், சந்த. சரு. 2

அயன்மால் உருமாறியும் அறியாதவர் திருவண்ணுமலையார், அருச். தீர். 7

அயனம்-ஆறுமாதம், வார. 1

அயா-தளர்ச்சி, திரௌ. 3

அயிர்தல்-உண்ணுதல், வார. 10

அயுதம்-பதினாயிரம் [பதினாயிரம் யானை பலமுள்ளவன் திருதராட்டிரன்], சம். 12

அரசமுனி-வீடுமன், வார. 13

அரசர்க்குரிய (க்ஷத்திரிய) தருமம்
அந்தணர்க்குரிய (பிராமணர்க்குரிய தருமம்) } உதங்க. 14 உரை

அரசரினும் அந்தணர் இலக்கு வீழ்த்தால் அதிக நலம், திரௌ. 27

அரம்பை-வாழை, நாட்டு. 4

அரம்பையர்-தேவ மாதர், அருச். தீர். 15

அரா-பாம்பு, உதங்க. 28

அரி-வண்டு, வேத். 29

அரி-விஷ்ணு, [இவன் நிறம் கருமை], நாட்டு. 1

அரிக்கு அரியோன்-சிவபிரான், வார. 11

அரியேறு, இருபெயரொட்டுப் பண்புத்தொகை, திரௌ. 22

அரியோடு உழையை ஊரும் திரு-துர்க்கை, (அரி-சிங்கம், உழை-மான்), வார. 17

அரிவைபங்கன்-சிவபிரான், அருச். தீர். 24

அருக்கன்·சூரியன், வியா. உற். 3

அருத்தம்=அர்த்தம்-பாதி (half), உதங்க. 11

அரும்பகன் (ஔர்வர்) கோபத்தைச் சமுத்திரத்தில் இடுதல்: (வடவாமுகாக்னி எனப்படுவது), சித். சரு 22

அலகை-பேய், வேத். 7
அலத்தினேன்-பலராமன், நாட்டு. 1
அலம்-கலப்பை, நாட்டு 1
அலரி-சூரியன், காண். தக. 8
அலாயுதன்-பலராமன், திரௌ. 24
அவம்பெறும்-வீணே கழியும், சம். 1
அவலச்சுவை பயில்வது, துட். 20
அவலம்-கேடு, வார. 7
அவுணர்-அசுரர், சந்தி. வங். 4
அழகினில் திரு ஒப்பு, வேத் 31
அழல் அழலோடு அயிக்கியமானன், காண். தக. 19
அழல்தன்னின் சிறும் வேதியன்-துரோணன், தரும. பட். 4
அழல்பிறந்த பாவை-திரௌபதி, திரௌ. 18
அழலம்பு-ஆக்நேயாஸ்திரம், சித். சரு. 1
அளிநாண்-வண்டிஞெழுங்கு நாண்கயிறு, சம். 51
அளியாள்-கருணை செய்பவள், பாயி. 6
அஃது-புற்று, சம். 44
அற்ற பனைமரத்தால் நீரை மறித்தல், நாட்டு-6
அறஞ்செய் அம்பிகை-கச்சி காமாட்சியம்மை, நகர. 4
அறத்தில் உமை ஒப்பு, வேத். 31
அறத்தினுக்கு இடர்விளைத்திடும் அரக்கர், காண். தக. 12
அறம் இயற்றும் பதி-காஞ்சி, அருச். தீர்: 7
அறல்-நீர், சந்தி. வங்கி. 15
அறன் உந்து மைந்தன்-தருமன், வார. 36
அறிவை வேறதாக்குதல், சித். சரு. 13
அறுகால்-வண்டு, (சினையாகுபெயர்) சந்த. சரு. 28
அனங்கன் அமரில் எய்த்தோன்-அருச்சுனன், அருச். தீர். 19
அனங்கன் இல்லவள்-ரதி தேவி, (அனங்கன்-மன்மதன்), நகர. 4
அனங்கனுக்கு இகலோன்-வீடுமன், (இகலோன்-பகைவன்), சந்த. சரு. 31
அனம்-அன்னம் [உணவு] நாட்டு. 9
அனம்-அன்னம் [பறவை], திரௌ. 43

அனல் புனலானது, சித். சரு. 15
அனிகம்-சேனை, சித். சரு. 7
அனிலன்-வாயு, சிறப். பாயி. 10
அனிலன் அனலுக்கு உதவுதல், காண். தக. 7
அனுசன்-தம்பி, சந்த. சரு. 30
அனுபோகம்–இன்பம், சம். 32
அனை-அன்னை (தொகுத்தல்), உதங்க. 22
அஷ்டதிக்குப்பாலகர், காண். தக. 19 (உரை)
அஷ்டவசுக்கள் தோன்றுதல், பிரபஞ். உற். 10
ஆக்கியளித்தழித்தல், பாயி. 1
ஆகண்டலன்-இந்திரன், பாரத. உற். 6
ஆகம்-உடம்பு, வேத். 21
ஆசிபுகலல்-ஆசீர்வாதங்கள் சொல்லல், சர்ப்ப. யாக. 6
ஆசினி-ஆசினிப்பலா, நாட்டு. 3
ஆசீர்மம்-ஆசிரமம் என்பதன் சிதைவு' சித். சரு. 6
ஆண்டகை-பண்புத்தொகையன்மொழி, சம். 18
ஆணிமாண்டவ்யர் வரலாறு, சம். 16-21
ஆத்திமாலை சோழர்க்குரியது, திரௌ. 22
ஆதபம்-வெயில், சூரிய வெப்பம், சித்; சரு. 6
ஆதவன் ஒத்த காந்தாரன், சம், 23
ஆதிபருவத்தின் நூற்பயன், காண். தக. 29
ஆதிவருணர்-பிராம்மணர்கள், சர்ப்ப. 2.
ஆதுலர்-தரித்திரர், சம். 27
ஆதுலர் அழைக்குந் தோரண மறுகு, தரும. பட். I2
ஆய்-தாய், உதங்க. 31
ஆயவெள்ளம்-தோழியர் கூட்டம், திரௌ. 16
ஆயிடை-(ஆ+இடை) சுட்டு நீண்டவிடத்து யகரம் தோன்றிற்று, துட். 21
ஆயு-புரூரவசுவின் மகன், சந்தி. வங். 5
ஆயுறு வேதியர்-அசுவினி தேவர்கள், பாரத. உற்: 7 சம்-47
ஆரண ஆர்ப்பு-வேதகோஷம், திரௌ. 52

ஆரண பிறங்கல்-வேதகிரியாகிய திருக்கழுக்குன்றம், அருச். தீர். 7

ஆரணன்-பிரமன், பாயி. 5

ஆரழல்கரியாக, (கரி-சாட்சி), திரௌ. 57

ஆரியன்-பூசிக்கத்தக்கவன் : துரோணாசாரியன், வார. 20,

ஆலம் உறழ் வீழி, துட். 20

ஆலாலம்-ஆலகாலவிஷம், சித். சரு. 9

ஆலோ-அதிசயம் குறிக்கும் இடைச்சொல், சம், 50

ஆலோன்-சந்திரன், அருச். தீர். 23

ஆவணம்-கடைவீதி, நகர. 2

ஆவி-வாவி, குளம், திரௌ. 4

ஆழி-பாற்கடல், பாயி. 1

ஆழிபுனைந்தவள்-பூமிதேவி (ஆழி-கடல்)-பிரபஞ். உற். 2.

ஆழியான்-கண்ணபிரான், திருமால், காண். தக. 13

ஆறுவமிசங்கள்-சந்திரவமிசம் தொடங்கிப் பாண்டுவமிசம் வரை, துட். 30 (உரை)

ஆனது-சொல்லுருபு, அருச். தீர். 2

இக்காரும் மொழி-(இக்கு-கரும்பு), துட். 13

இக்குமொழி-கரும்புபோல் இனிய பேச்சு, உதங்க. 33 (உவமைத்தொகையன்மொழி. வார. 10)

இகல்-மாறுபாடு, பகைமை, சர்ப்ப. 6

இகுத்தல்-கொல்லுதல், சிறப், பாயி. 10

இகுளையர்-தோழியர், சந்தி. வங். 18

இங்கிதம்-கருத்து, சந்த. சரு. 11

இசைத்தல்-சொல்லுதல், பிரபஞ். உற். 2

இசைமகள்-சரசுவதி: கல்வியில் ஒப்பு, வேத். 31

இசைவல்லோர் மணம்-காந்தருவ மணம், அருச். தீர். 11

இட்டானுபோகம், தீர்க்கசந்தி பெற்ற வடமொழித்தொடர், (இட்டம்-இஷ்டம்), சம். 32

இடங்கர்-முதலை, வார. 16

இடியைத் துவசமாக் கொண்டவன்-இந்திரன், காண். தக. 20 உரை

இடும்பனர், பால்வழுவமைதி, வேத். 2

இடும்பியின் பேச்சுத்திறன், வேத். 9

இடை-இடையை யுடையாளுக்குச் சினையாகுபெயர், சந்த. சரு. 3

இடையுருக்காட்டுதல், அருச். தீர். 46

இணர்-பூங்கொத்து, நாட்டு. 3

இதழ் ஊறல் நல்கல்-அதரபானஞ் செய்வித்தல், வார. 30

இந்திரதனு-வானவில், வேத். 27

இந்திரப்பிரஸ்தம்-(பிரஸ்தம்-தங்குமிடம்), தரும. பட். 14

இந்திரர் ஐவர், பிரபஞ். உற். 2

இந்திரன் காதும் செவிடாதல். காண். தக. 10

இந்திரனிட்ட சாபத்தால் ஐந்து தேவமாதர் முதலியாதல், அருச். தீர். 15.

இந்திரனுக்கு ஆயுதம்-வச்சிரப்படை, உதங்க. 29

இந்திரை-இலக்குமி, தரும. பட். 14

இந்துநுதல், (இந்து-சந்திரன்), துட். 14

இபம்-யானை, உதங்க. 25

இமன்-யமன்: (விதுரனையும் தருமனையும் தோன்றியவன்) பாரத. உற். 6

இயக்கி-யக்ஷி (அப்சரஸ்) வியா. உற். 4

இயம்-வாத்தியம், வார. 27

இயல்-தொழில், திரௌ. 30

இரசிதம்-வெள்ளி, சர்ப்ப. 11

இரதமொழி-இனிய ரசமொழுகும் பேச்சு, (இரதம்-இரசம், இனிமை), சந்தி. வங், 17

இரதி வேளோடும் புணர்வது, சம். 15

இராக்கதி-அரக்கி, வேத். 12

இராதை-அதிரதன் மனைவி! கர்ணனை வளர்த்த தாய், சம். 29

இராவானை உலாபி பயத்தல், அருச். தீர். 5

இருக்கு-வேதம், பாயி, (கணபதி)

இருக்கோர்-ரித்விக்குகள், சர்ப்ப. 9

இருபானென்று-இருபத்தொன்று, பிரபஞ். உற். 1

இருபிறப்போர்-அந்தணர், அருச், தீர். 47

இருமல்நோய்-க்ஷயரோகம்: [ராஜயக்ஷ்மா என்பது], சந்த. சரு. 38

இல்பொருளுவமை, பாயி. 6, வேத். 6

இலக்கு-குறி, வார. 18

இலக்குமி துகிர்வண்ணத்தள், பாயி. 2

இவர்தல்-ஏறுதல், வேத். 21

இளநகை-திரௌபதி (பண்புத்தொகையன்மொழி), திரௌ. 13

இளவல்-தம்பி, வேத். 17

இளையோன்-முருகன், சம். 48

இறையின் இறையிதல், (இறை-அரசன்; இறை-வரி) நாட்டு. 8

இனன்-சூரியன், வார. 44

ஈய்த்தும்-சித், சரு. 11

ஈர்தல்-கிழித்தல், பிளத்தல், வியா. உற். 4

உசாவுவர்க்கொண்டு - உயர்திணையிடத்து ஐயுருபுதொக்கது, திரௌ. 47

உஒற்றல்-செய்தல், துட். 17

உடல்விளர்த்தல்-அருச். தீர். 46

உடற்றுதல்-வருத்துதல், சம். 3

உடனிகழ்ச்சியணி, அருச். தீர். 32, 46

உடுசெய்தல்-வணங்குதல் (உடு-தண்டம்: எனவே தண்டம் சமர்ப்பித்தல்), அருச். தீர். 3

உண-உண்ண என்பதன் தொகுத்தல், வேத். 2

உத்திரதிக்கு-வடக்கு (இதற்கு அதிபன் குபேரன்), பாரத. உற். 5

உதகந்தந்திடுதல்-தாரைவார்த்துக்கொடுத்தல், துட். 14

உதரம்-வயிறு, வேத். 19

உதாசனன்-அக்னி, காண். தக. 13

உதிட்டிரன்=யுதிஷ்டிரன், போரில் நிலையாக நிற்பவன், தருமன், சம்: 41

உந்தி உதித்தவன்-பிரமன், வியாச. உற். 4

உந்தை-உன்தந்தை (மரூஉ), வார. 54

உபசரித்தல், அருச். தீர். 36

உபபாண்டவர், அருச். தீர். 48

உபயம்-இரண்டு, பாயி. (கணபதி)

உபையர்=உபயர், இருவர் (வடசொல்), சர்ப்ப. 10

உம்பர்-மேலிடம், சுவர்க்கம், சந்தி. வங். 11

உம்பல்-யானை; வார. 27

உம்பல்கிரி-அத்திகிரி, (வரதன் இருக்கை). அருச். தீர். 7

உயர்வுநவிற்சியணி, வேத். 18; காண். தக. 10

உயிர்க்கு உலைவைத்தல் (உலக வழக்கு), அருச். தீர். 28

உயிர்தொகை, பாயி. 1

உரகமுயர்த்தவன்-துரியோதனன், வார. 2

உரகன்-நாகப்பாம்பு, காண். தக. 16

உரன்-மார்பு, வேத். 20; வலிமை, திரௌ. 19

உருத்தல்-கோபித்தல், சிறப். பாயி. 14

உருப்பசி-ஊர்வசியென்னும் தேவமாது, சந்தி. வங். 4

உருமு-இடி, வேத். 6

உருவகவணியும் தற்குறிப்பேற்றவணியும் சேர்ந்த சேர்வையணி, காண். தக. 1

உருவிலி-மன்மகன், சம். 50

உருவிலியும் இரதியும்போல், அருச். தீர். 14

உரைசெய்கிளி, அருச். தீர். 29

உலகியல்-சான்றோர் ஒழுக்கநெறி, சம். 11

உலவை-காற்று, வேத். 16

உலவைசேய்-வீமன், வேத். 19

உவணன்-கருடன், உதங்க. 21

உவமையணி, திரௌ. 9

உழை-மான், துட். 8

உழையர்-அருகிலிருக்கும் சபையோர், துட். 21

உளதெல்லாம்-ஒருமைப்பன்மைமயக்கம், திரௌ. 38

உற்கயம்=உத்கசம்: ஒருதீர்த்தம், சித்: சரு. 27

உற்பவம்-பிறப்பு, வியா. உற். (தலைப்பு)

உறுகண்-துன்பம், திரௌ. 42

ஊதை-காற்று; ஊதைபுத்திரன்-வீமன், வார. 7

ஊரு-தொடை; (ஊருவினில் கருத் தாங்குதல்), சித். சரு. 20

ஊழ்-வீதி, திரௌ. 32

ஊழிப்பவ்வம் என ஆர்த்தல்-பிரளசுசமுத்திரம்போல் ஆரவாரித்தல், திரௌ. 29

ஊன்-மாமிசம், சித். சரு. 11

எண்கண் இறை-பிரமன், சித். சரு. 24

எண்ணுறுநூல்-நாற்பத்தெட்டுநூல்; சித். சரு. 23

எண்திசைபோர்த்தல், அருச். தீர். 16

எண்மணம்-எட்டுவகைமன்றல், துட். 14

எணம்-எண்ணம் (தொகுத்தல்), வார. 47

எணி-எண்ணி (தொகுத்தல்), திரௌ. 36

எம்பி-என்தம்பி என்பதன் மரூஉ, சந்த. சரு. 27

எம்புதல்-எழுந்துகுதித்தல். அருச். தீர். 42

எய்தரும்-(எய்த+அரும்) அகரவீறுதொகுத்தல், காண். தக. 28

எயல்-எய்தல், தொழிற்பெயர், அருச். தீர். 38

எயினர்-வேடர், நாட்டு. 3

எயினர்மாது-வள்ளியம்மை, வேத். 12

எரிகரியாய்மணப்பல் (எரிகரி-அக்நிசாக்ஷி), சந்தி. வங். 19

எவ்வம்-துன்பம், சித். சரு. 21

எழில்-அழகு, நாட்டு. 7

எழிற்குஎழில், வேத். 31

எற்கு-எனக்கு என்பதன் குறுக்கல், சந்த. சரு. 10; சந்தி. வங். 18

எற்றுதல்-மோதுதல், வேத், 20

என்பு-எலும்பு, வேத். 21

என்றுசூரியன், சம். 21

எனக்கெனக்கு-அடுக்குத்தொடர், தரும. பட். 20

ஏதி-ஆயுதம், படைக்கலம், சம். 48

ஏதுத்தற்குறிப்பேற்றவணி, அருச். தீர். 23

ஏந்தல்-ஆண்மகனிற்சிறந்தவன், உதங்க. 45; சந்த. சரு. 9

ஏர்-அழகு, சம். 30

ஏழ்நாவுடையான்-அக்னி, காண். தக. 6

ஏற்பரியவன்-சூரியன், அருச். தீர். 17

ஏழை-பெண் (பண்பாகுபெயர்), சந்தி. வங். 18; திரௌ. 42

ஐங்கரன்-விநாயகன், வியா. உற். 8

ஐந்தாம்வேதம்-பாரதம், பாயி. (கணபதி), 8

ஐந்து இந்திரர், திரௌ. 50

ஐந்துபூதங்களின் குணங்கள், அருச். தீர். 49 (உரை)

ஐம்பால்-ஐந்துபங்கு, நாட்டு. 8

ஐம்பெரும்பூதம்போல்வார் பஞ்சபாண்டவர், திரௌ. 3

ஐயம்-பிக்ஷை, திரௌ. 31

ஐயாயுதன்-கிருஷ்ணன், வார. 1

ஒடு,எண்ணெடு, வேத். 21

ஒருமதிகுமுவி-ஒருமாதக்குழந்தை, வேத். 17

ஒருமாநிழல் உறைவோர்-ஏகாமிரநாதர், அருச். தீர். 7

ஒருவுதல்-நீக்குதல், வார. 54

ஒல்கு-விரைவு குறிக்கும் இடைச்சொல், சர்ப்ப. 5

ஒவ்வல்-ஒப்புதல், இணங்குதல், வேத்-10

ஒற்றர்-தருமபட். 1

ஒற்றைக்குமையோன்-பலராமன், அருச். தீர். 43

ஒன்றற்கொன்று மாறுபட்டவை. [அறம்-பாவம்; சுவர்க்கம்-கும்பி (நரகம்)] சந்தி. வங், 31

ஒன்னலர்-பகைவர், வார. 42

ஓகை-உவகை, (மரூஉ), வார. 38

ஓகைசிந்து, (உருவகம்), சித். சரு. 17

ஓதனம்-உணவு, காண். தக. 3

ஓதிமம்-அன்னப்பறவை, வேத். 30. [ஓதிமம் பேதுறும் நடையால்]

ஓவியம் அழகுக்கு எடுத்துக்காட்டு, அருச். தீர். 21

ஓவுதல்-ஒழிதல், இடையீடுபடுதல், பாயி. 1

கனவேந்தன்-இந்திரன், காண். தக. 4

கங்குல்-இரவு, அருச். தீர். 16

கச்சபம்-ஆமை, உதங்க. 25

கச்சியில் ஏழுநதிகள், அருச். தீர். 47

கட்செவி - பாம்பு, கட்செவிகேதனன் - பாம்புக்கொடியோன், துரியோதனன், வார. 1

கடம்-கலசப்பானை, சம். 43 —

கடனியற்றல், சர்ப்ப. 6

கடுந்தவத்தின் இலக்கணம், சந்தி. வங். 27

கடோற்கசன், வேத். 12. (கடம்-குடம். உற்கசம்-மயிரில்லாதது).

கண்படை-துயில், வார. 4

கணையே அணை (படுக்கை)யாவது, சம். 50

கதலி-வாழை, (மகளிர் தொடைக்கு ஒப்பு), வேத். 30

கதிர்மகள்-தபதி என்பவள், சித். சரு. 4

கதையவன்-வீமன், (பொருட்பெயர்), வேத். 10

கந்தன்-முருகன். வேத். 12

கந்திருவம் எனும் மணம், வேத். 12

கபாலி-உருத்திரன், அழித்தற்கடவுள், பாயி. 5

கபிலை-காமதேனு, சந்த. சரு. 12

கமடம்-ஆமை, நகர. 1

கயநகர்=கஜநகர், அத்தினபுரி, வார. 58

கயம்=கஜம், யானை, துட். 8

கயன் இட்டசாபம், சந்தி. வங். 20

கர்ணனுக்குப் பதினைந்தாண்டுகளுக்குப் பின் பிறந்தவன் தருமன், வார. 1

கரவின்செற்றல்-வஞ்சகவழியால் ஒழித்தல், வார. 41

கரா-முதலை, நகர. 1

கராசலம்-யானை, பாயி. 7

கருக்கொண்டமகளிர் மேனிநிறவேறுபாடுகள், அருச். தீர். 46

கருடன்நச்சிய வரங்கள் இரண்டு, உதங்க. 29 (உரை)

கருடன்விஷ்ணுவுக்கு ஊர்தியும் கொடியும் ஆதல், உதங்க. 29

கருணையில்சிந்து ஒப்பு, (சிந்து-சமுத்திரம்), வேத். 31

கருத்துடையடைகொளி, வார. 33; சந்தி. வங். 21; திரௌ. 60

கருத்துடையடைமொழி, அருச். தீர். 2

கருப்பதானம், (வடசொல்) சந்தி. வங். 21
கருமேகத்தையும் கடிந்த கூந்தல், வேத். 26
கருவுற்பத்தி, சந்தி. வங். 31
கரைத்தல்-சொல்லுதல், வார. 56
கலிகடிந்தோர்-கலியினால் ஏற்படும் தீமைகளை நீக்கினவர், சர்ப்ப. 8
கலித்தல்-நழுவுதல், வியா. உற். 2
கலிமக்களின் பான்மைகள், பாயி. 6
கலிமகளைப் பைந்தமிழாய் உறுவான் என்றது, பாயி. 6
கவி-சுக்கிரன், பிரபஞ். உற். 11
கவிக்கூற்றுச்செய்யுள், வார. 38
கவிதுவசம்-குரங்குக்கொடி, காண். தக. 5
கவிகை-குடை, காண். தக. 14
கவின்-அழகு, வார. 32
கவுசிகன் ராஜரிஷியாதல், சித். சரு. 10
கவுந்தி-குந்தி என்பதன் சிதைவு, சம். 36
கழல், (தானியாகுபெயர்), சித். சரு. 27
கழை-கரும்பு, நாட்டு. 4
கழை கார்முக மாரன்-மன்மதன், அருச். தீர். 24
கழைகூற்றும் சிற்றுண்டியும் ஆவது, சம். 50
களவு-களாப்பழம், (கருமைக்கு ஒப்பு), உதங்க. 34
கற்கி-குதிரை, வார. 27
கற்பகத்தடக்கைவீரர், திரௌ. 9
கன்மாடபாதன் வரலாறு, சம். 38
கன்னல்-கரும்பு, தரும. பட். 13
கன்னி-கன்னியாகுமரி, அருச். தீர். 14
கனங்குழை, ஆகுபெயர், துட். 10
கனற்கண்ணால் மதனர் உடலம் எரித்தபிரான்-சிவன், வார. 35
கனன்-கன்னன் என்பதன் தொகுத்தல், திரௌ. 60
கனிட்டர்-தம்பியர், வார. 57
கனைகழல், திரௌ. 24

காசிபரின் ஏனையமனைவியர் பெற்றவை, பிரபஞ். உற். 7
காசிபரின் மனைவியர் ஐவர் பெற்றவை, பிரபஞ். உற். 6
காசினிமாது, இருபெயரொட்டு, சித். சரு. 14
காட்டம்=காஷ்டம்-விறகு, திரௌ. 17
காட்சியணி, வேத். 26
காண்டவப்பேர் அடவி, காண். தக, 4
காண்டவ வனம் தேவேந்திரனுக்கு உரியது, காண். தக. (முன்னுரை)
காந்தர்வ விவாகம், துட். 14
காமக்கனல், அருச். தீர். 22
காமபாலன்-பலராமன், வார. 1
காமமிக்கமழிபடர்கிளவி, அருச். தீர். 29
காமவெப்பம் தணிக்கும் உபகரணங்கள், அருச். தீர். 22
காயத்துற்றோன் – கிங்கரன், (விசுவாமித்திரனல் ஏவப்பட்ட ராக்ஷஸன்), சித். சரு. 16
காயம்-உடம்பு, வியா. உற். 6
கார்முகம்-வில், வார. 22
காரிகை-பெண், சம். 3
காலையில் புட்கள் ஒலித்தல், திரௌ. 1
காளை, (உவமவாகுபெயர்), சந்த. சரு. 6
கான்முளை-மகன், சந்தி. வங். 3
கிங்கரன் என்னும் ராட்சசன் ஆவேசித்தல், சித். சரு. 14
கிலேசம்-வருத்தம், திரௌ. 58
கிளத்திடுதி-சொல்லுவீராக, சிறப். பாயி. 4
(கிளத்தல்-சொல்லுதல்)
கின்னரர் கிம்புருடர், பிரபஞ். உற். 9
குகன் - முருகன், (அடியார் மனக்குகையில் வசிப்பவன்), சந்த சரு. 16
குசை-தருப்பை, உதங்க. 31
குடதிசை-மேற்கு, அருச். தீர். 16
குடைநிழல், அருச். தீர். 1
குண்டை-ரிஷபம், எருது, உதங்க. 7

குணம்-வில்லின் நாண், சந்த. சரு. 35

குத்திரம்-வஞ்சகம், இழிவு. பாயி. 3

குபேரன் பாண்டுவாகப் பிறந்தான், பாரத, உற். 6

கும்பகர்ணன் தூக்கத்தில் பேர்பெற்றவன், வார. 4

கும்பகாரன்-குயவன், திரௌ. 9

குயம்-முலைக்கண், வேத். 8

குரகதம்-குதிரை. உதங்க. 7

குரவர்-பெரியோர், வார. 6

குரி-குருவி என்பதன் சிதைவு, காண். தக. 25

குரீஇ-குருவி (சார்ங்கப் பறவையென்பர்), காண். தக. 22

குரிசில்-ஆண்பாற் சிறப்புப்பெயர், அருச். தீர். 16

குருநாடு என்றதன் பெயர்க்காரணம், நாட்டு. 9

குருவமிசம், சவ்வருணன் மகன் குரு முதல் தொடக்கம், துட். 25,

குரைசெய்கடல்-ஒலிக்கின்றகடல், சர்ப்ப. 8

குலாலன்-குயவன், திரௌ. 8

குலிசன்-இந்திரன், அருச். தீர். 37

குலுகுலுங்து, இரட்டைக்கிளவி, காண். தக. 10

குழல்-கூந்தல், சந்தி. வங். 15

குழிபடும்பணை, சம். 24 (குழி-ஒரு நில அளவு)

குறங்கு-தொடை, திரௌ. 14

குறித்தி-சொல்லுவாய், (முன்னிலையேவல்), சந்த. சரு. 10

குறை-கத்தரிக்கருவி, வேத். 28

கூ-பூமி, சம். 49

கூடல்-மதுரை. திரௌ. 22

கூறு-பாதி, பகுதி. தரும. பட். 2

கூறைமாறுடல், சந்தி. வங். 13

கேதனன்-கொடியுடையவன், வார. 1

கைப்பிடித்தல் - பாணிக்கிரகணம் (திருமணஞ்செய்தற்கு இலக்கணை), திரௌ. 19

கொங்கு-வாசனை, காண். தக. 1

கொடு-கொண்டு என்பதன் தொகுத்தல், நாட்டு. 7

கொப்பூழ் துலங்கிடச்செய்தல், அருச். தீர். 22

கொல்லியல்-போர்த்தொழில், திரௌ. 30

கொவ்வைச்செவ்வாய், (கொவ்வை-கோவைக்கனி), திரௌ. 16

கொழுந்தியர்-உடன்பிறந்தான் மனைவியர், சம். 1

கொறுக்கை-நாணற்கட்டை, வார. 7

கோகன்னன்-கோகர்ணன், அருச். தீர். 15

கோடு-(பசுவின்) கொம்பு, சித். சரு. 9

கோதை-மாலை, (மாலைபோன்றுளுக்கு ஆகுபெயர்), சந்தி. வங். 13

கோமயம்-சாணம், உதங்க. 7

கோல்-அம்பு, திரௌ. 18

கோவியர்-கோபஸ்திரீகள், அருச். தீர். 25

கோவையொத்தஇதழ்-(கொவ்வை-கோவைக்கனி), சந்த சரு. 38

கோள்கள்-கிரகங்கள், சம்.41,

சகடு-பண்டி, வேத். 14

சகுனி சூதாட்டத்தில் வல்லவன், திரௌ. 20

சசி-இந்திராணி, நகர. 4

சஞ்சலை-இலக்குமி, வேத். 30

சண்டன்-யமன், காண். தக. 19

சத்திரப்பெயர்மகம்-சத்திரயாகம், நகர. 7

(இந்த யாகம் பன்னிரண்டு வருடங்கள் செய்யத்தக்கது)

சதமகம்-நூறு அசுவமேதயாகம், துட். 22

சதமகர்-நூறு புதல்வர். சித். சரு. 10

சதுமறை-நான்கு வேதங்கள், சந்தி. வங். 19

சந்தனம்=ஸ்யந்தனம், (வடசொல்), தேர், திரௌ. 39

சந்தனு என்ற பெயர்க்காரணம். துட். 26 (உரை)

சந்திரவமிசம் இரண்டு கிளையினது, சிறப். பாயி. 9

[1. புதன் தொடங்கி வருவது, 2. பூரு தொடங்கி வருவது]

சந்திரன் புதனைப்பெறுதல், சந்தி, வங். 1

சந்திரனைச் செஞ்சடையில்வைத்தவன், அருச். தீர். 26

சந்து-சமாதானம், சிறப். பாயி. 12

சம்பவம்-பிறத்தல், சம். சரு. முன்னுரை

சம்பு-[சுகந்தருபவன்] சிவபெருமான், திரௌ. 46

சமதக்னி, பிரபஞ். உற். 11

சமன்-யமன், சம். 22

சர்மிஷ்டை தேவயானியைக் கிணற்றில் தள்ளுதல், சந்தி. வங். 14

சரசுவதி சங்குவண்ணம், பாயி. 2

சரசுவதிதேவி இலக்குமியின் செந்நிறத்தை மேற்கொள்ளல், துட். 6

சரதம்-உண்மை. துட். 18

சராசந்தன் துளவோனைப் பின்கண்டு இசைகொண்டவன் திரௌ. 21

சராசரம்-(சர+அசரம்) தீர்க்கசந்தி, தாவர சங்கமம், காண். தக. 23

சலம்-கோபம், திரௌ. 20; ஜலம். நீர், நாட்டு. 1

சவ்வருணன்=ஸம்வரணன், துட். 25

சவரர்=சபரர், வேடர், உதங்க. 22

சவுபலன்-சகுனி, வார. 2

சன்மிட்டை=சர்மிஷ்டை, (அசுரர்களுக்குத் தலைவராகிய விருஷ பர்வாவின் மகள்), சந்தி. வங். 13

சனற்குமாரமுனிவர்கள் அரசகுமாரர்களாதல், பாரத. உற். 1

சாதம்=ஜாதம், பிறப்பு, வார. 24

சாதுர்மாஸ்ய சங்கற்பம்-மழைக்காலத்தில் நான்குமாதம் துறவி கள் ஒரே இடத்தில் தங்குதல், அருச். தீர். 18

சாந்தியென்னும் யாகம், நகர. 9

சாபம்-வில், திரௌ. 18

சாமளவண்ணம் பார்வதி, பாயி. 2, (சாமளம்-கருமை)

சாயகம்-அம்பு, திரௌ. 38

சாயல்-சமுதாய சோபை, (மயில் ஒப்பு), பாயி. 4; வேத். 30

சாலி-அருந்ததி, (கற்பினில் ஒப்பு), வேத். 31; செந்நெற்பயிர், நாட்டு. 4

சாலிபதி-வசிட்டன், [அருந்ததி கணவன்], சித். சரு. 10

சான்றவீ-கங்கை, சந்த. சரு. 22

சிகரி-கோபுரம், நகர. 2

சிகை-தலைமயிர், சித். சரு. 2

சிங்கக்கொடி வீமனுக்கு, வார. 19

சிசுபாலன், சல்லியன், பகதத்தன், சராசந்தன், கிருதவர்மா இவர்களின் ஜனனம், பாரத. உற். 4

சித்தசன்-மன்மதன், சம். 48

சித்திபுத்தி இருவரும் குந்திமாத்திரையாய்ப் பிறந்தவர், பாரத. உற். 6

சித்திரரதன் வீணையில் வல்லவன், சித். சரு. 1

சித்திரவாகனன்-சித்திராங்கதையின் தந்தை, அருச். தீர். 10

சிந்து-கடல், நாட்டு. 5; வேத். 27

சிம்புள்-சரபப்பட்சி, திரௌ. 9

சிலீமுகம்-அம்பு, காண். தக. 5

சிலைக்குறி-வில்தழும்பு, அருச். தீர். 19

சிலைமதன்-கரும்புவில்லுடைய மன்மதன், திரௌ. 15

சிலைமீளி-அருச்சுனன், [மீளி-சிங்கம்] (உருவகம்), அருச். தீர், 12

சிலைவளையாமல் சென்னிவளைந்து என்றது நயம், திரௌ. 26

சிவபிரான் மூங்கிலில் தோன்றினன், வார 24

சிறப்புப்பாயிரம்-அதற்குக்காரணம், சிறப். பாயி. முன்னுரை

சீதனம் தருதல், [ஸ்ரீதனம்-மகட்குக் கொடுக்கப்படும் செல்வம், மணச்சிறப்புப்பொருள்கள்], அருச். தீர். 44

சீவன்-பிருஹஸ்பதி, சந்தி. வங். 8

சுகமொழி-கிளிபோன்ற பேச்சினிமை, (சுகம்-கிளி) சந்த. சரு. 15

சுசி-பரிசுத்தம், உதங்க. 31

சுணங்கு-தேமல், வேத். 29

சுதர்-பிள்ளைகள், சிறப். பாயி. 10

சுந்தோபசுந்தர், (சுந்தர்+உபசுந்தர்) குணசந்தி, தரும. பட். 17

சுந்தோபசுந்தர்வரலாறு, தரும. பட். 16-20

சுயம்வரத்திற்கு மன்னர் திரளல், வேத். 32

சுயம்வரம், வேத். 24

சுயோதனன்-துரியோதனன், (நன்கு பொருபவன்), சிறப். பாயி. 12

சுரத்தாள்-இசையிலையுடையாள், வேத். 30

சுரதவின்பம்-புணர்ச்சியின்பம், அருச். தீர். 14

சுரர்-தேவர்கள், சந்தி. வங். 7

சுருதிக்கிழவர்-வேதம்வல்ல பிராமணச்சிரேட்டர், சர்ப்ப. 1

சுருதிமுனிவர்-அந்தணர், அருச். தீர். 14

சுரேசனூர்-வானுலகு, சந்த. சரு 26

சுவ்வு-'சுவ்' என்னும் ஒலிக்குறிப்பு, வியா. உற். 3

சுவணம் ஏர்-பொன்னேர், நாட்டு. 6

சுவேதம் மா-வெள்ளைக்குதிரை, காண். தக- 5

சுஞசி-இந்திரன், வார. 14

சூட்சி=சூழ்ச்சி, உபாயம், வார. 45

சூதமாமுனி பிரமனையொத்தவர், அவையடக். 10

சூதன்-தேர்ப்பாகன், சம். 29

சூதன் பதினெண்புராணங்களை நைமிச முனிவர்க்குச் சொன்னர் அவையடக். 10

சூது-சூதாடு கருவி, முலைக்கு ஒப்பு, திரௌ. 16

சூரியன் மைந்தன்-யமன், சம்-21

சூலார்கார், வேத். 26

சூழல்-இடம், ஆச்சிரமம், வேத். 11

செம்மல், ஆண்பாற் சிறப்புப்பெயர், சந்தி. வங். 18

செய்யாள்-இலக்குமி, பாரத. உற். 1

செயன்-செயிப்பவன், திரௌ. 12

செழியன்-பாண்டியன், அருச். தீர். 10

சென்னி-தலை, வார. 22

செனிமின்கள்-பிறப்பெடுங்கள், (முன்னிலைப்பன்மை வினைமுற்று, விகுதிமேல் விகுதிபெற்றது), சந்த. சரு. 13

சேடன்-ஆதிசேடன், நகர. 1

சேதிநாட்டரசன் சிசுபாலன், திரௌ. 21

சேறி-செல்வாயாக, முன்னிலை வினைமுற்று, (செல்-பகுதி, இ-விகுதி), துட். 19

சேனம்-பருந்து, அருச். தீர். 5

சேனையாழி-(உருவகம்) சேனைசமூத்திரம், சித். சரு. 8

சொற்பொருட்பின்வருநிலை, நகர. 2; திரௌ. 14

சொற்றி-சொல்லுவாயாக, (முன்னிலை வினைமுற்று), துட். 11

சோதிதிருமலை-திருமாலிருஞ் சோலைமலை, அருச். தீர். 14

சோமகேசர்-சோமகுலத்து அரசர்கள், வார. 28

செம்பஞ்சு ஆர்தருஞ்சிறடி, பாயி. 4

சனமேசெயன் வைசம்பாயனரால் வலியதீவினை நீங்கப்பெற்றான், பாயி. 11

ஞானம் தலைப்படில் மாயை கழலும், பாயி. 3

தக்ககன்-தக்ஷகன், (பாம்பு), காண். தக. 15

தகடு-பொற்பட்டம், சம். 23

தகுதி-தாரதம்மியம், வார. 24

தகுதியின்மையணி, வேத். 19

தகுவர்-அசுரர், சந்தி. வங். 7

தஞ்சம்-தாழ்வு, பணிவு, சிறப். பாயி. 3

தண்டம்-முனிவரதுகோல், சித். சரு. 10

தணத்தல்-விட்டுப்பிரிந்துபோதல், சம். 4

தணிகாசலம்-தணிகைமலை, அருச். தீர். 6

தணிவுஅற-குறையில்லாதபடி, அருச். தீர். 38

தந்தி-யானை, சித். சரு. 7

தபதி=ஸ்தபதி, சிற்பி, வார. 59

தம-ஆறனுருபு ஏற்றது, அருச். தீர். 39

தமிழணங்கின் பெருமைகள், பாயி. 6

தமிழெதிர் ஏறிய வைகைப்பதி-மதுரை, அருச். தீர். 9

தரணி-பூமி, பிரபஞ். உற். 4

தரளம் தொங்கல்-முத்துமாலை, காண். தக. 14

தரியலர்-பகைவர், அருச். தீர். 13

தருக்கோமகன்-இந்திரன், அருச். தீர். 8

தவர்க்கு இராமன்-(தவர்-வில்), துட். 1
தவளம்-வெளுப்பு, உதங்க. 8
தவாக்கினி-நிலத்தில் அணையாத அக்னி, சித். சரு. 25
தவிசு-ஆசனம், சர்ப்ப. 10
தழற்கண் உதித்தான்-திட்டத்துய்மன், திரௌ. 19
தளிர் என்னும் உலக்கனல், காண். தக. 1
தற்குறிப்பேற்றவணி, திரௌ. 1, 7
தற்குறிப்பேற்றவுவமையணி, திரௌ. 2, 31
தறி-தூண், உதங்க. 41
தன்மன்தலம்-இந்திரப்பிரத்த நகர், அருச். தீர். 39
தன்மைத்தற்குறிப்பேற்றவணி, காண். தக. 14
தனஞ்செயன்-அக்னிதேவன், அருச். தீர். 38; அருச்சுனன், அருச். தீர். 20
தனதன்-குபேரன், நகர. 1
தனயன்-[தனையன்] புத்திரன், துட்-3
தனம்-சீதனம் என்பதன் முதற்குறை, திரௌ. 12
தக்ஷகன் புரிந்தகொடுமைகள், உதங்க. 10
தக்ஷகன் பரீட்சித்து ஏழாம்தினம் படுவன் என்றது, உதங்க. 40
தாணு=ஸ்தாணு, சிவன், திரௌ. 47
தாதமன்னன்-(தாசபூபதி) வலிஞர்களின் தலைவன் [தாதர்-(தாசர்) வலிஞர்], வியா. உற். 4
தாதி-பரிசாரிகைப்பெண், வேலைக்காரி, சம். 14
தாது-காவிக்கல், அருச். தீர். 40; மகரந்தப்பொடி, காண். தக. 1
தாதுவரை அருச்சுனன் தோளுக்கு ஒப்பு, அருச். தீர். 40
தாமம்-மாலை, சர்ப்ப, 8
தாலாட்டுதல், அருச். தீர். 47
தானவர்-அரக்கர், வேத். 5
தானை-சேனை, சித். சரு. 9
திட்டத்துய்மன் அக்னியின் சக்தியமிசம், பாரத. உற். 7
திண்திறல்-ஒருபொருட்பன்மொழி, சந்தி. வங். 3
திமிலர்-செம்படவர், வியா. உற். 4
(திமில்-படகு)

தியாகியென்னும் கன்னன், திரௌ. 20

திரம்=ஸ்திரம், நிலையாகநிற்றல், அருச். தீர். 15

திரிபு என்னும் சொல்லணி, சந்தி. வங். 1

திருஅயிந்திரபுரம், அருச். தீர். 8

திருக்கு-திருஷ்டி, கண், வியா. உற். 27

திருக்கோவலூர், அருச். தீர். 8

திருதராட்டிரன், காந்தாரி, துட்டசதுட்டர், ஏனைய கௌரவ புத்திரர்கள் தோற்றம், பாரத. உற். 3

திருநாவலூர், அருச். தீர். 8

திருமால் இளவல்-சாத்தகி, திரௌ. 21

திருவணை-சேது, அருச். தீர். 14

திருவரங்கம், அருச். தீர். 8

திருவினும்பொற்பினள்-திரௌபதி, திரௌ. 27

திருவீரட்டம் அதிகை, அருச். தீர். 8

திரௌபதி–சிவபிரான் நெற்றிக்கண் அக்னி சக்தியமிசம், பாரத உற். 7

திளௌபதி உபபாண்டவரைப் பயத்தல், அருச். தீர். 48

திரௌபதியின் பண்புநலம், வேத். 31

திரௌபதியின் பேரழகும் அவயவச்சிறப்பும், (கேசாதிபாத வருணனை), வேத், 26-30

திரௌபதியின் முற்பிறப்பு வரலாறு. திரௌ. 43-50

திலம்-எள்,

திலோத்தமை பெயர்க்காரணம் (திலம்-எள், உத்தமா-மேலான வள்), தரும. பட். 18

திவசம் செய்பவன்-சூரியன், (திவசம்-நாள்), சம். 28

தீர்க்கதமஸ், சம், 3

தீர்த்தயாத்திரை, தரும. பட். 21

துட்டசதுட்டர்-துரியோதனன், துச்சாதனன், சகுனி, கர்ணன், பாரத. உற். 3

துட்டியங்தன் பிறப்பு, துட். 7

துணர்–கொத்து, சம். 5

துணை-பாங்கி, நாட்டு. 5

துணைவர்-உடன்பிறந்தோர், வேத். 18

துப்பிதமாள்-திரௌபதி, திரௌ. 43

தும்பியைக் கழுவிடுதல், சம், 20

துயராம் ஆழி, (உருவகம்), துட். 20

துரங்கத்தாமா-அசுவத்தாமா, வார. 10 (சிவனருளால் தோன்றியவன்)

துரிசு-குற்றம், துட். 5

துருபதேயன்-துருபதன், வார. 29

துரோணகும்பம்-பதக்களவு கொண்டதொரு பாத்திரம், வார. 9

துரோணம்–இரண்டு மரக்கால், பதக்கு, வார. 9

துரோபதி-திரௌபதியென்பதன் சிதைவு, வேத். 26

துவர்கடுக்கும் வாய், துட். 1; (துவர்-பவளம், கடுக்கும்-ஒத்த)

துவரை-துவாரகை யென்பதன் மரூஉ, சிறப். பாயி. 13; தரும. பட். 14

துவாதசாதித்தர்-பிரபஞ், உற். 5

துளவக்கருமுகில்-கண்ணபிரான், காண். தக. 2

துளவநாறும் திருவுரு, அரு. தீர். 14

துளவோன் - துளசிமாலையை யணிந்தவன், கண்ணபிரான், திரௌ. 21

துறுதல்-நெருங்குதல், வார. 28

துன்மை-தீமை, உதங்க. 13

தூது-தூதுவன், (பண்பாகுபெயர்) சந்த. சரு. 32

தூமம்-புகை, காண். தக. 8

தெக்கணம்-தட்சிணம், தெற்குத்திக்கு, அருச். தீர். 5

தெக்கிணை-தட்சிணை, வார. 15

தெரிவை-பெண், துட். 15

தெருட்டுகென–வியங்கோளின் அகரவீறு தொகுத்தல், திரௌ. 38

தெவ்வர்-பகைவர், சிறப். பாயி. 13

தெறுவல்–கொன்று போக்கிடுதல், சந்த. சரு. 13

தென்புலத்தார்-பிதிரர்கள், நாட்டு. 8

தேசிகர்-பெரியோர், வார. 18

தேவயானை-சுக்கிராசாரியர் மகள், சந்தி, வங். 6

தேவவிரதன்-பீஷ்மன், சந்த. சரு. 17

தையன்மார்-பெண்டிர், துட். 18

தொடை-மலரம்பு, சம். 51; தொடர்ச்சி, கட்டுக்கோப்பு, சந்தி. வங். 23

தொடர்புயர்வுநவிற்சியணி- நகர. 2; தரும. பட். 12

தோகை-பெண், (உவமவாகுபெயர்), சந்தி. வங். 19

தௌஹித்திரர்-மகளின்மகார், சந்தி. வங். 30

நக்கன்நேர்தவத்தோன்-மந்தபாலமுனி, காண். தக. 22, (நக்கன்-சிவன்)

நகுலசகதேவர் அசுவினிதேவர்கள் அருளால் மாத்திரியிடம் தோன்றியவர்கள், சம். 47

நகுலசகதேவர், திரௌபதி, திட்டத்துய்மன் இவர்களின் ஜனனம், பாரத. உற். 7

நகுஷன்-ஆயுமகன், சந்தி. வங். 6

நகை இகழ்ச்சிபற்றியது, சித். சரு. 1

நஞ்சு அமுதானது, சித். சரு. 15

நடந்ததெல்லாம்-ஒருமைப்பன்மைமயக்கம், சந்தி. வங். 15

நடை-ஒழுக்கம், சந்த. சரு. 4

நடைதளர்வாதல், அருச். தீர். 46

நதிபுதைத்தல்-நதியில் வீசியெறிதல், சந்த. சரு. 7

நதிமகன்-வீடுமன், சந்த. சரு. 29

நதிரதம்-(உருவகம்), சம். 29

நரநாரணர்-கிருஷ்ணர்ச்சுனர், காண். தக. 7. (நரன்-அருச்சுனன் நாரணன்-கிருஷ்ணன்)

நரபலி-மனிதனைப் பலியிடுதல், வேத். 14

நரம்புகள் பசத்தல், அருச். தீர். 46

நரன்-அருச்சுனன், சிறப். பாயி. 14

நரேசன்-நரர்களுக்குள் சிறந்தவன், சந்தனு. சந்த. சரு. 26

நரைதிரைமூப்பு-(உம்மைத்தொகை), சந்தி. வங். 24

நலத்துக்கு வந்த விராமன்–பலராமன், திரௌ, 20
[நலம்-மகளிரைத்தழுவும் இன்பம்]

நலம்-அழகு, வேத். 29

நலம் மாந்துதல்-அழகு பருகுதல், அருச். தீர். 4

நளினம்-தாமரை, திரௌ. 2

நறை-வாசனை, வேத். 28

நனை-மொட்டு, பிரபஞ். உற். 3

நாகபடம் என்னும் காதணி, வேத். 28

நாகர்-சர்ப்பசாதியார், வார. 6

நாகாசலம்-திருவேங்கடமலை, அருச். தீர். 6

நாட்டம்-கண், தரும. பட். 1

நாட்டமிழந்தவேந்து-திருதராட்டிரன், சம். 42

நாப்பண்-நடு (middle), உதங்க. 31

நாரி - வில்நாணி, காண். தக-6

நாள்கள்-நாயகன்-சந்திரன். (நாள்கள்-நட்சத்திரங்கள்), சந்தி. வங். 1

நாற்கோட்டுப்புகர்மா-ஐராவதம், திரௌ. 21

நான்கு ஆசிரமநிலைகள், சந்தி. வங். 31

நிசாசரன்-இரவில் சஞ்சரிப்பவன், அரக்கன், வேத். 6

நிசிசரன்' வேத். 14

நிணங்கமழ்வேலான், நகர. 5

நித்திலவடம்-முத்துமாலை, அருச். தீர். 22

நிதர்சனவணி, அருச். தீர். 26

நிருதி=நிருருதி, திக்குப்பாலகர்களில் ஒருவர், காண். தக. 19

நிரை-பசுக்கூட்டம், சிறப். பாயி. 12

நீண்டவன்-திரிவிக்கிரமனாகிய திருமால், தரும. பட். 10

நீத்தம்-வெள்ளம், நாட்டு. 5

நீவுதல்-தடவுதல், சம். 8

நூல்நுதலும் பொருள்களின் சுருக்கம், சிறப். பாயி. 8-15

நூல்வந்தவழி, யாப்பு. பயன்கூறுவது, சிறப். பாயி. 7

நூல்வழா வேட்ட இன்பம், திரௌ. 58

நூற்றைவர்-துரியோதனுதியர் நூற்றுவரும், பாண்டவர் ஐவரும் சேர்ந்த தொகையினர், துட். 31

நூறுதல்-கொல்லுதல், சம். 31

நெஞ்சிடை புழுக்கங்காட்டல், (புழுக்கம்-தழல்போல் எரிச்சல்), உதங்க. 24

நெய், சமிதை இவற்றையுருத்து ஆரழலிலவளர்த்தல், சர்ப்ப. 1

நெற்களின் அரிகளைச் சுமையாகக் கட்டுதல், நாட்டு. 7

நேர்–ஒப்பு, நாட்டு. 9

நேரிழை-(பண்புத்தொகையன்மொழி), தரும. பட். 18

நைமிசவனம்-நைமிசாரண்யம், அவையடக். 10

பகடு-எருமைக்கடா, நாட்டு. 8

பகதத்தன், திரௌ. 21

பகம்-கொக்கு, திரௌ. 9

பகழி-அம்பு, சம். 32

பகீரதி-பாகீரதி, கங்கை, துட். 8

பங்கம்-தோல்வி, வெட்கம், ஈனம், சந்த. சரு. 37; உதங்க. 21

பங்குனியுத்தரத்தில் அருச்சுனன் பிறத்தல், சம். 46

பஞ்சவர்-பாண்டவர் ஐவர், சிறப். பாயி. 10

படங்கள் போற்செல்லும் புட்கள், (படம்–பட்டம், காற்றடி) [உவமையணி], காண். தக. 9

படைவிழி, (உவமத்தொகை), அருச். தீர். 46

பணி-பாம்பு, அருச். தீர். 27

பணிகள்-நாகர்கள், உதங்க. 4

பணை-வயல்கள், நாட்டு. 6

பத்துநாட்கள்போரிடல் (பீஷ்மனும் பரசுராமனும்) சந்த. சரு. 35

பதம்-சோறு, வேத். 14

பதனம்-பத்திரம், பாதுகாப்பு, உதங்க. 3

பதினெண்புராணங்கள், வியா. உற். 8

பதுமை-லக்ஷ்மி, சந்த. சரு. 2

பப்ருவாகனன், அருச்' தீர். 14

பயிலுதல்-இடைவிடாமல் தங்குதல், பாயி. 1

பயோததி-சமுத்திரம், சித். சரு. 14

பரசுராமன் ஆசிரமம், அருச். தீர். 14

பரதகுலத்தினோர், நாட்டு. 1. (பரதன்-துட்டியந்தன் மகன், சகுந் தலையிடம் தோன்றியவன்)

பரதவமிசம், துட். 22–30வரை

பரம்பு ஊர்தல்-பரம்படித்துச் சமமாக்குதல், நாட்டு. 6

பரவை-கடல், திரௌ. 1

பராசரன் வியாசன் தந்தை, பாயி. 7

பரிக்குரிய பெயரோன்-அசுவத்தாமன், வார. 11

பரிகரித்தல்-ஓம்புதல், பாதுகாத்தல், உதங்க. 12

பரிய-பருத்த, திரௌ. 26

பரீட்சித்து பெயர்க்காரணம், துட். 29 (உரை)

பருணிதர்-புலவர்; ஞானபரிபாகமுடையவர், அருச். தீர். 48

பருதிமைந்தன்-கர்ணன், (பருதி-சூரியன்), வார. 23

பரை-பார்வதி, சந்தி. வங். 1

பலதேவன் ஓர்குமையையுடையவன், திரௌ. 38; அருச். தீர். 43

பலராமன் மேனிநிறம் வெண்மை, நாட்டு. 1

பவனன்-வாயு, வேத். 18

பற்குனன்-பல்குநன் (பங்குனியுத்தரத்திற் பிறந்தவன்). சம். 46

பன்னகம்-பாம்பு, சம். 44

பன்னி-பத்தினி, மனைவியர், உதங்க. 1

பன்னுதல்-சொல்லுதல், சம். 17

பனியோங்கல்-இமயமலை, நாட்டு. 1

பாகசாதனன்-இந்திரன், அருச். தீர். 17

பாகு-பாகன், சந்த. சரு. 36

பாஞ்சாலி-திரௌபதி (தத்திதாந்தநாமம்) வேத். 33

பாண்டவர் ஐவர்தோற்றம் கூறுதல். துட். 28

பாண்டவர்க்கு நிகழும் நன்னிமித்தம். திரௌ. 4–5

பாண்டவர் வைகுந்தம் அடைந்தமை, சிறப். பாயி. 15

பாண்டுவின் குடும்பஜனனம், பாரத. உற். 6

பாம்புக்குப்பகை கருடன், வார. 42

பார்க்கவன்-சுக்கிராசாரியன், சந்தி. வங். 6

பார்த்தன் - அருச்சுனன், பிருதையின் மகன், துட். 29; அருச். தீர். 14

பாரதப்போர் நிகழ்ந்தது ஊழ்வினைபற்றி, சிறப். பாயி. 4

பாரதம் கேட்போர் பயன், பாயி. 11

பாரளந்தான்-திரிவிக்கிரமனுகிய மகாவிஷ்ணு, நாட்டு. 4

பாரி-மனிவி, சம். 38

பால்மொழியினுள்-திரௌபதி, திரௌ. 25

பாலைக்கிழத்தி-நீலி, துர்க்கை, கொற்றவை, நாட்டு. 4

பாறு-பருந்து, வேத். 24 (பாறுலாவிய வடிவேல்).

பிணை-பெண்மான், சம், 31

பிதாக்கதியின் நண்ணுறுங்காரியம், வார. 45

பிதுர்க்கள் ஆசிர்வாதஞ்செய்தற்குரியர் என்பது, சித். சரு. 22

பிரபஞ்சம்-உலகம். (பஞ்சம் - ஐந்து பூதங்களால் ஆகியது இவ்வுலகம்) பிரபஞ். உற். முகவுரை

பிரமன் மானசிகபுத்திரர் ஆறுபேர், (அத்திரிமுதல் புலகன்வரை) பிரபஞ். உற். 3

பிரமனிடத்துத் தோன்றியவர்கள் இவர்களும், பிரபஞ். உற், 4

பிராசம் என்னும் சொல்லணி, சந்த. சரு. 36

பிராசம், வார. 44

பிருகுவின் வமிசம், பிரபஞ். உற். 11-12

பிலநகர்-நாகலோகத்துநகர், அருச். தீர். 4; பாதாளநகர் (உள்த்வீபம், மகாத்வீபம் என்ப), அருச். தீர். 34

பிலம்-பாதலம், வேத். 29

பிறகுறிப்பு, சித். சரு. 1

பிறிதின்குணம்பெறலணி, வார. 30, 61; வேத். 5; திரௌ. 12 காண். தக. 10

புகர்-சுக்கிராசார்யர், சந்தி. வங். 15

புகர்முகம்-யானை, வார. 19

புகரோன்-சுக்கிரன், சந்தி. வங். 12

புகரோன் அணங்கு-தேவயானை, சந்தி. வங். 12

புகறி-சொல்வாயாக, வேத். 10

புங்கவன்-பரிசுத்தன், துருவாசமுனி, சம். 46

புணை-ஓடம், சம். 5

புத்தி-அனுபோகம், பாயி. 3

புத்திரனில்லாதவர் மோட்சகதியை அடைய முடியாது எனல், காண். தக, 25

புதன் அறிவினிற்சிறந்தவன், நரக. 3

புரத்தி-காப்பாற்றுவாயாக, (முன்னிலையியங்கோள்), காண். தக. 22

புரிநூல்மால், சர்ப்ப. 11, (புரிநூல்-பூணூல்)

புரியவர் யாதவர் போசர், (உம்மைத்தொகை) அருச். தீர். 17

புருகூதன்-இந்திரன், காண். தக. 11

புரூரவா-புதனுக்கும் இளைக்கும் பிறந்த புதல்வன், சந்தி. வங். 3

புரோகிதர் அரசர்க்கு இருத்தல்வேண்டும், சித். சரு. 3

புல்மணம்-தருப்பைப்புல்லின் வாசனை, சம். 12

புல்லர்-அற்பர், ஒழுக்கங்கெட்டவர், சந்தி. வங். 16

புலஸ்தியன், புலகன், கிருது இவர்களின் வமிசம், பிரபஞ். உற். 9

புலவு-புலால்நாற்றம், வியா. உற். 6

புலோமசை-இந்திராணி. காண். தக. 10

புறம்பர், அர்-சற்றுப்போலி, திரௌ. 32

புன்முறுவல் இகழ்ச்சிதெரிப்பது, வார. 29

புனலாட்டுதல்-நீராட்டுதல், திரௌ. 14

புனலிற்பொருந்தும் உப்பாயது, வார, 43

பூசுரர்-பிராமணர், வேத். 32

பூதரம்-மலை, பாயி. 1

பூபாரந்தீர்க்கப்பிறந்தவன் முராரி, திருமால், கண்ணன் பாயி. 7

பூமன்-பிரமன், வார. 59.

பூரிசிரவசு, சிகண்டி, துருபதன், சாத்தகி, விராடன் இவர்களின் தோற்றங்கூறல், பாரத. உற். 5

பூருவினிடமிருந்து பௌரவவம்சம் தொடங்கியது. [சந்திரவமிசம் பௌரவவம்சம் என வழங்கும் சிறப்பினைப்பெற்றது], சந்தி. வங். 26

பூவை-நாகணவாய்ப்புள், (உவமவாகுபெயர்) வியா. உற். 5

பெட்பு-ஆசை, சம். 30

பெண்ணைத்துறை, அருச். தீர். 8

பெருமான்-யானை, சம். 31 (மா-மிருகம்)

பைங்கூம்-பசிய பயிர்கள், நாட்டு. 7

பைந்தமிழ், பாயி. 6

பொன்-இலக்குமி, வேத். 22

பொன்மாரி-(உருவகம்), திரௌ. 25

பொன்மாரிபெய்யுங்கையான்-கர்ணன், திரௌ, 25

பொன்னகர்-அமராவதி, தரும. பட். 13

பொன்னவர்-பிருஹஸ்பதி, சம். 2

பொன்னி-காவேரி, அருச். தீர். 9

பொன்னேர்மின்-திரௌபதி, ஏர்-உவமவுருபு: திரௌ. 29

பொற்பறல் விழிகளால் அருந்துதல், சந்த. சரு. 2

பொறிகள் ஐந்து-மெய், வாய், கண், மூக்கு, செவி, திரௌ. 3

பொறை-பாரம். பிரபஞ். உற். 2

பொறையில்பூமி ஒப்பு, வேத். 31

பொய்ச்ச இடை=பொய்த்த இடை, நுண்ணிய இடை, வியா. உற். 5

பொய்த்த நுசுப்பு-நுணுகிய இடை, அருச். தீர். 44

பொருநை-ஓர் ஆறு, அருச். தீர். 15; தாமிரபரணி, திரௌ. 22

பொருநைத்துறைவன்-சேரன், திரௌ. 22

பொருப்பு-மலை, வேத். 29

பொலன்-அழகு, தரும. பட். 11

பொழில்எனும் கொல்லன், காண். தக. 1

போகவேடை-இன்பத்தினுலாம் வெதுப்பு, சம். 52
போகி-இந்திரன், உதங்க. 31
போகில்-கொப்பூழ், பாயி. 5
போதன்-பிரமன், அவையடக். 10; சர்ப்ப. 11; தரும. பட். 13
போனகத்தில் விரல் வீழ்த்தல், திரௌ. 44
மகபதி-இந்திரன், சந்தி. வங். 7
மகம்உதித்தவன்-திட்டத்துய்மன், தரும. பட். 6
மகவான்-இந்திரன், உதங்க, 28
மச்சகந்தி, வியா. உற். 4
மச்சபுரம்-விராடன் தலைநகரம், சிறப். பாயி. 12
மடங்கல்-சிங்கம், காண். தக. 9
மடவார் போகம் மருவுதல், சந்தி, வங். 26
மத்திரைபுதல்வர்-நகுலசகதேவர், வார. 1
மதகரிதேர்மா, சம். 16
மதம்-செருக்கு, திரௌ. 49
மதனரர்-மன்மதனர், சம். 49
மதி-குபேரன், காண், தக. 19
மதிநுதல்-(உவமைத்தொகையன்மொழி), துட். 16
மதிப்பெயர் நண்ணினேன்-சந்திரன், சந்தி. வங். 1
மதியம் குறையும் கறையும் பெற்றது, வேத். 28
மந்தாகினி-தேவலோககங்கை, நாட்டு. 5, 6, சம், 28
மந்திரம்-அரண்மனை, தரும. பட். 12
மந்திரம்-மாளிகை, நகர. 2
மயல்-காமமயக்கம், வேத். 8
மயன்-அசுரசிற்பி, காண். தக. 22
மயிர்க்கிடை-மயிரிழையளவு, திரௌ. 25
மயிர்க்குழி-மயிர்க்கால், சித். சரு. 9
மயிரொழுங்கு, வேத். 29
மயில், (உவமவாகுபெயர்), திரௌ. 53
மயூரம்-மயில், வேத். 30

மரபுவழுவமைதி, சித். சரு. 18
மருப்பு-யானைத்தந்தம், வேத். 29
மருமம்-மார்பு, திரௌ. 54
மரை-மரைமான், காண். தக. 9
மரை-தாமரை, (முதற்குறை), நகர. 1
மலர்க்கை, (உவமத்தொகை), அருச். தீர். 38
மலரணைகிடத்தல், அருச். தீர். 21
மலரைந்துடையான்-மன்மதன், வேத். 29
மலையசக் கலவை-பொதிகைமலைச் சந்தனம், திரௌ. 15
மலையவெற்பரசன்-பாண்டியன், அருச். தீர். 28
மழு-மழுப்படை, எரியிரும்புப்படை, பிரபஞ். உற். 1
மழு இராமன்–பரசுராமன், பிரபஞ். உற். 1
மழுவாளி-பரசுராமன், சந்த. சரு. 34
மழுவோன்-பரசுராமன், சந்த. சரு. 32
மழைக்கோள்-சுக்கிரன், சந்தி. வங். 7
மள்ளர்–உழவர்கள், நாட்டு. 6
மவுலி-முடி, வார. 33
மறலி-யமன், சம். 20
மறிவிழி, (மறி–மான்), திரௌ. 6
மறுகு – தெரு, திரௌ. 8
மறைக்கொடிமுனி-துரோணன், வார. 11
மறைநான்கு அமைத்தோன்-வியாசன், வார. 34
மன்மதனுக்குப்படை பெண்டிர், திரௌ. 15
மன்றல்-வாசனை, சம். 51
மன்னுதல்-தங்குதல், சம். 34
மனவணக்கம், அருச். தீர். 17
மனுவருள்தோன்றல்-இளன், (அவன் இளையென்னும் பெண்ணுதல்), சந்தி. வங். 2
மனைவியையும் புத்திரனையும் அவமதித்தல் தக்கதன்று, துட். 19

மாகதன்-மகததேச மன்னன் சராசந்தன், திரௌ. 25

மாகர்-தேவர்கள், பாரத. உற். 2

மாசுணம்-பாம்பு. வார. 3

மாடம் ஈவமுறவியற்றுதல், உதங்க. 41

மாடு, ஏழனுருபு இடப்பொருளது, சர்ப்ப. 5; திரௌ. 48

மாதங்கம்-யானை, தரும. பட். 12

மாதர் உறுப்பினைக்காட்டும் வாவி, வியா. உற். 1

மாதுலர்கள்-மாமன்மார், சர்ப்ப. 12

மா துன்னிய பாரதம்-மாபாரதம், வியா. உற். 8

மாமா-ஒருபொருட்பன்மொழி, மீமிசைச்சொல், அருச். தீர். 39

மாயன்மருகன்-முருகன், நாட்டு. 3

மாருதி-வீமன், வார. 1

மாலும் திருவும்போல், அருச். தீர். 11

மாழ்குதல்-மனம் வருந்துதல், உதங்க. 45

மான், (உவமவாகுபெயர்), வேத். 5

மான் அகம்பெறுமதிமரபு-சந்திரவமிசம், சந்த. சரு 1

மானவர்-மனிதர், தரும. பட். 17

மிகையுயர்வுஈவிற்சியணி, வேத். 27; திரௌ. 7

மித்திரன்-சூரியன், சம். 47

மிருதசஞ்சீவினி என்ற வித்தை, சந்தி. வங். 7

மின்னிடை, திரௌ. 2

மினோர்-(மின்னோர் என்பதன் தொகுத்தல்)-மகளிர், வேத். 4

மீனஞ்சுறுவிழியாள், அருச். தீர், 5

மீனர்விழியாள், சம் 33

முக்கண்ன்-சிவபிரான், உதங்க. 33

முகில் ஏழு-ஏழுமேகங்கள், காண். தக. 11

முக்கோல்-திரிதண்டம், அருச். தீர். 15

முத்தலை-சூலம், பாரத. உற். 6

முத்துதல்-சேர்தல், இணைதல், பாயி. 3

மூப்பத்திரண்டு தருமங்கள், அருச். தீர். 7

மும்மதம்-(கன்னமதம், கைமதம், கோசமதம்), சம். 12

மும்மை-மூன்று காலங்கள், சித். சரு. 8

முரசுயர்த்தான்-தருமன், திரௌ. 41

முராரி-விஷ்ணு (முரன் என்னும் அசுரனையழித்தவன்), பிரபஞ்ச உற். 2

முருகன்சரத்தில் (நாணலில்) தோன்றியது, வார. 24

முருகன்பதம்நம்பினுல் காமப்பேயின் பயமில்லை, மரணபயமுமில்லை பாயி. 4

முருந்து-அடிக்குருத்து, நாட்டு. 7

முருந்து-மயிலிறகினடி, பெண்களின் பற்களுக்கு உவமை, வார. 32

முல்லைநிலத்தெய்வம்-கண்ணபிரான், நாட்டு. 4

முல்லைமுகம்கறுத்தல், அருச். தீர். 46

முறைநிரனிறைப்பொருள்கோள், சம். 48

முறைநிரனிறையணி. வேத். 27

முளரிமலர்த்தவிசு-ஓமாக்கினிக்கு ஒப்பு, வார. 32

முன்னவன்-முற்பிறந்தவன், தரும. பட். 4

முனம்-முன்னம் என்பதன் இடைக்குறை, சித். சரு. 26

மூரி-வலிமை, திரௌ. 24

மூவர்-திரிமூர்த்தி, பாயி. 1

மூவருக்கொள்யானை-கணபதி, பாயி. துதி.

மெய்யில்நறைமிகுந்தவள்-யோசனகந்தி, பரிமளகந்தி, சம். 11

மெல்லியல், (பண்புத்தொகையன்மொழி), சம். 24

மேக்கு-மேற்கு, வேத். 25

மேன்மேலுயர்ச்சியணி, திரௌ. 23, 25

மை-செம்மறியாட்டுக்கடா, சந்த. சரு. 35

மைக்களன்-சிவன், (மை-கருமை, களன்-கண்டத்தையுடையவன்) வார. 10

மையல்-மோகம், அருச். தீர். 18

மொய்ம்பு-தோள், சித். சரு. 6

மோகனக்கணை, சந்த. சரு. 16

மௌவல்-முல்லை, நாட்டு. 2

யமகம், திரௌ. 12; அருச். தீர். 38

யயாதி-நகுஷனின்மகன், சந்தி. வங். 6

யயாதிமன்னன் தேவயானியைக் கிணற்றிலிருந்து காப்பாற்றுதல், சந்தி. வங். 15

யாகசேனன்-துருபதன், வார. 28

யாதவர்கள் அனைவரும் முடிதல், சிறப். பாயி, 14

யார்க்கும் உற்று அளிக்கும் கடவுள் ஒன்று உளது, துட். 20

யாளி-யாளியானை, காண். தக. 9

ரேணுகை-சமதக்னி முனிவரின் மனைவி, பரசுராமன் தாய், பிரபஞ்ச. உற். 11

வகுத்தல்-வகைப்படுத்திச்சொல்லுதல், திரௌ. 23

வகையுளிபெற்றுவருதல், சித். சரு. 18

வங்கிசம்=வங்கிஷம், வமிசம், சந்தி. வங்: முன்னுரை

வசந்தனுக்குத் தென்றல்தேர், சம். 51; (வசந்தன்-மன்மதன்)

வசி-கூரிய கழு, வார. 3

வசிட்டர் திரிகாலஞானி, சித். சரு. 8

வசிட்டன்மனைவி அருந்ததி, நகர. 4

வடதரு-ஆலமரம், அருச். தீர். 16

வடவாமுகாக்கினி, [நீரில் அணையாத அக்னி], சித். சரு. 23

வண்குமல்கார்ஓதி-திரௌபதி. திரௌ. 19

வணம் தரும் பருவம், (வணம்-அழகு), சம். 4

வத்திரம்-முகம், பாயி. 3, நகர. 7

வதி-வழி, உதங்க. 2

வதுவை-விவாகம், திரௌ. 51, (சுயம்வரத்தைக் காட்டிவந்தது. வேத். 24)

வந்து-சொல்விழுக்காடு, சந்தி. வங். 24

வய-வெற்றி, திரௌ. 21

வரம்பு-கரை, அருச். தீர். 15

வரம்பு புதுக்கல், நாட்டு. 6

வரால்மீன் கணைக்காலுக்கு ஒப்பு. வேத். 30

வருணவத்திரம்-வாருணாஸ்திரம், (மழைபொழியவைக்கும்), காண். தக. 16

வருந்தல்-அல்லீற்று எதிர்மறை வியங்கோள். திரௌ. 32

வரைமாது-உமையம்மை, அருச். தீர். 7

வல்லி-கொடி, சந்தி. வங். 14

வவ்வுதல்-பலாத்காரமாகக் கைப்பற்றுதல், சித். சரு. 8

வளி-காற்று, வலிமையிற்சிறந்தவன், நகர. 3

வளை-சங்கு, (சங்குவண்ணனாகிய பலராமனுக்குப் பண்பாகுபெயர்) அருச். தீர். 39

வன்னி-பிரமசாரி, சந்த. சரு. 31

வனகிடி-காட்டுப்பன்றி, காண். தக. 9

வனசம்-தாமரை, பாயி. 2

வனசரன்-வேடன், அருச். தீர். 6

வனத்தார்-வனமாலை, துளசிமாலை, நாட்டு. 3

வனப்பு-அழகு, நாட்டு. 9

வனம்-நீர், காடு, வேத். 28

வாசவர்-இந்திரர், பிரபஞ். உற். 2

வாசி-குதிரை, உதங்க. 5

வாதராயணர்-வியாசர், பாயி. 11

வாய்,ஏழனுருபு, திரௌ. 54

வாய்மை-வார்த்தை. தரும. பட். 3

வாயுமனம் கதிதாழும்வகை, வார. 18

வாரணம்-யானை, காண். தக. 9

வாரணவதநகர்-காசிக்ஷேத்திரம், வார. 57

வாரம்-நீர்க்கரை, நாட்டு. 2

வாரிசநாபன்-பத்மநாபன், கண்ணபிரான். (வாரிசம்-தாமரை). திரௌ. 24

வாழைக்குறங்கினர், திரௌ. 14

வாளி-அம்பு, வார. 18

வான்-சிறந்த, நாட்டு. 6

வான்நதி-கங்கை, சம். 22

வான்மா, ஒருபொருட்பன்மொழி, நாட்டு. 6

வான்மை-வாலின்தன்மை, உதங்க. 20

வான்மொழி-ஆகாயவாணி, அசரீரிவாக்கு, வேத். 23

விகங்கம்-பருந்து. வியா. உற். 3

விசிகம்-அம்பு, திரௌ. 30

விஞ்சை-வித்தை. சந்தி. வங். 8

விஞ்ஞை=விஞ்சை, வித்தை (போலி), துட். 16

விடலை-வீரன், திரௌ. 27

விடாயாற்றுதல்-கலைப்பினைப் போக்குதல், சம். 6

விண்ணுளை உய்த்தல்-உயிர்போக்குதல், திரௌ. 62 (பிறிதினவிற்சியணி)

விண்ணோர் வானுடு-சுவர்க்கம், சம். 33

விண்ணோர் வியன்பதம்-இந்திரலோகம், சந்தி. வங். 27

வித்தகன்-அறிஞன், சம். 6

விந்தமலர்-அரவிந்தமலர், (முதற்குறை), சந்தி. வங். 25

விந்து-சுக்கிலம், வார. 7

விநாயகன் பாரதத்தை வரைந்தான், பாயி. 7

விப்பிரன்-பிராமணன், வேத். 33

விபினம்-காடு, உதங்க. 34

வியாசன் அருளால் மூவர் தோற்றம் (திருதராட்டிரன், பாண்டு, விதுரன்), துட். 28

வியாசன் சிடன்வைசம்பாயனன், பாயி. 11

வியாசர் செய்தருளிய நூல்கள், வியா. உற். 8

வியாசன் பராசரன் புதல்வன், பாயி. 7

வியாசன் பாண்டவரை வேத்திரகீயம் சேரச்சொல்லுதல், வேத். 11

விரகு-வஞ்சனை, உபாயம், சித். சரு. 9

விரதம்-நோன்பு, சபதம், சம். 1

விருக்கம்-விருட்சம், நாட்டு. 3

விரும்பும் அப்பொருள்-பேராநந்தம், காண். தக. 29

வில்கால்-வில்முனை, திரௌ. 25

வில்நுதலாள், (உவமைத்தொகை), திரௌ. 5

வில்லிபுத்தூரன் நல் ஐயன், பாயி. 8 (ஐயன்-அந்தணன்)

விலின்-வில்லின் என்பதன் இடைக்குறை, திரௌ. 23

விலோசனம்-கண், விலோசனம் உணர்தல்-கண்சாடை குறிப்பு அறிதல், வார. 20

விழிக்கு அடங்கா எழில், துட். 12

விழிகுழிதல், அருச். தீர். 46
வின்மறை-தனுர்வேதம், அருச். தீர். 49
வின்மை-வில்லின் தொழில்வல்லமை, சந்த. சரு. 27
வீடுமன் பெயர்க்காரணம், சந்த. சரு. 23; துட். 26
வீணைவல்லான்-கந்தருவன், சித். சரு. 1
வீமன் பதினாயிரம்களிறு தோள்வலியன், வேத். 1
வீமனை மாலுக்கு ஒப்பு, வேத். 22
வீறுகோளணி, நகர. 2; சித். சரு. 6

வெங்கொடுத்திடுதல், காண். தக. 18
வெந்தரல்-முதுகிட்டோடுதல், சந்தி. வங். 4
வெம்மாமுகில், (வெம்மை-விருப்பம்), சம். 40
வெய்யோன்-சூரியன், சம். 26; திரௌ. 2
வெள்ளிமேனிக்கொற்றவன், பலராமன். அருச். தீர். 43
வெற்றிகொள் உலகம்-மங்கையருலகம், (அழகினுலே), சந்த. சரு. 8
வெறுக்கை-செல்வம், காண். தக. 1

வேட்டம்-வேட்டை, துட். 17
வேட்டல்-விவாகஞ்செய்துகொள்ளுதல், சந்தி. வங். 19
வேடுவர்கொம்பு-வள்ளி, பாயி. 4
வேத்திரகீயம், வேத். சரு. முன்னுரை
வேதம்நான்கு, பாயி. (கணபதி-துதி)
வேதவிதியின் அயர்கடன்செய்தல், துட். 16
வேந்தர்முகம் கருகுதல், திரௌ. 28: (கருகுதல்-வாடுதல்)
வேமம்சில-கரும்புவில், சம். 51
வேள்-காமவேள், மன்மதன், நகர. 5; சந்தி. வங். 22
வேள்வி-கலியாணம், வேத். 32
வேற்றுப்பொருள்வைப்பணி, உதங்க. 15; சந்தி. வங். 32; சித். சரு. 21
வேனில்விழா, காண். தக. 3

வை-வைக்கோல், நாட்டு. 8; கூர்மை, திரௌ. 18
வைசம்பாயனன், வியாசன் சிடன், சிறப். பாயி. 5
ஸ்வச்சந்தமரணம், சந்த. சரு. 24

சுபம்

முற்றிற்று.

ஆதிபருவத்தின்
அபிதான சூசிகை யகராதி

அங்கிவேசன்: துரோணனுக்கும் திருபதனுக்கும் படைக் கலம் பயிற்றுவித்த ஆசிரியன். இவன் அக்னியினின்று பிறந்த வன் என்றும், பரத்துவாச முனிவனிடமிருந்து ஆக்நேயாஸ்திரம் பெற்றுப் பின்பு அந்த அஸ்திரத்தைத் துரோணனுக்குக் கொடுத் தனனென்றும் கூறுவர்.

அசுவசேனன்: தக்ஷகனுடைய குமாரன், இந்திரனுற் காக்கப் பட்டவன், கர்ணனிடம் அத்திரமாகச் சாந்தனன்.

அசுவத்தாமன்: சிவனருளால் தோன்றியவன், பேரறிவு வலிமை இவற்றுல்மிக்கவன்: துரோணன் மனைவி கிருபியினுல் வளர்க்கப்பட்டவன்.

அசுவினி தேவர்கள்: தேவவைத்தியர்: மாத்திரியினிடம் நகுல சகதேவர்களையுண்டாக்கினவர். காண்டவவனத்து அருச்சுனனை யெதிர்த்துத் தோற்றோடினர்.

அத்தி: குருகுலத்தரசன், அத்தினபுரியை அமைத்தவன்.

அத்திரிகை: அழகிய அப்ஸரஸ்: மீன் ஜாதியிற் பிறந்து மனிதக்குழந்தைகள் இரண்டைப் பெற்றனள். ஒன்று ஆண், மற்றொன்று பெண். இந்தப் பெண்தான் மச்சகந்தியாயிருந்து பின் யோசனகந்தியானவள்.

அதிரதன்: இராதை கணவன், நதியினின்று கர்ணனை யெடுத்து வளர்த்தவன்.

அபராசனன்: ஜயத்சேனனுக்கும் ஸுச்ரவையென்பவளுக்கும் பிறந்தவன். மன்மதனையும் தர்மாத்மாவாகிய விபீடணனையும் ஒத்தவன். (அபராஜிதன் என்பதன் சிதைவு என்ப).

அபிமன்யு: அருச்சுனனுக்குச் சுபத்திரையினிடம் தோன் றியவன்: பாண்டவகுமாரர்களுள் இவனே ஆண்மையில் சிறந்த வன். விராடன் மகள் உத்தரையை மணந்து பரீட்சித்தைப் பெற்றவன்.

அம்பாலிகை: விசித்திரவீரியன் மனைவி, வியாசனருளால் பாண்டுவைப்பெற்றுள்.

அம்பிகை: விசித்திரவீரியனை மணந்தவள், வியாசனருளால் திருதராட்டிரனைப் பெற்றுள்.

அம்பை : காசிமன்னவன் புதல்வி : வீடுமனுல் மணம்மறுக்கப் பட்டுப் பரசுராமனைச் சரணடைந்தவள். சிகண்டியாய் யாகசேன னிடம் பிறந்தவள்.

அருச்சுனன் : பங்குனியுத்தரத்திற்ரோன்றியதனுல் பற்குனன் எனப்படுபவன்: குந்தியிடம் இந்திரனருளால் தோன்றியவன். வில்வித்தையில் சிறந்தவன். துரோணனை முதலியினின்று விடு வித்தவன். வேடர்களைவென்று நிரைமீட்டுப் பிராமணனுக்குக் கொடுத்தவன். ஐந்துதேவமாதர்களின் சாபத்தைப் போக்கினன். தீர்த்தயாத்திரையின்போது நாககன்னிகை உலூபியை மணந்து இராவானைப்பெற்றான். பாண்டியன் சித்திரவாகனன் புதல்வி சித்திராங்கதையை மணந்து பப்ருவாகனனைப் பெற்றான். சுபத் திரையை மணந்து அபிமனைப்பெற்றான். காண்டவதகனத்தின் போது அக்னிதேவனுல் காண்டீபம், சுவேதகுதிரைகள் முதலிய பெற்றவன்.

அருணன் : வினுதைமகன், காலுடம்பட்டவன். சூரியனுக் குத் தேர்செலுத்தும் சாரதி.

அஷ்டவசுக்கள் : தரன், துருவன், சோமன், அநலன், அகஸ், அனிலன், பிரத்யூஷன், பிரபாசன் எனும் இவர்கள். இவர்களுள் எட்டாமவனுகிய பிரபாசன்தான் பின்னர் வீடுமனுகத் தோன் றியவன்.

ஆயு : புரூரவஸுக்கு ஊர்வசியிடம் பிறந்தவன், நகுஷனுக் குத் தந்தை.

ஆறுமகரிஷிகள் : பிரமனுல் மானசிகமாகச் சிருட்டிக்கப்பட்ட மகரிஷிகள். இவர்கள் பெயர்—அத்திரி, மரீசி, கிருது, ஆங்கிரன், புலஸ்தியன், புலகன் என்பன.

ஆஸ்திகன் : ஜரத்காரு என்பவளிடம் உதித்த நாகபுத்திரன்: நாகர்களின் தாயாகிய கத்ரு இட்ட சாபத்தினின்று அவர்களைக் காப்பாற்றத்தோன்றியவன். இவன் கதையைக் கேட்பவர்களும் படிப்பவர்களும் நாகபயம் நீங்கிடுவர்.

இடபபன்மன் : வ்ருஷபர்வா என்பவன், அசுரர்களின் அரசன்

இடிம்பன் : இடிம்பவனத்தில் சஞ்சரிக்கும் அரக்கன்: வீமனுற் கொல்லப்பட்டான்.

இடிம்பி: இடிம்பன் தங்கை: வீமன் இவளைத் தன் தாய் குந்தியின் மொழிப்படி மணந்தான். கடோற்கசனைப் பெற்றாள் இவள்.

இந்திரசேனை : நாளாயணி, மௌத்கலியனின் மனைவி. குன்று முதலிய வடிவுகொண்ட அம் முனிவனோடு நதிமுதலியனவாகிப் போகந்துய்த்து மறுபிறப்பில் இந்த 'இந்திரசேனை' என்ற பேரைக் கொண்டவளானாள். இவளே திரௌபதியாய் அனலிடை வந்தவள்.

இந்திரப்பிரத்தம் : கண்ணன் நியமனப்படி விசுவகன்மனால் காண்டவப்பிரத்தம் நகரமாக அமைக்கப்பட்டபோது இந்தப் பெயர்பெற்றது.

இந்திரன் : குந்தியிடம் அருச்சுனனை அருளியவன். சதமகன், சுரபதி, வாசவன், மகவான், புரந்தரன், பாகசாதனன், புருகூதன், முகிலூர்தி முதலிய பரியாயப்பெயர்களையுடையவன். இந்திரப் பிரத்தம் அமைப்பதற்கு விசுவகன்மனையனுப்பினன். சுபத்திரையின் திருமணத்திற்கு இந்திராணியோடு வந்தான். காண்டவதகனத்தின்போது தன்மகன் அருச்சுனனையே எதிர்த்தவன்.

இராதை : கர்ணனை வளர்த்தவள், அதிரதன் மனையாள்.

இராவான் : உலூபியென்னும் நாககன்னிகைக்கும் அருச்சுனனுக்கும் பிறந்தவன்.

இளை : இளன் சாபத்தால் பெண்ணாகி இப்பெயர்பெற்றான். [இந்த இளன் மநு என்னும் அரசனின் புதல்வன்.] இவள் புதனைக்கூடிப் புரூரவஸ்ஸை ஈன்றவள்.

உச்சைச்சிரவம் : சிறந்த ஒளியுள்ளதும் சக்தியுள்ளதுமாகிய குதிரை; பாற்கடல் கடைந்தபோது அதனினின்று தோன்றியது. வெள்ளை நிறமுடையது. இந்திரனிடம் சேர்ந்தது.

உதங்கர் : ஓர் முனிவர், இவர்தான் சனமேசயனைச் சர்ப்பயாகஞ்செய்யத்தூண்டியவர். பைதர் என்ற முனிவரின் சீடர். குருவின் காணிக்கையாகப் பவுடியன் மனைவியின் குண்டலங்களை ஆசான்மனைவியிடம் கொணர்ந்து அளித்தவர்.

உதிட்டிரன் : யுதிஷ்டிரன் [தருமபுத்திரனைக் கூறும் இடம் பார்க்கவும்].

உபபாண்டவர் : திரௌபதியிடம் பாண்டவர் ஐவர்க்கும் வருடத்திற்கு ஒருவராய்த் தோன்றியவர் என்பர். பஞ்சதிரௌபதேயர் என்றும் கூறப்படுவர். பிரதிவிந்தன், சுருதசன்மன், சுதகீர்த்தி, சதானீகன், சுதசேனன் என்ற பெயர்களையுடையவர்.

ஐந்துபூதங்களுக்கும் அமைந்துள்ள குணம்போல் பொலிபவர் இந்த ஐவரும். ஆக, ஐவர் மனமும் ஒருபடித்தானது.

உபயாசன்: துருபதனுக்காகப் புத்திரகாம வேள்விசெய்து, அழலிலிருந்து திட்டத்துய்மனையும் திரௌபதியையும் தோற்றுவித்தவன்.

உபரிசிரவசு: மேலேசஞ்சரிப்பவன், இந்திரன் கொடுத்த ஆகாயவிமானத்தில் ஏறிச் சஞ்சரித்த மனிதன் இவன் ஒருத்தனே. இவன் சேதிநாட்டு மன்னன். இவனதுதேவி கிரிகையென்பவள். இவனைவிட்டுவிட்டு, ஆனால் இவள்மேல்கொண்ட காமனினைவினையம்மட்டும் வேட்டைக்குச்சென்றான். இவனது வீரியம் யமுனை நதியில்விழ, அங்கிருந்தமீன் அதனைவிழுங்க அதன்வயிற்றில் பிறந்தபெண்தான் பின்னர் மச்சகந்தியென்ற பெயரினளாய் வளர்ந்தவள்.

உருரு: பிருகுவின் வமிசத்தில் தோன்றியவன், பாம்புகடித்து இறந்த தன் மனைவி பிரமத்வரை யென்பவள் உயிர்பெற்றெழுவதற்குத் தன் ஆயுளில் பாதியிந்தவர். இவர் பாம்புகளையெல்லாம் அடித்துக்கொல்வதாக நியமங்கொண்டார். ஆனால் பாம்பாயிருந்த சகத்ரபாதன் என்போன் "மறையோர்க்கு இக்கொலை செய்தல் தகாது" என வேண்டிக்கொள்ள அந்நியமத்தை விடுத்தான்.

உலூபி: அருச்சுனன் மணந்த நாககன்னிகை: இராவானின் தாய்.

உவணன்: கருடன்: வினதைமகன். தாயின் அடிமைநீக்க அமிர்தம் கொணர்ந்தவன். விஷ்ணுவுக்கு ஊர்தியும் கொடியும் ஆனவன்.

ஊர்வசி: ஓர் தேவமாது. திருமாலின் ஊரு (தொடை) வினின்று தோன்றியவள். பேரழகி. தன்னை அசுரர்களிடமிருந்து மீட்ட பூரவஸுவை மணந்து ஆயுவைப்பெற்றவள். மேலும் ஐந்து குமாரர்களையும் ஈன்றவள்.

ஏகலவ்யன்: வேடன், துரோணனை ஆசானாய்க்கொண்டு வின்மைபயின்றவன். குருதட்சிணையாகத் தனது கட்டைவிரலை யீந்தவன்.

ஏலாபத்ரன்: கத்ரு சாபமிட்டபோது பயத்தினால் அத் தாயார் மடியிலேறியுட்கார்ந்துகொண்டான். அங்கிருந்தே தேவர்களுக்கு அயன்சொன்ன வரத்தைக் கேட்டுக்கொண்டிருந்தவன். அதாவது, ஜரத்காரு என்ற நாககன்னிகையினிடத்தில் உண்டாகும் புத்திரன் நாகர்களின் பயத்தை நிவர்த்திசெய்யப்போகிறான் என்பது.

கங்கையாள்: சாபத்தினால் மானுடமகளாய்த் தோன்றியவள் சந்தனுவைமணந்து அட்டவசுக்களைத் தோற்றுவித்தாள், ஏழு வசுக்களைப் பிறந்தவுடனே கங்கையில் எறிந்தாள். இறுதியில் பெற்றபுதல்வனுடன் சந்தனுவைப் பிரிந்தாள். [இப்புதல்வன் தான் பின்னால் வீடுமன் என்று பேர்பெற்றவன்]

கசன்: தேவகுரு பிருஹஸ்பதியின் மகன். அசுரகுரு சுக்ராசாரியரிடம் மிருதசஞ்சீவினி வித்தையைக் கற்றவன். அசுரரால் கொல்லப்பட்டுச் சுக்கிரரால் உயிர்ப்பிக்கப்பட்டான். இவன் தன்ஆசான் சுக்கிரன் இறந்தபோது அவரை உயிர்ப்பித்தவன். இவனைத் தேவயானை சபிக்க இவன் அவளைப் பதிலுக்குச்சபித்தான்.

கசியபர்: கருடனின் தந்தை: அமிருதங்கொணரச் சென்றபோது கருடனின் பசிதணிக்க உபாயங் கூறினவர்.

கடோற்கசன்: இவனுடைய குடம்போன்ற தலையானது மயிரின்றியிருந்ததனால் இப்பெயர் பெற்றான். (கடம்-குடம்: உத்தமம்-மயிரில்லாதது) வீமனுக்கு இடிம்பியென்னும் அரக்கியினிடம் பிறந்தகுமாரன்.

கண்ணுவர்: சகுந்தலையைப் பிரியத்தோடு போற்றிவளர்த்த முனிவன்.

கத்ரு: சர்ப்பங்களின்தாய். தாயாயிருப்பினும், தன் மக்களாகிய சர்ப்பங்களைப்பார்த்து "ஜனமேஜயருடைய யக்ஞத்தில் உங்களை அக்கினி தகிக்கப்போகிறான்" என்று சபித்தவள். கசியப முனிவரின் இரண்டாம் மனைவி. முதல் மனைவியாகிய வினுதையுடன் பந்தயம்வைத்துச் சூள்சொற்றவள்.

கர்ணன்: குந்தியின் மகன். அவளது கன்னிப்பருவத்திலேயே சூரியன் அருளால் தோன்றியவன். கவசகுண்டலங்களோடு பிறந்தவன். பரசுராமனிடம் படைக்கலப்பயிற்சிபெற்றான். கங்கையில்விடப்பட்ட இவனை அதிரதன் எடுத்துத் தன்

மனைவி இராதையிடம் கொடுத்து வளர்க்கச்செய்தான். இவன் அருச்சுனனைப்போலவே வின்மையில் விஞ்சியவன். அங்கதேசத்துக்கு அதிபதியாயினன். துரியோதனனுக்கு உற்ற துணை. துட்டசதுட்டரிலொருவன், கொடையிற்சிறந்தவன்.

கவி (சுக்கிரர்): பிருகுவின் புத்திரர் கவி என்கிற சுக்கிரர். இவர் நவக்ரஹங்களில் ஒருவர். இவரைப் பிரம்மா உலகங்கள் ஜீவிப்பதற்காக மழை, மழையின்மை, பயம், பயமின்மை இவை களைச் செய்யும்படி ஏற்படுத்தினர். எனவே, உலகத்தைச் சுற்றுகிறார். மற்றும் அசுரர்களுக்குக் குருவாவர். த்வஷ்டா, அத்ரி, ரௌத்ரன், கர்மி என்ற நாலுபுரோஹிதர்களும் இவர் புதல்வர்கள் எனப் பிரசித்திபெற்றவர்கள்.

கவுசிகன்: தனக்கும் தன் பரிவாரத்துக்கும் விருந்திட்ட காமதேனுவைத் தனக்குக்கொடுக்கும்படி வசிட்டமுனிவனைக் கேட்டுப் பின் அந்தக் காமதேனு தன்வலிமைகாட்டி வெற்றி கொள்ளவே, கவுசிகன்மகார் நூற்றுவர் வசிட்டனைத்தாக்கிச் சாம்பராயினர். பின்னர்க் கவுசிகன் வசிட்டனிடம் தோற்றுத் தவமேற்கொண்டு ராஜரிஷியாகியும் அமையாது கடுந்தவமியற்றிப் பிரமரிஷியாயினன். இந்தக்கவுசிகன்தான் விசுவாமித்திரன்; மேனகைபால் மோகமுற்றுச் சகுந்தலைபிறத்தற்குக் காரணமானவன்.

கன்மாஷபாதன்: அயோத்திமன்னன், இக்ஷ்வாகு வம்சத்தினன். கவுசிகனால் ஏவப்பட்ட கிங்கரன் என்ற ராக்ஷஸனால் ஆவேசிக்கப்பட்டிருந்தவன். எனவே, வசிட்டன்மகன் சத்தியோடுமுரணி அவனைத் தண்டாலடிக்க அவன் சாபமிட, அப்போது கவுசிகன்வந்து அந்த அரசனது அறிவைப் பேதலித்துச் சத்தியோடு அவன் தம்பியராகிய தொண்ணூற்றொன்பது பேரையும் அழித்துக்கொன்று உண்ணும்படி துர்ப்புத்தி புகட்டினன். அப்படியே [ராக்ஷஸன் ஆவேசித்த] கல்மாஷபாதன் வசிட்டபுத்திரர்கள் நூற்றுவரையும் கொன்றுதின்று நிற்ப, பின்னர் வசிட்டன்தெளித்த கமண்டலநீரால் ராக்ஷஸன் விட்டுநீங்கிப்போக, சுயவுருவத்தோடு வசிட்டர் காலில் வீழ்ந்து மன்னிப்புவேண்ட, அவர் அவனுக்குச் சாபவிமோசனமீந்ததோடு, இக்ஷ்வாகு குல அபிவிருத்திக்காகப் புத்திரப்பேற்றையும் பெறும்படி அளித்தார்.

காசியபர்: பிராம்மணச்சிரேட்டர். பாம்புகடித்திறப்பவரை மந்திரசக்தியினல் எழுப்புந்திறம்பெற்றவர். தக்ஷகன் கடித்த ஆலமரத்தைப் பிழைப்பித்தவர். தக்ஷகன் பொருள்கொடுக்கப் பெற்று, அதனல் பரீட்சித்தைக் காப்பாற்றப்போகும் செயலைத் தவிர்ந்தனர்.

காந்தாரி: சுபலன்மகள். திருதராட்டிரன் மனைவி. கற்பிற் சிறந்தவள். வியாசனருளால் நூறுமகவான கருப்பம் எய்தினள்; எனினும், குந்தி புதல்வன் தருமனைப் பயந்தமைகேட்டுப் பொறுமையினல் வயிறு உட்குழும்புமாறு மோதிக்கொண்டனள். வியாசன் அந்தக் கருப்பகோசத்தசையினைத் தாழியிலிழுதில் இட்டுவைக்கச் சுயோதனன் முதலிய நூற்றுவர் தோன்றினர்.

கார்க்கோடகன்: தாயாகிய கத்துருவின் சாபத்திற்குப் பயந்து, உச்சைச்சிரவசின் வெள்ளிய வாலைக் கருமைசெய்தவன்.

கிரிகை: உபரிசிரவசு என்ற சேதிநாட்டுமன்னன் மனைவி.

கிருபன்: கோதமன்பேரன்; சரத்துவந்தன் மகன்; பாண்டவரின் வில்லாசிரியன்.

கிருபி: கிருபற்குத்தங்கை. துரோணன் மனைவி. அசுவத்தாமனை வளர்த்தவள்.

கிருஷ்ணன் (கண்ணபிரான்): வசுவதேவகுமாரனுய், யதுகுலதிலகனுய், பூபாரம் தீர்க்கப்பிறந்தவன். காண்டவவனம் எரித்தலில் அருச்சுனனுக்குத் துணையாயினவன். சுபத்திரையை அருச்சுனனுக்கு மணஞ்செய்வித்தவன்.

குந்தி: பிரதை எனவும்படுவள், சூரன்மகள். குந்திபோசனல் வளர்க்கப்பட்டவள். வசுதேவர்க்கு இளையவள். எனவே யதுகுலத்தாள். கன்னிகையாயிருக்கும்போதே சூரியனருளால் கர்ணனையீன்று, மீண்டும் அச் சூரியனருளால் கன்னிகையானவள். பாண்டுவைமணந்து தருமபுத்திரனையும், வீமனையும், அருச்சுனனையும் பெற்றவள். மகப்பேறு மந்திரத்தை மாத்திரிக்கு உரைத்தவள்.

குந்திபோஜன்: குந்தியைவளர்த்த தந்தை. சூரன் என்பவன் தன் அத்தைகுமாரனை குந்திபோசனுக்கு மகவில்லாக் குறையைப் போக்கத் தன் பெண்ணை பிரதையென்பவளை வளர்க்கு

மாறு கொடுத்தான். அவள்தான் குந்தியென்று வழங்கப் படுபவள், எனவே குந்தி குந்திபோஜனுடைய ஸ்வீகாரபுத்திரி யாவள். இவனுடைய கிருஹத்திற்குத்தான் துர்வாசமஹரிஷி வந்தார்.

கௌரமுகர் : சமீகரின் சீடர். நல்லொழுக்கமும் பொறுமையு முள்ளவர். இவரைக்கொண்டுதான் சமீகர் தமதுபிள்ளை சிருங்கி யிட்ட சாபத்தைப் பரீட்சித்துக்குச் சொல்லிவருமாறு செய்தார்.

சகத்ரபாதன் : ஒரு துரும்பீனியெடுத்து அரவு என்று அச் சுறுத்தி ஒரு முனிவன்மேல் வீச, அவனிட்ட சாபத்தால்பாம்புருவ மெடுத்துத்திரிந்தவன். உருரு என்ற முனிவன் கடாக்ஷத்தினல் சாபவிமோசனம் பெற்றவன்.

சகுந்தலை : கௌசிகனுக்கும் மேனகைக்கும் பிறந்தபெண், சகுந்தப்பட்சிகளால் சிசுவாயிருக்கும்போது பாதுகாக்கப்பட்டவ ளாதலால், அவளை எடுத்துப்போய்த் தம் மகள்போல் வளர்த்து வந்த கண்ணுவமகரிஷி, இவளுக்குச் சகுந்தலையென்று பெயர் சூட்டினர். துஷ்யந்தன் இவளைக் காந்தர்வவிவாகம் செய்து கொண்டான். இவளுக்குப் பிறந்தவன்தான் பரதன் என்னும் குருகுலவரசன், இவன்தொட்டே பரதவமிசம் தொடங்கியது.

சகுனி : சுபலன்மகன், சூதிலும் வஞ்சனையிலும் வல்லவன். துரியோதனனுக்கு மாமன்; உற்ற துணை. துட்டசதுட்டரில் முதல்வன்.

சத்தி : வசிட்டருடைய நூறு புத்திரர்களில் மூத்தவர். சிறந்த மஹாத்மா. கல்மாஷபாதனல் தண்டால் அடிக்கப்பட்டு இறந்தார்.

சந்தனு : சந்திரகுலத்தவன். வருணன் பிரம சாபத்தினல் இம்மன்னனுகப்பிறந்தான். கங்கையாளை மணந்தான். வீடுமனை அவள்மூலம்பெற்றான். அந்த வீடுமனல் தாசபூபதி வளர்த்து வந்த யோசனகந்தியை [காளியை]த் தான் மணந்தான்.

சயிந்தவன் : சயத்திரதன், இவன் துரியோதனனின் சகோதரி துச்சளை கணவன், அபிமன்யுவைத் தலைதுணித்தவனுதலின், அருச்சுனன் வஞ்சினம்கூறி இவனையொழித்தான்.

சம்வரணன் : சவ்வருணன் எனவும்படுவன். உருக்கை (ரிவை) என்பவள் மகன். இவன் சூரியன் என்பவன் மகளான தபதி யென்ற பெண்ணை மணந்து **குரு** என்ற புத்திரனைப்பெற்றான். இவன் முதற்கொண்டு **குருவமிசம்** தொடங்குகிறது.

சமதக்னி : பரசுராமனின் தந்தை. கார்த்தவீரியனால் மடிந் தவன். ரேணுகாவை மணந்தவன்.

சமீகர் : இவர் ஆச்சிரமத்திற்குப் பரீட்சித்துவந்து "ஒரு வேங்கைப்புலி வந்துபோயிற்றே" என வினவ, இவர் மௌன விரதம் பூண்டிருந்தோராதலின் மறுமாற்றம் கூறாதிருப்பவே, இவர் கழுத்தில் செத்துக்கிடந்த பாம்பைச்சுற்றினான். இவர் மகன் சிருங்கி கோபித்துப் பரீட்சித்துக்குப் பாம்பினால் "ஏழாம் நாள் மரணம்" எனச் சாபமிட்டான், இந்தச் சாபத்தைப் பரீட் சித்துக்குத் தெரிவித்துவரும்படி தம்சீடன் கௌரமுகரை யனுப் பிய தர்மாத்மா இவர்.

சரத்காரு முனிவர் : சிவபிரானையொத்த தவத்தினர். தமது பிதுர்க்களாகிய மூதாதையர் நரகம் நீங்கி நற்கதி பெறுதற் பொருட்டுத் தன் பெயரையே தாங்கியுள்ள சரத்காரு என்ற பெண்ணை மணந்தவர். இந்தப்பெண் வாசுகியென்னும் நாக ராஜனின் சகோதரி. இவர் வயிற்றில் பிறக்கும் பிள்ளை ஆஸ்திகன் நாகங்களனைவரையும் கத்துருவிட்ட சாபத்தினின்று காப்பாற் றினான்.

சரத்காருமாது : இவள் வாசுகியோடு உடன்பிறந்தவள். அவனால் சரக்காருமுனிவர்க்கு விதிப்படி மணம்புரிவிக்கப்பட்ட வள். இவள் ஆஸ்திகனுக்குத்தாய். ஒருநாள் கணவன் தன்மடியில் தலைவைத்து உறங்கும்போது, அந்திக்கடனையாற்றவேண்டி யெழுப்ப, அவரால் மனம்வேறுபட்டுக் கைவிடப்பட்டவள். கணவனுக்குத் தர்மலோபம் வரக்கூடாது என்ற பெருநோக் கினள்.

சரத்துவான் : [சரத்துவந்தன்]-கோதமன் மகன். கிருபனுக்கும் கிருபிக்கும் தந்தை. இந்திரனாலேவப்பட்ட உருப்பசியின்மேல் கொண்ட மோகத்தால் சுக்கிலம் வெளிப்பட, அதனை நாணற்கட் டையில் விழச்செய்து ஒரு ஆண்மகவையும் ஒரு பெண்மகவையும் ஈன்றனன். அவர்களை அங்கேயே விட்டுவிட்டு அப்பாற்சென்ற பின் வேட்டைக்குவந்த சந்தனுமகாராஜன் கதியற்றிருந்த

இக்குழந்தைகளைக் கிருபையோடு எடுத்துவந்து வளர்த்ததனால் அவர்கட்கு முறையே கிருபன் என்றும் கிருபியென்றும் பெயர்கள் உண்டாயின. பிறகு ஒருகால் அந்தச் சரத்துவான் அத்தினபுரிக்குவந்து தன்மகனை கிருபனுக்கு வில்வித்தை முழுவதையும் கற்பித்துச்சென்றான்.

சரமை : தேவலோகத்துநாய். இதன் வயிற்றிற்பிறந்தவன் நாய்முகத்தோடு கூடிய சாரமேயன் என்பவன்.

சராசந்தன் : மகததேசத்தரசன். கிருஷ்ணனை வடமதுரையினின்று துவாரகை சேருமாறு செய்தவன். [பின்னர் வீமனால் கொல்லப்படுவன்.]

சல்லியன் : மத்திரநாட்டரசன். மாத்திரிக்கு உடன்பிறந்தவன். திரௌபதி சுயம்வரத்தில் வில்நாணைப் பூட்டமுடியாமல் மானபங்கப்பட்டான்.

சன்மிட்டை : விருஷபர்வாவின் மகள். தேவயானைக்குத் தோழி: பின் பணிப்பெண்ணைனவள். யயாதியால் காந்தருவ மணஞ்செய்துகொள்ளப்பட்டவள். பூரு, த்ருஹ்யு, அனு என்ற மூவரையும் ஈன்றவள்.

சாத்தகி : கிருஷ்ணனுக்கு இளவல். சத்தியகனது புத்திரன். (சத்தியகன் வசுதேவனுக்கு உடன்பிறந்தமுறையினன்.)

சாதேவன் : சகதேவன். மாத்திரியினிடத்து அசுவினிதேவர் அருளால் தோன்றிய புத்திரன்: நகுலனது தம்பி.

சாரமேயன் : சரமையின்பிள்ளை. நாய்முகமுடையவன். இந்த நாய் ஜனமேஜயன் யாகசாலைக்குள் புகவே, அவன் தம்பியர் மூவர் இதனை நையப்புடைத்தனர். இஃது புகுந்ததே தவிர வேறு சிறிதும் பிழை செய்யவில்லையாதலின், இதன் தாய் சரமை அந்த மூவரையும்நோக்கி "உங்களுக்குத் தெரியாமலேயே ஓர் ஆபத்து வரப்போகிறது" என்று சாபமிட்டாள்.

சாலிகோத்திரமுனிவனம் : வியாசர் கூறியபடி பாண்டவர் வேத்திரகியம் அடையுமுன் தங்கிய இடம். சாலிஹோத்திரமுனி-சாலியென்ற நெல்லின் ஹோமத்தினால் தோன்றியவன். புருபுண்ணியன் என்னும் முனிவனின் மகன்.

சாலுவன்: வீடுமனேடு அரசர்செய்த போரில் வீரத்தாற் சிறிது முந்தியவன். அம்பையை மணமறுத்தவன்.

சிகண்டி: வீடுமனை மறுபிறவியிற்கொல்லும்படி அம்பை சிவபெருமானிடம் வரம்பெற்று அக்னிபிரவேசஞ்செய்து பாஞ் சாலதேசத்தரசனுகிய யாகசேனனிடத்திற் பெண்ணுகப்பிறந்த சிகண்டியென்று பெயர்பெற்று ஆணென வழங்க வளர்ந்தனள். பிறகு ஸ்தூணனென்ற யட்சனுல் வரமாகத் தனது பெண் தன்மையைமாற்றி ஆண்தன்மை கொடுக்கப்பெற்றனள்.

சிசுபாலன்: சேதிநாட்டரசன். கண்ணனைப்பழித்தலையே தனக்கு வலிமையென நினைப்பவன். வசுதேவனது உடன்பிறந்த வளும் சேதி தேசத்து அரசனுகிய தமகோஷனுக்குப் பத்தினியு மாகிய சுருதசிரவை யென்பவளுடைய மகன்.

சித்திரரதன்: கங்கைக் கரையில் ஜலக்கிரீடை செய்து கொண்டிருந்தபோது, அங்கு வந்த அருச்சுனனேடு பொருது பிறகுநண்பாய்த் திரௌபதியின் சுயம்வரத்துக்குச் செல்லும் பாண்டவர்க்கு வழிமுதலிய காட்டியவன்.

சித்திரவாகனன்: சித்திராங்கதையைப் பெற்ற பாண்டிய மன்னன். அருச்சுனனுக்குத் தன் மகளையீந்து, அவள் பெற்ற மகன் பப்ருவாகனனைத் தான் தத்துமகனுகக் கொண்டவன்.

சித்திராங்கதன்: சந்தனுவுக்குக் காளியிலிடம் பிறந்தவன். வீடுமனுல் அரசனுயினன். சித்திராங்கதன் என்னும் கந்தருவனுற் கொல்லப்பட்டான்.

சித்திராங்கதன்: சித்திராங்கத மன்னனைக் கொன்ற கந்தருவன்.

சித்திராங்கதை: சித்திரவாகன பாண்டியன் மகள். அருச் சுனனை மணந்து, பப்ருவாகனனை மகனுய்ப் பெற்றுப் பின் தன் தந்தைக்கே அவனைத் தத்துமகனுக ஆக்கியவள்.

சிருங்கி: சமீகரின் புத்திரன். இவன் நண்பனுகிய கிருசன் என்பவன் சமீகரின் கழுத்தில் பரீட்சித்து செத்த பாம்பை யிட்டதைச் சொல்ல, இந்தச் சிருங்கி வெகுண்டு பரீட்சித்தைப் பாம்பு கடித்து ஏழாம் நாள் இறக்கும்படி சாபமிட்டவன்.

சுக்கிராசாரியன்: தேவயானைக்குத் தந்தை. கவி எனப்படுபவன். யயாதியை முதுமையடையச் சபித்தான். அசுரகுரு. மிருதசஞ்சீவினி விஞ்சையறிந்தவன்.

சுப்ரதீகர், விபாவசு: இவ்விருவரும் இருடிகள். விபாவசு அண்ணன்: சுப்ரதீகர் தம்பி. தம்பி தனக்குச் சொத்திற் சேர வேண்டிய பாகத்தைக் கேட்கவே, அண்ணன் மறுத்து அவனை யானையாகும்படி சபித்தான். அதற்கு மாறுகத் தம்பியாகிய சுப்ரதீகனும் அண்ணனாகிய விபாவசுவை ஆமையாகும்படி சபித்தான். இந்த யானையையும் ஆமையையும் தான் கசியபர் கருடனுக்குப் பசிக்கு உணவாகக் கொள்ளும்படி சொல்லியனுப்பினர்.

சுபத்திரை: கிருஷ்ணனுக்குத் தங்கை. அருச்சுன சந்நியாசியைக் கிருஷ்ணன் மொழிப்படியே வழிபட்டு மணந்தாள். அபிமன்யுவைப் பெற்றாள்.

சுபலன்: காந்தார நாட்டரசன். காந்தாரி, சகுனி இவர்களின் தந்தை.

சூதன்: நைமிசாரணிய முனிவர்களுக்குப் பாரதக் கதையைச் சொன்னவர். சூத குலத்தில் பிறந்தவர்.

சூரன்: வசுதேவன் தந்தை. பிரதைக்குத் (குந்தி) தந்தை யதுகுலத்தினன்.

சேனமேசெயன்: ஜனமேஜயன்: பரீட்சித்தின் மூத்த புத்திரன். அபிமன்யுவின் பேரன். அருச்சுனனுக்குக் கொள்ளுப் பேரன். சர்ப்பயாகஞ் செய்தவன். குருக்ஷேத்திரத்தில் இவன் சத்திரமகம் செய்தபோதுதான் சாரமேயன் என்ற நாய் அந்த யாக சாலையுள் புகுந்து அடியுண்டது. அதனைத் தன் தம்பியர் மூவர் அடித்ததற்காகவும் தான் சாந்தி வேள்வியொன்று சோமாசிரவசு என்பவரைப் புரோகிதராகக் கொண்டு இயற்றினன்.

தக்ககன்: தக்ஷகன். காண்டவ வனத்திலிருந்த இந்திரனுக்கு நண்பனாகிய நாகன். காண்டவ வனம் எரிந்தபோது இவன் குருக்ஷேத்திரம் போயிருந்தான். இவன் மகன்தான் அசுவசேனன் என்னும் பாம்புக்குட்டி, கர்ணனுக்குக் கணையாயினவன்.

தருமபுத்திரன்: பாண்டவரில் மூத்தவன். நல்லொழுக்கத்திற் சிறந்தவன். குந்தியிடத்து யமதேவனது அருளால் பிறந்தவன்.

திருதராட்டிரன் இவனுக்கு இளவரசு முடிசூட்டினன். பின்னர் பட்டாபிஷேகஞ் செய்துவைத்து, இந்திரப்பிரத்தத்தினின்று சிறக்க ஆண்டுவந்தான்.

தாதா, விதாதா: இரண்டு பெண்கள். இவர்கள் பாதலத்தில் வெளுப்பும், கறுப்பும் நிறமாகக்கொண்ட நூலிழைகளைத் தமது விரல்களிற் சுற்றி மாற்றி மாற்றி வஸ்திரம் நெய்துகொண்டிருப் பவர். கறுப்பும் வெளுப்புமாகிய நூல்கள் இரவும் பகலும் ஆகும்.

திட்டத்துய்மன்: துருபதன் துரோணனைக் கொல்ல மகன் வேண்டுமென்று செய்த யாகாக்கினியினின்று தோன்றியவன். துரோணனிடத்திலேயே விற்பயிற்சி பெற்றனன்.

திருதராட்டிரன்: அம்பிகையினிடத்து வியாச பகவான் அருளால் தோன்றியவன். பதினாயிரம் யானைக்குமேல் பலமுடை யவன். பிறவிக்குருடன். துரியோதனாதியர் நூற்றுவர்க்கும் தந்தை. காந்தாரியின் கணவன்.

திரௌபதி: பாஞ்சால தேசத்துத் துருபதன் மகள், யாகாக் கினியினின்று திட்டத்துய்மனுக்குப் பின் தோன்றியவள். இவள் பாண்டவரை வரையும் மணந்து ஐந்து பிள்ளைகளை [உப பாண்ட வரை]ப் பெற்றாள். பாரதப் போருக்கே மூலகாரணமாவள்.

துச்சளை: காந்தாரியின் ஒரே பெண். துரியோதனனுக்கு இளையவள். சயத்திரதனுக்கு மணஞ் செய்விக்கப்பட்டாள்.

துச்சாதனன்: துரியோதனன் தம்பி. துட்டசதுட்டரில் மிகத் தீயவன்.

துரியோதனன்: தருமனுக்குப் பின் வீமனுக்கு முன் பிறந் தவன். பதினாயிரம் யானை பலமுடையவன்: தீங்கெல்லாம் திரண்டு ஒருவடிவமாகப் பிறந்தவன்: துட்டசதுட்டரில் ஒருவன். கர்ணனை நண்பாக்கொண்டு அங்க தேசாதிபதியாக்கினன். பெரி யோர் சொற்கேளாத துன்மதி. பாண்டவரையும், அவருள் வீமனையும் சிறு பருவத்திலிருந்தே பகைப்பவன். பாம்புக் கொடியை யுயர்த்தவன்.

துருபதன்: பாஞ்சாலராசன். துரோணனுக்கு நண்பன். யாகசேனன் எனவும்படுவன். அங்கிவேசனிடம் படைகள் கற்றவன். திட்டத்துய்மன், திரௌபதி யிருவர்க்கும் தந்தை.

அருச்சுனனால் தேர்க்காலில் கட்டியிழுக்கப்பட்டுத் துரோண னிடம் கொணரப்பட்டவன். சிகண்டி இவனிடம் வந்து சேர்ந் தாள்.

துருவாசமுனிவன்: வளர்த்த தந்தையாகிய குந்திபோசன் மொழிப்படியே பணிவிடை செய்த குந்திக்கு மனமுவந்து மகப் பேறளிக்கும் மந்திரம் உரைத்தவன்.

துரோணன்: பரத்துவாசன் மகன். துரோண கும்பத்தில் தோன்றியவர். பரசுராமனிடமும் அங்கிவேசனிடமும் படைகள் பயின்றவர். கிருபியை மணந்து அசுவத்தாமனுக்குத் தந்தை யானவர். துருபதனுக்கு அரசும், உயிரும் வாழ்வும் உதவினர்; அந்தணர். தன்னைக் கொல்லவே பிறந்த திட்டத்துய்மனுக்கும் வில்வித்தை பயிற்றியவர். வாய்மை சோராதவர்.

துஷ்யந்தன்: இலிலன் என்பவனுக்கும் ரதந்தரி என்பவளுக் கும் பிறந்த மூத்த மகன். இவனுடன் பிறந்தோர் நால்வர். இவன் முதலில் பகீரதன் பெண்ணாகிய லக்ஷ்மீ யென்பவளை மணந்து அவளிடம் ஜனமேஜயன் என்ற புத்திரனைப் பெற்றான். (இந்த ஜனமேஜயன் சர்ப்பயாகஞ் செய்தவனல்லன்). பின்னர் இந்தத் துஷ்யந்தனே கௌசிகனுக்கும் மேனகைக்கும் பிறந்த பெண்ணை சகுந்தலையை விவாகம் செய்துகொள்ள, அவர்களுக் குப் பரதன் பிறந்தான். [அவனிடமிருந்துதான் பரத வம்சத்திற் குப் பெருங்கீர்த்தி ஆரம்பித்தது].

தெக்ஷகன்: தக்ஷகன் என்னும் நாகராஜன். பவுடியன் மனைவி குண்டலங்களைக் கவர்ந்து பாதலத்திற்கு ஓடியவன். பின்னர் உதங்கமுனிவரிடம் குண்டலங்களைக் கொடுத்தான்.

தேவகி: வசுவதேவன் மனைவி. கண்ணனுக்கும் சுபத்திரைக் கும் தாய். சுபத்திரை பட்ட காமவேதனையைத் தோழியர் இத் தேவகியிடம் தெரிவிக்க, அவள் கண்ணனுக்குத் தெரிவித்தாள்.

தேவயானை: சுக்கிராசாரியரின் மகள். யயாதியை மணந்து, யது, துருவசு என்ற இரு குமாரர்களைப்பெற்றனள். சன்மிட் டையை உயிர்ப்பாங்கியாகக்கொண்டிருந்த இவள் பின்னர் அவளைப் பணிப்பெண்ணாகக்கொண்டாள்.

தௌமியன் : உற்கசதீரத்திருந்த முனிவன். சித்திரரதன் சொற்படியே இவனைத்துணையாகக்கொண்டு பாண்டவர் திரௌபதி சுயம்வரத்துக்குச் சென்றார்கள்.

நகுடன் : ஆயுவின்மைந்தன்: மகஞ்செய்து தேவேந்திரபதவி பெற்றான். அகத்தியர் சாபத்தால் சர்ப்பமாயினன். யயாதியின் தந்தை.

நகுலன் : மாத்திரியின் குமாரன். சகதேவனுக்கு மூத்தோன்.

நாரதன் : சுந்தோபசுந்தர் கதையைச்சொல்லி, திரௌபதியின் சம்பந்தமாக நியமம் ஏற்படுத்திச்சென்ற முனிவர்.

நாளாயணி : மௌத்கலிய முனிவரின் மனைவி. அவரால் பரிசோதிக்கப்பட்டுப் பின்பு இன்பம் நுகர்ந்தவள். இந்திரசேனை யென்ற பேரும் பெற்றவள். இவளே திரௌபதியானாள்.

நீலன் : வலிமையுள்ள அரசன். திரௌபதி சுயம்வரத்திற்கு வந்திருந்து பங்கப்பட்டவன்.

பகதத்தன் : நரகாசுரனது மகன். யானைப்போரில் வல்லவன். திரௌபதி சுயம்வரத்துக்கு வந்தவன்.

பகாசுரன் : வேத்திரகீயத்திருந்த அரக்கன். வீமனாற்கொல்லப்பட்டான்.

பப்ருவாகனன் : அருச்சுனனுக்குச் சித்திராங்கதையிடம் பிறந்தவன். சித்திரவாகனபாண்டியனுக்குத் தத்துமகனாகக் கொடுக்கப்பட்டவன். [பப்ருவாகனன்-பிங்கலவர்ணமான குதிரைகளையுடையவன்.]

பரசுராமன் : மழுப்படையோன். வீடுமனுக்கு வில்லாசிரியன். வீடுமனிடம் அமரிடமுடியாது உடைந்தவர். கார்த்தவீரியனின் ஆயிரம் தோள்களையும் துண்டித்தவர். இருபத்தொருமுறை அரசு களைகட்டவர்.

பரத்துவாசன் : துரோணனுக்குத்தந்தை. அங்கிரன் எனும் முனிவனது குலத்தில் தோன்றியவர்.

பரதன் : துஷ்யந்தனுக்குச் சகுந்தலையிடம் தோன்றியவன். மிகுசிறப்பினன் உலகம் ஏழினையும் பரிக்கவல்லவனென்று

இப்பெயர் சூட்டப்பட்டது. இவன் தொடங்கிப் பரதவமிசம் ஆரம்பம்.

பராசரன் : மச்சகந்தியை யோசனகந்தியாக்கி, அவளுடன் கூடி வியாசனைத் தோற்றுவித்தான்.

பரீட்சித்து : அபிமன்யுவுக்கும் உத்தரைக்கும் பிறந்தவன். சமீகர் கழுத்தில் செத்தபாம்பையிட்டுச் சாபம் பெற்றவன். அன்றுதொட்டு ஏழாம்நாள் பாம்பினால் கடிக்கப்பட்டு மரண மடைந்தவன். இவன் மகன் சர்ப்பயாகஞ்செய்த ஜனமேஜயன்.

பலராமன் ; கண்ணனுக்குத் தமையன்: திருமாலின் எட்டாம் அவதாரம். வசுதேவனுடைய பத்தினியருள் தேவகியின் கருப் பத்தில் ஆறுமாசமும், ரோகிணியின் கருப்பத்தில் ஆறுமாசமும் இருந்து பிறந்தவன். அலாயுதன்:தாலத்துவசன் (பனைக்கொடியை யுடையவன்); யமுனையைக் கலப்பையால் இழுத்துத் தன்னிடம் வரச்செய்தவன். வெண்மையான நிறமுடையவன்.

பவுடியவேந்து : பௌஷ்யராஜன். இவனது மனைவியின் குண்டலங்களைத்தான் உதங்கர் குருதக்ஷிணையாகக்கொடுக்கப் பெற்று வந்தார்.

பாண்டு : வியாசனருளால் அம்பாலிகையிடம் பிறந்தவன். வெண்மை நிறத்தினன். சேனாதிபதியாயினன். குந்தியையும் மாத்திரியையும் மணந்தவன். இவனது புதல்வர்கள் பாண்டவர் கள். கிந்தமனிடம் சாபம்பெற்றான். தவம்பூண்டு ஞானமுனி யாகிப் பின்னர்ச் சாபப்படி உயிரிழந்தான்.

பிரதை : [குந்தியைப் பார்க்கவும்].

பிரபாசன் ; அட்டவசுக்களில் கடைசி வசு. இவன் தன் மனைவியாகிய யோகஸித்தை என்றவளின் பேச்சைக்கேட்டு வசிட்டமுனிவனின் பசுவாகிய ஓமதேனுவை இரவில் களவாடிக் கவர்ந்துவந்தான். அவர் இட்டசாபப்படி மண்ணுலகுக்குவந்து மானுடனாகித் தெரிவையின்பம் நீங்கியிருந்தான். இவன்தான் வீடுமன் (பீஷ்மன்) ஆயினன்.

பிரமபுத்திரர்கள் ; மானசிகபுத்திரர்கள் ஆறுபேர். அவர்கள், அத்திரி, மரீசி, கிருது, அங்கிரன், புலத்தியன், புலகன்-

இவர்களேயன்றி, தக்ஷர், தருமதேவதையென்னும் ரிஷி, பிருகு, மனு, ஏகாதசருத்திரர் இவர்களும் பிரமனிடத்துத்தோன்றியவ ராவர்:

பிருகஸ்பதி: அங்கிரஸின் புத்திரர். தேவகுரு.

புதன்: சந்திரனுடைய மகன். இளையைக்கூடிப் புரூரவசு வைத் தோற்றுவித்தான்.

புரூரவசு: புதனுக்கும் இளைக்கும் புதல்வன். அசுரர்கவர்ந்த உருப்பசியைமீட்டு இந்திரன் தூதினற் பூமியில் அவளை மணந்து ஆயுவைத் தோற்றுவித்தான்.

புரோசனன்: நடுவுநிலைமையில்லாதவன். திருதராட்டிரனுக்கு அமைச்சனையிருந்து அவனல் தருமனுக்கு மந்திரியாயிருக்க அனுப் பப்பட்டவன். வஞ்சனையொழுக்கமுடையவனதலின், அரக்கு மாளிகையெரியில் இறந்துபோனன்.

பூரிசிரவசு; பூரிஸ்ரவா என்பவன். சோமதத்தன் மகன். இவன் துரியோதனன்பக்கத்து அதிரதவீரரில் ஒருவன். கண்ண பிரான் மொழிப்படியே அருச்சுனன் இவன் தோளைத்துணிக்கப் பிறகு இவனைச் சாத்தகி தலைதுணித்தான்.

பூரு: யயாதிக்கும் சன்மிட்டைக்கும் பிறந்த மகன். தந்தைக் குத் தன் இளமையீந்தான். மீண்டும் இளமையும் அரசும் பெற்றான்.

பைதர் உதங்கமுனிவரின் ஆசான். தமது சீடன் குருதக்கிணை யாதுகொடுப்பது என்று கேட்க, அவர் தமது பத்தினி கேட் பதைக்கொடு என்றார். அந்தப் பத்தினி பவுடியவேந்தன் மனைவி யின் காதணிகளைக்கேட்ப, அப்படியே உதங்கர் கொணர்ந்து ஆசானிடம் சமர்ப்பித்தார்.

மயன்: அசுரத்தச்சன், காண்டவவனத்திலிருந்தான். அருச் சுனனை அபயம்வேண்ட அவனருளால் உயிருய்ந்தான்.

மரீசி: பிரமனின் மானச புத்திரன். நற்குண சீலன். இவர் கசியபரைப் பெற்றவர். அந்தக் கசியபர்தான் தக்ஷபிரஜாபதி யின்ற ஐம்பது பெண்களில் பதின்மூன்று பெண்களை மணந்து கொண்டு துவாதசாதித்தர், அசுரர், அரக்கர், கருடர், நாகர்,

மிருகங்கள், சித்தர், தேவகந்தர்கள், நடனம் ஆடும் அப்ஸரஸ் ஸுக்கள், யக்ஷகணப் பசுக்கள், இவர்களைப் பெற்றார். எனவே மரீசி மஹரிஷியின் பெயரால் இந்த மரீசி வமிசம் எனப்படும்.

மாத்ரி: மத்ர நாட்டரசன் மகள். பாண்டுவை மணந்து நகுல சகதேவரை அசுவினி தேவரருளால் பயந்தாள். பாண்டுவோடு சிதையனலிற் குளித்து உயிர்நீத்தாள்.

மாதவி: யயாதியின் மகள். அவளுக்குப் புதல்வர்கள் நால்வர். இவர்கள்தான் பின்னர் தவத்தோராய சாதுக்களாயினர். இவர்கள் மத்தியில்தான் யயாதி வந்து சேர்ந்தார். தெளஹித்திரர்கள் கேட்ட விஷயங்களுக்கெல்லாம் யயாதி தெளிவுபடப் பதிலிறுத்தான்.

மேனகை: தேவேந்திரன் ஆணைப்படி கௌசிகமுனிவனது தவத்தைக் குலைத்து அவன் மனத்தைப் பேதித்துச் சகுந்தலையைப் பெற்றுவிட்டிட்டுப்போன அப்ஸரஸ் ஸ்திரீ. சகுந்தலையின் பிள்ளை பரதன். எனவே, மேனகை யில்லையேல் பரத வமிசமே யில்லை.

மௌற்கலியன்: நாளாயணி கணவன். இந்திரசேனையாகப் பிறந்து தன்னையே கணவனாக அடையவேண்டிய நாளாயணியை விடுத்துத் தவம் மேற்சென்றான். இவனை யடையத்தான் இந்திரசேனை தவம்பூண்டு சிவபெருமானை வழிபட அவன் தோன்றி 'என்ன வேண்டும்' என்று கேட்க, அவ் இந்திரசேனை 'எனக்குக் கணவன் வேண்டும் தருவாயாக' என்று ஐந்து தரம் கூறி, அவள் ஐந்து கொழுநரைப் பெறும்படி அநுக்கிரகித்தனன். அந்த இந்திரசேனைதான் திரௌபதியாகிப் பஞ்சபாண்டவரை மணந்தாள். எனவே இந்நிகழ்ச்சிகளுக்கெல்லாம் மூலகாரணம் இந்த முனிவன் ஆவன்.

யமன்: தருமபுத்திரனைக் குந்தியிடம் உண்டாக்கியவன்.

யயாதி: நகுடன் புதல்வன். தேவயானையை மணந்து, யது, துர்வசு என்னும் இரு பிள்ளைகளைத் தோற்றுவித்தவன். சன்மிட்டையைச் சேர்ந்து பூரு, த்ருஹ்யு, அனு என்ற மூவரைத் தோற்றுவித்தவன். சாபத்தால் முதுமையடைந்து, அந்த முதுமையினைப் பூருவுக்கு ஈந்து மீண்டும் பெற்று, அப்பூருவுக்கே அரசளித்தனன்.

யாசன்: உபயாசனோடு கூடவிருந்து அருபதனுக்காகப் புத்திரகாமவேள்வி செய்தவன்.

யாதவர்; யதுகுலத்தவர். சூரன், வசுதேவன், பலராமன், கிருஷ்ணன், பிரத்யும்நன், நாராயணகோபாலர்கள் இவர்களெல்லாம் யாதவ குலத்தவரே.

யோசனகந்தி: மீன் வயிற்று உதித்தவள். மச்சகந்தியாயிருந்து தாசபூபதியிடம் வளர்ந்தனள். காளி, சத்தியவதி என்றும் அழைக்கப்படுவள். பராசரனருளால் யோசனை தூரம் கமழும் மேனியுடைய யோசனகந்தியானாள். அம் முனிவனருளால் வியாசனை ஈன்றாள். மீண்டும் அவனருளால் கன்னிகையாகிச் சந்தனுவை மணந்தாள். சித்திராங்கதன் விசித்திரவீரியன் இருவரையும் பெற்றாள்.

வசுதேவன்: தேவகியை மணந்து கிருஷ்ணனையும், உரோகிணியை மணந்து பலராமனையும் பெற்றவன். எனவே, கிருஷ்ண பலராமர்கட்குத் தந்தையாவன்.

வபுட்டை: வபுஷ்டமை. இவள் காசி தேசத்து ராஜாவாகிய சுவர்ணவர்மா என்பவனின் மகள். இவளை அந்த அரசன் பரீட்சித்து மகன் ஜனமேஜயனுக்குத் திருமணஞ் செய்துகொடுத்தான்.

வருணன்: சாபத்தினாற் சந்தனுவாய்ப் பிறந்தான்.

வாசுகி: களாப்பழத்தினும் கரியநாகன். நாகராஜனாய்ப் பட்டாபிஷேகஞ் செய்யப்பட்டவன். இவன் ஜரத்காரு என்ற நாகமாதினை அப்பெயரைக்கொண்ட ஜரத்காரு முனிவனுக்குப் பாணிக்கிரகணம் செய்துவைத்தான்.

வாயு: வீமசேனனைக் குந்தியிடம் உண்டாக்கியவன்.

விசித்திரவீரியன்: சந்தனுவுக்குக் காளி (யோசனகந்தி) யினிடம் பிறந்தவன். வீடுமனால் சித்திராங்கதனுக்குப்பின் அரசனாக்கப்பட்டான்.

விசுவகன்மா: இந்திரன் கட்டளைப்படி இந்திரப்பிரத்த நகரத்தை நிருமித்தவன். தலைசிறந்த சிற்பி.

விதுரன்: யமனம்சமானவன். திருதராட்டிரனுக்குத் தம்பி. அவனுக்கு அமைச்சனுமானவன். பாண்டவர்பால் மிக்க அன்புடையவன் 'நீதிபுனைவிதுரன்' எனப்படுபவன்; வில்லில் மிக வல்லவன்.

வியாசன் ; பாரதஞ்சொல்லக் கணபதி தீட்டினர். சுகனுக் குத் தந்தை. பராசரனுக்கும் யோசனகந்திக்கும் மகன். வேதம் வகுத்தவன். பிரமசூத்திரம் பாகவதம் இயற்றியவர். இவரது சீடன் வைசம்பாயனன். அவனைக்கொண்டு ஜனமேஜயனுக்குப் பாரகதைசொல்லக் கட்டளையிட்டார். வாதராயணன் என்றும், கிருஷ்ணத்வைபாயனர் என்றும் வழங்கப்படுவர். காந்தாரி மோதிச் சிதைத்த கருப்பகோசத்தைத் தாழியிலிட்டு உருப்படுத் தியவன். அப்போதைக்கப்போது பாண்டவர்கள் முன்வந்து அவர்கள் மேல் நிகழ்த்தவேண்டியவற்றைக் கூறுபவன். ஐவரைத் திரௌபதி மணத்தற்குரியவளென்று துருபதனைத் தெளிவித்த வன். இவரது அருளால் தோன்றியவர்கள் தாம் திருதராட்டிரன், பாண்டு, விதுரன் மூவரும்.

வீடுமன் : 'பீஷ்மன்' எனப்படுவன். இச்சொல் பயங்கர மானவனென்று பொருள்படும். பயங்கரமான விரதத்தை மேற் கொண்ட மனவலிமையுடையவன் என்பது கருத்து. இவன் தாயாகிய கங்கையாள் இவனுக்குத் தேவவிரதன் என்று பேரிட் டாள். தந்தையாகிய சந்தனு இவனுக்கு "ஸ்வச்சந்த மரணம்"— அதாவது வேண்டும்போது இறத்தல் – என்ற வரத்தையும் கொடுத்துள்ளார். பரசுராமனிடம் வில்வித்தை கற்றவன். இரு தம்பியராகிய சித்திராங்கதன் விசித்திரவீரியன் இருவர்க்கும் முடி சூட்டியவன். பலராமனைப்போல் பனைக்கொடியினன். பரசு ராமனைப் புறங்கண்டவன். சிகண்டியால் ஒடுங்கினவன்.

வீமன் : குந்தியினிடம் வாயுவினால் பிறந்தவன். பதினாயிரம் யானைபலமுடையவன். நாகலோகஞ்சேர்ந்து அமுதுபருகி வலிமை மிகுந்து மீண்டவன். துரியோதனனுக்குப் பகைவன். அரக்கு மாளிகையைத் தானே தீக்கொளுவ வைத்துச் சகோதரர்களையும் தாயையும் காப்பாற்றியவன். இடிம்பனைக்கொன்று இடும்பியைக் காந்தருவமணம் புரிந்து, கடோற்கசனைப்பெற்றவன். பகாசுர னைக் கொன்று வேத்திரகீய நகரத்தார் போற்ற நின்றவன். திரௌபதியை மணந்து சுருதசன்மன் (சுதசோமன்) என்ற மகனையின்றவன். பின்னர் சலதரையென்பவளிடத்தில் சுருணன் என்னும் மகனைப்பெற்றவன்.

வைசம்பாயனன் : வியாசரின் சீடன். அவர் ஆணையிட்டபடி [சர்ப்பயாகஞ்செய்த] ஜனமேஜயனுக்குப் பாரதகதையை முற் றும் சொன்னவர். [இவர் கூறிய வழியைப் பின்பற்றியே சூத முனிவர் நைமிசாரணிய ரிஷிகளுக்குப் பாரத கதையைச் சொன் னர்.]

முற்றிற்று.

ஆதிபருவம்

செய்யுள் முதற்குறிப்பகராதி

செய்யுள்	பக்கம்
அக்கடல்மருங்கினுற்ற	52
அக்காலியவ்வனத்	206
அக்கிருபிகற்புனிலை	338
அகத்தியர்க்குநேர்	10
அங்கராசனென்றவன்	281
அங்கவன்பால்வசிட்ட	433
அங்கவனுமவ்வனத்	457
அடலிபத்தினையடு	399
அடிகொடென்புபொடி	414
அணங்கினெய்துமந்நதி	198
அணிதுவரையாதவர்கள்	324
அத்தவத்தீபுவியளவிற்	456
அத்தனுமன்னீமாரும்	317
அத்தனையனுஞ்சுதேவை	221
அத்திநகர்புகுந்தின்ரூள்	334
அத்துறைப்புனலாட	279
அதனுலிவணுற்றிடல்	366
அதிசயித்தவர்கள்போற்றி	188
அந்தகனெனினுமுந்	377
அந்தணராதியவருண	500
அந்தணருருவின்வேந்த	469
அந்தணரூர்வையகியது	104
அந்தமொழிகேட்டிட	562
அந்தமன்னவனணி	197
அந்தரமளக்குமந்திர	26
அந்நகர்க்கரசகத்	289
அந்நகர்ப்புதுமை	462
அப்புதல்வனிளஞரொடு	449
அப்பெருந்தழலில்வருண	602

அம்மா துரைகேட்ட 311
அம்முனிவனெனதன்றிங் 436
அம்மொழிவினவிசவுபல 374
அம்மொழிவெம்மைச் 249
அயன்சபித்திடும்படி 232
அரசர்குலத்தவளணி 169
அரசறன்மைந்தனளி 369
அரசறியாதவன்மெயிற் 443
அரசனிறைஞ்சிக்கடனி 84
அரசினுடனெருவரை 410
அரவினந்தனக்கிங் 371
அரிக்கரியோன்மதிக்கரிய 339
அரியமறையவனுரிய 409
அரியவவ்வனத்துறு 394
அரிவைபங்கன்அழற் 565
அருங்கான்புகுந்தாங் 362
அருந்தவரின்படிவங் 406
அருந்திடநால்வருக் 497
அருந்திலமிறந்தபினு 507
அருமறையோற்கரசர் 175
அரைசரினுமந்தணர் 487
அலத்திலெனுருவென 15
அவ்வசிட்டன்சிர்த்தியை 458
அவ்வணநுமக்கிங் 98
அவ்வரசர்குலமட 452
அவ்வழிசந்தனுவேட்டை 336
அவ்வனத்தில்வேட்டை 170
அவ்வாறுணர்ந்தங்கேசனு 518
அவ்வுயிரொழிந்தசராசர 610
அவ்வுரைக்கிசைந்தவ் 76
அவ்வுரைகேட்டுதிட்டிரனு 402
அவ்வுரைசெவிபுகு 275
அவ்வுரைவந்தரிபுகல 107

அவனடைந்துரைப்ப 75
அவிர்மணிக்கொழித் 16
அற்றைநாளிரவதனிடை 572
அறத்தினுக்கிடர் 598
அறந்தனிலுமையு 425
அறிந்துமறியான்போனீர் 174
அன்பொடுமன்னன்வினவலும் 97
அன்போடன்னமுனி 415
அன்றகனதிமீண்டின்றி 255
அன்றமரில்பின்றருமன் 494
அன்றிடங்கர்செகுத்திபங் 348
அன்னகாலையருளறன் 514
அன்னகாலையிலிகுளையர 571
அன்னசொற்குளமழன்ற 34
அன்னபான்மையினீமணங் 242
அன்னவர்தஞ்சரிதமெலா 495
அன்னவரோடுதித்தவளை 68
அன்னவன்சுதன்யாரினுஞ் 160
அன்னைசொற்கேட்டும் 533
அன்னைதமக்காயரத்தணங்கை 82
அன்னையையிளையாட் 52
அனலில்விழுந்தஃதுபுனலாக 444
அனையவத்தினபுரியினின் 30
அனையவன்விசயையென்னு 220
ஆக்கவாரணனுயுல 6
ஆங்கதைநிமித்தமாக 465
ஆங்குயானுணர்ந்த 427
ஆண்டடைந்ததற்பின் 528
ஆண்டரவுயர்த்தோன்புரோ 384
ஆண்டுறையுமுனிவர்புகுந் 321
ஆதலான்முனிவனென்று 73
ஆதலாலழல்வந்தாள 538

ஆதலினீரத்தவத்தை	453
ஆதிவருணர்மொழிமறை	80
ஆயவர்மகிழ்ந்தார்மன்ன	191
ஆயவன்சுனந்தைக்கின்ற	224
ஆயிடையங்கசரீரியாளரசே	217
ஆயுமவ்வழலுக்கஞ்சி	614
ஆயுறுவேதியர்கலியாலட	152
ஆர்த்துறுமந்தணனெருவன்	489
ஆரழல்கரியாகத்	517
ஆரியன்விலோசனமுணர்ந்	352
ஆவிகொள்ளநீயஞ்சுவை	565
ஆழிசூழலகோர்களுய்ய	267
ஆழியினுற்றத்தவத்தீ	455
ஆனதாற்சமன்விதுரனை	293
இக்கதையளவுமாதியம்பருவம்	616
இச்சையுடன்வளர்ந்திடு	116
இடையுருக்காட்டிமுலைமுகங்	582
இத்தகைப்புகழெய்திடு	32
இத்தலமதனினுக்கிளவரசி	368
இந்தவாறிவர்களிங்கி	416
இந்திரதனுவையந்தரத்	420
இந்திரனீயிவணமணந்	510
இந்திரைதன்தாயகமதாம்	532
இப்பவத்தினின்றவத்தால	503
இப்பெருஞ்சபதமியம்புழி	252
இயம்பியவக்குமரன்	199
இரத்மொழியரசினைப்பார்த்	172
இரதிவேளொடும்புணர்வ	287
இரவொடுபகலுமிடைவிடா	581
இருக்குநான்கோடைங்	1
இருதிறத்தவருமைந்தாண்டி	526

இருந்தகத்துளிஃதியம்பி 492
இருநிலமருத்தமதற்கிவன் 527
இருவருக்கப்புதல்வர்களு 328
இருவருமொத்திருந்திடும் 558
இருவரையீன்றிடுமரசன் 177
இல்லமடைந்தமருகனைப் 83
இல்லிடைவைகியயதி 578
இலகுபன்மணிகணிரப்பி 529
இவ்வண்ணம்வேனில்விழா 589
இழையிரண்டிரவும்பகலுமா 43
இளையமைந்தனுமிறந்திடப் 274
இறந்தவன்தேவிமாருக்கு 226
இறைவனதற்கந்தணர்நண் 342
இன்றெமனைமுறையொன்று 408
இன்னவண்ணமிவனிருப்ப 365

ஈன்றதுணர்ந்தடைந்தவள் 179

உகமுடிவினுலகமெலா 593
உண்டிலைகொலெனுமிடையாள் 164
உணத்தகும்பல்விதத்தினும் 331
உத்தமவினுதையென்பாளுவ 130
உத்தரதிக்கதிபதியே 150
உந்தனைவிதுரனெருவிடானவ 381
உந்தியுதித்தவன்சாபத் 115
உந்துதேரினுதையும்பலோதை 358
உம்மைக்கொல்லவந்துன் 395

உயிரன்னவர்மயிறன்னையு 551
உரககேதுரைப்பக் 521
உரியநரனினைவையறிந் 557
உருப்பசித்தருப்பொழிலுழி 158
உருவிலியுமிரதியும்போற் 553
உரைத்திடும்வாய்மை 522

உலகரசங்குறுமுழையரு 209
உற்கயமென்றொருதீர்த்தமுளது 459
உறுதவம்புரிந்தந்தணனு 292
உனக்குத்தீங்கொன்றுஞற்றில 567
எக்கலியிலேருமிஃதெமது 99
எங்களுக்குரைசெயென்ன 418
எடுத்தனமுடிப்பாள்மைந்தர்க் 53
எடுத்தமாறுருவமிகல் 59
எண்ணுதமர்கொல்வேனெனு 520
எம்முடனிவணீதுயிலென 389
எரிக்குணவாளராயொடு 391
எழிலனைத்துமொருவடிவாய் 493
எழுந்திருந்தயிராவத 597
எழுவருமுடனேசெனித்து 240
என்பாற்பசுநிரையாவையு 539
என்றதன்சூட்சி புகன்றிடு 388
என்றலுமன்னனவனி 50
என்றிடும்பிசொற்றிட 396
என்றியம்பமழுவாளிமிக்க 264
என்றியம்பிமாருதிநிசா 398
என்றுசொற்றிராசராச 356
என்றுபுகழ்ந்தத்திகன் 91
என்றுமைந்தனுழ்யாரையும் 293
என்னகயன்பன்னதிரு 167
என்னசொற்றிருடியேக 314
என்னமாதவன் சொற்றிட 611
என்னமாமுனிவன்கூற 229
என்னலும்யாம்யயாதிசுதர் 180
என்னலுமாதந்தனரான் 178
எனக்குமுனிவுறப்புரிநாணின்னை 69
எனநின்றமலற்கிளையாளிரு 569

எனமா தவன்கையேற் றலினும் 87
எனவேந் தியம்பிப்பின் னும் 310
ஏகலிவனென் றொருவேடு 345
ஏழுமேகமும்போந்தெழு 599
ஏனையோன்மரியாதைவேட் 195
ஐந்துதரங்கேட்டதனற் 508
ஐம்பெரும்பூதம்போல்வா 462
ஐயிரண்டுதினமல்லுமெல்லு 264
ஒப்பில்குணத்தினுதிட்டிர 368
ஒருதினமகவான்வேந்த 185
ஒருபதிமாதருக்கலதெண்ணில 502
ஒளித்திருக்கும் பிருகுமுனி 450
ஓதியவிவரன்றின்னு 137
ஓதுதெக்கன்வந்தந்த 38
ஓதுமிக்கதைமுற்செனமேசெய 13
ஓவியமனையாளின்ப 320
கங்குற்பொழுதுங்கதறுங் 570
கங்கையான்வருணனீ 238
கடுங்காமத்தொடுயாமுங் 564
கண்டதுமின்றணிந்ததுமின் 213
கண்டிவள்யாரியாரெனவே 202
கண்டிவன்குகனே 244
கண்டுமஞ்சாதார்க்குமிராக்கதன் 445
கண்ணன்றன்னேவேற் 573
கண்ணில்மைந்தனும் 286
கதிரோனருள்யமுனைதி 542
கருக்கொண்டியோசனைகந்தி 118
கருடனுக்கிமையோர்காவலன் 63
கருத்தினன்பரைக்காத்திட 11
கருமானிகர்த்தகுழல்வேட்ட 303

கலங்குமிலையுயிரனைய	563
கற்பகத்தடக்கைவீரர்	468
கற்றகுணமரிசியின்ற	128
கன்மாடபாதன்மனையாள்	309
கன்னலின்பழனமருதவேலி	531
கன்னன்வந்துதன்முனின்று	354
கன்னிகையான்புலவுமகழ்	117
கனலுதித்தாட்கிவரைவ	513
காட்டுவல்யான்பதியை	509
காண்டலும்பிணித்தவருடன்	290
காயம்புன்மணங்கமழ்ந்	284
காயிலமிசைந்துந்தீர்ந்துங்	185
காவல்செய்தமுதைக்கடவுளருடன்	60
காவெலாந்தளிர்கள்	318
குடதிசைமித்திரனேகக்	556
குண்டையூர்ந்தொருவன்	41
குந்திமுந்துயிர்த்தமைந்தன்	353
குந்திபணிபுரியுமிராக்கதியும்	404
குந்தியம்மறைப்பயனுணர்வா	298
குருகுலத்தரசுன்கோதை	248
குருகுலத்துமைந்தர்போர்க்கு	359
குருகுலந்தழைப்பக்குமரன்வந்	583
குலவுமாரமுற்சினத்தொடும்	594
குரைசெய்கடலேகுமுறுங்	568
குரைசெய்கடற்பார்கலிகடிந்தோர்	86
குறைமிகுந்தவிக்குருகுலம்	283
கூடிவிண்ணவரத்தக்ககன்	601
கேட்டடலுவணன்சிற்றினச்	55
கேட்டுபாம்பொருவர்	47
கைத்தலத்தேந்தியிக்	236

கொண்டமங்கையைக் 157
கொல்லியலுக்கந்தணனே 490
கொற்றவனினதுதந்தை 72
கொற்றவன்மாழ்கியான்சொற் 186
கௌவியலகேகுழியோர் 114

சகுனியுந்துணைவர்தாமுந் 524
சங்குவண்ணமுஞ்சாமள 4
சத்தியதற்கந்தணன்யான் 441
சத்தியவதியைமீட்டச் 225
சதமகருமடியவரசுளம் 438
சந்தனத்தவளுடன்புகுந்து 262
சம்பிரக்கனியொன்றேந்தி 77
சலத்துக்கிவனேகுருகுலத்துத் 478
சற்றுமின்றியனமுற்று 413

சார்ந்துபதிசிவன்மகன் 162
சார்வபூமகனியுயிர்த்தனன் 194
சாரதியூர்ந்திடவந்தத் 592
சாற்றிடுமிச் சுரரசுரர் 153
சாற்றுமத்தலத்தின் 42

சித்திராங்கதன்விண்ணடைதலி 257
சிந்தைகலங்கித்தெக்ககன்போய் 81
சிரத்தின்முடிதோள் 363
சிறுத்தசெந்நென்முருந் 22
சின்னுள்தவஞ்செய்திடுபின்வட 305
சின்னுளங்கிருந்தொருநாளு 165

சீதமதிமரபுதித்தசெம்மனீ 71
சீதமதிமரபுளிருமரபியலுஞ் 101
சீதவார்பொழில்நைமிசவனத்துழி 12

சுகப்படுவானிவனோ 332
சுகுணஞ்சுதனீவீமனும் 585
சுசிகதிரோன்கன்னனுமாய் 145
சுதனுல்பிதுர்க்கள்பசிதீர்ப்ப 307
சுருதிக்கிழவர்தமைவினவி 79
சுருதியின்மணம்புரிந் 234
சுவர்க்கமேவியயயாதி 192
சுனைத்தாமரையோடு 17

சூடுவார்சிலைக்கரத்தினன் 157

செஞ்சுடரெழுமுன்னெழுந் 390
செந்தழல்வலஞ்செய் 516
செந்தாமரைகொண் 19
செம்பஞ்சார்தருசீறடி 5
செல்வியுழைபார்க்கவன்வந் 171
செலுத்துமப்படைகள்துகள்பட 61
செழியன்புரிதவத்தால்வரு 549
செழுந்தவப்பயனற் 312
சென்றவம்பையைச்சாலுவ 260
சென்றிடினீயடியேனிங் 70
சென்னெறிதனிலோராற்பாற் 75
சேறியென்னலோடுகாணி 361
சொற்றதினத்தக்குரோணி 100
சொற்றபாண்டவரிற்பார்த்தன் 227
சொற்றமொழியுளம்வெதுப்பத் 215
சொற்றருள்குமரர்தம்மிற் 222
சொற்றலுங்குருவெகுண்டு 276
சொற்றிடலுமீபுரிந்த 579

தக்ககன்மகவைக்கண்டளித் 603
தக்ககன்றனக்கவ்வனத்திடை 609

தகுவர்பெருமானிடப 161
தங்குபொழிலெனுங்கொல்லன் 587
தங்கைபின்னுட்போய்வென்றனள் 54
தந்தபார்த்தனைக்குலிசனும் 574
தந்தைசிறுமென்றஞ்சனீ 299
தந்தையீதுரைப்பச்சிந்தை 378
தந்தையுணர்ந்துதகந் 207
தந்தையைகங்கையின்றதனயனை 525
தந்தையொடுமன்னையொடுந் 322
தம்பியீதுரைப்பவேந்தத் 524
தராதலம்மிகும்பொறை 9
தரியலர்வெந்தர 551
தரியாதயர்ந்துதெக்ககன்விண் 88
தருதுமெனுமொழிகேட்டுத் 590
தருப்பையும்புனிதமாய்தவ 65
தருமந்தவறெய்தாவுயிர் 539
தருமமகந்தவம்விரதம் 214
தருமனற்பிரிதிவிந்தனை 583
தருமனுக்காண்டிலையோன் 326
தருமனுக்கெந்தையிளவரசுரிமை 369
தரைபுரக்கும் அசுரேசனிடப 168
தரையிடைவிழுந்தகோசத்தசையினை 313
தரைவருமெனைவந்திறைஞ்சி 239
தலைமுறையிருபாலென்று 123
தலைவனீத்தரசர்நாணத் 472
தழற்கணுதித்தானியம்பு 477
தனக்காகமுனிவடிவங் 559
தனக்கிணையிலிரணியனே 147
தனஞ்செயன்கரியாயியந் 574
தனஞ்செயனிடத்திலெந்தை 470

தனையரைச்சென மேசெயன் 49
தாசர்கோன் திருநேர்தையலீல 254
தாதனைந்தளிகடுஞ்சுந் 474
தாதைபின்னவன்சொற் 373
தாயுடன்மாதந்தபுரந் 501
தாரணிமொய்ம்புடைய 434
தாழ்வியற்றினேர் தருக்குற 291
தாழ்வுறுதினத்தொருவர் 96
திங்கணன்னுதலாள்பாண்டு 315
திருபவுடியவேந்தில்லாட் 36
திருமாற்குகந்தவிளவலிவன் 479
திருவனையாவண்மகவுயிர்த் 212
திருவினிற்றிறனிற் 372
திவசஞ்செய்பவனருளினுன் 300
தினமொன்றுயினும்பிரிவிற் 113
தீர்ந்தருகங்கொருபொழில் 201
துங்கபைதாமகன்றன் 134
துணைவர்மாதுலனுரியன் 380
துரிசிலச்சுதன்திதி 197
துருபதேயன்றன்னைநோக்கி 360
துரும்பினையரவென்றுரைச்சினன் 48
துவரையின்புறத்தோர் 572
துவரைவேந்தருடோர் 576
துறந்தமுனிநினைப்பயந்த 203
தூதையுய்த்துணர்ந்து 261
தூய்மைகொள்தெய்விகத் 232
தூயவசென்றரசனைநீ 499
தூயனுயொருமைந்தனீ 281
தெக்கனன்கவர்வானெண்ணி 37
தெக்கனல்வேந்தேமாந்தினம் 74
தெரிவைமார்க்குள்வனப்பிற் 535

தென்றற்றேரேறிவேழச்சிலை 319
தேசிகர்களிருவரையுந் 349
தேய்ந்ததோர்திங்கள் 566
தேவியுய்ந்தெழுமாதவன் 46
தேறியோலிதிறன்மன்ன 417
தொடுகணைகடனெப்பொடி 430
நதிமகனெம்பிக்கனையபூவையரை 258
நதிரதத்துறுமதலையை 301
நரனுதிட்டிரனிருபுயத்தினு 393
நறைகொளுமுல்லைமுகையினை 421
நன்னிலைக்கோள்கள்யாவும் 311
நனையவிழ்வனசக்கோயினன்முகன் 126
நாட்டுமவ்வணம்நால்வரு 516
நிகரறுசந்திரவதன 148
நின்றரசவரைநோக்கி 187
நெஞ்சிடைப்புழுக்கங்காட்ட 57
நெடிதுநாள்தவஞ்செய் 44
நெறியிடைப்பொழில்கடோறு 465
நோக்குழிநோக்குக் 246
பகட்டான்மிதிப்பித்தகற்றி 23
பகீரதிதந்தவன்கிருபனிடத் 337
பசியொடொருவரை 412
பஞ்சவர்கள்நூற்றுவர்கள் 95
பஞ்சவரூர்புகுந்ததுவும் 103
படைகள்வல்லதிறலின் 357
பத்தியினிவட்கிங்கன்பன் 316
பதுமமொட்டொன்று 464
பரதகுலப்புதல்வர்தமைக் 343
பரவைசூழுலகங் 461

பரியசிலேவலேயாமல்வலேத்துச் 486
பருதிமைந்தன்விசையன்மீது 354
பரைமதிக்குமெம்பரன் 155
பலமாதவர்நாடுமாதவர் 541
பவமில்காசிபற்கிம்மாதர்ப் 132
பவனனருள்பவன்றுணைவர் 411
பன்னருஞ்சீர்அயோத்திநக 439
பன்னிதன்னெழிற்கொ 280
பாட்டனீயாமெற்கெந்தை 250
பாண்டவர்க்குரியளாகும் 470
பாண்டவர்களினியிருக்கிற் 109
பாண்டவர்தாயுடனிரவிற் 429
பாதலத்தளவுமாழ்ந்தகல் 530
பார்பயில்பதிகடோறும் 536
பார்புரந்தருளுந்துருபதன் 419
பாலேக்கிழத்தியடிபணிந்து 18
பிரிவினராகம்போழும் 319
பிரிவினுக்காற்றுதுடனகர் 385
பிருகென்போன்கவியி 135
பிறங்காழிகிணற்றுவிழத் 347
பின்றைநாள்அன்பனேவற் 314
பின்னுமான்முதற்பேசிய 121
புத்திமுத்திப்பொருந்தவு 5
புந்தியினிகரிலெம்பிபோல் 381
புரவலர்பெரும 522
புறந்திகழ்மின்னுரறியா 432
பூட்டுவில் அரசர்யாரும் 475
பூண்டிடுதுயரமொருவி 382
பூதமோரைந்துக்கமைத்திடுங் 584
பூதலத்துமன்னர்கற்ற 355

பூந்துளவக்கருமுகிலும் 588
பூமனிலதிகன்றபதியனெரு 387
பூவலயத்தியாதவரிற் 140
பூவுமாழியும்பூதரமும் 3
பெருக்கொடுறுபெண்ணை 546
பெருந்தவமைந்தர் 612
பெற்றதாயெழுவரைப் 235
பெற்றமாமுனிபின்வனம் 120
பெற்றிடுகந்தருவன்வாக்குறுதி 431
பெற்றிடுகுழையோடு 40
பெற்றிடுந்துருபதேயனிவ் 426
பேசியபுலத்தியன்விச்சிரவாகு 133
பேசுதியெலமாதவனிதை 45
பேர்கொண்டசூரன் 302
பைந்தொடிவதுவைக்கொல்லை 466
பைந்தேன்வீம்மாமலர் 21
பொங்கரவுசிங்கமெழு 351
பொதியமதிலுதித்தாளை 7
பொருப்பொடுமருப்பை 422
பொருளினிற்பொருளுக் 27
பொழிமழையதனனைனங் 600
பொற்பினிற்கமலப்பூமகள் 29
பொற்புக்கயங்கபசியால்புலி 308
பொறுத்ததன்றுரைத்தசொற் 237
பொறைமிகுந்தாற்றுதாழி 124
பொன்னித்துறைமுதலாகிய 548
பொன்னிலைற்காந்தி 25
போந்தெதிர்கண்டொருதடமங் 403
போருக்கரியேறிவனீலன் 481
போனகத்தின்விரல்விழுத்தான் 504

மகவொடுமகன்ற 243
மங்கலம்பலவாய்ந்தவண் 515
மங்கைநீகன்னியேல் 233
மச்சபுரத்தொருவருட 106
மடங்கல்யாளிவாரணம் 595
மண்டலம்புகழிச்சாபம் 475
மண்டழலமுலோடயிக்கிய 606
மணந்தநாண்முதனின்பணி 217
மதலிலைசொற்கிரங்கியருளுளம் 379
மதலையைமார்போடணைத்து 253
மதலையொடும்மனைவியொடும் 219
மதிநுதல்சூன்முதிர்ந்தீன்ற 211
மயலாலவணிருவோர்களு 550
மயலுறுமவ்விடும்பி 400
மருவுமனையினுக்குரிய 407
மலியவெற்பரசன்மகளைப் 568
மழையெனப்புகும்புகை 596
மற்றபகல்புரோகிதரு 498
மற்றபகலயர்வுதணந் 333
மற்றவருடனேபுரோசனன் 383
மற்றவன்னெழில்சுநந்தையை 193
மறுத்தியேலன்றுகொள் 234
மறைமுதற்கலைகளெல்லா 35
மறையவருக்கியானியையா 176
மன்றலாயபின்மாதுடன் 575
மன்னவர்யாருநின்வயப் 375
மன்னவன்வெருவிமூன் 235
மன்னனுக்கிளையோரடித் 33
மன்னனெதிர்கொண்டடி 94

மனத்தினிற்பிருகுவுங்கையின் 127
மாகருதித்தனர்போசர் 142
மாண்டவரக்கனுக்கினையாளை 401
மாதங்கங்கமழ்நறையை 205
மாதருறுப்பினைக்காட்டும் 111
மாதுலனுரைகேட்ட 370
மாய்ந்திடலோர்ந்திடாளணங்கின்ற 163
மானகம்பெறுமதி 231
மானவர்க்கிமஞ்ஞ் 534
மானைனபேரோன் மனையாளொடு 305
மானிடரூனெடுமனந்தந் 440
மானிடாவுனக்கடல் 397
மிகுதுயரின்வருமனிகத் 435
மிளிர்கதலியைக்காய்ந்தொளிர் 423
மீட்டுமச்சிறுவன்பசிக்குணவிரப்ப 58
மீட்டுமன்னையச்சுதனை 285
மீனஞ்சுறுவிழியாண் 542
மூக்கணனையனையசரத்காரு 66
முதியன்முன்விரதமொழிந்தவன் 259
முந்தரக்கன்றந்தையரை 448
முருந்திளநகையிவ்வண்ண 471
முழுதுந்தெரிந்தப்பான்மை 519
முற்றிமகமிரசிதம்பொன் 89
முற்றியமரியாதவர்கள் 108
முன்றுருபதனுநானுநண் 341
முன்னர்விசயன் சயிந்தவனை 85
முன்னரொருத்தியரக்கர்குல 364
முன்னுருவமெய்தியபின் 501
முன்னெனெடுமின்னுறு 540
முனிவோர்மொழிகேட்டிட 306

மூரிசிலையெடுத்துவளைத் 483
மூவர்தம்வரமும்பெற்றோர் 533
மேகவண்ணனுந்தன்மூலனுற 64
மேதினியிலிவரும்போயுத்தித் 512
மைத்துனரைவருமெதிர்கொண் 580
மைந்தகன்னியிற்பராசரன் 282
மைந்தகேள்கந்தமாதன 56
மைந்தர்களிற்குரு 367
மைந்தர்மூவரும்பலகலை 288
மைந்தரிலொருவனுக்குன் 182
மைந்தனிலாளகட்டின்மறை 447
மைந்தனும்வைதேகிப்பேர் 228
யாவரும்பணிசெயற்கரும் 297
யுகமாயினதிங்கொழியுங் 570
யோசனையளவும்வாசம் 247
வச்சிரந்தனையுய்த்தனன்.து 62
வந்தவரகன்றபினர் 93
வந்தவிண்ணவரைப்புறங்கொளத் 607
வந்துமன்னவர்திறையிட 31
வயமுறும்பாண்டுவனத் 386
வரம்பலிக்கும்பொருகைமுதலிய 554
வருகதிரொழியப்பன்னெரு 604
வருந்துதலென்கொல் 615
வருமெனதுமுதுமைகொடும் 183
வரைமாதறமியற்றும்பதி 544
வனப்பால்வாழ்வாற்கலிதேர்வால் 24
வனமுலிதியும்பொல்லா 129
வாசமாலியிடவந்தகாசிபதி 266
வாசமிகுமலர்க்குழலாட் 482
வாசவனந்தமொழிசெவிப் 608

வாட்டடங்கண் 517
வார்பெறுசாபத்தைபகதத்தனேந்தி 485
வாரணிமுரசுஞ்சங்கும் 467
வாலாலுங்காலாலுங் 437
வானமாதணிந்தாயுவைப் 159
விட்டான்பகழிவிழுந்தே 304
விண்ணிலாதவனெத்த 295
விதிமுறைதந்தைக் 256
விரகோதியவிதுரன் 519
விலியினேரிமைக்கேயிந்த 473
விழிபடுங்குருபதிக்குயிர்த்த 296
விழுந்துநிமிர்விசையில்பிணி 329
விழைவுடன் உதங்கன் 39
விழைவுறுஞ்சுதரை 376
விளம்புகத்துருவையண்டம் 51
வெய்யவம்மொழிக்கவள் 278
வெவ்வழறன்னிற்சீறும் 523
வெற்றிகொளரச 245
வெற்றிநரனெறிய 561
வென்றிடினும்பின்றரினும் 491
வென்றுநரன்தன்பதிபுக் 577
வேண்டியமகப்பெற்றனமென 613
வேண்டுவதுங்கனியிதுவே 591
வேண்டுவரமென்னெனினு 506
வேதவேதரும்வேந்தரும் 514
வேதியர்கள்மாதவர்கள் 488
வேந்தனுக்கமைச்சர்மாழ்கி 77
வேரினேடுமறமன்னர் 265
வேறுபட்டிடாமல் 536

ஆதிபருவத்தில்

சில அருந்தொடர்கள்

1. அருத்தியோடனம் நீர்பிரித்தமுதுணுஞ்செயல்போல் திருத்தியோடுகொள்வார்-அவையடக்கம். பாயிரம். 9

2. துணையோடு முந்தாதரத்தின் அன்பனுழையுறும் இல்லவள், நாட்டு. 5

3. மேருவினை யுருளினிற்சிறந்த கடுகினுக்கிணையென்றுவமை சொற்றிடுதல், நகர. 3

3.a ஈட்டிடுநன்மைதுன்மை அங்கவன்றன் இருங்குலத்தினர்க்கு உறும், உதங்க. 13

4. பெரும்புவியரசர்க்கலால் மறையோர்க்குப் பெருங்கொலையறங் கொலோ விடுத்தீ, உதங்க. 14

5. மண்ணிடை ஒருவன்செய்தீமை அனையவன் குலத்திலுதித்தவர்க்கெல்லாம் அணங்குசெய்திடும், உதங்க, 15

6, தாழ்வுறுதினத்து ஒருவர் சாற்றுநெறிகொண்டே வாழ்பவரும் இன்று உண்டு, சிறப். பாயிரம். 4

7. புல்லரிடத்து உறும் நல்லோர்க்கு இடுக்கண் உறும், சந்திர. வங். 16

8. மறையோர்க்கு அரசர்குலத்து அணங்கு ஆம்; [ஆனால்] மன்னர்க்கு அந்தணர்தங் குலத்தின் அணங்கு அடாது என்றேதும் சுருதிமுறை, சந்திர, வங். 19

9. நல்லோர் புணர்ப்புண்டேல் முடியாதுண்டோ? சந்திர வங். 32

10. முலையாங்கரியை மார்பிற்சுமந்தொருபெண் நேர்குறுகத் தோன்றினள், துட்டி. 9

11.a தருமம் மகம் தவம் விரதம் நாளும் ஓம்பிச் சந்ததி தந்திடுவர் [உலகில் மேலோர்], துட்டி. 19

11.b அரசர்யார்க்கும் உரித்தாயது அருமகவும், உயிர்மெய்போலும் மருவும்மனைவியும், வாக்கும் ஆகிய இம்மூன்றும், துட்டி. 19

12. மடமங்கை கொங்கைநலம் நுங்கஸீ சிந்தை செய்தி, சந்தனு. சரு. 33

13. ஈற்றனீயடைந்துவைகும் பன்னகமென்ன அன்னை பருவம் பார்த்திருந்தாள், சம்பவச். 44

14. ஓதையால் சிந்தினேதை சிந்த வாளி சிந்த மைந்தர் சீறியே வந்தனர், வாரணவத. 27

15. வலியரக்கர் குலக்கொடியை மனிதர் சேர்வது இயல்புஅல: மங்கையர் மனது அறிந்தோர் யார், வேத்திர. 8

16. பொன் புணர்ந்த தடமார்பின் மால்கொல் எனப்புகழ்ந்தனர், வேத்திர. 22

17. விலியினேரிழைக்கே யிந்தமேதினிபெறுது என்றேதும் கலி, திரௌ. மாலி. 15

18. அரைசரினும் அந்தணர்க ளிலக்கு வீழ்த்தால் அதிகநலம், திரௌ. மாலி. 27

19. வென்றிடினும் பின்றிடினும் மறையோர் வெம்போர் மிக்க வசை, திரௌ. மாலி. 31

20. மாதருக்கு ஒருபதிஅலது எண்ணிலர் உளரோ, இஃது என்? திரௌ. மாலி. 42

21. மைந்தர் பெறுகிலர் கதியைப் பெறலரிது, காண்டவ. சரு. 25.

முற்றும்.

சுபம்.

நூல் நிலைய வெளியீடுகள்

	ரூ.	பை
மகாபாரதச் சுருக்கம்-சபாபருவம்	18	00
ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும்	12	00
பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும்	18	00
பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும்	15	00
மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும்	30	00
இறைவாச நல்லூர்த்தலபுராணம்	18	00
காஞ்சிப்புராணம்	25	00
கமலாலயச் சிறப்பு	5	00
மநுவிஞ்ஞானேசுவரீயம்	4	00
நவநீதப்பாட்டியல்	2	00
அபிநய தர்ப்பணம்	15	00
குமாரலிங்கர் குறவஞ்சி	6	00
சிவகாமி அம்மன் அந்தாதி	15	00
நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி	10	00
கயற்கண்ணிமாலை	1	25
குலசையுலா	1	00
திரு இலஞ்சி முருகன் உலா	1	00
திருப்பூவண நாதர் உலா	1	00
சங்கர ராசேந்திர சோழன் உலா	5	00
வாட்போக்கியுலா	7	50
ஆதிவராகப் பெருமாள் வருக்கக்கோவை	12	00
சைவ சித்தாந்த உரைநடை	5	00
என் சரித்திரம் 2ஆம் பதிப்பு	48	00
என் ஆசிரியப்பிரான்	12	00
சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்	6	00
நான் கண்டதும் கேட்டதும்	5	00
உதயணன் சரித்திரச் சுருக்கம்	2	00
A Poets' Poet (English Version of the Biography of Mahavidvan Pillai Avargal)	6	00
The Story of My Life (Dr. U. V. S. Iyer's Autobiography in English)	40	00
The Story of Udayana	12	00
திருக்குறள் (ஸம்ஸ்கிருத மொழிபெயர்ப்புடன்)	15	00